Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவப் பெருவெளியில் காலம்

இரா.இராஜசேகரன்

நர்மதா வெளியீடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

சைவப் பெருவெளியில் காணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவப் பெருவெளியில் காலம்

முதல் தொகுதி

ஆதீனத்திற்கு நேரில் சமர்ப்பித்தது.

திருவாவடுதுறை ஆதீனம்
1060.
10 OCT 2003
திருவாவடுதுறை

செந்தமிழ்ப் புரவலர், ஞானபாஸ்கரன்

இரா. இராஜசேகரன்

பி.எஸ்சி., பி.எல்., பூம்புகார்

நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நானா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார்,
தி. நகர், சென்னை – 600 017. தொலைபேசி : 24334397

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

■ சைவப் பெருவெளியில் காலம் – சைவ சமயம் : தொன்மைக்காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை – ஓர் ஆய்வும் தொகுப்பும் – இரா. இராஜசேகரன் பி.எஸ்சி., பி.எல்., © ■ முதல் பதிப்பு : செப்டம்பர், 2003 ■ பதிப்பாளர் : டி.எஸ். இராமலிங்கம், நர்மதா பதிப்பகம், சென்னை – 600 017 ■ கணினி அச்சு : எம். சேவியர் ராஜ், பி.எஸ்.முத்து கிராஃபிக்ஸ், சென்னை – 600 078 ■ அச்சாக்கம் : மலர் அச்சகம், சென்னை – 600 034 ■

பக்கங்கள் : XXIV+392 = 416

விலை : ரூ. 300.00

Price : Rs. 300.00

Pages : XXIV+392 = 416

ISBN No. : 81-8201-003-9

Paper Used : 13.6 Kg. SPB N.S.

❑ Saiva Peruveliyil Kaalam – Time in Saiva Cosmos – An evolutionary dissertation of Saivism – in Tamil by R. Rajasekaran © ❑ First Edition : September 2003
❑ Published by T.S. Raamalingam, Narmadha Pathipagam, Chennai – 600 017
❑ D.T.P. Execution by : M. Xavier Raj, P.S. Muthu Graphics, Chennai – 600 015.
❑ Printed at : M/s Malar Printers, Chennai - 600 034 ❑

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவப் பெருவெளியில் காலம்

கருந்துவாரத்தில் உள்விழுக்கப்பட்ட யாவும்
புலன்களுக்குப் புலப்படாவண்ணம் மறைகின்றது.
அனைத்தும் அதற்குள் அடங்கும் –
காலம், வெளி, ஒளி, ஒலி –
எல்லாம் உள்விழுக்கப்பட்டு ஒடுங்குகின்றன.
பெருவெளியும் அதனுள் ஒடுங்கி
சிவமயம் என்றாகிறது.
(கருந்துவாரம், கருமை – Black hole, Singularity
சிவம் - the ultimate Absorber and not the destroyer as misinterpreted.)

	ஒன்றை ஒன்றோடு	(1+1)
	இரண்டற இரண்டும்	= 2
	ஒருசேர ஒன்றாவது	= 1
$Mc^2 = E$	அன்பே சிவம்	(1+1=2) = 1
$E = Mc^2$	சிவமே அன்பு	1 = (1+1=2)
	E = Energy ; M = Mass;	
	C = Speed of Light in Vaccum	

இரா. இராமசொக்கலிங்கம்
பூம்புகார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அங்கமெலாம் நொந்துபெற்று அன்பெலாம் வாரிச்சொரிந்த அன்னையார்; தமிழும் சைவமும் தன் இருகண்களெனப் போற்றி அதற்கான தளத்தையும் வீட்டில் அமைத்து என்னையும் அங்கே தவழவிட்டு அந்தத் தமிழ் மண்ணை – சைவ மண்ணை வாரி அப்பிக் கொள்ளச் செய்த தந்தையார்; என் தமிழ்ப்பணியும் சைவப்பணியும் வளரமூலபண்டாரமாய்த் திகழ்ந்த ஏற்பு அன்னையார்; ஒழுக்கமும், ஆன்மிகமும் வாழ்க்கை நடைமுறையாகக் கொண்டு ராஜரிஷியாக வாழ்ந்து – வழிகாட்டிய ஏற்புத் தந்தையார்;

ஜீவா ராஜசேகரன்

நாற்பதாண்டுக்காலமாகக் குடும்பச் சுமையெல்லாம் தான் ஏற்று, வாழ்வின் சூடே தெரியாவண்ணம் இன்றும் நிழல் கொடுத்துவரும் துணைவியார்க்கு அன்பின் படைப்பு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கையில் தவழும் ஒரு சைவ கங்கை

திரு. இரா. இராஜசேகரன் அவர்களைச் சைவ உலகத்தின் தருமைக் குருமணி 'செந்தமிழ்ப் புரவலர்' என்று வாழ்த்தியருளி னார்கள். வைணவ உலகின் ஜீயர் சுவாமிகள் 'ஞான பாஸ்கரன்' என்று வாழ்த்திச் சிறப்பித்தார்கள். கோவை இளங்கோ மன்றம் அவர்களைச் 'சிலம்பின் காவலர்' என்று சிறப்பித்தது. இவரால் இந்த விருதுகளுக்கே கூட ஒரு விழுப்பம் கிடைத்தது! பூக்களோடு மணம்; தமிழோடு இவர்! தாசில்பண்ணையின் இந்த 'இராஜசேகரம்' தமிழின் சேகரம்! இலக்கியச் சாகரம்!

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'; இன்ப காவியம்; சிவஞான போதம் உரை; ஆசாரிய ஹிருதயம் தமிழ்வடிவம்; விஷ்ணுபுரம் ஒரு பார்வை; இவை இவர் எழுதிய இனிய நூல்கள்.

அப்பர் அருட்செய்தி; தத்துவமும் பக்தியும்; திருமந்திர நெறி, சிந்தனைச் சிலம்பு; தமிழ் நாவல் – ஐம்பது பார்வை; அறிவின் அறிவு; சிலம்பு என்று இவை இவர் பதிப்பித்த நூல்கள்!

சிலருக்கு ஒரூர்; சிலர் கேளிர், புரவலர்க்கு, ஒரூர் இல்லை; ஒரு பிரதேசம் இல்லை; அவர் ஊர் தமிழூர். அவர் உறவு தமிழ் உறவு; சுற்றும் முற்றும் அவர்க்குத் தெய்வத் தமிழ் மன்றம்; உழவாரம்; பத்தினிக் கோட்டம்; விழித்திரு; கல்வி நிலையங்கள்... என்று இப்படிப் பல அமைப்புகளோடு பன்முகச் சிறப்புகளோடு நிரந்தினிது வாழ்பவர்! இனிய இந்த மனிதரின் உள்ளே படைப்பாளி; விமர்சகன்; சாதனையாளி... என்று பலப்பலர் உலா வருவர்!

இவரது ''சைவப் பெருவெளி''.... எனும் இந்நூல் இவரது ஒப்பற்ற படைப்பு! சைவம்... அஃது அண்ட சராசரங்களை விடப் பெரியது; ஆகாயத்தை விட உயர்ந்தது... சமுத்திரங்களைக் கூடச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவம் திவலைகளாய் ஆக்கிவிடும்! திரு. இராஜசேகரன் சைவத்தை – சைவ வரலாற்றை எழுத முனைந்தபோது அதற்குச் 'சைவப் பெருவெளி'... என்று பெயர் சூட்டியது அவர் கண்ட சைவ தரிசனத்தின் சுட்டாகும்! கயிலைத் தரிசனத்தை... அடடா! இவர் காலத்தின் தரிசனமாகச் 'சைவப் பெருவெளி' ஆகக் கண்டிருப்பது... அதில் இராஜசேகரத்தையும் காண வைத்திருப்பது... அரிய முயற்சி!

'இறப்பு... நிகழ்வு... எதிர்வு... காலத்தின் இந்த நேற்று... இன்று... நாளைகளை... ஒரே நேரத்தில் காட்டுவது... புலப்படுத்துவது ஒரு சித்து வேலை மாதிரி... செந்தமிழ்ப் புரவலர் சைவத்தின் அட்ட மூர்த்தங்களை யும் இந்தச் சைவப் பெருவெளியில்.. ஒரே நூலில் காட்டியிருப்பது வியப்புக்குரியது... சிவன் ''தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'' என்பர். இந்நூல் அதுபோலத் தோத்திர – சாத்திர நூல்களாகி அவற்றின் விழுதுகளாகி... அவை பற்றிய எத்த னையோ நூல்களாகி அவற்றின் மாட்சி களைக்... காட்சிகளைக் காட்டுவதாகி.. விளங்குகிறது.

நம்மாழ்வாரின் நெஞ்சினை... ஆசார்ய ஹிருதயத்தை தமிழ் வடிவில் தந்தபோது வைணவ உலகுக்குச் சேவை செய்தவராய்ப் புரவலர் உயர்ந்தார்! 'காலப் பெருவெளி' யைச் சைவப் பெருவெளியாய்த் தருகிற போது சைவத்துக்குத் தன் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று உயர்கிறார்.

'திருத் தொண்டத் தொகையால்' சுந்தரமூர்த்தி நாயனார் அன்று சைவப் பேரியக்கத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். இன்று 'சைவப் பெரு வெளி' மூலமும்... உழவாரங்களின் மூலமும்... சைவத்தின் எழுச்சிக்கும்... இயக்கத்துக்கும் செந்தமிழ்ப் புரவலர் ஒரு மறுமலர்ச்சித் தென்றலாகியுள்ளார்! புத்தக வடிவில் சைவப் பெருவெளி... ஒரு சைவத்திருப்பள்ளி எழுச்சி! புதிய நோக்கில் 'கையில் தவழும்' ஒரு சைவ கங்கை!

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை

''சைவப் பெருவெளியில் காலம்'' நூலோடு தொடர்புடைய இரண்டு முக்கிய நிகழ்வுகள் என்னுடைய வாழ்வில் நிகழ்ந்தன. மூதறிஞர் வானில் வாழ் அ.ச.ஞானசம்பந்தனார் அவர்கள் மயிலாடு துறை தெய்வத் தமிழ் மன்றக் கூட்டங்களில் உரையாற்ற வரும் பொழுதெல்லாம் ''சைவ சமய வரலாறு வெறும் வரலாற்றுக் குறிப்புகளாக மட்டுமல்லாது சமுதாய வாழ்வோடு சைவம் பின்னிப் பிணைந் துள்ள சமுதாய வரலாறாக எழுதப்பட வேண்டும்'' என்று சொல்வார்கள். ''நீங்களே திட்டம் வகுத்துத் தாருங்கள். நாம் செய்வோம்'' என்று கேட்டபொழுது ஒரு முழுநாளினைச் செலவிட்டு, மயிலாடுதுறை பேராசிரியர்களை உடன் வைத்துக் கொண்டு, வரலாற்று ரீதியாகத் தொகுத்து, தனித்தனியே காஷ்மீர சைவம், வீரசைவம் என்றெல்லாம் பிரித்து, ஒவ்வொரு தலைப்பினையும் ஆராயக் கூடியவர்களின் பெயர்களையும் தெரிவு செய்து அவர்களை அழைக்கவும் சொன்னார்கள். அதன்படி அ.ச.ஞானசம்பந் தனார், சி. அருணைவடிவேல் முதலியார், ச.தண்டபாணிதேசிகர், மு. அருணாசலம், க.வெள்ளைவாரணனார், டி.பி. சித்த லிங்கையா, சுப. அண்ணாமலை, சி. இராம லிங்கம், செ. வைத்திய லிங்கம், கு. சுந்தர மூர்த்தி, சொ. சிங்காரவேலன், திருக்குறள் வேள் ஜி. வரதராஜன், இரா. செல்வக் கணபதி ஆகியோரை அழைத்தோம். 1973 செப்டம்பர் 2, 3 இருநாள்களும் அத்துணை அறிஞர்களும் மாயூரம் எனது இல்லத்தில் சிந்துசமவெளி நாகரிகம் முதல் தற்காலம் வரை முழுமை யாக ஆராய்ந்து, பகுதி பகுதியாகப் பிரித்து, இன்னார், இன்ன கட்டுரைகளை வழங்குவது என்றும் முடிவெடுத்தனர். இதனையொட்டி மூதறிஞர் அ.ச.ஞா. அவர்கள் 1975-ஆம் ஆண்டில் தெய்வத் தமிழ் மன்றத்தில் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தலைமையில் மூன்று நாள்கள் ''சைவ சமய சமுதாய வரலாறு'' என்று உரையாற்றி, அவ்வுரையை ஒலிநாடாவில் பதிவும் செய்தார்கள். அறிஞர் பெருமக்கள் இருவரின் உரைகளும் ''குமரகுருபரனில்'' தொடராக வெளிவந்தன. அந்த அளவில் அப்பணி நின்று விட்டது. அப்பணி மட்டும் முழுமை அடைந்திருந்தால் ஓர் அரிய ஆய்வுநூல் தமிழகத்திற்குக் கிடைத் திருக்கும்.

அடுத்து 13.11.1976-இல் மயிலாடுதுறை தெய்வத் தமிழ்மன்றத்தில் உரையாற்ற வந்த ந.ரா. முருகவேள் அவர்கள் தனிமையில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ''பெரியபுராண அடியவர்களை மட்டுமே பேசிக் கொண்டிருக்கின்றோம். இன்று நம் கண் முன்னால் வாழ்ந்து மறைந்த - வாழ்கின்ற - பெரியவர்களைப் பற்றியெல்லாம் எழுதவேண்டும். அப்பொழுதுதான் சைவசமயம் இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதனை மக்கள் உணர்வார்கள்'' என்று கூறி மறைமலையடிகள், உமாமகேசுவரம் பிள்ளை போன்ற அறிஞர்களின் சைவ வாழ்வினைக் கண்களில் நீர் மல்கக் கூறினார்கள். அதுபோன்ற அண்மைக்கால சைவ அறிஞர்களின் வரலாற்றை அவர் களையே எழுதச் சொல்லி கேட்டுக் கொண்டோம். மறைமலையடிகள், திரு.வி.க. ஆகியோரைக் குருநாதராகக் கொண்டவரும், ஞானியார் சுவாமிகள் போன்ற ஆன்றோர்களைத் தரிசித்தவரும், அருணை வடிவேல் முதலியார், அ.ச.ஞான சம்பந்தனார் போன்றோருடன் நெருங்கிப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பழகிவந்த சமகாலத்தவருமான முருகவேள் அவர்கள் இந்நூலை எழுதியிருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும். என் செய்வது? நமது தவக்குறைவு. நிறைவேறாது போய் விட்டது.

இந்த இரண்டு நிகழ்வுகளும் என் நெஞ்சை அரித்துக் கொண்டே இருந்தன. மயிலாடுதுறை தெய்வத் தமிழ்மன்றத்தில் பங்குபெறாத சைவ அறிஞர்களே இல்லையெனலாம். அவர்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். அதற்கு முன் தலைமுறையைச் சேர்ந்த அறிஞர்கள் அனைவரும் எனது தந்தையார் ஜி. வரத ராஜம் பிள்ளையுடன் நெருங்கிப் பழகியவர்கள். அவர்கள் நாள் கணக்கில் எங்கள் திருச்சி புத்தூர் இல்லத்தில் தங்குவார்கள். அதனால் அவர்களைப் பற்றியும் ஒருவாறு அறிந்து இருந்தேன். ''இந்த அடிப்படையில் நாமே எழுதினால் என்ன?'' என்று தோன்றியது. இத்திட்டம் பற்றி என்னுடன் நாளும் பழகிவந்த சைவ அறிஞர்களிடம் பகிர்ந்து கொண்ட பொழுது, ''எழுதுவதுதான் எழுதுகிறீர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு சான்றோர் களைப் பற்றியும் சேர்த்து எழுதிவிடுங்கள். எப்படியும் நூலகங்களுக்குச் சென்று தகவல் சேகரிப்பீர்கள். சேகரிக்கும் பொழுது இரு நூற்றாண்டுகளுக்கும் சேர்த்து குறிப்புகள் எடுத்துவிடுங்கள். இனியொரு முயற்சி இப்படி எடுக்கமுடியாது'' என்றார்கள். அரைமனதுடன் இசைந்தேன். குறிப்புகள் எடுக்கும் பொழுது ஏதோ ஒரு குறை - முழுமையின்மை – தெரிந்தது. எந்த ஒரு அறிஞரைப் பற்றிப் படித்தாலும் ஏதேனும் ஒரு தொன்மைச் சைவ நிகழ்வு - அவர்கள் எழுதிய நூல்கள் மூலமாகவோ அல்லது வெளிப்படுத்திய கருத்துகள் மூலமோ - உணர்த்தப்படும். இதனால் மனம் தெளிவற்ற நிலையில் தமிழக வரலாற்றையே - நீலகண்ட சாஸ்திரி, சதாசிவ பண்டாரத்தார், கே.கே. பிள்ளை, மா. இராசமாணிக்கனார் ஆகியோரின் நூல்கள் படிக்க வேண்டி வந்தது. தமிழகம் இந்தியாவின் ஒரு பகுதி. எனவே இந்திய வரலாற்றையும் படிப்பது என்று முடிவெடுத்தேன். சாமியார் பூனை வளர்த்த கதை தான். பாரதீய வித்யா பவனத்தார் வெளியிட்ட "Cultural History of Indian People" பத்து தொகுதிகளும் படிக்க ஆரம்பித்தேன். அதன் பிறகே காலப் பெருவெளி கண்ணுக்குப் புலப்பட்டது. இந்தத் தொகுதியை மையப் படுத்திக் கொண்டு இதற்குத் துணையான பல ஆங்கில, தமிழ் நூல்களை அவ்வக் காலகட்டத்திற்கு உதவும் வகையில் சேர்த்துப் படிக்கலானேன். இதற்கே ஓராண்டுக்காலம் பிடித்தது. தொன்மைக் காலம் என்றால் வேதம் பற்றி சிறிதளவாவது தெரிய வேண்டும். பவான்ஸ் நூல்களில் தெளிவாகச் செய்திகள் கிடைத்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு எம்.ஆர். ஜம்புநாதனின் தமிழ்மொழி பெயர்ப்புகளை ஒரு புரட்டு புரட்டினேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சமஸ்கிருதப் பேராசிரியர் சீனிவாச சர்மா அவர்கள் பத்து நாள்கள் தொடர்ந்து வேதங்கள் - ஓர் அறிமுகம், ஸ்வேதாஸ்வதர உபநிடதம் முதலான 4, 5 உபநிடதங்கள், குமார சம்பவம் ஆகியன பற்றி விளக்கினார்கள்.

இந்த அடிப்படை முயற்சிகளோடு முனைவர் சுப. அண்ணாமலை அவர்களின் கருத்தினைப் பெற மதுரை சென்றேன். என் திட்டத்தை வரவேற்ற சுப. அண்ணாமலை அவர்கள் இருநூறு ஆண்டுகளில் வெளிவந்த ஒரு சைவநூல் - ஒரு சைவ இதழ் - கூட விட்டுவிடக் கூடாது. அதுவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சிறு சிறு துண்டுப் பிரசுரங்களாகக் கண்டன இலக்கியம் உருவாகியது. அனைத்தையும் சேர்க்க வேண்டும்'' என்றார்கள். ''முருகன் அடியார்கள் அனைவரையும் சேர்க்கா விட்டாலும் பாம்பன் சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள் போன்ற முக்கியமான அடியார்களையாவது சேர்க்க வேண்டும்'' ஏன்றார்கள். மலைப்பாகத்தான் இருந்தது.

அதே வேகத்தோடு தஞ்சை வழக்கறிஞர் டி.என். இராமச்சந்திரன் அவர்களைச் சந்திக்கச் சென்றால் ஸ்சவம் பற்றிய ஆங்கில நூல்கள் அடுக்கடுக்காக அவர் நூலகத்தில் இருந்தன. ''இவற்றையும் சேருங்கள்'' என்றார் டி.என்.ஆர். இதற்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேல் பயணித்தால் சிக்கல் என்று அஞ்சி முதல் தொகுதியாக இதனை அமைக்க லாம்; தேவையானால் இரண்டாம் தொகுதி பின்னர் கொண்டு வரலாம்'' என்று அந்த அளவில் என் முதற்கட்டப் பணியைத் தொடங்க ஆரம்பித்தேன்.

நூலின் உருவாக்கம் பற்றியும் இருநூறு ஆண்டுக்கால சைவசமயநிலை பற்றியும், அக்கால கட்டத்தில் வாழ்ந்த அறிஞர்கள், ஆன்றோர்கள் பற்றியும் கருத்து விளக்கம் பெற நம்மோடு வாழ்ந்து கொண்டிருக் கின்ற அறிஞர் பெருமக்களை நேர்காணல் செய்வது முதற்கட்ட பணியாக அமைந்தது. 5.3.1996 அன்று வயதிலும், அனுபவத்திலும் மூத்தவரான சி. அருணை வடிவேல் முதலி யார் அவர்களை நேர்காணல் செய் தேன். நேர்காணல் செய்தபிற ஆன்றோர்கள், அறிஞர்கள் வருமாறு: தருமையாதீனம் சீர்வளர்சீர் இருபத்தாறாவது குருமகா சந்நிதானம், அ.ச. ஞானசம்பந்தன், கு. சுந்தரமூர்த்தி, வி.சா.குருசாமி தேசிகர், நீ.சி. சுந்தரராமன், கி. பழனியப்ப பிள்ளை, சுப. அண்ணாமலை, தி.சு. கோவிந்தசாமி பிள்ளை, மீ.ப. சோமசுந்தரம் தருமபுரம் சாமிநாதன், தேவகோட்டை நாராயணன் செட்டியார், டி.என். இராமச்சந்திரன், வை. இரத்தினசபாபதி, பாலகவி வே. இராம நாதஞ் செட்டியார், ஆடலரசு, மா. வைத்தியலிங்கம், இரா. நாகசாமி, தவத்திரு ஊரன் அடிகள், சேவுகஞ் செட்டியார், ச.சிவகாமி சி.சு. மணி, பெ.சு.மணி, கா.சிவத்தம்பி, பேரூர் ஸ்ரீராமசாமி அடிகளார், நா. சுப்பிரமணியன் ஆகியோர். அவர்கள் கூறிய கருத்துரைகள் நூலில் பல இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன. சில முக்கிய கருத்து வெளிப்பாடுகள் வருமாறு:

சி. அருணைவடிவேல் முதலியார் : கா.சு. பிள்ளையின் ''திருநான்மறை விளக்கம்'' கட்டுரை சைவ சமய வர லாற்றில் ஒரு திருப்புமுனையாகும். வேதம் எனப்படுவது இருக்கு, யஜுர், சாம, அதர்வணம் அல்ல. தமிழுக்குத் தனியே நான்மறைகள் இருந்தன. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன ஆகும். இவை கா.சு.பிள்ளையின் கருத்து ஆகும். இதனைத் தோற்றுவாய் செய்தவர் மறைமலையடிகள் ஆவார். இருவரும் சேர்ந்து சைவ சமயத்தைத் தமிழ்ச் சமயமாகப் – புராதன சமயமாக ஆக்கி னார்கள். இது ஒரு பெரும் திருப்பம் ஆகும். இந்த முயற்சியினால் கா.சு. பிள்ளையின் வளர்ச்சி தடைப்பட்டது. சிலர் சூழ்ச்சி செய்து மேலிடத்தில் தவறான காரணங்களைக் கூறி அவருக்குக் கிடைக்க வேண்டிய உயர்பதவியைக் கிடைக்காமல் செய்தனர்.

மற்றொரு திருப்புமுனை ஞானியார் சுவாமிகளின் சமய விரிவுரை ஆகும். சுவாமிகள் காலம்வரை கதாகாலக்ஷேப பாணியாகத் தான் இருந்தது. சுவாமிகள் தான் எளிமைப்படுத்தி கீழ்த்தட்டு மக்களி லிருந்து மேல் தட்டு மக்கள் வரை சுவைக்கும்படி பேசிச் சமயப் பற்று இல்லாதவர்களுக்கும் சமய உணர்வு ஊட்டினார். ஆறுமுக நாவலர் பேச்சு மேல் தட்டு மக்களுக்கே எடுக்கும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியத் தத்துவம் என்றால் வேதாந்தம் என்றுதான் இருந்தது. அதன்பின்னர்தான் சைவ சித்தாந்தம் தத்துவம் என்றே கருதப் பட்டது. மக்களுக்கும் சைவசித்தாந்தத்தில் விழிப்புணர்வு வந்தது.

திருமுறைகள் உரையுடன் வெளிவந்தது. இந்த நூற்றாண்டின் சிறப்பு ஆகும். மா. பாலசுப்பிரமணிய முதலியார் திருமுறை களையும், பதினான்கு சாத்திரங்களையும் அடக்க விலையில் ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிட்டது பிரமிக்க தக்கதாக இருக் கிறது. சைவசித்தாந்த மகாசமாஜம் சமயப் பேச்சுக்கு தொடக்கமாக தனி சகாப்தமாகத் திகழ்ந்தது. திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தம் என்பது துணிச்சலான புதுமையான கருத்து ஆகும்.''

அ.ச. ஞானசம்பந்தன் [8.3.96] : ''சைவம் சடங்குச் சமயமாக இருந்து வந்தது. சடங்குகள் இல்லாமல் சைவம் வளர ஆரம்பித்தது. சமயதீக்கை இல்லாம லும் தேவாரம் படிக்கலாம் என திரு.வி.க. செயல்படுத்தினார். பொதுநோக்கோடு கூடிய சமயமாகப் பார்த்தார். திரு. வி.க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மார்க்ஸ் பற்றிப் பேசினார். சமணர்கள் கூட்டத்தில் அப்பர் பற்றிப் பேசினார்.

திருக்கோயில் வழிபாடு கூடியிருக்கின்றது. குடநீராட்டு விழாவிற்கு 500, 1000 என வந்தவர்கள் இன்று இலட்சக்கணக்கில் கூடுகின்றார்கள்.''

சுப. அண்ணாமலை [21.3.96] : ''சமயம் என்றால் கொள்கை அடிப்படை, ஆன்றோர்கள் காட்டிய வாழ்க்கை முறை, இலக்கிய அரண், செயல்பாடு - ஆகிய நான்கும் அமைந்து இருக்கவேண்டும். அவைதான் நிலைத்த பயன் தரும். ஏனைய அமைப்புகள் பக்தி எழுச்சி மட்டுமே ஆகும்.''

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தாறாவது குருமகா சந்நிதானம் அவர்கள் [24.7.1996]: ''திருவாவடுதுறை ஆதீனம் சீர் வளர் சீர் இருபத்தோராவது குரு மகாசந்நிதானம் அவர்கள் இரும்புக்கடலை எனப்படும் திருமந்திரத்தை பதினைந்து ஆண்டுகள் மாநாடுகள் நடத்தியும், நூல்கள் வெளியிட்டும் எளிமைப்படுத்தியது இந் நூற்றாண்டின் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

1943-ஆம் ஆண்டில் தருமையாதீனத்தில் நடைபெற்ற மெய்கண்டார் சித்தாந்த மகாநாடும், 1984-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்துலகச் சைவசித்தாந்த ஆர்ராய்ச்சிக் கருத்தரங்கும் பிற முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

தருமையாதீனம் சீர்வளர்சீர் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேக விழாக்களைக் கலையழகோடு செய்தது மறுமலர்ச்சியாகும்.

வேலூர் மு. கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களும், இராணிப்பேட்டை பி.மா. சோமசுந்தரனார் அவர்களும், மணக்குடையான் சாமிநாதபிள்ளை அவர்களும் விரிவாகத் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினார்கள். இத்துடன் முதற்கட்டப்பணி நிறைவு பெற்றது.

சைவப் பெருங்கடலில் மூழ்கி முத்தெடுப்பது என்று முடிவாகிவிட்டது. எந்தப் பகுதியில் மூழ்கினால் முத்துகள் நிரம்ப கிடைக்கும் என்று தெரியாத நிலை. தருமையாதீனக் கல்லூரி முதல்வர் வி.சா. குருசாமி தேசிகர் அவர்கள் போகிற போக்கிலே ''சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் 'தமிழ்ப்புலவர் வரிசை' என்று 30 நூல்கள் வெளியிட்டுள்ளனர். அவை உங்கட்குப் பயன்படும்'' என்றார்கள். இச் செய்தி கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு இயல்பாகத் தெரிந்த செய்திதான். இருந்தாலும் கல்லூரியோடு தொடர்பு இல்லாத நிலையில் (non acadamecian) இதுவே எனக்கு அரிய தகவலாக இருந்தது. கல்வியாளனாக இல்லாததினால் எளிதில் தெரியவேண்டிய தகவல்கள் அனைத்தும் பெருமுயற்சி செய்து தெரிந்து கொண்டேன். தமிழ்ப் புலவர் வரிசையை அடித்தளமாக வைத்துக் கொண்டு வெளியூர்களுக்குச் செல்கின்ற பொழுதெல்லாம் அங்கு வாழும் ஆன்றோர்களின் மணிவிழா, பவள விழா மலர்கள், மறைந்த பெரியவர்களின் நினைவு மலர்கள் என்று சேகரிக்கலானேன். நினைவு மலர்களில் சொக்கலிங்க ஐயாவின் வாழ்க்கை வரலாறு (திருவாவடுதுறை ஆதீன நூலகம்) ஜெ.எம். நல்லசாமி பிள்ளை வாழ்க்கை வரலாறு (தஞ்சை டி.என். ஆர். நூலகம்), திரு. வி.க. எழுதிய கதிரைவேற்பிள்ளை சரித்திரம் (உ.வே.சா. நூலகம்) ஆகியன அரிதில் கிடைக்கப் பெற்ற நூல்கள் ஆகும். உ.வே. சாமிநாதையரின் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரமும், திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புகளும் அக்காலகட்டத்திய சைவ வரலாற்றுப் பெட்டகங்கள் ஆகும்.

சைவ அறிஞர்களில் சிலரைப் பற்றி விரிவாகவும், சிலரைப் பற்றிச் சுருக்கமாகவும் எழுதியுள்ளேன். அதற்கு இரண்டு காரணங்கள் உள. (i) போதிய செய்திகள் கிடைக்காமை, (ii) ஒரு துறையில் மட்டுமே சில ஆன்றோர்கள் முழுமையாகப் பணி ஆற்றியிருத்தல். (iii) நூலாசிரியர்க்கு நேரடிப் பழக்கம் இன்மை. எடுத்துக்காட்டாக ஜி. சுப்பிரமணிய பிள்ளையைப் பற்றி நிரம்ப எழுத எண்ணம். நேரடித் தொடர்பு இல்லாமையால் எழுத முடியவில்லை. அ. நடேச முதலியார் மிகவும் நெருங்கியத் தொடர்புள்ளவராக இருந்தும் அவரைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. அதே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயம் குன்றக்குடி அடிகளார் அவர்கள் பல துறைகளில் முழுமையாகப் பணியாற்றியுள்ளார்கள். அவர்களைப் பற்றிய நூல்களும் நிரம்ப வந்துள்ளன. எனவே எழுதி மாளவில்லை. எனவே அறிஞர் சிலரைப் பற்றிக் கூடுதலாகவும், சிலரைப் பற்றிக் குறைவாகவும் எழுதியதாகக் கருத இடம் தரலாகாது.

சைவ சமய சொற்பொழிவாளர்கள் ஆற்றிவரும் பணியும் அருமைப்பாடு உடைத்து. ஒரு சிலரைத் தவிரப் பல அறிஞர்கள் தாங்கள் வாழும் பகுதிகளோடு தங்கள் பணியை நிறுத்திக் கொள்கின்றனர். தமிழ்நாடு முழுமையும் கள ஆய்வு செய்த பின் எழுதுவதே பொருத்தம் என்பதினால் இத்தொகுதியில் இடம்பெறவில்லை.

ஈழத்தில் வரலாற்றுணர்வு அதிகம். இலங்கையில் இன்பத்தமிழ் (கா.பொ. இரத்தினம்), ஈழமும், தமிழும் (F.X.C.நடராசா), ஈழத்தில் தமிழ் இலக்கியம் (கா. சிவத்தம்பி), ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு (நடராசா), ஈழத்து இலக்கிய வளர்ச்சி (கனக செந்தில் நாதன்) மேன்மக்கள் சரித்திரம், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம், தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர்கள் பெருமுயற்சிகள் (பொ. பூலோக சிங்கன்), ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. ஆறுமுகநாவலரைப் பற்றிப் பலநூல்கள் உள்ளன.

இதழ்கள் சென்னை நூலகங்களிலும் திருமடத்து நூலகங்களிலும் இதழ்கள் அலுவலகங்களிலும் காணக் கிடைக்கின்றன. சித்தாந்தம், செந்தமிழ்ச் செல்வி இதழ்கள் சைவசமயக் கட்டுரைகளை வெளியிட்டு வருவதோடு சைவ ஆன்றோர்களின் வரலாற்றுக் குறிப்புகள், பணிகளைப் பதிவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுப் பகுதியை (முதற்பகுதி) எழுத பாரதீய வித்யா பவனத்தாரின் "History and Culture of Indian People" *(10 தொகுதிகள்)* இராமகிருஷ்ணா மிஷனரியின் "Cultural History of Indian People *(5 தொகுதிகள்)* துணை புரிந்தன. மற்றும் சில வரலாற்று நூல்கள் பற்றி முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவையல்லாமல் மா. இராசமாணிக்கனாரின் ''சைவ சமய வளர்ச்சி'' என்ற நூல் கி.பி. 1300 வரையில் தமிழ்நாட்டில் சைவம் வளர்ந்த நிலையைத் தெளிவாகக் கூறுகின்றது. மு. அருணாசலம் அவர்களின் ''தமிழ் இலக்கிய வரலாறு'' (ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை - பத்துக்கும் மேற்பட்ட நூல்கள்) ஒரு நீண்ட நெடிய வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பதினாறாம் நூற்றாண்டு இலக்கிய வறட்சியான காலம் என்று பிற அறிஞர்கள் கணிக்க மு.அ. அவர்கள் ''சைவத்தின் பொற்காலம்'' என்று பெருமையோடு கூறுகின்றார்கள். சோமசுந்தரதேசிகர் அவர்கள் பதினாறாம் நூற்றாண்டு, பதினேழாம் நூற்றாண்டு இலக்கியங்கள் பற்றி எழுதியுள்ளார். பதினேழாம் நூற்றாண்டு இலக்கியம் பற்றி எழுதச் செய்திகள் கிடைக்காத பொழுது வி.சா. குருசாமி தேசிகர் அவர்கள்தான் ஆற்றுப்படுத்தினார்கள். சோமசுந்தர தேசிகரின் கிடைத்தற்கரிய நூல் உ.வே.சா. நூலகத்தில் கிடைத்தது. பதினெட்டாம் நூற்றாண்டு இலக்கியம் பற்றித் தனிநூல்கள் ஏதும் இல்லை. அப்பகுதி எழுத சிரமமாகவும் இருந்தது. சில நாள்கள் உழைத்துப் பலநூல்களைப் படித்து ஆராய்ந்து அப்பகுதியும் எழுதி முடித்தேன்.

இந்த நூல்களை எல்லாம் சேகரித்து வைத்து இருக்கும் நூலகங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். மறைமலையடிகள் நூலகமும், உ.வே. சாமிநாதையர் நூலகமும் இல்லையென்றால் தமிழ்நூல்களைப் பற்றி அறிந்து கொள்ளவேமுடியாது. பல அரிய பழைய நூல்களும், இதழ்களும் வைத்திருக்கின்றார்கள். பார்வையாளர்கள் யார் கேட்டாலும் உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கின்றார்கள். மறைமலையடிகள் நூலகத்தில் கேட்டுக் கொண்டால் ஒருவர் வெளியில் சென்று Xerox எடுத்து வந்து கொடுப்பார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் Xerox செய்யும் வசதி உள்ளது. உடனுக்குடன் கொடுப்பார்கள். கன்னிமாரா நூலகம் பற்றிக் கேட்க வேண்டாம். கடலெனப் பரந்து உள்ளது. சென்னை மத்திய நூலகமான பாவாணர் நூலகத்தில் அரசின் நல்ல திட்டத்தினால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அண்மைக்கால நூல்கள் மிகுதியாகக் காணமுடிகின்றது. ரோஜா முத்தையா நூலகத்திலும் எழும்பூர் பழஞ்சுவடிகள் நூலகத்திலும் அரியநூல்கள் கிடைத்தன. அனைத்து வகையிலும் முகம் கோணாது உதவிகள் புரிந்து அனைத்து நூலகர்கள், நூல்களை எடுத்த வந்த உதவியாளர்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நிறுவனங்கள் அளவில் தருமையாதீன நூலகமும், திருவாவடுதுறை ஆதீன நூலகமும் பெரிதும் பயன்பட்டன. சிதம்பரம் மெய்யப்பன் ஆய்வகம் அண்மையில் உருவாக்கப்பட்ட நூலகம் ஆகும். தமிழகத்தில் தங்கும் வசதிகளோடு உள்ள ஒரே நூலகம் ஆகும். தனியார் என்ற முறையில் தஞ்சை டி.என். இராமச்சந்திரன் அவர்கள் நூலகமும், வடலூர் தவத்திரு ஊரன் அடிகள் நூலகமும் பெருமளவில் உதவியாக இருந்தன. இரண்டு இடங்களிலும் விருந்தோம்பலுக்கும் குறைவில்லை. இருபெருமக்களும் தாய் போல கவனித்துக் கொண்டனர்.

நூல் எழுதத் தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் படிக்கச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்த மூதறிஞர் அ.ச.ஞான சம்பந்தனார் அவர்கள் பலவகையில் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வந்தார்கள். இருநூறு ஆண்டுக்கால நூல்களைத் தொகுத்த பொழுது ''அவை தேவையா?'' என்ற ஐயம் எழுந்தது. "Compilation is itself a great contribution இனியாரால் அவற்றைத் தொகுக்க முடியும்? ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்'' என்று உற்சாக மூட்டினார்கள். அதுமட்டுமல்ல ஒருமுறை வெளிநாடு செல்ல நேர்ந்த பொழுது அங்கே எழுதுவதற்குச் சில பகுதிகளை எடுத்துச் செல்ல இருந்னே். அப்பொழுது மூதறிஞர் அவர்கள் என் மனைவியைப் பார்த்து, "Hand Luggageல் உன் நகைகளுக்கு இடம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இந்தக் கையெழுத்துப் பிரதிகளை Hand Luggageஇல் வைத்துக் கொள். நகைகள் விமானப் பயணத்தில் தவறவிட்டாலும் வாங்கிவிடலாம். ஐந்து வருட உழைப்பை வாங்க முடியாது'' என்றார்கள். மெய் சிலிர்த்துப் போனேன்.

மதுரைப் பேராசிரியர் முனைவர் சுப. அண்ணாமலையவர்கள் நூலின் தொடக்க நிலையிலிருந்து அறிவுறுத்தி, நெறிப் படுத்தி, ஒவ்வொரு பகுதியும் எழுதி முடித்தவுடன் கருத்தோட்டம் சரியாக உள்ளதா என்று சரிபார்த்து, அவ்வப் பொழுது திருத்தங்கள் எடுத்துரைத்து, அழகிய அணிந்துரையும் வழங்கி உள்ளார்கள்.

பூம்புகார்க் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் த. தியாகராஜன் அவர்கள் ஒவ்வொரு நிலையிலும் நூலின் கையெழுத்துப் பிரதியை முழுமையாகப் பார்வையிட்டுப் பல திருத்தங்கள் செய் தார்கள். வரலாற்றுப் பகுதியினை (முதற் பிரிவு) எழுதும் பொழுது காலவரிசைப்படி முதலில் எழுதியிருந்தேன். காலவரிசை என்றால், ஒரே நூற்றாண்டில் இந்திய அரசர்களின் பணிகள், இந்திய இலக்கியம், தமிழக அரசர்களின் பணிகள், தமிழ் இலக்கியம் என்று அமைந்திருந்தன. இவ்வாறு ஒவ்வொரு நூற்றாண்டாக அமைந்ததினால் தெளிவில்லாதது போல இருந்தது. பேராசிரியர் தியாகராஜன் அவர்கள் படித்து விட்டு ''மடி இருக்கின்றது; காம்புகள் இல்லை'' என்று சொன்னார். ''என்ன செய்யலாம்?'' என்று கேட்ட பொழுது ''இந்திய அரசர்கள் என்றால் அப்பகுதியினை முழுமையாக முடித்து விடுங்கள். இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரியுங்கள்'' என்றார். எழுதி முடித்ததை மாற்றி அமைப்பது என்றால் மிகச் சிரமமான செயல் ஆகும். அப்படியே மாற்றி அமைத்த பிறகு ஆற்றொழுக்காக – தெளிவாக – அமைந்துவிட்டது. இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் செம்மைப்படுத்தி முதற்பகுதிக்கு மட்டும் அரும்பொருள் அகராதி உருவாக்கும் வரை உதவினார்.

நூல் எழுத எழுத பூம்புகார், மயிலாடுதுறை, பேராசிரியர்கள் கு. சுந்தர மூர்த்தி, வி.சா. குருசாமி தேசிகர், மு. சிவச் சந்திரன், அ. கருணாநிதி, ஆர். சம்பந்த மூர்த்தி, நா. தியாகராஜன் ஆகியோர் ஆறு மாதத்திற்கு ஒருமுறை கூடி கையெழுத்துப் பிரதியைப் படிக்கச் செய்து திருத்தங்களும் சொன்னார்கள். முக்கியமான பகுதிகளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என் மகன் இராம.சொக்கலிங்கமும் உடன் படித்துக் காலத்துக்கேற்ற கருத்துகளையும் சேர்க்கக் கேட்டுக் கொண்டார். நூல் நிறைவான நிலையில் புலவர் நா. தியாக ராஜன் அவர்கள் அச்சுப் பிரதியைப் பார்வையிட்டுத் திருத்தங்களும் செய்தார்.

மேலையூர் சீனிவாசா மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பொன். மருதவாணன், ஜி. ராஜேந்திரன், நகுலன், மாசிலாமணி, எ. இரவி ஆகியோர், தலைமை ஆசிரியர்கள் எம்.சிவநேசன், டி.ஜெய பாலன் அறிவுறுத்தலின்படி எழுதியும், தட்டச்சு செய்தும், கணினி ஆக்கம் செய்தும் கொடுத்தனர்.

அத்துணை பேருக்கும் எவ்வாறு நன்றி சொல்வேன்?

அனைத்தும் முடிவான நிலையில் என்னைப் பற்றி முன்பின் தெரியாமலே, நூலினை ஒருமுறை பார்வையிட்டு அதன் அருமையறிந்து பொருள் நோக்கின்றி சைவப்பணியாகக் கருத்தில் கொண்டு மிகச் செம்மையாக - அழகுடன் வெளியிட்ட நர்மதா பதிப்பக அதிபர் இராமலிங்கம் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

அன்புடன்
இரா.இராஜசேகரன்
27.09.2003

''தாசில் பண்ணை''
மேலத் தெரு
மேலையூர் - பூம்புகார் - *609107.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அணிந்துரை

முனைவர் சுப. அண்ணாமலை
முன்னை முதல்வர், தியாகராயா கல்லூரி, மதுரை.

மயிலாடுதுறை வழக்கறிஞரும், தெய்வத்தமிழ் மன்றச் செயலாளரும், துடிப்புள்ள சைவத் தமிழ் அறிஞருமாகிய என் நண்பர் திரு. இரா. இராஜசேகரன் அவர்கள் எழுதிய சைவசமய வரலாறு என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். இதற்கு முன்னரும் டாக்டர். மா. இராசமாணிக்கனார் சைவசமய வரலாறு என்னும் நூலை எழுதியுள் ளார்கள். ஆயினும் திரு. இராஜசேகரன் அவர்கள், அதனினும் விரிவான ஒரு நூலைத் தந்துள்ளார். இந்நூலில், பாண்டியர் காலம் என்பதோடு வரலாற்று ஆய்வு நின்று போகாமல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் விழிப்புணர்வு பெற்று, அக்காலத்தில் இருந்த பிறசமயச் சூழல்களுக்கு இடையே, சைவ சமயத் தைப் புரிந்து கொள்ளவும், பரப்பவும், வளர்க்கவும் முனைந்து 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் கண்ட வளர்ச்சியையும், சிறப்பாகச் சைவ இலக்கியத்தின் நெடும் பரப்பையும் பதிவு செய்துள்ளார்.

இவ்வரலாற்று நூல் தமிழ்மக்களின் தொன்மையில் தொடங்கி, ஆற்றொழுக் காகக் கால வரிசைப்படி அமைந்துள்ளது. இதில் தரப்பட்டுள்ள அனைத்துச் செய்தி களும் வரலாற்றுச் சான்றுகளின் அடிப் படையில் எழுதப்பட்டுள்ளன, என்பதை ஒவ்வொரு பகுதிக்கும் பின்னர்த் தரப் பட்டுள்ள துணை நூல் பட்டியலைக் கொண்டு அறியலாம். ஆயினும், இந்நூல் வெறும் செய்தி தொகுப்பாக மட்டும் அமையவில்லை. ஒரு வரலாற்றாசிரியர்க் குரிய காலக் கண்ணோட்டத்தின் கூடிய கருத்துக் குறிப்புகளும் ஆங்காங்கு அமைந்து இவ் வரலாற்றுக்கு ஒரு தெளிவான பார்வை இருப்பதை அறிவிக்கின்றன.

பாசுபதசைவம், காஷ்மீர சைவம், வீர சைவம் ஆகிய சைவப்பிரிவுகளைப் பற்றி, இந்நூலில் தந்துள்ள விரிவான வரலாறு சைவசமயத்தின் இமயம் முதல் குமரி வரையிலான இந்தியத் துணைக்கண்டத்தை உரிமையாக்குகிறது. ‘தென்னாடு உடைய சிவன்’ மட்டும் அல்ல, ‘இந்தியநாடுடைய சிவன்’ என்று சொல்லத் தோன்றுகிறது.

சைவக் கடவுளர், சைவ புராணங்கள், இதிகாசங்களில் சைவம் – சைவ ஆகமங்கள் ஆகியவைகளைப் பற்றி ஆசிரியர் தரும் விரிவான வரலாறு, வைதீக நெறியோடு ஒத்த ஒரு தனிப் பெரும் சமயமாய், தனக்கென்று தனி முத்திரைகளோடு சைவம் சங்க காலத்தையடுத்துப் பல்லவர் காலத்துக்கு முன்பே உருவாகி விட்டதைத் தெளிவாக்குகிறது. சைவ சமயக் குரவர்கள் செய்த மறுமலர்ச்சியின் விளைவாக கி.பி. 1000-க்குப் பின் சிறிதும் பெரிதுமான வகையைச் சேர்ந்த சைவ இலக்கியங்கள் மிகுதியாக தோன்றின. ஆதலால் அவற்றின் வரலாற்றைக் காட்ட முற்பட்டு சிறப்பாக திருமுறைகள் பன்னிரண்டும் இயற்றித் தொகுக்கப்பட்ட வரலாறு கூறப்படுகிறது. ‘இந்திய அரசர்களின் சைவப் பணிகள் என்ற பகுதியை இந்நூலாசிரியர் சிறப்பாக அமைத்துள்ளார். மௌரியர் முதல் நேபாளம், காஷ்மீரம் முதலிய பகுதிகளை ஆண்ட அரசர்கள், குப்தர், குஷானர், சாளுக்கியர் முதலிய அரசர்கள் செய்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவப்பணிகளும், வட இந்தியாவில் சைவ சமய நிலையும் இவரால் நன்கு எடுத்துக் காட்டப்படுவது சைவத்துக்கு ஒரு தேசிய வரலாற்றுப் பின்னணியை அமைக் கின்றது.

பல்லவர் காலத்தில் சைவம் மறுமலர்ச்சி பெற ஞானசம்பந்தர் நிகழ்த்திய புரட்சியின் விரிவான வரலாற்றை இந்நூல் தருவது மிகவும் சிறப்பாக உள்ளது. வைதீகம், சமணம், பௌத்தம், வடமொழியின் ஆதிக்கம் இத்துணைக்கும் இடையே நெருக்குண்டு இருந்த தமிழ்மொழியையும், மரபையும் ஞானசம்பந்தர் புது உயிர்ப்போடு மீண்டும் பரவச் செய்த வரலாற்றை இவர் எழுதியுள்ள பான்மை நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றது.

பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ்ப்புராண இலக்கியங்கள், சாத்திர உரைகள், பிரபந்தங்கள், தத்துவ இலக்கியம் தோத்திர இலக்கியம், சித்தர் பாடல்கள் ஆகியவை எடுத்துக் கூறப்படு கின்றன. இந்நூற்றாண்டுக்குப் பின் 18-ஆம் நூற்றாண்டு முடிய இவ்விலக்கிய வகைகளில் நூல்கள் பல்கிப் பெருகி மக்களுக்குக் கவி இன்பத்தோடு சமய அறிவையும் ஊட்டி இன்றுவரை நிலைபேறுடைய நூல்களாக விளங்கு வதைக் காட்டுகின்றார். இவ்விலக்கிய ஆசிரியர்களுள் முப்பெரும் கவிஞர் களாகிய குமரகுருபரர், தாயுமானவர், சிவப்பிரகாசர் ஆகியோரின் இலக்கியப் பணி நன்கு விளக்கப்படுகின்றது. இலக்கிய வரலாற்றையும் இணைத்துத்தரும் வகையில் திரு. இராஜசேகரன் அவர்களின் இந்த நூல் ஒரு சைவ இலக்கிய ஆய்வுக்கோவையாக விளங்குகிறது.

காலவாரியாக வரும் ஒரு வரலாற்றுப் பகுதி நீண்டிருப்பின் படிப்போர்க்கு வசதியாக அதன் சுருக்கத்தையும் ஆசிரியர் தந்துள்ளார்.

தமிழ் அரசர்கள் ஆற்றிய சைவப்பணி என்னும் தலைப்பில் கி.மு. 600 முதல் கி.பி. 1300 வரை தமிழ்நாட்டிலும் ஈழ நாட்டிலும் இருந்த தமிழ் அரசர்கள் ஆற்றிய சைவப் பணிகள் காலவாரியாக விளக்கப்படுவது சிறப்பு. சோழர், பாண்டியர் ஆகியோரின் தீவிர சைவப்பணிகள் நன்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. இவ்வரலாற்று நூலின் மற்றொரு சிறப்பு ''கலைகளின் நோக்கில் சைவ சமயம்'' என்ற இயலில் சைவம் வளர்த்த பல கலைகளின் வரலாற்றை ஆசிரியர் தெளிவாகக் காட்டுவதாகும்.

ஈழநாடு சைவ சமயத்துக்கும் சைவ இலக்கியத்துக்கும் ஆற்றியபணி சிறிதல்ல. அதனை முழுமையாக இவ்வாசிரியர் தருவதோடு, ஆறுமுக நாவலர், கதிரை வேற்பிள்ளை, ஆனந்த குமாரசாமி, இரத்தினம் நவரத்தினம் அம்மையார், காசிவாசி செந்திநாத ஐயர் ஆகிய ஈழத் தமிழ்ப் பேரறிஞர்கள் செய்த அரும் சைவப் பணிகளை விளக்குவது இந்த நூலுக்குத் தனிமுத்திரை தருவதாகும். இந்நூலின் இறுதிப்பகுதியாக விளங்குவது மிகப் பெரிய பகுதியாகும். ஆங்கிலேயர்கள் வந்தபின் நமது நாட்டின் மாறிய சமயப் பின்னணியில், முரணான சூழல்களுக் கிடையே ஈழநாட்டுப் பேரறிஞர்கள் உட்பட இந்நாட்டு அறிஞர்கள் மக்களிடையே சைவத்தை முனைப்போடு பரப்ப வேண்டியிருந்தது.

19-ஆம் நூற்றாண்டு இறுதியில் வள்ளலார், ஜே.எம். நல்லசாமிபிள்ளை, ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள் திரு. வி.க. ஆகியோர் செய்த பணிகளும், இருபதாம் நூற்றாண்டில் திருமுறை விளக்கம், சைவ சித்தாந்த சாத்திர விளக்கம் என்ற முறையில் வாரியார் சுவாமிகள், திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணி யம் அ.ச.ஞானசம்பந்தன் ஆகியோரின் பணிகளும் அவரவர்களின் தனித்தன்மை யுடன் நன்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. அருள்நெறிதிருக்கூட்டம் நிறுவி இன்றைய காலச் சூழலில் சைவம் வளர்வதற்கு வழிகாட்டிய குன்றக்குடி அடிகளாரின் சைவப் பணியும், திரு. வி.க. கூறியது போல் வள்ளலாரின் ஆன்மீகத்தையும், காரல்மார்க்ஸின் பொருளாதார சமநிலைக் கொள்கையையும் இணைத்து அடிகளார் செய்த சமுதாயப்பணியும் கூறப்படு கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

20-ஆம் நூற்றாண்டில் இத்துணைச் சிறப்புக்கள் இருந்தும் சைவ சமய வளர்ச்சி முழுமையடையாதது போலவே இருக்கிறது. ஒவ்வொரு அறிஞும் தனித்தனி விண்மீன்களாக ஒளிவீசுகின்றனரே அல்லாமல், கூட்டுச்சக்தியாக, மாறாதது ஒரு காரணம் என்று இவ்வரலாற்று நூல் ஆசிரியர் தம் வருத்தத்தைப் பதிவு செய்கின்றார்.

கடைசி இரண்டு நூற்றாண்டுகளில் பணிசெய்த அறிஞர்களைப் பற்றிக் கூறும் போது இந்நூலாசிரியர் அவரவருடைய பணியின் சிறப்பைக் கூறும் ஒரு வாக்கியத்தால் அறிமுகப்படுத்துவது நன்றாக உள்ளது.

சைவத்தமிழ் அறிஞர்களுள் திரு. வி.க., அ.ச. ஞான சம்பந்தம் ஆகியோர் புதிய வழிகளைக் கையாண்டு பெருநூல் எழுதியவர்கள். அவர்களுடைய பணி இந்நூலில் மிக விரிவாக கூறப்படுகிறது.

இதுவரை வெளிவராத விரிவான முறையில் உரிய இடங்களில் ஆழமும், விவரங்களும் அமைய, சைவம் 21-ஆம் நூற்றாண்டில் புது வலிமையோடு வளர வேண்டும் என்ற நோக்கோடு இச்சைவ சமய வரலாற்று நூலைத் தந்துள்ள அறிஞர் திரு. இரா. இராஜசேகரன் அவர்களை மனமாரப் பாரட்டுகிறேன்.

இந்நூல் ஒவ்வொரு சைவ அன்பரின் மனையையும், மனத்தையும் அணி செய்தல் வேண்டும் என்று விரும்புகிறேன்.

மதுரை
24.09.2002.

அன்பன்
சுப. அண்ணாமலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அணிந்துரை

முனைவர் த. தியாகராஜன்
தமிழ்ப் பேராசிரியர், பூம்புகார்க் கல்லூரி

உலகம் தழீயது வைம்; எல்லைகள் நீத்த உலகினை ஒரு குலம் ஆக்கும் உயிர்த் துடிப்புடையது சைவம்; தென்னாடுடை யது; எந்நாட்டுக்குமானது! ''ஆதியும் அந்தமுமில்லாதது; அருள்மயமானது; முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்தது; முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம்பொருள்; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியது; அட்ட மூர்த்தமும் அதுவே; அட்ட மூர்த்தியும் அவனே!'' என்றெல்லாம் சிவத்துக்கு வழங் கும் செவ்விய பெருமைகள் சைவத்துக்கு அப்படியே பொருந்தும். ஒரு நாமம், ஓருருவம், ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடுதல் எப்படியோ, அப்படித் தான் ஆதியும் அந்தமுமில்லாதவனை முதலாகக் கொண்ட சைவத்துக்குத் தோற்றமும் வளர்ச்சியும் காண்பது; பேசு வது; எழுதுவது; நினைப்பது எல்லாம்!

பெரிய பொருள் ஒன்றைப் பேச முயல்வதும் எழுதுவதும் சூரியனைச் சங்கிலியால் அளப்பது போலத்தான். வானத்துக்கு வேலி கட்டுவது மாதிரிதான். இருப்பினும் அந்தப் பெரியது நினைக்குந் தோறும், பேசுந்தோறும், எழுதும்தோறும் மேலும் பெரியதாகின்றது! சிவ தரிசனம் போல, சைவ தரிசனமும் பெரியது தானே! வானாகி, மண்ணாகி விரிவது; திங்க ளோடும் செழும் பரிதி தன்னோடும் இயல்வது!

''சிவன் எனும் ஓசையல்லது அறையா உலகில்
திருநின்ற செம்மை உள்ளதே!''

(நாவு:4230) என்றபடி, சைவம் பற்றிப் பேசும்போது திருநின்ற செம்மை திகழ் கிறது. பஞ்சபூதங்களிலும் அது மணக் கிறது. தனுகரண புவன போகங்களில் எல்லாம் சிவமயம்; சைவ மயம்; தமிழோடு சைவம்; சைவத்தோடு தமிழ்; பிரிவற்ற இவற்றின் தோற்றம், வரலாறு பற்றி எழுதுவது என்பது பஞ்ச பூதங்களை ஒன்று திரட்டி எழுதுவதாகும். நெருப்பை மூச்சுவிட்டு, நினைவுகளை வாருவதாகும். அலைகளுக்கு முளை யடிக்கிற மாதிரி! தன் மூளையை எல்லாம் கசக்கிப் பிழிந்து 'பாஞ்சாலி சபதம்' பாரதி எழுதினான். செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராஜசேகரனாரும் கூட இத்தகைய அனுபவத்தோடுதான் மாபெரும் இந்தச் சைவ வரலாற்றை எழுதியுள்ளார். சைவ வரலாற்றை எழுதுவது 'திருவண்டப் பகுதியை' எழுதுவது போல! அண்டப் பகுதிக்கு ஏது ஆதி? ஏது அந்தம்! சிந்தையும் மொழியும் செல்லா நீட்சியுடைய, இத்தகைய சைவ வரலாற்றுக்கு முந்தை வரங்களின் காரணமாக இராஜசேகரனார் மிக நீண்ட வரலாற்று நூலை எழுதியுள்ளார்!

கடந்தகால மேன்மைகள் நசிவுக்குள்ளா கும்போது சிறந்த மெய்ஞானியும் கவலைப் படுவான்! இந்தியதேசம் அன்னியராட்சி யில் அலங்கோலப்பட்டபோது துடித்துப் போனான் பாரதி. பழைய பாரதத்தை நினைத்துப் புதிய பாரதத்தை மீட்க நினைத்தான்; பாடினான் விடுதலை வேள்வியை! இருபதுகளின் தொடக்கத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ் இங்ஙனம் தொலைந்துபோனபோது மீட்கத் துடித்துப் பாடினான் பாவேந்தன். மீளியல் பார்வை (Revivalism) மீண்டும் ஒரு பதியத்தைப் புணர்ப்பை – விளைவை – எழுச்சியை ஏற்படுத்தும்! சைவத்திலும் கூட, காரைக்கால் அம்மை சைவத்தை மீட்கத் துடித்த கால வேட்கையை உணர்தல் நல்லது. மந்திரம் பாடிய திருமூலர் அதன் மூலக்கனல்களை மீட்க நினைத்தது ஒரு காலம்; அது ஒரு தேவை! சுந்தரமூர்த்தி கைலையைவிட்டுக் கீழ் இறங்கித் தொண்டத் தொகை பாடிச் சைவத்தை மீட்டதும் ஒரு காலம்; அஃது ஒரு தேவை! சம்பந்தரின் பொற்கிண்ணப் பால் ஒரு குறியீடு அல்லவா? அண்ட சராசரமும் சைவம் மணந்தது அவரது மீட்சித் திறத்தால். அஃது ஒரு காலம். அஃது ஒரு தேவை! அன்னிய அரசாள ரிடமிருந்து (பல்லவனிடம்) 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று பாடி அப்பர் சைவத்தை மீட்டது ஒரு காலம்; அஃது ஒரு தேவை! இப்படித்தான் நம்பிக்கு! இப்படித்தான் சேக்கிழார்க்கு! சைவ வரலாறு எழுதிய இராசமாணிக்கனாராய் இருப்பினும், வாழையடி வாழையாய் சைவ வரலாறு எழுத வந்த அருணா சலங்கள் ஆயினும், வெள்ளைவாரணர் ஆயினும், ஔவை ஆயினும், சோமசுந்தர தேசிகராயினும், ஏன் நம் புரவலர் ஆயினும் எல்லாரும் சைவ மீட்சிக்கும் எழுச்சிக்கும் வரலாறு எழுதி மீண்டும் வரலாறு படைத்துள்ளனர்!

'பதி, பசு, பாசங்கள்' அனாதிகள் என்று சொல்லுமானால் ஒரு சமூகம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கும்; வெறும் தத்துவக் குறியீடுகளா இவை? மானுடத்தின் உயிர்ப்பை - உயிர்ப்பின் உயர்வை - படைப்பின் அதிமேன்மை களைப் பற்றிய கண்டுபிடிப்புகள் அல்லவா இவை? மானுடச் சிந்தனைகளின் உச்சிச் சிகரங்கள் அல்லவா இவை! இவை தாம் கயிலைகளா? கயிலையின் தரிசனங்களா? காலம் அடுத்தடுத்துக் கண்டுகொண்ட புவனபோகங்கள் – புலனறியோகங்கள் – சைவமாய்ச் சைவ சித்தாந்தமாய் விரிந்து கிடக்கின்றன. எத்தனைச் சிற்றிலக் கியங்கள்! எத்தனைப் பேரிலக்கியங்கள்! அண்ட பகிரண்டம் போலச் சைவநூல்கள் எண்ணில்லாத நூல்கள். எத்தனை மணி மகுடங்களை ஆட்டி வைத்த சைவம்! ஆழ்த்திய சைவம்! எத்தனைக் கலாச்சாரங்களை - கலைகளைக் கண்ட சைவம்! எத்தனை அரசுகள்! எத்தனைப் பக்தர்கள்! எத்தனை ஞானிகள்! எத்தனை ஞானங்கள்! எத்தனை ஆகமங்கள்! எத்தனைப் புலவர்கள்; எத்தனை எத்தனை இலக்கியங்கள்... எத்தனை எத்தனை தத்துவ நூல்கள். வரம்பில... கோடி நூல்கள்! அங்கு இங்கு எனாதபடி சைவம் எங்கும் பரந்தது. "சைவம், - காலம்! காலம் ஒரு மூன்றும் காட்டும் காரணம்! சொல்லாய தொகுதி எல்லாம் கடந்து நின்ற சொரூபானந்தம்; ஒரு பரிபூரணத்தின் விளையாட்டை - வரலாற்றை - ஆதி அந்தம் கடந்த ஒன்றில் ஆதியோடு அந்தமான வரலாற்றைத் திரு. இராஜசேகரனார் தவம் கூட்டி வைக்க முழுமையாக - விரிவாக எழுதியுள்ளார். தாயுமானவர் சொன்னபடி,

> "ஆனாலும், இதன் பெருமை எவர்க்கு யார் சொல்வார்!
> அதுவானால் அது ஆவர்! அதுவே சொல்லும்."

இந்நூலும் ஓர் ஆதார புவனங்களின் சைவரகசியமாய்ச் - சைவவெளியாய்க் காணப்படுகிறது. இதன் பெருமையை அனுபவித்தே அறிய வேண்டும்!

வரலாற்றுக்கு முந்தைய காலத்துச் சைவம், சங்க காலத்துச் சைவம், பல்லவர் - சோழர் - பாண்டியர் காலங்களின் சைவம், நாயக்கர் காலத்துச் சைவம், தற்காலத்துச் சைவம் என்றெல்லாம் அறுத்து அறுத்துப் பார்க்காமல் ஒரு முழுமையான நீண்ட சைவ வரலாற்றைக் 'காலங்கள்தோறும் சைவம்' எனும் ஒரு நீண்ட பார்வையில் திரு. இராஜசேகரனார் இந்த மாபெரும் சைவ வரலாற்று நூலை எழுதியுள்ளார். பல்வேறு சான்றுகள் இதன்கண் களிநடம் புரிகின்றன!

சைவம், வைதீகத்தோடு சைவம், வைதீகத்தோடு அதன் முரண்கள், சமண

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பௌத்தங்களோடு அதன் சமர்கள், சைவத்தின் வகைகள், காஷ்மீரம் முதல் குமரி வரை அதன் பரவல்கள், ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் அது கொண்டிருந்த வீச்சுகள், எல்லாம் இந்நூற்கண் ஆராயப்பட்டுள்ளன. வடக்கே மோரியர்கள், குப்தர்கள், குஷாணர்கள் சைவத்துக்கு ஆற்றிய பணிகளிலிருந்து தெற்கே இலங்கை அரசர்களின் சைவத் தொண்டுகள் வரை நோக்கப்பட்டுள்ளன.

பக்தி இயக்க மலர்ச்சியில் சைவத்தின் பெருவாழ்வு, தேவார மூவர், மணிவாசகர், திருமுறை ஆசிரியர்கள், நாயன்மார்கள், சித்தர்கள், சித்தாந்திகள், பின்னை ஞானிகள் என்று சைவத்தோடு சைவத்துக்கு அவர்கள் ஆற்றிய பங்கு பணிகள் எல்லாம் நுனித்து நோக்கப் பெற்றுப் பேசப்பட்டுள் ளன. இந்த மெய்ஞானிகளின் சாத்திரங்கள் - தோத்திரங்கள், சிற்றிலக்கியங்கள் - பாட்டுக்கள் எல்லாம் சைவ வரலாற்று நோக்கில் ஆராயப்பட்டுள்ளன. தமிழ் நாட்டறிஞர், அயல் நாட்டறிஞர், ஈழநாட்டறிஞர் ஆகிய உலக நாட்டறிஞர் களின் சைவப் பணிகள் காலந்தோறும் அவர்கள் செய்திருக்கிற சாதனைகள் எல்லாம் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

தொன்மைக்குத் தொன்மையான சைவத்திலிருந்து அதன் 'நேற்று இன்று - நாளைகள்' இதில் புலப்படுத்தப்பட்டுள் ளன. இயல் வரையறைகளைக் கடந்த பெருநூல் இது! இயற்கை நில - இன அடிப்படைகளில் தமிழரின் தொன்மை; உலகத் தோற்றம் - மனிதத் தோற்றங்கள்; உலக நாகரிகங்கள் அடிப்படையில் தமிழ் நாகரிகம் - பண்பாடு; சிந்துவெளித் தோற்றம்; வேத உபநிடதங்களின் காலம்; சைவ ஆகமங்களின் - உப ஆகமங்களின் கி.மு. 6-ஆம் நூற்றாண்டு கால அளவிலேயே அவற்றின் தொன்மை; இந்தியத் தத்துவங்களின் ஆறு தரிசனங்கள்; மகாபாரத - இராமாயண இதிகாசங்களில் சைவம்; கால நெடும் பாதையில் சைவப் புராணங்கள்; சங்கரர், இராமானுஜர், மாத்துவர் கண்ட சிந்தனைகள்; வடமொழி இலக்கியங்களில் சைவம்; காளிதாசனின் குமாரசம்பவம் முதல் உஜ்ஜயினியின் போஜ அரசர்கள் வரையில் அவர் காலத்துச் சைவப் பிரிவுகள்; ஸ்ரீகண்டரின் பிரமசூத்திரம் (கி.பி. 1270) பசவண்ணரின் வீரசைவம் (கி.பி. 1100 - 1167) மத்திய கால அருளாளர்கள் (கி.பி. 1300 முதல் 1526 வரை) சூபி, இராமானந்தர், கபீர், சைதன்யர், குருநானக் இவர்களின் பங்கு பணிகள், இந்திய அரசர்களின் சைவப் பணிகள் என்று இந்நூல் வடித்திருக்கும் செய்திகள் விரிவானவை! சைவத்தின் ஆன்மீக தேசீய வரலாற்றைப் புலப்படுத்து பவை.

இலக்கிய நோக்கில் சைவம் எனும் பகுதி,தமிழரின் ஐந்திணைப் பாகுபாடு, லிங்க வழிபாடு, தேவார - திருவாசகங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், இவற்றை ஒட்டிய நூல்கள், காலவாரியில் சேர சோழ பாண்டியரின் பங்கு பணிகள்; மடங்கள் குகைகளில் சைவம் என்று எத்தனையோ செய்திகளைச் சொல்லுகிறது!

கலைகள் நோக்கில் சைவம் இந்நூலின் முக்கியப்பகுதி. நாகர, திராவிட, வேசர, சாளுக்கியப் பாணிகள் நிறைந்த கட்டடக் கலைக் கூறுகள் விளக்கப்பட்டுள்ளன. இப்பகுதி சிற்பம், ஓவியம், இசை என்று கலைகளில் கமழும் சைவத்தை எல்லாம் பறைசாற்றுகிறது. பிறநாட்டு நல்லறிஞர் களின் சைவப் பணிகள் அளவாக ஆராயப் பட்டுள்ளன.

சைவப் பேரறிஞர்களின் சிறப்பான தொண்டுகள் பற்றி அவர்களைச் சிறப்பிக்கும் 'மணிமகுடத் தொடர்கள்' இந்நூற்கண் காணப்படும். குமரகுருபரர், தாயுமானார், சிவப்பிரகாசர், வள்ளலார் பற்றிய தனித்தன்மைமிக்க சிறப்பான இடங்கள் சைவ நோக்கில் மதிப்பிடப் பெற்றுள்ளன.

பேராசிரியர் தெ.பொ.மீ. மறைமலை அடிகள், திரு.வி.க., ஞானியார் சுவாமிகள், குன்றக்குடி அடிகள், அ.ச. ஞானசம்பந்தம், ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை, டாக்டர் மா. இராஜமாணிக்கனார், மு. அருணாசலம், போன்றோரின் ஆய்வு நூல்கள் ஏற்படுத்திய சைவத் தாக்கங்களைத் திரு. இராஜ சேகரானார் இதில் நன்கு மதிப்பிட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளார். அவரையும் மீறிச் சில அறிஞர்களின் தாசனாக மாறிய அவர் எழுத்துக்கள் இந்நூற்கண் காணப்படும்.

இந்நூல் சைவ வரலாற்றின் நீண்ட நெடுந்தொகை! சில இடங்களில் சைவத்தின் நித்திலக் குவியல்கள்; சில இடங்களில் சைவத்தின் மணிமிடை பவளங்கள்; சில இடங்களில் சைவத்தின் களிற்று யானை நிரைகள்! சென்ற காலத்தின் பழுதிலாச் சைவத்தை இன்று நல்கிடும் இனிய கொடை! எதிர்கால வரங்களின் இனிய நதி!

'வாழையடி வாழையெனச்' சைவம், தோத்திரச் சிற்பிகளைத் தந்துள்ளது; சாத்திர ஞானிகளைத் தந்துள்ளது. இதுபோலவே அதன் வரலாற்றை எழுதும் ஒரு திருக்கூட்டத்தையும் தந்தது; அம்மரபில் வந்துதித்த திரு. இராஜமாணிக்கனாராய் - ஓர் அருணாசலமாய் - ஓர் ஔவை துரைசாமியாய், ஒரு வெள்ளைவாரணராய், ஒரு சோமசுந்தர தேசிகராய் அவர் மரபில் திரு. இராஜசேகரனாரும் விளங்குவார். திருமந்திரம் வரதராஜம்பிள்ளையின் இந்தச் செல்வமகனார் பூம்புகாரின் உழவாரத் தோன்றல் மட்டும் அல்லர்; மாபெரும் சைவ வரலாறு எழுதிய சைவ வரலாற்றுத் தென்றலாகவும் திகழ்வார் என்பது உண்மை!

ஈச போற்றி! இறைவ போற்றி!
தேசப் பளிங்கின் திறனே போற்றி!

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

முதற்பகுதி

I இயற்கை நில, இன அடிப்படையில் தமிழர் தொன்மை பக்கம் 5–11

1) உலகத் தோற்றம், மனிதனின் தோற்றம்
2) இந்தியாவில் மனிதன்
3) காலங்காலமாகத் தமிழகம்
4) தமிழகத்தில் ஆதிமனிதன்

II உலக நாகரிகங்கள் அடிப்படையில் சிந்துசமவெளி நாகரிகம் பக்கம் 12 – 15

III காலநெடும் பாதையில் சைவம்

தொன்மைக்காலம் முதல் கி.மு. 600 வரை பக்கம் 19 – 31

1) சைவத்தின் தொன்மை
2) சிவன் - உருத்திரன்
   அ) மொகஞ்சோதாரோவில் சிவன் வழிபாடு
   ஆ) ஆரியர் வருகை
   இ) வேதத்தில் உருத்திரன்
   ஈ) சிந்துசமவெளி சிவன் - வேதகால உருத்திரன் - சிவன் உருத்திர இணைப்பு
   உ) உபநிடதத்தில் உருத்திரன் - சிவன்
3) சைவ ஆகமங்கள்

கி.மு. 600 முதல் கி.பி. 320 வரை பக்கம் 32 - 40

4) மகாபாரதம் - இராமாயணத்தில் சிவவழிபாடு
5) பாசுபத சைவம்
6) இந்தியத் தத்துவம் - ஆறுதரிசனங்கள்

கி.பி. 320 முதல் கி.பி. 740 வரை பக்கம் 41

7) சைவபுராணங்கள்
8) காளிதாசனின் குமாரசம்பவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி. 750 முதல் கி.பி. 1000 வரை பக்கம் 45 - 48

9) வடமொழி இலக்கியம்
10) சில சைவப் பிரிவுகள்
11) காஷ்மீர சைவம்

கி.பி. 1000 முதல் 1300 வரை பக்கம் 48 - 63

12) வடநாட்டில் சைவசமயம்
13) சைவ இலக்கியங்கள்
14) போஜ அரசரின் தத்துவப்பிரகாசம்
15) ஸ்ரீகண்டரின் பிரும்ம சூத்திர உரை
16) வீரசைவம்

அ) வரலாறு
ஆ) தத்துவம்
இ) இலக்கியம்
ஈ) சமுதாயம்

கி.பி. 1300 முதல் கி.பி. 1526 வரை பக்கம் 63 - 64

17) மத்திய கால அருளாளர்கள்
18) சைவ சமயம் - இந்தியா
19) இந்திய இலக்கியம்

கி.பி. 1526 முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை பக்கம் 65 - 72

20) சமயச் சூழல்
21) இந்திய இலக்கியம்
22) சைவக் கடவுளர்

அ) உமை
ஆ) கணபதி
இ) முருகன்

V இந்திய அரசர்களின் சைவப் பணிகள் பக்கம் 73 – 83

1) கி.மு. 600 முதல் கி.பி. 320 வரை
2) கி.பி. 320 முதல் கி.பி. 740 வரை
3) தக்காண அரசர்கள்
4) சாளுக்கியர்கள்
5) கி.பி. 750 முதல் கி.பி. 100 வரை
6) கி.பி. 100 முதல் முதல் கி.பி. 1300 வரை
7) கி.பி. 1300 முதல் கி.பி. 1526 வரை
8) கி.பி. 1526 முதல் கி.பி. 1707 வரை
9) கி.பி. 1707 முதல் கி.பி. 1818 வரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VI தமிழ் இலக்கிய நோக்கில் சைவம் பக்கம் 84

1) ஐந்திணைப் பாகுபாடு 84
2) தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு 85
3) லிங்க வழிபாடு 87
4) திருமந்திரம் 87
5) தேவார திருவாசகம் 88
6) சோழர் காலச் சைவ இலக்கியம் 94
7) சைவ சித்தாந்தத் தத்துவ வளர்ச்சி 95
8) பதினான்காம் நூற்றாண்டு சைவ இலக்கியம் 97
8) பதினைந்தாம் நூற்றாண்டு சைவ இலக்கியம் 102
8) பதினாறாம் நூற்றாண்டு சைவ இலக்கியம் 104
8) பதினேழாம் நூற்றாண்டு சைவ இலக்கியம் 110
8) பதினெட்டாம் நூற்றாண்டு சைவ இலக்கியம் 119

VII தமிழ் அரசர்களும், சைவசமயமும்

கி.மு. 600 முதல் கி.பி. 320 வரை பக்கம்133

1) சேரர்
2) சங்ககாலச் சோழர்
3) இலங்கை அரசர்கள்

கி.மு. 300 முதல் கி.பி. 575 வரை பக்கம் 134

1) சேரர்
2) சோழர் - பாண்டியர்
3) களப்பிரர்
4) முற்காலப் பல்லவர் காலத்தில் சைவ சமயம்

கி.பி. 575 முதல் கி.பி. 900 வரை பக்கம் - 137

1) பாண்டியர்
2) பல்லவர்

கி.பி. 900 முதல் கி.பி. 1300 வரை பக்கம் - 141

1) சோழர்
2) பாண்டியர்
3) சோழர் காலச் சைவ சமயம்

கி.பி. 1290 முதல் கி.பி. 1748 வரை பக்கம் - 150

VIII கலைகள் நோக்கில் சைவ சமயம்

கி.பி. 320 - 750 பக்கம் 152

1) கட்டடக்கலை (குகைகள்)
2) கட்டடக்கலை (எழுப்பப்பட்ட கட்டடங்கள்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3) சிற்பக்கலை
4) ஓவியம்

கி.பி. 1000 - 1300 பக்கம் - 155

1) கட்டடக்கலை
2) இசைக்கலை நோக்கில் சைவம்

இரண்டாம் பகுதி

I

1. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு அரசியல், சமயச் சூழல் - இந்தியா 164

2. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு அரசியல், சமயச் சூழல் - தமிழ்நாடு 168

II ஆன்றோர்கள் - அறிஞர்கள் 171

III பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள்

1) H.R. ஹொய்சிங்டன் ... 175
2) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை ... 175
3) கருத்தமுத்துப்பிள்ளை ... 186
4) ஜி.யூ. போப் ... 187
5) வள்ளலார் ... 188
6) கோடகநல்லூர் சுந்தர அடிகள் ... 200
7) கந்தசாமி முதலியார் ... 201
8) நீலகண்ட சிவன் ... 201
9) வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ... 202
10) வீ. செந்தில்வேலு முதலியார் ... 204
11) மகாவைத்யநாதையர் ... 204
12) சோமசுந்தர நாயகர் ... 205
13) பாம்பன் சுவாமிகள் ... 206
14) உ.வே. சாமிநாதையர் ... 207
15) சிந்நயச் செட்டியார் ... 210
16) சொக்கலிங்க ஐயா ... 210
17) ஜெ.எம். நல்லசாமி பிள்ளை ... 212
18) காஞ்சி நாகலிங்க முனிவர் ... 223
19) ஞானசித்தர் ... 223
20) கோபால செட்டியார் ... 225

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

21) வள்ளிமலை சுவாமிகள் ... 226
22) ஞானியார் சுவாமிகள் ... 226
23) மறைமலையடிகள் ... 228
24) அனவரத விநாயகம்பிள்ளை ... 230
25) சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ... 231
26) பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார் ... 231
27) தணிகைமணி வ.சு. செங்கல்வராயபிள்ளை ... 232
28) ச. சோமசுந்தர தேசிகன் ... 234
29) திரு. வி. கலியாணசுந்தரனார் ... 234
30) திருவாசகம் வேங்கடராமையர் ... 244
31) ச.சச்சிதானந்தம் பிள்ளை ... 244
32) அ.மு. சரவண முதலியார் ... 245
33) கா. சுப்பிரமணிய பிள்ளை ... 246
34) சி.எம். இராமச்சந்திரஞ்செட்டியார் ... 246
35) பாபநாசம் சிவன் ... 247
36) ப.இராமநாதம்பிள்ளை ... 248
37) ஆர் பஞ்சநதம் பிள்ளை ... 248
38) தொண்டன் ஆறுமுகனார் ... 249
39) மா. பாலசுப்பிரமணிய முதலியார் ... 249
40) இ.மு. சுப்பிரமணிய முதலியார் ... 250
41) கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் ... 250
42) வே.செ. சொக்கலிங்கனார் ... 251
43) கவியோகி சுத்தானந்த பாரதியார் ... 251
44) ராய. சொக்கலிங்கம் ... 252
45) கீ. இராமலிங்கனார் ... 252
46) சூரியனார் கோயில் மீனாட்சி சுந்தர தேசிகர் ... 253
47) கோ. இராமநாதன் செட்டியார் ... 253
48) த.ச.மீனாட்சி சுந்தரனார் ... 254
49) ஈசான சிவாசாரிய சுவாமிகள் ... 255
50) அண்ணாமலை ரெட்டியார் ... 256
51) B. இரத்தின நாயகர் ... 256
52) இரத்தினவேலு முதலியார் ... 257
53) வ.த. சுப்பிரமணிய பிள்ளை ... 257
54) கோயிலூர் ஆண்டவர் ... 257

IV பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள் – குறிப்புகள் ... 259

V இருபதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள் ... 271

1) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ... 271
2) ஜி. வன்மீகநாதபிள்ளை ... 272

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3) தொண்டைமண்டல ஆதீனம் 292-ஆவது குருமகாசந்நிதானம் (முத்து சு. மாணிக்கவாசக முதலியார்) ... 273
4) ஔவை சு. துரைசாமி பிள்ளை ... 274
5) ச. தண்டபாணி தேசிகர் ... 276
6) அழகரடிகள் ... 277
7) தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் ... 277
8) நல். முருகேச முதலியார் ... 278
9) திருமுருக கிருபானந்தவாரியார் ... 278
10) க. வச்சிரவேல் முதலியார் ... 286
11) கி.வா. ஜகந்நாதன் ... 287
12) மா. இராசமாணிக்கனார் ... 288
13) சி. அருணைவடிவேல் முதலியார் ... 288
14) திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் ... 289
15) மு. அருணாசலம் ... 291
16) திருகுறள்வேள் ஜி. வரதராஜன் ... 293
17) ரா.ப. தங்கவேலனார் ... 295
18) எஸ். மகராஜன் ... 295
19) வ.ஆ. தேவசேனாபதி ... 297
20) ப. சுந்தரேசனார் ... 297
21) தத்புருஷதேசிகர் (பாலகவி வே. இராமநாதஞ் செட்டியார்) ... 298
22) அ.ச. ஞானசம்பந்தன் ... 299
23) க. வெள்ளைவாரணனார் ... 301
24) முரு. பழ. இரத்தினஞ்செட்டியார் ... 302
25) ந.ரா. முருகவேள் ... 303
26) பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் ... 305
27) தவத்திரு குன்றக்குடி அடிகளார் ... 305
28) தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் ... 313
29) ஹவாய் ஆதீனம் குரு சுப்பிரமணியம் ... 317
30) வை. இரத்தினசபாபதி ... 317
31) சுப. அண்ணாமலை ... 318
32) கௌமாரமடம் தவத்திரு சுந்தரசுவாமிகள் ... 319
33) கு. சுந்தரமூர்த்தி ... 320
34) கு. வைத்யநாதன் ... 320
35) சி.சு. மணி ... 321
36) தவத்திரு ஊரன் அடிகள் ... 322
37) டி.என்.இராமச்சந்திரன் ... 323
38) தேமொழியார் ... 324
39) ச.கங்காதரன் ... 324
40) கே. சிவராமன் ... 325

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VI இருபதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள் - குறிப்புகள் ... 326

VII காலநெடும்பாதையில் சைவம் - ஈழம் ... 333

VIII ஆன்றோர்கள், அறிஞர்கள் - ஈழம் ... 336

1) ஆறுமுக நாவலர் ... 336
2) சி.வை. தாமோதரம் பிள்ளை ... 346
3) கந்தப்பிள்ளை ... 347
4) சபாபதி நாவலர் ... 347
5) காசிவாசி செந்திநாதையர் ... 348
6) பொன். இராமநாதன் ... 349
7) பொன். அருணாசலம் ... 350
8) அம்பலவாண நாவலர் ... 351
9) பரசமயகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ... 352
10) அருணாசல உபாத்யாயர் ... 354
11) யோக சுவாமிகள் ... 355
12) ஆனந்த குமாரசுவாமி ... 357
13) சு.சிவபாத சுந்தரனார் ... 358
14) சிவஸ்ரீ குமார சுவாமிக்குருக்கள் ... 358
15) ஏ. விசுவநாதன் ... 359
16) இரத்தின நவரத்தினம் ... 360
17) சிவநந்தி அடிகள் (கே. ஞானசூரியன்) ... 361
ஆன்றோர் - அறிஞர் சில குறிப்புகள் ... 362

மூன்றாம் பகுதி

செயல்முறை ஆவணம் ... 369

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''செல்வர்கள் சிவாலயங்கள் எழுப்புவர்.
ஏழையேன் என் செய்வேன்?
என்னுடைய கால்களே தூண்கள்;
உடலே ஆலயம்;
தலையே பொற்கலசம்.
ஓ! கூடலேசுவரா! கேண்மின்!
எழும்பிநிற்பது வீழும்.
நகர்வது நிலைத்து நிற்கும்''

– பசவண்ணா.

''கைப்பொருளை நீ கொள்ளையடிக்கலாம்;
உன்னால் உடம்பின் புகழைக் கொள்ளையடிக்கமுடியுமா?
அணிந்திருக்கும் ஒவ்வொரு ஆடையையும் உருவலாம்;
ஒன்றுமில்லாமையை – நிர்வாணத்தை – உன்னால் உருவமுடியுமா?
எல்லாம் [மானம்] துறந்த பெண்ணுக்கு மறைப்போ,
துணியோ, அணியோ தேவையா?''

– மகாதேவியக்கா.

''தழுவு உமையால் முன்னும் தமிழிறையாற் பின்னும்
தொழும் இறையால் மேலும் சுவடு – கெழுமுக கீழ்
இன்றால் எனும் குறைபோய் என்மனம்சேர் வாட்போக்கி
அன்றால் அமர்ந்தாய் அடி.''

– மீனாட்சி சுந்தரம்பிள்ளை

''மார்க்ஸ் முனிவன் மார்க்கம் கண்டனன்
அந்த மார்க்கம் யாக்கை போன்றது;
ஆவிநல்க மேவினன் காந்தி
அகிம்சையை இம்சையால் இணைப்பது மார்க்சியம்;
அகிம்சையை அகிம்சையால் அணைப்பது காந்தியம்
மார்க்ஸ் பொருளே காந்தி அருளே
ஒன்ற இரண்டும் உழைத்தல் நன்றே''

– திரு. வி.க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதல் பகுதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

I

இயற்கை நில, இன அடிப்படையில் தமிழர் தொன்மை

(1) உலகத் தோற்றம் - மனிதனின் தோற்றம்

470 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமி தோற்றம் : தொடக்கத்தில் சூரிய மண்டலம் (Solar System) வாயு, தூசி ஆகியவற்றின் திரளின் (Mass) சிதறலாகத் தோன்றியது. அப்பொழுது சூரிய மண்டலம் சுழன்று கொண்டே இருந்தது. அந்த சுழற்சியில் உருவான வெப்பத்தால் நடுவில் சூரியனும், அதனைச் சுற்றி அதிலிருந்து வீசியெறியப்பட்ட தட்டையான வாயு மண்டலமும் வெளிப்பட்டது. அதனால் பல கோள்கள் (Planets) தோன்றின. அப்பொழுது சூரியனுக்கு அருகில் இருந்த கோளம் பூமி ஆகும். 4000°C (Centigrade) வெப்பத்தில் பூமி இருந்தது.

470 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி குளிர்ச்சி அடைய ஆரம்பித்து, வாயுப் பொருள் திரவமாக ஆரம்பித்தது. 1500°C வெப்பத்தில் திடத் துணுக்குகள் தோன்றின. வாயுக்கள் குளிரப் பூமியைச் சுற்றி மேகங்கள் உருவாயின. சீதோஷ்ணம் குறையக் குறைய மழை பொழிய ஆரம்பித்து 60,000 ஆண்டுகள் விடாமல் பெய்தது. இதனால் பூமியின் வெப்பநிலை 20 – 30°C-ஐ அடைந்தது. 400 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்த விடா மழை நின்றது.

உயிர்ப் பொருள் தோன்றுவதற்கான சூழ்நிலை : கதிர் இயக்கத்தாலும், மின்சார வெளிப்பாட்டாலும் பல லட்ச ஆண்டுகளுக்குப் பின் வேதிப் பொருள்களின் கலவைக் குழம்பு உருவானது. இக்குழம்பு உயிர் வாழ்வதற்கான கூறுகளைக் கொண்டது. இதிலிருந்து வாழும் செல் (Cell) உருவானது. 50 கோடி ஆண்டுகள் கழிந்த பின் இந்த செல்லிலிருந்து பாசியும், நுண்ணுயிர்க் கிருமிகளும் தோன்றின. மிகுந்த உயரத்தில் பிராணவாயு எழும்பி பூமியைச் சுற்றி Ozone கவசத்தை உருவாக்கியது. இதனால் சூரியனிலிருந்து வெளிப்படும் பாதகம் விளைவிக்கக் கூடிய தீக்கதிர்கள் தடுக்கப்பட்டன. பூமியில் உயிருள்ள பொருள்கள் வாழப் பாதுகாப்பு ஏற்பட்டது.

மிருகங்களின் தோற்றம் : 150 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமி வாழத்தக்கதாக ஆகிவிட்டது. 120 கோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு செல்லுக்கு மேற்பட்ட ஜீவ ராசிகள் தோன்றின. 45 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் முதல் கடல் தாவரங்கள் தோன்றின. 10 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் மிருகங்கள் தோன்றின.

கண்டங்களின் தோற்றம் : தொடக்கத்தில் பூமியின் நிலப்பகுதி 'பாங்கியா' (Pangaea) என ஒரே கண்டமாக இருந்தது. இது உடைந்து லௌரேசியா (Lawrasia), கோண்டன்வானாலாண்ட் (Gondanwana land) என இரண்டாகப் பிரிந்தது. அது மேலும் பிரிந்து இன்றைக்குள்ள கண்டங்களாக மாறின.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதனை ஒத்த ஜீவராசி தோற்றம் : 4 கோடி ஆண்டுகளுக்கு முன்தான் டார்வின் குறிப்பிட்ட மனிதக் குரங்குக்கும், மனிதனுக்குமான பொது மூதாதையரான ஆதி மிருகம் (Primate) தோன்றியது. இதனை விட வளர்ச்சியடைந்த ஆதி மிருகம் 140 லட்சம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் சிவாலிக் (Siwalic Hills) மலைப்பகுதியில் தோன்றியது. 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதனை ஒத்த ஜீவராசி ஆப்பிரிக்காவில் தோன்றியது.

30,000 ஆண்டுகளுக்கு முன் Homo Sapiens உருவாதல் : வடக்கு கென்யாவில் ருடால்ப் (Rudolf Lake) ஏரியில் கிடைத்த மண்டை ஓடும், எலும்புகளும் 25 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுடையது ஆகும். அவனுக்கு '1470 மனிதன்' என்று பெயர். மண்டை ஓட்டின் வளர்ச்சியைக் கொண்டு தான் மனிதனின் வளர்ச்சி கணிக்கப்படுகிறது. தென்ஆப்பிரிக்கா வடக்கு கேப் டவுனுக்கு 60 மைல் தள்ளி லாங்கேபான் லகூனில் (Langebaan Lagoon) மனிதனுடைய இரண்டு பாதத் தடங்களின் புதை படிவங்கள் கிடைத்துள்ளன. அவை 1,17,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ('National Geographic Magazine' - Sept. 1997).

பல படி நிலைகளுக்குப் பிறகு 30,000 ஆண்டுகளுக்கு முன் இன்றைய மனிதனுக்கு நிகராக இருக்கும் Homo Sapiens மனிதன் உருவானான். இந்தக் கால கட்டத்தில்தான் மனித இனம் காகஸாய்டு (Caucasoid), (ஐரோப்பியர்கள், இந்தியர்), மங்கோலாய்டு (Mongoloid), (ஆசியர், செவ்விந்தியர்), நீக்ரோய்டு (Negroid) என மூன்று முக்கிய இனங்களாகப் பிரிந்தது. ஆஸ்திரலாய்டு (Austroloids) என்ற நான்காவது இனம் ஆஸ்திரேலிய தொல் குடிகள் ஆவர். அவர்கள் ஆசியாவிலிருந்து வந்த ஆதி காகஸாய்டுகளும், தென்னிந்தியாவிலிருந்து வந்த வெட்டாய்டுகளும் (Veddoids) ஆவர். மனிதன் இப்பொழுது உலகம் முழுவதும் பரவிவிட்டான்.

வேளாண்மையும் உலோகம் பயன்படுத்தலும் : 12,000 ஆண்டுகளுக்கு முன் வேட்டையாடி உணவு சேகரித்த மனிதன் வேளாண்மையில் ஈடுபட ஆரம்பித்தான். கி.மு. 10,000-ஆம் ஆண்டு முதல் கி.மு 5000-ஆம் ஆண்டு வரை வேளாண்மையில் மனிதன் புரட்சிகள் நிகழ்த்தினான். கி.மு. 1000-ஆம் ஆண்டில் தென்மேற்கு ஆசியாவில் கோதுமையும், பார்லியும் பயிரிடப் பட்டது. இது புதிய கற்காலம் (New Stone Age) அல்லது நியோலிதிக் காலம் (Neolithic Age) எனப்படும்; கி.மு. 6000-ஆம் ஆண்டிலிருந்து இரும்புக் காலம் தொடங்குகிறது. ஈரானிலும் துருக்கியிலும் உலோகம் பயன்படுத்தியதற்கான முதல் சான்று கிடைக்கிறது.[1]

(2) இந்தியாவில் மனிதன் - முதல் அடையாளம்

இந்தியாவில் மனிதன் வாழ்ந்ததற்கான முதல் அடையாளம் பஞ்சாபில், சிந்து ஜீலம் நதிகளுக்கு இடைப்பகுதியில் கிடைத்துள்ளது. இது 5 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. (முதல் பனிக்கட்டி காலத்தின் இறுதி) 2-ஆவது, 3-ஆவது, 4-ஆவது பனிக்கட்டிக் காலத்திலும் மனிதன் வாழ்ந்ததற்கான ஆதாரமாக ஆயுதங்கள் கிடைத்துள்ளன. ஆதி மனிதன் தென் இந்தியாவில் தோன்றிப் பஞ்சாபில் குடியேறியதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. செம்புக் காலம், இரும்புக் காலத்திலும் மனிதன் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.[2] "It is now generally held that the earliest traces of human beings in India are found in the panjab about 5,00,000 Years."

(3) காலங்காலமாகத் தமிழகம்

ஆர்க்கேயன் பேரூழி : உலகம் தோன்றிய நாளிலிருந்து இதுவரை ஐந்து பேரூழி

1) "The Last Two Million Years" – Reader's Digest – 1973.

2) "Ancient India" – R.C. Majumdhar – 1952.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கள் நிகழ்ந்துள்ளன. ஒரு பேரூழிக் காலத்தில் இரண்டு, மூன்று ஊழிகள் நிகழ்ந்துள்ளன. அதனால் கடல் பகுதி நிலமாகவும், நிலப்பகுதி கடலாகவும் மாறி வந்துள்ளது. முதற் பேரூழி ஆர்க்கேயன் பேரூழியாகும் (Archaean Era). 450 கோடி ஆண்டுகளிலிருந்து 60 கோடி ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அப்போது உயிரினங்கள் தோன்றவில்லை. சேலம் மாவட்டம் சங்கரிதுர்க்கத்துச் சுண்ணாம்புப் பாறைகளும், கஞ்சமலைப் பகுதி இரும்புக் கனிப் படுகைகளும் ஆர்க்கேயன் தொகுதிப் பாறைகள் ஆகும். சென்னை பல்லாவரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சார்னொக்கைட் (Charnochite) பாறை உலகிலேயே தொன்மைமிக்க பாறை ஆகும். மாமல்லபுரத்தில் உள்ள குடவரைக் கோயில்கள், நீலகிரி, ஆனைமலை, பழனி மலை ஆகியவை இப்பாறைகளினால் ஆனவை. ஆர்க்கேயன் பேரூழியின் முடிவில் தமிழ்நாட்டுக்கு வடக்கே கடலும், ஏனைய மூன்று பகுதிகளில் நிலமும் சூழ்ந்திருந்தது. இப்பேரூழிக்குப் பின் தமிழ் நிலத்தில் பேரமைதி நிலவியது. இக்காலத்தில்தான் தமிழ்நாட்டில் அசைக்க முடியாத நிலப்பகுதி தோன்றியது.

தொல் பேரூழி : அடுத்தது தொல் பேரூழி (Palaeozoic Era) ஆகும். 23½ கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது. இப்பேரூழியில் தமிழகத்தில் எந்தவித மாற்றங்களும் இல்லை. பாறைகளும் தோன்றவில்லை.

இடைப்பேரூழி : இடைப்பேரூழி (Masozoic Era) 23½, 6½ கோடி ஆண்டுகளுக்கு இடைப்பட்டது. இக்காலத்தில் தமிழகம் கோண்டன்வானா / நிலப்பகுதியில் சேர்ந்திருந்தது. கோண்டன்வானா பாறைகள் திருப்பெரும்புதூரிலும், செங்கற்பட்டு மாவட்டம் சத்தியவேடு என்ற இடத்திலும் இருக்கின்றன. திருச்சி, கருடமங்கலம், புதுவை, விருத்தாசலம் பகுதிகளிலும் இக்கால கட்டத்திய பாறைகள் கிடைக்கின்றன.

கடைப் பேரூழி : கடைப்பேரூழி அல்லது மூன்றாங்காற் பேரூழி (Tertiary Era) 650 இலட்சம் ஆண்டுகளிலிருந்து 10 லட்சம் ஆண்டுகள் வரை நீண்டது. இக்கால கட்டத்தில்தான் உலகம் கடலுக்கு அடியில் இருந்து நிலப்பரப்புகள் உயர்ந்து மலைகள் ஆயின. வேறு சில இடங்களில் நிலப் பரப்புகள் கடலுள் மூழ்கின. ஆல்ப்ஸ் மலை தோன்றி உயர ஆரம்பித்தது. இமய மலை மேலும் மேலும் உயர்ந்தது. இக்கால கட்டப் படிவ அமைப்புகள் தஞ்சை, காரைக்கால் கடற்கரைப் பகுதிகளில் காணப்படுகின்றன. கடலூர் மணற்பாறைகளும், காஞ்சிப் பெருமணலும் இக்காலத்தவையே. இக்கால கட்டத்திய சதுப்பு நிலக் காடுகள் தாக்கப்பட்டு நிலத்துள் அழுந்தி பழுப்பு நிலக்கரி படிவுகளாக (நெய்வேலி, புதுச்சேரி) மாறின.

நாலாங்காற் பேரூழி : நாலாங்காற் பேரூழி இன்றைக்கு 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்வரை நிகழ்ந்தது. இந்த ஊழி 10 லட்சம் ஆண்டுகளைக் கொண்டது. இக்காலத்தில்தான் கண்டங்களும், கடல்களும் தற்போதுள்ள எல்லைகளுக்கு உட்பட்டு நிலைப்பட்டன. கடற்கரைகள் உயர்ந்து மணற்பரப்பாயின. இவ்வூழியின் இறுதியில் 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன் பனிப்படர்வு ஊழிப் பருவங்கள் தோன்றின. ஒவ்வொரு பருவத்திற்கும் இடையே இடைவெளி தோன்றியது. நாம் இப்போது ஐந்தாவது பனிப்படர்வு ஊழியை அடுத்துத் தோன்றியுள்ள காலத்தில் உள்ளோம்.

நிலப்பொதியியலின் தொடக்க காலம் முதல் தென்னிந்தியா நிலப்பரப்பாகவே இருந்து வந்தது. சிறுசிறு பகுதிகள் நீங்கலாக அதன் நிலப்பரப்பு கடற்கோளுக்கு உட்படவில்லை. மாறாக வட இந்தியா பெரும்பாலும் கடலுள் மூழ்கியிருந்தது.

குமரிக் கண்டம் : இப்பகுதியில் குமரிக்கண்டம் பற்றிச் சிந்திக்க வேண்டும். குமரிக் கண்டம் தமிழகப் பகுதியை ஒட்டிக் கடலுள் மூழ்கிய நிலப்பரப்பாக இருந்திருக்கலாம். இலங்கை தென்னகத்துடன் இணைந்திருந்தது என்பதும், குமரி முனைக்குத் தெற்கே நிலப்பரப்பு இருந்தது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகள் ஆகும். இவையே இலக்கியங்கள் சொல்லும் குமரிக்கண்டம் ஆகலாம். ''பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள்ள'' (சிலப்பதிகாரம் – மதுரை – காடுகாண் – வரி 19–20) என்று குமரி மலையைக் கடல் அழித்த செய்தியை சிலப்பதிகாரம் கூறுகிறது. லெமூரியாக் கண்டத்தை அறிவியலாளர் இன்னும் முழுமையாக ஒப்புக்கொள்ளவில்லை.

1,50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் மூதாதையர் மூன்று பனிப் படர்வு ஊழிகளையும், மூன்று பனிப் படர்வு இடைவெளிக் காலங்களையும் கண்டிருக்கலாம்.[1]

(4) தமிழகத்தில் ஆதிமனிதன்

ஏறத்தாழ 11 கோடி ஆண்டுகளுக்கு முன்னதாக கோண்டன்வானா நில அமைப் பால் நம் நாடு ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றுடன் நிலத்தால் தொடர்பு கொண்டிருந்தது. இதனால் அக்காலத்தில் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா முதலான பகுதிகளில் இருந்த உயிரினங்கள் நம் நாட்டில் வந்தேறியும், நம் நாட்டில் இருந் தவை அப்பகுதிகளில் சென்றேறியும் வாழ்ந்திருந்தன.

தொல் பழங்காலம் : ஏறக்குறைய இன்றைக்கு 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து கி.மு. 4000 ஆண்டு வரை உள்ள காலம் தொல் பழங்காலம் எனலாம். இந்தியாவில் தொல் பழங்காலத்தை முதல் கற்காலம், இடைக் கற்காலம், கடைக் கற்காலம், புதிய கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் எனப் பிரித்துள் ளார்கள்.

முதற் கற்காலக் கருவிகள் பெரும்பாலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும், வடஆற் காடு மாவட்டத்திலுமே அதிக அளவில் கிடைக்கின்றன. இக்கால கட்டத்தில் கைக்கோடரியை மனிதன் பயன்படுத்திய தனால் 'கைக்கோடரிப் பண்பு' என்பர். கைக்கோடரிப் பண்பு வடமேற்கு இந்தியா வில் 4 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பும், தமிழ்நாட்டில் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பும் இருந்தன. இடைக் கற்காலக் கருவிகள் பொன்னேரி வட்டத்திலும், திருவள்ளூர் வட்டத்திலும், காஞ்சிபுரம் வட்டத்திலும் கிடைத்துள்ளன. இக்காலம் 30,000 அல்லது 40,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம். கடைக்கற் காலக் கூறுகளை உடையன நெல்லை சார்ந்த பகுதிகள் ஆம்.

புதிய கற்காலம் : இவை கி.மு. 4000-ஆம் ஆண்டைச் சேர்ந்தவை ஆகும். சேலம், தர்மபுரி மாவட்டங்களில் சேர்வ ராயன் மலைத் தொடரிலும், வடஆற்காடு மாவட்டத்தில் சவ்வாது, ஏலமலைத் தொடர்களிலும் புதிய கற்காலக் கோடரிகள் கிடைக்கின்றன. இது கி.மு. 4000 அல்லது 3000 ஆண்டாக இருக்கலாம். தமிழ்நாட்டில் கிடைத்த புதிய கற்கால மக்களின் மட்கலன்கள் ஈரான் நாட்டுப் பகுதியில் கிடைத்த மட்கலன்களை ஒத்துள்ளது.

பெருங்கற்காலம் : பெருங்கல் ஈமச் சின்னங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்த காலம் பெருங்கற்காலம் ஆகும். கல்திட்டை (Cist), கல்பதுக்கை (Dolmonoid Cist), கல்குவை (Cairn), கல்கிடை (Cairn Circle) ஆகியவற்றில் தாழிகள் ஈமச் சடங்குக்காகப் புதைக்கப்பட்டன. இவை முதுமக்கள் தாழிகள் ஆகும். கோபி, சத்தியமங்கலம், கோவை, பொள்ளாச்சி, நீலமலைத் தொடர், குற்றாலம், தென்காசி, வாசுதேவநல்லூர், பாளையங்கோட்டை அருகாமை, கழுகுமலை, அனுப்பானடி, விளாங்குடி, பரவை, கொடைக்கானல், பழனிமலை, புதுக்கோட்டை பகுதி, சித்தன்னவாசல், ஆரணிப்பட்டி, சுரந்தப் பட்டி, தச்சன்பட்டி, தொடையூர், முத்துக் காடு, கலியப்பட்டி, களக்குடிப்பட்டி, திருப்பூர், பெருமாள்பாளையம், மலைக் கோவிலூர், சேலம், தர்மபுரி மாவட்டங் கள், அமிர்தமங்கலம், பெரும்பாயிர், சானூர், குன்னத்தூர் ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான தாழிகள் கிடைத் துள்ளன.

ஆதிச்சநல்லூர் கண்டுபிடிப்புகள்

சிவ முருக வணக்கம் : ஆதிச்சநல்லூரில் மட்டும் நூறு ஏக்கர் நிலப்பரப்பில்

1) 'தமிழ்நாடு அரசு – தொல் பழங்காலம்' – தமிழ் வளர்ச்சித் துறை, தமிழக அரசு – 1975

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வோர் ஏக்கர் நிலத்திலும் ஆயிரம் தாழிகள் இருப்பதாகப் பாரிசைச் சேர்ந்த லூயிலாபிக்யூ கூறுகிறார். இவற்றுடன் மட்கலங்கள் வெண்கல, தங்கம் மற்றும் இரும்புப் பொருள்களும் கிடைத்துள்ளன. வேல்கள், ஈட்டிகள், வாள்கள் முதலான ஆயுதங்களும் கிடைத்துள்ளன. வேல்களில் திரிசூலத்தைப் போலவும், சூலத்தைப் போலவும் உருவங் கொண்டவை உள்ளன. வெண்கலத்தால் செய்த மூடிகளில் சேவல் உருவங்கள் காணப்படுகின்றன. திரிசூலம் சிவனுடைய ஆயுதம். சூலம் முருகனுடைய வேல். சேவல் முருகக் கடவுளோடு தொடர்புடையது. சிவ வணக்கம், முருக வணக்கம் இக்காலத்தில் வழக்கில் இருந்திருக்கலாம். தாழியில் பல இடங்களில் இருதுளைகள் கிழக்கு நோக்கி உள்ளன. ஒரு வேளை ஞாயிறு வணக்கத் தோடு தொடர்புடையதாக இருக்கலாம். இவற்றிலிருந்து தென்னிந்திய சின்னங் களுக்கும், தெற்கு அரேபிய, ஈரான் சின்னங் களுக்கும் வெளிப்படையான ஒற்றுமைகள் இருப்பது புலனாகும். சிந்துவெளி நாகரிக மக்களுக்கும், தென்னிந்தியப் பெருங்கல் சின்ன மக்களுக்கும் தொடர்பு உள்ளதாக பி.பி.லால் இந்த இரு மக்களின் மட்பானைகளில் உள்ள கீறல் குறிகளை ஒப்பிட்டு ஆய்ந்து கூறுகிறார்.[1]

திராவிடர் வந்தேறிகளா? தொல்பழங்குடியினரா?

இந்திய மக்களின் ஆறு முதன்மையான இனங்கள் : இந்திய மக்களை ஆறு முதன்மையான இனங்களாக பி.எஸ். குகா வகைப்படுத்தியுள்ளார். அவை (i) நீக்கிரிட் டோக்கள், (Negrito) (ii) ஆஸ்திரிக் மக்களின் மூதாதையர், (iii) மங்கோலியப் பழங்குடி யினர், (iv) நடுநிலக்கடல் இனத்தவர், (v) மேற்கு நாட்டுக்குறுகிய தலையுடைய இனத்தவர், (vi) நார்டிக்குகள் (ஆரியர்).

தமிழக மக்களின் மூவகை இனங்கள் : தமிழகத்தில் மூவகை இனங்கள் தொல் பழங்காலம் முதல் வாழ்ந்து வந்தன. அவை (i) நீக்கிரிட்டோ இனம் – ஆப்பிரிக்கா விலிருந்து வந்த குறுகிய தலையை உடைய வர். (ii) ஆஸ்திரிக் மக்களின் மூதாதையர் – கரிய நிறத்தினர்; நீண்ட தலையோட்டினர், அகன்ற மூக்கினர். கிழை நடுநிலக்கடல் பகுதியிலிருந்து (பாலஸ்தீனம்) இந்தியா விற்கு வந்தனர். இப்பழங்குடி மக்கள் வேத காலத்தில் 'நிஷாதர்' என்றும், வேதகாலத் திற்குப் பின் 'சபரர்', 'புளிந்தர்' என்றும், கி.பி. ஆறாம் நூற்றாண்டில் 'கோலர்', 'பில்லர்' என்றும், இந் நூற்றாண்டில் 'கோலாரியர்', 'முண்டர்' என்றும் பெயர் சுட்டப் பெற்றனர்.

நாகர்

பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப் படும் நாகர் என்ற இனத்தவர் ஆஸ்திரிக் பழங்குடி மக்களின் வழி வந்தவர்கள். இவ்வினத்தார் வரலாற்றுக் காலத்தில் திராவிடரோடு இரண்டறக் கலந்துவிட்ட னர். பிற்காலத்தில் தமிழ் மக்களின் இனத் தவராகவே கருதப்பட்டனர்.

(iii) திராவிடர்

திராவிட இனத்தார் பற்றி இருவகைக் கருத்துக்கள் உள்ளன. அவர்கள் வெளிநாட் டிலிருந்து வந்தவர் என்பது முதல் கருத்து. திபெத்திலிருந்து வந்தவர், நடுநிலக்கடல் பகுதியிலிருந்து வந்தவர் எனப் பல வகைக் கருத்துகள் நிலவுகின்றன. நடுநிலக்கடல் பகுதியிலிருந்து வந்ததாகப் பல அறிஞர்கள் வலுவாக நிறுவுகின்றனர். கி.மு. முதலா யிரத்தின் இடைப்பகுதியில் ஈரானிலிருந்து வந்திருக்கலாம் என்ற ஹெய்மெண்டார்ப் பின் கருத்து பலரின் கவனத்தை ஈர்த் துள்ளது. ஆரியர் கி.மு. 2000-ஆம் ஆண்டில் வந்தார்கள் என்ற முடிவு நிறுவப்பட்ட பிறகு அவர்களுக்கு முன்பே இருந்த திராவிடர்கள் கி.மு. 1000-ஆம் ஆண்டில் வந்திருக்கலாம் என்பது குழப்பமான ஒன்று. எனவே தமிழகத்தின் பழங்குடி மக்களே திராவிடர்கள் என்றும், அவர்கள் இங்கிருந்து மேற்காசியாவிற்கும், நடுநிலக் கடல் பகுதிக்கும் ஏன் சென்றிருக்கக் கூடாது என்பதும் சில அறிஞர்களின் கூற்று ஆகும்.[2] ஆஸ்திரேலியா நாட்டுப்

1, 2) 'தமிழ்நாடு அரசு – தொல் பழங்காலம்' – தமிழ் வளர்ச்சித் துறை, தமிழக அரசு – 1975

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பழங்குடியினரான கோலர்கள் அல்லது கோலேரியர்கள் புதுக் கற்காலத்தில் இந்தியாவில் வந்து குடியேறியதாகக் கூறுவர். கேரளத்தைச் சேர்ந்த பணியர்கள், ஆனைமலைவாசிகள், ஒரிசா மலை நாட்டுக் குடிகள், கோலேரியர்களின் வழி வந்தவர் என்பர். கோலேரியரின் தாய் மொழி முண்டா ஆகும்.[1]

முதல் பனிப்படர்வு இடைவெளிக் காலத்தில் ஆதி மனிதன் பஞ்சாபில் வசித்திருக்கலாம். அவன் தென் இந்தியாவிலிருந்து பஞ்சாபிற்கு கைக்கோடரியுடன் வந்திருக்கலாம் என்று டி டெர்ரா (De Terra) கருதுகிறார்.[2]

85,000 ஆண்டுகளுக்கு முன் முதல் இந்தியர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்து தங்கினார்கள் என்று பேராசிரியர் பார்த்தா மஜூம்தார், (இந்திய புள்ளியியல் நிறுவனம், கல்கத்தா) தன் குழுவுடன் ஆய்வுகள் செய்து முடிவுகட்டுகிறார். ('The Economic Times' dated 25.8.1998) மூலக்கூறுகள் (On the basis of genetics) அடிப்படையில் தென்இந்தியர்கள் ஆப்பிரிக்கர்களை ஒத்திருக்கிறார்கள் என்று ஆந்திரப் பல்கலைக் கழக மனித இயல் துறை (Anthropology) ஆய்வு செய்து "Human Biology" இதழில் வெளியிட்டுள்ளது. ('Economic Time' dated 1.4.1998).

எது எவ்வாறாயினும் ஆரியருக்கு முன்பே வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் திராவிடர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு வலிமையான சான்றுகள் உள்ளன. அது மட்டுமல்ல. பேரூழிகள் பலவற்றாலும் தமிழகத்தின் பெரும் பகுதி மறையாமல் இன்றுவரை இருந்து வருகிறது என்பதும், தொல் பழங்குடி மக்கள் தோன்றிய வெகுசில பகுதிகளில் தமிழகமும் ஒன்று என்பதும் புலனாகிறது.

■■■

1) 'தமிழ்நாடு அரசு – தொல் பழங்காலம்' – தமிழ் வளர்ச்சித் துறை, தமிழக அரசு – 1975

2) 'தென்னிந்திய வரலாறு' – கே.கே. பிள்ளை – 1958.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

II

உலக நாகரிகங்கள் அடிப்படையில் சிந்து சமவெளி நாகரிகம்

தொன்மை மிக்க மக்களிடையே நாகரிக வளர்ச்சி காணப்படும். கடந்த 5000 ஆண்டுக் காலத்தில் உலகின் பல பகுதி களில் தோன்றிய பத்தொன்பது பெரும் நாகரிகங்களால்தான் மனித குலத்தின் நிலைத்த சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அந்தப்பத்தொன்பது நாகரிகங்கள் வருமாறு (1) சுமேரிய நாகரிகம், (2) எகிப்திய நாகரிகம், (3) பாரசீக நாகரிகம், (4) மத்திய தரைக்கடல் நாகரீகம், (5) மினோ மைசினிய நாகரிகம், (6) கிரேக்க நாகரிகம், (7) எட்ருஸ்கன் நாகரிகம், (8) ரோம நாகரீகம், (9) பைசான்டிய நாகரிகம், (10) ருஷிய நாகரிகம், (11) மேற்கு ஐரோப்பிய நாகரிகம், (12) இஸ்லாமிய நாகரிகம், (13) சீன நாகரிகம், (14) ஜப்பானிய நாகரிகம், (15) மெக்சிகோ நாகரிகம், (16) பெரு நாகரிகம், (17) ஆப்பிரிக்க நாகரிகம், (18) மேற்கத்திய நாகரிகம், (19) சிந்துச் சமவெளி நாகரிகம்.

இந்தப் பத்தொன்பது நாகரிகங்களில் ஆறு நாகரிகங்களே தொன்மை வாய்ந்தவை ஆகும். தொன்மையான நாகரிகங்களில் சுமேரிய, பாபிலோனிய, பாரசீக, அசிரிய நாகரிகங்கள் இன்று அழிந்துவிட்டன. தற்கால எகிப்திய, மெசபடோமியா மக்களுக்கும் அவர்களு டைய தொன்மையான நாகரிகத்திற்கும் ஏதும் தொடர்பு இல்லை. தொன்மையான நாகரிகங்களில் சிந்து சமவெளி நாகரிகம் மட்டுமே அன்று முதல் இன்றுவரை தொடர்பற்றுப் போகாமல் சங்கிலிபோல அமைந்துள்ளது. மொகஞ்சோதாரோவில் கிடைத்த 5000 ஆண்டுகளுக்கு முந்தைய தெய்வ உருவங்களை இன்றும் இமயம் முதல் குமரிவரை வழிபட்டுக் கொண்டிருக் கிறோம்.

சுமேரிய நாகரிகம்
(கி.மு.3500 முதல் கி.மு. 539 வரை)

மெசோபொடோமியா டைகிரிஸ், யூப்ரேட்ஸ் ஆறுகளின் பள்ளத்தாக்கில் உள்ளது. இது மனித நாகரிகத்தின் பிறப்பிடம் ஆகும். சுமேரியர்கள்தான் 5000 ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாக நகரங்களை நிர்மாணித்தார்கள். இவர்கள் திராவிடர்கள் என்ற கருத்தும் உண்டு. இவர்கள் சிந்துச்சமவெளி நாகரிக மக்களுடன் தொடர்பு வைத்திருந்தார்கள்.

எகிப்திய நாகரிகம்
(கி.மு. 3200 - கி.பி. 300)

எகிப்திய நாகரிகம் நைல் நதியில் மிளிர்ந்தது. எகிப்தின் பிரமிடுகள் வரலாற்றுக் கருவூலங்கள் ஆகும்.

பாரசீக நாகரிகம்
(கி.மு. 546 முதல்)

மேற்கு ஆசியாவில் தோன்றிய நாகரிகங்களை இணைத்துப் பாரசீக சாம்ராச்சியம் (கி.மு. 546 முதல்) உருவானது. இன்று வரை இது உலகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கண்ட மாபெரும் சாம்ராச்சியம் ஆகும். இவர்கள் சமயம் ஸோராஸ்டிரியன் ஆகும். இச்சமயத்தவர் நெருப்பினை வழி பட்டனர். அராபியப் படையெடுப்புக்குப் பின் இப்பகுதிகளில் இஸ்லாமியம் பரவியது. ஸோராஸ்டிரிய சமயம் இந்தியா விலும் சிறிது பரவி, இன்றும் அதைப் பின்பற்றுபவர்களாகப் பார்சி மக்கள் இருக்கின்றனர்.

மத்திய தரைக்கடல் நாகரிகம் (கி.மு. 3000 - கி.பி. 135)

5000 ஆண்டுகளுக்கு முன் மத்திய தரைக்கடலின் (Mediterranean sea) கிழக்குக் கரையோரம் செமைத்துகள் (Semites)என்ற பிரிவினர் குடியேறினர். இவர்களில் ஒரு பகுதியினரே ஹீப்ருக்கள் (Hebrews) ஆவர். பலகடவுள் வழி பாட்டை முதன்முதலாக மறுத்த இவர்கள், ஜெஹோவா (Jehovah) என்ற ஒரே கடவுள் வழிபாட்டைப் பின் பற்றினார்கள். இதிலிருந்து யூதநம்பிக்கை யும், கிறித்துவ நம்பிக்கையும் கிளைத்தன.

மினோ, மைசீனிய மக்கள் (கி.மு. 3000 - கி.மு. 1100)

கி.மு. 2500ல் ஈகியன் கடலின் (Aegean sea) தென்கோடியில் உள்ள க்ரீட் (Crete) தீவில் மினோ மக்கள் (Minoan) வாழ்ந்தனர். இங்கு கி.மு. 1600ல் மைசீனியர் குடி புகுந்தனர். இந்த இரண்டு பெருநாகரி கங்கள் கலந்த கலவையின் விளைவே கிரீஸின் காவியகாலம் ஆகும். ஹோமரின் காலத்தை வென்ற ''ஒடிஸி'' (Odyssey) என்ற காவியம், மைசீனியப் பெருவீரர் களின் வீர வரலாற்றைப் பிரதிபலிக்கிறது. மைசீனியர்கள் ''சீயஸ்'' (Zeus) என்ற வன்முறை கொண்ட மின்னற் கடவுளை வழிபட்டனர். கி.மு. 1900ல் க்ரீட்டுக்கு வடக்கே கிரேக்க மொழி பேசிய ஆரிய வீரர்கள் கிரீஸை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

கிரேக்க நாகரிகம் (கி.மு. 800 - கி.மு. 30)

கி.மு. 1100ல் கிரேக்க மொழி பேசிய டோரியன் மக்கள் (Dorians) கிரீஸில் வந்து தங்கினர். ஏற்கனவே மைசீனியர்கள் அங்கு இருந்தனர். கிரேக்க நாகரிகமே ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடித்தளமிட்டது. கிரேக்க மே ஜனநாயகத்தின் பிறப்பிடம் ஆகும். சோபாகிள்ஸ் (Sophocles), யூரிப்பிடிஸ் (Euripides) இருவரும் 300 நாடகங்கள் வடித் துள்ளனர். சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற சிந்தனையாளர்கள் தங்கள் கருத்துக்களைப் பரப்பினர். அலெக்சாந்தர் தன் வீரதீரச் செயல்களினால் சாம்ராச்சியத்தை விரிவாக்கினார். ஆர்க்கிமிடிஸ் அறிவியல் கண்டுபிடிப்பு களை நிகழ்த்தினார். கிரேக்கரின் வழி படுகடவுளர் சீயஸ் (Zeus) டையோனை ஸிஸ் (Dionysis) ஆவர்.

ரோம நாகரிகம் (கி.மு. 753 - கி.பி. 476)

கி.மு. 753ல் ஏழு சிறு குன்றுகளில் ரோம் நிறுவப்பட்டது. 800 ஆண்டுகளில் உலக மகாசாம்ராச்சியமாக – 10 கோடி மக்களை உள்ளடக்கியதாக – ரோம் விரிவடைந்தது. பல படையெடுப்புகளினால் ரோமானியர் கள் மத்திய தரைக்கடலைச் சுற்றிப்பல நாடுகளைப் பிடிக்க, மத்தியதரைக் கடல் ரோம சாம்ராச்சியத்தின் ஏரி போல ஆகிவிட்டது. ரோமநாகரிகம் மேனாட்டு மொழி, சட்டம், பழக்க வழக்கங்கள் அனைத்திலும் அழுத்தமாகத் தடம் பதிந்துள்ளது. ரோமானியர்கள் தான் ஏசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள்.

சீன நாகரிகம் (கி.மு. 1500 முதல்...)

கி.மு. 1500ல் சீனாவில் சாங் (Chang dynasty) அரசபரம்பரை ஆட்சி செலுத்தியது. கி.மு. 1100லிருந்து சௌ அரசபரம்பரை (Chou dynasty) 800 ஆண்டுகள் ஆண்டு வந்தது. இந்தக் காலகட்டத்தில் தான் தத்துவதரிசி கன்பூசியஸ் (கி.மு. 551 முதல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.மு. 479) வாழ்ந்தார். இவருக்கு மாறான ''இயற்கை வழி திரும்புதல்'' என்ற தத்துவத்தை லாவோ–ட்ஸே (Lao-tse) முன் வைத்தார். மூன்றாவது கோட்பாடாக பௌத்தமும் சீனாவில் பின்பற்றப்பட்டது. காகிதம், அச்சுத்தொழில், துப்பாக்கிப் பவுடர், காம்பஸ் ஆகிய நான்கும் சீனா உலகிற்கு அளித்த கொடையாகும்.

ஆப்ரிக்க அரசுகள் (கி.மு. 1000 முதல்)

மனிதன் முதலில் தோன்றியது ஆப்பிரிக்கா ஆனாலும், கி.மு. 1000ல் தான் நூபியா (Nubia) வில் – இன்றைய சூடான் – நைல் பள்ளத்தாக்கு மக்களின் நாகரிகம் தோன்றியது. இவர்களது மூதாதையர் ஆசியாவிலிருந்து வந்திருக்க வேண்டும். இவர்களை எகிப்தியர் குஷ் (Kush) என்று அழைப்பர். எழுத்துக்களுக்குப் பதிலாக மிருகங்களையும் பறவைகளையும் பயன் படுத்தும் எழுத்து முறை (Hier oglybh) இந்துக் குறிகளைப் போல் உள்ளது. இந்தப் பழம்பெரும் நாகரிகங்களில் இந்திய நாகரிகம் தனி இடம் பெற்றிருக்கிறது. இனி அதனைப் பார்ப்போம்.

சிந்துசமவெளி நாகரிகம்

கி.பி. 1922 ஆம் ஆண்டு இந்திய வரலாற்றையே மாற்றி அமைத்த ஆண்டு ஆகும். அந்த ஆண்டில்தான் மொகஞ் சோதாரோ, ஹரப்பா நகரங்கள் மார்ஷல் என்பவரால் அகழ்வு செய்யப் பட்டுப் பல முக்கிய முடிவுகள் முன் வைக்கப்பட்டன. அவரது அறிக்கையின்படி, அந்த நகரங் களின் காலம் கி.மு. 3250க்கு முன்னும் கி.மு, 2750க்குப் பின்னும் போக முடியாது. இக்காலம் இன்னும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அகழ்வாராய்ச்சியின் மூலம் ஏழு வேறுபட்ட படிநிலைகளில் (Layers) கட்டிடங்கள் கிடைத்துள்ளன. அவற்றின் காலம் 500 ஆண்டுகளை உள்ளடக்கியதும் தொடக்கம், நடு, இறுதி என மூன்று வேறுபட்ட காலத்தையும் கொண்டது ஆகும்.



சிந்து சமவெளி நாகரிகமும் சுமேரிய நாகரிகமும் பெரிதும் ஒத்திருக்கிறது. சிந்து சமவெளியில் இருந்தவர்கள் திராவிடர்கள் என்று பெரும்பான்மையோரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. திராவிடர்களும், சுமேரியர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்த வர்கள் என்று டாக்டர். எச்.ஆர். ஹால் கூறுகிறார். சிந்து சமவெளி எழுத்து சுமேரிய, எகிப்திய, கிரீட்டிய (Cretan) சீன எழுத்துக்களை ஒத்திருக்கிறது. பிராமி எழுத்தே சிந்து சமவெளி எழுத்திலிருந்து வந்திருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

அகழாய்வில் இலச்சினைகள் (Seals), உருவச்சிலைகள், கல்படிமங்கள் பல கிடைத்துள்ளன. இவற்றுள் மிக முக்கிய மானது தாய்த் தெய்வ வழிபாட்டினைக் குறிக்கும் உருவங்கள் ஆகும்.

சிந்து சமவெளி நாகரிகத்தில் சிவ வழிபாடு முக்கிய இடம் பெற்றிருக்கிறது. அகழ்வராய்ச்சியில் பலவகையான லிங்கங்கள் கிடைத்துள்ளன. அங்கு கிடைத் துள்ள இலச்சினையில் மூன்று முகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்ட, யோகநிலையில் உள்ள, மிருகங்கள் சூழ்ந்த ஒரு ஆண் கடவுளின் உருவம் உள்ளது. அவ்வுருவம் திரிமுகம், பசுபதி (மிருகங்கள் தலைவன்), யோகீசுவரர் என்று எல்லாமே சிவனுக்குரிய குணங்களையே கொண்டுள்ளது. இது சிவ வழிபாடே என்று மார்ஷல் வலியுறுத்துகிறார்.

"Side by side with the Earth or Mother Goddess, there appears at Mohenjo-daro, a male god, who is recognizable at once as a proto type of the historic Siva. The God, who is three faced, is seated on a low Indian throne, in a typical attitude of Yoga, with legs bent double beneath him, heel to heel, and toes turned downward. His arms are out-stretched, his hands, with thumbs to front, resting on his knees. From wrist to shoulder the arms are covered with bangles, eight smaller and three larger; over his breast is a triangular pectoral or perhaps a series of necklace or torques, like those on the later class of Goddess figurines from Baluchisthan; and round his waist a double-band". The lower limbs are bare and the phallus see seemingly exposed, but it is possible that what appears to be the phallus is in reality the end of the waistband. Crowning his head is a pair of horns meeting in a tall head-dress. To either side of the god are four animals, an elephant and tiger on his proper right, a rhinoceros and buffalo on his left. Beneath the throne are deer standing with heads regardant and horns turned to the centre. At the top of the seal is an inscription of seven letters, the last of which for lack of room at the right top corner, has been placed between the elephant and the tiger "E" ("Mohenjo-Daro and the Indus civilisation" - By John Marshall - Year 1931 - First Edition).

■■■

1) "The Last Two Million Years" – Reader's Digest.
2) "Mohenjo - Dara and the Indian Civilisation" – John Marshall – 1931.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

III

உலக வாணிக அடிப்படையில் தமிழர் தொன்மை

நில அடிப்படை, நிலப்பாகுபாடு அடிப்படை, உருவ அடிப்படை ஆகியவற்றின் துணைக்கொண்டு தமிழரின் தொன்மையை முன்னர் பார்த்தோம். இனி வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் தமிழரின் தொன்மையை டாக்டர் கே.கே. பிள்ளை தனது ''தென் இந்திய வரலாற்றில்'' கூறுவதைக் காண்போம். அதன் சுருக்கம் வருமாறு :

எகிப்து மன்னர்கள் மெல்லிய துணி வகைகளையும், கருங்காலிக் கட்டைகளையும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்திருக்க வேண்டும். எகிப்திலுள்ள கி.மு. 15ஆவது நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலவங்கப் பட்டை சேரநாடாகிய கேரளாவிலிருந்து சென்றிருக்க வேண்டும். பாலஸ்தீனத்தை கி.மு. எட்டாவது நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சாலமனுக்குப் பரிசுகளாகக் கப்பலில் அனுப்பப்பட்ட மயில்களும், சந்தனக்கட்டைகளும் தென்னிந்தியாவிலிருந்து சென்றிருக்க வேண்டும். ஏனெனில் ஹீப்ரு மொழியில் உள்ள 'துக்கீம்', 'ஆல்மக்' என்பன தமிழ்ச் சொற்களாகிய 'தோகை', 'அகில்' என்பவற்றிலிருந்து வந்திருக்க வேண்டும். சுமேரியத் தலை நகரமாகிய முகீயரிலிருந்த சந்திரன் கோவிலிலும், நெபுக்கட்நஸார் மன்னனின் அரண்மனையிலும் உள்ள தேக்குக் கட்டைகள் மலபாரிலிருந்து சென்ற கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாக இருக்க வேண்டும். பாபிலோனில் ஆடைகளை விவரிக்கும் பட்டியலில் 'ஸிந்து' என்ற சொல் காணப்படுகிறது. வெண் துகிலைக் குறிக்கும் இச்சொல் கன்னடத்திலும், துளுவிலும் வழங்கிவரும் 'சிந்தி' என்ற பழைய திராவிடச் சொல்லாக இருக்கலாம்.

சோபாக்கிள்ஸ், அரிஸ்டோபேனிஸ் முதலியோரின் நூல்களில் உள்ள பல கிரேக்கப் பெயர்கள் தமிழ் மொழியிலிருந்து சென்றிருக்க வேண்டும். கிரேக்க 'ஓரிசி' (அரிசி); 'கற்பியன்' (கனுவாய்); 'சிக்கிபெரோக' (இஞ்சிவேர்); 'பெப்பரி' (பிப்பலி).

உரோம் வல்லரசர் அகஸ்ற்றஸின் காலத்தைச் சேர்ந்த ஸ்டிராபோவின் விவரணம்; சுமார் கி.பி. 60இல் தோன்றியுள்ள பெரிபுளூஸ் என்னும் நூல்; கி.பி. 77ல் வெளிவந்த பிளினியின் இயற்கை வரலாறு; கி.பி. 150ல் உருவான தாலமியின் 'பூகோள விவரணம்'; இந்நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நுண்ணிய விவரங்கள், சங்க நூல்கள் பலவற்றில் காணப்படும் கருத்துக்களுக்கு மிகப் பொருத்த மாயிருக்கின்றன. புதுச்சேரிக்கடுத்த அரிக்காமேட்டில் கிடைத்த புதை பொருள் களும் தென்னிந்தியாவில் பல இடங்களில் அகழ்வாய்வில் கிடைத்த நாணயங்களும் ஐரோப்பாவோடு நடந்த வாணிகத்தை நன்கு விளக்குகின்றன.

உரோம பேரரசர்கள் காலத்தில் தென் இந்தியாவில் வாணிகம் மிகச்சிறந்த நிலையில் இருந்தது. பாண்டிய மன்னனிடமிருந்து சென்ற அரசியல் தூதரை அகஸ்ற்றஸ் பேரரசர் வரவேற்றார். கி.பி. 45ல் மேல்நாட்டிலிருந்து கடல் வழியாக மலபார் செல்ல ஹிப்பாலஸ் என்ற மாலுமி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புதுவழி கண்டுபிடித்ததாகக் கூறுவர். கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் இந்தியாவுடன் நடைபெற்ற உரோமின் வாணிகம் பெருகியிருந்தது. தென் இந்தியா வில் உள்ள நகரங்கள் சிலவற்றில் உரோம் நாட்டு வணிகர்கள் குடியேறினார்கள். இந்திய வாணிகத்தினால் உரோமிலிருந்து ஆண்டுதோறும் ஆறு இலட்சம் பவுனுக்கு மேல் வெளியேறியது எனப் பிளினி முறை யிட்டார்.

மேல் நாடு மட்டுமல்லாது கிழக்கிலும் சீனாவுடன் கி.மு. ஏழாவது நூற்றாண்டி லேயே வணிகம் தொடங்கியது. தமிழில் பட்டுக்குச் சீனம் என்றும் (சீனாப்பட்டு), சர்க்கரைக்குச் சீனி என்றும் வழங்கிவருவது நினைவு கொள்ளத்தக்கது. பிலிப்பியன் நாடுகளில் கிடைத்த கத்திகள், கோடாரி கள், ஈட்டிகள் முதலான புதைபொருள்கள், தென் இந்தியாவில் சுமார் கி.மு. 10ஆம் நூற்றாண்டில் வழங்கிய பொருள்களை ஒத்திருக்கின்றன.[1]

இதே செய்திகளை ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் தமது, ''வரலாற்றுக்கு முற்பட்ட பழந்தமிழர்'' என்ற நூலில் இன்னும் விரிவாக ஆராய்கிறார்.

மொகஞ்சோதாரோவில் கிடைத்த மட்பாண்டங்கள், நாணயங்கள், சொக்கட் டான் காய்கள் சுமேரிய தலைநகர் சூசாவில் கண்டெடுத்த பொருள்களோடு ஒப்பிட்டு இரண்டிலும் உள்ள எழுத்து பொறித்த முத்திரைகள் ஒத்திருப்பதை சேஸ் (Sayce) டிமார்கன் (De-morgan) என்பவர் குறிப்பிடு கின்றார். இது கி.மு. 3000 வரை செல் கின்றது. ஹண்டர், ஹெரஸ் பாதிரியார், ஹால் ஆகியோரின் கூற்றுக்களையும் வைத்துத் தமிழர்களும் சுமேரியர்களும் ஒத்தவர்கள் என்கிறார் கந்தையாபிள்ளை.

தைகிரஸ், யூபிராதஸ் ஆறுகளின் கீழ்ப்பாகத்தில் உள்ள பழைய நாட்டின் பெயர் 'எல்லம்' ஆகும். 'எல்' (சூரியன்) என்ற தமிழ்ப்பெயரும், 'எல்' என்பதின் திரிபான 'ஈழம்' என்ற பெயரும் ''எல்லம்'' என்ற பெயருடன் ஒப்புடைத்து என்று அவர் கூறுகிறார்.

சுமேரியப் போர் முறை, இறந்தபின் கல்நாட்டும் பழக்கம் ஆகியன தமிழர் நாகரிகத்துடன் ஒத்து இருக்கின்றன.

ஹக்ஸ்லி என்பார் திராவிட மக்களும் எகிப்தியரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர் என்கிறார். எகிப்தியர் 'பண்டு' (punt) நாட்டிலிருந்து நைல் நதிக்கரையில் குடியேறினவர்கள் என்று ஹால் (Hall) கூறுகிறார். மேற்கு நாட்டவர் கி.மு. 1500 முதல் ஓபிர் (Ophis) என்னும் துறைமுகப் பட்டினத்தை அறிந்திருந்தனர். இது 'பண்டு' நாட்டில் உள்ளது. 'ஓபிர்', 'பண்டு' மலையாளக் கரையில் உள்ள இடங்கள் என்று(Encyclopaedia Brittanica) என்ற கலைப்பேரகராதியும், அபினஸ் சந்திரதாஸ் என்பாரின் 'இருக்வேத இந்தியா' என்னும் நூலிலும் குறித்துள்ளன. எகிப்துக்கும் பண்டு நாட்டுக்கும் இடையில் கி.மு. 2400 முதல் கப்பற்பயணங்கள் நடைபெற்ற வரலாறுகள் எகிப்திய ஓவிய எழுத்துக் களில் பொறிக்கப் பட்டிருக்கின்றன.

மற்றுமொரு ஆதிகுடியான ''கிரேத்தா'' மக்கள் (Crete) மீனவர் என்று (Minos) அழைக்கப்பட்டனர். கிரேத்தா என்னும் தீவில் வாழ்ந்தோர் தெமிலியர் ஆவர். (Termilae) அந்நாட்டில் ஒரு மன்னனின் பெயர் பாண்டியன் (Pandien) ஆகும். (Herodotus. 1-173).

மேலும் பழைய பிரித்தன் மக்கள், பினீசியர், அசீரியர், எபிரேயர், அராபியர், சின்ன ஆசிய மக்கள் ஆகியோரின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகளைத் கொண்டு திராவிடருடன் ஒப்பிடுகிறார் ந.சி. கந்தையா பிள்ளை. இவை மேலும் ஆதார பூர்வமாக நிருபிக்கப்படவேண்டும்.[2]

1) ''தென்னிந்திய வரலாறு'' – கே.கே. பிள்ளை.

2) ''வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்'' – ந.சி. கந்தையா.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழன் தொன்மை

சிந்து சமவெளி எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்கள் ஆகும். அவை திராவிட எழுத்துக்கள் என்று பெரும்பான்மையான அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வெழுத்துக் கள் சுமேரிய, ஹித்தைத் (Hittite), எகிப்திய, கிரேத்த, (Crete), சீன எழுத்துக்களுடன் சிலவகையில் ஒத்து இருக்கின்றன.[1]

இதே கருத்துக்களை ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் இன்னும் மிக விரிவாகக் கூறுவதுடன் 16 தமிழ்ச் சொற்களைச் சுமேரிய, எகிப்து சொற்களுடன் ஒப்புமை காட்டுகிறார். இரண்டொரு எடுத்துக் காட்டுகள் வருமாறு;

தமிழ்	சுமேரியம்	எகிப்து
அப்பன்	அப், அப்பா	அப், பப்பா
பாதை	பாட்,பாத்	பாத்
பார்ப்பான் (குரு)	பார், பாரு	பார் ஆ
தாக்கு	தாக்	தாக்கு.

ந.சி. கந்தையா பிள்ளை மேலும் கூறு கிறார். ''மொகஞ்சதரோ எழுத்துக்களைப் போன்றன இலிபிய வனாந்தரத்தை அடுத்த செலிமா என்னுமிடத்தில் காணப் படுகின்றன. மொகஞ்சதரோ எழுத்துக் குறிகளைப் போன்று ஐபீரிய (ஸ்பானிய) எழுத்துக் குறிகளும் எதிருஸ்கிய (பழைய இத்தாலி) மொழி எழுத்துக்களும், நுமிதிய பேர்பெரிய எழுத்துக்களும் மினோவ எழுத்துக்களும் உள்ளன. மொகஞ்சதரோ எழுத்துக்களும் பழைய சீன எழுத்துக்களும் ஒரு தாய்வயிற்றில் பிறந்த இரண்டு பிள்ளைகள் எனலாம். தென் அரபிய எழுத்துக்கள் இன்னும் சில மொகஞ்ச தரோ எழுத்துக்களைக் காப்பாற்றி வந்திருக்கின்றன. மத்தியதரை நாடுகளில் ஆதியில் வழங்கிய பாஸ்க்கு மொழி திராவிட மொழிக்கு நெருங்கிய உறவுடை யது என்று வெல்சு என்ற ஆசிரியர் கூறுகிறார். [2]

இருக்கு வேதத்தில் இருபது திராவிட மொழிச் சொற்கள் உள்ளன என்று ஆரிய மொழியை நன்கு ஆய்ந்த பர்ரோ (Burrow) கூறுகிறார்.

வெளிநாட்டு வாணிகத் தொடர்புகளால் தமிழரின் தொன்மையையும் பிற மொழி களின் ஒப்புமையால் தமிழின் தொன்மை யையும் அறிய இயலும்.

■■■

1) "The History and culture of Indian People" - vol I - Bharatiya Vidya Bhavan.

2) ''வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்'' – ந.சி. கந்தையா பிள்ளை.

3) ''தமிழக வரலாறு – மக்களும், பண்பாடும்'' – தமிழ் வளர்ச்சித்துறை, தமிழக அரசு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

IV

காலநெடும் பாதையில் சைவம்

தொன்மைக் காலம் முதல் கி.மு. 600 வரை

(1) சைவ சமயத்தின் தொன்மை

கடவுள் நம்பிக்கை

தொன்று தொட்டு மனித வாழ்க்கையோடு சமயம் பின்னிப் பிணைந்திருந்தது என்றும், சமய வாழ்வில் ''அடுத்த உலகம்'' பற்றிய சிந்தனை உலகளாவியதும் நிரந்தரமானதுமான ஒன்று என்றும் தெரிகிறது. கடவுள் நம்பிக்கையற்ற பௌத்தமும், சமணமும் கூட இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தன.

பல கடவுளர் வழிபாடும், கடவுளர் இணைப்பும்

அனைத்துத் தொன்மை நாகரிகங்களும் (எகிப்திய, மெசொபொடாமிய, கிரேக்க, ரோமானிய நாகரிகங்கள்) மத்தியதரைக் கடல், மத்திய கிழக்கு பகுதிகளில் தோன்றியன என்றும், அவையெல்லாமே பல கடவுளர் வழிபாட்டினைக் கொண்டிருந்தன என்றும் தெரிகிறது. ஆதி மனிதன் இயற்கையைக் (புயல், வெள்ளம், நெருப்பு, மழை, சூரியன்) கண்டு அஞ்சியதால் பலகடவுளர் வழிபாடு தோன்றியது. பல தரப்பட்ட மனிதர்கள் ஒரே ஆட்சிக்குள் கட்டுப்பட்டு வருகையில் பல கடவுளரையும் ஒருங்கிணைக்கும் முகமாக, ஒன்று சேர்த்தனர். கி.மு. 3200ல் மேல் எகிப்தும், கீழ் எகிப்தும் இணைகையில் மேல் எகிப்தின் கடவுளான ஓஸிரிஸ் (Ossiris) அவனது சகோதரனான ஸேட்(Set) டால் கொல்லப்பட்டான் என்ற கதை உருவாயிற்று. கி.மு. 2000ல் கிரேக்கர்கள் ஈகியனை (Aegean) நோக்கி நகர்ந்தார்கள். அந்த மக்கள் பூமித்தாயை பெண்தெய்வமாக வழிபட்டார்கள். கிரேக்கர்களுக்குச் சீயஸ் (Zeus) முதன்மையான கடவுள் ஆகும். அக்கடவுளை ஏனைய சிறு பெண் தெய்வங்களை விட உயர்வாக முன்நிறுத்த வேண்டும். எனவே சீயஸ் பல பெண் தெய்வங்களை மணந்ததாகக் கதை எழுந்தது.[1]

இந்தியாவில் பல கடவுளர் வழிபாடும், இணைப்பும்

தொன்மை நாகரிகமான இந்தியாவிலும் பலகடவுளர் வழிபாடு இருந்ததும், ஆதிகடவுளர் எல்லாம் இயற்கை வழிபாடாக அக்னி, வருணன் இந்திரன், ருத்ரன், விஷ்ணு என்று இருந்ததும், பல மக்களின் – பல இனங்களின் – குறிப்பாக ஆரிய திராவிடக்கலப்பு – சேர்க்கையால் சிவன், அவர்மனைவி பார்வதி, மகன்கள்

1. "The last Two Million Years" - Reader's Digest..

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விநாயகர், முருகன், பார்வதியின் சகோதரர் விஷ்ணு என்று சிவ குடும்பம் ஒருபுறமும், விஷ்ணு, ராமன், கிருஷ்ணன் என்று அவதாரத்தத்துவங்கள் ஒருபுறமும், ஏனைய கடவுளர் எல்லாம் இவ்விருபெரும் தெய்வத்திற்கு உட்பட்டு தேவசபையில் இருந்தார்கள் என்பதும் ஈண்டு எங்கும் நிலவி இருந்தமை மனங்கொள்ளத்தக்கது. இந்த இணைப்பு அப்படியே அக்கால கட்டத்தில் எங்கும் நிலவி இருந்த தொல் பழங்கால நாகரிகத்தின் பிரதிபலிப்பு ஆகும்.

பொதுவான சமயக்கொள்கை

மிக முற்காலத்தில் இவ்வுலக மக்கள் எல்லோருக்கும் பொதுவான கொள்கைகள் பல இருந்தன. அவைகளுள் சமயமும் ஒன்று. எல்லா மக்களும் ஒரே வகையாகக் கைக்கொண்ட சமயமே நாளடைவில் சிறிது சிறிதாக வேறுபட்டு இன்றைய பல சமயங்களாகக் காணப்படுகின்றன.

வழிபாட்டு முறை

ஆதியில் மக்கள் தென்புலத்தார் (இறந்தவர்) வணக்கம் உடையவர் களாயிருந்தனர். நாகரிகம் வளர்ச்சி அடைய ஞாயிறு வழிபாடு ஓங்கியது. ஞாயிற்றுக்கு ஆதியில் வழங்கிய பெயர் சிவன். சிவன் வழிபாடு உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவானது என்று நிறுவுகிறார் ந.சி.கந்தையா பிள்ளை. அவர் கருத்து வருமாறு :

சிவன் என்னும் பெயர்

எகிப்திலே இலிபிய வனாந்தரத்தில் சிவன் என்னும் பாலை நிலப்பசுந்தரை உள்ளது.

பாபிலோன் நாட்டிலே கண்டுபிடிக்கப் பட்டுள்ள களிமண் பட்டயங்களில் சிவன் என்னும் இடப்பெயர் காணப்படுகிறது.

வட அமெரிக்காவில் கொலறடோ என்னும் ஆற்றின் பக்கத்தே உள்ள குன்றின் உச்சியில் சிவன் ஆலயம் இருப்பது 1937-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாலயம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு அல்லது அதற்கும் முற்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[1]

கிரேத்தா(Crete)வில் உள்ள பழைய நகரம் ஒன்றிற்குச் 'சிவன்' என்பது பெயர். சின்ன ஆசியாவிலே 'சிவாஸ்' என்னும் பழைய நகர் உண்டு. இலங்கையில் 'சிவன்மலை' அல்லது 'சிவன் ஒளிமலை' என்னும் ஒரு மலை உள்ளது.

ஆரிய வேதங்கள் "சிவாக்கள்" என்னும் ஒரு கூட்டத்தினரைப் பற்றிக் கூறுகின்றன.

மேற்கு ஆசிய மக்களின் ஆண்டின் மூன்றாவது மாதம் சிவன் எனத் தெரிகின்றது. பாபிலோனில் கிடைத்த களிமண் ஏடுகளில் சிவன் மாதம் குறிக்கப்பட்டுள்ளது. மொசே என்பவர் யேகோவா அருளிய பத்துக்கட்டளைகளைச் சிவன் மாதத்தின் ஆறாவது நாளன்று 'சினாய்' மலைமீது நின்று மக்களுக்கு வெளியிட்டார்.

பின்லாந்தில் வாழும் துரானிய மக்களின் காத்தற்கடவுள் சிவன் ஆகும். விவிலிய மறையின் பழைய ஏற்பாடு சிவன் (Chien) என்னும் கடவுளைப் பற்றிக் கூறுகின்றது. ஜப்பானிய மக்களின் பழைய தெய்வங்களில் ஒன்று சிவோ எனப்பட்டது.

'அக்கேடிய' மக்களின் ஏழு முக்கிய விண்மீன்களில் மூன்றாவது, சிவன் எனப்பட்டது.

சிவன் எனும் பெயர் பழைய இலங்கை அரசரிடையே இருந்தது செய்றோரேயிஸ் (Chosroros) என்னும் சுமேரிய அரசனின் மனைவியின் பெயர் சிவன் ஆகும்.

---

1) "In the wild mountainous state of Colorado, seventh largest in America, scientists of the U.S. Museum of Natural History three months ago announced discovery of a 'Lost world'. The focal point was Siva's Grand Temple a half square mile of solid rock plateau, isolated from the main land by 9000 feet canyons eroded by rivers some 200,000 years ago. News review - London: Sept, 23,1937, உதவி "சிவன்" – ந.சி. கந்தையா.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவலிங்க வணக்கம்

உரோமர் சிவலிங்கங்களைப் பிறியாபஸ் எனப்பெயரிட்டு வணங்கினார்கள். கிரேக்கரின் இலிங்கக் கடவுள் இதுவே யாகும். இஸ்ரவேலர் சிவலிங்கங்களை அமைத்து வழிபட்டார்கள்.

இன்றும் இலிங்கங்களின் வடிவங்களைப் பிரான்சில் உள்ள கிறித்துவ ஆலயக் கட்டடங்களில் காணலாம். அலெக்சாந்திரியாவில் தாலமி நடத்திய நிகழ்ச்சியில் 129 முழ உயரமுடைய இலிங்கம் வீதிவலம் கொண்டு செல்லப்பட்டது.

அண்மையில் பாபிலோன் நாட்டில் சிவலிங்கங்கள் பல அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன. எகிப்தின் சில பகுதிகளில் ஹெம், ஹோறஸ், இஸ்றஸ், சராபிஸ் முதலிய பெயர்களால் இக்கடவுள் வணங்கப்பட்டது. எகிப்திய சமாதிச் சுவர்களில் சிவலிங்கங்கள் வெட்டப் பட்டிருக்கின்றன. அயர்லாந்தில் சிவ லிங்கங்கள் கிறித்துவ ஆலயங்கள் பலவற்றுட் காணப்படுகின்றன. அவை 'சீல நாகிக்' (Sheila nageg) என வழங்கு கின்றன.

திபெத்து, பூதான் (Bhutan) என்னுமிடங்களில் சிவலிங்க வணக்கம் காணப் படுகின்றது.

சிந்தோயிசம் (Shentoism) என்னும் ஜப்பானிய மதத்தில் சிவலிங்கம் முதன்மை யானது.[1]

மெச்சிகோ, பேரு, ஹைதித்தீவு (Hyte) களில் சிவலிங்கம் வழிபடப்பட்டது. ஆப்பிரிக்காவில் தகோமி (Dahomi) என்னும் இடத்தில் இலிங்கம் லெங்பா (Lengba) என்னும் பெயருடன் வைத்து வழிபடப் பட்டது.

கிரேக்க நாட்டில் பக்கஸ் (Bacchus), டயோனிசஸ் (Dionysus) வழிபாடுகளின் பொழுது சிவலிங்கங்கள் வழிபடப் பட்டன. கிரீசில் பக்கஸ் விழாவில் இலிங்கம் வீதிவலம் செய்யப்பட்டது.

யூதரின் பெத்தெல் (Bethel) அல்லது ''கடவுளின் வீடு'' புனிதமான கல்லாக இருந்தது. அது கடவுளாகவே கருதப் பட்டது. மெக்காவில் காணப்படும் காபா (Kaba) என்னும் கறுப்புக்கல் இவ்வுண்மை க்குச் சான்றாகும். அராபிய மக்கள் இக்கல்லின் மேல் அளவு கடந்த கடவுள் பக்தி கொண்டிருந்தனர்.

கிறித்து பிறப்பதற்குச் சில காலம் முன்பே தமிழர்கள் சாவகம், மலாயா, கம்போதியா, கிழக்குத் தீவு ஆகிய நாடுகளில் குடியேறி சைவசமயத்தை நிறுவியுள்ளார்கள். போர்னியாவில் ஒரு மலைக்குகையில் சிவன், யானை முகக் கடவுள் சிலைகள் பல அண்மையில் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. சாவகத் தீவில் பல சிவன் கோயில்கள் அழிபாட்டு நிலையில் உள்ளன. சுமத்திராவில் லாரா யோங்ராங் (Lara Yongrang) என்னும் இடத்தில் பெரிய சிவன் கோயில் உள்ளது. மேற்குப் போர்னியாவில் நந்தி, கணேசர், இலிங்கம் முதலிய உருவங்கள் காணப்பட்டன. இவைகளுள் ஒரு பொன் லிங்கமும் காணப்பட்டது.

கம்போதியாவிலே நடராசர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கம்போதிய அரசருள் பாலவர்மன் என்பவன் சிவ பக்தன். இவன் கி.பி. 616இல் கம்பீர வாணர் என்னும் சிவலிங்கத்தை நாட்டி வழிபட்டான். கம்போதியர் கடவுளருள் சிவனே தலைமை பெற்றிருந்தான்.

சீயத்திலே பாங்காக் நகருக்கு அருகேயுள்ள குளத்தில் இலிங்க மற்றும் இடபச் சிலைகள் உள்ளன.[2] (ந.சி. கந்தையா அவர்களின் நூலில் கூறப்பட் டுள்ள உலக ளாவிய தொன்மையான சிவவழிபாடு பற்றிய செய்திகளை அவ்வந்

1) "The Phallic cult of ancient shinto really forms an integral part of its Essential naturalism and as it considers patiently the religious mission of the Gods" - Shentoism - The Indigenous Religion of Japan P 41 - A.C. Underwood. உதவி "சிவன்" – ந. சி. கந்தையா.

2) ''சிவன்'' – ந.சி. கந்தையா, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; 1947.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாடுகளில் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு ஒப்பிட்டு உறுதி செய்யும் முயற்சி இது வரை மேற்கொள்ளப்படாதது வியப்பே, இவ்வாய்வு உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.)

2

சிவன் - உருத்திரன்

(அ)

மொகஞ்சோதாரோவில் சிவ வழிபாடு - கி.மு. 3250

இந்திய வரலாற்றைச் சமய தத்துவ அடிப்படையில் ஆறு பிரிவுகளாக R.C. மஜூம்தார் (The Cultural Heritage of India - Vol IV, Ramakrishna Mission Calcutta) பிரிக்கிறார்.

1) ஆரியருக்கு முற்பட்ட காலம் (கி.மு. 3000 முதல் கி.மு. 2000 வரை)
2) வேத காலம் (கி.மு. 2000 முதல் கி.மு. 600 வரை)
3) புரட்சி யுகம் (கி.மு. 600 முதல் கி.மு. 300 வரை)
4) புராண காலம் (கி.பி. 300 முதல் கி.பி.1200 வரை)
5) இசுலாமியர் காலம் (கி.பி. 1200 – கி.பி. 1757)
6) நவீன யுகம் (கி.பி. 1757 – கி.பி. 1947)

மொகஞ்சோதாரோ அகழ்வாராய்ச்சி தான் இந்திய வரலாறு பற்றி முதன் முதலாக ஆதார பூர்வமான செய்திகளைத் தருகின்றது. அக்கண்டுபிடிப்புகள் சிவ வழிபாட்டின் தொன்மையைச் சுட்டிக் காட்டுகின்றன.

மொகஞ்சோதாரோ, ஹரப்பா அகழ் வாராய்ச்சியில் கிடைத்த லிங்கங்கள், இலச்சினைகள் இவற்றில் திரிமுகம், பசுபதி, யோகீசுவரர் காணப்படுகின்றன.

கி.மு. 3250-ஆம் ஆண்டிலேயே சிவவழிபாடு இந்தியாவில் திராவிடர் களால் பின்பற்றப்பட்டிருந்தது தெரிய வருகிறது. இந்நாகரிகம் வட இந்தியாவில் பெரும் பகுதியில் பரவியிருந்தது. வழிபடு கடவுளுக்கு அப்பொழுது சிவன் என்ற பெயர் இல்லை. இது ஆரியர் வருகைக்கு – வேதகாலத்திற்கு – முற்பட்ட காலம் ஆகும். (சிந்து சமவெளி நாகரிகத்தின் காலம் கி.மு. 2800 முதல் கி.மு. 2200 வரை என்பார் A-D புசால்கர் - "History of Indian Culture" - Bhavan)

(ஆ)

ஆரியர் வருகை - கி.மு. 1500

ஆரிய திராவிடக் கடவுளர் : கி.மு. 1500-ஆம் ஆண்டில் ஆரியர்கள் முதன் முதலாக இந்தியாவிற்குள் நுழைகின்றனர். ஆரியர்களின் தொன்மைக் குடியிருப்பு ரஷியா அல்லது மத்திய ஆசியா ஆகும். அப்பொழுது இந்தியாவின் பெரும் பகுதியில் ஆஸ்திரிய புரோட்டோ ஆஸ்திர லாய்டினர் (Austric proto - Australoids) பரவியிருந்தனர். இவர்கள் நிஷாதர்கள் எனப்பட்டனர். இன்னொரு பிரிவினர் தாஸர்கள், தாஸ்யூக்கள் எனப்பட்டனர். இவர்கள் ஆஸ்திரிய, திராவிட மொழிகள் பேசினர். இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியரைத் திராவிடர்கள் கடுமையாக எதிர்த்தனர். இந்தப் போரில் தோற்றுப் போன திராவிடர்கள் இந்தியாவின் தெற்குப் பகுதிக்குச் சென்று குடியேறினர், வெற்றி பெற்ற ஆரியர்கள் முதலில் பஞ்சாபிலும், பின்னர் வட இந்தியா முழுமையிலும் பரவி தங்கினர். ஆரியர் வரவால் கி.மு. 1500 முதல் கி.மு. 600-ஆம் ஆண்டுக்குள் ஆப்கானிஸ்தானத்திலிருந்து கிழக்கு பீகார் வரை இடைப்பட்டுள்ள சமவெளிப் பிரதேசத்தில் இருந்த ஆஸ்திரியர்கள் படிப்படியாக ஆரிய மொழி பேச ஆரம்பித்தனர். ஆஸ்திரியர்களின் நாகரிகம் கிராமப்புறங்களிலும், திராவிடர் களின் நாகரிகம் நகரங்களிலும் வளர்ந்து வந்தன. ஒரு காலகட்டத்தில் இந்தியா முழுமையும் திராவிடர்கள் பரவி இருந்த னர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

ஆரியர்களின் ஆகாயப் பிதா (Dyaush) பிருதிவி மாதாவைக் காட்டிலும், திராவிடர் ளின் உலக மாதா தந்தைக் கடவுள் கோட்பாடு மிகவும் தத்துவார்த்தமாகவும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கவித்துவமாகவும், மெய்யுணர்வுடைய தாகவும், ஆழ்ந்த பொருளுடையதாகவும் உள்ளது. ஆரியர்களின் ஆகாயப் பிதா, பிருதிவி மாதா இயற்கையின் அடிப்படை யில் வெறும் உலகியலாய் அமைந்துள்ளது. ஆரியர்களின் சமயச்சிந்தனைகள், தத்துவக் கருத்துக்கள் வேத அடிப்படையிலும், திராவிடர்களுடையது ஆகம அடிப்படை யிலும் அமைந்துள்ளன. வைதீக வழிபாடு ஓமத்தீ வளர்த்து, அதில் மாமிசம், பால், நெய் சோமபானம் ஊற்றிக் கடவுளுக்கு அர்ப்பணிப்பது ஆகும். இவ்வழிபாட்டில் கடவுள் உருவத்தில் இல்லாமல் வானத்தில் உறைபவராகக் கருதப்பட்டது. ஆகம வழிபாடு பூக்கள், இலைகள், பழங்கள், நீர் கொண்டு சிலை அல்லது குறி வடிவில் இருக்கும் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் பூசை ஆகும். பூசை = பூ + செய் = பூவால் வழிபாடு செய்தல், (''பூசுதல்'' என்றும் இருக்கலாம். சந்தனம் அல்லது இரத்தத் தைப் பூசுதல் எனக்கொள்ளலாம்.) இரத்தம் பின்னர் குங்குமமாக மாறியது. யோகமும் ஆகம வழிபாட்டில் உண்டு.

ஆரியர்களின் கடவுளர் இந்திரன், அக்கினி, வருணன், சூரியன் முதலானோர் ஆவர். திராவிடர்களின் கடவுளர் சிவன், உமை ஆவர். சிவன், என்றால் சிவந்த நிறமுடையவன் என்ற பொருளினைத்தரும் தமிழ்ச்சொல் ஆகும். உமா, அம்மா எனும் பொருளைத் தரும்.

திராவிடர்கள் வழிபட்ட (சிந்து சமவெளி நாகரிக காலத்தில் ''சிவன்'' என்ற பெயர் இருந்ததாகத் தகவல் இல்லை), சிவனும், வேதங்கள் குறிப்பிடும் உருத் திரனும் எப்படி காலவட்டத்தில் ஒன்றாகி உருத்திர – சிவன் ஆனார்கள் என்பதைப் பார்ப்போம். [1]

(இ)
வேதத்தில் உருத்திரன் - கி.மு. 1000

நான்கு வேதங்கள் : வேத நூல்கள் நான்கு ஆகும். அவை இருக்குவேதம், யஜுர்வேதம், ஸாம வேதம், அதர்வவேதம் எனப்படும். இவற்றைத் தொகுத்தவர் வியாசர் ஆவார். ஒவ்வொரு வேதத்திலும் மந்திரம் அல்லது சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் எனும் நான்கு பிரிவுகள் உண்டு. மந்திரங்கள் வாழ்க்கை யில் செல்வமும், மகிழ்ச்சியும் ஏற்படத் தெய்வங்களை நோக்கிப் பிரார்த்தனை செய்யும் முகமாக அத்தெய்வங்களைப் புகழ்ந்து பாடும் பாசுரங்கள் ஆகும். பிராமணங்கள் வேள்விச் சடங்குகளைச் செய்வதற்கான வழிகாட்டு நூல்கள் ஆகும். ஆரண்யகங்கள் சடங்குகளுக்குத் தத்துவ விளக்கம் சொல்லும் வனநூல்கள் ஆகும். உபநிடதங்கள் வேதத்தின் முடிவுப் பகுதியான (வேதாந்தம் – வேதம் + அந்தம்) தத்துவச் சிந்தனைகளைக் கொண்டவை ஆகும். மந்திரங்களும், பிராமணங்களும் சடங்குகளின் பிரிவில் (அல்லது கரும காண்டம்) அடங்கும். ஆரண்யகங்கள் தியானப் பிரிவில் (அல்லது உபாசனா காண்டம்) அடங்கும். உபநிடதங்கள் ஞானம் என்ற பிரிவில் அடங்கும். அதர்வ வேதம், (Black Magic) பில்லி சூனியம் பற்றி எல்லாம் சொல்லுவதால் அதனை விட்டு விட்டு மூன்று வேதங்கள் (த்ரயீ) என்றும் கூறுவர்.

வேதக்கடவுளர் ; இயற்கையின் பல்வேறு சொருபங்களில் ஈர்க்கப்பட்ட ஆரியர்கள் அவற்றைத் தெய்வமாக்கிப்பாடி வழி பட்டனர். கடவுளரின் தாய் அதிதி; சவிதா (சூரியன்) – விண்வெளியின் கடவுள்; இந்திரன் அல்லது வாயு – இடைப் பட்ட ஆகாயக் கடவுள்; அக்னி கீழ்மட்டத் தில் – மண்ணுலகின் கடவுள். சவிதா, இந்திரன், அக்னி என்ற முதல் மூன்று தெய்வங்களே, பின்னர் 33 தெய்வங் களாகப் பரிணமித்தன. மித்ரன் ஒளிக் கடவுள்; வருணன் இரவுக்கடவுள் என்பர், மு. அருணாசலம்.

இருக்கு வேதத்தில் உருத்திரன் : இருக்கு வேதம் 10 மண்டலங்களாக – 1028 சூக்தங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 10552 இருக்குகள் (மந்திரங்கள்) உள்ளன.

1) "The History and Culture of the Indian People" - Part-I; Bharatiya Vidya Bhavan.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவற்றில் 3 இருக்குகளே உருத்திரனைப் பற்றிப் பேசுகின்றன. இவை தவிர 75 இடங்களில் மட்டுமே உருத்திரனைப் பற்றிக் கூறுகின்றது. இருக்கு வேத காலத்தில் உருத்திரன் சிறு தெய்வமாகவே காணப்படுகிறான்.

''தேவர்களின் நடுவே உத்தமன்''

(இருக்கு சூக்தம் 43 சுலோகம் 5)

''உருத்திரனே; எங்கள் புதல்வர்களையும் பேரர்களையும், சீவர்களையும், பசுக்களையும், குதிரைகளையும் துன்புறுத்தாதே; உன் சீற்றத்திலே எங்களுடைய வீரர்களைக் கொல்லாதே''.

(இருக்கு.. சூக் 114...சுலோ 8)

''மருத்துவர்களின் நடுவே நீ முதல்வனான மருத்துவன் என நான் செவியுறுவதால், நீ ஔஷதிகளால் என் புதல்வர்களைப் பலப்படுத்தவும்''

(இருக்கு..சூக் 224...சுலோ 9)

''நேரில் செல்பவனும், தருணனும், சிங்கத்தைப்போல் பயங்கரனும், அழிப்பவனும் புகழ் உள்ளவனுமான உருத்திரனைப்போற்றவும்''

(இருக்கு...சூக் 224...சுலோ 11)

''உருத்திரனின் மகத்தான கோபம் எங்களை விலக்குக''

(இருக்கு....சூக்...224...சுலோ 14)

இருக்கு வேதத்தில் உருத்திரன் கடுமையானவனாகவும் அதே சமயம் கருணை உள்ளவனாகவும் (மருந்துகளின் தலைவன்) காணப்படுகிறான். [1]

சாமவேதம் : சாம வேதத்தில் 1875 மந்திரங்கள் உள்ளன.இதில் 85 மந்திரங்களே சாமவேதத்திற்கு என உள்ள தனிப்பட்ட மந்திரங்கள். ஏனைய இருக்கு, யஜுர், அதர்வ வேதங்களிலிருந்து எடுக்கப்பட்ட மந்திரங்கள் ஆகும். இவற்றில் உருத்திரனுக்கு என்று ஒரு மந்திரம் கூட இல்லை. மருத்துகளைப் பற்றிச் சொல்கிறபொழுது மட்டும் ஓர் இடத்தில் 'உருத்திரன்' என்று வருகின்றது. [2]

யஜுர் வேதம் : யஜுர்வேதம், கிருஷ்ண யஜுர் வேதம், சுக்கில யஜுர் வேதம் என இரண்டாகப் பிரியும்.

கிருஷ்ண யஜுர் வேதம் தைத்தரீய சம்ஹிதை எனப்படும். இது 368 அநுவாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உருத்திரனின் சகோதரி அம்பிகை; உருத்திரன் ஓரிடத்தில் அக்னியோடு இணைத்துப் பேசப்படுகிறான். அநுவாகங்கள் 104, 105 சிறு தெய்வங்கள் உட்பட அனைத்துத் தெய்வங்களையும் பேசினாலும், உருத்திரனைப் பற்றிச் செய்தியே இல்லை. அம்பிகை முதன் முதலாகக் காட்சி அளிக்கிறாள். மனைவியாக அல்ல; சகோதரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''ருத்திரனே எவனுக்கும் இரண்டாவது இல்லை'' (அனு 112; மந் 4).

''ருத்திரனே! இது உனது பாகமாகும், உன் சகோதரி அம்பிகையுடன் அதில் இன்பமாகவும்'' (அனு 112; மந். 6).

''நீ பசு, குதிரை, மனிதனுக்கு மருந்தளிக்கவும்'' (அனு 112; மந். 7).

உருத்திரனின் சினம் யஜுர் வேதத்திலும் பேசப்படுகின்றது. ''ருத்திரனே! எம்மை எமது குழந்தைகளை இம்சை செய்யாதே!

''ருத்திரனே! எமது வீரர்களைக் கோபத்தில் கொல்லாதே'' (அனு 165; மந் 8).

திருவாதிரை நட்சத்திரம் உருத்திரனுக்கு என்று கூறப்பட்டுள்ளது.

திருடர் தலைவன் முதலான கடுமையான வருணனை : கிருஷ்ண யஜுர் வேதத்தில் தான் அனைவரும் அறிந்த 'ஸ்ரீருத்ரம்' உள்ளது. இப்பகுதியில் உருத்திரன் முழு வளர்ச்சி பெறுகிறான். (அநு 221 முதல் 231 முடிய 160 மந்திரங்கள்

---

1) இருக்குவேதம் (I,II பாகங்கள்) – தமிழ் மொழிபெயர்ப்பு – எம்.ஆர். ஜம்புநாதன் – 1977.

2) சாமவேதம் – எம். ஆர். ஜம்புநாதன் – தமிழ் மொழிபெயர்ப்பு – 1935.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளன) இப்பகுதியில்தான் 'சிவம்' என்ற சொல் முதன் முதலாக வினைச் சொல்லாகவும், உரிச்சொல்லாகவும் (அடைமொழி) (Adjective) வருகின்றது. உருத்திரன் மலையில் வசிப்பவன், சிவப்பன், நீலகண்டன், ஆயிரங்கண்ணுள்ளவன், பசுக்களின் பதி, தலைவன், முதல்வன் என்றெல்லாம் இதில் காணக் கிடக்கின்றது. இதில்தான் திருடர் தலைவன் என்ற செய்தியும் வருகின்றது.

''திருடர் தலைவனுக்கு நமஸ்காரம்; கள்வர் தலைவனுக்கு நமஸ்காரம்; வஞ்சகன் பெரும் வஞ்சகனுக்கு நமஸ்காரம்; சோரர் தலைவனுக்கு நமஸ்காரம்'' (அநு 223 மந் 1) ''தரித்திரனே! துரத்துபவனே! இப்பசு புருஷ சமூகத்தைப் பயமுறுத்தாதே, பாழாக்காதே'' (அநு 30; மந் 1)

உருத்திரனின் வளர்ச்சி – அனைத்துப் பகுதிகளின் தலைவன்; இந்தப் பகுதியில் தான் உருத்திரன் இதுவரை, சூழலின் கடவுளாக இருந்தவன் – அனைத்துப் பகுதிகளுக்கும் தலைவனாகப் பேசப்படுகிறான்.

"From a minor atmospheric god of the Rgveda, he now becomes the lord of all quarters - of forests and fields of trees and plants, of food and moving creatures"

("The concept of Rudra-Siva" - Pa7 - Mahadev Chakravarti).

''நதி, வழியில் உள்ளவனுக்கும் நமஸ்காரம்''

''கடல் தேக்கத்தில் உள்ளவனுக்கும் நமஸ்காரம்'' (அநு 227; மந்-7, 8).

''வெடிப்பில், விசாலப்பாதையில் உள்ளவனுக்கும் நமஸ்காரம்''

''கல், நிலம் கிரகங்களில் வசிப்பவனுக்கும் நமஸ்காரம்''

''பனிப் புழுதியில் உள்ளவனுக்கும் நமஸ்காரம்'' (அநு 229; மந். 1, 2, 4, 8).

எங்கும் பரந்த தன்மை : இவை போல 25 மந்திரங்கள் உள்ளன. இவையெல்லாம் உருத்திரனின் வியாபகத் தன்மையைப் (எங்கும் பரந்திருக்கும் தன்மையை) புலப்படுத்துகின்றது. இவற்றிற்கும் மேலாக ''ஆதி அந்தம் அவனே; விடுதலை அளிப்பவனே'' என்றும் கூறுகின்றது.

''ஆதி அந்த சனனனுக்கும் நமஸ்காரம்''

''வேதன் வேதாந்தனுக்கும் நமஸ்காரம்'' (அநு 226; மந். 2, 8.).

''விடுதலை செய்பவனுக்கு நமஸ்காரம்''

''சுகம் இன்ப மூலனுக்கும் நமஸ்காரம்''

''சங்கரன் சந்தோஷகரனுக்கும் நமஸ்காரம்''

''சிவன் சிவஞ்செய்பவனுக்கும் நமஸ்காரம்'' (அநு 228; மந். 8, 9, 10, 11).

கடுமையானவனாகக் காட்டப்படுபவனே எல்லாமுமாகக் காட்டப்படுகிறான் ''பவன்'' என்றும் அழைக்கப்படுகிறான்; ''பவன்'' என்றால் ''தோற்றுவிப்பவன்'' ''நிரந்தரமானவன்'' இவற்றையெல்லாம் வைத்து வேதகால ருத்ரன் பிற்கால ருத்ர–சிவனாக உருவெடுப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

சுக்கில யஜுர் வேதம் : கிருஷ்ண யஜுரில் வரும் சுக்கில மந்திரங்களை நீக்கினால் சுக்கில யஜுரில் 13 அநுவாகங்கள் உள்ளன. சுக்கில யஜுர் வேதம் வாஜசனேய சம்ஹிதை எனப்படும். இதிலும் 16 மந்திரங்கள் கொண்ட உருத்திரம் இடம் பெறுகின்றது.[1]

அதர்வவேதம் : அதர்வ வேதத்தில் 20 காண்டங்கள் 5977 மந்திரங்கள் உள்ளன.

''ஸோமருத்திரனே! எங்கள் வாசத்திலே நுழைந்துள்ள வியாதியை விலக்கி நீக்கு''

(அதர்வ ....சூத் 357; மந். 1)

1. யஜுர்வேதம் – எம். ஆர். ஜம்புநாதன் – தமிழ் மொழிபெயர்ப்பு – 1938.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருத்திரன், பவன், சர்வன், பசுபதி, பூதபதி, ஆயிரங்கண்கள் உடையவன், என்றெல்லாம் கூறப்படுகிறான்.

(சூக் 465...மந். 1)

''நாற்றிசைகள் உன்னுடையது, சோதி உனது, புவி உன்னுடையது, உக்கிரனே! இந்த விரிந்த வானம் உனதாகும். ஆத்மா வுள்ள இந்த அனைத்தும், புவியில் சுவாசிப்பதும் உனதாகும்''.

(சூக் 465; மந். 9)

''பவன் சோதியின் தலைவன் புவியின் – ஈசன். அவன் விரியும் வானத்தில் வியாபக மாய் உள்ளான்''

(சூக் 465; மந். 27)

ருத்திரன் எங்கும் பரந்திருப்பதை இந்த மந்திரங்களில் காணலாம்.[1]

அதர்வ வேதம் கூறும் விராத்தியர்கள் : அதர்வ வேதம் (சம்கிதை பகுதி 15) பிரமத்தை விராத்தியன் என்றும், உருத்தி ரனை ஏக விராத்தியன் (த.ஏக – தனிப் பெரும், ஒப்பற்ற) என்றும் ஏக விராத்தி யனின் ஏழு துணைவர்களாக பவன், சர்வன், பசுபதி, உக்கிரன், உருத்திரன், மகாதேவன், ஈசன் ஆகியோர் இருக்கின் றார்கள் என்றும் குறிப்பிடுகின்றது. விராத்தியர்கள் ஆரியர் அல்லாதார் என்றும் உருத்திரனை வழிபட்டனர் என்றும் வேத காலத்திலேயே இருந்தனர் என்றும் தெரிகின்றது. இந்த விராத்தியர்களின் வழி பாடே பின்னர் சைவமாகப் பரிணமித்தது.

பிராமணங்கள் : இதுவரை வேதத்தின் முதற்பகுதியாகிய சம்ஹிதை அல்லது மந்திரங்களில் உருத்திரன் பற்றிப் பார்த் தோம். இனி வேதத்தின் இரண்டாவது பகுதியாகிய பிராமணங்களில் உருத்திரன் நிலைபற்றிப் பார்ப்போம்.

பிராமணங்களில் உருத்திரனின் வலிமை உச்சத்தில் உள்ளது. பிற தெய்வங்கள் அஞ்சும் அளவு பேசப்படுகின்றது. பிரா மணங்கள் பிரஜாபதியைச் சுற்றி அமைந் தாலும், பிரஜாபதி உருத்திரனைப்போல அனைத்து மக்களின் கடவுளாக இருக்க வில்லை.

சதபத பிராமணம் : சுக்கில யஜுர் வேதத்தைச் சேர்ந்த சதபத பிராமணம் வேத இலக்கியத்தில் முக்கிய இடம் பெற் றுள்ளது. உருத்திரனுக்கு எட்டுப் பெயர்கள் வந்த செய்தியை விரிவாகச் சதபத பிராமணம் கூறுகிறது. சதபத பிராமணத் தில் உருத்திரன் முக்கிய இடம் பெற்றாலும் ஒதுக்கப்பட்டவனாகவே இருக்கிறான். ஹோமம் முடிந்தவுடன் பிற தெய்வங்கள் எல்லாம் போய்விட உருத்திரன் பூமியில் தங்கி விடுகிறான். சோம யாகத்திலும் உருத்திரன் புறக்கணிக்கப்படுகிறான். ஹோமத்தில் சொரியும் பண்டங்கள் சிதறித் தரையில் வீணாவதையும், யாகபலிக்கான விலங்குகள் காயமுற்றால் அவற்றையும் ஏற்றுக் கொள்பவனாகவே உருத்திரன் சித்தரிக்கப் படுகிறான். அது மட்டுமல்ல. உருத்திரனுக்கு யாகம் வளர்த்து முடிந்த பிறகு யாகம் செய்பவர்களும், யாகம் செய்து வைத்தவரும் (புரோகிதர்) திரும்பிக் கூடப் பார்க்காமல் அவ்விடம் விட்டு நீங்குவர். உருத்திரனுக்கு யாகம் செய்ததற்காக நீரைத் தொட்டுத் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்வர்.[2]

(ஈ)

சிந்து சமவெளி சிவன் - வேதகால உருத்திரன் - சிவன் உருத்திர இணைப்பு

சிந்து சமவெளி நாகரிகம் பரவியிருந்த சமயம் – ஆரியர் வருகைக்கு முன் – சிவ வழிபாடு (சிவன் என்ற பெயர் இல்லா விட்டாலும்) பாரதம் முழுமையும் பரவலாக இருந்தது என அறிஞர்கள் கருது கின்றனர். ஆரியர் வருகைக்குப் பின் – வேதகாலத்தில் – வேதத்தில் உருத்திர னைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது.

1) அதர்வவேதம் – எம். ஆர். ஜம்புநாதன் – தமிழ் மொழிபெயர்ப்பு – 1940.

2) "The Concept of Rudra Siva" - Mahadev Chakravarti.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவவழிபாடு இந்தியாவில் அழுத்தமாக ஊன்றிப் போன நிலையில் வேதகுருமார் களால் சிவனைப் புறக்கணிக்க முடிய வில்லை. எனவே, வேதத்தில் சிறிதளவே பேசப்பட்ட – சில இடங்களில் தாழ்வாகக் குறிப்பிடப்பட்ட – உருத்திரனைத் தொல்பழங்காலமாக இந்தியாவில் வழிபடப்பட்ட சிவனோடு இணைத்து, வேதகுருமார்கள் உருத்திர – சிவனாக உருமாற்றம் செய்து விட்டனர்.

சிவன், உருத்திரன், உருத்திர – சிவன் உருமாற்றம் பற்றி ஆர்.என். தான்டேகர் (நூல் – ''வேதத்தெய்வக்கதைகளின் போக்கு''). மகாதேவ் சக்ரவர்த்தி (The concept of Rudra Siva - Through the Ages), R.G, பண்டார்கர் (Vaisnavism, Saivism), V.B. ஆப்தே (The History and culture of Indian people) முதலானோர் விரிவாகக் கூறுகின்றனர்.

''ருத்ரனின் தோற்றம், பண்பு என்பவை வேதக்காரர்கள் ஏற்க முடியாதவையாக இருந்தன என்பது உண்மை என்றாலும் அவர்களைச் சுற்றி இருந்தவர்களிடம் அவன் செல்வாக்கு மிக்கு இருந்தமையின் அவனுக்கு இடம் கொடாமல் வெருட்டி விடவும் முடியவில்லை. வேதகாலக் குருமார்கள் ஒதுக்க முயன்று முடியா மையால் வேறுவழியின்றி வேண்டா வெறுப்புடனும் சந்தேகத் துடனும் தம்முள் நுழைய விட்ட ருத்ரன், பிற்கால இந்து சமயத்தில் மிக வலுப்பெற்று விட்டான். சமயக்கருத்துக்கள், தத்துவங்கள் என்ப வற்றில் அவன் ஊடுருவி வளர்ந்து விட்டான்.

இந்தியா முழுவதும் பரவியிருந்ததும், மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்ததுமான ஒரு தெய்வமே வேதத் திலும் புகுந்து உள்ளது. இந்த ஒரு தெய்வம் இந்தியா முழுவதும் தொல்பழங் காலத்தில் சிறுசிறு மாறுபாடுகளைப் பெற்றிருப் பினும் அடிப்படையில் மாறுதலை அடையவில்லை. இதனுடைய வலுவான செல்வாக்கினால் தாக்கப்பட்ட வேத குருமார்கள் இதற்கும் தம்முடைய வேதத்தில் இடம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இந்தப் பழந்தெய்வத்தின் இயல்புகளுள் பலவற்றை மூடி மறைத்து விட்டு இடம் கொடுத்தனர். அதுவரை சாவுக்கு ஒரு தெய்வம் வேதவழியில் வகுக்கப்படாமையின் ருத்ரனுக்கு இடம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட வுடன் இறப்புக்குரிய தெய்வமாக ஆக்கி விட்டனர்.

இன்றுள்ள இந்து சமயத்தில் ஆரிய வேத சமயத்தின் செல்வாக்கைவிட அத்தொல் பழங்கால சமயத்தின் செல்வாக்கே பல மடங்காக உள்ளது.

தொல் பழங்கால இந்தியச் சிவனும் புராணகாலச் சிவனும் விடாமல் தொடர்ந்த சங்கிலித் தொடரின் இருமுனைகளாவர்.

தொல் பழங்காலச் சிவனின் ஆரிய னாக்கப்பட்ட வடிவே வேதகால ருத்ரன்.

சிவ வழிபாடு இந்தியாவில் மட்டு மில்லாமல் யாண்டும் பரவி இருப்பதால் மிகமிக நீண்ட காலமாக உலகிடைப் பரவியுள்ளதும் இன்றும் வாழ்வதும் ஆன ஒரே சமயம் சிவ வழிபாடு ஒன்று தான் என்பது விளங்கும்.''[1]

(உ)

உபநிடதத்தில் உருத்திரன் - சிவன் (கி.மு. 623)

வேதத்திற்கு அடுத்து வருவது உபநிடத காலம் ஆகும்.

''உபநிடதம்'' என்றால் ''ஒருவர் அருகில் உட்கார்ந்து இருத்தல்'' ஆகும். உபதேசத்தின் போது குருவின் அருகில் இருந்து கேட்டல் ஆகும்.

உபநிடதம், வேதாந்தம் என்றும் சொல்லப்படும். வேதாந்தம் என்றால் வேத காலத்திற்குப் பிந்தியது; வேத உபதேசத்

1) "Vedic Mythological tracts" - R.N. Dandekar. (அ.ச. ஞானசம்பந்தனின் மொழிபெயர்ப்பு – ''பெரியபுராணம் ஓர் ஆய்வு'')

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திற்குப் பின் சொல்லித் தரப்படுவது; வேதத்தின் முடிவான குறிக்கோள் என்று மூன்று வகையாகப் பொருள் கொள்ள லாம்.

உபநிடதங்கள் 108 உள்ளன. சில புத்தர் காலத்திற்கு முந்தையன; ஏனையவை புத்தருக்குப் பிற்பட்டவையாகும்.

சில உபநிடதங்கள் விஷ்ணுவை உயர்த்திப் பேசுகின்றன. சில சிவனை உயர்த்திப் பேசுகின்றன.

ஸ்வேதாஸ்வதர உபநிடதம் சைவ சமய வரலாற்றிலே ஒரு மைல் கல்லாகும். ஏனைய உபநிடதங்கள் எல்லாம் முழு முதற்பொருளைப் பிரமம் என்று குறிக்க இந்த உபநிடதம் மட்டும் உருத்திரன் என்றே குறிக்கிறது. அது மட்டுமன்று. உருத்திரனுக்கு அரன், மகாதேவன், என்று பல பெயர்களைச் சூட்டுகிறது. முதன் முதலாக 'சிவன்' பெயர்ச்சொல்லாகக் கடவுளைக் குறிக்கிறது.[1]

ஸ்வேதாஸ்வதர உபநிடதம்தான் முதன் முதலில் பக்தி வழியை நிலை நிறுத்தியது. தோற்றுவித்தவன் அருளால்தான் துயர் நீங்குகிறது என்று சொல்கிறது. (ஸ்வே.. III...2) கடவுளிடம் காட்டும் பக்தி பற்றியும் கூறுகையில் ''பக்தி'' என்ற சொல்லை முதன் முதலாக இவ்வுபநிடதம் குறிக் கின்றது.) (ஸ்வே....VI....23)[2]

அந்தக் காலகட்டத்தில் ஸ்வேதாஸ்வதர உபநிடதம் பக்தி நெறியைக் காட்டியது மட்டுமல்லாமல் வசுதேவ – கிருஷ்ணனை முன்னிறுத்தாமல் உருத்திர சிவனை முன்னிறுத்திப் பலபடப் புகழ் மொழியால் போற்றியது. அன்றைய கால கட்டத்தில் உருத்திர சிவன் மட்டுமே தனிப்பெரும் கடவுளாகப் பக்தி (அன்பு) காட்டக்கூடிய முழு முதலாகத் திகழ்ந்தான். இதன் பின்னர் தான் பகவத்கீதை தோன்றி வசுதேவ – கிருஷ்ணனை முன்னிறுத்திப் பக்திநெறிக்கு வழிகாட்டியது.[3]

''சைவத்திற்கு ஒரு வடிவு கொடுத்துச் சிவபரத்துவம் பேசும் முதல் நூல் ஸ்வேதாஸ்வதர உபநிடதமேயாகும்'' என்ற பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன். ''பெரிய புராணம் – ஓர் ஆய்வு'' என்ற நூலில் முடிவு கட்டுகிறார்.

கேன உபநிடதம் உமாவை இமவானின் மகள் என்று மட்டும் குறிக்கிறது. உருத்தி ரனின் மனைவி என்று குறிக்கவில்லை.

இதற்கு அடுத்துவரும் அதர்வசீரஸ் உபநிடதமும் உருத்திரனைப் பற்றிப் பேசுகிறது. மகேஸ்வரன், உமாஸ்கந்தன், வினாயகர், ஓங்காரம் பற்றியெல்லாம் இந்த உபநிடதம் கூறுகின்றது. உடம்பெல்லாம் திருநீறு பூசிப்பசுபதியை (உருத்திரன்) நோக்கி மந்திரம் சொல்லும் பாசுபத விரதம் பற்றி இந்த உபநிடதம் குறிப்பிடுகிறது. இது பாசுபத சைவத்தின் ஒரு கூறு ஆகும்.

"The ash is fire, the ash is water, the ash is earth, everything is ash, the ether is ash, the mind, the eyes and other senses are ash"[3]

(3)

சைவ ஆகமங்கள்
கி.மு. ஆறாம் நூற்றாண்டு

காலம் : கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சைவ சமயம், தத்துவம் குறித்துச் சமஸ்கிருதத்தில் வெளியானவை சைவ ஆகமங்கள் ஆகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னரே பல ஆகமங்கள் வந்திருக்க வேண்டும் என்பார் ஆய்வு அறிஞர் மு.அருணாசலம் அவர்கள். கி.பி. 2ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு கால கட்டங்களில் பல சைவாகமங்கள்

1) "The concept of Rudra Siva" - Mahadev Chakravarti.

2) "Love of God according to Saiva Siddhanta" - Mariasusai Dhavamony.

3) "Vaisnavism Saivism" - R. G. Bhandarkar. .....1913.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுந்தன என்று சுரேந்திரநாத்தாஸ் குப்தா கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தோன்றியவை : சைவாகமங்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டிலே எழுந்தன. அறிஞர் உலகில் வடமொழி செல்வாக்கு பெற்றிருந்தமையால் ஆகமங்கள் தமிழில் எழுதப்படாமல் வடமொழியில் எழுதப்பட்டன. சிவாச்சாரியார்கள் வீடுகளில் இவை பாதுகாக்கப் பட்டு வந்தன. பல ஏடுகள் இன்று அழிந்து விட்டன. இவை தமிழ்ப்பண்பாட்டையே பிரதிபலித்தன. ஸ்மார்த்த பிராமணர்களை விடச் சிவாச்சாரியார்களே உயர்ந்தவர்கள் என்று சைவ ஆகமங்கள் கூறும். எனவே வட இந்தியாவில் இவை புறக்கணிக்கப் பட்டன.

உயிர்த்துடிப்புள்ளவை : வேதங்களுக்குப் பிறகு உபநிடதங்கள் தோன்றின. அதே காலகட்டத்தில் ஆகமங்களும் தோன்றின. உபநிடதங்கள் நுண்மையான விஷயங்களை அணுகின. ஆகமங்களோ அன்றைய கால கட்டத்தில் வாழ்ந்த பெரும் பான்மையான மக்களின் கருத்துக்களுக்குத் திட்டவட்டமான லௌகிக வடிவம் கொடுத்தன. இதனால் சைவ ஆகமங்கள் உயிர்த்துடிப்புடனும், செயலூக்கமும் பெற்றிருந்தன. இதே காரணத்தினால் பௌத்த சமயம் தன் வலுகுன்றியதில் பெரும் பங்கு உபநிடதங்களை விட ஆகமங்களே வகித்தன என்றும் சொல்லலாம்.

பொருள் : ஆகமங்களும் வேதங்களைப் போல இறைவனால் மொழியப்பட்டன என்பர். இதனாலேயே ஆகமம் (ஆ+கமம் = இறைவனிடமிருந்து வெளிப்பட்டது) எனப்பட்டது. ஆ (பதி) + க (பசு) + ம (பாசம்) என்றும் சொல்வர்.

ஆ (ஞானம்) + க (விடுதலை) + ம (பந்தங்களிலிருந்து விடுதலை) என்றும் பிரிக்கலாம்.

ஆகமங்கள் சடங்குகளைப் பற்றித்தான் கூறுகின்றன. தத்துவம் பற்றி ஏதும் சொல்லவில்லை என்று அறிஞர்கள் கூடக் கருதுகின்றனர். இது தவறான கருத்தாகும். தத்துவக்கருத்துக்கள் கொண்ட ஞானபாதம் என்று தனியாக ஒரு பிரிவே உள்ளது.

உள்ளடக்கம் : ஆகமங்கள் ஞான பாதம், கிரியா பாதம், சரியா பாதம், யோக பாதம் என நான்கு பிரிவுகளைக் கொண்டவை ஆகும்.

ஞான பாதம் : ஞான பாதம் அல்லது வித்தியாபாதம் தத்துவக் கருத்துக்களை கொண்டது ஆகும். இறை, உயிர், தளை, (பதி, பசு, பாசம்) இவற்றிற்கிடையேயான உறவுநிலை, சாதன இயல், உயிர் தளையிலிருந்து விடுதலை பெற வழிகள், இறைவனை அடை தற்கான வழிகள் பற்றி இப்பகுதி கூறுகின்றது.

கிரியாபாதம் : இப்பகுதி கோயில்களைப் பற்றிக் கூறுகின்றது. இது மூன்று பிரிவு களைக் கொண்டது ஆகும். (1) கர்ஷணா முதல் பிரதிட்டானம் முடிய – கோயிலுக் கான நிலம் ஏற்றதா என்று ஆய்ந்து அப்பகுதியை உழுவது முதல் கும்பாபி டேகம் செய்வது வரையான செயல் முறைகள். (2) பிரதிட் டை முதல் உற்சவம் வரை அனைத்து வகையான கோயில் விழாக்கள். (3) பிராயச்சித்த கிரியைகள் – பிராயச்சித்த காரியங்களும் தூய்மை செய்யும் காரியங்களும் பற்றியன.

தனி வழிபாடு, கோயில் வழிபாடு பற்றி இப்பகுதி விரிவாகப் பேசுகிறது. மந்திரங் கள் பற்றி தனியாக ஒரு பிரிவு உள்ளது. இப்பிரிவில் மந்திரங்களின் வடிவம், பீஜம், பஞ்சாக்கர மந்திரம், இதன் பல வடிவங் கள், பல தெய்வங்களுக்கான பீஜமந்திரங் கள், அங்க மந்திரங்கள் பற்றிக் கூறப்பட் டுள்ளன.

கோயில் கட்டிடக் கலையைப்பற்றி தனியாகவே ஒரு நூல் எழுதலாம். இப்பகுதியில், சிற்பம், செப்புத்திருமேனி, தேர்கட்டுதல், புவியியல், தோட்ட இயல், வான சாத்திரம், நகர அமைப்பு, மனை யியல், குடிநீர்ப்பங்கீடு, உடல்நலம், உணவு என மனிதனுக்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் அடங்கியுள்ளன.

எல்லா ஆகமங்களிலும் இப்பகுதிதான் மிக விரிவாக அமைந்துள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரியா பாதம் : வழிபடுவோனுக்குரிய நித்திய கருமங்களும், கட்டுப்பாடுகளும், ஒழுக்க முறைகளும் பற்றி இப்பகுதி பேசுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சடங்குகளும், தீக்கை முறைகள் பற்றியும் இப்பிரிவு விரிவாகக் கூறுகிறது.

யோக பாதம் : அட்டாங்க யோகம், பிராசாத யோகம் பற்றிச் சைவ சித்தாந்தம் விரிவாகக் கூறினாலும், ஆகமங்கள் அந்த அளவு எடுத்துக் கூறவில்லை. நாடி பற்றி மட்டுமே பேசுகிறது.

மூல ஆகமங்கள் இருபத்தெட்டு ஆகும். இவற்றில் ஆறு ஆகமங்களே கிடைத்துள்ளன.

(i) காமிகா ஆகமம்

''காமிகா'' என்றால் ''விரும்பிய பொருள்'' எனப் பொருள்படும். இந்த ஆகமத்தில் 12000 பாடல்கள் கிடைத்துள்ளன. ''பூர்வகாமிகம்'' என்பது முதல் பிரிவு ஆகும். இப்பிரிவில் ஆகமங்களின் வெளிப்பாடு, நித்ய வழிபாட்டுக்குரிய விதிகள், கோயில்கள் வீடுகள் கட்டுவதற்கான விதிகள், சடங்குகள் செய்யும் முறைகள், தெய்வங்களைப் பிரதிட்டை பண்ணுவதற்கான விதிகள் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியான ''உத்தரகாமிகத்தில்'' வழிபாடு, திருவிழாக்கள், தீக்கை, கோயில் கும்பாபிடேகம் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

(ii) யோகாஜம், (iii) சிந்தியம் ஆகிய ஆகமங்கள் கிடைக்கவில்லை.

(iv) காரணாகமம்

இந்த ஆகமம் சடங்குகளுக்கான காரணங்களை விளக்குகிறது. கிரியா பாதம் பற்றிய பகுதிதான் கிடைத்துள்ளது. பூர்வ காரணம் முதற் பிரிவு ஆகும். இப்பிரிவில் கர்ஷணா, பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகியன உள்ளன. ''கர்ஷணா'' என்பது கோயில் கட்டுவதற்கு முன் நிலத்தைத் தயார் செய்தலும் உழுதலும் ஆகும். பூஜைக்கான பூர்வாங்க முயற்சிகளைப் பற்றியும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. சிவபூஜை செய்யும் பொழுது பயன்படுத்த வேண்டிய 32 முத்திரைகளைப் பற்றி விரிவாகக் கூறியிருப்பது இப்பகுதியின் சிறப்பு ஆகும். இரண்டாம் பகுதியான பிரதிட்டையில் ஆத்மார்த்த பூஜை, ஹோமம், பல்வேறு வகையான லிங்கங்களைத் தாபித்தல், பெருங்கோயில் தெய்வச் சிலைகளை அவற்றிற்குரிய இடங்களில் நிறுவுதல், வாரவழிபாடு, மாத வழிபாடு, ஆண்டு திருவிழாக்கள், சிறப்பு பூஜை, சிதைந்த கோயில்களின் திருப்பணிகளும், கும்பாபிடேகமும் பற்றிக் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது ''உற்சவம்'' பகுதியில் நாள் விழாக்கள், ஆண்டு திருவிழாக்கள், தேர்த்திருவிழா பற்றிக் கூறப்பட்டுள்ளன. நான்காம் பகுதியான ''பிராயச்சித்தத்தில்'' அனைத்து வகையான பிராயச்சித்தச் சடங்குகளைப் பற்றியும் சிவ தீக்கை பற்றியும் காணலாம்.

சரியா பாதம் சைவ பேதங்கள், தீக்கை, கிரியை,பிரமசரியம் முதலான நான்வகை ஆசிரமத்தார் மேற்கொள்ள வேண்டிய விரதங்கள் பற்றிப் பேசுகிறது. மிகக்குறைவான இடம் பெற்றுள்ள யோகபாதத்தில் நாடி சக்கரம், கலா சக்கரம், ஆதார ஆதேயம் பற்றி உள்ளன. ஞானபாதத்தில் சிவன், பசு, அத்துவாக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

(v) அஜிதம், (vi) தீப்தம், (vii) சூக்ஷ்மம், (viii) சகஸ்ரம், (ix) அம்சுமத், (x) சுப்ரபேதம், (xi) விஜயம், (xii) நிஸ்வாஸம், (xiii) ஸ்வயம்புவம், (xiv) அலைம், (xv) வீரம் ஆகிய ஆகமங்கள் கிடைக்கவில்லை. சூக்ஷ்ம ஆகமத்தில் ஆத்மார்த்த லிங்க பூஜை செய்வதற்கான விதிகள் கூறப்பட்டுள்ளன.

(xvi) ரௌரவ ஆகமம்

இந்த ஆகமத்தில் வித்யாபாதம், கிரியாபாதம் ஆகியன கிடைத்துள்ளன. கிரியாபாதத்தில் அக்னி காரியம் பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது. வித்யா பாதத்தில் சிருட்டிகிரமம், சிவதத்துவம், தந்திராவதாரம், அத்துவாவிதி, முத்ரா லட்சணம், பஞ்ச பிரமகலாவிதி, தாரணை விதி, தீக்கை, ஆத்ம சங்கராந்தி, மந்திரார்த்த வருணனம் ஆகியன உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"சிவஞான போதம்" இதில் உள்ள பாச விமோசன படலத்திலிருந்துதான் மொழி பெயர்க்கப்பட்டது என்ற ஒரு கருத்து இருந் தது. இக்கருத்து இப்பொழுது முழுமையாக ஆதாரங்களுடன் மறுக்கப்பட்டு விட்டது.

(xvii) மகுடாகமம்

இவ்வாகமத்தில் கிரியா பாதத்தில் பூர்வ, உத்தர பாகங்களில் சில பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவ்வாகமம் ஆசாரி யனின் தனி ஒழுக்கமுறை, சுத்தி, நியாசம் இரண்டினுக்குமான பூர்வாங்கங்கள், தீக்கை விதிகள், விழாக்களுக்கான விதிகள், பிராயச்சித்தவிதி, கார்த்திகைக்கான தீபம், ஸ்பைனவிதி பற்றிக் கூறுகிறது. நடராஜர் வழிபாட்டுக்கு இந்த ஆகமத்தைத்தான் பின்பற்ற வேண்டும். சிதம்பரத்தில் இந்த ஆகமம்தான் பின்பற்றப்படுகிறது.

(xviii) விமலம், (xix) சந்திரஞானம், (xx) முகாபிமானம், (xxi) புரோட்ஜிதம், (xxii) லலிதம், (xxiii) சித்தம், (xxiv) சந்தனம், (xxv) சர்வோக்தம் ஆகிய ஆகமங்கள் கிடைக்கவில்லை.

(xxvi) மாதங்க பரமேசுவர ஆகமம்

இந்த ஆகமத்தில் வித்யாபாதம் மட்டும் அச்சிடப்பட்டுள்ளது. தத்துவங்கள் பற்றி இந்த ஆகமம் பேசுகிறது. கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் கோயில் இந்த ஆகம அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது.

(xxvii) கிரண ஆகமம்

இவ்வாகமத்தில் சரியா, கிரியா, யோக, ஞான பாதங்கள் என நான்கு பாதங்களும் கிடைத்துள்ளன. வித்யா பாதம் பசு, மாயை, கர்மா, பதி, சத்திநிபாதம், தீக்கை, மந்திரம், புவனம், சிவதத்துவம், தந்திரா வதாரம், மாற்றுக்கோட்பட்டி, யந்திரோ தாரம் பற்றிக் கூறுகின்றது. கிரியாபாதம் ஸ்நான விதியிலிருந்து தனிமனிதன் தனது வீட்டில் செய்ய வேண்டிய அனைத்துச் சடங்குகள் வரையிலும் கூறுகின்றது. வீடு எப்படி அமைய வேண்டும் என்றே ஒரு அத்யாயம் உள்ளது. சரியாபாதம், வழிபடு வோர்க்குரிய விதிமுறைகள், சரஸ்வதி பூஜை, மிருத்யுஞ்சய பூஜை, குருவிற்குரிய இலட்சணங்கள், பிராசாத லட்சணம் பற்றிக் கூறுகின்றது. யோகபாதம், யோகம் செய்யும் முறை, எண்வகை ஆசனங்கள், பிராணாயாமத்தின் மூன்று பகுதிகள் பற்றி எடுத்துரைக்கின்றது.

உபாகமங்கள்

ஒவ்வொரு மூல ஆகமத்திலிருந்தும் பல உபாகமங்கள் உள்ளன. மிருகேந்திர ஆகமம், வாதுள சுத்தாத்ய ஆகமம், பௌஷ்கர ஆகமம், குமார தந்திரம், சர்த்தா – திரிசதி – காலோத்தராகமம் ஆகியவற்றில் மட்டுமே சில பகுதிகள் கிடைத்துள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மணிகள்

பல்வேறு ஆகமங்களிலிருந்து பொறுக்கு மணிகளாகப் பாடல்கள் தேர்வு செய்யப் பட்டவை சத ரத்ன சங்கிரகம் *(14 ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவத்தால் தொகுக்கப்பட்டது)*, சகலாகம சாரசங் கிரகம் *(15, 16 ஆம் நூற்றாண்டில் தொகுக் கப்பட்டது)*, சைவாகம பரிபாஷா மஞ்சரி *(16ஆம் நூற்றாண்டில் வேதஞானயோகி யால் தொகுக்கப்பட்டது)* ஆகும்.

தொகுப்புகள்

'சித்தாந்த சாராவளி' *(13-ஆம் நூற்றாண் டில் திரிலோசன சம்புவால் தொகுக்கப் பட்டது)*, சித்தாந்த சேகரம் *(13-ஆம் நூற்றாண்டு)* ஆகியவை ஆகமங்களின் தொகுப்புகள் ஆகும்.

16-ஆம் நூற்றாண்டில் மறைஞான சம்பந்தரால் சிவதருமோத்தரமும் *(உபாகமம்), 14-ஆம் நூற்றாண்டில்* சர்வ ஞானோத்தரமும் தேவிகாலோத்தரமும், கி.பி. 1700-ஆம் ஆண்டில் தருமையாதீனம் வெள்ளியம் பலவாண தம்பிரானால் மிரு கேந்திர ஆகமத்தில் வித்யாபாதத்தில் ஆறு அத்தியாயங்களும், சிவப்பிரகாச சுவாமி களால் சதமணிமாலையும், வரகுண பாண்டியரால் 16-ஆம் நூற்றாண்டில் உத்தர - காமிகாமகத்தின் இறுதி 16 அத்தி யாயங்களும் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.[1]

1, "The Saivagamas" - M. Arunachalam ...1983.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.மு. 600 முதல் கி.பி. 320 வரை

வேதம் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டாலும், ஒருகால கட்டத்தில் வேத வழிபாடு (பிராமணங்கள் எழுந்த சமயம்) வேள்வி, அழல் ஒம்புதல் என்று பிராமணர் களால் மிகுதியும் வலியுறுத்தப் பட்டது. சடங்குகளை எதிர்க்கும் கூட்டம் அப் பொழுதே இருந்தது. அவர்களுக்காகச் சடங்குகளுக்கு தத்துவ விளக்கம் உரைக்கும் ஆரண்யகங்கள் உருவாயின. பின்னர் தத்துவக் கருத்துக்களே கொண்ட உப நிடதம் எழுந்தது. இந்தப்புதிய சிந்த னைக்கு முழுக்காரணம் க்ஷத்திரியர்களே ஆவர். பிராமணர் – க்ஷத்திரியர் முதன்மை பெறும் போராட்டத்தின் வளர்ச்சி நிலை யாகும் இது. சமயச் சிந்தனைகளில் சுதந்திர உணர்வு உபநிடத காலத்திலேயே எழுந்து விட்டது. வேத் வழிபாடு வலுவிழந்தது. இதனால் இருபெரும் விளைவுகள் நிகழ்ந்தன. ஒருபுறம் வேதக்கடவுளர், பிராமணர் முதன்மை, வேள்வி இவற்றை முற்றிலும் ஏற்காத கடவுள் மறுப்பு இயக்கங்களான பௌத்தம், சமணம் உருவாதல்; அதே சமயம் இன்னொருபுறம் வேள்விகளை ஏற்காத ஆனால் ஒரே கடவுளை ஏற்கும் பக்தி இயக்கங்களான வைணவம், சைவம் நிலைபெறுதல்; முன்னவை முற்றிலும் மாறுபட்ட புரட்சிச் சிந்தனைகள் கொண்டவை. பின்னவை சமயச் சீர்திருத்தத்தில் எழுந்தவை ஆகும். இவை கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த புரட்சிகள் ஆகும். [1]

இந்தப் புரட்சிகளுக்கு ஈடுகட்டித் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்கு வைதீக மரபு வந்து விட்டது. இச்சவாலை எதிர் கொள்ள வைதீக மரபு இரண்டு வகையான நிலைப் பாடுகளை மேற்கொண்டது. முதலாவதாக, தங்களுடைய சமய – தத்துவக் கருத்துக் களை முறையாக நெறிப்படுத்திக் காரண காரியங்களுடனும், தருக்க ரீதியாகவும் வைதீகர் வெளிப்படுத்தினர். இரண்டாவ தாக வேதமரபுக்கு மாறான ஆனால் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த கொள்கைகளை அவர்கள் உள்வாங்கிக் கொண்டனர்.

இதனால் கி.மு. 400 முதல் கி.மு. 200 வரை நிகழ்ந்த விளைவுகள் வருமாறு;

1) நையாயிகம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை வேதாந்தம் என அறுவகை தரிசனங்கள் (தத்துவம்) உருவாகுதல்.

2) சைவ சமயம் முழுவளர்ச்சி பெறுதல்.

3) பாகவதக் குழுவினரை வசப்படுத்தி கிருஷ்ணனை வேதக்கடவுளான விஷ்ணுவுடன் இயைபுபடுத்துதல்.

4) இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட சமயத்தையும் தத்துவக் கோட்பாடு களையும் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் மூலம் மக்களி டையே பரப்புதல்.

5) இந்த அலையில் பௌத்தமும், சமண மும் விடுபடுதல். கி.மு. 300 முதல் கி.பி. 300-ஆம் ஆண்டு வரை பௌத்த மும், சமணமும் உச்ச நிலையில் இருந்தது குறிப்பிடத் தக்கது.[2]

(4)

மகாபாரதம் – இராமாயணத்தில் சிவவழிபாடு

(கி.மு. 450)

மகாபாரதத்தைத் தொகுத்தவர் வியாசர் ஆவார். இத்தொகுப்பு கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டுக்குள் நடந்திருக்கலாம். பாண்ட வர்க்கும், கௌரவர்க்குமிடையே நிகழ்ந்த பாரதப் போரின் காலம் கி.மு. 1400 – கி.மு. 1000-ஆம் ஆண்டுக்குள் இருக்கலாம்.

(Bhavan's "History of Indian Culture")

1) "The History and Culture of Indian People" - Bharatiya Vidya Bhavan - Part II.

2) "The Cultural Heritage of India" - Vol II. Ramakrishna Mission....1956.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரு காவியங்களும் கிருஷ்ணன், இராமனைப் பற்றிக் கூறினாலும் சிவ வழிபாட்டை உயர்த்தியே கூறுகின்றன. பாரதப் போரினைத் தொடங்குமுன் கிருஷ்ணன் அருச்சுனனிடம் துர்க்கையை வழிபட்டு வரச் சொல்லுகிறான். கார்த்திகேயனின் தாயாகிய உமா என்பது துர்க்கையின் மற்றொரு பெயராகும். வன பருவத்தில் அருச்சுனன் சிவபெருமானை வழிபட்டது பற்றியும், சிவபெருமான் கிராத (வேட) உருவத்தில் காட்சி தந்து ஆயுதங்கள் கொடுத்தது பற்றியும் வருகின்றது. துரோணபருவத்தில் கிருஷ்ணனும் அருச்சுனனும் இமயமலை சென்று சிவபெருமானை வழிபட்டுப் பாசுபத அஸ்திரம் பெற்ற செய்தி வருகின்றது. அசுவத்தாமன் சங்கரனிடம் வாள் கேட்டுப் பெறுதல்; நன்மகவைப் பெற கிருஷ்ணன் மகாதேவனை நாடிச் செல்லுதல்; சிவபெருமானைத் தவிரப் பிற கடவுளரை வழிபட முடியாது என்று உறுதியாக இருந்து சிவபெருமானிடம் உபமன்னிய முனிவர் எட்டு வரங்கள் பெறுதல்; இன்னோரன்ன செய்திகள் மகாபாரதம் நெடுகிலும் வருகின்றன.[1]

சிவன் பிரமனைத் தோற்றுவித்தல்; பிரமன் சிவனின் ஒப்பற்ற தன்மையைப் புகழ்தல்; விஷ்ணுவும் சிவனால் தோற்றுவிக்கப்படுதல்; பிரபஞ்சமே ஆண் தத்துவம், பெண் தத்துவமாக இருத்தலால் அனைத்திற்கும் உரியவர் சிவனும், தேவியுமே ஆவர் எனல்; லிங்கத்தை ரிஷிகளும் கந்தர்வர்களும் வழிபடுதல்; இறுதிப் பகுதியில் சிவன் ஒப்பற்ற கடவுளாக உயர்த்தப்பட்டு விஷ்ணு தன் பக்தியை வெளிப்படுத்தல்; நாராயணன் சிவபக்தன் ஆதல்; என, மகாபாரதத்தில் தொடக்கப் பகுதியில் உயர்வாக இல்லாவிட்டாலும் இறுதியில் ஒப்பற்ற கடவுளாக சிவன் உயர்த்தப்படுகிறான்.[2]

கி.மு. நான்காம் நூற்றாண்டில் வால்மீகியால் இயற்றப்பட்ட இராமாயணத்திலும் சிவனைப்பற்றிய செய்திகள் வருகின்றன. சிவனின் பல்வேறு பெயர்களான ஸ்ரீகண்டன், மகாதேவன், உருத்திரன், பசுபதி, சங்கரன் இராமாயணத்தில் விரவி வருகின்றன. இமவான் தனது மகள் உமாவை உருத்திரனுக்கு மணம் செய்து கொடுத்தல்; கந்தர்பன் (மன்மதன்) உருத்திரனின் தவத்தைக் கலைத்தல்; கார்த்திகேயன் பிறப்பு; பகீரதன் தவத்தால் கங்கை வெளிப்படல்; பாற்கடலைக் கடையும் பொழுது வெளிப்பட்ட ஆலகால நஞ்சை ஏற்றல்; அந்தகாசுரன்வதம்; திரிபுரம் எரித்தல்; ஆகிய செய்திகள் இராமாயணத்தில் பேசப்படுகின்றன.[3]

(5)

பாசுபத சைவம் (கி.மு. 300)

கி.மு. 300-ஆம் ஆண்டில் பாடலி புத்திரத்திற்குத் தூதராக வருகைதந்த மெகஸ்தனிஸ் பயணக் குறிப்புகளில் சிவவழிபாடு பற்றிக் கூறப்படுகிறது. சிவனை டயோனைஸீஸ் (Dionysis) என்ற பெயரில் அவர் குறிக்கிறார். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பதஞ்சலி தனது மகாபாஷியத்தில் சிவ பாகவதர்கள் பற்றியும், சிவன், ஸ்கந்தன் சிலைகள் பற்றியும் குறிக்கின்றார்.

பாசுபத சைவம் – தோற்றம் : சைவத்தின் பல பிரிவுகளுள் பாசுபத சைவம் தொன்மையானது ஆகும். மகா பாரதத்தில் பாசுபத சைவம் பற்றிய குறிப்பு வருகின்றது. இருபத்தெட்டாவது மகா யுகத்தில் விஷ்ணு யதுகுலத்தில் வசுதேவனாக அவதரிக்கும் பொழுது மகேசுவரன் சித்தர் தேசமான காயாவரோகண மயானத்தில் லகுலினாக (Lakulin) இறந்த உடலில் புகுந்து அவதாரம் எடுக்கப்போவதாக

1) "Vaisnavism and Saivism" - R.G. Bhandarkar...1913.

2) "Love of God according to Saiva Siddhanta" - Mariasusai Dhavamony ....1971.

3) "The History and Culture of Indian People" - Bharatiya Vidya Bhavan - Part II.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகேசுவரன் பிரமதேவரிடம் கூறுவதாக வாயு புராணம், லிங்க புராணம் ஆகியவை கூறுகின்றன.காரவண மஹாத்மியமும் இவ்வரலாற்றைக் கூறுகிறது. லகுலினது சீடர்களான பாசுபதர்கள் உடலெல்லாம் திருநீறு பூசிக்கொண்டு யோக நெறியைப் பின்பற்றி உருத்திரனை அடைவார்கள் என்றும் அப்புராணங்கள் கூறுகின்றன. வடநாட்டில் சில கோயில்களில் உள்ள கல்வெட்டுகளில் லகுலின் பற்றிக் குறிக்கப் பட்டுள்ளன.

காலம் : லகுலின் (லகுலா – கையில் உள்ள மட்டை) என்பவர் கி.மு. இரண் டாம் நூற்றாண்டில் பாசுபத சைவத்தை நிறுவினார் எனக்கொள்ளலாம்.

வரலாற்றில் பாசுபதம் : வைசேடிக சூத்திரங்களை இயற்றிய கனாடா (Kanada), உத்யோதா இயற்றிய பரத்வாஜர் ஆகியோர் பாசுபத சைவர்கள் ஆவர். கி.பி. 300-ஆம் ஆண்டில் குஷான அரசன் வேமா காட்பிஸஸ் வெளியிட்ட நாணயங்கள், சம்புவை நிறுவ திருநீறு பூசிய பிரா மணர்களை நியமிக்க வேண்டும் என்று கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வராகமித்திரன் வலியுறுத்திய விதிமுறைகள் – அனைத்தும் பாசுபத சைவம் பின்பற்றப்பட்டிருந் தமைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சீன யாத்திரிகர் யுவான் சுவாங் வெளியிட்ட பயணக் குறிப்புகளில் பனிரண்டு இடங்களில் பாசுபத சைவம் பற்றி வருகின்றது. [1]

பாசுபதம் பெரிதும் பின்பற்றப்பட்ட இடம் குஜராத் மாநிலம் ஆகும்.

தமிழ்நாட்டில் கச்சி, குடந்தை, நாகைக் காரோணங்களில் பாசுபதம் இருந்ததாகச் சொல்லலாம். ''சைவர் பாசுபதர் வணங் கும் சண்பைநகர்'' என்கிறார் ஞான சம்பந்தர். கோவையைச் சேர்ந்த பேரூரில் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த லகுலீசர் சிற்பம் கிடைத்துள்ளது. மகாபலிபுரம் தர்மராஜ ரதம், மதுரையைச் சேர்ந்த அரிட்டாபட்டி, புதுக்கோட்டையைச் சேர்ந்த தேவர்மலை ஆகிய இடங்களில் கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த லகுலீசர் சிற்பம் உள்ளது. (கு. அருணாசலக் கவுண்டர் – ''ஞானசம்பந்தம்'' இதழ் – கட்டுரை ''சைவசமயப்பிரிவுகள்'').

பாசுபதம் – நெறிமுறைகள் : உயிர் உலகக் கட்டிலிருந்து விடுதலை பெற மகேசுவரன் ஐம்பொருள்களை வகுத்துத் தந்துள்ளதாகப் பாசுபத சைவம் கூறும். அவ்வைம்பொருள்களாவன :

(1) காரியம் – பிரதானத்திலிருந்து தோன்றிய மகத்தும், பிறவும் சுதந்திரம் அற்றன; (2) காரணம் – ச மகேசுவரன் – பிரதானமும் கூடத் சுதந்திரமானது. (3) யோகம் – வழி; ''ஓம்'' மந்திரத்தை உச்சரித் தலும், தியானம் செய்தலும். (4) விதி – ஒரு நாளில் மூன்று வேளையும் திருநீறு பூசுதல். (5) துக்காந்தம் – துன்பத்தின் முடிவு;

யோகம் : ஆன்மாவை மனதின் மூலம் இறைவனிடம் கொண்டு செலுத்துவது யோகம் ஆகும். இது செயல்பாடு, செயலி லிருந்து விடுபடுதல் என இருவகைகளில் நிகழும். செயல்படுதலாவது மந்திரங்கள் ஓதுதல், தியானம் முதலியன.

விதி : விதி இரு வகைப்படும். முதல் பிரிவில் உடம்பு முழுதும் திருநீறு பூசுதல், திருநீற்றில் படுத்தல், ''ஹா, ஹா'' என்று சிரித்தல், பாடுதல், ஆடுதல், மந்திர உச்சாடனம் செய்தல், சுற்றிச் சுற்றி வருதல் ஆகியன அடங்கும். இரண்டாம் பிரிவில் வழிபாட்டிற்குப் பிறகு திருநீறு பூசுதல், பிச்சையெடுத்தல், மற்றவர்கள் உண்ணா மல் விட்டு எஞ்சியவற்றை உண்ணுதல் ஆகியன அடங்கும்.

துக்காந்தம் : அனாத்மகம், சாத்மகம் என துக்காந்தம் இரு வகைப்படும். துன்பத்திலிருந்து முழுமையாக விடுதலை பெறுதல் ''அனாத்மகம்'' ஆகும்.

தெளிந்த காட்சி, தெளிந்த செயல், கைவரப்பெற்று ஆளுமையுடனிருத்தல் ''சாத்மகம்'' ஆகும்.

1) "Vaisnavism and Saivism" - R.G. Bhandarkar...1913.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிந்தகாட்சி ஐவகைப்படும்.

1) தரிசனம் – மறைக்கப்பட்டுள்ள நுண்பொருளை அறிதல்.

2) சிரவணம் – அனைத்து ஒலிகளைக் கேட்கும் அதீத சக்தி.

3) மனனம் – அனைத்துப் பொருள் களையும் அறியும் அதீத சக்தி.

4) விஞ்ஞானம் – அனைத்து அறிவியல் உண்மைகளையும் அறியும் அதீத சக்தி.

5) சர்வ ஞானத்வம் – அனைத்துக் கொள்கைகளையும் அறியும் அதீத சக்தி.

தெளிந்த செயல் மூவகைப்படும்.

1) மனோஜவித்வம் – எதனையும் உடனே செய்யும் சக்தி.

2) காமரூபித்வம் – முயற்சியில்லாமல் அநாயசமாக வேறு உருவம், உடம்பு, புலன்களைப் பெறும் சக்தி.

3) விகரநதர்மித்வம் – ஐம்புலன்கள் செயலற்ற நிலையிலும் செயல்படும் சக்தி.

துன்பம் நீங்கியவுடன் வீடுபேறும், அதீத சக்திகளைப் பெறுதலும் பாசுபத சைவம் கொண்டு செலுத்தும் முடிநிலை ஆகும். பாசுபதத்துறவிகள் பிராமணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மொகஞ்சோதாரோவில் கிடைத்த இலச்சினைகளில் பசுபதி நிலையும் யோக முத்திரையும் காணப்படுவதனை ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும்.

பாசுபத சூத்திரம் : பாசுபத சைவத்தினைப் பற்றிக் கூறும் நூல் ''பாசுபத சூத்திரம்'' ஆகும். சிவபெருமான் நகுலிசனாக அவதரித்துப் பாசுபத சூத்திரத்தை அருளியதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கு கௌண்டியன் என்பவர் விரிவான உரை எழுதியுள்ளார். இவரது காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டிற்குள் இருக்கலாம்.

''ஞானத்தினாலோ, வைராக்கியத்தினாலோ, மேன்மையான பண்புகளினாலோ துன்பத்திலிருந்து விடுதலை பெற முடியாது. இறைவனது அருளினாலே துன்ப விடுதலை கிட்டும்''.

''அவதூறுகளையும் வசவுகளையும் தாங்கிக் கொள்வதே துறவுநிலை ஆகும்''. ''வீடுபேற்று நிலையில் ஆன்மா சிவனோடு ஒன்றுதல் இல்லை. சிவபெருமானுக்கு அருகிலே ஆன்மா பிரியாது இருக்கும்''. என்கிறார் கௌண்டியனர்.

கணகாரிகை : ஹரதத்தர் எழுதிய கணகாரிகை மற்றுமொரு பாசுபத இலக்கியம் ஆகும். ஹரதத்தரின் காலம் தெரியவில்லை. இதற்கு பாசர்வஞ்ஞானர் என்பவர் ''ரத்னதீகா'' என்ற உரை எழுதியுள்ளார். இவரது காலம் கி.பி. பத்தாம் நூற்றண்டின் பிற்பகுதி ஆகும்.

குணரத்னாவின் கருத்து : ஹரிபத்ரரின் ''சத்தரிசன சாமுச்சியம்'' என்ற நூலுக்கு குணரத்னம் என்பவர் எழுதிய உரையில் நையாயிகர் பற்றி மிக விரிவாக எழுதியுள்ளார். ''நையாயிகர் மேனி முழுதும் திருநீறு பூசுபவர்கள். இவர்கள் மூலமந்திரம் ''ஓம் நமசிவாய'' ஆகும். இவர்கள் சிவபெருமானை வழிபடுபவர்கள் ஆவர். சிவபெருமான் நகுலிசர் உட்பட 18 அவதாரங்கள் எடுத்துள்ளார் என்கிறார் குணரத்னம். சடாமுடியும், பிறையும் கொண்ட திருமேனி உடைய சிவபெருமானின் புராணக்கூறுகளை இவர்கள் ஏற்பது இல்லை. அவர் மேலும் கூறுவதாவது; இவ்வுலக வாழ்க்கை இன்பத்திற்கே அத்திருக்கோலம் அமையும். அனைத்திலும் விடுபட்டவர்கள் கோலம், உருவம் ஏதுமில்லாத சிவபெருமானையே வழிபடுவார்கள். யார், யார் எந்த எந்த நிலையில் சிவபெருமானை வழிபடுகின்றார்களோ அவரவர்கள் அந்தந்த நிலைக்கு ஏற்ற உலக, பேரின்ப நிலைகளை அடைவார்கள்'' வைசேடிகர்களும் நையாயிகர்களின் தத்துவக் கருத்தைக் கொண்டிருப்பதால் வைசேடிகர்களும் நையாயிகர்களைப் போலவே தோற்றப் பொலிவை கொண்டி

1) "A History of Indian Philosophy" - Vol V. - Surendranath Das Gupta ...1922

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ருந்தனர் என்று குணரத்னா கூறுகிறார். சைவர்கள், பாசுபதர்கள், மகாவிரததார்கள், காளாமுகர்கள் என்று நான்கு வகை சைவர்களைப்பற்றி அவர் குறிப்பிடுகிறார். இவர்கள் அல்லாமல் பரதன் என்ற பிரிவினர் சாதிப்பிரிவுகளை ஏற்கவில்லை. சிவனிடம் பக்தி பூண்டவர்கள் பரதன் எனப்பட்டனர்.

நையாயிகர்கள் – சைவர் : வைசேடிகர் – பாசுபதர் : 14-ஆம் நூற்றாண்டின் நடுவில் வாழ்ந்த ஜைன ஆசிரியர் ராஜசேகரன் தனது சத் தரிசன சாமுச்சயம் என்ற நூலில் சைவர்கள் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் குணரத்னாவின் கருத்துக்களுடன் ஒத்துப் போகின்றன. ராஜசேகரன் சைவ தத்துவத்தை யோக மதம் என்கிறார். நையாயிகர்களைச் சைவர்கள் என்றும், வைசேடிகர்களைப் பாசுபதர்கள் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். "நையாய சூத்ரம்" எழுதிய அக்ஷபாதர் நையாயிகப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் கூறுகின்றார். [1]

(6)
இந்தியத்தத்துவம் - ஆறுதரிசனங்கள்

நையாயம்
(கி.மு. 4-ஆம் நூற்றாண்டு)

இந்தியத் தத்துவம் ஆத்திகம், நாத்திகம் என இருவகைப்படும். நையாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் ஆத்திகத்தின் பாற்படும், சார்வாகம், பௌத்தம், சமணம் நாத்திகத்தின் பாற்படும், முன்னவை வேதத்தை ஏற்பன. பின்னவை மறுப்பன.

நையாயிகர்கள் சிவபெருமானை வழிபடுபவர்கள். எனவே நையாயிகர் சைவர் எனப்படுவர். நியாய சூத்ரம், வாத்ஸ்யாயன பாஷ்யம், உத்யோத்கரரின் வார்த்திகம், வாசஸ்பதி மிஸ்ராவின் தாத்பர்ய திகா, உதயணரின் தாத்பர்ய பரிசுத்தி, பாஸர்வ ஞானாவின் நியாயசாரம், அதன் உரையான நியாய பூஷணம், ஜெயந்தரின் நியாய கலிகா, உதயணரின் நியாய குசுமாஞ்சலி ஆகியன நையாயப் பிரிவின் முக்கிய படைப்புகள் ஆகும்.

நையாயம் என்பது காரண, காரியத் தோடு உள்ளதை உள்ளவாறு விளக்கும். (Logical realism) முறை ஆகும். இதனைத் தருக்கம் என்றும் கூறுவர்.

கௌதமரின் நியாய சூத்ரம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் எழுந்தது ஆகும்.

நையாய நெறியின்படி அறிதல் காட்சி, அனுமானம், உவமை அல்லது ஒப்பிடுதல், ஆன்றோர் உரை (சப்தம்) என நான்கு வகைகளில் நிகழும். இந்த அடிப்படையில் கடவுளின் இருப்பைக் கூட நையாயம் தருக்க ரீதியில் நிரூபிக்கிறது. இதுபோல காரண காரியத்தோடு கடவுளை நிரூபித்தல் இந்தியத் தத்துவத்தில் வேறு எதுவுமில்லை என்பார் சுரேந்திரநாத் தாஸ்குப்தா.

வைசேடிகம்
(கி.மு. 4-ஆம் நூற்றாண்டு)

வைசேடிகர் பாசுபதர் எனப்படுபவர். கனாடரின் வைசேடிக சூத்திரம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் நியாய சூத்திரத்திற்கு முன் எழுந்தது ஆகும். வைசேடிகம் நையாயத்தையே பெரிதும் ஒத்துள்ளது.

பிரசாஸ்தபாதரின் பதார்த்த தர்ம சங்கிரகம் (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு), பதார்த்த தர்மசங்கிரகத்தின் உரைகளான வியோமசிவரின் வியோமவதி (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு), உதயணரின் கிரணாவளி (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு), சிவாதித்யரின் சப்தபதார்த்தி ஆகியன வைசேடிக நூல்கள் ஆகும்.

வைசேடிகத்தின் முக்கியக் கூறு 'பதார்த்தம்' (தொகுதி, Category) ஆம். பதார்த்தம் என்பது அறியப்படுவது (ஞேயம்); ஆதாரத்துடன் விசாரிக்கப் படுவது (பிரமேயம்); குறிக்கப்படுவது அல்லது பெயரிட்டு உணரப்படுவது (அபிதேயம்). திரவியம் (Substance), குணம், கர்மா, சாமான்யம் (Generality) விசேடம் (Particularity) சமவாயம் (Inherence) அபாவம் (non-existence) என

1) "A History of Indian Philosophy" Surendranath Dasgupta.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதார்த்தம் ஏழு வகைப்படும்.

வைசேடிகத் தத்துவப்படி உலகத்தினை அணுவாகச் சுருக்கலாம். நையாய – வைசேடிகத்தின் காரணத் தத்துவம் 'ஆரம்ப வாதம்' (doctrine of new creation) 'அசற்காரிய வாதம்' (doctrine of non-existent effect) என்றும் கூறப்படும். இதன்படி உற்பத்திக்கு முன் விளைவு இல்லை. காரணமும், விளைவும் ஒன்றுக்கொன்று வேறுபட்டது. ஒவ்வொரு உற்பத்தியும் புதியது ஆகும்.

பலவாகிய ஆன்மாக்கள் தங்கள் கரும வினைப்படி சம்சார பந்தத்தில் ஆட்படுகின்றன. நல்லொழுக்கத்தாலும், ஞானத்தாலும் ஆன்மா விடுதலை பெறுகின்றது.

சாங்கியம்
(கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முன்)

நையாய – வைசேடிகம் ''பொருள்கள் (பதார்த்தம்) பல: ஆன்மாக்கள் பல'' என்கிறது. சாங்கியம் ''பொருள் ஒன்று; ஆன்மாக்கள் பல'' என்கிறது.

சாங்கியத்தை நிறுவியவர் கபிலர் ஆவார் இவர் எழுதியது சாங்கிய சூத்ரம் ஆகும். சாங்கியத்தின் ஆரம்பகால நூல் ஈசுவர கிருஷ்ணரின் 'சாங்கிய காரிகை (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு) ஆகும். சாங்கிய சூத்திரத்திற்கு விஞ்ஞான பிக்கு எழுதிய உரை 'சாங்கிய பிரவசன பாடியம்' (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு) ஆகும்.

சாங்கியத்தின் மையக்கருத்து வருமாறு : புருடனும் பிரகிருதியும் (Spirit and matter) ஆகிய இரு அடிப்படைப் பொருள்களும் இணைந்ததே உண்மைப் பொருள் ஆகும். புருடன் என்பது தூய உணர்வுநிலை (Pure consciousness); மாற்றம் இல்லாதது; பன்முகப்பட்டது. பிரகிருதி என்பது படைப்புக்கு முற்பட்ட, இயக்கமற்ற ஒரே பொருள் ஆகும். புருடனும் பிரகிருதியும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தாலும், இவ்விரண்டும் இணைந்து செயல்படுகையில் உலகமாகப் பரிணமிக்கிறது.

பிரகிருதியிலிருந்துதான் பிரபஞ்சம் தோன்றுகிறது. சத்துவம், ராஜஸம், தாமசம் என்ற முக்குணங்கள் சமநிலையில் இருக்கும் நிலையே பிரகிருதி ஆகும். இங்கு குணம் என்பது பண்பினைக் குறிக்கவில்லை. முழுப் பொருளின் ஒரு பகுதி (Constituent) என்று பொருள்படும். ஒளியுடையதும், நுண்ணியதுமான பொருள்கள் சத்துவம் ஆகும். முரடானதும், கனமானதும் தாமசம் ஆகும். செயல்பாடு ராஜஸம் ஆகும். இம்மூன்றும் சம நிலையில் இருக்கும் பொழுது படைப்பு நிகழ்வது (Creation) இல்லை. இந்தச் சமநிலை சற்று மாறும்பொழுது படைப்பு, மாற்றம் எல்லாம் நிகழ்கிறது.

சமநிலை மாறும்பொழுது, முதலில் சத்துவகுணம் மீதூர்ந்து நிற்கிறது. அப்பொழுது தோன்றுவது 'மகத்' எனப்படும். இதுவே உலகத்தின் விதை எனப்படும். பருத்தன்மையில் இது புத்தி எனப்படும். மகத்திலிருந்து ''அகங்காரம்'' வெளிப்படும். இதுவே தன்முனைப்பு ஆகும். இது தாமச குணம் ஆகும். இரண்டிற்கும் இயக்கம் கொடுப்பது ராஜஸ குணம் ஆகும். இதிலிருந்து மனோரீதியாக வெளிப்படுவன மனம், தொடுகை, சுவை, காட்சி முகர்தல், கேட்டல் என்ற ஞானேந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) சொல்லுதல், செல்லுதல், இடுதல், கழித்தல், மகிழ்வுறுதல் (சொல், கால், கை, எருவாய், கருவாய்) என்ற கன்மேந்திரியங்கள் ஆகியன. பருநிலையில் வெளிப்படுவது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய பூதநுட்பங்கள் ஆகிய தன்மாத்திரைகள் ஆகும். இந்தப்பூத நுட்பங்களாகிய தன் மாத்திரைகளிலிருந்து ஐம்பெரும் பூதங்களாகிய விண், வளி, தீ, நீர், மண் தோன்றும்.

பிரகிருதியின் இந்தப் பரிணாம வளர்ச்சி புருடன் இவ்வுலக இன்பத்தைத் துய்த்துக் (தன் வினையினை அறுத்து) கட்டிலிருந்து விடுபடுவதற்கேயாம்.

சாங்கியத்தின் காரண தத்துவம் நையாய – வைசேடிகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது ஆகும். சாங்கியம் உணர்த்துவது சற்காரியவாதமும் (doctrine of existent effect) பரிணாம வாதமும் (doctrine of transformation) ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாங்கியம் : விளக்கப்படம்



யோகம்
கி.பி. 5-ஆம் நூற்றண்டு

யோகம் சாங்கியத்தத்துவத்தை அப்படியே ஏற்கிறது. புருடனைப் பிரகிருதியிலிருந்து விடுவித்தலே மனிதனின் இலட்சியம் என்கிறது யோகம். இதற்கு மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். மனதைக் கட்டுப்படுத்த எட்டு வழிமுறைகள் கூறப்படுகின்றன. (1) இயமம் (பிறரைத் துன்புறுத்தாமை, உண்மை பேசுதல், திருடாமை, பிருமசரியம், உடைமையை வெறுத்தல்) (2) நியமம் (தூய்மை, மனநிறைவு, எளிமை, படிப்பு, இறைபக்தி) (3) ஆசனம், (4) பிராணாயாமம், (5) பிரத்தியாகாரம் (பொருள் மேல் உள்ள ஆசையிலிருந்து விலகுதல்) (6) தாரணை (மனதை நிலை நிறுத்தல்) (7) தியானம் (8) சமாதி.

யோகம் பற்றி உபநிடதங்கள், பகவத் கீதை ஆகியன எடுத்துரைக்கின்றன. யோகத்தின் அடிப்படை நூல் பதஞ்சலியின் 'யோகசூத்திரம்' (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) ஆகும். இதற்கு வியாசரும் (கி.பி. 500), போஜ அரசரும் (கி.பி. 1000) உரை எழுதியுள்ளார்.

பூர்வ மீமாம்சை
(கி.மு. 400)

இதுவரை கூறப்பட்டுள்ள நான்கு தத்துவங்களுக்கும் வேதத்திற்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது. ஆறு தரிசனங்களில் பூர்வ மீமாம்சையும், உத்தர மீமாம்சையும் மட்டுமே வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை. பூர்வ மீமாம்சை வேதத்தின் முக்கிய பகுதியான பிராமணத்தை வலியுறுத்துவது. உத்தர மீமாம்சை உபநிடதங்களை வலியுறுத்துவது. இது வேதாந்தம் எனப்படும்.

ஜைமினியின் மீமாம்ச சூத்திரமே (கி.மு. 400) இத்தத்துவத்தின் முதல் நூல் ஆகும். இதற்குச் சபரஸவாமின் (கி.பி. 200) உரை எழுதியுள்ளார். இந்த உரையினைப் பிரபாகரும் (கி.பி. 650) குமாரில பட்டரும் (கி.பி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

700) விளக்கியுள்ளார்கள். அவர்கள் இருவர் பெயரிலும் இருபிரிவாக மீமாம்சை பேசப்படுகின்றது. இவ்விரு பிரிவுகளிலும் பலநூல்கள் வெளிவந்துள்ளன.

வேதத்தை முதன்மைப்படுத்துவதே மீமாம்சை ஆகும். வேதம் நித்யமானது. வேதம் தருமத்தை வலியுறுத்துவது. வேதம் பிறப்பிக்கும் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். அக்கட்டளைகள் வருமாறு : (1) நித்ய கருமங்கள் (உ.ம்) காலை வழிபாடு செய் (2). நைமித்திக கருமங்கள் (உ.ம்) கிரகண காலங்களில் செய்ய வேண்டுவன. (3) காமிய கருமங்கள் – ஒரு காரியத்தை விரும்பிச் செய்யவேண்டிய சடங்குகள். (உ.ம்) சுவர்க்க இன்பத்தை அனுபவிக்க ஜ்யோதிஷ்டோமம் செய்தல்.

வேதத்தை முதன்மைப்படுத்தும் நிலையில் மீமாம்சை கடவுளையே புறக் கணிக்கிறது. இந்திரனை நோக்கி ஒருவன் யாகம் செய்கையில், யாகம் செய்பவன் இந்திரன் என்று ஒரு கடவுள் இருக்கின் றாரா என்று கூடப் பொருட்படுத்த வேண் டியதில்லை.

வேதாந்தம்
(கி.மு. 400)

இந்தியத் தத்துவத்தில் ஆறாவது தரிசனமாக வருவது வேதாந்தம் ஆகும். வேதம் + அந்தம் = வேதத்தின் முடிவு; வேதத்தின் நோக்கம் எனப்பொருள்படும், வேதத்தின் முடிந்த முடிபு உபநிடதங்கள் ஆகும். மீமாம்சமும், வேதாந்தமும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டா லும் மீமாம்சம் சடங்கை வலியுறுத்துவது. வேதாந்தம் ஞானத்தை முன்னிறுத்துவது.

உபநிடதங்கள் முறைப்படுத்தப்பட்ட நூல்கள் அல்ல. பாதராயணர் என்பவர் வேதாந்த சூத்திரம் (கி.மு. 400) என்ற நூலில் உபநிடதங்களை முறைப்படுத்தி யுள்ளார். இதுவே 'பிரும சூத்திரம்' எனப்படும். முதற்பகுதி – பிருமமே முடிந்த முடிபான உள்பொருள்; இரண்டாம் பகுதி – வேதாந்த நெறியற்றவற்றை மறுத்தல். மூன்றாம் பகுதி – பிருமத்தை அடைய வழிமுறைகள். நான்காம் பகுதி – பிரும ஞானத்தின் பலன்.

வேதாந்த சூத்ரம் சூத்ரவடிவில் இருப்ப தால் அதனை விளக்க பல உரைகள் எழுந்தன. இதனால் ஒன்றுக்கொன்று வேறு பட்ட அத்வைதம், துவைதம், விசிஷ்டாத் வைதம் ஆகியன எழுந்தன.

அத்வைதம்
(கி.பி. 788-820)

ஆன்மாவும், பிருமமும் ஒன்றே என்பது அத்வைதம் ஆகும். அத்வைதத்தின் முழுத் தத்துவத்தையும் பின்வரும் சூத்திரத்தில் சங்கரர் பிழிந்து கொடுத்துள்ளார். ''பிருமம் ஒன்றே உள்பொருள்; உலகத்தோற்றம் வெறும் மாயை ஆகும்; ஆன்மாவே பிருமம் ஆகும்''. பிருமத்தின் இரண்டற்ற நிலை; உலகம் உள்பொருள் அன்று; ஆன் மாவும் பிருமமும் வேறல்ல; என்பதே அத்வைதத்தின் முடிபு ஆகும்.

அத்வைதத்தை நிறுவியவர் சங்கரர் (கி.பி. 788-820) ஆவார்.

விசிஷ்டாத்வைதம்
(கி.பி. 1017-1137)

''பிருமம் நிர்க்குணமா? (குணங்கள் அற்றதா) அல்லது சகுணமா? (குணங்களு டன் கூடியதா?)'' என்பதே சங்கரர்க்குப்பின் வந்த வேதாந்திகளின் வாதமாக இருந்தது. ''பிருமம் சகுணமே'' என்பது இராமானுஜ ரின் (கி.பி. 1017-1137) விசிஷ்டாத்வைதம் ஆகும். உள்பொருள் பண்புகளைப் பெற்றி ருப்பதால் ''விசிஷ்டம்'' எனப்படும். விசிஷ்டாத்வைதம் கடவுள் (ஈஸ்வரன்), ஆன்மா (சித்), பொருள் (அசித்) என்ற முப்பொருள் உண்மையைக் கூறுகிறது. கடவுள் மட்டுமே சுதந்தரமானவர். ஏனைய இரண்டும் கடவுளோடு தொடர்புடையன. கடவுளுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பு உயிர்க்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பு போன்றது ஆகும். கடவுள் ஆன்மாக்களின் – இயற்கையின் ஆன்மா ஆவார்.

வேதாந்த சூத்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய சூத்திரம் 'ஸ்ரீபாஷ்யம்' ஆகும். இராமானுஜருக்கும் சிறிது காலம் முன்பே நாதமுனிகளும் (பத்தாம் நூற்றாண்டு),

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆளவந்தாரும் விசிஷ்டாத்வைதத்தை நெறிப்படுத்தியுள்ளனர். விசிஷ்டாத்வைதம் விஷ்ணுவைப் பரம்பொருளாகக் கொண்டுள்ளது.

துவைதம்
(கி.பி. 1199 - 1278)

மத்வர் (கி.பி. *1199- 1278*) வேதாந்தத்திற்குத் துவைதப் பொருள் கண்டார். துவைதத்தின் மையப்பொருள் வேறுபாடு (பேதம்) ஆகும். கடவுள் - ஆன்மா, ஆன்மா - ஆன்மா, கடவுள் - ஜடப்பொருள், ஆன்மா - ஜடப்பொருள், ஜடப்பொருள் - மற்றுமொரு ஜடப்பொருள் : அனைத்தும் வேறுபாடு கொண்டவை.

ஹரி பரம்பொருள்; உலகம் உள்பொருள்; வேறுபாடு உண்மை; உயிர்கள் ஹரியினைப் பற்றி இருப்பன; மோட்சம் என்பது ஆன்மா பேரின்பத்தை அனுபவித்தலே; அதற்கு வழி பக்தி; ஹரியை வேதத்தின் மூலமே அறியலாம். [1]

■■■

1) "Outlines of Hinduism" - T.M.P. Mahadevan. (இந்தியத் தத்துவம் முழுமையும் - ஆறுதரிசனங்களையும் சேர்த்து) ...1956.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி. 320 முதல் கி.பி. 740 வரை

கி.பி. 320 முதல் கி.பி. 740 வரை ''செவ்விலக்கிய காலம்'' என்பார் கே.எம். முன்ஷி. கி.பி. 300 முதல் கி.பி. 1200 வரை புராண காலம் என்பார் R.C. மஜூம்தார்.

இந்திய வரலாறு நெடுகிலும் ஆரியப் பண்பாடு ஒருபுறமும், திராவிட மற்றும் ஆரியரல்லாத பண்பாடு மறுபுறமும் தங்கள் அடிப்படை மதிப்பீடுகளை இழக்காமல் அதேசமயம் ஒருங்கிணைந்தும் வளர்ந்துள்ளன. ஆரியப்பண்பாடு சக்தியும் இணைப்பும் தந்தது. திராவிடப் பண்பாடு வீர்யமும், பன்முகமும் வழங்கியது. வேதப்பாரம்பரியம் நிகாமம் எனப்படும். இது சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேத ஹோமங்களை வலி யுறுத்துவது ஆகும். இங்கு விஷ்ணு தெய்வம் ஆகிறார். திராவிட பாரம்பரியம் ஆகமம் எனப்படும். ஆகமம் வலியுறுத்து வது பூஜை முறைகளையே. இங்குச் சிவபெருமான் வழிபடு கடவுள் ஆகிறார்.

வேதக் கடவுளரும், பலிகொடுத்து வழிபடுதலும் பின்னணிக்குத் தள்ளப் பட்டன. வேதக் கடவுளரில் ஒரு சில கடவுளரையே சில வைதீகர்கள் மட்டும் வழிபடலாயினர். பெரும்பான்மை மக்கள் மத்தியில் அக்கடவுளரின் செல்வாக்கு அற்றுப் போயிற்று. சமய இலக்கியங்கள் தத்துவ நிலையிலிருந்து பருமைநிலையை நோக்கிச் செல்ல ஆரம்பித்து விட்டன. சிவபெருமான், விஷ்ணு மற்றும் ஏனைய கடவுளரின் சிலை உருவங்களும், பிருமாண்டமான கோயில்களும் தெளிவாக விளங்காத வேதக்கடவுளரின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. கட்டுப்பாடுகள் கொண்ட எளிமையான பௌத்த, சமண சமயங்களிலும் புத்தர், மகாவீரரின் சிலைவழி பாடுகள் இடம்பெற்றன. இந்தப் பின்னணியில் குப்தரின் பொற்காலம் மலர்கிறது.

இக்காலகட்டத்தில் இணைக்கும் மகாசக்தியாக தருமசாத்திரங்களே விளங்கு கின்றன. இவற்றுள் மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்று மனு ஸ்மிருதி ஆகும். இதே கால கட்டத்தில் வேத சம்கிதைகள். பிராமணங்களின் செல்வாக்கைப் புராணங் கள் பெற்றன. பழைய புராணங்கள் மீண் டும் உருவாகியும் பல புதிய புராணங்கள் தோன்றியும் மக்களிடையே வேகமாகப் பரவின.

சைவ சமயம் மிகவும் சக்தி வாய்ந்த இணைக்கும் இயக்கமாக மாறியது. பௌத்த, சமண சமயங்களை எதிர்க்கும் சக்தியாக இயங்கியது. குப்த பேரரசர்கள் விஷ்ணுவை வழிபட்டாலும், சிவ வழிபாடு மக்கள் மத்தியில் மேலோங்கி நின்றது.[1]

(7)

சைவ புராணங்கள் (கி.மு. 300 முதல் கி.பி. 700)

வடமொழி இலக்கியம் – உச்சநிலை : இந்தக் கால கட்டத்தில்தான் வட நாட்டில் புராணங்கள் முழு வளர்ச்சி அடைந்தன. இராமாயண, பாரத இதிகாசங்களும் மாற்றங்கள் பல பெற்று இன்றைய வடிவத்தினை அடைந்தன. இலக்கியம், நாடகம், வானநூல், இலக்கணம், தத்துவம் எனும் பல துறைகளிலும் வடமொழி சிறந்து விளங்கியது. காளிதாசர், பவபூதி போன்ற காவிய நாடக ஆசிரியர்கள், குமாரிலர், பிரபாகரன் போன்ற தத்துவ ஆசிரியர்கள், ஆரியபட்டர், வராகமிகிரர் போன்ற வானநூலார்களும் வடமொழி இலக்கியத்தை வளப்படுத்தினர்.

புராணங்கள் உள்ளடக்கம் : புராணங்கள் என்றால் பழைமையானவை என்ற பொருளாகும். (1) சர்கா (பிரபஞ்ச உற்பத்தி) (2) பிரதிசர்கா (பேரழி விற்குப்பின் மறு உற்பத்தி) (3) வம்சா

1) "The History and Culture of Indian people - Part III", Bhavan's and "Ancient India" by R.C. Majumdar 1952

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(தெய்வங்கள், சூரியன், சந்திரன் பரம்பரையினர் வரலாறு) (4) மன்வந்த்ரா (மனுவை முதன்மையாக வைத்து ஊழிக்காலம்) (5) வம்ஸானுசரிதா (சூரிய, சந்திரகுல மரபினரின் வரலாறு) எனப் புராணங்கள் ஐந்து பகுதிகளைக் கொண்டவை ஆகும்.

பதினெட்டு புராணங்கள் : புராணங்கள் பதினெட்டு ஆகும். விஷ்ணு, நாரத, பாகவத, கருட, பத்ம, வராக புராணங்கள் ஆறும் வைணவ சாத்துவிக புராணங்கள் ஆகும். இவை முக்தி அளிக்கும். பிரமானந்த, பிரமவைவர்த்த, மார்க்கண்டேய, பவிஷ்ய, வாமன, பிரம புராணங்கள் பிரமனை வழிபடு பொருளாகக் கொண்ட ராஜஸ புராணங்கள் ஆகும். இவற்றைப் படிப்போர் சொர்க்கமடைவர். மச்ச, கூர்ம, லிங்க, சிவ, ஸ்கந்த, அக்னி புராணங்கள் தாமச சைவ புராணங்கள் ஆகும்.

சைவ – வைணவ ஒருமைப்பாடு : பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுளரைப் பற்றியே இப்புராணங்கள் பேசுகின்றன. மூவரும் ஒரே கடவுளரின் வடிவங்கள் என்றும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்வதால் மூன்று பெயர்களால் வழங்கப் படுகின்றனர் என்றும் இவை கூறுகின்றன. சைவ, வைணவ ஒருமைப்பாட்டிற்கு இப் புராணங்கள் பெரிதும் உதவியுள்ளன.

பிராமணீயம் : எல்லா புராணங்களிலும் முடிவுரையில் இந்தப் புராணத்தைப் படித்தால் இன்ன பலன் ஏற்படும் என்று காணப்படுகிறது. எல்லாவற்றிலும் வருணாசிரமத்திற்குத் தனிசிறப்பு கொடுக்கப் பட்டுள்ளது. நூற்றுக்கு தொண்ணூற்று எட்டுக் கதைகள் பிராமணர் பற்றியே இருக்கின்றன. பிராமணீயம், செல்வாக்கு பெற்ற காலத்தில் இவை புகுத்தப் பட்டிருக்க வேண்டும்.

வேதமரபினை இணைக்கும் முயற்சி : வைணவத்தையும், சைவத்தையும் வேத மரபு, சடங்குகள், நம்பிக்கைகளோடு இணைக்க ஏற்பட்ட முயற்சியின் விளைவாகப் புராணங்கள் எழுந்தன. இரண்டினையும் இணைக்கும் முயற்சியினால் ஸ்மார்த்தசைவர், ஸ்மார்த்த வைணவர் என்ற புது மரபினர் தோன்றினர்.

புராணங்களின் காலம் : கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து, கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்குள் இப்புராணங்கள் எழுந்தன. இந்து சமயத்திற்கு மறுமலர்ச்சி ஏற்பட, குப்தர்கள் புராணக் கதைகளுக்கு வடிவு கொடுத்தனர் என்பார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார்.

இனி சைவ புராணங்கள் ஆறினை மட்டும் பார்ப்போம்.

அக்னி புராணம் : இதில் யாகம், அக்னியின் பெருமை, விஷ்ணு அவதாரங்கள், சிவபெருமானை நோக்கி செய்யும் ஞான பூஜை, பிரபஞ்ச லட்சணம், தர்ம சாஸ்திரம், அரசியல், பொருளாதாரம், வானியல், சாமுத்திரிகா லட்சணம், ராஜநீதி, ஆயுர்வேதம், வாஸ்து வித்யா, தாந்திரிக வித்தைகள், மந்திர சாஸ்திரங்கள், தனுர்வேதம், நாட்டிய சாஸ்திரம், காவிய சாஸ்திரம், புராண சாஸ்திரம் முதலானவை பேசப்பட்டுள்ளன.

இலிங்க புராணம் : இலிங்கம் என்பது ஒரு குறீயீடு ஆகும். பிரபஞ்ச தோற்றத்திற்கு ஒரு விதை ஆகும். பரபிரம்மம் அலிங்கம் என்று சொல்லப் படும்; நாம, ரூபம் கடந்த பொருளாகும்; நிர்க்குணமான தாகும். முக்குணங்களின் வடிவமாகிய பிரகிருதியுடன், நிர்க்குணப் பிரம்மம் தொடர்பு கொள்ளும்பொழுது, வடிவமற்றதாகிய இப்பிரகிருதி வடிவுடைய இப்பிரபஞ்சமாகத் தோற்றுவிக்கப் படுகிறது. இப்பிரபஞ்சத் தோற்றத்திற்கு மூலமாகிய பிரகிருதி மகாதேவனுடன் தொடர்பு கொண்டு தோற்றுவிக்கப்படுகிறது.

''பரப்பிரம்மம் நிர்க்குணமானதாய், லிங்க வடிவையும் தாண்டி இருப்பினும், அந்தப்பரப்பிரம்மமே லிங்கம், பிரகிருதி ஆகிய அனைத்திற்கும் மூலமாய் அமைந்துள்ளது. அலிங்கம் என்பது சிவனையே குறிக்கும். அந்த அலிங்கமே சிவனோடு தொடர்புடைய லிங்கமாகி, அந்த லிங்கத்தோடு தொடர்புடைய சைவம் எனப் படுகிறது'' (லிங்க புராணம் 1-3-1).

லிங்கம் என்ற சொல்லுக்குத் தன்னைத் தானே தோற்றுவித்துக் கொண்டு, தனித்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரபஞ்சத்தையும் தன்னுள் அடக்கி இருப்பது என்பது பொருளாகும். மகா தேவியே மாபெரும் பெண் தெய்வமா வாள். பிரகிருதியே பிரபஞ்சத்தின் விதை களைத் தாங்கி நிற்பவள்''. (லிங்க புராணம் 1-19-16).

இப்புராணம் சிவமூர்த்தத்தை வழிபடு வதற்குரிய வழிகளைச் சொல்கிறது. சிவனு டைய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்ற ஐந்து வடிவங்களையும் உள்ளடக்கியதாகும். பிரபஞ்சங்களின் உற்பத்தி, அழிவு, மறு உற்பத்தி ஆகிய நேரங்களில் சிவம் இந்த ஐந்து வடிவங்களில் தேவையானதை மேற் கொண்டு பிரம்மனுக்கு ஆணையிட்டுப் படைப்பைத் தொடங்குமாறு ஏவுகிறது. இப்புராணம் விஷ்ணுவைச் சிவனுக்குக் கீழ்ப் பணிபுரிபவராகக் காட்டுகிறது.

மேலும் இப்புராணத்தில் பாசுபத யோகம், திருமாலும் பிரமனும் இலிங் கத்தின் அடிமுடி தேடிய கதை, மார்க்கண் டேயர் கதையை ஒத்த சுவேதா முனிவரின் கதை, ததீசி கதை, நந்தி கதை, தட்சன் கதை, பராசர முனிவர் கதை, அந்தகன் கதை, சரபமூர்த்தி கதை, சிவனுடைய ஆயிரம் திருநாமங்கள், பார்வதி தவம், சிவ-பார்வதி திருமணம், கார்த்திகேயன் பிறப்பு, உபமன்யுவின் கதை இடம் பெற்றுள்ளன.

இப்புராணம் சிவ வழிபாட்டுக்காரர் களுக்கு ஒரு கையேடாகும்.

ஸ்கந்த புராணம் : பாடல்களின் அடிப்படையில் பார்த்தால் இப்புராணம் மிகப்பெரியதாகும். இப் புராணம் 81000 பாடல்களைக் கொண்டது ஆகும். தட்ச யாகம், கண்ணப்பர் வரலாற்றில் ஓரளவு ஒத்துப்போகும் நந்தியின் கதை, சிவபெரு மான் விடமுண்ட கதை, தாரகாசுரன் கதை, ஸ்கந்தனின் தோற்றமும், லீலைகளும், தாரகன் போர், மார்க்கண்டேயர் கதையை ஒத்த சுவேதாவின் கதை, தீர்த்த வரலாறு, அருணாசல மகிமை, காசிநகரின் வரலாறு ஆகியன பற்றி இப்புராணம் கூறுகிறது.

சிவலிங்க வரலாறு பற்றி இப்புராணம் கூறுவதாவது; சத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களையும் தன்னுள் பெற்று நிற்பவள் பிரகிருதி ஆவாள். யுக முடிவில் இந்த முக்குணங்களும், பிரகிருதியும் பர மாத்மாவில் சென்று ஒன்றித்து விடுகின் றன. அவ்வாறு ஒன்றிய நிலையில் அது லிங்க வடிவாகக் காட்சி அளிக்கிறது. முக் குணங்களும் அதனுள் அடங்கி விடுதலின், லிங்கம் நிர்க்குணமாக விளங்குகிறது.

மச்ச புராணம் : இது திருமாலின் மச்சாவதாரத்தைப்பற்றிக் கூறுகிறது. இது ஏன் சைவ புராணம் எனப்பட்டது என்று தெரியவில்லை. தாரகன் தவம், ஸ்கந்தன் பிறப்பு, கௌரி, பாற்கடல் கடைதல் பற்றி சில செய்திகள் வருவதால் இருக்கலாம். இப்புராணம் 1400 பாடல்களைக் கொண்டது.

கூர்ம புராணம் : இப்புராணம் 6000 பாடல்களைக் கொண்டது ஆகும். இது திருமாலின் கூர்மாவதாரத்தைப் பற்றிக் கூறினாலும் பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய முப் பெருங்கடவுளருக்கும் பேதம் காண்பது இல்லை. மும்மூர்த்திகளும் பிரமத்தின் (பரம்பொருள்) மூன்று வடிவங்களே என்கிறது. சிவபெருமானே கடவுளரில் தலைமையானவர் என்கிறது.

சிவபுராணம் [வாயு புராணம்] : இதில் 24000 பாடல்கள் உள்ளன. திருமால் பிரமன் அடிமுடி தேடியது, தக்கன் வேள்வி, தாரகாசுரன் கதை, சிவ-பார்வதி திருமணம், திரிபுரம் எரித்தல், கணேசர் தோற்றம், பனிரெண்டு ஜோதிர்லிங்கங்களின் கதைகள், விஷ்ணு சிவனைத் தன் கண் மலரால் அருச்சித்தல், சிவராத்திரி விரத கதை, சந்திரசேகரன் வரலாறு, சிவன் விபூதி அணிந்த கதை, கௌரியின் கதை, உபமன்யுவின் கதை, அந்தகாசுரன் கதை, குருவின் கதை, என்று சிவகதைக் களஞ்சியமாக இப்புராணம் திகழ்கிறது.

சைவம் அல்லாத புராணங்கள் : சைவ புராணங்கள் அல்லாத பிரம்ம புராணம் மார்க்கண்டேயர் வரலாறு, ததீசியின் கதை, நாகேஸ்வரனின் கதை, சிவன் பிரம கபாலம் ஏந்தியது, கண்ணப்பர் கதையைப் போன்ற பில்லாவின் கதை ஆகிய சிவ கதைகளையும், பவிஷ்ய புராணம் தன்னுள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடங்கிய ஐந்து சருக்கங்களில் ஒரு சருக்கம் சைவம் பற்றியும், வாமன புராணம் தட்சயக்ஞும், பார்வதியின் தோற்றம், பார்வதியின் தவம், கணேசர் தோற்றம், கார்த்திகேயன் கதை, சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்புகள் பற்றிய கதை ஆகிய கதைகளையும் கூறுகின்றன.

இப்பதினெட்டு புராணங்களில் பல பாடல்கள் மறைந்து விட்டன; பல பாடல் கள் செருகப்பட்டுள்ளன. இவற்றின் ஆதி வடிவம் மட்டும் இன்று இல்லை எனச் சொல்லலாம்.[1]

சிவ புராணம் – வாயவீயசம்கிதை : இத்தருணத்தில் சிவபுராணத்தில் வரும் தத்துவக் கருத்துக்கள் பற்றி சிந்தித்தல் நல்லது. ஏழு பகுதிகளைக் கொண்ட சிவ புராணத்தில் கடைசிப் பகுதி வாயவீய சம்ஹிதை ஆகும். இது இரு பிரிவுகளைக் கொண்டது ஆகும். இப்பகுதி பாசுபத சைவத்தினை விளக்குவதாகும். அவை சைவசித்தாந்த கருத்துக்கள் (மெய்கண்டார்) பலவற்றுள் ஒத்து இருக்கின்றன. அவை வருமாறு :

பிரகிருதியே முதற் காரணம். சிவ பெருமான் நிமித்த காரணனே. பரம சிவனிடம் சிவமும் சக்தியும் இணைந்தே உள்ளன. சிவமும் சக்தியும் இணைந்து இருத்தல் பராசக்தி ஆகும். பராசக்தியி லிருந்து சிற்சக்தி, சிற்சக்தியிலிருந்து இச்சா சக்தி – ஞானசக்தி – கிரியாசக்தி விளை கிறது. இது சிவ தத்துவம் ஆகும். இவ்வாறு சைவ சித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்களும் இதில் கூறப்படுகின்றன.

வீடு பேற்றின் நான்கு படி நிலைகளான சாரூபம், சாலோகம், சான்னித்யம், சாயுச் சியம்; சிவபெருமானின் பரத்துவம்; குரு உபதேசத்தின் இன்றியமையாமை; பசு, பதி, பாசம் என்ற முப்பொருள் உண்மை; இறைவனை அடைவதற்கான வழிமுறை களான சரியை, கிரியை, யோகம், ஞானம், இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்தி யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று யோகத்தின் எட்டு நிலைகள்; பக்தி மார்க்கம்; ஆகியன பற்றி இப்புராணம் விரிவாகப் பேசுகிறது.[2] (சிவபுராணத்தை இன்னும் ஆய்வு செய்தல் வேண்டும்)

(8)

காளிதாசனின் குமாரசம்பவம் (கி.மு. 100 - கி.பி. 450)

காளிதாசன் : உலகளாவிய புகழ்பெற்ற காளிதாசன் சாகுந்தலம் முதலான ஒப்புயர் வற்ற நாடகங்களையும், குமார சம்பவம், இரகுவம்சம், மேகதூதம் முதலான இணையற்ற காவியங்களையும் படைத் தான். பிறப்பால் சைவனான காளிதாசனின் காலம் தெரியவில்லை. கி.மு. 100-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 450-ஆம் ஆண்டுக் குள் அடக்குவர்.

குமாரசம்பவம் : குமாரசம்பவம் 18 காண்டங்களைக் கொண்டது ஆகும், எட்டு காண்டங்கள் மட்டுமே காளிதாசன் பாடியதாகச் சொல்லுவர். பார்வதியைப் பற்றி மிகவும் சிருங்கார ரசமாகப் பாடியதால் சபிக்கப்பட்டதாகக் கதை ஒன்று சொல்லுவர். கதை எந்த அளவு உண்மையோ தெரியாது. ஆனால் காளி தாசன் அளவு இன்பச் சுவை ததும்பப் பார்வதியை யாரும் வருணித்ததில்லை. சிவபெருமான் பார்வதியை மணத்தலும், காமனை எரித்தலும், முருகன் பிறப்புமாக இக்காவியம் செல்கிறது.

கிராதார்ஜுனியம் : கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரவி என்ற மாகவிஞன் கிராதார்ஜுனியம் என்ற காவியத்தைப் படைத்தான். இக்காவியம்

1) "The History and culture of Indian People - Part III - Bhavan's" "An Introduction to puranas - Nag sharan singh - 1985; மற்றும் அ.ச. ஞானசம்பந்தனின் ''பதினெண்புராணங்கள்'' - இருதொகுதிகள். ......1996.

2) "A History of Indian philosophy" - Vol. V Surendrnath Dasgupta - 1922

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வடமொழியில் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 18 காண்டங்களைக் கொண்டது. கிராத வேடம் பூண்ட சிவபெருமானை அருச்சுனன் எதிர்கொள்ளும் மகாபாரதப் பகுதியை விரித்துக் கூறுகிறது இக்காவியம்.[1]

கி.பி. 750 முதல் கி.பி. 1000 வரை

(9)

வடமொழி இலக்கியம்

இந்தக்கால கட்டத்தில் வடமொழியில் நாடகங்களும் காவியங்களும் வெளி வந்துள்ளன.

''ஹரவிஜயம்'' : ''ஹரவிஜயம்'' என்ற காவியம் ராஜநாக இரத்னாகரரால் ஐம்பது காண்டங்களால் பாடப்பட்டது. சிவபெருமான் அந்தகாசுரனை வதம் செய்த வரலாற்றைக் கூறுவதாகும்.

''தோத்திரவளி'' : தோத்திர நூல்கள் மிகுதியாக வெளி வந்தமை இக்காலத்திலேயே ஆகும். பத்தாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வெளிவந்த உத்பல தேவரின் ''தோத்திரவளி'' சிவபெருமானைப் பற்றிய இருபது தோத்திரங்களைக் கொண்டது ஆகும்.

கவிதைக் கலையின் பொற்காலம் : பல கவிஞர்கள் பாடிய கவிதைகளின் தொகுப்பு நூல்கள் முதன் முதலாகத் தோன்ற ஆரம்பித்தன. கவிதையும், உரை நடையும் கலந்த சம்பா (Champa) என்ற புதிய வடிவம் சம்ஸ்கிருத மொழியின் கொடை ஆகும். அனைத்திற்கும் மேலாக இக்காலகட்டம் சமஸ்கிருதக் கவிதைக் கலையின் (Poetics) பொற்காலம் ஆகும்.

லிங்க புராணம் : புராணங்களைப் பொருத்த வரையில், ஏற்கனவே உள்ள புராணங்களில் இணைப்புகள் சேர ஆரம்பித்து விட்டன. கி.பி. 800 முதல் கி.பி. 1000-ஆம் ஆண்டுக்குள் லிங்க புராணத்தில் லிங்கபிரதிட்டை, பாசுபத விரதம், பஞ்சாட்சர மந்திரம், தீக்கை ஆகியவை பல கவிஞர்களால் பல்வேறு காலகட்டங்களில் சேர்க்கப்பட்டன.[2]

(10)

சில சைவப்பிரிவுகள்

பிரும்ம சூத்திர உரைகளில் சைவம்; கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பிரும்ம சூத்திரத்திற்குச் சங்கரர் எழுதிய உரையில் சைவம் பற்றி வருகின்றது. 11.2.37 சூத்திர உரையில் சங்கரர் சித்தாந்தக் கோட்பாடுகள் மகேசுவரனால் (இறைவன்) எழுதப் பட்டன என்கிறார். கி.பி. 840-ஆம் ஆண்டில் சங்கரரின் உரையை விமரிசித்த வாசஸ்பதி மிஸ்ரா சைவர்கள், பாசுபதர்கள், காருணிக சித்தாந்திகள், காபாலிகர்களை உள்ளடக்கியவர்கள் மகேஸ்வரர்கள் என்கிறார். பிரும்மசூத்திரம் 11.2.37 உரை எழுதிய இராமானுஜர் காபாலிகர்களையும், காளாமுகர்களையும் வேதத்திற்குப் புறம்பான சைவப்பிரிவினர் என்று குறிப்பிடுகின்றார். பவபூதியின் (கி.பி. 700 - 800) மாலதி மாதவவில் (MALATHI - MADHAVA) காபாலிகர் பற்றிய குறிப்பு வருகின்றது.

ஆனந்தகிரியின் கூற்று : சங்கரர்க்குப் பின் வந்த ஆனந்தகிரி என்ற வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் உடம்பு முழுவதும் அடையாளம் அணிந்து இருந்த சைவப் பிரிவினரைப் பற்றிப் பேசுகின்றார். காபாலிகர்களில் பிராமணச் சார்புடைய, பிராமணச் சார்பற்ற இருவகைப் பிரிவினர்களைக் குறிப்பிடுகிறார்.

விராத்தியர்கள் : உருத்திரனை வழிபடும் விராத்தியர்கள் (VRATYAR) பற்றி அதர்வண வேதம் குறிப்பிடுகின்றது. இந்த விராத்தியர்கள் சாதி பழக்க வழக்கங்கள், நெறி

1) "The History and Culture of Indian people - Part III" Bhavan.

2) "The History and Culture of Indian People" - IV - Bhavan's.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முறைகளைப் பின்பற்றுபவர்கள் அல்லர். ஆனால் பெருமதிப்பில் வைக்கப் பட்டிருந்தனர்.

காபாலிகர்கள் : காபாலிகர்கள் மது அருந்துதல், காம இச்சையில் ஈடுபடுதல், அழுக்கு மேனியராய் இருத்தல் எனக் கொடூரமான பழக்கங்களில் இருந்தனர். உலகைத் தோற்றுவித்து, நிலைபெற வைத்து, அழிக்கும் கடவுளான பைரவரை அவர்கள் வழிபட்டார்கள். அவர்கள் கர்மா கோட்பாட்டை ஏற்கவில்லை.

மகாவிரதர்கள் : சிவமகாபுராணம் மகா விரதர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. மண்டை ஓட்டில் உணவு உண்ணுதல், பிணத்தின் சாம்பலை உடல் முழுவதும் பூசிக் கொள்ளுதல் முதலியன மகாவிரதம் ஆகும். இவர்களைக் காளாமுகர்கள் என்பார்கள். காளாமுகர்களையும் காபாலி கர்களையும் தனித்துப் பிரித்துப் பார்க்கும் தத்துவக் கோட்பாடு ஏதும் இல்லை. இந்தச் சடங்குகள் இன்று தாந்திரீக வழிபாடாக மாறிவிட்டன.

காபாலிகர்களின் தலங்கள் : ஸ்ரீ சைலம் காபாலிகர்களின் மையத் தலம் என்று பவபூதி குறிப்பிடுகின்றார். பிராமணர் அல்லாதாரும், சாதி நீக்கம் செய்யப்பட்ட வர்களும் சிவ பெருமானை மனித பலி கொடுக்கும் இடங்களில் ஒன்று ஸ்ரீ சைலம் ஆகும். சங்கரர் காலத்தில் உஜ்ஜயினி காபாலிகர்களின் மையத்தலமாக மாறி விட்டது. இன்றும் வங்காளத்தில் காபாலி கர்கள் தங்கள் தொன்மை வடிவத்தில் காணப்படுகின்றனர்.[2] 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை காபாலி கர்கள் தென்னிந்தியாவில் - மைசூர் மாகாணத்தில் - இருந்தனர் என்பார் கு. அருணாசலக்கவுண்டர்.

(11)

காஷ்மீர சைவம் - (தொன்மை – கி.பி. 800)

காஷ்மீர சைவம் : காஷ்மீர சைவம் எப்பொழுது தோன்றியது என்று குறிப்பிட முடியவில்லை. காஷ்மீர சைவ இலக் கியங்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் (கி.பி. 800) தோன்றின. கி.பி. 850-ஆம் ஆண்டில் காஷ்மீரத்தில் சோம தேவர் எனப்பட்ட சோமானந்தர் ''சிவ திருஷ்டி'' இயற்றினார். இந்நூல் காஷ்மீர சைவத்தில் பிரத்தியபிஞ்ஞான என்ற பிரிவின் தத்துவக் கருத்துக்களை கூறுவதாகும். தென்னிந்திய சைவ சமயத்திற்கும் காஷ்மீர சைவத்திற் கும் சில ஒற்றுமைக் கூறுகள் உள்ளன. காஷ்மீரிலிருந்து சில பிராமணர்கள் தென் னிந்தியா வந்ததாகக் கல்வெட்டுகள் கூறு கின்றன.

த்ரிகா (Trika) : இத்தத்துவக் கோட்பாட் டிற்குப் பல பெயர்கள் இருந்தாலும் த்ரிகா (Trika) என்றே பெரிதும் அழைக்கப் படுகிறது. (சிவன், சக்தி, அணு) அல்லது (சிவன், சக்தி, நரன்) அல்லது (பரா, அபரா, பராத்பரா என்ற பெண் தெய்வங்கள்), அல்லது (பேதம், அபேதம், பேதாபேதம்) என்ற மூன்று நிலைகள் – என முப்பொருள் கள் பற்றிப் பேசுவதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

இந்த அமைப்பு ஸ்பந்த, பிரத்திய பிஞ்ஞான என இரு பிரிவுகளைக் கொண் டது.

ஆகம சாஸ்திரம், ஸ்பந்த சாஸ்திரம், பிரத்திய பிஞ்ஞான சாஸ்திரம் ஆகியன காஷ்மீர சைவத்தை விளக்கும் நூல்கள் ஆகும்.

1) "Vaisnavism and Saivism" - R.G. Bhandarkar ...1913.

2) "Vaisnavism and Saivism" - R.G. Bhandarkar ...1913.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகம சாஸ்திரம் : மாலினி விஜய, ஸ்வச்சந்த, விஞ்ஞான பைரவ, உச்சும்ஸ பைரவ, ஆனந்த பைரவ, மிருகேந்திர, மதங்க, நேத்திர, நைஸ்வாச, ஸ்வாயம்பூவ ருத்ரயாமல ஆகியன ஆகம சாத்திரத்தில் அடங்கும். சைவ ஆகமங்கள் சிவன் துருவாசருக்குச் சொன்னதாகச் சொல்லப் படுகிறது. இவற்றில் மதங்க, நைஸ்வாச, ஸ்வாயம்பூவ ஆகமங்கள் தென்னாட்டில் எழுந்த இருபத்தெட்டு ஆகமங்களில் மூன்று ஆகமங்களை ஒத்திருப்பது உளங் கொள்ளத்தக்கது. காஷ்மீர ஆகமங்களும், தென்னாட்டு ஆகமங்களும் எந்த அளவு ஒத்து இருக்கின்றன என்று ஆராயப்பட வேண்டும்.

ஸ்பந்த சாஸ்திரம் : ஸ்பந்த சாஸ் திரத்தின் மூலவர் வசுகுப்தரும் அவரது மாணாக்கர் கல்லாடரும் ஆவர். சிவ சூத்திரமும், ஸ்பந்த காரிகையும் ஸ்பந்த சாஸ்திரத்தில் அடங்கும் முக்கிய நூல்கள் ஆகும். சிவ சூத்திரத்தைச் சிவபெருமான் வசுகுப்தருக்கு அருளியதாகச் சொல்வர். வசுகுப்தரிடம் உபதேசமாகப் பெற்று கல்லாடர் ஸ்பந்த காரிகையை எழுதினார்.

கல்லாடரின் காலம் கி.பி. 854 ஆகும். எனவே அவரது குரு வசுகுப்தரின் காலம் கி.பி. 9ஆம் நூற்றண்டின் முற்பகுதியில் இருக்கலாம்.

இம்முறையைப் பின்பற்றுவோர் ''உலகைப் படைக்க இறைவனுக்கு கர்மா போன்ற துணைக்காரணமோ, பிரதானா போன்ற மூலக் காரணமோ தேவை யில்லை'' என்கின்றனர். வேதாந்திகள் கூறுவது போல இறைவனே மூலக்காரணம் என்பதையும், உலகத் தோற்றம் மாயை என்பதையும் இவர்கள் ஏற்கவில்லை. இவர்கள் மேலும் கூறுவதாவது : ''இறை வன் சுதந்திரமானவன். அவனது இச்சை யால் அனைத்தும் தோன்றுகிறது. உலகமும் இறைவனும் வேறு போலத் தெரிந்தாலும் வேறு அல்ல. இறைவன் தன்னில் உலகம் தோன்றுவதாகக் காட்டுகிறான். கண்ணாடி யில் பிரதிபலிக்கும் பிம்பத்தால் கண்ணாடி பாதிக்கப்படாதது போல இறைவனும் தன்னில் காணப்படும் உலகத்தால் பாதிக் கப்படான்''.

''யோகி எந்த மூலக்கூறும் – தோற்று விக்கக் காரணமாக உள்ள ஒன்று – இல்லா மல் ஒரு பொருளை உருவாக்குவது போல இறைவன் உலகைப் படைக்கிறான். இறை வன் தனது அபூர்வ சக்தியினால் அனைத்து உயிர்களிலும் காட்சி தருகின்றான். இறை வனே பிறிதொரு சக்தியினால் உலக வாழ் வில் – மனித வாழ்வில் – நடக்கும் விழிப்பு – கனவு நிலைகளையும் உருவாக்கு கிறான்''. ஸ்கந்த சாஸ்திரப்படி ஆன்மாவும் இறைவனும் ஒன்றே; ஆனால் இந்த ஒருமையை ஆன்மா மலத்தினால் (குறை - அழுக்கு) உணராது.

''இந்தக்குறை – மலம் – மூன்று வகைப் படும். ஆன்மா தன்னுடையது அல்லாத உடம்பை தன்னுடையது என்று எண்ணி துன்பத்திற்கு ஆளாகிறான். இது ஆணவ மலம். ஆன்மா இந்த உடம்பில் தங்கி இருப்பது மாயேயம் என்ற மலத்தினால் ஆகும். ஆன்மா உடல் உறுப்புகளைக் கொண்டு செயல்படும் பொழுது நன்மை யோ தீமையோ விளைகிறது. இது கன்மமலம்''.

''ஆன்மா ஞானம் பெற்று ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் பொழுது இந்த மலங்கள் அகன்று போகின்றன. இந்தத் தியானம் தொடர்ந்து நிலைப்படும் பொழுது ஆன்மா விடுதலை பெற்றுப் பரம் பொருளுடன் ஐக்கியமாகிறது''.

பிரத்தியபிஞ்ஞானம் : பிரத்திய பிஞ்ஞானத்தை நிறுவியவர் சோமாநந்தர் ஆவர். இவரது காலம் கி.பி. 900 - 925-ஆம் ஆண்டுக்குள் இருக்கலாம். சோமாநந்தர் தனது கோட்பாடுகளை ''சிவதிருஷ்டி'' என்ற நூலில் வடித்துள்ளார். இவரது மாணவர் உதயாகரர் இயற்றிய சூத்திரங் களே மிக முக்கியமானவையாகும். இவரது மாணவர் அபிநவகுப்தர் (கி.பி. 993 - கி.பி. 1015) இச் சூத்திரங்களுக்கு விரிவுரைகள் எழுதியுள்ளார்.[1]

உலகப்படைப்பு, ஆன்மாவிற்கும், பரம் பொருளுக்கும் உள்ள உறவு – இவை

1) "Vaisnavism and Saivism" - R.G. Bhandarkar... 1913

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யனைத்திலும் பிரத்திய பிஞ்ஞானமும், ஸ்பந்தமும் ஒத்தே இருக்கின்றன. ஸ்பந்த வாதிகள் தியானத்தினால் அருட்காட்சி பெற்று மலம் நீங்கி தானும் இறைவனும் ஒன்று என உணர்கின்றனர். பிரத்திய பிஞ் ஞான வாதிகள் தாங்களே இறைவன் என உணர்கின்றனர். இறைவனும், நாமும் ஒன்றே என்று உணர்ந்த பிறகு விளைவது பேரின்பம் ஆகும்.[1]

காஷ்மீர சைவம் பற்றி அரவிந்த பாசு என்பார் ("The Cultural Heritage of India") என்ற நூலில் மிக விரிவாக எழுதியுள்ளார். அவர் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி வருமாறு :

சாஸ்திரம் என்பது புத்தகம் அல்ல; தனித்து விளங்கும் ஞானம் ஆகும். இதுவே சப்தம் என்றும் வாக்கு என்றும் கூறப்படும். உண்மைப் பொருளின் அதிர்வை அல்லது சிறு அசைவை சப்தம் குறிக்கும்''.

''வாக்கு (சொல்) என்பது ஒன்றனை வெளிப்படுத்துவது. உண்மைப் பொருள் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது பர வாக்கு ஆகும். உண்மைப் பொருளின் இந்த தன் வெளிப்பாடு ஞானம் – (உண்மைப் பொருள் – தன்னை அறிதல்) ஆகும். இந்த ஞானம் மனித அறிவிற்குப் பல தளங்களில் இறங்குகிறது. இன்னொரு வகையில் பார்த்தால் இந்த ஞானம் உண்மைப் பொருள் தன்சுயநிலையில் (நாம் அறிவது போல அல்ல) பிரபஞ்சமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுதல் ஆகும். இதுவே சப்தம் அனைத்தையும் உருவாக்கு கிறது அல்லது வெளிப்படுத்துகிறது என்று பொருள்படும்''.

''சப்தத்திற்கும், பொருளிற்கும் நெருங் கிய தொடர்பு இருக்கிறது. மூல நிலையில் (ஆதிநிலையில்) நுண்ணிய பேச்சு கி.பி. 1000 முதல் 1300 வரை. பர வாக்கு என்பது – பிரபஞ்சம் ஆகும். இது சொற்களால் வானத்தில் நிரம்பி இருக் கிறது. பரவாக்கு பச்யந்தி வாக்காக (புலப்படும் சொல்) வெளிப்படுகிறது''.

த்ரிகா என்ற காஷ்மீர சைவம் தென் னாட்டுச் சைவசித்தாந்தத்தைப் பெரிதும் ஒத்திருக்கின்றது.

பரை, பஸ்யந்தி, மத்யமை, வைகரி ஆகிய நால்வகை வாக்குகள்; சித், ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை ஆகிய இறைவனின் ஐந்து வகை சக்திகள்; ஈசான, தத்புருஷ, சத்யோஜாத, அகோர, வாம என்ற இறைவனின் ஐந்து முகங்கள்; திரோ தானம் (மறைத்தல்), சிருஷ்டி (தோற்று வித்தல்), ஸ்திதி (நிலைபெறவைத்தல்); சம்காரம் அல்லது பிரளயம் (அழித்தல்), அனுக்கிரகம் (அருளல்) என்ற சிவபெருமா னின் ஐந்தொழில்கள்; முப்பத்தாறு தத்து வங்கள்; ஆணவம், கன்மம், மாயேயம் என்ற மும்மலங்கள்; விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆகிய மூவகை ஆன்மாக்கள் பற்றிக் காஷ்மீர சைவம் விரிவாகக் கூறுகிறது.[2]

காஷ்மீர சைவம் சாங்கியம் போலப் பிரகிருதியை என்றும் உள்ள பொருள் என்று சொல்லவில்லை. சிவபெருமான் பிரபஞ்சமாகும் பரிணாமநிலையில் ஏற்படும் ஒரு நிலையே பிரகிருதி என்கிறது காஷ்மீர சைவம்.

அதே சமயம் வேதாந்தம் கூறுவது போல பிரபஞ்சம் மாயை என்றும் கூற வில்லை. சிவபெருமானுக்குக் காட்சி அளிக்கும் ஓர் அனுபவமே பிரபஞ்சம் என்று காஷ்மீர சைவம் கூறுகிறது.

தொன்மைச் சைவம் பாசுபத சைவமாகி அதன்பிறகு முரட்டுத் தனமான காபாலி கம், காளாமுகம் என்றெல்லாம் திசைமாறி பாசுபதம் என்ற பெயரையே இழந்த நிலை யிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, பகுத்தறி வுக்கு ஒத்த, மனித நேயமிக்க, இருபிரிவு களைக் கொண்ட த்ரிகா என்ற – காஷ்மீர சைவமாக மாறியது.

(12)
வடநாட்டில் சைவசமயம்

இந்தக்கால கட்டத்தில் வைதிக சமயம் புத்துயிர் பெற்றாலும், பழைய தலைமை

1) "The Cultural Heritage of India" - Vol. IV - Ramakrishna Mission ....1937.
2) "Vaisnavism and Saivism" - R.G. Bhandarkar... 1913

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடத்தைப் பெறவில்லை. பௌத்தம் தான் தோன்றிய நாட்டை விட்டே மறைந்தது. சமணம் குஜராத்தில் மட்டும் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தது.

''இந்து'' : முதன்முதலாக இந்து, முஸ்லிம் என்று தனித்தனிப் பண்புகள் கொண்ட இருவேறு மாறுபட்ட கலாச் சாரங்கள் கொண்ட பிரிவாக இந்தியா பிரிந்தது. 'இந்து' என்ற சொல்லை முஸ்லிம்கள் முதல் முதலில் பயன் படுத்திய பொழுது 'சிந்து' பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், முஸ்லிம் அல்லாத அனைத்து மக்களும் (இதில் பௌத்தரும், சமணரும் அடங்குவர்) அடங்குவர் என்றும் நாம் அறிய வேண்டும்.

தாந்திரிகத்தின் தாக்கம்; இக்கால கட்டத்தின் முக்கிய நிகழ்வு வைதிக சமயத்திலும், பௌத்தத்திலும் தாந்திரிகத் தின் தாக்கமே ஆகும். அனைவர்க்கும் வீடுபேறு என்ற உயரிய கோட்பாட்டினை உடைய மகாயானமே மூட நம்பிக்கைக் கும், ஒழுக்கக் கேட்டுக்கும் இடம் கொடுத்து விட்டது. இந்த ஒழுக்கக் கேடு சமுதாயத்தில் தீவிரமாக ஊடுருவி விட்டது. கிருஷ்ண வழிபாட்டைக் கூற வந்த ஒரு பெருங்கவிஞர் அக்கோயிலிலுள்ள தேவ தாசிகளின் அழகினைப் பல படப்புகழ்ந்து இலக்குமியே வந்து விட்டமை போலத் தெரிகின்றது என்று பாடுகிறார். இது ஒரு மொத்தச் சீரழிவையே காட்டுகிறது.

பௌத்தம் மறைதல்

முஸ்லிம்கள் புத்த மடங்களையும் இடித்துச் சூறையாடியது ஒருபுறம்; வைதிக சமயம் புத்தரையே பத்து அவதாரங்களுள் ஒரு அவதாரமாகக் கொண்டு சமரசம் செய்து கொண்டது மறுபுறம்; இவ்விரண்டு காரணங்களாலும் பௌத்தம் இந்தியாவில் மறைந்தது.

சமண சமயத்தின் பாதிப்பு : பிற்கால சாளுக்கியர்களும் ஹொய்சளர்களும் சமண சமயத்தைப் பின்பற்றியதால் சமணசமயம் தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் கூடுதலாகச் சிறிது காலம் நிலைத்து இருந்தது. பாண்டியர், பல்லவ அரசர்கள் சமணசமயத்தை விட்டு சைவசமயத்தைப் பின்பற்றத் தொடங்கியமையாலும், கலச்சூரி அரசர் விஜ்ஜாலரை எதிர்த்து சைவ லிங்காயத்துப் பிரிவினர் செய்த புரட்சி வெற்றி பெற்றதாலும் சமணமும் தன் பிடியினைத் தென்னிந்தியாவில் மெல்ல இழந்தது. ஆனால் சமணம் இன்றும் குஜராத், ராஜபுதனப் பகுதிகளில் செல் வாக்கு பெற்று இருக்கிறது. பௌத்தம் போலவோ, வைதிக சமயம் போலவோ சமணசமயம் தாந்திரிகத்தின் செல்வாக்கால் பாதிக்கப்படவில்லை.

வைணவத்தின் நிலை : இதேபோல தென்னிந்திய வைணவப்பிரிவும் தாந்தி ரிகத்தினால் பாதிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் ராமானுஜரும், மத்வரும் தம் தத்துவக்கருத்துக்களைப் பரப்பியதே. அது மட்டுமல்ல. ராமானுஜர்தம் தத்துவக் கருத்துக்களை வைத்துக் கொண்டு பக்தி நெறியைப் பரப்பினார். மேலும் வைணவ ஆசாரியர்கள் வட இந்தியா போற்றிய கோபிகளைப் பற்றிய கதைகளைப் புறக் கணித்து விட்டனர். இருந்தாலும் தென் இந்தியாவில் நிம்பார்கர் கோபிகளை முன்னிலைப்படுத்தியும், கி.பி. 16ஆம் நூற்றாண்டில் சைதன்யர் ராதை வழி பாட்டைப் போற்றியும் தம் கொள்கை யினைப் பரப்பினர்.

சைவத்தின் நிலை : சாக்தம் தாந்திரிக வழிபாட்டில் பெரிதும் பாதிக்கப்பட்டது. சைவத்தையும் தாந்திரிகம் ஊடுருவி, காளாமுகம், காபாலிகம் என்று பரிணமித்து மது, மாது ஆகியவற்றிற்கு இடம் கொடுத்துவிட்டது.

(13)

சைவ இலக்கியங்கள்

கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மங்கா அல்லது மங்காகா என்ற காஷ்மீரக் கவிஞரின் ''ஸ்ரீகண்ட சரிதம்'' என்ற காவியம் சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாற்றைக் கூறுவதாகும். அதே நூற் றாண்டில் வெளிவந்த ''ஹரசரித சிந்தா மணி'' என்ற காவியம் சைவ பழக்கங்களை யும், சைவ தொல்பழங்கதைகளையும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காஷ்மீரில் உள்ள புண்ணியத்தலங்களையும் பற்றிக் கூறுவதாகும். அதே நூற்றாண்டைச் சேர்ந்த சாளுக்கிய அரசரின் அரசவைக் கவிஞரான வித்யமாதவனால் பாடப்பட்ட ''பார்வதி ருக்மணீயம்'' என்ற காவியம் சிவ – பார்வதி திருமணம் பற்றிக் கூறுகிறது.[1]

(14)
போஜ அரசரின் தத்துவப்பிரகாசம்
(கி.பி.11ஆம் நூற்றாண்டு)

கி.பி.11-ஆம் நூற்றாண்டில் உஜ்ஜயினியை ஆண்ட போஜ அரசர் I சரஸ்வதி கந்தாபரணம், யோக சூத்திர உரை முதலான பலநூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய ''தத்துவப்பிரகாசம்''என்ற நூல் சைவசமயக் கொள்கைகளையும் தத்துவக் கூறுகளையும் உடையது ஆகும். இந்த நூலுக்கு அகோர சிவாச்சாரியார் ஆகம அடிப்படையில் உரை கண்டிருக்கிறார். ஸ்ரீகுமாரரின் உரை ஒரு சமயம் ஆகம அடிப்படையிலும் பிறிதொரு சமயம் சங்கரர் கண்ட வேதாந்த அடிப்படையிலும் அமைந்துள்ளது. தத்துவப் பிரகாசம் கூறுவதாவது :

ஐந்தொழில்கள் : ''சிவபெருமான் 'சித்' வடிவானவர். ஞானமும், சக்தியும் சேர்ந்தது சித் ஆகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைக் கடவுள் தன் அனுக்கிரகத்தால் செய்கிறார். சக்தி வேறு சிவன் வேறு அல்ல.''

பசு, பதி, பாசம் : ''பிந்து மாயை என்ற மாயை என்றும் உள்ள சக்தி ஆகும். மாயையிலிருந்து தான் உலகம் தோன்றியது. இறைவன் – பதி; அணு – பசு; தளை – பாசம்; மலம், கர்மா, மாயை, உலகம், இணைக்கும் சக்தி ஆகிய ஐந்து பொருள்களும் தளை ஆகும்.

"Malam Karma ca maya ca mayottham akhilam Jagat, tirodhanakari saktir artha pancakam ucyate" (Sri Kumara's commentary)

இறைவனுடன் ஒன்றாதல் : ஆன்மா மலத்துடன் நிரந்தரமாகப் பிணிக்கப்பட்டிருப்பதால் மாயையின் வலைப்படுகிறது. ஆன்மா சிவத்தின் இயல்பைப் பெற்றிருப்பதால், மலம் அழிந்தபிறகு, ஆன்மா இறைவனுடன் ஒன்றாகிறது.

மூவகை ஆன்மாக்கள் : ஆன்மா பாசத்துடன் பிணிக்கப்பட்டிருப்பதால் பிறப்பு இறப்பு என்ற சுழலில் மீண்டும் மீண்டும் சிக்குகிறது. ஒருமலமுடையார்; மலம், கர்மா என இருமலமுடையார் (இவ்விரண்டு வகை ஆன்மாக்களும் விஞ்ஞான கலர் எனப்படுவர்); மலம், கர்மா, மாயை என மும்மலமுடையார் (சகலர்) என ஆன்மாக்கள் மூவகைப்படும்.

புரியட்டகம் : பிறப்பு எடுக்கும் ஆன்மா நுண்ணுடலை எடுக்கிறது. புரியட்டகம் காண்டல், கேட்டல் எனும் ஐம்புலன்கள், மனம், புத்தி, அகங்காரம் என எட்டு பொருள்களைக் கொண்டது ஆகும்.

தளை : மலம், கர்மா, மாயேயம், மாயை என தளை (பாசம்) நான்கு வகைப்படும். மலம் ஆன்மாவை நெல்லில் உமி போல மறைத்துள்ளது. உமி நீங்கினால் அரிசி கிடைப்பது போல மலம் நீங்கினால் ஆன்மா ஒளிபெறும். செம்பிலிருந்து களிம்பு நீங்குவது போல, சிவனின் சக்தியினால் மலம் நீக்கப்படுகிறது.

கர்மா : கர்மாவுக்குத் தொடக்கம் இல்லை. கர்மா தருமம், அதருமம் என இருவகைப்படும். தருமத்தினால் மகிழ்ச்சி விளையும். அதருமத்தினால் துன்பம் விளையும்.

மாயையிலிருந்து உலகம் தோன்றுகிறது. மாயையினால் தோன்றும் பருவுடலும் (Physical body), நுண்ணுடலும் (Subtle body) மாயேயம் ஆகும். மாயேயத்திலிருந்து தளை (கட்டு) விளைகிறது.

முப்பத்தாறு தத்துவங்கள் : மேலும் தத்துவப் பிரகாசம் முப்பத்தாறு தத்துவங்களையும் விரிவாக விளக்குகிறது. முப்பத்தாறு தத்துவங்களில் சிவம், சக்தி, சதா

1) "The History and Culture of the Indian People" - Part - v - Bharatiya Vidya Bhavan.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவம், ஈசுவரம், வித்தை ஆகிய ஐந்து தத்துவங்களும் தூய அறிவினை உடையன (சித்ரூபம்; Pure consciousness). இவற்றில் அழுக்கு இல்லை; இவை சுத்த தத்துவம் எனப்படும். மாயை, காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன் என்ற ஏழு தத்துவங்களும் தூய – தூயதல்லாதவையாகும். புருடன் தூய அறிவுடையது. ஆனாலும் மலத்துடன் பிணிக்கப் பட்டிருப்பதால் தூய்மையில்லாதது போல காணப்படும். அடுத்துவரும் இருபத்து நான்கு தத்துவங்களும் தூயதல்லாதவை ஆகும். இந்த தூயதல்லாத இருபத்துநான்கு தத்துவங்களும் சாங்கியத்தில் உள்ளவை ஆகும். இதில் ஒரே ஒரு வேறுபாடு உள்ளது. சாங்கியத்தில் பிரகிருதி அவ்யக்கத்துடன் இணைக்கப்பட்டு சத்துவம், இராஜஸம், தாமசம் ஆகிய முக்குணங்களின் சமநிலை எனப்படும். இங்கு சைவ தத்துவத்தில் அவ்யக்தம் (வெளிப்படாதது; (Unmanifested) மாயை யிலிருந்து வந்தது என்றும், அதுவே முக்குணங்களைத் தோற்றுவிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடவுட் கொள்கை : கடவுளே உலகுயிர் தோற்றத்திற்கு முதற் காரணமும் (Material cause) நிமித்த காரணமும் (Instrumental cause) ஆவார் என்பது சங்கரர் கொள்கை. கடவுள் நிமித்த காரணம் மட்டுமே என்பது தத்துவப்பிரகாச உரையாசிரியர் அகோர சிவாச்சாரியாரின் கருத்து ஆகும். அவர் கூற்றுப்படி அனைத்து அறிவும், சக்தியும் சேர்ந்து இணைந்த ஒன்றே கடவுள். உலகு தோன்ற முதற் காரணமாக விளங்குவது மாயை ஆகும். அதிலிருந்தே பிற தத்துவங்கள் (பொருள்கள்) தோன்றின.[1]

(15)

ஸ்ரீ கண்டரின் பிரும்மசூத்திர உரை

(கி.பி. 1270)

கி.பி. 1270இல் வாழ்ந்த ஸ்ரீகண்டர் பிரம்மசூத்திரத்திற்கு உரை எழுதியுள்ளார். பிரமசூத்திரம் வேதாந்த நூல் ஆனாலும், ஸ்ரீகண்டரின் விளக்க உரை சங்கரர் போன்ற உரையாசிரியர்களை மறுத்து சைவ சமயத்தினை வெளிப்படுத்துவதாகும். அப்பய்ய தீட்சதர் ஸ்ரீகண்டரின் உரைக்கு ஒரு துணை உரை தந்துள்ளார். (கி.பி. 1550) ஸ்ரீகண்டரின் உரை சைவ ஆகமங்களைப் பின்பற்றியதாகும்.

பிரமம் : சிவபெருமான் மேலான பரம்பொருள்; அனைத்து உயிர்களிலும் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறார். தயிருக்குப் பால் முதற் காரணம். பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் சிவபெருமான் ஆவார். சிவபெருமான் நிமித்த காரணம் என்பதை ஸ்ரீகண்டர் மறுக்கிறார். எல்லாமாய் இருப்பவன் மாற்றம் கொள்கிறான் என்ற ஸ்ரீகண்டரின் கருத்து முரண்பாடாக உள்ளது. இதனை அப்பய்ய தீட்சதர் பின்வருமாறு விளக்குகிறார். ''கடவுள் பிரபஞ்சமாக மாறுவதில்லை. கடவுளின் சக்தி பிரபஞ்சமாகிறது''.

முதல்சூத்திரம் : பிரும சூத்திரத்தின் முதல் சூத்திரம் வருமாறு; "Athato brahma - jijnasa" 'தருமத்தின் இயல்பின் விசாரணைக்குப் பிறகே பிரமத்தின் இயல்பின் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்'' என்பது இதன் பொருள். இதனை விளக்குவதே பூர்வமீமாம்சை ஆகும். ''தருமம்'' என்பது ''வேதவேள்வி'' ஆகும். தருமத்தைப் பின்பற்றுபவர்கள் ஒரு பிரிவினர்; பிரமத்தை உணர முயல்பவர்கள் மற்றொரு பிரிவினர் என இரண்டாகப் பிரித்துப் பொருள் காண்பார் சங்கரர். ஸ்ரீகண்டர் தருமவிசாரணையை முன்வைக்கிறார். வேள்விகளில் வரும் பலன்களில் எண்ணம் செலுத்தாமல் (மகன் வேண்டும், செல்வம் வேண்டும் என்று முன்வைக்காமல்) அந்த வேதக் கடமைகளை நிறைவேற்றித் தன் மனதைத் தூய்மைப் படுத்திய பிறகு பிரும்மம் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்பார்.

அப்பய்ய தீட்சதர் சங்கரர்கருத்துக்கும் ஸ்ரீகண்டர் கருத்துக்கும் நடுவான நிலைப்

1) "A History of Indian Philosophy" - Vol. V - Surendranath Das Gupta......1922.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடு மேற்கொண்டு இருவர்க்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சரி செய்கிறார். தங்கள் முந்தைய பிறவிகளில் செய்த நற்காரியங்களால் மனத்தூய்மை அடைந்தோர் வேதவேள்விகளைச் செய்து அதனால் மேலும் தூய்மை அடைந்தவராய், பலன்களில் விருப்பம் இல்லாதவராய், நிலையான பொருள் எது நிலையற்ற பொருள் எது என்று வேறுபடுத்தி அறியக் கூடியவராய், வைராக்கியம் உடையவராய், அக புறக்கட்டுப்பாடுகளை உடையவராய், வீடுபேற்றில் நாட்டம் உள்ளவராய் இருப்பர். அவர்களே பிருமத்தைப் பற்றி உணரும் விசாரணைக்குத் தகுதி உடைய வர்கள் என்கிறார் அப்பய்ய தீட்சதர்.

பிரம்மத்தின் இயல்பு : பிரும்ம சூத்திரத்தின் இரண்டாவது சூத்திரம் பிரமத்தின் இயல்பைக் கூறுகிறது. "Janmady - asya yatah" பிரம்மத்திலிருந்து அனைத்துப் பொருள்களும் வருகின்றன; அதனுள் ஒடுங்குகின்றன; பிரமத்தில் நிலைப்படுகின்றன. இதனால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இறைவனின் முத்தொழில்கள் தெரிய வருகின்றன. பிரபஞ்சத் தோற்றத்தின் முதற்காரணமும், துணைக் காரணமும் (Instrumental cause) இறைவன் என்றாகிறது. இதனால் இறைவனின் இயல்பு கூறப்பட்டுள்ளது என்கிறார் ஸ்ரீகண்டர். இந்த சூத்திரத்தால் பிரமத்தின் இருப்பு புலப்படுகிறது என்ற கருத்தை சங்கரர் மறுக்கிறார். பிரபஞ்சம் பிரம்மத்திலிருந்து வருதல், பிரமத்தினுள் இருத்தல், பிரமத்திற்குள் ஒடுங்குதல் என்ற உபநிடத நூல்களின் தொடர்ச்சி என்ற அளவிலே இந்தச் சூத்திரத்திற்குப் பொருள் காண வேண்டுமே ஒழிய பிரமத்தின் இருப்பு புலனாகிறது என உய்த்துணர முடியாது என்கிறார் சங்கரர்.

சத், சித், ஆனந்தம் : பிரம்மத்திற்குத் தரப்பட்டிருக்கும் சத் (being), ஆனந்தம், ஞானம் ஆகிய அடைமொழிகள் எல்லாம் இறைவனின் குணங்கள் என்கிறார் ஸ்ரீகண்டர்.

பிரபஞ்சத்தோற்றம் : மாயை மூலப் பொருள் ஆகும். (Primal matter) மாயை இறைவனோடு உள்ளது. மாயையிலிருந்து பிரகிருதியும், பிரகிருதியிலிருந்து பிரபஞ் சமும் தோன்றியது. எனவே பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணம் பிரமமே. பிரமம் உயிர்களையும், உலகப் பொருள்களையும் கடந்து இருப்பது. உயிர்களும் உலகப் பொருள்களும் இறைவனது சக்தியால் அவனிடமிருந்து தோன்றுவதால் இறைவ னின் பகுதியே ஆம். இது ஸ்ரீகண்டரின் விளக்கம். பிரபஞ்சத் தோற்றத்தை இயல்பு (Ultimately real) என்பதை சங்கரர் மறுக்கிறார்.

ஏன் படைத்தார்? : இறைவன் பிரபஞ்சத்தை ஏன் படைத்தார்? அப்படி படைத்த இந்த உலகு சிலருக்கு மகிழ்ச்சி தருவதாகவும், சிலருக்குத் துன்பம் தருவ தாகவும் அமைந்தது ஏன்? உயிர்களின் செயல்களுக்கு ஏற்ப உடம்பும் தந்து, சூழ்நிலையும் ஏற்படுத்திக் கொடுக்கிறார். அவரவர் வினைக்கேற்ப இன்ப, துன்பம் கிடைக்கிறது. எனவே இவ்வாறு உயிர்களுக்கு இன்ப துன்பம் கொடுத்தது இறைவனின் பாரபட்சமன்று. உயிர்கள் தன் இச்சைப்படி செயல்படுகின்றன. அந்தச் செயலுக்கு அவையே பொறுப்பு ஏற்க வேண்டும். மனிதன் தன் விருப்பப்படி செயல்படும் பொழுது இறைவனின் உதவி கிடைக்கிறது. (பிரும்ம சூத்திரம் II. 3.41 ஸ்ரீகண்டர் உரை) முப்பத்தாறு தத்துவங் களின் வரிசையில் பிரபஞ்சப்படைப்பு நிகழ்கிறது.

வீடுபேறு : பிரம ஞானம் அடைந்த உயிர் – அழுக்கு நீங்கிய உயிர் – பிரமத்தின் நிலையை அடைகிறது. உயிரறிவும் பிரமத்தின் அறிவாகிறது. அப்பொழுது உயிர் கருவிகரணங்கள் ஏதும் இல்லாமல் மனம் ஒன்று மட்டுமே கொண்டு இன்பத் தை அனுபவிக்கிறது. வீடுபேறு நிலையில் உயிர் இறைவனைப் போல பேரறிவு உடையதாகிறது. (பிரும. II,3,19) வீடு பேற்று நிலையில் ஆன்மா தன் தன்மையை இழக்காமல் இன்பத்தைத் துய்க்கிறது.[1]

1) "A History of Indian Philosophy" - Vol. V - Surendranath Das Gupta......1922.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(16)
(அ) வீரசைவம் (வரலாறு)
(கி.பி. 11ஆம் நூற்றாண்டு)

சமயநிலை : கி.பி. 11-ஆம் நூற்றாண்டு இறுதிவரை இந்தியா முழுமையும் சைவசமயம் வளர்ச்சி யுற்றிருந்தது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சைவம் வளர்ச்சி குன்றி, சமண சமயமும், வைணவமும் வலுவான நிலையில் இருந்தது. அக்கால கட்டத்தில்தான் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் மத்தியில் கர்நாடகாவில் பசவர் என்ற பெருவீரர் தோன்றி வருணாசிரம தருமத்தை உடைத்துச் சைவத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டினார். புத்துணர்ச்சி ஊட்டப்பட்ட சைவம் வீரசைவம் அல்லது லிங்காயத்து சமயம் எனப்பட்டது.

வீரசைவம் – பெயர் விளக்கம் : ''வீ'' என்பது பிரமத்தோடு ஒன்றுபடும் அறிவு; 'ர' என்பது அந்த அறிவில் இன்பம் அடையும் ஒருயிர். தங்கள் நம்பிக்கைக் காக அமைதியாகவோ, தீவிரமாகவோ வீரமாகப் போராடும் தலைவர்கள் வீரர்கள் ஆவார்கள். அத்தகைய வீரர் களின் சைவம் ''வீரசைவம் '' ஆகும்.

நாயன்மார் : வீரசைவம் ஆகமங்களின் அடிப்படையில் எழுந்தது ஆகும். பெரிய புராண அறுபத்து மூன்று நாயன்மாரை வணங்கியும் அவர்களது அருட்பாடல் களைப் பக்தியோடு பரவியும் வீர சைவர்கள் போற்றுவார்கள். அறுபத்து மூன்று நாயன்மாரைப் புராதனர்கள் என்பர். அவர்களுக்குப்பின் மத்திய காலத்தில் தோன்றிய ஞானிகளை நூதன புராதனர்கள் என்பர்.

வீர சைவ ஆசாரியார்கள் : பரசிவத் தின் ஐந்து நிலைகளான சத்யோஜாதம், வாம தேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் ஆகியவற்றின் வெளிப்பாடு களாக ரேணுகா, தாருகர், கண்டாகர்ணர், தேனு கர்ணர், விசுவகர்ணர், என்ற ஐந்து சமய குருமார்கள் தோன்றினர். இவர்கள் கலியுகத்தில் ரேவண சித்தர், மருளசித்தர், ஏகோராமர், பண்டிதாராத்யர், விஸ்வாரத் யர் ஆக அவதரித்து லிங்காயத்து சமயத் தைத் தோற்றுவித்தனர். இவர்களைப் பஞ்சாசாரியர்கள் என்றும், இவர்கள் அவதார வரலாறுகளையும் ஸ்வாயம்பூவ ஆகமம் கூறும். இவர்கள் இமயமலையில் கேதாரத்திலும், தென்னாட்டில் உஜ்ஜயி னியிலும், கிழக்கே ஸ்ரீசைலத்திலும், மேற்கே ரம்பாபுரியிலும் வடக்கே காசி யிலும் மடங்களை நிறுவினார்கள்.

வீர சைவத்தின் காலம் : வீர சைவத்தின் உட்கருத்து உபநிடத காலத்திலேயே நிலவி இருந்தது என்பார் சுரேந்திரநாத் தாஸ் குப்தா. காளிதாசனின் காவியங்களிலும் பல இடங்களில் இக்கருத்துக்கள் முறையாக உணர்த்தப்பட்டுள்ளன. ஸ்கந்த புராணத் தில் சூத சம்கிதையில், (கி.பி. 6ஆம் நூற்றாண்டு) கூறப்படும் தத்துவம் வீரசைவத் தத்துவமே எனலாம். வீரசைவக் குருமார்கள் பற்றிய கதைகள் எல்லாம் வரலாற்று அடிப்படையில் தெரிய வரவில்லை. ''சித்தாந்த சிகாமணி'' என்ற நூலில் வீரபத்ரர் என்ற வீரசைவ ஆசாரியார் பற்றி வருவதால் வீரபத்ரர் நூலாசிரியர்க்கு முற்பட்ட காலத்தவர் என அறியலாம். இந்த அடிப்படையில் வீரபத்ரர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவருக்கு முன் மூன்று குருமார்கள் இருந்தி ருக்கிறார்கள். அவர்களது போதனா காலத் தினை 100 ஆண்டுகளாகக் கணக்கிட்டால் வீர சைவம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும்.

பசவர் : (கி.பி. 1106 – 1167) வீர சைவ வரலாற்றில் தலைமையிடம் வகிப்பவர் பசவர் ஆவார். பசவர் மாணிக்கவல்லியில் பிராமண குலத்தில் பிறந்தவர். குழந்தைப் பருவத்திலேயே பெற்றோர் இறந்தனர். இவரது வளர்ப்பு பெற்றோர் பாகே வாதியைச் சேர்ந்த மாதிராஜர் – மாதாம் பிகை ஆவார். இளவயதிலேயே சிவபெரு மான் மேல் பக்தி பூண்டு குடும்பம், செல்வம் துறந்து கப்படி சங்கமம் சென்று அங்குள்ள கூடலசங்கமா தேவரை நாளும் வழிபட்டுவந்தார். தான் அணிந்திருந்த பூணூலையும் அறுத்தெறிந்தார். அங்குள்ள இறைவர் காட்சிதந்து பசவர் கரங்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவலிங்கம் தந்து உபதேசமும் செய்தார். பசவரின் வாழ்க்கை அரசியல் குழப்பம் நிறைந்தது. விஜ்ஜாலன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1157 – கி.பி. 1167) அவர் கல்யாணுககுச் சென்றார். அங்கு அவர் தாய்மாமன் பலதேவர் அமைச்சராக இருந்தார். அவருக்குப்பின் பசவர் அமைச்சர் ஆனார். பேரழகியான அவரது சகோதரியை அரசர் மணந்து கொண்டார். அரசக் கருவூலம் பசவரின் நிர்வாகத்தில் வந்தது. அதிலிருந்து பெரும் செல்வத்தை எடுத்து ஜங்கமர்கள் எனப்படும் லிங்காயத்து அடியவர்களுக்கு வாரிச் செலவு செய்தார். இக்காலகட்டத்தில் கல்யாணில் இன, ஜாதிவேறுபாடு, ஆண் – பெண் வேறுபாடு இவைகளை முறியடிக்க ஓர் இயக்கம் தோன்றியது. இப்புத்தியக்கத்திலே வீரசைவ பக்தர் களில் ஒதுக்கப்பட்ட இனத்தைச்சேர்ந்த மணமகனுக்கும் பிராமணம் பெண்ணுக் கும் திருமணம் நடைபெற்றது. வைதீகர் கள் இதனை எதிர்த்தனர். மணமக்களின் பெற்றோருக்கும், மணமகனுக்கும் விஜ்ஜலன் கொலைத் தண்டனை விதித் தான். வீரசைவர்கள் இதனை எதிர்த்து அரசனைக் கொன்றனர். அமைதி நாடிய பசவர் தடுத்தும் வன்முறை நிற்க வில்லை. பசவர் கப்படிசங்கமம் சென்று அங்கேயே உயிர்துறந்தார்.

சிவானுபவ மண்டபம் : பசவரின் மிகச்சிறந்த பங்களிப்பு கி.பி. 1160-ஆம் ஆண்டில் அவர் கட்டிய சிவானுபவ மண்டபம் ஆகும். இது வீர சைவத்தின் பிறப்பிடம் எனலாம். இது சமுதாய சமய நிறுவனம் ஆகும். இதன் தலைவர் அல்லமா பிரபு என்ற அருளாளர், அம்மண்டபத்தில் தகுதி வேறுபாடு, தொழில் வேறுபாடு இன்றி அரசர் முதல் விவசாயி வரை கலந்து கொண்டு சமய, சமுதாய, ஆன்மீக விஷயங்களை விவாதிப்பார்கள். முந்நூறுக்கு மேற்பட்ட இவ்வறிஞர் குழுவில் அறுபது பெண் அருளாளர்கள் இருந்தனர். அவர்களில் அக்கமாதேவி தலைசிறந்தவர் ஆவார். இந்த நிறுவனத்திலிருந்துதான் கன்னட வசன இலக்கியம் தோன்றியது. வசன இலக்கியம் கர்நாடகம் பண்பாட்டு வரலாற்றில் தனி இடம் பெற்றுள்ளது. வீர சைவத்தின் உள்ளீடான ''ஸத் – ஸ்தல'' தத்துவமும் இங்குதான் தோன்றியது. பஞ்ச ஆசாரம், அஷ்டா வரணம் ஆகிய சமய வழக்கங்களும் நெறிப்படுத்தப்பட்டன. சமுதாயத்தில் பெண்களுக்கு உயர்வு, சாதி வேறுபாடு நீக்கல், தீண்டாமை ஒழித்தல், உடலுழைப்புக்கு மதிப்பு தருதல், எளிய வாழ்க்கை ஆகியவற்றை இந்த நெறிமுறை கள் வலியுறுத்தின.

வீர சைவ இயக்கம் : பசவருக்குப்பின் அவரது மருமகன் சென்னபசவர் தலைமை யேற்றார். அருளாளர்கள் பலர் தோன்றி வீரசைவக் கொள்கைகளைக் கொண்டு அருட்கவிகள் பாடினர். அவை வசன சாத்திரங்கள் எனப்படும். கன்னட பிரதேசத்தின் எளிய இல்லங்களிலும் வசன சாத்திரங்கள் வேகமாகப் பரவின. ஆந்திரா விலும் வீரசைவம் பரவியது.

வீர சைவ நூல்கள் : கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ரேணுகாசாரியன் ''சித்தாந்த சிகாமணி'' என்ற நூலை இயற்றி யுள்ளார். இந்நூல் வீர சைவ தத்துவத்தைப் பிழிந்து தருவது ஆகும். வீர சைவ பரம்பரை, வீர சைவ ஆகமம் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு), பசவ ராஜ்யம் என்கிற வீர சைவ சாரோத்தாரம், லிங்க தாரண சந்திரிகை, பிரபுலிங்கலீலை, சித்தநாதர் எழுதிய சைவ சித்தாந்த நிர்ணயம், முதலான வீரசைவ நூல்கள் வெளிவந்தன.[1]

1) "The History and Culture of the Indian People" - V ;
"The Cultural Heritage of India" - IV ;
"A History of Indian Philosophy" - VI ;
"Vaisnavism and Saivism ;
"Speaking of Siva" - A.K. Ramanujam ....1973.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(ஆ) வீர சைவம் (தத்துவம்)

பசு,பதி, பாசம்

உயிர் மலத்தால் (அழுக்கால்) மூடப்பட்டுள்ளது. அழுக்கு இல்லாது இருந்தால் உயிர் முற்றறிவுடையதாக இருக்கும். இந்த அழுக்கு ஆணவ மலம் ஆகும். இந்த மறைப்பினால் உயிர் உலகப் பொருள்களைத் தன்னிலும் வேறுபடுத்திக் காணும். இந்த வேறுபாட்டு உணர்வு மாயாமலம் ஆகும். மாயையிலிருந்து பொருட் பிரபஞ்சமும் மனப்பிரபஞ்சமும் தோன்றுகிறது. ஆணவத்தால் மறைக்கப் பட்ட உயிர் உலகப்பொருள்களை உணர்வ திலும் வேறுபாடு காண, சிறப்பாகவும் மாறாகவும் செயல்படுகிறது. இது கர்ம மலம் ஆகும். கன்மத்தால் ஜாதியும் (Nature of species) ஆயுளும் (Length of time) போகமும் (type of enjoyment) விளைகிறது. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங் களால் கட்டப்பட்ட ஆன்மா 'பசு' எனப் படும். பரமான்மா 'பதி' எனப்படும். படைப்பு காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களால் பசுவைக் கட்டுப்படுத்தவும், காப்பாற்றுவதும் செய்வதால் பதி எனப்பட்டது. ஆன்மா பரம்பொருளை உணரும் அறிவு அடையும் வரையில் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து வாழ்க்கை சக்கரத்தில் உழன்று செம்மை பெற வேண்டும்.

தீக்கை : குரு தன்னிடமுள்ள ஆன்மீக சக்தியை தீக்கை மூலம் ஆன்மாவிற்குத்தர ஆன்மா மூன்று மலங்களிலிருந்து விடுதலை பெறுகிறது, வீரசைவ தீக்கை யில் லிங்க தாரணை (லிங்கத்தைத் தரித்தல்), ஒழுக்க போதனை, யோகம் இடம் பெறுகின்றன.

பஞ்சாசாரங்கள் : லிங்காசாரம், சடாசாரம், சிவாசாரம், ப்ருட்யாசாரம், கணாசாரம் என்ற பஞ்சாசாரங்களை வீரசைவன் கடைப்பிடிக்க வேண்டும்.

லிங்காசாரம் : லிங்கத்தைத் தினமும் வழிபடுதல்.

சடாசாரம் : ஒழுக்கமான வாழ்க்கை, நியாயமான வருமானம், சேமிப்பை வறியவர்களுக்குக் கொடுத்தல், வீர சைவகுருமார்களுக்கு (ஜங்கமர்) உணவு உடை அளித்தல்.

சிவாசாரம் : ஒரு வீர சைவர்க்கும் மற்றொரு வீர சைவர்க்கும் வேறுபாடு காணாது இருத்தல்; பல்வேறு தொழில் செய்பவராயினும் வேறுபாடு பாராது பிற வீரசைவர்களுடன் சேர்ந்து உண்ணுதல், மணம்புரிதல்.

ப்ருட்யாசாரம் : சிவபெருமானிடமும் சிவனடியார்களிடமும் பணிவுடன் இருத்தல்;

கணாசாரம் : இறைவன்மேல் கூறப் படும் இழி சொற்களையும், பிற மனிதர் கள், மிருகங்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளாது இருத்தல்.

அஷ்டாவரணம் : குரு, லிங்கம், ஜங்கமம், பாதோதகம், பிரசாதம், பஸ்மம், உருத்திராக்கம், மந்திரம் ஆகிய அஷ்டா வரணம் ஒரு வீரசைவனைக் காத்து அவனது வீடுபேறுக்கு உதவுகிறது.

குரு : குருவிடமிருந்து ஞானம் பெறுதல்.

இலிங்கம் : பிறப்பின் போது குரு மூலம் பெற்ற இலிங்கத்தை இறப்பு வரை தரித்திருத்தல்.

ஜங்கமம் : செயலாற்றல் மிக்க ஞானம் உள்ள ஜீவன்முக்தர். இவர் ஊர் ஊராக யாத்திரை செய்து பக்தர்களுக்கு அருள்உபதேசம் செய்வார்.

பாதோதகம் : குரு அல்லது ஜங்கமர் திருவடிகளுக்குப் பாதபூசை செய்த புனித நீர்.

பிரசாதம் : இறைவனுக்குப் படைக்கப்பட்ட நைவேத்யம்.

பஸ்மம் : திருநீற்றை உடம்பு முழுதும் பூசுதல்.

உருத்திராக்கம் : உருத்திராக்கம் அணிதல்.

மந்திரம் : 'நமச்சிவாய' எனும் மந்திரத்தை ஓதுதல்; இதுவே தியானம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லிங்கம் என்பது பேரொளி – பெருநெருப்பு என்பது வீர சைவரின் நம்பிக்கை. அதனை வாழ்நாள் முழுதும் அணிந்திருப்பதால் – உடம்பில் இடைவிடாது பட்டுக்கொண்டிருப்பதால் – ஆன்மாவின் அழுக்கு முழுமையாக எரிக்கப்படுகிறது. எனவே வீரசைவர் இறந்த பிறகு உடலை எரிக்காமல் அடக்கம் செய்ய வேண்டும்.

சக்தி விசிஷ்டாத்வைதம் : ஸ்தலம் – பரம்பொருள். 'ஸ்த' – பிரபஞ்சம் எதிலிருந்து தோன்றியதோ, எதனால் நிலைப்படுகிறதோ, அந்த மூலம், 'ல' – பிரபஞ்சம் எந்த இலக்கை நோக்கிச் செல்கிறதோ எதில் தன்னை முழுமையாக இழக்கிறதோ அந்த இலக்கு.

வேதாந்தக் கருத்துப்படி பரப்பிரமத்தின் சொரூபம் சச்சிதானந்தம் ஆகும். வீர சைவக் கருத்துப்படி (பரசிவம் என்பது அஸ்மி, பிரகாசே, நந்தாமி.) பரசிவம் சுதந்திரம் உடையது; வரம்பற்றது. சக்தி சிவத்துடன் இரண்டறக் கலந்தது.

விமர்ச சக்தி என்பது பரம்பொருள் தன்னையறியும் சக்தி. நெருப்பில் சூடு போல விமர்சசக்தி இறைவனிடம் உள்ளது. இந்தச் சக்தி சிவத்திடம் என்றும் உள்ளது. இந்த அருட்சக்தி சிவத்துடன் இணைந்து இருப்பதே சக்தி விசிஷ்டாத்வைதம் ஆகும்.

ஸத் – ஸ்தலம் : சிவம் தன்னை லிங்கம் என்றும் அங்கம் என்றும் பிரித்துக் கொள்கிறது. தெய்வீக சக்தி, சக்தி என்றும் பக்தி என்றும் பிரிகிறது. இங்கு பக்தி உபாசனை அல்லது வழிபாடு என்று பொருள்படும். இது முழுச்சரணாகதி ஆகும். லிங்கம் – உபாஸ்யம் (வழிபடப் படுவது); அங்கம் உபாசகன் (வழிபடுவோர்); பக்தி – உபாசனை (வழிபாடு); ஸத் – ஸ்தலம் என்பது வழிபாடு படிப்படியாக வளர்ந்து அங்க-லிங்கம் வேறுபாடு மறைந்து போகும் நிலை ஆகும்.

லிங்கம், அங்கம், ஜீவன் : ஒரு ஸ்தலம் அங்கம், லிங்கம் என்று இரண்டாகப் பிரியும். அங்கம், லிங்கம் இரண்டும் தனித் தனியாக மூன்றாக மாறும். அங்கம் தியாகாங்கம், போகாங்கம், யோகாங்கம் என்று மூன்று வகைப்படும். அதற்கு இணையானத் தொடர்புள்ளதாக லிங்கம் இஷ்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம் என்று வடிவங்கள் பெற்றிருக்கும். ஆன்மா விழிப்புநிலையில் தைஜஸஜீவன் என்றும், ஆழ்ந்த உறக்க நிலையில் பிரக்ஞாஜீவன் என்றும் அறியப்படும்.

தியாகாங்கநிலை : மாற்றம் பெற்ற விஸ்வ ஜீவன் தியாகாங்கி ஆகும். இந்த நிலையில் ஆன்மா உலகப்பொருள்களின் மேலுள்ள ஆசையில் விடுபட்டு இருக்கும். தியாகாங்கியின் வழிபடு கடவுள் இஷ்ட லிங்கம் ஆகும்.

போகாங்கநிலை : மாற்றம் பெற்ற தைஜஸ ஜீவன் போகாங்கி ஆகும். சிற்றின்பத்தை விட்டு நீங்கி தன்னை உணர்ந்து இறையின்பத்தில் ஈடுபடும் நிலை இது. போகாங்கியின் வழிபடு கடவுள் பிராண லிங்கம் ஆகும்.

யோகாங்க நிலை : மாறுபட்ட பிரக்ஞாஜீவன் யோகாங்கி ஆகும். மனமும், பொறிகளும், மடைமாற்றம் செய்யப்பட்ட நிலையில் பக்தன் அனைத்துப் பொருள்களிலும் இறைவன் இருப்பையும், தெய்வீக அமைதியையும் காண்கிறான். காரண உடல் நீங்கி ஞான உடலை அடைகிறான். இந்த நிலையில் அங்கமும், லிங்கமும் ஒன்றுபடுவதால் யோகாங்கி எனப்படுவான். யோகாங்கியின் வழிபடு கடவுள் பாவ லிங்கம் ஆகும்.

மூவகை லிங்கங்கள் : அன்றாட சம்பவங்களிலும், உண்மை நடப்புகளிலும் ஆளுகை செய்யும் தனியான தெய்வ நிலை இஷ்டலிங்கம்; சாத்தியக்கூறுகளில் ஆளுகை செய்யும் பிரபஞ்சச் கடவுள் பிராணலிங்கம் ஆகும். தன்னிடம் உண்மை காணும் எல்லையற்ற பரம்பொருள் பாவலிங்கம்.

மூவகை லிங்கங்கள் ஒவ்வொன்றும் இரண்டாக மாறும். இஷ்டலிங்கம் ஆசாரலிங்கம் (நடைமுறை – Practical) என்றும், குருலிங்கம் (உபதேசம் – Preceptive) என்றும் மாற்றம் கொள்கிறது. பிராணலிங்கம் சிவலிங்கம் (புனிதம் – Auspicious) என்றும் சரலிங்கம் (இயக்கம் –

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Dynamic) என்றும் மாறுகிறது. பாவலிங்கம் பிரசாதலிங்கம் (நளினம் – Gracious) என்றும் மகாலிங்கம் (பெருமை – Great) என்றும் மாற்றம் பெறுகிறது.

தியாகாங்கி : தியாகாங்கி ஆசார லிங்கத்திடம் உள்ள பக்தி சிரத்தையினால் பக்தனாக மாறும் பொழுது அது பக்த – ஸ்தலம் ஆகும். குருலிங்கத்திடம் நிஷ்ட பக்தி (Disciplined devotion) காட்டி மகேசனாக மாறும் பொழுது மகேச – ஸ்தலம் ஆகும்.

போகாங்கி : போகாங்கி சிவலிங்கத் திடம் உள்ள சிதறாத பக்தியினால் (அவதானபக்தி) பிரசாதின் ஆகும் பொழுது பிரசாதி – ஸ்தலம் ஆகும். சரலிங்கத்திடம் அருளனுபவத்தால் (அனுபவ சக்தி) பிராண லிங்கமாக மாறும் பொழுது அது பிராணலிங்க ஸ்தலம் ஆகும்.

யோகாங்கி : யோகாங்கி பிரசாத லிங்கத்தைத் தியானித்து ஆனந்த நிலை (ஆனந்த பக்தி) சரணன் ஆகும் பொழுது அது சரண–ஸ்தலம் ஆகும். மகாலிங்கத் திடம் ஒன்றி ஐக்யம் ஆகும் பொழுது (சமரச பக்தி) அது ஐக்ய – ஸ்தலம் ஆகும்.

இதுவே ஸத் – ஸ்தலத்தின் உள்ளீடாகும். வீரசைவமும் முப்பத்தாறு தத்துவங்களைப் பற்றிக் கூறுகிறது.[1]

(இ) வீர சைவம் (இலக்கியம்)

கன்னட மொழி இலக்கியம் 1500 ஆண்டு பழமை வாய்ந்தது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை கன்னட இலக்கியத்தின் உன்னதமான காலம் ஆகும். இக்கால கட்டத்தில்தான் ''வசனம்'' என்ற கவிதை இலக்கியம் பல்கிப்பரிமளித்தது. ''வசனம்'' என்றால் கட்டுப்பாடற்ற கவிதை என்று பொருள் படும். அனைத்துப் பாடல்களும் சிவபெருமானைக் குறித்தவையே. முந்நூறுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் வசன இலக்கியம் படைத்துள்ளனர். ஒவ்வொரு வரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் படைத்ததாக மரபுவழி சொல்லப்படுகிறது. இக்கவிதைகள் படைத்தவர்கள் இனத்தால், தகுதியால், தொழிலால் வேறுபட்டவர்கள். பெண்பாற் புலவர்களும் பாடியிருக்கிறார்கள். இப்பட்டியலில் ஒதுக்கப்பட்டவர்களும் உண்டு; கல்வி கற்காதவர்களும் உண்டு. இவர்களுள் தாசிமையா, பசவண்ணா, அல்லமா, மகாதேவியக்கா ஆகியோர் அருட்கவிதைகள் இணையற்றவையாய் திகழ்கின்றன.

பசவண்ணா (கி.பி. 1100 – 1167)

வீர சைவத்தை நிலைநாட்டிய பசவர் எனப்படும் பசவண்ணாவின் கவிதைகள் அருள்நலம் மிக்கவை; சடங்குகளை மறுப்பவை; பெண் உயர்வைப் போற்று பவை; சாதி வேறுபாட்டைக் கடிபவை.

" The rich
will make temples for siva.
what shall I,
a poor man,
do.

My legs are pillars,
the body the shrine,
the head a cupola
of gold

Listen, O lord of the meeting rivers,
things standing shall fall,
but the moving ever shall stay".

820.

வீர சைவ இலக்கியம் அத்தனைக்கும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து ஒரு பாடலைத் தேர்ந்தெடுக்கலாம் என்றால் அது இப்பாடல்தான் என்பார் திரு. ஏ.கே. இராமானுஜம் [Speaking of siva ஆங்கில மொழி பெயர்ப்பு.]

செல்வர்கள் கோயில்களை உருவாக்க லாம். ஆனால் அவர்கள் கோயிலாக முடியாது. அருளாளர் கந்தாகர்ணர் சிவ

1) "The Cultural Heritage of India" - IV-; Institute of Culture.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருமானையே நினைந்து வாழ்ந்த கன்னட நாட்டுப் பூசலார் நாயனார் ஆவார். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்பவன் சிவபெருமான். அவரது திருமேனி சிவபெருமான் கோயில் ஆயிற்று. உருவாக்குவது அழியும்; இருப்பது அழியாது (What is made is mortal but what one is immortal)

கால்களே தூண்கள்; உடலே ஆலயம்; தலையே பொற்கலசம்.

அசையாது நிற்பது x அசைவது; தாவரம் x ஜங்கமம், இவ் விரண்டின் வேறுபாடு வீரசைவத்தின் அடிநாதம் ஆகும். தாவரம் என்பது இருப்பது; சொத்தின் ஒரு பகுதி; உயிரற்றது. ஜங்கமம் அசைவது; போக்கும் வரவும் புரிவது. தாவரம் ஓரிடத்தில் நிலைத்து நிற்கும் அடையாளம்; கடவுள் விக்ரகம்; லிங்கம்; படமாடும் கோவில். ஜங்கமர் உலகையும் குடும்பத்தையும் துறந்துகிராமம் கிராமமாகச் சென்று நெறிப் படுத்தும் அருளாளர்; நடமாடும் கோயில்.

இந்தப் பாடலில் பசவர் அடையாளத்தை விட அசலை, மறக்கும் கோவில் கட்டிடத்தை விட நினைக்கும் மனித உடலை (ஆன்மாவை), செல்வம் பொருந்திய, செயலற்ற ஓரிடத்தில் இருக்கும் தாவரமான கோயில் கட்டிடத்தைவிட ஏழ்மை பொருந்திய, உயிர்த் துடிப்புள்ள, இயங்கும் ஜங்கமரை உயர்வாகக் கருதுகிறார். (மத்திய கால தென் இந்தியக் கோவில்கள் செல்வச் செழிப்பிலே – அரசர்கள், செல்வர்கள் கவனிப்பிலே – இருந்தன. வீரசைவம் வறியோரின் இயக்கமாக இருந்தது. செல்வர் x ஏழை; பண்டிதர்கள் x கல்லாதோர்; கல் x இரத்தமும், சதையும்) வீர சைவர்களுக்குத் தாவரமும் ஜங்கமமும் ஒன்றுதான். ஜங்கமரைப் (அடியவர்கள்) புறக்கணித்துத் தாவரத்திற்கு (விக்கிரகம்) மட்டும் மதிப்பு கொடுப்பதை அவர்கள் ஏற்கவில்லை.

பசவர் வைதீகர்களின் வேள்வியையும் தாக்குகிறார். கிராமத்து மக்கள் மிருகபலி இடுவதையும் தாக்குகிறார். வீட்டிலே தீ மூட்டி வேள்வி செய்யும் பிராமணின் வீட்டில் தீ பிடித்தால் ஏன் வைகிறான் என்று கேட்கிறார். ஆட்டை வெட்டிக் கொல்கிறார்களே கொல்பவர்கள் மட்டும் வாழ்ந்து விடுகிறார்களா? என்று வினவுகிறார்.

மனக் கோணலுக்கு வழியும் சொல்கிறார். வளைந்து செல்லும் பாம்பு புற்று துவாரத்திற்கு நேராகி விடுகிறது. வளைந்து பாயும் ஆறு கடலில் நேராகக் கலக்கிறது. வளைந்த (கோணல்) மனமுடையார் இறைவனிடம் நேராகி விடுவார்கள் என்கிறார்.

தேவார தாசிமையா
(கி.பி. 10-ஆம் நூற்றாண்டு)

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கோவில்கள் நிரம்பிய முடநூறு கிராமத்தில் தாசிமையா தோன்றினார். அவர் காட்டிற்குச் சென்று தவம் செய்தபொழுது, சிவபெருமான் காட்சியளித்து "உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே – செய்யும் தொழிலை செய்து கொண்டே – வழிபாடு செய்து என்னை அடையலாம்" என்று உபதேசித்தார். உபதேசம் பெற்ற தாசிமையா நெசவுத் தொழிலை மேற்கொண்டார்.

தாசிமையா ஒரு முறை காட்டிற்குச் சென்று மிருகங்களைக் கொன்று உண்ணும் பழங்குடி மக்களை வன்செயலைவிடச் செய்து சிவபெருமானை வழிபடச் செய்தார். பிறிதொருமுறை பிராமணர்கள் சிவ பெருமானைக் கேலி செய்ய தாசிமையா அவர்களுடன் வாதிட்டார். "சிவபெருமான் எங்கும் உள்ளார்" என்றார் தாசிமையா. பிராமணர்கள் விஷ்ணுகோயிலைக்காட்டி, "இங்கும் இருக்கிறாரா?" என்று கேட்டார். "ஆம்" என்று சொல்லி சிவபெருமானை வழிபட விஷ்ணுவிடமிருந்து சிவலிங்கம் வெளிப்பட்டது. பிராமணர்கள் சிவபெருமானை வழிபட ஆரம்பித்தார்கள்.

சிவ புரத்தைச் சேர்ந்த துக்காலி என்ற மாதினை மணம் புரிந்து கொண்டார்.

சாளுக்கிய அரசன் ஜெயசிம்மன் ஆட்சியில் தாசிமையா சிறப்பு வாய்ந்த ஆசிரியராக இருந்தார். அரசன் சமண சமயத்தைச் சேர்ந்தவன். சைவ சமயத்தைச் சேர்ந்த அரசி தாசிமையாவிடம் உபதேசம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றார். இதனால் வெகுண்ட அரசனும், சமணர்களும் இவரை வாதில் தோற்கடிக்க, ஒரு பையனை மரத்தின் மேல் மறைத்து வைத்தனர். தாசிமையா "எங்கும் உள்ள கடவுள் மரத்திலும் இருக்கிறார்" என்றார். சமணர்கள் அழைக்க யாரும் வரவில்லை. மரத்தில் பையன் இறந்து கிடந்தான். பையனின் தாயார் அழுது புலம்பி தாசிமையாவிடம் வேண்ட, தாசிமையா பையனை உயிருடன் மீட்டார்.

தாசிமையாவின் விரோதிகள் நஞ்சு கலந்த குளத்து நீரைக் குடிக்கச் சொல்ல, எந்தவிதப் பாதிப்பும் இல்லாது குடித்தார்.

இது பொறாத சமணர்கள் அரசனிடம் முறையிட, அரண்மனையில் அனைத்துப் பிரிவினரும் கலந்து கொள்ளும் விவாத மேடையை அரசன் அமைத்தான். தாசிமையாவின் வாதத்தை யாராலும் முறியடிக்க முடியவில்லை. வஞ்சமனம் கொண்ட சமணர்கள் பாம்பு ஒன்றினை எடுத்து வந்து "சிவபெருமான் இப்பாம்பில் இருக்கிறாரா?" என்று கேட்டனர். "சிவபெருமான் ஒருவனே தேவன்" என்று கூறி தாசிமையா பாம்பினைக் கையில் எடுத்தார். பாம்பு ஸ்படிக லிங்கமாக மாறியது. அந்த இடத்திலேயே ஒரு கோவில் கட்டப்பட்டது. அரசன் சைவத்திற்கு மாறினான். 700 சமணக் கோவில்கள் சைவக் கோவில்களாக மாறின. 20,000 பேர் சைவசமயத்தினைச் சேர்ந்தனர்.

தாசிமையா முடநூறுக்குத் திரும்பிச் சென்று மீண்டும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். சில காலம் சென்று இராம நாதர் கோவில் சென்று தன்னை அழைத்துக் கொள்ளுமாறு வேண்ட தாசிமையாவும் அவரது மனைவியாரும் சிவத்தில் கலந்தனர்.

தாசிமையாவும் பசவரைப் போல சீர்திருத்தக் கருத்துக்களை உடையவர். சிவபெருமானோடு ஒன்றி இருப்பவர்களை நாளென் செயும்? கோள் என் செயும் என்று நினைப்பவர். அவர்களது வீட்டு முற்றமே காசி என்கிறார்.

" To the utterly at one with Siva
there's no dawn,
no new moon,
no moonday,
nor equinoxes,
nor full moons;,

his front yard
is the true Benares,

o Ramanatha.

சிவபெருமான் சந்நிதியில் ஆண் இல்லை; பெண் இல்லை; எந்த பேதமும் இல்லை.

If they see
breasts and long hair coming
they call it woman,
if beard and whiskers
they call it man :

but, look, the self that hovers
in between
is neither man
nor woman

o Ramanatha.

மகாதேவியக்கா
(கி.பி. 12-ஆம் நூற்றாண்டு)

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சிவமோகா அருகில் உள்ள உதுடாதி கிராமத்தில் மகாதேவி பிறந்தார். சிறுவயதிலேயே சிவபெருமான் அருள்பெற்ற மகாதேவி சென்னமல்லிகார்ச்சுனரையே மணம் புரிவேன் என்று தன்னையே அர்ப் பணித்துக் கொண்டார்.

அப்பகுதியை ஆண்ட கௌசிகன் என்ற அரசன் மகாதேவியின் அழகில் மயங்கி, அவர் பெற்றோரை வற்புறுத்தி அவரை மணந்து கொண்டான். கடவுள் நம்பிக்கை யற்ற கௌசிகனுடன் மகாதேவியின் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையவில்லை. மகாதேவி கணவனை – அனைத்தையும் விட்டு நீங்கித் திரிய ஆரம்பித்தார். ஆண்கள் மதிக்கும் கடைசி சலுகையான மானத்தை யும், ஆடையையும் துறந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அல்லமரும், பசவரும் இடம் பெற்றிருந்த கல்யாணில் உள்ள சிவானுபவ மண்டபத்திற்கு மகாதேவி சென்றார். அங்கே அல்லமருக்கும், மகாதேவிக்கும் இடையே வாதம் நிகழ்கிறது. இவ்வாதத்திற்குப்பின் புனிதர்பேரவை மகாதேவியை ஏற்றுக் கொள்கிறது. அங்கிருந்து ஸ்ரீசைலம் சென்று சிவபெருமானைப் பாடிப்பரவுகிறார். தனது இருபது வயதில் இறைவனுடன் கலந்து விட்டார்.

மகாதேவனின் பாடல்கள் இறைவனிடம் தான் கொண்டுள்ள காதலைப் பற்றிக் கூறுவனவாக – புறக்கணிக்கப்பட்ட காதல், பிரிவாற்றாமை, காதலுடன் (இறைவனுடன்) கூடியிருக்கும் நிலை என மூவகை – உள்ளன.

அகப்பொருள் நிலையில் இறைவனிடம் பறவைகளை – மயில், அன்னம், வண்டு – தூதுவிடுகிறார்.

" O Peacocks in the caverns
dont you know?
don't you know?

Tell me if you know; where is He
my Lord
white as jasmine?

''அவன் என் இதயத்தைப் பண்டமாற்று செய்து கொண்டான். என் சதையைக் கொள்ளையடித்தான். என்னையே எடுத்துக் கொண்டான் என் தலைவனாகிய மல்லிகார்ச்சுனன்''

"He bartered my heart,
looted my flesh,
claimed as tribute
(took over) my pleasure,
all of me.

I'm the woman of love
for my lord, white as jasmine"

''கைப்பொருளை நீ கொள்ளை அடிக்கலாம்; உன்னால் உடம்பின் புகழைக் கொள்ளை அடிக்க முடியுமா?

அணிந்திருக்கும் ஒவ்வொரு ஆடையையும் உருவலாம். ஒன்றுமில்லாமையை உருவமுடியுமா?

எல்லாம் (மானம்) துறந்த பெண்ணுக்கு மறைப்போ, துணியோ, அணியோ தேவையா?

" You can confiscate
money in hand;
can you confiscate
the body's glory?

Or peel away every strip
you wear,
but can you peel
the Nothing, the Nakedness
that covers and veils?

To the shameless girl
wearing the white jasmine Lord's
light of morning,
you fool,
where's the need for cover and
jewel".

மகாதேவியின் ஆடையற்ற நிலையும், அதனைக் குறித்து அல்லமர் தொகுத்த வினாக்களும் இக்கவிதைக்கு அடித்தளம் என்றாலும், அதனடியாகப் பிறந்த அற்புதமான தத்துவச் செய்திக்கு ஈடு என்ன இருக்க முடியும்?

''ஒன்றுமில்லாமையை உருவ முடியுமா?

அல்லமப்பிரபு

சிவபெருமானே அல்லமராக வந்திறங்கினார் என்று சொல்லப்படுகிறது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஹரிஹரர் என்ற அருட்கவிஞர் வீரசைவ அருளாளர்கள் வாழ்க்கையை அருட்கவிகளாகப் பாடி அருளியிருக்கிறார்.

அல்லமர் நடன ஆசிரியரின் மகனார்; கோவிலில் மத்தளம் கொட்டும் பணிபுரிந்தவர். அவர் காமலதா என்ற பெண் மேல் காதல் கொண்டு மணம் புரிந்தார். காமலதா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுரத்தால் பீடிக்கப்பட்டு உயிர்நீத்தார். மனம் உடைந்துபோன அல்லமர் பித்து பிடித்தாற் போல காடு, வயலெல்லாம் காமலதாவைத் தேடி அலைந்தார்.

அல்லமர் ஒரு முறைத்தரையைக் கிளறிக் கொண்டிருந்த பொழுது கோவில் கோபுரத் தங்கக்கலசம் தட்டுப்பட்டது. முழுமை யாகத் தோண்டிய பிறகு கோவில் கத வொன்று தென்பட்டது. அல்லமர் கதவை ஓங்கி உதைக்கக் கதவு திறந்தது. அங்கே அனிமிசையா என்ற யோகி நிட்டையில் இருந்தார். அனிமிசையா கண் திறந்து அல்லமருக்கு சிவலிங்கம் தந்து அருளினார்.

அல்லமர் பிரபுவை பசவண்ணா, மகா தேவியக்கா முதலான வீரசைவ வசன இலக்கிய அருளாளர்கள் குருவாக ஏற்றுக் கொண்டனர். அவர் தலைமையில் கல்யாணில் ''சிவானுபவ மண்டபம்'' சிறப்புற நடைபெற்றது.

அல்லமர் புறச்சடங்குகளைக் கடுமை யாக எதிர்த்தார். பசவண்ணா (பசவர்) நற்பணிகள் புரிந்தாலும் உலக இச்சையில் நாட்டம் கொண்டதை அல்லமர் உணர்த்தி னார். உலகம் மருட்சி அடைய ஆடையை நீக்கிக் கற்றையால் மறைத்துக் கொண்ட மகாதேவியக்காவை நகையாடினார்.

சித்தர்கள் சித்திகள் செய்து காட்டுவதை அல்லமர் எதிர்த்தார். சித்திகள் ஞானிக ளுக்குக் கைவந்தவை என்றாலும், அவற்றைப் பிரயோகிப்பது அதிகார ஆசைக்கு இடம் கொடுக்கும் என்பது அவர் கருத்து.

கோரக்சர் என்பவர் சித்தர்களின் தலைமைப் பீடத்தில் இருந்தவர், ஒளியுடல் பெற்றவர். அவர் அல்லமரிடம் ஒருவாளைக் கொடுத்து தன் உடம்பில் பாய்ச்சச் சொன்னார். வாள் அவர் உடலில் பாயாமல் தொங்கியது. ஒரு சொட்டு ரத்தம் சிந்தவில்லை. கோரக்சர் பெருமிதத்தால் சிரித்தார். அல்லமர் அதே வாளை அவரிடம் கொடுத்துத் தன்னுடலில் பாய்ச்சச் சொன்னார். அல்லமர் உடம்பு சூனியம். வாள் உள்ளே புகுந்து வெளியே வந்தது. அல்லமர் கோரக்சரைப் பார்த்து,

''நீங்கள் உங்கள் சித்தியால் உலோகத்தை ஆளுமைக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அதில் சாரம் இல்லை. உங்கள் யோகப் பயிற்சியால் ஒளியுடல் பெற்றி ருக்கலாம். ஆனால் அதில் ஆன்மா இல்லை. உங்கள் பேச்சும், வாதமும் வெற்றுரையே, அது ஆன்மாவை விளக்காது. நானும் நீங்களும் ஒன்று என்று நீங்கள் சொன்னால் நீங்கள் நான்தான், ஆனால் நான் நீங்கள் இல்லை''.

"With your alchemies,
you achieve metals,
but no essence.

With all your maniflod yogas,
you achieve
but no sprit.

With your speeches and arguments
you build chains of words
but cannot define the spirit.

If you say
you and I are one,
you were me
but I was not you".

அல்லமர் காமத்தில் உழன்றவர்களுக்கு யோகத்தையும், ரசவாதிகளுக்கு உள்ளொளி யையும், அச்ச நீக்கத்தையும், பக்தர்களுக்கு மிருக பலியை நீக்கி மிருக உணர்ச்சியைப் பலியிடும் முறையையும் உணர்த்தி அருளினார். இவ்வாறாக கேலியால் – வசையால் – வாதத்தால் – கவிதையால் – அன்பாதரவால் – 'சும்மா'யிருக்கும் இருப் பால் – சாதாரண மக்களுக்கு ஞான ஒளியும், ஞானிகளுக்கே விடுதலையும் அல்லமர் தந்தருளினார்.

அல்லமருடைய வசன கவிதைகள் அவரது வாழ்க்கையையோ, உணர்ச்சி களையோ, போராட்டங்களையோ வெளிப் படுத்துவன அன்று (பசவர் கவிதைகளுக்கு மாறானவை). அல்லமர் ஞானம் பெற்ற பிறகு பாடிய கவிதைகள், தத்துவங்கள் நிரம்பியவை; உள்ளர்த்தம் உள்ளவை; உருவகங்கள் கொண்டவை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறியாமை (வண்டு) இதயத்தில் தோன்றியது. ஒளியை மறைத்தது. உடம்பின் நிலையாமை உணர்ந்தபிறகு வண்டு தன் சக்தியை இழந்தது. (அன்னத்தின் ஐந்து நிறக்கூண்டு – ஆன்மா)

மற்றுமொரு கவிதை; இதயத்தில் மலர்ந்த லிங்கம் (சிவபெருமான்) கரங்களில் இஷ்டலிங்கமாகப் பரிணமித்தது.

"I saw:
heart conceive,
hand grow big with child"

கர்ப்பூரமணத்தைக் காது குடித்தது. இங்கு கர்ப்பூர மணம் தன்னையறிதல் ஆகும். மிச்சமில்லாமல் தன்னையழித்து மேன்மை பெறுவது கர்ப்பூரம். இவ்வசன கவிதையில் பொறிகளும், புலன்களும் மாற்றித்தரப்பட்டுத் தெய்வீக அனுபவத்தை உணர்த்துகிறது. முத்து (முத்தி) முக்திக்கு அடையாளம். வைரங்கள் – பிரபஞ்ச அர்த்தங்கள் . நீலக்கல் – மாயை.

"Ear drink up the smell
of camphor, nose eat up
the dazzle of pearls;
hungry eyes devour
diamonds.

In a blue sapphire
I saw the three worlds
hiding.

O Lord of caves".

(ஈ) வீர சைவம் (சமுதாயம்)

வீர சைவர்கள் லிங்காயத்துகள் எனக் கர்நாடக மாநிலத்தில் அழைக்கப்படுகின்றனர். வீர சைவம் இந்து சமயத்தில் ஒரு பிரிவாக இருந்தாலும், லிங்காயத்து அரசியல் நிர்ணயச் சட்டத்தில் தனிச் சமயமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

நாட்டுப் பாடல்கள் : லிங்காயத்து சமயத்தில் நாட்டுப்பாடல்கள் இரண்டறக் கலந்து விட்ட ஒன்று. பெண் முதல் பூப்படைதல், திருமணம் நிச்சயம் செய்தல், திருமணநாள் முதல் இரவு, திருமணம் நடந்தபின் 5 வாரங்கள் – புதன்கிழமை சனிக்கிழமைகள் ஆகிய விசேட நிகழ்ச்சிகளில் பெண்கள் நாட்டுப் பாடல்கள் பாடுவார்கள். ஈமச்சடங்குகள் நடக்கும் பொழுது ஆண்கள் இசைக்கருவிகளுடன் நாட்டுப்பாடல்களைப் பாடுவார்கள்.

பெண்கள் பாடும் நாட்டுப்பாடல்களில் லிங்காயத்து வீரப்பெண்கள், உலகத் தோற்றத்துக்குக் காரணமான தாய்த் தெய்வம், பார்வதி, விடுமுறைக் காலங்களின் மகிழ்ச்சி, குடும்ப வாழ்க்கையின் மனோ தத்துவம் ஆகியன இடம் பெற்றிருக்கும். இந்தப் பாடல்களைப் பெண்கள் வயல்களிலும் வீடுகளிலும், ஞானிகள் சமாதி இடங்களிலும், ஓய்வு நேரங்களிலும் பாடி மகிழ்வார்கள்.

ஆண்கள் திருவிழாக்கள், ஊர்வலங்கள், சமயக் கண்காட்சிகளில் பாடுவார்கள்.

சிரவண புனித மாதத்தில் (ஜுலை – ஆகஸ்ட்) லிங்காயத்து மடங்களில் லிங்காயத்து தெய்வங்கள் அருளாளர்கள் பற்றிய புராணக் கதைகளைப் படிப்பார்கள்.

சமயவிழாக்கள் : லிங்காயத்து அருளாளர்கள், வீரர்கள் நினைவாக நடத்தப்படும் சமய விழாக்கள் (fairs) கிராமவாசிகளுக்குப் பெரிதும் மகிழ்ச்சி தருவன ஆகும். தெய்வ ஊர்வலங்கள் இதில் முக்கிய அங்கம் வகிக்கும். காலையில் கோயிலில் பலி தரப்படும், விபூதி, உருத்திராக்கம், ஞானிகள், தெய்வங்களின் படங்கள், தெய்வீக புத்தகங்கள் விற்கப்படும்.

பெண்கள் 'அக்கம்மா மன்றங்கள்' நிறுவி அனாதை இல்லம் நடத்துதல், பெண்கள் கல்விக்குப் பாடுபடுதல், கைத்தொழில் கற்றுக் கொடுத்தல், நர்சரி பள்ளி நடத்துதல் போன்ற சமுதாயப் பணிகளும் புரிகின்றனர். இந்த மன்றக் கூட்டங்களில் நாட்டுப் பாடல்கள் பாடுவார்கள்.

1900-ஆம் ஆண்டிலிருந்து லிங்காயத்து கல்வி வளர்ச்சியில் விரக்தா துறவிகளின் பங்களிப்பு கணிசமானது. 1920-ஆம் ஆண்டில் இந்த இயக்கம் வலுப்பெற்றது. பள்ளிகள் கல்லூரிகள் இருக்கும் ஊர்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிராமத்து மாணவர்கள் இலவசமாகத் தங்க உணவு விடுதிகளை இவர்கள் ஏற்படுத்தி யுள்ளனர்.

இவ்வாறு லிங்காயத்து (வீர சைவம்) சமயம் கர்நாடக மக்களின் அன்றாட சமுதாய வாழ்வில் பின்னிப் பிணைந் துள்ளது.[1]

கி.பி. 1300 முதல் 1526 வரை

(17)

மத்திய கால அருளாளர்கள்

சமயநிலை : கி.பி. 14-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் பௌத்தம் இந்தியா வில் மறைந்து விட்டது. சமணம் இந்தியா வின் மேற்குப் பகுதியில் சில இடங்களில் மட்டும் இருந்தது. இஸ்லாம் இன்னும் முழுமையாகப் பரவவில்லை. இந்தியா வின் பெரும்பான்மை இடங்களில் வேதவேள்வி, சைவம், வைணவம், சாக்தம், தாந்திரீகம் பரவி இருந்தன.

அருளாளர்கள் : அருளாளர்களும் ஞானிகளும் முதன்மை பெற்றது இக்கால கட்டத்தின் தனித்தன்மை ஆகும். இவர்கள் அனைவர்க்கும் ஒரு பொதுத்தன்மை இருந்தது. இவர்கள் எந்தத் தனிப்பிரி வோடும் தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளவில்லை. தங்கள் சொந்த அனுபவத்தால் ஞானம் பெற்றவர்கள். எந்தச் சடங்குகளையும் பின்பற்றாதவர்கள். ஒரே கடவுள் – ராமனோ, சிவனோ, அல்லா வோ, கிருஷ்ணனோ – கொள்கையைக் கொண்டவர்கள். இவர்கள் பக்தியை – தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்கும் சரணாகதியை – வலியுறுத்தினர்.

சூபிக்கள் : இதே போன்ற இயக்கம் இஸ்லாமிய சமயத்திலும் இணையாகத் தோன்றிப் பரவிற்று. இவ்வியக்கத்தில் முன் நிற்பவர்கள் ''சூபி''கள் (Sufis) ஆவர். ''தன்னை அழித்து இறைவனை அடையவேண்டும். மக்களிடம் காட்டும் அன்பே இறைவனிடம் காட்டுவதாகும். இசை இறைவனிடம் கொண்டு செல்லும்'' என்பது சூபிக்களின் கருத்தாகும். முஸ்லிம் கள் வெளிப்பண்புகளை முதன்மைப் படுத்தினர். சூபிக்கள் மனத்தூய்மையை வலியுறுத்தினர். மரபுவழி முஸ்லிம்கள் சமயச் சடங்குகளைப் பின்பற்றினர். சூபிக்கள் அன்பு ஒன்றே கடவுளை அடையும் வழி என்றனர்.

இராமாணந்தர் : இராமானந்தர் (கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) வைணவ – பிராமணராக இருந்தாலும் சாதி ஏற்றத் தாழ்வினை மறுத்தார். ஒருவர் வைணவராக இருந்தால் அவர் எச்சாதியாக இருந்தாலும் சேர்ந்து உண்டார். இவருடைய முதன்மைச் சீடர்களில் ஒருவர் ராஜபுத்திர அரசர், ஒருவர் நெசவு செய்பவர், ஒருவர் நாவிதர், ஒருவர் விவசாயி, ஒருவர் செருப்பு தைப்பவர் ஆவர். இராமானந்தரின் இரண்டாவது சீர்திருத்தம் தாய் மொழி யைப் பயன்படுத்துதல் ஆகும். மூன்றாவது சீர்திருத்தம் ராதா – கிருஷ்ணன் வழிபாட் டிற்குப் பதில் ராமர் – சீதை வழிபாட்டை முதன்மைப்படுத்தல். மத்தியகால இந்திய சமய மறுமலர்ச்சியில் இராமானந்தர் தனி இடம் வகிக்கிறார். ''பிரமன் (பிர்மா அன்று) என் நெஞ்சில் குடியிருக்கிறான். நான் எங்கெல்லாம் சென்றாலும் அங்கே கல்லையும், தண்ணீரையுமே (வழிபடும் இடங்கள்) காண்கிறேன். ஆனால் நீயோ அவற்றில் எல்லாம் நிரம்பி உள்ளாய். அவர்கள் எல்லாம் வேதத்தில் பிரமனை வீணாகத் தேடுகிறார்கள்'' – இராமானந்தர்.

கபீர் : இராமானந்தரின் பிரதம சீடராகிய கபீர் ஒரு முஸ்லீம் நெசவாளியால் வளர்க்கப்பட்டார். பக்தி, துறவு, உண்ணா நோன்பு, ஏழைகட்கு உணவிடுதல் ஆகியன வற்றை கபீர் வலியுறுத்தினார். அவர் இந்து – முஸ்லிம் வேறுபாடு பார்க்கவில்லை. தன்னை ''இராமன் – அல்லாவின் பிள்ளை'' என்று கூறிக்கொண்டார் இரு சமயத்தவரும்

1) "Speaking of Siva" - A.K. Ramanujam (பசவர் முதலான வீரசைவ அருளாளர்களின் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு – A.K. Ramanujam)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கபீரைப் பின்பற்றினர். ''நான் கோயிலில் இல்லை; மசூதியிலும் இல்லை; நான் கபாவில் இல்லை; கயிலாயத்திலும் இல்லை;

''கடவுள் மூச்சில் மூச்சாக இருக்கிறார்''.

''உன்நெஞ்சிலே பார்; அங்கே கரீம் – ராமைத் தரிசிக்கலாம்''
(கபீர்)

சைதன்யர் : மத்யகால இந்தியாவின் தலைசிறந்த அருளாளர் சைதன்யர் (கி.பி. 1486) ஆவார். ராதா – கிருஷ்ணன் காதல் – பக்தியே இவரை ஈர்த்தது. ''ஹரி'' ''கிருஷ்ணன்'' நாமங்களைப் பாடியும் ஆடியும் பரவசத்தில் தன்னை இழக்கும் நிலைக்குச் சென்றுவிடுவார். இந்நிலையே மக்களைப் பெரிதும் அவர்பால் ஈர்த்தது.

நாணக் : சைதன்யரின் காலத்தவர் நானக் (கி.பி. 1469). இந்துக்களையும், முஸ்லிம் களையும் ஒன்றாக்க முயன்றவர். சீக்கிய சமயத்தை நிறுவியவர் ''ஒரே கடவுள்; கடவுளிடம் அன்பு செலுத்துதல்'' என்பது இவர் கோட்பாடு ஆகும்.

(18)

சைவசமயம் – இந்தியா

விஜய நகர அரசர்கள் : விஜயநகர அரசர்கள் சைவர்கள் ஆவர். விருபாட்சர் அரசர்களின் குல தெய்வம் ஆகும். ஹரிஹரர் I, புக்கர் I. இருவரும் காசிவிலாச கிரியா சக்தி எனும் பாசுபத குருவின் சீடர்கள் ஆவர். கிருஷ்ண தேவராயர் வைணவத்தைப் பின்பற்றினாலும் சோழ நாட்டுசிவன், விஷ்ணு கோயில்களுக்கு 10,000 பொற்காசுகள் வழங்கினார். கி.பி. 1517-இல் சிதம்பரம் கோயில் வடக்கு கோபுரத்தைக் கட்டினார். கிருஷ்ண தேவராயர் அரசவையை அலங்கரித்த திம்மண்ணர், காளகத்தி மகாதம்மியம் எழுதிய தூர்ஜதி, மல்லண்ணா ஆகியோர் சைவர்கள் ஆவர்.

வீர சைவ இலக்கியம் : கன்னட நாட்டில் வீரசைவம் தழைத்தோங்கியது. பீமகவி பசவ புராணத்தையும், சாமராஜர் பிரபுலிங்கலீலையும், லக்கணர் சிவ தத்துவ சிந்தாமணியும் இயற்றினர். கி.பி. 1400-இல் ஸ்ரீபதி பண்டிதாசாரியர் வேதாந்த சூத்திரத் திற்கு வீரசைவ அடிப்படையில் ஸ்ரீகரபாஷ் யம் என்ற உரை எழுதினார். கி.பி. 1430-இல் குருபசவர் சப்த காவியங்களை எழுதினார்.

காஷ்மீரத்தில் லல்லேசுவரி (கி.பி. 1400) என்னும் அம்மையார் சிவபெருமானின் திருவிளையாடலை பாடியருளினார்.[1]

(19)

இந்திய இலக்கியம்

கன்னட இலக்கியம் : இக்கால கட்டத்தில் வீரசைவர்களும், ஹரிதாசர் களும், சமணர்களும் கன்னட இலக்கியம் படைத்துள்ளனர். இங்கே வீரசைவ இலக்கியம் மட்டுமே எடுத்துக் கொள்ளப் படுகிறது. குப்பி மன்னண்ணார்யரின் (1513-1530) பாலசிந்தாரத்னம் பஞ்சாட்சர மந்திரம் பற்றிக் கூறுகின்றது. அவரது மற்றொரு படைப்பான வீரசைவாமிருத புராணம் 7000 பாடல்கள் கொண்டது. இந்நூல் வீரசைவத் தத்துவம், சிவ லீலைகள், வீரசைவ அருளாளர்களின் கதைகள் – ஆகியன கூறுகின்றது.

விருபாட்ச பண்டிதரின் (கி.பி. 1584) சென்னபசவபுராணம், சடாட்சரத்தின் ராஜசேகரவிலாசம் ஆகியன இக்காலத்தில் எழுந்த வீரசைவ நூல்கள்.

சர்வக்ஞரின் (கி.பி. 1600) வசனங்கள் சாதி, நிற வேற்றுமை தாண்டி உலகத் தத்துவம் கூறுவன.

சம்ஸ்கிருத இலக்கியம் : வட இந்தியா முஸ்லிம் அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தமையால் சம்ஸ்கிருத இலக்கியம் அங்கு ஏதும் உருவாகவில்லை. தென்னிந்தியாவில் மத்வாச்சாரியாரும், சாயனாச்சாரியாரும் உருவாக்கிய மறு மலர்ச்சியினால் சம்ஸ்கிருத இலக்கியம்

1) "The History and Culture of the Indian People" - VI.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரிதும் வளர்ந்தது. தஞ்சாவூரில் இரகுநாத நாயக்கரும் அவனது அரசவைக் கவிஞர் களும் பல காவியங்கள் இயற்றினர். செஞ்சி நாயக்கர்களின் அமைச்சரான சீனிவாச தீட்சதர் 18 நாடகங்களும் 60 காவியங்களும் இயற்றினார்.

மதுரை திருமலை நாயக்கரின் அமைச்சரான நீல கண்ட தீட்சதர் சிவலீலார் னவம், கங்காவதாரணம் என்ற இரு நூல்களை இயற்றினார். சிவ லீலார்னவம் 22 காண்டங்களைக் கொண்ட பெருங்காவி யம் ஆகும். சிவபெருமானின் 64 லீலை களைக் கூறுவது. பகீரதன் தவத்தை விவரிக் கும் கங்காவதாரணம் 8 காண்டங்களைக் கொண்டது.

அப்பய்ய தீட்சதர் அத்வைத தத்துவத்தையும், ஸ்சவசித்தாந்தத்தையும் விளக்கும் நூறுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவரது சிவார்க்கமணி தீபிகை ஸ்ரீகண்டரின் பிருமசூத்ர உரைக்கு விளக்கம் ஆகும். அவரது மற்றொரு நூலான சதுர்மதசார சங்கிரகம் மத்வர், சங்கரர், இராமானுஜர், ஸ்ரீகண்டர் ஆகியோரின் கோட்பாடுகளை விளக்குவது ஆகும்.

முஸ்லிம் அரசு ஆட்சியில் இருந்தமை யால் அராபிய, பாரசீக இலக்கியங்கள் பல்கிப் பெருகின.

கி.பி. 1526 முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை

(20)

சமயச்சூழல்

பிராமணர் – பிராமணர் அல்லாதார் போராட்டம் : பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் எழுந்த பக்தி இயக்கம் பிராமணர் அல்லாதாரின் நிலையைப் பெரிதும் உயர்த்திற்று. பிராமணர்களுக்கே குருவாகும் நிலைக்கு உயர்ந்தனர் க்ஷத்ரியர்கள். வைசியர்களையும் கூட சூத்திரர்கள் என்று இக்காலகட்டத்தில் ஸ்மார்த்தர்கள் கூறலானார்கள். பிராமணர் – பிராமணர் அல்லாதார் போராட்டம் தென்னிந்தியாவில் வைணவத்தில் வடகலை – தென்கலை போராட்டமாக மாறியது. தென்கலை வைணவர்கள் பிறப்பில் சூத்திரராக இருந்தாலும், திருமால் அடியாராக இருந்தால் குருவாக லாம் என்றனர். வடகலை வைணவர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர்.

வட இந்தியாவில் தென்கலைத் தத்துவத்தைப் புகுத்தியவர் கோபால பட்டர் ஆவார். சூத்திரர்களும் சாளிக் கிராம சிலையை வழிபடலாம் என்று ஸ்கந்த புராண எடுத்துக்காட்டுகள் காட்டி நிறுவினார். இதற்குப் பிராமணர்களால் கடும் எதிர்ப்பு காட்டப்பட்டது. மிகச் சிறந்த கவிஞரான துளசிதாசரே இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். பிராமணர்கள் – சூத்திரர்கள் என்ற இரண்டே பிரிவுகள் தான் என்ற நிறுவலானார்கள்.

தாந்திரீகம் : தாந்திரீகத்தில் இந்தப் போராட்டம் எழவில்லை. தாந்திரீகம் சூத்திரர்களையும் ஏற்றுக்கொண்டது. அது மட்டுமல்லாது மத்யகாலத்தில் தாந்திரீகம் முன்வைத்த தாழ்நிலையும் மாறலாயிற்று. காமாக்ய தந்திரம் தாந்திரீக வழிபாட்டா ளர்களை திவ்யர்கள், வீரர்கள், பசுக்கள் என மூவகையாகப் பிரித்தது. திவ்யர்கள் அஞ்சாமை, மனநிறைவு, உண்மை ஆகிய பண்புகளைக் கொண்டவர்கள். அவர்கள் வீரம், தைரியம் மிக்கவர்கள், பசுக்களின் மனதில் அச்சத்தை விளைப்பவர்கள். பசுக்கள் பொறாமை, கோபம் முதலான தீக்குணங்களுக்கு அடிமைப்பட்டவர்கள்.

தாந்திரிகம் தூய்மையடைதல் : குலார்னவ தந்திரம் பஞ்ச மகாரங்களை நெறிப்படுத்தித் தூய விளக்கங்களை எடுத்துரைத்தது. "மது" –கள் அல்ல. குண்டலினிசக்தி சிவத்துடன் கலக்கும் பொழுது வெளிப்படும் அமுது. ஞான வாளை ஏந்தி தகுதியற்றவற்றை அழித்து, மனதை சிவத்துடன் நிலைப்படுத்து பவனே "மாமிசம்" உண்பவன் ஆவான். அனைத்துப் புலன்களையும் அடக்கி ஆத்மாவில் செலுத்துபவனே "மீன்" தின்பவன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாந்திரீக இலக்கியங்கள் நிரம்ப எழலாயின. சைவர்கள், சாக்தர்கள் அல்லாது வைணவர்களும் தாந்திரிகத்தில் ஈர்க்கப் பட்டனர்.

சக்தி பீடங்கள் : தொடக்கத்தில் சக்தி பீடங்கள் ஐந்து அல்லது ஏழு மட்டுமே இருந்தன. அது பின்னர் விரிந்து 51 சக்தி பீடங்களாக மாறின. இதில் மூன்றில் ஒரு பங்கு சக்தி பீடங்கள் வங்காளத்தில் மட்டுமே உள்ளன.

சைவம்: அப்பய்ய தீட்சிதர் : அப்பய்ய தீட்சிதர் ஏகான்மவாதம் சைவம், சித்தாந்தம் ஆகியவற்றை இணைத்து நூறுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றினார். அவரது ரத்ன – த்ரய – பரிட்சை என்ற கோட்பாடு சங்கர – பார்வதியையும், சங்கர நாராயணரையும் இணைக்கும் தத்துவமாக மிளிர்ந்தது. அப்பய்ய தீட்சதர் வேலூர் நாயக்கர்களின் ஆதரவில் இருந்தார்.

சத்யாகிரகம் செய்த சிதம்பரம் சைவர்கள் : பதினாறாம் நூற்றாண்டுச் சைவர்கள் சத்யாகிரக முறையைப் பின் பற்றினர். கி.பி. 1597-இல் செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கர் சிதம்பரம் கோவிந்த ராஜர் கோயிலில் ''பெருமாள் குறி'' எனப்பட்ட ஆயுதத்தை நிலைநாட்டிய பொழுது, அதனை எதிர்த்து இருபது சைவக்குருமார்கள் கோபுரத்திலிருந்து விழுந்து உயிர் துறந்தனர். இதனால் வெகுண்ட அரசன் அனைத்துக் குருமார் களையும் கொல்ல உத்தரவிட்டான். இருவர் கொல்லப்பட்டனர். இதனைக் கண்ட ஒரு பெண் தன் கழுத்தை அறுத்துக் கொண்டாள்.

வங்காளத்தில் சைவம் : வடக்கு வங்காளத்தில் உள்ள கோச் பழங்குடியினர் வணங்கும் தெய்வம் சிவபெருமானுக்கு இணையானது ஆகும். இவ்வழிபாட்டை இராமேசுவரன் ''தனது'' சிவாயணத்தில் (18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) விரிவாகப் பாடியுள்ளார்.

கிழக்கு இந்தியாவில் சமயநிலை : அஸ்ஸாம், கூச், பீஹார், திரிபுரா சாக்த வழிபாட்டின் மையங்களாகத் திகழ்ந்தன. சங்கரதேவர் (1487) காமரூபத்திலும், கூச் பீஹாரிலும் வைணவத்தைப் புகுத்தினார்.

சைதன்யரைப் பின்பற்றுபவர்களிலும் கருத்து வேற்றுமை வந்து விட்டது. இருந்தும் அனைத்து இனத்தவரையும் ஏற்றுக் கொண்டதால் சைதன்ய இயக்கம் வங்காளத்தில் வேரூன்றி இருந்தது. ஒரு சில பிரிவினர் சாக்தத்தில் ஈர்க்கப்பட்டனர்.

ஒரிசாவில் பிராமணர்கள் வைணவத் தைக் காட்டிலும் சாக்தத்திலும், சைவத் திலும் ஈர்க்கப்பட்டிருந்தனர். இருந்தும் சியாமனந்தரும் அவரது சீடரும் ஒரிசாவில் சைதன்ய இயக்கத்தைப் பரவச் செய்தனர்.[1]

(21)

இந்திய இலக்கியம்

வங்காள இலக்கியம் : வங்காள இலக்கியத்தில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பதினேழாம் நூற்றாண்டின் தொடர்ச்சி யையே காணலாம். ''மங்கள காவியம்'' இலக்கியத்தில் உச்ச நிலையை எட்டியது. இந்த நூற்றாண்டின் சிறந்த கவிஞரான ராமேஸ்வர் பட்டாசார்யார் கி.பி. 1712-இல் ''சிவசங்கீர்த்தனம்'' (சிவாயணம்) என்ற நூலை இயற்றினார்.

பரத்சந்திரர் மற்றுமொரு சிறந்த கவிஞர் ஆவார். இவர் எழுதிய ''ஆனந்த மங்களம்'' மூன்று பகுதிகளை உடையது : (1) சிவன், பார்வதி, சிறுதெய்வங்கள் (2) சுந்தரன் – வித்யா காதல்கதை (3) மொகலாய தளபதி மான்சிங்கின் வெற்றி.

குஜராத் இலக்கியம் : சமண தீர்த்தங்கரர்களைப் பற்றிய வரலாறு களைக் கொண்ட ராஸ இலக்கியம் பல கவிஞர்களால் பாடப்பட்டுள்ளது.

1) "The History and Culture of Indian People" - Vol. VII - Bharatiya Vidya Bhavan .... 1974.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(22)

சைவக்கடவுளர்

(அ) உமை

வைணவ அவதாரம்போல அல்லாமல் சைவத்தில் குடும்ப அமைப்பில் கடவுளர் இணைக்கப்பட்டுள்ளனர். முதலில் சேருவது ருத்திராணி. வாஜசனேயி சம்கிதையில் அம்பிகை உருத்திரனின் சகோதரியாகச் சொல்லப் படுகிறார். பிறகுதான் மனைவியாகக் கருதப்படுகிறார். தைத்திரிய ஆரண்யகம், கேன உபநிடதத்தில் உமா, பார்வதி (ஹேமவதி) என்று அழைக்கப்படுகிறார். இக்கோட்பாடு விரிந்து உலக அன்னையாக – மேலும் சாக்தம் என்ற தனிப்பிரிவாக – மலர்கிறது. மொகஞ்சோதாரோ அகழ்வாய்வில் தாய்த்தெய்வ வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் உள. கொற்றவை வழிபாடு சங்க இலக்கியம், சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறது. மேலும் உருத்திரனையும் அக்னியையும் ஒருங்கிணைத்த பொழுது, நெருப்பின் நாவாக சக்தி கருதப்பட்டாள். சக்தியின் அழித்தல் தன்மை காளி என்றும், கராளி, பீமா, சண்டி, சண்டிகா, சாமுண்டா என்றெல்லாம் பெயர் பெற்றது. சக்தி சரஸ்வதியோடு இணைத்துப் பேசப்பட்ட பொழுது வாக்கு, வேதமாதா, சரவவர்ணா, சந்தேசாம் என்ற பெயர்கள் பெற்றது.

தத்துவச் சிந்தனையில் சக்தி கோட்பாடு : தத்துவச் சிந்தனையும் தேவியை சக்தியோடு பிணைத்துக் கூறுகிறது. சாங்கிய தத்துவத்தில் புருடன் செயல்படாதது. பிரகிருதி செயல்படக் கூடியது.

பிரமன் படைப்புத் தொழிலைச் செய்யும் பொழுது மாயையுடன் கூடி தொழிற்படுகிறான் என்று உபநிடதத்தில் சொல்லப்படுகிறது. அந்த மாயையே பின்னர் பிரமனின் நித்ய சக்தி என்று கொள்ளப்பட்டது. இந்தக் கோட்பாட்டினால் மாயையே தனித்துச் செயல் படலாம் என்ற சிந்தனை விளையாமல் இருக்க மாயை பிரகிருதியோடு தொடர்பு படுத்தப்பட்டது. மாயை ஒரே சமயத்தில் உள்ளொளி என்றும் கனவு, வெறும் தோற்றம் என்றும் ஆகிறது. உள்ளொளி என்கிறபொழுது தேவி சரஸ்வதி ஆகிறாள். வெறும் தோற்றம் என்கிற பொழுது மோகராத்திரி ஆகிறாள். சக்தி, ஞானம், சிந்தனையை மயங்க வைக்கும் திறன், ஆகியவை படைக்கும் பொருளோடு சேர்க்கப்பட்டு முழுவடிவம் பெற்ற பெண் தெய்வம் மகாலட்சுமியாக படைப்பவளாகவும், துர்க்கையாக அசுரர்களைக் கொல்பவளாகவும், தேவி என்று சாக்த இலக்கியங்களால் கூறப்படுபவளாகவும், யோகநித்திராவாக அனைத்துப் படைப்புகளையும் நிரந்தர நித்திரைக்கு அனுப்புபவளாகவும் இருக்கிறாள்.

இதிகாசங்களில் சக்தி : தேவியை விஷ்ணுவின் சகோதரியாக ஹரிவம்சமும், சிவனின் மனைவியாக இராமாயணமும், துர்க்கையை சிவனின் மனைவியாக இரு நிலைகளில் பாரதமும் குறிப்பிடுகின்றன. தேவி மலையரசி – சிவன் மனைவி என்ற சிந்தனையே தூக்கலாக நிற்கிறது. நாட்டுப்புற வழக்காற்றில் புழக்கத்தில் இருந்த மகிடாசுரன் வதை வரலாறே தேவியை உன்னதமான நிலையில் வைத்தது எனலாம்.

சிவக்குடும்பம் : சைவத்திற்கும், சாக்தத்திற்கும் தொடர்பு ஏற்படுத்திய பிறகு இரண்டு நெறிகளின் கோட்பாடுகளும் ஒன்றையொன்று உள்வாங்கிக் கொண்டன. சிவன் மனைவி பார்வதி, புதல்வர்கள் கணேசன், கார்த்திகேயன் என்ற உறவு முறைகள் நிலைப்பட்டுவிட்டன. இது மட்டுமன்று. பௌத்தத்திலிருந்து தாரா வழிபாடும் சிவ சக்தி வழிபாட்டில் இணைந்தது.

தேவியின் எட்டு வடிவங்கள் : சிவ பெருமானுக்குக் கோரமாகவும் சாந்தமாகவும் எட்டுவடிவங்கள் அட்ட மூர்த்தங்கள் இருப்பன போல தேவிக்கும் எட்டுவடிவங்கள் உள்ளன. உமை, கௌரி, பார்வதி, பவானி, அன்னபூரணி, லலிதா ஆகியன தேவியின் சாந்த வடிவங்கள் ஆகும். சாமுண்டா, துர்கா, காளி மற்றும் ராத்திரி என்று முடிகின்ற பெயர்கள், சண்டா, காத்யாயனி, பைரவி ஆகியன கோர வடிவங்கள் ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனிப்பெரும் தெய்வம் ஆதல் : தொடக்க கால கடவுளர்களின் சக்திகளின் கூட்டு வடிவம் – அல்லது சமகாலத்தில் வழிபடப்பட்ட பிரமன் (பிரமனி) மகேசுவரன் (மகேசுவரி), குமாரன் (கௌமாரி), விஷ்ணு (வைஷ்ணவி), வராகம் (வராகி), இந்திரன் (இந்திராணி), யமன் (யமி அல்லது சாமுண்டா) சிவன் (யோகேசுவரி) ஆகிய பெருந்தெய்வங்களின் கூட்டுவடிவமாகத் தேவி ஆரம்ப நிலையில் கருதப்பட்டாள். காலம் மாற இக்கோட்பாடு மாறி முன்னர் குறிப்பிட்ட அனைத்து வடிவங்களையும் தன்னுள் அடக்கி படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் புரியும் ஒப்பற்ற தனிப்பெருந்தெய்வமாக தேவி கருதப்பட்டாள். இவ்வாறு தாந்திரீக வழிபாடு தோன்ற விதை விதைக்கப் பட்டது எனலாம்.

துர்க்கையின் சிலை வடிவங்கள் : சக்தி வழிபாடு தோன்றிய இடம் வங்காளம் ஆகும். இதுவரை கிடைத்துள்ள மகிஷாசுரமர்த்தன சிலைகள் குப்தர் காலத்திற்கு முன் கொண்டு செல்ல முடியாது. பீடாவில் கிடைத்த சிறு உருவச்சிலைகள் தான் ஆரம்ப காலத்தன. மகிஷாசுரமர்த்தினியின் உருவச் சிலைகள் உதயகிரி, சம்பல், மாமல்லபுரம்ஆகிய இடங்களில் உள்ளன. தேவியின் உக்கிர உருவச்சிலைகளை விட சாந்தமான – தெய்வீகத் திருஉருவங்களே நிரம்ப கிடைத்துள்ளன. மாமல்லபுரத்தில் இவற்றைக் காணலாம்.[1]

(ஆ) கணபதி

சைவக் கடவுளருள் ஒருவரான கணேசன் என்பதற்கு கணங்களின் தலைவர் என்று பொருள் கொள்ள வேண்டும். ரிக் வேதம் உருத்திரனைக் கணங்களின் தலைவனாகக் கூறும். அதர்வசிர உபநிடத்தில் விநாயகர் பற்றியும், மகாபாரதத்தில் கணேசர், கணபதி, விநாயகர் என்றும் கூறப்படுகிறது.

கணபதி வழிபாடு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில்தான் தமிழ்நாட்டில் தொடங்கியது என்பது திருச்செங்காட்டாங்குடி திருக்கோயில் கணபதியீச்சரம் எனப்பெயர் பெற்றது என்பதிலிருந்து தெரிய வருகின்றது. ஞானசம்பந்தர் இப்பெயராலே இத்திருக்கோயிலைப் பாடியருளியுள்ளார்.

சூத்திரங்கள் சம்கிதைகளில் கணபதி: கி.பி. 320 முதல் கி.பி. 740 வரையிலான கால எல்லையில் கணபதி வழிபாடு முக்கியத்துவம் அடைந்தது. மானவ – கிருஹ்ய சூத்ரத்தில் கணேசுவரன், விநாயகன் பற்றிய மங்கலான செய்தி வெளிப்படுகிறது. இச்சூத்திரத்தில் கணபதியின் நான்கு பெயர்களாக ஊஸ்மிதா (Usmita), தேவயக்ஞா (Devayajana), சாலகடங்கடா (Salakatankata), கூஷ்மாண்டராஜபுத்ர (Khushmandarajaputra) குறிப்பிடப்பட்டுள்ளன. யாக்ஞாவல்க்ய சம்ஹிதையில் முதல் இரண்டு பெயர்களுக்குப் பதிலாக மிதா, சம்மிதா (Mita, Sammita) என்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூன்றாவது பெயரும், நான்காவது பெயரும் இரண்டிரண்டாகப் பிரிந்து சாலா, கடங்கடா என்றும் கூஷ்மாண்ட, ராஜபுத்ரா என்றும் குறிக்கப்பட்டுள்ளன. பிருஹத் சம்கிதை கணங்களைப் பற்றியும் விநாயகர்களைப் பற்றியும் கூறுகிறது.

தனிக்கடவுள் : பின்னர் கணபதி தனிக்கடவுளாக – கணங்களின் (கணங்கள் உருத்திரனைப் பின்பற்றுபவர்கள்) தலைவனாக இடம் பெறுகிறார். ஆனால் கணபதியின் பலவடிவங்கள் – ஐம்பதுக்கும் மேற்பட்டவை நிலைத்து விட்டன. மஹா, ஹரித்ரா, சுவர்ண, சந்தான, நவநீத, உன்மத்த உச்சிஷ்ட என்ற கணபதியின் ஆறுசொரூபங்களில் தோன்றிய ஆறு பிரிவுகளைச் சங்கரர் நீக்குகிறார்.

கணபதியின் உருவச்சிலைகள் : இன்றுள்ள கணபதியின் குப்தர் கால – குப்தருக்குப் பிற்காலத்திய – உருவச் சிலைகள் நின்றநிலை, அமர்ந்தநிலை, நடனநிலை என மூவகையில் உள்ளன. இவை நாடெங்கும் பரவியிருந்தன.

1) "The History and Culture of Indian People" - Bhavan's III.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்துக்கள் மட்டுமல்லாது பௌத்தர்களும், சமணர்களும் கணபதியை வழிபட்டனர். இந்தச் சிலைகள் தூரக்கிழக்கு நாடுகளுக்கும் இந்தோனேசியாவுக்கும் பரவ பௌத்தர்களே காரணமாக இருந்தனர். மதுராவில் நின்ற நிலையில் உள்ள சிலையும், பீடார்கௌவானில் (Bhitargaon) பறக்கின்ற நிலையில் உள்ள உருவ அமைப்பு உள்ள செங்கல் கோயிலும் பழைமையானவை ஆகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பூமாராவில் உள்ள சிவன் கோயிலில் உள்ள கணபதியின் இரண்டு சிலைகளும் அமர்ந்த நிலையில் உள்ளன. பாஹார்பூரில் கிடைத் துள்ள கல், உலோகம், செம்மண்ணாலான சிலைகள் பிற்கால குப்தர் காலத்தவை ஆகும்.[1]

(இ) முருகன்

வேதகாலத்தில் ஸ்கந்தன் : ஸ்கந்த வழிபாடு வேத காலத்திற்கு முன்பிருந்தே கடைப்பிடிக்கப்படுகிறது. வேதகாலக் கடவுளரான சோமன், அக்னி, இந்திரன், வருணன், பிருகஸ்பதி, ஹிரண்யகர்ப்பம் ஆகியோரின் கூட்டுக்கலவையே ஸ்கந்தன் – குமாரன் ஆவான். அதர்வண வேதத்தில் குமாரன் அக்னியின் புதல்வனாகவும், சதபத பிராமணத்தில் உருத்திரனின் புதல்வனாகவும், சித்தரிக்கப்படுகிறான். ஆரிய வழிபாட்டு முறையில் குமாரன் ஸ்கந்தன், கார்த்திகேயன், சுப்பிரமணியன் என்று அழைக்கப்படுகிறான். இருக்கு வேதத்தில் பிரமத்தின் வெளிப்பாடாகச் சுப்பிரமணியோம் என்று மும்முறை வருகிறது. சாந்தோக்கிய உபநிடதத்தில் சனற்குமாரர் ஸ்கந்தனோடு வைத்து எண்ணப்படுகிறார். தைத்திரிய ஆரண்யகத்தில் சண்முக காயத்ரியில் சண்முகனைப்பற்றி வருகிறது, இவை எல்லாம் புத்தருக்கு முன் எழுந்த நூல்கள் ஆகும். கி.மு. 400-க்கு முன் எழுந்த போதாயன தருமசூத்திரம் ஸ்கந்தன், சனற்குமாரன், விசாகன், சண்முகன், மகாசேனன், சுப்பிரமணியன் ஆகிய தெய்வங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

மகாபாரதம், புராணங்கள் : மகாபாரதம் ஆரணிய பருவத்தில் விரிவாகவும், இராமாயணத்திலும் ஸ்கந்தனின் வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது. வியாசர் அருளிய பதினெண் புராணங்களில் ஒன்றான ''ஸ்கந்தபுராணம்'' ஸ்கந்தனின் வரலாற்றை விரிவாகக் கூறுகிறது. மார்க்கண்டேய புராணம், பத்மபுராணம், மத்ஸ்ய புராணம், சைவ புராணம் ஸ்கந்தனின் வரலாற்றில் ஒரு பகுதியினைக் கூறுகிறது.

கௌடில்யர், பதஞ்சலி (கி.மு. 2-ஆம் நூற்றாண்டு) ஆகியோரும் சுப்பிரமணியர் கோயில் பற்றியும், திருஉருவச்சிலை பற்றியும் கூறியுள்ளனர். காளிதாசர் குமார சம்பவம் என்று காவியமே பாடியுள்ளார்.

நாணயங்கள் : சு. பிராமண்ய – குமாரன் கதைகளை வெளிப்படுத்தும் கி.மு. -3ஆம் நூற்றாண்டைய உச்சயினி நாணயங்கள்; ஸ்கந்தன் உருவம் கொண்ட குஷான அரசன் ஹுவிஷ்காவின் நாணயங்கள்; யௌவ்தேய மன்னர்களின் நாணயங்கள்; அவ்வக் காலகட்டத்தில் ஸ்கந்த வழிபாட்டின் உயர்வை உணர்த்தும்.

அரசர்கள் – சுப்பிரமணிய பக்தர்கள் : வடமேற்கு மாநிலத்தை ஆண்ட குஷானர்களும் கி.மு. 200 – கி.மு. 400-இல் பஞ்சாபை ஆண்ட யௌவ்தேயர்களும் (Yaudheyas) தீவிர சுப்பிரமணிய பக்தர்கள் ஆவர். இந்த யௌவ்தேயர்கள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பழங்குடி மக்களில் ஒரு பிரிவினர் ஆவர். அதன் பின்னர் வந்த இக்ஷ்வாகு அரசர்கள், சாளுக்கிய, பல்லவ மன்னர்களும் குமர வழிபாட்டை மேற்கொண்டவர்கள் ஆவர்.

தமிழ் இலக்கியங்களில் முருகன் : தலைச்சங்கத் தலைமைப் புலவராயும், இடைச்சங்கப் புலவரான அகத்தியருக்குத் தமிழ் உரைத்த ஆசிரியராயும் முருகப் பெருமான் போற்றப்படுகின்றார். தொல்காப்பியர் காலத் தமிழகத்தின் ஐந்து நிலப்பரப்புகளில் ஒன்றான குறிஞ்சி நிலத் தெய்வம் முருகப்பெருமான் ஆவார். ''சேயோன் மேய மைவரை உலகமும்'',

1) "The History and Culture of Indian People" - Bhavan's III.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(தொல்) சங்க இலக்கியங்கள் குறிப்பாக பரிபாடல், திருமுருகாற்றுப்படை முருக வழிபாடு, அறுபடைவீடுகள் பற்றி விரிவாக எடுத்து இயம்புகின்றன. பின்னர் எழுந்த சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில் முருகனைப் பற்றியும், சுப்ரபேதம், அம்சுமத் பேத ஆகமம், உத்தரகாமிகம் முதலிய சைவ ஆகமங்களில் முருகன் ஆலய நிர்மாணம், திருஉருவச்சிலை அமைப்பு முதலான செய்திகள் பற்றியும் கூறப்படுகின்றன.

திருஉருவச்சிலைகள் : தொடக்க காலச் சுப்பிரமணியர் திருஉருவச்சிலை நாகார் ஜுன கொண்டாவில் உள்ளது. இது கி.பி. 3-ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. திருநெல்வேலி ஆதிச்ச நல்லூர் அகழ்வாராய்ச்சியில் செம்பாலான சேவல், இரும்புவேல், காவடி தூக்கும் பொழுது வாயில் கட்டும் தங்கஉறை கிடைத் துள்ளன. யானைமேல் வீற்றிருக்கும் முருகன் உருவம் மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ளது. மாமல்லையில் உள்ள மற்றொரு சிற்பம் சோமாஸ்கந்த மூர்த்தி ஆகும். கி.பி. 871– 909-இல் ஆண்ட ஆதித்தசோழன் காலத்தில் பாலசுப்பிர மணியன் சிலையும் பழமையான ஒன்றாகும்.

கி.பி. 414-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு சுவாமி மகாசேனன் என்ற கார்த்திகேயன் கோயிலைப்பற்றிக் கூறு கிறது. கதம்ப அரசர்கள் கார்த்திகேயனை வழிபடுவார்கள். யௌதேயர்கள் (Yaudha yas) வழிபாட்டில் கார்த்திகேயன் சங்கு, கவசம் கொண்டவனாக இருக்கிறான். குப்தப் பேரரசனான குமரகுப்தன் கருட னுக்குப் பதில் மயிலைக் கார்த்திகேய னுடன் தொடர்புபடுத்தினான். தக்காணத் தில் கார்த்திகேயக் கோயில்கள் மலைகளில் எழுப்பப்பட்டன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுந்த கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணம் முருகவழிபாட்டின் உச்சநிலை ஆகும். தமிழகத்திலும் இலங்கையிலும் முருக வழிபாடு பெரிதும் பரவிற்று. இலங்கை கதிர்காமம் திருக்கோயில் முருகன் வழி பாடு மிகத் தொன்மையானது. இலங்கை யில் இவ்வழிபாடு இராம – இராவணப் போருக்கு (கி.மு. 2387) முன் தோன்றியது என்பார் ரத்ன, நவரத்னம் அம்மையார் ("Kartikeya" - Ratna Navaratna 1973) ஒட்டு மொத்தமாகச் சைவ சமயச்சூழ்நிலையை ஆராய்ந்தால் இக்காலகட்டத்தில் வைதிகர் கூட்டுறவினால் தமிழகத்துப் பழைய வழிபாட்டு முறைகள் புதிய தோற்றம் எடுத்தன. முருகன் சுப்பிரமணியன் ஆனான்; கொற்றவை உமாதேவியானாள்; முதுமுதல்வனான சிவன் ருத்ரன் ஆனான்; வைதிகச் சடங்குகளும் இதிகாச புராணக் கதைகளும் வழக்காறு பெற்றன.

தொகுப்பு

சிந்துசமவெளி நாகரிக காலத்திலேயே (கி.மு. 3250) சிவவழிபாடு இருந்துள்ளது என்பதினால் ''சிவம்'' முன்னைப் பழமைக்கும் முன்னைப்பழம்பொருள் என்பது புலனாகின்றது. மொகஞ்சோ தாராவில் கிடைத்துள்ள இலச்சினைகளில் காணப்படும் இறைஉருவம் யோகநிலை யில் இருப்பது இன்று உலகளாவப் பெருமளவு பின்பற்றப்படும் யோகநிலை என்பதும் தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதும் தெள்ளிதின் விளங்கும். அது மட்டு மல்லாது எகிப்து, பாபிலோனியா, வட அமெரிக்கா கொலராடோ நதிக்கரை, கிரேத்தா, இலங்கை, மேற்கு ஆசியா, பின்லந்து ஆகிய இடங்களில் பசுந்தரை, களிமண் பட்டயங்கள், நகரத்தின் பெயர், மாதத்தின் பெயர் சிவன் என்று கூறப்பட்டி ருத்தலாலும் சிவன் கோயில் இருத்த லாலும் சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்ற கருத்து வலுப்படுகிறது.

இந்தியா வந்து குடியேறிய வேதகால ஆரியர்கள் அக்னி, இந்திரன், சூரியன் முதலான தெய்வங்களை வழிபட்டாலும், இந்தியா முழுமையும் பரவியிருந்த தொல்பழந்தெய்வத்தைப் புறக்கணிக்க முடியவில்லை. வேறுவழியில்லாமல் சிவவழிபாட்டை ஏற்றுக்கொள்ள அக்னி, இந்திரன், போன்ற தெய்வங்களின் ஆதிக்கம் குறைந்து போக இன்றளவும் இந்தச் சிவவழிபாடு இந்தியா முழுமையும் பரவியிருப்பதனால் சிவ வழிபாட்டின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இன்றியமையாமையும் வலுவான செல்வாக்கும் உயிர்ப்புத் தன்மையும் புலனாகும்.

உபநிடத காலத்தில் ஸ்வேதாஸ்வதர உபநிடதம் முதன்முதலாகச் சிவனை (உருத்திரன்) முழுமுதற்பொருளாக ஏற்று பக்தி நெறியையும் காட்டியது. இதனை அடியொற்றியே பகவத் கீதை முதன் முதலாக வசுதேவ – கிருஷ்ணனை முன்னிறுத்தி பக்தி நெறிக்கு அடிகோலியது. இதனால் பிற நெறிகளுக்கும் சைவநெறி வழிகாட்டியது என்பது தெளிவு.

சைவ நெறியை முன்னிறுத்தும் ஆகமங்கள் மக்களின் கருத்துகளை முன்னிறுத்துவனவாகவும், உயிர்த்துடிப்புள்ளனவாகவும் இருந்தன. ஆகமங்கள் தென்னாட்டில் தோன்றினாலும் இந்தியா முழுமையும் பரவவேண்டும் என்ற எண்ணத்தால் அன்று ஆதிக்கத்தில் இருந்த வடமொழியில் எழுதப்பட்டன. மொழி வேறுபாட்டில் கவனம் செலுத்தாமல் தாங்கள் பின்பற்றிய கருத்துகள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற மக்களுணர்வுச் சிந்தனையே ஆகமக்காரர்களிடம் இருந்தது குறிப்பிடத்தக்கது. ஆகமங்களின் எழுச்சியால் பௌத்த – சமண ஆதிக்கம் குன்றியது. ஆகமங்கள் முன்வைக்கும் நான்கு பாதங்களில் (Section) யோக பாதமும் ஒன்று. இது சிந்து சமவெளி சிவனின் யோகநிலையின் தொடர்ச்சி ஆகும்.

கி.மு. 300-ஆம் ஆண்டில் வடநாட்டில் பாசுபத சைவம் வலியுறுத்தும் கோட்பாடுகளுள் யோகமும் ஒன்று ஆகும். பாசுபத சைவம் என்ற பெயர் மொகஞ்சோதாரோ அகழ்வில் கிடைத்த இலச்சினைகளில் உள்ள பசுபதி நிலைக்குத் தொடர்புப் படுத்தப்படுகிறது. ராஜசேகரன் என்ற ஜைன ஆசிரியர் சைவத் தத்துவத்தை யோகமதம் என்பார்.

பின்னர் எழுந்த அறுவகை தரிசனங்களுள் யோகமும் ஒரு தரிசனம் ஆகும். அறுவகை தரிசனங்களில் பிறபிரிவினரான நையாயிகர் சிவபெருமானை வழிபடுபவர்கள் என்பதும், வைசேடிகர் பாசுபதர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றொரு தரிசனமான சாங்கியம் இருபத்து நான்கு தத்துவங்களைக் கூறுகிறது. (தத்துவம் – Philosophy என்ற பொருள் அல்ல; Elements - என்ற பொருள்). இந்த இருபத்து நான்கு தத்துவங்களை உள்ளடக்கித்தான் சைவசித்தாந்தம் முப்பத்தாறு தத்துவங்கள் எனக் கூறும்.

தத்துவக் கருத்துக்கள் மனதில் உள்வாங்கக் கடினம் என்பதினால் அவற்றைக் கதைவடிவில் புராணங்களாக (கி.மு. 600 முதல் கி.பி. 700 வரை) அறிஞர்கள் வழங்கினர். சிவபுராணத்தின் இறுதிப் பகுதியான வாயவீய சம்கிதை முப்பத்தாறு தத்துவங்கள், பசு, பதி, பாசம் என்ற முப்பொருளுண்மை, சாரூபம் முதலான நான்கு படிநிலைகள், அட்டாங்கயோகம் ஆகிய சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கூறுகிறது. இதனை யொட்டி ஒரு புராணப்படையெடுப்பே நிகழ்கிறது. இதன் பின்விளைவாகச் சிவன், விஷ்ணு மற்றும் ஏனைய கடவுளரின் சிலை உருவங்களும், பிருமாண்டமான கோயில்களும் வேதக்கடவுளரின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. வேதக்கடவுளரின் செல்வாக்கு வெகுவாகக் குறைந்து விட்டது எனலாம். இந்தப் புராண வெள்ளப் பெருக்கில் சமண பௌத்த சமயங்களும் தம் வலுவிழந்தன. இச்சமயங்களும் இத்தாக்கத்தினால் சிலை வழிபாடுகளுக்கு (புத்தர், மகாவீரர்) இடம் தந்தன.

காஷ்மீர சைவம் மிகவும் தொன்மை வாய்ந்தது ஆகும். காஷ்மீர சைவம் கூறும் ''த்ரிகா'' கோட்பாடு சைவசித்தாந்தத்திற்கு ஒத்துள்ளது. உலகம் மாயை என்பதனை மறுக்கின்றனர். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள், நால்வகை வாக்குகள், சித், ஆனந்தம் முதலான இறைவனின் ஐவகைச் சக்திகள், ஈசான முதலான ஐந்து முகங்கள், சிருஷ்டி முதலான ஐந்தொழில்கள், 36 தத்துவங்கள், மூவகை ஆன்மாக்கள் பற்றிக் காஷ்மீர சைவம் கூறுகிறது. இவையத்தனையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களே..

போஜ அரசரின் ''தத்துவப்பிரகாசம்'' என்ற நூலும் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பசு, பதி, பாசம், முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிக் கூறுகின்றது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கர்நாடகாவில் பசவர் என்ற பெருவீரர் வருணாசிரம தர்மத்தை உடைத்துச் சைவத் திற்குப் புத்துணர்ச்சி ஊட்டி ''வீரசைவம்'' என்ற சமயத்தை நிலைநாட்டினார். சாதி வேறுபாடற்ற பெரிய புராண சமுதாயத்தை பெரியபுராணக் கருத்துக்களை முழுமை யாக உள்வாங்கி தம் நாட்டில் பரப்பினார். தேவாரதாசிமையா, மகாதேவியக்கா, அல்லமபிரபு என நூற்றுக்கணக்கான அருட் கவிஞர்கள் – கவிதை வெள்ளமாக நாட்டில் பாய்ச்சினர். இதனைச் சைவ மறுமலர்ச்சி எனலாம். மக்களுடைய அன்றாட வாழ்விலும் – நாட்டுப் பாடல்கள் மூலம் – வீரசைவம் ஊடுருவி நின்று இன்றும் செம்மாந்து இருக்கிறது.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வட இந்தியாவில் அந்நியராட்சி வந்து விட்டமையால் சைவ இலக்கியங்கள் எதுவும் பெரிதாக வந்துவிடவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு சிறு இலக்கியங்கள் எழுந்தன. இதன் பின்னரும் சைவம் பெருமை சேர்த்த இடம் தென்னகம் என்றாகிவிட்டது.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

V

இந்திய அரசர்களின் சைவப் பணிகள்

காலஅடிப்படையில் இந்திய வரலாற்றை மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) தொல்பழங்காலம் முதல் கி.பி. பனிரண்டாம் நூற்றாண்டு வரை. (2) கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை. (3) அதன்பின் இன்று வரை.

இதில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு இந்திய வரலாற்றைப் பிரிக்கும் எல்லைக்கோடு ஆகும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை இந்து அரசர்களே ஆண்டு வந்த நிலைமாறி கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வேற்று இனத்தைச் சேர்ந்தபிற சமயத்தவர்களான வெளிநாட்டார்கள் (முதலில் இஸ்லாமியர், பின்னர் கிறித்தவர்) இந்தியத் துணைக் கண்டத்தில் ஆட்சிபுரிய ஆரம்பித்தார்கள். அதன்பின் இந்திய வரலாறு பலமாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

(1)
கி.மு. 600 முதல் கி.பி. 320 வரை

பேரரசுகளினால் விளைந்த ஒற்றுமை

மௌரியப்பேரரசு — அசோகன் : கி.மு. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவில் தனிப்பேரரசு ஏதும் இல்லை. அங்கம், கோசலம், காந்தாரம் எனத் தனித் தனியாகப் பதினாறு அரசுகள் ஆட்சி செலுத்தின. கி.மு. 544 முதல் கி.மு. 363 வரை மகதப் பேரரசு ஆட்சி செலுத்தியது. அதன்பின் கி.மு. 324 வரை நந்தர்களின் ஆட்சி ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தில்தான் அலெக்சாந்தர் வடநாட்டின் மீது போர் தொடுத்தான். கி.மு. 324-இல் சந்திரகுப்தரின் கீழ் மௌரியப்பேரரசு எழுந்தது. மௌரியப் பேரரசின் தலைசிறந்த அரசர் அசோகர் ஆவார். அசோகர் காலத்தில் பௌத்தசமயம் உலகளவில் பரவிற்று.

குஷானர்கள் — சைவர்கள் : இதன் பின்னர் குஷானப் பேரரசு எழுந்தது. குஷானர்கள் என்ற வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள் யூ–சி (Yuea-Chi) என்ற துருக்கிய இனத்தின் ஒரு பிரிவினர் ஆவர். குஷான அரசர்களில் பலர் சைவ சமயத்தவர் ஆவர். வேமா என்கிற காட்பைசஸ் II (Kadphises II) அரசன் வெளியிட்ட தங்க நாணயங்களில் சிவன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. ''மகா ராஜஸ ராஜாதி ராஜஸ சர்வ–லோக–ஈஸ்வரஸ மகீஸ்வரஸ விமா காட்பைஸஸ திரதராஸ மகீஸ்வர'' என்ற எழுத்துக்கள் இந்த நாணயங்களில் பொறிக்கப் பட்டுள்ளன. இதனால் விமா காட்பைஸஸ என்ற அரசன் சைவன் (மகீஸ்வர–சிவன்) என்பது தெரியவருகின்றது.

கனிஷ்கர் : குஷானர்களில் தலைசிறந்த பேரரசர் கனிஷ்கர் (கி.பி. 78 முதல் – கி.பி. 101 வரை) ஆவார். இவர் வெளியிட்ட நாணயங்களில் சிவன் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. ஹூவிஷ்க அரசன் (கி.பி. 106 – கி.பி.138) நாணயங்களில் ஸ்கந்தன் உருவமும், வசுதேவ மன்னன் (கி.பி. 145 – கி.பி. 176) நாணயங்களில் சிவன் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சசானியப் பேரரசன் ஹோர்மாஸ்டு (HORMAZD - கி.பி. 301 – கி.பி. 310) குஷான அரசரின் மகளை மணந்தவன்; அவனது நாணயங்களிலும் சிவன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கத்தைச் சுமந்த பாரசிவர்கள் : அதன்பிறகு நாகர்களின் ஆட்சி ஏற்பட்டது. நாகர் அரசர்களில் ஒருவனான பவநாகன் (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு பிற்பகுதி – கி.பி.நான்காம் நூற்றாண்டின் முற்பகுதி) பாரசிவ (Bharasivas) குழுவினைச் சேர்ந்தவன் ஆவான். பாரசிவர்கள் தங்கள் தோள்களில் சிவலிங்கத்தைச் சுமந்தும், பாகிரதி நீரை உள்ளங்கையில் தெளித்துக் கொண்டும் இருந்ததால் அவர்கள் சிவனின் அன்புக்குப் பாத்திரமானவர்களாக இருந்தார்கள்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆண்ட சிவதத்தன்; கி.பி. 156 – 166, கி.பி. 167 – 174 ஆண்டுகளில் ஆட்சி புரிந்த சாதவாகன அரசர்கள் சிவஸ்ரீ சாதகர்னி, சிவஸ்கந்த சாதகர்னி ஆகியோரின் பெயர்கள் சைவத்தின் தொடர்ந்த செல்வாக்கிற்குச் சான்றுகள் ஆகும்.

(2)

கி.பி. 320 முதல் கி.பி. 740 வரை

குப்தரின் பொற்காலம் – ஹர்ஷரின் சிறப்பு

குஷானர்கள், ஆந்திரர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவில் சிலகாலம் பேரரசுகள் ஏதும் எழவில்லை. கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குப்தன் என்பவன் மகதம் என்கிற சிற்றரசை ஆண்டான்.

குப்தரின் பொற்காலம் : கி.பி. 320-இல் சந்திரகுப்தன் அரியணை ஏறியபின் ''குப்தர் காலம்'' என்ற சகாப்தம் மலர்ந்தது. இவனது மகன் சமுத்திரகுப்தன் மாவீரன் ஆவான். இவனது படையெடுப்பினால் இந்தியாவின் பெரும்பகுதி ஆளுகைக்கு வந்தது. கி.பி. 380-இல் சமுத்திரகுப்தன் மரணமடைய அவனது மகன் சந்திர குப்தன் II அரசன் ஆனான். தந்தைக்கேற்ற தனயன் எனப்பெயர் பெற்றான். இவனது ஆட்சி எல்லை மேலும் விரிந்தது. இவ்விருவர் ஆட்சிக் காலத்திலுமாகச் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகள் வட இந்தியாவில் மீண்டும் அரசியல் ரீதியான ஒருமை நிலவியது. சீன யாத்ரீகர் பாஹியான் குப்தர்கள் காலத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். கி.பி. 413-இல் சந்திரகுப்தன் IIன் மகன் ஸ்கந்தகுப்தனும் ஆட்சிபீடத்தில் அமர்ந்தார்கள். குமார குப்தன் கார்த்திகேயன் உருவத்துடன் உள்ள தங்க நாணயங்களை அறிமுகப் படுத்தினான். இதன்பின் கி.பி. 510 வரை குப்த பரம்பரை ஆட்சிபுரிந்தது. கி.பி. 550க்குப் பிறகு குப்தர் ஆட்சி முடிவுற்றது எனலாம்.

நேபாளத்தில் சிவ வழிபாடு : சைவசமய வரலாறு எழுதும்பொழுது நேபாளத்தின் வரலாற்றைப் பார்ப்பது இன்றியமையாத ஒன்றாகும். நேபாளத்தின் வரலாறு நினைவெல்லைக்குத் தாண்டி ''வம்சாவளி''யாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. குப்தப் பேரரசு சிதறுண்ட பொழுது நேபாளத்தை ஆண்ட சங்கரதேவன் என்ற அரசன் பசுபதிநாதர் கோயிலுக்கு நன்கொடைகள் பல வழங்கினான். அவனது மகனான தருமதேவன் அதே கோயிலுக்குப் பெரிய நந்தி சிலையை அர்ப்பணித்ததோடு சுயம்பு நாதரையும் நிறுவினான். அவ்வரச பரம்பரையில் வந்த ஒரு அரசனின் பெயர் சிவதேவன் என்பது குறிப்பிடத்தக்கது.

''சிவனைத்தவிர யாரையும் தொழேன்'' பாஸ்கரவர்மன் : குப்த பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு இந்திய வரலாற்றில் முத்திரை பதித்த அரசுகளுள் ஒன்று தானேஸ்வர் ஆகும். அம்மரபில் வந்த மிகச் சிறந்த அரசர் ஹர்ஷர் ஆவார். (கி.பி. 606). ஹர்ஷர் சைவனாக இருந்தபோதிலும் பௌத்த மதக் கொள்கைகளில் பெரிதும் ஈர்க்கப்பட்டிருந்தார். ஹர்ஷர் நடத்திய பௌத்த பேரவைக் கூட்டங்களைப் பற்றி யுவான்சுவாங் எழுதியுள்ளார். ஹர்ஷர் வரலாற்றில் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது. ஹர்ஷர் தனது எல்லையை விரிவாக்கப் படைகளுடன் முன்னேறி கொண்டிருக்கும்பொழுது பிராகஜ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யோதிஷா (அஸ்ஸாம்) நாட்டு அரசனான பாஸ்கரவர்மனின் தூதனான ஹம்சவேகன் ஹர்ஷரைச் சந்தித்துத் தனது அரசன் சிவபெருமானைத் தவிர வேறுயாருக்கும் அடிபணியக்கூடாது என்ற கொள்கை உடையவர். ஆதலால் ஹர்ஷரோடு நிரந்தரக் கூட்டுவைத்துக் கொள்ள விரும்புவதாகக் கூறினான். அதற்கு ஹர்ஷரும் இசைந்தார். ஹர்ஷருக்குப் பிறகு அவரது வாரிசுகள் ஹர்ஷரைப் போலத் திறமையுடன் ஆட்சி நடத்தவில்லை.

இதன்பின்னர் வட இந்தியாவில் காமரூப அரசு, பிற்கால குப்தர்கள், கனோஜ் அரசு என்று ஆட்சிமுறை மாறி வந்தது. கனோஜ் அரசின் முக்கிய அரசனான யசோவர்மன் மிகப்புகழுடன் ஆட்சி செய்து கி.பி. 740-இல் உயிர்துறந்தான். அவனது அரசும் காஷ்மீர் சாம்ராஜ்யத்தில் ஐக்யம் ஆனது.

காஷ்மீர கார்கோட பரம்பரை : கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காஷ்மீரில் கார்கோட பரம்பரை ஆட்சி புரியலாயிற்று. இப்பரம்பரையில் சந்திர பீடன் என்ற அரசன் உயர்ந்த குணங்களைக் கொண்டவன் ஆவான். அவனுக்குப் பிறகு வந்த லலிதாதித்தனே யசோவர்மனைத் தோற்கடித்துத் தன் சாம்ராச்சியத்தை விரிவு படுத்தினான். இவன் கி.பி. 760-இல் உயிர் நீத்தான். இந்தக் காஷ்மீர அரசர்களைப் பற்றியெல்லாம் மிகவிரிவாக கல்ஹணன் தனது ராஜதரங்கிணியில் விரிவாக எழுதியுள்ளார்.

காஷ்மீரப் பேரரசின் வலுகுறைந்து வரும் காலகட்டத்தில் பாலர்கள், கூர்ச்சர்கள் என்ற அரச பரம்பரையினர் வட இந்தியாவை ஆண்டனர். இந்தப் பரம்பரையோடு இந்து சமயத்தின் உச்ச நிலை குறையலாயிற்று.

அராபியர் படையெடுப்பு : இந்தக்கால கட்டத்தில்தான் அராபியர்கள் போர்க் குணத்தோடு சிரியா, எகிப்து, ஸ்பெயின், பாரசீகம் ஆகிய நாடுகளைப் பிடித்து வந்தனர். கி.பி. 712வரை இந்தியாவிற்குள் அவர்கள் நுழையவில்லை. கி.பி. 712-இல் தான் ஈராக் கவர்னர் ஹஜாஜ் சிந்து மாநிலத்தில் போர் தொடுக்க முயன்றான். ஹஜாஜைச் சிந்து அரசன் தாகர் இருமுறை முறியடித்தான். மூன்றாம் முறையாக ஹஜாஜின் மாப்பிள்ளை முகமது பின் காசிம் பெரும்படையுடன் வந்த பொழுது தாகர் வீரத்துடன் போராடி வெற்றியடையும் தருணத்தில் அவனை ஏற்றி வந்த யானை அடிபட்டதினால் போர்க்களத்தை விட்டு விரைந்து செல்ல அரசனைக் காணாத படையினரிடையே குழப்பம் நிலவி தோற்க நேர்ந்தது. அராபியர்கள் சிந்து மாநிலத்தைத் தாண்டி வராதது வியப்பிற்குரியது. காஷ்மீர அரசன் லலிதாதித்யன் ஒரு புறமும், கூர்ச்சர பிரதீஹார தலைவன் மறுபுறமுமாக வட இந்தியாவும் சாளுக்கிய அரசனது படைபலத்தால் தென்னிந்தியாவும் அராபியர்களைத் தடுத்து நிறுத்தின.

இதே காலகட்டத்தில் வங்காளத்தின் வட பகுதியில் பாலன் பரம்பரை ஆட்சி தொடங்கியது. கோபாலன் என்ற அரசன் ஆட்சியை விரிவடையச் செய்தான். கி.பி. 780-இல் அவன் இறக்க, அவனுக்குப் பின் மகன் தருமபாலன் அரியணை ஏறினான். இவன் வங்க வரலாற்றில் தலைசிறந்த அரசன் ஆவான். இவன் 32 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

வட இந்திய சைவ அரசர்கள் : இக்காலப் பகுதியில் வாழ்ந்த வட இந்திய அரசர்களான மிஹிரகுலன் என்ற ஹூன அரசன் சிவபக்தன் ஆவான். மற்றும் வங்க அரசனான சசாங்கன், கனோஜ் புஷ்பபூதி குடும்பத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள், வலபியைச் சேர்ந்த மைத்ரக பரம்பரையினர் சைவர்கள் ஆவர்.

சிவபெருமான் திருவுருவச்சிலைகள் : லிங்கோற்பவமூர்த்தி, சிவ-பார்வதி, பார்வதி சிவபெருமான் மடியில் உட்கார்ந்திருக்கும் உமாமகேசுவரமூர்த்தி ஆகிய உருவங்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எல்லோராவில் உள்ளன. கோஸமில் கிடைத்த சிவ-பார்வதி நின்ற கோலம் (பார்வதியின் திரிசூலம்) இக்காலகட்டத்தைச் சேர்ந்தது. பாதாமியில் உள்ள அர்த்தநாரீசுவரர் சிற்பம் போல பல குப்தர் காலச்சிற்பங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிடைத்துள்ளன. ஆனால் பாதாமியில் கிடைத்துள்ள ஹரிஹரன் சிற்பம் ஒன்றைத் தவிர வேறு ஹரிஹர மூர்த்தம் கிடைக்கவில்லை.[1]

(3)

தக்காண அரசர்கள்

மத்திய தக்காணம் : தென்னிந்தியாவிலும் தக்காண பிரதேசத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற்பாதியில் சாதவாகனர் அரசு வலுகுன்றிய பிறகு சிற்றரசர்கள் ஆட்சி ஏற்பட்டது. அவர்களுள் வாகாடக பரம்பரையினர் முக்கியமானவர் ஆவர். இவ்வரசைத் தோற்றுவித்தவன் பிரவர சேனன் ஆவான்.

மகேசுவரனை வழிபட்ட வாகாடக பரம்பரையினர் : இப்பரம்பரையில் வந்த உருத்திரசேனன் I மகாபைரவரின் தீவிர பக்தன் ஆவான். அவனது தாய்வழி உறவினர்களான தீவிர சிவ பக்தர்களான பாரசிவ நாகர்களின் தாக்கத்தினால் இவன் சைவனாக மாறினான். இவனது மகனான பிருதிவிசேனன் I, அவன் வழி வந்த பிரவர சேனன் II என்பானும், மகேசுவரனை வழிபடுபவர்களாக இருந்தனர். இப்பரம் பரையில் கி.பி. 6-ஆம் நூற்றண்டில் ஆண்ட பிருதிவிசேனன் II என்பவனே கடைசி அரசன் ஆவான்.

பசுபதியை வழிபட்ட கலச்சுரி பரம் பரையினர் : கலச்சுரி பரம்பரையினர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மகாராஷ்டிரம், குஜராத் பகுதியினை ஆண்டனர். அப்பரம்பரையில் வந்த அரசர்களான கிருஷ்ணராஜன், அவனது மகன் சங்கரகணன், அவனது மகன் புத்தராஜன் ஆகியோர் பசுபதியை வழிபடு தெய்வமாகக் கொண்டிருந்தனர். கிருஷ்ணராஜின் காலத்தில் வெளியான வெள்ளி நாணயங்களில் பரம மகேஸ்வர கிருஷ்ணராஜனின் கதையும் மறுபுறம் காளை உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 549-இல் இப்பரம்பரையில் வந்த கலச்சுரி அரசனான தரலசுவாமின்னும் சிவபக்தன் ஆவான்.

சைவத்துறவிக்கு நிலம் வழங்கிய அபிமன்யு : கி.பி. 742-இல் தக்காணத்தில் ஒரு பகுதியை ஆண்ட ராஷ்டிரகூட அரசனான அபிமன்யு என்பான் உண்டிகவாடிகா என்ற கிராமத்தை தக்ஷிண சிவபெருமானுக்காக ஜடாபாரன் என்ற சைவத்துறவிக்கு வழங்கினான்.

கிழக்கு தக்காணம் – சம்புவை வழிபட்ட அத்திவர்மன் : கிழக்குத் தக்காணம் பகுதியான ஆந்திராவில் ஆனந்த பரம்பரையினர் ஆண்டனர். (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில்) இப்பரம் பரையில் வந்த அத்திவர்மன் என்ற அரசன் வெளியிட்ட கோரண்ட்லா சாசனத்தில் இம்மன்னன் சம்புவை (சிவபெருமான்) வழிபடுபவன் என்றும், ஹிரணியகர்ப்ப மகாதானம் செய்தவன் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இப்பரம்பரையினரின் தலை நகரமான காந்தாபுரத்தின் அருகில் உள்ள வகேசுவராவில் (இன்றையசேழர்லா) உள்ள கோயிலில் உள்ள சிவபெருமான் இவ்வரசபரம்பரையினரின் குலதெய்வம் என்றும் இந்த சாசனம் குறிப்பிடுகிறது.

நந்தி இலச்சினை : மைசோலியாவின் (தற்கால மசூலிப்பட்டினம்) வட பகுதியை ஆண்ட காலங்காயனர் என்ற பரம் பரையினர் வெளியிட்டுள்ள முத்திரைகளில் நந்தியின் உருவம் பொறித்துள்ளது. நந்தி அப்பரம்பரையினரின் முத்திரையாக இருக்கலாம். அப்பரம்பரையில் வந்த தேவவர்மன் சிவபக்தன் ஆவான்.

மகேசுவரபக்தனாகிய விக்கிரமேந்திர வர்மன் III : கர்நூல் மாவட்டம் ஸ்ரீசைலத்திற்குக் கிழக்கு 60 மைல் தொலைவில் உள்ள தற்கால வினுகொண்டாவை ஆண்டவர்கள் விஷ்ணு குண்டியர்கள். அவர்கள் ஸ்ரீ பர்வத மலையில் (ஸ்ரீசைலம்) உள்ள ஸ்ரீபர்வத சுவாமியை வழிபடுபவர்கள் ஆவர். இப் பரம்பரையில்

1) "The History and Culture of Indian People" - Part II - Bhavan's.
"The History and Culture of Indian People" - Part III - Bhavan's ..... 1952 .

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வந்த விக்கிரமேந்திரவர்மன் III (கி.பி. 620 – 631) என்ற அரசன் மகேசுவர பக்தன் ஆவான். இம்மன்னன் சோமதிரீவர நாதருக்கு ஒரு கிராமத்தையே தானமாகக் கொடுத்தான்.

கோகர்ணேசுவரர் – கங்கர்களின் வழி படு தெய்வம் : மகாநதிக்கும் கோதா வரி ஆற்றுக்கும் இடைப்பட்ட கலிங்க நாட்டை கிழை கங்கர்கள் ஆட்சிபுரிந்தனர். கங்க அரசர்களின் வழிபடு தெய்வம் மகேந்திர மலையில் (தற்போதைய கஞ்சம் மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரி) உள்ள கோகர்ணேசுவரர் ஆவர்.

கங்க அரசர்களின் ஒரு சிறு பிரிவினரான சுவேதக பரம்பரையில் வந்த ஜெயவர்மன் என்ற அரசனும் அவன்பின் வந்த பிற அரசர்களும் கோகர்ணேசுவரரை வழிபட்ட வர்கள் ஆவர்.

(4)

சாளுக்கியர்கள்

பீஜப்பூர் மாவட்டத்தில் பாதாமியை ஆண்ட சாளுக்கியப் பேரரசர்கள், மேலைச் சாளுக்கியர்கள் எனப்பட்டனர். இவர்கள் கி.பி. 550-லிருந்து கி.பி.750 வரை தக்காணத்தின் பெரும்பகுதியை ஆண்ட னர். அவர்களிலிருந்து கி.பி. 650-இல் கீழைச் சாளுக்கியரும், கி.பி. 950-இல் வேமுலிவாத சாளுக்கியரும், கல்யாணியை ஆண்ட மேலைச்சாளுக்கியரும் பிரிந்து தனியாக ஆட்சிபுரிந்தனர்.

பாதாமி சாளுக்கியர்கள் – கார்த்தி கேயன் : பாதாமி சாளுக்கியர்கள் தங்கள் வளம் எல்லாம் கார்த்திகேயக் கடவுளின் அருளால் கிடைத்தன என்று நம்பினர். சாளுக்கியர்கள் மகாசேன சுவாமியைத் (கார்த்திகேய) தியானம் செய்ததாக ஆதாரங்கள் கிடைத்து உள்ளன. சாளுக்கி யர்கள் வைணவர்களாக இருந்தாலும் சைவத்தை ஆதரித்தனர். சில அரசர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றினர்.

சாளுக்கியர்களின் சிவபக்தி : முதலாம் புலிகேசியே (கி.பி. 536 – 566) தனித்து ஆட்சி செய்த முதல் சாளுக்கிய அரசன் ஆவான். சாளுக்கியர்களில் மிகச் சிறந்த அரசன் இரண்டாம் புலிகேசி (கி.பி. 610 – 642) ஆவான். இவன் மகனான முதலாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 655 – 681) பரமமாகேசுவரன் (தீவிர சிவ பக்தன்) என்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக் கிறான். இவன் பல்லவ அரசர்களை முறியடித்து தந்தையார் இழந்த நாட்டை மீண்டும் பெற்றான்.

சிவன் கோயில் கட்டிய சாளுக்கிய அரச, அரசமாதேவியர் : முதலாம் விக்கிர மாதித்தனின் பேரனான விஜயாதித்தன் (கி.பி. 696 – கி.பி. 733) பிஜப்பூர் மாவட்டம் பட்டடக்கல்லில் விஜயேசுவருக்கு (தற்போது சங்கமேசுவரர் என்று அழைக்கப் படுகிறார்). அற்புதமான கோயில் ஒன்று எழுப்பினான். இவனது மகன் இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆவான். (கி.பி. 733–34 முதல் கி.பி. 744–75 வரை). இவனது பட்டத்து அரசி மகாதேவி உலோகமகா தேவி பட்டடக்கல்லில் லோகேசுவரர்க்கு (தற்பொழுது விருபாட்சர் என்று அழைக்கப்படுகிறார்) மிகப்பெரிய சிவன்கோயிலைக் கட்டினான். அதே அரசனின் மற்றோரு அரசியான ராஜனீ திரைலோக்கிமகாதேவி லோகேசுவரர் ஆலயத்திற்குப் பக்கத்திலேயே திரை லோக்கியேசுவரர்க்கு மிகப்பெரிய கோயிலை எழுப்பினான். இந்த அரசன் இரண்டாம் நரசிம்மவர்மன் கட்டிய ராஜசிம்மேசுவரர் கோயிலுக்கு பொற் குவியலாக வாரி வழங்கினான். இவனது மகன் இரண்டாம் கீர்த்திவர்மன் (கி.பி. 744–45 முதல் கி.பி. 757 வரை) துங்க பத்திரையில் இராமேசுவர தீர்த்தத்தின் அருகில் இருந்த பரமேசுவரக் கடவுளுக்கு நிவந்தம் (grant) அளித்தான். இரண்டாம் கீர்த்தி வர்மன் ஆட்சிக்குப் பிறகு சாளுக்கியப் பேரரசு சிதைந்து ராஷ்டிர கூடர்கள் வசம் மாறியது.[1]

1) "The History and Culture of Indian People" Part III - Bhavan's.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(5)

கி.பி. 750 முதல் கி.பி. 1000வரை

வட இந்தியப் பேரரசுகள்

மூன்று பேரரசுகள் : கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பாலர்கள் – (the Palar - வங்காளம்) கூர்ச்சர பிரதீஹாரர்கள் (the Gurjara - Pratiharar - ராஜபுதனம், மத்திய இந்தியா) ராஷ்டிரகூடர்கள் (Rastrakutar - தக்காணம்) என்ற மூன்ற பெரும் அரசுகள் இந்தியாவை ஆண்டன. கி.பி. 780 முதல் கி.பி. 915 முடிய இம் மூன்று பேரரசுகளும் ஒருவருக்கொருவர் தமக்குள் போரிட்டு வெற்றி தோல்விகளை மாறி மாறி அடைந்து வந்தனர்.

(6)

கி.பி. 1000 முதல் கி.பி. 1300 வரை

முகலாய ஆட்சி

அராபியர்களின் காலிபு அரசு : வட இந்தியாவில் ஹர்ஷர் ஆட்சி முடிந்தபின் சிறியனவும், பெரியவுமான பல ஆட்சிகள் தோன்றித் தோன்றி மறைந்தன. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நபிகளால் நிறுவப் பெற்ற இஸ்லாமைத் தழுவிய அராபியர்கள் 'காலிபுகள் அரசு' எனப்பட்ட மிகப்பெரும் பேரரசினை நிலைநாட்டினர். அது தொடங்கிய நூற்றாண்டுக் காலத்திற் குள் ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா, அரேபியா, சிரியா, பாலஸ்தீனம், ஈராக், பாரசீகம், பலுசிஸ்தானம் ஆகிய நாடுகளை உள்ளடக்கிற்று. ஆயினும், ஆப்கானிஸ் தானத்தைக் கடந்து அவர்களால் இந்தியா வினுள் எளிதில் புக முடியவில்லை.

காலிபின் சார்பாக முகமது பின் காசிம் என்ற படைத்தலைவன் சிந்து நாட்டின் மேல் படையெடுத்து வெற்றி பெற்றான். இருந்தும், காலிபுகளின் ஊக்கக்குறைவால் முஸ்லிம் ஆட்சி வெகுவாகப் பரவ வில்லை.

[கி.பி. 1000] – திருப்புமுனை : கி.பி. 1000 – இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனை ஆகும். தொன்மைக் கால இந்தியாவையும், மத்திய கால இந்தியா வையும் திட்டவட்டமாகப் பிரித்த ஆண்டா கும். கஜினிமுகமது இந்தியாவை முதன் முதலில் படையெடுத்த ஆண்டாகும். அதன்பிறகு இந்தியாவின் தொல்பழமை யான நாகரிகத்துடன் இஸ்லாமிய நாகரிகம் கலக்க ஆரம்பித்துவிட்டது.

கஜினிமுகமது : கி.பி. 933-இல் இன்றைய ஆப்கானிஸ்தானத்தில் உள்ள கஜினி நகரத்தை ஆல்ப்டிஜின் எனும் துருக்க (அடிமை) வீரர் கைப்பற்றினார். கி.பி. 977-இல் அவரது மருமகனான ஸபக்டிஜின் கஜினி மன்னரானார். அவரது புதல்வரான முகமது 998-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். கஜினிமுகமதுவும் அவரது வாரிசுகளும் யாமினி வம்சத்தவர் எனவும் கூறப்படுவர். கஜினிமுகமது இருபத்தேழு ஆண்டுகளில் பதினேழு முறை இந்தியாவைத் தாக்கினார். கி.பி. 1000-இல் முதல் தாக்குல் நடைபெற்றது. ஒவ்வொரு தாக்குதலின்போதும் கொள்ளை யடிப்பதும், இந்துச்சமயப் படிமங்களை உடைத்துக் கோயிற் செல்வங்களைக் கவர்வதும் இவர் வழக்கமாயிற்று. கி.பி. 1025-இல் சோமநாதபுரத்தை நோக்கிப் படையெடுத்து அங்கிருந்த சிவலிங்கத்தை உடைத்து செல்வத்தையும் கவர்ந்து சென்றார். கி.பி. 1027-இல் நடந்த கடைசிப் படையெடுப்புக்குப்பின் அவர் உயிர் நீத்தார்.

குத்புதீன் : அதன்பின்னர் கி.பி. 1175-இல் கோரிமுகமது என்ற அரசர் இந்தியா மீது படையெடுத்து மூல்தானைக் கைப்பற்றி னார். கி.பி. 1192-இல் மூன்றாம் பிருதிவி ராஜர் கோரிமுகமதுவைத் தோற்கடித் தாலும், இரண்டாவது நிகழ்ந்த போரில் பிருதிவிராஜ் தோற்று கோரிமுகமதுவால் கொல்லப்பட்டார். அதன்பின் கி.பி. 1195-இல் கோரிமுகமது தனது பிரதிநிதி யாகக் குத்புதீனை நியமித்துவிட்டு கஜினிக்குத் திரும்பி விட்டார். கி.பி. 1206-இல் குத்புதீன் டெல்லியைத் தலை நகராகக் கொண்ட சுல்தானியத்தின் அடிமை வம்சத்தை நிறுவினார்.

இந்து அரசர்கள் தோற்ற காரணங்கள் : இந்தக் காலகட்டத்தில் வட இந்தியாவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீரமிக்க அரசர்கள் பலர் இருந்தாலும் ஒருவருக்கொருவர் அனுசரித்துப் பொது எதிரியை எதிர்க்காமல் தங்களுக்குள் போரிட்டு, பொறாமைகொண்டு, எதிரிகளுடன் சேர்ந்து இந்து அரசர்களைக் காட்டிக் கொடுத்து இந்தியாவில் வேற்றுநாட்டுக் கலாச்சாரம் நிலைபெற இடம் கொடுத்து விட்டனர்.

வட இந்தியாவை ஆண்ட முஸ்லிம் வம்சங்கள் பலவாயினும், அவர்களிடையே முகமது கோரி நிறுவிய டெல்லி சுல்தானிய மன்னர்கள் ஒரு பிரிவினர்; பாபர் நிறுவிய முகலாய ஆட்சியினர் என்று இரு வகையாகப் பிரிக்கலாம். முஸ்லிம் அரசியல் ஆதிக்கம் கி.பி. 1857 வரை நீடித்தது.

வடநாடு – தென்னாடு – கலாச்சார வேறுபாடு : வட இந்தியாவில் இந்துக்கள் (குப்தர்கள், இராசபுத்திரமன்னர்கள்); பௌத்தர்கள் (அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர்) கிறித்தவர்கள் (பிரிட்டிஷார்) ஆட்சிக் காலத்தைவிட, முஸ்லிம் ஆட்சிக்காலம் நீண்டது. ஆனால், தென் இந்தியாவில் மதுரை சுல்தானியம், ஐதராபாத் இராச்சியம் ஆர்க்காட்டு நவாபு நீங்கலாகப் பிறபகுதிகளில் பெரும்பாலும் இந்துக்கள் ஆட்சியே நடைபெற்றது. இக்காரணத்தால் வட, தென்னிந்திய பகுதிகளுக்கு இடையே ஏற்பட்ட கலாசார வேறுபாடு பிற்கால இந்திய சமூக, அரசியல் பிரச்சினைகளைப் பாதிக்கும் அளவிற்கு வேரூன்றியது.

டெல்லி சுல்தான்கள் : கி.பி. 1210-ஆம் ஆண்டில் குத்புதீன் உயிர்துறக்க, அவருக்குப்பின் இல்தூத்மிஷ், ரஜியா, பால்பன் என்பவர்கள் சுல்தான் ஆனார்கள். கி.பி. 1286-ஆம் ஆண்டில் பால்பன் உயிர் துறந்தார். கி.பி. 1286-ஆம் ஆண்டில் அவர் மகனான கைபோபாத் சுல்தான் ஆனார். அவர் இளவயதிலேயே கடும் நோய்க்கு ஆளானார். அவரது மூன்று வயது மகன் சுல்தான் ஆனார். குழப்பம் நிலவவே, ஆப்கானியத் துருக்கர்களில் ஒரு பிரிவான கில்ஜியைச் சேர்ந்த ஜலாலுதீன் என்பவர் கைகோபாத்தைக் கொன்று கி.பி. 1290-ஆம் ஆண்டில் சுல்தான் ஆனார். இத்துடன் அடிமை ஆட்சி ஒழிந்து கில்ஜி ஆட்சி தொடங்கிற்று.[1]

வட இந்தியாவில் சைவம் : இக்காலக் கட்டத்திலே காஷ்மீரில் சைவ சமயம் வளர்ச்சியே கண்டது. க்ஷேமராஜர் என்பவர் பிரத்தியபிஞ்ஞான ஹிருதயம் என்ற நூலை எழுதினார். கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முடிய காஷ்மீரில் சுமார் 70 சிவன் கோயில்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. கோவில்களை அடுத்து மடங்களும் தோன்றின. நேபாளத்தில் அரச தெய்வம் பசுபதிநாதர் ஆவார். கி.பி. 1300-ஆம் ஆண்டில் வாழ்ந்த கண்டேசுவரர் என்பவர் கிருத்திய ரத்நாகரம், கிருத்திய சிந்தாமணி என்ற நூல்களைச் செய்தார். நேபாளத்தில் மகாயான பௌத்தம் சைவத்துடன் இரண்டறக் கலந்தது. அஸ்ஸாமில் சிவ, விஷ்ணு வழிபாடு இரண்டுமே புழக்கத்தில் இருந்தன. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இரத்னபாலன் என்ற அஸ்ஸாமிய அரசன் இரு கடவுளரையும் வழிபட்டான். வங்காளத்தில் விஜயசேனன் என்ற அரசன் சிவபக்தன் ஆவான். அவன் ஒரு சிவன் கோயிலைக் கட்டினான். அவனை அடுத்து அரியணை ஏறிய அவன் மகன் வள்ளால சேனனும் சைவனே. வாரணாசி – கனோஜ் அரசனான கோவிந்த சந்திரன் பரமமகேஸ்வரன் ஆவான். அவன் வெளியிட்ட தங்க, செப்பு நாணயங்களில் திரிசூலம் பொறிக்கப்பட்டுள்ளது.

சாளுக்கியர்கள் – சைவர்கள் : சாளுக்கிய அரசை நிறுவிய மூலராஜன் I சிவபெருமானை வழிபட்டான். அவன் வழிவந்த ஜெயசிம்ம சித்தராஜனும் சைவனே. ஹேமசந்திரனும், குமாரபாலனும், சோமநாதர் கோயிலுக்குப் பன்முறை

1) "Ancient India" - R.C. Majumdhar............1952.
"இந்திய வரலாறு" – ந. சுப்பிரமணியன் ....1964.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழிபாடு செய்யச் சென்றனர். உலகப்புகழ் பெற்ற சோமநாதபுரம் கோவில், ஜயசிம்ம சித்தராஜன் கட்டிய சித்தேசுவரம், மண்டஸ் நகரில் மூலராஜன் கட்டிய மூலேசுவரம், ஜயசிம்மன் கட்டிய நித்ரமஹாகானம் என்பன சிறந்த சிவத் தலங்களாக விளங்கின. சாளுக்கிய மன்னர் லகுலீச பாசுபத ஆசாரியர்களைத் தாங்கள் கட்டிய மடங்களில் தலைவர்களாக வைத்தனர். அவர்களிடம் தீட்சைபெற்றுத் தங்களை ''பரம மாஹேசுவரர்'' என்று கூறிக் கொண்டனர்.' அவர்களுடைய கல்வெட்டு களில் சிவ வணக்கம் ''ஓம் நமசிவாய'' இடம் பெற்றுள்ளது.

உஜ்ஜயினி – சைவத்தின் கோட்டை : உஜ்ஜயின் – தாராவை ஆண்ட பரமார மரபைச் சேர்ந்த போஜன் I சைவத்தினைப் பின்பற்றியவன் மட்டும் அல்ல; சைவக் கோட்பாடுகளை வெளிப்படுத்தியவனும் கூட. அவன் எழுதிய பல நூல்களில் ''தத்துவப் பிரகாசம்'' சைவத்தைப் பற்றியது ஆகும். அவனுடைய சகோதரன் உதயாதித்தன் உதயப்பூரில் நீலகண்டேசு வரர் கோயிலைக் கட்டினான். பிற்கால பரமார அரச்ர்களும் (கி.பி. 800 – 1300) சைவத்தைப் பின்பற்றியவர்களே. அக் காலத்தில் உஜ்ஜயினி சைவத்தின் கோட்டையாகவே திகழ்ந்தது.

உஜ்ஜயினியில் இருந்த மாகாளம் கோவில் மிக்க சிறப்பு வாய்ந்தது. இவர்கள் நாட்டைச் சேர்ந்த நருமதை ஆற்றில் உள்ள மந்ததா என்னும் தீவில் இருந்த சித்தீச்சரம் என்ற சிவன் கோவில் மிக்க பழமையும், பெருமையும் உடையது. பரமாரர் கல்வெட்டுகளில் பல இடங்களில் காணப் படும் பவான்பதி, ஓங்கார தேவர் என்பன சிவன் பெயர்களே.

திரிபுரியை (ஹெய்ஹயர்–கி.பி. 250 – 1400)· ஆண்ட கலச்சுரி மரபினர் ஒரு சிலரைத் தவிர அனைவரும் சைவர்களே. இம்மரபினர் துர்வாஸஸ் என்னும் துறவியின் வழி வந்த சைவாசாரியர்களை ஆதரித்தனர். அவர்களுக்கு மடங்களைக் கட்டித் தந்து, தங்களது இராஜ குருக்களாகக் கொண்டனர். அவருள் சிறந்தவர் சத்பாவசம்பு என்பவர். இம்மரபினான யுவமகாராஜன் கி.பி. 940-இல் சோணை யாற்றங்கரையில் சிவன் கோவிலையும், மடத்தையும் அமைத்து, சத்பாத சம்புவிடம் ஒப்புவித்தான். மூன்று லட்சம் கிராமங் களையும் அவருக்குத்தானமாக அளித்தான். சத்பாத சம்பு கோளகீ மடத்தை ஏற்படுத்தி னார். இம்மடத்தில் ஈசானசிவன், ருத்ரசம்பு, மத்த மயூரநாதர், இருதயசிவன், அகோரசிவன், விசுவேசுவரசம்பு முதலிய பலர் ஆசாரியராக இருந்தனர். இவர்களுள் மிகவும் புகழ் பெற்ற விசுவேசுவரசம்பு கலச்சுரி மரபினர்க்குத் தீக்ஷா குருவாக இருந்தார். கலச்சுரி அரசர்கள் தங்களைப் பரம மாகேசுவர்கள் என்று கூறிக் கொண்டனர். பண்டில் – கண்டை ஆண்ட கண்டேள மரபினரும் (சந்திராத்ரையர் – கி.பி. 830 – 1250) சைவர்களே. இவன் ஆதரித்த கிருஷ்ண மிஸ்ரர் பிரபோத – சத்திரோதயா என்ற நூலை எழுதினார். இவர்கள் நாட்டில் வைத்தியநாத கோவில், மரகதேசுவரர் கோவில் மிகச் சிறப்பு வாய்ந்தவை. மரகதேசுவரர் கோவிலில் பாணலிங்கமும், மரகதலிங்கமும் இருந்தன. இவர்கள் கல்வெட்டுக்களிற் பெரும்பாலானவை ''ஓம் நமசிவாய'' என்றே தொடங்குகின்றன.

மேலைச் சாளுக்கியர்களின் சைவப் பற்று : கல்யாண் நகரைத் தலைநகரமாகக் கொண்ட மேலைச் சாளுக்கியர்கள் சைவநெறியைப் • பின்பற்றியவர்கள். சோமேஸ்வரன் I (கி.பி. 1043 – கி.பி. 1068) தீவிர சிவபக்தன். அவனது மகன் சோமேஸ் வரன் II காலத்தில் (கி.பி. 1068 – 1076) சைவசமயம் வேகமாக வளர்ச்சியடைந்தது. அவனது சகோதரன் விக்கிரமாதித்தன் (கி.பி. 1076 – 1126) முதலில் சமணனாக இருந்து பின்னர் தீவிர சைவன் ஆனான். கி.பி. 1156-இல் அரியணை ஏறிய பிஜ்ஜலன் காலத்தில் பசவரின் தலைமயில் வீரசைவம் மறுமலர்ச்சி பெற்றது.

வீரசைவ அறிஞர்கள் : கீழைச் சாளுக்கி யர்கள், கீழைக் கங்கர்கள், காகடீயர்கள் சைவர்கள் ஆவார்கள். வீரசைவம் எழுச்சி யுற்றதன் தாக்கமே இவர்களைச் சைவத்தில் ஈடுபடுத்தியது. வாரங்கல்லை நிறுவிய பிரதாபருத்ரன் I (கி.பி. 1162 – 1186) சோம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாதர் என்ற வீரசைவ அறிஞரை ஆதரித்தான். துவாரசமுத்திரத்தை ஆண்ட ஹொய்சளர்கள் ஆதரித்து ஹரீசுவரன், இராகவாங்கன், தேவகவி, சோமராஜன் ஆகிய அறிஞர்கள் வீரசைவத்தைப் பரப்புவதில் முதல் அணியில் இருந்தனர்.

மைசூரில் லகுலீச சைவமும், காளாமுக சைவமும் பெரிதும் பின்பற்றப்பட்டது. கி.பி. 1076-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு அறிஞரை 'லகுலீச ஆபரணம்' என்றும், மற்றுமொரு அறிஞரை 'லகுலரின் கரம்' என்றும் குறித்துள்ளது. கி.பி. 1103-ஆம் ஆண்டுக் கல்வெட்டு லகுலீச கொள்கையைப் பரப்பிய சோமேஸ்வர சூரியின் பங்களிப்பைக் குறிக்கிறது. கி.பி. 1177-ஆம் ஆண்டுக் கல்வெட்டு லகுலாகம சமயத்தைப் பரப்பிய துறவியரைப் பற்றிக் கூறுகிறது. சைவ அறிஞர்களுக்குத் தானம் வழங்கப் பட்டமை பற்றியும், சிவாச்சாரியார்கள் பற்றியும் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்குப்பின் மைசூரில் வீரசைவம் வேகமாகப் பரவிற்று.[1]

(7)
கி.பி. 1300 முதல்
கி.பி. 1526 வரை

இஸ்லாமிய – துருக்கியர்களின் காலம்

இக்காலகட்டம் இஸ்லாமிய துருக்கியர்களின் காலம் எனலாம். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு இறுதி வரை இந்தியாவின் பெரும்பகுதி இஸ்லாமியர் பிடியில் அகப்படாமல் இருந்து வந்தது. அலாவுதீன் கில்ஜி காலத்தில் (கி.பி. 1300 – 1320) இந்தியாவின் பெரும்பகுதி இஸ்லாமியர் வசம் இருந்தது. அவன் காலத்தில் கூட விந்தியமலைக்குத் தெற்கே, (மேற்கு தக்காணம் நீங்கலாக்), அவன் ஆளுகைக்குள் வரவில்லை. கில்ஜிக்குப் பிறகு துக்ளக் பரம்பரையினர் தங்கள் சாம்ராஜ்யத்தை நிறுவ முயன்று முழு வெற்றி பெறாது இருந்து விட்டனர். முகமதுபின் துக்ளக் காலத்தில் இஸ்லாமியப் பேரரசு தென்னிந்தியாவின் கடைசி வரை ஆளுகையை விரிவுபடுத்தினாலும், சில ஆண்டுகளுக்கு உள்ளாகச் சிதறுண்டு போனது. அத்துடன் துருக்கியப் பேரரசு அழிந்தது. இந்தியாவும் சிதறுண்டு, பல்வேறு சிற்றரசு பேரரசுகளாக மாறிது. இந்நிலை முகலாயர்கள் தங்கள் சாம்ராச்சியத்தை நிலைநாட்டும்வரை – கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதி – நீடித்த கில்ஜி, முகமது–பின்–துக்ளக் ஆகியோரின் காலமாகிய இருபத்திரண்டு ஆண்டுகள் தவிரபிற சமயங்களில் துருக்கிய இஸ்லாமியப் பேரரசு இந்தியாவில் இல்லை எனலாம். இந்தப் பேரரசின் பிரதிநிதி டில்லி சுல்தான் ஆவார். இக்கால கட்டத்தில் தக்காணத்தில் பாமனி அரசும், மேற்கே குஜராத்தும், கிழக்கே வங்காளம் முஸ்லிம்கள் ஆளுகையிலும், தென்னிந்தியாவில் விஜயநகரஆட்சி, ராஜபுதனத்தில் மேவார் ஆட்சி, கிழக்கடற்கரையில் ஒரிஸா ஆகிய பகுதிகள் இந்துக்கள் ஆளுகையிலும் இருந்தன. இவர்களுக்குள் நிகழ்ந்த சண்டைகளும், போராட்டங்களுமே இக்கால கட்டத்திய நிகழ்வுகள் ஆகும்.

இவர்களுக்குள் நிகழ்ந்த போராட்டங்களினால் பிற்காலத்தில் பெருவிளைவுகள் ஏற்படுத்திய இரண்டு படையெடுப்புகள் நிகழ்ந்தன. முதலாவது தைமூர் (Timur) என்ற துருக்கிய சர்வாதிகாரியின் படையெடுப்பு. இவன் இழைத்த கொடுமைகள் அளவற்றன. அடுத்தது வாஸ்கோடகாமாவின் வருகை. இதனால் இந்தியாவின் எதிர்காலமே மாறி ஐரோப்பியர் வசம் சிக்கியது. வாஸ்கோடகாமாவும் தைமூரைப் போல பல துன்பங்கள் தந்தான். குரூரத்திற்கு மறுபெயர் போர்த்துகிசியர்கள் எனல் ஆயிற்று. இருவரின் நோக்கமும் செல்வத்தைக் குவித்தலும், தங்கள் சமயத்தைப் பரப்புதலுமே ஆகும்.

இருண்ட மேகத்திலும் ஒரு வெள்ளிக் கீற்று என இக்கால கட்டத்தில் கலை வளர்ச்சியுற்றது. இந்தியா முழுமையும் ஒரே ஆளுகையாக டில்லியில் அதிகாரம் குவிந்திருந்தால், கலையைப் பேணும்

1) "The History and Culture of Indian People" Vol V .... Bhavani.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முயற்சியும் ஒரு அரசின் முயற்சியாக அதிக வளர்ச்சியுறாமல் இருந்திருக்கும். பல்வேறு அரசுகள் இருந்தமையினால் அங்கங்கும் கலை பேணப்பட்டு வளர்ச்சி யுற்றது. ஒன்று போல இல்லாமல் பன்முகத் தன்மையும் பெற்றது.

இராமானந்தர், கபீர், சைதன்யர் நானக் ஆகிய அருளாளர்கள் தோன்றி அருளுப தேசம் செய்து வந்தனர். அருளாளர்களின் அருள்மொழிகளால் பல்வேறு மொழி களும் வளர்ந்தன. இதுகாறும் பல்வேறு கலாச்சார மாறுதல்கள் இருந்து வந்தாலும், ஒரு கலாச்சாரத்துடன் மற்ற கலாச்சாரம் கலந்து இணைந்து நின்றது. முதன்முதலாக இந்து கலாச்சாரம் – முஸ்லிம் கலாச்சாரம் என்று இருவேறு கலாச்சாரங்களால் பிரிந்து இன்று வரை தனித்து நிற்கின்றன. முஸ்லிம் ஆதிக்கத்தால் இந்துக் கலாச்சாரம் சீர் குலைந்தது. கோயில்கள் இடியுண்டன. தென்னாட்டில் விஜயநகரப் பேரரசும், வடநாட்டில் மிதிலை என்ற குறுநில அரசும் இந்து தீபத்தை ஏற்றிப்பிடித்தன.[1]

(8)
கி.பி. 1526 முதல் கி.பி. 1707 வரை

முகலாயப் பேரரசு

இக்கால கட்டத்தில் முகலாயர்கள் இந்தியா முழுமையையும் ஆளுகைக்குக் கொண்டு வந்துவிட்டனர். இக்காலகட்டம் முஸ்லிம் ஆட்சியின் உன்னதமான காலம் ஆகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய முஸ்லிம் ஆட்சி வடஇந்தியா வில் 600 ஆண்டுகளும் தென்னிந்தியாவில் 500 ஆண்டுகளும் நீடித்து நின்றன. அக்பர் ஒருவரைத்தவிர ஏனைய அரசர்கள் இந்துக் களைத் துன்புறுத்தியவாறே இருந்தனர். இது ஔரங்கசீப்பின் காலத்தில் உச்சநிலை யை எட்டியது. இந்துக் கோயில்களை இடிப்பதும், விக்கிரங்களை உடைப்பதும் ஔரங்கசீப்பிற்கு வாடிக்கையாயிற்று.

முகலாய ஆட்சிக்கு அடுத்து வட இந்தியாவில் ராஜபுதன அரசும், தக்காணத்தில் ஐந்து சுல்தானிய அரசுகளும், தென்னிந்தியாவில் விஜயநகர இந்துப் பேரரசும் இக்காலகட்ட வரலாற்றில் முக்கிய இடம் பிடிக்கின்றன.

முகலாயப் பேரரசை நிறுவியவர் பாபர் *(1483–1530)* ஆவார். அவருக்குப் பின் ஹுமாயூன் *(1530–1556)*, அக்பர் *(1556–1605)*, ஜஹாங்கீர் *(1605–1658)*, ஔரங்கசீப் *(1658–1707)* ஆகியோர் வாரிசு கிரமப்படி அரியணை ஏறினர்.

முகலாயப் பேரரசை எதிர்த்தவர்களில் முன்னின்றவர் சிவாஜி ஆவார். (1627–1680). அவர் இந்து சாம்ராச்சியத்தை நிறுவினார். மறுபுறம் முஸ்லிம் அரசர்களின் கொடுமை யை எதிர்த்து குருகோவிந்தசிங் தலைமை யில் சீக்கியர் எழுச்சி பெற்றனர்.

கி.பி. *1498*-இல் வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை வந்தமையால் போர்த்துக் கிசியர் இந்தியாவில் காலூன்றினர்.[2]

(9)
கி.பி. 1707 முதல் கி.பி. 1818 வரை

மராட்டியரின் உயர்ச்சி

இக்காலகட்டத்தின் முக்கிய நிகழ்வு கள்: முஸ்லிம் ஆட்சியின் வீழ்ச்சி, மராட்டியர் களின் எழுச்சியும், வீழ்ச்சியும், பிரிட்டிஷ் பேரரசு இந்தியாவில் காலூன்று தல். (கி.பி. 1707 – ஔரங்கசீப்பின் மறைவு; கி.பி. 1818 – மூன்றாவது மராட்டியப்போர்.)

இக்காலகட்டத்தில்தான் இந்தியா மத்திய காலத்திலிருந்து நவீன காலத்திற்கு வந்தது. இந்தியா முதன்முதலாக ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுடன் தொடர்பு கொண்டது. இதனால் இந்திய கலாச்சாரத்தில் பெரும் விளைவுகள் விளையக் காரணமாக இருந்தது. இந்தியர்கள் ஆங்கிலமொழி அறியலாயி

1) "The History and Culture of Indian People" Vol VI .... Bhavans -
2) "The History and Culture of Indian People" Vol VII.... Bhavans - 1974.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

னர். இதனால் இந்திய வாழ்க்கை முறை மாறியது. இதனால் இதற்கு முந்தைய ஆயிரம் ஆண்டுகளின் சமூக, கல்வி, சமய, கலாச்சார மாறுதல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டைய நூறு ஆண்டுகளில் நிகழ்ந்தன. 19-ஆம் நூற்றாண்டு முற்றிலும் புதிய இந்தியாவாக மாறியது.

அதேசமயம் பிரிட்டிஷாரின் சுரண்டலினால் உலகிலேயே செல்வமிக்க நாடாக இருந்த இந்தியா ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஔரங்கசீப்பின் மறைவுக்குப் பிறகு மொகலாய ஆட்சியில் சரிவு ஏற்படலாயிற்று. மராட்டியர்களின் எதிர்ப்பு அதிகமாகியது. பதினெட்டாம் நூற்றாண்டு மராட்டியர்களின் உன்னதமான காலம் ஆகும். இக்காலகட்டத்தில் மராட்டிய அரசர்களை விட அவர்களது பேஷ்வாக்களே (பிரதம மந்திரி) ஆட்சி புரிந்தனர். இந்த வரிசையில் பேஷ்வா பாஜீராவ் (கி.பி. 1720–1740), பாலாஜி ராவ் (கி.பி. 1740–1761), பேஷ்வாமாதவ் ராவ் ஆகியோர் திறம்பட ஆட்சி நடத்தினர்.

இந்தியாவில் ஆங்கிலேய பிரெஞ்சு கம்பெனிகள் : கி.பி. 1720-இல் முகலாய ஆட்சியில் வலுகுறைய ஆரம்பிக்க, ஆங்கிலேயர்கள் வங்காளத்திலும் சோழ மண்டலக் கடற்கரையிலும் குடியேறினர். ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனி பிரிட்டிஷ் அரசரின் அங்கீகாரம் பெற்றது. மூன்று ராஜதானிகளும் வேகமாக வளர்ந்தன. ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும்போர்கள் அடிக்கடி மூண்டு 1757-இல் ஆங்கிலேயர் வங்காளத்தில் வலுவான சக்தியைப் பெற்றனர்.

கி.பி. 1757–1784 காலத்தில் வங்காளத்தில் முதலில் கிளைவ் தலைமையிலும், பின்னர் வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமையிலும் ஆங்கிலேயர் ஆதிக்கம் முழுமையாக உருவாகியது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மஹாஜி சிந்தியாவின் தலைமையில் மராட்டியநாடு புகழின் உச்சிக்குச் சென்றது. கி.பி. 1794-இல் சிந்தியா இறந்தார். வடக்கே உச்சத்தில் இருந்த மராட்டியர்கள் தெற்கே குறைந்த அளவு செல்வாக்கே பெற்றிருந்தனர். மைசூருடனும்,ஹைதரபாத்துடனும் மராட்டியர் நட்பும், பகைமையும் மாறி மாறிக் கொண்டிருந்தனர்.

கி.பி. 1730–1780 கால கட்டத்தில் மைசூரில் ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் ஆட்சியைக் கைப்பற்றி ஆங்கிலேயர்களையும் மராட்டியர்களையும் எதிர்த்து வந்தனர். இறுதியில் ஆங்கிலேயரிடம் திப்பு தோற்றுப் போனார்.

கி.பி. 1818-இல் மராட்டியர் ஆங்கிலேயரிடம் அடிபணிந்தனர். கி.பி. 1823-க்குள் இந்திய பிரிட்டிஷ் ஆளுகைக்கு வந்து விட்டது. இதுவரை முகலாய பேரரசின் கீழ்ப்பணியாற்றுபவர் கவர்னர் என்ற நிலை மாறி நேரிடைப் பொறுப்பு வந்து விட்டது.[1]

தொகுப்பு

வட இந்தியாவில் ஆட்சி புரிந்த பேரரசர்கள் காலந்தோறும் சைவப்பணி செய்து வந்தனர். குஷானர், பாரசிவர்கள், நேபாள அரசர்கள், வாகாடக பரம்பரையினர், கலச்சூரி பரம்பரையினர், ஆனந்த பரம்பரையினர், விஷ்ணுகுண்டியர்கள், சாளுக்கியர்கள், பரமார அரசர்கள், கலச்சூரி மரபினர் என கி.பி. 1400 வரை சைவ சமயத்தைப் பல நிலைகளில் பேணி வந்தனர். இவ்வாறு இந்தியா முழுவதும் பரவலாக வளர்ச்சி பெற்றிருந்த சைவ இலக்கியம் முகலாயர் ஆட்சியிலும், அதன்பின்னர் வந்த ஆங்கிலேயர் ஆட்சியிலும் தேக்க நிலை கண்டது.

■■■

1) "The History and Culture of Indian People" Vol VIII .... Bhavani.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VI

தமிழ் இலக்கிய நோக்கில் சைவம்

தொல்காப்பியம் தொட்டு இன்று வரை தமிழ் இலக்கியம் வளர்ச்சி பெற்றும், வளமடைந்தும் வந்துள்ளது. தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றை ஐந்து பெரும் பகுதிகளாக வரலாற்று அறிஞர் மு.அருணாசலம் அவர்கள் பிரிக்கிறார்கள்.

1) சங்க காலம் : (அ) கடைச் சங்கத்துக்கு முற்பட்ட காலம் : கி.மு. 300 வரை.

(ஆ) கடைச்சங்ககாலம் : கி.மு. 300 தொடங்கி கி.பி. 250 வரை.

2) பாசுர காலம் : (அ) களப்பிரர் காலம் அல்லது முதற்பாசுர காலம் : கி.பி. 250 தொடங்கி கி.பி. 600 வரை.

(ஆ) பாசுர காலம் : கி.பி. 600 முதல் கி.பி. 900 வரை.

3) சோழர் ஆதிக்க காலம் : கி.பி. 850 தொடங்கி கி.பி. 1300 வரை.

4) சமய எழுச்சிக் காலம் : (அ) சைவ வைணவ சாத்திரங்களின் தோற்றகாலம் : கி.பி. 1150 தொடங்கி 1550 வரை.

(ஆ) புராண எழுச்சிக் காலம் : கி.பி. 1450 தொடங்கி 1700 வரை.

(இ) பக்தி மறுமலர்ச்சிக் காலம் : கி.பி. 1650 தொடங்கி 1800 வரை.

5) தற்காலம் : (அ) அன்னியர் ஆதிக்க காலம் : 1800 முதல் 1900 வரை.

(ஆ) சுதந்திரப்போர் காலம் : 1900 முதல் 1950 வரை.

(இ) சுதந்திர காலம் : 1950க்குப்பின் காலந்தொறும் தமிழ் இலக்கியத்தைச் சைவசமயம் வளப்படுத்தியிருக்கிறது.

(1)

ஐந்திணைப் பாகுபாடு

குறிஞ்சி(மலை), முல்லை(காடு), மருதம்(வயல்), நெய்தல்(கடல்), பாலை என நில வகை ஐந்திணையின் பாற்படும். தென்னிந்திய மனிதன் மலைகளில் வாழ்ந்திருக்க வேண்டும். தொடக்கத்தில் மழை, வெயில், மிருகங்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள அவனுக்கு மலைக்குகைகள் போதுமானவையாக இருந்தன. பழங்கள், பருப்புகள், அவனுக்கு உணவாய் அமைந்தன. மிருகங்களைக் கொன்று உண்ண ஆரம்பித்தான். மனிதனின் முதல் தொழில் வேட்டுவத் தொழில் ஆகும். இப்பொழுது குறவர் எனப்பட்டனர். கண்டதும் காதல் கொள்வது வாழ்க்கை ஆயிற்று. புலிப்பல்லை காதலிக்கு ஆண் மகன் தருவதுண்டு. இது பழைய கற்காலம் ஆகும். இக்கால மனிதன் பயன்படுத்திய பொருள்கள் கடப்பா, நெல்லூர், வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்ட குறிஞ்சி நிலப்பகுதியில் கிடைத்துள்ளன.

குறிஞ்சிப் பகுதியில் மக்கள் தொகை பெருக ஆரம்பித்தவுடன் அருகில் உள்ள காட்டிற்குக் (முல்லை) குடிபெயர்ந்தனர். இதற்குள் பசு, எருமை, ஆடு, நாய்கள் வளர்க்க ஆரம்பித்து விட்டனர். முல்லைப் பகுதியில் ஆடுமாடுகள் நன்கு வளர்ந்தன. எனவே சொத்துரிமைச் சமுதாயம் உருவாயிற்று. காதல் வாழ்வாகிய களவுமணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பொழுது கற்புமணமாக மாறியது. புல்வெளி, மனிதர்களுக்குரிய பந்தல், மலர் அலங்காரம், இனவிருந்து என மாறியது. இதுவரை பெண்ணுரிமைச் சமுதாயமாக இருந்த கலாச்சாரம் ஆணுரிமைச் சமுதாயக் கலாச்சாரமாக மாறியது. நிலம், ஆடு, மாடுகள் இவற்றைப் பாதுகாக்க தனிமனித வாழ்வு கூட்டுக்குடும்ப முறையாக மாறியது. பெரிய குடும்பத்தின் தலைவன் கோன் எனப்பட்டான். தலைவி ''ஆய்ச்சி'' எனப்பட்டாள்.

வீர தீரச் செயல்களில் ஆர்வம் கொண்ட ஆதிமனிதன் கடலில் சாகசம் புரிய விரும்பினான். எனவே நெய்தல் நிலத்தை நாடினான். அப்படியே மீன் பிடித்தல் அவனது தொழிலாகிக் கடலோரங்களி லேயே தங்கிவிட்டான். இவர்களே பரதவர்கள். இவர்கள் வெளிநாடுகளுக்கும் முதன் முதலில் கடல் வழியாகச் செல்ல ஆரம்பித்தனர். கடற்பொருள்களான மீன், உப்பு முதலியவற்றை எருதுகளின் மேல் ஏற்றி ஆற்றுப் படுகையில் வாழும் மனிதர்களிடம் கொடுத்துத் தங்களுக்குத் தேவையான தானியங்கள் முதலான பெற்றுச் சென்றனர். இப்படி வாணிகம் ஆரம்பித்தது. அவ்வழிவந்த இன்றைய பலிஜி (Baliji) இனத்தவர்கள் எருதின் மேல் பொருள்களை ஏற்றி வாணிகம் செய்கின்றனர் என்பதை அறியலாம்.

இறுதியாக மனிதன் ஆக்ரமித்த இடம் முல்லை (காடு)க்கும், நெய்தலுக்கும் (கடல்) இடைப்பட்ட மருதம் ஆகும். இது பழைய கற்காலத்தின் இறுதி ஆகும். புதிய கற்காலம் ஆரம்பிக்கும் தருணத்தில் மனிதன் பயிர்ச்சாகுபடி (நெல், கரும்பு, வாழை, மா) செய்ய ஆரம்பித்து விட்டான். ஓரிடத்தில் தங்க வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. புல்வெளியில் தேடித்திரிந்த ஆதி மனிதன் வயற்பகுதியில் தங்கலா னான். இவர்கள் உழவர் ஆவர். வெள்ளத் தைக் கட்டுப்படுத்தும் வெள்ளாளரும், மழைநீரைச் சேமித்து (கார்–மேகம்–நீர்) ஆட்சிசெய்யும் காராளரும் உழவரே!

அந்த மனிதன் பஞ்சிலிருந்து துணி நெய்யவும் ஆரம்பித்துவிட்டான் – பயிர்ச் சாகுபடி செய்வதனால் சேமித்து வைக்க இடம் தேவைப்பட, மரத்தைக்கொண்டு வீடு கட்ட ஆரம்பித்து விட்டான். பரதவர் களிடம் மீனும், உப்பும், இடையர்களிடம் பாலும், நெய்யும் குறவர்களிடம் கல்லும், ஆயுதமும் வாங்க வேண்டியிருந்ததால் வண்டி தேவைப்பட்டது. இதுதான் மனித நாகரிகத்தின் மகத்தான கடைசி அடி யெடுத்து வைத்தல் ஆகும். மனிதனின் இன்றியமையாத தேவைகள் உணவும் உடையும் ஆகும். இரண்டு அடிப்படைத் தேவைகளிலும் தானியங்கள், பஞ்சு, கம்பளி பயன்படுத்த ஆரம்பித்த பிறகு – இன்று வரை புதிதாக ஏதும் கண்டுபிடிக்கப் பட்டு மாற்றம் செய்யப்படவில்லை. இன்றுவரை உள்ள ஏனைய கண்டு பிடிப்புகள் எல்லாம் அடிப்படைத் தேவை களில் மாற்றம் தராது, பிற நிலைகளில் மட்டுமே வளர்ச்சி பெற்றுள்ளன.

உணவு, உடைக்குப்பிறகு அடுத்த பெரிய கண்டுபிடிப்பு பேச்சு – அதிலிருந்து மொழி – ஆரம்பத்தில் இசையாகவும் பாடி யிருக்கலாம்; பேச்சாகவும் இருந்திருக்க லாம்; வசனத்தை விட கவிதையே முந்தியிருக்க வேண்டும். இப்படித்தான் பண் பிறந்தது. பாணர்கள் தோன்றினர். இவ்வாறு ஐந்திணைப்பாகுபாடு கொண்டு தமிழர்களின் தொன்மையைப் பி.டி. சீனிவாச ஐயங்கார் நிறுவுகிறார்.[1]

(2)

தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு

தொல்காப்பியம் : பழந்தமிழ் இலக்கிய மான தொல்காப்பியம் நானிலங்களுக்கும் உரிய தெய்வங்களாக திருமால், முருகன், வருணன், இந்திரன் ஆகியோரைக் குறிக் கின்றது.

''மாயோன் மேய காடுறை உலகம்
சேயோன் மேயமைவரை உலகம்

1) "History of the Tamils" - P.T. Srinivasa Iyengar.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேந்தன் மேய தீம்புனல் உலகம்
வருணன் மேய பெருமணல் உலகம்''

(தொல் .....அகத்திணை ..5-ஆம் சூத்திரம்)

இந்த நானிலத் தெய்வத்தில் சிவன் இடம் பெறாததோடு, தொல்காப்பியம் நெடுகிலும் சிவன் என்ற பெயரோ சிவன் பற்றிய செய்திகளோ இடம் பெறவில்லை. தொல்காப்பியருக்கு ஆசிரியர் முத்தமிழுக் கும் இலக்கணம் வகுத்த அகத்தியர் ஆவார்.

அ.ச. ஞானசம்பந்தனார் கருத்து : சிவன் என்ற பெயர் அக்காலகட்டத்தில் வழக்கில் இல்லாமல் இருந்திருக்கலாம் என்றும், மூலப்பொருளுக்குக் 'கந்தழி' என்றும் நானிலம் பற்றிக் குறிக்கும் பொழுது 'தெய்வம்' என்றும் குறிப்பிடுகின்றன என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் குறிக்கின்றார். எங்கும் பரவியிருக்கும் பரம்பொருளை நிலத்தெய்வமாகக் குறிக்க வில்லை என்று சில அறிஞர்கள் கருதுகின்ற னர். தொல்காப்பியத்தில் 'தெய்வம்' என்று ஒன்பது இடங்களில் வருவது நிலத் தெய்வத்தைக் குறிப்பது ஆகும். 'கடவுள்' என்று மூன்று இடங்களில் வருவது குறிப்பிட்ட நிலத்துக்குட்படாமல் எங்கும் நிறைந்த பரம்பொருளை – சிவபெரு மானை குறிப்பது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

சங்க இலக்கியம் : சங்க இலக்கியத்தில் சிவபெருமான் பற்றிய செய்திகள் நிரம்ப வருகின்றன. ஆனால் சிவன் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை ''நீல மணிமிடற்று ஒருவன்'' ''ஆலமர் கடவுள்'' என்றே வருகின்றன. இதே போல சங்க இலக்கியத் தில் பதினாறு இடங்களில் சிவனைக் குறிக்கும் பெயர்களும் இருபத்தாறு இடங்களில் சிவனைக் குறிக்கும் செய்தி களும் இருப்பதாக மா. இராசமாணிக்கனார் தனது ''சைவ சமய வளர்ச்சி'' நூலில் கூறுகின்றார். இதுமட்டுமல்லாது சங்கப் பாடல்களில் நிலத்தெய்வங்கள் அல்லாமல் பொதுவாகக் குறிக்கும் பொழுது ''கடவுள்'' என்று வருகின்றது. அவற்றுள் ''கடவுள்'' உறைகின்ற இமயம்'' என்று பதிற்றுப் பத்தும், ''எருக்கம் பூச்சூடும் கடவுள்'' என்று புறநானூறும், ''காரி உண்டிக் கடவுள்'' என்று மலைபடுகடாமும் கூறுவதனால் இவை சிவபெருமானையே குறிக்கின்றன என்பார் அ.ச. ஞான சம்பந்தன். சங்கப்புலவர்களில் இறையனார் என்று ஒருவரும், உருத்திரனார் என்று மூவரும், சத்திநாதனார், பேயனார், பேரால வாயர், போரயில் முறுவலார் என்ற பெயர்களிலும், கூத்தனார் என்று ஆறு பேரும், கண்ணனார் என்று இறுதியில் அமைந்து பெயர்களைக் கொண்டு முப்பத் தாறு பெயர்களும் கொண்டிருந்தனர். இதனால் சங்க காலத்தில் சிவ வழிபாடு வேரூன்றியிருந்தது புலனாகும். [1]

சிலப்பதிகாரம் : சிலப்பதிகாரத்தில் சிவபெருமான் மட்டுமல்லாது அம்மை யப்பர் தத்துவமும் இடம் பெற்றுள்ளது. வேட்டுவவரி நெடுகிலும் உமையைப் பற்றிப் பேசும் பொழுது சிவபெருமானைப் பாகம் கொண்டாள் என்றே குறிக்கின்றது. ''பாகம் ஆளுடையாள்'' ''திங்கள் வாழ் சடையாள்'' மேலும் சிவபிரான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம் காபாலம் பற்றியும் சிலம்பு கூறுகிறது.

மணிமேகலை : சைவம் என்ற பெயர் முதன் முதலாக மணிமேகலையில் வருகிறது.

கலித்தொகை : சிவபெருமான் முப் புரத்தை எரித்த சாம்பலை அணிந்து ஆடிய வன் என்கிறது கலித்தொகை (கலி – 1)

சிவன் கோயில் முதன்மை : ஆலமரத் தடியில் சிவன் இருந்தான் என்று சிறு பாணாற்றுப்படை கூறுகிறது. சிலப்பதி காரம், மணிமேகலை, மதுரைக்காஞ்சி ஆகிய நூல்கள் கோயில்களை வரிசைப் படுத்தும் பொழுது சிவன் கோயில்களை முதன்மையாகக் குறிக்கின்றன.

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்'' (சிலப் ...5:169–172)

1) "சங்க இலக்கியங்களில் சமயநோக்கு" – கு. சுந்தரமூர்த்தி. ....1991.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்'' (சிலப் ...14:7–10)

''நுதல் விழி நாட்டத்து இறைவன் முதலாப் (மணி ...1:54–55)

''மழுவாள் நெடியோன் தலைவனாக (மதுரை ...453–455)

மலைபடுகடாம் குறிக்கும் சிவன் கோயில் : செங்கண்மா (தற்போதைய செங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்) என்ற பகுதியை ஆண்ட நன்னனது நவிரம் என்ற மலையில் காரியுண்டிக்கடவுள் எனப்பட்ட சிவபிரான் கோவில் இருந்ததாக மலைபடு கடாம் (வரிகள் 82-83; 230-232) கூறுகிறது. அக்கோயிலிலுள்ள கல்வெட்டு ''கண்ணை'' என்று குறித்திருப்பதும் ''கண்ணை'' என்ற தலம் திருநாவுக்கரசர ரால் பாடப்பட்டிருப்பதும் சிந்திக்கத் தக்கது.

ஔவையார் காலத்தில் சிவன் கோயில் : சேலம் மாவட்டம் தர்மபுரி தாலுக்கா அதமன் கோட்டையில் (அதிய மான் கோட்டை) உள்ள சிவன் கோயிலில் கல்வெட்டுகளில் 'மயிந்தீசுவரம் உடை யார்' என்று அக்கோயில் பெருமானைப் பற்றிக் குறித்துள்ளது. இக்கோயிலைத் திருஞான சம்பந்தர் 'மயிண்டீச்சரம்' என்று குறிக்கின்றார். இப்பகுதியை ஆண்ட அதிய மானை ''நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக'' என்று ஔவையார் வாழ்த்து கிறார். எனவே, இக்கோயில் சங்ககாலத் ததாக இருக்கலாம் என்று கருதுகிறார் இராச மாணிக்கனார்.

மதுரைக் கோயில் – புறநானூறு : மதுரையில் உள்ள சிவன் கோயிலில் உள்ள வெள்ளியம்பலம் பற்றி புறநானூறு குறிக் கின்றது. அச்சபையில் இறந்த பாண்டியன் ''வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெரு வழுதி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். (புறம் 58) வெள்ளிவீதியார் என்ற பெண் பாற் புலவர் அத்தெருவில் வாழ்ந்திருக்க லாம்.

(3)

லிங்க வழிபாடு

லிங்க வழிபாடு : லிங்க வழிபாடு வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்து வெளி மக்களிடம் இருந்தது. வேதகாலத்தில் பழங்குடிகளிடம் இருந்தது. இதிகாச காலத்தில் எல்லோரிடமும் பரவியது. சிவ பெருமானான மூர்த்தம் மகாதேவனைக் குறிக்கும் மூர்த்தமாகக் கருதப்பட்டது. தென் இந்தியாவில் வேதகாலத்திற்கு முற்பட்ட கற்காலத்திலேயே லிங்கங்கள் இருந்தன. இதிகாசகாலத்தில் இராமனால் இராமேசுவரத்தில் லிங்கம் வழிபடப் பட்டது என்று இராமாயணம் கூறுகிறது. குடிமல்லம், களத்தூர் என்னும் இடங்களில் உள்ள பழையகோயில்களில் உள்ள லிங்கங்கள் கி.மு. 2-ஆம் நூற்றாண்டினவை என ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர். ''லிங்க வணக்கம் கற்கால நாகரிகத்தைச் சேர்ந்தது. கற்காலப் பொருள்களில் லிங்கங்களும் கிடைத்துள்ளன.'' என்று ஆர்.ஜி. பந்தர்க்கரும் கூறியுள்ளார்.

கல் லிங்கத்தைப் போல மரத்தூண்கள் பலர் கூடும் பொது இடங்களில் (அம்பலங் களில்) பல ஊர்களில் இருந்தன என்றும் ஒவ்வொன்றிலும் தெய்வ உருவம் எழுதப் பட்டிருந்தது என்றும், மக்கள் மலர் தூவி விளக்கு ஏற்றியும், வாத்தியங்கள் முழக்கி யும் வழிபட்டனர் என்றும் பட்டினப் பாலையும் (246-250) அகநானூறும் (செய் 167, 287) கூறுகின்றன. பீடமற்ற பழைய கல் லிங்கங்கள் இரண்டு காஞ்சி ஏகாம்ப ரேசுவரர் கோவிலில் இன்றும் உள்ளன. [1]

(4)

திருமந்திரம்

(கி.பி. 550க்கு பின் கி.பி. 650க்கு முன்)

திருமுறைகளில் தேவார, திருவாசகங் களுக்கு முன்னர் காரைக்கால் அம்மையார்

1) "சைவ சமய வளர்ச்சி" – மா. இராச மாணிக்கனார். ....1958.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல்கள் பாடப் பெற்றன ஆகும். (கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டு). அதன் பின் எழுந்தது திருமந்திரம். கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பின்போ கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன்போ திருமந்திரம் நிறைவு பெற்றிருக்க வேண்டும் என்பார் க. வெள்ளை வாரணனார்.

வேதம். ஆகமம் ஆகியவற்றில் கருத்துக் களை உள்ளடக்கியது திருமந்திரம் ஆகும். இந்நூல் தந்திரம், மந்திரம், உபதேசம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு 3000 பாடல்களைக் கொண்டது ஆகும். முதல் நான்கு தந்திரங்கள் சிவஞானம் அடையச் செய்ய வேண்டிய சாதனங்கள் பற்றி குறிக் கின்றன. முதல் தந்திரம் திருக்குறளைப் போல ஒழுக்க நெறிகளை வலியுறுத்து கிறது. வேதப் பொருள்களான அக்கினி காரியம் அந்தணர் ஒழுக்கம் ஆகியனவும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. இரண்டாம் தந்திரத்தில் இறைவனின் ஐவகைத் தொழில்கள், மூவகை உயிர்கள் முதலான தத்துவக் கருத்துக்கள் விளக்கப் படுகின்றன. இத்தந்திரத்தில் தக்கன் வேள்வி, திருமாலுக்குச் சக்கரம் அளித்தல், அடிமுடிதேடல் முதலானப் புராணச் செய்திகளுக்குத் தத்துவ விளக்கம் கொடுக் கப்பட்டுள்ளது. மூன்றாம் தந்திரத்தில் இயமம் முதல் சமாதி ஈறாக உள்ள எண் வகை யோகங்களைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. இது முழுமையும் யோகப் பகுதியாகும். இந்தச் சிவயோகத்தில் பயின்று நிலைத்த பின்னர் சிவஞானம் பெற மந்திரங்களின் சாதகமும் அவற்றின் வலிமையும் பெற வேண்டும். நான்காம் தந்திரத்தினுள் திருவம்பலச் சக்கரம் முதலிய மந்திரச் சக்கரங்கள் உபாசனை முறைகள் விளக்கப் பெற்றுள்ளன.

ஐந்தாம் தந்திரம் சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறுகிறது. சுத்த சைவம் முதலான சைவ சமயப் பிரிவுகளையும், சரியை முதலான நால்வகை நெறிகளை யும், சன்மார்க்கம் முதலான நான்கு மார்க் கங்கயையும், சாலோகம் முதலான நான்கு நிலைகளையும் இப்பகுதி விளக்கு கிறது.

6 முதல் 9 வரையுள்ள நான்கு தந்திரங்கள் ஞானம் பெறும் நிலையில் விளையும் பயன்களைக் கூறுகின்றன.

ஆறாந்தந்திரத்தில் துறவு, தவம், சிவகுரு தரிசனம் என ஞானசாதனங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. ஏழாம் தந்திரத்தில் ஆறாதார நிலைகள், சிவலிங்க பேதங்கள், குருலிங்க சங்கம வழிபாடு, ஆதித்தர் வகை, ஐம்பொறிகளை அடக்கும் முறை இடம் பெற்றுள்ளன. எட்டாம் தந்திரத்தில் சாக்கிரம் முதலான அவத்தை பேதங்கள், கேவல சகல சுத்தம் என்னும் மூவகை நிலைகள், தத்துவமசி மகாவாக்கியம் முதலியன கூறப்பட்டுள்ளன. ஒன்பதாம் தந்திரம் சிவபோகம் என்னும் பேரின்ப நிலையை விளக்குகிறது. இப்பகுதியில் வரும் ஞான குரு தரிசனம், சிவதரிசனம் முதலியன அனுபவ நிலைகளைக் குறிப்பன. திரு வைந்தெழுத்து, திருக்கூத்துகள் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் இந்தந்திரம் பேசுகிறது. அணைந்தோர் தன்மை, தோத்திரம், சர்வவியாபி என்ற பகுதிகளுடன் திரு மந்திரம் நிறைவு பெறுகிறது.

தமிழில் அறநூல்கள் வந்திருக்கின்றன. தோத்திரங்கள் பாடப்பட்டிருக்கின்றன. சாத்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் திருமந்திரம் மட்டுமே அறநூலாக, தோத்திர மாலையாக, சாத்திர விளக்கமாக, புராணக் களஞ்சியமாக, வாழ்க்கைத் துணைநூலாக – ஒரு முழு நூலாக அமைந் துள்ளது. இவற்றையெல்லாம் தாண்டி யோகம், பிராணயாமம், பல்வேறு சக்கரங் கள் ஆகியவற்றை விளக்கும் தனிப்பெரும் நூலாக அமைந்துள்ளது.

திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர் ஆவார். இம்முனிவர் பெருமான் திருக்கயி லாயத்திலிருந்து யாத்திரையாக வந்து திருவாவடுதுறையில் மூலன் என்ற இடை யனின் உடலில் புகுந்து அங்கேயே தங்கி ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடியருளினார்.

(5)

தேவார திருவாசகம்

தேவார திருவாசகம் : இக்கால கட்டத் தில் அப்பர் பெருமான் (கி.பி. 575 – கி.பி. 676) மூன்று திருமுறைகளையும், ஞானசம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பந்தப் பெருந்தகை (கி.பி. 638) மூன்று திருமுறைகளையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் (கி.பி. எட்டாம் நூற்றாண்டு) ஒரு திருமுறையும், அவர் காலத்தவரான சேரமான் பெருமாள் நாயனார் பொன் வண்ணத்து அந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கயிலாய ஞான உலா ஆகிய நூல்களையும் மாணிக்க வாசகர் (கி.பி. 792 – கி.பி. 835) திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்களையும் பாடி அருளியிருக்கின்றார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கம்பனும் தனது ராமகாதையில் சிவபெருமானை உயர்த்திப் பேசியிருக்கிறான்.

நாயன்மார் : அப்பர் – சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் (1) அப்பூதியடிகள் (பிராமணர்) (2) முருக நாயனார் (பிராமணர்) (3) சிறுத்தொண்டர் (சேனைத் தலைவர்) (4) நீலநக்கர் (பிராமணர்) (5) குலச்சிறையார் (அமைச்சர்) (6) மங்கையர்க் கரசியார் (அரசியார்) (7) நெடுமாறர் (அரசர்) (8) குங்குலியக் கலயர் (பிராமணர்) (9) திருநீலகண்ட யாழ்ப்பாணர் (பாணர்) ஆகியோர்.

சுந்தரர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் (1) சடையனார் (சிவாச்சாரியார்) (2) இசை ஞானியார் (சிவாச்சாரியார்) (3) நரசிங்க முனைய்ரையர் (சிற்றரசர்) (4)விறல் மிண்டர் (வேளாளர்) (5) சேரமான் பெருமாள் (அரசர்) (6) கலிக்காமர் (சேனைத் தலைவர்) (7) மானக்கஞ்சாறர் (சேனைத் தலைவர் – வேளாளர்) (8) கோட்புலியார் (சேனைத் தலைவர்) (9) பெருமிழலைக் குறும்பர் (சிற்றரசர்) (10) சோமாசிமாறர் (பிராமணர்) (11) கழற்சிங்கர் (பல்லவ அரசர்) (12) செருத்துணை நாயனார் (வேளாளர்) ஆகியோர். அப்பர் – சம்பந்தருக்கு முற்பட்டவர் 17 பேர். அப்பர் – சம்பந்தர் காலத்தவர் 13 பேர். சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவர்கள் 13 பேர் ஆக 14 பேர் நீங்கலாக எஞ்சிய 22 பேரும் அப்பர் – சம்பந்தர்க்கும், சுந்தரர்க்கும் இடைப்பட காலத்தவர் எனலாம்.

சிவத்தலங்கள் : இக்காலச் சிவத்தலங்களாகப் பாடல் பெற்ற தலங்கள் (274+1) 275ம், வைப்புத் தலங்கள் 50ம் இருந்தன. பாடல் பெறாத தலங்களும் இருந்திருக்கலாம். சிலப்பதிகார காலத்தில் பாண்டி நாட்டுக்குச் செல்லும் வழி ஒழுங்கற்றதாகவும், ஆபத்தானதாகவும் இருந்தது என கவுந்தியடிகள் கூறுகிறார். ஆனால் சம்பந்தர் பாண்டி நாடு செல்லும் பொழுது செம்மையாகவும் அடுத்தடுத்து சிவன் கோயில்கள் உள்ளதாகவும் காண்கிறோம். சம்பந்தர் சென்ற வழியெல்லாம் தோரணங்கள் பூரணகும்பம், தீபம், மலர் தூவி வரவேற்கப்பட்டார். வழியெல்லாம் சிவன் கோயில்களை வழிபட்டுக் கொண்டே சென்றார்.

''கலைமாலை மதிச்சடையார் இடம் பலவும் கைதொழுவர்''
(பெ. புராணம் 25 24)

''மண்ஆர்ந்த பதிபிறவும் மகிழ்தரும் அன்பால் வணங்கி''
(பெ. புராணம் 25 26)

''பிறபதியும் பணிந்து அருள்வார்''
(பெ. புராணம் 25 27)

''மடம் எங்கும் தொண்டர் குழாம்''
(பெ. புராணம். 25 30)

சைவ சமயத்தின் பொற்காலம் : இவற்றையெல்லாம் மேலோட்டமாகப் பார்த்தாலே எங்கும் சிவன் கோயில்கள்; யாண்டும் திருமுறை இசை; நால்வர் பெருமக்கள் பாடிப்பரவுதல்; தமிழகம் எங்கணும் பெரிய புராணம் போற்றும் நாயன்மார் தொண்டு செய்தல் – இக்கால கட்டத்தைத் தான் பெரிய புராணம் சித்தரிக்கிறது. இதனைவிடச் சிறந்தவோர் பொற்காலம் இருக்க முடியாது. பெரிய புராண காலத்தில் சாதிகள் இருந்தன. ஆனால் புராணம் காட்டும் சாதி வேறுபாடு இல்லை. ஒருங்கிணைந்த சமுதாயமாக இருந்தது. கண்ணப்பர் வேடர்; ஆனாயர் இடையர்; திருநாளைப் போவார் பஞ்சமர்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் பாணர் மரபினர். தொழில் முறையிலும் வேறுபாடு இல்லை. திருநீலகண்டர் – குயவர்; திருக்குறிப்புத் தொண்டர் – வண்ணார்; அதிபத்தர் – மீனவர். அரசன், வண்ணான் என்ற தகுதி வேறுபாடும் இல்லை. உவர் மண் வழியப் பெற்ற வண்ணாரைப் பார்த்து 'திருநீறு' எனக் கருதி சேரமன்னன் 'அடிச்சேரன்'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று கூறி அவன் காலில் வீழ்ந்தான். பெண்களுக்கும் சமய வளர்ச்சியில் பெரும் பங்கு இருந்தது. மங்கையர்க்கரசியார் பாண்டி நாட்டிலே சமண சமயத்தை மறுத்துச் சைவத்தை நிலை நாட்டிய மாதரசியார் ஆவார். திலகவதியார் தனது தம்பியார் திருநாவுக்கரசரைச் சைவத்திற்கு மாற்றிய பெண் திலகம். சம்பந்தர், அப்பர் ஆகியோருக்கு முன்னாலேயே முதன் முதல் திருமுறையை இசையுடன் – பாடியவர் காரைக்காலம்மையார். நாயன்மார் மனைவியாரெல்லாம் தத்தம் கணவனார் சைவப் பணிகளில் துணைநின்றமையைப் பெரிய புராணம் பேசும். பிராமணரான அப்பூதியடிகள் வேளாளரான அப்பருக்குப் பாத பூஜை செய்தும், அவர் பெயரால் அனைத்து அறங்களும் செய்தும், தனது பிள்ளைகள் அனைவர்க்கும் ''மூத்த திருநாவுக்கரசு'' ''இளைய திருநாவுக்கரசு'' என்றும் பெயரிட்டும் தனது பக்தியைப் புலப்படுத்துகிறார். சிவாச்சாரியாரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் உருத்திரகணிகையாரான பரவையாரையும் மணந்து, வேளாளப் பெண்ணாகிய சங்கிலியாரையும் மணந்து கொள்கிறார். இதை விடப் பெரிய சமுதாயப் புரட்சி என்ன இருக்க முடியும்? சைவம் தமிழகமெங்கும் பரவியிருந்ததில் வியப்பு என்ன?

சைவம் சந்தித்த போராட்டம் : சைவ சமயம் இந்த நிலையில் வளர்ச்சி பெற என்னென்ன போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது? இன்னும் சற்று பின்னோக்கிச் செல்வோம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் மிகப் பழங் காலத்திலேயே நுழைந்து விட்ட வேத வழக்கொடுபட்ட சமயம், இடையே புகுந்த சாக்த சமயம், பண்டு தொண்டே இங்குப் புகுந்து பிறருக்கு இடையூறு அதுவரை செய்யாது இருந்த சைன சமயம், அதிகம் பரவவில்லை என்றாலும் நிலைப்பேற்றை ஓரளவு பெற்று விட்ட பௌத்தம் ஆகிய சமயங்களுடன் தொல்பழஞ்சமயமாகிய சைவ சமயம் போரிட வேண்டி வந்துவிட்டது. இனி உள்நாட்டில் சைவத்தை அடுத்து வந்த வைணவத்துடனும் போரிட வேண்டிய சூழ்நிலை. இதன் விளைவால் திருமால் அன்பர்களும் முருக பக்தர்களும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் கடவுளே உயர்ந்தவர் என்பதனை முன்னிறுத்த பல புராணக் கதைகளைக் கொண்ட 'பரிபாடலை'ப் பாடினர். இந்தப் போட்டியில் தொல் பழஞ்சமயக் கடவுளாகிய சிவபெருமானும் ஒதுக்கப்படுகிறார்.

வைதிகம் நிலை பெறுதலும், சமணம் பரவுதலும் : இந்தப் போராட்டம் எவ்வளவு கடுமையானது என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேள்வியையே முன்னிறுத்தியவர்களும், சிவ வழிபாட்டை வேறு வழியில்லாமல் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொண்டவர்களுமான வைதீக சமயத்தினர் தங்கள் சமயத்தில் சிவவழிபாடு, விஷ்ணு வழிபாட்டுக்கு இடம் கொடுத்தனர். தங்கள் வேதம், வேள்வியை இங்கு புகுத்தினர். நாளா வட்டத்தில் எந்தக் கொள்கை யாருடையது என்று வேறுபாடு காணமுடியாதபடி இவை இணைந்து விட்டன. அடுத்து இங்கு நுழைந்த சமண சமயத்தார் இங்குள்ள தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டு தமிழில் இலக்கியங்களைப் படைத்தனர். தமிழன் மொழிப் பற்றும், சமயப் பற்றும் மிகுந்தவன். தமிழைச் சமணம் ஏற்றதால் சமணம் பரவியது. சிவ, விஷ்ணு வழிபாட்டினை ஏற்றதால் வைதிகம் நிலைபெற்றது. பௌத்தர் தமிழர்களின் கடவுள் கொள்கையையும் ஏற்கவில்லை. தமிழையும் கற்று நூல்கள் படைக்கவில்லை. மணிமேகலை ஒன்று மட்டுமே பௌத்த நூல் ஆகும். அதுவும் சகிப்பின்மைக்கு நல்ல உதாரணம். எனவே பௌத்தம் தமிழ் நாட்டில் கால் கொள்ளவில்லை.

களப்பிரர் காலம் : இந்த அடிப்படையில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்கு வருகிறோம். கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழ் நாட்டில் மூன்று நூற்றாண்டுகள் ஓர் இருண்டகாலம் பரவியிருந்தது என்பர். அக்கால எல்லையில் தமிழர் அல்லாத, தமிழ்ப் பண்பு, நாகரிகம், சமயம், மொழி என்பவற்றை ஏற்காத, போற்றாத களப்பிரர் பிடியில் தமிழ் நாடு இருந்தது. இக்கால கட்டத்தில் சைவம் வலிகுன்றியிருந்தது. ஆனால் அழிந்துபடவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பக்தி இயக்கத்துக்கு அடித்தளமிட்ட அம்மையார் : இக்கால கட்டத்தில் காரைக் கால் அம்மையார், கண்ணப்பர் வாழ்ந்த னர். தேவார மூவர்கள் இரண்டு நூற்றாண் டுகள் கழித்து தமிழகத்தில் பரப்ப இருந்த பக்தி இயக்கத்திற்கு அடித்தளமிட்டவர் காரைக்காலம்மையார் ஆவர். இறைவ னிடம் முழு அன்பு செலுத்துதல், தன்னை முழுவதுமாக அவனிடம் அர்ப்பணித்தல், இருவினையைப் போக்க முயலுதல், பிறப்பை அறுக்க முயலுதல், இறைவன் தன் உள்ளத்திலேயே உறைவதை உணர் தல், இவற்றால் அவலம் நீங்குதல் என்பவை காரைக்கால் அம்மையார் சைவ சமய வளர்ச்சிக்குத் தந்த கொடைகளாம். சங்க காலத்தில் வேதம், ஆலமர்செல்வன் பேசப்பட்டாலும், சிவபெருமான் வேதத் தை எப்பொழுதும் ஓதிக் கொண்டிருப்ப வன் என்று மட்டுமே கூறப்பட்டது. ஆனால் அம்மையார் பாடல்களில் ''வேதப் பொருளாக உள்ளவன்'' ''வேதத்திற்கு மூல மானவன்'' என்றும் கூறப்படுவது கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வளர்ச்சியே. முறையான சிவவழிபாடு, முழுத்தன்மை பெற்ற சைவம் தோன்றியது அம்மை யாரால் தான் என்பதில் இருவேறு கருத்துக் கள் இருக்க முடியாது.

சைவ சமய வளர்ச்சி – நான்கு நிலைகள் : தொன்மைக் காலம் முதல் இதுகாறும் வரை சைவ சமய வளர்ச்சியை நான்கு கட்டங்களாக மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனார் பிரிக்கிறார்.

சங்க காலத்துக்கு முற்பட்ட நிலை : தொல் பழங்குடியினர் வழிபட்ட நிலை, வேதக் கலப்பு இல்லாமல் சிவன் சிவனாக வே வழிபட்ட நிலை – வடநாட்டில் தோன்றி வளர்ந்த வேத வழக்கில் சிவ வழிபாடு புகுந்து அவர்களாலும் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொள்ளப் பெற்று ருத்ர சிவ வழிபாடாக மலர்தல்.

சங்கப் பாடல்களில் காணப்பெறும் வழிபாட்டுநிலை : சதருத்ரியம், ஸ்வேதாஸ் வதர உபநிடதம் போன்றவையும் லிங்க புராணம், சிவபுராணம் முதலியவையும் தோன்றிய பிறகு தமிழகத்துள் புகுந்து விட்ட சிவவழிபாட்டு நிலை.

3) சங்கப் பாடல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள், சிலம்பு என்ப வற்றில் காணப்படும் வழிபாட்டு நிலை : சதருத்ரியம், உபநிடதம் ஆகியவற்றில் காணப்பெறும் சிவனை அமிழ்த்தி இதிகாச புராண கால சிவன் மேலோங்கிய நிலை.

4) காரைக்காலம்மையார் காலம் வரை வழிபாட்டு நிலை : பக்தி நெறி, இறை வனை உயிர்களோடு தொடர்பு படுத்துதல்.

பேராசிரியர் தெளிவாக விளக்கி பல குழப்பங்களுக்கும், கேள்விகளுக்கும் விடையளித்துள்ளார்கள். அவர்களுடைய வார்த்தைகளில் கூறுவதே பொருத்தம். அவை வருமாறு :

தமிழ் வழிபாட்டு நெறியை போற்றாத பல்லவர் : கி.பி. ஏழாம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி மறைய, தமிழ்நாட்டில் பல்லவரும், பாண்டியரும் செல்வாக்கு பெறுகின்றனர். ஆனால் சமண சமயத்தின் பிடியில் தமிழ்நாடு இருந்தது. இதில் பல்லவர்கள் தமிழர் அல்லர். வட மொழியையும், வடநாட்டு வேத விற்பன் னர்களையும் போற்றினர். தமிழ்நாட்டு வேதியர்களைக் கூட இவர்கள் நம்ப வில்லை. தமிழ்நாட்டு வேதியர்கள் வேள்வி வளர்த்தாலும், சிவ பெருமானை முன்னிறுத்தினார்கள். திருவைந்தெழுத் தினைப் போற்றினார்கள். பல்லவர்கள். இந்துக்களாயிருந்தாலும் தமிழ் வழிபாட்டு நெறியைப் போற்றவில்லை. கோயில் பூசைக்கு வடக்கே இருந்துவந்த வேதியர் களை நியமித்தனர். பாண்டி நாட்டிலும், தமிழ் பெரிதாக ஏற்றம் பெற்று இருக்க வில்லை. எனவே தமிழ் மொழி, நாகரிகம், பண்பாடு அனைத்துமே அடிமட்டத்தில் இருந்தன.

சமண – பௌத்த, வைணவத்தைச் சம்பந்தர் எதிர்த்துப் போராடுதல் : சமண மும், பௌத்தமும் அனைவரும் அறிந்த எதிரிகள். வைதிக சமயத்தில் வேள்விக்கு தான் இடமே ஒழிய சிவபெருமானுக்கு இல்லை. வைணவத்தில் திருமாலுக்குத் தான் பரத்துவமே ஒழிய சிவபெருமானுக்கு இல்லை. திருஞான சம்பந்தர் தோன்றிய காலகட்டத்தில் தமிழகத்தின் சமயநிலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவேயாகும். புறப்பகைகளாகிய சமண, பௌத்தத்தை ஒவ்வொரு பதிகத்திலும் (பத்தாவது பாடலில்) நேரிடையாகத் தாக்குகிறார். வைணவத்தையும் நேரிடையாக தாக்கும் முகமாக ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணனைச் சிவபக்தன் என்றும் ஒன்பதாவது பாடலில் நாரணன், நான்முகன் அடிமுடி தேடியும் காணப்படாதவன் சிவபெரு மான் என்றும் பாடுகிறார்.

வைதிகத்தை எதிர்த்தல் : வைதிகத்தை – வேத வேள்வியை எதிர்ப்பது சற்று சிரமமான செயல் ஆகும். அன்றைய சமுதாயம் எவ்வெவற்றையெல்லாம் உயர்ந்த கொள்கைகள் என்று கொண்டிருந்தனவோ அவை அத்தனையும் தகர்த்து எறிந்தவர் ஞானசம்பந்தப் பெருந்தகை. அரிசனரை யாழ் வாசிக்கத் தம்முடன் வைத்துக் கொண்டார். நாள் கோள் முதலியன சிவபக்தர்களை ஒன்றும் செய்யா – அவை நல்ல நல்ல என்றார். நோய் முதலியன வினையினால் வருவன – விதியினால் வருவன என்ற கோட்பாட்டை இடித்துரைத்தார். இத்தகைய புரட்சி செய்த ஞானசம்பந்தப் பெருந்தகை வேள்வியை மட்டும் சாடாததில் காரணம் உண்டு. வேத வேள்வியை வெளிப்படையாக எதிர்த்தால் பௌத்தன் என்று கதை கட்டி ஓரங்கட்டி விடுவார்கள். இவர் பேச்சு எடுபடாமல் போய்விடும். அன்றைய கால கட்டத்தில் வேள்வியின் மேல் பற்று அதிகமாகவே இருந்தது. எனவே சடங்குகளை எதிர்ப்பதால் பயன் ஏதுமில்லை. எனவே சடங்குகளை ஓரளவு ஏற்றுக் கொண்டு மடைமாற்றம் செய்கி றார்.

அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே : ஞானசம்பந்தப் பெருந்தகைக்கு உபநயனம் நடக்கிறது. வந்த மறையவர்கள் வேள்வி, 'முத்தீ' வளர்த்தல் முதலியன செய்கின்றனர். அடுத்து மந்திர உபதேசம் செய்ய வருகின்றனர். அவர்களுக்கு ஞானசம்பந்தர் புனித வேதங்கள் ஓதினார். மறையவர்கள் மலைத்துப் போனார்கள். மேலும் அவர்கள் வேதம் ஓதும் பொழுது வருணன், உயர்ந்தவனா? இந்திரன் உயர்ந்தவனா? அக்னி உயர்ந்தவனா? என்ற சந்தேகம் வந்து விடுகிறது. வேதத்தில் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவன் உயர்ந்தவனாகப் பேசப்படுகிறான். அவர்கள் சந்தேகத்தை நீக்குவார் போல "அந்திக் காலத்தில் நீங்கள் உச்சரிக்கும் மந்திரங்களுக்கு மூலமாக இருப்பது திருவைந்தெழுத்து" என்று அனைத்து தெய்வங்களுக்கும் மேலான பரம்பொருள் சிவபெருமானே என்று முடிக்கிறார்.

"மந்திரம் நான்மறையாகி வானவர்
சிந்தையுள் நின்று அவர் நம்மை
ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே"

என்கிறார்.

அடுத்து பிராணாயாமம் முதலியவற்றில் ஈடுபட்டவர்களைப் பார்த்து,

"ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்
ஞானவிளக்கினை ஏற்றி, நன்புலத்
தேனை வழிதிறந்து, ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே"

என்கிறார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கல் : அது மட்டுமல்ல. மந்திரங்கள் சொல்பவர்கள் அவற்றின் பொருள் தெரிந்தோ, மனம் ஒன்றியோ சொல்வதில்லை. இவற்றிற்கு மாறாகப் பொருள் புரிந்து மனம் ஒன்றி, கண்ணீர் பெருகி அன்புடன் திருவைத்தெழுத்து ஓத வேண்டும் என்கிறார் பிள்ளையார்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்கிறார். வேதமே உயர்ந்தது என்று சொல்லிக் கொண்டிருந்த நாட்டிலே அந்த வேதத்தையே ஏற்றுக் கொண்டு அந்த வேத நான்கினும் மெய்ப்பொருள் நமச்சிவாயவே என்று சொல்வது எப்பேர்ப்பட்ட புரட்சியாகும்.

நான்மறைநாவன் ஞானசம்பந்தன் : இவ்வாறு கூறுவது யார்? நல்லுயர் நான் மறை நாவன் நற்றமிழ் ஞானசம்பந்தன், தழங்கு எரி மூன்று ஓம்பு தொழில் தமிழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானசம்பந்தன். வேதங்களே ஓதுபவரும், முத்தீ வளர்ப்பவரும் ஆகிய ஒருவர் சொல்லிவிட்டால் அதற்கு மறுபேச்சு இருக்காதல்லவா? இதனையே வேளாள ராகிய நாவுக்கரசர் பெருமான் கூறியிருந் தால் எடுபட்டிருக்காது. வைதிகர்கள் எளிதில் புறக்கணித்திருப்பார்கள்.

மேலும் வைதிகர்கள் தமிழை ஏற்கவே யில்லை. அவர்கள் வாயடைக்க,

''மறை இலங்கு தமிழ்''
''மறை வளரும் தமிழ்''

என்று தமிழையும், வேதத்தையும் ஒருங்கே வைத்துப் பேசுகிறார்.

தமிழ் ஞானசம்பந்தன் : நூற்றுக்கணக் கான பாடல்களில் பாடல் இறுதியில் ''தமிழ் ஞானசம்பந்தன்'' என்று பறை சாற்றிக் கொள்கிறார். தமிழ் மரபு விட்டுப் போகவில்லை. அது தொடர்புடைய ஒரு சங்கிலி. சங்க இலக்கியம் இயற்கையையே பேசிற்று; சம்பந்த இலக்கியமும் ஒவ்வொரு பாடலிலும் இரண்டு அடிகளில் இயற்கையே பேசுகிறது. இயற்கையே இறைவன் என்று உணர்த்துவது போல அடுத்த இரண்டு அடிகளிலே இறை வனைப் பேசுகிறது. சங்க இலக்கியத்தின் மையப் பொருள் காதல் ஆகும். சம்பந் இலக்கியம் இறைவன்ன நாயகனாக்வும், தன்னை நாயகியாகவும் வைத்து பாடியது. முத்தமிழின் ஒரு கூறான இசைத் தமிழுக் குப் புதிய வடிவம் கொடுத்தது சம்பந்த இலக்கியம். அதனாற்றான் சம்பந்த இலக்கியம் ''தமிழ் ஞான சம்பந்தன்'' என்று செம்மாந்து கூறுகிறது. தமிழ் சமயம், தமிழ் நாகரிகம், தமிழ்ப்பண்பாடு, தமிழ் மொழியையே மீட்கப் போராடிய புரட்சி வீரர் ஞானசம்பந்தர் ஆவார்.

உண்மைச் சைவ சமயம் : அன்புடை யராகி ஐந்தெழுத்து ஓதுவதே உண்மைச் சைவ சமயம் என ஞான சம்பந்தப் பெருந்தகை நிறுவினார்.

நம்பிக்கையூட்டுதல் : கொள்கையைச் சொன்னால் மட்டும் போதாது. மக்களுக்கு நம்பிக்கையும் ஊட்ட வேண்டும். எனவே ஒவ்வொரு பதிகத்திலும் இறுதியில் நோய்தீரும்; செல்வம் கிட்டும்; வினை அகலும் என்று 11-வது பாடலில் திருக் கடைக் காப்பில் சம்பந்தர் பாடியருளு கிறார்.

திருநாவுக்கரசரின் அமைதிப் புரட்சி : ஞானசம்பந்தப் பெருந்தகை சமண பௌத்தர்களை எதிர்த்துப் போராடினார், (active resistance) என்றால் திருநாவுக் கரசர் பெருமான் சத்தியாகிரக முறையில் (passive resistance) போராடினார். சமணர்கள் தன்னை யானையால் இடறச் செய்தும், நஞ்சுகொடுத்தும், கல்லில் கட்டி கடலில் தூக்கிப் போட்ட பொழுதும் அவர்களை இகழ்வாகப் பேசாமல் சமணர் பற்றிக் கூற வேண்டிய கட்டாயம் வந்துற்ற பொழுது ''வழக்கிலா அமணர் செய்கை'' என்கிறார். பழையாறை வடதளி கோயில் சமணர்களால் மூடப்பட்ட பொழுது உண்ணா நோன்பு மேற்கொள்கிறார்.

சுந்தரர் தமிழ் : சுந்தர மூர்த்தி சுவாமி களுக்கு எந்தவிதப் பிரச்சினையுமில்லை. அவர் காலத்தில் சமண, பௌத்த சமயச் செல்வாக்கு குன்றியிருந்தது. யாரையும் எதிர் கொள்ள வேண்டிய சிக்கல் இல்லை. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வழி யமைத்துக் கொடுத்த பாட்டையிலே நடந்து இறைவனைப் பாடிப்பரவி இன்புற்றார்.

சுந்தரரின் பெருங்கொடை திருத் தொண்டத் தொகை ஆகும். தமிழ்நாட்டில் வாழ்ந்த சிவனடியார்களின் தொண்டு களைத் தொகுத்து ''திருத்தொண்டத் தொகை'' பாடியருளினார்.

மக்கள் இயக்கம் : அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகிய மூவர் பெருமக்களும் தாங்கள் இருந்த இடத்திலேயே இருந்து பாடவில்லை. மக்களைச் சந்திக்கவும், அவர்களுடன் பழகவுமே மூவர் பெரு மக்களும் ஊர் ஊராகச் சென்றார்கள். தலங்கள் தோறும் இசை வடிவில் பாடி னார்கள். தமிழிசை இயக்கமாகவே அமைந்தது. பிரச்சாரம் என்று எதுவுமே அவர்கள் செய்யவில்லை. இதனால் தமிழ் மக்கள் அவர்கள் தம் பாடல்களில் ஈர்க்கப்பட்டு சைவ சமயப் பேரியக்கத்தில் கலந்தனர். பாண்டிநாடு, பல்லவ நாடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமணப்பிடியிலிருந்து விடுபட்டு சைவத் திற்குட்பட்டது. மூவர் நெறியில் தூய சைவம் வளரத் தொடங்கியதால் கடுஞ் சைவமான காபாலிகம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம் முதலிய சமயங்கள் வலிமை குறைந்தன.

மாணிக்கவாசகரின் அன்புநெறி : மூவர் பெருமக்கள் வலியுறுத்திய அன்பு, திருவைந்தெழுத்து என்ற இரண்டனையும் வலியுறுத்தியே மாணிக்கவாசகர் ''நமச் சிவாய வாழ்க'' என்று நூலைத் தொடங்கி திருவாசகம் நெடுகிலும் அன்பினையே வலியுறுத்திச் செல்கிறார். இதனால் இவர் பாடல்கள் நெஞ்சுருகப் பாடும் இயல்பின வாய் அமைந்துள்ளன. மகளிரையும் ஈர்க்கும் அளவில் திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொன்னூசல், திருத் தெள்ளேணம், திருக்கோத்தும்பி, திருப் பொற் சுண்ணம் என்று மகளிர் விளை யாட்டுக்களோடு இணைத்துப் பல பாடல் கள் பாடியுள்ளார். தமிழ் மரபையும் விட்டு விடாமல் அகப்பொருளை முன்னிறுத்தி இறைவனைத் தலைவியாகவும், உயிரைத் தலைவனாகவும் அமைத்து ''திருக்கோவை யார்'' என்றும் பாடியருளியுள்ளார்.

தமிழர் மொழி, தமிழர் சமயம், தமிழர் பண்பாடு என்று தமிழ் மரபு நால்வர் பெரு மக்களால் காப்பாற்றப்பட்டுத் தொடர் சங்கிலியாய் இன்றளவும் நிலைத்து நிற்கிறது.

துணை நூல்கள்

''பன்னிரு திருமுறை வரலாறு'' – க. வெள்ளைவாரணனார்.

''சைவ சமய வளர்ச்சி'' – மா. இராசமாணிக்கனார்.

''பெரிய புராணம் – ஓர் ஆய்வு'' – அ.ச. ஞானசம்பந்தன்.

(6)

சோழர் காலச் சைவ இலக்கியம்

திருமுறைகள் – பதினான்கு சாத்திரங்கள்

ஒன்பதாம் திருமுறை : ஒன்பதாம் திருமுறை சோழர் காலத்தில் இயற்றப் பட்டதாகும். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட் டடிகள், திருவாலி அமுதனார், புருஷோத் தம நம்பி, சேதிராயர் என்ற ஒன்பது அடியார்களால் அருளிச் செய்யப் பட்டதாகும்.

பதினோராம் திருமுறை : இதே கால கட்டத்தில் தான் இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய அடியார்கள் தோன்றி அருள்நூல்கள் இயற்றினார்கள். அவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இதே காலத்தில் தான் நம்பியாண்டார்நம்பி திருமுறைகளைத் தொகுத்தார். அறுபத்து மூன்று நாயன் மார்களைப் பற்றி நம்பி பாடிய திருத் தொண்டத் திருவந்தாதியும் இக்காலத்தது ஆகும்.

ஒட்டக் கூத்தரின் தக்கயாகப் பரணி, கல்லாடரின் கல்லாடம் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) தில்லை உலா ஆகிய நூல் களும் இக்காலத்தில் எழுந்தவை ஆகும்.

பெரிய புராணம் முன்வைக்கும் தொண்டு நெறி : சோழர் காலத்திய சைவ சமய வளர்ச்சியின் உச்சமாகப் பெரிய புராணம் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) எழுந்தது. சோழர் காலத்தில் சைவ சமயம் உச்ச நிலையில் இருந்தாலும் மக்கள் வாழ்க்கையில் உள்ளீடு இல்லாதது போலக் காணப்படுகிறது என்கிறார் பேராசிரியர் அ.ச. ஞா. மக்கள் வாழ்க்கை யில் குறிக்கோள் இல்லாது போய்விட்டது என்கிறார். குறிக்கோளற்ற மக்களின் முன்னே தொண்டினைக் குறிக்கோளாக வைக்கிறார் சேக்கிழார் பெருமான். ஞான சம்பந்தர், நாவுக்கரசர் போன்ற அருளா ளர்கள் மட்டுமல்லாது சாதாரண வாழ்க்கை வாழ்ந்த பெரியவர்களின் தொண்டினையும் முன்னிறுத்தி அவர்களைப் போலத் தாங்களும் வாழ வேண்டும் என்ற எண்ணத் தை மக்களுக்குத் தூண்டினார். சாதிகள் இருந்தாலும் சாதி வேறுபாடுகளை மிகைப் படுத்தாத சமுதாயமாகத் தமிழகத்தைப் படம்பிடித்துக் காட்டினார் சேக்கிழார் பெருமான். அறுபத்து மூன்று நாயன்மாரில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்தணருண்டு; வேளாளருண்டு; வணிகர் உண்டு; அரிசனர் உண்டு; அரிசனர், குயவர், வண்ணார், மீனவர் எனப் பல்வேறு தரப்பட்ட சாதியினர் உண்டு. அச்சமுதாயத்தில் செய்யும் தொழிலாலோ, பெற்றுள்ள தகுதியாலோ உயர்வு இல்லை.

அன்பு நெறி : வேத வழக்கிற்கும், தமிழ் மரபிற்கும் உள்ள மறைமுகப் போராட்டம் சேக்கிழார் காலத்திலும் தொடர்கிறது. சிவகோசரியார் மேற்கொண்ட வேத நெறிப்பட்ட சடங்குகளை விட கண்ணப்பர் அன்பு நெறியை உயர்வாகக் காட்டுகிறார் சேக்கிழார். மனுதர்மம் முன்னிறுத்தும் பிராயச்சித்த வழிமுறைகளைவிட கன்றினை இழந்த பசுவின் துயர் நீக்கத் தன் மகனையே பலி தந்த மனுநீதிச் சோழனின் உயிர்க்கு உயிர் தரும் அன்பு நெறியைச் சேக்கிழார் முதன்மைப்படுத்துகிறார்.

சிவஞானபோதம் எழுந்த சூழ்நிலை : இதுகாறும் சைவ சமயம் உணர்வு ரீதியாக வளர்ந்து வந்துள்ளது. பௌத்த சமயம் அறிவு ரீதியாக காரணகாரிய அடிப்படையில் வளர்ச்சியுற்றது. சங்கரரும் வேதாந்தக் கொள்கைகளை அறிவுரீதியாக நெறிப்படுத்தி அத்வைதம் என்ற கோட்பாட்டை நிறுவியுள்ளார். இதே சமயத்தில் துவைதமும், விசிஷ்டாத்து வைதமும் தோற்றம் கண்டது. சைவ சமயத்தில் திருமுறைகளில் தத்துவக் கருத்துக்கள் மிக்கிருந்தாலும் நெறிப்படுத்தப்படவில்லை. மேலும் அங்கே பக்தியே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

சிவஞானபோதம் : இந்தச் சூழ்நிலையில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மெய்கண்டார் சைவ சித்தாந்தக் கருத்துக்களை நெறிப்படுத்தி காரண காரிய அடிப்படையில் ''சிவஞானபோதம்'' என்ற நூலைத் தந்தருளினார். உலகம், உயிர், இறைவன் என்ற முப்பெரும் உண்மையை மெய்கண்டார் வலியுறுத்துகிறார். உலகம், உயிர், இறைவன் – மூன்றும் நிரந்தரம் ஆனவை. உலகம் அறிவற்றது. உயிர் அறிவுடையது; ஆனால் குறைவுடையது. இறைவன் முழு அறிவுடையவன். குறைவுற்ற அறிவால் உயிர்க்கு உடம்போடு கூடிய பிறப்பு நிகழ்கிறது. உயிர் தன்னிடம் உள்ள குறை – அழுக்கு – மலம் – நீங்கும் வரை பல பிறவிகள் எடுக்கிறது. அந்தக் குறையே ஆணவம் ஆகும். குறையை நீக்க உயிர் செயல்படுகிறது. அது வினை ஆகும். அந்தக் குறை முற்றிலும் நீங்க உயிர் எச்செயலையும் தன் செயலாகக் கருதாமல் இறைவன் செயலாகக் கருதிச் செயல்படும் பொழுது குறை நீங்குகிறது. இறைவனை அடைகிறது. இதுவே மெய்கண்டார் அருளிய சைவ சித்தாந்தம். பனிரெண்டு நூற்பாக்களில் காரண காரிய அடிப்படையில் சைவ சித்தாந்தக் கோட்பாட்டை மெய்கண்டார் இதில் விளக்குகிறார்.

பதின்மூன்று சாத்திரங்கள் : மெய்கண்டாருக்கு முன் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் திருவுந்தியாரையும், இவரது மாணவர்க்கு மாணவரான திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார் திருக்களிற்றுப் பாடியாரையும் அருளியுள்ளார்கள். சிவஞான போதத்தை அடுத்து எழுந்த நூல்கள் சிவஞான சித்தியார், இருபா இருபஃது ஆகும். இவற்றை எழுதியவர் மெய்கண்டாரின் முதல் மாணவராகிய அருணந்தி சிவாசாரியார் ஆவார். இவருக்குப் பின்னர் மனவாசகம் கடந்த நாயனார் உண்மை விளக்கத்தைப் பாடியருளினார். கி.பி. 1313-இல் உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு சித்தாந்த சாத்திர நூல்களைப் பாடி அருளியுள்ளார்.

(7)

சைவ சித்தாந்தத் தத்துவ வளர்ச்சி

கி.மு. 3250-இல் மொகஞ்சதாரோவில் (சிவன் என்ற பெயரில் இல்லாது) சிவ வழிபாடு இருந்ததாகத்தெரிகிறது. கி.மு. 623-இல் உபநிடத காலத்தில் சிறிது காலத்தால் பிற்பட்ட ஸ்வேதஸ்வதார உபநிடதம் உருத்திரனை முழுமுதற் பொருள் என்று கூறியும், ''சிவன்'' என்ற சொல்லைக் கடவுளுக்குப் பயன்படுத்தியும், உருத்திர சிவனைப் பலபடப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாராட்டியும், பக்தி நெறியை முதன் முதலாகச் சுட்டியும் சைவத்திற்கு வழி காட்டியாகத் திகழ்ந்தது. அதர்வசிரஸ் உபநிடதம் திருநீறு பூசும் பசுபதியைப் போற்றியது. கி.மு. 6-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பல கால கட்டங்களில் தமிழ் நாட்டில் எழுந்ததும், வடமொழியில் எழுதப்பட்டதுமான பல்வேறு ஆகமங்கள் பல்வேறு சடங்குகளைக் கூறினாலும், ஞானபாதம் என்ற பிரிவு தத்துவ விளக்கம் கூறாமல் இல்லை. காரணாகமம் சிவன், பசு, அத்துவாக்கள் பற்றியும், கிரண ஆகமம், பசு, மாயை, கர்மா, பதி, சத்திநி பாதம், தீக்கை, சிவதத்துவம் பற்றியும் கூறுகின்றன. கி.மு. 300-இல் வடநாட்டில் தோன்றிய பாசுபத சைவம், உயிர் சிவ பெருமானை அடைதலைப் பற்றிக் கூறுகிறது. ஆன்மா சிவனோடு ஒன்றுவ தில்லை. சிவபெருமானுக்கு அருகிலே ஆன்மா பிரியாது இருக்கும் என்று பாசுபத சூத்திரத்திற்கு உரை எழுதிய கௌண் டின்யன் கூறுகிறார். கி.மு. 4-ஆம் நூற்றாண் டில் எழுந்த நையாயியம் முதல் முதலாகத் தருக்க ரீதியாகக் கடவுள் இருப்பை முன் வைக்கிறது. நையாயிகர்கள் சைவர்கள் ஆவர். கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் எழுந்த வைசேடிகம் ஆன்மாக்கள் தங்கள் கரும வினைப்படி சம்சார பந்தத்தில் ஆட்படு கின்றன. ஞானத்தால் ஆன்மா விடுதலை பெறுகிறது என்கிறது. வைசேடிகர் பாசுபத சைவர் ஆவர். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் எழுந்த சாங்கியம் மகத்து முதலான இருபத்து நான்கு தத்துவங்களை முன் வைக்கிறது. பிரகிருதியிலிருந்து பிரபஞ்சம் – மகத் – புத்தி – அகங்காரம்; சத்துவம் முதலான முக்குணங்கள்; மெய் முதலான ஞானேந்திரியங்கள்; கால் முதலான கர்மேந்திரியங்கள்; ஓசை முதலான பூத நுட்பங்கள்; விண் முதலான ஐம்பெரும் பூதங்கள்; ஆகியன இருபத்து நான்கு தத்து வங்கள் ஆகும். சற்காரிய வாதத்தையும், பரிணாம வாதத்தையும் சாங்கியம் முன் வைக்கிறது.

கி.மு. 300 முதல் கி.பி. 700 வரை வட நாட்டில் வடமொழியில் சைவ புராணங்கள் பல தோன்றின. இவை சிவ பெருமானைப் பற்றிய கதைகளை, செயல் களைக் கூறினாலும், தத்துவக் கருத்துக் களைக் கூறாமல் இல்லை. இலிங்க புராணம் இலிங்க தத்துவம் பற்றி விரி வாகக் கூறுகிறது. சிவபுராணத்தின் நிறைவுப் பகுதியாகிய வாயவீய சம்கிதை பாசுபத சைவத்தை விளக்குகிறது. பிரகிருதி யே முதற்காரணம்; சிவபெருமான் நிமித்த காரணம் என்றும் சிவமும் சக்தியும் இணைந்தே உள்ளன என்றும் கூறுகிறது. சாரூபம் முதலான வீடுபேற்றின் நான்கு நிலைகள், குருஉபதேசம், பசு, பதி, பாசம் என்ற முப்பொருள் உண்மை, சரியை முதலான இறைவனை அடைதற்குரிய வழிகள் பற்றியெல்லாம் வாயவீய சம்கிதை கூறுகிறது.

காஷ்மீர சைவம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள்; பரை, பாஸ் யந்தி, மத்யமை, வைகரி ஆகிய நால்வகை வாக்குகள்; சித், ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை ஆகிய இறைவனின் ஐவகை சக்திகள்; ஈசான, தத்புருஷ, சத்யோ ஜாத, அகோர, வாம என்ற இறைவனின் ஐந்து முகங்கள்; சிவபெருமானின் ஐந் தொழில்கள்; மூவகை ஆன்மாக்கள்; முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிக் கூறு கிறது.

தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியத் தில் சிவ பெருமானைப் பற்றிய செய்திகள் நிரம்ப வருகின்றன. சிலப்பதிகாரத்தில் சிவ பெருமானைப் பற்றி மட்டும் அல்லாது அம்மையப்பர் தத்துவமும் பேசப் படுகிறது. மணிமேகலையில் சைவம் என்ற சொல் முதன் முதலாகப் பயன்படுத்தப் படுகிறது. சைவ சித்தாந்தம் எனும் பெயரை முதலில் கூறும் நூல் திருமந்திரம் ஆகும். இந்நூல் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையைக் கூறுகிறது. சைவ சித்தாந்தம் முதன் முதலாகத் தத்துவ நிலையில் வழங்கப் படுகிறது. திருமூலர்க்குப் பிறகு அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் விரவி வருகின்றன. மெய் கண்டார் சைவ சித்தாந்தக் கருத்துக்களை நெறிப்படுத்தி சிவஞானபோதம் என்று நூல் வடிவில் தந்தருளினார். சிவஞான போதத்தில் உள்ள 12 நூற்பாக்களில் சித்தாந்த சொற்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதிகம் பயன்படுத்தப் படாமல் வெளிப்படையாக நல்ல தமிழில் தரப்பட்டுள்ளன. இதில் வரும் 81 வெண் பாக்களில்தான் வடமொழி கலந்த சித்தாந்த சொற்கள் வருகின்றன. மெய்கண்ட தேவர் 12 நூற்பாக்களை மட்டுமே பாடினார்; வெண்பாக்களை பாடவில்லை என்ற கருத்து நிலவுகிறது. சிவஞான போதத்தை அடியொற்றி எழுந்த நூல்களான சிவஞான சித்தியார் முதலான சாத்திரநூல்களில் முப்பத்தாறு தத்துவங்கள், சத்காரிய வாதம், சத்திநிபாதம் என வடசொல்லாட்சி உள்ள சித்தாந்த சொற்கள் காணப்படுகின்றன. எது எவ்வாறாயினும் சிவஞானபோதம் உள் ளிட்ட பதினான்கு சாத்திரங்களில் சைவ சித்தாந்தம் நிலைபெற்று விட்டது.

(8)

பதினான்காம் நூற்றாண்டு சைவ இலக்கியம்

சமயச்சூழல் : இக்காலக் கட்டத்தில் முகலாய அரசின் மோதலினால் மக்கள் மனத்தில் புரட்சி விளைந்தது. அதனால் மக்களிடத்தில் முன்னிலும் அதிகமாக சமயப் பற்றும், தெய்வபக்தியும் குடி கொண்டு சிறப்பான சமய இலக்கியங் களைத் தோன்றச் செய்தன.

சைவசமய வளர்ச்சி : முந்திய நூற்றாண் டில் தோன்றிய மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார் ஆகியோரால் சைவஞான பரம்பரை தோன்றி, நாடெங்கும் ஞானாசிரி யர்கள் தோன்றினர். சைவஞான சாத்திரங் கள் வளம் பெறலாயின. 14-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் வாழ்ந்த உமாபதி சிவ சாரியார் தொடங்கி புதிய ஞான மரபுகள் எழலாயின. சிற்றம்பலநாடிகள் வாயிலாக ஞானாசிரியர் பல பிரிவுகளாய்ப் பிரிந்தார் கள். சீகாழிக் கண்ணுடைவள்ளல் ஆதீனம் இக்காலத்தே தோன்றியது. திருவாவடு துறை ஆதீனம், காஞ்சி ஞானப்பிரகாசர் ஆதீனம், தருமபுர ஆதீனம், துழாவூர் மடம், செப்பறை மடம் ஆகிய ஆதீனபரம் பரையின் முலபுருஷர்கள் தோன்றினர். 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் சீர்காழி சிவராஜ தானியாக இருந்தது எனலாம்.

ஹரதத்தர் : 15-ஆம் நூற்றாண்டின் மத்தியில் கஞ்சனூரில் ஹரதத்தர் என்ற வைணவர் சிவபிரானே பரம்பொருள் எனத் துணிந்து, சுருதி சூக்திமாலை, சதுர் வேத தாற்பரிய சங்கிரகம், ஹரிகரதாரதம்மியம், சுலோக பஞ்சகம் முதலான பல வடமொழி நூல்கள் இயற்றினார்.

சைவ இலக்கியம் : உமாபதி சிவாசாரி யார் தொடங்கி அருள் நமச்சிவாயர், சிற்றம்பலநாடிகள், சம்பந்த முனிவர், தத்துவப்பிரகாசர், வள்ளல்மரபினர் முதலி யோர் பல நூல்கள் இயற்றினர்.

சிவவாக்கியர் முதலான சித்தர் நூல்கள், பிற்காலப் பட்டினத்தார் பத்திரகிரியார் ஆகியோரின் நூல்கள் தோன்றின.

திருமுறைத் திரட்டுக்களும், சாத்திரத் திரட்டுக்களும் எழுந்தன. சைவ சித்தாந்த சாத்திர உரைகள் எழுதப்பெற்றன.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணமும், அவரது மாணாக்கரான ஞான வரோதயரும், கோனேரியப்ப நாவலரும் உபதேசகாண்ட மும், கடவுள் மாமுனிவர் திருவாதவூரர் புராணமும் பாடினார்கள்.

இத்தகைய சமய காவியவளம் பிற்காலத்தில் என்றுமே தோன்றியதில்லை என்கிறார் மு. அருணாசலம் அவர்கள்.

வில்லிபுத்தூரார் : பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய வில்லி புத்தூராழ்வார் பாரதம் பாடினார். வில்லிப் புத்தூரார் வைணவராயிருந்தாலும், வாய்ப்பு வருகின்ற இடத்தில் சமயக் காழ்ப் பில்லாமல் சிவபரத்துவத்தை நிலை நாட்டிப் பாடினார்.

இரட்டைப்புலவர் : சோழநாட்டில் ஆடு துறைக்கு அருகில் உள்ள ஆலந்துறையில் பிறந்த இளஞ்சூரியர் என்ற கண்ணில்லாத குருடரும், முதுசூரியர் என்ற காலில்லாத முடவரும் (பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதி) இணைந்து பல சைவ இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவர்கள் இரட்டைப் புலவர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் திரு ஆமாத்தூர்க் கலம்பகம், தில்லைக்கலம் பகம், ஏகாம்பரநாதர் உலா, ஏகாம்பர நாதர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வண்ணம், மூவர் அம்மானை, கச்சிக் கலம்பகம், கச்சியுலா, திருவெற்றியூர்த் தியாகேசர் பஞ்சரத்னம் ஆகிய நூல்களைப் பாடியுள்ளனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்த கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணம் பாடினார். கந்தபுராணம் சைவர்களுக்குப் பேரிதிகாசம் ஆகும். இந்நூலில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிக விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. சென்ற தலைமுறைவரை சோழநாட்டிலும், ஈழநாட்டிலும் சைவ இல்லங்கள் தோறும் கந்த புராணம் பூசிக்கப்பட்டுவந்தது.

மெய்கண்ட பரம்பரை

மெய்கண்ட பரம்பரை : சைவ இலக்கியத்தின் பெரும்பங்களிப்பு மெய்கண்ட பரம்பரை ஆகும். மெய்கண்டார் (49 சீடர் – வரலாறு தெரிந்தவர்கள் அருணந்தி சிவாசாரியார், மனவாசகம் கடந்தார்) – அருணந்திசிவாச்சாரியார் – மறைஞான சம்பந்தர் – (அருணந்தியின் பல மாணவர்களுள் வரலாறு தெரிந்தவர் இவர் மட்டுமே) – உமாபதி சிவாச்சாரியார் – அருள் நமச்சிவாயர். அருள்நமச்சிவாயரின் சீடர்கள் சித்தர்சிவப்பிரகாசர், காழிகங்கை மெய்கண்டார் ஆவர்.

திருவாவடுதுறை ஆதீன முதல்வர் : சித்தர் சிவப்பிரகாசர் சீடர் மூவலூர் நமச்சிவாயமூர்த்தி ஆவார். இவர் திருவாவடுதுறை ஆதீனகுரு முதல்வர் ஆவார்.

சிற்றம்பலநாடிகள் : காழிகங்கை மெய்கண்டாரின் சீடர் (1325 –1350) காழி பழுதைகட்டி சிற்றம்பலநாடிகள் ஆவார். இவருடைய சீடர்கள் காழி பழுதை கட்டிச் சம்பந்த முனிவர், சீகாழி தத்துவநாதர், சீகாழி தத்துவப்பிரகாசர், காஞ்சி ஞானப் பிரகாசர், கண்ணப்பர், மழபாடிப் பண்டாரம், தவிர 60 பேர் ஆவர். சிற்றம்பலநாடிகளின் சரித்திரமே பதினான்காம் நூற்றாண்டின் சைவசமயசரித்திரம் ஆகும்.

தொண்டைமண்டல ஆதீனம் : இவர்களுள் காஞ்சி ஞானப்பிரகாசர் என்பவர் தொண்டைமண்டல ஆதீன குரு முதல்வர் ஆவார்.

தருமபுர ஆதீனம் : காழி பழுதை கட்டிச் சம்பந்த (1350 – 75) முனிவர் சீட பரம்பரையில் வருபவர்தான் தருமையாதீன குருமுதல்வர் குருஞான சம்பந்தர் (1550 – 1575).

சிற்றம்பல நாடிகளின் சீடர்களால் சைவசமயமும், சைவ சித்தாந்தமும் பெருகியதோடு சைவ மடங்களும் உருவாயின.

அட்டவணை (அடுத்த பக்கம் பார்க்க)

மறைஞான சம்பந்தர் : இனி மெய்கண்டபரம்பரையில் மறைஞான சம்பந்தரிலிருந்து (கி.பி. 1275 – 1300) ஒவ்வொருவரைப் பற்றியும் சிறிது பார்ப்போம். மறைஞானசம்பந்தர் அருணந்தி சிவாசாரியாரின் சீடர். இவர் கி.பி. 1300-ஐ அடுத்து பெண்ணாகடத்தில் பிறந்தவர். ''சதமணிக் கோவை'' என்ற நூலை இயற்றியுள்ளார்.

உமாபதி சிவாசாரியார் : மறைஞான சம்பந்தரின் சீடர் உமாபதி சிவாசாரியார் ஆவார். (கி.பி. 1300–1325). இவர் சிதம்பரத்தில் தீக்ஷிதர் குலத்தில் தோன்றியவர். இவர் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய சாத்திர நூல்களையும், திருமுறைத் திரட்டு, கோயிற் புராணம், திருமுறை கண்டபுராணம், திருத்தொண்டர் புராணசாரம், சேக்கிழார் புராணம், சிவஸ்தல சிவநாம சத்தி நாமக்கலி வெண்பா, பௌஷ்கரபாஷ்யம், சதரத்தின சங்கிரகம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

அருள்நமச்சிவாய தேசிகர் : (கி.பி. 1300–1330) இவர் சீகாழியைச் சேர்ந்தவர். சாமி நாதன் என்பது இயற்பெயர். மச்சுச்செட்டியார் என்று அழைக்கப்பட்டவர். மறைஞானசம்பந்தரின் சீடர். அவர் மறைவிற்குப் பின்னர் தன்னுடன் சீடராயிருந்த உமாபதி சிவாசாரியாரின் சீடராகயிருந்தார். ஞான பூசாகரணம், ஞான பூசாவிதி, ஞான தீக்ஷா விதி, ஞான அந்தியேட்டி, போசனவிதி என்ற ஐந்து சிறுநூல்களை இயற்றியுள்ளார்.

சித்தர் சிவப்பிரகாசர் : திருவாவடுதுறையைச் சேர்ந்தவர். அருள் நமசிவாயரின் சீடர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நமச்சிவாய தேசிகர் : மூவலூரில் வேளாளர் (கி.பி. 1525) மரபில் தோன்றியவர். இயற்பெயர் வைத்தியநாதன். சித்தர் சிவப்பிரகாசர் மூவலூர் வந்தபோது இவரைச் சீடராக ஏற்று ஆசாரிய அபிடேகம் செய்தார். இவர் திருவாவடுதுறையில் தங்கி அங்கு ஒரு மடத்தை நிறுவினார். இவரே திருவாவடுதுறை ஆதீனகுருமுதல்வர்.

செப்பறைமடம் : மச்சுச்செட்டியாரிடம் (அருள் நமச்சிவாய தேசிகர்) திருவையாறு சந்திர சேகர தேசிகர் உபதேசம் பெற்றார். இவர் வழியாக பொன்னம்பல தேசிகர் பரம்பரை தோன்றியது. இவர் நெல்லை மாவட்டம் (கி.பி. 1560) செப்பறையில் ஒரு மடம் நிறுவினார்.

காழி – கங்கை மெய்கண்டார் : அருள் நமச்சிவாயரின் (கி.பி. 1310–1340) (மச்சு செட்டியார்) மற்றொரு சீடர் காழி கங்கை மெய்கண்டார். இவர் சீகாழியைச் சேர்ந்தவர்.

சிற்றம்பல நாடிகள் : (கி.பி. 1325 – 1350) கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் சீகாழி ஒப்பற்ற சிவராஜதானியாக இருந்து. இங்கு சிற்றம்பல நாடிகள் ஞாயிறு போலத் திகழ்கிறார். இவர் வைத்தீஸ்வரன்கோயில் அல்லது சீகாழியில் பிறந்தவர். சீகாழியில் கங்கை மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றார். சிற்றம்பலநாடிகள் தன் சீடர்கள் 63 பேருடன் சித்தர் காட்டில் சமாதி அடைந்தார். இவர் இயற்றிய நூல்கள் : துகளறு போதம், சிவப்பிரகாசக் கருத்து, திருப்புன் முறுவல், இரங்கல் மூன்று, ஞானப்பஃறொடை, சிற்றம்பலநாடி கட்டளை ஆகியன.

சீகாழி தத்துவநாதர் : இவர் சிற்றம் பலநாடிகளின் (கி.பி. 1350 – 1375) சீடர். சமாதி அடைந்த 63 பேரைச் சேர்ந்தவர் அல்லர். இவர் மெய் கண்ட சாத்திரம் பதினான்கில் ஒன்றான உண்மைநெறி விளக்கமும் இருபா இருபதுக்கு உரையும் எழுதியுள்ளார்.

சீகாழி தத்துவப்பிரகாசர் : (கி.பி. 1350 – 1375) இவரும் சிற்றம்பல நாடிகளின் சீடர் ஆவார். இவர் இயற்றியுள்ள நூல்கள் : தத்துவப்பிரகாசம், துகளறுபோதக் கட்டளை ஆகியன. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிகளில் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் ஞான மார்க்கத்தை மட்டுமே கூறுவன. தத்துவப் பிரகாசர் இயற்றிய தத்துவப்பிரகாசம் மட்டுமே சரியை, கிரியை, யோகம் எனும் மூன்று மார்க்கங்களையும் விரிவாக கூறுவது ஆகும். இவர் சிவ பூஜைக் கிரியைகளை விரித்துக் கூறியிருப்பது சிவபூஜை செய்வார்க்குப் பெரிதும் உதவியாய் இருக்கிறது. இன்றுள்ள பூஜைக் கிரமம், தீட்சாக்கிரமம் என்பனயாவும் இவர் வகுத்து தந்துள்ள கிரமங்களே.

பரம முனிவர் : இவர் தத்துவப் பிரகாசரின் மாணாக்கர் ஆவார். சித்தாந்த சாரம் என்ற நூலும் தத்துவப்பிரகாசத்திற்கு உரையும் எழுதியுள்ளார்.

பழுதை கட்டி சம்பந்த முனிவர் : (கி.பி. 1350 – 1375) இவர் சிற்றம்பல நாடிகளுடைய மாணாக்கர். சிவானந்தமாலை, சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கொத்தில் உள்ள சிற்றம்பல நாடி வெண்பா, தாலாட்டு இவர் பாடியவை ஆகும்.

காவை – அம்பலநாதத் தம்பிரான் : இவர் பழுதை கட்டி சம்பந்த முனிவரின் மாணாக்கருள் ஒருவர். பாண்டிநாட்டில் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த காவலூரில் 14-ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். இவர் சைவச் சிறுநூல்கள் பல பாடியுள்ளார். அவையாவன : பிராசாத அகவல் (பிராசாத யோகம் பற்றிக் கூறுவது) சத்திநிபாத அகவல், உருப்சொரூப அகவல், சிவப் பிரகாசத்திற்குக் கொளு ஆகியன எழுதியுள்ளார். கொளு என்பது ஒவ்வொரு பாடலின் கருத்து இன்னது என்று கூறுவது.

சம்பந்த சரணாலயர் : (கி.பி. 1374 – 1400) இவர் சம்பந்த முனிவரின் சீடர். இவர் ''தத்துவ விளக்கம்'' என்ற நூல் எழுதியுள்ளார். இவர் பின்னர் கொள்கைமாறி கண்ணுடை வள்ளல் என்ற பெயர் பூண்டு தனி ஆசாரியார் ஆகி விட்டார்.

இதுவரை மெய்கண்டாருக்குப்பின் சைவ சித்தாந்த ஞான பரம்பரை வளர்ந்த வரலாறு கூறப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறுமுனி அடிகள் : சிவாலய முனிவர் : இந்த நூற்றாண்டில் சிவாலய முனிவர்என்பவர் வாழ்ந்தார். இவர் பொதிகையில் இருந்த குறுமுனி அடிகளிடம் தேவாரத்திரட்டும், திருவாசக உள்ளக்கிடையும் வேண்டிப் பெற்றார். தேவாரத்திரட்டு அகத்தியர் தேவாரத் திரட்டு எனப்பட்டது. (குறுமுனி என்றதனால் அகத்தியர் எனத் தவறாகக் கருதி விட்டனர்.) திருவாசக உள்ளக்கிடை என்பது திருவாசகப் பதிகம் ஒவ்வொன்றின் தலைப்பிலும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ள பதிகக் கருத்தாகும்.

சிவார்ச்சனா போதம், மெய்ஞ்ஞான விளக்கம் : இதே நூற்றாண்டில் வெளி வந்த இருநூல்கள் சிவார்ச்சனா போதம், மெய்ஞ் ஞான விளக்கம் ஆகும். இவையிரண்டும் முழுமையாகக் கிடைக்கவில்லை. சில பாடல்களே கிடைத்துள்ளன. சிவார்ச்சனா போதம் மிகவிரிந்த நூலாக இருக்க வேண்டும் என்று ஆய்வாளர் மு. அருணா சலம் கூறுகிறார்.

தேவிகாலோத்தர ஆகமம், சர்வ ஞானோத்தர ஆகமம் : கி.பி. 1400-ஐ ஒட்டி வட மொழியில் உள்ள தேவிகாலோத்தர ஆகமம், சர்வ ஞானோத்தர ஆகமம் என்ற இரண்டு நூல்களையும் பெயர் தெரியாத ஒரே ஆசிரியர் தமிழில் மொழி பெயர்த் துள்ளார். இரண்டுமே சைவசித்தாந்த நூல்கள் ஆகும்.

மெய்ம்மொழிச் சரிதை : கி.பி. 1350-இல் இளங்காரிகுடி மெய்ம்மொழித்தேவர் என்பார் ''மெய்ம்மொழிச்சரிதை'' என்ற நூல் இயற்றினார். இதில் 486 செய்யுள்கள் உள்ளன.

மதுரைக் கோவை : இதே காலத்தில் வேப்பத்தூர் சங்கர நாராயணர் என்பவர் மதுரைக் கோவை என்னும் நூலைப் பாடினார். இந்நூல் 403 பாடல்களை உடையது. இந்நூலில் திருவிளையாடற் புராண சரிதைகள் 25 சொல்லப்பட்டுள்ளன.

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் : கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொல் காப்பியத் தேவர் திருப்பாதிரிப் புலியூர் இறைவரான தோன்றாத்துணை நாதர் மேல் ஒரு கலம்பகம் பாடியுள்ளார்.

சித்தர் பாடல்

சித்தர் பாடல் : பேரின்பம் சித்திக்கப் பெற்றவர்கள் சித்தர்கள். இவர்கள் சிவானு பூதி பெற்றவர்கள். பொதுவாக இவர்கள் சமயம் கடந்த சமரச நன்னிலையில் நிற்பவர்கள்.

சிவவாக்கியர் : இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இவர் போலிகளைக் கண்டித்தவர். இறைவனை உள்ளத்தில் உணர வேண்டும் என்பவர். புறப்பூசைகள் ஒரு பயனையும் தராது என்பார். இவர் பாடல்கள் சிவபெருமானை யும் திருவைந்தெழுத்தையும் தில்லை, காசி போன்ற தலங்களையும் சிறப்பாகக் குறிக் கின்றன. சாதி பேதங்களைக் கடந்தவர்.

''நட்டகல்லைச் சுற்றி நாலு புட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணவென்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

என்ற பாடல் அனைவரும் அறிந்த ஒன்று.

அவ்வையார் : அவ்வையார் என்ற பெயரில் பலர் இருந்தனர். இவர் 14-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்தவர். இவர் அன்னைக் குறள், விநாயகர் அகவல் என்ற இரு நூல்களை இயற்றியவர்.

பட்டினத்தார் : பட்டினத்தார் என்ற பெயரிலும் பலர் இருந்தனர். இவர் பாடல் கள் பட்டினத்துப் பிள்ளையார் பாடற் றிரட்டு ஆகும். (பதினோராம் திருமுறை பிரபந்தங்கள் பாடிய பட்டினத்தார் அன்று) கோவில் திருவகவல் என்று மூன்று அகவற்பாக்கள் உள்ளன. நான்காவது அகவல் கச்சித் திருவகவல். சித்தர் ஞானக் கோவை என்ற நூலிலும் இவர் பாடல்கள் உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பத்திரகிரியார் : பத்திரகிரியார் வரலாறு பட்டினத்தார் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று. இவரது காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பாதி ஆகும். இவர் 235 கண்ணிகள் கொண்ட ''திருப் புலம்பல்'' என்ற நூலைப் பாடியுள்ளார். ''ஆங்காரம் உள்ளடக்கி, ஐம்புலனைச் சுட்டறுத்துத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்''. [1]

(9)

பதினைந்தாம் நூற்றாண்டு சைவ இலக்கியம்

அருணகிரி நாதர் : 15-ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த அருட்கவிஞர் அருணகிரிநாதர் ஆவார். இவரது பாடல்கள் பாடுவதற்கு இனிய சந்தம் உடையன. இவரது காலம் 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர் பாடி அருளிய நூல்கள்; திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், திரு எழு கூற்றிருக்கை.

காளமேகப் புலவர் : கவி காளமேகத்தின் வரலாறு சுவை மிக்கது. பாமரர்களுக்கும் காளமேகத்தின் பாடல்கள் ஒன்றிரண்டாவது தெரிந்திருக்கும். இவரது காலம் 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும். கும்பகோணத்தை அடுத்த நந்திபுரத்தில் (நாதன் கோயில்) பிறந்தார். வைணவராக இருந்து சைவராக மாறினவர். ஆங்காங்குள்ள சிவத்தலங்களில் சிவபிரானை வழிபட்டுப் போற்றுவது இவர் இயல்பு. இவர் பாடிய நூல் திரு ஆனைக்கா உலா ஆகும். இது 461 கண்ணிகளை உடையது.

கடவுள் மாமுனிவர் : இவர் 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர். சந்தான ஆசாரியர் பரம்பரையில் வந்தவர். மாணிக்கவாசகர் வரலாற்றைக் கூறும் திருவாதவூரர் புராணத்தை இயற்றியவர். இந்நூல் 545 செய்யுட்களை உடையது ஆகும்.

ஞானவரோதயர் : இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்தவராகலாம். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் வயலூரில் வாழ்ந்தவர். இவர் தமிழில் ''உபதேசகாண்டம்'' பாடியவர். இப்புராணம் 2600 செய்யுட்களை உடையது. இது சில மான்மியங்களைக் கதைகள் மூலமாய் விரித்துரைப்பது ஆகும். விபூதி, உருத்திராக்கம், ஐந்தெழுத்து, சிவவிரதம், சிவதருமம், சிவபுண்ணியம் ஆகிய மான்மியங்களைக் கூறுகிறது. சரியை முதலான நெறிகளைப் பின்பற்றுவோர்க்கு இந்நூல் சிறந்த கருவூலம் ஆகும்.

கோணேரியப்பர் : இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். இவர் கச்சியப்ப சிவாசாரியாரின் சீடர். கச்சியப்பர் கந்தபுராணம் ஆறுகாண்டம் பாடி முடித்து ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டத்தை தமிழில் பாடும்படி இவருக்குக் கட்டளையிட்டார். இவரும் 4348 செய்யுள்களாகப் பாடி முடித்தார்.

சைவ சாத்திர இலக்கியம்

திருநெறி விளக்கமுடையார் : தத்துவ விளக்கம் பாடிய சம்பந்த சரணாலயரின் மாணாக்கர் (பெயர் தெரியவில்லை) ஒருவர் எழுதிய நூல் திருநெறி விளக்கம் ஆகும். இந்நூல் 117 விருத்தங்களை உடையது. சிவப்பிரகாசம் பயிலும் பொழுது இந்நூலையும் பக்கத்தில் வைத்துப் படிப்பது பயன் தருவதாகும்.

சத்திய ஞான பண்டாரப் பிள்ளைத்தமிழ் : இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 100 பாடல்களைக் கொண்டது. சிவபுரத்தில் வாழ்ந்த சத்தியஞான பண்டாரம் என்பவரைப் பற்றியது. சத்திய ஞானி பெரிய ஆசாரியார். இவரது சீடர்களில் இருவர் ஞானப்பிரகாசர் என்ற பெயரினர். மூன்றாமவர் இந்நூலைப் பாடினார். சத்திய ஞானியின் காலம் கி.பி. 1440 ஆகும்.

களந்தை ஞானப்பிரகாசர் (கி.பி. 1450 – 1500) : சத்ய ஞான பண்டாரத்தின் சீடர் களந்தை ஞானப்பிரகாசர் ஆவார். களந்தை

1) ''தமிழ் இலக்கிய வரலாறு – பதினான்காம் நூற்றாண்டு'' – மு. அருணாசலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது திருத்துறைப் பூண்டி அருகே உள்ள களப்பால் என்ற ஊராகும். இவர் இயற்றிய நூல்கள் தசகாரியம், சகலாகம சாரம், சந்தான அகவல், அளவை நூல்கள் ஆகும்.

மதுரை ஞானப்பிரகாசர் (கி.பி. 1450 – 1475) : இவரும் சத்ய ஞான பண்டாரத்தின் சீடர் ஆவார். இவர் சிவப்பிரகாசத்திற்கு உரை எழுதியுள்ளார்.

மதுரை சிவப்பிரகாசர் (கி.பி. 1475 – 1550) : இவர் மதுரை ஞானப்பிரகாசரின் சீடர் ஆவார். இருபா இருபது, சிவப் பிரகாசம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதி யுள்ளார். இவர் தனது உரையில் பல்வேறு நூல்களைப் பற்றிக் குறிப்பிடுவதால் இவர் காலத்திய இலக்கிய நிலைமை தெரிய வருகின்றது. வெளியில் தெரியாத நூல் களைப் பற்றியும் தெரிந்து கொள்ள முடிகின்றது. பல நூல்களின் காலத்தையும் கணிக்க முடிகிறது.

சிவானந்த போதம் : இந்த நூலை எழுதியவர் பெயர் தெரியவில்லை.

வள்ளல் பரம்பரை

காழி – கண்ணுடைய வள்ளல் (கி.பி. 1350 – 1425) : கி.பி. *1350* முதல் கி.பி. *1423* வரை கண்ணுடை வள்ளல் என்பவர் சீர்காழியில் வாழ்ந்தார். பிற்காலத்தில் இவர் மரபு வள்ளல் சந்தானம் என வழங்கப் பெற்றது. இவர் மெய்கண்ட பரம் பரையில் உபதேசம் பெற்று சம்பந்த சரணாலயர் என்ற பெயரில் பல நூல்கள் இயற்றியுள்ளார். பிறகு இவர் தாமாக ஒரு சமரச நெறியை ஏற்படுத்திக் கொண்டார். இது வள்ளல் நெறி ஆகும். இது ஐக்கிய வாத சைவம் என சைவ சித்தாந்திகளால் ஒதுக்கப்பட்டது.

இவர் இயற்றிய நூல்கள் : ஒழிவி லொழுக்கம், பஞ்சாக்கர மாலை, நியதிப் பயன், ஞானசாரம், மாயாப் பிரலாபம், பஞ்சமலக்கழற்றி, சிவஞானபோத விருத் தம், தேவார உரை, திருக்களிற்றுப் படியார் அனுபூதி உரை, பேரானந்த சித்தியார், அதிகாரப் பிள்ளை அட்டவணை.

சிவஞான வள்ளல் (கி.பி. 1450–1475) : கண்ணுடைய வள்ளலின் இரு சீடர்களில் ஒரு சீடர் (பெயர் தெரியவில்லை) பிராசாத தீபம் என்ற நூலை எழுதியுள்ளார். மற்று மொரு சீடர் சுயம்பிரகாச வள்ளல் ஆவார்.

சுயம்பிரகாச வள்ளலின் சீடர் சிவஞான வள்ளல் ஆவார். இவர் இருபது சிறுசாத்திர நூல்கள் எழுதியுள்ளார். இது வள்ளல் சாத்திரம் எனப்படும். கண்ணுடைய வள்ளல் ஐக்யவாத சைவத்தைத் தழுவிய போதிலும், இவர் நூல்களில் சைவ சித்தாந்த மணம் கமழும்.

சட்டைநாத வள்ளல் (கி.பி. 1475 – 1500) : சிவஞான வள்ளலுக்கு அடுத்த தலைவர் சட்டை நாத வள்ளல் ஆவார். இவர் செய்த நூல் சதாசிவ ரூபம் ஆகும்.

சித்தர் பாடல்

அகப்பேய்ச் சித்தர் : மனத்தைப் பேய் என்று பாடியமையால் இப்பெயர் பெற்றார். *90* கண்ணிகள் பாடியுள்ளார். சைவசித்தாந்தக் கருத்தையே சித்தர் மொழியில் பாடுகிறார்.

''சமயம் ஆறுமடி – தன்னாலே வந்தது

அமைய நின்ற இடம் – அகப்பேய் –
ஆராய்ந்து சொல்வாயோ''

அழுகுணிச் சித்தர் : அழுகை போன்ற அமைப்புள்ள பாடல்களைப் பாடியமை யால் இப்பெயர் பெற்றார். இவர் பாடல்கள் *32*.

''பையூரில் இருந்து பாழூரில் பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த
வீடறியேன்

மெய்யூரில் போவதற்கு வேதாந்த
வீடறிந்தால்

பையூரும் பையூரும் – என் கண்ணம்மா
பாழாய் முடியாவோ?''

இடைக்காட்டுச் சித்தர் : இவரது ஊரின் பெயர் இடைக்காடு ஆக இருக்கலாம். இவரது பாடல்கள் *130*.

''மனமென்னும் மாடடங்கில்
தாண்டவக்கோனே – முத்தி
வாய்ந்தது என்று எண்ணேடா
தாண்டவக்கோனே
சினமேன்னும் பாம்பிறந்தால்
தாண்டவக்கோனே – யாவும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சித்தி என்று நினையேடா
தாண்டவக்கோனே''.

கடுவெளிச் சித்தர் : கடுவெளி என்பது பராவெளி. அதாவது பரம்பொருள் நிலை. இதைப் பாடுகின்றமையாய் இச்சித்தர் இப்பெயர் பெற்றார்.

''நந்தவனத்தில் ஓராண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி –
மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
தாண்டி''[1]

(10)
பதினாறாம் நூற்றாண்டு சைவ இலக்கியம்

14–16-ஆம் நூற்றாண்டுகள் சைவ சமயத்தில் பொற்காலங்களில் ஒன்றாகும். 16-ஆம் நூற்றாண்டைப் புராண காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. தென்காசிப் பாண்டியர் மூவர் தொடங்கி இரேவண சித்தர் ஈறாக 15 பேர் 40 புராணங்கள் பாடியுள்ளனர். பாடிய பாடல்கள் ஐம்பதாயிரம். இது சைவத்தின் மிகப் பெருஞ் சாதனை ஆகும்.

பதினாறாம் நூற்றாண்டில் சைவத் திருமடங்கள் தோன்றின. நமசிவாய மூர்த்திகள் திருவாவடுதுறை ஆதீனத்தையும், குருஞானசம்பந்தர் தருமபுர ஆதீனத்தையும், நிரம்ப அழகிய தேசிகர் துழாவூர் ஆதீனத்தையும் தோற்றுவித்தனர். ஸ்கந்த பரம்பரையென்றும் வாமதேவ பரம்பரையென்றும் பெயர் கொண்ட ஒரு புதிய சைவ ஞான பரம்பரை சிவாக்கிரக யோகி என்ற ஆசாரியாரைத் தலைவராகக் கொண்டு சிறந்த ஞான பீடமாகத் திகழ்ந்தது.

சைவ சாத்திர உரைகளும், தோத்திர, பிரபந்த இலக்கியங்களும் குவிந்தமையும் இக்காலமேயாகும். முகமதியரும், மேலை நாட்டாரும் இந்தியாவைக் கைப்பற்றியிருந்த இக்கால கட்டத்தில் இப்படியொரு எழுச்சி தோன்றியமைக்கான காரணங்கள் வருமாறு : தமிழ் நாட்டுக்கு வடக்கே கிருஷ்ண தேவராயர் தமிழ் நாட்டுக்கு அப்பாலிருந்து தமிழுக்கு பேராதரவு அளித்தார். தெற்கே பார்த்தால் தென்காசிப் பாண்டியர் தமிழை வளர்த்ததோடு தாங்களே பல நூல்களும் இயற்றினார்கள். இடையில் உள்ள சோழ நாட்டில் சைவ சமயத் தலைவர்களின் செல்வாக்கு ஓங்கி திருமடங்கள் தோன்றி சைவசாத்திரம் எழக் காரணமாயிருந்தது.

புராண இலக்கியம்

பதினாறாம் நூற்றாண்டைப் 'புராண இலக்கிய காலம்' என்று கூறலாம். இந்த நூற்றாண்டில் மட்டும் 36 சைவ புராணங்கள் வெளிவந்தன.

பாண்டிய மரபில் மூன்று சகோதரர்கள் : பாண்டிய மரபிலே தென்காசிப் பாண்டியர் என்று அழைக்கப்பட்ட வரகுணராமன், (கி.பி. 1560–1600), வரதுங்கராமன் (கி.பி. 1588–1610), அதிவீரராமன் (கி.பி. 1564–161) என்ற மூன்று சகோதரர்களும் புராண இலக்கியம் படைத்ததோடு வேறு பல சைவ நூல்களும் இயற்றியுள்ளனர்.

வரகுணராம பாண்டியர் : இலிங்க புராணம், வாயு சங்கிதை என்ற இரு புராணங்களையும், அம்பிகை மாலை என்ற தோத்திர நூலையும் வரகுணராமர் இயற்றியுள்ளார்.

இலிங்க புராணம் முதற்காண்டம் : முதற் காண்டத்தில் திரிபுரம் எரித்தல், அந்தகாசுரன், சலந்தரன், தக்கன் வேள்வி அழிவு, தாருகாவனக் கதை, காளியோடல், ததீசி வரலாறுகள், சிலாதர், நந்தி, சுவேதன், துருவன், உபமன்னியு கதைகள், பாசுபதவிரதம், பஞ்சமூர்த்தம், அட்ட மூர்த்தம், சிவபூசை, அட்டாங்க யோகம், திருவைந்தெழுத்து, பிரணவம், அட்டமா சித்தி, தியானம் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் காண்டத்தில் அட்ட மூர்த்தம், திருவைந்தெழுத்து, தீக்கை, சிவ பூசை, அகோர பூசை, பிரதிட்டை பற்றி சொல்லப்பட்டுள்ளன.

1) ''தமிழ் இலக்கிய வரலாறு – பதினைந்தாம் நூற்றாண்டு'' – மு. அருணாசலம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுருங்கக் கூறின் இப்புராணம் சரியை, கிரியைப் பகுதிகளை உணர்த்தும் சாத்திர நூலாகும்.

வாயுசங்கிதை : சைவ புராணத்தில் பனிரண்டாவது சங்கிதை வாயுசங்கிதை ஆகும். இது பூர்வகாண்டம், உத்தர காண்டம் என இருபிரிவினை உடையது.

பூர்வ காண்டத்தில் சிவபெருமாளின் தன்மை, மாயை, பிரபஞ்சத்தில் காலம் முதலான உற்பத்தி, தக்கயாக சங்காரம், பாசுபதவிரதம், உபமன்னியு வரலாறு ஆகியன கூறப்பட்டுள்ளன.

உத்தர காண்டம் சாத்திரப் பகுதி ஆகும். சிவமந்திர மூர்த்தங்கள், நிட்கள வடிவம், சிவலிங்க இயல்புகள், உமாமகேசுவர பூசை, கிரியாபூசை, ஓமம், மாத பூசை, காமியகன்மம், அக்னி காரியம், சிவ விரதங்கள், ஞான யோகம் ஆகியன உரைக் கப்பட்டுள்ளன.

அம்பிகை மாலை : இந்நூல் மதுரை மீனாட்சி அம்மனை நோக்கித் துதி செய்யும் 30 பாடல்களைக் கொண்டது ஆகும்.

வரதுங்கராம பாண்டியர் : இவர் வரகுண ராம பாண்டியரின் தம்பி ஆவார். திருக் கருவையிலிருந்து பாண்டி நாட்டில் ஒரு பகுதியை ஆண்டு வந்தார். இவர் பாடிய நூல்கள் மூன்று; பிரமோத்தர காண்டம் என்ற புராணம், கருவை அந்தாதிகள்.

பிரமோத்தர காண்டம் : வடமொழியில் கந்த புராணத்தின் மூன்றாம் பிரிவு பிரமாண்ட புராணம். அதன் மூன்றாம் பகுதியே பிரமோத்தர காண்டம். இது 1323 பாடல் களைக் கொண்டது.

இந்நூலில் திருவைந்தெழுத்து, திருநீறு, உருத்திராக்கம், பிரதோஷ விரதம், உமா மகேசுவர விரதம், சோமவார விரதம், சிவராத்திரி விரதம், சிவபூசை, உமா மகேசுவர பூசை, ஸ்ரீருத்ரம், சிவநாமம் ஆகியன பற்றிக் கூறப்பட்டுள்ளன. இதில் மிகச் சிறப்பான பகுதி சிவகவசம் ஆகும்.

அதிவீரராம பாண்டியர் : இவர் வரதுங்க ராமரின் தம்பி ஆவார். தென்காசியிலிருந்து ஆண்டார். இவர் வெற்றிவேற்கை என்ற நீதிநூல், நைடதம் என்ற காவியம், காசி காண்டம், கூர்ம காண்டம் என்ற இரு புராணங்கள் ஆகிய நான்கு நூல்கள் இயற்றி யுள்ளார்.

காசி காண்டம் : இந்நூல் பூர்வம், உத்தரம் என இரு பிரிவுகளைக் கொண்டது. அறுபத்து மூவருக்கும் தனித்துதி உடையது.

பூர்வ காண்டத்துள் தீர்த்த மகிமை, மணி கர்ணிகை, கங்கை, வாரணாசி ஆகிய வற்றின் சிறப்புக்கள் சொல்லப்படுகின் றன. உத்தர காண்டத்தில் காசிக்கு கணபதி, சிவகணங்கள், விசுவநாதர் முதலியோர் வந்த வரலாறுகள், வீரேசர், பார்வதீசர், கங்கேசுரர், நர்மதேசர், கேதீச்சுரர், அமுதே சர், கயிலேச்சுரர் ஆகிய மூர்த்தி வரலாறு களும், பராசரலிங்கம், ஓங்காரம், திரிலோ சனம், தருமேச்சுரம், விசுவ கன்மேசம் ஆகிய லிங்கங்களின் பெருமைகளும், காசி யின் மகிமை, விசுவநாதர் மகிமை, க்ஷேத்திர வளம், தீர்த்த மகிமை ஆகியவை யும் கூறப்பட்டுள்ளன.

கூர்மபுராணம் : திருமால் கூர்மாவதாரம் எடுத்து அவ்வடிவோடு சிவனுடைய பெருமையை முனிவர்களுக்கு எடுத்து உரைத்ததால் இப்பெயர் வந்தது. பூர்வ காண்டம் 2729 பாடல்களும், உத்ர காண்டம் 3717 பாடல்களும் உடையன.

இந்நூலில் நித்தியகன்மங்கள், சிராத்தம், சூதகம், சாங்கிய யோகம், அட்டாங்க யோகம், பாசுபத யோகம், பத்திமை, தத்துவ தரிசனம் ஆகியன சொல்லப் பட்டுள்ளன.

''மகா புராணம்'' அதிவீரராம பாண்டியர் பாடியதாகக் கூறப்படுகிறது. இந்நூல் திருப்பனந்தாளைச் சேர்ந்த ஒரு புலவர் பாடியிருக்கக் கூடும்.

சிதம்பரநாத கவி (கி.பி. 1575–1600) : இவர் கமலை ஞனப்பிரகாசரின் சீடர் ஆவார். நெல்லை மாவட்டம் விசய நாரணம் என்ற ஊரினர். ''சங்கர விலாசம்'' என்ற புராண நூலை இயற்றியுள்ளார். இந்நூல் 1437 பாடல்களைக் கொண்டது ஆகும். இந்நூலில் உபமன்னியு வரலாறு, தாருகா வனக்கதை, திருமால் சக்கரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றது, பஞ்சாக்கரம், திருநீறு, உத்திராக்கம் ஆகியவற்றின் சிறப்பு, திருவாரூர், காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருப்பருப்பதம், திருக்கழுகுன்றம், ஆகியவற்றின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

கமலை ஞானப் பிரகாசர் : இவர் தருமபுர ஆதீனத்தை நிறுவிய மூல ஆசாரியரான குருஞானசம்பந்தரின் குருநாதர் ஆவார். திருவாரூரில் பிறந்தவர். இவர் பூர்வாசிரமப் பெயர் சிதம்பர நாதன் ஆகும். இவர் திருமழுவாடிப் புராணமும், பல சாத்திர நூல்களும் இயற்றியுள்ளார். திருமழுவாடிப் புராணம் என்பது திருமழபாடித் தலபுராணம் ஆகும். இது 57 பாடல்களைக் கொண்டது ஆகும். இவர் திருவானைக்காப் புராணம் பாடியதாகவும் கூறகின்றார்கள்.

நிரம்ப அழகிய தேசிகர் (1550–1610) : இவர் கமலை ஞானப்பிரகாசரின் மாணவர் ஆவார். வேதாரண்யத்தில் பிறந்தவர். திருப்பரங்கிரிப் புராணம், சேது புராணம், திருஐயாற்றுப் புராணம் ஆகிய புராணங்களைப் பாடியுள்ளார்.

திருப்பரங்கிரிப் புராணம் : இப்புராணம் திருப்பரங்குன்ற தலவரலாறு ஆகும். 526 பாடல்களைக் கொண்டது.

சேது புராணம் : இந்நூல் ஒரு காப்பியம் போல அமைந்துள்ளது. 3438 பாடல்களைக் கொண்டது.

திருவையாற்றுப் புராணம் : இந்நூல் 2227 பாடல்களைக் கொண்டது. வேணுவனப் புராணத்தையும் இவரே பாடியிருக்கலாம் என்று ஆய்வறிஞர் திரு. மு. அருணாசலம் கருதுகின்றார்.

அளகைச் சம்பந்த முனிவர் (கி.பி. 1592): இவர் நிரம்ப அழகியார் மாணவர் ஆவார். திருவாரூர்ப் புராணம் (2929 பாடல்கள்) என்ற நூலைப் பாடியிருக்கிறார்.

திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் : இவர் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர். திருவொற்றியூர்ப் புராணம் (599 பாடல்கள்) பாடியுள்ளார்.

ஆனந்தக் கூத்தர் : இவரும் கமலை ஞானப் பிரகாசரின் சீடர் ஆவார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர். பாண்டி நாட்டில் வீரவநல்லூரில் பிறந்தவர். இவர் திருக்காளத்திப் புராணம் (33 அத்யாயங்கள்) என்ற நூலைப் பாடியுள்ளார்.

ஞானக் கூத்தர் : (16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) இவர் நிரம்ப அழகிய தேசிகரின் மாணாக்கர் ஆவார். இவர் ''திருவையாற்றுப் புராணம்'' (437 பாடல்கள்) பாடியுள்ளார்.

சைவ எல்லப்ப நாவலர் (கி.பி. 1550–1600) : இவர் திருவெண்காட்டுக்கு அருகில் உள்ள இராதாநல்லூரில் பிறந்தவர் ஆவார். இவர் பாடிய புராணங்கள் ஆறு ஆகும்.

1. அருணாசல புராணம் (451 பாடல்கள்)
2. திருவிரிஞ்சைப் புராணம் (370 பாடல்கள்)
3. தீர்த்தகிரிப் புராணம் (445 பாடல்கள்)
4. திருவெண்காட்டுப் புராணம் (614 பாடல்கள்)
5. செங்காட்டங்குடிப் புராணம் (393 பாடல்கள்)
6. செவ்வந்திப் புராணம் (550 பாடல்கள்)

புராணத் திருமலை நாதர் : (16-ஆம் நூற்றாண்டு முற்பகுதி)

இவர் காஞ்சி ஞானப் பிரகாசர் ஆதீனத்தில் பெரும்புலவராய் இருந்தவர். இவர் சிவ மகாபுராணத்தில் சரப புராணம் (451 பாடல்கள்) ததீசி புராணம் (48 பாடல்கள்), வினாவிடைப் புராணம் (44 பாடல்கள்), சிதம்பர புராணம்(814 பாடல்கள்) பெரும்பகுதி பாடியுள்ளார். சிதம்பர புராணம் மட்டுமே இப்பொழுது கிடைத்துள்ளது.

மறை ஞான சம்பந்தர் : (16-ஆம் நூற்றாண்டு – இடைப்பகுதி)

இவர் களந்தையில் பிறந்தவர். சிதம்பரத்தில் வாழ்ந்தவர். இவர் எழுதிய புராணங்கள் வருமாறு :

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. கமலாலய புராணம் – 1066 பாடல்கள்

2. அருணகிரிப் புராணம் – 613 பாடல்கள்

அனதாரியப்பப் புலவர் : (16-ஆம் நூற்றாண்டு – இடைப்பகுதி)

தொண்டை மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டப் பகுதியில் வாயற்பதி என்ற வயலூரில் வேளாள மரபில் பிறந்தவர். இவர் ''சுந்தர பாண்டியம்'' (2017 பாடல்கள்) என்ற நூலைப் பாடியுள்ளார். இறைவன் மதுரையில் நிகழ்த்திய 25 திருவிளையாடல்களை மட்டும் கூறுகிறது. எஞ்சிய திருவிளையாடல்கள் கிடைக்கவில்லை.

ரேவண சித்தர் : இதே நூற்றாண்டில் சிதம்பரத்தில் ரேவணசித்தர் என்ற புலவர் வாழ்ந்தார். இவர் திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப் புராணம் ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

சீவலமாறன் கதை : இந்த நூலை இயற்றியவர் சிதம்பர நாத கவி என்ற பெரியவர். இந்நூல் 1395 பாடல்களைக் கொண்டது. சீவலமாறன் என்ற அதிவீரராம பாண்டியனைப் பற்றிய கதை. இதில் வரலாற்றுண்மை இல்லை.

இதில் சீவல மாறன் காசி தொடங்கி அனைத்து பாடல் பெற்ற தலங்களுக்கும் யாத்திரை வருவதை முறையாகச் சொல்லப் பட்டுள்ளது. இந்நூலில் சைவ சித்தாந்தத் தத்துவப் பொருள்களும் உள்ளன. இந்நூலின் காலம் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

சமயத் தத்துவ இலக்கியம்

மறைஞான சம்பந்தர் : முன்கூறிய நூல்கள் நீங்கலாக சிறியவும் பெரியவுமாக 16 நூல்கள் இவர் இயற்றியுள்ளார்.

சிவதருமோத்தரம் : இது உபாகமங்களுள் ஒன்று ஆகும். சரியை பற்றி விளக்குவது ஆகும். 1224 பாடல்களைக் கொண்டது. 12 இயல்களைக் கொண்டது ஆகும். முதல் இயல் – பரம தருமாதி இயல் (சிரத்தையோடு செய்வதே அறம்) (2) சிவஞான தான இயல், (3) ஐவகை யாக இயல்,(4) பல விசிட்ட காரண இயல், (5) சிவதரும இயல், (6) பாவ இயல், (7) சுவர்க்க நரக இயல், (8) சனன மரண இயல், (9) சுவர்க்க நரக சேட இயல், (10) சிவஞான யோக இயல், (11) பரிகார இயல், (12) கோபுர இயல்.

சைவ சமயநெறி : 727 குறட்பாக்களை உடைய சைவ சாத்திர நூல். (1) ஆசாரியர் இலக்கணம் (2) மாணாக்கர் இலக்கணம் (3) பொது இலக்கணம் ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை, சிவ சின்னங்கள், வணங்கும் முறை, போசனவிதி, பிட்சை வகை, சைவாகமங்கள், இட்டலிங்க பூஜை.

பதி பசு பாசப் பனுவல் : 337 குறள் வெண் பாவால் ஆன சித்தாந்த சாத்திரம்.

''ஆகம்சடம் தான்; அணு அறியாது;
இவ்விரண்டின்
யோகம் சிவனால் என்றுஓர்''.

உருத்திராக்க விசிட்டம் : 108 பாடல்கள் கொண்டது. உருத்திராக்கத்தின் உற்பத்தி, அதன் பெயர், நிறம், இன்னாருக்கு உரிய தென்பது, முகங்கள், அம்முகங்களுக்குத் தெய்வங்கள், தரிக்குமிடம், தரிப்பதற்கு மந்திரம் முதலானவற்றைப் பற்றிக் கூறுகிறது.

சங்கற்பநிராகரணம் : 424 குறள் வெண் பாவினால் அகச் சமய வாதிகள் எண்மர் கூற்றை மறுக்கிறது.

மறைஞான சம்பந்தர் இயற்றிய பிற நூல்கள்; வருத்தமற உய்யும்வழி (17 குறட்பாக்கள்), ஐக்கியவியல் (15 வெண்பாக்கள்) பரமத திமிர பானு (180க்கும் அதிகமான பாடல்கள்), பஞ்சாக்கர தரிசனம், இறைவனூற் பயன், முத்தி நிலை (19 வெண் பாக்கள்), பரமோபதேசம் (41 குறள் வெண்பா), பதிபசு பாசத் தொகை (25 குறள் வெண்பா), அட்டாங்க யோகக் குறள் (65 குறட்பாக்கள்), ஆன்மார்த்த பூஜா பத்ததி (வடமொழி), மகா சிவராத்திரி கற்பம் (39 குறட்பா), மாத சிவராத்திரி கற்பம் (14 குறள்) சோமவார சிவராத்திரி கற்பம் (17 குறள்), சோமவார கற்பம் (216 குறட்பாக்கள்) திருக்கோயில் குற்றம்.

மறைஞான தேசிகர் : இவர் சீகாழிப் பதியினர். சிதம்பரம் மறைஞானசம்பந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரின் சீடர் ஆவார். இவர் 145 பாடல்களைக் கொண்ட "சிவபுண்ணியத் தெளிவு" எனும் நூலை இயற்றியுள்ளார்.

சிவாக்கிரக யோகிகள் : (கி.பி. 1500 – 1575)

சிவக்கொழுந்து சிவாச்சாரியார் என்பார் சூரியனார் கோயிலில் ஒரு புதிய மடத்தை நிறுவினார். இவரது சீடரே தொண்டை நாட்டில் பிறந்த சிவாக்கிரக யோகிகள் என்பார். இவர் வடமொழியிலும் நூல்கள் செய்திருக்கிறார்.

சிவநெறிப்பிரகாசம் : இது 215 திரு விருத்தங்களைக் கொண்ட சைவ சித்தாந்த நூல் ஆகும். இந்த நூல் பதி, பசு, பாச இலக்கணங்களைக் கூறியதோடு அமையாது, ஞானப் பேற்றிற்கு இன்றியமையாத தீட்சை, அத்துவா சோதனை முதலியவற்றையும் சிவாகம வழியே விளக்குகிறது.

சிவாக்கிரக யோகிகள் எழுதிய பிறநூல்கள் வருமாறு : சைவ பரிபாஷை, சைவ சந்நியாச பத்ததி, கிரியா தீபிகை, சிவாக்கிர பாஷ்யம்.

கமலை ஞானப் பிரகாசர் : இவர் இயற்றிய நூல்கள் (புராணங்கள் நீங்கலாக) சைவானுட்டான அகவல் (118 அடிகள்), புட்ப விதி (54 விருத்தங்கள்), பூமாலை, சிவபூசை அகவல் (444 அடிகள்), பிராசாத மாலை (11 எண் சீர்விருத்தங்கள் – யோகம் பற்றிக் கூறுவது), அத்துவித சாரம் (60 விருத்தப் பாக்கள்), தியாகராசர் கழிநெடில் (10 பாடல்கள்) கமலை ஞானப்பிரகாசர் இயற்றியதாகக் – ஆனால் எவ்வித ஆதாரமும் இல்லாத – கூறப்படும் நூல்கள்; சிவானந்த போதம், ஞானப்பள்ளு, ஆயிரப் பிரபந்தம், அண்ணாமலைக்கோவை, தியாகராசலீலை, அத்துவாக் கட்டளை.

குருஞானசம்பந்தர் : இவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாள மரபில் தோன்றியவர். கமலை ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்று தருமபுரத்தில் திருமடம் நிறுவியவர். குருஞானசம்பந்தர் இயற்றிய நூல்கள் வருமாறு :

(1) சொக்க நாதக் கலித்துறை (11 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் – தோத்திர நூல்), (2) ஞானப்பிரகாச மாலை (46 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் – தோத்திர நூல்), (3) சொக்கநாத வெண்பா (100 பாடல்கள்), (4) நவரத்தின மாலை (9 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள்), (5) சிவபோக சாரம் (139 வெண்பாக்கள்), (6) பிராசாத சட்சம் (6 பாடல்கள்), (7) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் (6 பாடல்கள்), (8) முத்தி நிச்சயம் (22 வெண்பாக்கள் – இந்நூல் ஆன்மாவுக்கு ஆனந்தம் உண்டு என்ற மறைஞான சம்பந்தருடைய கொள்கையை மறுப்பது), (9) ஞானாவரண விளக்கம் – (1161 செய்யுட்கள்), (10) சிவபூசா பத்ததி.

இந்த நூற்றாண்டில் வெளிவந்த பிற சைவ நூல்கள் வருமாறு :

திருச்செந்தூர் அகவல் : சிற்றம்பல நாடிகள் பாடிய 426 அடி கொண்ட ஒரே நீண்ட பாடல். இது சாத்திரமும், தோத்திரமும் கலந்த நூல்.

ஆன்மலிங்க மாலை : 14 சீர் ஆசிரிய விருத்தப்பா கொண்ட சைவ நூல். சிவ பூசையில் பஞ்ச சுத்திகளைக் கூறுவது. கமலை ஞானப் பிரகாசரின் சீடர் பாடியது.

சிவஞான தீபம் : 144 பாடல்களைக் கொண்ட சாத்திர நூல், இரேவண சித்தரால் இயற்றப்பட்டது.

சைவ சாத்திர உரைகள்

முதல் சாத்திர உரை 14-ஆம் நூற்றாண்டில் எழுந்தது. "இருபா இருபது" நூலுக்குச் சீகாழி தத்துவநாதர் எழுதிய உரையே காலத்தால் முதலாவது உரையாகும்.

நூல்	உரையாசிரியர்	காலம்
1) திருக்களிற்றுப்படியார் உரை	கண்ணுடை வள்ளல்	15-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்
2) சிவப் பிரகாசம்	மதுரைச் சிவப்பிரகாசர் மதுரை ஞானப் பிரகாசர் என்ற இருவர் உரை	15-ஆம் நூற்றாண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

16-ஆம் நூற்றாண்டில் பதினோரு பேர் உரை எழுதியிருக்கிறார்கள். திருவுந்தியார் – திருக்களிற்றுப்படியாருக்குப் பழைய உரை என்றுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதே நூற்றாண்டில் ஞானாமிர்தத்திற்கும் ஒரு உரை வந்துள்ளது. மறை ஞான தேசிகர் சிவஞான சித்தியார் (சுபக்கம்), சிவதருமோத்தரம், பதிபசுபாசத் தொகை ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். சிவஞான சித்தியாருக்கு (சுபக்கம்) சிவாக்கிரக யோகிகள், திருவண்ணாமலை ஞானப்பிரகாசர், நிரம்பஅழகிய தேசிகர் ஆகியோரும் சித்தியார் பரபக்கத்திற்கு திருவொற்றியூர் ஞானப் பிரகாசரும், திருவொற்றியூர் தத்துவப் பிரகாசரும் (இது வொன்றே முழுமையும் கிடைத்துள்ளது) வேலப்ப பண்டாரமும், சிவ நெறிப் பிரகாசம், சிவப்பிரகாசம் ஆகியவற்றிற்கு நந்தி சிவாக்கிரக யோகிகளும், திருவருட் பயனுக்கு நிரம்ப அழகிய தேசிகரும், சங்கற்ப நிராகரணத்துக்குத்திருவொற்றியூர் ஞானப்பிரகாசரும், உரைகள் எழுதி உள்ளனர்.

தோத்திர இலக்கியம்

வரதுங்கராம பாண்டியர் : இவர் திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி (100 பாட்டல்கள்) திருக்கருவைக் கலித்துறை அந்தாதி (100 பாடல்கள்) ஆகிய நூல்களைப் பாடியுள்ளார். இவை திருவாசகம் போல நெஞ்சை உருக்குபவை.

குகை நமசிவாயர் : இவர் திருவண்ணாமலையில் ஒரு குகையில் எந்த நேரமும் நிட்டையிலேயே இருந்து வந்தார். இவர் அருணகிரி அந்தாதி (100 வெண்பாக்கள்), திருவருணைத் தனி வெண்பா (35 வெண்பாக்கள்) ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

குருநமசிவாயர் : இவர் குகை நமசிவாயர் மாணாக்கராய்த் திருவண்ணாமலையில் வாழ்ந்து அவர் கட்டளைப்படி சிதம்பரம் சென்று பல திருப்பணிகள் செய்தார். இவர் அண்ணாமலை வெண்பா (100 வெண்பாக்கள்), சிதம்பர வெண்பா (100 வெண்பாக்கள்), பரமராசியமாலை (100 பாடல்கள்), நமசிவாய மாலை (100 கண்ணிகள்), சிவக்ஷேத்திரக் கோவை வெண்பா (9 வெண்பாக்கள்) ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

16-ஆம் நூற்றாண்டில் கவச நூல்களும் எழுந்தன. வரதுங்கராம பாண்டியர் சிவ கவசமும் (20 பாடல்கள்) அதி வீரராம பாண்டியர் சிவாட்டகமும் பாடியுள்ளனர்.

சித்தர் பாடல்

அகத்தியர் : தமிழ் இலக்கியத்தில் எந்தத் துறையாயினும் அகத்தியரை முன் வைத்துத் தொடங்குவது வழக்கமாகி விட்டது. சித்தர்களிலும் பல அகத்தியர்கள் உளர். இவர் அகத்தியர் ஞானம், பதார்த்த குணசிந்தாமணி, அகத்தியர் தீட்சா விதி (294 பாடல்கள்) ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

சட்டை முனி எனும் சித்தர் பெயரில் 12 நூல்களும், திருமூலர் பெயரில் 12 நூல்களும் உள்ளன.

பிரபந்த இலக்கியம்

புராணத் திருமலைநாதர் சொக்கநாதர் உலாவும் (516 கண்ணிகள்) வலிவல மும்மணிக் கோவையும் (ஆசிரியர் பெயர் தெரியவில்லை – 30 பாடல்கள்), பழனிக் கோவையும் (ஆசிரியர் பெயர் தெரியவில்லை – 400 பாடல்கள்) இந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

எல்லப்ப நாவலர் : சைவ எல்லப்ப நாவலர் திருவருணை அந்தாதி (100 பாடல்கள்), திருவருணைக் கலம்பகம் (100 பாடல்கள்), திருவாரூர்க் கோவை (510 பாடல்கள்), திருப்பாலைப் பந்தல் உலா ஆகிய பிரபந்தங்களை இயற்றியுள்ளார்.

சேறை கவிராச பிள்ளை : சேறை கவிராச பிள்ளை என்பார் (16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) திருக்காளத்தி நாதர் உலா (578 கண்ணிகள்), திருவாட்போக்கி நாதர் உலா (408 கண்ணிகள்), சேயூர் முருகன் உலா (513 கண்ணிகள்), திருக்காளத்திநாதர், இட்ட காமிய மாலை (49 பாடல்களே உள), அண்ணாமலையார் வண்ணம் ஆகிய நூல்களைப் பாடியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவரது புதல்வர் வீரை அம்பிகாபதி என்பவர் நெல்லை வருக்கக் கோவை (100 பாடல்கள்) என்ற நூலை இயற்றியுள்ளார்.

இந்நூற்றாண்டில் நூல்களின் மூலம் கிடைக்காமல் ஆனால் சாசனங்களாலும், சைவநூல் உரைகளாலும் சில நூல்கள் வெளிவந்த விவரம் தெரிய வருகிறது.

அவை வருமாறு :

1. உத்தண்ட வேலாயுதகவி .....திருவதிகை வீரட்டானமுடைய தம்பிரானார் மீது கலம்பகம்.
2. காஞ்சி ஞானப்பிரகாசர் .... கச்சிக் கலம்பகம்: (கி.பி. 1525 – 1550)
3. ஆசிரியர் பெயர் தெரியவில்லை ... மூவர் அம்மானை. [1]

(11)

பதினேழாம் நூற்றாண்டு சைவ இலக்கியம்

17-ஆம் நூற்றாண்டில் அந்நியர் ஆட்சியிலே சைவ சமயம் தழைத்திருந்தது என்று சொன்னால் அதற்குக் காரணம் சைவத் திருமடங்களே எனலாம். பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த அருட்கவிஞரான குமரகுருபரர் சைவத் திருமடங்களோடு தொடர்புடையவர். குமரகுருபரர் தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றார். அவர் காசி வரை சென்று காசியில் திருமடம் (இன்றைய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்) நிறுவி வடநாட்டிலும் சைவம் பரப்பினார். இவர் 14 அருள் நூல்களை இயற்றியுள்ளார். வெள்ளியம்பலவாணத் தம்பிரானும் தருமை நான்காவது குரு மூர்த்திகளான மாசிலாமணி தேசிகரிடம் காஷாயம் பெற்றவர். தருமையாதீனம் ஆறாவது குரு மூர்த்திகளான திருஞான சம்பந்த தேசிகர் காலத்தில் தருமையாதீனம் மிக உன்னத நிலையில் இருந்தது. தமிழாகர முனிவரும், சம்பந்த சரணாலய முனிவரும் இவர்களி டம் காஷாயம் பெற்று ஆதீன அடியவர் களாக இருந்தனர். படிக்காசுப் புலவர் தருமையாதீனம் திருநாவுக்கரசு தேசிகரிடம் துறவுக்கோலம் பெற்றவர். ஏழாவது குரு மூர்த்திகளான திருவம்பல தேசிகர் இரண்டு அருள் நூல்களை எழுதியுள்ளார்கள்.

திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர் நமசிவாய மூர்த்திகளிடம் தீட்சை பெற்றவர் சித்தர் சிவப்பிரகாசர். திருவா வடுதுறை ஆதீனத்தில் இரண்டாவது பட்டமாக இருந்த அம்பலவான தேசிகர் 11 அருள் நூல்கள் இயற்றியுள்ளார்கள். ஈசான தேசிகர் என்பார் துறைசை (திருவாவடுதுறை) பண்டாரமாக இருந்த மாசிலாமணி தேசிகரிடம் சந்நியாசம் பெற்று திருவாவடு துறையைச் சேர்ந்த ஈசான மடத்துத் தலைவரானார். மைலத்திலும், துறையூரிலும் வீரசைவ மடங்கள் சமயப்பணிகள் செய்தன.

இவர்களல்லாது தனித்து விளங்குபவர்கள் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப்பட்ட துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இவர் வீரசைவராயினும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் புறக்கணிக்கவில்லை. பிரபுலிங்க லீலை என்ற காவியத்தை வழங்கியதோடு 24 அருள் நூல்களை வழங்கியுள்ளார்.

இந்த நூற்றாண்டில் புராணங்களும் (28 புராணங்கள்) சிற்றிலக்கியங்களும் தழைத்துப் பெருகின. சேதுபதிகள், புதுக்கோட்டை, எட்டயபுரம்,விசயநகரம், அரியலூர் ஆகிய பகுதிகளின் சிற்றரசர்கள், வடமலையப்பன் போன்றோர் சைவ சமயத்தைப் போற்றிப் புகழ்ந்தனர்.

முப்பெரும் அருளாளர்கள்

குமரகுருபரர் : பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த மூன்று அருட்கவிஞர்கள் குமரகுருபரர், சிவப்பிரகாசர், தாயுமானவர் ஆகியோர் ஆவார்கள்.

குமரகுருபரர் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தார். தந்தையார் சண்முகசிகாமணிக் கவி

1) "தமிழ் இலக்கிய வரலாறு – பதினாறாம் நூற்றாண்டு" – மு. அருணாசலம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ராயர் – தாயார் சிவகாமசுந்தரி ஆவார். குமரகுருபரர் ஐந்து வயதாகியும் வாய் பேசாது இருந்தார். செந்திலாண்டவன் குமரகுருபரரின் நாவில் சடாட்சரத்தை எழுத குமரகுருபரர் ''கந்தர் கலிவெண்பா'' பாடியருளினார். தலயாத்திரை செய்து வந்த குமர குருபரருக்கு ''உனக்கு எந்த இடத்திலே வார்த்தை தடைப்படுகிறதோ அங்கே குருநாதர் அருளுபதேசம் பண்ணு வார்'' என்று அசரீரி எழுந்தது.

மதுரையிலே மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்ற மீனாட்சி யம்மன் குழந்தை உருவில் குமரகுரு பரர்க்கு முத்துமாலை அணிவித்தாள்.

அதன் பின்னர் குமரகுருபரர் திருவாரூர் முதலான பலதலங்கள் சென்று வழிபட்டு தருமபுரம் வந்து சேர்ந்தார். அங்கே தருமை யாதீனத்தில் நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகர் ''ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள'' என்ற பெரிய புராணப் பாடலுக்கு விளக்கம் கேட்க வாக்கு தடைப்பட்டது. குருமூர்த்திகளையே குருநாதராக ஏற்றுக் கொண்டு அவரது கட்டளைப்படி காசி சென்று வாழ்ந்துவந்தார். அங்கே டில்லி பாதுஷா முன்னர் குமரகுருபரர் பல அற்பு தங்கள் நிகழ்த்த அரசனும் மனமகிழ்ந்து காசியில் மடம் கட்ட நிலம் தந்து உதவி னான். காசியில் பலகாலம் அறங்கள் புரிந்து தருமபுரம் மீண்டும் வந்தார். தருமையில் சிலகாலம் வாழ்ந்து இருந்து மீண்டும் காசிவந்து அங்கு இறைவனடி சேர்ந்தார்.

குமரகுருபரர் இயற்றிய நூல்கள் வருமாறு :

(1) கந்தர் கலிவெண்பா – 122 கண்ணி களை உடையது. (2) கயிலைக் கலம்பகம் – ஸ்ரீவைகுண்டம் (கைலாசபுரம்) சிவ பெருமானைப் பற்றியது. (3) மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ் – 100 பாக்களை உடையது. (4) மீனாட்சியம்மை குறம் – 51 பாக்களை உடையது. (5) மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை – 20 பாக்கள். (6) மதுரைக் கலம்பகம் – மதுரை சோம சுந்தரர் திருவிளையாடல்களைக் கூறும் 102 பாக்களை உடையது. (7) நீதிநெறி விளக்கம். (8) திருவாரூர் நான்மணி மாலை – திருவாரூர் தியாகராஜப் பெருமானைப் பற்றிய நாற்பது பாக்களைக் கொண்டது. (9) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் – வைத்தீசுரன் கோயில் முருகப் பெரு மானைப் போற்றும் நூறுபாக்களைக் கொண்டது. (10) சிதம்பர மும்மணிக் கோவை – தில்லை நடராஜப் பெருமானின் மீது பாடப்பட்ட முப்பது பாக்களை உடை யது. (11) சிதம்பரச் செய்யுட்கோவை – 84 பாக்கள். (12) சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை – 20 செய்யுள்கள். (13) பண்டார மும்மணிக் கோவை – சைவ சித்தாந்த கருத்துக்கள் நிரம்பியது. (14) காசிக்கலம்பகம் – 100 செய்யுள்கள். (15 சகல கலாவல்லி மாலை. (16) காசி துண்டி விநாயகர் பதிகம்.

தாயுமானவர் : பதினேழாம் நூற்றாண் டில் தலைசிறந்த அருளாளர் தாயுமானவ அடிகள் ஆவார். சிலர் இவரது காலம் பதினெட்டாம் நூற்றாண்டு என்பர். அடிகள் இறைவனடி சேர்ந்தது சாலிவாகனசகம் 158, (இதற்கு இணையான ஆண்டு கி.பி. 1659) என்ற ஒரு பாடல் குறிப்பிடுகின்றது.

''துகளறு சாலிவருடம் ஆயிரத்தைஞ்
ஞூற்றொடெண் பத்தொன்று
தொடரும்
மிகுசுப கிருதாம் வருடம்தை மாதம்
வெண்மதி வாரநாள் விசாகம்
மகிமைசேர் பூர்ணத் திதியினில் அடுத்த
மண்டல சமயத்திற் கங்கை
திகழ்கனி யதனில் தாயுமா னவர்தாம்
சிவத்தினிற் கலந்தநற் றினமே''.

இப்பாடலாலும் விசயரங்க சொக்கநாத நாயக்கரது ஆட்சிக்காலம் கி.பி. 1627 முதல் கி.பி. 1653 வரை என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதனாலும் தாயுமான அடிகள் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு என்று முடிவு கட்டுகிறார் சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள்.

தாயுமான அடிகள் வேதாரண்யம் எனப்படும் திருமறைக்காட்டைச் சேர்ந்த கேடிலியப்பிள்ளை – கஜவல்லி அம்மை யாருக்கு இரண்டாவது மகனாக திருச்சி ராப்பள்ளியில் பிறந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருச்சி மலைக்கோட்டையில் ஸ்ரீசாரமா முனிவர் மடாலயத்தின் 17-வது பட்டமாக எழுந்தருளிய ஸ்ரீமௌனகுரு சுவாமிகளிடம் உபதேசம் கேட்டார்.

சிலகால மணவாழ்க்கைக்குப் பிறகு (மனைவியார் மட்டுவார் குழலி அம்மையார்) தனது குருவிடம் நிருவாண தீக்கை பெற்றார்.

இராமநாதபுரம் காட்டுரணி (இன்றைய இலட்சுமி புரம்) யில் அடிகள் நிட்டையில் இருந்து கி.பி. 1659-இல் இறையடி சேர்ந்தார்.

சுவாமிகள் அருளிச் செய்த பாடல்கள் 1452 ஆகும். சைவசமய வரலாற்றில் சுவாமிகளின் பொதுமை நோக்கு ஒரு வளர்ச்சியைக் காட்டுகிறது.

''வேறுபடு சமயமெலாம் புகுந்து
பார்க்கின்
விளங்குபரம் பொருளே; நின்
விளையாட்டு அல்லால்
மாறுபடும் கருத்தில்லை; முடிவில்
மோன
வாரிதியில் நதித்திரள்போல்
வயங்கிற்றம்மா'' (பா 620)

தாயுமான அடிகள் பொதுமைக் கருத்தைச் சொன்னாலும் தனது சைவ சமயக் கொள்கையை விட்டுவிடவில்லை.

''சைவ சமய மேசமயம்
சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்னுள் வெளிக்
காட்டும். இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி
புகுதவேண்டா; முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும்; செகத்தீரே''.
(பா 554 – தருமைப் பதிப்பு)

சமயப் பொதுமையைக் கூறிய தாயுமான அடிகள் ''அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும்'' என்ற சமுதாய அறமும் கூறுகின்றார்.

''எல்லாரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன்;
பராபரமே''
(பா 856 – தருமை)

உலகவர் இன்புற்றிருத்தலில் தனி மனிதன் இன்பம் அடைவது எப்படி?

''அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி
விட்டுவிட்டாய்
இன்ப நிலை தானே வந்து எய்தும்
பராபரமே''
(பா. 790)

உலகவர் இன்புறவும், தான் அன்பர் பணி செய்யவும் எவ்வாறு தோன்றும்? உலகே – இயற்கையே – இறைக்காட்சியாக இருக்கும் பொழுது ஏன் அந்த இன்பநிலை தோன்றாது? பார்க்கின்ற மலரில் கூட தாயுமான அடிகள் இறைவனைத் தானே காண்கிறார்.

''பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி, அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணினேன்''.
(பா 52 – தருமை)

சிவப்பிரகாசர் : சிவப்பிரகாச சுவாமிகள் தொண்டை நாட்டில் துறை மங்கலத்தைச் சேர்ந்தவர். பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் குமார சுவாமியார் ஆவார். திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் பாடம் கேட்டார். வீரசைவத்தவராயினும் சைவ சித்தாந்தத்தில் பிடிப்பு உள்ளவர். தனது 32-ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

1) **பிரபுலிங்க லீலை :** சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியவற்றுள் தலை சிறந்தது ''பிரபு லிங்கலீலை'' என்ற காவியம் ஆகும். இது கன்னட நூலின் மொழி பெயர்ப்பு ஆகும். இக்காவியத் தலைவர் அல்லமபிரபு ஆவார். அவரைக் கண்டு வெல்லவரும் மாயை தலைமையும், எதிர்மையும் கொண்ட பாத்திரம் ஆகும். மாயையைக் கண்டு தேவரும் மயங்குகின்றனர். வச வண்ணர் அல்லம தேவரைக் கண்டு அணைந்து தன்னை உணர்தலே காப்பியப் பெரும்பொருள் ஆகும்.

இக்காவியம் 1157 விருத்தங்களைக் கொண்டது. கி.பி. 1652-இல் இந்நூல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இயற்றப்பட்டது. இவர் எழுதிய பிற நூல்கள் :

2) 'சோண சைல மாலை' : திருவண்ணா மலையில் குடிகொண்டிருக்கும் சிவ பெருமான் மேல் இயற்றப்பட்ட நூறு விருத்தங்களைக் கொண்டது.

3) 'திருச்செந்தி நீரோட்ட யமக அந்தாதி' : 30 செய்யுள்களால் ஆகியது.

4) 'வெங்கைக் கோவை' : வெங்கனூரில் எழுந்தருளியிருக்கும் பழமலைநாதர் மீது 425 கலித்துறைப் பாக்களால் இயற்றப்பட்டது.

5) 'வெங்கைக் கலம்பகம்' : 100 செய்யுள்கள்.

6) 'திருவெங்கை உலா' : 419 கண்ணிகள்.

7) 'வெங்கை அலங்காரம்' : 5 செய்யுள்கள்.

8) 'சிவப்பிரகாச விசாகம்' : பதிஇயல், பசுஇயல், பாச இயல், பிரளய இயல் என நான்கியல்களைக் கொண்டது.

9) 'தருக்க பரிபாடை' : 142 காரிகைகளை உடையது.

10) 'நால்வர் நான்மணிமாலை' : அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரைக் குறித்து நாற்பது பாடல்கள்.

11) 'சதமணிமாலை' : சைவசித்தாந்த உண்மைகளை ஒவ்வொரு ஆகமத் தினின்றும் எடுத்துக் கூறும் 100 செய்யுள்களை உடையது.

12–16) 'திருஞானபாலையர் நெஞ்சு விடுதூது' : தாலாட்டு, பிள்ளைத் தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி, தனது ஆசிரியர் மேல் பாடியவை.

17) 'திருக்கூவப் புராணம்' : தொண் டை நாட்டில் உள்ள திருவிற் கோலம் இறைவனைப் பற்றி 703 விருத்தங் களில் பாடப்பட்டது.

18) 'வேதாந்த சூடாமணி' : 185 விருத்தங்கள்.

19) 'சித்தாந்த சிகாமணி' : வீர சைவம் பற்றி 880 திருவிருத்தங்களில் பாடப் பெற்றது.

20) 'பழமலை அந்தாதி' : விருத்தா சலத்தில் கோயில் கொண்டிருக்கம் பழ மலை நாதரைப் பற்றிய 100 பாடல் களைக் கொண்டது.

21) 'பிக்ஷாடன நவமணி மாலை' : விருத்தாசலம் பழமலை நாதரது பீக்ஷாடன கோலத்தை வியந்து பாடிய 9 செய்யுள்களை உடையது.

22) 'கொச்சகக் கலிப்பா'

23) 'பெரிய நாயகியம்மை கலித் துறை' : விருத்தாசலம் பெரியநாயகியம்மை மேல் பாடப்பட்ட 19 செய்யுள்கள்.

24) 'பெரிய நாயகி திருவிருத்தம்' : 10 பாக்கள்.

25) 'ஏசுமத நிராகரணம்' : கிறிஸ்தவ மத கண்டனமாக எழுந்த நூல்.

26) 'நன்னெறி' : 40 வெண்பாக்கள்.

27) 'சிவநாமமகிமை' : 11 பாக்கள்.

28) 'தலாவெண்பா'

29) 'இஷ்டலிங்க அபிடேகமாலை'

30) 'நெடுங்கழில் நெடில்'

31) 'குறுங்கழில் நெடில்'

32) 'நிரஞ்சன மாலை'

33) 'கைத்தல மாலை' : இவ்வைந்து நூல்களும் தனது அங்கலிங்கமான ஆன்ம லிங்கத்தைப் பரவுவது. நிரஞ்சனமாலை 31 பாக்களை உடை யது. ஏனைய நான்கும் பத்துப் பாக்களை உடையது.

34) 'சீகாளத்திப் புராணம்' : இந்நூலில் கண்ணப்ப சுருக்கமும், நக்கீரர் சுருக்கமும் இவர் பாடியது.

இவர் கி.பி. 1654-இல் சிவத்துடன் ஐக்கியமாகியிருக்க வேண்டும் என்பார் சோமசுந்தர தேசிகர். அவ்வாறெனில் தோற்றம் 1622 ஆக இருக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராண இலக்கியம்

புராண இலக்கியத்தின் செல்வாக்கு இந்த நூற்றாண்டிலும் தொடர்கிறது. சுமார் 28 புராணங்கள் எழுந்தன.

ஞானக் கூத்தர் : விருத்தாசல புராணம். (இப்புராணம் கிராமங்களில் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டது); திருஇடை மருதூர்ப் புராணம்.

களந்தை குமரன் : காலம் 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. ஊர் – தொண்டை நாட்டில் பொற்களந்தை என்னும் பொன் விளைந்த களத்தூர். நூல்கள் – திருவாஞ்சிய புராணம் (83டி விருத்தங்கள்; கி.பி. 1616-இல் அரங்கேறியது)

அகோர முனிவர் : காலம் பதினேழாம் நூற்றாண்டில் தொடக்கம். ஊர் – திருவாரூர். இயற்றிய நூல்கள் : கும்பகோணம் புராணம் (1118 திருவிருத்தங்கள்); திருக்கானப்பேர்ப் புராணம் (650 திருவிருத்தங்கள்); வேதாரண்ய புராணம் (3243 திருவிருத்தங்கள்)

திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் : பிறந்த ஊர் – மதுரைக்கு அருகே திருப்பூவணம். இயற்றிய நூல்கள்; திருப்பூவணப் புராணம் (1437 திருவிருத்தங்கள் : கி.பி. 1621-இல் அரங்கேறியது) திருவாப்பானூர்ப் புராணம் (515 திருவிருத்தங்கள்).

இப்புராணங்களன்றி இவர் திருப்பூவண நாதர் உலா, புஷ்பவனநாதர் வண்ணம், திருப்பூவண ஸ்தலவகுப்பு, தீர்த்த வகுப்பு, மூர்த்தி வகுப்பு முதலியவை செய்துள்ளார்.

பொன்னாயிரங்கவிராய மூர்த்திகள் என்னும் சிந்தாமணிப் பிள்ளை : பாண்டி நாட்டில் சேற்றூரில் பிறந்தவர். இயற்றிய நூல்கள் : சேறைத்தல புராணம் (1103 பாடல்கள்) தென்மலைத் திரிபுரத்தீசர் புராணம், தேவதானத் தல புராணம், புதுவை வடபாலீசர் புராணம்.

வைத்யநாத தேசிகர் : திருவாரூரில் வன்மீகநாத தேசிகருக்கு மகனாகத் தோன்றினார். அகோர முனிவரின் சீடர் ஆவார். இவரிடம் படிக்காசுப் புலவர், அரசூர் சொக்கப் புலவர், ஒப்பிலாமணி தேசிகர் ஆகியோர் பாடம் கேட்டனர். இவர் இயற்றிய நூல்கள் (1) நல்லூர்ப்புராணம் (1013 பாடல்கள்) (2) திருவாட்போக்கிப் புராணம் (845 பாடல்கள்) பிறநூல்கள் : (1) இலக்கண விளக்கம் (2) மைலம் பிள்ளைத் தமிழ் (3) பாசவதைப் பரணி (4) திருவாரூர்ப் பன்மணி மாலை (5) கமலாலய அம்மை பிள்ளைத் தமிழ் (6) மெய்ஞ்ஞான விளக்கம்.

இவரது புதல்வர்களான சதாசிவதேசிகர், தியாகராஜ தேசிகர், சிதம்பரநாத தேசிகர், வடுகநாத தேசிகர், வன்மீகநாத தேசிகர் ஆகிய ஐவரும் சிறந்த புலமை வாய்ந்தவர்கள்.

அந்தகக் கவி வீரராகவ முதலியார் : இவர் திருக்கழுக்குன்றத்துக்கு அருகில் உழலூரில் வடுகநாத முதலியாருக்குப் பிறந்தார். காலம் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி எனலாம். இயற்றிய நூல்கள் : (1) திருக்கழுக்குன்றப் புராணம் (832 விருத்தங்கள்; பாடிய காலம் கி.பி.1640) (2) திருக்கழுக்குன்ற உலா (3) திருவாரூர் உலா (4) கிழ்வேளூர் உலா (5) சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் (6) சேயூர்க் கலம்பகம் (7) விட்டினர் அம்மையப்பன் பிள்ளைத் தமிழ் (8) பரராசசிங்கன் வண்ணம் (9) கயத்தாற்றீசனுலா (10) சந்திரவாணன் கோவை (7 முதல் 10 மனிதர்களைப் பாடியது) (11) பஞ்சரத்னம் – தருமை எட்டாவது பட்டம் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் மேல் பாடியது (12) திருக்கழுக்குன்ற மாலை.

சம்பந்த சரணாலய முனிவர் : தருமையாதீனத்தில் துறவு பூண்டவர். காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இயற்றிய நூல்கள் : (1) கந்தபுராணச் சுருக்கம் (1048 திருவிருத்தங்கள்) (2) சிகாரத்ன மாலை.

வென்றிமாலைக் கவிராயர் : செந்திலம் பதியில் திரிசுதந்திரர் என்னும் முக்காணியக் குடும்பத்தில் பிறந்தவர். காலம் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. ஆரம்பத்தில் மூர்க்கராக இருந்தார். நூல்கள் (1) திருச்செந்தூர்ப் புராணம் (899 திருவிருத்தங்கள்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேலையரும், கருணைப் பிரகாசரும் : இவர்கள் சிவப்பிரகாச சுவாமிகளின் இளவல்கள் ஆவார்கள். கருணைப் பிரகாசர் ''சீகாளத்திப் புராணம்'' பாடத் தொடங்கி ''சீகாளத்திச் சுருக்கம்'' வரை பாடித் தமது 18-ஆவது வயதில் சிவத்துடன் கலந்தார். இவரது சகோதரர் வேலையர் எஞ்சிய இரண்டு சருக்கங்களைப் பாடி நிறைவு செய்தார். சீகாளத்திப் புராணம் – 1031 பாடல்கள். கருணைப் பிரகாசர் பாடிய மற்றுமொரு நூல் : இட்டலிங்க அகவல்; வேலையர் இயற்றிய பிறநூல்கள் (1) நல்லூர்ப் புராணம் (589 பாடல்கள்) (2) வீரசிங்காதன புராணம் (3) இட்டலிங்கக் கைத்தலமாலை (4) நமசிவாயலீலை (5) மயிலத்து இரட்டை மணிமாலை (6) மயிலத்துலா.

இவர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர்கள்.

சுந்தரலிங்க முனிவர் : திருவாவடுதுறை ஆதீனம் திருச்சிற்றம்பல ஞானதேசிகருடைய மாணவர் ஆவார். இவர் இயற்றிய நூல் : திருப்பெருந்துறைப் புராணம் என்ற ஆதிகைலாய மான்மியம் – பாடல்கள் 1948.

முத்துவீரக் கவிஞர் : இவர் இயற்றிய நூல் கபிலகிரி புராணம். இப்புராணம் கொங்கு நாட்டைச் சேர்ந்தது.

செகராச சேகரன் : இவர் தட்சிண கைலாச புராணம் (திரிகோணமலை) என்ற நூலை இயற்றினார். இந்நூல் 632 பாடல்களைக் கொண்டது.

வடுகநாத தேசிகர் : இவர் திருவாரூர் வைத்தியநாத நாவலரின் நான்காவது புதல்வர் ஆவார். சீர்காழியில் வசித்தார். தென் திருமுல்லைவாயில் புராணம் பாடியுள்ளார். காலம் (கி.பி. 1697–1787). இந்நூல் 415 பாடல்களைக் கொண்டது.

முத்துதாசர் : தொண்டை நாட்டில் புலவனூர்க்காணி என்னும் ஊரில் கருணீகர் குலத்தில் தோன்றியவர். இவர் மகாதேவ புராணம் (இராய்வேலூருக்கு அருகே மாதேவமலை எனும் சிவபதியைப் பற்றியது. இந்நூல் 507 பாடல்களைக் கொண்டது) திரிவிரிஞ்சைப் புராணம் எனும் இரண்டு தலபுராணங்களைப் பாடியுள்ளார்.

சிதம்பரநாத தேசிகர் : இவர் வைத்தியநாத தேசிகரின் மகனார் ஆவார். சூணாம்பேட்டில் வாழ்ந்தவர். இவர் எழுதிய நூல்கள் : (1) வில்லிவாக்கப் புராணம் (2) தசகாரியம் (3) பதிபசுபாசப்பனுவல் உரை (4) சிவஞான சித்தியார் பொழிப் புரை.

இதே நூற்றாண்டில்வேறு சில புராணங்களும் எழுந்தன. அவற்றை இயற்றியவர்கள் பெயர் தெரியவில்லை.

(1) திருவையாற்றுப் புராணம் – 2028 பாடல்கள்; அரங்கேறிய ஆண்டு – 1605

(2) பிறவாநெறிப் புராணம் – பேரூர்ப் பட்டிப் புராணம் எனவும் கூறப்படும். 342 திருவிருத்தங்களைக் கொண்டது. அரங்கேறிய ஆண்டு கி.பி. 1608.

(3) கி.பி. 1628-இல் பழனியைச் சேர்ந்த பாலசுப்பிரமணிய கவிராயர் பழனித் தலபுராணம் இயற்றினார்.

சிற்றிலக்கியங்கள்

பதினேழாம் நூற்றாண்டினைச் ''சிற்றிலக்கிய காலம்'' என்றால் மிகை யாகாது. தொல்காப்பியர் காலத்திலேயே சிற்றிலக்கியத்திற்கான விதை ஊன்றப்பட்டு விட்டது. வடமொழியிலே ''பிரபந்தம்'' என்பர். பிரபந்தம் என்றால் ''நன்கு கட்டப்பட்ட நூல்'' எனப்படும். இது பொருந்தாது. சிற்றிலக்கியம், காவியமாகிய இரண்டுமே நன்கு கட்டமைக்கப்பட்ட நூல்களே. எனவே பிரபந்தம் என்றால் சிற்றிலக்கியங்கள், காவியங்கள் இரண்டையுமே குறிக்கும். பிரபந்தங்கள் 96 வகைப்படும் என்பர். இதுவும் பொருந்தாது. தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் இந்தத் தொண்ணூற்றுக்குள் அடங்கா.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் காரைக் காலம்மையார் இயற்றிய ''அற்புதத் திருவந்தாதியே'' முதல் சிற்றிலக்கியம் ஆகும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் எழுந்த ''பாண்டிக் கோவை'' முதல் கோவை நூல் ஆகும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சேர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மான் பெருமாள்நாயனார் பாடியருளிய 'திருக்கைலாய ஞான உலா' ஆதி உலா ஆகும். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'நந்திக்கலம்பகமே' முதல் கலம்பக நூல் ஆகும். கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'கார்மண்டல சதகம்' முதல் சதக நூல் ஆகும்.

பாண்டியர் வரலாற்றை கோவையும், சோழர் வரலாற்றை உலாவும், பல்லவர் வரலாற்றை கலம்பகமும், மண்டலங்கள் வரலாற்றைச் சதகமும் விரித்துக் கூறு கின்றன.

சதக இலக்கியம்

சதகம் என்பது ஒரு பொருளைக் குறித்து நூறு பாடல்கள் பாடுவது ஆகும். கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முதலில் தோன்றிய கார்மண்டல சதகத்தை இயற்றியவர் கொங்கு வேளாளர் இனத்தைச் சேர்ந்த ஆறைகிழார் ஆவார். (கி.பி. 1025–1071) கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் சதகநூல்கள் இரண்டாவது முறையாக எழுந்தன. 17,18,19 நூற்றாண்டுகளில் சதக இலக்கியங்கள் தழைத்தன.

தண்டலையார் சதகம் : இது தண்டலை நீள் நெறி இறைவன் மேல் பாடப்பட்ட நூறு பாடல்களைக் கொண்ட நூல் ஆகும். இந்நூலை இயற்றியவர் சாந்தலிங்கர் என்று சோமசுந்தர தேசிகர் கூறுவார். தொண்டை மண்டல சதகமும், தண்டலையார் சதகமும் செய்யுள்அமைப்பு, மொழிநடை ஆகிய வற்றில் ஒத்து இருப்பதால் இரண்டினை யும் இயற்றியவர் படிக்காசுப் புலவர் என்பார் இளங்கீரன்.

சோழ மண்டலச் சதகம் : இந்நூல் சோழ நாட்டைப் பற்றியதாக இருந்தாலும் சோழ நாட்டுக் கவிஞர்களைப் பற்றிக் கூறும் பொழுது சண்டேசர், பூசலார், நீலநக்கர், மானக்கஞ்சாறர், இளையான் குடிமாறர், அரிவாட்டாயர், ஏயர்கோன் கலிக்காமர், முனையடுவார், சத்தியார், அப்பர், சம்பந்தர், சேந்தனார் ஆகியோரைப் பற்றியும் நூலாசிரியர் பாடியுள்ளார். நூலை இயற்றியவர் ஆத்மநாத தேசிகர் ஆவார். (கி.பி. 1650–1728).

வைராக்கிய சதகம் : இந்நூல் சிவ பெருமானிடம் வைராக்கியம் கொண்டு அன்பு பூணவேண்டும் என்று கூறுகிறது. இதனை இயற்றியவர் திருப்பேரூர் சாந்த லிங்க சுவாமிகள் ஆவார்.

மிழலை சதகம் : சர்க்கரைப் புலவர், சைவநூலாக இருக்கலாம்.

கலம்பகம்

பலவகை நிறங்கள் கொண்ட மலர் களால் தொடுக்கப்பட்ட மாலை கலம்பகம் ஆகும். வேறுவேறு பா மலர்களைக் கலந்து தொடுக்கும் இலக்கியமும் கலம்பகம் ஆகும்.

கலம்பகத்தில் காலத்தால் முற்பட்டது கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எழுந்த நந்திக் கலம்பகம் ஆகும்.இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலம்பகம் புனைவதில் வல்லவர்கள் இரட்டைப் புலவர்கள் என்பர்.

''வெண்பாவிற் புகழேந்தி பரணிக்குச்
செயங்கொண்டார் விருத்தமென்னும்
ஒண்பாவுக்குயர் கம்பன் கோவை உலா
வளமடலுக்கு ஒட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர் சந்தம் படிக்காசலாது
ஒருவர் பகரொணாதே''.

என்பது பழம் பாடல் ஆகும்.

1) காசிக் கலம்பகம் – குமரகுருபரர்.
2) கயிலைக் கலம்பகம் – குமரகுருபரர்.
3) மதுரைக் கலம்பகம் – குமரகுருபரர்.
4) செந்திற் கலம்பகம் – ஈசான தேசிகர்.
5) சிவஞான சுவாமிகள் கலம்பகம் – துறைமங்கலம் சிவப்பிரகாசர்.
6) திருவெங்கைக் கலம்பகம் – துறை மங்கலம் சிவப்பிரகாசர்.
7) சேயூர்க்கலம்பகம் – அந்தகக் கவி வீரராகவர்.
8) திருச்செந்திற் கலம்பகம் – சுவாமி நாத தேசிகர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூது இலக்கியம்

தொல்காப்பியம் முதல் பாரதியார் பாடல் வரை தூது பற்றிப் பேசாத இலக்கியமே இல்லை எனலாம். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய ''நெஞ்சுவிடு தூது'' தான் தமிழில் தூதுக்கென தனியே எழுந்த முதல் நூலாகும்.

1) சிவஞான பாலைய தேசிகர், நெஞ்சு விடு தூது : துறைமங்கலம் சிவப்பிர காசர்.
2) நெஞ்சுவிடு தூது : சாந்தலிங்க சுவாமிகள்.

பரணி இலக்கியம்

போரின் வெற்றியைப் பாடுவது பரணி ஆகும். 11-ஆம் நூற்றாண்டின் செயங் கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியே முதல் பரணி இலக்கியம் ஆகும்.

(1) பாசவதைப் பரணி – வைத்யநாத தேசிகர். இது 736 தாழிசைகளை உடையது.

அந்தாதி

ஒரு பாடலின் ஈற்றுச் சொல் அடுத்த பாடலின் முதல் சொல்லாகத் தொடுக்கப் பட்ட நூறு பாடல்கள் அந்தாதி ஆகும். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் காரைக்காலம் மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதி முதல் அந்தாதி இலக்கியம் ஆகும்.

1) திருச்செந்தில் அந்தாதி – துறை மங்கலம் சிவப்பிரகாசர்.
2) திருச்செந்தில் நீரோட்டகயமக அந்தாதி – துறைமங்கலம் சிவப்பிராகாசர்.
3) பழமலை அந்தாதி – துறைமங்கலம் சிவப்பிரகாசர்.
4) திருவிடைமருதூர் அந்தாதி – கடிகை முத்துப் புலவர்.
5) பழநியந்தாதி – பாலசுப்பிரமணிய கவிராயர்.

கோவை இலக்கியம்

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் எழுந்த பாண்டிக் கோவையே முதல் கோவை இலக்கியம் ஆகும்.

1) திருச்செந்தூர் கோவை – பொன் னெட்டி மாலை சர்க்கரைப் புலவர்
2) திருவெங்கைக் கோவை – துறை மங்கலம் சிவப்பிரகாசர்.

உலா

அரசனோ அல்லது இறைவனோ வீதிவலம் வரும்பொழுது பேதை முதலான எழுவகைப் பெண்டிரின் நிலை குறித்து எழுந்த இலக்கியம் உலா ஆகும்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய ''திருக் கைலாய ஞான உலா'' முதல் உலா இலக்கியம் ஆகும்.

1) திருக்கழுக்குன்ற உலா (409 கண்ணி கள்) – அந்தகக் கவி வீரராகவர்.
2) திருவாரூர் உலா (528 கண்ணிகள்) – அந்தகக் கவி வீரராகவர்.
3) கீழ்வேளூருலா – அந்தகக் கவி வீரராகவர்.
4) கனகசபைநாதன் உலா – அம்மை யப்பன்.
5) திருப்பூவணநாதர் உலா (469 கண்ணிகள்) – கந்தசாமிப் புலவர்.
6) திருவெங்கை உலா (419 கண்ணிகள்) – துறைமங்கலம் சிவப்பிரகாசர்.
7) மயிலத்துலா – வேலையர்.
8) சங்கரநாயினார் கோயில் சங்கரலிங்க உலா (வரராசை உலா) – தெரிய வில்லை.

பிள்ளைத் தமிழ் இலக்கியம்

பாட்டுடைத் தலைவனைக் (அல்லது தலைமகள்) குழந்தையாகப் பாவித்து தாலப்பருவம், சப்பாணிப் பருவம் எனப் பலபருவங்களில் வைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழ் ஆகும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தரால் இயற்றப் பட்ட குலோத்துங்கச் சோழன் பிள்ளைத் தமிழ் முதல் பிள்ளைத் தமிழ் இலக்கியம் ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1) சிவஞான சுவாமிகள் பிள்ளைத்தமிழ் – துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

2) சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் – அந்தகக் கவி வீரராகவர்.

3) மயிலம்மை பிள்ளைத் தமிழ் – வைத்யநாத தேசிகர்.

4) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் – குமரகுருபரர்.

5) முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ் – குமரகுருபரர்.

சைவ ஆன்றோர்கள்

சித்தர் சிவப்பிரகாசர் : குடந்தையில் சைவ வேளாளர் குலத்தில் 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிவப்பிரகாசர் (தீட்சா நாமம்) தோன்றினார். திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்திகளைக் குருவாக அடைந்தார். (துறைசை குரு முதல்வர் நமச்சிவாய மூர்த்திகள் அன்று– அதே பெயருடைய பின்வந்த நமசிவாய தேசிகர்) திருவண்ணாமலையிலும், துறையூரிலும் மடத்தை நிறுவினார். திருப்பட்டீசுரத்தில் சிவத்துடன் ஐக்கியமானார். இவர் இயற்றிய நூல்கள் (1) அத்துவித வெண்பா (218 வெண்பாக்கள்) (2) கனபாஷித ரத்தின மாலை, (3)சதகத்ரயம், (4) அனுபவ சட்ஸ்தலம், (5) திருவாலர் துறை சிந்து – (2 முதல் 4 வரை வீரசைவ நூல்கள்.

துறைசை அம்பலவாண தேசிகர் : இவர் துறைசையாதீனத்தில் இரண்டாவது பட்டத்தில் அமர்ந்தவர். இவரது காலம் கி.பி. 1610 எனலாம். இவர் இயற்றிய நூல்கள் (1) தசகாரியம் – 55 திருவிருத்தங்கள், (2) சன்மார்க்க சித்தியார் – 28 வெண்பாக்கள், (3) சிவாச்சிரமத் தெளிவு – 70 வெண்பாக்கள், (4) சித்தாந்தப் பஃறெடை – 630 கண்ணிகள், (5) சித்தாந்த சிகாமணி – 91 வெண்பாக்கள், (6) உபாயநிட்டை – 46 வெண்பாக்கள், (7) நிட்டை விளக்கம் – 28 திருவிருத்தங்கள், (8) உபதேசவெண்பா – 43 வெண்பாக்கள், (9) அதிசயமாலை – 76 கட்டளைக் கலித்துறைகள் – இறைவன் திருவிளையாடல், (10) நமச்சிவாய மாலை – 137 செய்யுள்கள், (11) பாஷண்ட நிராகரணம் – 60 கட்டளைக் கலி துறைகள் – வீரசைவத்தைக் கண்டிப்பது, (12) பூப்பிள்ளை அட்டவணை – மடத்துத் தவசிப் பிள்ளைக்காக எளிய முறையில் சொல்லப் பட்டது, (13) அனுபோக வெண்பா.

பாலசுப்பிரமணியக் கவிராயர் : கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பழனியில் துளுவவேளாள மரபில் பெரியவன் கவிராயர் என்பாருக்கு மகனாகப் பிறந்தார். இவர் இயற்றிய நூல்கள் (1) திராவிட வேத நிர்ணயம் (2) பாஞ்சராத்ரா மத சபேடிகை (3) அக்கதீபிகை (4) சைவசித்தாந்த தரிசனம் (5) வேதாந்த சித்தாந்த சமரச தீபம் (6) மாயவாத சதசிரச தூஷணி (7) குகோத்கர்ஷம் (8) கூவிள நீபமகாத்மியம்.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான் : இவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். பதினேழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவர். தருமையாதீனம் நான்காவது பட்டம் மாசிலாமணி தேசிகரிடம் தீட்சையும், காஷாயமும் பெற்றவர். சிவப்பிரகாச சுவாமிகள் இவரிடம் பாடம் கேட்டார். தேவாரம், பெரிய புராணம் ஆகிய நூல்களில் இடைச் செருகல்களாகச் சேர்க்கப்பட்டுள்ள வெள்ளிப் பாடல்கள் இவர் இயற்றியவை ஆகும்.

இவர் இயற்றிய நூல்கள் : (1) ஞான சம்பந்த தேசிக சமூக மாலை (2) தாலாட்டு (3) பள்ளியெழுச்சி (இம்மூன்றும் குரு தோத்திரங்கள்) (4) முத்திநிச்சயச் சிற்றுரை (5) பேருரை (6) சிவஞானசித்தி ஞானாபரண விளக்கம் – சிவஞானசித்தியார்க்கு மாபாடியம்.

தமிழாகர முனிவர் : இவர் தருமையாதீனம் ஆறாவது பட்டத்தில் திகழ்ந்த திருஞானசம்பந்த தேசிகரிடம் தீட்சை பெற்ற இவ்வாதீன அடியார் குழாத்துள் இருந்தவர். திருநெல்வேலியைச் சேர்ந்தவர். குகை ஞானப்பிரகாசரின் சீடர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்தவர். இவர் இயற்றிய நூல்கள் (1) ஞான சம்பந்த குருராய அட்டகம் (2) சந்திரகலா மாலை (இரண்டு நூல்களும் இவரது ஞான குருவைப் பற்றியவை) (3) நெல்லையப்பர் நான்மணி மாலை (4) நெல்லை காவல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாலை (5) திருப்பணி மாலை (6) கலை மகள் இரட்டை மணி மாலை (7) நீதிசாரம் (8) ஆசௌச தீபிகை (9) பிராயச்சித்த சமுச்சயம் (302 திருவிருத்தங்கள்)

திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் : இவர் வீரசைவ சமயத்தவர். திருச்சிராப் பள்ளி மாவட்டம் துறையூரில் பிறந்தவர். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தங்கையை மணந்தவர். திருப்பேரூரில் இறைவனடி சேர்ந்தார். இவர் இயற்றிய நூல்கள். (1) வைராக்கிய சதகம் (100 விருத்தங்கள்) (2) வைராக்கிய தீபம் (3) அவிரோக உந்தியார் (100 பாடல்கள்) (4) கொலை மறுத்தல் (22 திருவிருத்தங்கள்)

படிக்காசுப் புலவர் : பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டை நாட்டிலே களத்தூர் என்ற ஊரில் பிறந்தவர். தருமையாதீனத்தில் சந்நியாசம் பெற்றுத் துறவு பூண்டவர். இவர் இயற்றிய நூல்கள் (1) உமைபாகர் பதிகம் (2) பாம்பலங்காரர் வருக்கக் கோவை (3) புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் (4) தண்டலையார் சதகம் (சாந்த லிங்கர் பாடியதாக சோமசுந்தர தேசிகர் கூறுவார்).

ஈசான தேசிகர் : இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர். திருவாவடுதுறையாதீனத்தில் சின்னப் பண்டாரமாய் இருந்த மாசிலாமணி தேசிகர் சுசீந்திரத்தில் இருக்கும் பொழுது அவரை அணுகிச் சந்நியாசம் பெற்றுக் கொண்டார். அப்பொழுது அவர் பெயர் சாமிநாதர். இவருக்குச் சங்காபிஷேகம் செய்யப்பட்டு திருவாவடுதுறைக்குச் சொந்தமான ஈசான மடத்துக்குத் தலைவ ரானார். இவர் இயற்றிய நூல்கள் (1) திருச் செந்தில் கலம்பகம் (2) தசகாரியம்.

பாண்டிப் பெருமாள் : திருநெல்வேலி யைச் சேர்ந்த இவர் சிவஞான போதத் திற்குச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

இதே கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தி லிருந்து சோழநாடு வந்த ஞானப்பிரகாச சுவாமிகள் சிவஞான சிததியாருக்கு ஒருரை எழுதினார். கி.பி. 1678-இல் திருவாவடு துறையில் இருந்த நமச்சிவாயத் தம்பிரான் இருபா இருபஃதுக்கு உரை எழுதியுள்ளார்.

தருமையாதீன குருமூர்த்திகள் : தருமை யாதீன ஏழாவது குருமூர்த்திகள் ஸ்ரீதிருவம் பல தேசிகர் (கி.பி. 1670–1680) வருணா சிரம சந்திரிகை, ''சமாதிலிங்கப் பிரதிட்டா விதி'' ஆகிய இரு நூல்களை இயற்றி யுள்ளார்கள்.

தருமையாதீனத் திருக்கூட்டத்து அடிய வர்களான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர், ஸ்ரீ சம்பந்த சரணாலயர், தமிழாகர முனிவர், ஸ்ரீ சொர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பலவர், படிக்காசு முனிவர், சிதம்பரநாத முனிவர், சிவானந்த முனிவர், புள்கூர் சிவப்பிரகாசர், சண்முக சுவாமிகள் எனப் பலர் (சிலரைப் பற்றி முன்னர் குறிக்கப்பட்டுள்ளது) சிவ ஞானத் தமிழ் நூல்கள் வழங்கியுள்ளனர்.[1]

(12)

பதினெட்டாம் நூற்றாண்டுச் சைவ இலக்கியம்

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரபந் தங்கள், புராணங்கள் என சைவ இலக்கியங் கள் பல்கிப் பெருகின. சைவத்திரு மடங் களும், தஞ்சை மராட்டிய மன்னர்களும், மதுரை நாயக்க அரசர்களும், பெரம்பூர் ஆனந்தரங்கன் போன்ற புலவர்களும் தமிழை வளர்த்தனர்.

சிவஞான முனிவர் சிவஞான போதத் திற்குப் பேருரை எழுதியதோடு பல நூல்களும் இயற்றியுள்ளார். அது மட்டு மல்லாது கச்சியப்ப முனிவர், சிதம்பரநாத முனிவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய

1) ''தமிழ் இலக்கிய வரலாறு – பதினேழாம் நூற்றாண்டு'' – சோமசுந்தர தேசிகர்; ''தாயுமானவர் பாடல்'' – தருமையாதீன வெளியீடு; ''குமரகுருபரசுவாமிகள் பாடல்கள்'' – திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம்; இளஞ்சேரன், ந.வி. செயராமன் முதலியோர் எழுதிய சிற்றிலக்கியங்கள் பற்றிய நூல்கள் – மணிவாசகர் பதிப்பகம்; தருமைக் குருமணிகள் வரலாறுகள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முனிவர், சோமசுந்தரக்கவி, சங்கர மூர்த்தி கவி, கடவுள் மாமுனிவர் என 12 பேருக்கு மேற்பட்ட ஒரு சீட பரம்பரையே தந்துள் ளார்.

சைவ இலக்கிய மும்மணிகளுள் ஒன்றான திருவிளையாடற் புராணமும் எழுந்தது இந்நூற்றாண்டேயாகும்.

சிற்றிலக்கியமாக இருந்தாலும் குற்றாலக் குறவஞ்சி, அபிராமிஅந்தாதி, திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களைப் பயிலாதவரே இல்லை எனலாம். சைவ இலக்கியத்தைப் பொறுத்த வரையில் பதினெட்டாம் நூற்றாண்டும் வளம்மிக்க ஆண்டே ஆகும்.

சிவஞான முனிவர் : பதினெட்டாம் நூற்றாண்டில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாராய்த் தனித்து நிற்பவர் சிவஞான முனிவர் ஆவார். கி.பி. 1753-இல் நெல்லை மாவட்டம் விக்கிரம சிங்கபுரத்தில் ஆனந்தக் கூத்தர் – மயிலம்மை ஆகியோ ருக்கு மகவாய்த் தோன்றினார். சுசீந்திரத் தில் திருவாவடுதுறை ஆதீன தம்பிரான் சுவாமிகள் பின் வேலப்ப தேசிகரிடம் தீக்கை பெற்றார். காஞ்சிபுரத்தில் பிள்ளை யார்பாளையம் என்ற ஊரில் நெடுநாள் இருந்தார். கி.பி. 1785-இல் திருவாவடு துறையில் சிவபெருமான் திருவடி சேர்ந்தார்.

சிவஞான மாபாடியம் : சிவஞான முனிவர் சிவஞான போதத்திற்கு எழுதிய பேருரை (மாபாடியம்) ஒன்றே சைவத்தில் உள்ள தனியொரு உரையாகும். இதனை ஒருகலைக்களஞ்சியம் எனலாம். சைவசித் தாந்தம், பிறதத்துவங்கள், தருக்கம் என அத்தனையும் கொட்டிக் கிடக்கிறது எனலாம். சிவஞான முனிவர் அவர்களே சிவஞான போதத்திற்கு ஒரு சிற்றுரையும் எழுதியுள்ளார்.

காஞ்சிப் புரணம் : இந்நூல் 65 படலங் களையும் 2742 பாடல்களையும் கொண்டது ஆகும். காஞ்சியைச் சுற்றியுள்ள தலங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்வொரு படலத்தில் கூறுகின்றார். அன்னை காமாட்சி ஆற்றில் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்கையில் ஆற்றில் வெள்ளம் வர அன்னை சிவலிங்கத்தைக் கட்டித் தழுவிய வரலாற்றையும், காமாட்சியம்மை திரு மணத்தையும் விரிவாகக் கூறுகிறார்.

காஞ்சிப்புராணம் சைவசமய கலைக் களஞ்சியம் எனலாம். மேலும் இந்நூல் சைவசித்தாந்தத்தையும் அறுவகை தரிசனங் களையும் எடுத்துரைக்கிறது.

சோமேசர் முதுமொழி வெண்பா : 133 பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் திருக்குறளின் ஒவ்வொரு அதி காரத்திலிருந்தும் ஒரு பாடல் எடுத்தாளு கிறது. அக்குறளுக்கேற்ற கதை முன்னி ரண்டு அடிகளில் விளங்கி நிற்கும்.

குளத்தூர் பதிற்றுப்பத்தந்தாதி : 100 பாடல்களைக் கொண்டது. குளத்தூர் இறைவன் மேல்பாடப்பட்டது.

இளசை பதிற்றுப்பத்தந்தாதி : இளசை என்பது சென்னை அருகே உள்ள இளங் காடு ஆகும். அத்தலத்து இறைவனைப் பற்றியது இந்நூல்.

கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி : கலசை என்பது தொட்டிக்கலை ஆகும். அவ்வூர் இறைவனைப் பற்றியது.

காஞ்சி ஆனந்த ருத்ரேசர் பதிகம் : ஆனந்த ருத்ரேசம் காஞ்சியில் உள்ள ஒரு பதி ஆகும்.

திருவேகம்பர்ஆனந்தக்களிப்பு : 15 வரி களை உடையது.

கலசைச்செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் : இந்நூல் 53 பாடல்களை உடையது.

அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் : குளத் தூர் இறைவியைப் பற்றியது.

அகிலாண்டேசுவரி பதிகம் :

திருவேகம்பர் அந்தாதி : 94 பாடல்களை உடையது.

திருமுல்லைவாயில் அந்தாதி : 100 பாடல்களைக் கொண்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருத்தொண்டர் திருநாமக்கோவை : அறுபத்து மூன்று நாயன்மார் திருப்பெயர் களைக் கொண்டது.

பஞ்சாக்கர தேசிக மாலை : திருவாவடு துறை ஆதீன குரு முதல்வரைப் பற்றியது.

சிவஞான சித்தியார் (சுபக்கம்); பொழிப் புரை : சித்தியார் உரை.

''என்னை இப்படிவத்தில்'' என்னும் செய்யுள்.

சிவசமவாத உரை மறுப்பு : 80 வரிகளை உடையது. இலங்கை ஞானப்பிரகாசரின் கருத்துகளுக்கு மறுப்பு.

''எடுத்து'' என்னும் சொல்லுக்கு இட்ட வைரக்குப்பாயம் : இதுவும் ஞானப் பிரகாச ருக்கு மறுப்பு.

சித்தாந்தமரபு கண்டன கண்டனம் : ஆதீன வெளியீடான ''சித்தாந்தமரபு'' ஒருவரால் கண்டனம் செய்யப்பட்டது. அக் கண்டனத்திற்கும் கண்டனம் இந்த நூல்.

மொழிபெயர்ப்பு

சித்தாந்த பிரகாசிகை : 36 தத்துவங் களைக் கூறுவது.

சுலோக பஞ்சகம் : அரதத்தரின் 5 சுலோ கங்களின் மொழி பெயர்ப்பு.

சிவதத்துவ விவேகம் : அப்பய்ய தீட்ச தரின் நூலின் மொழி பெயர்ப்பு.

சிவஞான முனிவரின் சீடர்கள் பல ராவர். அவர்களுள் மிகமுக்கிய மாணவர் கள் பன்னிருவர் ஆவர். (1) கச்சியப்ப முனிவர், (2) தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், (3) இலக்கணம் சிதம்பரநாத முனிவர், (4) காஞ்சி சரவணப்பக்தர், (5) ராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, (6) காஞ்சி சிதம்பர முனிவர், (7) காஞ்சி முத்துக்குமர தேசிகர், (8) திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார், (9) கரவாந்தண்டல் அடைக்கலம்காத்த முதலியார், (10) கடம்பர் கோயில் கல்யாணசுந்தர உபாத் யாயர், (11) திருச்சிற்றம்பல தேசிகர், (12) பிள்ளையார்பாளையம் முனியப்ப முதலி யார்.

திரிகூடராசப்ப கவிராயர் : இவர் திருக் குற்றாலத்துக்கு அருகே மேலகரம் என்ற ஊரில் பிறந்தவர். வடகரை அரசரான சின்னணஞ்சாத் தேவரின் அரசவைக் கவிஞர் ஆவார். இவர் இயற்றிய குற்றாலக் குறவஞ்சி கற்றோராலும் மற்றோராலும் போற்றப்படுகிறது. இந்நூல் வசந்த வல்லி யின் காதல், குறவன்–குறத்தி நாடகம், குறி சொல்லுதல் என இருந்தாலும் வசந்தவல்லி காதல் கொள்வது குற்றாலநாதரையே. அப்பகுதி சிவபெருமானைப்பற்றி வெகு அழகாக எடுத்துரைக்கிறது.

இறைவணக்கம் பாடும் பொழுது பலா மரம் பூத்துக் காய்த்துக் குலுங்குவதைச் சிவக்காட்சியாகவே காட்டுகிறார்.

''கிளைகளாய்க் கிளைத்த பல
கொப்பெலாம்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
சிவலிங்க சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலவின் முளைத்
தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே''.

குற்றாலத் தலவிருட்சமான பலா மரத்தை யாரால் இப்படிக் காணமுடியும்!

குற்றால நாதர் வீதியுலா வருகின்றார்.

பல்லவி

''பவனிவந்தனரே! மழவிடைப்
பவனிவந்தனரே!

அனுபல்லவி

அவனி போற்றிய குறும்பலா உறை
மவுன நாயகர் எவன நாயகர்
சிவனுமாய் அரி அயனுமானவர்
கவனமால்விடை அதனில்ஏறியே
(பவனி)

சரணம்

தடுப்பதொரு கரம் கொடுப்பதொருகரம்
தரித்த சுடர் மழு விரித்ததொருகரம்
எடுத்த சிறுமறி பிடித்ததொரு கரம்
இலங்கப் பணியணி துலங்கவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடுத்த ஒருபுலி கொடுத்த சோமனும்
ஆனை. கொடுத்தவிதானச் சேலையும்
உடுத்த திருமருங்கசைய மலரயன்
கொடுத்த பரிகலம் இசையவே''.

வாழ்த்துப் பாடலோடு முடிக்கிறார் திருகூடராசப்ப கவிராயர்.

''கொற்றமதிச் சடையானைக்
குறும்பலா உடையானை
வெற்றிமழுப் படையானை
விடையானை வாழ்த்துகிறேன்
தாதையிலாத் திருமகனைத்
தடமலைக்கு மருமகனை
வேதசங்க வீதியனை
வேதியனை வாழ்த்துகிறேன்''.

சாதாரண மக்களும் பாடக்கூடிய அளவுக்கு எளிய மொழியிலே அவர்களுடைய போக்கிலேயே சென்று – நாட்டுப் பாடல்கள் என்று போற்றப்படும் முறையிலே அமைத்து காலமெல்லாம் வரவேற்கப்படும் காதலையே கருப்பொருளாகக் கொண்டு கவிராயர் சிவத்தத்துவத்தை நம் கண்முன் நிறுத்துகின்றார்.

குற்றாலக் குறவஞ்சியோடு கவிராயர் குற்றாலத் தலபுராணம், குற்றால மாலை, குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றாலயமக அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்கள். குற்றாலத் தலபுராணம் 2700 பாடல்களைக் கொண்டது ஆகும்.

பரஞ்சோதி முனிவர் : பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்று புராணங்களும் சைவ இலக்கியத்தில் மும்மணிகளாய்த் திகழ்வனவாகும். திருவிளையாடற் புராணம் பாராயணம் பண்ணாத சைவ இல்லம் இல்லையெனலாம். திருவிளையாடற் புராணத்தில் மீனாட்சி திருமணம் படித்தால் அந்த இல்லத்தில் திருமணம் நிகழும் என்பது இன்று வரை நிலவி வரும் நம்பிக்கை. சிவபெருமானின் 64 திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற் புராணம். சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்பி உன்னத இலக்கியமாகத் திகழ்வது திருவிளையாடற் புராணம். 3363 பாடல்களைக் கொண்டது.

இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர் ஆவார். வேதாரண்யம் என்றழைக்கப்படும் திருமறைக்காட்டில் தோன்றியவர். தந்தையார் பெயர் மீனாட்சி சுந்தர தேசிகர். இவரது காலம் பற்றி பல கருத்துக்கள் உள. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் திருவிளையாடற்புராணம் அரங்கேறிய பொழுது இருந்தார் என்பார் உ.வே.சா. அப்பொழுது இருந்தவர் இராமநாதபுரம் விஜயரகுநாத சேதுபதி ஆவார். இவரது காலம் கி.பி. 1711 முதல் கி.பி. 1725. இவற்றைக் கொண்டு ஆய்ந்தால் பரஞ்சோதி முனிவரின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.

இவர் இயற்றிய வேறு நூல்கள் வேதாரணியப் புராணம், திருவிளையாடற் போற்றிக் கவிவெண்பா, மூதுரை பதிற்றுப் பத்தந்தாதி ஆகியன.

சிதம்பர பாரதிகள் : பெரிய புராணத்தைக் கதாகாலட்சேபத்துக்குரிய ஸாகி, தெண்டி, ஆர்யா, அபங்கு முதலிய மகாராஷ்டிர தாபுகள் அடங்கிய வர்ண மெட்டுகளாலும் புராதன கீர்த்தனங்களாலும், வெண்பா கலித்துறை விருத்தப்பாக்களாலும் தமிழில் செய்தவர் சிதம்பர பாரதிகள் என்ற சின்னப்ப பாரதி. பெரியபுராணக் கீர்த்தனைகள் பாதிக்கு மேல் இயற்றிய பிறகு சிதம்பர பாரதி உயிர் நீத்தார். அதன் பிறகு அவரது புதல்வர்கள் சுப்பராமய்யர் என்ற இராமசுவாமி ஐயரும், சுந்தரமய்யரும் பெரிய புராணக் கீர்த்தனைகளை முழுமையும் பாடி நிறைவு செய்தனர்.

கிருஷ்ண பாரதி மதுரைக்குக் கிழக்கே 12 மைலில் உள்ள மழுவாடி என்ற ஊரில் சுப்பிரமணிய தீட்சதருக்குப் பிறந்தார்.

வேண்டியன எல்லாம் வேண்டியபடி நடக்கப்பாடியவர் .... 1750 :

அவர் வேண்டிப்பாடிய செயல் எல்லாம் அப்படி யே வேண்டியபடியே நடந்தன. அவர் வாக்கு அப்படியே பலித்தது. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செட்டிநாட்டில் நிகழ்ந்த ஓர் அற்புதம். அவர்தான் பாடுவார் முத்தப்பர் ஆவார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருளாற்றல் மிக்க முத்தப்பர் பாடிய நூல்கள் ''திருமுக விலாசம்'', ''செயங் கொண்டார் சதகம்'', ''குன்றக்குடி முருகன் பதிகம்'', ''பழநியாண்டவர் பதிகம்'' ஆகியன. இந்நூல்களில் பக்தியும், புராண இதிகாசக் கதைகளும், நாட்டுப்புறப் பாடல்களும் விரவிக் கலந்துள்ளன. இவை யல்லாது பல்லாயிரக் கணக்கான போற்றிப் பாடல்களும் பாடியுள்ளார்.

1750-இல் செட்டி நாட்டில் கிழச்சீவல் பட்டியில் அழகப்ப செட்டியார் லட்சுமி ஆச்சியின் புதல்வராய்ப் பிறந்த முத்தப்பர் 1823-இல் இறைவனடி சேர்ந்தார்.

ஆலவாய்ப் பெருமானார் ஆடல் அறுபத்து நான்கும் பாடலாய்ப் புனைந்துரைத்தவர் 1791

தமிழிசை இயக்கம் பெரிதாக வளர்ந்து விட்ட இந்த நூற்றாண்டிலும் தமிழில் கீர்த்தனைகளே இல்லை என்று பல்லவி பாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே திரு விளையாடற்புராணம் முழுமைக்கும் கீர்த்தனைகள் பாடித் தந்திருக்கிறார் கிருஷ்ண பாரதி என்ற பெரியவர். ''காஞ்சன மாலை மடியில் உமையொரு கன்னிகையாய் இருந்தாளே''

என்ற இசைப்பாடல் சௌராட்டிரம் சாப்பு இராகத்தில் அமைந்துள்ளது. இக் கீர்த்தனைகள் திருவிளையாடல் நாடக நூல் எனப்பெயர் பெற்றது. இந்நூலைப் பாராட்டிப் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திரிசிரபுரம் தியாகராசச் செட்டியார் முதலிய பேரறிஞர்கள் பாயிரம் பாடியிருக்கிறார்கள். இந்நூலுக்குப்பின் பாரதியவர்கள் திருத்தவத்துறை மான் மியம், திரு அன்பில் ஆலந்துறை மான் மியம், குமாரசம்பவம் முதலிய பல நூல் களை இசைப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

கிருஷ்ணபாரதி 1791-இல் திரிசிரபுரம் மாவட்டத்தில் உள்ள திருநயம் எனும் சிற்றூரில் அந்தணர் குலத்தில் வேங்கட ராமையர்க்கும் அன்னபூரணியம்மாளுக்கும் மகவாய்ப் பிறந்தார். இவ்வுலகில் எழுபத் தேழு ஆண்டுகள் வரை வாழ்ந்து பின் துறவு பூண்டு 1869-இல் இறைவன் திருவடி அடைந்தார்.

சைவ ஆன்றோர்கள்

சாந்தலிங்க சுவாமிகள் : சென்னையை அடுத்த திருப்போரூரில் வீரசைவமடம் ஒன்று ஏற்படுத்தியவர். இவர் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், நெஞ்சு விடுதூது ஆகிய நூல்களை எழுதி உள்ளார். இவருக்குப்பின் வந்தவர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் ஆவார்.

திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் : திருப்போரூர் முருகன் மேல் திருப் போரூர்ச் சந்நிதி முறை என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். இதில் 726 பாடல்கள் உள்ளன. இது தவிர வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், ஒழிவில் ஒடுக்கம் முதலிய நூல்களுக்கு உரையும், பஞ்சாதி கார விளக்கம், குமாரதேவர் பதிகம், குமார தேவர் நெஞ்சுவிடுதூது, வேதகிரீசுரர் பதிகம், மீனாட்சியம்மை கலிவெண்பா ஆகிய நூல்களும் இயற்றியுள்ளார்.

ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் : இவர் பரமாசாரிய சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார். நிட்டானுபூதி சாரம், சண்முகர் உலா, தென்பாங்கு, உண்மையுலா, சிவசோடசமாலை முத லான முப்பதுக்கும் மேற்பட்ட நூல் களை இயற்றியுள்ளார்.

அருணாசலக் கவிராயர் : இவர் கி.பி. 1711-இல் தில்லையாடி என்ற ஊரில் கார்காத்தார் குலத்தில் நல்ல தம்பிப் பிள்ளை – வள்ளியம்மை ஆகியோருக்கு நான்காம் மகவாய்ப் பிறந்தார். சீர்காழியில் வாழ்ந்து வந்தார். இவர் இயற்றிய ''ராமநாடகம்'' சிறந்த இசைத்தமிழ் நூல். இவர் இயற்றிய நூல்கள் சீர்காழித்தல புராணம் (1550 பாடல்கள்), காழிப்பள்ளு, காழிக்கலம்பகம், காழிக்கோவை, தியா கேசர் வண்ணம். கி.பி. 1778-இல் உயிர் நீத்தார்.

பலபட்டடைச் சொக்கநாதர் : இவர் இயற்றிய நூல்கள் (1) மதுரை மும்மணிக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோவை (2) மதுரையமக அந்தாதி (3) தேவையுலா (இராமேசுவரம் சிவன் மேலது)

கச்சியப்பமுனிவர் : (18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) இவர் சிவஞான முனிவரின் சீடர் ஆவார். இவர் இயற்றிய நூல்கள் (1) தணிகைப்புராணம் (2) திருவானைக்காப் புராணம் (3) பூவாளூர்ப்புராணம் (4) போரூர்ப்புராணம் 5) விநாயகபுராணம் (6) காஞ்சிப்புராணம் பிற்பகுதி (7) கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது (8) சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் (9) திருத்தணிகை ஆற்றுப்படை (10) பஞ்சாக்கர அந்தாதி.

தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் : இவரும் சிவஞான முனிவரின் சீடர் ஆவார். இவர் இயற்றிய நூல்கள் (1) துறைசைக் கோவை (2) தலைசைச் சிலேடை (3) தலைசைக் கோவை (4) சுப்பிரமணியர் திருவிருத்தம் (5) திருத்தணிகைத் திருவிருத்தம் (6) சிதம்பரேசர் இரட்டை வண்ணம் (7) திருக்குற்றாலச் சித்தி திருவிருத்தம் (8) பழனி முருகக் கடவுள் பஞ்சரத்தின மாலை.

கந்தப்பையர் : இவர் தணிகைக் கலம்பகம், தணிகை அந்தாதி, தணிகை உலா, தணிகை பிள்ளைத்தமிழ் முதலிய பன்னிரு நூல்களை எழுதியுள்ளார். இவை யாவும் ''திருத்தணிகைச்சந்நிதி முறை'' என்ற பெயரில் ஒன்றாகத் திரட்டி வெளியிடப் பட்டுள்ளன. இவர் எழுதிய பிற நூல் கள் : பழமலையந்தாதி உரை, செந்தினிரோட்டயமக அந்தாதி.

கோடீசுர ஐயர் : கி.பி. 1786-இல் இராமநாதபுரம் மாவட்டம் பெருங்கரை என்னும் ஊரில் நாகநாத ஐயர் – பார்வதியம்மாளுக்குப் பிறந்தார். இவர் இயற்றிய நூல்கள், சித்திவிநாயகர் பதிகம், மதுரைச் சண்முகமாலை, சுந்தரேசுவரர் பதிகம், கயற்கண்ணிப்பதிற்றுப்பத்தந்தாதி.

புராண இலக்கியம்
பதினெட்டாம் நூற்றாண்டு

புராணமும் ஆசிரியர் பெயரும்

1) திருக்களர்ப்புராணம் – களப்பால் ஆதியப்பனார்.
2) திருக்கொள்ளம்பூதூர்ப் புராணம் – ஆதியப்பனார்.
3) திருப்பறியலூர்ப் புராணம் (654 பாடல்கள்) – வேலப்ப தேசிகர்.
4) திருவாவடுதுறைப் புராணம் (2560 பாடல்கள்) – சாத்திரம் சாமிநாத முனிவர்.
5) வேதாரணிய புராணம் (1113 பாடல்கள்) பரஞ்சோதி முனிவர்.
6) மயூரகிரிப் புராணம் (589 பாடல்கள்) – வேதாந்த சுப்பிரமணியப்பிள்ளை.
7) வானரவீர மதுரைப் புராணம் – மதுரை சுப்பிரமணியர்.
8) காஞ்சிப்புராணம் (4856 பாடல்கள்) – சிவஞான முனிவர்.
9) திருவோத்தூர்ப்புராணம் (1016 பாடல்கள்) – கருணாகரக்கவிராயர்.
10) தணிகைப்புராணம் (3161 பாடல் கள்) – கச்சியப்ப முனிவர்.
11) தணிகாசல புராணம் (426 பாடல்கள்) – கந்தப்பையர்.
12) திருப்பாதிரிப்புலியூர் புராணம் (987 பாடல்கள்) – இலக்கணம் சிதம்பர முனிவர்.
13) திருப்பெருந்துறைப்புராணம் – சுந்தர லிங்க முனிவர்.
14) மாயூரப்புராணம் – ஆதியப்பனார்.
15) மருதூர்ப்புராணம் – சிற்றம்பலவர்.
16) கடம்பவனபுராணம் – வீமநாத பண்டிதர்.
17) சிவராத்திரிபுராணம் – நல்லைநாதர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18) திருப்பழுவூர்ப்புராணம், திருவைகாவூர்ப்புராணம் – கவித்தலம் வேலையர்.

19) சாயாவனப்புராணம் – கவிராச நாயகம்பிள்ளை.

சிற்றிலக்கியங்கள்

ஆற்றுப்படை இலக்கியங்கள்

1) தணிகையாற்றுப்படை – கச்சியப்ப முனிவர்.

அந்தாதி

1) அபிராமி அந்தாதி – அபிராமிபட்டர்.
2) அண்ணாமலை அந்தாதி – கந்தப்ப ஞானதேசிகர்.
3) இளைசை பதிற்றுப்பத்தந்தாதி – சிவஞான முனிவர்.
4) கச்சிஆனந்த ருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி – கச்சியப்ப முனிவர்.
5) கல்வளை அந்தாதி – சின்னதம்பிப் புலவர்.
6) கலித்துறை அந்தாதி – முத்தப்ப செட்டியார்.
7) கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி – சிவஞான முனிவர்.
8) குற்றால வெண்பா அந்தாதி – திரிகூடராசப்ப கவிராயர்.
9) குற்றாலயமக அந்தாதி – திரிகூட ராசப்ப கவிராயர்.
10) குளத்தூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி – சிவஞான முனிவர்.
11) தணிகை அந்தாதி – கந்தப்பையர்.
12) திருக்கடவூர்யமக அந்தாதி – தலை மலைகண்ட தேசிகர்.
13) திருத்தணிகை பதிற்றுப்பத்தந்தாதி – கச்சியப்ப முனிவர்.
14) திருமுல்லைவாயில் அந்தாதி – சிவ ஞான முனிவர்.
15) திருவேகம்பரந்தாதி – சிவஞான முனிவர்.
16) பஞ்சாட்சர அந்தாதி – கச்சியப்ப முனிவர்.
17) பதிற்றுப்பத்தந்தாதி – முத்தப்பச் செட்டியார்.
18) புலியூர்யமக அந்தாதி – மயில் வாகனப் புலவர்.
19) மருதூர்யமக அந்தாதி – தலை மலைகண்ட தேவர்.
20) மறைசை அந்தாதி – சின்னத் தம்பிப்புலவர்.

கோவை

1) சிதாழிக் கோவை – அருணாசலக் கவிராயர்.
2) குற்றாலக்கோவை – திரிகூடராசப்ப கவிராயர்.
3) சேற்றூர்க்கோவை – சங்கரமூர்த்தி கவிராயர்.
4) மயூரகிரிக்கோவை – சாந்துப்புலவர்.
5) பழமலைக்கோவை – சாமிநாத தேசிகர்.
6) காவைவேலன்கோவை – சின்னத் தம்பிப்புலவர்.
7) திருக்கழுக்குன்றக்கோவை – சோம சுந்தரம்பிள்ளை.
8) விஞ்சைக்கோவை – பலப்பட்ட டைச் சொக்கநாதப்புலவர்.
9) ஒருதுறைக்கோவை – கீழ்வேளூர்க் குருசாமி தேசிகர்.
10) திருவாவடுதுறைக்கோவை – தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர்.
11) கலைசைக்கோவை – தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர்.
12) சிராமலைக்கோவை – சுப்பிரமணிய முனிவர் மணவை வீரபத்திரன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலா

1) திருக்குற்றால நாதர் உலா – திரிகூட ராசப்பக் கவிராயர்.
2) திருத்தணிகை உலா – கந்தப்பையர்.
3) திருவிலஞ்சி முருகன் உலா – பண்டாரக்கவிராயர்.
4) தேவைஉலா – பலபட்டடை சொக்க நாதப்புலவர்.

கலம்பகம்

1) திருத்தணிகைக்கலம்பகம் – கந்தப் பையர்.
2) துறைசைக்கலம்பகம் – சீனிப்புலவர்.
3) நரசைக்கலம்பகம் – சாமிநாத பிள்ளை.
4) புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம் – படிக்காசுப்புலவர்.
5) நேமக்கலம்பகம் – முத்தப்பச் செட்டியார்.

சதக இலக்கியம்

1) அறப்பளீசுரசதகம் – அம்பலவாணக் கவிராயர்.
2) குமரேசசதகம் – குருபாததாசர்.
3) கைலாசநாதர்சதகம் – கைலாசநாதக் கவிஞர்.
4) செயங்கொண்டார் சதகம் – முத்தப் பச் செட்டியார்.
5) நடராசசதகம் – சிதம்பரநாத முனிவர்.
6) வேலாயுதசதகம் – கந்தப்பையர்.
7) வைராக்கியசதகம் – சுவாமிநாத தேசிகர்.
8) மனுநீதிச்சதகம் – இராசப்பநாவலர்.
9) தண்டலையார்சதகம் – சாந்தலிங்கக் கவிராயர்.

பரணி

1) திருச்செந்தூர்ப்பரணி – சீனிப்புலவர்.

பிள்ளைத்தமிழ்

1) குற்றாலப்பிள்ளைத்தமிழ் – திரிகூட ராசப்பக் கவிராயர்.
2) கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் – சிவஞான முனிவர்.
3) குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் – சிவஞான முனிவர்.
4) சேதுபர்வதவர்த்தினி பிள்ளைத்தமிழ் – அருணாசலக்கவிராயர்.
5) சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் – கச்சியப்ப முனிவர்.
6) சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ் – சாமி நாதபிள்ளை.
7) திருத்தணிகைப்பிள்ளைத்தமிழ் – கந்தப்பையர்.
8) திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ் – சிதம்பர சுவாமிகள்.
9) திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் – பகழிக்கூத்தர்.
10) நல்லூர்ச்சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் – அப்புக்குட்டி ஐயர்.
11) செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ் – முத்தப்பச் செட்டியார்.
12) திருமயிலைபிள்ளைத்தமிழ் – தாண்டவ ராயர்.

தூது இலக்கியம்

1) கச்சி ஆனந்தருத்திரேசர் விடு தூது – கச்சியப்ப முனிவர்.
2) சண்பகநல்லூர் சிவன் விடு தூது – பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்.
3) சிதம்பரேசர் விறலிவிடு தூது – தில்லைவிடங்கள் மாரிமுத்துப் பிள்ளை.
4) நெஞ்சுவிடு தூது – தத்துவராய அடிகள்.

பள்ளு இலக்கியம்

1) பருளை விநாயகர்பள்ளு – சின்ன தம்பிப்புலவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2) தில்லைப்பள்ளு - மாரிமுத்துப் பிள்ளை.
3) திருமுருகன் பள்ளு - பெரியவன் கவிராயர்.
4) திருப்புனவாயிற்பள்ளு - சர்க்கரை புலவர். சிதம்பரநாதமுனிவர், அருணாசலக் கவிராயர்.
5) சீகாழிப்பள்ளு – சிதம்பரநாத முனிவர், அருணாசலக்கவிராயர்.
6) சிவசயிலப்பள்ளு - இராமநாத கவிராயர்.
7) குற்றாலப்பள்ளு
8) கதிரைமலைப்பள்ளு
9) கண்ணுடையம்மை பள்ளு – முத்துக் குட்டிப்புலவர்.

பள்ளு இலக்கியம்

1) மறைஞான தேசிகர் – அருண கிரிப் புராணம்.
2) கோனேரியப்பமுதலியார் - கந்த புராணம் – உபதேசகாண்டம்.
3) சிதம்பரநாத முனிவர் – நித்யகன்ம நெறி.
4) கண்ணுடைவள்ளல் - ஒழிவி லொடுக்கம்.
5) மதுரகவிராயர் – திருக்கச்சூர் நொண்டி நாடகம்.
6) நமச்சிவாயக்கவிராயர் – உலகம்மை அந்தாதி, சிங்கைசிலேடை வெண்பா.
7) ஒப்பிலாமணிப்புலவர் – சிவரகசியம் (4800 பாடல்கள்) கும்பகோணப் புராணம்
8) இரண்டாவது சர்க்கரைப்புலவர் - தட்சிணாமூர்த்தி மும்மணிக்கோவை, திருவாடானை ஆதிரத்தினேசுவரர் சித்திரக் கவியலங்காரம், திருப்புன வாயிற்பள்ளு, காலசங்கார மூர்த்தி வெண்பா.
9) சாந்துப்புலவர் – மயூரகிரிக்கோவை.
10) வரதபண்டிதர் (ஈழம்) – சிவராத்திரிப் புராணம், பிள்ளையார் கதை.
11) சென்னமலையர் – சிவ சிவ வெண்பா.
12) சிவக்கொழுந்து தேசிகர் – தஞ்சை பெருவுடையார் உலா.
13) தேவராயசுவாமிகள் - கந்தசஷ்டி கவசம்.
14) கடவுள் மாமுனிவர் - திருவாத வூரடிகள் புராணம்.
15) பின்வேலப்பதேசிகர் – திருப்பறியலூர் புராணம்.
16) கந்தசாமிப்புலவர் - திருச்செந்தூர் நொண்டி நாடகம்.
17) சிவஞானவள்ளலார் – 20 சாத்திரங் கள் கொண்ட "வள்ளலார் சாத்திரம்".
18) திருச்சிற்றம்பலதேசிகர் (துறைசை ஆதினம்) – அறிவானந்த சமுத்திரம் முதலிய தத்துவ நூல்கள்.
19) உறையூர் முத்துராசர் - கைலாய மாலை.
20) கந்தசாமிப்புலவர் – திருப்பூவண உலா, திருப்பூவணப்புராணம், ஆப்பனூர் புராணம்.
21) தருமையாதீனம், ஸ்ரீலஸ்ரீதிருநாவுக் கரசு தேசிக சுவாமிகள் கி.பி. 1700–1715 – சித்தாந்த நிச்சயம்.
22) இராமானுஜபுரம் தாண்டவராயப் பிள்ளை – சிவதத்துவ விளக்கம்.
23) எட்டயபுரம் கருத்த முத்துப்பிள்ளை – "சிவதத்துவ சுதாநிதி", "திரிபுவனப் புரணம்", "சிவிகிரிப்பிள்ளைத்தமிழ்", திருச்செந்தில் கலித்துறை அந்தாதி, செந்தூர் வெண்பா அந்தாதி, செந்தூர் பதிற்றுப் பத்தந்தாதி.[1]

1) "சிவஞான முனிவர்"– டி.என். இராமச்சந்திரன், சாகித்திய அகாடமி, 1999; "திருக்குற்றாலக் குறவஞ்சி" – புலியூர்த் தேசிகன், 1960; "திருவிளையாடற் புராணம்", "பெரியபுராணக் கீர்த்தனை" – இராமசுவாமி ஐயர்"; "தமிழ்ப்புலவர் வரிசை" – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; "தமிழில் தலபுராணங்கள்" – டாக்டர் வே. இரா. மாதவன், 1995; "சிற்றிலக்கியச் செல்வங்கள்" – ந.வீ. செயராமன், 1967; "நூற்றாண்டுகளில் தமிழ்" – கா.பொ. இரத்தினம்; "தமிழ் இலக்கிய வரலாறு" – நா.சீனிவாசன்; "இலக்கிய வரலாறு" – கா.சு.பிள்ளை; "தருமைக் குருமணிகளின் அருள் வரலாறு" – தருமையாதீனம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொகுப்பு

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன சிவபெருமானைப் பற்றிப் பலபடப் பேசுகின்றன.

கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் காரைக்காலம்மையார் தனது பக்திப்பனுவல்களால் சிவபெருமான் புகழைப் பாடுகின்றார். முறையான சிவவழிபாடு, முழுத்தன்மைபெற்று சைவம் என வடிவம் பெற்றது அம்மையார் காலத்தில்தான் எனலாம்.

காரைக்காலம்மையாருக்குப்பின் எழுந்த முழுமையான நூல் திருமந்திரம் ஆகும். (கி.பி. 550க்குப்பின்) சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறும் முதல் நூல் திருமந்திரம் ஆகும். அதுமட்டுமல்லாது யோகம், சக்கரங்கள் என்றெல்லாம் தமிழிலக்கியத்தில் அதற்கு முன்னும் பின்னும் பேசப்படாத செய்திகள் அனைத்தும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற பொது அறத்தை – உலக சமத்துவத்தை – அன்றே வலியுறுத்தியது திருமந்திரம். நடமாடும் கோயில் நம்பற்கு ஈதல் – யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி – என்று மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கோட்பாட்டை முன்னிறுத்தியது திருமந்திரம். ''அன்பே சிவம்'' என்பதே திருமூலர்கண்ட கடவுட் கொள்கை.

அடுத்து தோன்றிய ஞானசம்பந்தப் பெருந்தகை சமண, பௌத்த, வைணவ, வைதிகச் சமயங்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. சமண பௌத்தத்தை நேரிடையாகவும், வைணவத்தை ஏற்று ஆனால் அதேசமயம் சைவசமயத்திற்கு அடுத்தநிலையில் வைத்தும் (திருமாலும் காணமுடியா திருவடி), வைதீகத்தை மறைமுகமாகவும் (வேள்வியே வழிபாடு என்று கருதிய வைதிகர்களிடம் அந்த வேள்விக்குப் பொருளாயிருப்பது திருவைந்தெழுத்தே என்கிறார்) எதிர்த்து ஒரு பேரியக்கமே நடத்துகிறார். ஞான சம்பந்தர் தன் பாடல்களை இசைத் தமிழிலேயே பாடியருளினார். ஊர் ஊராகச் சென்று அந்தத் தலங்களுக்குரிய சிவன் கோயில்களில் சென்று பாடினார்.

சமணரும், பௌத்தரும் துறவுக்கு முதன்மை கொடுத்த காலகட்டத்தில் இல்லற வாழ்க்கையை முறையாக நடத்தினால் வீட்டின்பம் அடையலாம் என்ற கருத்தில் ''மண்ணில் நல்ல வண்ண வாழலாம்'' என்கிறார். வினைக்கோட்பாட்டினைச் சமணர்கள் முன்வைக்க ''அவ்வினைக்கு இவ்வினை'' என்ற வினைக் கோட்பாட்டை இறைக்கோட்பாட்டு முறியடிக்கும் என்று உணர்த்தினார். நாளும் கோளும் பார்த்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் ''வேயுறு தோளி பங்கன்'' துணையிருந்தால் அவையெல்லாம் நல்ல நல்ல என அமைதிப்படுத்தினார். துன்புற்ற மக்களின் துயர்துடைத்தார்; பிணி நீக்கினார்; பசி போக்கினார்; இறந்தவரை உயிர் எழுப்பினார்.

சங்க இலக்கியம் முன்வைக்கும் இயற்கை, காதல், இசை என்ற தமிழ் மரபினைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் முகத்தான் தமிழ் ஞானசம்பந்தர் தனது ஒவ்வொரு பாடலிலும் அந்தந்த தலங்களின் இயற்கையழகினைப் பாடினார். சங்ககாலத் தலைவன் தலைவி காதலுக்குப் புதுப் பரிமாணம் கொடுத்து இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் அமைத்துப் புதிய அகப்பொருள் இலக்கணம் படைத்தார். நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்தார். இதனால் ஞானசம்பந்தர் பாடல்கள் தமிழகமெங்கும் பரவியது.

இதேகாலகட்டத்தில் தோன்றிய மற்றொரு அருளாளர் நாவுக்கரசர் பெருமான். இவரும் ஞானசம்பந்தர் போலவே தலங்கள் தோறும் சென்று பாடி தம் பாடல்கள் மக்களிடையே பரவ வகை செய்தார். இவர் சமணரை எதிர்கொண்ட விதம் முற்றிலும் மாறானது. ஞானசம்பந்தர் நேரிடை எதிர்ப்பு (active resistance) என்றால் அப்பர் பெருமான் சத்தியாக்கிரகம் (passive resistance) மூலமாகத் தனது எதிர்ப்பைக் காட்டினார். யானையால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடறப்படல், நஞ்சு தரப்படுதல், கடலில் எறியப்படுதல், நீற்றறையில் இடப்படுதல் – எனப் பல்லவ மன்னனும் சமணர்களும் அப்பர் பெருமானைக் கொடுமைப்படுத்தி னாலும் எதிர்க்காமல் பொறுத்துக் கொண்டு தனது பக்தியால் மீண்டு வந்தார். இந்தப் புதுவகையான சாத்வீக எதிர்ப்பைக் கண்டு தமிழகமே வியந்தது.

அப்பர் பெருமான் தமது பாடல்களில் சமதர்மக் கருத்துக்களை தூவிச் சென்றுள் ளார். ''அங்கமெலாம் குறைத்தழுகு தொழு நோயரால் ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' என்றார். சாத்திரங்களையும், சடங்குகளையும் கடிந்து பேசினார். ''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்தி ரம் குலம்கொண்டு என்செய்வீர்'' என்று சாடினார். ''கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென் எங்கும் ஈசன் எனாதார்க்கு'' என்று எள்ளி நகையாடினார். செல்வம் பகிர்ந்து கொடுக்கவே என்ற தருமகருத்தா கொள்கையை முன்வைத்தார். ''இரப்பவர் க்கு ஈய வைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்; கரப்பவர் தங்கட்கெல்லாம் கடும் நரகங்கள் வைத்தார்'', அனைத்திற் கும் மேலாக தொண்டு செய்தலை வலி யுறுத்தினார். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்பது தாரக மந்திரமாயிற்று. ''பணி செய்க'' என்று சொன்னதோடு நிற்காமல், தானே உழவாரம் கையில் கொண்டு கோயில் கோயிலாகத் தூய்மை செய்யும் பணியை மேற்கொண்டார். தொண்டின் திருவுருவமாகவே அப்பர் பெருமான் காட்சியளித்தார்.

அடுத்து வந்த சுந்தரமூர்த்தி சுவாமி களுக்கு அப்பர் – சம்பந்தர் போல சமண – பௌத்தர்களை எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை இல்லை. சமண – பௌத்த ஆதிக்கம் பெரிதும் குறைந்து விட்டநிலை. சுந்தரர் பாதை அரசபாட்டை. இறைவனை யே தோழனாகக் கொண்டு அவனோடு ஊடியும், கூடியும்,பாடியும் மகிழ்ந்தார். சுந்தரர் தந்த பெருங்கொடை திருத் தொண்டத்தொகை ஆகும். தமிழ்நாட்டில் வாழ்ந்த சிவனடியார்களை பற்றியெல்லாம் அறிந்து, அவர்களைப் பற்றிய செய்தி களைத் தொகுத்து ''திருத்தொண்டத் தொகை'' வழங்கினார்.

திருத்தொண்டத்தொகை அடியார்கள் இனம், மொழி, நாடு அனைத்தும் கடந்த இறையடியார்களே. அவர்கள் எந்நாட்டவ ராகவும் இருக்கலாம். எச்சமயத்தவராகவும் இருக்கலாம் என்ற அனைத்துலக ஒருமைக் கோட்பாட்டைச் சுந்தரர் முன் வைக்கிறார்.

''அப்பாலும் அடிச்சார்ந்தார்
அடியார்க்கும் அடியேன்''.

மாணிக்கவாசகர் பாடல்கள் தன்னனு பவப்பாடல்கள் ஆகும். படிப்பார் நெஞ்சுருகிப் பாடக்கூடிய பக்திப்பனுவல் கள் ஆகும். பக்திநெறியின் மணிமுடி திருவாசகம் ஆகும். பக்தி இயக்கம் பெண்களைச் சென்றடைந்தால்தான் அனை வரிடமும் சென்று சேரும் என்ற பரமக ருணையோடு பெண்களுக்குரிய விளை யாட்டுக்களான ஊசல், பொற்சுண்ணம், அம்மானை, திருவெம்பாவை ஆகியவற் றில் தமது பாடல்களை அமைத்துப் பாடியருளினார். மணிவாசகப் பெருந்தகை, தமிழ் மரபுக்கே உரிய அகப்பொருளை அடிப்படையாக வைத்து இறைவனை நாயகன் ஆகவும், தன்னை நாயகியாகவும் வைத்து ''திருக்கோவையார்'' என்ற அற்புத நூலையும் வழங்கியருளினார் மணிவாசகப் பெருந்தகை.

ஞானசம்பந்தர் காலம் தொடங்கிச் சேக்கிழார் காலம் வரை (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12-ஆம் நூற் றாண்டு வரை) சைவ சமயத்தின் பொற் காலமாக இருந்தாலும், தமிழர் வாழ்க்கை யில் எந்தவிதக் குறிக்கோளும் இல்லாதது போல உணர்கிறார் சேக்கிழார் பெருமான். தமிழ்ச் சமுதாயத்திற்கு உயர்ந்த குறிக் கோளை முன் வைக்க அடியார்கள் வர லாறுகளை எடுத்துக் கொள்கிறார். தாம் கொண்ட குறிக்கோளுக்காக மனைவி, மக்கள், செல்வம் ஏன் தன்னையே தரக் கூடிய சிவனடியார்களின் வரலாறுகள் சேக்கிழார் நெஞ்சை ஈர்த்தது. அந்த அடியார்களின் வரலாறுகளை இணைத்து ''திருத் தொண்டர் புராணம்'' பாடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடியார்களிடம் இன வேறுபாடு இல்லை (வண்ணார், குயவர், மீனவர் என அனைத்துச் சாதியினரும் உண்டு); தகுதி வேறுபாடு இல்லை. (அரசனும் உண்டு; பணியாளும் உண்டு) ஆண், பெண் வேறுபாடு இல்லை; செல்வன், வறியவன் வேறுபாடு இல்லை. அனைவரும் அடியார்கள்; அனைவர்க்கும் ஒருதன்மைத்தாக வீடுபேறு கிடைக்கிறது. செய்யும் தொழிலிலேயே இறை வழிபாடு செய்யலாம் என்று தொழிலின் மேன்மையை (dignity of labour) பக்தியின் உயர்வைப் புலப்படுத்துகிறார். சடங்குகளை உடைத்து எறிந்து அன்பு நெறியே உயர்வு எனக் கண்ணப்பர் வரலாற்றில் வலியுறுத்துகிறார். குடும்பவாழ்க்கை எப்படி அமைய வேண்டும். நல்லாட்சி எப்படி இருக்க வேண்டும் என்று நாயன்மார் வரலாறுகள் மூலம் உணர்த்துகிறார். இவ்வாறாக வாழ்க்கை இலக்கியமாக – தேசிய இலக்கியமாக – ஒருமைப்பாட்டுப் பெருங்காவியமாகப் – படைத்துத் தந்துள்ளார் சேக்கிழார் பெருமான். உணர்வு ரீதியாக – அன்பின் அடிப்படையில் – பக்தி நெறியில் தமிழகத்தையே திருமுறை இலக்கியம் கட்டிப் போட்டிருந்தது. இக்காலகட்டத்தில் காரண–காரிய வாதமும், தருக்க ரீதியான சிந்தனைகளும் எங்கும் பரவியிருந்தன. இதற்குக் காரணம் பௌத்த சமயக் கொள்கைகள் தருக்கரீதியாக – காரண காரிய அடிப்படையில் அமைந்திருந்தன. இதனை எதிர் கொள்ள சங்கரர் வேதாந்தக் கருத்துக்களைக் காரண காரிய அடிப்படையில் நெறிப்படுத்தி "அத்வைதம்" என்ற சித்தாந்தத்தை நிலை நாட்டினார். இதன் விளைவாகத் தமிழ் நாட்டிலும் மெய்கண்டார் அறிவுரீதியாக – காரண காரியவிளக்கங்களோடு – தருக்க அடிப்படையில் – சைவ சித்தாந்தக் கருத்துக்களை நெறிப்படுத்தி "சிவஞான போதம்" என்ற நூலை வழங்கினார். (கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) இவரை அடியொற்றி அருணந்தி சிவா சாரியார் (சிவஞானசித்தியார்), மன வாசகம் கடந்த நாயனார் (உண்மை விளக்கம்), உமாபதி சிவாசாரியார் (சிவப் பிரகாசம் முதலான எட்டு நூல்கள்) ஆகியோர் சாத்திரங்களை இயற்றினர். இவ்வாறு பதினான்கு மெய்கண்ட சாத்திரம் தோன்றியது. பனிரெண்டே நூற்பாக்களைக் கொண்ட சிவஞான போதம் தமிழ்நாட்டின் சைவசமய வரலாற்றையே திருப்பி விட்டது. சிவஞான போதத்தினை அடியொற்றி மெய்கண்ட சாத்திரநூல்கள், பல ஞான மரபுகள், சைவத் திருமடங்கள் தோற்றம், ஞான மரபினரும், திருமடங்களின் அடியார்களும் இயற்றிய அருள் நூல்கள், சாத்திர உரைகள், மாபாடியம் எனும் பேருரை என்ற அளவில் வளர்ந்து இன்றும் அம்மரபு – அந்த மெய்கண்ட விதை – ஆலமரமாய்ப் பரந்து தமிழகத்திற்கு நிழல் தந்து வருகிறது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மெய்கண்டார்க்குப் பிறகு தமிழ்நாட்டில் பல்வேறு ஞானமரபுகள் எழுந்தன. அம் மரபுகளுள் தலையாயது சீகாழி சிற்றம்பல நாடிகள் மரபு ஆகும். சீகாழி சிற்றம்பல நாடிகள் துகளறு போதம் முதலான சாத்திர நூல்கள் இயற்ற, அவரது சீடர்களும் சாத்திர நூல்கள் பல இயற்றினர். அவர்கள் மூலமாக பல ஞான மரபுகள் கிடைத்தன. இவ்வாறாக திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம், தருமபுர ஆதீனம் முதலான திருமடங்கள் தோன்றுவதற்கும் இம்மரபுகள் வழி வகுத்தன.

பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்ற சைவ மும்மணிகளுள் ஒன்றான கந்தபுராணம் இந்நூற்றாண்டில் எழுந்தது. கந்தபுராணம் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பிய நூல். கந்தபுராண படனம் செய்யாத சைவ இல்லமே தமிழ் நாட்டில் இல்லை எனலாம். அதுவும் இலங்கைத் தமிழரிடையே கந்தபுராணம் பெற்றிருந்த செல்வாக்கு வேறு எந்நூலும் பெறவில்லை எனலாம்.

சடங்குகளை உடைத்தெறியும் சித்தர் மரபும் இந்நூற்றாண்டில் எழுந்தது. அவருள் தலையானவர் சிவவாக்கியர் ஆவார்.

"நட்டகல்லும் பேசுமோ'
நாதன் உள்ளிருக்கையில்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று அகவழிபாட்டின் உயர்வை எடுத்துப் பாடுகிறார் சிவவாக்கியர்.

15-ஆம் நூற்றாண்டில் சாத்திர நூல்களும், உரைகளும் எழுந்தன. கண்ணுடை வள்ளல் வழிவந்த வள்ளல் பரம்பரை என்ற மரபு வழிவந்தோர் பல நூல்கள் இயற்றினார்கள். அகப்பேய்ச்சித்தர், இடைக்காட்டுச்சித்தர், கடுவெளிச்சித்தர் என சித்தர் மரபும் வளர்ந்தது. இந்த நூற்றாண்டின் தலைசிறந்த அருளாளர் அருணகிரியார் ஆவார். இசைத் தமிழில் பல்வேறு சந்தங்களைக் கொண்டு அவர் பாடியருளிய திருப்புகழ் மக்களை பக்தி வெள்ளத்தில் மூழ்கடித்தது.

தத்துவக் கருத்துக்கள் அறிஞர் மத்தியில் தான் செல்வாக்கு பெறும். சாதாரண மக்கள் புரிந்து கொள்ள இடர்ப்படுவர். எனவே சாதாரண மக்களிடையே தத்துவக் கருத்துக்கள் பரவ ஆன்றோர்கள் புராணங்களைப் பயன்படுத்திக் கொண்டனர். பதினாறாம் நூற்றாண்டில் 40 புராணங்கள் எழுந்தன. இவற்றுள் ஐம்பதாயிரம் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இது ஒரு மகத்தான சாதனை எனலாம். இஸ்லாமியர் தாக்கத்தினால் மக்களிடையே எதிர்ப்புணர்ச்சி பரவி தத்தம் ஊர்களில் உள்ள கோயில்களைத் காக்கவும் போற்றவும் வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டனர். புராணங்கள் தோன்ற இதுவும் ஒரு காரணம் ஆகும். வரகுண பாண்டியர், வரதுங்கபாண்டியர், அதிவீர ராம பாண்டியர் என்ற பாண்டிய மன்னர்களே புராணங்களும் தோத்திர நூல்களும் பாடினர். எல்லப்ப நாவலர் பாடிய புராணங்களும், தோத்திரங்களும் இந்த நூற்றாண்டில் தோன்றியவையே. சாத்திர உரைகளும் (11 பேர் உரை எழுதியுள்ளனர்). தோத்திரங்களும், பிரபந்தங்களும் எழுந்தன. திருவாவடுதுறை ஆதீனத்தை நமசிவாய மூர்த்திகளும், தருமபுர ஆதீனத்தைக் குருஞானசம்பந்தரும் நிறுவினார்கள். கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தை மற்று மொரு ''பொற்காலமாக'' ஆய்வறிஞர் மு. அருணாசலம் கூறுவார்.

பதினேழாம் நூற்றாண்டிலும் புராண இலக்கியம் தொடர்ந்தது. இந்த நூற்றாண்டில் 28 புராணங்கள் எழுந்தன. பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கியங்கள் எழுந்த காலம் இதுவெனலாம். புராணங்கள், காவியங்கள் போன்ற பேரிலக்கியங்கள் படிக்கும் தன்மையை – நிதானத்தை மக்கள் இழந்த நிலையில் அவர்களை ஈர்க்க பிள்ளைத்தமிழ், தூது, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்கள் தமிழ்மண்ணில் தவழலாயின. சைவத் திருமடங்களின் சமயப் பணி சிறு சிறு நூல்களாக – இந்த நூற்றாண்டில் வீறு கொண்டு எழுந்தன. இந்நூற்றாண்டில் தோன்றிய குமரகுருபரர் சிற்றிலக்கியங்கள் ஆகப் பல அருந்தமிழ் நூல்கள் இயற்றியதோடு காசி வரைசென்று முகலாய ஆட்சி நடக்கும் கால கட்டத்தில் சைவ மடமும் நிறுவி சைவப்பணி புரிந்தார். ''கற்பனைக் களஞ்சியம்'' எனப் போற்றப்பட்ட சிவப்பிரகாசர் நல்லபல இலக்கியங்களை படைத்ததோடு ''பிரபுலிங்கலீலை'' என்ற மாபெரும் காவியத்தையும் படைத்தார். இந்த நூற்றாண்டின் மணிமுடியாகத் திகழ்பவர் தாயுமானவர். அவர்காலகட்டத்தில் வேதாந்த–சித்தாந்த பிணக்கு இருந்தது. அவ்விரு கோட்பாடுகளுக்கும் சமரசம் காண முனைந்தார் தாயுமானவர். ''வேதாந்த சித்தாந்த சமரச நிர்வாக நிலை'' உருவாக விழைந்தார். அனைத்துச் சமயங்களிலும் இருக்கும் பரம் பொருள் ஒன்றே என உணர்ந்தார். ''வேறுபாடு சமயமெலாம் புகுந்து பார்க்கின் பரம் பொருளே நின் விளையாட்டு'' என்கிறார். காலத்துக்கேற்ற கருத்துக்களை வழங்கி என்றும் உயிர்ப்புடன் இருக்கும் சைவ சமயத்திற்கு மேலும் அழகு சேர்க்கிறார் தாயுமானவர்.

பதினெட்டாம் நூற்றாண்டை ''சிற்றிலக்கிய காலம்'' எனலாம். அந்தாதி(20), கோவை(12), உலா(5), சதகம்(9), பரணி(1), பிள்ளைத்தமிழ்(12), தூது(4), பள்ளு(9) எனக்குவிந்த காலம். எளிய நடையில் மக்களுக்குச் சென்று சேரும் வண்ணம் பாடப்பட்ட நூல்கள் இந்தப்பிரபந்தங்கள். அதுவும் குறவஞ்சி, பள்ளு என்று நாட்டுப்புற மக்களின் மொழியிலேயே சைவ சமயச் செய்திகளை இந்நூல்கள் எடுத்துரைத்தன. குற்றாலக் குறவஞ்சியும், அபிராமி அந்தாதியும், திருச்செந்தூர் பிள்ளைத்தமிழும் பாடி மனங்கசியாத சைவர் இருக்க முடியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணங்களிலும் பதினேழு வெளிவந்தன. சைவத் திருமடங்களின் பணி இந்த நூற்றாண்டிலும் செம்மாந்து காணப் பட்டது. ஆதீன முதல்வர்களும், தலைமைச் சீடர்களும் தோத்திரங்களும், சாத்திரங்களும் எழுதினர். இவர்களுள் தலையாயவர் சிவஞான முனிவர். சிற்றிலக்கியங்கள் பல இயற்றியதோடு, வடமொழி பாஷியங்கள் போல தமிழில் ''சிவஞான மாபாடியம்'' என்ற பேருரையினை வழங்கியுள்ளார். சைவமும்மணிகளுள் ஒன்றான ''திருவிளையாடற்புராணம்'' எழுந்தது இந்த நூற்றாண்டிலேயே ஆகும்.

காரைக்காலம்மையார் தொடங்கி வைத்த சைவ இலக்கிய அருள்வெள்ளம் இடையறவுபடாது ஒவ்வொரு நூற்றாண்டில் அக்கால கட்டத்திற்கு ஏற்ப மக்களை ஈர்க்கும் வண்ணம் அருட்கவிதைகளாக வெளிப்பட்டுப் பதினெட்டாம் நூற்றாண்டில் திருவிளையாடற்புராணம் வரை வந்து நின்றது. இடையறவு படாதது மட்டு மல்லாது சமதர்மநோக்குடனும், உலகளாவிய சிந்தையுடனும், ஒருமைப்பாட்டுணர்வுடனும், அன்பு நெறியுடனும், சடங்குகள் மூடநம்பிக்கைகளைச் சாடும் கருத்துடனும் இன்று வரை உயிர்ப்புடன் கவிதை இலக்கியங்கள் சைவத்தில் எழுந்துள்ளன என்பது கண்கூடு.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VII

தமிழ் அரசர்களும் சைவ சமயமும்

கி.மு. 600 முதல் கி.பி. 320 வரை

இலக்கியம், கல்வெட்டுகள் : தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய கா. சிவத்தம்பி அவர்கள் தொடக்க காலம் தொட்டு கி.பி. 600 வரை ''செந்நெறிக்காலம்'' என்று பொதுத்தலைப்பிட்டுப் பின்னர்

1) கி.பி. 100 முதல் கி.பி. 250 வரை சங்க காலம் அல்லது வீரயுகக் காலம்.
2) கி.பி. 250 முதல் கி.பி. 436/450 வரை மூவேந்தராட்சிச் சிதைவு/நிலமானியக் காலம்.
3) கி.பி. 436/450 முதல் கி.பி. 500/590 வரை களப்பிரர் காலம் அல்லது வணிக மேலாண்மைக்காலம் என்று மூவகையாகப் பிரித்துள்ளார்.

1. சேரர்

தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்களில் சேரர் ஆட்சி மிகத் தொன்மையான ஒன்று. மெகஸ்தனிஸ் சேரர்களை ''சேரமான்கள்'' என அழைக்கின்றார். அசோகனது கல்வெட்டில் ''கேரள புத்திர'' என்று இருக்கிறது. சங்க இலக்கியமாகிய பதிற்றுப்பத்து சேர அரசர்களைப் பற்றிப் பாடுவதற்காக எழுந்த நூலாகும். அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களும் சங்க காலத்தில் ஆட்சி செய்த பல சேர அரசர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

செங்குட்டுவன் : சேர அரசர்களுள் மிக முக்கியமானவன் செங்குட்டுவன் (கி.பி. 125 – 180) ஆவான். இவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பியவன். இவன் சைவன்.

வெஞ்சமக்கூடல் சிவன் கோயில் : புறநானூறு குறிக்கும் சேர அரசனான சேரமான் வஞ்சன் என்பான் கரூருக்கு அருகில் உள்ள 'வெஞ்சமக்கூடல்' என்னும் சிவன் கோயிலைக் கல்லினால் கட்டினான். இது தேவாரப்பாடல் பெற்ற தலம் ஆகும்.[1]

2. சங்ககாலச் சோழர்

தொல்காப்பியத்தில் ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'' என்று மூவேந்தர்கள் பற்றியும், சோழர்குடியின் அடையாளச் சின்னமான அத்திப்பூமாலை பற்றியும் வருகின்றது.

கோச்செங்கணான் : கோச்செங்கணான் (கி.பி. 230 – கி.பி. 255) பற்றி புறநானூறு, பொய்கையாரின் களவழி ஆகிய நூல்களில் வருகின்றன. இவர் பிசிராந்தையாரின் நண்பன் ஆவார். 10, 11-ஆம் நூற்றாண்டைய சோழர் செப்பேடுகளில் காணப்படும் சோழர் கால்வழியில் இவர் பெயர் இடம் பெறுகிறது. திருவாலங்காட்டுச் செப்பேடு, அப்பர் தேவாரம், கோச்செங்கணான் முற்பிறவியில் திருஆனைக்காவில் சிலந்தியாக இருந்து சிவபெருமானை வழிபட்ட கதை பற்றிக் கூறுகின்றன. கலிங்கத்துப்பரணி, 'விக்கிரம சோழன் உலாச் செய்திகள் செப்பேடுகளை ஒட்டி வருகின்றன.[2]

---

1) ''தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம்'' .... தமிழ்நாடு அரசு வெளியீடு ..... 1983.

2) "The Colas" - K.A. Nilakanta Sastri .....1935.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுபது சிவன் கோயில்களைக் கட்டியவர் : கோச்செங்கணான் எழுபது சிவன் கோயில்கள் கட்டியதாகத் திருமங்கைஆழ்வார் கூறுகிறார்.

"இருக்கிலங்கு திருமொழிவாய்
எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து
உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த
கோயில்
திருநறையூர் மணிமாடம்
சேர்மின்களே"

(பெரிய திருமொழி...ஆறாம் பத்து ...பாசுரம் 8)

இந்தப் பாசுரங்களிலும் கோச்செங்கணான் பற்றி வருகின்றது.

பெரிய புராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒரு நாயனாராக கோச்செங்கணான் கருதப்பட்டுப் போற்றப்படுகிறார்.

"கோதைவேலார் கோச்செங்கண்
சோழர்தாம், இக்குவலயத்தில்
ஆதிமூர்த்தி அருளால், முன்
அறிந்து பிறந்து மண் ஆள்வார்,
பூதநாதன் தான் மகிழ்ந்து
பொருந்தும் பெருந்தண்
சிவாலயங்கள்
காதலோடும் பல எடுக்கும்
தொண்டு புரியும் கடன் பூண்டார்"

(பெரிய புராணம் ... கோச்செங்கண் சோழநாயனார் பாடல் 12.)

3. இலங்கை அரசர்கள்

இயக்கர், நாகர், வேடர் ஆகியோர் இலங்கையின் பழங்குடி மக்கள் ஆவர். இலாடநாட்டைச் (குஜராத்) சேர்ந்த விசயன் இலங்கைக்கு வந்து இயக்க நாட்டைக் கைப்பற்றினான். கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் பாண்டியன் மகளை மணந்தான். கி.மு. *483* முதல் கி.மு. *445* வரை ஆண்டான்.

கி.மு. *307*-இல் ஆட்சிக்கு வந்த முட்ட சிவன் சைவன் ஆவான்.

இலங்கையில் தமிழர் ஆட்சி குறிப்பாக பாண்டியர் ஆட்சி மாறிமாறி வந்துள்ளது. கி.மு. *145* முதல் *101* வரை ஆண்ட சோழ நாட்டைச் சேர்ந்த ஏலாரன் சைவன் ஆவான் இவனைப்பற்றி முன்னரே பேசப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் கூறும் கயவாகு கி.பி. *171 – 193*-இல் ஆட்சிபுரிந்தான். கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இலங்கையைச் சேர்ந்த உரோகண நாட்டிற்குப் பாண்டிய நாட்டுத் தமிழர் வந்தபொழுது முருகன் வழிபாட்டையும் கொண்டுவந்தனர். கதிர்காமமலை மேல் முருகனுக்குக் கோயில் கட்டினர். உரோகண நாட்டில் உள்ள இன்னொரு கோயில் அட்டாலயம் ஆகும். இது சிவன் கோயில் அல்லது கொற்றவை கோயிலாக இருக்கலாம். ஏரகாவில்ல என்ற ஊரில் ஒரு சிவன் கோயில் இருந்தது.

தொன்மைக் காலத்திலேயே இலங்கையில் சிவ – முருகன் வழிபாடு இருந்தது தெரிய வருகிறது.[1]

கி.பி. 300 முதல் கி.பி. 575 வரை

கி.பி. 340க்குப்பிறகு தமிழ் நாட்டு வரலாறு பல்லவர்காலம், சோழர்காலம் எனத்திட்டவட்டமாக வரையறுக்க முடிகின்றது.

1) பல்லவர்க்கு முற்பட்ட சைவசமயம் (கி.பி. 300க்கு முன்)
2) முற்காலப் பல்லவர்காலம் (கி.பி. 300 – *600*)
3) பிற்காலப் பல்லவர்காலம் (கி.பி. 600 – *900*)
4) சோழர்காலச் சைவசமயம் (கி.பி. 900 – *1300*)

என்று வரலாற்று ரீதியாகவும், சைவசமய வளர்ச்சி அடிப்படையிலும் மா. இராசமாணிக்கனார் பிரிக்கின்றார். தமிழ் நாட்டு வரலாறு இந்த அடிப்படையில் இங்கு பின்பற்றப்பட்டுள்ளது.

1) "தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம்" .... தமிழ்நாடு அரசு வெளியீடு ..... 1983.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழர் வரலாற்றைத் தமிழ்மக்கள் சிந்தனை அடிப்படையிலே முனைவர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் (''தமிழ் இலக்கியத்தில் காலமும், கருத்தும்'' – 1969) பிரித்திருப்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

(1) இயற்கை நெறிக்காலம்

(2) அறநெறிக்காலம்

(3) சமயநெறிக்காலம்

(4) தத்துவநெறிக்காலம்

(5) அறிவியல் நெறிக்காலம்

என்று ஆ. வேலுப்பிள்ளை பிரிக்கின்றார்.

(1)

சேரர்

களப்பிரர் படையெடுப்பினால் நேர்ந்த குழப்பங்களினால் சேரநாடு தனித்துவிடப் பட்டது. கி.பி. ஐந்தாம் அல்லது கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் நம்பூதிரிகள் கேரளாவிற்குள் நுழைந்தார்கள். கேரளம் அடிக்கடி பல்லவர், பாண்டியர் படையெடுப்பில் சிக்கியது.

(2)

சோழர் – பாண்டியர்

களப்பிரர்களின் ஆளுகையால் கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை சோழர் ஆட்சியும் மங்கிக் கிடந்தது. பாண்டியர்களும் பல்லவர்களும் களப்பிரர்களை ஒடுக்கிய போதும் சோழர்கள் வலு குன்றியே தங்கள் பகுதியில் (உறையூர்) இருந்தனர். சிலர் எல்லை தாண்டி தெலுங்கு, கன்னட நாடுகளுக்குச் சென்ற னர். கடப்பா, கர்நூல், அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரீ நாட்டை ஆண்ட தெலுங்கு சோழர்கள் தங்களை கரிகால் சோழன் பரம்பரை என்று கூறிக்கொள்வார். [1]

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் களப்பிரர் என்ற வேற்று நாட்டார் பாண்டிய அரசனைத் தோற்கடித்து நாட்டை ஆளத் தொடங்கினர். பாண்டியர் ஓரிடத்தில் ஒதுங்கி வசித்து வரலாயினர்.

(3)

களப்பிரர்

இக்காலத்தில் தமிழ்நாட்டில் பெரும் பகுதியை ஆண்டவர்கள் களப்பிரர் என்ற பிரிவினர் ஆவார். ''களப்பிரர்'' யார் என்று அறிவது பெரும் சிரமம். எட்டாம் நூற்றாண்டில் கொடும்பாளூரை ஆண்ட முத்தரையர்களே களப்பிரர் என்பர் சிலர். தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் களப்பாளர் என்ற வேளாள இனத்தைச் சேர்ந்தவர்கள் களப்பிரர் என்பர் சிலர்.

'கள்வர்' என்னும் தமிழ்ப்பெயர், கன்னடத்தில் 'களபடு' என்று மாறும். வடமொழியில் 'களப்ரா' என்றாகும். மீண்டும் தமிழில் 'களப்பிரர்' என உருப்பெறும். இவர்கள் வேங்கடம். காளத்தி முதலிய மலைப்பகுதிகளில் வாழ்ந்த வீர மரபினர்.

பல்லவர் தெற்கு நோக்கி வந்தபொழுது பாதிக்கப்பட்ட களப்பிரர் தொண்டை நாட்டை அடைந்தனர். (கி.பி. 200 – 225). பின்னர் பல்லவர் காஞ்சியைக் கைப்பற்றியதும் சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் புகுந்து, சோழ, பாண்டியரை விரட்டி நாடுகளைக் கைப்பற்றினர். களப்பிரர் சோழ நாட்டை ஆண்ட காலம் கி.பி. 225–575; பாண்டிய நாட்டை ஆண்ட காலம் கி.பி. 250 – 550 இக்காலத்தை ''இருண்ட காலம்'' என்றும் சில வரலாற்று அறிஞர்கள் கூறுவர்.

அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரான கூற்றுவ நாயனார் களப்பிரரே. மற்றொரு நாயனாரான இடங்கழி நாயனாரும் இம்மரபினரே. [2]

1) ''பாண்டியர் வரலாறு'' – டி.வி. சதாசிவ பண்டாரத்தார் ..... 1940.

2) ''சைவ சமய வளர்ச்சி'' – டாக்டர் மா. இராச மாணிக்கனார். ..... 1958.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(4)

முற்காலப் பல்லவர்காலத்தில் சைவ சமயம்

தமிழ்நாட்டில் பௌத்தம் : கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த புத்த தத்தர் என்ற பௌத்த துறவி அங்கு இருந்த பௌத்த விகாரத்தில் தங்கி அபிதம்மாவதாரம் என்ற நூலை எழுதினரா். பல்லவு மன்னர்களுள் இருவரது பெயர்கள் புத்தவர்மன் ஆகும். எனவே அக்கால கட்டத்தில் தமிழ்நாட்டில் பௌத்த சமயம் பரவியிருந்தமை புலனாகும்.

சமணம் : நிக்கந்தம்அல்லது திகம்பர சமணம் என்பதே தமிழகத்தில் இருந்த சமயம் ஆகும். திகம்பர சமண ஆசாரியாரிகள் தென் இந்தியா முழுதும் தங்கள் சமயத்தைப் பரப்பினார்கள். பாண்டிய நாட்டில் சமண சமயம் விரைந்து பரவியது. பதினெண்கிழ்க்கணக்கு நூல்களில் பல சமணர்களால் இயற்றப்பட்டன.

வைணவம் : பல்லவ அரசர்களில் சிலர் விஷ்ணுகோபன், குமார விஷ்ணு, சிம்ம விஷ்ணு என்ற வைணவப் பெயர்களைக் கொண்டிருந்தனர். மேலும் பல்லவ அரசர்கள் தங்களைப் பரமபாகவதர்கள் என்று கூறிக் கொண்டனர். இதனால் இக்காலத்தில் வைணவச்செல்வாக்கு இருந்ததும் தெரியவருகிறது.

சைவப் பெயர்கள் : பல்லவ அரசர்கள் சிலரின் பெயர்கள் சிவஸ்கந்த வர்மன், ஸ்கந்தவர்மன், ஸ்கந்த சிஷ்யன் என்றுள்ளன. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ஸ்கந்த சிஷ்யன் என்ற பல்லவ அரசன் திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குத் தானம் செய்துள்ளான். பல்லவர் பட்டயங்கள் பலவற்றில் நந்தி (எருது) முத்திரை உள்ளது.

க்ஷேத்திர வெண்பா பாடிய ஐயடிகள் காடவர் கோன் : ஐயடிகள் காடவர் கோன் (மூன்றாம் சிம்மவர்மன் – கி.பி. 550 – 575) என்ற பல்லவ மன்னன் க்ஷேத்திர வெண்பா என்ற நூலை இயற்றியுள்ளான். இந்நூல் 24 வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு சிவத்தலத்தைப் பற்றியதாகும். இப்பல்லவனே சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தவன் ஆவான்.

நாயன்மார் : அறுபத்து மூன்று நாயன்மாரில் (1) கோச்செங்கணான் (அரசர் – சிதம்பரம் – இவரது காலத்தில் கருத்து வேறுபாடு உண்டு), (2) சண்டீசர் (பிராமணர் – கும்பகோணத்துக்கு அருகில் உள்ள சேய்ஞலூர்), (3) கண்ணப்ப்ர் (வேடர் – காளத்தி), (4) சாக்கியர் (வேளாளர் – காஞ்சிபுரம்), (5) கணம்புல்லர் (இருக்கு வேளூர்), (5) அமர்நீதியார் (வணிகர் – பழையாறை), (6) அரிவாள் தாயர் (வேளாளர் – திருத்தருப்பூண்டிக்கு அடுத்த கணமங்கலம்), (7) புகழ்த்துணையார் (ஆதிசைவர் – கும்பகோணத்தையடுத்த செருவிலிப்புத்தூர்), (8) எறிபத்தர் (கருவூர்), (9) புகழ்ச்சோழர் (அரசர் – உறையூர்), (10) கூற்றுவநாயனார் (அரசர் – களந்தை), (11) நமிநந்தியடிகள் (பிராமணர் – திருவாரூர்), (12) தண்டியடிகள் (பிராமணர் – திருவாரூர்), (13) மூர்த்திநாயனார் (வணிகர் – மதுரை), (14) காரைக்கால் அம்மையார் (வணிகர் – காரைக்கால்), (15) திருமூலர் (பிராமணச் சிவயோகி – திருவாவடுதுறை) ஆகிய பதினைந்து நாயன்மார் முற்காலப் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்நாயன்மார் பதினைந்து பெருமக்களும் பல்வேறு இனத்தவர் என்பதும் பலதிறப்பட்டவர் என்பதும் தமிழ்நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவருகின்றது. இதிலிருந்து சைவ சமயம் எந்த அளவு பரவியிருந்தது என்பதனை உணரலாம்.

சுந்தரரால் குறிக்கப்படாத – நாயன்மார் அல்லாத நான்கு அடியார்கள் இக்காலத்தவரே, இவர்கள் பாடல்கள் 11-ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

1) **நக்கீர தேவ நாயனார் :** இவர் பாடியன : கயிலைபாதி காளத்திபாதி; திருஈங்கோய்மலை எழுபது; திருவலஞ்சுழி மும்மணிக்கோவை; திருவெழுகூற்றிருக்கை பெருந்தேவபாணி; கோபப்பிரசாதம்;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காரெட்டு; போற்றித்திருக்கலிவெண்பா; திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்பன.

2) **கபில தேவ நாயனார் :** இவர் சிவபெருமான் திரு அந்தாதி, சிவபெருமான் இரட்டைமணிமாலை, மூர்த்திநாயனார் திருவிரட்டை மணிமாலை என்னும் மூன்று நூல்களைப் பாடியவர்.

3) **பரணதேவ நாயனார் :** இவர் பாடியுள்ளது சிவபெருமான் திருவந்தாதி என்னும் ஒரே நூல் ஆகும்.

4) **கல்லாடனார் :** இவர் கண்ணப்பர் திருமறம் என்ற நூலைப்பாடியுள்ளார். மேற்குறிக்கப்பெற்ற அடியார்கள் ஏறத்தாழ 70 சிவன் கோயில்களைப் பாடியுள்ளனர். நாகைக்காரோணத்தில் லகுலீச பாசுபதர் என்ற சைவ சமயப்பிரிவினர் வாழ்ந்திருந்தனர் (''சைவ சமய வளர்ச்சி'' – டாக்டர் மா. இராசமாணிக்கனார்... 1958)

கி.பி. 575 முதல் கி.பி. 900 வரை

1. பாண்டியர்

இக்காலகட்டத்தில் சேர அரசும், சோழ அரசும் வலுகுன்றியிருந்தனர் என முன்னர் பார்த்தோம். பாண்டிய அரசும், பல்லவ அரசுமே களப்பிரர்களை எதிர்த்து ஆட்சிக்கு வந்தனர்.

களப்பிரரை முறியடித்த கடுங்கோன் : பாண்டியன் கடுங்கோன் என்ற அரசனே களப்பிரரை முறியடித்துப் பாண்டி நாட்டை மீட்டான். இவனது காலம் கி.பி 575 – கி.பி. 600. இவனது மகன் மாறவர்மன் அவனி சூளாமணியும் (கி.பி 600 – 625), அதற்குப்பின் அவன் மகன் செழியன் சேந்தனும் (கி.பி. 625– 640) ஆட்சி புரிந்தனர்.

சைவம் பரப்பிய அரிகேசரி : செழியன் சேந்தன் மகன் மாறவர்மன் அரிகேசரியே திருவிளையாடற்புராணம் கூறும் கூன் பாண்டியன் ஆவான். இவன் சமணனாக இருந்து பின்னர் திருஞானசம்பந்தப் பெருமானால் சைவனாக மாறினான். இவனது மனைவியார் மணிமுடிச் சோழனின் புதல்வியாராகிய மங்கையர்க்கரசியார் ஆவார். இவனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு உயர்நிலையை அடைந்தது.

ஆரூரரை வரவேற்ற ரணதீரன் : மாறவர்மன் அரிகேசரி கி.பி. 670-இல் உயிர் துறக்க அவனது மகன் கோச்சடையன் ரணதீரன் அரியணை ஏறினான். இவன் காலத்தில்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் மதுரையில் இவனாலும் இவனது மாமனார் சோழ மன்னனாலும் வரவேற்கப்பட்டு வழி பாடும் செய்யப்பட்டனர்.

சிவபெருமானுக்குப் பொன் வழங்கிய பராங்குசன் : கோச்சடையன் புதல்வன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் கி.பி. 710 முதல் கி.பி. 765 வரை ஆட்சி புரிந்தான். இவன் கொங்கு நாட்டில் படையெடுக்கச் சென்றபொழுது திருப்பாண்டிக்கொடுமுடி திருக்கோயிலுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குப் பொன்னும், மணியும் வழங்கினான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

கி.பி. 765 முதல் கி.பி. 790 வரை ஆட்சி புரிந்த நெடுஞ்சடையன் பராந்தகன் வைணவன் ஆவான். இவனது மகன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியன் இரண்டாண்டுகளே ஆட்சி புரிந்தான்.

பெரிய அன்பின் வரகுணதேவர் : இரண்டாம் இராசசிம்ம பாண்டியனுடைய மகனான வரகுண மகராசன் சோழ மண்டலத்தையும் தொண்டை மண்டலத்தையும் சேர்த்து ஆட்சி புரிந்தான். இவன் கி.பி. 792-இல் முடிசூடி கி.பி. 835-இல் உயிர் நீத்தான். இவன் சிறந்த சிவபக்தன் ஆவான். மணிவாசகப் பெருந்தகை இவனை ''வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்'' என்று திருக்கோவையாரில் குறிப்பிடுகின்றார். நம்பியாண்டார் நம்பியும் போற்றிப் பாடுகின்றார். பட்டினத்தடிகள் தனது திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்

> ''வெள்ளை நீறு மெய்யில் கண்டு
> கள்ளன் கையில் கட்டவிழ்ப்பித்தும்
> ------------------------------------
> ------------------------------------
> பெரிய அன்பின் வரகுணதேவரும்''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று இருபத்திரண்டு வரிகளில் இவனது சிவத்தொண்டைப் போற்றிப்பாடு கின்றார். சிராப்பள்ளி இறைவற்குத் திரு விளக்குகள் எரிப்பதற்கு நிவந்தமாக 125 கழஞ்சு பொன்னும், அம்பாசமுத்திரத்துக் கோயிலுக்கு நாள்வழிபாட்டிற்கு நிவந்த மாக 290 பொற்காசுகளும் வழங்கினான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சீமாறன் சீவல்லபன் : கி.பி. 835-இல் அரியணை ஏறிய சீமாறன் சீவல்லபன் விழிஞத்துப்போரில் சேரனையும், ஈழ நாட்டில் சிங்கள அரசனையும் வென்றான். இவன் பல்லவனுடன் நிகழ்த்திய மூன்று போர்களில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி அடைந்தான். கி.பி. 862-இல் இவன் உயிர் நீத்தான். இவன் ஆட்சியில் இருந்த எட்டி சாத்தான் என்ற அரசியல் அதிகாரி முதலூர், தென் வெளியங்குடி என்னும் ஊர்களில் இரு சிவன் கோயில்கள் அமைத்தான்.

முருகபக்தனாகிய வரகுண வர்மன் : கி.பி. 862-இல் முடி சூடிய வரகுணவர் மனை பல்லவன், சோழன், கங்கன் ஆகிய மூவரும் மண்ணியாற்றங்கரையில் உள்ள திருப்புறம்பயத்தில் எதிர்த்துப் போரிட்டுத் தோற்கடித்தனர். இதனால் சோழ நாட்டில் பாண்டியர் ஆட்சி அழிந்து போயிற்று. இவன் திருச்செந்தூர் முருகனிடம் பேரன்பு பூண்டவன் ஆவான். அக்கோயிலுக்கு ஆண்டொன்றுக்கு 2800 கல நெல் அளந்து வருமாறு ஏற்பாடு செய்தான்.

இவனுக்குப்பின் இவன் தம்பி பராந்தக பாண்டியன் கி.பி. 880-இல் அரியணை ஏறினான். [1]

2. பல்லவர்

சிம்ம விஷ்ணு – (கி.பி. 575 – 615) : பல்லவர் மரபில் இடைக்காலப்பல்லவ னான மூன்றாம் சிம்மவர்மனின் மகன் சிம்மவிஷ்ணு அரியணை ஏறினான். அதே சமயத்தில் இவனது தம்பி பீம வர்மன் வட பகுதியை ஆண்டான். சிம்ம விஷ்ணு கி.பி. 615 வரை ஆண்டிருக்க வேண்டும். களப் பிரர், மழவர், சோழர், பாண்டியர் ஆகி யோரை இவன் வெற்றி கொண்டான். இவன் மகாபலிபுரத்தில் தமிழ்நாட்டிற்கே புதியதான குகைக்கோயிலை மாதிரியாக அமைத்து உருவாக்கி மகிழ்ந்தான். வட நாட்டில் இருந்த பாரவி என்ற வடமொழிப் புலவரைத் தன் அவைக்கு அழைத்து தங்கச் செய்தான்.

மகேந்திர வர்மன் (கி.பி. 615 – 630) : சிம்ம விஷ்ணுவின் மகனான மகேந்திர வர்மன் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் அரியணை ஏறினான். (1) இவனது ஆட்சியில் முற்பகுதியில் சமணமும் பிற் பகுதியில் சைவமும் ஓங்கியிருந்தன. இவன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறி யவன் ஆவான். இவனை மாற்றியவர் அப்பர் பெருமான். (2) இவன் குகைகளைக் கோயில்களாக குடைந்தான். பாறைக ளையும் கோயில்களாக ஆக்கினான். (3) இவன் காலத்தில் உச்சநிலைக்கு வந்த பல்லவ சாளுக்கிய போர் 150 ஆண்டுகாலம் தொடர்ந்து நடந்தது.

புள்ளலூரில் நடந்த போரில் மகேந்திர வர்மன் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியையும், கங்க அரசன் துர்விந்த னையும் தோற்கடித்தான்.

மகேந்திரன் கட்டிய கோயில்கள் : மகேந்திரவர்மன் மாமண்டூர் முதலான ஊர் களில் பெருமாள் கோவில்களும், சித்தன்ன வாசலில் சமணர் கோயிலும் கட்டியுள் ளான். சீய மங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப் பள்ளி என்னும் இடங்களில் இம்மன்னன் சிவன் கோவில்களைக் கட்டியுள்ளான்.

சிவன் கோயில்கள் : சென்னைக்கடுத்த பல்லாவரம் கோயில் இன்று முஸ்லிம் தொழுகை இடமாக மாறியுள்ளது. செங்கற் பட்டிற்கு கிழக்கே திருக்கழுக்குன்றம் போகும் சாலையில் உள்ள வல்லத்தில் கட்டப்பட்டுள்ள சிவன் கோயில் 'வசந்தேசு வரம்' எனப்படும். தென் ஆற்காடு கோட்டத்தில் பேரணி எனும் ஊருக்கு மேற்கே ஐந்து கல் தொலைவில் உள்ள

1) "பாண்டியர் வரலாறு" – டி.வி. சதாசிவ பண்டாரத்தார். ..... 1940.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தளவானூரில் உள்ள கோயில் 'சத்துரு மல்லேஸ்வராலயம்' எனப்படுகிறது. வட ஆற்காடு கோட்டத்தில் வந்தவாசிக் கூற்றத் தில் தேசூருக்கு ஒரு கல் தெற்கே உள்ள சீயமங்கலத்தில் உள்ள கோவில் பல்ல வேஸ்வரம் எனப்படும். திருச்சி மலைக் கோவிலில் கட்டப்பட்டுள்ள சிவன் கோவி லில் உள்ள கங்காதரர் சிலை மிக அழகு வாய்ந்தது.

புதுவைக்கு அடுத்த சின்ன பாழு சமுத் திரத்திற்கு தெற்கே இரண்டு கல் தொலை வில் உள்ள மண்டபப்பட்டில் உள்ள பிரமன், திருமால், சிவன் மூவர்க்கும் உரிய மும்மூர்த்தி கோவிலே மகேந்திர வர்மன் கட்டிய முதல் கோவில் ஆகும். திருவதி கையில் குணபராஈசுவரம் என்ற கோவிலை யும் கட்டினான். பல்லவன் ஈசுவரமும் மயேந்திரப்பள்ளியும் மகேந்திர வர்மன் காலத்தில் கட்டப்படிருக்க வேண்டும் என்பார் இராசமாணிக்கனார். மண்டகப் பட்டில் திரிமூர்த்தி கோவிலும் அமைத் தான்.

மகாபலிபுரத்தில் உள்ள தருமராசர் மண்டபமும், கொடிக்கால் மண்டபமும் மகேந்திரவர்னனால் கட்டப்பட்டவை ஆகும்.

முதன்முதல் தமிழ்நாட்டில் குன்று களைக் குடைந்து குடைவரைக் கோயில்கள் கட்டியவன் மகேந்திரவர்மனே ஆவான். இவன் இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் ஆகிய கலைகளை வளர்த்தான். சித்தன்ன வாசல் கோவில் ஓவியக் கலையின் உன்னதம் ஆகும். மகேந்திர வர்மன் சிறந்த வடமொழிப் புலவன் ஆவான். இவன் மத்த விலாசப் பிரகசனம் என்ற நூலை இயற்றியுள்ளான்.

நரசிம்ம வர்மன் (கி.பி. 630 – 668) : மகேந்த வர்மனின் மகனான நரசிம்ம வர்மனும் தந்தையைப் போலவே பெரு வீரன் ஆவான். சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியுடன் போரிட்டு வெற்றி பெற்றவன். இவனது படைத் தலைவரே நாயன்மாரில் ஒருவரான சிறுத் தொண்டர் எனப்பட்ட பரஞ்சோதியார் ஆவார்.

திருச்சிராப்பள்ளி மலையடியில் தென் மேற்கு மூலையில் உள்ள குகைக் கோவில் இவன் காலத்தது ஆகும்.

நரசிம்ம வர்மனின் புகழைக் காலமெல் லாம் பறைசாற்றுவது மகாபலிபுரச் சிற்பங் கள் ஆகும். மகிடாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம், ஆகிய இம்மூன்றும் நரசிம்ம வர்மனால் கட்டப் பட்டவை ஆகும். மண்டபம் என்பது கோவில். ஒரு காலத்தில் இங்கு சிவலிங்கம் இருந்ததாகச் சொல்வர். ஒற்றைக் கற் கோவில்களாகிய பஞ்சபாண்டவர் தேர் களில் தருமர் தேரும், அர்ச்சுனன் தேரும் சிவன் கோவில்கள் ஆகும்.

பரமேசுவரவர்மன் (கி.பி. 670 – 685) : கி.பி. 670 – 685-இல் ஆட்சி புரிந்த பரமேசு வரவர்மன் சிறந்த சிவபக்தன் ஆவான். பல சிவன் கோவில்களைக் கட்டினான். பல சிவன் கோவில்களைப் புதுப்பித்தான். கூரம் என்ற சிற்றூரில் சிவன் கோவில் ஒன்றைக் கல்லால் கட்டினான். இதுவே தமிழகத்து முதற் கட்டப்பட்ட (குடையப் பட்டது அல்ல) கற்கோவில் ஆகும். இக்கோவிலுக்குப் பரமேசுவர மங்கலம் என்ற சிற்றூரை மானியமாக விட்டான். இப்பொழுது பெரிய சிவன் கோவில்களில் நடக்கும் எல்லா வழிபாடுகளும் இவன் காலத்திலும் நடந்தன என்பதைக் கூரம் பட்டயத்தால் அறியலாம். மகாபலிபுரத் தில் கணேசர் கோவில், இராமநுசர் மண்டபம், தர்மர் தேர் மூன்றாம் அடுக்கு ஆகியன கட்டி முடித்தான். இம்மூன்றும் சிவன் கோவில்கள் ஆகும்.

மாமல்லபுரத்துக் கணேசர் கோவிலில் உள்ள பரமேசுவரன் கல்வெட்டு வாக்கியங் கள் பரமேசுவரனது சமயப்பற்றைக் காட்டும் ''சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை, அவனே முழுமுதற்கடவுள்; பிறப்பிலி; ஸ்ரீநிதி சிவனை உள்ளன்புடன் நினைப்பவன்; சிவனை நினையாதவர் ஆறுமுறை சபிக்கப்பட்டவர் ஆவர்''. ''ஸ்ரீநிதி பிறப்பற்ற சிவனைத்தன் முடி மீது தாங்கியுள்ளான். புகழ்பெற்ற சத்யந்த காமனது மணிமுடியைச் சிவன் இருப்பிட மாகக் கொண்டிருக்கிறான்'' உருத்திராக்கத் தால் ஆன சிவலிங்கத்தை இவ்வரசன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முடியாகத் தரித்திருந்தான் என்று தெரிய வருகின்றது.

இராசசிம்மன் (கி.பி. 685 – 705) : இராச சிம்மன் சிறந்த சிவபக்தன். புகழ்பெற்ற காஞ்சி கயிலாச நாதர் கோவில், ஐராவதேச் சுரர் கோயில், மகாபலிபுரக் கடற்கரையில் இரண்டு சிவன் கோயில்கள், வராகமண்ட பத்து ஒலக்கணேசுவரர் கோயில், பன மலைக் கோவில், மாமல்லபுரத்தை அடுத்த சாளுவன் குப்பத்தில் உள்ள அதிரண சண்டேசுவரர் கோவில், வாயலூர் வியாக்ர புரீசுவர் கோவில் ஆகிய சிவன் கோவில் களைக் கட்டியுள்ளான். ரிஷபலாஞ்சனன், ஸ்ரீசங்கர பக்தன், ஸ்ரீஆகமப்பிரியன், சிவ சூடாமணி என்ற இவனது விருதுப் பெயர்களே இவனது சைவசமயப்பற்றைக் காட்டுகின்றன.

''துஷ்யந்தன் முதலானோர் வான் ஒலி கேட்டதில் வியப்பில்லை. நற்குணம் பறந் தோடிப்போன இக்காலத்தில் அவ்வான் ஒலியை ஸ்ரீபரன் (இராசசிம்மன்) கேட்டது வியப்பே. இச்சிவன் மந்திரத்தைக் (கோவி லைக்) கட்டினான். சிவன் சைவசித்தாந்தப் படி நடப்பவன்; மகாதேவனுக்கு அடிய வன்'' என்று ஒரு கல்வெட்டு (S.I.I. Vol I. Pa. 20) குறிப்பிடுகின்றது. இது பெரிய புராண பூசலார் நாயனார் வரலாற்றுக்கு நல்ல சான்றாகும். திருநின்றவூர் (திண்ண னூர்) கோவில் இவன் காலத்ததே ஆகும்.

கயிலாசநாதர் கோவில் : இராசசிம்மன் கட்டிய கயிலாசநாதர் கோவில் சிற்பக் கருவூலம் ஆகும். வாயிலுக்கு எதிரே உள்ள சிறிய கற்கோவிலில் சிவபெருமானைக் குறிக்கும் பெரிய சிற்பங்கள் உள்ளன. ஒன்று சடை விரித்த சிவபெருமான் உருவம்; சிவபெருமான் எட்டுக்கைகளு டன் 'லதாவ்ரிசிக' நடனம் செய்தல் (இடக் கால் முன்புறம் மடித்து ஊன்றி, வலக்கால் பின்புறம் மடித்து தூக்கி, இடக்கைகளில் ஒன்று தலை முடிக்குமேல் தூக்கிய வண்ணம் நடிக்கும் பொழுதே இடக்கை கள் இரண்டு பந்தை எறிந்து பிடித்தல்) : அழகிய லிங்கங்கள், தக்ஷிணா மூர்த்தி, அம்மையப்பர், சிவபெருமான் யானைக் கை நடனம்.

மதிற் சுவரின் உட்பக்கம் 58 சிறு கோவில்கள் உள்ளன. இவற்றில் பல சிற்பங்கள் உள்ளன. அவை வருமாறு : அம்மையப்பர், பாற்கடல் கடைதல், முப்புரம் எரித்தல், யமனை உதைத்தல், பரமன் – அருச்சுனன் போர், இராவணன் கயிலையைப் பெயர்த்தல், நால்வர்க்கு அறம் உரைத்தல்; திருமால் சிவனை வழிபட்டு ஆழிபெறுதல்; அம்மையப்பர் திருமணம் – எனப் பல்வகையான சிற்பங் கள் இங்கே உள்ளன. இக்கோவிலுக்கு இவன் பெருஞ்செல்வங்கள் கொடுத்தான்.

இராச சிம்மனின் மகனான மகேந்திரன் III என்பான் கயிலாசநாதர் கோவிலில் மகேந்திரவர்மேசுவரம் என்ற ஒரு சிறு கோவிலைக் கட்டியுள்ளான். இராசசிம்மன் மனைவியான ரங்கபதாகை என்பவளும் ஒரு சிறிய சிவன் கோவிலைக் கயிலாச நாதர் கோயிலிற் கட்டினாள். இதனால் கணவன் – மனைவி – மகன் மூவரும் சிவ பக்தர்கள் என்று புலனாகின்றது.

கி.பி. 705 – 710-இல் ஆண்ட இரண்டாம் பரமேசுவரவர்மன் திருவதிகையில் உள்ள சிவன் கோவிலைக் கற்களால் கட்டினான். இவனுடன் சிம்ம விஷ்ணு மரபு முடிந்து விடுகிறது.

புதிய பல்லவ மரபு இரண்டாம் நந்தி வர்மனிலிருந்து (கி.பி. 710 – 775) தொடங்கு கிறது. இவன் சிறந்த வைணவன் ஆவான். இவன் காலத்தில் முக்கிய சிறப்புடைய சிவன் கோவிலில் காஞ்சி – முக்தீசுவரர் கோவில் ஆகும். இவனது மகனான நந்தி வர்மனும் (கி.பி. 775 – 825) வைணவனே. இவன் திருச்சிராப்பள்ளிக் கூற்றத்தில் ஆலம்பாக்கத்தில் கயிலாசநாதர் கோவில் ஒன்று கட்டினான்.

'கழற்சிங்கன் அடியார்க்கும் அடி யேன்' : நந்திவர்மனின் மகன் மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 825 – 850) ஆவான். இவன் தெள்ளாற்றுப்போரில் வெற்றி பெற்றமையால் ''தெள்ளாறு எறிந்த நந்தி வர்மன்'' எனப்பட்டான். இவனைப் பற்றிய நூலே ''நந்திக்கலம்பகம்'' ஆகும். இவன் சேர, சோழ, பாண்டியரை வென்ற வன். இவன் காலத்தில் கடல் வாணிபம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறப்புற்றிருந்தது. இவன் காலத்தில் சையாமில் ஒரு தமிழ் வாணிகன் குளம் ஒன்று வெட்டி அக்குளத்திற்கு தன் பட்டப் பெயரான அவனி நாராயணன் குளம் என்று சூட்டினான். நந்திக்கலம் பகத்தில் இவன் ''கழல் நந்தி'' என்றும் ''பல்லவர்கோன் அரி'' என்றும் கூறப்படு கிறான். ''அரி'' என்றால் சிங்கம் எனவே மூன்றாம் நந்திவர்மன்'' ''கழல் சிங்கன்'' என்பது தெளிவாகும்.

''கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற
பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன்
அடியார்க்கும் அடியேன்''

என்று திருத்தொண்டத்தொகை போற் றும் அறுபத்து மூன்று நாயன்மாரில் இவர் திகழ்கிறார்.

நந்திவர்மனின் சைவப்பணிகள் : இப் பெருவேந்தன் சிற்றூர்களைத் தேவதான மாக விடுத்தான். திருக்காட்டுப்பள்ளியில் உள்ள சிவபெருமான் கோவிலுக்கு ஒரு சிற்றூர் விடுதல்; திருநாகேச்சுரத்தைத் தன் பெயரால் 'குமார மார்த்தாண்டபுரம்' என்ற ழைத்துத் தானமாக விடுதல்; திரு விடை மருதூர் கோவில் திருப்பணி; நந்தி வர்மனின் மனைவியான மாறம் பாவை யார் தஞ்சையை அடுத்த நியமம் சிவன் கோவிலுக்குத் திருவமுது செய்ய நெல், பால், பொன் அளித்தல்.

நந்திவர்மன் அல்லாது இவன் காலத்தில் சிற்றரசரும் பிறரும் பல பல தானங்கள் தந்துள்ளனர். திருநெய்த்தானம், சிவன் கோவிலில் நந்தாவிளக்குக்காகப் பொன் அளித்தல்; செந்தலை – சுந்தரேசுவரர் கோவிலுக்கு நிலமளித்தல்; திருவல்லம் கோவிலுக்கு மூன்று சிற்றூர்கள் தேவதான மாக விடப்படுதல்; அங்கு திருப்பதிகம் ஓதுவார் உள்ளிட்ட பணி செய்வார்க்கு 2000 காடி நெல்லும் 20 கழஞ்சு பொன்னும் கொடுத் தல்; திருப்பராய்த்துறை கோவில் விளக் கெரிய பொன் தரல்; குடிமல்லம் பரசு ராமேசுவரர்க்கு நந்தாவிளக்குக்கு நிலமளித்தல்.

இப்பேரரசனை நந்திக் கலம்பகம் ''சிவனை முழுதும் மறவாத சிந்தையன்'' என்று கூறியதில் வியப்பு இருக்க முடியாது.

மூன்றாம் நந்திவர்மனின் மகன் நிருப துங்க வர்மன் (கி.பி. 850 – 882) ஆவான். இவன் முதுமை அடைந்தமையால் இவனது இறுதிக் காலத்தில் இவனது மகன் அபராசிதனே ஆண்டுவந்தான்.

நிருபதுங்கவர்மன் காலத்தில் முத்தரையன் ஒருவன் நார்த்தா மலையில் சிவன் கோவிலைக் குடைவித்தான். காடவன் மாதேவியார் என்பவர் திருவாலங்காட்டுக் கோவிலில் விளக்கெரிக்க 108 கழஞ்சு பொன்னும், கணப்பெருமக்கள் பரமேசுவர மங்கலத்துச் சிவன் கோவில் பூசைக்காக 11 கழஞ்சுபொன்னும், தனிமனிதன் ஒருவனால் திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோவிலுக்கு விளக்கெரிக்க 12 கழஞ்சு பொன்னும், மாறம்பாவையால் திருச் சன்னப்பூண்டிச் சிவன் கோவிலுக்குப் பொன்னும், கண்டியூர், திருத்தவத்துறை, அதிகை, திருக்கோடிகா, திருப்புலிவலம் கோவில்கட்குப் பொன்னும், நிருபதுங்க வர்மனின் மனைவியருள் ஒருத்தியான வரமஹாதேவி என்பவள் திருக்கோடிக் காவில் உள்ள சிவன் கோவிலில் துலா பாரம் புகுந்து அக்கோவிலுக்கு ஒரு பகுதிப் பொன்னும், அச்சிறுபாக்கம் சிவன் கோவிலுக்கு நிலமும் வழங்கினர். இவனது ஆட்சி முடிவிலேயே பல்லவப் பேரரசு சோழரிடம் வந்து விட்டது. அபராசிதன் ஆட்சியோடு பல்லவப் பேரரசு முடிவுற்றது.[1]

கி.பி. 900 முதல்
கி.பி. 1300 வரை

(1)

சோழர்

சோழப்பேரரசு விதையிடப்படல் : சோழர் பேரரசை நிறுவ முதலில் அடி கோலியவன் விசயாலயன் என்னும் சோழ

1) ''பல்லவர் வரலாறு'' – மா. இராசமாணிக்கனார். ..... 1944.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மன்னனே ஆவான். இவன் கடைச்சங்க காலச் சோழ அரசர்களின் வழியில் தோன்றியவன். கி.பி. 846-இல் பழையாறை நகரிலிருந்த விசயாலய சோழன் (கி.பி. 846 – 881) முத்தரையர் மரபினனான ஒரு குறு நில மன்னனைத் தாக்கி அவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்த தஞ்சை மாநகரைக் கைப்பற்றிக் கொண்டான்.

சோழப்பேரரசு தோன்றல் : விசயாலயன் புதல்வனாகிய முதல் ஆதித்த சோழன் (கி.பி. 871 – 907) பல்லவ, கங்க அரசர்களோடு சேர்ந்து திருப்புறம்பயத்தில் வரகுண பாண்டியனை எதிர்த்துப் போரிட்டு வென்றான். ஆதித்த சோழனுக்குப் போரில் உதவி புரிந்த பல்லவ மன்னனான அபராஜித வர்மன் அதுவரை தன் ஆளுகை யில் இருந்த சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆதித்த சோழனிடம் விட்டுவிட்டுச் சென்றான். திருப்புறம்பயத்தில் நடைபெற்ற பெரும் போரால் கி.பி. 880-இல் சோழர் பேரரசு தோன்றியது.

சிவாலயங்கள் கற்றளிகளாக மாறின : சோழர்க்கு முன்னர் அரசாண்ட பல்லவ அரசர் காலங்களில் சில கோவில்களே கற்றளிகளாக அமைக்கப் பெற்றன. பல செங்கற் கோவில்களாகவே இருந்தன. இவ்வாதித்த சோழன் காவிரியாற்றின் இரு மருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான். இவற்றுள் முதன்மையானது திருப்புறம்பயத்தில் உள்ள கோவில் ஆகும். இவனே திரு எறும்பியூர்க் கோவிலும் வேறுசில கோவில்களும் எடுப்பித்திருக்க வேண்டும். இவனுடைய மனைவியர் கோவில்களில் நுந்தா விளக்குகள் வைத்து அவற்றிற்கு நிவந்தமாகப் பொன்னும் கொடுத்துள்ளனர்.

இவன் காலத்தில் தான் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். இவன் காலத்திலோ இவனது மகன் முதற்பராந்தகன் காலத்திலோதான் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்தார். இராசராச சோழன் காலத்தில் அன்று என க. வெள்ளைவாரணனார் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

சோழப்பேரரசு புகழ் குறைதல் : முதற் பராந்தக சோழன் (கி.பி. 907 – 953) காலத்தில் இராஷ்டிர கூடப்படையும் கங்கப் படையும் ஒருங்கு சேர்ந்து சோழ இராச்சியத்தின் வட பகுதியிலிருந்த தொண்டை நாட்டைத் தாக்கின. தக்கோலத்தில் நடந்த இப்போரில் இராஷ்டிரகூடப் படைகள் வெற்றி எய்தின. இதனால் சோழப் பேரரசு தொண்டை நாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் இழந்து சோழநாட்டை மட்டும் தன் ஆளுகையில் வைத்திருந்தது. இப்போரினால் சோழப்பேரரசு சிறிது வீழ்ச்சி அடைந்தது.

தில்லைச்சிற்றம்பலம் பொன்னம்பலமாதல் : பராந்தகன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்து அதனை உண்மையிலேயே பொன்னம்பலம் ஆக்கினான். இவ்வேந்தன் ஆட்சிக்காலத்தில் திருவிடைமருதூர், திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோவில்கள் கற்றளிகளாக ஆக்கப்பட்டன. பராந்தகன் மூத்த மகனான இராஜாதித்தன் சுந்தரர் பிறந்த திருநாவலூரில் ஒரு புதிய கோவிலைக் கட்டினான். அதற்கு அவன் தாயாரும் அரசாங்க அலுவலரும் நிபந்தங்கள் விடுத்தனர்.

திருப்பதிகம் பாடிய கண்டராதித்தன் : கண்டராதித்த சோழன் காலத்தில் (கி.பி. 950 – 957) சோழ நாடு மாத்திரம் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவன் சிவபெருமான் மேல்பாடிய திருப்பதிகம் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. திருப்பழனத்தில் உள்ள சிவன் கோவில் இவன் காலத்தது ஆகும். இவனது மனைவியார் செம்பியன் மாதேவி சிறந்த சிவபக்தர். பல திருப்பணிகள் செய்துள்ளார். கண்டராதித்தனுக்குப் பிறகு அவனது தம்பி அரிஞ்சய சோழன் ஒரு சில திங்களில் இறந்து விட்டான்.

மகனை இழந்த சுந்தர சோழன் : இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழன் (கி.பி. 957 – 970) பாண்டியனோடு போர் புரிந்து வெற்றி பெற்றான். தொண்டை நாடும் இவன் வசம் இருந்திருக்கின்றது. இவனது மூத்த மகன் ஆதித்த கரிகாலன் வஞ்சகர்களால் கொல்லப்பட்டான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எங்கும் 'அர' ஒலி : சுந்தர சோழன் ஆளுகையில் துன்பத்தால் 'ஆ' என்று ஓலமிட்டு அரற்றியவர் எவரும்இலர். 'அர' என்ற ஒலிதான் எங்கும் கேட்டது.

செம்பியன் மாதேவியின் திருப்பணிகள் : உத்தம சோழன் (கி.பி. 970 – 985) அரசியல் அதிகாரி திருவிசயமங்கை என்ற சிவன் கோவிலை கற்றளியாக்கி நிவந்தங்களும் அளித்தான்.

இவனது அன்னையார் செம்பியன் மாதேவி செங்கற்கோவில்களைக் கற்றளிக ளாக எடுப்பித்தும், பல கோவில்களுக்கு நிவந்தங்கள் விட்டும், அணிகலன்கள் அளித்தும், பொன்னாலும் வெள்ளியாலும் பல்வகைக் கலங்கள் செய்து கொடுத்தும் புரிந்துள்ள அறங்கள் பலவாம்.

இவ்வம்மையார் கற்றளிகளாக எடுப் பித்த சிவாலயங்கள் வருமாறு : கோனேரி ராசபுரம் எனப்படும் திருநல்லம், விருத்தா சலம், திருக்கோடிகா, தென்குரங்காடு துறை, செம்பியன்மாதேவி, திருவாரூர் அரநெறி, திருத்துருத்தி, ஆ நாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை ஆகியன.

இவரால் நிலதானமும், பொன் வெள்ளிப் பாத்திரங்களும், நகைகளும், விளக்குத்தானமும் பெற்ற கோவில்கள் வருமாறு : திருமணஞ்சேரி, ஐயாறு, திருச் சேய்ஞலூர், முதுகுன்றம், ஒத்தூர், தலைச் சங்காடு, நறையூர், ஆரூர், செம்பியன் மாதேவி, திருப்புறம்பயம், திருவெண் காடு, வட குரங்காடுதுறை, தென்னேரி, திருக்களித்திட்டை, திருமங்கலம், தவத் துறை, பந்தணைநல்லூர் திருவிளக்குடி, திருவியலூர், வடதிருமுல்லைவாயில், திருநாகேச்சுரம், கற்குடி, உடையார்குடி.

விரிவடைந்த சோழப்பேரரசு : கி.பி. 988-இல் முதல் இராசராசசோழன் (கி.பி. 985 – 1014) காந்தளூர்ப் போரிலே சேரனை யும், பாண்டியனையும் புறங்கண்டு வாகை சூடினான். அதன் பின் இராசராச சோழ னால் கங்க பாடியும், நுளம்பபாடியும் கைப்பற்றப்பட்டன. அடுத்து ஈழம் கைப் பற்றப்பட்டது. மேலைச்சாளுக்கிய மன்ன னாகிய சத்தியாசிரனுடன் போரிட்டு அவனையும் வென்றான். வேங்கைநாடும், கலிங்கமும் இவன் வசமாயின.

சிவபாத சேகரன் : இராசராசன் தஞ்சாவூ ரில் மாபெருங்கோவில் ஒன்றை எடுப்பித்து அதற்கு இராசராசேச்சுரம் என்று பெயரிட்டு நாள் வழிபாட்டிற்கும் விழாக்களுக்கும் நிவந்தங்கள் வழங்கிச் சிறப்பித்துள்ளான். கி.பி. 1010-இல் இக்கோயிலுக்குக் குட முழுக்கு நடந்திருக்க வேண்டும். ஈழ நாட்டில் பொலன்னருவாவில் உள்ள கற்றளியினால் ஆன சிவாலயம் இவனால் கட்டப்பட்டிருக்க வேண்டும். சிவபெரு மானிடத்தில் இவன் கொண்ட பக்தி யினைப் பாராட்டி ''சிவபாதசேகரன்'' என்றே அழைக்கப்பட்டான். இவன் காலத் தில் திருப்பதிகங்கள் ஓத 48 பேர் பல கோவில்களிலிருந்து குடியேற்றப்பட்டனர்.

உறவினர் திருப்பணிகள் : இவன் எடுப் பித்த கோவிலுக்கு இவன் மனைவிமார்கள் நிவந்தங்கள் பல அளித்துள்ளார்கள். இவனது பட்டத்தரசியான உலோக மாதேவி திருவையாற்றில் ஐயாறப்பரது கோவிலின் வடக்குத் திருச்சுற்றில் உலோகமாதேவிச்சுரம் எனும் கோவில் எடுப்பித்து நிவந்தங்கள் அளித்துள்ளாள். இவன் காலம்வரை வாழ்ந்த (கி.பி. 1001) இவனது பாட்டியார் செம்பியன் மாதேவி செய்த திருப்பணிகள் பலவாம்.

அரசு அதிகாரிகள் திருப்பணிகள் : ஈழ மண்டலத்தில் மாதோட்டம் என்னும் ஊரில் சோணாட்டுத்தலைவன் ஒருவன் இராசரா சேச்சுவரம் என்னும் சிவாலயம் எடுப்பித்தான். இராசராசனுடைய படைத் தலைவன் மும்முடி சோழ பிரமராயன் தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்று மாளிகையை எடுப்பித்தான். பெருந்தரத்து அதிகாரி ஒருவன் இதே கோவிலில் சண்டேசுவரரை எழுந்தருளி வித்தும் திருவல்லம், மேற்பாடி என்னும் ஊர்களில் உள்ள திருக்கோவில் களுக்கும் நிவந்தங்கள் வழங்கியும் சிவப் பணி செய்துள்ளான். இராசராச சோழனது உள்நாடுகளுள் ஒன்றாகிய பொய்கை நாட்டின் தலைவனான தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சை பெரிய கோவி லில் நாயன்மாருக்குச் செப்புபடிமங்கள் எழுந்தருளிவித்தான். அது மட்டுமல்லாது திருச்சோற்றுத்துறைக் கோவிலில் நாள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோறும் தேவாரம் பாடுவோர்க்கு நிவந்தமாகப் பொன் அளித்துள்ளான்.

கங்கை கொண்டான் கடாரம் கொண்டான் : முதல் இராசேந்திர சோழன் இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக்கடக்கம் என்பவற்றை வென்று தன் அடிப்படுத்தி இருக்கிறான். ஈழப் போரினால் ஈழநாடு முழுவதும் இவன் ஆட்சிக்கு உட்பட்டு விட்டது. சேர நாட்டின் மேல் படையெடுத்து அந்நாட்டரசர்க்கு வழி வழி உரிமை உடையனவாய் இருந்த முடியையும் மாலையையும் கைப்பற்றிக் கொண்டான். பாண்டியனையும் வென்று தன் மகன் சோழ பாண்டியன் அந்நாட்டை ஆண்டு வருமாறு செய் தான். வட நாட்டுப் படை எழுச்சியில் சக்கரக் கோட்டமும், தண்டபுத்தியும், தக்கணலாடமும் வங்காள தேசமும் உத்திராடமும் இராசேந்திரன் படைத் தலைவனால் கைப்பற்றப்பட்டன. கடாரத்து அரசன் (மலேசியாவில் 'கெடா' நகரம்) சங்கிராம விசயோத்துங்கவர்மனையும் போரில் வென்றான். கடாரம் என்பது மலேசியாவிலும் சுமத்ராவிலும் உள்ள அல்லது சூழ்ந்துள்ள நாடுகளும் ஊர்களும் ஆகும். இவ்விரு வெற்றிகளால் இவன் "கங்கை கொண்ட சோழன்", "கடாரம் கொண்டான்" என்று அழைக்கப்பட்டான். தன் இறுதிக்காலத்தில் மேலைச் சாளுக்கியருடன் போரிட்டு அவரையும் வென்றான். (கி.பி. 1012 – 1044).

கங்கை கொண்ட சோழேச்சுரம் : இராசேந்திர சோழன் கங்கைக் கரையிலிருந்து பல சைவர்களை அழைத்து வந்து காஞ்சியிலும் சோழ நாட்டிலும் குடியேற்றினான். இவன் புதியதாகத் தலைநகரம் அமைத்து அதற்குக் கங்கை கொண்ட சோழபுரம் என்ற பெயரும் சூட்டினான். கங்கை கொண்ட சோழேச்சுரம் என்னும் கோயிலையும் எழுப்பி நிவந்தங்களும் வழங்கினான்.

போரில் உயிர் துறந்த முதல் இராசாதிராசன் : முதல் இராசாதிராசசோழன் பாண்டியர் மூவரையும் வேணாட்டு அரசனையும் இராம குட மூவரையும் போரில் தோற்கடித்தான். விக்கிரம பாண்டியன் என்னும் இலங்கை அரசனை போரில் வென்றான். ஈழத்தரசனாகிய சீவல்லபன் மதனராசன் என்பவனையும் வென்றான். மேலைச்சாளுக்கியரோடு பலமுறை போரிட்டு வென்றான். இறுதிப் போரில் பகைவர் அம்பிற்கு இலக்காகி விண்ணுலகு எய்தினான். (1018 – 1054). இராசாதிராசன் மன்னார்குடியில் ஜயங்கொண்ட சோழேசுவரத்தையும் இராஜராஜேசுவரத்தையும் கட்டினான். குடந்தைக் காரோணம் என்ற கோவிலைப் புதுப்பித்தான்.

தமையன் போரில் இறக்க படையை நடத்தி வென்றவன் : இரண்டாம் இராசேந்திர சோழன் தன் தமையன் மேலைச்சாளுக்கியன் ஆகவமல்லனோடு போர் புரிகையில் உயிர் துறக்க இவன் போர்க்களத்திற்குச் சென்று படையை அமைதிப்படுத்தி அஞ்சா நெஞ்சத்தோடு பெருவீரங்காட்டிப் போர் புரிந்து வென்றான். தன் ஆட்சிக் காலத்தில் ஈழத்தை வென்றான். மேலைச்சாளுக்கியப் போரிலும் வாகை சூடினான் (கி.பி. 1051 – 1063).

பொன்னார் மேனியன் : இராசேந்திரனின் படைத்தலைவனான இராச ராச அணிமுரி நாடாழ்வான் திருமழபாடிக் கோயிலில் பொன்னார் மேனியர் திருவுருவம் ஒன்று செம்பினால் எழுந்தருளிவித்து நிவந்தமாக நிலமும் பல அணிகலன்களும் அளித்துள் ளான். இராசேந்திரனின் அரசியல் அதிகாரி யான செம்பியன் மூவேந்த வேளான் திருவாரூர்க்கோயிலில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம் முதலானவற்றைப் பொன் வேய்ந்து புகழ் எய்தினான்.

பேராற்றல் மிக்க வீர ராசேந்திரன் : வீர ராசேந்திரன் மேலைச்சாளுக்கிய மன்னனாகிய ஆகவ மல்லனை ஐந்து முறை வென்று இருக்க வேண்டும். ஈழ மன்னன் விசயபாகுவுடன் போர் புரிந்து ஈழத்தைத் தன் ஆட்சிக்குக் கொண்டு வந்தான். (கி.பி. 1063 – 1070)

திருவொற்றியூர் கோயில் கற்றளியாதல் : தில்லையம்பதியில் நடராசப் பெருமானுக்குத் திரைலோக்கியசாரம் என்ற சிறந்த மணிமுடியொன்று அளித்தனன். இவனது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரசியல் அதிகாரிகளுள் ஒருவனான இரா சேந்திர மூவேந்த வேளான் திருவொற்றியூர் படம் பக்க நாதர் கோயிலைக் கற்றளியாக எடுப்பித்தான்.

சில திங்களே ஆண்ட அதிராசேந்திரன் : அதிராசேந்திரன் பட்டமேற்ற சில தினங் களிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தான் (கி.பி. 1070), இவன் ஆட்சிக்காலத்திய அரசியல் தலைவர்களான இராசராசேந்திர மூவேந்த வேளானும், சேனாபதி இருக்கு வேளும் கோவில்களுக்கு நிவந்தமும் சிவ னடியார்க்கு உணவளிக்க இறையிலியாக நிலமும் அளித்துள்ளனர்.

கலிங்கத்துப்பரணி பெற்றான் : இத்து டன் சோழ பரம்பரை தந்தை மகன் என்ற வழிவழி வந்த மரபு நின்று போய்விட்டது. தாய்வழி முறையில் கீழைச்சாளுக்கிய மரபினான முதற்குலோத்துங்கன் அரி யணை ஏறினான். இவன் ஆட்சியில் உள் நாட்டுக்குழப்பம் குறைந்தது. வேங்கி நாடும் இவனுக்கு உரியது ஆனமையால் மேலைச்சாளுக்கியராலும் போர் தொடுக்க இயலவில்லை. இவன் காலத்திலும் இதற்குப் பின்னரும் நூறு ஆண்டுகள் வரை சோழ நாடு அமைதியுடன் இருந்து வர லாயிற்று. இவன் மேலைச்சாளுக்கியரோடு போரிட்டு வென்றான். பாண்டியருடன் ஏற்பட்ட போரில் பாண்டியர் ஐவரை வென்றான். சேர மன்னனையும் வென்று கலிங்கப்போரிலும் இரு முறை வென் றான். அவ்வெற்றியைப் பாராட்டி செயங் கொண்டார் என்ற புலவர் கலிங்கத்துப் பரணி என்ற நூலை இயற்றினார். ஈழ நாட்டை மட்டும் இவன் இழக்கும்படியாக நேர்ந்தது. தனது ஆட்சியின் இறுதியில் கங்கபாடி நாட்டையும் வேங்கி நாட்டை யும் இழந்தான். தன் நாட்டில் சுங்கம் வாங்குவதை நிறுத்தினான். (கி.பி. 1070 – 1120)

அரசு அதிகாரிகளின் சைவப்பணி : இவன் சிவபெருமானிடத்தில் காட்டிய அன்பின் காரணமாகத் திருநீற்றுச் சோழன் என்று அழைக்கப்பட்டான். இவனது படைத் தலைவனாயிருந்த காலிங்கராயன் என்பான் தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லையில் சேர்த்து வைத்தான். மற்றொரு படைத் தலைவனான இலங்கேசுவரன் மேலப்பழு வூரில் இருந்த செங்கற்கோயிலைக் கற்றளி யாக அமைத்து இறையிலி நிலங்களும் வழங்கினான். கருணாகரத் தொண்டை மான் என்ற படைத்தலைவனைப் பற்றிக் கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கும். தகடூர் அதிகமான் இவன் காலத்திய குறுநில மன்னன் ஆவான். சீயகங்கன் என்ற குறுநில மன்னன் வாழைத் தோட்டம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலுக்கு இறை யிலி நிலம் அளித்துள்ளான்.[1]

(2)

பாண்டியர்

இராசசிம்ம பாண்டியன் : கி.பி. 900-இல் சடையவர்மன் பராந்தகனுடைய புதல்வ னான மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் அரியணை ஏறினான். இவனுக்கும் முதற் பராந்தக சோழனுக்கும் அடிக்கடி போர் நடைபெற்றது பலமுறை தோற்றுப் போனான். பாண்டி நாடு சோழ அரசனின் ஆளுகைக்கு வந்தது.

வீர பாண்டியன் : இவனது மகன் வீர பாண்டியன் கி.பி. 946 முதல் கி.பி. 966 வரை பாண்டி நாட்டை அரசாண்டான். சோழ மன்னனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினான். கி.பி. 966-இல் நடந்த போரில் சுந்தர சோழன் மகன் ஆதித்தகரி காலனால் கொல்லப்பட்டான்.

வலுகுறைந்த பாண்டியர்கள் : இவனுக்குப் பின்னர் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த பாண்டியர் கள் சோழர்களுக்குத்திறை செலுத்தி வந்த னர். கி.பி. 1190 வரை பல பாண்டியர்கள் சோழர் ஆட்சிக்கு உட்பட்டும், ஒரு சிலர் மட்டும் வலுவற்ற சோழ அரசர் பிடியி லிருந்து நீங்கியும் ஆண்டுவந்தனர்.

1) "பிற்காலச் சோழர் வரலாறு" – டி.வி. சதாசிவப் பண்டாரத்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டியர் ஆட்சி வலுக்குறைந்தாலும், சமயப்பணிகள் மட்டும் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன. கி.பி. 1054-இல் சீவல்லபப்பாண்டியனின் பட்டத்தரசி கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திரு வியலூர்க் கோவிலுக்குப்பல அணிகலன் கள் வழங்கியிருக்கிறார்.

கி.பி. 1162 முதல் 1175 வரை ஆட்சி செய்த சடையவர்மன் குலசேகர பாண்டி யன் திருவிளையாடற்புராணத்தில் குறிக்கப் பட்டவனாக இருக்க வேண்டும் எனக்கருது கிறார் ஆய்வறிஞர் ஜே.எம். சோமசுந்தரம். இவன் மதுரைத் திருக்கோவிலில் பல திருப்பணிகள் செய்துள்ளான். மதுரைத் திருவாலவாயுடையார் கோவிலில் உள்ள சுவாமி கோவில் அர்த்த மண்டபம், மணிமண்டபம், மகாமண்டபம், ஆறுகால் பீடம், சந்நிதி கோபுரம், மூலப் பிராகாரத் திருமதில், சூழப்பத்தி, நாயகர் கோவில், சூரியாதி சண்டேசுர தேவதையர், பிராகாரத் திருமதில், அம்மன் கோவில் ஆகியவை இவன் திருப்பணிகள் ஆகும்.

மதுரை மீனாட்சியம்மனுக்குத் தனிக் கோவில் அமைத்தவன் இக்குலசேகர பாண்டியனே (திருவிளையாடற்புராணம் : திருநகரம் கண்ட படலம் : 37 – 40 பாடல்கள்)

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டி யன் : முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி.பி. 1190-இல் அரியணை ஏறினான். மூன்றாம் குலோத்துங்க சோழனு டன் போரிட்டுத் தோற்றுப்போனான். சிலகாலம் கழித்து சோழன் பாண்டிய நாட்டை இவனுக்கே கொடுத்துவிட்டான். கி.பி. 1218-இல் இவன் இறந்து விட்டான். இம்மன்னன் தன் ஆட்சிக்காலத்தில் திருப் பூவணத்து இறைவர்க்குத் தேவதானம் கொடுத்தான்.

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் : இவன் கி.பி. 1216 முதல் கி.பி. 1238 வரை ஆட்சிபுரிந்தான். கி.பி. 1219-இல் சோழ நாட்டின் மேல் படையெடுத்து மூன்றாம் இராசராசசோழனை வென்றான். கி.பி. 1231-இல் மீண்டும் அதே சோழ மன்ன னுடன் போரிட்டு வென்றான்.

இம்மன்னன் மதுரைத் திருக்கோவில் சுவாமி சந்நிதி, அம்மன் கோவில் சுந்தர பாண்டிய மண்டபம், சுவாமி கோவில் சுந்தரமாறன் திருமதில், மேலமாசிவீதியில் உள்ள இம்மையில் நன்மை தருவார் கோவில் – ஆகியன கட்டியுள்ளான்.

250 அடி நீளமும் 156 அடி அகலமுமாய் கபாலி மதிலளவில் சொக்கநாதர் கோவில் இருந்தது. கபாலி மதிலைச்சுற்றி 430 அடி நீளமும் 310 அடி அகலமும் உடைய இரண் டாம் பிராகாரம் அமைத்து நான்குபுறமும் திருமதில்களை அமைத்தான். இதுவே சுந்தரமாறன் திருமதில் என்று வழங்கப் படுகிறது. திருநெல்வேலி கல்வெட்டில் இம்மன்னன் அளித்த இறையிலியும் நிபந்தங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்குப்பின் இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனும், இரண்டாம் மாற வர்மன் சுந்தரபாண்டியனும் அடுத்தடுத்து அரியணை ஏறினர்.

இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டி யன் காலத்தில் (கி.பி. 1239 – 1251) தச்சனூ ரைச் சேர்ந்த வாணாதிராயன் என்பவன் நம்பிதாய நல்லூர் என்ற தனது ஊரை மதுரை ஆலவாயுடையார் கோவிலில் மூன்று வழிபாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தான்.

(1) ஆலவாயுடையார்க்குச் சிறப்பு வழி பாடு.

(2) மார்கழிமாதம் திருவெம்பாவை ஓது வார்க்கு உணவளித்தல்.

(3) ஆலவாயுடையாரை எழுந்தருளப் பண்ணி சாதாரிப் பண்ணைக் கேட்கும்படி பாடச்செய்தல்.

"இவ்வுடையார்க்கு இவ்வாணாதிராயன் சந்திக்குத் திருப்படி மாற்றுள்ளிட்டு வேண் டும் நிபந்தனைகளுக்கும் இவ்வுடையாரை மார்கழித் திருநாளில்த் திருவெம்பாவை

1) "பிற்காலச் சோழர் வரலாறு" – டி.வி. சதாசிவப் பண்டாரத்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேவிக்கும் பரதேசிக்கோவணற்குப் போசன முள்ளிட்டு வேண்டுவனவுக்கும் இக்கோயில்த் தெற்கில் வாணாதிராயன் திருவாசலில் உடையார் எழுந்தருளிச் சாதாரிப்பண் கேட்டருள வேண்டுவன வுக்கும்'' (மதுரை மீனாட்சியம்மன் கோயில் கல்வெட்டு)

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் : இவன் கி.பி. 1251-இல் முடிசூட்டப் பெற்றான். இம்மன்னன் முதலில் சேர அரசனை வென்றும், அடுத்து சோழ அரசனைத் தோற்கடித்தும், இலங்கை அரசனை வென்றும், தெலுங்குச் சோழனை வென்றும் காஞ்சியைக் கைப்பற்றியும், காகதீய மன்னனாகிய கணபதியைத் தோற்கடித்தும், நெல்லூரைக் கைப்பற்றியும் இப்படி வெற்றி மேல் வெற்றியாகக் குவித்தான்.

தில்லையம்பலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குத் துலாபாரதானங்கள் செய்து அக்கோவிலைப் பொன் வேய்ந்து சிறப்பித்தான். அக்கோவிலின் மேலைக் கோபுரத்தைக் கட்டியவனும் இவனே. இதேபோல திருவரங்கக் கோவிலுக்கும் பொன் வேய்ந்தான். மாணிக்கநல்லூர் என்ற கொற்றவன் குடியர் திருச்சிற்றம் பல முடையாருக்குக் கோவில் நிறுவியுள்ளான்.

கி.பி. 1271-இல் இறைவன் திருவடி அடைந்தான்.

சடையவர்மன் வீர பாண்டியன் [கி.பி. 1253 – 1268] : இம்மன்னன் கொங்குநாடு, சோழநாடுகளை வென்றும், பல்லவ அரசனிடம் திறைபெற்றும், ஈழ நாட்டில் போர்புரிந்து அந்நாட்டரசன் ஒருவனைக் கொன்று மற்றொருவனை மன்னனாக்கியும் பாண்டியர் பெருமைக்குச் சிறப்பு சேர்த்தான். இவன் தில்லைத் திருக்கோவிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் மேலும் 16 தூண்களை அமைத்து அதனை விரிவாக்கினான்.

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் [கி.பி. 1268 – 1311] : இவனும் ஈழ நாடு சேர நாடுகளுடன் போரிட்டு வென்றவன். சோழ நாடு, நடு நாடு, தொண்டை நாடு இவன் ஆளுகைக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

கி.பி. 1310-இல் இவன் மகன் சுந்தர பாண்டியனால் கொல்லப்பட்டான். திருநெல்வேலித் திருக்கோவிலில் ஒரு திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான்.[1]

(3)

சோழர் காலச் சைவ சமயம்

சிற்பங்கள், ஓவியங்கள், ஆடல், பாடல், நாடகம் ஆகிய கலைகள் மூலமும் சோழர் காலத்தில் சைவ சமயம் பெரிதளவு பரவியிருந்தது.

சிற்பங்கள் : தாராசுரம், கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சை, திருபுவனம், கீழைக் கடம்பூர், மேலைக்கடம்பூர், இராசராசபுரம் ஆகிய கோவில்களில் சிவபெருமான் திருவுருவங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இராசராசபுரத்து இராசராசேசுவரத்தில் நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் முறையாக இருக்கின்றன. மேலைக்கடம்பூரிலும் நாயன்மார் வரலாற்றுச் செய்திகள் சிற்பங்களாக வழங்கப்பட்டுள்ளன. கங்கை கொண்ட சோழபுரத்தில் நடுமண்டபச் சுவரில் சண்டீசர் வரலாறு நான்கு வரிசைகளில் செதுக்கப்பட்டுள்ளன.

தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் : தஞ்சைப் பெரிய கோவிலின் மூல அறையின் புறச்சுவர்களில் யோகநிலையில் சிவபெருமான், சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி, சுந்தரரும், சேரமான் பெருமாளும் கயிலைக்கு விரையும் காட்சி, இருவர்க்கும் கந்தர்வர் மலர் மாரி பொழிதல், திரிபுர சம்காரம் ஆகியன ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

நாயன்மார் உருவச்சிலைகள் : பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் வாழ்ந்து மறைந்த இடங்களில் இருந்த கோவில்களி

1) ''பாண்டியர் வரலாறு'' – டி.வி. சதாசிவப் பண்டாரத்தார். ... 1940.

''பாண்டியர் பெருமாட்சி'' – ஜெ.எம். சோமசுந்தரம் ... 1958.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லேனும் அவர்களுடைய உருவச்சிலைகளும் செப்புப்படிமங்களும் இருந்திருத்தல் வேண்டும். இங்ஙனம் நாயன்மார்க்கு உருவச்சிலைகள் அமைப்பதும், தனிச்சிறு கோவில்கள் அமைப்பதும், செப்புப் படிமங்கள் எடுப்பதும், அவற்றுக்குப் பூசை – விழாக்கள் செய்வதும் சோழர் காலத்தில் பெருகலாயின என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. இத்தகைய 45 கல்வெட்டுகளை மா. இராசமாணிக்கனார் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

ஆடல், பாடல் : குறிப்பிட்ட நாட்களிலும், விழாக்காலங்களிலும், ஊர்வலத்திலும் ஆடல்பாடல்கள் நிகழ்ந்தன. சோழர் காலத்தில் பெரும்பாலான கோவில்களில் ஆடலும் பாடலும் வல்ல பெண்கள் இருந்தனர் என்பதைப் பல கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இராசராசன் தான் கட்டிய பெரிய கோவிலில், தமிழ்நாடு முழுவதிலும் இருந்த பலகோவில்களிலிருந்து ஆடல் – பர்டல்களில் வல்ல நானூறு பேரை ஆடல்பாடல்கள் நிகழ்த்த வரவழைத்தான். சோழர்காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரது மரபில் வந்த பெண் பாணரைக் கொண்டு தேவாரத்திருப்பதிகங்கட்குப் பண் வகுக்கப்பட்டது. திருவொற்றியூர்க் கோவிலில் பதியிலார் சில குறிப்பிட்ட திருப்பதிகம், திருவெம்பாவைப் பாக்களை நடிப்பின் வாயிலாக வெளிப்படுத்தியதோடு பல பாக்களையும் பாடினர்.

நாடகம் : சோழர்காலத்தில் ஆண்டு தோறும் வைகாசி விழாவில் தஞ்சைப் பெரிய கோவிலில் இராசராசேசுவர நாடகம் நடித்துக் காட்டப்பட்டது. அதில் நடித்த விசயராசேந்திர – ஆசாரியனுக்கு ஆண்டு தோறும் 120 கலம் நெல் தரப்பட்டது. இந் நாடகம் முதலாம் இராசராசனைப் பற்றியது. முதற்குலோத்துங்கன் காலத்தில் பூம்புலியூர் நாடகம் என்ற ஒன்று செய்யப் பட்டது. இந்நாடகத்தில் அப்பர் பெருமான் வரலாறும் இடம் பெற்றது.

திருமுறைகள் ஓதுதல் : நம்பியாண்டார் நம்பி திருமுறைகளை ஒழுங்குபடுத்து முன்பே திருவல்லம், எறும்பியூர், பழூர், ஆவடுதுறை, தலத்துறை, ஆத்தூர், குமார வயலூர், அந்துவநல்லூர் முதலிய ஊர்க் கோவில்களில் திருப்பதிகங்கள் ஓதப் பட்டன. இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலில் திருப்பதிகம் ஓத 48 பேர் பல கோவில்களிலிருந்தும் வரவழைக்கப் பட்டனர்.

சிவதருமம், திருஞானம், சோமசித்தாந்தம், இராசராசவிசயம், பாரதம், இராமாயணம் ஆகிய சமய நூல்கள் கோவில்களில் படிக்கப்பட்டன.

இரண்டாம் இராசாதிராசன் (1166 – 1182) காலத்தில் திருவொற்றியூரில் ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் படிக்கப்பட்டது. இது திருத்தொண்டர் புராணமே ஆகும்.

மடங்களும் குகைகளும்

மடங்கள் சமயக்கல்வி அளிக்கும் இடங்களாகவும், அறச்சாலைகளாகவும், அடியார் தங்குமிடங்களாகவும் இருந்தன. பல்லவர் காலத்திலே சில மடங்கள் இருந்தன. சோழர் காலத்திலே மிகப்பலவாகப் பெருகின.

இறைவன் பெயர் கொண்ட மடங்கள் – 8; அரசர், சிற்றரசர் பெயர் கொண்ட மடங்கள் –6; நாயன்மார் பெயர் கொண்ட மடங்கள் –20; பல்வேறு பெயர்களைக் கொண்ட மடங்கள் –21; இருந்தன.

காளாமுகரின் கோமடங்கள் களத்தூர்க் கோவில், ஆலத்தூர்க் கோவிலிலும் இருந்தன.

காபாலிகர் மடம் திருவொற்றியூரிலும் வீர சைவர் மடம் கும்பகோணத்திலும், கோளகமடம் (இம்மடத்தினர் பாசுபதம் – லகுலீச பாசுபதம் – காளாமுகம் என்னும் சைவப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்) திருச்செந்தூர் தாலுகா ஆற்றூரிலும் திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஊர்களிலும், வாரணாசி பிக்ஷாமடம் திருப்புத்தூர், தேவிகாபுரம், திருநெல்வேலி மணப்படைவீடு ஆகிய ஊர்களிலும் இருந்தன.

இராஜகுருக்கள் : இராஜராஜனுக்கு ஈசான சிவபண்டிதரும், அவரது மகனான இராஜேந்திரனுக்கு சர்வ சிவ – பண்டிதரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜ குருக்களாக இருந்தனர். முதல் இராஜாதி ராஜனுக்கும், முதற்குலோத்துங்க னுக்கும் குருதேவர்கள் இருந்திருக்கின்ற னர். விக்கிரம சோழனுக்கு சுவாமிதேவர் ஸ்ரீகண்டசிவன் குருவாக இருக்கலாம்.

மூன்றாம் குலோத்துங்கனின் இராஜகுரு ஈசுவர சிவன் ஆவார். இவர் சித்தாந்த ரத்னாகரம் என்ற நூலின் ஆசிரியர் ஆவார்.

தாராசுரத்து – இராஜராஜேசுவத்தில் 108 சைவாசாரியர்களுடைய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச்சைவ மடங்கள்

திருச்சத்திமுற்றம் : கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் சில புதிய மடங்கள் தோன்றின. அவற்றுள் தலை சிறந்தது திருச்சத்திமுற்றத்துத் திருஞான சம்பந்தன் திருமடம் என்பது. இம் மடத்தைச் சேர்ந்தவர் திருச்சத்தி முற்றத்து முதலியார்.

திருவிடைமருதூர் : திருவிடைமருதூர் மாளிகை மடம் என்ற ஒன்று இருந்தது. இம்மடத்துச் சந்தானத்தைச் சேர்ந்தவர் தத்தன் – உடையார் ஈசானதேவர் (கி.பி. 1240)

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தில்லையில் ஒரு மாளிகை மடம் இருந்திருக்க வேண்டும். கி.பி. 1250-இல் திருவானைக் காவில் ஆண்டார் – எம்பிரானார் – திரு மடம் என ஒன்று இருந்தது. அது செண் பைக்குடி முதலியார் சந்தானத்தைச் சேர்ந்தது.

கி.பி. 1236-இல் திருவாரூரில் ஆசார மழகியான் – திருமடம் என்று ஒன்று இருந்தது. அதன் கிளை பாண்டி நாட்டுத் திருப்புத்தூரில் திருஞானசம்பந்தன் – திருமடம் என்ற பெயருடன் இருந்தது. இவையும் முதலியார் மடங்கள் ஆகும். மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் கோவந்தபுத்தூரில் திருத்தொண்டத் தொகையான் திருமடமும், தில்லையில் அதன் கிளையும் இருந்தன.

கி.பி. 1230-இல் நமச்சிவாய தேவர் செங் காட்டங்குடியில் சிறுத் தொண்டன் திரு மடத்தைக் கட்டினார்.

மேற்கூறிய அனைத்தும் கல்வெட்டுச் சான்றுகள் ஆகும்.

திருவுந்தியார் இயற்றிய திருவியலூர் உய்யவந்த தேவநாயனார், சித்தியார் இயற்றிய திருத்துறையூரில் இருந்த அருள் நந்தி சிவாச்சாரியார் கொற்றவன்குடி உமா பதி சிவாச்சாரியார் ஆகியோர் வாழ்ந்த ஊர் களில் மடங்கள் இருந்திருக்க வேண்டும்.

மெய்கண்டார் பிறந்த பொழுதுதான் பிருமசூத்ரத்திற்கு சங்கரர், மத்துவர் முதலா னோர் வேறுவேறு உரைகளை எழுதினர். அப்பொழுது நாட்டில் சமயநிலையில் பெருங்குழப்பம் நிலவியது. அக்குழப்ப நிலையைச் செம்மைப்படுத்தி, சைவ சித்தாந்தத்தை நிலை நாட்டவே மெய் கண்டார் தோன்றினார். அவருக்கு 49 சீடர் கள் இருந்தனர். பல மடங்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சைவத்தை நிலை நாட்டின.

குகைகள் : மூன்றாம் குலோத்துங்கன் காலம் முதல் பல கோயில்களில் குகைகள் என்னும் ஒரு வகை மடங்கள் இருந்தன. அவற்றுள் திருத்துறைப்பூண்டி குகை, குறுக்கை திருஞானசம்பந்தன் குகை, சீகாழி திருமுறை தேவாரச் செல்வன்குகை, திரு விடைவாய் திருத்தொண்டத் தொகையான் குகை, திருப்புகலூர் குகை, திருமாகாளம் பொலிசாத்தழகியான் குகை, முணியூர் திருஞானசம்பந்தன் குகை, சிதம்பரம் குகை, சதுர்வேதிமங்கலம் திருஞானசம்பந் தன் குகை ஆகியன குறிப்பிடத்தக்கன.

முன்சொன்ன மடங்களும், இக்குகை களும் பொதுக்கல்வியையும் சமயக்கல்வி யையும் வளர்க்கப்பாடுபட்டன.

நாயன்மார் பெயர்கள் : நாயன்மார் பெயர்களை மக்கள் கொண்டிருந்தனர். கல்வெட்டுக்கள் நிரம்ப இருந்தாலும் இராசமாணிக்கனார் 34 எடுத்துக்காட்டு களை தம் நூலில் தந்துள்ளார். நாயன்மார் பெயர் கொண்ட மக்கள், இடங்கள், பொருள்கள் 33 என பட்டியல் தருகின்றார். நாயன்மார் பயன்படுத்திய சொற்றொடர் கள் 10 கல்வெட்டுகளில் உள்ளன.

இவற்றால் எல்லாம் நாயன்மார் சரிதங் களும், அருட்பாடல்களும் மக்களிடையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெகுவாகப் பரவியிருந்தமை தெரிய வருகின்றது.[1]

கி.பி. 1290 முதல் கி.பி. 1748 வரை

(1)

தமிழ்நாட்டு அரசியல்

சோழர் ஆட்சி : கி.பி. *1270*-ஆம் ஆண்டோடு சோழப்பேரரசு இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது.

பாண்டியர் ஆட்சி : பாண்டிய நாட்டில் குலசேகர பாண்டியனுடைய பிள்ளைகளான வீர பாண்டியனும் *(1290)*, சுந்தர பாண்டியனும் *(1306)* முறையே ஆட்சி புரிந்தாலும் இவர்களுக்குள் ஒற்றுமையின்றி போரிட்டு முஸ்லிம்கள் உள்ளே வர வழி பகுத்தனர். டில்லி சுல்தான் அலாவுதீனின் படைத்தலைவனான மாலிக்காபூர் இருவரையும் துரத்திவிட்டு, மதுரையைக் கைப்பற்றி கோவில்களை இடித்து நாசம் செய்தான். இதனோடு மதுரையில் பாண்டியராட்சி முடிவுற்றது. கி.பி. *1352* வரை – பராக்கிரம பாண்டியன் காலம் வரை – நான்கு பாண்டிய அரசர்கள் சில பகுதிகளை ஆண்டதாகத் தெரியவருகிறது.

தென்பாண்டி நாடு : கி.பி. *14*-ஆம் நூற்றண்டின் பிற்பகுதி முதல் கி.பி. *17*-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தென்பாண்டி நாட்டில் பாண்டிய அரசர் சிலர் ஆட்சி புரிந்தனர். அவர்கள் தலைநகரம் கூடத்தெரியவில்லை.

தென்காசி கோயில் கட்டிய பராக்கிரம பாண்டியன் : கி.பி. *1387*-இல் பராக்கிரம பாண்டியன் திருக்குற்றாலத்தில் திருப்பணி புரிந்தான். கி.பி. *1422* முதல் *1463* வரை ஆண்ட சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் மிகுந்த பெருமை வாய்ந்தவன். இவன் திருக்குற்றாலம், திருப்புடைமருதூர் கோயில்களில் மண்டபங்கள் அமைத்தான். நெல்லையப்பர் கோயில் பெருமாள் அர்த்தயாம வழிபாட்டிற்கு நிபந்தங்கள் அளித்தான். தென்காசிப் பெருங்கோயிலை எடுப்பித்தவன் இவனே. இதனைக் கட்டி முடிக்க 17 ஆண்டுகள் ஆயின. இக்கோயிலின் மேல் இவன் கொண்டுள்ள காதல் பின்வரும் பாடலால் தெரியவரும்

> ''ஆராயினும் இந்தத் தென்காசி மேவும் பொன்னாலயத்து
> வாராததோர் குற்றம் வந்தால் அப்பொது அங்கு வந்து அதனை
> நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்
> பாராரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே''

சைவபுராணங்கள் பாடிய அதிவீரராம பாண்டியன் : கி.பி. *1564* முதல் கி.பி. *1604* வரை ஆண்ட அதிவீரராமபாண்டியன் சிறந்த சிவபக்தன் ஆவான். கூர்மபுராணம், வாயுசங்கிதை, காசிகாண்டம், லிங்க புராணம் நைடதம் ஆகிய நூல்களைப் பாடியுள்ளான்.

சைவ நூல்கள் பாடிய வரதுங்கராம பாண்டியன் : கி.பி. *1588*-இல் முடி சூட்டப் பெற்ற வரதுங்கராமபாண்டியனும் சிறந்த சிவபக்தன் ஆவான். கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, கருவைக்கலித்துறை அந்தாதி, கருவை வெண்பா அந்தாதி என்பன இவன் பாடிய நூல்கள் ஆகும்.

கி.பி. *1748*-இல் வரகுணராமபாண்டிய குலசேகர தேவதீட்சிதர் என்பவனே தென் பாண்டிய நாட்டை ஆண்ட கடைசி பாண்டிய மன்னன். இவர்களில் பெரும் பாலோர் விசய நகர வேந்தர்கட்குக் கப்பம் செலுத்தியவர்கள்ஆவர்.

நாயக்கர் காலம் : கி.பி. *1538*-இல் குமார கம்பணன் என்பவன் மதுரையில் நாயக்கர் ஆட்சிக்கு அடிகோலினான். இதன் பின்னர் நானூறு ஆண்டுகள் நாயக்கர் பேரரசு மதுரையில் நிலைத்தது. இது தமிழக வரலாற்றில் சிறந்த பகுதியாகும். முகமதியர்கள் ஐரோப்பியர்கள் பிடிகளிலிருந்து தென்னாட்டை ஓரளவு காத்தவர்கள் நாயக்கர்கள் எனலாம். மதுரையில் இன்று நாம்

1) ''சைவ சமய வளர்ச்சி'' – மா. இராசமாணிக்கனார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காணும் திருக்கோயிலும், ஆயிரக்கால் மண்டபமும் நாயக்கர் காலத்தவையே.

தொகுப்பு

சங்க காலம் தொட்டு நாயக்கர் காலம் வரை சேர, சோழ, பாண்டிய, நாயக்க மன்னர்கள் சைவ சமய வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் துணை புரிந்திருக் கிறார்கள். சங்ககாலச் சோழ அரசானான கோச்செங்கணான் எழுபது சிவன் கோயில் களைக் கட்டியுள்ளான். முற்காலப்பல்லவர் காலத்தில் (கி.பி. 300 முதல் கி.பி. 575 வரை) ஐயடிகள் காடவர்கோன் என்ற பல்லவ மன்னன் க்ஷேத்திர வெண்பா என்ற நூலை இயற்றியுள்ளான். கி.பி. 575 முதல் கி.பி. 900 வரையிலான காலகட்டத்தில் சமண சமயத்தில் இருந்த நின்ற சீர்நெடு மாறன் சைவன் ஆவான். வரகுணபாண்டி யன் செய்த சிவப்பணிகள் பலவாகும். மகேந்திரவர்ம பல்லவனும், நரசிம்மவர்ம னும் பலசிவன் கோயில்களைக் கட்டினார் கள். சிம்ம விஷ்ணு காஞ்சிபுரத்தில் கயிலாயநாதர் கோயிலைக் கட்டினான். பலசிவப்பணிகள் செய்த கழற்சிங்கன் என்றழைக்கப்பட்ட மூன்றாம் நந்திவர்ம னும் இக்காலகட்டத்தில் அரசாண்டவனே. கி.பி. 900 முதல் கி.பி. 1300 வரையிலான காலகட்டத்தில் சோழராட்சியில் பல சிவா லயங்கள் கற்றளிகளாக மாறின. பராந்தகச் சோழன் தில்லைச்சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான். செம்பியன் மாதேவி செய்த திருப்பணிகள் மகத்தானவை. ராஜ ராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலையும், ராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழீச்சரம் கோயிலையும் கட்டி னார்கள். கி.பி. 1290 முதல் கி.பி. 1748 வரை யிலான காலகட்டத்தில் பராக்கிரமபாண்டி யன் (கி.பி. 1387) தென்காசிக்கோயிலைக் கட்டினான். அதிவீரராமபாண்டியன் (கி.பி. 1564) சைவபுராணங்களைப் பாடினான். வரதுங்கராம பாண்டியன் (கி.ப. 1588) பல சைவ நூல்கள் இயற்றினான். நாயக்கர் காலத்தில் இஸ்லாமிய ஆதிக்கம் தமிழகத் துள் வராமல் தடுக்கப்பட்டது. இன்று காணப்படும் மதுரை மீனாட்சியம்மன் கோயில் நாயக்கர் காலத்தில் கட்டப் பட்டதே.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VIII

கலைகள் நோக்கில் சைவ சமயம்

கி.பி. 320 – 750

(1)

கட்டடக்கலை (குகைகள்)

குடைவரை அமைப்புகள் : கி.பி. 320 – 750 இந்தியக் கட்டடக் கலை வரலாற்றில் வழிகள் – பாதைகள் – பிரிகின்ற கால கட்டம் ஆகும். தொன்மை வழிமுறைகள் முடியவும், புதிய யுகம் தோன்றவும் – குறிப்பாக கோயில்கள் எழுதல் – ஆரம்பித்தன. குடைவரை (மலைகளைக் குடைதல்) அமைப்புகள் தொன்மையைப் பறை சாற்றுகின்றன. இக்குடைவரை அமைப்புகளை இந்து, சமண சமயங்கள் பின்பற்றினாலும், பெரும்பான்மை பௌத்த சமயத்தைச் சேர்ந்தவையே. பௌத்தர்களின் குடைவரை அமைப்புகள் (1) சைதிய அரங்கம் (வழிபாட்டு இடம்) (2) சங்காராமம் அல்லது விஹாரம் (துறவிகள் தங்கும் இடம்) என இரண்டு வகைப்படும். இந்த வகையான அமைப்புகள் பெரும்பான்மை அஜந்தா, எல்லோரா, ஔரங்கபாத்திலும், மத்திய பாரதத்தில் பாகிலும் (Bagh) காணப்படுகின்றன.

அஜந்தா சைத்ய அரங்கம் : அஜந்தா குடைவரை அமைப்புகள் கிறிஸ்து சகாப்தத்திற்கும் முந்தைய வரலாற்றுப் பின்னணி உடையவை. அஜந்தாவில் உள்ள 28 குகைகளில் 5 குகைகள் பழங்காலத்தவையாகவும், 23 குகைகள் (கி.பி. 320– 750) கால கட்டத்தைச் சேர்ந்தவையாகவும் உள்ளன. அஜந்தாவில் உள்ள குகை எண் 19, குகை எண் 26 ஆகிய இரண்டும், முன் உள்ள குகைகளைப் பொதுவான அமைப்பு முறையில் பின்பற்றினாலும், அலங்காரம் முதலிய வற்றில் சிறந்து இருக்கின்றன. மரத்தைப் பயன்படுத்தும் முறை குறையலாயிற்று. சிறிதளவு இடம் கூட விட்டு வைக்காமல் சிற்பச் செல்வமாகச் செதுக்கி வைத்திருப்பது இக்கால கட்டத்தில் முக்கிய அம்சம் ஆகும். எல்லோரா குகை எண் 10 அஜந்தா குகை எண் 19, 20 போலவே அமைந்துள்ளது.

சங்கராமம் : கி.பி. 400-ஐச் சேர்ந்த அஜந்தா குகை எண் 11, குகைகளுள் பழமையானது ஆகும். முதல் முதலாகத் தூண்கள் இடம் பெறுகின்றன. குகை எண் 16, 17 (கி.பி. 500); அழகிய ஓவியங்களையும், அழகிய தூண்களையும் கொண்டவை ஆகும். குகை எண் 1,2 (கி.பி. 600) அழகிய சிற்பங்களையும், அழகிய தூண்களையும் கொண்டவை ஆகும்.

அஜந்தாவிலிருந்து 150 மைல் தொலைவில் உள்ள 'பாகி' யில் உள்ள குகைகளின் (கி.பி. 500-600) முகப்பு (போர்ட்டிகோ) மிக அலங்காரமானது ஆகும்.

எல்லோரா : எல்லோரா குகைகள் பௌத்த, சமணச் சார்புடையவை ஆகும். அவை ஒரு மைல் நீளம் உள்ளவை. (கி.பி. 550 – 750) அவற்றில் 12 குகைகள் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவை ஆகும்.

இந்துக் குகைகள் : போபால் மாநிலத்தைச் சேர்ந்த உதயகிரி குகைகள் கி.பி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும். பம்பாய் மாநிலத்தில் உள்ள பாதாமியைச் சேர்ந்த குடைவரைக் கோயில்கள் கி.பி. 576-ஐச் சேர்ந்தவை ஆகும். தமிழ்நாட்டில் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மகேந்திரவர்ம பல்லவன் I குடைவரைக் கோயில்களைக் கட்டினான். அவனது மகன் நரசிம்மவர்மன் கட்டிய மாமல்லபுரம் உலகப் புகழ் பெற்றது.

எல்லோரா குகைகள் : கி.பி. 650-ஐச் சேர்ந்த எல்லோராவில் உள்ள பதினாறு கண்டுபிடிப்புகள் – அகழ்வில் – இந்து சமயத்தைச் சேர்ந்தவை ஆகும். அவற்றுள் முக்கியமானவை குகை எண் 15 (தசாவ தாரம்), குகை எண் 14 (Ravana-Ka-Khai), குகை எண் 21 (ராமேசுவரம்), குகை எண் 29 (Dhumar Lena), குகை எண் 19 (புகழ் வாய்ந்த கயிலாயம்) ஆகும். கயிலாயக் குகை காஞ்சிபுரத்தில் உள்ள கயிலாயநாதர் கோயிலைப் போன்றது ஆகும்.

பம்பாய்க்கு அருகில் உள்ள எலிபண்டா குகைகள் (Dhumar Lena) குகைகளை ஒத்த வை ஆகும். இங்கு லிங்கத்திற்குத் தனி ஆலயம் இருந்தாலும், சிவபெருமான் திருவுருவத்திற்கும் முதன்மையான இடம் தரப்பட்டுள்ளது. இங்குள்ள சிவபெருமா னின் திருவுருவச்சிலை இந்தியச் சிற்பங் களிலே தலைசிறந்தது ஆகும்.

சல்செட் (Selsette) தீவில் உள்ள ஜோகே சுவரர் கோயிலும் இந்துச் சமயத்தைச் சேர்ந் தது ஆகும்.

சமணக் குகைகள் : கி.பி. ஏழம் நூற் றாண்டைச் சேர்ந்த பாதாமி, ஐஹோல் (Aihole) குகைகளும், கி.பி. 800-ஐச் சேர்ந்த எல்லோரா குகைகளும் சமண சமயத்தைச் சேர்ந்தவை.

(2)

கட்டடக்கலை
(எழுப்பப்பட்ட கட்டடங்கள்)

செங்கற் கோயில்கள் : எல்லோரா சமணக் குகைகளுடன் குடைவரை அமைப் புகள் உருவாவது முடிவுக்கு வருகிறது. இதுவரை மரத்தாலும், மூங்கிலாலும், வழி பாட்டு இடங்கள் உருவாக்கப்பட்டு வந்தன. குப்தர்களின் காலம் ஓர் புதிய யுகத்தை உருவாக்கியது. வழிபடுதலங்கள் செங்கல்லாலும், கல்லாலும் கட்டப்பட லாயின.

தட்டையான கூரை : சதுர வடிவ கரு வறை : இக்கால கட்டத்துக் கோயில் களை வரலாற்று ஆசிரியர்கள் ஐந்து வகையாகப் பிரிக்கின்றனர். தட்டையான கூரையைக் கொண்ட சதுரவடிவக் கோயில் கள் முதல் வகையைச் சேர்ந்தவை ஆகும். சாஞ்சி, திகாவா (சமுத்திர குப்தன் காலம்), ஈரான் (சமுத்திரகுப்தனுக்குப் பிற்பட்டது) கோயில்கள் இவ்வகையைச் சேர்ந்தவை ஆகும்.

சதுரக் கருவறை : சதுரப் பிரகாரம் : இரண்டாம் வகைக் கோயில்கள் முதலாம் வகையின் விரிவு ஆகும். சதுரக் கருவறை – அதனைச் சுற்றி சதுரப்பிரகாரம் நாச்னா குதாரா பார்வதி கோயில், பூமரா சிவன் கோயில், ஐஹோல் மேருதி கோயில்கள் இப்பிரிவைச் சேர்ந்தவை ஆகும். இக் கோயில் கணங்களும், கீர்த்திமுகங்களும், தெய்வ வடிவங்களுமாக அருமையான வேலைப்பாடமைந்துள்ளது.

மாமல்லபுரம் ரதங்கள் ஐஹோல் மேகுதி கோயில்கள் காலத்தில் எழுந்தவை ஆகும்.

கோபுரம் முக்கியத்துவம் பெறுதல் : மூன்றாம் வகைக் கோயில்கள் முதலாம் வகைக் கோயில்களின் பெருவடிவம் ஆகும். இவ்வகைக் கோயில்களில் கரு வறைக்கு மேலுள்ள கோபுரம் முக்கியத் துவம் பெறுகிறது. இவை. கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை ஆகும். ட்யோகரில் (ஜான்சி மாவட்டம், உத்திரப் பிரதேசம்) உள்ள தசாவதாரக் கோயில், நாச்னா குதாராவில் உள்ள மகாதேவன் கோயில், புத்தகயையில் உள்ள மகா போதி கோயில் இப்பிரிவைச் சேர்ந்தவை ஆகும்.

குப்தர் காலத்திய கோயில்களிலே நாகரா முறை, திராவிட முறை என்ற இருவேறு பட்ட கோயில் கட்டிடக் கலையின் பிரிவு கள் தெளிவாகத் துலங்கலாயிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(3)

சிற்பக் கலை

மனித உருவம் : மனித உருவமே குப்தர் கால சிற்பக் கலையின் ஆதாரம் ஆகும். காலத்தால் முந்தைய சாஞ்சி, பார்ஹட் (Bhargut) சிற்பங்கள் மிருக, தாவர உலகத்தைச் சுற்றிப் பின்னிப் பிணைந்திருந்தன. மதுரா, அமராவதி சிற்பங்களில் ஆண்கள், பெண்கள் இடம் பெற ஆரம்பித்து விட்டனர். தாவரங்களும், மிருகங்களும் விளிம்புகளிலும் ஓரங்களிலும் கலை நுணுக்கத்தோடு மிளிர ஆரம்பித்துவிட்டன.

தியான நிலை : இக்காலகட்ட சிற்பிகளின் சிந்தனையை ஈர்த்தது இளமை ஆகும். உணர்ச்சி பூர்வமான வேங்கி கலையினும் – மண்ணின் மணம் கமழக்கூடிய மதுரா கலையினும் – வேறுபட்ட மனக் கட்டுப்பாடு, உடற்கட்டுப்பாடு கொண்ட மனித உருவமாக – ஞானத்தின் வெளிப்பாடாக – கண்மணிகள் கீழ்நோக்கு கொண்டவையாக – மனதை ஒருமைப்படுத்தும் தியான நிலையாக – சிற்ப உருவ அமைப்பு மாறியது. தியானம் – மனஒருமை – என்றெல்லாம் ஆனபிறகு திறந்த கண்கள் மூடிய நிலையினவாகவும் உள் முகமாகப் பார்க்கும் அமைப்பிலும் சிற்பக் கலை பரிணாமம் பெற்றது.

மண்ணால் ஆன சிலைகள் : குப்தர் கால வடிவமாகிய இளகக் கூடிய மண்ணால் ஆன சிலைகள் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் மதுராவில் உருவாயின. புத்தகயையில் உள்ள போதிசத்துவர் இச் சிலாரூபத்திற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். இக்கால கட்டத்திய மதுராபாணியைப் பின்பற்றிய மூன்று கண்களை உடைய சிவனின் தலை மட்டுமே உள்ள, இரண்டு சிலைகள் மதுரா அருங்காட்சியகத்திலும், இலண்டன் கல்மான் (Calman) அரங்குகளிலும் உள்ளன. சாரநாத்தில் உள்ள தருமசக்கரத்தைப் பரிபாலிக்கும் புத்தரின் திருவுருவம் மிகவும் புகழ் பெற்றது ஆகும்.

வட இந்தியச் சிலைகள் : பனாரஸ் பாரத் கலா பவனில் உள்ள கார்த்திகேயன் சிலை, நாகோட் மாநிலம் கோஹில் உள்ள (Khoh) ஒரு முக லிங்கம், சாரநாத் அருங்காட்சியகத்தில் உள்ள சிவன் சிலை ஆகியவை ஏறக்குறைய மதுரா பாணியைப் பின்பற்றியவை ஆகும். கோஸாமில் உள்ள சிவ-பார்வதி புடைப்பு உருவம் சாரநாத் பாணியைவிட எடுப்பும் அழகும் குறைந்தது ஆகும். மாண்டஸாரில் உள்ள சிவனின் நின்ற கோலம் அழுத்தமானது ஆகும்.

கிழக்கு இந்தியா : கிழக்கு இந்தியப் பகுதியில் கிடைத்துள்ள புத்தரின் உலோகத் திருமேனிகள் சாரநாத் சிலைகளின் மென்மையும் நளினமும் பெற்றுத் திகழ்கின்றன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு : கி.பி. ஏழாம் நூற்றாண்டு சிற்பங்கள் சாரநாத் பாணியின் மிருதுத் தன்மையிலிருந்து மாறி சுரசுரப்பும் கனமும் பெற்றதாய் உள்ளன. நாளந்தாச் சிற்பங்கள் இத்தகையன. டாக்கா அருங்காட்சியகத்தில் உள்ள பிரபாவதி அரசியின் சிலை, கல்கத்தாவில் உள்ள சிவனின் செப்புத் திருமேனி இக்கால கட்டத்தைச் சேர்ந்தவை ஆகும்.

தக்காணம் : ஆரிய வர்த்தத்தில் சிற்பக் கலையின் பாரம்பரியம் சிதைந்து புதிய முளைகள் தோன்றும் பொழுது தக்காணத்தில் பாரம்பரியமான பாதாமி பாணி உருவாக்கத்தின் முழுமை அடைந்தது என லாம். இதன் விளைவுகளை எல்லோரா, பட்டடக்கல், அவுரங்கபாத், எலிபெண்டா குகைகளில் காணலாம்.

பட்டடக்கல், எல்லோரா சிற்பங்கள் : எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டடக்கல் புடைப்புச் சிற்பங்கள் பல்லவ மரபான மாமல்லபுரம், காஞ்சிபுரம் பாணியின் தாக்கத்தைப் பெற்று மெருகேறியும் உயர்ந்தும் காணப்படுகின்றன. தக்காணக் கலையின் கனமும், வலுவும் தென்னிந்தியாவின் நேர்த்தியும், நெகிழ்வும், அமைதியும் ஆக்கபூர்வமாகப் பிணைந்து அற்புதமான புடைப்புச் சிற்பங்களாக எட்டாம் நூற்றாண்டில் எல்லோரா கைலாசநாதர் கோயிலில் வெளிப்படுகின்றன. இம்மாற்றம் பட்டடக்கல் பாணியின் முதிர்ந்த நிலை ஆகும். மகிஷாசுரமர்த்தனியில் அம்பு எய்யும் வேகம், இன்பத்தின் உச்சத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வலிந்து தழுவுதல், இராவணன் கயிலையை அசைக்கும் கடுமை – தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் இருக்கும் சிவ-பார்வதி சிற்பங்கள் கூடக் கண்ணியமான ஆளுமையைக் கொண்டுள்ளன.

எலிபண்டா சிற்பங்கள் : பாதாமி, பாஜா பாணிகளின் தேக்கி வைக்கப்பட்டிருந்த ஆற்றலும் சக்தியும் எல்லோரா, பட்டடக்கல் சிற்பங்களில் படிப்படியாக வெளிப்பட்டது எனலாம். எலிபண்டா சிற்பங்களோ காலகாலமாக மனித வரம்பிற்குள் குவித்து வைக்கப்பட்டிருந்த படைப்பின் ஆழத்திலிருந்து தனது ஜீவதாதுவை எடுத்துக் கொண்ட – மூலசக்தி (Primeval Engrgy)யின் முழு தீர்க்க தரிசனமாக வெளிப்பட்டுள்ளது. அந்த வெளிப்பாடு செறிந்து சக்தியாகவும், மறைந்த ஆற்றலாகவும் சிற்பத்திருமேனி முழுமையும் பரவிப் பிருமாண்டத்தின் எல்லையைத் தொட்டு விட்டது எனலாம். நிறைவின் உச்ச எல்லை எலிபெண்டா சிற்பங்கள் எனலாம். சாரநாத்தின் தருமசக்கர – பிரவர்த்தன புத்தர், எலிபெண்டாவின் சிவபெருமானின் புடைப்புச் சிற்பங்கள், தமிழ் நாட்டின் நடராஜப் பெருமானின் செப்புத் திருமேனிகள் இந்தியச் சிற்பக் கலையின் மூன்று சிகரங்கள் எனலாம்.

மாமல்லபுரம் : பல்லவர் காலத்திய (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) கடற்கரைக் கோயில்கள் ஆரியவர்த்தம், தக்காணக் கலைகளின் அனுபவச் செழிப்பினைப் பெற்றும், ஆந்திர பாணி வழி வந்தும், தனக்கே உரிய தனித்தன்மை கொண்டும் சிறந்து விளங்குகின்றன. கங்காவதாரச் சிற்பம் கங்கை வானிலிருந்து இறங்கி வருதல் – மனிதர்கள், கடவுளர், மிருகங்கள், துறவிகள், நாகதேவதைகள், குழுமியிருத்தல் – பூனைத் துறவி – தத்ரூபமான மான் சிலை – வயதான கூன் உள்ள பிராமணக் கிழவர் – பசுமாட்டில் பால் கறத்தல் – குரங்குக் குடும்பம் – என்று சிறு சிறு சுவையான நிகழ்ச்சிகளையும் விட்டு விடாமல் சித்தரிக்கப்பட்டிருக்கும் அழகு ஒரு தனிக் காவியம் ஆகும்.

(4)

ஓவியம்

அஜந்தா : கடவுளர், தாவரங்கள், அப்சரஸ்கள், அரசர்கள், பிரபுக்கள், வீரர்கள், ஞானிகள், நகர வாழ்வு, அரச வாழ்வு, காடுகள் நந்தவனங்கள் என அஜந்தா ஓவியங்கள் கண்ணைக் கவர்வனவாக அமைந்துள்ளன. குகை எண் 14-இல் மூன்று புத்தர்கள், தூங்கும் அழகி, ஷதந்தந்த கதையில் ஒரு பகுதி, குகை எண் 17-இல் ஏழு புத்தர்கள், காரணச் சக்கரம், கபில வாஸ்துவுக்குத் திரும்புதல், காதல் காட்சி என ஒவ்வொரு குகையும் ஒன்றையொன்று விஞ்சுவதாக அமைந்துள்ளது.

ஒரு கதை மற்றொன்றில் தொடர்வதாக அமைந்துள்ளது.

பாக் ஓவியங்களும் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவை ஆகும்.

பாதாமி ஓவியங்களில் சிவன் – பார்வதி திருமணம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தமிழ் நாட்டில் உள்ள சித்தன்னவாசல் ஓவியங்கள் சமணர்களால் தீட்டப்பட்டவை ஆகும். நாட்டியமாடும் அப்சரஸ் மங்கையர், மகேந்திரவர்மன் அவனது மனைவி – தூண்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் ஆகும். மேங்கூரையில் தாமரை மலர்களும், தாமரைக் குளமும் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் யானைகளும், காளை மாடுகளும், அன்னப்பறவைகளும், மனித உருவங்களும் இடம் பெற்றுள்ளன.

காஞ்சி கைலாசநாதர் கோயில் ஓவியங்களும் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும்.[1]

கி.பி. 1000 – கி.பி. 1300

(1) கட்டடக் கலை

நாகர, திராவிட, வேசரபாணிகள் : இந்தியச் சிற்ப சாத்திரம் நாகரபாணி, திராவிடம், வேசர என் மூன்று வகை பாணிகளைக் குறிக்கின்றது. நாகரா பாணி இமய

1) "The History and Culture of Indian People" Part - III - Bharatiya Vidya Bhavan

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலை விந்திய மலைக்கு இடைப்பகுதியிலும், திராவிட பாணி கிருஷ்ணா நதி – கன்னியாகுமரிக்கு இடைப்பகுதியிலும், வேசர பாணி விந்தியமலை – கிருஷ்ணாநதி இடைப்பகுதியிலும் காணப்படுகின்றன. வேசர பாணியைச் 'சாளுக்கியக் கலை' என்றும் கூறலாம். நாகரபாணி–திராவிட பாணியின் கலப்பே வேசர பாணி என லாம். எனவே நாகர பாணி, திராவிட பாணியே பொதுவாகக் காணப்படுபவை.

நாகர பாணி கோயில்கள் சதுர அமைப்புக் கொண்டன. திராவிட பாணி எண்கோண அமைப்பு உடையது. வேசர பாணி வட்ட வடிவமானது.

நாகரபாணி : வட இந்தியக் கோயில்களில் இருவகை தனித் தன்மைகள் வெளிப் படுகின்றன. (1) நில அமைப்பு (Planning) (2) ஏற்ற அமைப்பு (Elevation). நில அமைப்பில் வட இந்தியக் கோயில்கள் சதுரவடிவமாகவும், நான்கு பக்கங்களிலும் நடுவில் படிப்படியான முனைப்புகளும் (graduated projection) உள்ளன. இந்த முனைப்புகளால் குறுக்கும் நெடுக்குமான வடிவம் (cruciform shape) கிடைக்கின்றது. ஏற்ற அமைப்பில் (elevation) உட்புறம் படிப்படியாகக் குவிந்த வட்டம் கொண்ட (Convex curve) சிகரம் புலப்படுகிறது. குறுக்கும் நெடுக்குமான நில அமைப்பு (Cruciform Plan), குவிந்த வட்ட வடிவமான சிகரம் (Curvilinear tower) வட இந்தியக் கோயில்களின் தன்மைகள் ஆகும்.

உத்திரப்பிரதேசத்தில் ட்யோகரில் (Deo garh) உள்ள தசாவதாரக் கோயிலும், பிலர்காவோன் (Bhilargion) செங்கல் கோயிலும் இவ்வகை பாணிக்கு நல்லுதாரணங்கள் ஆகும்.

ஒரிசாக் கோயில்கள் : கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரிசாவில் நூற்றுக் கணக்கான நாகரபாணி கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான கோயில்கள் புவனேசுவரிலேயே உள்ளன. இவற்றில் கி.பி. 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டைய பரசுராமேசுவரர் கோயில் மிகப்பழமை வாய்ந்தது. அக்கோயிலின் அருகில் சித்தாரண்யாவில் உள்ள முக்தீசுவரர் கோயில் (கி.பி 950) ஒரிசா கட்டிடக் கலையின் மாணிக்கம் என்பார் பெர்கூசன். புவனேசுவரத்தில் உள்ள திரிபுவனேசுவரர் அல்லது புவனேசுவரர் என்கிற லிங்கராஜாவின் கோயிலிலிருந்து தான் புவனேசுவரம் என்ற பெயரைப் பெற்றது. பூரியில் உள்ள ஜகன்னாதர் கோயில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். கோனார்க்கில் உள்ள சூரியன் கோயிலின் காலம் கி.பி. 1238 – 1264 ஆகும்.

மத்திய இந்தியா

கஜுரஹோ : கஜுரஹோ கோயில் சண்டேளர்கள் காலத்தில் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) கட்டப்பட்டது. சைவ, வைணவ, சமண சமயத்தைச் சேர்ந்த முப்பது கோயில்கள் அங்கு உள்ளன. கண்டார்ய மகாதேவன் கோயிலும், (Kandarya Mahadev Temple) விசுவநாதர் கோயிலும் சைவ சமயத்தைச் சேர்ந்தவை ஆகும். ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு படிநிலையாக வளர்ச்சி பெற்று முழு வெளிப்பாடு அடைந்து இறுதியாகக் கண்டார்ய மகாதேவன் கோயில் என்ற மகத்தான பிரமாண்டமான கலைப் படைப்பாக முழுமை அடைந்தது. இக்கோயில் கைலாய மலையைப் போல வடிவம் பெற்றுள்ளது.

இராஜபுதனம்

அபுமலையில் தீல்வாராவில் உள்ள நான்கு சமணக் கோயில்கள் மிக அழகுடையனவாகும்.

தக்காணம்

ஐஹோல், பட்டடக்கல்லில் உள்ள கோயில்கள் நாகர, திராவிடப் பாணியின் கலப்பு ஆகும்.

திராவிடக் கலை

குப்தர் கோயில்களின் படிப்படி வளர்ச்சி அமைப்பும், மாமல்லபுரத்தின் குடைவரை ரதங்களும் திராவிடக் கோயில்களின் மையக் கருவாகும்.

குடைவரைக் கோயில்கள் : பல்லவர்கள் கட்டடக் கலையில் – கோயிற் கட்டடக் கலையில் – பல புதுமைகள் நிகழ்த்தினர். மகேந்திரவர்மன் குன்றுகளைக் குடைந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குகை வரைக் கோயில்களைக் கட்டினான். அந்த பாணியையே பின்பற்றிய அவன் மகன் நரசிம்மவர்மன் குன்றுகளைக் குடைந்து கட்டடஅமைப்பில் உருவாக்கித் தனி இரதங்களாக அமைத்தான். மாமல்ல புரத்தில் உள்ள எட்டு இரதங்களும் இப்படி உருவாக்கப்பட்டவை ஆகும். இந்த அமைப்பிலிருந்து உருவானவைதான் திரா விடக் கோயிற் கலைக்கே உரித்தான கரு வறைக்கு மேல் எழும்பியுள்ள பிரமிடு போன்ற விமானமும், கோயில் நுழைவாயி லில் பிரமாண்டமாக எழுப்பப்பட்டுள்ள இராஜகோபுரமும் ஆகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்த பல்லவர்களின் குடைவரை இரதங்களின் மேற்கூறிய இரண்டு தனித்தன்மைகள் தொடங்கிப் பின்னர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த விஜயநகரப் பேரரசு வரை திரா விடக் கலை பல்வேறு மாற்றங்களையும், வளர்ச்சியையும் பெற்று வந்தது.

கட்டி எழுப்பப்பட்ட கோயில்கள் : இராஜ சிம்ம பல்லவன் என்றழைக்கப் படும் இரண்டாம் நரசிம்மவர்மனுடன் (கி.பி. 695–722) குடைவரைக் கோயில்கள் ஒரு முடிவுக்கு வந்து தனியாகக் கட்டப் பட்ட கோயில்கள் எழும்பலாயின. இராஜ சிம்ம பல்லவனின் கோயில்களில் மூன்று மிக முக்கியமானவை. அவற்றுள் மாமல்ல புரம் கடற்கரைக்கோயில் காலத்தால் முற் பட்டது. இக்கோயிலின் முக்கிய அம்சம் இரண்டு தனி சன்னதிகள் (Shrines) ஆகும். இவை பிரமிடு போன்ற கோபுரமும் வளை வான ஸ்தூபமும், கூர்மையான சிகரத்தை யும் கொண்டு அருகருகே அமைந்துள்ளன. இக்கடற்கரைக் கோயிலின் விரிவே காஞ்சி புரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் ஆகும். மதில்களால் சூழப்பட்ட பிரகாரம், கோபுரம், தூண்களை உடைய மண்டபம், விமானம் என முழுவடிவம் பெற்று அவற்றுக்குரிய இடங்களில் எழுப்பப்பட்டு திராவிடக் கலையின் அழியாச் சின்னமாக இக்கோயில் இன்றும் காட்சி தருகிறது. மூன்றாவது கோயில் இதே அரசனால் எழுப்பப்பட்ட காஞ்சி வைகுந்தப் பெரு மாள் கோயில் ஆகும்.

மற்றும் சில பல்லவக் கோயில்கள் : சிறு கோயில்களாக இருந்தாலும் காஞ்சிபுரத் தில் உள்ள முக்தீசுவரர் கோயில், மாதங் கேசுவரர் கோயில், பனமலை பெரிய கோயில், செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள ஓரகடம் வடமல்லீசுவரர் கோயில், திருத் தணியில் உள்ள திருத்தணீசுவரர் கோயில், குடிமல்லத்தில் உள்ள பரசுராமேசுவரர் கோயில் ஆகிய கோயில்கள் பல்லவ பாணி யையே பின்பற்றின.

சாளுக்கிய பாணி : சாளுக்கிய பாணியும் திராவிடக் கலையை ஒத்து இருக்கின்றது. ஐஹோலில் உள்ள மெகுதி கோயில் (கி.பி. 634), பட்டடக் கல்லில் உள்ள சங்கமே சுவரர் கோயில் (கி.பி. 696 – 733) இதற்கு நல்ல எடுத்துக் காட்டுக்களாகும். பட்டடக் கல்லில் உள்ள விருபாட்சர் கோயில் (கி.பி. 733 – 746) காஞ்சி கைலாசநாதர் கோயிலை முன்மாதிரியாக வைத்து எழுப்பப்பட்டது.

எல்லோரா : திராவிட பாணியைப் பின் பற்றிச் சாளுக்கிய பிரசேத்தில் பலகோயில் கள் எழுப்பப்பட்டன. அவற்றுள் தலையா யதும் இந்தியக் கட்டடக் கலையின் தனித்தன்மை வாய்ந்ததுமான கோயில் எல் லோராவில் உள்ள கைலாநாதர் கோயில் ஆகும். இக்கோயில் வளாகம் ராஷ்டிரகூட அரசர்களால் கட்டப்பட்டு சாளுக்கியர் களால் (கி.பி. 758–773-இல் ஆண்ட கிருஷ்ணா) நிறைவு செய்யப் பெற்றது. இக்கோயில் வளாகம் குன்றிலிருந்து குடையப்பட்டதாகும். இதனை உலகின் மிகச் சிறந்த படைப்பு எனலாம்.

சோழர் கோயில்கள் : கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர் ஆட்சி மறைந்து சோழர் காலத்தில் திராவிட பாணி பல்லவர்காலக் கோயில்களை ஒத்து இருந் தாலும், இக்காலக் கட்டத்தில் ஒரு புத்து ணர்ச்சி காணப்பட்டது. தொடக்க காலச் சோழர் கோயில்களில் நார்த்தா மலையில் உள்ள விஜயாலய சோழீசுவர கோயில் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் கரு வறை வட்டவடிவில் புதுவிதமாக அமைந் துள்ளது. மற்றபடி பல்லவர் கோயில்களை யே ஒத்து இருக்கிறது.

சீனிவாசநல்லூர் : திருச்சி மாவட்டம் சீனிவாசநல்லூரில் உள்ள கோரங்கநாதர் கோயில் (கி.பி. 907 – 953) பல்லவர் கோயில்கள் அடிப்படையில் இருந்தாலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோழர் கால பாணி கோயிற் கலையில் புதிய நிலையை அறிவிக்கிறது எனலாம்.

பிருகதீசுவரர் கோயில் : பேரரசன் இராஜராஜ சோழன் காலத்திலும், அவனது மகன் இராஜேந்திர சோழன் காலத்திலும் சோழர் கோயிற் கலை உன்னதத்தை அடைகிறது. இராஜராஜ சோழன் பிருகதீசுவரர் கோயிலின் கோபுரம் இந்தியக் கட்டடக் கலையின் மணிமுடி என்லாம்.

கங்கை கொண்ட சோழபுரம் கோயில் : பிருகதீசுவரர் கோயிலைப் போலவே மிகப் பிருமாண்டமாக கி.பி. 1025-இல் இராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலைக் கட்டினான்.

சோழ–பாண்டியர் காலம் : கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசு வ்லிகுன்ற, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் தமிழ்நாட்டில் பாண்டியர் ஆட்சி வேரூன்றலாயிற்று. இந்தச் சோழ பாண்டிய மாற்றங்கள் நிகழ்கையில், தாராசுரத்தில் ஐராவதேசுவரர் கோயிலும், திருபுவனத்தில் கம்பகரேசுவரர் கோயிலும் எழுந்தன.

சாளுக்கியர்

வேசரபாணி : வேசர பாணி அல்லது சாளுக்கிய பாணி கன்னட நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பின் 200 ஆண்டுகள் சாளுக்கிய மன்னர்களாலும், பின்னர் ஹொய்சள அரசர்களாலும் பின்பற்றப் பட்டது. திராவிட – நாகரபாணிகளின் கலப்பாகச் சாளுக்கிய பாணி அமைந்து இருந்தாலும், திராவிடப் பாணியே தூக்கலாக இருந்தது. கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த ஐஹோல், பட்டடக்கல் கோயில்கள் பற்றி முன்னர்க் குறிப்பிடப் பட்டுள்ளது.

கோயில் அமைப்பு : சாளுக்கியக் கோயில் திராவிடக் கோயில்கள் போல விமானம், மண்டபம் எனும் இரு முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது.. விமானம் பிரமிடு போன்ற கோபுரத்தில் படிப்படியாக உயர்ந்த வளைவான சிகரத்தைக் (Pyramidal tower of storeyed elevation with a dome - shaped crowning member) கொண்டு அமைந்துள்ளது. மண்டபம் தூண்களால் தாங்கப்பட்ட தட்டையான கூரைகளைப் பெற்றுள்ளது.

சாளுக்கிய பாணி : சாளுக்கியக் கோயில்கள் இரண்டு, மூன்று, நான்கு என பல சன்னதிகளைக் கொண்டுள்ளன. கோயில்களின் அடிமுதல் உச்சிவரை; தூண்கள்; கதவுகள்; மேற்கூரைகள் என எல்லாப் பகுதிகளிலும் சிற்பங்கள் அழகுடனும், அலங்காரத்துடனும் செதுக்கப்பட்டுள்ளன.

சாளுக்கிய கோயில்கள் : ஹைதராபாத் மாநிலத்தைச் சேர்ந்த குக்கானூரில் உள்ள கள்ளேசுவரர் கோயில், சௌடாம்பூரில் உள்ள முக்தீசுவரர் கோயில், ஹவேரியில் உள்ள சித்தேஸ்வரர் கோயில், ஹரல் ஹல்லியில் உள்ள சோமேசுவரர் கோயில், நீரங்கியில் உள்ள சித்தராமேசுவரர் கோயில் (இந்நான்கு கோயில்களும் தார்வார் மாவட்டத்தில் உள்ளன) சாளுக்கியர் கோயிற் கலைக்கு நல் எடுத்துக்காட்டுக்களாகும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய பாணி கோயிற்கலை முழுவளர்ச்சி அடைந்து உன்னத வெளிப்பாட்டைப் பெற்றது. இதற்கு எடுத்துக் காட்டாக லக்குண்டி காசிவிசுவேசுவரர் கோயிலையும், ஹைதராபாத் மாநிலம் இட்டசியில் உள்ள மகா தேவன் கோயிலையும், பெல்லாரி மாவட்டம் குருவட்டியில் உள்ள மல்லிகார்ச்சுனர் கோயிலையும் கூறலாம்.

ஹொய்சள பாணி : சாளுக்கியரின் வழித் தோன்றலான ஹொய்சளரின் தாக்கம் சோமேசுவரர் கோயிலிலும், தார்வார் மாவட்டம் தொட்ட பாசப்பாவில் உள்ள கோயிலிலும் காணப்படுகிறது. துவார சமுத்திரத்தை ஆண்ட ஹொய்சளர்களின் காலத்தில் மைசூர் பகுதியில் சாளுக்கிய பாணி பெரு வளர்ச்சி பெற்றது எனலாம். மைசூர்ப் பகுதியில் ஹொய்சள பாணி கோயில்கள் எண்பது உள்ளன. மைய மண்டபம் – அதைச் சுற்றி சிறுகோயில்கள் பல என சாளுக்கிய பாணியைப் பின்பற்றியே ஹொய்சள பாணியும் அமைந்துள்ளது. நட்சத்திரம் போன்ற அமைப்பு எனலாம். உயர்ந்த பரந்த அடிமட்டத்தில் இக்கோயில்கள் எழுந்துள்ளன. கோயிலைச் சுற்றி மிருகங்கள், பறவைகள், மலர்கள் என அலங்காரத்துடன் செதுக்கப்பட்டுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஹளபீடு : ஹொய்சளக் கலைக்கு நல்ல எடுத்துக்காட்டு ஹளபீடில் உள்ள ஹொய்சளேசுவரர் கோயில் ஆகும். கோயிலைச் சுற்றி 700 அடிக்கு ஒரே வரிசையில் 2000-க்கும் மேற்பட்ட யானைச் சிற்பங்கள் பல்வேறு நிலைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இதுபோல 9 வரிசைகள் அந்தச் சுற்றில் உள்ளன என்றால் அக்கோயிலின் பிருமாண்டமான கலைநுட்ப வெளிப்பாடு புலப்படும். சிற்பியின் பெருமையைப் பறை சாற்றுவது இக்கோயில் எனலாம். ஹளபீடு ஹொய்சளேசுவரக் கோயிலைப் போன்றவையே கி.பி. 1268-இல் சோம்நாத்பூரில் கட்டப்பட்ட கேசவன் கோயிலும், கி.பி. 1117-இல் பேலூரில் உருவாக்கப்பட்ட சென்னை கேசவ கோயிலும் ஆகும்.[1]

தொகுப்பு

சிற்பக் கலையும், கோயிற் கட்டடக் கலையும், சைவ சமய வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. தொடக்கத்தில் மலைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்கள் தோன்றின. அஜந்தா குடைவரைக் கோயில்கள் இந்தப் பிரிவினைச் சேர்ந்தன. எல்லோராக் குகைகளில் (கி.பி. 550–750) பதினாறு கோயில்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவை ஆகும். எல்லோரா கயிலாயக் குகை உலகப் புகழ் வாய்ந்தது ஆகும். எலி பெண்டா குகைகளில் உள்ள சிவபெருமான் உருவச் சிலைகள் பேரழகு வாய்ந்தவை ஆகும்.

அடுத்துத் தோன்றிய குப்தர் காலத்தில் குடைவரைக் கோயில்களுக்குப் பதிலாகச் செங்கல்லாலும் கருங்கல்லாலும் கட்டப்பட்ட கோயில்கள் எழும்பின. குப்தர் காலத்திற்கு முன்வரை சிற்பங்களில் தாவரங்களும், மிருகங்களும் இடம் பெற்றன. குப்தர் கால சிற்பங்களில் மனித உருவம் முக்கியத்துவம் பெற்றது. குப்தர் கால தியான நிலைச் சிற்பங்கள் சிறப்புமிக்கவை ஆகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மாமல்லபுரத்தில் மகேந்திரவர்ம பல்லவனும், நரசிம்மவர்மனும் குன்றுகளைக் குடைந்து இரத வடிவில் கோயில்களைக் கட்டினர். இராஜசிம்ம பல்லவனின் மூன்று கோயில்கள் மிக முக்கியமானவை ஆகும். காஞ்சி கயிலாயநாதர் கோயில் இராஜசிம்மன் கட்டியதே.

கி.பி. 1010-இல் பிருகதீசுவரர் கோயிலும், கி.பி. 1025-இல் கங்கைகொண்ட சோழபுரக் கோயிலும் கட்டப்பட்டன. கி.பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கஜுராஹோ கண்டர்ய மகாதேவன் கோயிலும், விசுவநாதர் கோயிலும் எழும்பின. இதே காலகட்டத்தில் கர்நாடகாவில் ஹளபீடில் ஹொய்சளர்கள் ஹொய்சளேசுவரர் கோயிலைக் கட்டினர். கி.பி. 1117-இல் பேலூரில் கட்டப்பட்ட சென்னகேசவ கோயிலும் ஹொய்சள சிற்பக் கலைக்கு நல்ல எடுத்துக் காட்டு ஆகும். கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் கட்டப்பட்டது.

இவ்வாறு காலந்தோறும் இந்திய தமிழக அரசர்கள் கோயிற் கலையைப் பேணி வந்தனர்.

இசைக்கலை நோக்கில் சைவம்

தமிழ் இசை தொன்மை வாய்ந்தது ஆகும். சங்க இலக்கியமான பரிபாடல் முழுமையும் இசைப்பாட்டு ஆகும். சிலப்பதிகாரத்தில் பத்து காதைகளுக்கு மேலாக இசைப்பாட்டுக்கள் ஆகும்.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் காரைக் காலம்மையார் தமது திருப்பாடல்களை முதன் முதலாக இசை வடிவத்தோடு தந்தார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் இசைப் பனுவல்களாகப் பாடிக் குவித்தனர். தமிழிசையின் பொற்காலம் இதுவாகும். ''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தர்'' என்றே சம்பந்தர் தன்னைக் கூறிக் கொள்கிறார். பத்தாம் நூற்றாண்டில் திருவிசைப்பா பதிகங்கள் எழுந்தன. 11-ஆம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி தேவாரத் திருமுறைகளைத் தொகுத்து திருஎருக்கத்தம்பும்புலியூர் பாணர் குலப் பெண்ணொருத்தி மூலம் பண்ணமைத்து கொடுத்தார். திருமுறை பண்ணோடு மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட காலம் இது. அருணகிரிநாதர்

1) "The History and Culture of Indian People" Bhavan's - Part V.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்புகழ் (15-ஆம் நூற்றாண்டு) வற்றாத இசைச் சுரங்கம் ஆகும்.

1600-ஐ ஒட்டி வாழ்ந்தவர் சீர்காழி முத்து தாண்டவர் (கி.பி. 1560 – 1640). தில்லை நடராஜர் மீது எல்லையற்ற அன்பு பூண்டு கீர்த்தனைகளாகப் பாடினார். தமிழ்க் கீர்த் தனை மரபுக்கு இவரே முன்னோடி என லாம். சீர்காழியில் அம்பிகையே இவ ருக்குக் காட்சியளித்தார்.

''சேவிக்க வேண்டுமையா – சிதம்பரம்
சேவிக்க வேண்டுமையா''
''அருமருந்தொரு தனிமருந்திது
அம்பலத்தே கண்டேனே''
''தெண்டனிட்டேன் என்று சொல்வீர்''

போன்ற பாடல்கள் மிகப் புகழ் வாய்ந்த வை. இப்பாடல்கள் அரங்கேறாத நடன மேடையே இல்லை எனலாம்.

தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள் ளையும் (கி.பி. 1712–1787) தில்லை நட ராஜப் பெருமான் மீது அன்பு பூண்டவர். இவர் பாடிய கீர்த்தனைகளில் இன்று கிடைப்பவை 25 கீர்த்தனங்களே.

''காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே
என்னைக்
கைத்தூக்கியாள் தெய்வமே''

போன்ற பாடல்கள் மக்கள் மத்தியில் பரவலாகப் பாடப்பட்டவைகள் ஆகும்.

சீர்காழி அருணாசலக் கவிராயர் ராம நாடகக் கீர்த்தனைகளைப் பாடிச் சென்றார்.

கி.பி. 1786-இல் கோபாலகிருஷ்ண பாரதியார் நாகப்பட்டினத்துக்கு அருகே யுள்ள நரிமணம் என்ற ஊரில் பிறந்தார். தியாகராஜ சுவாமிகளைப் பாரதியார் சந்தித்தபொழுது சுவாமிகள் ''ஆபோகியில் ஏதாவது பாடி இருக்கிறீர்களா?'' என்று கேட்டார். அன்று இரவே

''சபாபதிக்கு வேறு தெய்வம்
சமானமாகுமோ?
தில்லை சபாபதிக்கு வேறு தெய்வம்
சமானமாகுமோ?''

என்ற பாடலை இயற்றி அடுத்த நாள் காலயில் தியாகய்யரிடம் பாடிக் காட்டி னார். பாரதியின் கீர்த்தனைகள் நாடு முழு வதும் பரவியது. நாகப்பட்டினம் செட்டி யார் ஒருவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நந்தனார் சரித்திரத்தை கீர்த்தனை வடிவில் இயற்றினார். நந்தனார் சரித்திர அரங் கேற்றம் நாகப்பட்டினத்தில் பெரிய திரு விழாவாக நடந்தேறியது.

''நந்தன் சரித்ரம் ஆனந்தம் – ஆனாலும்
அத்தி
யந்தம் பக்திரச கந்தஞ் – சொல்லச்
சொல்ல'' (நந்தன்)
''நாளைப் போதாமலிருப்பேனோ.
இந்த
நாற்ற நரம்பையின்னஞ் சுமப்பேனோ''

போன்ற பாடல்கள் நாடெங்கும் பரவி யது. இருமுறை திரைப்படமாக எடுக்கப் பட்டு பாடல்கள் பட்டித்தொட்டிகளெல் லாம் பரவின. பாரதியார் ''திருநீலகண்ட நாயனார் சரித்திரம்'' ''இயற்பகை நாயனார் சரித்திரம்'' ஆகியவற்றையும் கீர்த்தனை வடிவில் பாடித் தந்தார். பாரதியார் 95 வயது வரை வாழ்ந்தார். இவர் கீர்த்தனைகள் பாடியதும், தமிழ்நாட்டில் பரவியதும் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் சிதம்பர பாரதிகளும் அவரது மகனார் இராமசாமி ஐயரும் பெரிய புராணக் கீர்த்தனைகளை முழுமையாகப் பாடியுள்ளனர். கிருஷ்ண பாரதி என்பவர் (1791) திருவிளையாடற் புராணம் முழுமைக்கும் கீர்த்தனைகள் பாடியிருக்கிறார். இதேபோல பத்தொன் பதாம் நூற்றாண்டில் மகா வைத்யநாதய் யரின் சகோதரரான இராமசுவாமி ஐயர் பெரிய புராணக் கீர்த்தனம் முழுமையாகப் பாடியுள்ளார். கி.பி. 1839-இல் பிறந்த நீல கண்டசிவன் பெரிய புராண, திருவிளை யாடற் புராணங்களை ஒட்டி 26 கீர்த்தனை நூல்கள் பாடியிருக்கிறார். 19-ஆம் நூற்றாண்டில் அண்ணாமலை ரெட்டியார் முருகன் மீது காவடிச் சிந்து பாடியுள்ளார்.

இவ்வாறாகக் காலநெடும் பாதையில் இசையரசி ஊர்வலம் வந்திருக்கிறாள். சைவ இலக்கியத்தை வளப்படுத்தி யிருக்கிறாள்.[1]

1) ''ஆதிமும்மூர்த்திகள்'' – மு. அருணாசலம்..... இந்து அறநிலைய ஆணையம்.
2) ''கோபால கிருஷ்ண பாரதியார்'' – உ.வே. சாமிநாதயைர் ....1964.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவப் பெருவெளியில் காலம்

1)	பூமி தோற்றம்	– 470 கோடி ஆண்டுகள்.
2)	Homo Sapien உருவாதல்	– 30000 ஆண்டுகளுக்கு முன்.
3)	சிந்து சமவெளி நாகரிகம் மொகஞ் சோதாரோவில் சிவ வழிபாடு	– கி.மு. 3250.
4)	ஆரியர் வருகை	– கி.மு. 1500.
5)	வேதகாலம் – வேதத்தில் உருத்திரன்	– கி.மு. 1000.
6)	புத்தர் தோற்றம்	– கி.மு. 623.
7)	சைவ ஆகமங்களின் காலம்	– கி. மு. ஆறாம் நூற்றாண்டு.
8)	மகாபாரதம் – இராமாயணத்தில் சிவ வழிபாடு	– கி.மு. 450.
9)	பாசுபத சைவம்	– கி.மு. 200.
10)	சைவ புராணங்கள்	– கி.மு. 300 முதல் கி. பி. 700 வரை.
11)	எழுபது சிவன் கோயில்கள் கட்டிய கோச்செங்கணான்	– கி.பி. 230 – கி.பி. 255.
12)	காஞ்சி கைலாச நாதர் கோயில்	– கி.பி. 7–ஆம் நூற்றாண்டு.
13)	நாவுக்கரசர் – சம்பந்தர் போராட்டம் தேவாரம்	– கி.பி. 7–ஆம் நூற்றாண்டு.
14)	திருவாசகம் – திருக்கோவையார்	– கி.பி. 8–ஆம் நூற்றாண்டு.
15)	காஷ்மீர சைவம்	– கி.பி. 800.
16)	கைலாசநாதர் கோயில், எல்லோரா	– கி.பி. 8–ஆம் நூற்றாண்டு.
17)	செம்பியன் மாதேவி திருப்பணிகள்	– கி.பி. 970 – 985.
18)	முதல் இராசராச சோழன் – தஞ்சை பேருவுடையார் கோயில்	– கி.பி. 985 – 1014.
19)	கஜினி முகமது படையெடுப்பு	– கி.பி. 1000.
20)	போஜ அரசரின் ‘‘தத்துவப் பிரகாசம்’’	– கி.பி. 11–ஆம் நூற்றாண்டு.
21)	வீரசைவம்	– கி.பி. 11–ஆம் நூற்றாண்டு.
22)	கஜுரஹோ சிவன் கோயில்கள்	– கி.பி. 11–ஆம் நூற்றாண்டு.
23)	பெரிய புராணம்	– கி.பி. 12–ஆம் நூற்றாண்டு.
24)	சிவஞானபோதம்	– கி.பி. 13–ஆம் நூற்றாண்டு.
25)	கந்த புராணம்	– கி.பி. 13–ஆம் நூற்றாண்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

26) சிற்றம்பல நாடிகள்	–	கி.பி. 1325 – 1350.
27) சிவவாக்கியர்	–	கி.பி. 14–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.
28) அருணகிரியார்	–	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு.
29) புராணங்கள், சைவ சாத்திர உரைகள், திருமடங்களின் தோற்றம்	–	கி.பி. 16–ஆம் நூற்றாண்டு.
30) குமரகுருபரர், சிவப்பிரகாசர், தாயுமானவர்	–	கி.பி. 17–ஆம் நூற்றாண்டு.
31) சிவஞான முனிவர், பரஞ்சோதி	–	கி.பி. 18–ஆம் நூற்றாண்டு.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாம் பகுதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

I

1. பத்தொன்பதாம் - இருபதாம் நூற்றாண்டு அரசியல், சமயச் சூழல் - இந்தியா

ஆங்கிலேயரின் ஆதிக்கம் கி.பி. 1818-ஆம் ஆண்டில் இந்தியாவில் முழுமை அடைந்தது. 1813-இல் இயற்றப்பட்ட "The Charter Act" என்ற சட்டம், கிறிஸ்துவ மிஷனரிகளை இந்தியாவிற்குள் அனு மதிக்குமாறு கிழக்கிந்திய கம்பெனியைக் கட்டாயப்படுத்தியது. இதனால் பெரு மளவு கிறிஸ்துவ மதமாற்றம் இந்தியாவில் நிகழ ஆரம்பித்தது.

பள்ளிகளில் பைபிள் போதிக்கப்பட்டது. சிறைச் சாலைகளில் கூட கிறிஸ்துவ சமய போதனை நிகழ்ந்தது. இந்துக் கடவுளரை இழித்துப் பேசினர். புகை வண்டிப் போக்கு வரத்தும், அஞ்சல் துறையும் இந்தியாவை ஒருங்கிணைத்தது போல கிறிஸ்துவ சமயமும் ஒருங்கிணைக்கும் என வலியுறுத்த ஆரம்பித்தனர். 1837-ஆம் ஆண்டில் நாட்டில் தோன்றிய பஞ்சத் திற்குப் பின் அனாதைக் குழந்தைகளைக் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றினர்.

1857-ஆம் ஆண்டில் சிப்பாய்கள் பயன் படுத்தும் துப்பாக்கி ரவையில் பசு, பன்றி களின் கொழுப்பினைச் சேர்த்தது இந்துக் களையும் முஸ்லீம்களையும் ஒரு சேர கொதித்தெழ வைத்தது. சிப்பாய்க் கலகம் என்ற புரட்சி வெடித்தது. 1858-ஆம் ஆண்டில் இந்திய அரசு கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசருக்கு மாற்றப்பட்டது.

1905 பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் துவக்கமாயிற்று. இந்திய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக 1947-ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றது.

பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவுப் பகுதியிலிருந்து பத்தொன்பதாம் நூற் றாண்டின் மையப்பகுதி வரை இந்தியா வில் கலாச்சாரக் குழப்பம் மிக்கிருந்தது. ஆங்கிலேய ஆதிக்கத்தின் விளைவாக மேனாட்டுக் கலாச்சாரத்தால் இந்தியா தாக்குண்டு இருந்தது. ஆட்சிப் பொறுப்பு தகர்ந்து போனமையால் புராதன பண் பாட்டில் இருந்த நம்பிக்கையும் ஆட்டம் காண ஆரம்பித்துவிட்டது. ஆங்கிலேய ஆதிக்கத்தினால் ஐரோப்பியச் சிந்தனை களும் இலட்சியங்களும் இந்தியாவில் வேகமாகப் பரவி பாரதப் பண்பாட்டைச் சீரழித்தன.

ஆங்கிலப் படிப்பு மோகத்தினால் பிறப்பால் இந்தியர்களாயிருந்தவர்களும் மேனாட்டு ரசனையிலும், நாகரிகத்திலும் மூழ்கித் திளைக்கலாயினர். இளைஞர்கள் இந்தியாவிற்கு என்று ஒரு தனிப் பண்பாடு இல்லாததாகவும், இந்தியாவின் கடந்த காலம் தவறான இலட்சியங்களைக் கொண்டிருந்ததாகவும் கருதலாயினர். இந்த மாற்றங்கள் இந்தியர்களை ஒரு நீள் உறக்கத்தில் ஆழ்த்திவிட்டது.

எந்தக் கேட்டிலும் ஒரு நன்மை விளையும். மத்திய காலத்தில் (Middle Ages) இஸ்லாமிய ஆதிக்கத்தினால் இந்தியாவில் பக்தி இயக்கம் வேகம் கொண்டது போல,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேனாட்டு நாகரிகத்தின் தாக்கம் இந்து சமயத்தில் பல சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணமாயிற்று.

இச்சீர்திருத்த இயக்கத்தில் முதலில் தோன்றியது பிருமசமாஜம் ஆகும். 1828-ஆம் ஆண்டில் ராஜாராம் மோகன்ராய் பிரும சமாஜத்தைத் தோற்றுவித்தார். ஆங்கில அறிவின் துணையுடனும், கிறிஸ்துவ, இஸ்லாமியக் கோட்பாடுகளைக் கொண்டும் தமது இயக்கத்தை நெறிப் படுத்தினார். விக்கிரக வழிபாட்டு எதிர்ப்பு. ஒரே கடவுள் தத்துவம், கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறும் "சதி" முறையை ஒழித்தல் போன்ற பல சீர்திருத்தக் கருத்துக்களை ராஜாராம் மோகன்ராய் முன் வைத்தார். இன, சாதி, மொழி வேறுபாடில்லாமல் "ஒரே கடவுள்" கோட்பாட்டை ஏற்கும் அனைவரும் பிரும சமாஜத்தில் அனுமதிக்கப் பட்டனர். பெண்கள் வளர்ச்சிக்காகவும் பிருமசமாஜம் பாடுபட்டது. சாதி வேறுபாடு பிரும சமாஜத்தில் இடம் பெறவில்லை. நாத்திகம், கிறிஸ்துவம், இந்து சமய புராதனத் தன்மை அனைத்தையும் பிரும சமாஜம் எதிர்கொண்டது.

ராஜாராம் மோகன் ராய், மகரிஷி தேவேந்திரநாத் தாகூர், பிரம்மானந்த கேஷப் சந்திரா சென் ஆகியோர் தொடர்ந்து தலைமைப் பொறுப்பேற்கப் பிரும சமாஜம் நாடெங்கும் வேகமாகப் பரவியது.

1875-ஆம் ஆண்டில் பம்பாயில் சுவாமி தயானந்தரின் தலைமையில் "ஆரிய சமாஜம்" என்று மற்றொரு இயக்கம் தோன்றிற்று. சுவாமி தயானந்தர் தன்னுடைய வலுவான வாதத்திறமையால் கிறிஸ்துவப் பிரச்சாரத்தை முறியடித்தார். இஸ்லாமியத்தையும் வன்மையாக எதிர்த்தார். ஏன்? பிரும சமாஜத்தைக் கூட அவர் ஏற்கவில்லை.

தயானந்தர் வேதங்களை முதன்மைப் படுத்தினார். "அனைத்து ஞானத்திற்கும் அடித்தளம் வேதங்கள்" என்றார் தயானந்தர். ஆனால் வேதகாலத்திற்குப் பின் நிகழ்ந்த விளைவுகளைத் தயானந்தர் ஏற்கவில்லை. வேதங்கள் பிராமணர்களுக்கே உரியவை என்ற நிலையைமாற்றி, அனைவரும் படிக்க ஏற்பாடு செய்தார். சாதி வேறுபாட்டைக் கண்டித்தார். பெண் விடுதலைக்காகப் பாடுபட்டார். கல்வி போன்ற அறச் செயல்களில் ஆரிய சமாஜத்தைக் கொண்டு செலுத்தினார். இவற்றால் ஆரிய சமாஜம் வடநாட்டில் குறிப்பாக பஞ்சாபில் வேகமாகப் பரவியது.

அடுத்துத் தோன்றிய பிரும ஞானசபை கிறிஸ்துவ, லோகாயத கொள்கைகள் பரவுவதைத் தடுத்து நிறுத்தியது. 1875-ஆம் ஆண்டில் நியூயார்க்கில் பிளாவட்ஸ்கி என்ற ரஷிய அம்மையாரும், ஆல்காட் என்ற ஆங்கிலேய ராணுவ வீரரும் பிரும ஞானசபையைத் (The osophical society) தோற்றுவித்தனர். இந்து தத்துவமும், திபெத்திய பௌத்தக் கூறுகளும் இணைந்த இந்த இயக்கம் மேனாட்டில் கவர்ச்சியைத் தந்து மேனாட்டார் பலரை இவ்வியக்கத்தில் ஈடுபடுத்திற்று. இந்து சாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகெங்கும் பரவச் செய்தது. பிரும ஞானசபை "பிருமத்தை அறிதலை – பிரும வித்யையை" முதன்மைப் படுத்தியது.

இந்தச் சீர்திருத்த இயக்கங்கள் இந்து கலாச்சாரம் முழுமையாக மேனாட்டுப் பண்பாட்டில் அடிபட்டுப் போகாமல் தடுத்து நிறுத்தியது. இந்து சமயத்தை முழுமையாகச் சீர்திருத்த வேண்டும் என்ற வேகத்தில் பிரும சமாஜமும், ஆரிய சமாஜமும் சனாதன இந்துக்களின் பிடியிலிருந்து விலகிவிட்டன. சனாதனிகள் பாரதத்தின் ரிஷிகளும், முனிபுங்கவர்களும் காட்டிய வழியினையே கடைப்பிடித்து வேத, இதிகாசங்கள் காட்டிய வழியிலேயே நின்றுதம் கொள்கைகளில் விடாப்பிடியாக நின்றனர். சீர்திருத்தக்காரர்கள் அவர்களைப் பழமைவாதிகள் என ஒதுக்கினர்.

இந்த சனாதனிகள் நெடுநாள் காத்திருக்கத் தேவையில்லாமல் போய் விட்டது. இந்திய வானில் தெய்வத் தன்மை பெற்றவராய் சக்தி தரிசனம் கண்டவராய் இந்து சமயக் கொள்கைகள், இலட்சியங்களில் சிறிதும் விலகாது அசாதாரணமான எளிமையோடு விளங்கியவராய் - காலகாலமாகப் பாரத மண்ணில் தோன்றிய அருளா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ளர்கள், ஞானிகள், ரிஷிகள் போல உள்ளு ணர்வு பெற்று அனுபவ வெளிப்பாட்டின் ஆளுமை கொண்டு அருளுரை மொழிப வராய்த் தோன்றிய தாரகைதான் இராம கிருஷ்ண பரமஹம்சர்.

உள்ளுணர்வில் நிகழும் அனுபவ வெளிப்பாடுதான் இந்து சமயத்தைக் கால காலமாகக் கட்டிப்போட்டு வந்தது. அத்வைதிகளின் தத்துவ விளக்கங்கள் – ராஜயோகத்தின் பல்வேறு நிலைகள் – ஹடயோகிகளின் கடுமையான உடற் பயிற்சிகள் – சாக்த, வைணவ, சைவ சமயங் களின் அன்பின் அடிப்படையிலான பக்தி நெறி – இவையாவும் அனுபவ வெளிப் பாடே.

இறைக் காட்சி பெற்ற ஓர் ஆன்மா, இந்து சமயத்தின் பல்வேறு கோட்பாடு களையும் உண்மைகளையும் கண்முன் கொண்டு வருவதைத் தரிசிக்கத் தான் இந்து சமயம் காத்திருந்தது. அந்தக் காத்திருத்த லுக்கு விடையாக இராமகிருஷ்ணர் தோன்றினார். புராதன இந்து சமயம் எந்த இலட்சியங்களுக்காக இருந்ததோ அவற்றில் மாற்றம் இல்லாமல் மீட்டுரு வாக்கம் செய்யும் ஏணியாக இந்து சமுதாயத்தினர் பரமஹம்சரைக் கண்டனர். ''இராமகிருஷ்ணரின் வாழ்வு கடவுளை நேரில் தரிசிக்க வைக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மன அமைதி தரும் வாழும் தத்துவமாக இராமகிருஷ்ணர் திகழ்ந்தார்'' என்கிறார் காந்தியடிகள். "The story of Ramakrishnan Paramahamsa's life is a story of religion in practice. His life enables us to see God face to face... In this age of scepticism, Ramakrishna presents an example of a bright and living faith which gives solace to thousands of men and women who would otherwise have remained without spiritual light".

பகுத்தறிவுவாதிகளின் அறிவு பூர்வமான கேள்விகளுக்கும் ராமகிருஷ்ணர் அரிய விளக்கங்கள் கொடுத்தார். அதனால்தான் கல்கத்தா நகர்ப்புறச் சூழலில் வாழ்ந்த – நவீன சிந்தனைகள் மீதூர்ந்த – கடவுள் மறுப்புக் கொள்கையில் ஈடுபட்ட நரேந்திர ரும், இராமகிருஷ்ணரால் ஈர்க்கப்பட்டு சுவாமி விவேகானந்தர் ஆனார்.

இறையனுபவம் பெற்று இன்ப நிலை அடைந்தவர் இராமகிருஷ்ணர். 1836-ஆம் ஆண்டில் தோன்றிய இராமகிருஷ்ணர் 1855-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் உள்ள காளி கோயிலுக்குப் பொறுப்பேற்றார். அங்கே அம்பாள் தரிசனம் கிட்டியது. அவரே அந்த அனுபவத்தை விவரிக்கிறார். அனைத்துச் சமயங்களின் இறையனு பவமும் அவருக்குக் கிடைத்தது. அனைத்து சமய நெறிகளையும் ஓரோர் காலம் பின்பற்றினார். 1862-ஆம் ஆண்டில் பைரவி என்ற பெண் துறவி மூலம் தாந்திரிக சாதன அனுபவம் பெற்றார். ஜடாதாரி என்ற வைணவத் துறவி தக்ஷிணேசுவரத்தில் தங்கினார். அவருடன் இருந்த காலத்தில் பரமஹம்சர் இராமபிரானைக் குழந்தை யாகப் பாவித்துத் தாயின் வாத்சல்யத்தோடு இராமரின் உலோகத் திருமேனியுடன் குலாவி வந்தார். மதுரபாவத்தில் மீதூர்ந்த பரமஹம்சர் தன்னையே கோபியாக – இராதையாகப் பாவித்துக் கண்ணன் மேல் காதல் கொண்டார். ஒரு நாள் பகவத் கீதை படிக்கக் கேட்டபொழுது பரமஹம்சருக்குக் கண்ணபெருமான் காட்சியளித்தார்.

டோடாபூரி என்ற வேதாந்த குரு தக்ஷிணேசுவரத்தில் தங்கிப் பரமஹம்ச ருக்கு அத்வைத வேதாந்தத்தைப் பிழிந்து கொடுத்தார். 1865-ஆம் ஆண்டில் மூன்று நாட்கள் இராப்பகலாக பரமஹம்சர் நிர்வி கற்ப சமாதி நிலையில் இருந்தார். பக்தி நெறி, ஞானமார்க்கம், யோகநெறி, கர்ம நெறி – என இந்து சமயத்தின் அத்தனைக் கூறுகளும் பரமஹம்சருக்குக் கைவந்தி ருந்தன.

1866-ஆம் ஆண்டில் தக்ஷிணேசுவரர் கோயில் தோட்டத்தில் ஒரு இஸ்லாமிய பக்தர் மிகுந்த சிரத்தையோடு தொழுகை செய்து கொண்டிருந்தார். அவரிடம் உபதேசம் பெற்றுக் கொண்ட பரமஹம்சர் முஸ்லீம் பக்தர் போலவே உடைகளை அணிந்து கொண்டு, பழக்க வழக்கங்களை யும் மாற்றிக் கொண்டு, நமாசும் செய்து வரலானார். பரமஹம்சருக்கு நபிகள் நாயகம் காட்சியளித்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1874-ஆம் ஆண்டில் ஷம்பு சரண் முல்லிக் என்பவரைப் பைபிள் படிக்கச் சொல்லிக் கேட்டு வரலானார். மூன்று நாள்கள் பரமஹம்சர் இதே சிந்தனையாக இருந்தார். நான்காவது நாள் பரமஹம்சரின் இதயத்திலிருந்து ஒரு குரல் வெளிப்பட்டது. ''இது மனிதகுல மீட்சிக்காக இரத்தம் சிந்திய இயேசு பிரானே'' என்ற குரல் எழுந்தது. இயேசுபிரான் பரமஹம்சரின் சவிகல்ப சமாதியில் கலந்து விட்டார்.

பரமஹம்சரின் தெய்வீக நிலையில் ஈர்க்கப்பட்டுப் படித்தவர்களும், பாமரர்களும் அவரைச் சுற்றித் திரண்டனர். சீடர்கள் பலர் உருவானர். அவர்களுள் தலையாயவர் சுவாமி விவேகானந்தர். 15.8.1886-ஆம் ஆண்டில் பரமஹம்சர் சமாதி கூடுமுன் விவேகானந்தரை அழைத்து ''என்னுடைய எல்லாவற்றையும் உனக்கு கொடுத்து விட்டேன். நான் இப்பொழுது வெறும் ஏழைப் பக்கிரி. இந்தப் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்'' என அருளுரை கூறிவிட்டு இறைவனுடன் கலந்தார்.

பரமஹம்சரிடம் அருளுபதேசம் பெற்ற விவேகானந்தர் பரமஹம்சரின் சீடர்களையெல்லாம் ஒன்று திரட்டினார். 1893-ஆம் ஆண்டில் அமெரிக்கா சென்ற விவேகானந்தர் சிகாகோ சமயப் பேரவையில் (Parliament of Religion) உரையாற்றினார். பேரவையையே அவரது பேச்சு மெய் மறக்க வைத்து விட்டது. பேரவை நடந்த பதினாறு நாட்களில் பத்து முறை விவேகானந்தர் பேச அழைக்கப்பட்டார். The New York Herald இவ்வாறு எழுதியது. "Undoubtedly the greatest figure in the Parliament of Religiion. After hearing him, we feel how foolish it is to send missionaries to their learned nation". மூன்று ஆண்டுகள் அமெரிக்கா முழுமையும் ஐரோப்பாவும் சுற்றுப் பயணம் செய்து பல இடங்களில் உரையாற்றினார்.

இந்தியா திரும்பியவுடன் இராமகிருஷ்ணரின் பிற சீடர்களின் துணை கொண்டு மே 1897-ஆம் ஆண்டில் ''ராமகிருஷ்ணா மிஷன்'' என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

1899-ஆம் ஆண்டில் மீண்டும் அமெரிக்கா சென்று ஒன்றரை ஆண்டுகள் சுற்றுப் பயணம் செய்தார்.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் அருள் மொழிகளை அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா ஆகிய நாடுகளில் பிரச்சாரம் செய்தும், சீடர்களைக் கொண்டு ராமகிருஷ்ணாமிஷன் அமைத்தும் தான் மேற்கொண்ட பணியினை விவேகானந்தர் நிறைவு செய்தார். ராமகிருஷ்ணா மிஷன் சமயப் பணிகளோடு, பஞ்சம், வெள்ளம், நிகழும் காலங்களில் மக்களுக்கு உதவும் தொண்டு நிறுவனமாகவும் மிளிரலாயிற்று.

குருநாதர் இலட்சியங்களை நிறைவு செய்த விவேகானந்தர் 1902-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. பத்தொன்பதாம் - இருபதாம் நூற்றாண்டு அரசியல், சமயச் சூழல் - தமிழ்நாடு

ஆங்கிலேய ஆட்சியினால் தமிழ் நாட்டிலும் ஆங்கிலேயர் அடக்குமுறை தொடர்ந்தது. தமிழர்கள் தீண்டத்தகாத வர்களாகக் கருதப்பட்டனர். சிறு விஷயங்க ளுக்குக் கூட ஆங்கிலேயர் சாட்டையால் அடித்தனர்.

ஆங்கிலேய ஆட்சியினால் அறிவியல், ஆங்கிலம் முதன்மை பெற்றன. அதனால் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியும், தமிழ் மொழியும் அழிந்து போகும் எனத் தமிழர் வேகங் கொண்டனர். போக்குவரத்து, ரயில் வசதிகள் பெருகின. அதனால் ஆங்கிலேயர் வாணிகம் பெருகியது.

ஆங்கிலேயக் கல்வி முறையால் உயர் குடியினர் பயன் பெற்றனர். செய்தித் தாள்கள் வந்தமையால் மக்களிடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டது. உரிமை பற்றி பேசலானார்கள். இதன் விளைவால் இந்து இலக்கியச் சங்கம் *(1830)*, சென்னை சுதேசி சங்கம் *(1852)*, சென்னை மகாஜன சபை *(1884)* போன்ற இயக்கங்கள் தோன்றின.

1885-ஆம் ஆண்டில் பம்பாயில் காங்கிரஸ் முதல் மாநாடு நடைபெற்றது. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி ஒரு பிராமண அமைப்பாக கருதப்பட்டது. இதன் விளைவாகப் பிராமணர் அல்லாதார் ஒன்று சேர்ந்து 1916-ஆம் ஆண்டில் நீதிக்கட்சியைத் தோற்றுவித்தனர். தமிழக ஆட்சிப் பொறுப்பேற்கும் அளவுக்கு நீதிக்கட்சி வளர்ந்தது. காங்கிரஸிலும் காமராஜர் போன்றோர் முதன்மை பெற ஆரம்பித்ததும் பிராமணர் அல்லாதோர் இயக்கம் என்ற வேகம் குறைந்தது. நீதிக் கட்சி தன் வலுவினை இழந்தது. 1944-ஆம் ஆண்டில் நடந்த மாநாட்டில் திராவிடர் கழகம் என்ற அமைப்பினை ஈ.வே. ராமசாமி பெரியார் அவர்கள் தோற்று வித்தார்கள்.

பெரியார் அவர்கள் பிராமண எதிர்ப் போடு, கடவுள் மறுப்பு, புராண எரிப்பு, விநாயகர் சிலை உடைப்பு எனத் தனது பிரசாரத்தை முடுக்கி விட்டார்.

1947-ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றது. 1947-ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயர் ஆதிக்கத்தினால் கிறிஸ்துவ சமயத்தை எதிர் கொண்ட சைவ சமயம் 1947க்கு பிறகு திராவிட இயக்கக் கடவுள் மறுப்புக் கொள்கையையும் எதிர் கொள்ள வேண்டி வந்தது.

1949-ஆம் ஆண்டில் பெரியாரின் சீடர்களான அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் திராவிட கழகத்தி லிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினைத் தொடங்கினர். திராவிட இயக்கத் தலைவர்கள் சைவ, வைணவக் கடவுளரைத் தாக்கியும், புராணங்களை மறுத்தும் எழுதியும், பேசியும் வந்தனர். திரைப்படம் என்ற வலுவான சாதனம் அவர்களுக்குக் கைகொடுத்தது. பெரிய புராணம், கம்ப ராமாயணத்தைத் தீயில் இடவேண்டும் என 'தீ பரவட்டும்' என்ற நூலேஎழுந்தது. கடவுள் மறுப்புப் பிரச் சாரம் ஒருபுறம் இருந்தாலும் 1947 முதல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1967 வரை சமய உணர்வு அரசால் போற்றப் பட்டு வந்தது.

1967-ஆம் ஆண்டில் தி.மு.க. தமிழக அரியணை ஏறியது. தி.மு.க. இயக்கம் கடவுள் மறுப்பு இயக்கமாக இருந்தாலும் ஆட்சியாளர் என்ற முறையில் சமயவாழ் வில் குறுக்கிடவில்லை. ஆனால் அதே சமயத்தில் சமய வளர்ச்சிக்குத் துணை புரியவில்லை.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்தியத் திருநாட்டை அரசியல் நிர்ணயச் சட்டம் சமயச் சார்பற்ற நாடு (Secular State) எனப் பிரகடனப்படுத்தியது. இதனால் சிறு பான்மை சமயத்தினரின் சமய வாழ்வில் – சமய நிலையங்கள் – அரசு தலையிடக் கூடாது என்றும், சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிலையங்களிலும் மாணவர் சேர்க்கை, ஆசிரியர் நியமனம் – ஏன் சமய போதனை கூட அனைத்துமே அவர்கள் விருப்பத்திற்கேற்ப செய்யலாம் என்றும் அரசியல் நிர்ணயச் சட்டம் வழி வகுத்தது. இந்தச் சலுகைகள் பெரும்பான்மைச் சமய மான இந்துச் சமயத்திற்குக் கிடைக்க வில்லை. இதனால் இந்து சமய நிலையங் களைக் – கோயில்கள், ஏன் திருமடங்க ளைக் கூட – கட்டுப்படுத்தும் இந்து அற நிலையத்துறைச் சட்டம் கொண்டு வரப் பட்டது. இந்துக் கோயில்களுக்குச் சமய நம்பிக்கையற்ற அரசியல்வாதிகள் அறங் காவலர்களாக நியமிக்கப்பட்டனர். கோயில்களுக்கு ஏராள நிலங்கள் இருந்தும், குத்தகைச் சட்டம் கொண்டு வரப்பட்டு கோயிலுக்கு 40%, 25% வீதம் என்று படிப் படியாகக் குறைக்கப்பட்டுப் பல ஆண்டு கள் தள்ளுபடியும் செய்யப்பட்டு வரு மானம் இல்லாத நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் முதல் வகுப்பிலிருந்து கல்லூரிப் படிப்பு வரை சைவ சமயப் பாடத்திட்டம் – சைவ சித்தாந்தம் உட்பட – நடைமுறையில் உள்ளது. தமிழ் நாட்டில் அது இயலாது. தமிழ் இலக்கிய பாடத்தில் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த திருமுறைப் பாடல்கள் இப்பொழுது அருகியே காணப்படு கின்றன.

மக்கள் ஊடகங்களான திரைப்படம், தொலைக்காட்சி, செய்தித் தாள்களும் சமயச் செய்திகளுக்கு இடமளிப்பதில்லை. சிறு சிறு இடைப்பட்ட காலந்தவிர சென்ற இருநூறு ஆண்டுகளிலும் (ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்) சமய உணர்வு கடுமை யாக நசுக்கப்பட்டு, மதமாற்றம் என்ற அளவில் வீறுகொண்டு இருந்தது. மதமாற்றம் இன்றுவரை நிகழ்ந்து வருகிறது.

தமிழ் நாட்டில் சமயச் சூழலைப் பொறுத்த வரையில் இருபதாம் நூற்றாண் டில் ஆரம்ப காலத்தில் இரமண மகரிஷி தம் தவ வலிமையால் உலக அளவில் மக்களை ஈர்த்து வந்தார். அவர் தனியாக சமயக் கருத்துக்களை முன் வைக்கவில்லை. அன்பு, கருணை ஒன்றே அவர் காட்டிய சமயம். இதே கால கட்டத்தில் பாண்டிச் சேரியில் அரவிந்தர் வேதாந்தக் கருத்துக் களை முதன்மைப்படுத்தும் ஆசிரமத்தை நிறுவினார். Mother எனப்படும் 'அன்னையும்' வழிபடப்பட்டார்.

தமிழ் நாட்டில் நாத்திக வாதம் வலுக் குறைந்து, பக்தி நிலை எங்கும் வீசினாலும் அது சைவ சமய வளர்ச்சியை நோக்கி முழுமையாகச் செல்லவில்லை. மக்கள் கவனமெல்லாம் சபரிமலைக்கும், மேல் மருவத்தூருக்கும் திரும்பியுள்ளது.

1950-ஆம் ஆண்டில் சர்.பி.டி. ராஜன் அவர்கள் சபரி மலையில் ஐயப்பன் சுவாமியைப் பிரதிட்டை செய்வதற்காக தமிழகம் எங்கும் வீதியுலாவாகக் கொண்டு வந்தார். அன்று சூடுபிடிக்கத் தொடங்கிய ஐயப்ப வழிபாடு இன்று தமிழகத்திலிருந்து – கிராமங்களிலிருந்து – வசதி குறைவான மக்களும் கடன் வாங்கியாவது செல்லக் கூடிய அளவிற்குப் பேரியக்கமாக வளர்ந்து விட்டது. மார்கழி மாதத்தில் இலட்சக் கணக்கான மக்கள் சபரி மலையில் அலை மோதுகின்றனர். ஒவ்வோராண்டும் மார்கழி மாதத்தில் தமிழ் நாட்டுச் சைவ, வைணவக் கோயில்களில் ''சாமியே சரணம் ஐயப்பா'' என்ற பெரு முழக்கம் எழுந்து வருகின்றது. யாத்திரை தொடங்க இருமுடி கட்டவும், தலயாத்திரை செல்லவும் ஐயப்ப பக்தர்கள் சைவ,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைணவக் கோயில்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஏழை பணக்காரன் வேறுபாடு, உயர் குலம் – தாழ்குலம் என்ற பிரிவினை, படித்தவன் – பாமரன் என்ற ஏற்றத் தாழ்வு இல்லாமல் அனைவரும் சமம் என்று கருதப்படுவதும் ஒருவரை ஒருவர் ''சாமி'' என்று அழைத்துக் கொள்வதும், ஒருவர் காலில் ஒருவர் விழுந்து வணங்குவதும் (வயது வேறுபாடு கூட இல்லை) ஐயப்ப பக்தர்களிடம் காணப்படும் சிறந்த பண்புகளாகும்.

அண்மைக் காலத்தில் வேகமாகப் பரவி வருவது மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாடு ஆகும். 1980-ஆம் ஆண்டுகளில் அருள்வாக்கு கொடுத்து வந்த அடிகளாரை நோக்கி மக்கள் திரண்டனர். இன்று தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் இருக்கின்றது. ஐயப்ப வழிபாட்டுக்கு இணையாகக் கூட்டம் மேல் மருவத்தூருக்குச் செல்கிறது. மேல் மருவத்தூரில் அடிகளார் வழிபாட்டோடு கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் என்று பெருமளவில் சமுதாயப் பணிகளும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. வீட்டு விலக்கான பெண்களும் நேரடியாக மருவத்தூரில் வழிபாடு செய்யலாம் என்பது பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைந்து விட்டது.

தமிழ் நாட்டில் வேரூன்றாவிட்டாலும் தமிழ்நாட்டு மக்களைக் கவர்ந்திருப்பது புட்டபருத்தி சாயிபாபா வழிபாடு ஆகும். சாயிபாபா அவர்களும் ஆரம்ப காலங்களில் அற்புதங்கள் பல நிகழ்த்தி வந்தாலும் பிற்றைக் காலத்தில் உலகத் தரத்திற்கு ஒப்ப மருத்துவ வசதி, இருநூறுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர்வசதி, சமயம், ஒழுக்கம் இவற்றின் அடிப்படையிலானதும் துவக்க வகுப்பு முதல் பல்கலைக் கழகப் படிப்பு வரை தரப்படுவதுமான கல்விப் பணி – ஆகியன செய்துள்ளமையால் புட்டபருத்தி கிராமத்தை ஒரு மகத்தான புனித நகரமாக ஆக்கியுள்ளது.

இவையல்லாமல் அபுமலையை மையமாகக் கொண்ட பிருமகுமாரிகள் சங்கமும், கோவைப் பகுதியில் வேதாத்திரி மகரிஷி அவர்களின் ''வாழ்க வளமுடன்'' எனும் இயக்கமும் தமிழ் நாட்டில் வேரூன்ற ஆரம்பித்துள்ளன. இந்த இரண்டு இயக்கங்களும் நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் பரவி வருவது வியப்புக்குரிய செய்தியாகும்.

இது தமிழ் நாட்டின் இன்றைய சமயச் சூழல் ஆகும். ஒருபுறம் அரசின் முழுமையான ஆதரவு பெறாமலும், மறுபுறம் பல்வேறு சமய இயக்கங்கள் தமிழக மக்களை ஈர்த்து வந்தபோதும் சைவ சமயம் இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது என்று சொன்னால் தமிழகச் சைவ சான்றோர்களும் அறிஞர்களும் சைவ பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து வந்தமையால் தான் என்றால் மிகையாகாது.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

II

ஆன்றோர்கள் - அறிஞர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ ஆன்றோர்களின் பணிகளைக் கணிக்கும் பொழுது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறைந்தவர் களைப் பற்றியும் சிந்திக்க வேண்டியிருக் கிறது. தமிழ் நாட்டில் வரலாற்றுணர்வு இல்லாமையினால் இது குறித்து முழுமை யாக ஆராய முடியவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மறைந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் கோபால கிருஷ்ண பாரதியார் ஆவார். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் காலத்திலும் வாழ்ந்திருக் கின்றார். எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கோபால கிருஷ்ண பாரதியாரின் கீர்த்தனை களில் தமிழ்நாடு கிறங்கிப் போயிருக்க வேண்டும்.

வள்ளல் பெருந்தகையை விட்டு விட்டால் பத்தொன்பதாம் நூற்றாண்டு சைவ உலகில் ஆதிக்கம் செலுத்தியவர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களே ஆவார். (1815-1876) தமிழகத் தலங்கள் தோறும் சென்று தல புராணங்கள், பிரபந்தங்கள் பாடித் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாராய்த் திகழ்ந்தார்.

ஈழத்தின் சமய வரலாற்றையே மாற்றி யமைத்த நாவலர் பெருமானை பற்றி ''ஈழத்து ஆன்றோர்கள்'' பகுதியில் விரி வாக வெளிவந்தாலும் தமிழ் நாட்டுச் சைவ மறுமலர்ச்சியில் நாவலர் பெருமான் ஒரு திருப்பமாக இருந்தார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கோபால கிருஷ்ண பாரதியாரை அடி யொற்றி, நீலகண்ட சிவனும் (27 கீர்த்தனை நூல்கள்) இராமசாமி ஐயரும் பெரிய புராண சைவ சமயக் கீர்த்தனைகளைப் பாடித் தமிழ் நாட்டை இசை வெள்ளத்தில் ஆழ்த்தியிருந்தனர். மகா வைத்யநாதையர் தமது தமையனார் இராமசாமி ஐயரின் கீர்த்தனைகளைத் தமிழகமெங்கும் பாடிப் பரவசப்படுத்தினார்.

சொக்கலிங்க ஐயா நூற்றுக்கும் மேற் பட்ட சைவ நூல்கள் எழுதியும், சோமசுந்தர நாயகர் கண்டன நூல்கள் எழுதியும் சைவப் பணியாற்றினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி யில் ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை, ஞானி யார் சுவாமிகள், மறைமலையடிகள், திரு.வி.க. ஆகியோர் தோன்றினர். இவர் களின் பணிகள் இருபதாம் நூற்றாண்டில் தான் பரிமளித்தன.

ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை சித்தாந்த சாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நூல் வடிவிலும் (1893-ஆம் ஆண்டில் சிவஞானபோத ஆங்கில மொழி பெயர்ப்பு வெளிவந்தது. பிற சாத்திர மொழி பெயர்ப்புகள் தொடர்ந்தன.) இதழ் வடிவிலும் (Siddhantha Deepika ஆங்கில இதழ் 1898-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது) மேலை நாடுகளிலும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பரவ வழி செய்தார்.

ஞானியார் சுவாமிகள் தம் சொல் வன்மையால் தமிழக மக்களைக் கட்டிப் போட்டிருந்தார். இவ்விரு பெருமக்களும் மறைமலை அடிகளாரும் சேர்ந்து 1906-ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த சமாஜம் என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருமன்றத்தைத் தொடங்கினார்கள். மறைமலையடிகளின் தனித்தமிழ் ஆர்வமும், சைவ நெறியும் பல சீடர்களை உருவாக்கின. இதே கால கட்டத்தில் தோன்றிய திரு.வி.க. அவர்களும் பொது வாழ்வு, இலக்கிய வாழ்வு அனைத்திலும் சைவ நெறியில் நின்று தமிழக மக்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தார்.

அவருக்கு பின் தோன்றிய சி.கே.எஸ். அவர்களும், செங்கல்வராய பிள்ளை அவர்களும் தங்கள் மகத்தான படைப்புகளான பெரிய புராணப் பேருரை, திருமுறை ஒளிநெறிக் கட்டுரைகள் போன்றவற்றை வழங்கினர். இவையனைத்தும் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் நிகழ்ந்தவை.

இருபதாம் நூற்றாண்டைப் பொருத்தவரை, சைவசித்தாந்த வித்தகர்களும் திருமுறைகளைக் கற்றறிந்த அறிஞர்களும் பல்கிப் பெருகியிருந்தனர். முத்து. சு. மாணிக்க வாசக முதலியார், ஒளவை சு. துரைசாமி பிள்ளை, க. வச்சிரவேல் முதலியார் சி. அருணை வடிவேல் முதலியார் (1901-லிருந்து 1907-க்குள் பிறந்தவர்கள்) ஆகியோர் முதல் நிலையிலும், க. வெள்ளை வாரணனார், மு.பழ. இரத்னம் செட்டியார், ந.ரா. முருகவேள், வை. இரத்தின சபாபதி, கு. சுந்தரமூர்த்தி, கு. வைத்யநாதன் (1917 முதல் 1931-க்குள் பிறந்தவர்கள்) இரண்டாம் கட்டத்திலும் சைவ சித்தாந்த, திருமுறை பணியாற்றினார்கள். எழுபது எண்பதுகளில் அத்துணை பேரும் பல்வேறு நிலைகளில் இருந்து பணியாற்றினார்கள். இக்காலத்தைச் சைவ சித்தாந்தத்திற்குப் பொற்காலம் என்று கூடச் சொல்லலாம். ஒவ்வொருவரும் ஒரு மேருவாய்த் திகழ்ந்தனர். கு. வைத்யநாதன் என்ற தனி ஒருவரால் ஒரே கால கட்டத்தில் – இருபதாம் நூற்றாண்டு இறுதியில் – ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சைவ சித்தாந்திகளை உருவாக்க முடிந்திருக்கிறது. இது இந்நூற்றாண்டின் இணையற்ற சாதனை எனலாம்.

வாரியார் சுவாமிகள் இந்த நூற்றாண்டு பெற்ற கொடை எனலாம். 1925-லிருந்து 1993-ஆம் ஆண்டு வரை ஒரு நாள் கூட விடாது ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் விரிவுரை நிகழ்த்தி வந்தார்கள். திராவிடக் கழகத்தின் நாத்திகப் பிரச்சாரத்தையும் தடுத்தி நிறுத்திய புண்ணிய சீலர் ஆவார்.

இரா.பி. சேதுப்பிள்ளை, கி.வா. ஜகந்நாதன், புலவர் கீரன், இரா. இராதாகிருஷ்ணன் போன்றோர் தங்கள் சொல் வன்மையால் மக்களை ஈர்த்தனர்.

இவர்களில் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் தனித்து நிற்கின்றார். ஆங்கிலம், தமிழ் இருமொழிகளிலும் கணீரென்று பேசும் சொல்வன்மை படைத்தமையினால் தென் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளில் எல்லாம் தன் சொல்வன்மையால் மக்களைக் கவர்ந்தார்.

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார் தம் நுண்மாண் நுழைபுலத்தால், அறிவியல் அறிவால், ஆய்வு நோக்கால், திருமுறைகளுக்குக் குறிப்பாகப் பெரியபுராணம், திருவாசகம் ஆகிய பேரிலக்கியங்களுக்கு விரிவான, தெளிவான, துணிச்சலான நடைமுறைகளுக்கேற்ற, அனுபவ வெளிப்பாட்டான விளக்கங்களை நூல் வடிவில் தந்துள்ளார். நல்ல சொல்வன்மை மிக்கவராதலின் மேடைகளிலும் முழக்கம் செய்து வந்தார்.

மு. அருணாசலம் அவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு பதின் மூன்று தொகுதிகளும் இந்நூற்றாண்டின் பெரும் சாதனை ஆகும். ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பணியைத் தனி ஒருவராகச் செய்து முடித்திருக்கிறார். இத் தொகுதியின் பெரும்பகுதி சைவ இலக்கிய வரலாற்றைக் கூறுவதாகும்.

டி.என். இராமச்சந்திரன் அவர்கள் தம் ஆங்கில அறிவால் திருமுறைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், மேலை நாட்டு அறிஞர்களுக்கு வழிகாட்டியும் வருகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் திருமடங்களின் – மகாசந்நிதானங்களின் – அருட்பணி மணிமகுடமாய்த் திகழ்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் அவர்கள் தம் நேரிய ஒழுக்கம் – உடற்பிணி வந்தாலும் நாள் வழிபாட்டினை நிறுத்தாத கொள்கைப் பிடிப்பு – அகன்ற ஆழமான திரு முறை, சாத்திர அறிவு – திருமுறை பாடும் பாங்கு – மேடையில் தெளிவுடன் அருளாசி வழங்குதல், பாதயாத்திரைகள் மூலம் மக்களைச் சந்தித்தல் – கோயில் நிர்வாகம் – திருமுறை வெளியீடு – பள்ளி, கல்லூரி என சமுதாயப் பணி – இவற்றால் சைவர் களால் நாளும் வணங்கப்படுகிறார்கள்.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி யால் நிறுவப்பட்ட சைவசித்தாந்த பயிற்சி மையம் 5000-க்கும் மேற்பட்ட சைவ சித்தாந்திகளை உருவாக்கியுள்ளது. புத்தக வெளியீடு, விருது வழங்குதல் என ஆதீனப் பணிகள் விரிவடைந்து கொண்டே போகிறது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இல்லை யென்றால் திருமுறைகளும், சாத்திரங் களும் தொடர்ந்து பல பதிப்புகளாக வெளி வரும் வாய்ப்பே இருந்திருக்காது. திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகளும், ஸ்ரீலஸ்ரீ முத்து குமாரசாமி சுவாமிகளும் திருமுறை, சாத்திர வெளியீட்டில் – சில வெளியீடுகள் மலிவுப் பதிப்பாக – பெரும் தொண்டாற்றி யிருக்கிறார்கள். ஆயிரம் பக்கங்களுக்கு மேல் உள்ள க. வெள்ளைவாரணனாரின் ''பன்னிரு திருமுறை வரலாற்றினை'' ரூ. 2.90-க்கு வழங்கினார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தம் சிந்தனை வளத்தால் – சொல்லாற்றலால் – எழுத்துத் திறமையால் சைவ அன்பர்கள், நாத்திக வாதிகள், பொதுவுடைமையாளர் கள், கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள், அரசியல்வாதிகள் அனைவரையும் கவர்ந் தார். பேச்சோடு நிறுத்தாமல் ஒரு துறவி யாக இருந்து குன்றக்குடி கிராமத்தில் ஒரு தொழிற் புரட்சியையே நிகழ்த்தியுள்ளார்.

கௌமார மடம் தவத்திரு சுந்தர சுவாமி களும், பேரூர் இராமசாமி அடிகளாரும் கொங்கு நாட்டையே அன்பால் அடிமை கொண்டனர். தமிழ் அர்ச்சனை, தமிழ் முறைப்படி குடநீராட்டு என அவர்கள் பணி விரிந்தது. தவத்திரு சுந்தர சுவாமி களின் பெரிய புராணச் சொற்பொழிவுகள் இனிமை வாய்ந்தவையாகும்.

இருபதாம் நூற்றாண்டில் இத்துணைச் சிறப்புகளுமிருந்தும் சைவ சமய வளர்ச்சி முழுமை அடையாதது போலவே இருக் கின்றது. ஒவ்வொருவரும் தனித்தனி விண் மீன்களாக ஒளிர்ந்தனரே தவிர கூட்டுச் சக்தி யாக மாறாதது ஒரு காரணம். கூட்டுச் சக்தி யாக மாற திருமடத்துத் தலைவர்கள் அனை வரும் இணைந்து அரசின் ஆதரவுடன் 1966-ஆம் ஆண்டில் ''தெய்வீகப் பேரவை'' என்ற அமைப்பு தொடங்கி மக்களையும் இணைத்துப் பேரியக்கமாகச் சிலகாலம் செயல்பட்டனர். ஆனால் இப்பணி தொடர வில்லை. தொடர்ந்திருந்தால் சைவ சமய வளர்ச்சி மகத்தானதாக இருந்திருக்கும். தொலை நோக்குச் சிந்தனையுடைய சில தனி முயற்சிகளும் வெற்றி பெற்றிருக்கும். ஆனால் அவை முழுமை அடையவில்லை.

சைவ சமய வளர்ச்சி ஒரு சங்கிலித் தொடர் போல – சமண பௌத்த சமய ஆதிக்கத்தின் பொழுது மூவர் பெருமக்கள் நடத்திய பக்தி இயக்கம் – சங்கரர், மத்வர், இராமானுஜர் தத்துவக் கருத்துக்கள் பரவிய கால கட்டத்தில் மெய்கண்டார், அவர் வழி சந்தான பரம்பரை என சைவ சித்தாந்த சாத்திரங்கள் எழுந்தமை – சித்தாந்த – வேதாந்த போராட்ட காலத்தில் சமரசம் கண்ட தாயுமானவர் – என்று காலகாலமாக வளர்ந்தே வந்திருக்கின்றது.

இந்தச் சங்கிலித் தொடரின் ஒரு முனையில்தான் வள்ளல் பெருந்தகை தோன்றினார். அனைத்துச் சமயங்களையும் உள்ளடக்கிய ''அருட் பெருஞ் சோதி தனிப் பெருங் கருணை'' என்ற அனைத்துச் சமய சமரசக் கருத்தினை முன்வைத்தார். இதனைத் தமிழுலகம் முழுமையாக ஏற்றி ருந்திருக்க வேண்டும். ஒரு வகையில் எதிர்ப்பே கிளம்பியது.

வள்ளலார் முன் வைத்த சர்வசமய சமரசத்துடன் திரு.வி.க. மார்க்சியத்தையும் இணைத்தார். இதுவும் காலத்துக்கேற்ற ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இணைப்பே. வள்ளலாரின் சமரசத்தையும் திரு.வி.க. வின் மார்க்சியம் கலந்த சமரசத்தையும் செயல் வடிவமாக்கினார் குன்றக்குடி அடிகளார். இம்முப்பெரும் செயல்பாடுகளும் அவரவர்கள் வட்டத்தில் உயர்ந்து நின்றனவே ஒழிய, முழுத் தமிழகமும் ஏற்றுப் போற்றியிருந்தால் அந்தச் சங்கிலி அறுபட்டிருக்காது. மேலும் வளர்ச்சியுற்றிருக்கும். அவ்வாறு நடக்காதது நம் தவக்குறைவே.

இனி எதிர்கொள்ளும் இருபத்தோராம் நூற்றாண்டும் ஒரு கேள்விக்குறியே. 1960, 1970-களில் பல்கியிருந்த சித்தாந்த வித்தகர்களின் பெருங்குழு இருபத்தோராம் நூற்றாண்டு தொடக்கத்தில் அருகிய நிலையில் உள்ளது. திருமுறை அறிஞர்கள் நிலையும் அஃதே. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே உள்ளனர். இன்று வாழும் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (வயது 85 ஐந் தாண்டி அண்மையில் மறைந்து விட்டார்.) கு. சுந்தரமூர்த்தி (70 +), வை. இரத்தின சபாபதி (65 +), கு. வைத்யநாதன் (65 +), டி.என். இராமச்சந்திரன் (65 +) முதலியோர் அறுபதைத் தாண்டிய நிலையில் உள்ளனர். ஒரு சிலரே அறுபது வயதிற்கும் குறைந்த நிலையில் உள்ளனர். சைவ சித்தாந்தம் படித்த அறிஞர்களான ஆனந்தராசன், கோமதி சூரியமூர்த்தி, ச. கங்காதரன் ஆகியோர் ஓய்வு பெற்ற நிலையில் உள்ளனர். இந்த அடிப்படையில் இருபத்தோராம் நூற்றாண்டின் முதற்பாதியில் சைவ சமய வளர்ச்சியில் ஆன்றோர்கள், அறிஞர்கள் பங்கு கணிசமாக இருப்பதற்கில்லை.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சைவக் கருத்தரங்குகள் நடத்தவும், அழகான முறையில் கனமான நூல்கள் வெளியிடவும் செல்வர்கள் இன்று இருக்கின்றனர். முன்பெல்லாம் ஜாம்பவான்கள் கலந்து கொண்ட கருத்தரங்குகள் (திருவிடை மருதூர் திருவாசக மாநாடு; தருமை ஆதீன அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவன ஆய்வரங்குகள்) உயர்ந்த கட்டுரைகளைக் கொண்டிருந்தாலும் அச்சிடப்படாமல் காற்றோடு கலந்துவிட்டன. அண்மையில் 500 பக்கங்களுக்கு மேல் உள்ள திருமந்திரத் தொகுப்பும், 600 பக்கங்களுக்கு மேல் உள்ள பெரிய புராண ஆய்வரங்கத் தொகுப்பும் (இரண்டு பகுதி) வனப்புடன் வெளி வந்துள்ளன. கட்டுரைகள் பழைய தரத்தில் இல்லை. இதனைப் பார்க்கும்போது அன்றைய திருவாசக மாநாடு நிகழ்ச்சிகள் புத்தக வடிவம் பெறவில்லையே என்ற ஏக்கம்தான் மிஞ்சுகிறது. அதுவும் அண்மையில் நடைபெற்ற திருமந்திரக் கருத்தரங்கில் தலைமை வகித்த தமிழறிஞர்களில் பெரும்பான்மையோர் சங்க இலக்கியம் எனப் பிற துறைகளில் உச்சத்தில் இருப்பவர்கள். ஆனால் திருமந்திரத்தைப் பொறுத்தவரை ''எங்களுக்குத் திருமந்திரம் தெரியாது'' என்றே தொடங்கினார்கள். ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், அருணை வடிவேல் முதலியார் அவர்களும் தலைமை தாங்கவில்லையே என்றுதான் தோன்றியது. ஒன்று இருந்தால் ஒன்று இல்லை என்ற நிலை. இருப்பினும் எங்கேனும் ஒளிக்கீற்று தோன்றும். பகலவன் கதிராய்ச் சைவ உலகில் ஒளி பாய்ச்சும்.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

III
பத்தொன்பதாம் நூற்றாண்டு - ஆன்றோர்கள்

1
சைவ சித்தாந்தம் பற்றிய முதல் ஆங்கில நூல் எழுதிய அமெரிக்கர் (1801)

பழந்தமிழ் இலக்கியத்தைப் படித்து அறிய தமிழனாலேயே முடியாது. ஆசிரியர் அல்லது உரை நூல்களின் துணை வேண்டும். அதுவும் சைவசித்தாந்த நூல் என்றால் கேட்கவே வேண்டாம். புரியாத கலைச் சொற்கள் (Technical Words) நிரம்ப இருக்கும். மேலும் 19-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் மேல் இந்துக்கள் – சைவர்கள் கடும் வெறுப்பு கொண்டிருந்தார்கள். எனவே கிறிஸ்துவப் பாதிரிமார்கள் வேண்டிக் கேட்டும், சைவசித்தாந்தம் பற்றிய விளக்கம் தர இந்துக் குருமார்கள் மறுத்து விட்டனர்.

இந்தக் கடுமையான சூழ்நிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் மதுரை வந்து – தமிழ் கற்று – சைவசித்தாந்தம் கற்று – தத்துவப் பிரகாசம், சிவஞான போதம், சிவப்பிரகாசம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தார் என்றால் இதைவிட வியப்பான செயல் என்ன இருக்க முடியும்? அவர்தான் மறைத்திரு ஹென்றி ஆர். ஹொய்சிங்டன் (Rev. Henry R. Hoisington).

சைவ சித்தாந்தம் தொடர்பாக வந்த முதல் ஆங்கில நூல் இதுவே ஆகும். இந்த மொழி பெயர்ப்புகள் 1854-ஆம் ஆண்டில் "Journal of the American Oriental Studies" - IV இதழில் வெளிவந்தன.

ஹொய்சிங்டனின் பணி இதனுடன் நிற்கவில்லை. இலங்கைக் கிறிஸ்துவப் பள்ளிகளில் கந்த புராணத்தைப் பாடமாகச் சேர்த்தார். இரண்டாண்டு காலம் சைவ சமயப் பிரசாரமும் செய்தார்.

இத்தகைய பெருந்தகை 1858-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

(1801 - 1858 : அமெரிக்கா)

2
தேவார மூவரை அடியொற்றி சைவம் வளர்த்த மாமேரு (1815)

1. பிள்ளையவர்களின் புகழ்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலத்தில் தமிழகமே அவரைச் சுற்றிச் சுழன்றது என்றால் மிகையாகாது. திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்தாலும் சைவ மடாதிபதிகள் எல்லோருடைய நன் மதிப்பையும் பெற்றிருந்தார். சைவர்கள் இவரைச் ''சைவப் பயிர் தழையத் தழையும் புயல்'' என்றே கருதி வந்தனர். பிள்ளையவர்கள் என்றாலே இவரைத்தான் குறிப்பதாக இருந்தது. ''மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், இந்தியா'' என்று போட்ட கடிதம் நேராக இவருக்கு வந்து சேர்ந்தது என்றால் வேறு சான்று வேண்டுமா என்ன?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ் அறிஞர்களில் பேரரசராகவே விளங்கினார். பெரும் செல்வர்கள், அறிஞர்கள் தங்களினும் உயர்ந்தவர்களுக்குச் செய்யும் மரியாதைகளை இவருக்குச் செய்து வந்தனர். அத்தகைய அவையில் இவர் நுழைந்தாலே அனைவரும் எழுந்து நிற்பர். எங்கும் முதலிடம் இவருக்குத் தான். கண்காணாத இடத்தில் கூட இவர் பெயர் பரவியிருந்தது. ''இன்னார்'' என்று அறிந்தவுடன் பதறிப்போய் வெற்றிலை, பழம் மரியாதை செய்வார்கள். இவரை ஒரு தெய்வமாகவே பாவித்து வந்தார்கள்.

இவர் வித்துவானாக இருந்ததினால் திருவாவடுதுறை மடத்துக்குப் புகழ் மேலும் கூடியது. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் கூற்று; ''அவர்கள் பெயரோடு நமது மடத்தின் பெயரும் விளங்குகிறது. அந்தப் புலவர் மணியின் ஆற்றல் இந்த மடத்தை எல்லோருக்கும் உரிய கல்வி நிலையமாகச் செய்தது. வைதீக மதஸ்தர்களும், பிற மதஸ்தர்களும், பல் வகைச் சாதியினரும் தமிழ் நூல்களைத் தடையின்றிப் பாடம் சொல்லும் அவர்களை எண்ணி இங்கே வந்தனர். நமது மடத்துக்கும் கௌரவத்தை அளித்தார்கள். முன் பழக்கமில்லாத எத்தனையோ உத்தியோகஸ்தர்களும் வேறு வகையான பிரபுக்களும் இந்த மடத்திற்கு வந்திருக்கிறார்கள். எல்லாம் அவர்களால் வந்த பாக்கியமே. பணமும் இடமும் அதிகாரமும் சாதியாத எவ்வளவோ காரியங்களை மடத்திற்காக அவர்கள் சாதித்து உதவியிருக்கிறார்கள். அவ்வளவுக்கும் இந்த மடத்திலிருந்து அவர்கள் பெற்ற பயன் சிறிதளவேயாகும். எங்கே இருந்தாலும் அவர்கள் தம்முடைய தமிழரசாட்சியை நடத்தி இருப்பார்கள். அதற்கு இம்மடத்தை அமைத்துக் கொண்டது ஆதீனத்தின் பாலுள்ள அபிமானமே.''

''எவ்வளவு பெரிய சபையிலும் அவர்கள் அங்கே நிகழும் நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கவியொன்று கூறிவிட்டால் சபையோருக்கு உண்டாகும் குதூகலமும் நமக்கு உண்டாகும் ஆனந்தமும் இனிமேல் எங்கே வரப் போகின்றன? அவர்களுடைய கவியானது, சபை நிகழ்ச்சியின் முடிவில் மகுடம் சூட்டியதுபோல விளங்குமே; 'திருவாவடு துறை ஆதீனம் செந்தமிழ்ச் செல்வியின் நடனசாலை' என்று பிற்காலத்திலும் யாவரும் கூறும் வண்ணம் செய்வித்த அவர்கள் இல்லாத குறை இனி என்றைக்கு நீங்குமோ தெரியவில்லை'' என்று ஒரு ஆதீனத் தலைவர் அவர்களே கூறினால் பிள்ளையவர்களின் சிறப்புக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

2. அறிஞர்கள் போற்றிய அறிஞர்

அறிஞர்களின் பழக்கம் : தமிழகத்திலும் சரி, இலங்கையிலும் சரி, இவ்விரு பகுதிகளிலும் அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களும், சைவ ஆன்றோர்களும் ஏதேனும் ஒரு வகையில் இவருடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

தேவராசப் பிள்ளை : பெங்களூரிலிருந்த தேவராசப் பிள்ளை என்ற செல்வர் பிள்ளையவர்களை பெங்களூருக்கு அழைத்து அவரிடம் பல நாட்கள் பாடம் கேட்டு மகிழ்ந்தார். அது மட்டுமல்ல. ''குசேலோ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாக்கியானம்'' எனும் தெலுங்கு காவியத்தைத் தமிழில் வடிக்க முயன்று அதனைச் செய்ய முடியாது இருந்தார். தேவராசப் பிள்ளையின் ஆர்வம் தெரிந்த பிள்ளையவர்கள் ''குசேலோபாக்கியானத்தை'' தமிழில் பாடி முடித்து அதனை இயற்றியதாகத் தேவராச பிள்ளையையே போட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டார்.

மழவை மகாலிங்கையர் : மழவை மகாலிங்கையர் என்பவர் பெரிய அறிஞர். அவரை அறியாதவரே தமிழ்நாட்டில் இல்லை எனலாம். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் பைபிள் தமிழ் உரைநடை நூலைப் பரிசோதிக்கத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். பிள்ளை அவர்களின் கவிதைகளைக் கேட்ட பின் வியந்து போய் தான் ஒரு கவிதை பாடினார்.

''தருமை வளர் குமரகுரு முனிவன் கல்வி
சார் பகழிக்கூத்தன் எனத் தரணியோர் சொல்ல
இருவருமே நன்கு பிள்ளைத் தமிழைச் செய்ததற்கு
ஏற்றவர் என்றிடும் உரை வென்றிட்டதம்மா
அருமைபெறு காவை அகிலாண்டவல்லி
அம்மை மேன் மேல்படிப்பு
நற்றமிழை ஆய்ந்த
சுருதிநெறி தவறாத குணன் மீனாட்சி
சுந்தரமால் அன்பினொடு சொல்லும் போதே''

(காவை – திருவானைக்கா)

பூவாளூர் தியாகராசச் செட்டியார் : பூவாளூர் தியாகராச செட்டியார் நல்ல அறிஞர். ''பிள்ளையவர்களுக்கு எவ்வளவு புகழுண்டோ அந்தப் புகழுக்கு அடுத்த படியான புகழைத் தமிழ் நாட்டில் பெற்று விளங்கினவர்'' என்று தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்கள் எழுதுகிறார். அந்தப் பெருமகனார் பிள்ளையவர்களிடம் பெரு நட்பு பூண்டிருந்ததோடு பாடமும் கேட்டார். பிள்ளையவர்களைப் பற்றிப் பல கவிதைகள் எழுதியுள்ளார்.

''உன்னை ஒப்பார் இங்கு எவரும்
இலை ஒப்புரைத்திடின் நீ
நின்னை ஒப்பாய் அருள் மீனாட்சி
சுந்தர நின்மல! எற்கு
அன்னை ஒப்பாய் பின்னும் அத்தன்
ஒப்பாய்! நின்னருளைப் பெற்ற
என்னை ஒப்பாரும் உண்டோ? கடல்
சூழும் இரும் புவிக்கே''

மாயூரம் வேதநாயகம் பிள்ளை : தமிழ் முதல் நாவலாகிய பிரதாப முதலியார் சரித்திரம் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையவர்கள் இவரிடம் அன்பு பூண்டு வலிந்து பழக ஆரம்பித்தார். பல நேரங்களில் பாடம் கேட்டு ஐயம் தெளிந்தார். பிள்ளையவர்கள் ''சீகாழிக் கோவை'' என்ற நூலை சீகாழியில் அரங்கேற்றிய பொழுது, வேதநாயகம் பிள்ளை தினமும் பிள்ளையவர்களைச் சிறப்பித்து இவ்வாறு பாடினார்.

''இன்பாவிற் கோவை சொன்ன
மீனாட்சி சுந்தரப்பேர் இறைவ யானும்
உன்பாவிற் கவிசொல்வேன் என் கவி
பாப்போர் இதை மீண்டு ஓராது ஆன்றோர்
முன்பாச் சொல் நூல்களையே துதிப்பர்
உன் பா உணர்வோர்கள் முன்னோர் நூலைப்
பின்பாகச் சொல் வெறுப்பர் நல்லவன்,
நீயோ?யானோ? பேசுவாயே''!

கோபால கிருஷ்ண பாரதியார் : அக்காலத்தில் 'திருநாளைப் போவார்' என்ற நந்தனார் சரித்திரத்தைக் கோபால கிருஷ்ண பாரதியார் கீர்த்தனைகளாகப் பாடிப் பிரபலமாகியிருந்தது. தமிழகமே போற்றிப் பாராட்டியிருந்தாலும், நந்தனார் சரித்திரம் பெரியபுராணம் போல அமையவில்லை என்றும், இலக்கணப் பிழைகள் மலிந்திருந்தன என்றும் குறை சொல்லப் பட்டது. பிள்ளையவர்களுக்கும் அந்த எண்ணம் இருந்தது. பாரதியாரோ அந் நூலுக்குப் பிள்ளையவர்களிடமிருந்து சிறப்புப் பாயிரம் ஒன்று வாங்க வேண்டும் என்று பேரார்வத்துடன் இருந்தார். பிள்ளையவர்கள் ஏதோ காரணம் சொல்லித் தள்ளிப் போட்டு வந்தார். ஒரு நாள் பிள்ளையவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபொழுது, பாரதியார் திண்ணையில் அமர்ந்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''கனகசபாபதி தரிசனம் ஒருநாள்
கண்டால் கலிதீரும்''

என்று பாடிக்கொண்டிருந்தார். பாட்டின் ஒலிகேட்டு எழுந்த பிள்ளையவர்கள் பாட்டில் மனம் உருகி சிறப்புப் பாயிரம் ஒன்று வழங்கினார்.

ஆறுமுக நாவலர் பதிப்புகளுக்குச் சிறப்புப் பாயிரம் : யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் திருக்கோவையார் உரை, திருக்குறள் பரிமேலழகர் உரை பதிப்பிக்கப் பொருள் முட்டுப்பட்டது. அந்நூலுக்குச் சிறப்புப் பாயிரங்கள் இருந்தால் இராமநாத புரம் பொன்னுசாமித் தேவர் பொருளுதவி தருவார் போல இருந்தது. அதற்காகப் பிள்ளையவர்கள் நாவலர் அவர்களின் பதிப்புகளுக்குச் சிறப்புப் பாயிரம் பாடிக் கொடுத்தார்.

3. பிள்ளையவர்களின் கவித்திறன்

பிள்ளையவர்களின் கவித்திறன் : இப்படி அறிஞர்கள் எல்லாம் பிள்ளையவர்களை நாடி நின்ற காரணம்தான் என்ன? அவருடைய கவித்திறனே அவருடைய புகழுக்குக் காரணம், புதிய புதிய நூல்களை இயற்றி பலவகைச் சுவைகளையும் குழைத்துத் தமிழ் மக்களுக்கு வாரி வழங்கினார். நினைத்தவற்றை நினைத்தபோதெல்லாம் நினைத்த வழியே தமிழ்ச் சொற்கள் ஏவல் கேட்ப வருத்தமின்றி விளையாட்டாகக் கவிபாடும் திறமை இவர் பெற்றிருந்ததாகத் தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் கூறுவார்கள். பாட ஆரம்பித்தால் ஒரே மூச்சில் நூற்றுக் கணக்காகப் பாடுவார். செய்யுட்களைச் சொல்லிக் கொண்டு வருகையில் மனப்பாடமான நூல்களில் உள்ள செய்யுட்களைக் கூறுவது போலத் தோன்றுமாம்.

மன ஒருமை : 'தியாகராச லீலை' என்ற நூல் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் காலை சூரிய உதயத்தின் பொழுது வாய்க்காலின் கரையில் பல் விளக்கிக் கொண்டிருந்தார். மாலை வரை பல்லையே விளக்கிக் கொண்டிருந்தாராம். வருவோரெல்லாம் ''என்ன இது?'' என்று கேட்கவும், அதுவரை தான் சிந்தித்து வைத்திருந்த பாடல்களை எல்லாம் உடனே எழுதச் சொன்னாராம். அப்படி ஒரு மனவொருமை!

தெய்வப் பிறவி : 'குசேலோபாக்கியானம்' என்ற காவியம் எழுத வேண்டும் என்று பெங்களூர் தேவராசப்பிள்ளை விரும்பி அவரால் இயலாது போயிற்று. பிள்ளையவர்கள் நாளொன்றுக்கு ஐம்பது பாடல்கள் வீதம் அநாயசமாகப் பாடி முடித்து விட்டார். பிள்ளையவர்களைத் தேவராசப் பிள்ளையவர்கள் தெய்வப் பிறவியாகவே கருத ஆரம்பித்து விட்டார்.

எழுதுவோர் கைஓடியப் பாடுவது : பிள்ளையவர்கள் பாடப்பாட, கோபாலப் பிள்ளை என்பவர் எழுதுவார். ஒருமுறை கோபாலப் பிள்ளை அவர்கள் ''எல்லாம் சரி; ஐயா அவர்கள் என் கைவலிக்கும்படிப் பாடல் சொல்லுகிறார்களில்லை''என்று செருக்குடன் கூறிவிட்டார். இதைக் கேள்வியுற்ற பிள்ளையவர்கள் ஒரு நாள் காலை ஏழுமணிக்குப் பாடல் சொல்லத் தொடங்கினார். மணி பத்து ஆயிற்று. பொதுவாக பிள்ளையவர்கள், அதோடு நிறுத்திக் குளியல் பூசை எல்லாம் முடித்து வருவார்கள். ஆனால் இம்முறை எழவில்லை. கோபாலப் பிள்ளைக்குக் கை வலிக்க ஆரம்பித்து விட்டன. சமையற்காரர் நடுவில் ஒருமுறை நினைவுபடுத்தினார். மணி 11. கோபாலப் பிள்ளை விரல்கள் இரத்தம் கட்டிவிட்டது. ஆனால் பாட்டு மட்டும் நிற்கவில்லை. மடை திறந்தாற் போல வந்து கொண்டேயிருந்தது. மணி பனிரெண்டு. கோபாலப் பிள்ளை திணறிப் போய் எழுத்தாணியைக் கீழே போட்டு விட்டுப் பிள்ளையவர்கள் காலில் விழுந்து வணங்கித் தன் தவறை எடுத்துச் சொல்லி மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

4. தலம்தோறும் சென்று பாடுதல்

தேவார மூவர் பணியை அடியொற்றி : சமய மறுமலர்ச்சிக் காலத்தில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் எப்படி ஊர் ஊராகச் சென்று திருமுறைகளைப் பாடினார்களோ, அதுபோல பிள்ளையவர்கள் தாம் எந்தத் தலத் திற்குச் சென்றாலும், அத்தலத்தைப் பற்றிய புராணமோ, பிள்ளைத் தமிழ் போன்ற பிரபந்தமோ இயற்றுவது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழக்கம். பல தலங்களுக்கு அத்தலங்களில் வாழும் மக்கள் பிள்ளையவர்களை அழைத்துப் பாடச் செய்வர். இப்படி ஓர் இயக்கமாகவே பிள்ளையவர்கள் செய்து வந்தார். அப்பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்களும், திருமுறைக் கருத்துக்களும் நிரம்பியிருக்கும்.

திருவாசகத்தை எடுத்து ஆளுதல் : திருஊற்றத்தூர் என்ற ஊருக்குச் சென்ற பொழுது அன்பர்கள் விரும்பிய வண்ணம் திருவூற்றைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடினார்.

''பணிகின்றேனிலை நாத்தழும்புற
நினைப் பலகவியாற் பாடத்
துணிகின்றேனிலை தீவினை தொலைக்க
நின்தொண்டரிற் தொண்டாகத்
தணிகின்றேனிலை உள்ள நெக்குருகி
உன்தாள்களில் நறும்பூக் கொண்டு
அணிகின்றேனிலை எங்ஙனம்
உய்குவேன் அரதன புரத்தானே!''

இந்தப் பாடல் ''ஆடுகின்றிலை இறைவன் கழற்கு அன்பு செய்கிலை'' என்ற திருவாசகப் பாடலின் கருத்து மட்டு மல்லாது சொல்லாட்சியும் பெற்று விளங்குகிறது.

கரைகடக்கு முன் பாடி முடித்தல் : பிள்ளையவர்கள் ஒரு சமயம் திருவானைக்கா சுவாமி தரிசனம் செய்ய அன்பர்களுடன் காவிரியின் தென்கரையில் உள்ள ஓடத்தில் செல்ல ஆரம்பித்தார். உடன் வந்த அன்பர்கள் ''துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவண்ணாமலையை ஒரு முறை வலம் வருமுன் சோணசைலமாலையைப் பாடி முடித்தார். அதுபோல நீங்கள் சம்புநாதரைத் தரிசனம் செய்து திரும்புவதற்குள் ஒருமாலை செய்து தர இயலுமா?'' என்றனர். அதனைக் கேட்ட பிள்ளையவர்கள் தரிசனம் செய்து முடிக்கு முன் ஸ்ரீ அகிலாண்ட நாயகி மாலையைப் பாடி முடித்தார்.

அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் : அதன் பின்னர் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் பாடினார். இந்நூலைப் பாடிய பிறகு ''இவரைப் போன்ற கவிஞர் இலர்'' என்று சொல்லுமளவு புகழ் தமிழகம் எங்கும் பரவியது.

''சிரபுரச் சந்ததி தழைக்க
முலைகொடுத்த தலைவி முத்தம்
தருகவே
திருமகட்கும் கலைமகட்கும்
எழில்சிறக்கும் இறைவி முத்தம்
தருகவே
தரணி முற்றும் தனி தழைக்க
நனிபுரக்கும் அமலைமுத்தம் தருகவே
கடைமுடித்தும்பியை விருப்பமுடன்
உயிர்த்தவிமலை முத்தம் தருகவே''

இந்நூலுக்கு 15 பேர் சிறப்புப் பாயிரம் அளித்தனர்.

''கந்தவேளோ அல்லது கலைமகளோ
இவ்வுருக்
கொண்டாய்''

என்று பாடி மகிழ்ந்தார் அஷ்டாவதானம் வேலாயுதக் கவிராயர்.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் :

''அவன் அவள் அது என்று
உரைத்திடும் புவன
மாகியும் அதற்கு வேறானாய்''

(பூவாளூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி)

என்று சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை வெகு எளிமையாகப் பல பாடல்களில் அள்ளித் தெளிக்கிறார்.

பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ் : திருத்தவத்துறையில் எழுந்தருளியுள்ள பெருந்திருப் பிராட்டியார் மேல் ஒரு பிள்ளைத் தமிழ் இயற்றினார். இந்நூல் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழை விட எளிமையாயும், சிறந்த கருத்துக்களை உடையதாயும் உள்ளது.

''தவத்து உயர்வார்கள் உளத்தவள்
கொட்டுக சப்பாணி
தவத்துறை வாழு மடப்பிடி
கொட்டுக சப்பாணி''

(பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ்)

தியாகராச லீலை : தியாகராசச் செட்டியாருடைய குடும்பத்தினரின் வழிபடு தெய்வம் திருவாரூர் தியாகராஜப் பெருமான். அவர்களோடு பிள்ளையவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செல்வது வழக்கம். தியாகராஜ லீலையைத் தமிழில் எழுதுமாறு பலரும் வலியுறுத்தி வந்தனர். லீலைகள் முந்நூற்று அறுபது என்றாலும் நூல் முழுமையாகக் கிடைக்க வில்லை.

மாபெரும் காவியம் : தியாகராச லீலையில் அமைப்பே தனி அழகு! வடமொழியில் ஸ்தல புராணங்கள் சரித்திரம் மட்டுமே கொண்டு இருக்கும். கற்பனைகளே இருக்காது. தமிழிலும் அதனையே பின் பற்றினார்கள். அதன் பின்னர் சிலர் சொல்லணி, பொருளணி மட்டுமே அமைத்துப் பாடினார்கள். அதன் பிறகு வந்த சில தமிழ்க் கவிஞர்கள் ''பெருங் காப்பிய நிலை'' என்ற தண்டியலங்காரச் சூத்திரப்படி காப்பிய இலக்கணங்களை அமைத்துப் பாடினார்கள். எல்லப்ப நாவலர், பரஞ்சோதி முனிவர், கச்சியப்ப சுவாமிகள் முதலானோர் இந்த அடிப் படையில் பாடினார்கள். இதே அடிப்படையைப் பிள்ளையவர்கள் பின்பற்றினார்கள். சோழநாட்டு வளம், திருவாரூர் நகர வளம் என்று மிக விரிவாகப் பாடியருளினார்கள்.

கடல் கண்ணப்பரை ஒக்கும் : நாட்டுப் படலத்தில் நாயன்மார் அருட்செயல்களை உவமை காட்டுகிறார். ''இறைச்சி எச்சிலை இறைவனுக்குக் கொடுத்து அழியா இன்பம் பெற்ற கண்ணப்பர் போல், உப்பு நீரினை மேகத்திற்குக் கொடுத்து மழையாக நன்னீரைக் கடல் பெற்றது'' என்கிறார். உவமையில் கூட நாயன்மார் சிந்தை!

''இழிதகவு இறைச்சி எச்சில் எம்பிரான்
உண்ண நல்கி
அழிவில் பேரின்பம் துய்த்த அன்பர்
கண்ணப்பரே போல்
இழிதகவு உவர்நீர் எச்சில் எழிலிகள்
உண்ணநல்கி
அழிவில் இன்சுவைய நன்னீர் அருந்தியது
ஆழி மாதோ''

(திருநாட்டு – உஅ)

(உவர் நீர் – உப்பு நீர்; எழிலி – மேகம் ; ஆழி – கடல்)

சிவபெருமான் துதிகளும் அரிய கருத்துக்களை உடையன.

''வானாடு வெறுத்து நெடுமண்ணாடு
குடிபுகுந்த வள்ளால் போற்றி
தேனாடு செங்கழுநீர்த் தேமாலை
செறிந்த புயத்தேவா போற்றி''

(முதலாவது – உக)

ஐந்திணைகளை வருணிக்கும் பகுதியும் – ஒவ்வொரு சாதியார்க்குரிய வீதிகளைக் கூறுகையில் அவரவர் இயல்புக்கேற்றபடி புனைந்துள்ள திறமும், பலவகை மரங் களைப் பற்றிய உவமைகளும் மிகச் சிறப் பாய் அமைந்துள்ளன.

சூதசங்கிதை : பெங்களூர் தேவராஜப் பிள்ளை கேட்டுக் கொண்டதற்கிணங்க ''சூத சங்கிதை'' என்ற நூல் இயற்றினார். இந்நூல் சிவபெருமானுடைய பலவகைப் பெருமைகளையும், பலவகை தலவரலாறுகளையும், தீர்த்த வரலாறுகளையும், பல உபநிஷத்துக்களின் கருத்தையும் விளக்கிக் கூறுவது ஆகும்.

உறையூர்ப் புராணம் : காப்பிய உறுப்புக்களோடு ''தியாகராச லீலை'' முழுமையாகப் பாடி முடிக்கவில்லையே என்ற குறை பிள்ளையவர்களுக்கு இருந்து வந்தது. அக்குறை ''உறையூர்ப் புராணம்'' பாடியதால் தீர்ந்தது. இந்நூலில் மலை, நாடு, நகர், ஆறு முதலியன நன்கு புனைந்து கூறப்பட்டுள்ளதன்றி இப்புராணத்தில் சூரியோதயம், சூரியாஸ்தமனம், சந்திரோதயம், மணம் முதலிய பல வகையான காப்பிய உறுப்புகள் அமைந்துள்ளன. நடு நடுவே சிவபெருமானுடைய துதிகள் விரவி இருக்கின்றன.

திருநீற்றின் பெருமை : கதைப் போக்கிலே ஆதிசைவர் அளித்த திருநீற்றை வணிகன் ஒருவன் சிந்திவிட்டான். ஆதி சைவர் அவனைச் சினந்து கூறும் முகத்தான் சிவத்துரோகத்தின் தீங்கினை வெளிப் படுத்துகிறார்.

''நீற்றினைச் சிந்தினை அல்லை
இந்நிகழ் பவத்து அடையும்
பேற்றைச் சிந்தினை அறவினை உனன்
எனப் பேசும்
கூற்றைச் சிந்தினை இவன் அடைந்த
உறுசுகம் குலவும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆற்றைச் சிந்தினை சிந்தினை நின்
திருவனைத்தும்''

(வில்வாரணியப் – க உ)

திருநீற்றின் பெருமையை இதைவிட அழகாக யாரும் கூறியதில்லை.

எங்கெங்கு செலினும் அங்கங்கு பாடுதல் : தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அங்கங்குள்ள இறைமூர்த்தத்தைப் பற்றிப் பாடுவதைப் பிள்ளையவர்கள் வழக்கமாகக் கொண்டார்கள். இந்த அடிப்படையிலே ''எறும்பீச்சரம் வெண்பா'', அந்தாதி, கீழைச் சிந்தாமணி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கற்குடிமாலை முதலிய நூல்களை இயற்றினார்கள்.

கற்குடி மாலை : கற்குடி மாலையில் திருவாசகம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய நூல்களில் உள்ள கருத்துக்களை எல்லாம் எடுத்து ஆண்டிருக்கிறார். நாயன்மார்களுடைய அருஞ்செயல்களை எல்லாம் பாடலுக்குப் பாடல் விதந்து ஓதுகிறார்.

(பாடல் எண் 17, 27, 34, 35, 47, 72, 73, 84) ஞானசம்பந்தப் பெருந்தகையை இவ்வாறு பாடுகின்றார்.

''மறையவர் திருவை வைதிகர்
துணையை
வருபர சமயக் கோளரியைக்
குறைவிலா அமுதைக் காழியுண் ஞானக்
கொழுந்தினைத் துதிக்குமாறு
அருள்வாய்''

(கற்குடி – ச அ)

திருமுறைக் கருத்துக்களை முழுமையாக வாங்கி ஞானசம்பந்தப் பெருந்தகையைப் பற்றி பிள்ளையவர்கள் எவ்வளவு ஆழமாகப் பாடியுள்ளார்கள்!

வாட்போக்கிக் கலம்பகம் : இரத்தினகிரி என்கிற வாட்போக்கி என்னும் தலத்திற்குப் பிள்ளையவர்கள் வந்தார்கள். அங்குள்ள பன்னிரெண்டாம் செட்டிமார்கள் அந்தத் தலத்தைப் பற்றிப் பாடுமாறு கேட்டுக் கொண்டார்கள். தலத்து இறைவனைப் பற்றியும், தலவரலாறுகளையும் பாடுவது தான் இவர்க்குக் கைவந்த கலையாயிற்றே! அவர்கள் கேட்ட வண்ணம் ''வாட்போக்கிக் கலம்பகம்'' என்ற நூலைப் பாடியருளினார்.

நாற்புறமும் தழும்பேறிய வாட்போக்கி இறைவன் : ஆரிய அரசன் வெட்டினமையால் வாட்போக்கி இறைவன் திருமுடியிலே வாளின் தழும்பு உண்டு. உமையவள் காஞ்சியில் தழுவியதால் அந்தத் தழும்பு இறைவர்க்கு முன்புறத்தில் உள்ளது. மதுரையில் வந்தி என்ற கிழவிக்காகப் பிட்டுக்கு மண் சுமந்த வரலாற்றிலே பாண்டிய மன்னனிடம் அடிவாங்கிய தழும்பு பின்புறம் உண்டு. ''மேற்பகுதி, முன் பகுதி, பின்பகுதி – ஆகிய எல்லா இடங்களிலும் உமக்குத் தழும்பு உண்டு. கீழ்ப்பகுதியில் தான் தழும்பு இல்லை. என்னுடைய கல் போன்ற மனத்திலே நின் திருவடிகளைச் சேர்த்தால் அந்தக் குறையும் நீங்கும்'' என்று பிள்ளையவர்கள் பாடும் பொழுது பிள்ளையவர்கள் எந்தக் கவிஞரும் தொடாத சிகரத்திற்குச் சென்று விடுகிறார்கள்.

''தழுவு உமையால் முன்னும்
தமிழிறையாற் பின்னும்
தொழும் இறையால் மேலும் சுவடு –
கெழுமுவ கீழ்
இன்றால் எனும் குறைபோய் என் மனம்
சேர் வாட் போக்கி
அன்றால் அமர்ந்தாய் அடி''

(வாட் ....எ)

(தமிழிறை – பாண்டிய மன்னன் ; தொழும் இறை – ஆரிய அரசன்;)

மேலும் சில நூல்கள் : இதன் பின்னர் பிள்ளையவர்கள் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை, வியாசைக் கோவை, திருமயிலைப் புராணம், சிதம்பரேசர் மாலை முதலிய நூல்களைப் பாடியருளினார்கள்.

சீகாழிக் கோவையும், வேதநாயகம் பிள்ளை அன்பும் : பிள்ளையவர்கள் சீகாழிக் கோவை பாடி அரங்கேற்றியதே தனி வரலாறு ஆகும். அக்காலத்தில் சீகாழியில் வேதநாயகம் பிள்ளையும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஊர்ப்பெரியவர்களும் கேட்டுக் கொள்ள, பிள்ளையவர்கள் ''சீகாழிக் கோவை'' எனும் நூல் இயற்ற இசைந்தார்கள். பிள்ளையவர்களுடன் தினமும் கலந்து அளவலாவலாம் என வேதநாயகம் பிள்ளைக்கு ஒரே மகிழ்ச்சி; தினமும் பத்து அல்லது பதினைந்து செய்யுட்களை பாடுவதும், அவற்றின் நயங்களை உடன் இருந்தவர்களுக்கு விளக்குவதுமாக பிள்ளையவர்கள் இப்பணியைச் செய்து வந்தார்கள். ஞாயிறுதோறும் வேதநாயகம் பிள்ளை இல்லம் சென்று அங்கும் பாடியும், நயம் சொல்லியும் மகிழ்வித்து வந்தார்கள். நூல் முழுமையும் எழுதி முடித்தவுடன் சீகாழித் திருக்கோயிலில் முறையே அரங்கேற்றமும் செய்தனர். ஒவ்வொரு நாளும் அரங்கேற்றுதல் முடிந்த வுடன் வேதநாயகம் பிள்ளை அந்நூலை யும், இவரையும் சிறப்பித்து ஒவ்வொரு செய்யுள் பாடினார்.

''குற்றமில் சீர் மீனாட்சி சுந்தர ஆரிய
நின்நாக் கோயில் மேவ
நற்றவம் என் செய்தனள் நாமகள் தமிழ்
செய்தவம் எவன் நீ நவிலு மேன்மை
உற்ற திருக்கோவை பெறப் புகலி செய்
பாக்கியம் எவன் அவ் வுயர்நூல் கேட்கப்
பெற்ற என் போலியர் புரிந்த மாதவம்
என் ஓதுறுவாய் பெருமை
மிக்கோய்''!

என்று வேதநாயகம் பிள்ளை பாடு கிறார். என்ன ஓர் உயரிய நட்பு! என்ன ஒரு ஆனந்தக் காட்சி! உடனுறைவின் பயன் என்பது இது தானோ?

அம்பலவாண தேசிகர் கலம்பகம் : இவர் பாடியருளிய 'திருத்தில்லை யமக அந்தாதி' யைப் போன்று நயமும், யமக விசித்திரமும் உடைய நூல் வேறொன்றும் இல்லை. திருவெண்ணீற்று உமை பிள்ளைத் தமிழ் ஆச்சாபுரம் எனும் பெருமண நல்லூர் அம்மை மேல் பாடப் பட்டது. தருமையாதீனத் தலைவர் மேல் பாடப்பட்ட நூல் 'சச்சிதானந்த தேசிகர் மாலை' ஆகும். திருவாவடுதுறை மடத்து சம்பிரதாயங்களை வைத்து அவ்வாதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் மீது ஒரு கலம்பகம் இயற்றினார். ''அடியேனுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் கொண்டு முத்தியாகிய ஒன்றை மட்டும் ஈவதற்கு என்ன வருத்தம்?'' என்று கூறும் பாடலில் ''தந்தது உன்றனைக் கொண்டது என்தனை'' என்ற திருவாசகப் பாடலின் சாயல் விழுகிறது.

''அம்பலவாணா அடியனுடன் முதலா
மருவிய மூன்றும் கொண்டு
ஒன்று ஈவதற்கு வருத்தம் என்னே''

எம் வினையைச் சிதை : எம் சிற்றிலைச் சிதையாதே : திருவிடைக்கழி முருகர் பிள்ளைத் தமிழ் மிகவும் சுவை யுடையது. சிற்றில் பருவத்தில் மகளிர் முருகக் கடவுளை நோக்கி, ''உம்மை நினைந்து உருகும் அடியார்களுடைய வினை முதலியவற்றைச் சிதைத்தருள்க; எம்முடைய சிற்றிலைச் சிதையாதீர்'' என்கின்றனர்.

''கண்ணீர் பெருக உருகி உளம்கசி
நின்னடியார் மலமாய்
கன்ம முழுதும் சிதை அவர் முற்கடிய
வினையைச் சிதை அவர்தம்
எண்ணீர் பிறவிக் கணக்கு எழுதும்
ஏட்டைச் சிதை நீயே பரமென்று
எண்ணாது இழுதை உறுமுனகர் எண்ணம்
சிதை மற்றிவை தவிர்த்த
புண்ணீர் கவரும் வடிவேற்கைப் புலவா!
புலவர் போரேறே!
பொறியிலேம் சிற்றிலஞ் சிதைத்தல்
புகழோ அலது புண்ணியமோ
தெண்ணீர் வளங்கூர் இடைக்கழிவாழ்
செல்வா சிற்றில் சிதையலே!
சிந்திப்பவர் உள்ளூறு அமுதத் தெளிவே
சிற்றில் சிதையேலே''

அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ் : இதனைத் தொடர்ந்து திருவிடைக்கழிக் குறவஞ்சி, ஆற்றூர்ப் புராணம், விளத் தொட்டி புராணம், வாளொளிப் புற்றூர்ப் புராணம் பாடியருளினார். அடுத்து திருவா வடுதுறை அம்பலவாண தேசிகர் மீது பிள்ளைத் தமிழ் பாடினார். இப்பிள்ளைத் தமிழின் காப்புப் பகுதியில், வேறு பிள்ளைத் தமிழ்களைப் போலத் திருமால் முதலியவர்களைக் காப்பாகக் கூறுதலைத் தவிர்த்துத் திருவாவடுதுறை ஆதீனத்து குரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரம்பரையினர்களைக் கூறுகின்றார். மடத்தைப் பற்றிய செய்திகளும் நிரம்ப இருக்கின்றன.

புராணப் பிரதிட்டை, தலப் பிரதிட்டை : தருமை ஆதீனத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க திருக்குறுக்கை புராணம் இயற்றினார். தருமை ஆதீனத் தலைவர் அனுப்பிய திருமுகம் வருமாறு : ''புராணம் இல்லாவிடில் தலத்தினுடைய வரலாறு விளங்காது. அன்றியும் ஒரு புராணப் பிரதிட்டை ஒரு தல பிரதிட்டை போலாகும்''.

கால கால நினைத்தொழுதேன் : 1862-ஆம் ஆண்டில் மதுரை திருஞான சம்பந்த ஆதீனத் திருமடத்திற்குப் பிள்ளை அவர்கள் சென்றார்கள். அங்கே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பதிற்றுப்பத்து அந்தாதியும், ஆனந்தக் களிப்பும் பாடி யருளினார்கள். பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்தை ஒட்டிக் குருபரம்பரை அகவல் பாடினார். இவர் பாடிய மண்ணிப் படிக் கரை புராணத்தில் ஓர் அரிய எளிமையான பாடல் வருமாறு :

''காம தகன நினைத் தொழுதேன்
கால கால நினைத் தொழுதேன்
சோமசூட நினைத் தொழுதேன்
துணைவி விடாது வீற்றிருக்கும்
வாம பாக நினைத் தொழுதேன்
மதுக வனத்தாய்
நினைத்தொழுதேன்
ஓம உருவ நினைத் தொழுதேன்
என்று நடனம் புரிகின்றான்''

(நடன விநாயகப் படலம் ... கங)

ஆலயத்தில் களைகள் : சிவாலயங் களில் திருமதில் முதலியவற்றில் ஆல், அரசு முதலியன தோன்றி அழிப்பது அன்றும் இருந்திருக்கின்றது போலும். மனம் நொந்து பாடுகின்றார்.

''அறப்பரிபாலர் எம்பிரான் கோயில்
அகத்தெழும் ஆல் அரசு ஆதி
உறப்பறித்து எழல் போல் நெற்பயிர்
வளர்ச்சிக்கு
ஊறுசெய் களையெலாம் ஒருங்கு
மறப்படை நெடுங்கண் உழத்தியர்
வயலுள்
வயங்கும் ஓதிமம் எனப் புகுந்து
நறப்படு களைகள் யாவையும் களைந்து
நகுவரப் பேற்றினர் எழுவார்''

(நாட்டுப் ....)

''அரன் அடியார் கை கொடுக்கப்
பட்டதன் பலம் ஒன்று அனந்தமாவது
போல்
பல்பல கிளைத்து எழும் பொழுதே
அட்டமெய்யுடையான் ஆலயத்து இடை
ஆல்
அரசு என முளைத்த பல்களையே''

(நாட்டுப் ....)

மேலும் சில நூல்கள் : பாண்டி நாடு சென்று அங்குள்ள நகரவைசியர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, கோயி லூர்ப் புராணம் பாடியருளினார். பத்துப் பாடல்களில் பத்து பருவங்களை வைத்து 'கோமளவல்லி பிள்ளைத் தமிழ்' பாடினார்.

சிவ–விஷ்ணு பேதமற்ற நிலை : கும்பகோண புராணமும் வெகு உற்சாக மாக இயற்றப்பட்டது. அன்றன்று பாடி முடிக்கும் கவிதைகளை அன்று மாலையே அரங்கேற்றி மகிழ்ந்தனர். தியாகராசச் செட்டியார் நாளும் கலந்து கொண்டு மகிழ்ந்தார். நூல் நிறைவு எய்தியவுடன் பல்லக்கு ஒன்று வாங்கி பிற அன்பளிப்பு களுடன் சேர்த்து வழங்கி, பிள்ளையவர் களை அதில் ஏறச் செய்து, ஊர்ப் பெரிய வர்கள் பலரும் தாங்கி வந்தனர். கும்பேசு வரரையும், ஆராவமுதரையும் இணைத்துப் பாடிய பாடல் சிவ–விஷ்ணு பேதமற்ற ஈடுபாட்டைப் புலப்படுத்தும்.

''எண்ணிய குடும்பலிங்க நாயகரை
இலங்கும் ஆராவமுதரைச் சீர்
நண்ணிய சைவர் யாவரும் கண்டு
நாடொறும் தந்தை தாய் என்றே
கண்ணிய சிறப்பில் போற்றிடுவாரேல்
கருது பல்போகமும் துய்த்துப்
புண்ணிய மிகுந்த பெரும் சிவலோகம்
புக்கு வாழ்ந்து அமர்வது சரதம்''

(ஆராவமுதப் ....ளo)

கவிப் பெருக்கு : பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களைப் பற்றி எழுதினாலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கை ஒடிந்து போகும். இதோ அடுத்த பட்டியல்; குடந்தைத் திரிபந்தாதி, குரை மாநகர்ப் புராணம், திருவாவடுதுறை யமக அந்தாதி, தனியூர்ப் புராணம், மாயூரப் புராணம், ஸ்ரீ காசி ரகசியம், வீரவனப் புராணம், கன்னபுரம் பாகம்பிரியாள் பிள்ளைத் தமிழ், ஸ்ரீ பிரம்மவித்தியா நாயகி பிள்ளைத் தமிழ்.

திரு நாகைக் காரோணப் புராணம் : 1868 -ஆம் ஆண்டு ஏப்ரலில் நாகைப் பெரு மக்கள் திருநாகைக் காரோணப் புராணம் இயற்றக் கேட்டுக் கொண்டனர். பிள்ளைய வர்கள் நாகை சென்று சிலகாலம் இருந்து, பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்து, விசாரிக்க வேண்டியவற்றை எல்லாம் விசாரித்து அறிந்து கொண்டார். 1869-ஆம் ஆண்டு பங்குனி மாதம் அரங்கேற்றம் ஆரம்பமாயிற்று. ஒரு வருட காலம் புராணச் சொற்பொழிவு நடத்தினார். கோடக நல்லூர் ஸ்ரீ சுந்தர சுவாமிகள் சிறப் பாகக் கலந்து கொண்டார். அங்கு முகாம் இட்டிருந்த ஸ்ரீ சங்கரசாரிய சுவாமிகள் பிள்ளையவர்களை அழைத்துப் பாராட்டி னார்கள்.

தமிழ் நாடு செய்த தவம் : பிள்ளைய வர்கள் இயற்றிய புராணக் காப்பியங்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது திரு நாகைக் காரோணப் புராணம் ஆகும். ''பிள்ளையவர்கள் செய்த நூல்களுள் ஒவ்வொன்றில் சில சில அமைப்புகள் சிறப்பெய்தி விளங்கும். இந்நூலிலோ ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்கும். தமிழ்க் காப்பி யத்தின் இலக்கணம் முழுவதும் உள்ள தாய்ப் பலவகையிலும் நயம் சிறந்து, சைவப் பிழம்பாக விளங்கும். இக்காப்பி யத்தைப் பெறுதற்குத் தமிழ்நாடு தவம் செய்திருத்தல் வேண்டும்'' என்கிறார் மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதை யர் அவர்கள்.

''ஒரு மலத்தடை உயிரினை விளங்கனி ஒக்கும்
இருமலத்தடை உயிரினை இலாங்கலி ஏய்க்கும்
பொருமலத்தடை மூன்றுடை உயிரினைப் புரையும்
குருமலர்ப் பசுந்தழை விரிகுலப் பெரு நரந்தம்''

(ஒரு மலத்தடை உயிர் – விஞ்ஞானா கலர்; இருமலத் தடை உயிர் – பிரளயா கலர்; இலாங்கலி – தேங்காய்; தடை மூன்று டை உயிர் – சகலர்; நரந்தம் – நாரத்தங்கனி)

குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் : அதன் பின்னர் சுப்பிரமணிய தேசிகர் மாலை, நெஞ்சு விடு தூது, அம்பர்ப் புராணம், திருவிடைமருதூர் உலா பாடினார். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் சரித்திரம் பாடினார். திருவாவடுதுறை திருமடத்து ஆதீன வித்வானாக இருந்தும், ஏனைய மடத்துத் தலைவர்களைப் பற்றியும் பாடி அருளியது அன்றைய சைவ சமய உலகின் பரந்த உளப்பாங்கைத் தெரியப்படுத்துகிறது.

திருப்பெருந்துறைப் புராணம் : திருப் பெருந்துறைப் புராணம் நெஞ்சுருக்கும் பாடல்கள் நிரம்பியது. மணிவாசகர் வரலாற்றைப் பிழிந்து கொடுக்கிறார்.

''தொழுபவர் ஒருபால்; துதிப்பவர் ஒரு பால்
துதித்துளம் நெக்கு நெக்குருகி
அழுபவர் ஒருபால்; இவரெலாம் நிற்க
அடியனேன் தனைப் பிடித்து ஆண்டாய்
பழுதில் நின் கருணைத் திறத்தை என் புகல்கோ
பாண்டிநாடு இயற்றிய தவத்தால்
கொழுமலர்ச் சோலை திருப்பெருந்துறையிற்
குருந்தடி இருந்தருள் பரனே''

(உபதேசப் படலம் ....௭0)

சேக்கிழார் பிள்ளைத் தமிழ் : பிள்ளை யவர்கள் சேக்கிழார் பால் பெரும்பக்தி வைத்திருந்தார்.

''மண்டலை வேலைப் புவியிற் பத்தி செய் மார்க்கம் அறிந்தவர் ஆர்
வண்சுவை அமுத ஒழுக்கென வார்த்தை வழங்கத் தெரிகுநர் ஆர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டலை நேர் பகடூர் தரு கூற்றம்
குதித்து உய்ந்திட வலர் யார்
பொற்ற கைலைக் கணநாதர்களொடு
கூடுபு மகிழ்பவர் ஆர்
விண்டலை யாரும் பெறவரும் இன்பம்
விராவும் திறலின் ஆர்
விமலா நீ! அவதாரம்
செய்யாவிடின்''.

(தாலப் ....க0)

''பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்
பாடியகவி வலவ''

(தாலப் ....அ)

''ஒழியாப் பத்திக் கடல் வருக''

(வாரானை ....கச)

''சைவப் பயிர் தழையத் தழையும் புயல்''

(தாலப் ....சா)

''வயங்கும் சைவப் பெருவாழ்வே''

(சிற்றிற் ....க0)

''நெஞ்சும் கனியக் கனியக் கண்ணீர்
வாரக்
கவி பாடிய இறைவ''

(சப்பாணி ....எ)

''கல்லும் கரையக் கவிபாடும்
கனிவாய் முத்தம் தருகவே''

(முத்துப் ....ரு)

மேலும், திருவரன் குளப்புரணம், மருத வாணர் புராணம், ஸ்ரீ சிவஞான யோகிகள் சரித்திரம் பாடியருளினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பர் : பிள்ளையவர்கள் இயற்றியவற்றைப் புராணங்கள், பிரபந்தங்கள், தனிப்பாடல்கள், சிறப்புப்பாயிரங்களென நான்கு வகையாகப் பிரிக்கலாம். இவர் இயற்றிய நூல்கள் பலவற்றுள் தெரியாதவை சில. தெரிந்தவற்றுள் புராணங்கள் 22; பிறகாப்பியங்கள் 6; பிரபந்தங்கள் 45; தனிப்பாடல்கள் அளவிறந்தன. இவரைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பர் என்றே கூறலாம். ஆனால் ஒரு வேறுபாடு. கம்பரைவிட அதிகமான பாடல்கள் பாடியுள்ளார்.

5. பாடம் சொல்லுதல்

பாடம் சொல்லுதல் : பாடம் சொல்லுதல் தான் பிள்ளையவர்களின் இயல்பான நடைமுறை ஆகும். கவிதைகளாலும், காவியங்களாலும் தமிழுலகை மயக்கி வைத்திருந்த பிள்ளையவர்கள், பாடம் சொல்லுதல் மூலம் ஆழமாகவும் தமிழ்ப் பணி புரிந்திருக்கிறார். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் இவரது மாணாக்கர் என்றாலே போதாதா? இவர் தமிழுக்குத் தந்த மாபெரும் கொடையல்லவா? இன்னார் இனியர் என்று இல்லை. பிரபுக்கள் பாடம் கேட்டனர். ஏழைப் பிள்ளைகளாயிருந்தால் அவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் முதலியனவும் செய்வார். ஒருமுறை பாடம் சொல்வது ஆயிரந்தரம் படிப்பதற்குச் சமம் என்ற கொள்கை உடையவர். நாடு நகரம் தாண்டிப் பெங்களூர் வரை சென்று தேவராசப் பிள்ளை என்பவர்க்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். சாதி, மத வேறுபாடு பாராமல் சவராயலு நாயகர் என்ற கிறிஸ்துவர்க்குத் தேம்பாவணி பாடம் சொல்லிக் கொடுத்தார். பூவாளூர் தியாகராசச் செட்டியார் இவரது மாணாக்கரே! அவர் காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள தமிழ்ப் பண்டிதர்களில் பெரும்பாலோர் பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களும், மாணாக்கர் பரம்பரையைச் சார்ந்தவர்களுமே. பாண்டித்துரைத் தேவரின் ஆசிரியர் இராமநாதபுரம் அழகிரி ராஜு பிள்ளையவர்களின் மாணாக்கரே! மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஓய்வு நேரங்களில் தமிழ் படிக்கும் இயல்பினர். தமக்கு எழும் ஐயங்களைப் பிள்ளை அவர்களிடம் கேட்டுத் தெளிவார். பாடம் சொல்லிக் கொடுப்பதோடு, தம் மாணாக்கர்களின் குடும்பச் சிக்கலையும் பிள்ளையவர்கள் தீர்த்து வைப்பார்கள். இவரது மாணாக்கராயிருந்த திருநெல்வேலி ஆரியங்காவு பிள்ளை புதியதாய் திருமணம் ஆகி மனைவி குடும்பத்தைப் பிரிந்த நிலையில் மனத்துயர் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் அவர் குடும்பத்தினரை அழைத்து திருச்சியில் தங்கச் செய்து மகிழ்வித்தார். சீகாழியோ, மாயூரமோ எங்கெங்கு பிள்ளையவர்கள் தங்குகின்றார்களோ அங்கங்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடம் சொல்லிக் கொடுப்பார். திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்தபொழுது அங்குள்ள தம்பிரான்களுக்குப் பாடம் சொல்லித் தந்தார். தாம் நூல்கள் எழுதித் தமிழ்த் தொண்டும், சிவத்தொணடும் செய்தது அல்லாமல், பல மாணாக்கர்களை உருவாக்கி அவர்கள் மூலமாகவும் பிள்ளையவர்கள் தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டும் செய்து வந்தார்கள்.

பெரிய புராணத் தொடருரை : பிள்ளையவர்களின் நூல் அரங்கேற்றமே மாதக் கணக்கில் – ஏன் வருடக் கணக்கில் கூட நடைபெற்றது. அதுவல்லாமல் பெரிய புராணம் வேறு முறையாகச் சொல்லி வந்தார். இவ்வாறாக சைவ சமயத்தின் வளர்ச்சிக்குப் பலநிலைகளிலும் துணை புரிந்தார்.

கச்சியப்ப முனிவர் பால் அன்பு : கச்சியப்ப முனிவர் மேல் பிள்ளையவர்கள் பெரிதும் அன்பு பூண்டவர். ஒருமுறை காஞ்சிப் புராணம் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அதன் சுவையினை இன்புற்று கண்ணீர் பெருக்கலாயினர். பக்கத்திலிருந்த அன்பர் திரு. சிதம்பரம் பிள்ளை இது தெரியாமல் ''ஏதோ மன வருத்தம் போலிருக்கிறது'' என்று பதறி விட்டார். விஷயம் தெரிந்த பிறகு ''புத்தகம் படித்து அழுபவர் உண்டோ'' என்று வியந்து போனார்.

6. சிவபக்தி

சிவபக்தி : பிள்ளையவர்களுக்கு இருந்த சிவபக்தி அளவிடற்கரியது. சிவ தீட்சைகளை முறையே இவர் பெற்றவர். இவர் நெற்றியில் திருநீறு எப்பொழுதும் விளங்கிக் கொண்டே இருக்கும். இரவில் படுக்குமுன் திருநீறு அணிந்து கொண்டு இறைவனை வழிபட்டே உறங்குவார். துயிலெழுந்தவுடன் திருநீறு அணிந்தே வெளியே வருவார். நாள்தோறும் சிவ பூஜையை நெடுநேரம் செய்வார். சிவாலயங்களுக்குச் சென்று வழிபடுவதும், சிவாலய தலவரலாறுகளை அறிந்தும், சிவ பெருமானுடைய புகழைச் சொல்லியும், பாடியும் வரும் வழக்கமும் இவர் பாற் சிறந்து விளங்கின. இறுதி நாள் தோறும் சிவபெருமானுடைய திருவடிக் கமலத்தையே எண்ணி உருகினார். உலக வாழ்வை நீப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் ''ஏக நாயகனே தில்லையில் ஆடும் இறைவனே எம் பெருமானே'' என ஒரு சுலோகத்தை மொழி பெயர்த்து எழுதினார். திருவாசகத்தில் அடைக்கலப் பத்தை வாசிக்கையில் இவர் உயிர் நீத்தார். அந்நாளில் திருவாவடுதுறையில் ஸ்ரீ கோமுத்தீசுவரரது இடபவாகனக் காட்சி விழா அமைந்ததும் திருவருட் குறிப்பே!

இவ்வாறாக தம் நூல்களாலும், பாடம் சொல்லி தருதல் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் அன்றாட வாழ்விலும் சைவ நெறியில் பிள்ளையவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். அவருக்குப் பிறகு இன்னொருவர் அவரைப் போல இன்று வரை தோன்றவில்லை.

(தந்தையார் – சிதம்பரம் பிள்ளை; தாயார் – அன்னத்தாச்சி; பிறந்த நாள்; 6.4.1815 ; மறைவு; 1.2.1876)

துணை நூல் : ''ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்'' – உ.வே. சாமிநாதையர்.

3

சிவபூசையே முதற் பணியாகக் கொண்ட தவராசர் (1816)

குருநாதர் அளித்த ஏறுமுகக் கண்டிகை; களவு போய்விட்டது. துடித்துப் போனார் அந்தச் சிவனடியார். மறுகண்டிகை அகப்படும் வரையில் உண்ணாமல் இருந்து சிவபூசை மட்டும் செய்து வந்தார்.

ஒரு நாள் அவர் தாமிரவருணி ஆற்றங் கரையில் பூசை செய்து கொண்டிருந்தார். பெரும் புயல். கர்ப்பூரம் ஏற்றிப் பூசை செய்ய முடியவில்லை. அதனால் மனம் நொந்த அவர் அன்று முழுமையும் உணவு உண்ணாது இருந்தார். இது நாயன்மார் காலத்திய வரலாறு அல்ல. நமக்கு அண்மைக் காலத்தில் 19-ஆம் நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சி.

சிவ பூசையே அவர்க்கு முதற் செயலாக இருந்தது. சிவபூசை செய்த பிறகுதான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மற்ற காரியங்களைத் தொடங்குவார். சிவப்பதிகள் செல்வதில் பெருவிருப்பம் கொண்டிருந்தார். கழுகு மலைத் திருவிழாக்களில் ஏழாம் திருநாளை ஐம்பது ஆண்டுகள் நடத்தினார்.

முருகக் கடவுள் மீது பல நூல்கள் பாடியுள்ளார். மருதூர்ப் புராணத்தை மொழி பெயர்த்து வில்வவனப் புராணம் எனப் பெயரிட்டு 1200 பாடல்கள் பாடினார்.

திருபுவனம் தலபுராணத்தைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து 800 பாடல்கள் பாடியுள்ளார். உயிர் பிரியும் பொழுது

''போமளவு நாயடியேன் முன்னே வந்து
போந்தாயோ என வேண்டும்
போந்தால் அந்தக்
கோமளவல்லியு நீயும் இருக்கும் கோலம்
கும்பிட நான் பெற வேண்டும்
கூத்தனாரே''

என்று தேவாரப் பாடலைப் பாட அவர் உயிர் அடங்கியது. அச்சிவனடியார் கருத்த முத்துப் பிள்ளை ஆவார். வாழ்ந்த காலம் 1816–1895; பிறந்த ஊர் – எட்டயபுரம், திருநெல்வேலி மாவட்டம்; பெற்றோர் – ஆண்டியப்ப பிள்ளை.

4
திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பெருவாசகப் பெரியோன் (1820)

நூறு ஆண்டுகளுக்கு முன் ஓர் அந்திப் பொழுது. எழுபது வயதைத் தாண்டிய ஒரு பெரியவர் – அவரோடு இணைந்த பாலியோல் கல்லூரி ஆசிரியர் ஒருவர் (Master of Balliol College) கல்லூரி வளாகத்தில் நடந்து கொண்டே தமிழ்க் கவிதை, தத்துவம் பற்றிப் பேசிக் கொண்டு வருகிறார். பெரியவர் சொல்வதைக் கேட்கக் கேட்க ஆசிரியர் விரைந்து ''இவற்றையெல்லாம் உடனே அச்சிட வேண்டும்'' என்றார். உடனே பெரியவர் ''ஐயா! இது நீண்ட நாள் பிடிக்கும் வேலை ஆகும். அதுவரை இருக்க நான் நித்யத்துவம் உடையவன் அல்ல'' என்கிறார். ஆசிரியர் பெருமகனார்



பெரியவர் தோளில் கையை வைத்து, ''மகத்தான பணியைச் செய்து கொண்டிருத்தலே நீண்ட ஆயுளுக்கு வழியாகும். இப்பணி முடியும் வரை நீங்கள் வாழ்வீர்கள்'' என்றார். (To have a great work in progress is the way to live long. You will live till you finish it.)

ஆம். அந்தப் பெரியவர் அதுவரை வாழ்ந்தார். அந்தப் பணியையும் முடித்தார். பெரியவர் போப்பையர். பணி திருவாசகம் ஆங்கில மொழி பெயர்ப்பு. பணிமுடித்த பொழுது அவருக்கு வயது எண்பது. போப்பையர் 1897-ஆம் ஆண்டில் மொழி பெயர்க்க ஆரம்பித்து 20.10.1900-ஆம் ஆண்டில் எழுதி முடித்து வெளியிட்டார்.

போப்பையரின் திருவாசக மொழி பெயர்ப்பு அவரது உணர்வில் கலந்த ஒன்று. நெஞ்சுருகி மனங் கசிந்து கண்ணீர் பெருகி திருவாசகத்தை ஓதிவந்தார். நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதும் பொழுது ஒரு திருவாசகப் பாடலை மேற்கோள் காட்டினார். அந்தப் பாடலை எழுதும் பொழுது போப்பையரின் கண்ணில் நீர் பெருகி அந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரிகள் சற்று கலைந்து விட்டதாம். போப்பையருக்கு அந்தப் புனிதத்தை மாற்ற மனம் இல்லை. மீண்டும் திருத்தி எழுதாமல் கலங்கிய எழுத்துக்களுடனே அக் கடிதத்தை அனுப்பிவிட்டார்.

இந்த உருக்கம் அவருக்கு எப்படி வந்தது? தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் மக்களோடு மக்களாய் ஒன்றிணைந்து கலந்து அவர் வாழ்ந்தமையால் அவருக்கு அந்த உணர்வு வந்தது எனலாம். இதே உணர்வுடன் தமிழ் மண்ணில் நாற்பத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்தார். தமிழ் நாட்டுக்குப் பணியாற்ற வருவதற்குக் கப்பல் ஏறியவுடனே தமிழ் படிக்க ஆரம்பித்து விட்டார். தாம் இறந்த பின் தமது கல்லறையில் ''ஒரு தமிழ் மாணவன்'' என்று எழுத வேண்டும் என விரும்பினார்.

திருவாசகத்துடன் திருக்குறள், நாலடியார், சிவஞான போதம் ஆகியவற்றையும் மொழி பெயர்த்தார். தமிழ் இலக்கணம், தமிழ்க் கையேடு, கிறிஸ்துநாதரின் மலைப் பிரசங்கத்தை நான்கு திராவிட மொழிகளில் மொழி பெயர்த்தல், தோடர் இலக்கணம், இந்திய வரலாறு என அவர் எழுத்துப் பணி விரிந்தது.

போப்பையர் தமிழகத்திற்கு வந்தது மத போதகராகத்தான். மதபோதகராகச் சாயர்புரம் வந்தவர் கிறிஸ்துவ சமய போதகக் கல்லூரி துவங்கி பல பிரசாரகரார்களை உருவாக்கினார். பின்னர் உதகமண்டலம், பெங்களூர் நகரங்களில் பள்ளி நடத்தினார்.

இந்தியாவில் பணிமுடித்து தன் தாய் நாடு சென்ற போப்பையர் அங்கும் வாளா இருக்கவில்லை. தமது 65-ஆவது வயதில் ஆக்ஸ்பர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்கும் பேராசியராக 23 ஆண்டுகள் பணியாற்றினார். போப் 1820-ஆம் ஆண்டில் நோவாஸ்கோஷியாவில் உள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பிறந்தார். 1908 பிப்ரவரி பனிரெண்டாம் நாள் உயிர் நீத்தார்.

(துணை நூல்கள், இதழ்கள் : "Siddhanta Deepika dated, June 1906, August 1906, April 1907; "Thiruvachakam G.U. Pope 1900)

5
சன்மார்க்க நெறி காட்டிய சைவ மறுமலர்ச்சியின் சிகரம் (1823)

காலத்துக்கேற்ற சைவநெறி : காலந்தோறும் சைவ அருளாளர்கள் தோன்றிக் காலத்துக்கேற்ற சைவநெறிகளைக் கண்டனர். சமண அலை வீசிய பொழுது தலங்கள் தோறும் சென்று தமிழ்ப் பண்கள் இசைத்து மக்களிடம் பக்தியுணர்வை ஏற்படுத்தி சைவசமய எழுச்சி கண்டவர்கள் அப்பர் பெருமானும் ஞானசம்பந்தப் பெருந்தகையும். கொள்கைப் பிடிப்பு இல்லாமல் குறிக்கோள் இல்லாது தமிழகம் இருந்த நிலையில் தொண்டு நெறியை முன் வைத்துச் சாதி சமயங்கடந்த அடியார்கள் வரலாற்றைப் படைத்தார் சேக்கிழார் பெருமான். அறிவு ரீதியாக பௌத்த சமயக் கொள்கைகள் மக்கள் மனத்தில், நிலைத்து நிற்க – அவற்றை மறுக்கும் முகமாக சங்கரர் அத்வைதத் தத்துவத்தை நிலைநாட்ட – தமிழ்நாட்டில் தருக்க ரீதியாகக் காரண காரிய விளக்கங்களுடன் தனிப்பெரும் தத்துவம் கண்டார் மெய்கண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பூசல், வேதாந்த – சித்தாந்தப்போர் என்று தமிழகம் தத்தளிக்க, வேதாந்த சித்தாந்த ஒருமை கண்டார் தாயுமானவர். கிறித்துவ – இஸ்லாமியக் கொள்கைகள் தமிழகத்தில் பரவ அனைத்துச் சமயத்திற் கும் பொதுவான ஒளிவழி பாட்டையும் அனைத்துச் சமயக் கடவுளர்க்கும் பொதுப் பண்பான கருணையையும் முன்னிறுத்தி அனைத்துச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் பொதுமைக் கருத்தாக – சமரச சன்மார்க்க நெறி கண்டவர் வள்ளல் பெருந்தகை.

இருவேறுபட்ட கருத்துக்கள் : இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாத சைவரில் சிலர் வள்ளலார் நெறி சைவ மறுப்புநெறிஎன்றும் சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வள்ளலார் நெறி சைவ நெறி அல்லாத தனிநெறி என்றும் கூறி வருகின்றனர்.

வள்ளலார் பின்பற்றியநெறி சைவ நெறியே : இவ்வாறிருக்க வள்ளல் பெருந் தகை இளவயதிலிருந்தே பின்பற்றியது சைவநெறியே. வள்ளல் பெருந்தகையின் வழிபடுகடவுள் முருகப் பெருமான்; வழி படுகுரு ஞானசம்பந்த பெருமான்; வழி பாட்டு நூல் திருவாசகம்; வள்ளலார் பாடி யருளிய முதல் ஐந்து திருமுறைகள் சைவத் திருமுறை ஆசிரியர்களையும் அவர்கள் அருளிய திருமுறைப் பாக்களையும் போற்றுகின்றன. எனவே சன்மார்க்க அன்பர்கள் இவ்வைந்து திருமுறைகளை யும் ஒதுக்கி ஆறாம் திருமுறையை மட்டுமே போற்றுகின்றனர்.

சிவமணம் கமழும் ஆறாம் திருமுறை : சன்மார்க்கிகள் போற்றும் ஆறாம் திரு முறையும் சைவநெறியையே பேசுகின்றது. ஆறாம் திருமுறையில் முதல் பதிகமே பரசிவ வணக்கம். திருச்சிற்றம்பலத் தெய்வமணிமாலை என்ற இரண்டாம் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் ''திருச்சிற்றம்பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர்'' என்றும் மூன்றாம் பதிகத் தில் ''அம்பலக்கூத்தன் குறிப்பினுக்கு என் கடவேன்'' என ஒவ்வொரு பாடலிலும், இருபத்திரண்டாம் பதிகம் நடராச பதிமாலை என்று பதிகம் முழுமையும், இருபத்துமூன்றாம் பதிகத்தில் ''தனிநடராச என் சற்குருமணியே'' என ஒவ்வொரு பாடலிலும், இருபத்து நான்காம் பதிகத்தில் '' மன்றில் நடத்தரசே'' என ஒவ்வொரு பாடலிலும், ''சிவனே'' ''சிவமே'' என்று பல பாடல்களிலும், ''சிவகாமவல்லி'' என்று பல பாடல்களிலும் ''சிவயோக நிலை'' என்று முப்பத்தைந்தாம் பதிகம் முழுமையிலும், ''பரசிவ நிலை'' என்று நாற்பத்தியோராம் பதிகம் முழுமையிலும், ''உத்தரஞான சிதம்பரமாலை'' எனத் தனியே ஐம்பத்து மூன்றாம் பதிகத்திலும், ''ஞான சிதம்பர வெண்பா'' எனத் தனியே அறுபத்தி ஒன்றாம் பதிகத்திலும், ''சிவபதி விளக்கம்'' என அறுபத்து இரண்டாம் பதிகத்திலும், ''சிவம் வளர் பதமே பதம் வளர் சிவமே சிவபதம் வளர் சிவபதியே'' என 4249-ஆம் பாடலிலும், ''அம்பல வாணர் ஆடவருகை'' (பதிகம்71), ''அம்பலவாணர் அணைய வருகை (பதிகம்72), ''அம்பலத்தரசே''(பதிகம்113), ''சம்போசங்கர'' (பதிகம்114), ''சிவ போகம்'' (பதிகம்115), ''அம்பலத்து அமுதே'' (பதிகம்116), ''திருநடமணியே'' (பதிகம்117), ''ஞானசபாபதியே'' (பதிகம் 118), ''சுத்தசிவ நிலை'' (பதிகம்129) என தனிப் பதிகங்களிலும் தொட்ட இட மெல்லாம் சிவமணம் கமழ்கிறது.

ஆறாம் திருமுறை நெடுகிலும் சிவகதைகளே : பெயர்கள், தலைப்புகளில் மட்டும் சிவமணம் கமழவில்லை. புராணச் செய்திகளும் சிவ கதைகளாகவே மலர்ந் துள்ளன. திருமாலும், பிரமனும் சென்ற டைவதற்கு அரியவன் இறையவன் என்ற செய்தி ஆறாம் திருமுறையில் பல இடங்களில் வருகின்றது.

> ''இமையவர் பிரமர் நாரணர் முதலோர்
> எய்துதற்கரிய பேர் இன்பம்''
>
> (பா 3533)

> ''மன்னே அயனும் திருமாலவனும்
> மதித்தற்கரிய பெரிய பொருளே''
>
> (பா 3612)

எவ்விடத்தும் இலங்கும் சிவம் : பிறசமயக் கடவுளர் அருள்ஒளி சிறிதே பெற்றனர் என்கிறார் வள்ளல் பெருந்தகை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர்
இந்திரர்கள்
நவில் அருகர் புத்தர் முதல்
மதத்தலைவர் எல்லாம்
வான்முகதத்தில் தோன்றி அருள் ஒளி
சிறிதே அடைந்து
வானகத்தும் வையகத்தும்
மனம்போனபடியே
தேன் முகத்துண்டவர் எனவே
விளையாடா நின்ற
சிறுபிள்ளைக்கூட்டம் என
அருட்பெருஞ்சோதியினால்
தான்மிகக் கண்டறிக எனச்
சாற்றியநற்குருவே''

(பா 4178)

அவர்கள் எல்லாம் ''சிறுபிள்ளைக் கூட்டம்'' என்கிறார். இந்தப்பல்சமயக் கூட்டம், அவை காட்டிய நெறி அனைத்துமே பிள்ளைவிளையாட்டு என்கிறார்.

''கொள்ளை வினைக்கூட்டுறவால்
கூட்டியபல் சமயக்
கூட்டமும் அக்கூட்டத்தே
கூவுகின்ற கலையும்
கள்ளம் உறும் அக்கலைகள்
காட்டியபல்கதியும்
காட்சிகளும் காட்சிதரு
கடவுளரும்எல்லாம்
பிள்ளை விளையாட்டென நன்கு
அறிவித்து இங்கு எனையே
பிள்ளை எனக் கொண்டு பிள்ளைப்
பெயரிட்டபதியே''

(பா 4173)

இந்தப் பட்டியலில் சிவனார் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எங்கும் இலங்கி இருப்பது சிவமே என்று இதே பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.

''எவ்விடத்திலும் எவ்வுயிர்க்கும் இலங்கு
சிவம் ஒன்றே
என்னாணை என்மகனே
இரண்டில்லை ஆங்கே''

(பா 4175)

பிறிதோரிடத்தில்,

''எல்லாம் சிவன் செயலாம்
எனப்புரிந்தேன்''

(பா 4070)

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில்தான் வந்தவர் என்கிறார் வள்ளலார். அந்த மரபு சைவ மரபன்றி வேறு புதுமரபாகவா இருக்க முடியும்?

திருமுறைகளும் திருவருட்பாவும் : திருமுறைக்கருத்துக்கள் பலவும் திருவருட் பாவில் காணக்கிடக்கின்றது.

''ஒன்றே குலம் ஒருவனே தேவனும்''
(திருமந்திரம்)

''ஒருவனார்'' *(7-76-1)*

''ஒருவர் தாம் பலபேருளர்
காண்மினே''

''ஒருவன் என்னும் ஒருவன் காண்க''
(திருவாசகம்)

''ஒருத்தனே'' *(திருவாசகம்)*

''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென் றிரு'' *(பட்டினத்தார்)*

''திருச்சிற்றம்பலம் தனியே தெய்வம்
ஒன்றே கண்டீர்'' *(அருட்பா)*

இறைவன் அம்மையப்பராக இருந்து உயிர்களுக்கு அருள் பாலிக்கிறான் என்பது திருமுறைகளில் பல இடங்களிலும் விதந்து ஓதப்படுகின்றது.

''தோலும் துகிலும் குழையும்
அருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்
பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத்
தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய்
கோத்தும்பி''

(திருவாசகம்)

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்'' *(திருமந்திரம்)*

''பிணைபெணொடு ஒருமையின் இருமையும் உடையரால்'' *(1,121,3)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம்
அவனும் நிற்பன்''
(சிவஞானசித்தியார்)

''அம்மையப்பரே உலகுக்கு
அம்மையப்பர்''
(திருக்களிற்றுப்படியார்)

''உலகமெலாம் விளங்க
அருள்உதவுபெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி
மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப்பொது விளங்க வளர்ந்த
சிவக்கொழுந்தே''
(திருவருட்பா – 3268)

திருவருட்பாவில் சைவ சித்தாந்தம் : திருவருட்பாவில் பல இடங்களில் சைவ சித்தாந்த கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன.

''ஆறாறுக்கு அப்புறமாகும் பொதுவில்
அதுவதுவா நடம் நான் காணல்
வேண்டும்''
(திருவருட்பா–4280)

''ஆறாறு அகன்ற நிலையை
அடைந்தான் என்பர் தேவரே''
(திருவருட்பா–5016)

என்ற பாடல்களில் சைவசித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றியும்

''எத்துணையும் காட்டாத ஆணவம்
என்றிடும் ஓர்
இருட்டறைக்கோர்அதிகாரக்
குருட்டுமுடப்பயலே''
(4846)

''கன்மம் எனும் பெருஞ்சிறுகுக்
கடுங்கலகப்பயலே'' (4845)

''மாயை எனும் படுதிருட்டுச் சிறுக்கி''
(4843)

என்ற பாடல்களில் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் பற்றியும எடுத்தாளப்பட்டுள்ளன.

சன்மார்க்க நெறி சைவ நெறியே : வள்ளலார் காட்டிய சன்மார்க்க நெறியும் புது நெறியன்று; சைவ நெறியே. சைவ சித்தாந்தம் காட்டும் சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், தாசமார்க்கம், சன்மார்க்கம் ஆகிய நால்வகை நெறிகளில் சன்மார்க்ம் நான்காவது நெறியாகும்.

சன்மார்க்கம் : ''சன்+மார்க்கம் – சன் மார்க்கம். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒன்று சத்; அதற்குரிய மார்க்கம் இயற்கை. சத்தெனும் செம்பொருளே எல்லாம் வல்ல இறை; அதன் கோயில் இயற்கை. உலகில் சத்தெனுஞ் செம்பொருட்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அங்ஙனே மார்க்கமெனும் இயற்கைக்கும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. இப்பெயர்கள் உலகில் பல சமயங்களாகக் கொள்ளப் பட்டிருக்கின்றன. புறப்போர்வையை நீக்கி, எச்சமயத்தை ஆராய்ந்தாலும் அதன் உள்ளம் சத்மார்க்கமே'' என்பார் திரு. வி.க.

''தெய்வச் சிவநெறி சன்மார்க்கம்''
(திருமந்திரம்–1478)

என்பார் திருமூலர். வள்ளலார் காட்டும் மரணமிலாப் பெருவாழ்வினைக் ''கூற்றத்தை வென்றார்'' என்கிறார் திருமூலர். ''அவர்களே சன்மார்க்கத்தைக் கண்டவர்கள்'' என்றும் சொல்கிறார்.

''சாற்றும் சன்மார்க்கமாம் தற்சிவ தத்துவத்
தோற்றங்களான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார்
குறிப்பறிந்தார்களே''
(திருமந்திரம்–1477)

சரியை, கிரியை, யோகம், ஞானம் – ஆகிய நிலைகளைக் கண்டு அவற்றைத் தாண்டிய நிலையில் சமரச சன்மார்க்கம் பெற்றேன் என்கிறார் வள்ளலார்.

''சரியை நிலை நான்கும் கிரியை நிலை
நான்கும்
தனியோக நிலை நான்கும்
தனித்தனி கண்டறிந்தேன்
உரிய சிவஞான நிலை நான்கும் அருள்
ஒளியாய்
ஒன்றொன்றா அறிந்தேன் மேல்
உண்மைநிலை பெற்றேன்
அரிய சிவசித்தாந்த வேதாந்த முதலாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆறந்தநிலை அறிந்தேன் அப்பால்
நின்றோங்கும்
பெரியசிவ அனுபவத்தால்
சமரசசன்மார்க்கம்
பெற்றேன் இங்கு இறவாமை
உற்றேன் காண்தோழி''

(திருவருட்பா-5806)

''சிவ அனுபவத்தால் சமரச சன்மார்க்கம்'' பெற்றேன் என்கிறார்.

மரணமிலாப் பெருவாழ்வு : வள்ளல் பெருந்தகையின் கோட்பாடுகளுள் முக்கிய மானது மரணமிலாப் பெருவாழ்வு ஆகும். ஊன் உடம்பினை மாற்றி அன்பும் அருளும் இன்பும் உருவாகிய தூய நல்ல உடம்பினை இறைவன் அருளால் இப்பிறப்பிலேயே பெற்று வாழ்தல் மரணமிலாப் பெருவாழ்வு ஆகும்.

ஊனுடம்புடன் இறைவனை அடைந்த அருளாளர்கள் : சண்டேசர் உடம்பு ஒளி யுடம்பாக மாற அந்த உடம்புடன் சிவனார் மகனார் ஆயினார். சேரமான் பெருமாள் நாயனாரும் நம்பியாரூரரும் மனித உடம்பு டனேயே திருக்கயிலாயத்தை அடைந்தனர். திருஞானசம்பந்தரும் ஊனுடம்புடனேயே சோதியில் புகுந்தார். அப்பர் பெருமானும் சிவானந்த ஞானவடிவேயாகி ஒளி உருப் பெற்ற நிலையில் திருப்புகலூர் அண்ண லார் சேவடிக்கீழ் அமர்ந்தருளினார். மணி வாசகப் பெருந்தகையும் தமது உடம்புடன் தில்லைச் சிற்றம்பலமாகிய ஞானவெளி யில் கலந்து மறைந்தருளினார்.

அருள் நூல்கள் கூறும் சாகாக்கலை : யோக நெறியில் நின்றால் மரணத்தை வெல்லலாம் என்பது திருமூலர் நெறி யாகும்.

''காற்றை பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும்
குறியதுவாமே''

(திருமந்திரம்-571)

''நாவின் நுனியை நடுவே சிவிறிடிற்
சாவதுமில்லை சதகோடி ஊனே''

(திருமந்திரம்-803)

''துரியங் கடந்த சுடரொளியைக்
கண்டாய்
மரணம் பிறப்பில்லை வீடு''

(ஔவைக்குறள்-பா218)

''நாபியகத்தே நலனுற நோக்கிடில்
சாவதுமில்லை உடம்பு''

(ஔவை-பா233)

என்பார் ஔவையார்.

''சாகாதிருப்பதற்குத்தான் கற்ற கல்வி'' என இடைக்காட்டுச் சித்தரும்,

''இறவாதிருக்க மருந்துண்டு'' எனப் பட்டினத்தாரும்,

''இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குரு'' என அருணகிரியாரும் கூறியுள்ளனர்.

''கால்பிடித்து மூலக்கனலை
மதிமண்டலத்தின்
மேலெழுப்பில்தேகம் விழுமோ
பராபரமே''

(பராபர-156)

என்கிறார் தாயுமானவர்.

''சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்''

(திருவருட்பா-3678)

என்கிறார் வள்ளலார்.

சோதி வடிவமே சிவலிங்கத்திருமேனி: உள்ளத்துள்ளே சோதி வடிவமாய்த் திகழும் இறைவனது அருள் திருமேனியின் அமைப்பினைப் புலப்படுத்தும் குறியாக அமைந்ததே சிவலிங்கத் திருமேனி. திரு மாலும் பிரமனும் காணா சீரொளித் தழற் பிழம்பே தொல்லைத்திகழ்ஒளி; இறைவன் அண்டத்தினுள்ளே ஒளியுருவினனாய்த் திகழும் திறமும் இதுவேயாகும்.

''காரொளிய திருமேனிச் செங்கண்மாலும்
கடிக்கமலத்து இருந்தவனும்
காணாவண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற
தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை
மயக்கம் தீர்க்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏரொளியை இருநிலனும் விசும்பும்
விண்ணும்
ஏழுலகும் கடந்து அண்டத்து
அப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப்
புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''
(6.1.11)

என்பார் அப்பர் பெருமான்.

''அண்டமார் இருளூடு கடந்தும்பர்
உண்டுபோலும் ஓர் ஒண்சுடர்''
(5,97,3)

என்பதும் அப்பர் வாக்கு.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன்
எங்கள் சோதி''
(3.54.5)

என்பார் ஞானசம்பந்தப் பெருந்தகை. சுடர் என்றது அண்டத்தின் அகத்தும் புறத்தும் காணப்பெறும் ஒளியின் பரந்து திகழும் பருமைநிலை; சோதி என்றது உயிர்களின் அகத்தே திகழும் நுண்மை நிலை. இதனையே சேக்கிழார் பெருமானும் விளக்கிக் கூறுவார்.

''தோன்று காட்சி சுடர் விட்டுளன் என்பது
ஆன்ற அங்கிப் புறத்தொளியாய்
அன்பின்
ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன்
ஏன்று காண்பார்க்கு இது பொருள்
என்றதாம்''
(பெரியபுராணம்–825)

இதனையே மணிவாசகரும்,

''சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே'' (திருவாசகம்–அருட்பத்து–1) என்பார். அவரே மேலும் ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி'' ''சோதி யாய்த் தோன்றும் உருவமே'' என்கிறார். மணிவாசகர் அருளிய திருவெம்பாவை எட்டாம் திருப்பாடலில் உள்ள ''கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை'' என்ற தொடரை அடியொற்றி அமைந்ததே வள்ளலாரின் தாரக மந்திரமாகிய ''அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை'' என்ற தொடராகும். இக்காலத்திற்கேற்றதும், சமயவேறுபாடின்றி எல்லா மக்களையும் தம்பால் ஈர்க்க வல்லதுமாகிய மெய்ம்மைத் தொடராகும் இது.

அருட்பெருஞ்சோதி சிவசோதி : வள்ளலார் கண்ட அருட்பெருஞ்சோதி அமுதமே சத்தியச் சிவம் (பா *3872*); அதுவே சிவமாக்கும் தெய்வம் *(3904)*; அருட்பெருஞ்சோதியதாகிய பாதமே அம்மையும் அப்பனும் ஆகிய பாதம்; நாரணன் ஆதியர் நாடரும் பாதம்; ஆடிய பாதம்; மன்றாடிய பாதம். *(4335)* அச்சோதி சுத்த சிவ சன்மார்க்க நீதிச்சோதி; அது சிவ சிவ சிவ சிவ ஜோதி; என்னைத் தானாக்கிக் கொண்டதோர் சத்திய ஜோதி *(4552, 4553, 4583)* ஜோதியுள் ஜோதி–சுத்த ஜோதி சிவஜோதி; அச்சோதி சுத்த சமரச சத்திய சன்மார்க்க நீதிச் செங்கோல் ஜோதி *(4585, 4589)*

அருட்பெருஞ்சோதி அகவல் : அருட்பெருஞ்ஜோதி அகவல் அருட்பா – ஆறாம் திருமுறையின் மணிமுடியாகும். சன் மாக்கிகள் தினமும் பாராயணம் செய்யும் தனிப்பெரும்பாடல் ஆகும். அந்த அருட்பெருஞ்ஜோதி அகவலும் சிவநெறியைத் தான் காட்டுகிறது. சிவபதியைத்தான் போற்றுகிறது.

''அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி
அருட்சிவநெறிசார்
அருட்பெருநிலைவாழ்
அருட்சிவபதியாம் அருட்பெருஞ்ஜோதி
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி
சுத்த சன்மார்க்கச் சுகத்தனிவெளி எனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எம்மையும் என்னை விட்டு இறையும்
பிரியாது
அம்மை அப்பனுமாம்
அருட்பெருஞ்ஜோதி
பகர் பராசக்தியைப் பதியும் அண்டங்களை
அகமற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரசிவ பதியைப் பரசிவாண்டங்களை
அரசுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி''

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருட்செயல்களை எல்லாம் பாடியருளிய வள்ளல் பெருந்தகை

''பரத்தினில் பரமே பரத்தின்
மேற்பரமே
பரம்பரம் பரமே பரம்சிதம்பரமே
பரம்சுகபரமே பரம்சிவபரமே''

என பரம் சிவபரமாகவும்

''சிவந்தரு பதமே சிவ சிவ பதமே''

எனப்பதம் சிவபதமாகவும் கூறிப்பின் *944*-வது வரிமுதல் *1018*-ஆவது வரி வரை வரிக்கு வரி சிவமாகவே காண்கிறார்.

''எம்பொருளாகி எமக்கருள் புரியும்
செம்பொருளாகிய சிவமே சிவமே
கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச்
செல்வமும் அளித்த சிவமே சிவமே''

1019 வரி முதல் 1038 வரை ''சிவபதியே'' என்று விளிக்கிறார்.

ஆன்ம நேய ஒருமைப்பாடு : அனைத்து யிர்களிடமும் நேயம் காட்டும் ஆன்மநேய ஒருமைப்பாடு வள்ளலாரின் சித்தாந்தம் ஆகும். எவ்வுயிரும் பொதுவெனக் கண்டு இரங்குவர் வள்ளலார். பயிரெலாம் தழைக்கப் பாடியவர். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர்.

''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கு ஏவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்ததாலோ''

(திருவருட்பா 5.98)

என்கிறார் வள்ளலார். எவ்வுயிரும் தம்முயிர் போல எண்ண வேண்டும். ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும் என்கிறார்.

ஆருயிர்க்கெல்லாம் செலுத்தும் அன்பு சிவத்தை அடையும் என்பதனை ''அன்பே சிவம்'' என்கிறார் திருமூலர். நடமாடும் கோயில் நம்பற்கு ஒன்றுஈயில்படமாடும் கோயில் பகவற்குச் சென்று சேரும் என்றும் கூறுகிறார். நேரவந்தவர் யாவராயினும் அவர்க்கு உணவு படைத்த சிவனடியார்கள் பற்றிச் சேக்கிழார் பாடுவார்.

''ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு
அன்பிலார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்
அன்பிலார்''

(சிவஞானசித்தி-323)

''எவ்வுயிர்க்கும் அன்பாயிரு''

(சைவ சமயநெறி)

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி
இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்
பராபரமே''

(தாயுமானவர்-65)
பராபரக்கன்னி

சமயப்பொதுமை : வள்ளலார் கண்ட சமயப் பொதுமையும் சைவ அருளாளர்கள் முன்வைத்த சிந்தனையே ஆகும்.

''எங்கேனும் யாதாகிப்பிறந்திடினும்
தன்னடியார்க்கு
இங்கே என்று அருள்புரியும்
எம்பெருமான்''

(ஞானசம்பந்தர் 2.4.6)

''ஆறுசமயத்து அவரவரைத்தேற்றும்
தகையன
இன்னம்பரான் இணையடியே''

(4-100-)

என்பார் அப்பர் பெருமான்.

''அறிவினால் மிக்க அறுவகை சமயத்து
அவ்வவர்க்கு அங்கே ஆரருள் புரிந்து''

(7.59-9)

என்பார் சுந்தரர்.

''ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள''

(திருமந்திம் -598)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''அறுவகை சமயத்தார்க்கும்
அவ்வவர்பொருளாய்''

(சிவஞானசித்தியார்–1)

''வேறுபடும் சமயம்எல்லாம் புகுந்து
பார்க்கில்
விளங்குபரம்பொருளே நின்
விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள் போல்
வயங்கிற்றம்மா''

(தாயுமானவர்–25)

இவற்றின் திரண்ட கருத்தாகப்

''பொங்கு பல சமயம் எனும் நதிகள்
எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப்பொங்கி,
ஓங்கும்
கங்குகரை காணாத கடலே''

(திருவருட்பா–2118)

என்று பாடுகிறார் வள்ளலார்.

சாதி வேறுபாடுகளைக் கடந்த நெறி : சாதி வேறுபாடுகளைக் கடந்த நெறி வள்ளலாரின் சன்மார்க்க நெறி. சைவத்திரு முறைகளும் இதனையே சுட்டுகின்றன.

''ஒன்றே குலமும் ஒருவனே
தேவனும்''

(திருமந்திரம்–2104)

''குறியில் நான்கு குலத்தினராயினும்
அறிவு சங்கரற்கு அன்பர் எனப் பெறின்
செறிவுறப் பணிந்தேத்திய
செய்கையார்''

(பெரியபுராணம்–குலச்சிறை)

''நாசமாய குலநலஞ் சுற்றங்கள்''

(அப்பர்–5.31.9)

''கோத்திரமும் குலமும் கொண்டு
என்செய்வீர்''

(5.60.3)

''சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத்
தடுமாறும் ஆதமிலி நாயேன்''

(திருவாசகம்–கண்டபத்து)

''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும்
அடியேன்''

(சுந்தரர்–திருத்தொண்டத்தொகை)

சுந்தரை அடியொற்றிச் சேக்கிழார் பெருமானும் அனைத்துச் சாதியினரையும் இணைக்கும் ஒருமைப்பாட்டுக் காவிய மாகப் பெரியபுராணத்தைத் தந்து அருளி யுள்ளார்.

''சாதியும் மதமும் சமயமும்
தவிர்ந்தேன்''

(திருவருட்பா–4075)

''சாதியிலே மதங்களிலே
சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற
உலகீர்''

(திருவருட்பா–5566)

''சாதிமதம் சமயமுதற் சங்கற்ப விகற்பம்
எலாம் தவிர்ந்து போக
ஆதிநடம்புரிகின்றான் அருட்சோதி
எனக்கு அளித்தான்''

(திருவருட்பா–4508)

சிவனருள் பெற்ற சித்தர் : வள்ளலார் ''சிவனருள் பெற்ற சித்தர்'' என்பார் வெள்ளைவாரணனார். வாழையடி வாழை யென வந்த மரபில் – திருமூலர், மௌன குரு, தாயுமானார் என்ற மரபில் – வந்தவர் வள்ளலார்.

திருமுறைகளையும், நால்வர் பெரு மக்களையும் வள்ளலார் போற்றும் பாடல்கள் பலவாகும். திருமுறைக் கருத்துக்களை – வரிகளை – வள்ளலார் ஏற்று ஆண்டி ருப்பதும் பலவாகும்.

வள்ளலார் கடைப்பிடித்தது சைவ நெறியே அன்றித் தனிநெறியன்று.

பெரும் தடை : இன்னும் ஒரு பெரிய தடை இருக்கின்றது. ஸ்ரீமுக வருஷம் ஐப்பசி மாதம் (1872) புதவாரம் மேட்டுக் குப்பத்தில் முதல் கொடி கட்டினவுடனே நடந்த விவகாரத்தின் குறிப்பு ஒன்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காணப்படுகிறது. இது உரைநடைப் பகுதியின் இறுதியில் ''பேருபதேசம்'' என்ற பகுதியில் காணப்படுகின்றது. இது வருமாறு:

''நாமும் முன் பார்த்தும் கேட்டும் லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழுஉக்குறியின்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனும் தெரிவிக்காமல் பிண்ட லஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில் கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் பெயரிட்டு, இடம் வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முதலியவையும் ஒரு மனுஷனுக்கு அமைப்பது போல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ''தெய்வத்துக்குக் கைகால் முதலியன இருக்குமா?'' என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்கள் என்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால் ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் முன்வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்மசித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்கும் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக் கொண்டால், அற்ப சித்திகளை அடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால் ஆண்டவரிடத்தில் வைத்துக் கொண்டிருக்க லக்ஷியம் போய் விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய் விட்டால், நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சி செய்து, அவ்வளவு காலம் உழைத்து அந்த அற்பப் பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால் அவைகளில் லக்ஷியம் வைக்காமல் ஆண்டவரிடத்திலேயே லக்ஷியம் வைக்க வேண்டியது. முன் சொன்ன ஏகதேச சித்தி கற்பனை யென்கின்றது வாசகப் பெருவிண்ணப்பத்தாலும் இயல் வேதாகமங்கள் புராணங்கள் என்ற அருள் விளக்கமாலைப் பாசுரத்தாலும் உணர்க''

''இயல் வேதாகமங்கள் புராணங்கள்
இதிகாசம்
இவைமுதலா இந்திரசாலங்கடையா
உரைப்பன்
மயல் ஒருநூல் மாத்திரம் தான் சாலம் என
அறிந்தார்
மகனே நீ நூலனைத்தும் சாலம் என
அறிக''

(திருவருட்பா-4176)

இந்த உபதேசப் பகுதியை வள்ளலார் எழுதவில்லை என்றும், வள்ளலார் அருளியதாக அவர் மறைவிற்குப் பின் இப்பகுதியை அவரது சீடர்கள் வெளியிட்டார்கள் என்றும் இக்கருத்துக்களை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்வது எந்த அளவிற்கு உண்மை என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.

அப்படியே வள்ளலார் கூறியதாகவே வைத்துக் கொள்வோம். ''வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம்'' என்றுதான் கூறியிருக்கிறாரே ஒழிய திருமுறைகளில் லக்ஷியம் வைக்க வேண்டாம் என்று எங்காவது கூறியிருக்கின்றாரா? சைவத்திற்கு அடிப்படை திருமுறைகள் தானே! வேதம், புராணங்களில் தெய்வத்தைக் குழுஉக் குறியாகச் சொல்லியிருக்கிறது என்கிறார். இன்றைக்கும் கேள்விகள் வருவது இந்த நான்கைச் சுற்றித்தானே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யில் என்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே''

(அப் 5,99,4)

என்கிறார் அப்பர் பெருமான்.

''வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

என்கிறார் ஞானசம்பந்தர்.

வேதங்களைத் தாண்டிய பரம்பொருள் ஒன்று இருப்பது புலனாகின்றது.

புராணங்கள் இதிகாசங்கள் அனைத்திற்கும் உட்பொருள் காணுகின்றனர் திருமூலர், மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள்.

''முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே''

(திருமந்திரம்–343)

''தச்சு விடுத்தலும் தாமடியிட்டலும்
அச்சு.முறிந்ததென்று உந்தீ பற
அழிந்தன முப்புரம் உந்தீபற''

(திருவாசகம்–296)

இவை போன்ற எடுத்துக்காட்டுகள் திருமுறைகளில் நிரம்ப உள்ளன. புராணங்கள், இதிகாசங்கள் குழூஉக்குறி என்பதற்கு இவற்றை விடச் சிறப்பான சான்றுகளும் உளவோ? இடம்வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முதலியவை இறைவனுக்கு அமைத்ததைச் சாடுகின்றார்.

''ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ?''

(திருவாசகம்–பா 235)

என்கிறார் மாணிக்கவாசகர்.

''இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே''

(6,959)

என்கிறார் அப்பர் பெருமான். இதையே தான் வள்ளலாரும் கூறியிருக்கிறார். ''ஆனால் ஆதியிலே இதை மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை'' இதைத்தான் நாம் ஆராய வேண்டும். மறைத்தவன் யார்? ஏன் மறைத்தான்? அப்பூட்டினை யாருமே திறக்கவில்லையா?

மேலும் ''அவைகள் எல்லாம் அற்ப சித்திகளை அடையத்தான் பயன்படும். இவை இந்திரசாலம். இவற்றால் ஆண்டவனை அடையமுடியாது, முக்கியலாபம் போய்விடும்'' என்கிறார். திருமுறைகள் அற்பசித்திகளை அடையவா கூறுகின்றன. அற்ப சித்திகளே திருமுறைகளில் கிடையாதே! திருமுறைகள் வள்ளலார் கூறும் முக்கிய லாபத்தைத் தானே குறிவைக்கின்றன.

''மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்
இத்தந்திரத்தில் காண்டும் என்று இருந்தோர்க்கு
அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்''

(திருவாசகம் திருஅண்டப்பகுதி 130-133)

என்றுதானே மணிவாசகரும் பாடுகின்றார்.

''அருட்பெரும் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்
தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்''

என்று, ''பூட்டினைத் திறந்த சாவியும்'' காட்டுகின்றார் மணிவாசகப் பெருந்தகை.

''தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது
தெரியாது ஆஆ செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்லகில்லேன்''

(திருஅண்டப்பகுதி-164-167)

மணிவாசகப் பெருந்தகையால் இந்த இன்ப அனுபவத்தைத் தாங்க முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை. விடவும் முடியவில்லை. இப்படிப்பட்ட உன்னத இன்ப அனுபவத்தை – சாவியை –

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தாபிடி – என்று நம்மிடம் கொடுப்பது என்றால் நடக்கிற காரியமா? யாதொரு முயற்சியும் வேண்டாவா? மாணிக்கவாசக ராலேயே தாங்கிக் கொள்ள முடியாத இன்ப அனுபவத்தை எளியோமாகிய நம்மால் தாங்கிக் கொள்ள முடியுமா? வள்ளலார் கொடுத்த சாவியைப் பெற்ற அன்பர்கள் எத்தனைபேர் பூட்டினைத் திறந்தனர்? ஒருவராவது திறந்தாரா? ''கடைவிரித்தேன் கொள்வாரில்லை'' என்ற நிலைதானே

வள்ளலார் தொடர்ந்து கூறுகிறார்.

''இது போல், சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித் தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத் தைப் பற்றிப் புறங்கவியச் சொல்ல வில்லை. அவ்வாறு பயிலுவோமானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனெனில், அவைகளிலும் – அவ்வச் சமய மதங்களி லும் – அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்ற தற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக் கெல்லாம் சாக்ஷி நானேயிருக்கின்றேன்; நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அதுபட்ட ணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலி யாருக்கும் இன்னும் சிலருக்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய் விட்டது பார்த்தீர்களா? அப்படி லக்ஷியம் வைத்தற்குச் சாக்ஷி வேறே வேண்டிய தில்லை. நான் சொல்லியிருக்கிற திருவருட் பாவில் அடங்கியிருக்கிற – ஸ்தோத்தி ரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங் களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங் களையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது''.

''இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டுவிட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால், என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இது வரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டி ருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ள வில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியம் தூக்கி விடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கி விட்டது யாதெனில், அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தார் என்று வாசகப் பெருவிண்ணப்பத்திலும், ''எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்த தேயன்றித் தலைவ வேறெண்ணியது உண்டோ? எனத் ''தேடியதுண்டு நினதுரு வுண்மை'' என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பத்திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில் ''கருணை யும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக'' என்றுதான். என்னை யேறாநிலை மிசையேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னும் கருணை தான் என்னைத் தூக்கி விட்டது''.

''கருணையும் சிவமே பொருள்
எனக்காணும்
காட்சியும் பெறுக மற்றெல்லாம்
மருள்நெறி எணநீ எனக்கு அறிவித்த
வண்ணமே பெற்றிருக்கின்றேன்''

(திருவருட்பா – 3503)

''அந்தத் தயவுக்கு ஒருமை வர வேண்டும். அந்த ஒருமை இருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னு டைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது.''

''மேலும் சமயம், மதங்களில் தெய்வத் தினது உண்மையை குழூஉக் குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படை யாகக் காட்டாது ''சிவாயநம'' என்றும் 'நமசிவாய' என்றும் 3,5.....24 சங்கையில் மந்திரங்களாய் வருவித்து வருகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவ்வம்மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்ம லாபமாகிய சிவானு பவமேயன்றி வேறில்லை''.

சைவத்தில் லக்ஷியம் வைக்க வேண்டாம் என்கிறார் வள்ளலார். இதற்கு அவர் கூறும் காரணம் ''அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றி புறங்கவியச் சொல்லவில்லை'' என்கிறார். மேலும் ''ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை உண்மை எனும் ஆன்மானு பவத்தைப் பெறமுடியாது. அதற்கு நமக்குக் காலமில்லை'' என்கிறார்.

குருழூஉக்குறி, ஒப்பற்ற ஆன்ம அனுபவம் கிடைக்க அவகாசம் இன்மை இரண்டிற்கும் ஆன விடைகளை திருவாசக அடிப்படையில் (''ஒரு நாமம்'' ''தரியேன்'') பார்த்தோம். வள்ளலாரைப் போன்ற அருளாளர்கள் கூடத் தான் பல காலும் லக்ஷியம் வைத்து இருந்ததாகவும், தன்னுடைய அருட்பா பாடல்களே அவற்றிற்குச் சான்று என்றும் கூறுகின்றார். அவருக்கே அப்படியென்றால் சாமான்யர் களாகிய நாம் எம்மட்டு?

மேலும் வள்ளலாரின் ஞானகுருவாகிய மாணிக்கவாசகரும்,

''உவலைச் சமயங்கள் ஒவ்வாத
சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து
தடுமாறும்''

(திருத்தெள்ளேணம்–16)

என்று பொய்ச் சமயங்கள் என்றே சாடுகின்றார். மேலும்

''சமயவாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்''

(போற்றி 51-52)

என்று இவ்வாறு மயங்கிப் போரிடும் சமயவாதிகள் பற்றி ஒரு முழுப்பட்டியலே மாணிக்கவாசகர் தருகின்றார்.

அது மட்டுமன்று. சமய உலகில் சடங்கு கள் முழுமையாக ஆக்கிரமித்து அவற்றி னின்றும் விடுபட முடியாத அளவிற்குப் பின்னிப் பிணைந்துவிட்டது. அவற்றி னின்றும் நீங்கி ''விட்டு விடுதலையாகும் நிலை'' வந்தால்தான் முழு ஆன்மானு பவம் கிடைக்கும். சமயங்கடந்த நிலையை வள்ளலார் அடைந்து விட்டார்.

''சமயங்கடந்த நிலையில் – ஏறாத நிலையில் – ஆண்டவன் வள்ளலாரை மேலேற்றியிருக்கிறார். அவரை அந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில் ''கருணையும் சிவமேபொருள் எனக் காணும் காட்சியே'' ''தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது'' என்கிறார்.

இதனை மறுப்பாருண்டோ? அந்தக் கருணையும் சிவமே பொருள் எனக் காணும் காட்சி என்றுதானே கூறுகின்றார். முடிகின்ற முடிவு சிவம்தானே! ''கருணையே சிவம்'' என்பதனை மறுப்பார் யாரும் இலர். ''அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'' என்றுதானே திருமூலரும் கூறுகின்றார்.

''அருளென்னும் அன்பீன்குழவி''

(திருக்குறள் – 757)

அன்புவிதை; அருள்மலர். அன்பில்லா உள்ளத்தே அருள் மலருமா?

இதனையே மற்றொரு பெயரால் வள்ளலார் ''தயவு'' என்கிறார். அப்பர் பெருமான் வலியுறுத்துவதும் இத் ''தயா மூல தன்மத்தை'' தானே!

அருளாவது தான் என்ன? மன்னுயிர் ஓம்புதலே அருள் என்கிறார் வள்ளுவர். நடமாடும் நம்பர்க்கு ஈதலைத் தானே திருமூலரும் வலியுறுத்துகின்றார். வறிய நிலையில் இருப்பவரும் கூட உண்ணும் போது ஒருகைப்பிடியும், ஆவிற்கு ஒரு கையுறையும் தானே தரச் சொல்கின்றார் திருமூலர். ''இரப்பவர்க்கு ஈயவைத்தார்'' என்றுதானே அப்பர் பெருமானும் கூறுகின்றார்.

''சிவாயநம'' ''நமசிவாய'' என்னும் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரிகிறது என்கிறார் வள்ளலார். நாம் அடைய வேண்டியது முடிவான ஆன்ம லாபமாகிய சிவானுபவம் என்று முத்தாய்ப்பு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைக்கிறார். முடிந்தமுடிபு சிவானுபவம் தானே! ஆறுகள் பல; கலக்கும் கடல் சிவம்தானே!

முன்பு கூறப்பட்ட அருள்வாக்குகள் மறக்கப்பட்டிருக்கலாம்; மறைக்கப் பட்டிருக்கலாம்; பின்பற்றப் படாமலும் இருந்திருக்கலாம். அவற்றை வள்ளலார் மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார். அதனாற்றான் வள்ளலார் சைவ மறுமலர்ச்சியின் சிகரமாக உயர்ந்து காணப்படுகிறார்.

[தோற்றம் – 5.10.1823

இறையுடன் கலத்தல் – 30.01.1874

பெற்றோர் – இராமையாப்பிள்ளை சின்னம்மாள்

அவதரித்ததலம் – சிதம்பரத்திற்கு வட மேற்கில் உள்ள மருவூர்.]

6

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அற்புதம் நிகழ்த்திய அருந்தவத்தோர் (1831)

பத்தமடை கிராமம்! ஐந்து வயது நிரம்பிய சிறுவன் வாய்க்காலில் விழுந்து இறந்து போனான். மகனைக் காணாது தேடியலைந்த பெற்றோர் இறக்கும் தறுவாயில் மகனைக் கண்டனர். மகனைக் கண்டு புலம்பித் தவித்தனர். அப்பொழுது அங்கு அடிகளார் ஒருவர் வருகிறார். மந்திரத் தண்ணீரை உடலில் தெளித்தார். நெற்றியில் திருநீறு இட்டார். சிவ பிரானைத் துதித்துச் சில பாடல்கள் பாடினார். சிறுவன் தூங்கி விழித்தவன் போல எழுந்து வந்தான்.

அடிகளார் அவர்கள் அன்பர்களுடன் உரையாடுகையில் ''உள்ளங்கையில் தீ உள்ளது. எனவே உள்ளங்கையில் உண்ணக் கூடாது'' என்று கூறிக்கொண்டு இருந்தார். அப்பொழுது ஒரு குருக்கள் ''கோயிலில் அடுப்பு மூட்ட தீ கொண்டு வந்தேன். மழையில் அணைந்து விட்டது. யாரையேனும் தெருவுக்கு அனுப்பித் தீ எடுத்து வரச் சொல்லுங்கள்'' என்று கேட்டார். அவையில் இருந்த ஒரு அன்பர் ''அடிகாள்! உள்ளங்கையில் தீ இருப்பதாகச் சற்று முன்பு சொன்னீர்கள். அதன் மூலம் தீ மூட்டலாகாதா?'' என்றார். உடனே அடிகளார் அந்த அன்பர் அணிந்திருந்த துண்டை வாங்கித் தமது உள்ளங்கையில் தேய்த்தார். துண்டு தீப்பிடித்துக் கொண்டது. குருக்களும் அதில் இருந்து தீ எடுத்துக் கொண்டு சென்றார். இப்படி அடிகளார் செய்த அற்புதச் செயல்கள் பலவாகும். அடிகளார் சிறிது காலம் பரநிட்டையில் இருந்தார். தாமிரபருணி ஆற்றங்கரையில் உள்ள நாணற் காடுகளில் புகுந்து கொண்டார். அடிகளார் காட்டில் இருப்பது அறிந்து அன்பர்கள் உணவு கொடுத்து வந்தனர். ஒரு நாள் உணவு ஏதும் வரவில்லை. இறைவனே அந்தணக் கோலம் பூண்டு அடிகளாரைக் கூப்பிட்டு உண்பிக்கச் செய்தார். அடிகளார் உண்டதும் மறைந்து போனார்.

பிறிதொரு சமயம் அடிகளார் பொதிய மலையில் தவம் செய்து கொண்டிருந்த பொழுது அகத்தியர் காட்சி தந்தார்.

இத்தனை பெருமைகளையும் கொண்டவர் கோடக நல்லூர்ச் சுந்தர அடிகள் ஆவார். இவரையே கதாபாத்திரமாக இவரது சீடர் சுந்தரம் பிள்ளை தனது மனோன்மணீயம் நாடகத்தில் காட்டியுள்ளார்.

இளம் வயதிலேயே இவருக்கு யோக நிட்டை கூடிற்று. அதன்பின் உலகப் பற்று நீங்கியது. சுத்தமல்லி எனும் கிராமத்தில் சொற்பொழிவு செய்து முடித்து வெளிவந்த பின் பூணூல், குடுமி இரண்டினையும் களைந்து எறிந்தார். ''எப்பொழுது ஒருவனுக்கு மன உறுதி வருகிறதோ அப்பொழுது அவன் துறவு பூண வேண்டும்'' என்றார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்து மூன்று.

சிவபெருமான் பெருமையினை விளக்கும் சூதசம்கிதையில் அடிகளாருக்குப் பெரிதும் ஈடுபாடு இருந்தது. அதனை நாளும் பாராயணம் செய்ததுடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பல இடங்களில் சூதசம்மிதைச் சொற்பொழிவுகளும் செய்து கொண்டிருந்தார்.

மகாவாக்கியச் சுருக்கம், சுவானுபூதி ரசாயனம், சுவானுபவரச மஞ்சரி, மனோராக மார்க்கம் முதலான நூல்களை எழுதியுள்ளார். திருவையாறு முதலிய ஏழூர்த் தலங்களுக்கு ஒரே நாளில் குட நீராட்டு ஏற்பாடு செய்தார். இவ்வாறு பல பணிகள் செய்த அடிகளார் 1878-ஆம் ஆண்டில் அரிமளம் என்ற ஊரில் இறைவனுடன் கலந்தார்.

[தோற்றம் – *1831*; மறைவு – *1878*. பிறந்த ஊர் – கங்கை கொண்டான், திருநெல்வேலிக்கு அருகாமை.]

7
ஒரு திருக்கோயில்; ஒரு திருத்தொண்டர்; ஒப்பற்ற திருப்பணி; (1838)

ஒரு திருக்கோயிலை ஒரு சிவத் தொண்டர் பொறுப்பு ஏற்றுக் கொண்டாலே நம்முடைய பாடல்பெற்ற தலங்களை எல்லாம் நாம் செவ்வையாகக் காத்து விடலாம். 19-ஆம் நூற்றாண்டிலேயே இதனைச் செய்து காட்டியவர் பெரியவர் கந்தசாமி முதலியார் அவர்கள்.

இவர் திருப்பேரூர்த் திருப்பதியில் எல்லையற்ற பக்தி பூண்டவர். அக்கோயிலுக்கு திருப்பணி செய்தலையே தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர். பேரூர்த் திருக்கோயிலுக்குச் சேர வேண்டியதாக இருந்த – இருபதாண்டுகள் வரை பறிமுதல் செய்யப்பட்டிருந்த – இனாம் சிற்றூரை மீட்டுத் தந்தார்; பேரூர் கிராமத்தைச் சர்வமானியமாக ஆக்கினார். சுவாமி கோயில், அம்மன் கோயில் ஆகிய வற்றிற்கு முழுமையாகக் கருங்கல் திருப்பணி செய்தார். இக்கோயிலின் நகைகள் பெரும்பாலும் இவர் செய்வித்தனவே ஆகும். தேர் முதலிய ஊர்திகளை செய்வித்தார். திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறச் செய்தார். அரசம்பலவாணர் என்னும் காலவேச்சுரத் திருக்கோயில் முழுதும் இவர் செய்வித்த திருப்பணியே ஆகும்.

இவர் பணி இதோடு நிற்கவில்லை. திருப்பேரூர், அவிநாசி, திருமுருகன் பூண்டி, திருக்கருவூர், பவானி என்னும் திருநணா ஆகியவைகளின் தலபுராணங்களை ஆராய்ந்து அவற்றை அச்சில் கொணர்ந்தார். கொடுமுடிப் புராணத்தில் சில பகுதிகளை இவர் பாடினார்.

1866-ஆம்ஆண்டில் ''சைவப் பிரசங்க சாலை'' என்னும் ஒரு நிலையத்தை நிறுவினார். அதற்காக ஒரு கட்டிடம் எழுப்பி அதில் நடராசர் முதலிய கடவுளர்களின் திருஉருவங்களை அமைத்து நாள் வழிபாடு நிகழ்த்தி வந்தார். திங்கட்கிழமைகளில் சிவபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். நால்வர் குரு பூஜைகள் நடத்தினார்.

அக்காலத்தில் கிறிஸ்துவ சமயப் பிரச்சாரமும் கடுமையாக இருந்தது. திருப்பேரூர் பிள்ளை விடு தூது எனும் தமது நூலில் கிறிஸ்துவ மதக் கண்டனம் செய்தார். இதற்கு மறுப்பாகக் கிறிஸ்துவர்கள் ''பிள்ளை விடு தூது'' எனும் கண்டன நூலை வெளியிட்டனர். அதற்கு மறுப்பாக முதலியார் அவர்கள் கலிவெண்பா செய்யுள் நூலையும், தன் மாணாக்கரைக் கொண்டு ''பிள்ளை விடு தூது ஆபாச விளக்கம்' எனும் நூலையும் வெளிக் கொணர்ந்தார்.

இதுவல்லாமல் முதலியார் அவர்கள் பத்து சிறுநூல்களை எழுதி வெளியிட்டார். இவரது திருமகனார் சிவக்கவிமணி சி.கே.எஸ். ஆவார். (ஆண்டு; *1838 – 1890*; பிறந்த ஊர் – கருவூர், கொங்கு நாடு)

8
சைவ சரிதங்களைத் தமிழிசையில் தந்தவர் (1839)

சிவனடியார்கள் வரலாறு, சைவ விரதங்கள், விழாக்கள், சைவ புராணங்கள் – இவ்வாறு இருபத்து ஏழு நூல்கள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அத்தனையும் தமிழிசை வடிவங்கள். நினைத்துப் பார்க்கவே வியப்புத் தரும் செய்தி.

(1) திருநிஷாதர் சரித்திரம் (2) சோம வார மகாத்மியம் (3) பிரதோஷ மகாத்மியம் (4) சிவராத்திரி மகாத்மியம் (5) ஸ்ரீருத்ர மகிமை (6) ருத்திராட்ச மகாத்மியம் (7) சுந்தரர் சரித்திரம் (8) சம்பந்தர் சரித்திரம் (9) மாணிக்கவாசகர் சரித்திரம் (10) திருநீல கண்டர் சரித்திரம் (11) குங்கிலியக் கலயர் சரித்திரம் (12) சிறுத்தொண்டர் சரித்திரம் (13) சித்தர் சரித்திரம் (14) விறல்மிண்டர் சரித்திரம் (15)சண்டேசுவரர் சரித்திரம் (16) அமர் நீதி சரித்திரம் (17) பத்திராயித சரித்திரம் (18) கீர்த்திமாலினி சரித்திரம் (19) உமாபதி சிவாசாரியார் சரித்திரம் (20) கலிக்காமர் சரித்திரம் (21) இயற்பகை நாயனார் சரித்திரம் (22) பிட்சாடன சரித்திரம் (23) புனிதவதி சரித்திரம் (24) லலிதாபுராணம் (25) கௌரி சரித்திரம் (26) மண் சுமந்தல்லை.

இப்பெரும் சாதனையை நிகழ்த்தியவர் நீலகண்டசிவன் ஆவார். அருட் கவிதைகள் மட்டுமல்ல; அற்புதங்களும் நிகழ்த்தி யுள்ளார் நீலகண்டசிவன். பத்மநாபபுரம் கோயில் இறைவர் வீதி உலா வரும் பொழுது எண்ணெய் இல்லாமல் விளக்கு அணைந்து விட்டது. உடனே நீலகண்ட சிவன் அருகில் இருந்த பானையில் இருந்து தண்ணீர் எடுத்து விளக்கு எரித்தார்.

பிறிதொரு சமயம் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள கருங்குளம் கிராமத்திற்கு நீலகண்டசிவன் சென்றபொழுது அங்குக் கடும் வறட்சி நிலவியது. ''வளத்த தருவுருவகம்'' என்று சிவன் பாடவும் மழை பொழிந்தது. பஞ்சம் தீர்ந்தது.

நீலகண்ட சிவன் கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்தில 1839- ஆம் ஆண்டில் பிறந்தார். இளவயதிலேயே இறைக்காட்சி பெற்ற சிவன் ''பண்டென்ன பூஜையேன்'' என பத்துப் பாடல்கள் (திரு நீலகண்ட தசகம்) பாடினார்கள். பல கோயில்களுக்கு சென்று பாடி மகிழ்ந்தார் கள். கி.பி. 1900-ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்தார்.

(துணை நூல்கள் : நீலகண்ட சிவன் கீர்த்தனைகள் – திருமதி. சரஸ்வதி ராம் – 1990)

9
அற்புதங்கள் பல விளைத்த ஆறுமுகன் அடியார் (1839)

முத்துக்கிருஷ்ணன் என்ற பகைவன் அந்த ஆறுமுகன் அடியவரிடம் தன் மந்திரத்தால் அவரைக்கட்ட அம்பிகையை ஏவினான். அம்பிகை அடியவரின் பாடல் கேட்டுத் திரும்பிவிட்டாள்.

கழுகு மலையிலே பேய் பிடித்திருந்த பெண்ணுக்கு அடிகளார் திருநீறு அளித்துப் பேயை விரட்டினார்.

திருவரங்கத்தில் அன்பர் ஒருவர் பெண்ணைப் பாம்பு கடிக்க அடிகள் கருடன் முன் வெண்பா பாட நஞ்சு இறங்கி உயிர் பிழைத்தார்.

திருவாமாத்தூரில் கண்பார்வை இழந்த ஒரு தொண்டருக்கு அடிகள் ஒரு வெண் பாவைப் பாடித் திருநீறு வழங்க தொண்டர் கண்பார்வை பெற்றார்.

இத்தனை அற்புதங்களும் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் நடந்தது. நிகழ்த்தியவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

தண்டபாணி அடிகளால் இயற்றப்பெற்ற நூல்கள்: [கிழித்தெறிந்தனபோக இப்போது எஞ்சியிருப்பவை]

(1) சென்னைப் பிள்ளைத்தமிழ்
(2) மேற்படி கந்தர் இதழகலந்தாதி
(3) சென்னைத் திருப்புகழ்
(4) திருவொற்றியூர்ப்பதிகம்
(5) அறுவகை இலக்கணம்
(6) வண்ணத்தியல்பு
(7) தமிழ் அலங்காரம்
(8) தமிழ்த்துதிப் பதிகம்
(9) திருச்செந்தில் வெண்பாவந்தாதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(10) திருச்செந்தில் சிலேடை வெண்பா
(11) திருச்செந்தில் திரிவந்தாதி
(12) திருச்செந்தில் யமகவந்தாதி
(13) திருச்செந்தில் பதிற்றுப்பத்தந்தாதி
(14) திருச்செந்தில் செந்தில்நாயக சதகம்
(15) திருச்செந்தில் உலா
(16) திருச்செந்தில் நவரசமஞ்சரி
(17) திருச்செந்தில் அகப்பொருட்கோவை
(18) திருச்செந்தில் தசாங்க வகுப்பு
(19) திருச்செந்தில் சந்தமாலிகைத் திருப்புகழ்
(20) கௌமார விஜயம்
(21) குஞ்சரிமாலை
(22) வள்ளிநாயகி பிள்ளைத்தமிழ்
(23) வாள் அலங்காரம்
(24) வண்ணப்பதிகம்
(25) புதுவை முருகன் அலங்கார பஞ்சகம்
(26) புதுவை பிள்ளைத்தமிழ்
(27) புதுவை கலம்பகம்
(28) புதுவை பாதாதி கேசம்
(29) புதுவை பதிற்றுப்பத்தந்தாதி
(30) பத்மநாபப்பெருமாள் யமகவந்தாதி
(31) திருப்புகழ்ப் பதிகம்
(32) தேவகோட்டைத் திருப்புகழ்
(33) தேவகோட்டைத் திரிவந்தாதி
(34) தேவகோட்டை பதிகம்
(35) அருணகிரிநாதர் புராணம்
(36) கௌமாரமுறைமை
(37) நானிலைச் சதகம்
(38) ஞானவந்தாதி
(39) சதகவுந்தி
(40) தியானாநுபூதி
(41) நெல்லைக்கலம்பகம்
(42) சத்திவிசயம்
(43) திருவருள் நாட்டம்
(44) சென்னைக் கலம்பகம்
(45) சென்னை வெண்பாவந்தாதி
(46) சென்னை வெண்பா ஒருபா ஒருபஃது
(47) திருவல்லிக்கேணி எழுகூற்றிருக்கை
(48) அணிற்காத்த பதிகம்
(49) சூரியமாலை
(50) திருச்சிற்றம்பல வெண்பாமாலை
(51) திருநடனமாலை
(52) ஆனந்ததாண்டவமாலை
(53) அலங்கார பஞ்சகம்
(54) தில்லைத் திருப்புகழ்
(55) தில்லை வகுப்புகள்
(56) மண்டலத் திருப்புகழ்
(57) ஏழாயிரப் பிரபந்தம்
(58) திருவரங்கத் திருவாயிரம்
(59) திருவாமாத்தூர்ப் புராணம்
(60) மயிலாசலக்கலம்பகம்
(61) வேலலங்காரம்
(62) மயிலலங்காரம்
(63) ஆறெழுத்தலங்காரம்
(64) புலவர் புராணம்
(65) பழநி–வெண்பாமாலை
(66) பழநி–வெண்பாவந்தாதி
(67) பழநி–அலங்காரம்
(68) பழநி–யமகவந்தாதி
(69) பழநி–திரிவுமஞ்சரி
(70) பழநி– குருபரமாலை
(71) பழநி–பதிற்றுப்பத்தந்தாதி
(72) பழநி–பிள்ளைக்கவி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(73) பழநி–கலம்பகம்

(74) பழநி–ஒருபா ஒருபஃது

(75) பழநி–நவமணிமாலை

(76) பழநி–நவரசம்

(77) பழநி–சித்திமாலை

(78) பழநி– நடுவொலியந்தாதி

(79) பழநி–கலவிமகிழ்தல் வண்ணம்

(80) பழநி–வகுப்புகள்

(81) பழநி–முருகாநந்தலகரி

(82) பழநி–தெய்வத்துணைப் பதிகம்

மற்றும் பல

சுவாமிகள் தனது ஆறாம் வயதிலேயே முருகப் பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தை உபதேசமாகப் பெற்றார். இளவயதிலேயே செய்யுள் இயற்றினார். துறவுக் கோலமும் பூண்டார். கூத்தபிரான் மீது ஆயிரம் பாடல்கள் பாடினார்.

1898-ஆம் ஆண்டில் திருவாமாத்தூரில் வீடு பேறடைந்தார்.

(தோற்றம்; 1839; பெற்றோர் – செந்தில் நாயகம் பிள்ளை–பேச்சி முத்து அம்மாள் பிறந்த ஊர் – திருநெல்வேலி)

(துணைநூல் : தமிழ்ப் புலவர் வரிசை புத்தகம் 5)

10
திருமுறைப் பதிப்பாசிரியர் (1842)

பல துறைகளில் அட்டாவதானம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் சைவ சித்தாந்தத்தில் கேள்விப்பட்டதில்லை. அப்படித் திகழ்ந்தவர் சர்க்கரை வீ. செந்தில் வேலு முதலியார் அவர்கள்.

காஞ்சியில் ஏகாம்பர சிவயோகிகளிடம் தீக்கை பெற்று சமயநூல்களைக் கற்றுணர்ந்தார். தேவாரத் திருமுறைகளில் இவர் பயிற்சியறிந்து திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர் இவர் மூலமாகத் தேவாரத் திருமுறைகள் ஏழையும் தல முறையாகப் பதிப்பித்து வெளியிட்டார்கள். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர் அருளாணைப்படி திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராம் திருமுறை, பெரிய புராணம் ஆகியவைகளை வெளியிட்டார்.

திருக்கோயில்களில் திருவிழாக்களைச் சமயமணம் கமழ நடத்திக் காட்டினார். இவர் நடத்திய திருவிழாக்கள்; சென்னை திருவொற்றியூர், திருக்காஞ்சி, திருமயிலை, திருக்கோயில்களில் திருவிழாக்கள், சென்னை திருவல்லிக்கேணி திருவேட்டீசுவரர் திருக்கோயில் திருநாவுக்கரசர் சதயத்திருவிழா, சென்னை தங்க சாலைத் தெரு சிவசுப்பிரமணியர் கோயிலில் பல திருவிழாக்கள்.

14.4.1911-ஆம் ஆண்டில் மறைந்த பிறகு நல்லடக்கம் செய்யப்பட்டு ஐந்தெழுத்தில் படியும் (பஞ்சாட்சரம்)நிறுவப்பட்டது.

(தோற்றம் – 1842; ஊர் – மயிலை, சென்னை)

11
சிவ கதை தவிர பிறகதை பேசா இசைப் பேரறிஞர் (1844)

அந்த இசை மேதை சிவ கதையன்றி வேறு வரலாறுகளை தமது இன்னிசை உரையில் நிகழ்த்தியதில்லை. ஒரு முறை பிரகலாத சரித்திரம் சொல்ல வேண்டிய கட்டாயம். திருநாவுக்கரசு நாயனார் சமணரால் துன்புறுத்தப்பட்ட வரலாறு ஒரு வகையில் பிரகலாதன் வரலாற்றை ஒத்திருந்தது. அப்பர் பெருமான் பற்றிய கீர்த்தனைகளை எடுத்தாண்டு பிரகலாதன் கதையில் பொருத்திச் சொன்னார்.

பிறிதொரு முறை திருவிடைமருதூர்க் கோயில் உற்சவத்தில் பார்வதி கல்யாணம் பற்றிக் கதை நிகழ்த்த திருவாவடுதுறை சந்நிதானம் அவர்கள் உத்தரவிட்டார்கள். அப்பொழுது பார்வதி கல்யாணம் என்று தனியே கிடையாது. கந்த புராணப் புலமை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ் வடமொழி அறிவு கொண்டு அம் மேதை சமாளித்துவிட்டார். கதை முடிந்த வுடன் தமது தமையனாரின் துணை கொண்டு பார்வதி கல்யாணத்தைக் கீர்த்த னங்களாக வடிக்கச் செய்துவிட்டார். அந்த மேதைதான் மகா வைத்யநாதையர். அவரது சகோதரர்தான் இராமசாமி ஐயர். இந்த இரட்டையர்கள் இதோடு நிற்கவில்லை.

பெரிய புராணத்தையும் இராமசாமி ஐயர் அவர்கள் கீர்த்தனமாகச் செய்ய, அதையே தம் வாழ்நாள் முழுதும் தமது சொற்பொழிவில் சேர்த்து மகாவைத்ய நாதையர் பாடி மகிழ்விக்கலானார். இப் பெரிய புராணக் கதையைக் கீர்த்தனங்க ளுடன் செட்டி நாட்டில் வைத்தியநாதையர் ஐந்து மாதங்கள் நிகழ்த்திச் சன்மானங்கள் பலவும் பெற்றுத் திரும்பினார். வைத்ய நாதையர் திருவாவடுதுறைக்கு வந்த காலங் களில் சிவகதை ஒரு நாளும், பாட்டு ஒரு நாளுமாகக் கோலாகலமாக இருக்கும்.

வைத்தியநாதையர் சிவகதை சொல்லும் பொழுது தொடக்கம் முதல் இறுதி வரை சிவபக்தி உணர்ச்சியை வளர்க்கும். சிவபரமான கீர்த்தனங்களும் பாடல்களும் அவருடைய வாக்கிலிருந்து அமுத மழைபோல் பொழியும்; தமிழ்நாடு முழுமையும் இவரது இசையுடன் கூடிய சிவகதைகளைக் கேட்டு மகிழ்ந்தது.

சகோதரர்கள் இருவரும் இளமையிலே யே இசைப் பயிற்சி பெற்றனர். இசையோடு தமிழிலும் வடமொழியிலும் உள்ள நூல்களைக் கற்று வந்தனர். வைத்யநாதையர் தமது ஏழாம் வயதிலேயே இராகம் பல்லவி பாடும் திறமை அடைந்தார். இராமசாமி கீர்த்தனைகள் இயற்றுவார். அவற்றை வைத்துக் கொண்டு வைத்யநாதையர் தமிழ் நாட்டில் ஏறாத மேடை இல்லை எனலாம்.

இந்த இசை மேதை உயிர் துறக்கும் பொழுது இவரது நா சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தது. அப்பொழுது அவருக்கு வயது நாற்பத் தொன்பது.

(தோற்றம் – 1844; மறைவு – 1893; பிறந்த ஊர் – தஞ்சை மாவட்டம் திட்டைக்கு அருகே உள்ள வையச்சேரி; பெற்றோர் – துரைசாமி ஐயர்)

துணை நூல்கள் : ''சங்கித மும்மணிகள்'' – உ.வே. சாமிநாதையர் : 1987

12
சைவ சமயத்தில் ஒரு ஆழ்வார்க்கடியான் (1846)

வைணவ சமயத்தைப் பற்றி யாராவது தூற்றிப் பேசிவிட்டால் போதும். கழியை எடுத்துச் சுழற்றிக் கொண்டு வந்து விடுவான் ஆழ்வார்க்கடியான் என்ற கதாபாத்திரம். (கல்கியின் ''பொன்னியின் செல்வன்'') அதே போல சைவ சமயத்தைப் பற்றித் தவறாக யாராவது கூறிவிட்டால் சோமசுந்தர நாயகர் அவர்கள் கிளம்பி விடுவார்கள்.

இதில் ஒரு வேடிக்கை. சோமசுந்தர நாயகர் பிறப்பால் வைணவர்; அவரது குருநாதரோ நல்ல வேதாந்தி. இப்படியி ருக்கையில் இவருக்கு எப்படி சைவத்தின் மேல் இவ்வளவு பற்று வந்தது?

ஒரு சமயம் மதுரநாயக வாத்தியார் என்ற புலவர் நாயகர் அவர்களிடம் தான் வெளியிட்ட பதினான்கு சாத்திர நூல்களை யும் கொடுத்தார். அவற்றைப் படித்தவுடன் நாயகரின் வாழ்க்கையே மாறிவிட்டது. சென்னை நகராட்சி அலுவலகத்திலே வேலை பார்த்தவர், தம் வேலையை உதறிவிட்டுச் சைவ சமயத்திலேயே தமது முழு நாட்டத்தையும் செலவிட்டார்.

இவரது ஆழ்ந்த சைவ சாத்திரப் படிப்பு இவரைத் தமது குருநாதருடன் மோதலுக்கு ஆளாக்கிவிட்டது. இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் நடக்கும். இறுதியில் இவர் குருநாதரே சைவசித்தாந்தி ஆகிவிட்டார்.

மேலும் அச்சமயம் சைவத்தை எதிர்த்து வைணவப் பிரச்சாரமும் உச்சத்தில் இருந்தது. அதற்கு மாற்றாகப் பிரச்சாரமும் செய்ய வேண்டும் என்று நண்பர்கள் கேட்டுக் கொண்டனர். எழுத்தாலும், பேச் சாலும் நாயகர் சண்டமாருதமாக முழங்கி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

னார். இதற்காக இவருக்குப் ''பரசமய கோளரி'' என்ற பட்டம் அளித்துப் பாராட்டினார்கள்.

நாயகர் காலம் வரை சைவ சித்தாந்தம் சாதாரண மக்களிடம் போய்ச் சேராமலே இருந்தது. முதன் முதலாக நாயகர் அவர்கள் (ஆறுமுக நாவலர் மட்டும் இவருக்கு முன்னேயே ஆரம்பித்து விட்டார்) தமிழ் நாட்டின் பெரிய நகரங்கள் எல்லாம் சென்று மிகவும் எளிமையான முறையில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

எழுத்துப் பணியையும் விடவில்லை. இவர் எழுதிய முதல் நூல் ''சிவதீக்கிய ரத்னாவாரி''ஆகும். இது வைணவர்களின் விமரிசனத்திற்கு மறுப்பாகும். இந்நூல் *1873*-ஆம் ஆண்டில் வெளிவந்தது. *1878*-ஆம் ஆண்டுக்குப் பிறகு ''சித்தாந்த ரத்னாகரம்'' என்ற தொடர் வெளியீட்டினை வெளியிட ஆரம்பித்து அதில் தம் கருத்துக் களை வெளியிட்டு வந்தார். அதன் பின் தம் மாணவர் பெயரில் ''சித்தாந்த ஞான போதம்'' என்ற தொடர் வெளியீட்டில் தம் கட்டுரைகளை வெளியிட்டார்.

இவர் எழுதிய நூல்கள் : அர்ச்சாதீபம், ஆதிசைவப் பிரபாவம், ஆபாச ஞான நிரோதம், இராம தத்துவ தீபிகையின் ஆபாச நூல்கள், இராமானுஜ மத சபேடிகை, உத்தம வாத தூல வாதூலம், கங்காதரண பிரக்யரம், கீதார்த்த தீபிகம், பாச நிரசனம், குதர்க்க வாத விபஞ்சினி, கூரேசவிஜய பங்கம், சமரச ஞான தீபம், சன்மார்க்க போத வெண்பா, சித்தாந்த சேகரம், சித்தாந்த ரத்னாகரம், பூவணம் சித்தாந்த ஞான போதம், சிவகிரி ரத்னாவளி, சைவ சூடாமணி, ஞான சதுஷ்டய தர்ப்பணம், ஞானசம்பந்தர், பரத்வ நிரூபணம், ஞானபேதத் துணிவு, ஞானபேதத் தெளிவு, ஞானபேத விளக்கம், ஞானபேத விளக்க நியாயரத ரட்சமாணி, பாரத தத்துவப் பிரகாசிகை, பாரதாத்பரிய சங்கிரகம், வேதசிவாகமப் பிராமணியம், பிறற்மத்துவ நிரூபணம், பிரமாநுபூதி, மூர்க்கவாத விரஞ்சினி.

தம் உடல் நலம் குன்றியிருந்த தளர்ந்த நிலையிலும் – நண்பர்களின் கருத்துக்க ளையும் கேளாமல் – எழுதிக்கொண்டே இருந்தார். இவ்வாறாக நூறு புத்தகங் களுக்கு மேலாக எழுதிக் குவித்தார். ஓயாது எழுதிக் கொண்டிருந்த நாயகர் ஓயும் நாளும் வந்தது. குருக்களுக்குச் சொல்லி அனுப்பினார். அவர் தந்த திருநீற்றை அணிந்தார். திருவாசகம் சொல்லக் கேட்டார். ''சிவா'' என்று மூன்று முறை கூறினார். சிவத்துடன் கலந்தார்.

(தோற்றம் – *1846*; மறைவு – *1901*; (ஆவணி, பிரபவ ஆண்டு)

பிறந்த ஊர் – சூளை, சென்னை.)

துணை இதழ் : "Siddhanta Deepika" dated February 1901.

''தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்

13
முருகனிடம் உபதேசம் பெற்ற முனிவர் (1850)

முருகப் பெருமானிடம் நேரில் உபதேசம் பெற்றவர்கள் பாம்பன் சுவாமி கள். சுவாமிகள் இளம் வயதில் முருகப் பெருமானிடம் உபதேசம் பெறவேண்டும் என்ற விருப்பினால் இராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன் வலசை என்னும் பதியில் சுடுகாட்டில் ஒருகுழியை வெட்டி 35 நாட்கள் கடும் தவம் செய்தார். ஏழாம் நாளில் முருகன் தோன்றி ''கங்கையைச் சடையில் பிரித்து'' என்று ஒரு சொல் உரைத்துவிட்டு மறைந்து போனார். முருகன் உரைத்த சொல்லைக் கொண்டு இயற்றப்பட்ட நூலே ''தகராலய ரகசியம்'' ஆகும்.

அதனைத் தொடர்ந்து சுவாமிகள் 6666 பாடல்கள் பாடி அருளினார்கள். அவை ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதல் மண்டலம் – ''குமரகுரு தாசர் பாடல்'' என்ற துதிப்பாடல்கள், இரண்டாவது மண்டலம் – ''திருவலங்கல் திரட்டு'' – தேவாரப் பண்ணமைப்பு கொண்ட முருகன் துதிப்பாடல்கள், மூன்றா வது மண்டலம் – ''பரிபூர்ணானந்த போதம்'' – சிவஞான போதத்தைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



போன்ற தத்துவ நூல், நான்காவது மண்டலம் – ''சேந்தன் செந்தமிழ்'' – தூய தமிழ் நடை, ஐந்தாவது மண்டலம் – ''திருப்பா'', ஆறாவது மண்டலம் – ''குமார சுவாமியம்'' – கந்தபுராணத்தை நிகர்த்தது. இந்த ஆறு மண்டலங்களையும் ஒரு முறை படித்தாலே சுவாமிகளின் சைவஞானம் புலப்படும். சைவ சமயத்தில் அதுகாறும் வெளிவந்த அனைத்து நூல்களையும் (தோத்திரம், சாத்திரம், தனித்தமிழ், தமிழ்ப்பண், புராணம்) ஒரு சேரப் படைத்துள்ளது வியப்பினைத் தருவதாகும்.

''சண்முக கவசம்'' மகா மந்திர சக்தி வாய்ந்த நூலாகும். சுவாமிகளின் ''பஞ்சா மிர்த வண்ணம்'' என்ற நூல் ஓதப்பட்ட போது முருகனே தோன்றி ''இந்த நூல் எங்கே பாராயணம் செய்யப்படுமோ அங்கே யான் வருவேன்'' என்று அருளினார்.

இன்னும் சில உரைநடை நூல்களையும் சுவாமிகள் எழுதியுள்ளார்கள்.

''சிவஞானதீபம்'' என்ற நூல் வேதாந்த – சித்தாந்த சமரசத்தை ஏற்படுத்துவதாகும்.

சுவாமிகளுக்கு எழுபது வயது ஆன போது ஒரு விபத்து ஏற்பட்டு கால் முறிந்து காலையே எடுக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. கால் முறிந்த பதினோராவது நாள் சுவாமிகளுக்கு மயில் காட்சி கொடுத்தது. பின்னர் ஓரிரவு சுவாமிகளின் படுக்கையில் ஒரு குழந்தை படுத்து இருந்தது. சுவாமிகள் அக்குழந்தையைத் தரிசித்தவுடன் மறைந்து விட்டது. ''பதினைந்து நாட்களில் குணமாகி விடும்'' என்று ஒலி எழுந்தது. 15 நாட்களில் அறுவை சிகிச்சை இல்லாமலே குண மடைந்தது. சுவாமிகள் அறைக்குள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்த மருத்துவர்கள் வியந்து போனார்கள்.

1929-ஆம் ஆண்டு சஷ்டி நன்னாளில் சுவாமிகள் பூரணம் அடைந்தார்கள். (தோற்றம் – 1850; மறைவு – 1929; பிறந்த ஊர் – பாம்பன் ; பெற்றோர் – சாத்தப்பப் பிள்ளை, செங்கமலத்தம்மையார்; இயற்பெயர் ; அப்பாவு)

துணை நூல்கள் : ''தமிழ் வட்டம் மலர்'' 1967

"Talks on Saiva Siddhanta" - S - Sachithanandham Pillai 1954

14

பிறந்து மொழிபயின்ற நாள் முதலாக சிவநாமமே உச்சரித்துவந்த தமிழ்த்தாத்தா (1855)

''எப்போதும் சிவபக்தி கொண்டிரு'' தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர் களுக்கு அவர் தந்தையார் கடைசியில் கூறிய உபதேசம் இதுவாகும். இந்த உபதேசத்தைக் கடைப்பிடித்ததனால் தான் தாம் இந்த அளவு தமிழ்த் தொண்டு புரியவும், மக்களின் ஆதரவு பெறவும் காரணமாக இருந்தது என்கிறார் தமிழ்த் தாத்தா.

தமிழ்த் தாத்தா அவர்கள் பிறந்து வாழ்ந்த சூழலும் சிவமணம் கமழ்ந்திருந்தது. தமிழ்த் தாத்தாவின் தாயாரின் தகப்பனா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரான கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சிவபூஜையும் ஜபம் முதலிய கர்மாநுஷ்டானங்களுமே புரிந்து வந்து வேறு எந்த முயற்சியிலும் ஈடு படாமல் உள்ளும் புறமும் தூய்மையுடன் கிருகஸ்த வாழ்க்கை வாழ்ந்து வந்தார். எப்பொழுதும் அவருடைய வாயிலிருந்து சிவநாமம் இனிய மெல்லிய தொனியிலே வெளி வந்துக் கொண்டிருக்கும். வண்டின் ரீங்காரத்தைப் போல உள்ள அந்தச சிவ நாமத்திலே உ.வே. சா. அவர்கள் இளமை யிலேயே ஈடுபட்டார்கள். அவரை அறியாமலேயே சிவநாம ஜபம் ஆறாம்பி ராயம் முதல் செய்யத் தொடங்கிவிட்டார். வாழ்நாள் முழுதும் நின்றும் இருந்தும் கிடந்தும் அந்த ஜபத்தைச் செய்து கொண்டு வந்தார். உ.வே.சா. சிவநாம ஜபம் செய்வதை அறிந்த கிருஷ்ண சாஸ்திரிகள் அவருக்கு மிருத்தியுஞ்சய ஸ்தோத்திரச் சுலோகங்கள் பதினாறையும் உபதேசித்தார்.

ஒரு சமயம் உ.வே.சா.வின் சிறிய பாட்டனாராகிய ஐயாக்குட்டி ஐயர் உ.வே.சா. பெற்றோர் வாழ்ந்து வந்த அரியலூர் இல்லத்திற்கு வந்து தங்கி ''ஹாலாஸ்ய மகாத்மியம்'' வாசித்துப் பொருள் சொல்லி வந்தார். வரலாறு சொல்லிவரும் பொழுது கௌரிக்கு அவள் தகப்பனார் உபதேசம் செய்த கௌரி மந்திரத்தை எடுத்துரைத்தார். அதனையே உபதேசமாகக் கருதி உ.வே.சா ஜபித்து வரலானார்.

உ.வே.சா.வின் தந்தையாரே கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரத் தைக் களத்தூரில் தொடர்ந்து சொல்லி வந்தார். அதனைக் கேட்டு வந்த சிதம்பர உடையார் என்பார் சிவபக்தியில் ஊறிச் சிதம்பரத்திற்குச் செல்ல வேண்டும் என்று ஏங்க ஆரம்பித்து விட்டார். அவரே நந்தனாராகத் தொடங்கிவிட்டார்.

உ.வே.சா. அவர்கள் பிறந்து வாழ்ந்த சூழ்நிலை இவ்வாறு என்றால், அவர் பாடம் கேட்கச் சென்ற ஆசிரியர் பிள்ளை யவர்களைப் பற்றிக் கேட்கவே வேண் டாம். பிள்ளையவர்கள் சிவநாமம் தவிர பிறநாமம் கூறமாட்டார். அதுவும் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் தங்கி இருக்கும்பொழுது குளப்புரைக்கு வடக்கே பூஜை மடத்தில் பூஜை செய்யும்பொழுது சிவபூஜைக் காட்சியாகவே இருந்தது. பூஜை மடம் முழுவதும் பூஜை செய்பவர் களது காட்சியாகவே இருந்தது. சிவலோகத் தில் ஒரு பகுதியாகவே கருதினார் உ.வே.சா.

திருக்குளத்தின் தென்கரையில் அமைந்த கட்டிடத்தில் சிலர் ஸம்ஸ்கிருத சுலோகங் களைச் சொல்லி அர்த்தம் சொல்லிக் கொண்டிருந்தனர். சிலர் சில கீர்த்தனங் களைப் பாடியபடி இருந்தனர். சிலர் தமிழ்ப் பாடல்களைச் சொன்னார்கள்.

உ.வே.சா. அவர்கள் பிள்ளையவர் களிடம் பாடம் கேட்டதும் பெரும்பான் மை சைவ நூல்களே. அவை வருமாறு: திருக்குடந்தைத் திரிபந்தாதி, பழமலைத் திரிபந்தாதி, அந்தாதி வரிசைகள், பெரிய புராணம், (கண்ணப்ப நாயனார் புராணம் பிற்பகலில் பாடம் சொல்ல ஆரம்பித்த பிள்ளையவர்கள் இரவு பன்னிரண்டு மணி வரைக்கும் சொல்லி முடித்தார்களாம்.) குற்றாலத் தலபுராணம், திருநாகைக் காரோணப் புராணம், (நாளொன்றுக்கு நூறு முதல் இருநூறு பாடல்கள் வரை) மாயூரப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணம், திருவானைக்காப் புராணம், சீகாளத்திப் புராணம், அம்பர்ப் புராணம் (பிள்ளை யவர்கள் வண்டியில் வரும் பொழுது சொல்லிக் கொண்டுவர ஐயரவர் கள் எழுதியது) திருப்பெருந் துறைப் புராணம், (பிள்ளையவர்கள் சொல்ல எழுதி வந்தது) தேவார திருவாசகம் (பிள்ளையவர் கள் இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்ட பொழுது விளக்கம் சொன்னது)

பிள்ளையவர்கள் மறைவுக்குப் பின் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதான மாகத் திகழ்ந்த சுப்பிரமணிய தேசிகர் சைவசித்தாந்த சாத்திரப் பாடங்கள் சொல்லி வந்தார். தனிப்பட்ட முறையில் உ.வே.சா. அவர்களும் சண்பகக் குற்றாலக் கவிராயரும் திருக்குற்றாலப் புராணம் படித்தனர்.

இவையல்லாமல் உ.வே.சா. அவர்கள் பிள்ளையவர்களிடம் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருக்கோவையார், கோவைகள் பதினைந்து, கலம்பகங்களில் இருபது, பிள்ளைத் தமிழ்கள் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பிரபுலிங்க லீலை, சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய இலக்கியங்களையும் பாடம் கேட்டார்.

சைவநூல்களை முறையே பாடம் கேட்ட, உ.வே.சா. திருவிளையாடற் புராணத் தொடர் சொற்பொழிவும் நிகழ்த்தி னார். மழையே இல்லாத காரை என்ற ஊரில் நல்ல மழை பெய்தது. உ.வே.சா. அவர்கள் சில மாணவர்களுக்குக் காஞ்சிப் புராணமும், மாயூரப் புராணமும் பாடம் சொல்லித் தந்தார்.

உ.வே.சா. பாடல்கள் இயற்றும் பொழுதும் சிவசிந்தனையராகவே இருந்தார். மணிவாசகர் மேல் தனியாகப் பாடல்கள் இயற்றினார். திருவிடை மருதூர்த் தல மகாத்மியத்தை எழுதி முடித்தார். உ.வே.சா. பதிப்பித்த பல நூல்கள் சைவ நூல்கள் ஆகும்.

உ.வே.சா. பதிப்பு நூல்கள்

தலபுராணங்கள், திருக்குடந்தைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், வீரவனப் புராணம், சூரைமாநகர் புராணம், தியாகராச லீலை, திருவிளையாடற் புராணம், தனியூர்ப் புராணம், மண்ணிப் படிக்கரைப் புராணம், திருக்காளத்திப் புராணம், கற்றூர்ப் புராணம், தணிகாசலப் புராணம், வில்லைப் புராணம்.

கோவை

சீகாழிக் கோவை, திருவாவடுதுறைக் கோவை, பழமலைக் கோவை, உபசைக் கோவை, சிகரமலைக் கோவை, திருவாரூர்க் கோவை.

உலா

திருப்பூவணநாதர் உலா, திருக்காளத்தி நாதர் உலா, திருவாரூர் உலா, சொக்கநாதர் உலா, கடம்பர் கோயில் உலா, சங்கரலிங்க உலா, திருக்கழுக்குன்ற உலா.

தூது

கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது, தமிழ் விடு தூது.

கலம்பகம்

திருப்பாதிரிப் புலியூர் கலம்பகம்.

பரணி

தக்கயாகப் பரணி, பலவகை பரணி.

பிரபந்தத்திரட்டு

மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிரபந்தத்திரட்டு, குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு.

வெண்பா

சிவ சிவ வெண்பா, திருமுருகாற்றுச் சிலேடை வெண்பா, குற்றாலச் சிலேடை வெண்பா.

மாலை

திருக்கோவிந்தநாதர் இட்டகாமிய மாலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

15
பேராசிரியர்கள் பெரிதும் போற்ற, மாணவர்கள் மனமகிழ, சைவ இலக்கியம் படைத்தவர் (1855)

இடம் – அண்ணாமலைப் பல்கலைக் கழகம். ''பஞ்சகம்'' பாடம் நடக்கிறது. பாடம் நடத்தும் பேராசிரியர்கள் இந்நூலின் சொல் நயம் அறிந்து சொக்கிப் போகி றார்கள். பொருள் நயம் அறிந்து பூரித்துப் போகிறார்கள். செவிமடுக்கும் மாணவர் களோ இந்நூலின் செந்தமிழ் நலத்தில் சிந்தை பறிகொடுத்து ஆடாது, அசையாது வகுப்பில் அமர்ந்திருக்கிறார்கள்.

இந்நூல் அக்காலத்தில் ஐம்பெருங்காப்பி யங்கள் போல அறிஞர்களால் போற்றப் பெற்றது.

''பஞ்சகம்'' என்றால் என்ன? தேவைத் திரிபந்தாதி, அருணைச் சிலேடை வெண்பா, மாலை, மதுரை மீனாட்சி யம்மை பதிகம், சிலம்பை பதிற்றுப் பத்தந்தாதி, மயில் மாலை பிள்ளைத் தமிழ் ஆகிய ஐந்து நூல்களைக் கொண்டதே பஞ்சகம் ஆகும். இத்தொகுப்பு சைவச் சித்தாந்த நுட்பங்களை உடையது. இப் பஞ்சகத்தில் 'தேவைத் திரிபந்தாதி'யை பெரும்புலவர் இரா. இராகவையங்கார் பாடம் சொல்ல பேராசிரியர் மு. இராக வையங்கார் பாடம் கேட்டிருக்கிறார்.

இவ்வுன்னத நூலை இயற்றியவர் சிந்நயச் செட்டியார் என்ற பெருமகனார் ஆவார். இவர் வாக்குப் பலிதம் கொண்ட அருட்கவிஞராகவும் இருந்திருக்கிறார். ஒருமுறை தேவகோட்டைக்கு அருகில் உள்ள 'வெளிமுத்தி' எனும் கிராமத்திற்குச் சென்றிருக்கிறார். கிராம மக்கள் பல்லாண்டுகளாகக் காய்ப்பின்றி இருந்த ஆண் பனை ஒன்றைச் செட்டியாரிடம் காட்டி அப்பனைமரம் காய்க்குமாறு பாடக் கேட்டுக்-கொண்டனர். செட்டியார் உடனே ஒரு பாடலைப் பாடி ஏட்டில் எழுதித் தந்தார். சில நாள்களில் பனைமரம் காய்க்கத் தொடங்கிவிட்டது.

ஆறுமுக நாவலரையும், வன்றொண்ட ரையும் தனது ஞான குருச் செல்வர்களாகச் செட்டியார் கொண்டிருந்தார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இவரை மதித்துப் போற்றியிருக்கிறார். இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி இவரை அரசவைக் கவிஞ ராகவே போற்றியிருக்கிறார். பாண்டித் துரை தேவர் இவரது உறவைத் தமிழ் உறவாகவே கருதியிருக்கின்றார்.

இவர் எழுதிய 'காசியமக அந்தாதியை' இரா. இராகவையங்கார் தேவகோட்டை யில் பாடம் சொல்லிக் கொண்டிருந்த பொழுது, கண்கள் பனிக்க எழுதி ''இத் தகைய அரிய நூலை எழுதிய செட்டியார் நடமாடிய தேவகோட்டையில் நடந்து செல்லவும் கால்கள் கூசுகின்றன'' எனறாராம்.

செட்டியார் எழுதிய பல நூல்களுள் ''திருவொற்றியூர்ப் புராணமும்'' ஒன்றா கும். நூல்கள் எழுதுவது தவிர பல சிவப் பணிகளும் செட்டியார் செய்திருக்கின்றார். திருவாரூர்க்கு அருகில் உள்ள திருவிழமர் கோயிலுக்கு இரண்டு சுற்று மதில்கள், திருக்குளம் எழுப்பித்து, திருக்குடமுழுக்கு செய்து, நாள் வழிபாட்டுக்கு ஆறுவேலி நிலமும் வழங்கினார். திரிசிரபுரம் தாயுமான சுவாமி கோயிலுக்கு திருக்குட முழுக்கு செய்வித்தார். நாற்பத்தைந்தே ஆண்டுகள் வாழ்ந்த இப்பெருமகனார் தாம் வாழ்ந்த வயதிற்கும் மேலாக நூல்களை வழங்கியிருக்கிறார். 1900-ஆம் ஆண்டில் சிவபதம் அடைந்தார்.

(தோற்றம் – 1855; ஊர் – தேவகோட்டை; குன்றக்குடி பெரிய பெருமாள் அவர்களின் ''தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்'' என்ற நூல் இல்லையானால் இவரைப் பற்றி அறிந்தி ருக்கவே முடியாது.)

16
நூற்றுக்கும் மேல் நூல்கள் எழுதிய பேற்றினையுடையார் 1856

ஒரு மனிதருடைய வாழ்நாளில் 2, 3 நூல்கள் எழுதுவதே பெரும் சிரமம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்படியிருக்கும் பொழுது ஒரு பெரியவர் சைவ சமயம் தொடர்பாக 108 நூல்களை எழுதியுள்ளார் என்றால் அச்செயலை எவ்வாறு போற்றுவது? அந்நூல்களைப் பட்டியல் போடவே இரண்டு பக்கங்கள் ஆகும்.

திருவுசாத்தான புராணம், திருவுசாத்தான புராண வசனம், திருப்பத்தூர்ப் புராணம், பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம், சோழபுர புராணம், சித்தவட மான்மியம், தில்லைவளாக மான்மியம், திருக்கழுக் குன்ற மான்மியம், திருவாதவூரடிகள் புராண வசனம், திருத்தொண்டர் புராண சார விளக்கம், சிவசுந்தர சாயாரூப சிவமகிமா சங்கிரகம், உண்மை நாயன்மார் மகிமை, சேக்கிழார் புராண வசனம், நம்பியாண்டார் சரித்திரம், மெய்கண்ட சிவ சரித்திரம், திருவாரூர் திரிபந்தாதி, திருவால வாய் யமக அந்தாதி, ஞான சம்பந்தர் சிலேடை வெண்பா, சிவகாம சுந்தரர் சிலேடை வெண்பா, ஞானசம்பந்தர் போற்றிக் கலிவெண்பா, சிவகாமி பிள்ளைத் தமிழ், திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ், திருநாவுக்கரசர் பிள்ளைத் தமிழ், சுந்தரமூர்த்தி பிள்ளைத் தமிழ், மாணிக்க வாசகர் பிள்ளைத் தமிழ், மீனாட்சி சுந்தரேசர் திரு ஊசல், திருஞான சம்பந்தர் திரு ஊசல், சிவராம வணக்கம், சிவபக்த நாமாவளி, அருச்சனைப் பத்து, வேதாந்தத் தெளிவு, சிவஞான போதாந்த வெகு வசனம், சைவ சமய உண்மை, வேத சிவாகமங்கள் முதலியன அப்பெரியார் இயற்றிய சில நூல்கள் ஆகும்.

அப்பெரியார் சொக்கலிங்க ஐயா என்று அன்போடு அழைக்கப்பட்ட சொக்க லிங்கஞ் செட்டியார் ஆவார். இவர் தாமே புராணங்களையும், தேவார திருவாசகங் களையும் கற்க ஆரம்பித்தார். தமது பதினே ழாவது வயதில் யாழ்ப்பாணம் சென்ற பொழுது அங்கு ஆறுமுக நாவலர் அவர்களிடம் பாடம் கேட்டார். இந்தியா மீண்டதும் வன்தொண்டரிடம் பல நூல்களைக் கற்றார்.

திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாள்புரத்தில் குருபூசை மடம் ஏற்படுத்தி அறுபத்து மூவர் குருபூசைகளையும் நடத்தச் செய்தார். மேலும் அங்கே தேவார பாடசாலை தொடங்கி தேவாரம் இசையுடன் கற்பிக்கச் செய்தார். தாமும் மாணவர்களுக்குச் சைவ நூல்களைக் கற்றுத் தந்தார். நகரத்தார்களைக் கொண்டு ஆரம்ப பாடசாலை, வேதபாடசாலை, பசுமடம், திருஞானசம்பந்தர் திருக்கோயில் திருவிழா மண்டபம் முதலிய திருப்பணிகளைச் செய்து முடித்தார்.

திருத்தில்லைக்குச் சென்று அங்கு மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை என்ற கல்வி நிறுவனத்தை ஏற்படுத்திச் சைவ சித்தாந்த நூல்களைக் கற்பித்தார்.

காலமெல்லாம் சைவத்திற்காக உழைத் அப்பெரியார் தமது 74-ஆவது வயதில் உயிர் நீத்தார்.

(தோற்றம் – 1856; மறைவு – 1930; இடம் – காரைக்குடி)

துணை நூல்கள் : ''ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா சரித்திரம்'', ''தமிழ்ப் புலவர் சரித்திரம்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17
தென்னாட்டுச் சாத்திரங்கள் – மேனாட்டில் பரவும் வகை செய்த மேதை (1864)

காஞ்சிபுரம்.....(1912) .....சைவ சித்தாந்த மாசமாஜ ஏழாவது ஆண்டு விழா .....ஆயிரக்கணக்கான அன்பர்கள் குழுமி இருக்கின்றனர். சைவசித்தாந்தப் பேரறிஞர். T.பொன்னம்பலம்பிள்ளை தலைமைப்பீடம் ஏறுகிறார். ''J.M.N. பிள்ளையவர்களை விட ஒரு வயது மூத்தவனாக இருந்தாலும் அவரே எனது குருநாதர். சைவர்களும், தமிழக மக்களும் பிள்ளையவர்களின் பணியைப் புரிந்து கொண்டிருந்தால், தமிழகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் அவருக்குக் கோயில்கள் எழுப்பி இருப்பார்கள்''. என்று முழங்கினார். அவையில் எழுந்த கரவொலி விண்ணை எட்டியது. ஆயிரக்கணக்கான விழிகள் தம் பார்வையால் பிள்ளையவர்களுக்குப் பாத பூஜை செய்தன. பிள்ளையவர்கள் கண்களில் நீர் நிரம்பியது. இதுதான் அந்தத் தருணம் :

> "One crowded hour of Glorious life
> Is worth an age without a name"

எத்தனை உயர்ந்த புகழ்மிக்க வாழ்க்கை? எப்படி வந்தது அந்தப் புகழ்? கோயில்கள் கட்டி வழிபடக்கூடிய அளவுக்கு அந்தப் பெருந்தகை செய்தது என்ன?

J.M.N.....அந்த மூன்றெழுத்து மந்திரக்காரர்.... பெருந்தகை ஜெ.எம். நல்லசாமிப்பிள்ளையவர்கள் ஆவார். ஜெ.எம். என். அவர்கள் மேனாட்டிற்குச் சைவ சித்தாந்தத்தை முதன் முதலாக தம் மொழி பெயர்ப்புகள் – தம் ஆங்கில இதழ் – மூலமாக அறிமுகப்படுத்தினார். ''சிகாகோ மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்னரே இத்தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாமல் போய்விட்டேன்'' என்று ஒரு மணி நேரம் ஜெ.எம்.என்னுடன் உரையாடிய சுவாமி விவேகானந்தர் வருந்தினாராம். மாக்ஸ் முல்லர் என்ற ஜெர்மானிய வேதவிற்பன்னர், ஜெ.எம்.என்னின் ''சித்தாந்த தீபிகை''யை மனமாரப் புகழ்ந்தார். ஜி.யூ. போப் ஜெ.எம். என்னுடன் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து கொண்டு அவரது நெருங்கிய நண்பரானார். தமிழகத்திலோ சைவ சமய அருட்பீடத்தின் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்தார்.

> "Saivam means Nallaswamy pillai:
> Nallaswamy pillai means saivam"

வேதாந்தம் என்றால் எப்படி விவேகானந்தரோ அதுபோல சித்தாந்தம் என்றால் நல்லசாமிப்பிள்ளை என்பது அன்றைய நிலை "No Nallaswamy No Agamantham" என்பது திருவாசகமணி வார்த்தை.

நல்லசாமிப் பிள்ளையவர்களின் குடும்பம் சமயத்தில் தோய்ந்தது. ஜெ.எம். என். மாணவப்பருவத்திலேயே சமயவிரிவுரைகளே கேட்டுவந்தார். அவருடைய பொழுதுபோக்கு விளையாட்டு அல்ல;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயமே. அவரும் அவருடைய நண்பர் லால்குடி குருசாமி ஐயரும் பள்ளிப் பருவத்தில் திருச்சியில் சைவசமாஜம் தொடங்கினார்கள். உறையூர் நாகநாதர் கோயிலில் சமாஜக் கூட்டங்கள் நடத்தி வந்தார்கள். பிறந்து மொழி பயின்ற நாள் முதலாகச் சிவசிந்தனையே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் திருவனந்தபுரம் மடகண்டனம் வேங்கடகிரி சாஸ்திரிகள் சமய உலகைக் கலக்கிக் கொண்டிருந்தார்கள். அவரது விரிவுரையைப் பிள்ளையவர்கள் விடாது கேட்டு அப்படியே லயித்திருப்பார்கள். கல்லூரிப்படிப்புக்காகப் பிள்ளையவர்கள் சென்னை சென்றபொழுது சோமசுந்தர நாயகர் அவர்களின் முழக்கத்தில் தம்மை மறந்தார்கள்; தலைப்பட்டார்கள்; அவரையே தம் குருநாதராகக் கொண்டார்கள்.

வழக்கறிஞராகக் தமது இருபத்திரெண்டாவது வயதிலே தொழில் துவங்கிய பொழுது மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நடக்கும் சமய சொற்பொழிவுகளையும் பிள்ளையவர்கள் கேட்கத் தவறியதில்லை. அந்தக் கூட்டங்களில் இவரும் பேசினார். கூட்டத்திற்கு வந்திருந்த அறிஞர்களிடமும் கலந்துரையாடினார். மதுரையில் இருந்த ஆறு ஆண்டுகாலமும் இவருக்குச் சைவப் பணியாகவே அமைந்தது. மதுரையில் பேச்சோடு இவர்பணி நின்றுவிடவில்லை. இவரது ஆங்கில அறிவும், வழக்கறிஞர் தொழிலும் இந்து சமய அறநிலையச் சட்டத்தில் பல திருத்தங்களை முன்வைக்க இவரைத் தூண்டியது. திருக்கோயில்கள், திருமடங்கள் ஆகியவற்றின் பணிகளைச் செம்மைப்படுத்த விரிவான அறிக்கை ஒன்றினைச் சைவசித்தாந்த சமாஜத்தின் சார்பில் ஜெ.எம்.என் தயாரித்தார். இதனால் எதிர்காலத்தில் அறநிலையச் சட்டத்தில் பல சீர்திருத்தங்கள் நிகழ்ந்தன.

1893-ஆம் ஆண்டில் ஜெ.எம்.என் திருப்பத்தூர் மாவட்ட முன்சீப் ஆனநாள் தொடங்கி மிகவும் தீவிரமாகவும் ஆழமாகவும் சைவ சித்தாந்த சாத்திரங்களைப் படிக்கலானார். இதன் விளைவாகப் பிள்ளையவர்கள் ''சிவஞான போதம்'' நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலானார். 1895-ஆம் ஆண்டில் சிவஞான போதம் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியானது. அப்பொழுது பிள்ளையவர்களுக்கு வயது முப்பது ஆகும். இதற்கு முன்னர் 1850-ஆம் ஆண்டில் ஹொய்சிங்டன் என்ற கிறித்துவப் பாதிரியார் மொழிபெயர்த்திருந்தார். இம் மொழி பெயர்ப்பு இரண்டாவது ஆகும். இரண்டு மொழி பெயர்ப்புகளையும் பேராசிரியர் வின்சன் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

"It is evident that the translation made in 1895 is better than the translation of 1850. The book of Nallaswami is very well written and its perusal is highly instructive"

இதுபோலவே 1897-ஆம் ஆண்டில் ''திருவருட்பயனை'' ஜெ.எம்.என். மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1897-ஜூன் மாதம் ஜெ.எம்.என். அவர்கள் ''சித்தாந்த தீபிகை'' (Siddhanta Deepika or Light of Truth) என்ற ஆங்கில மாத இதழை வெளியிட்டார். இதன்பிறகு ஜெ.எம். என்னின் பிற ஆங்கில மொழி பெயர்ப்புகளும், சித்தாந்த தீபிகையில் வெளிவரலாயின. ''சிவஞான சித்தியார்'' மொழி பெயர்ப்பு 1897-ஆம் ஆண்டில் வெளிவரத் தொடங்கி 1902-ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. ''சைவ சித்தாந்தம்'' பற்றி ஜெ.எம்.என் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் 1911-ஆம் ஆண்டில் "Studies in Saiva Siddhanta" என்ற பெயரில் அவரது மகனார் ஜெ.என். ராமநாதன் வெளியிட்டார்.

சித்தாந்த தீபிகையில் ''திருமந்திரம்'' மொழிபெயர்ப்பு முழுமையாக வெளி வந்தது. அடுத்து வந்த தொடர் ''சைவசமய நெறிவிளக்கம்'' ஆகும். சைவ சித்தாந்த சாத்திரங்களான ''வினாவெண்பா'', ''கொடிக்கவி'', ''உண்மைநெறிவிளக்கம்'', ''இருபா இருபஃது'' ஆகியவற்றின் மொழிபெயர்ப்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வரலாயின. ஜெ.எம்.என். அவர்கள் ''சிவப் பிரகாசத்தையும்'' ''பெரிய புராணத்தையும்'' மொழிபெயர்த்தார். முன்னது அச்சேறவில்லை. பின்னதை அவரது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகனார் ஜெ.என். ராமநாதன் பின்னர் வெளி யிட்டார்.

ஜெ.எம்.என்னின் மொழிபெயர்ப்பு களிலே ''சிவஞான சித்தியாரும்'' ''சிவ ஞானபோதமும்'' புகழ் பெற்றவையாய் இருந்தாலும், "Studies in Saiva Siddhanta" என்ற நூலே அவரது தனித்த மகத்தான (Magnum opus) படைப்பாகும். அறிஞர்கள், – இந்தியாவிலும் சரி, மேனாட்டிலும்சரி – இந்த நூலைப் பெரிதும் ஏற்றுப்போற்றினர். இதழ்கள்– ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் – புகழ்ந்து கட்டுரைகள் ளெியிட்டன. The Indian patriot இவ்வாறு கூறுகிறது. "Even a cursory reader will be struck with the depth of his Scholarship; for the exposition of his theme, he appears to have utilised all the available Literature on it, both scientific and philosophic, both ancient and Modern. His range of investigation extends from the remotest portion of the vedas to the most of modern scientific truths".

இந்த நூலினால் ஈர்க்கப்பட்ட "Indian patriot" அந்நூலின் ஒரு பகுதியான Svetasvatara Upanishad-ஐத் தொடர்ந்து வெளியிட்டு, நிறைவுக்கட்டுரையில் ஒரு அரிய பாராட்டு மகுடம் சூட்டியது. No one has written regarding the subject so Voluminously or so exhaustively"என்று எழுதியது. இந்த நூலை விமரிசித்த Madras Mail" நல்லசாமிப்பிள்ளையவர்களை "One of the acknowledged authorities on all Questions in relation to the subject" எனப் புகழ்ந்தது. வேதாந்தத்திலேயே ஊறிப் போன பெங்களூரைச் சேர்ந்த பெயர் தெரியாத – முதன் முதலாக ஜெ.எம்.என் நூல்களால் சைவசித்தாந்தத்தை அறிந்த – ஓர் அன்பர் "I find that in no other system of Philosophy is the relation between God and man so widely and rationally explained, என்று கூறினார். சங்கர வேதாந்தி ஒருவர் சைவசித்தாந்தத் தின் முதன்மையை ஏற்றுக் கொண்டது ஜெ.எம்.என்னுக்கு அமுத தாரையை வார்த்தது.

''சித்தாந்ததீபிகை'' ஆங்கில மாத இதழ் – ஜெ.எம்.என். ஏற்றி வைத்த சைவ தீபம். ஜெ.எம்.என். வேறு எந்த வெளியீடுகளோ மொழிபெயர்ப்புகளோ – நூல்களோ – வெளியிட்டிருக்காவிடினும் ''சித்தாந்த தீபிகை'' இதழ் ஒன்றுக்காகவே அவரது பெயர் சைவசமய வரலாற்றிலே பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். இதழ் வெளியிடுவதே சிரம மான பணி. அதுவும் ஆங்கிலத்தில் வெளியிடுவது இன்னும் கடினம். அதற்குப் போதிய நிதிவசதி வேண்டும். கட்டுரை களும் கிடைக்காது. இத்தனைக்கும் மேலாக தத்துவக் கருத்துக்கள் கொண்ட இதழை வாங்குவாரும் இரார். இப்படிப் பட்ட கடினமான சூழ்நிலையில் பதின்மூன்று ஆண்டுகள் தனி ஒரு மனிதராகத் தமது கைப்பொருளைச் செலவழித்து தாமும் கட்டுரைகளை எழுதி–பிறரையும் எழுதத் தூண்டி – மகத்தான சாதனைகள் படைத்தார் பிள்ளையவர்கள்.

''சித்தாந்த தீபிகை'' தோன்றியதன் காரணம் தான் என்ன? தீபிகையின் முதல் இதழிலேயே ஜெ.எம்.என். விளக்குகிறார். ரைன்நதிக்கரையில் அமர்ந்து கொண்டு ஜெர்மானியப் பேராசிரியர்கள் நமது வேத, வேதாந்தத்தை மொழிபெயர்ப்பது நாணத் தைத் தருகிறது. எங்கோ தொலைவில் வாழும் அமெரிக்கப் பேராசிரியர் தமிழ்த் தத்துவத்தின் தலைசிறந்த நூலின் முதல் மொழிப்பெயர்ப்பாளராகிறார். ஆக்ஸ் போர்டு பேராசிரியர் தமிழ் நூல்களை மொழிபெயர்க்கிறார். அவர்கள் பணி களுக்குத் தலைவணங்குகிறேன். அவர்கள் உன்னத உதாரணங்கள்; நாம் அவர்களைப் பின்பற்றுவோம். வடமொழி, தமிழில் உள்ள அரிய நூல்களை – இலக்கியம், சமயம், தத்துவம் எதுவாயினும் – மொழிபெயர்ந்து வெளியிடுவதே இந்த இதழின் நோக்கம்'' என்று பறைசாற்று கிறார். இந்த நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு ஜூன் 1897-ஆம் ஆண்டில் முதல் இதழ் வெளிவந்தது.

பிள்ளையவர்களின் மொழி பெயர்ப்பு கள், சித்தாந்தக் கட்டுரைகள் அனைத்தும் தீபிகையில் வெளிவந்தன. மகாதேவ சாஸ்திரி பிருமசூத்திரத்திற்கு நீல கண்ட சிவசாரியாரின் பாஷியத்தையும், ஜி.யூ.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போப் ''மணிமேகலை'', ''புறநானூறு'' இலக்கியங்களையும், ஆர்.ஏ. சாஸ்திரி உபநிடதங்களையும், ஏ. ரெங்கசாமி ஐயர் ''வாயுசம்கிதை''யையும், மொழி பெயர்த்தனர். சிவலிங்கத்தத்துவம், வீ.வீ. ரமண சாஸ்திரி யின் வீரசைவம் என்று பல அரிய கட்டுரை கள் வெளிவந்தன.

தீபிகையினால் இந்தியா மட்டுமல்லாது உலகெங்கும் சைவசித்தாந்தம் பற்றிய விழிப்புணர்வு முதன் முதலாகப் பரவத் தொடங்கியது. ஜெ.எம்.என்னே இவ்வாறு எழுதுகிறார்."We are glad that at last the thirteen long years of strenuous efforts have borne fruit by opening the eyes of the people to this valuable and genuine religion .... Now the saiva Religion is found in almost all parts of the world... We have coherents to this faith everywhere. We may be correct when we say that all these have been achieved through our journal which is the only journal of its kind which speaks about the saiva Religion and the art, literature and cult of the Tamil country".

''ஒவ்வொரு ராஜபுதனியர் கையிலும் இவ்விதழ் இருக்க வேண்டும்'' என்று இலண்டனிலிருந்து வெளிவந்த ''ராஜபுத்'' இதழ் கூறுகிறது. தீபிகையால்தான் வேதாந்த வித்தகரான மாக்ஸ் முல்லருக்கு – காலம் கடந்த பிறகாவது – சைவ சித்தாந்தம் அறிமுகம் ஆகியது."But such journals as the Light of Truth or the Siddhanta Deepika have been doing most useful service" என்கிறார் மாக்ஸ்முல்லர். ப்ரேஸர், காசி பிள்ளை, வால்டர் கார் ஓல்டு, மார்ஸ்டென் முதலான வெளிநாட்டு, உள்நாட்டு அறிஞர்கள் இவ்விதழைப் பலபடப் பாராட்டினர். புகழுரைக்கோ பஞ்சமில்லை.

எழுத்து மட்டும் பிள்ளையவர்கள் ஆயுத மன்று. பேச்சாலும் சைவசித்தாந்தப் பெரு நெறியை நாடெங்கும் கொண்டு சென்றார். 1908-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த பல் சமயப்பேரவையில் சைவசித்தாந்த சமாஜம் சார்பில் ஜெ.எம்.என். உரை நிகழ்த்தினார். இது போன்ற பேரவையில் சைவசித்தாந்தம் பேசப்பட்டது இதுவே முதன் முறையாகும். அவையோர் மெய் மறந்து கேட்டனர். இப்பேருரையின் தாக்கம் வெளியுலகையும் பாதித்தது. The Hindu organ இவ்வாறு கூறுகிறது."None is so remarkable as the paper now before us for its conciseness and clear statements of the salient points and for the author's depth of thought and breadth of view".

கல்கத்தா பேருரைக்குப்பின் ஜெ.எம். என் அவர்கள் தென்னிந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்து உரைகள் நிகழ்த்தி வந்தார். சைவசித்தாந்த சமாஜ ஆண்டு விழாக்களில் அவர் பேச்சு எப்பொழுதும் முதலிடம் வகிக்கும். 1911-ஆம் ஆண்டில் திருச்செங்கோடில் நடந்த சமாஜ நான்காவது ஆண்டு விழாவில் ''கண் டொன்று சொல்லேல்'' ''அறஞ்செய விரும்பு'' என்ற எளிமையான ஆத்திச்சூடி வரிகளை எடுத்துக் கொண்டு மிக ஆழமான சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துரைத் தார். 1911-ஆம் ஆண்டில் செகந்தரபாத் மண்ணில் கால் வைத்ததிலிருந்து ஜெ.எம். என் அவர்கள் பல் சமயத்தோர் அடங்கிய அவை, பள்ளிக்கூடம் என்று ஒவ்வொரு இடமாகச் சொற்பொழிவுகளாகவும், உரை யாடல்களாகவும் சைவமணம் பரப்பினார். செகந்தராபாத்தில் அலையடித்தது என்றால் பெங்களூரில் புயலே வீசியது. பெங்களூ ரில் 1911-ஆம் ஆண்டில் நடந்த கூட்டங் களில் மைசூர் அரசரின் பிரதிநிதி, மைசூர் திவான் முதலிய மேதகையாளர்கள் முதல் சிவனேச திருக்கூட்டத்தாரைச் சேர்ந்த பஞ்சம இளைஞர்கள் வரை ஜெ.எம். என்னின் மகுடி இசையில் கட்டுண்டு இருந்தனர்.

கல்கத்தா பல்சமயப்பேரவைக்குப்பின் அலகாபாத் பல்சமயப்பேரவை 1911-ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதிலும் ஜெ.எம்.என் கலந்து கொண்டார்.

"Saivism in relation to other systems" என்ற ஆங்கில ஆய்வுரையில் சமயங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை வலி யுறுத்துவதைவிட ஒற்றுமைகளை முன் னிறுத்த வேண்டும் என்று புதியதோர் பரபக்கம் தந்தார். முதலில் பௌத்தத் திற்கும் சைவத்திற்கும் உள்ள ஒற்றுமையை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எடுத்துரைத்தார். அடுத்துக் கிறித்துவம் பற்றிப் பேசுகையில் Our idea or God is sat-chit-Ananda symbolised in the form of somaskanda and this is the same as God the father, God the Mother or Holy Ghost and God the son. Again there is similarity in God as pure Being or spirit, God as light that links Him to all humanity and God as Love. Doctrine of Grace as a special feature of Saiva siddhantam does not differ from the Christian doctrine. As regards the doctrine of Atonement, we equally well say with christians, that where we can do His will, atoning ourselves with god, then he takes upon himself all burdens and all our burden full off".

அடுத்து இஸ்லாம் சமயத்தோடு ஒப்பிட்டுப் பேசினார்.

"Saivites hold strictly with Mohammadans that god cannot be born as a man through the womb of the woman. In the higher regions of philosophy and mysticism there is very close approximation. We believe also that the famous Kaaba of Mecca is nothing but a Sivalingam. In the scheme of practical religion the popular form of Mohamadanism is Dasa Marga. The Mohamadan mystics have reached the highest experience of religion".

சைவ சித்தாந்த தத்துவத்தை முற்றும் உணர்ந்ததோடு, பிற சமயக் கருத்துக்களையும் உள்வாங்கி ஒற்றுமைக் கூறுகளை ஒழுங்குபடுத்திப் – பொருத்தமான பேரவையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பே முன்வைத்த ஜெ.எம்.என் அவர்களின் சமய நல்லிணக்கம் இன்றைக்கும் புதுவதாக அமைந்துள்ளது. இக்கருத்துகள் பரப்பப் பட்டால் மதச் சண்டைகள் ஏன்? சாதிக் கலவரங்கள் ஏன்?

தமிழகத்திலும் ஜெ.எம்.என் பேசாத அவையே இல்லை. சென்னை ஸ்ரீபாலசுப்ரமணிய பக்தஜனசபை, சிவனடியார் திருக் கூட்டம், தூத்துக்குடி சைவசித்தாந்த சபை, மதுரை தமிழ்ச்சங்கம் எனப்பட்டியல் நீளும். சைவம் கமழ்ந்த இலங்கையில் 1909-ஆம் ஆண்டில் ஜெ.எம்.என். மேற்கொண்ட சுற்றுப் பயணம் வெற்றி பெற்றது எனச் சொல்லவும் வேண்டுமோ?

சித்தாந்த சிக்கல்களை விடுவித்த சீலர் : ஜெ.எம்.என். சொற்பொழிவுகளோடு தமது பணியை நிறுத்தவில்லை. சைவ சித்தாந்தத்தை விளக்கும் பொழுது ஏற்படும் சில நுட்பமான வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கும் ஒப்பற்ற தலைவராகவும் திகழ்ந்தார். 1912-ஆம் ஆண்டில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் துணைத்தலைவர் – செயலாளர்களுக்குமிடையே கடுமையாகக் கருத்து மோதல் ஏற்பட்டது. ''அனைத்து ஆன்மாக்களும் ஏதோ ஒரு காலகட்டத்தில் விடுதலை அடையுமா?'' என்பது முதல் சிக்கல். ''இறைவன் வடிவு சுத்த மாயையிலிருந்து உருவானதா?'' என்பது இரண்டாவது சிக்கல். ''யுகங்கள் பல கடந்தாலும் அனைத்து ஆன்மாக்களும் விடுதலை அடைவதில்லை''என்று முதற் சிக்கலுக்கு பொ. முத்தையாபிள்ளை கருத்தை ஆதரித்து, விரிவான விளக்கத் துடன் தன் முடிவை ஜெ.எம்.என். வெளியிட்டார். இரண்டாம் சிக்கலுக்குப் பரம்பொருள் மாயை, ஆணவம் ஆகிய மலங்கள் அற்றது. பரிபூரண ஞான ஆன்மாக்களுக்கு ஞானமும் சக்தியும் வழங்குகிறது. பரம்பொருளின் வடிவம் மாயையிலிருந்து தோன்ற முடியாது. பரம்பொருளின் அருட்சக்தியினால் உருவானது'' என்று சுப்பிரமணிய பிள்ளை யின் கருத்தினை ஏற்று ஜெ.எம்.என். முடிப்புரை தந்தார்.

சிக்கல்கள் விடுவிப்பது மட்டுமல்ல, தான் ஏற்றுக் கொண்ட முடிவிலிருந்து சிறிதும் பிறழாதவர். அதில் முழு நம்பிக்கை வைத்திருந்தார். அதனால்தான் அவர் சிந்தனை தெளிவாய் இருந்தது. சொல்லும் செல்லும் சொல்லாயிற்று. தீர்ப்பும் முடிந்த முடிபாயிற்று.

கொண்ட கொள்கையை நிலைநாட்டிய கொள்கை வீரர் : தாம் கொண்ட கொள்கைக்கு, முடிவுக்கு, மாறாக நண்பராயினும் சரி – பெரும் அறிஞராயினும் சரி கவலையில்லை – யார் கருத்து தெரிவித் தாலும் உடனே மறுப்பு தெரிவித்துத் தம் கருத்தினை நிலை நாட்டினார். மனோன்மணியம் எழுதிய பேராசிரியர் ப. சுந்தரம்பிள்ளை ஜெ.எம்.என்னுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெருங்கிய நண்பர். ஒருமுறை சுந்தரம் பிள்ளை அருள்நந்தி சிவாசாரியார் துவைதி என்று எழுதிவிட்டார். (துவைதம் – இரண்டு வேறுபட்டபொருள்; கடவுள் வேறு ஆன்மா வேறு). உடனே ஜெ.எம்.என். ''மெய்கண்டாரும் அவரது சீடர்களும் தங்களை அத்வைதிகள் என்றே அழைத்தனர். மிகப் பிற்காலத்தில் தோன்றிய தாயுமானவரே 'அத்துவித மெய்கண்டான்' என்றே அழைத்தார்'' என்று பதில் கொடுத்தார்.

லிங்க வழிபாடு – ஹார்ட்டனுக்கு மறுப்பு : மறைத்திரு ஹார்ட்டன் (Rev Mr. Hortern) என்ற ஐரோப்பியப் பாதிரியார் இந்துக் கோயில்களைப் பற்றியும், இந்துக்கடவுட் படிமங்களைப் பற்றியும் தவறாக "Daily chronicle" என்ற இதழில் எழுதிவிட்டார். இதைவிடக் கொடுமை என்னவென்றால் அக்கட்டுரையைத் தமிழ்நாட்டு நாளிதழ் களும் எடுத்து வெளியிட்டு விட்டன. இதனால் வெகுண்டெழுந்த ஜெ.எம்.என். "Indian patriot", "The Hindu" விற்கு விரிவான மறுப்பு எழுதிவிட்டார். ஹார்ட்டன் தனது கட்டுரையில் சிவவழிபாடுகளைப் பற்றி "Worship of the reproduction of the species and the representation of the unseen god in forms sometime Grotesque and sometimes Indecent, never beautiful" என்று சாடியிருந்தார். இந்தச் சாடலுக்கு ஜெ.எம்.என் மறுப்பாக பேராசிரியர் வில்சன் லிங்க வழிபாடு பற்றிக் கூறியிருந்ததை எடுத்துத் தம் மறுப்பிற்கு அரண் செய்தார். வில்சன் கூறுவதாவது "There is nothing like the phallic orgies of antiquity; it is all mystical and spiritual. The linga is two - fold, external and internal. The ignorant who need a visible sign worship Siva as a 'mark' or 'Type' - which is the proper meaning of the word 'Linga' - of wood or stone; but the wise look upon this outward emblem as nothing and contemplate in their minds the invisible. The inscrutable type (Alinga) which is Siva himself. The Worship of Siva under the type of 'Linga' it has been observed is almost the only form in which that deity is reverenced. இவ்வாறு வில்சன் கருத்தைக் சுட்டிக்காட்டிய ஜெ.எம்.என் தொடர்ந்து ஆனந்த குமாரசாமியின் கருத்துக்களை முன் வைத்துச் சிவ வழிபாடு – நடராஜ வழிபாடு எத்தனை அழகானது என்று தெளிவு படுத்தினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு சண்டேசுரர்: ஹார்ட்டனாவது பரவாயில்லை. வெளியில் அதிகம் தெரியாத பாதிரியார். சைவத்தில் பிடிப்பு உள்ளவரும் திருவாசகத்தில் தோய்ந்தவரும் ஆவார் ஜி.யூ. போப் அவர்கள். அது மட்டுமல்ல. ஜி.யூ. போப் ஜெ.எம்.என். அவர்களின் நெருங்கிய நண்பரும் கூட. மிகவும் பேரன்பு பூண்டவர். அவரையும் ஜெ. எம்.என். விட்டுவிடவில்லை. ஜெ.எம்.என்னுக்குச் சைவமே வாழ்வு – சைவ ஆசாரியார்கள் வாக்கே வேதம். அதற்கு இடையூறோ – குற்றங்குறையோ வந்தால் அவர் விடமாட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சண்டேசர் ஜெ.எம்.என். அவர்கள்.

சுந்தரரைப் பற்றி போப்பின் கருத்து : ஜி.யூ. போப் ஒருமுறை சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றித்தவறாக எழுதி விட்டார்.

"There seems indeed nothing whatever of the ascetic about him from first to last. His hymns 100 in number are not, it seems to me, of any peculiar value. We humbly confess after long study an utter inability to admire his poetry the contrast between which and the powerful and pathetic verses of Manickavasagar is striking. Some of his utterances are grotesque; Sundarar in his poems uses the most unseemly familiarity in his addresses to his Master; and Sundarar avails himself of the liberty of a spoiled child in a strange war".

(இந்த வார்த்தைகளை மேற்கோள் களாகக் காட்டும் பொழுது ஜெ.எம்.என் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் திருவாசக மணி அவர்கள் மிக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு கேட்கிறார்).

சுந்தரர் வரலாறு விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது : உன்னதமான அருளா ளரைப்பற்றி அருமைக்குரிய நண்பர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தவறாக எழுதிவிட்டாரே என்று ஜெ.எம். என். துடிதுடித்துப் போய்விட்டார். ஜி.யூ.போப் சைவத்தின் பேரில் ஆழ்ந்த பிடிப்பு கொண்டவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பக்தி பற்றி அறிந்து கொள்ள முடியாத ஐரோப்பிய சூழ்நிலையில் இருந்தவர். அறியாமல் எழுதிய கட்டுரை. இருந்தும் அச்சேறிவிட்டது. "Pure ignorance madam, pure ignorance" என்று ஜெ.எம்.என். ஆரம்பிக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரை ஏமாற்றியதும், இறைவன் ஆடிய நாடகமும் போப்பின் விமர்சனத் திற்கு ஆளாகியது. ஜெ.எம்.என். அவர்கள் சுந்தரர் – சங்கிலியார் திருமண நிகழ்ச்சி பற்றிச் சேக்கிழார் கூறுவதை விரிவாகக் கூறி, புனித வரலாறுகளைப் படிக்கும் பொழுது கொள்ள வேண்டிய நெறிமுறை களை J.A. Froudeன் வார்த்தைகளைக் கொண்டு தெளிவுபடுத்தி, இவ்வாறு முடித்தார் ஜெ.எம்.என். Indeed Sundarar was a most lovable character; in him was combined perfection of beauty of body and mind; for was he not created after the very image of God?... And he mixed with the world and was all in all and yet all out of it... These Sages (of the type of Sundarar) with the God-consciousness fully developed in them did everything according to the dictates of their god - consciousness and with no will of their own and they attributed every gift to god above" என்று எழுதினார்.

சமாஜத்தின் வளர்ச்சியில் பிள்ளையவர் களின் பங்களிப்பு : பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவ சமயத்தைப் பரப்ப இருமுனைப் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது. ஒருமுனை தமிழ்நாடு; மறுமுனை மேனாடு (அதாவது மேனாட்டுச் சமயமான கிறித்துவம்) இருமுனைகளிலும் நின்று போராடினார் ஜெ.எம்.என். மேனாட்டுச் சிந்தனைக்குக் கிறித்துவ சமயக் கருத்துகளுக்கு மாற்றாக ஆங்கில நூல்கள், இதழ்கள் வெளியிடுதல் என அயராது உழைத்தார். இந்தக்கடும் உழைப்பில் ஜெ.எம்.என். தமிழ்நாட்டையும் விட்டு விடவில்லை. முன்னர் குறிப்பிட்டது போல தமிழகம் எங்கும் சைவச் சொற் பொழிவுகள் நிகழ்த்தினார். அனைத்திற்கும் மேலாக சைவ சமயம் பரப்ப மறைமலை யடிகள் முழுமூச்சாகத் தொடங்கிய சைவ சித்தாந்த மகாசமாஜம் (இன்றைய பெருமன்றம்) வேரூன்ற – வளர்ச்சி பெற – ஜெ.எம்.என். துணை நின்றார். 1906-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் நடந்த சமாஜத்தின் முதல் மாநாட்டிலிருந்தே ஜெ.எம்.என்னின் பங்களிப்பு தொடங்கிவிட்டது. இரண்டா வது மாநாட்டின் பொழுது ஜெ.எம்.என்னின் தலைமையில் சமாஜத்தின் விதிமுறைகள் வகுக்கப் பட்டன. மூன்றாவது மாநாட்டில் ஜெ.எம்.என். தலைமை வகித்தார். நான்காவது மாநாட்டில் மறைத்திரு H.W. ஷோமெருஸ் (Rev Fr H.W. Shomerus) முதலான கிறித்துவப் பாதிரியார்களை ஜெ.எம்.என். பங்கேற்க வைத்தார். ஐந்தாவது மாநாடு இராமநாதபுரத்தில் நடத்த ஜெ.எம்.என். அவர்கள் தாமே முன்னின்று முழு ஏற்பாடுகளும் செய்தார். இராமநாதபுரம் மாநாடு பெரு வெற்றியாக அமைந்தது. 1911 முதல் சித்தாந்த தீபிகை சமாஜத்தின் வெளியீடாகத் திகழ்ந்தது. காஞ்சிபுரத்தில் நடந்த ஏழாவது மாநாட்டில் ஜெ.எம்.என். அவர்கள் தனிப்பெரும் தலைவராக உயர்ந்து நின்றார். அம் மாநாட்டில்தான் திரு. டி. பொன்னம்பலம்பிள்ளை தன் தலைமைப் பேருரையில் உணர்ச்சி வயப்பட்டு – ஜெ.எம்.என்னுக்கு மகுடம் சூட்டினார். மகாத்மா காந்தி எப்படி காங்கிரஸ் பேரியக்கத்தோடு இரண்டறக் கலந்திருந்தாரோ அதுபோல ஜெ.எம்.என். அவர்கள் சமாஜத்தோடு இரண்டறக் கலந்து விட்டார். அவருடைய கம்பீரமான ஆளுமையில் ஈர்க்கப்பட்டுதான் மாண்புமிகு திரு. பி. இராமநாதன், மாண்புமிகு திரு. என். கனசபை, கே.பி. புட்டண்ண செட்டியார், இராமநாதபுரம் அரசர், பாண்டித்துரைத்தேவர் முதலான சமுதாயத்தின் தலைமக்கள் எல்லாம் சமாஜக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். திருச்சியில் சைவசித்தாந்த சமாஜம் தோன்றக் காரணமாக இருந்தவர் ஜெ.எம்.என். அவர்கள். திருச்சி மலைக்கோட்டையில் தாயுமானவர்க்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நினைவுக்கட்டிடம் எழுப்பவும் ஜெ.எம்.என். துணை நின்றார். சைவம் என்றால் பிள்ளை, பிள்ளை என்றால் சைவம் என்பது அந்நாளைய தாரக மந்திரமாயிற்று.

தமிழுக்குக் குரலெழுப்பிய தீரர் : ஜெ.எம்.என். அவர்கள் சைவத்தோடு தம் செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ள வில்லை. தமிழுக்கு ஊறு நேர்ந்தபொழுதும் போராடினார். 1913-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக செனட்டில் தமிழ் பற்றாளர்களுக்கும், வட மொழியன்பர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. தாய்மொழிக் கல்வியை அகற்றி வடமொழிக்கு மட்டும் இடம் கொடுப்பது என செனட் முடிவெடுத்தது. இதனை எதிர்த்து ஜெ.எம்.என். பிற அன்பர்களுடன் சேலம் தமிழ்ச்சங்கம், மதுரை தமிழ்ச்சங்கம், சைவ சித்தாந்த மகாசமாஜம் ஆகிய இடங்களில் குரல் எழுப்பினார். தீபிகையில் கட்டுரைகளும் தலையங்கங்களும் தீட்டினார். சேலம் தமிழ்ச் சங்கம் மூலம் நீண்ட அறிக்கை ஒன்றினை அனுப்பினார். Mail, The Hindu போன்ற ஆங்கில நாளிதழ்களில் வெளி வந்த விவாதங்களில் ஜெ.எம்.என். தம் கருத்தினை வெளி யிட்டார். கடும் போராட்டத்திற்குப் பின்னர் இன்டர் மீடியட் (பட்டப்படிப்புக்கு முந்தைய இரண்டாண்டு கல்லூரிப்படிப்பு) படிப்புக்குத் தாய்மொழி கட்டுரை எழுதுதல் கட்டாயமாக்கப்பட்டது.

தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்ட தகவாளர் : 1899-இல் தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளின் வளர்ச்சிக்காக அறிஞர்கள் பலர் கூடித்திராவிட மகாபாஷா சங்கம் நிறுவினர். அதில் ஜெ.எம்.என். தீவிரமாகக் கலந்து கொண்டார். பின்னர் தமிழ்க்கலைக்களஞ்சியக் குழுவில் உறுப்பினர் பதவியை ஏற்றுத் தம் பங்களிப்பினைத் தந்தார். ஜெ.எம்.என். அவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாறை எழுதுமாறு தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களைப் பலமுறை தூண்டினார். தமிழ் ஆசிரியர்களின் சம்பள உயர்விற்காகப் போராடியும், பல்கலைக் கழகத்தில் தாய்மொழிக்குப் பேராசிரியர் பதவி ஏற்படுத்தியமையை வரவேற்றுக் கட்டுரை எழுதியும் உடனுக்குடன் செயல் பட்டார்.

தமிழுக்கு இழுக்கா?: தமிழ்மொழி பற்றியும், தமிழ்நாடு பற்றியும் யாரேனும் குறைசொன்னால் ஜெ.எம்.என். கொதித்து எழுவார். "Home" என்ற ஆங்கில வார்த்தைக்கு இணையாகத் தமிழில் வார்த்தைகள் இல்லை என்று "Madras Times" ல் ஒரு கட்டுரை வந்தது. உடனே ஜெ.எம்.என். ''வீடு'' என்பதற்கு உலகியல் பொருளும் விடுதலை வீடுபேறு என்ற அருளியல் பொருளும் சுட்டி, இல்லம், மனை என்று பிறவார்த்தைகளையும் எடுத்துரைத்துப் பதிலடி தந்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதியையே மறுதளித்த நக்கீரர் : உயர்நீதிமன்ற நீதிபதி மேதகு ரானடே என்பவர்''தென்னிந்தியா கருமை படர்ந்த பகுதி. சமய உணர்வில்லாதது – மூடநம்பிக்கையும் காட்டுமிராண்டித் தனமும் நிரம்பிய பூமி''என்றெல்லாம் சாடி வட இந்தியாவைப் பாராட்டியும் கூறினார். உடனே ஜெ.எம்.என். ''தென்னிந்தியாவில் வட இந்தியா போல நூற்றுக்கணக்கான பிரிவுகள் இல்லை. வட இந்திய வைணவ, சைவத்தில் காணப்படும் ஆபாசம் தென்னிந்தியாவில் கிடையாது. பிரிட்டிஷ்காரர் வந்த பிறகும் இற்றை நாள் வரை இந்துக்களும், முஸ்லீம்களும் தென்னாட்டில் ஒற்றுமையோடு வாழ்ந்து வருகின்றனர். சங்கரர், இராமானுஜர், மத்வர் அவதரித்த புனித பூமி'' என்ற வெகு நீண்ட பதில் தந்தார். இத்தனைக்கும் ஜெ.எம்.என் மாவட்ட முன்சீப் மட்டுமே – ரானடேயோ உயர்நீதிமன்ற நீதிபதி எத்தனை முன்சீப்களுக்கு உயர்நீதிமன்ற நீதிபதியை எதிர்த்து நிற்க முடியும்? வடநாடு – தென்னாடு பற்றிப் பேச்சே எழாத நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அப்போதே இவ்வாறு தென்னாட்டின் பெருமை – அதன் முழுப்பரிமாணங்களோடு – பற்றி வாதிடும் தைரியம் யாருக்கு வரும்? தம் கருத்தின் விளைவு பற்றி ஜெ.எம்.என். சிறிதும் சிந்திக்க வில்லை. தன்மொழி, தன்நாடு – இதற்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இழுக்கு வருவதனைப் பொறாத நக்கீரர் தான் அவர்!

கீழ்த்திசைக் கல்விக்காக உழைத்தல் : கீழ்த்திசைக் கல்விக்காகவும் ஜெ.எம். என். பெரிதும் உழைத்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் கீழ்த் திசைப்பிரிவு தோன்றக் காரணமாக இருந்தவர்களுள் ஜெ.எம்.என்னும் ஒருவர் ஆவார். பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசைக் கல்வி யில் சேர நான்கு ஆண்டு பள்ளியில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் எந்த நிறுவனமும் முன்வரவில்லை. ஜெ.எம்.என். மனம் நொந்து. போய் மதுரைத் தமிழ்ச்சங்கம் மூலம் ஒரு கலா சாலை திறக்க முயன்றார். அம்முயற்சி தோற்றுப்போக சென்னையிலேயே தாமே சில நண்பர்களுடன் கீழ்த்திசைக் கல்லூரி தொடங்க முனைந்தார். இதுவும் இயலாது போயிற்று. ஆனால் ஜெ.எம்.என். எண்ணத்தில் பழுதில்லை.

வட மொழியில் ஈடுபாடு : ஜெ.எம்.என். தமிழ்ப் பற்றாளராயிருந்தும் வடமொழி யை வெறுத்தாரில்லை. தமிழை ஜெ.எம். என் எந்த அளவு நேசித்தாரோ அந்த அளவு ஆகமங்களையும் நேசித்தார். வட மொழி யின்றேல் ஆகமங்களை அறிய முடியாது. ஆகமங்களையும் உபநிடதங்களையும் பரப்பவே சித்தாந்த தீபிகையில் அவற்றை மொழி பெயர்த்தார். ஜெ.எம். என்னின் ஸ்வேதஸ்வதார உபநிடத மொழி பெயர்ப்பு அவரது அற்புதப் பங்களிப்பு ஆகும்.

''ஆகமங்கள் அனைத்தும் வட மொழியே'' : வடமொழியை வெறுக்கும் தனித்தமிழ் அன்பர்கள் ஒருபுறம்: வட மொழி வெறியாளர் மறுபுறம். ஜெ.எம்.என். இருபிரிவிலும் சிக்காதவர். தமிழில் எல்லையற்ற ஈடுபாடு இருந் தாலும் வடமொழி இல்லாமல் சைவ சித்தாந்தத்தைப் பயில முடியாது என்ற கருத்துடையவர் ஜெ.எம்.என். சிவஞான போதம் தமிழ் முதல்நூல் என்ற பற்றாளர் களின் கருத்தை ஜெ.எம்.என். ஏற்க வில்லை. அவர் மேலும் கூறுகிறார்.

"All the terms and forms we use are derived from Sanskrit; and the bulk of literature in Tamil dwindles to insignificance when compared with the vast 'Agamanta' Literature in sanskrit. And our Tamil Acharyas were also great Sanskritists as our author himself was, who was called sakalagama pandita before he received his dikshanamam of Arulnandi Sivacharya from his Guru Meikandar. Our author states expressly in his introduction and in his verses 83 to 85 of the Eighth sutra how this precious religion and philosophy is based on the vedas and Agamas".

வடமொழி தீவிரதரத்தாரையும் மறுத்தல் : வடமொழியாளர் ருத்ர படலமும், கீதை காட்டும் விசுவரூப தரிசனமும் திராவிடப் பழங்குடி மக்களின் அசுரத்தனம் – காட்டு மிராண்டித்தனமான சடங்குகளின் வெளிப் பாடு என்ற கருத்துடையவர்கள். இக்கருத்தி னையும் ஜெ.எம்.என். வலுவான வாதங் களை முன் வைத்து மறுக்கிறார். ஜெ.எம்.என். தம்மனதிற்கு உண்மை யெனப்பட்டதை வெளிப்படுத்தத் தயங் காதவர். இதனால் அவருக்கு ஏற்பட்ட இழப்புகள் ஏராளம். ஜெ.எம்.என். இவற்றையெல்லாம் பொருட்படுத்திய தேயில்லை.

நட்பின் சங்கமம் : ஜெ.எம்.என் இப்படி அனைவருடனும் போராடுகின்றாரே. அவருக்கு நண்பர்களே இருக்கவில்லையா என்ற ஐயம் எழலாம். ஜெ.எம்.என்னுக்கு இருந்தது போல பிராமண, ஐரோப்பிய, பிற இன, பிற சமய நண்பர்கள் வேறு எந்த பொது வாழ்வில் ஈடுபட்ட பிராமணர் அல்லாத தமிழருக்கும் இருக்கவில்லை. ஏனென்றால் அவர் போரிட்டது கருத்துக ளுடன்: மனிதர்களுடன் அல்ல. அப்படிப் போரிடும் பொழுது அவர்க்கும் காக்கும் குணமே (Defensive) இருந்ததே ஒழிய தாக்கும் குணம் (Offensive) சிறிதளவும் இருந்ததில்லை. யாரையும் புண்படுத்தியது மில்லை; தரம் தாழ்ந்து வாதிட்டதும் இல்லை. அவர் சிங்கங்களுடன் தான் மோதினார். அதுவும் பாதையில் குறுக்கே வந்த சிங்கங்களையே. மற்றபடி அவர் அனைவரிடமும் அன்பும் மரியாதையும் காட்டினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாடலிலும் நாகரிகம் : திரு. வீ.வீ. ரமணசாஸ்திரி என்ற சைவ மேதை ஜெ.எம்.என்னின் அரிய கண்டுபிடிப்பு. திரு. என். சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் வழக்கறிஞர் பயிற்சி பெற்றார். இவரோடு ஜெ.எம்.என் இணைந்து திராவிட பாஷா சங்கத்தைத் தொடங்கி செயல்பட்டார். உ.வே. சாமிநாதையர், திவான் பகதூர், ரங்காசாரியார், டி. சதாசிவஐயர், சேஷகிரி ஐயர் ஆகியோருடன் ஜெ.எம்.என் பரஸ்பர அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். ஸ்ரீ சேஷகிரி சாஸ்திரிகளின் தமிழ்ப் பற்றைப் பெரிதும் பாராட்டி, அவர் வடமொழி ஓலைச்சுவடிகளைக் கண்டு பிடிக்கும் முயற்சிக்கு ஆதரவு கோரி ஜெ.எம்.என். தீபிகையில் எழுதினார். ஒருமுறை திருமலைக்கொழுந்துபிள்ளை என்பவர் ''மாணிக்கவாசகர் காலம்'' என்ற நூலில் சாஸ்திரிகளைச் சாடி எழுதி விட்டார். அந்நூலுக்கு மதிப்புரை எழுதிய ஜெ.எம்.என். ''சாஸ்திரி அவர்கள் கருத்தில் பிழை இருக்கலாம். ஆனால் அவரது நேர்மையைச் சந்தேகிப்பது தவறு. உழைப் பாலும், பொருளாலும் தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டு பெரிது'' என்று திரு மலைக் கொழுந்து பிள்ளையை மென்மை யாகக் கண்டித்தார். அன்னி பெசன்ட்டின் கொள்கையை ஜெ.எம்.என் ஏற்காவிட்டா லும் பெசன்ட் அம்மையார் அடைந்த தெய்வீக அனுபவங்களில் ஜெ.எம்.என். புளகம் அடைவார். பொது இடங்களில் பாராட்டத் தயங்கார்.

இயேசுபிரான் ஜீவன் முக்தர் : ஜெ.எம்.என். தீவிர சைவராகயிருந்தாலும், இயேசுபிரானைப் பெரிதும் போற்றுபவர். ஒருமுறை யாழ்ப்பாணம் திரு. எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலாக ''இயேசு பிரான் ஜீவன் முக்தரே! அவர் பின்பற்றியது யோக மார்க்கமே; கல்லறையிலிருந்து வெளி வந்ததே அதை நிரூபிக்கும்'' என்றார்.

சமூக நீதி : ஒரு முறை திருநெல்வேலி நாடார்களுக்குச் சமயத்தின் பெயரால் அவமானம் நிகழ்ந்தபொழுது – குளத்தில் தண்ணீர் எடுக்கத்தடை – ஜெ.எம்.என் இந்த அநீதியைக் கண்டித்து எழுதினார்.

சங்ககாலத்திய நட்பு வாழ்வு : ஜி. யூ. போப்புடன் ஜெ.எம்.என் கொண்டிருந்த நட்பு கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தை யார் நட்பு போன்றது. ஒருவரை ஒருவர் சந்தித்ததேயில்லை. கடிதத் தொடர்பு மட்டுமே பிணைத்தது. 1895-ஆம் ஆண்டில் தொடங்கிய கடிதத் தொடர்பு போப் மறைவு வரை நீடித்தது. போப்பின் மொழிபெயர்ப்புகள் தீபிகையில் வரலாயின. போப்பின் திருவாசக மொழி பெயர்ப்பு வெளிவந்ததும் பெரிதும் போற்றி வரவேற்று அனைவரையும் வாங்கச் சொல்லியும், செல்வர்களைப் பொருள் கொடுக்கச் சொல்லியும் வேண்டு கோள் விடுத்தார். அதோடு நிற்காமல் தாமும் ஆயிரம் ரூபாய் தந்து நூறு புத்தகங்கள் வாங்கினார். இவ்வாறு போப்பின் காரியம் யாவினுக்கும் கை கொடுத்தார் ஜெ.எம்.என்.

அன்பே சிவம் : ஜெ.எம்.என். கலந்துரை யாடல்களைப் பயனுள்ளதாக – மோதலாக இல்லாமல் – ஆக்கிக் கொண்டார். இவற் றுள் இரண்டு கலந்துரையாடல்கள் முக்கிய மானவை ஆகும். புகழ்பெற்ற கிறித்துவப் பாதிரியார் ஒருவருடன் கடவுள், ஆன்மா, விடுதலை பற்றியெல்லாம் ஜெ.எம்.என். பேசிக் கொண்டிருந்தார். ''அன்பே சிவம்'' என்ற அற்புதமான தலைப்பில் ஜெ.எம். என் பாதிரியாரை மென்மையாகச் சாடித்தன் கருத்துகளால் ஈர்த்து அமுத மழையே பொழிந்தார்.

வேதாந்த சிங்கமும் சித்தாந்த தீபமும் : இரண்டாவது சந்திப்பு சுவாமி விவே கானந்தருடன் நிகழ்ந்தது. விவேகானந்தர் சிகாகோ சமயப் பேரவையில் முழங்கித் தாயகம் திரும்பிய நேரம். சென்னையில் மாபெரும் வரவேற்புக்கூட்டம், அக் கூட்டத்தில் உரையாற்ற ஜெ.எம். என்னும் அழைக்கப்பட்டார். ஜெ.எம்.என் தமது உரையில் ஞானசம்பந்தப் பெருமானைப் பற்றியும் சைவசித்தாந்தம் பற்றியும் குறிப்பிட்டார். அவரது பேச்சினைக் கேட்டு வியந்த சுவாமி விவேகானந்தர் ஜெ.எம். என்னை மைலாப்பூரில் தம் இருப்பிடத் துக்கு அழைத்தார். இந்தச் சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் நிகழ்ந்தது. சுவாமிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சம்பந்தரின் வரலாறு கேட்டு மகிழ்ச்சியால் வியந்தார். சைவசித்தாந்தத்தின் மூலக் கருத்தான பசு,பதி,பாசம் (உயிர், இறைவன், தளை) என்ற முப்பொருள் பற்றித் திரும்பியது. பிரபஞ்சத்தில் காணப்படுவனவும், காணப்படாதனவும் இம்மூன்றில் அடங்கும் என்றார் ஜெ.எம்.என். வேதாந்தத்தைப் பொருத்த வரையில் கடவுள் மட்டுமே உள்பொருள். மற்றவை எல்லாம் மாயை. இங்குதான் வேதாந்தமும், சித்தாந்தமும் முற்றிலும் வேறுபடுகின்றது. ''வேதாந்தம் கூறும் மாயை என்பது இல்லாத ஒன்று இருப்பது போன்ற பிரமையாகும். மாயை இல்லாத ஒன்று. மறுப்புக் கொள்கை. சைவசித்தாந்த மாயை உள்பொருள்; அது நித்யத்துவம் உடையது; அழியாது, உயிரும் தனித்து இருப்பது; அழியாது. கடவுளும் தனித்த பொருள்; கடவுள் உயிர்களோடும், பிரபஞ்சத்தோடும் ஒன்றாக இருப்பது'' என்று ஜெ.எம்.என் விளக்கினார். இந்த விளக்கம் சுவாமி விவேகானந்தருக்குப் புதிய ஒன்று. ஆனால் இக்கோட்பாடு தருக்கரீதியாகவும், முழுமையாகவும் இருப்பதை உணர்ந்தார்.

விவேகாணந்தர் : இறை, உயிர், உலகம் முப்பொருள்களோடு, பிரபஞ்சத்தின் கூறுகளாக இன்னும் சில பொருள்களைச் சேர்த்திருந்தால் பிரபஞ்ச ரகசியம் பற்றித் தெளிவு கிடைத்துவிடுமே?

ஜெ.எம்.என் : சைவ சித்தாந்திகள் தங்கள் அருள் அனுபவத்தால் மூன்று பொருள்களே உள் பொருள்கள் என்று தெளிவாக வரையறைப் படுத்தியுள்ளனர். இறைவன் தூய அறிவினன். பூரண அறிவினன்; ஆன்மாக்களுக்கு அறிவு ஊட்டுபவன்; நிலைபெற்று இருப்பவன்; எல்லாப் பொருள்களும் நிலைபெற்று இருக்கத்துணை நிற்பவன்; ஒளிவடிவான வன்; அன்பு மயமானவன்; உயிர் அறிவு டையது. ஆனால் இறைவனின் உதவி இல்லாமல் எப்பொருளையும் பார்க்கவோ அறியவோ உயிரால் முடியாது. உலகம் ஜடப்பொருள்; அறிவற்றது, உயிர் அறிவுள்ளதாயினும் மறைப்பில் (இருளில்) மூழ்கியிருக்கிறது. அம்மறைப்பு இறைவன் அருளால் நீங்கினால் உயிர் அறிவு விளக்கம் பெறுகிறது. உலகம் உயிரையும் அறியாது; இறைவனையும் அறியாது.

முன்பே தெரியாமல் போய்விட்டதே : இந்த மூன்றிலுமே எல்லாம் அடங்கி விடுகின்றன. இம் முப்பொருள்களைத் தாண்டி நான்காவது பொருள் ஒன்று கொண்டுவர முடியாது. ''சுவாமிஜி அவர் களோ அன்றிப்பிற அருளாளர்களோ அப்படி ஒரு நான்காவது பொருளைச் சேர்க்க வழிகாட்டினால் பெரிதும் மகிழ் வோம்'' என்று ஜெ. எம்.என். முடித்தார். சுவாமி விவேகானந்தர் தம்மால் நான்கா வது பொருளாக ஒன்றினைச் சொல்ல இயலவில்லை என்று பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டார். ''இந்த உயரிய கோட்பாடு முன்பே தெரியாது போய் விட்டதே'' என்று வருந்தினார். பிரபஞ்சத் தோற்றம், படைப்பின் காரணம் பற்றி யெல்லாம் சைவசித்தாந்தம் கூறுவதைச் சுவாமிகள் ஜெ.எம்.என்னிடம் கேட்ட பிறகு, சுவாமிகள் ஜெ.எம்.என்னுக்கு நன்றி தெரிவித்துவிட்டு விடைகொடுத்தார். ஒல்லும் வகையெல்லாம் சைவ சமய வினையாற்றிய ஒப்பற்ற உத்தமர் ஜெ.எம்.என். அல்லவா?

. ஜெ.எம்.என் என்ற ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை *24.11.1864*-ஆம் ஆண்டில் திருச்சி ராப்பள்ளியில் வேளாளர் குடியில் மாணிக்கம்பிள்ளை என்பாருக்கு மூன்றா வது மகனாகப் பிறந்தார். திருச்சியில் பள்ளிப்படிப்பை முடித்த ஜெ.எம்.என். சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து *1884*-ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டமும், *1886*-ஆம் ஆண்டில் பி.எல். பட்டமும் பெற்றார். *1887*-ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டு, மதுரையில் வழக்கறிஞர் தொழில் புரிந்தார்.

உயர் அதிகாரிக்கு அஞ்சாத வீரம் : ஆறு ஆண்டுகள், கழிந்தபின்னர் மாவட்ட முன்சீபாகத் தேர்வு செய்யப்பட்டுத் திருப் பத்தூர் மாவட்ட முன்சீப்பாகப் பதவி யேற்றார். தம் தொழிலில் ஜெ.எம்.என். நேர்மையாக இருந்தார். அதனால் யாருக்கும் அஞ்சாது இருந்தார். கடலூரில் ஒரு சமயம் வழக்கு விசாரணைக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐரோப்பிய மாவட்ட நீதிபதி வந்து விட்டத னால் கோர்ட்டில் ஏகப்பரபரப்பு, பெஞ்ச் கிளார்க் பலமுறை ஜெ.எம்.என்னிடம் நீதிபதி வருகையைப் பற்றிச் சொன்னார். ஜெ.எம்.என் பொருட்படுத்தவில்லை. ஒவ்வொரு வழக்காக எடுத்து, உரிய நேரம் வந்த பொழுது நீதிபதியின் வழக்கை எடுத்தார். நீதிபதி வெகுநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. நீதிபதியாயிற்றே – தம்மைவிடப் பதவியில் உயர்ந்தவ ராயிற்றே என்றெல்லாம் ஜெ.எம்.என் பார்க்கவில்லை. ஆனால் அவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை கொடுத்தார்.

ஜெ.எம்.என். வழக்குகளை உடனுக் குடன் முடித்து தீர்ப்பு வழங்கினார். வழக்கு கள் தங்குவதும் இல்லை; தேங்குவதும் இல்லை. அவருடைய தீர்ப்புகள் சட்டப் புலமைக்கும், சுருக்கத்திற்கும் எடுத்துக் காட்டுகள் ஆகும். அவரது முடிவுகள் மேல் முறையீடுகளில் மாற்றப்பட்டதேயில்லை. நின்று நிலைத்த முடிவுகள்.

பொறாமை கொண்ட சிலரால் அவர் மேல் விசாரணை செய்யப்பட்டது. இதன் விளைவால் பதவி நீக்கம் செய்யப்பட்டார், மீண்டும் வழக்கறிஞர் தொழிலையே மேற்கொண்டு மதுரையில் பணியாற்றி னார்.

1884-ஆம் ஆண்டில் திருச்சியில் ஜெ.எம். என். லக்ஷிமியம்மாளை மணந்தார். இவருக்கு இராமநாதன் என்ற மகனும், மூன்று மகள்களும் பிறந்தனர்.

ஜெ.எம்.என்னின் முடிவு பிளவை என்ற நோய் வடிவில் வந்தது. உடல் வேதனை யைக் காட்டவேயில்லை. மகிழ்ச்சியுட னும், மலர்ந்த முகத்துடனுமே இருந்தார். திருநீறு பூசச் சொன்னார். சூடம் ஏற்றச் சொன்னார். ஒளி தெரிந்தது. உயிர் அடங்கியது. மதுரையில் 11.8.1920 அன்று பிற்பகல் மூன்று மணிக்கு நல்லசாமி பிள்ளை சிவத்துடன் கலந்தார்.

துணை நூல்கள் : "Life and history of J.M. Nallaswamy Pillai" K-M Balasubramanian; "Siddhanta Deepika" - Back issues.

18
மெய்கண்ட சாத்திரம் பதினான்கையும் ஒரே தொகுதியாகக் கொண்டு வந்தவர் (1865)

மெய்கண்ட சாத்திரம் பதினான்கி னையும் உரையுடன் ஒரே தொகுதியாகக் கொண்டு வந்தவர் காஞ்சி நாகலிங்க முனிவர் ஆவார். சிவஞான போதச் சிற்றுரையை அழகிய பதிப்பாக வெளி யிட்டார். திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் என்னும் நூல்களைத் தனியாகவும் வெளியிட்டார். தாயுமானவர் பாடல், பன்னிருதிருமுறை, காஞ்சிப் புராணம் ஆகிய நூல்களையும் அச்சிட்டு வெளி யாக்கினார். திருவாமாத்தூர் வண்ணங்கள், திரு எறும்பியூர்ப் புராணம் முதலியன முனிவரால் இயற்றப்பெற்ற நூல்கள் ஆகும்.

நூல்கள் வெளியிடுவதோடு நிறுத்தி விடாமல் பிறவாற்றானும் முனிவர் சமயப் பணிகள் செய்து வந்தார். சென்னை அருணாசலேசுவரர் திருக்கோயிலில் நடை பெற்றுவந்த மெய்கண்ட சந்தான சபையின் சார்பில் தேவராப்பாடசாலை நடத்தி மெய்கண்டான் கல்லூரி என்று ஒரு கல்லூரி தொடங்கிச் சைவசித்தாந்த நூல்களைக் கற்பித்தார்.

(தோற்றம் 1865; மறைவு – 1950 பிறந்த ஊர் – ஏகனாம்பேட்டை, காஞ்சிபுரம்)

19
அற்புதங்கள் விளைத்த ஞான சித்தர் (1867)

தோற்றம் முதல் வாழ்நாள் முழுமையும் ஞானசித்தர் விளைத்தது அற்புதங்களே. ஞான சித்தர் பிறந்த பொழுதே பல பெரியவர்கள் வந்து தரிசித்துவிட்டு ''இவர் சித்தரே'' என்று வணங்கி வழிபட்டுச் சென்றனர். இவரது மூன்றாம் வயதிலே பாம்பு ஒன்று மூன்று முறை முத்தமிட்டுச் சென்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞான சித்தர் சிலகாலம் திருக்குற்றாலத்திலே தவங்கிடந்தார். திருவானைக்காவில் பச்சைமலைக் குருநாதன் என்பார் சித்தர்க்கு அருள் புரிந்தார்.

சாத்திபுரம் என்ற ஊரில் சுதர்சனம் ஐயர் என்பவருடைய குழந்தை பாம்பு கடிக்கப் பட்டு இறந்து விட்டது. குழந்தையைச் சித்தர் முன் கொண்டு வந்தனர்.

''நச்சராவிடம் நாசமாகிட நன்கருள்
புவனாம்பிகை
இச்சுதன் எழுந்து உலவிடும்படியே
நடப்பதும் உண்மையேல்
பச்சைமாமலைப் பண்ணவன் பரிவோடு
எமக்கருள் பான்மையின்
நிச்சயந்தனை உலகெலாம் கண்டு
நினைப்பதற்கு ஐயம் இல்லையே!''

என்று ஞான சித்தர் பாடி அருளினார். குழந்தை உயிர்பெற்று எழுந்தது.

சுருளிமலையில் இருந்த கருணாநந்தர் என்பவர் சித்தருடைய உடலொளியைக் கண்டு வியந்து ''இவ்வாறு ஒளியுண்டாவதற்குக் காரணம் யாது?'' என்று சித்தர் கேட்டார். அதற்குச் சித்தர்,

''திங்கள் சூடியின் திருவருளைத்தினம்
துதிப்போம்
மங்கைமார்களைத் தாயென மனதிடை
மதிப்போம்
கங்கையாடி நற்காலையில் நூலகம்
பதிப்போம்
பங்கம் ஏது எமக்கு ஆதலால் உடல்
பளபளப்பே''

சுருளிமலை அடிவாரத்தில் சித்தர் வேள்விச்சாலை பணிகள் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு புலி ஒன்று தோன்றியது. அங்கிருந்தோர் மூலைக்கொருவராய் ஓட்டம் பிடித்தனர். சித்தர் நகரவில்லை. காலையில் திரும்பி வந்தனர். புலி இறந்து கிடந்தது.

சுப்பிரமணியபிள்ளை என்பார் பொறாமையினால் ஞான சித்தருக்கு வைரத்தைப் பொடி செய்து பாலிற் கலந்து கொடுத்து விட்டார். அருகில் இருந்தவர்கள் செய்தியறிந்து வருந்தினர், சித்தரோ,

''அன்றுவிடம் தன்னையருந்தி
அகிலமெல்லாம்
ஓங்கவைத்த அரசே! நாயேற்கு
இன்று வைரத்தை இட்டான்
என்செய்வேன்
முன்னாளில் இயற்றும் கர்மம்
ஒன்றன்றி எது முடியாது எனத்
தெளிவேன்
ஆயினும் என்னுடையாய் சின்னாள்
சென்று உடலம் விழப்பெறில் தேசிகன்
சொல் சித்தர்
ஆலயமும் செய்விப்பேனே''

என்று கூறிவிட்டு எந்தவிதத் துன்பமும் இல்லாது இருந்தார்.

பின்னர் பல ஊர்கட்கும் சென்று அருள் பாலித்து வந்தார். இளம் பள்ளிநகர் என்னும் ஊரில் இருந்த தொழுநோயாளி ஒருவனுக்கு மருந்து கொடுத்து நோய் தீர்த்தார்.

சித்தர் ஆறாவது வேள்வி செய்யும் பொழுது பெருமழை பெய்யத் தொடங்கியது. ''அம்பிகையே! மெத்தவடர் சத்த மேகத்தைத் தடுத்து எனது யாகத்தை இத்ததி இயற்றி வைப்பாய்'' எனப் பாடியருள மழை நின்றது.

திருச்செங்கோட்டில் காலரா நோய் பரவியிருந்தது.

''திருச்செங்கோட்டத்தா திகழ்நங்கை
பாகத்து
இருக்க வைத்தே அருளும் ஈசா –
கடுப்பால்
கலங்குகிறார் மாந்தர் கழிவிடநோய்
தீர்த்து
நலங்கிரைச் செய்வாய் இந்நாள்''

என்று பாடினார். நோய் அகன்றது.

குமாரமங்கலத்தில் ஒரு பதிகம் பாடினார். உடனே மழை பெய்தது. பின்னர் அவிநாசி, காங்கேயம், சிவன்மலை முதலிய பதிகட்குச் சென்று பதிகம் பாடினார். சென்னையில் தங்கி சுற்றுப்புறத்து உள்ள தலங்களுக்கெல்லாம் சென்று பதிகங்கள் பாடினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவர் பெருமையை விளக்கும் வண்ணம் திருவாரூர் சின்னசாமிபிள்ளை என்பார் ''ஞானசித்த புராணம்'' என்னும் பெயரில் புராணம் ஒன்று பாடினார்.

''ஞான சித்த மூர்த்திகள் இந்நாட்டினிடை
கூடியதால்
ஈனசித்தர் நாசமுறல் என்றென்று –
மானசித்தம்
உள்ள தொண்டர் எல்லாம் ஒருங்கு
துதித்து ஏத்துகின்றார்
வள்ளல் அருள் மாட்சி மதித்து''

என வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இவர்மேல் பல பாக்கள் பாடியுள்ளார்.

ஆற்றூரில் மழையில்லாமல் ஊர் காய்ந்து வாடிக் கொண்டிருந்தது. ஞான சித்தர் வயிரவமூர்த்தி முன்னேபோய்,

''மலர்மகனைக் கொய்ததுவும்
மன்மதனை முன்னாள்
சிலைநுதலால் வாட்டியதும் செப்ப –
உலகமதில்
சத்தியமே ஆனக்கல் தப்பாது
இவ்வாறைநகர்க்கு
இத்தினத்தில் வான் பொழியவே''

என்று பாடியருளினார்.

மழை பொழிந்து வெள்ளம் பெருகிறது.

ஞான சித்தர் 108 பதிகங்கள் பாடியருளியிருக்கிறார். இவர் மேல் 66 அறிஞர்கள் நூல்களாகப் பாடியிருக்கின்றனர் என்றால் இவரின் பெருமையை என்னென்பது?

(தோற்றம் – 1867; பெற்றோர் –முத்துசாமியாபிள்ளை – சிதம்பர வடிவம்மையார்; பிறந்த ஊர் – ஆழ்வார் திருநகரி, நெல்லை மாவட்டம்

துணை நூல் : தமிழ்ப்புலவர் வரிசை – பத்தொன்பதாம் புத்தகம்.)

20
மேனாட்டு சாத்திரங்களைத் தமிழிலும் தமிழ் நாட்டுச் சாத்திரங்களை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தவர் (1867)

மறைவாகப் பழங்கதைகள் நமக்குள்ளே பேசிப் பயனில்லை. மேனாட்டு அறிஞர்கள் அறிந்திட நம் சாத்திரங்கள் மொழி பெயர்த்திடல் வேண்டும். அப்பொழுது தான் கருத்துப் பரிமாற்றம் இருக்கும். மாறுபட்ட கருத்துகளும் தெரிந்தால்தான் புதிய ஒளி கிடைக்கும்.

இந்தப் பணியைச் செய்தவர் கோபால செட்டியார் அவர்கள் ஆவார். ஸ்வீடன் நாட்டில் 17-ஆம் நூற்றாண்டில் பிறந்த ஸ்வீடன்பர்க் என்ற ஞானியின் தத்துவக் கருத்துக்களோடு சைவ சித்தாந்தம் எவ்வாறு ஒத்துப்போகிறது என ஒப்புமை காட்டிச் செட்டியார் அவர்கள் பல நூல்கள் எழுதியுள்ளார். இந்த அடிப்படையில் ''முப்பொருள் உறவு'' ''ஸ்வீடன்பர்க்கும் சைவ சித்தாந்தமும்'' ஆகிய நூல்கள் முக்கியமானவை ஆகும். கோபால் செட்டியார் ஸ்வீடன்பர்க்கின் ஐந்து நூல்களை மொழிபெயர்த்துள்ளார்.

சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் ''இந்திய தத்துவப் புத்தொளி'' என்ற ஆங்கில நூலை இவரது ஆங்கிலேய நண்பர்கள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வெளியிட்டனர்.

இதுவல்லாமல் சிதம்பர ரகசியம், உலக உற்பத்தி, ''புராதன பிரிட்டிஷ் மக்களுடைய சமயம் எது?'' போன்ற ஆங்கில நூல்களும், பதி, பசு, பாச விளக்கம் என்ற தமிழ் நூலும் வெளியிடப்பட்டுள்ளன.

இவர் 28.12.1953-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

(தோற்றம் – 1867; மறைவு – 1953; பிறந்த ஊர் – தர்மபுரி)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துணை இதழ்கள் : ''சித்தாந்தம்'' 1968 ஜனவரி; ''தினமணி'' 1996 ஜூன்.

21
திருப்புகழைப் பரப்பிய திருவுடையோர் (1870)

பழனியம்பதி; உருத்திரகணிகை ஒருத்தி ''வங்காரமார்பிலணி'' என்ற திருப்புகழைப் பாடிக் கொண்டிருந்தாள். எதிரே படிப்பறிவேயில்லாத பாமரன் ஒருவன்(ர்) தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்தான்(ர்), ''சிங்கார ரூபமயில் வாகன'' என்ற அடியை மெய்யுருகப் பாடினாள். பாமரன்(ர்) கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர் பெருகி ஓடியது. அந்தப் பெண்ணை நோக்கி''இது என்ன பாடல்'' என்று கேட்டார். அவள் ''திருப்புகழ்'' என்றாள். உடனே திருப்புகழைப் படிக்க ஆர்வம் மீதூர்ந்தது. தெரிந்தும் பயன் இல்லை. அவருக்குத்தான் படிக்கத் தெரியாதே! திருப்புகழ் மேல் இருந்த பக்தியினால் எழுத்துக்கூட்டிப் படிக்கக் கற்றுக் கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது நாற்பது. அதற்குப் பிறகு இசையோடு பாடவும் வல்லவரானார். அவர்தான் வள்ளி மலைச் சுவாமிகள் என்றழைக்கப்பட்ட அர்த்தநாரி.

அன்றிலிருந்து சுவாமிகள் ஊர்ஊராகச் சென்றார்கள். தமது சமையல் தொழிலைச் செய்து பொருளீட்டுவது; எஞ்சிய நேரத்தில் திருப்புகழ் பாடுவது இதுவே அவரது வழக்கமாயிற்று.

சுவாமிகள் ரமணபகவானைத் தரிசித்து அங்கேயே சிலகாலம் இருந்தார்கள். ஒரு நாள் இரமண முனிவர் ''கிழே போங்கள்'' என்றார். கிழே சேஷாத்திரி சுவாமிகள் சேற்றில் புரண்டு கொண்டிருந்த எருமையை அணைத்து அளவளாவியபடி, விளையாடிக் கொண்டிருந்தார். சேஷாத்திரி சுவாமிகள் ''வள்ளிமலைக்குப்போ'' என்றார்கள்.

குருநாதர் ஆணையை மேற்கொண்டு சுவாமிகள் வள்ளிமலை சென்று அங்கே குகை ஒன்று அமைத்து தினமும் திருப்புகழ் பாராயணம் செய்யலானார்.

சுவாமிகள் திருப்புகழை இசையுடன் பாடுவதுடன் விளக்கமும் சொல்லலானார்கள். சென்னையில் பன்னிரண்டு திருப்புகழ்ச் சபைகளை நிறுவினார்கள். அருணகிரியார் பாடல்களைப் பாராயணத்துக்கேற்றவாறு தொகுத்து ''தவநெறித்திருமுறை'' என்ற நூலை வெளியிட்டார். 1918-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல்தேதி ஆறு பக்தர்களுடன் திருத்தணியில் திருப்புகழ் பாடிக் கொண்டே படிகளில் ஏறி தரிசனம் செய்தார். அதுவே முதல் படித்திருவிழா. இது இன்று லட்சக் கணக்கான மக்கள் கூடும் பெருவிழாவாக ஆகிவிட்டது.

22.11.1950 அன்று சுவாமிகள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்கள் (1870 – 1950; பிறந்த ஊர் – திருச்செங்கோடு)

22
பேச்சால், பண்பால் தமிழகத்தைக் கட்டிப்போட்ட சைவ மடத்துத்தலைவர் (1873)

அந்தப் பெரியவர்கள் பேச ஆரம்பித்தால் மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல மக்கள் தங்களை மறந்து கேட்பர். அவர்களது பேச்சில் இனிமை இருக்கும்; எளிமை இருக்கும்; சிங்கம் போலக்குரல்; இசையும், நடுநடுவே நகைச்சுவையும் கலந்து வரும். கற்றறியாத மக்களையும் கட்டிப்போட இவை போதாதா? ஆனால் பேச எடுத்துக்கொண்ட தலைப்பினை விட்டுச் சிறிதும் விலக மாட்டார்கள். அரிய தத்துவக் கருத்துக்களை அழகாக விளக்குவார்கள். கற்றவர்களும் மகிழ்ந்து கேட்டனர். காலம் அவர்களுக்குப் பொருட்டே யல்ல. சிலசமயம் ஆறுமணி நேரம் கூட விடாது பேசுவார்கள். நடுவிலே எதுவுமே பருகுவதில்லை. தனது தள்ளாத வயதிலும் விடாது பேசினார்கள். அவர்களே ஞானியார் சுவாமிகள். திரு.வி.க. போன்ற அறிஞர்களே இவர்கள் பேச்சில் மயங்கியிருக்கிறார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''ஞானியார் சுவாமிகள் பேச்சைக் கேட்ட பின்னர்த் தமிழ்நாட்டில் மற்று மொரு நாவலர் இருத்தலைக் கண்டேன். தமிழ் நாட்டிலும் கிளாட்ஸன்கள் சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று என் நெஞ்சம் எண்ணியது''.

''சுவாமிகளின் பேச்சுத்திறனை எதற்கு ஒப்பிடுவது – கடல்மடைத் திறப்புக்கா? – வெண்கலக் கோட்டையில் அரசுவா புகுதலுக்கா? பெரும் புயலுக்கா? – ஓயாத மழைக்கா? எதற்கு – எதற்கு ஒப்பிடுவது'' திரு.வி.க.

தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சுவாமிகள் பேசினார்கள். சில ஊர்களில் 10 நாள் என்று அழைப்பார்கள். சுவாமிகள் பேச ஆரம்பித்ததும் 2 மாதம், 3 மாதம் என்று தங்கச் சொல்லி விடுவார்கள். சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்று சுவாமிகள் பல அன்பர்களைத் தூண்டி சமயமன்றங்கள் நிறுவச்செய்தார்கள். அவர்கள் அருளாட்சி செய்த திரு மடத்திலேயே ''வாணி விலாச சபை'' என்ற அமைப்பை நிறுவினார்கள். இன்று சைவ சித்தாந்தப் பெருமன்றம் என்றழைக்கப்படும் சைவ சித்தாந்த சமாஜம் தொடங்கப்பெறச் சுவாமிகளும் காரணம் ஆனார்கள். ஆரம்பத்தில் இவ்வமைப்பு திருமடத்திலேயே நடை பெற்றது. 1929-ஆம் ஆண்டில் திருமடத்தில் சைவப் பெரியார் மாநாடு நடத்தினார்கள். சைவ மன்றங்கள் பலவும் கலந்து கொண்டன.

சுவாமிகள் பாடம் நடத்துவதும் தனிச் சிறப்பாக இருக்கும். தினமும் காலை 7.00 மணி தொடங்கிப் பிற்பகல் ஒரு மணி வரை பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துவார்கள். கிறித்துவத் துறவுக்கன்னியரும் (Nuns) இலக்கணம் கேட்க வருவார்கள். மாலையில் பெரியவர்கள் வந்து பாடம் கேட்பார்கள்.

சுவாமிகள் பாடம் கற்பிக்கும் பொழுது பிள்ளைகளுக்கு ஏற்றவகையில் எளிய முறையில் விளக்குவார்கள். நடைமுறை யில் உள்ளவற்றை விளக்குவார்கள். முருகனுக்கு ஆறுமுகம் என்பார்கள். உடனே தம் முன்னால் இருக்கும் பெட்டி யைக் காட்டி ''இதற்கு எத்தனைப் பக்கங்கள்'' என்பார்கள். ''ஆறு பக்கங்கள்'' என்று அவர்களே சொல்லி விடுவார்கள். சொன்னவற்றை இரண்டாவது முறை தொகுத்துக் கூறுவார். புரியாதவர்களுக்கும் புரிந்து விடும். செய்யுளைப் பாடிக்காட்டு வார். மீண்டும் பாடும்போது பதப்பிரிவு தோன்றுமாறு பாடுவார். தக்க இடத்தில் நிறுத்தி, குரல்வளம் சேர்த்தும் கூட்டியும் சொல்லும் வகையிலேயே பெருமளவு விளங்குமாறு செய்து விடுவார். பிறகு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, மேற்கோள் முதலியன முறைபடக் கூறுவார். சொல்வைப்புமுறை, சொல் நயம், சொல்லின் பொருள், நயம் முதலிய வற்றை விளக்குவார். இலக்கண அமைப் பையும் அதன் சிறப்பையும் மனத்தில் பதியும்படி எடுத்துரைப்பார். இவ்வாறு சுவாமிகள் ''ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராகத்'' திகழ்ந்தார்.

திருமடத்துத் தலைவராக இருந்த போதும் ஆதீனத்திற்கு வருபவர் களை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எல்லாம் சிறப்பாக வரவேற்பார்; நல்ல விருந்து படைப்பார்; தாமே எதிரில் இருந்து கவனிப்பார்.

திரு.வி.க. அவர்களே தனது இளமைக் காலம் முதல் சுவாமிகளின் திருவடிகளில் வணங்கி வந்தார். பகுத்தறிவுத் தலைவ ரான பெரியார் அவர்களே ஒரு சமயம் சுவாமிகளின் திருவடிகளில் விழுந்து வணங்கியுள்ளார். பகுத்தறிவுப் பாசறை யில் ஒரே பரபரப்பு. ''சாமியார் காலில் பெரியார் விழுவதா?'' என்று குமுறல். பெரியார் அவர்களுக்குப் பதிலாக ''அப்பா அவர்கள் நம் நிகழ்ச்சிக்கு விருந்தினராக வந்திருந்தார்கள். ஆதீனங்களுக்கு என்று ஒரு மரபுள்ளது. மேலும் சைவ சாமியார் ஒருவர் இவ்வளவு புகழ் அடைந்துள்ளார். அதை நாம் மதிக்கலைனா யார் மதிப் பார்கள்'' என்றார்.

சுவாமிகளின் தோற்றப் பொலிவினைப் பற்றி திரு.வி.க. இவ்வாறு எழுதுகிறார். ''முருகன் சேவடிவருடி உருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசிஇனிக்கும் நன்னாவும், நன்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறு துதையும் நெற்றி யும், மாணிக்கக்குழை பிறங்கும் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக் கதிர் விரிக்கும் திருமேனியும், சண்முகா! சண்முகா என்று (திரு) நீறளிக்கும் நீண்டகையும் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு என்னுள்ளத்தில் ஓவியமெனப்படிந்து நிற்கிறது. அஃது எவர் உள்ளத்தையும் கவரும்; எவர்க்கும் எளிதில் இன்ப மூட்டும்''.

சுவாமிகள் 17.5.1873 திருநாகேச்சுரத்தில் அண்ணாமலை - பார்வதி அம்மை யாருக்குப் பிறந்தார். இளமைப் பெயர் பழநி என்பதாகும். திருப்பாதிரிப்புலியூர் மடத்தில் 1889-ஆம் ஆண்டில் ஐந்தாவது பட்டமாகத் தலைமைப் பொறுப்பு ஏற்றார்கள். 1.2.1942-அன்று பழநியிலிருந்து கிளம்பி வருமுன் வழியில் இறையடி சேர்ந்தார்கள்.

(துணை நூல்கள், இதழ்கள் : ''சித்தாந் தம்'' மே 1973; திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்''; ஞானியார் அடிகள் - வெள்ளையாம்பட்டு சுந்தரம் 1982)

23
சைவநெறி இயக்கத்தின் தனிப்பெருந்தலைவர் (1876)

மறைமலையடிகள் இருபதாம் நூற்றாண்டில் சைவ நெறி இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர் ஆவார். அதற்கான விதை அவர் பிறப்பிலேயே ஊன்றப் பட்டுவிட்டது. அவர்தம் அன்னையாருக்கு நாற்பது வயது வரை வயிறு வாய்க்காமல் இருந்து திருக்கழுக்குன்றத்தில் நாற்பது நாள்கள் நோன்பு கிடந்து தவமிருந்து தோன்றிய மாமணி. இளவயதிலேயே மாணவர்களுக்குச் சமய அறிவு ஊட்ட நாகையில் இந்து மதாபிமான சங்கம் தோற்றுவித்தார். தமது பதினைந்தாம் ஆண்டில் துவங்கிய தமிழ்ப்பயிற்சி யானது இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல் காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், நன்னூல் விருத்தி, இறையனார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகப்பொருள் உரை, தண்டி யலங்காரம் முதலான நூல்களை நெட்டுருச் செய்து முடித்தார். கல்லாடம், சிந்தாமணி, பெரியபுராணம் என்னும் நூல்களின் சுவைகளில் மூழ்கித் திளைத்தார். இள வயதிலேயே நாகை–நீலலோசனி, பாஸ்கர ஞானோதயம், திராவிட மந்திரி ஆகிய இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்.

1898-ஆம் ஆண்டில் சென்னை கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து பதின் மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணி யாற்றினார். அங்கு அவர் சோமசுந்தர நாயகரைச் சந்தித்து அவரைத் தம் குரு வாகக் கொண்டார். தம் காலம் முழுமை யும் சிவப்பணிக்கே என்று ஒதுக்கித் தம் வேலையையும் ஒதுக்கிப் பணியாற்றினார்.

1902-ஆம் ஆண்டில் ஞானசாகரம் என்ற இதழ் தொடங்கிச் சைவ சமயக் கட்டுரைகள் எழுதிவந்தார். 1905-ஆம் ஆண்டில் சைவசித்தாந்த சமாஜம் தொடக்க காலச் செயலராகப் பணியாற்றினார். ஏழு குழந்தைகளுடன் இல்லற வாழ்வு செம்மையாக இருந்தும் 1911-ஆம் ஆண்டில் துறவு பூண்டார். 1911, 1913-ஆம் ஆண்டு களில் தமிழகம், வடநாடு, இலங்கை ஆகிய பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து பல இடங்களில் சமயச் சொற்பொழிவுகள் செய்தார். அவருடைய சொற்பொழிவு ஓசை நலமும், சொல்நலமும் பொருந்தி யது.

ஐம்பத்து நான்கு நூல்களுக்குமேல் எழுதியுள்ளார். அவற்றில் பதினெட்டுக்கு மேற்பட்ட நூல்கள் சைவ சமய நூல்கள் ஆகும். ஏனைய நூல்கள் சங்க இலக்கியம், நாடகம், நாவல், வரலாறு எனப் பலதிறப் பட்டதாகும். நாவல், நாடகம் இவற்றிலும் வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் சைவசமயக் கருத்துக்களைத் தூவி வைத் திருப்பார். ''பௌராணிக நெறிச் சூழல்களி லும், சமயத்தத்துவ வாதப் பூசல்களிலும், சாதிகுலச்சழக்குகளிலும் தடுமாறிவந்த சைவ சித்தாந்த தத்துவக் கொள்கையை அறிவியல் நெறியின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கிப் பரப்புவதற்கு முனைந்தவர் அடிகளாரேயாவார்'' என்பார் ந.ரா. முருகவேள்.

அடிகளார் மும்மொழியிலும் புலமை பெற்றவர். வடமொழியில் உள்ள வேதம், உபநிடதம், இதிகாசம், புராணம் ஆகிய வற்றை முறையாகக் கற்றவர். இதனால் ஆரியர்களின் நாகரிகம் தாழ்ச்சி என்றும், சிவநெறி தமிழருடையது என்றும் அடிகளா ரால் வலுவாக நிலைநாட்ட முடிந்தது. ஆங்கிலப் புலமையினால் தம் நூல்களில் முன்னுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார். இதனால் சைவ சமயம் பற்றி வெளி நாட்டார் அறிய நேர்ந்தது. அடிகளார்போல சைவ உலகில் மும்மொழிப்புலமை பெற்றவர்கள் வெகு சிலரே எனலாம். இவ்வாறு மும்மொழிப்புலமை பெற்றவர் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையாக இருந்தது பெரும் சிறப்பு ஆகும்.

அடிகளார் பழமையில் காலூன்றிப் புதுமையிற் திளைத்தவர். இதனால்தான் மேனாட்டு ஆங்கில நூல்களும் படித்தார். வடமொழி நூல்களும் படித்தார். இவரது நூலகத்தில் நான்கு ஆயிரத்துக்கும் மேற் பட்ட நூல்கள் இருந்தன. நாவலும் எழுதி னார்; நாடகமும் தீட்டினார்.சங்க இலக்கிய மும் கற்றார். பிறசமய நூல்களையும் கற்றுத் தெளிந்தார். தன் மகளுக்குச் சிந்தாமணி என்றே பெயரிட்டார். வள்ளலார் கருத்து இவருக்குப் பெரிதும் ஏற்புடையதாக இருந்தது. தீவிர சைவராக இருந்தும் அருட்பா – மருட்பா போரில் அருட்பாவிற் காக வாதிட்டு வென்றார்.

அடிகளார் சிறந்த நூலாசிரியர்; உரையாசிரியர்; போதகாசிரியர்; விரிவுரை ஆசிரியர்; பதிப்பாசிரியர்; ஞானாசிரியர்.

''தமிழே சிவமாகவும், சிவமாக தமிழாகவும் அடிகளாருக்குத் தோன்று கின்றன'' என்பார் திரு.வி.க.

அடிகளாரின் உண்மைத் திருவுருவம் தான் எவ்வாறு அமைந்திருந்தது? அவரது மகனார் மறை. திருநாவுக்கரசு சொல்கிறார்; ''பொன்மேனி, ஒளிவீசும் தாமரையன்ன திருமுகம், நேர்க்கோடு எடுத்துச் சீவி முடிக்கப்பட்டுப் பின் கொண்டை கொண்ட தலைமீதுள்ள சரிகைத் தலைப் பாகை, நெற்றியில் வெண்ணீறு, குங்கு மத்தை இடையிற் கொண்ட சந்தனப் பொட்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடம்பில் ஒளிரும் அல்பாகா கோட், 'டை' யுடன் கூடிய கழுத்துப் பட்டை, பட்டையிடப்பட்ட சரிகை மேலாடை, கால்சட்டை, கால் உறையுடன் கூடிய 'பூட்ஸ்', பீடு நடை, இளவரசர் தோற்றம்''

இத்தகைய பெருமை வாய்ந்த அடிகளார் 1950-ஆம் ஆண்டில் மறைந்தார்.

(தோற்றம் – 15.7.1876; மறைவு – 15.9. 1950; பெற்றோர் – சொக்கநாதபிள்ளை, சின்னம்மையார்; மனைவி – சௌந்தர வல்லி; பிறந்த இடம் – காடம்பாடி, நாகப் பட்டினம்)

(துணை நூல்கள் : * மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் – 1977

*மறைமலையடிகள் – இரா. இளங் குமரன் – 1995.

* மறைமலையடிகள் – ந.ரா. முருகவேள் .... கலைமகள் இதழ்.)

24

அரிய சைவ நூல்களை - செய்திகளை வெளியிட்ட அனவரத விநாயகம் பிள்ளை (1877)

''சமய நூல் வரலாற்றாராய்ச்சிக்குப் பெருந்துணையாயிருப்பவை காலம் சென்ற ச. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் தம் பதிப்புகளில் முன்னுரையாக எழுதி யுள்ள குறிப்புகள் ஆகும். இப்பெரியார் சைவச் சிறு நூல்கள் பலவற்றை நன்கு ஆராய்ந்து பதிப்பித்தவர்கள் ஆவார். ஒவ்வொன்றிலும் நூல் வரலாறு, பதிப்பு வரலாறு, ஆசிரியர் வரலாறு என்பன தவறாமல் எழுதியிருக்கின்றார்கள். இது கால ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாய் உள்ளது. டாக்டர் சாமிநாதஐயரவர்களைப் போல் செய்திகளைத் தொகுத்துரைப்போர் தமிழ்நாட்டில் தோன்றவில்லை. அதே போல நூற்பதிப்பு வரலாற்றை ஆராய்ந்து கூறுபவர் அனவரத விநாயகம் பிள்ளை யவர்கள் போல் வேறு எவருமிலர்'' என்கிறார் வரலாற்று அறிஞர் மு. அருணாசலம்.

அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் பதிப்பித்த சில நூல்கள் : (1) கண்ணுடைய வள்ளலின் ''ஒழிவிலொடுக்கம்'' (1906); (2) சம்பந்த முனிவரின் ''சிவானந்த மாலை'' (1910); (3) ''துகளறு போதக் கட்டளை'' (1935); (4) ''சிவநெறிப்பிரகாசம்'' – நந்தி சிவாக்கிரக யோகிகள் உரை (1936); திருவுந்தியார் பழைய உரை, திருக் களிற்றுப் படியார் – நமச்சிவாயத் தம்பிரான் உரை ஆகியவற்றின் ஏட்டுச் சுவடிகளை அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் வைத்து இருந்தார்கள். அவற்றைப் பெற்று மு. அருணாசலம் பதிப்பித்தார்கள்.

அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் புராணங்கள் மூலத்தை ஆராய்ந்தார்கள், ''சைவ சித்தாந்த வரலாறு'', ''தமிழ் பெருமக்கள் வரலாறு'' ஆகிய நூல்களை எழுதியுள்ளார்கள்.

''உண்மைநெறி விளக்கம்'' எழுதியவர் உமாபதி சிவமன்று சீகாழி தத்துவ நாதரே இயற்றியவர், பதினான்கு சாத்திரத்தில் ''உண்மை நெறி விளக்கத்''தை நீக்கித் ''துகளறுபோதத்தை''ச் சேர்க்க வேண்டும் - என்று இன்னோரன்ன ஆய்வுக் கருத்துக் களை வெளியிட்டவர்கள் அனவரத விநாயகம் பிள்ளையவர்கள்.

எஸ். அனவரத வினாயகம்பிள்ளை திருநெல்வேலியில் பிறந்தார். இலங்கை பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தார். 1936-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய் இருந்தார்கள். (பிறப்பு – 1877; மறைவு – 1940; ஊர் – திருநெல்வேலி).

துணை நூல்கள் : ''தமிழ் இலக்கிய வரலாறு'' 14,15,16-ஆம் நூற்றாண்டு – மு. அருணாசலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

25
பெரிய புராணப் பேருரை வழங்கிய சிவக்கவிமணி (1878)

1919-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் கயப்பாக்கம் சதாசிவஞ்செட்டியார் நாள்தோறும் பெரிய புராணச் சொற்பொழிவு செய்துவந்தார். 11.10 1922-ஆம் ஆண்டில் இச்சொற்பொழிவுத் தொடர் நிறைவு பெற்றது. இச் சொற்பொழிவுகளை ஆழ்ந்து கவனித்து வந்த 31வயது இளைஞர் அவ்வப்பொழுது குறிப்புகளையும் எடுத்து வந்தார். அக்குறிப்புகளே பின்னால் பெரிய புராணப் பேருரையாக ஏழு பகுதிகளாக – எட்டு புத்தகங்களாக – சுமார் 5600 பக்கங்களில் பின்னர் வெளிவந்தன. அக்குறிப்புகளை எடுத்தவர் சிவக்கவிமணி திரு.சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஆவார்.

சி.கே.எஸ். அவர்களின் இப்பேருரை இந்த மூன்றாண்டுச் சொற்பொழிவுகளினால் மட்டுமே நிகழ்ந்தது என்று சொல்ல முடியாது. 1894-ஆம் ஆண்டிலேயே இவரது ஆசிரியரான திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களை அடுத்து தமிழ் பயிலத் தொடங்கி அவ்வப்பொழுது பெரிய புராணத்தில் சில செய்யுள்களையும் கேட்டு அறிந்திருக்கிறார். 1894 முதல் 1937 வரையான 42 ஆண்டுகள் இப்புராணத்தை இடையிடையேயும், 1917 முதல் 1937 வரை இருபதாண்டுகள் ஆண்டுக்கு ஒரு முறையாயும் இவர் வாசித்திருக்கிறார். இவ்வாழமான படிப்பின் விளைவால் 1937-ஆம் ஆண்டில் பெரியபுராணப் பேருரையின் முதற்பகுதி வெளிவந்தது. 1948-ஆம் ஆண்டில் எழுதி முடித்ததன் நிறைவு விழாவும், 1954-ஆம் ஆண்டில் அச்சிட்டு முடித்த நிறைவு விழாவும் தில்லையில் நடைபெற்றன.

இப்பெரும்பணியைச் செய்து முடித்த சிவக்கவிமணி அவர்கள் கல்லூரிப் படிப்பில் தமிழ் படித்தவரில்லை. சட்டப்படிப்பு படித்தவர் ஆவார். இவரது பெற்றோர் வித்துவான் கந்தசாமி முதலியார் – வடிவம்மையார் ஆவார்கள். சிவக்கவிமணிக்கு இருமுறை திருமணம் நடைபெற்றது. இரு மனைவியர் பெயரும் மீனாட்சி அம்மையார் ஆகும்.

பெரிய புராணம் உரை விளக்கம் தவிர மாணிக்கவாசகர், கருவூர்த் தேவர், வாகீசர், அவிநாசிக் கருணாம்பிகைபிள்ளைத் தமிழ், சேக்கிழாரும் சேயிழையாரும், சேக்கிழார், திருத்தொண்டர் புராணத்துள் முருகன், கந்தபுராணக் கலிவெண்பா, திருப்பேரூர் இரட்டை மணிமாலை, அர்த்த நாரீசுவரர் ஆகிய நூல்களும் எழுதியுள்ளார்.

சிவக்கவிமணியவர்களின் சைவப்பணி நூல்களோடு நின்று விடாமல் யாத்திரை, குடமுழுக்கு விழாக்கள் மேற்பார்வை, பேரூர் சிவாலயத் திருப்பணி என்று விரிந்துள்ளது. சேக்கிழார் திருக்கூட்டம் என்னும் ஒரு மன்றம் நிறுவி திருவஞ்சைக் களத்தில் நம்பியாரூரர் – சேரமான் பெருமாள் – குருபூசைகள் நிகழ்த்தி வந்தார். தமது இல்லத்திலேயே தேவாரப்பயிற்சி அளித்தார். கோவையில் ஒரு தனிக்கட்டிடம் கட்டி சைவச் சொற்பொழிவுச் சாலையும் கோவைத்தமிழ்ச் சங்கமும் தொடர்ந்து இயங்கிவர வழிவகுத்தார்.

இவரது பணியைப் பாராட்டி 1940-ஆம் ஆண்டில் சென்னை மாகாணத் தமிழ்ச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்கம் இவருக்குச் ''சிவக்கவிமணி'' என்னும் பட்டம் அளித்தது.

1958-ஆம் ஆண்டில் கல்லாடை புனைந்து துறவுபூண்டு சம்பந்த சரணாலய சுவாமிகள் என்னும் பெயர் தாங்கிக் கோவையிலேயே தங்கி தவம் மேற் கொண்டார்.

1961-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ஆம் தேதியில் திருப்பேரூரில் சுவாமிகள் சிவபதம் அடைந்தார்கள்.

26
கதிர்மணி விளக்கம் தந்த பண்டிதமணி (1881)

தமிழ் ஒரு நறுநீர்த்தடாகம்; தொல் காப்பியம் அதன் கண்கிடக்கும் கிழங்கு; திருக்குறள் அதனிடத்து முளைத்து மலர்ந்து ஒளியும் மணமும் பரப்பும் தாமரை மலர்; திருவாசகம் அம்மலர்க்கண்ணே ததும்பும் தேன். அம்மலர்க்கண்ணே ததும்பி வழிவதும், விலைவரம்பில்லா மாணிக்கம் போன்ற சொல்மணிகளாலும் உள்நோக்கி உளம் நெகிழ்ந்து ஆராய்வார்க்கு எனை நான் என்பதறியேன்.

ஆம். திருவாசகத் தேனை உள் நோக்கி உளம் நெகிழ்ந்து ஆராய்ந்தார் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார். அதன் விளை வாக – தமிழகம் பெற்ற தவப்பயனாக ''திருவாசகம் – கதிர்மணி விளக்கம்'' (திருச் சதகம், திருவெம்பாவை) நமக்குக் கிட்டியது. திருவாசகப் பாடல்களுக்குச் சொல்லுக்குச் சொல் விரிவான விளக்கம் தந்திருப்பதை அனுபவித்து அறிஞர் உலகம் இன்றும் போற்றுகிறது.

சைவசமயச் சொற்பொழிவுகளைப் பண்டிதமணி நிகழ்த்தும் பொழுது எளிய உவமைகளைக் கூறியும், இலக்கிய நயங்களையும் அழகுகளையும் பலரும் உணரும் வண்ணம் விளக்கியும், அங்கங்கே நகைச்சுவைத் துணுக்குகளைத் தூவியும், தன் இனிய குரலினால் பாடல்களை ஏற்ற இறக்கங்களுடன் மென்மையான குரலில் எடுத்துக் கூறியும் மக்கள் மனதில் பதியும் வண்ணம் சுருங்கக் கூறுவார்.

இளம்பிள்ளைவாதத்தினால் ஊனமுற்ற நிலையில் பள்ளிக்குச் செல்லாமலேயே வீட்டிலிருந்தே தமிழ் இலக்கியங்களையும், சைவ நூல்களையும், வடமொழியையும் கற்றவர்.

இத்தகைய பெருமை வாய்ந்த பண்டித மணி அவர்கள் 1953-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்கள்.

(பிறப்பு – 1881; மறைவு – 1953; பிறந்த ஊர் – மகிபாலன்பட்டி).

துணை இதழ்கள் : ''கலைமகள்'', டிசம்பர் 1953; ''சித்தாந்தம்'', ''செந்தமிழ்ச் செல்வி''.

27
திருமுறைகளுக்கு ஒளிநெறி தந்த பெருநெறியாளர் (1883)

பன்னிரு திருமுறை ஒளிநெறிகள் – ஒவ்வொரு திருமுறையிலும் சொல்லப் பட்ட எல்லாப் பொருள்களையும் அகர வரிசையில் அமைத்தல்; அப்பொருளை விளக்கும் சொற்களும், தொடர்களும் பாட்டு எண்களுடன் அகரவரிசையில் அமைத்தல்; இந்த அமைப்பினால் தேவார திருவாசகத்தில் என்ன சொல், என்ன பொருள் வேண்டுமானாலும் அகராதியில் ஒரு சொல்லை எடுப்பது போல் எளிதில் தேர்ந்தெடுத்தும் கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

இதுவன்றி ஒப்புமைப்பகுதி ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் இன்ன பொருளடங்கிய தொடர் இன்ன இன்ன நூல்களில் காணலாம் என்று அறியலாம். இலக்கண நுட்பங்களும் தனிப்பகுதியாக விளக்கப்பட்டுள்ளது. ஒரு பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகளில் வருமானால் உரிய தலைப்புகள் எல்லாவற்றிலும் குறிக்கப்பட்டுள்ளன.

ஒளிநெறிக்கட்டுரை அமைப்பிலே ஒளிநெறியில் உள்ள தலைப்பிற்கண்ட சொற்களும், பொருள்களும் முறைப்படுத்திக் கட்டுரை வடிவில் விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு பன்னிரு திருமுறைகளுக்கும் ''ஒளிநெறி'' நூல்கள் வெளிவந்துள்ளன. பல்கலைக்கழகம் கூடச் செய்ய முடியாத பெரும்பணியைத் தனி ஒருவராகச் செய்து முடித்தார் ஒரு பெரியவர். அவரே தணிகைமணி டாக்டர் வ.சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள்.

ஒன்பதாம் திருமுறைக்கு ஒளிநெறி (சொல்லடைவு) எழுதும் பொழுது தணிகைமணிக்கு வயது எண்பத்திஏழு ஆகும். கூனிக்குறுகி நடக்க முடியாத நிலை. அந்த நிலையிலும் தான் எடுத்துக் கொண்ட பணியைத் தணிகைமணி அவர்கள் நிறுத்தவில்லை.

திருமுறை ஒளிநெறிகளோடு தணிகைமணியின் தொண்டு நிற்கவில்லை. சிவபெருமானுக்குப் பன்னிரு திருமுறைகள் இருப்பது போல முருகனுக்கும் அவனது புகழ்ப்பாக்களைப் பன்னிரு திருமுறைகளாக வகுத்தார். அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் – ஏழு திருமுறைகள்; அவர் பாடிய கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி முதலிய நூல்கள் – எட்டு, ஒன்பது, பத்து திருமுறைகள்; திருமுருகாற்றுப்படை தொடங்கி பரிபாடல், தனிப்பாடல்கள் வரையில் உள்ள முருகன் பாக்கள் – பதினோராம் திருமுறை; சேக்கிழார் பாடிய பெரிய புராணம் போல தேனூர் வரகவி வே.செ. சொக்கலிங்கனார் அவர்களைக் கொண்டு இயற்றப்பட்ட 3333 பாடல்களைக் கொண்ட ''சேய்த்தொண்டர் புராணம்'' பன்னிரண்டாம் திருமுறை.

திருப்புகழுக்கு இவர் எழுதிய உரை அரிய கருவூலம் ஆகும். மேலும் சிறு குழந்தைகளும் பெண்களும் பயில்வதற்கான எளிமையான பாடல்கள் பல பாடியுள்ளார். அவை; மஞ்ஞைப்பாட்டு, சேவல்பாட்டு, வேல்பாட்டு, வள்ளி கல்யாணம், கும்மிப்பாட்டு; வள்ளி–கிழவர் வாக்குவாதம்.

இவையல்லாமல் இவர் இயற்றிய நூல்கள்; முருகரும் தமிழும், 64 திருவிளையாடல் துதிப்பா, தணிகைக்கலி வெண்பா, தணிகேசன் திருவெம்பாவை, தணிகேசன் திருப்பள்ளி எழுச்சி, தணிகைமுப்பூ, தணிகை தசாங்கம், தணிகைப் பிள்ளைத் தமிழ், ஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், சச்சிதானந்தர் கலிவெண்பா, கந்தர் அலங்கார உரை, கந்தர் அனுபூதி உரை, அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்.

தணிகைமணி அவர்களின் தமிழ்ப் பணியைப்பாராட்டி மதுரை பல்கலைக் கழகம் ''டாக்டர்'' பட்டம் வழங்கியது.

இப்பெரும்பணியைத் தணிகைமணியவர்கள் எவ்வாறு நிறைவேற்றினார்கள்? குடும்பத்தில் யாருடனும் வீண்பேச்சு பேசமாட்டார். சிற்றுண்டி அருந்த துணைவியார் அழைத்தால் ''இட்லிக்கு எண்ணெய், மிளகாய்ப் பொடியெல்லாம் போட்டு வை. இதோ வருகிறேன்'' என்பாராம். வந்தபிறகு இவற்றைப் பரிமாறுவதென்றால் இரண்டு மூன்று நிமிடங்கள் ஆகும். அந்த நேரத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பயனுள்ள பணி ஏதாகிலும் செய்யலாமே என்பதுதான் அவர்களது நோக்கம்.

ஒருமுறை தணிகைமணி டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களைச் சந்திக்கச் சென் றார்கள். ஐயரவர்கள் தணிகை மணியின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''திருப்புகழ் பாராயணம் செய்து தொழுத கைக ளாயிற்றே'' என்று அன்பொழுகக் கூறினார். தணிகைமணியவர்கள் உடனே குனிந்து ஐயரவர்களின் பாதங்களைப் பற்றி, ''ஏடுகள் தேடியலைந்த கால்களாயிற்றே இவை'' என்று வணங்கினார். இந்தக் காட்சி அப்பர் பெருமான் – ஞானசம்பந்தப் பெருந்தகை சந்திப்பையல்லவா நினை வூட்டுகிறது.

இத்தகைய பணியாற்றிய தணிகை மணியவர்கள் 25.8.1971-ஆம் ஆண்டில் முருகன் திருவடிநிழல் அடைந்தார்கள்.

(தோற்றம் – 1883; மறைவு – 1971; பிறந்த ஊர் – வடக்குப்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம்; தந்தை – சுப்பிரமணிய பிள்ளை)

துணை நூல்கள், இதழ்கள் : ''கலை மகள்'', ''சித்தாந்தம்'' – 1963 செப்டம்பர்; ''செந்தமிழ்ச் செல்வி''.

28
வரலாற்று ஆய்வுக்கு வளமான முன்னோடி (1883)

காலவாரியாக வரையறுத்து காலப்பகுதி களாகப் புலவர் வரலாற்றையும் நூல்களை யும் ஆராய்ந்து திருத்தமாக இலக்கிய வரலாறு எழுத முதன் முதலில் தொடங்கி யவர் திருவாரூர் ச. சோமசுந்தர தேசிகர் ஆவார். நூற்றாண்டு முறையில் தமிழ் இலக்கிய வரலாற்றை வெளியிட்டார். 16-ஆம் நூற்றாண்டுப் புலவர் வரலாற்றை 1936-ஆம் ஆண்டிலும், 17-ஆம் நூற் றாண்டுப் புலவர் வரலாற்றை அவரது மகனார் இராமலிங்க தேசிகர் 1940-ஆம் ஆண்டிலும் வெளியிட்டனர். 18-ஆம் நூற்றாண்டு வரலாற்றையும் வெளியிடத் திட்டமிட்டு இருந்தார். கைகூடவில்லை. சைவச்சமயச் செய்திகள் பரம்பரை காரணமாக அவருக்குத் தெரிந்திருக்கிறது. ''நன்கு உழைப்பவர்; இயல்பான அறிவு மிகுந்திருந்தது. தேனீ போல செய்திகளைச் சேகரிப்பவர்'' என்கிறார் மு. அருணாசலம். அவரது நூல்கள் இல்லாது போயின் தமிழ்ப் – சைவப் – புலவர்கள் வரலாறு வெளியே வராது போயிருந்திருக்கும். இவரது நூல்களை வைத்துத்தான் மு. அருணாசலம் அவர்கள் தமது மாபெரும் வரலாற்று நூல்களை வெளியிட்டார். இலக்கண விளக்கம் ஆசிரியர் பரம் பரையைச் சேர்ந்தவர். கல்வெட்டு ஆய்வாளர்.

இவர் எழுதிய பிற நூல்கள் : ''சைவ சிகாமணிகளில் இருவர்''. இவர் பதிப்பித்த நூல்கள், ''திருவாரூர்ப் பன்மணி மாலை, ''பஞ்சாக்கரமாலை – உரை'', ''திருவாரூர்ப் பள்ளு'', ''திருமயிலையமகஅந்தாதி'', ''பிரசாததீபம்''. (தோற்றம் – 15.8.1883; மறைவு – 25.12.1939)

29
வாழ்வே சைவமாக வாழ்ந்த சமரச ஞானி (1883)

1. சன்மார்க்கம்

வள்ளலார் கண்ட உலகு ஆன்மீக அடிப்படை, திரு.வி.க. கண்ட உலகு சமுதாய அடிப்படை : சைவசமய வளர்ச்சியிலே வள்ளலார் எப்படி ஒருபடி நிலையோ, அதுபோல திரு.வி.க. என்று அழைக்கப்பட்ட திரு.வி. கலியாண சுந்தர னாரும் அடுத்தபடி நிலை என்று சொன்னால் மிகையில்லை. திரு.வி.க. பிறப்பாலும் சைவர்; அவர் ஆற்றிய பணியாலும் சைவர். அதே சமயத்தில் இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவிலும் ஊறித் திளைத்தவர். அருட்பாவைக் கற்பவர் நால்வரை மதிப்பதில்லை. வள்ளலார் ஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டிருந்தார் என்ற பேருண்மையைத் திரு.வி.க. வெளியிட்டார். வள்ளலாரின் சமரச சன்மார்க்கத்தை திரு.வி.க. பின்பற்றி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



னாலும் அது மட்டும் போதாது என்று உணர்ந்தார். ''வள்ளலாரின் சமரச சன் மார்க்கம், ஆன்மீக வாழ்வை மட்டும் கொண்டது. மக்களிடைக் காணப்பெறும் பசி, துயரம் முதலியவற்றைப் போக்குதற்கு அடிகளார் சீவகாருண்யம் ஒன்றையே வழியாகக் கொண்டனர். வள்ளலார் சமுதாய நிலையில் உலகைக் காணாமல் ஆன்மீக நிலையில் உலகைக் கண்டார். தற்கால வாழ்வில் விஞ்ஞான யுகத்தில், அரசியல் வாழ்வில், பிறர் துயர் களைய வேண்டிய தொழிலைக் கடமையாக வகுக்காமல் ஒருவரின் பரிவுக்கு (மெர்சி) வழியாக அமைப்பதில் இடர் பல உண்டு'' என்பார் அ.ச. ஞானசம்பந்தனார். ''இந்த இடரை நீக்குகிறார் திரு.வி.க. திரு.வி.க. அவர்கள் கண்ட சமரச சன்மார்க்கம் சமுதாய அடிப்படையில் நின்று காணப் பெற்ற ஒன்றாகும். ஆதலால் தான் பெரியார் காரல் மார்க்ஸையும், காந்தியின் ஆன்மீகத்தையும் தம்முடைய சமரச சன்மார்க்கத்தில் இடம்பெறச் செய்கிறார்'' என்பார் அ.ச.ஞா (''திரு.வி.க.'')

மார்க்ஸியத்தில் உள்ள குறை : மேலும் அ.ச.ஞா. எழுதுகிறார் ''காரல் மார்க்ஸ், லெனின் இருவரும் உலக சகோதரத் துவத்தைப் போற்றினர் என்பது உண்மை. உலகசகோதரத்துவம் வேண்டும் என்று கூறிய அளவில் அவர்கள் கருத்தை ஏற்றுக் கொண்டார் திரு.வி.க. ஆனால் அந்த சகோதரத்துவத்தை நிலைநாட்ட வன்முறை யையும் கையாளலாம் என்று அவர்கள் கூறியதைத் திரு.வி.க. ஏற்கவில்லை. வன் முறையில் நிலைநாட்டப்படும் எவ்வளவு சிறந்த தத்துவமும் இறுதியில் வன்முறை யாலேயே அழியும். மார்க்ஸின் தத்துவத் தில் மற்றுமொரு குறையும் உள்ளது. உழைப்போர் அனைவரும் சமம் என்பது வாழ்க்கையில் உண்மையாகவே நடை முறைக்கு வந்துவிட்டாலும், அப்பொழு தும் மனிதன் அமைதியுடன் வாழ்ந்து விட முடியுமா? மனிதனுடைய வயிற்றை நிரப்பிவிடுவதால் மட்டும் அவனை அமைதியடையச் செய்ய இயலாது.''

இறையுணர்வுடன் கூடிய மார்க்ஸியம் : தமிழ்ப் பெரியார் தமிழ்ப் பண்பாட்டின் சகோதரத்துவம் காணப் புதுவழி வகுக்கி றார். இறையுணர்வுடையார்க்கு உலக சகோதரத்துவம் தானே வந்து அமையும். இத்துடன் பெரியார் நின்றாரில்லை. மார்க்ஸியக் கருத்துப்படி சமத்துவம் அடைந்த மனிதனுடைய மனம் வாளா கிடப்பதில்லை. மனவெறுமையில் தீய எண்ணங்கள் புகுதல் இயல்பு. எனவே, மனத்தை ஒழுங்குபடுத்தும் காந்தியத்தை மார்க்ஸியத்துடன் இணைக்கிறார். இறையு ணர்வுடன் கூடிய மார்க்ஸியமே வேண்டும் என்கிறார்'' என்று அ.ச.ஞா அறுதியிட்டுக் கூறுகிறார்.

மார்க்ஸியம் உடம்பு; காந்தியம் உயிர் : ''மார்க்ஸியமும் காந்தியமும்'' என்ற நூலில் திரு.வி.க. இவ்வாறு கூறுகிறார்.

''மார்க்ஸ் முனிவன் மார்க்கம் கண்டனன்
அந்த மார்க்கம் யாக்கை போன்றது;
ஆவி நல்க மேவினன் காந்தி;''

''அகிம்சையை இம்சையால் இணைப்பது
மார்க்ஸியம்;
அகிம்சையை அகிம்சையால்
அணைப்பது காந்தியம்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''மார்க்ஸ் பொருளே காந்தி அருளே
ஒன்ற இரண்டும் உழைத்தல்
நன்றே''

ஒவ்வொரு சமயமும் சன்மார்க்கமே : திரு.வி.க. சைவத்திறகு ஆற்றிய பணியைச் சிந்திக்கு முன் அவருடைய சமயப் பொது மையையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். திரு.வி.க. சன்மார்க்கத்தையே தன் மார்க்கமாகக் கொள்கிறார். சன் மார்க்கத்திற்கு அவர் தரும் விளக்கம் அருமைப்பாடுடையது. திரு.வி.க. தனது வாழ்க்கைக் குறிப்புகளில் இவ்வாறு கூறுகிறார். ''ஒவ்வொரு சமயமும் எனக்குச் சன்மார்க்கமாகவே தோன்றுகிறது. சன் மார்க்கமற்ற சமயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.''

அவரவர் சமயத்தில் ஒழுகினாலே சன்மார்க்கம் புலப்படும் : எவர்க்கு எச்சமயத் தில் மனம் செல்கிறதோ அவர் அச்சமயத் தில் நின்று ஒழுக ஒழுக தன்பாலுள்ள சமரசத்தைப் படிப்படியே புலப்படுத்தும். சமயத்தில் நின்று ஒழுகாதார்க்குச் சமரசம் விளங்குதல் அரிது. எனது சமய வாழ்க்கை சைவத்தில் தொடங்கியது. அச்சமயத்தில் யான் ஒல்லும் வகை நின்று ஒழுகினேன். அஃது எனக்குச் சமரசத்தை விளக்கியது; மற்றசமயங்களிலுள்ள சமரசத்தையும் தெளிவித்தது. என்னுடைய சமயம் ஒன்றே. அது சன்மார்க்கம்.

சன்மார்க்கத்தில் சமரசம் திகழ்தலால் அது சன்மார்க்கம் என்னும் ஆட்சியைப் பெற்றது.

எப்பொழுது தோன்றியது? : சன் மார்க்கம் எப்பொழுது தோன்றியது? சத் என்னும் செம்பொருள் உணர்வு மக்களிடம் என்று எழுந்ததோ அன்று தோன்றியது சன்மார்க்கம்.

எவரால் காணப்பட்டது? : சன்மார்க்கம் முதன்முதல் எவரால் காணப்பட்டது? என் சிந்தனையில் விளக்கம் உண்டாகவில்லை. முன்னாளில் சன்மார்க்கத்தை ஓம்பியவர் தட்சிணாமூர்த்தி, குமரன், கண்ணபிரான், விருஷபதேவர், புத்தர், கிறிஸ்து, முகமது முதலியோர் என்பது மட்டும் எனக்குத் தெளிவாயிற்று. இவர் தம் உள்ளத்தில் ஒளிரும் பரம்பொருள் ஒன்றே ஆதலால் இவரனைவரும் ஒருவராகவே சன்மார்க்கக் கண்ணுக்குப் புலப்படுவர் என்பதும், இவருள் ஒருவரைப் பற்றுவது மற்றவரை யும் பற்றுவதாகும் என்பதும் எனக்கு விளங்கின.

எல்லாக் கடவுளரும் ஒருவரே : யான் முதன்முதல் குமரனை வழிபட்டேன். அவ்வழிபாடு கண்ணன், கிறிஸ்து, புத்தர் முதலியவரையும் குமரனாகவே உணர்த் திற்று. இப்பொழுது குமரன், கண்ணன், கிறிஸ்து முதலியவரெல்லாம் எனக்கு ஒருவராகவே மிளிர்கின்றனர்.

சன்மார்க்கம் விளக்கம் : சத்+ மார்க்கம்=சன்மார்க்கம்; சத்–உண்மை; மார்க்கம் – வழி; உண்மை வழியே சத்மார்க்கம் (சன்மார்க்கம்). உண்மை எது? மாறுதல் இல்லாதது; என்றும் ஒரே தன்மை யதாயுள்ளது உண்மை. அதுவே கடவுள். 'சத்' என்னும் கடவுளுக்குரிய நிலைகள் இரண்டு. ஒன்று எல்லாவற்றையும் கடந்து நிற்பது; மற்றொன்று எல்லாவற்றிலும் கலந்து நிற்பது. முன்னையது வழி பாட்டுக்கு எட்டாதது; பின்னையதே வழிபாட்டுக்கு உரியது.

இயற்கை வழி : எல்லாவற்றிலும் கலந்து நிற்பது, கடவுள் இயற்கையை உடலாகக் கொண்ட நிலை. உடலாகிய இயற்கையைப் பற்றினால் அஃது உயிராகிய கடவுளை உணர்த்தும். ஆகவே 'சத்' என்னும் செம்பொருள் அடைதற்குரிய மார்க்கம் இயற்கை.

வள்ளலார் : அவ்வப்போது பெரியோர் தோன்றி ஒருமைச் சன்மார்க்கத்தை அறிவு றுத்துவது மரபாக இருந்து வருகிறது. அப் பெரியோர் பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் சிலர். அவருள் குறிக்கத்தக்கவர் மாதுபிளவட்ஸ்கி, இராம கிருஷ்ணர், இராமலிங்க சுவாமிகள். இவர்கள் போதனைகள் எனக்குச் சன் மார்க்க விருந்தளித்தன.

2. சமயப் பொதுமை

திரு.வி.க. அவர்கள் பல்வேறு சமயங் களையும் பொதுமை நோக்கிலேயே பார்த்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவ உணர்வு – வெறி – பொதுமை – சன்மார்க்கம் : திரு.வி.க. பிறப்பால் சைவர். கோயிலுக்குச் சென்றார். இளம் வயதிலே யே சைவப் பாடல்களும் கதைகளும் கேட்டார். இலங்கை கதிரைவேற் பிள்ளை யின் சொற்பொழிவில் மயங்கினார். சோம சுந்தரநாயகர், ஆறுமுக நாவலர் நூல்களைப் படித்தார். தனது 23-ஆவது வ்யதிலேயே பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையினை நிறுவி, சைவ சமய சொற்பொழிவுகளும், ஆண்டு விழாக்களும், மாகேசுவர பூஜையும் தொடர்ந்து பல ஆண்டுகள் நடத்தினார். தமிழகத்தில் இவர் பேசாத சைவசபைகளே இல்லை எனலாம்.

சைவத்தையும் சன்மார்க்கத்தையும் இன்றும் பலர் குழப்பிக் கொண்டு இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் திரு.வி.க. அவர்களின் வாழ்க்கை நல்ல தொரு பாடமாக அமைகிறது. அவரது சிந்தனை வளர்ச்சி – சைவ உணர்வு – வெறி – சமயப் பொதுமை – சன்மார்க்கம் – எவ்வாறெல்லாம் மாறுகிறது என்பதனைத் தனது வாழ்க்கைக் குறிப்புகளில் வெளிப் படையாக – அதே சமயத்தில் தெளிவாகக் கூறுகிறார்.

சைவம் ஒன்றே மெய்ம்மை : ''தொடக்கத்தில் உலகில் பல சமயங்கள் உண்டென்றும், அவைகளுள் சைவ சமயம் ஒன்றே மெய்ம்மை உடையதென்றும், அது வீடு பேற்றிற்குரியது என்றும் நம்பினேன். அந் நம்பிக்கை படிப்படியே மறைந்தது''.

மதவெறி : ''எனது இளமை சிலகாலம் மதவெறிக்கு இரையாகியது. இளமையில் சிலகாலம் மதவெறி கொண்டு சமய வாதங்களில் புரண்டமையால் நலனே விளைந்தது; இல்லையேல் சன்மார்க்க ஒளி எனக்குப் புலனாகியிருக்குமோ என்று ஐயுறுகிறேன்''.

சமயப்பொதுமை : ''சோமசுந்தர நாயகர் எழுதிய நூல்கள் சிலவற்றில் யானை கண்ட குருடர் கதையைக் கண்ணுற்றேன். பின்னே அதைப் பல நூல்களில் காணலா னேன். அக்கதை என்னுள் சைவ சமயத்தின் சமரசத்தை விதைத்தது. சிவஞான சித்தியாரில் உள்ள ஒரு பாட்டும் அவ்விதையை முளைக்கச் செய்தது. அது வருமாறு :

''ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல்
உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாது
இங்கெனில்
இதுவாகும் அதுவல்ல எனும்
பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே
காண
நிற்பது யாதொரு சமயம் அது சமயம்
பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை
ஆகமத்தே
அடங்கியிடும் அவை இரண்டும்
அரனடிக்கீழ் அடங்கும்''.

மேலும்,

''வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப்படுவார்க்கெலாம்
மாதேவனல் தேவர் மற்றில்லையே''

எனவும்,

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு
சமயம் செய்தே
எரிவினால் சொன்னாரேனும்
எம்பிராற்கு ஏற்றதாகும்''

எனவும் வரும் அப்பர் திருவாக்கும்,

''உரைசேரும் எண்பத்து நான்கு நூ
றாயிரமாம் யோனி பேதம்
நிரை சேரப் படைத்தவற்றின்
உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்''.

எனவும் வரும் ஞானசம்பந்தர் திருவாக்கும், இன்னோரன்ன திருவாக்கு கள் பலவும் சைவம் பொதுமை என்பதை உறுதிப்படுத்தின.

''வாழ்வெனும் மையல்விட்டு
வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம்
சமயம்சாரும்
ஊழ் பெறல் அரிது''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னும் மணிமொழி சிவஞான சித்தியாரில் மிளிர்வது. தாழ்வெனும் தன்மையாவது முனைப்பற்ற நிலை. இதனால் யான் என்ன உணர்ந்தேன்? யான் என்னும் ஜீவபோதம் அற்ற இடத்தில் விளங்குவது சைவம் என்று உணர்ந்தேன். ஜீவபோதம் உள்ளவரை, சாதி மதம் மொழி நிறம் நாடு முதலிய கட்டுக்கள், பொதுமை அறத்துக்குக் கேடு விளைத்தே வரும். அப்போதம் அற்றதும் கேடு விளைக்கும் கட்டுக்களும் அறுந்துபோகும். முனைப் பற்ற இடத்தில் விளங்குவது சைவம் என்றால், அஃது எப்படி ஒரு கூட்டத் தார்க்கு மட்டும் உரியதாகும். முனைப்பற்ற இடத்தில் ஒளிரும் சைவ சமரசத்தைச் சைவ சமயநெறி இவ்வாறு விளக்குகிறது.

''எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை
சிவன் என்று
எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு''

சன்மார்க்கம் : ''எவ்வுயிர்க்கும் அன்பு டன் பணி செய்வது சைவம் என்பது எனக்கு உள்ளங்கை நெல்லிக் கனியாயிற்று. இவ்வுணர்வை என்மாட்டுத் திருமூலரும், தாயுமானவரும் இராமலிங்க சுவாமிகளும் நிலைபெறுத்தினர். எனது சைவம் சமரச சன்மார்க்கமாயிற்று''

சைவர்களுக்கும் சமரச சன்மார்க்க சங்கத் தாருக்கும் இதைவிடச் சிறந்த பட்டயம் இருக்கமுடியாது. இதுபோல ஒவ்வொரு சமயத்திலும் திரு.வி.க. சன்மார்க்கத்தைக் காண்கிறார்.

3. திரு.வி.க.வின் வாழ்க்கை

இனி, திரு.வி.க.வின் வாழ்க்கையைப் பார்ப்போம். நம்மைப்போலவே அவர் வாழ்க்கையும் அமைகின்றது. எனவே நாமும் அவரைப் பின்பற்ற எளிதாகிறது. ஆனால் அந்த வாழ்க்கையை உன்னதமாக மாற்றிக் கொண்டார். அதுதான் அருமைப் பாடு உடையது.

நம்முடையதைப்போன்ற வாழ்க்கை முறை : நம்மைப் போன்ற மனிதராக – செல்வம் இல்லாது தடுமாறி – வேலைக்கு அலைந்து – அரசியலில் இறங்கி – தொழி லாளர் இயக்கத்தில் ஈடுபட்டு – மனைவி யை இழந்து – அண்ணன் மகனை இழந்து பெருந்துயருற்று – இறுதிக்காலத்தில் கண்பார்வையும் இழந்து – அதனால் ஒரே ஆறுதலான எழுத்துப்பணியும் தடைப் பட்டு – வாழ்ந்த வாழ்க்கை நமக்கு நெருக்கமாக இல்லையா?

"Who can gaze the sun at Noon
Only the low sun that makes the colour"

என்றான் ஒரு ஆங்கில அறிஞன். நண்பகல் சூரியன் பளீரிடும்; நம்மால் பார்க்க முடியாது. அந்திச் சூரியனே வானில் செம்மை பூசும். ஆறுமுக நாவலரோ, பிள்ளையவர்களோ நண்பகல் சூரியர் ஆவர். நம்மால் நினைத்தும் பார்க்க முடியாது. திரு.வி.க. அந்திச் சூரியன் பார்க்கலாம்; மகிழலாம்; அனுபவிக்க லாம்; பின்பற்றலாம். நம்முடையதைப் போன்ற வாழ்க்கையின் இன்ப துன்பங்கள்; ஆசாபாசங்கள்; மேடுபள்ளங்கள். இந்த ஏற்றத் தாழ்விலேயும் ஒவ்வொரு நொடியும் சைவத்தைத் தன் வாழ்வில் இணைத்துக் கொண்டு வாழ்ந்தார் திரு.வி.க. இனி மீண்டும் அவர் மொழிகளிலே தொடங்கு வோம். ''திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகளில்'' அவர் தரும் செய்திகள் எளிமையானவை; இனிமையானவை.

4. வாழ்வே சைவம்

''திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகளின்'' தோற்றுவாயே சுந்தரரின் மொழியோடு தொடங்குகிறது. ''தோற்றம் உண்டேல் மரணம் உண்டு என்பது வன்றொண்டர் வாய்மை''. தான் பிறந்த திருவாரூர் பற்றிக் கூறும் பொழுது, ''அங்கே கிள்ளை தமிழ் பாடும்; அதைப் பூவை கேட்கும்'' என்கிறார். செம்பரம்பாக்கத்து சூரியனைப் பற்றிக் கூறும்பொழுது ''ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்'' (அப்பர்) என்கிறார்.

பிறப்பு : தம்முடைய பிறப்பினைப் பற்றி எழுதும் பொழுது , மணிவாசகர் திருவாக்கினை உன்னுகிறார்.

''பிறப்பின் நோக்கு என்ன? விடுதலை என்று பொதுவாக உலகம் சொல்லும், விடுதலை பிறப்பில் இருத்தலால் அது வேண்டுவதாகிறது. இதுபற்றியே மணி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாசகர், ''யானேதும் பிறப்பஞ்சேன்'' என்றார். இதனால் பிறவி வேண்டற்பாலது என்று தெரிகிறது. அவரே தொடர்ந்து 'இறப்பதனுக்கு என்கடவேன்' என்கிறார். இதனால் இறத்தல் ஆகாது என்பது விளங்குகிறது. இறவாமையே விடுதலை என்பது''.

போகிற போக்கிலே திருவாசகவரி களுக்கு அரிய விளக்கம் தருகிறார்.

ஜாதகம் : அடுத்து தனது ஜாதகக் குறிப்பினை விரிவாக எழுதுகிறார். அதனை முடிக்குமுன் சோதிடம் பற்றிய தனது தெளிவான கருத்தினை எழுதி ''வேயுறு தோளி பங்கன்'' என்ற பாடலுக்கு விளக்கம் தருகின்றார்.

பிள்ளைப் பருவத்தில் : பிள்ளைமை விளையாட்டில் கூட ஈரமணலில் சிவலிங்கம் எடுப்பதை திரு.வி.க. விளையாட்டாகக் கொள்கிறார். திரு. வி.க. ஐந்தாம் பாரம் படிக்கையில் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை தமிழ் ஆசிரியராக வருகிறார். அவருடன் திரு. வி.க. கொண்ட தொடர்பு அழகானது. இளவயதிலேயே கதிரைவேற்பிள்ளை வாரம்தோறும் நடத்தும் கந்தபுராணம், திருவிளையாடற் புராண சொற்பொழிவுகளைத் திருவி.க. கேட்டு வருவார். பெரியபுராணம் பாடம் கேட்பார். அந்த நேரத்திலே கதிரைவேற் பிள்ளையின் மறைவு அதிர்ச்சியைத் தருகிறது. சோகத்திலிருந்து மீள குமரகுரு பரர் சிதம்பரச் செய்யுட் கோவையும், பாம்பன் குமரகுருதாசர் 'திருவலங்கல் திரட்டும் துணை நிற்கிறது. சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தரநாயகரின் கண்டன நூல்களைப் படிக்கிறார். மயிலை தணிகாசல முதலியாரிடம், திருவருட் பயன், சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார் சுபக்கம், சிவஞானபோதம் கற்றார். இதற்குப் பண்டிதரிடையே எதிர்ப்பு கிளம்புகிறது. ''திரு. வி.க.விற்குச் சாத்திரம் போதித்தலாகாது. அவன் பின்னே சாத்திரத்தை நாசம் செய்யலாம்; கண்ட சாதியார்க்குப் போதிப்பான்,'' என்று முதலியாரிடம் கோள் மூட்டுகின்றனர். பின் பல்வேறு அறிஞர்களிடம் வேதாந்தம், ஜைன சித்தாந்தம், திரிபிடகம், குரான், மேலைநாட்டுத் தத்துவங்கள், டார்வின், ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, கீட்சு ஆகியோரின் கவிதைகள் கற்கிறார். ஓவியம், நாடகம், இசை ஆகியவற்றிலும் நாட்டம் செலுத்துகிறார்.

பத்திரிகைத்துறையிலும் சிவசிந்தனை : ''தேசபக்தன்'', ''நவசக்தி'' பத்திரிகை களின் ஆசிரியர் ஆகிறார். ''யான் உருத்திரன் ஆனேன்; என் எழுதுகோல் பாசுபதமாயிற்று. எனக்குத் துணைபுரிந்த கணத்தவர்கள் எப்படி ஆனார்கள்? அவர்கள் வேலாயுதர்களாகவும், கோதண்ட பாணிகளாகவும், காண்டீபர்களாகவும் ஆனார்கள்''. ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்னும் திருவாக்கின் கருத்துப் பொதுள ஆசிரியக் கட்டுரை வரைந்தேன்''.

இப்படி பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருக்கும் பொழுது கூட திரு. வி.க.விற்குச் சிவசிந்தனையே.

சன்மார்க்க அரசியல் : திரு.வி.க. காணும் அரசியலே சன்மார்க்க அரசியல் ஆகும்.

''மக்கட்கு உயிர் போன்றது சன்மார்க் கம். சன்மார்க்கமே சமயம் என்பது. சமயம் பல துறைகளை உடையது. அவைகளுள் ஒன்று அரசியல். அரசியல் சமயத்துள் ஒன்றி நின்றபோது உலகில் அன்பும் அமைதியும் நிலவின. அது சமயத்தி னின்றும் தனி வாழ்க்கை அடைந்த நாள்தொட்டு உலகில் பகைமையும் போராட்டமும் பரவின. மீண்டும் சமயம் அரியாசனம் ஏறல் வேண்டும். எம்முறை யில்? முகம்மதுவின் தெய்வ ஒருமையும், இயற்கையோடியைந்த வாழ்வும், கிறிஸ்துவின் அன்பும், புத்தரின் தருமமும், விருஷபதேவரின் அஹிம்சையும், கண்ணனின் நிஷ்காமியமும், குமரனின் அழகும், தட்சணாமூர்த்தியின் சாந்தமும் ஒன்றிய சமரச சன்மார்க்கம் ஆட்சியில் அமர்தல் வேண்டும்'' என்பர்.

சோதனைக் காலத்தில் : திரு.வி.க. அரசியலில் ஈடுபட்ட பொழுதும் அவருக்குப் பலசோதனைகள் வருகின்றன. அப்பொழுதும் அவரைச் சமயம் தான் காக்கிறது. ''பேய்ச் சோதனைகளைச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சந்திக்கவும், அவைகளைக் கடக்கவும் ஒருவித வாய்ப்பை இக்கால அரசியல் வாழ்க்கை எனக்கு அளித்தது. சோதனைகள் தாக்குங்கால் அவைகளைக் கடக்க ஒரு தோணி எனக்குத் துணை செய்து வந்தது. அத்தோணியை முன்னரே என்பால் அமையச் செய்த இயற்கை இறைக்கு என்ன கைம்மாறு செலுத்த வல்லேன்? அத் தோணி எது? சமயமென்னும் சன்மார்க்கம். இக்கால அரசியற் கடலிலே சோதனைப் புயல் வீசிய போது, சமயத்தோணி இல்லையேல் என் நிலை என்னவாகியிருக்கும்?''

அரசியல் மேடையில் : சுவையான ஒரு சம்பவம். சிதம்பரம் திருக்கோயிலில் 'சுயராஜ்யம்' எனும் தலைப்பில் திரு.வி.க. பேசுகிறார். தீக்ஷிதர் ஒருவர் குறுக்கிட்டு 'புறசமயத்தவர் வந்துள்ளார்; கோயில் சம்பிரதாயத்துக்கு விரோதம்'' எனத் தடுக்க முயல்கிறார். உடனே திரு.வி.க. ''சிதம்பரம் ஆகாயம்; எல்லாச் சமயங்கட்கும் பொது. 'பொது' என்ற பெயரும் சிதம்பரத்துக்கு உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். 'எச்சமயத்தவரும் வந்து இறைஞ்சா நிற்பர்' என்று தாயுமானார் சிதம்பரத்தைப் போற்றியிருக்கிறார். பொதுவுக்குத் தீட்டு எது?'' என்று முழங்குகிறார்.

வாழ்வும், பேச்சும், மூச்சும் எல்லாமுமே சைவமாக இருப்பவர்களுக்குத் தான் எந்தப் பொருத்தமுமில்லாத அரசியல் மேடையில் இப்படி பேச வரும்.

தொழிலாளர் இயக்கத்தைச் சமய உணர்வோடு இணைத்தல் : தொழிலாளர் இயக்கத்திலும் திரு.வி.க. கடைப்பிடித்து ஒழுகியது சமய ஒழுக்கமே! சமய உணர்வு – சமரசம் – சன்மார்க்கம் – மார்க்சியம் – காந்தியம் – தொழிலாளர் இயக்கம் – இத்தனையும் அவர் இணைத்துப் பார்த்தது இதுவரை யாரும் பார்த்தறியாத பார்வை. இதோ அவர் கூற்று!

சமயம் காட்டும் பொதுமை உணர்ச்சி பரவாதது ஏன்? : எனது வாழ்க்கை தொடக்கத்தில் சமயப் பணியில் ஈடுபட்டது. அதனால் பலசமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சி பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை – சமரசம் - ஏன் உலகில் பரவவில்லை என்று யான் எண்ணுவேன். சிற்சில போது ஆழ எண்ணுவேன். பொதுமையை உலகில் பரப்ப நிலை பெறுத்தவல்லது காரல்மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது.

காந்தியடிகளின் அகிம்சைநெறி பொதுமையை உருவாக்குமா? : ''காந்தியடிகளின் அஹிம்சை தர்மத்தில் என் மனம் சென்றது. அஹிம்சை நல்லதே. அது வெறும் தத்துவ உலகிலும், கவி உலகிலும் நிலவிக் கொண்டிருக்கும். வாழ்க்கை உலகில் ஒன்ற நிலவுமா? என்று ஐயுறுவேன். மார்க்ஸ் அருளியுள்ள கொள்கை உலகில் பரவினால் வாழ்க்கை அகிம்சையில் ஒன்றுவதாகும் என்னும் நுட்பம் எனக்குச் செவ்வனே விளங்கியது.''

மார்க்ஸ் நினைவு : ''ஒரே வயிற்றில் பிறந்தவர் பொருளைக் குறித்துப் போரிடுவதும், மன்றம் ஏறுவதும் என் உள்ளத்தைப் புண்படுத்தும். உடன் பிறந்தவரிடத்தில் போர் முட்டாத - அவரை மன்றம் ஏற்றாத – ஆட்சிமுறை அமையுமா என்று ஏக்குறுவேன். மார்க்ஸ் நினைவு அவ்வேக்கத்தைப் போக்கும். அமைதி நினைவு தோன்றும் போதெல்லாம் மார்க்ஸ் நினைவும் உடன் தோன்றுவது வழக்கமாகியது.

''மார்க்ஸ் கொள்கைக்கு ஆக்கம் தேடும் அமைப்பு தொழிலாளர் இயக்கம்''

மார்க்ஸியம் நாத்திகம் : 'மார்க்ஸியம் பொதுமையை அறிவுறுத்தும் நாத்திகம் அன்றோ? என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்ஸியம் என்று சிலர் நாத்திகப் பிரசாரம் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனத்துக்கு மார்க்ஸியம் நாத்திகமாகத் தோன்றவில்லை. எப்படி?''

பொருட்பொதுமையே வேற்றுமைகளையும் : மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அஹிம்சையும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்க வில்லை? சில தடைகள் மறிக்கின்றன. அவைகள் யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப் பாடுகள், கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் முதலியன. இவைகளைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி, தொழிலாளி வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்க வல்லது பொருட்பொதுமை. பொருட் பொதுமை, மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும் பிறவும் மன்பதையில் கால் கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தது என்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்ஸியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது''.

புற அமைதியும், அக அமைதியும் : ''மார்க்ஸ் கண்ட பொருட்பொதுமை உலகில் புறஅமைதியை நிலவச் செய்யும் மாண்புடையது. அக அமைதியை மகம்மது, அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சணாமூர்த்தி முதலியோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டற் பாலது. புற அமைதியை உலகில் நிலவச் செய்யும் வல்லமை வாய்ந்த மார்க் ஸியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்ஸியத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத் தள்ளுவதாகும்; போராட்டத்தை அழைப்ப தாகும்.''

''சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கம் தேடவே யான் மார்க்ஸின் பொருட் பொதுமையைத் தழுவுகிறேன். மார்க்ஸியத்தைச் சான்றோரின் மூலக் கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடுபடுவதில்லை.''

மார்க்ஸியத்தில் ''சத்'' சேரவேண்டும் : ''மார்க்ஸியம் முழுமையதா? குறையுடையதா? எதிலும் குறையுண்டு. மார்க்ஸியத்திலும் சிறு குறையுண்டு. என்ன குறை? அதன்கண் 'சத்' என்னும் செம்பொருள் வெளிப்படையாகக் காணப்படாமை. மார்க்ஸியத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்.

மார்க்ஸியம் சேர்ந்த சன்மார்க்கம் : ''மார்க்ஸியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது. சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். சத்தைக் கொண்ட சமதர்மமே சன்மார்க்கம் என்பது. சன்மார்க்கம் எது? மார்க்ஸியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சணாமூர்த்தி முதலியோர் கொள்கையும் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம்''.

தொழிலாளர் இயக்கத்தையும், மார்க்ஸையும், சமயத்தையும் இணைத்து திரு.வி.க. ஒரு அற்புதமான வழி வகுத்துத் தந்திருக்கிறாரே! இதனைப் படித்துப் படித்து இன்புற்று இவ்வுலகில் எழும் அத்தனைப் பிரச்சனைகளையும் தீர்க்க வேண்டாமா?

இளமைப் பருவம் மிகவும் சிக்கலானது. அதனையும் அழகாகத் தாண்டி, நாமும் பின்பற்றுமாறு ஒரு பாட்டை (பாதை) போடுகின்றார் திரு.வி.க.

திரு.வி.க.வின் திருமணமும், இல்லற வாழ்வும் சைவ மணம் கமழ்கிறது.

திருமணத்தில் : ''தேவாரம் முழங்கியது; கிறிஸ்து ஜெபமும் நிகழ்ந்தது. சிறப்பு முதன் முதல் அடியவர்க்கே அளிக்கப் பட்டது. இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் அன்பு, நூல்களாகப் பரிணமித்தது; திருவல்லிக் கேணிச் சிவனடியார் திருக் கூட்டத்தின் அன்பு, பொன் வேய்ந்த கௌரி சங்கமாகவும், பீதாம்பரமாகவும் உருக் கொண்டது. ஜான் ரத்தினம் இறுதியில் நிகழ்த்திய ஜெபம் அமிழ்தமாகியது. அஷ்டாவதானம் கலியாணசுந்தர முதலியார் உள்ளிட்ட சைவப் பெரும்புலவர்களும் அவ்வமிழ்தத்தைப் பருகினார்கள். சைவமும், கிறிஸ்துவமும் கலந்த முறையில் என் திருமணம் நடைபெற்றது. சச்சிதானந்தம் பிள்ளை என் வேண்டு கோளுக்கு இணங்கி வள்ளி திருமணம் சொன்னார்''.

இல்வாழ்க்கையில் : ''கமலாம்பிகை (மனைவியார்) முதல் முதல் செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்ட விண்ணப்பம் கல்வியைப் பற்றியது. கமலத்துக்கு இரவில் போதனை செய்யலானேன், பெரியபுராணக் கதைகளையும் சொல்வேன்.''

''யானும் மனைவியும் திருவொற்றியூர் கடற்கரையில் பொழுது போக்க விரும்பு வோம். கமலம் இராமலிங்க சுவாமிகள் அருளிய எழுத்தறியும் பெருமாள் மாலை, வடிவுடை மாணிக்கப் பாடல் முதலிய வற்றைப் பாடுவார். திருவொற்றியூர்த் தேவாரங்களிலும் நாங்கள் கருத்துச் செலுத்துவோம். பட்டினத்தார் கோயில் எங்களைப் பார்க்கும். அங்கும் சென்று அடிகளை வணங்குவோம். திருவொற்றியூர் அம்மையையும் அப்பனையும் எங்கள் மனம் மறக்குமோ? அவரையும் தொழுது திரும்புவோம்''.

மனைவியின் மறைவில் : திருமண வாழ்க்கை ஆறே ஆண்டுகள் தான். கமலாம் பிகையாருக்கு இறுதிக் காலம் நெருங்கு கிறது. உயிர்பிரியும் தருணம்.

''கமலத்தின் பெண்மையில் இன்பம் கண்டேன்; தாய்மையில் அன்பு கண்டேன்; இப்பொழுது ஒளி காண்கிறேன். இதுவோ பெண்ணின் இறைமை நிலை!''

சீர்திருத்த வாழ்வில் : திரு. வி.க. பல சீர்திருத்தங்கள் செய்ய முனைந்தார். அதற்கு அவர் அடிப்படையாகக் கொண்டது ''சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்'' என்ற திருவாசக வரிகள்தாம். ''சித்தமலம் அறுத்து சிவமாக உறுதிகொண்டு உழைக்க வேண்டும். சித்தமலம் அறுக்க முயல்வதே முதல் சீர்திருத்தம் என்பதும் அதுவே சீர்திருத்தங்கட்கு எல்லாம் அடிப்படை என்பதும் எனக்கு விளங்கின.

''அகனமர்ந்த அன்பினராய் அறுபகை
செற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப்
புண்டரிகத்து
உள்ளிருக்கும் புராணர் கோயில்

என்ற ஞானசம்பந்தர் பாடலைக் கொண்டு விளக்குகிறார்.

''சத்தியம் உரைக்க நாளும் சகல
பல்லுயிர்கட்கு எல்லாம்
நித்தலும் இதமே செய்ய நினைப்பது
சிவத்தை என்றும்
அத்தன் வேதாகமத்தின் அருளிய
பொருள் இம்மூன்றும்
எத்திறச் சமயத்தோர்க்கும்
எம்மதங்களுக்கும் இட்டம்''

– மெய்மொழிச் சரிதை

''சத்தியம்; உயிர்கள் நலம் கருதல்; இரண்டுக்கும் கொழுகொம்பு இறை வழிபாடு – இம்மூன்றும் சீர்திருத்தக் காரர்கட்கு வழிகாட்டுவன'' என்று முத்தாய்ப்பாய் முடிக்கிறார். இன்றைய சீர்திருத்தக்காரர் இதனை ஏற்பாரா?

தொண்டு வாழ்வில் : ''தொண்டுக்குச் செல்வப் பெருக்கு வேண்டுவதில்லை. வறுமை வேண்டுமா? அதுவும் வேண்டா. இரண்டுக்கும் இடைப்பட்ட எளிமை தேவை. என்னைத் தொண்டுக்கு என்று பண்படுத்திய மொழிகள் பல.

''என் கடன் பணி செய்து கிடப்பதே''
– அப்பர்

''வித்தகம் பேச வேண்டாம் பணிசெய்ய
வாரும் என்றார்''.

உடலோம்புதலில் : ''உலகில் தோன்றிய பெரியோர் பலரும் உடலைக் கோயில் என்று ஒருமுகமாக அருளிப் போந்தனர்.

''காயமே கோயிலாக'' – அப்பர்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு
ஆலயம்''

''உடம்பை வளர்த்தேன் உயிர்
வளர்த்தேனே''

''உடம்பினுக்குள்ளே உறுபொருள்
கண்டேன்'' – திருமூலர்.

இப்படி, பிறப்பு முதல் தம் இறுதிக் காலம் வரை தம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு மணித் துளியிலும் – சைவத்தோடு இணைத்தே வாழ்ந்த திரு. வி.க. அவர்கள் நமக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டு அல்லவா?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. மேடைப் பேச்சு மூலம் சைவப் பணி

பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை : தமிழ்நாட்டில் திரு.வி.க. பேசாத சபை இல்லை. ஏறாத மேடை இல்லை. இளமைக்காலத்தில் இவரே பல சபைகளைத் தோற்றுவித்து சைவப் பணி புரிந்தார். நான்காம்பாரம் முடிந்தவுடன் இராயப்பேட்டையில் பாலசுப்ரமணிய பக்த ஜனசபை ஆரம்பித்தார். கதிரைவேற் பிள்ளை போன்ற ஆன்றோர்கள் கலந்து கொண்டார்கள். அங்குள்ள வேதாந்த சபையில் சைவ சமய நூல்களைத் தாக்கிப் பேசுவர். அவரெல்லாம் பெரும்பெரும் பீரங்கிகள். இளவயதிலேயே திரு.வி.க. அப்பெரும் பீரங்கிகளைத் தாக்கிப் பேசுவார். ஞாயிறுதோறும் இப்படி நடக்கும். இதற்காக வாரம்தோறும் படிப்பார். இவர்களை தூசிப்படை என்பார் கதிரைவேற்பிள்ளை.

பிறசபைகள் : 1908-ஆம் ஆண்டில் திருவல்லிக்கேணி சிவனடியார் திருக்கூட்டத்தின் தலைவர் ஆகிறார். சுமார் ஏழு ஆண்டுகள் பெரிய புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார். புதுப்பாக்கம் சிவ சுப்பிரமணிய பக்த ஜனசபை (1915)யின் முதல் தலைவரும் இவரே.

அவைக்கு அஞ்சாத நெஞ்சுரம் : சைவ சித்தாந்த மகாசமாஜத்தில் (இன்றைய பெருமன்றம்) இவர் அடிக்கடி ஆண்டு விழாத் தலைமை ஏற்பார். 1918-ஆம் ஆண்டில் வேலூரில் சமாஜ ஆண்டு விழா. ஞானியார் சுவாமிகள் தலைமையில் திரு.வி.க. ''சிவஞான போத நுட்பம்'' பற்றிப் பேசுகிறார். பெரும் பெரும் அறிஞர்கள் வீற்றிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளாத புதிய – ஆய்வுக் கருத்தினை வைக்கிறார். அப்படி ஒரு மனத் திட்பம்! தன் அறிவில் ஒரு முழு நம்பிக்கை! இதோ அவரே கூறுகிறார். ''சிவஞான போத வரலாற்றிலே நந்தியெம் பெருமானுக்குச் சீகண்டர் இருபத்தெட்டு ஆகமங்களை அறிவுறுத்தினார் என்றும், அதனால் அவர் ஞானம் பெறவில்லையென்றும், பின்னே ரௌரவ ஆகமத் திலே பாச விமோசனப் படலத்திலேயுள்ள சிவஞானபோதச் சூத்திரம் பன்னிரண்டையும் மெய்க் குரவர் அறிவுறுத்தினர் என்றும், நந்தியெம் பெருமான் ஞானம் பெற்றனர் என்றும் சொல்லப்பட்டிருப்பதை அலசி, 'ரௌரவ ஆகமம்' இருபத்தெட்டில் ஒன்றுதானே. அதிலுள்ள சிவஞானபோதப் பகுதியைச் சீகண்டர் மறந்துவிட்டாரா அல்லது அஃது அறிவுறுத்தப் பெற்றபோது நந்தியம்பெருமான் உறங்கினாரா? என்றதும் மேடை அதிர்ந்தது; வீறிட்டது. நல்லசாமிபிள்ளை 'தப்பு தப்பு' என்று சீறினார்; யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியார் 'நிறுத்தும் – நிறுத்தும்' என்று உறுத்தார். மேலும் தொடர்ந்து பேசி, சிவஞான போதத்தின் மூலமொழி என்ன? வடமொழியா? தென் மொழியா? என்று கேட்டு 'சிவஞானபோதம் மொழி கடந்த ஒன்று' என்று தெளிவு செய்கையில் நல்லசாமி பிள்ளை 'தப்பு – தப்பு' என்று கூக்குரலிட்டார். அடிகள் முடிவுரையில் என் பேச்சைப் பற்றித் தம் கருத்துரையில் ''குழந்தைக் கையில் கத்தியும் பழமும் கொடுக்கப்பட்டால் அது கையையும் அறுத்துக் கொள்ளும் அன்றோ?'' என்று குறிப்பிட்டார். கூட்டம் கலைந்தது. நல்லசாமி பிள்ளையும், சபாரத்தினமும் முறை தவறியே நடந்தனர் என்றும், தலைவர் அவ்விருவரையும் இடையில் பேசவிட்டது ஒழுங்குமுறை ஆகாது என்றும் காரணம் கூறாமல் அடிகள் 'குழந்தை கத்தி' என்றதும் தவறென்றும் சி.டி. பார்த்தசாரதி முதலியார் வெளிப்படையாகப் பலர் கேட்க விளம்பினர்''.

தெய்வமே இவர் : 1929-ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூரில் மறைமலையடிகள் தலைமையில் நடைபெற்ற சமாஜ ஆண்டு விழாவில் திரு.வி.க. ''திருஞான சம்பந்தர்'' பற்றிப் பேசினார். பேச்சைக் கேட்டு மறைமலையடிகள் கண்ணீர் மல்க நமது ஆண்டவன் ஆளுடைய பிள்ளையாரின் மூலமாகவே இறைவனைக் காணல் வேண்டும் என்ற உண்மையை அறிவாலும், அனுபவத்தாலும் மிகத்திறம்பட அழகமைய பொருத்திக் காட்டி நம்மனைவர் நெஞ்சையெல்லாம் நீராய் உருக்கிய திருவாளர் திரு.வி.கலியாணசுந்தர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலியார்க்கு நாம் இப்பிறவியில் அல்லாது எப்பிறவியிலும் கடப்பாடுடையோமாயிருத்தல் வேண்டும். திருஞான சம்பந்தர் வாயிலாக உண்மைக் கடவுட் காட்சியைக் காண்டல் வேண்டுமென எடுத்துரைத்த இவரை நாம் தெய்வமாகக் கொள்வோமாக'' என்று கூறினால் இவரது பேச்சின் அருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ!

பூவாளூர் சைவ சித்தாந்த சபை தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபை என்று தென்னாட்டில் உள்ள நூற்றுக்குத் தொண்ணூறு சபைகளில் ஒருமுறைக்குப் பலமுறை உரையாற்றி இருக்கின்றார்.

6. நூற்பணி

திரு.வி.க. எழுதிய நூல்கள் ஒவ்வொன்றும் ஒரு மாணிக்கப் பேழை; அறிவுபூர்வமான விளக்கங்கள்; பகுத்தறிவு வாதியும் ஏற்றுக் கொள்ளும் தத்துவச் சிந்தனைகள்; அதே சமயத்தில் எளிமையாகவும், சுருக்கமாகவும் வெளிப்படுத்தும் வைர வரிகள்.

சிறியவும் பெரியவுமான 50 நூல்கள் எழுதியுள்ளார். அதில் 30 நூல்கள் சமய நூல்கள். சைவம் பற்றிய நூல்கள் பத்துக்கு மேல் எழுதியுள்ளார். அவற்றைப் புத்தகப் பகுதியில் காணலாம்.

(தோற்றம் – 1883; மறைவு – 1953; பிறந்த ஊர் – திருவாரூர்.)

(துணை நூல்கள் : ''திரு. வி.க. வாழக்கைக் குறிப்புகள்'' ''திரு.வி.க. – அ.ச.ஞானசம்பந்தன்)

30
எங்கும் திருவாசகம்; எதற்கும் திருவாசகம்; (1885)

சிவாலய தரிசனம் ஒன்றே தொழில்; திருவாசகம் பாடுவதே குறிக்கோள். இப்படி ஒரு பெரியவர் இருந்தார். கையிலே சல்லிக்காசு இருக்காது. எப்படியோ தினந்தோறும் பயணம் செய்வார். இன்று மதுரையில் பாடுவார்; நாளை சிதம்பரம்; மறுநாள் காளத்தி; அங்கிருந்து தென்கோடி திருச்செந்தூர்.

தலையில் மூட்டையை வைத்துக் கொண்டு, கையில் பிடித்த குடையுடனும், காலில் செருப்புடனும் நாவில் சிவபெருமான் திருநாமத்துடனும் அவர் நடந்து கொண்டேயிருப்பார்.

எந்தக்கோயிலோ அதற்குரிய தேவாரமோ, திருவாசகமோ பாடுவார். பாடுவது சிலசமயம் குழைவாக இருக்கும்; சில சமயம் வியாக்கியானம் போல இருக்கும்; சில சமயம் அலறலாக இருக்கும். அவர் எப்படி பாடினாலும் அருகில் இருப்போர் அதில் ஈடுபடாமல் இருக்க முடியாது.

எங்கும் திருவாசகமே பாடினார்; எதற்கும் திருவாசகமே பாடினார். ''திருவாசகம் வந்தது'', ''திருவாசகம் போயிற்று'' என்றே சிவனடியார் கூட்டங் களில் கூறுவர். திருவாச்கம் முழுமையும் அவருக்கு மனப்பாடம்.

அப்பெருமகனார் திருவேங்கடராமையர் ஆவார். அவர் 1968-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தனது 73ஆவது வயதிலே உயிர் நீத்தார். *(1885 – 1968; மேலூர், மதுரைக்கு அருகாமை).*

31
சைவப்பாதிரியார் (1887)

திரு.வி.க. அவர்களும் அந்த சைவப் பாதிரியாரும் சேர்ந்து சேரிக்குச் சென்று கல்வித் தொண்டும், சமயத் தொண்டும் இடைவிடாது செய்து வந்தார்கள். இந்துக்கள் மதமாற்றம் செய்வதைக் கண்டு மனம் நொந்து போவார்.

அத்தோடு இந்துக்கள் முறையாகக் கோயிலுக்குச் செல்வதில்லையே என்று வருந்துவார். இதற்காக வாரவழிபாட்டுக் கழகம் என்ற திட்டத்தை முதன்முதலாக அவர் வகுத்துத்தந்தார். இத்திட்டத்தின் கீழ் இவர் தமிழ்நாட்டில் 80 வாரவழிபாட்டுக் கழகங்களைத் தோற்றுவித்தார். அவரை ''வாரவழிபாட்டுத்தந்தை'' என்றே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழைத்தனர். அவரே திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்.

சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுக்கும் சைவசித்தாந்த சமாஜத்திற்கும் உள்ள தொடர்பை எளிதில் கூற முடியாது. ''சச்சிதானந்தமே சமாஜம்; சமாஜமே சச்சிதானந்தம்'' என்று கூறுமளவு ஒன்றிப் போயிருந்தார்கள். சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகிப்பதும், ''சித்தாந்தம்'' இதழில் ஆசிரியராகப் பணியாற்றுவதுமாகச் சமாஜத்தின் பணிகளில் ஈடுபட்டு இருந்தார்.

பாம்பன் சுவாமிகள், ஞானியார் சுவாமிகளுக்குச் சீடர் ஆவார். 6.7.1972-இல் இறைவன் திருவடிநீழலை அடைந்தார். (பிறப்பு – 1887; மறைவு – 1972; பிறந்த ஊர் – சென்னை; பெற்றோர் – சபாபதிபிள்ளை, மீனாட்சி அம்மையார்.)

துணைநூல்கள், இதழ்கள் : ''தமிழ்ப் புலவர் வரிசை'' ''சித்தாந்தம்'' ஆண்டு 1987, சித்தாந்தம் தொகுதி 40; ''சித்தாந்தம்'' ஆகஸ்டு 1972.

32

பெரியபுராண விளக்கத்திற்கோர் பெருஞ்சொல் விளக்கனார் (1887)

சேக்கிழார் பெரியபுராணத்துக்கு எழுத்தெண்ணிப்பொருள் சொல்வார் அந்தப்பெரியவர். பெரியபுராணத்தை முன்னும் பின்னும் துருவி ஆராய்ந்து பொருத்தம் கூறித் தெளிவு செய்வார். இப்படி ஒரு நாள் அல்ல; ஒரு மாதம் அல்ல; ஓர் ஆண்டு அல்ல; ஒரு நாள்விடாது மூன்று ஆண்டுகள் தொடர்ந்து திருச்சியில் விளக்கம் சொன்னார்கள். நூற்றுக்கணக்கான அன்பர்கள் தொடர்ந்து கேட்டார்கள். உரை கேட்டு மகிழ்ந்த அன்பர்கள் கை கொட்டி ஆர்ப்பரித்தனர்; மெய்மறந்து எழுந்து குதித்தனர்; கை குலுக்கிப் பாராட்டினர்; வணங்கிப் போற்றினர். ஆண்டு 1937; சொற்பொழிவு நிகழ்த்தியவர் – பெருஞ்சொல் விளக்கனார் அ.மு. சரவண முதலியார் அவர்கள்.

பெரியபுராணம் மட்டுமல்ல; திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் ஆகிய நூல்களுக்கும் விளக்கவுரை ஆற்றினார்கள். இப்படி தமிழ்நாடு, மலேசியா போன்ற வெளிநாடுகள் எல்லாம் சென்று சொற்பொழிவாற்றினார்கள். ஓர் ஆண்டில் பல மாவட்டங்களில் அதிகச் சமய சொற்பொழிவுகள் ஆற்றியவர்களுக்கான திருப்பனந்தாள் திருமடப்பரிசினையும் பெற்றார்கள். அப்படி ஒரு சைவ சமய தாகம்!

ந.மு. வேங்கடசாமி நாட்டாரோடு இணைந்து திருவிளையாடற்புராணம் உரை எழுதினார்கள். ''அமுது அடியடைந்த அன்பர்'', ''இருபெருமக்கள்'' என்ற நூல்களையும் எழுதினார்கள்.

1887-ஆம் ஆண்டில் லால்குடி வட்டம் அரசங்குடி என்னும் ஊரில் முத்துசாமி முதலியார் – சீதையம்மாள் ஆகியோர்க்குப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறந்தார். 15.3.1959-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார். உயிர் பிரியும் பொழுது திருவாசகப் பாடல்களை ஓதிய வண்ணம் இருந்தார்கள். ''கல்லாப்பிழையும் கருதாப் பிழையும்'' என்ற பாடலை முடிக்கும் தறுவாயில் உயிர் நீத்தார்கள்.

(துணை நூல்கள் : அ.மு. சரவண முதலியாரவர்கள் நினைவு மலர்'' – மணிவாசக மன்றம் – 1959; ''தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்'', குன்றக்குடி பெரிய பெருமாள் – 1996).

33

ஆங்கிலம், தமிழ் - இரு மொழிகளிலும் சைவ நூல்கள் எழுதிய பெருநெறியாளர் (1888)

நால்வர் பெருமக்கள், சேக்கிழார், தாயுமானவர், சிவஞான முனிவர், குமரகுருபரர், மெய்கண்டார், பட்டினத்தார் – ஆகியோரின் வரலாறுகளைத் தெளிவாக்கி, அவர்கள் அருட்பனுவல்களுக்கு ஆய்வுமுறையில் விளக்கம் தந்தவர். தமிழ் இலக்கிய வரலாற்றை இருபாகங்களாகத் தொகுத்தவர். Metaphysics of the Saiva Siddhanta System, A short Sketch of the Hindu Religion, Nature in Thevaram and Ancient Tamil scripture -

ஆகிய நூல்களை எழுதியவர். ''சிவப் பிரகாசத்தை'' ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். திருவாசகத்திற்கு உரை எழுதியவர்.

அவரே ''எம் எல் பிள்ளை'' என்று அன்போடு அழைக்கப்பட்ட கா. சுப்பிரமணியபிள்ளை.

ஆம். எம்.எல். படித்து, தாகூர் சட்ட விரிவுரையாளர் என்ற பட்டமும் பெற்ற சைவ நல்லறிஞர்.

இவர் எழுதிய வேறு நூல்கள்; திருமுருகாற்றுப்படை உரைநடை, கந்தர் கலி வெண்பா உரைநடை, மெய்கண்டாரும் சிவஞானபோதமும், திருஞானசம்பந்தர் தேவார இயற்கைப்பேரழகு, சைவச்சடங்கு விளக்கம், மெய்கண்ட நூல்களின் உரைநடை, சிவஞானபோதப் பொழிப்புரை, சைவ சித்தாந்த இயற்கைத் தத்துவம்.

1888-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் காந்திமதிநாதபிள்ளை – மீனாட்சிக்கு அருமகவாய்ப்பிறந்த கா.சு.பிள்ளை 1945-ஆம் ஆண்டில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

(துணை நூல்கள் : ''தமிழ்ப்புலவர் வரலாற்றுக்களஞ்சியம்'').

34

கல்வெட்டு ஆராய்ச்சி செய்த அறநிலையத்துறை ஆணையர் (1888)



அறநிலையத்துறை ஆணையர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தவர் கோவை கிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர்கள். இவர் ஆணையராக இருந்த பொழுது சமய நிலையங்களின் வருவாயில் ஒரு பகுதியைச் சமய வளர்ச்சிக்கென ஒதுக்கச் செய்து, அதைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள், நூல் வெளியிடுதல், நூல் நிலையம் அமைத்தல் முதலியன செய்யவேண்டும் என்று திட்டம் வகுத்தார். கோயில்களில் திருமுறை ஓதுதல், எழுதுதல் முதலியன செய்வித்தார். பல புலவர்களைக் கொண்டு தலவரலாறு முதலியன எழுதுவித்து அவர்களுக்கு ஊதியம் கிடைக்க வழிவகுத்தார். சமயச் சொற்பொழிவாளர் பலரை நியமித்தார். ஆலயக்குடமுழுக்கு விழாக்கள் ஆகம முறைப்படி நடக்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தார். இதற்காகக் குடமுழுக்கு விழாக்களுக்கு சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார், சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் ஆகியோரை அனுப்புவார்.

திருவஞ்சைக்களத்தில் சுந்தரர் விழா நடத்த சிவக்கவிமணி அவர்களுடன் பெரிதும் ஒத்துழைத்தார்.

கோவைகிழார் சிறந்த ஆராய்ச்சியாளர். எந்தச் செய்தியையும், கல்வெட்டுச் சான்றுடன் நிறுவுவார். ''அடியார்களும் கல்வெட்டுக்களும்'' என்ற தலைப்பில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சேக்கிழார் காலத்தைக் கல்வெட்டின் துணை கொண்டு நிறுவியுள்ளார்.

இவர் எழுதிய பிற சமய நூல்கள்; சுந்தரரும் கொங்கும், பேரூர் மூர்த்திகள், முட்டம் வரலாறு, கலசை வரலாறு, திருவாலங்காடு வரலாறு, நால்வர்களும் கல்வெட்டுக்களும், சிவராத்திரி பெருமை ஆகியன. கோவைகிழார் *3.12.1969*-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

(பிறப்பு – *1888*; மறைவு – *1969*; பிறந்த ஊர் – கோயம்புத்தூர்; பெற்றோர் – மருதாசலம் செட்டியார், கோனம்மாள்)

துணை நூல்கள், இதழ்கள்: ''கோவை கிழார் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்'' *1987*; ''சித்தாந்தம்'' *1970* ஜனவரி; *1987* நவம்பர்;

35

தமிழ்ப் பாடல்கள் இயற்றியும், பாடியும் தமிழிசை வளர்த்த இசைப் பேரறிஞர் (1890)

மார்கழி மாதம்; மயிலாப்பூர் மாட வீதிகள்; காலை நேரம் கொட்டும் பனியில் மெலிந்த ஒரு பெரியவர் திருவெம்பாவைப் பாடல்களைக் கல்லும் உருகுவது போல பாடிக்கொண்டு வருகிறார். இசையறிவு இல்லாத மக்களும் மெய்மறந்து கேட்கிறார்கள். இந்த நிகழ்ச்சி மார்கழி மாதம் முப்பது நாளும் நடக்கும். இது போல நாற்பது ஆண்டுகள் நடந்தன. நடத்தியவர் பாபநாசம் சிவன் அவர்கள்.

மயிலாப்பூர் அறுபத்து மூவர் திரு விழாவில் இறுதிநாளில் ''காணக்கண்கோடி வேண்டும்'' என்று பாடிக் கொண்டே பாபநாசம் சிவன் வரும் காட்சி காணக் கண்கோடி வேண்டும்; கேட்க ஆயிரம் செவி வேண்டும்.

பாபநாசம் சிவன் பஜனை மட்டும் செய்வதில்லை. இசைக் கச்சேரியும் செய்து வந்தார். பாடல்கள் பாடுவதோடு நூற்றுக் கணக்கான பாடல்களை இயற்றியிருக்கிறார். அவற்றுள் ''காரைக்காலம்மையார் சரிதமும்'' ஒன்று. திரைப்படங்களுக்காக அவர் அக்காலத்தில் இயற்றிய பாடல்கள் அனைத்துமே "Hit Songs" தான். இவர் இயற்றிய பாடல்களை எம்.கே. தியாகராஜ பாகவதரும், எம்.எஸ். சுப்புலட்சுமியும் பாட தமிழகத்தின் பட்டி தொட்டிகளெல்லாம் இவர் பெயர் பரவிற்று. இவர் பாடல்களில் வர்ணங்கள், கீர்த்தனைகள், கண்ணிகள், நொண்டிச்சிந்து, வழிநடைச் சிந்து என்று எல்லாமே உண்டு.

இராமையா என்பது இவரது இயற் பெயராயினும் பாபநாசத்தில் இவர் பாடிய பொழுது கயிலையிலிருந்து சிவனே வந்து விட்டார் என்று கூறி மக்கள் பரவசப் பட்டனர்.

1973-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(பிறப்பு – 1890; மறைவு – 1973; ஊர் – போலகம், தஞ்சை மாவட்டம்; பெற்றோர் – ராமாமிருதம் ஐயர், யோகாம்பாள்)

துணை நூல்கள், இதழ்கள்: ''தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்'' – குன்றக்குடி பெரிய பெருமாள், சன் டி.வி. ''வணக்கம் தமிழகம்'' 14.7.99 அசோக் ரமணி பேட்டி; கலைமகள் இதழ்கள் ஆகஸ்ட் 1969.

36
ஓய்வுக்கால வயதிலும் ஓய்வின்றி நூல்கள் எழுதியவர் (1890)



வயது 56; ஓடி, ஆடி, ஓய்ந்து உட்காரும் வயது. ஆம்; அப்பொழுது தான் சித்தாந்த பண்டிதர் ப. இராமநாதபிள்ளை எழுதவே ஆரம்பிக்கிறார். 1946-ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து தமிழ்நாடு வருகிறார். தமிழகம் வந்தவுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத் தலைமைப் புலவராகப் பணிபுரியத் தொடங்குகிறார். அன்று தொடங்கி 1972-ஆம் ஆண்டில் மறையும் வரை எழுதிக் குவிக்கின்றார். அவர் செய்த பணிகள் வருமாறு: கழகம் மூலம் வெளி வந்த சமய, சாத்திர நூல்கள் அனைத்தையும் பார்வையிட்டுப் பதிப்பித்தல்; திருமந்திரம் திருவாசகம் உரை எழுதுதல்; பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களின் பழைய உரைகளுக்குக் குறிப்புரைகள் எழுதுதல்; திருவிளக்கு வழிபாடு, பள்ளிக்கூட வழிபாடு, திருக்கோயில் வழிபாடு, திருநீறும் சிவமணியும், திருவைந் தெழுத்து, சிவதீக்கை முதலிய தொகுப்பு நூல்களை வெளியிடுதல்; ''வேண்டுகோள் பதிகங்கள்'' எனும் தலைப்பில் ஐந்து நூல்களை வெளியிடுதல்; பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு, தேவாரப் பதிகத் திரட்டு (3 தொகுதிகள்); சிவநெறிச் செய்யுள் திரட்டு வெளியிடுதல்; பட்டினத்தார், தாயுமானவர் பாடல்களுக்கு உரை எழுதுதல்; வரலாற்றுக் குறிப்பு களோடு பெரியபுராணம் பதிப்பித்தல்; சிவஞானபோதச் சிற்றுரை வெளியிடுதல் என ஒரு நீண்ட நெடும் பட்டியல் பிள்ளையவர்களின் 56-ஆம் வயதிற்குப் பிறகு தொடங்குகிறது.

நூல்கள் வெளியிடுவதோடு நில்லாமல் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்துவது, செந்தமிழ்ச் செல்விக்குக் கட்டுரைகள் எழுதுவது போன்ற பணிகளையும் பிள்ளை யவர்கள் செய்து வந்தார்கள். அவருடைய தெற்றிய புலமைக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாக்கே நற்சான்றாகும். ''அருள் உலகத்தில் எனக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிற பொழுதெல்லாம் பிள்ளைய வர்கள் துணையாக நின்று இதுதான் மரபு என்றும், இது தொன்மை நெறி என்றும் எடுத்துக்காட்டுகிற ஆற்றல் உடையவர் களாய் இருக்கிறார்கள்'' என்றார் அடிகளார். அடிகளாருக்கே விளக்கம் தந்தவரின் பெருமையைச் சொல்லவும் எளிதோ?

(1890 – 1972; குலசேகரன்பட்டினம், திருச்செந்தூர்க்கு அருகாமை).

37
திருக்கோயில்கள் வரலாறு எழுதிய திருசிரபுரத்தார் (1893)

வழுக்கைத் தலையோடு ஒரு வயோதிகர் திருச்சியில் எங்கள் இல்லத்திற்கு என் தந்தையாருக்குப் பாடம் சொல்லித் தர வருவார்கள். மென்மையான குரல், பஞ்சநதம் பிள்ளை என்று அவர்களுக்குப் பெயர். எனது தந்தையார் அவர்கள் பெயரைச் சுருக்கி ''பஞ்சு பிள்ளை'' என்பார்கள். சில சமயங்களில் ''காட்டன் பிள்ளை'' (cotton) என்பார்கள். அதற்கும் அவர்கள் மென்மையாகச் சிரிப்பார்கள்.

Digitization by Hindu Heritage Foundation of America - HHFA(USA)

பழகத்தான் மென்மையே ஒழிய செயலில் வன்மையானவர்கள். தமிழகத் திருக்கோயில்களின் வரலாறுகளை ஒவ்வொன்றாக வெளியிட்டார்கள். ''அற்புதக்கனி'' ''திருமுருகாற்றுப்படை விளக்கம்'' ஆகிய நூல்களும் எழுதினார்கள். 1968-ஆம் ஆண்டில் மறைந்தார்கள்.

(தோற்றம் – 1893; மறைவு – 1968; பிறந்த ஊர் – திருச்சி; பெற்றோர் – இராசரத்தினம் பிள்ளை, காந்திமதியம்மை)

துணை நூல்கள்: ''தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்''.

38
மதமாற்றம் செய்த மாபெரும் தொண்டர் (1894)

நாகர்கோயில் கிறித்துவ சமயத்திற்கு வளமான பூமி. அங்கே தோன்றிய ஒரு பெரியவர் 72,000 கிறித்துவர்களை மதம் மாறச் செய்தார் என்றால் அதனைக் கற்பனையால் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. அப்படி ஒரு மகத்தான பணி நடந்திருக்கிறது. அதனைச் செய்தவர் தொண்டன் ஆறுமுகனார் ஆவார்.

அதுமட்டுமல்ல, ''தொண்டன்'' என்ற ஒரு மாத இதழைத் தொடங்கிச் சைவ சமயக் கட்டுரைகளை வெளியிட்டுச் சைவம் பரப்பினார். 1969-ஆம் ஆண்டில் அவர் உயிர் நீத்தார்.

(1894 – 1969 ; நாகர் கோயில்)

துணை இதழ்கள் : ''தொண்டன்'' பழைய இதழ்கள்.

39
திருமுறைகள், சாத்திரங்கள், செம்பதிப்பாகத் தந்த மயிலை கிழார் (1896)

சங்க இலக்கியங்கள் காப்பியங்களுக்கு உ.வே.சா. பதிப்பு போல சைவத் திரு

முறைகள், சாத்திரங்களுக்கு மா.பா. பதிப்பு தனி முத்திரை வாய்ந்தது. இன்றும் கண்ணில் ஒத்திக் கொள்ளலாம் போல இருக்கும். அதனால்தான் சமாஜப் பதிப்புகளுக்கு அறிஞர்கள் மத்தியில் தனி மதிப்பு.

மா.பா. அவர்களின் திருமுறைப்பதிப்பு பற்றி மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனார் இவ்வாறு கூறுகிறார்.

''தமிழகத்தைப் பொறுத்தவரை சைவ சமயம் பற்றிய பெரும்நூல்களை வெளியிடும் பணியைச் சைவ சித்தாந்த மஹா சமாஜம் 1925 முதல் செய்து வந்தது. அந்த மஹா சமாஜத்தின் தூணாக விளங்கியவர் அமரர் மா. பாலசுப்பிரமணிய முதலியார் ஆவார்.''

''1940-ஆம் ஆண்டில் அடங்கன் முறை என்ற பெயரில் ஏழு திருமுறைகளையும் ஒன்றாக்கி அப்பாடல்களுக்குத் தொடர் எண் கொடுத்து மிக அற்புதமான முறையில் மா.பா. அவர்கள் வெளியிட்டார்கள்.''

''பல ஆண்டுகள் தேவாரத்தை ஆராய்ந்து மா.பா. அவர்கள் தயாரித்த அரும்பொருள் அகராதி யாழ்ப்பாணம் சாமிநாதர் பதிப்புத் தொடங்கி, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மடங்கள் வெளியிட்ட பதிப்புகள் வரை எந்தப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிப்பிற்கும் இல்லாத தனிச் சிறப்பு ஆகும். ஏழு திருமுறைகளுக்கும் தொடர் எண் கொடுக்கப்பட்டு விட்டமை யால் ஒரே கருத்து மூவர் பாடல்களில் எங்கெங்கே உள்ளன என்பதை மிகச் சுருக்கமாக அவ்வெண்களைக் குறிப் பிட்டுக் காட்டுவதன்மூலம் செய்ய முடிந்தது. இவற்றுடன் திருவாசகப் பாடல் எண்ணையும் குறித்துள்ளார். இப் பணியைத் தாம் ஒருவராகவே செய்து முடித்த பெருமை மா.பா. அவர்களையே சாரும்.'' (''தேவாரத் திருப்பதிகங்கள்'' – கங்கைப் புத்தக நிலையம் – 1998 – அ.ச. ஞானசம்பந்தன் – பதிப்பாசிரியர் முன்னுரை).

நூல்கள் பதிப்பித்ததோடு, ''சித்தாந்தம்'' இதழில் அறிவியல் கண்ணோட்டத்திலும், ஆங்கில நூல்களின் மேற்கோள்களுடனும் பல கட்டுரைகள் எழுதி வந்தார்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு 36 ஆண்டுகளுக்கு மேலாகப் பல நிலைகளில் பணியாற்றிய மா. பாலசுப்பிரமணிய முதலியார் 14.3.1958 அன்று இறைவனடி சேர்ந்தார்.

(பிறப்பு – 8.3.1896; மறைவு – 14.3.1958; ஊர் – மயிலாப்பூர்; பெற்றோர் – மாசிலா மணி முதலியார், அன்னம்மையார்)

துணை இதழ்கள் : ''சித்தாந்தம்'' 1958 ஏப்ரல்.

40
சைவப் பஞ்சாங்கம் வெளியிட்ட சுப்பிரமணியனார் (1896)

''சுமார்த்தர்களின் பஞ்சாங்கத்தினாலும் புரோகிதத்தினாலும் சைவசமயக் கொள்கை களும் விரதம் முதலானவைகளும் திரு விழாக்களும் மறைந்து சுமார்த்த மயமாகி வருவதனால் சைவப் பஞ்சாங்கம் உருவாக் கினால் சைவப்பயிர் நிலைக்கும்'' என்று சைவப் பேரறிஞர்கள் சிலர் நினைத்தனர். அதனையே குறிக்கோளாகக் கொண்டு ஒரு பெரியவர் பெருமுயற்சி செய்து பலரு டைய உதவிகொண்டு சைவப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டார். தன் வாழ்நாள் வரை இம்முயற்சியைத் தொடர்ந்தார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இப்பஞ்சாங்கத்தைத் தொடர்ந்து வெளி யிட்டது. அப்பெரியவர் திரு. இ.மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆவார். ஆண்டு 1917.

பஞ்சாங்கம் வெளியிட்டதோடு அவர் பணி நின்றுவிடவில்லை. பல ஊர்களில் அமைப்புகள் ஏற்படுத்தி சைவம் வளர்த் தார். பத்தமடை சைவசித்தாந்த சபை, மேலைச் செவல் சைவசித்தாந்தச் சபை, சிவாலயப் பணிவிடைச் சங்கம், நான்கு நேரி சிவகாமி திருவருட் சங்கம், கிருஷ்ணா புரம் சைவ முன்னேற்றச் சங்கம் ஆகிய வற்றை அமைத்து நடத்தினார்.

சமயச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தி னார். ''தம்பிரான் தோழர்'', ''திருவெம் பாவைக் குறிப்புரை'' முதலான நூல்களும் எழுதி வெளியிட்டார்.

77 ஆண்டுகள் வாழ்ந்து 1975-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

(1896 – 1975; பிறந்த ஊர் – எட்டையபுரம் நடுவிற்பட்டி)

41
சைவப் புராண மும்மணிகளை எடுத்துரைத்த நன்மணி (1896)

நாற்பது ஆண்டுகளாக சைவப் புராணங் களில் மும்மணிகளாகத் திகழும் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்ற மூன்றினையும் நூறு தடவைக்கு மேல் ஒரு பெரியவர் திரு வல்லிக்கேணியில் சொற்பொழிவாற்றி இருக்கின்றார். சுமார் இரண்டு ஆண்டுகள் (1949–50) தொடர்ந்து பெரியபுராணச் சொற்பொழிவு நிகழ்த்தி இருக்கின்றார்.

சைவப் புராணங்களும், நாயன்மார் வரலாறுகளாகவும் நாற்பது நூல்களை வெளியிட்டிருக்கிறார். சென்னையில் சில கோயில்களிலும், பெங்களூரிலும் சேக் கிழார் சிலையை நிலைப்படுத்தியிருக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிறார். இருபது இடங்களில் பன்னிரு திருமுறைக் கோயில்களை நிறுவியிருக்கி றார். அவரே சித்தாந்த வித்தகர் கயப் பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் ஆவார்.

(1896 – 1925; கயப்பாக்கம்)

42

சேய்த்தொண்டர் புராணம் பாடிய மெய்த்தொண்டர் (1896)

சிவனருள் பெற்ற அடியார்கள் பெருமையினைப் பாடியது பெரிய புராணம். முருகனருள் பெற்ற அடியார் களைப் பற்றிப் பாட ஒரு அடியவருக்கு எண்ணம் வந்தது. அந்த நூலே சேய்த் தொண்டர் புராணம் ஆகும். இப்புராணம் செந்தில் வாழ் அந்தணர், அகத்தியர் முதலான 78 முருகனடியார்களின் வர லாற்றைக் கூறுகிறது. பாடல்களின் தொகை 3333 ஆகும். இதனைப் பாடியவர் வே.செ. சொக்கலிங்கனார் ஆவார்.

இவர் சேய்த்தொண்டர் புராணத்தோடு சேய்த்தொண்டத் தொகை, சேய்த் தொண்டத் திருவந்தாதி, சேய்த்தொண்டர் போற்றிக் கலிவெண்பா ஆகிய நூல் களையும் இயற்றியுள்ளார்.

''செந்தில்வாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்
தென்மலைய முனிவர்க்கும்
பகீரதற்கும் அடியேன்
கந்தவேட்கினிய முசுகுந்தனார்க்கு
அடியேன்
கருதுதுடுப்பூர் நாகனார் அடியார்க்கும்
அடியேன்
அந்தமில்சீர் நக்கீரர் அடியார்க்கும்
அடியேன்
அருளார்நல் லியக்கோடர்
ஔவையார்க்கடியேன்
எந்தைபிரான் சேந்தனார் அடியார்க்கும்
அடியேன்
எம்மான்எந் திருத்தணிகை
அம்மானுந் தானே''

என்று திருத்தொண்டத்தொகை போலவே பாடியுள்ளார். திருத்தொண்டத் தொகை பாடியருளிய சுந்தரருக்கும் உலா பாடுகிறார்.

''ஆற்றிலிட்ட பொற்குவையை
ஆரூர்க்குளத்தரனைப்
போற்றியெடுத்த புலவர் வந்தார் – சேற்றுத்
தடமுதலை யுண்ட தனையனைமீட்
டன்றி
மடவரல்பா லீந்தகோ வந்தார்''

என்று போகிறது சுந்தரர் உலா. சுந்தரர் உலா 782 கண்ணிகளைக் கொண்டது. சொக்கலிங்கனார் ''முருகச் சிவதோத்திரத் திரட்டு'' தேனூர்ப்புராணம்'' முதலான நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய வரலாற்றையே அருட்கவி சேதுராமன் பாடியுள்ளார். கவியும் பாடி கவிக்குப் பொருளும் ஆகிய பெருந்தகை சொக்கலிங்கனார் ஆவார்.

(1896 – 1961 ; தேனூர், திருச்சிக்கு அருகாமை)

43

யோகமும், விஞ்ஞானமும் கலந்த சமயோகத்தை முன்வைத்த கவியோகி (1897)

யோகத்தால் அகவாழ்வு;
விஞ்ஞானத்தால் புறவாழ்வு;

இரண்டும் இணைந்ததே சமயோகம். இதுவே கவியோகி சுத்தானந்த பாரதியாரின் செய்தியாகும். இச்செய்தியை முன்வைப்பதே சுத்தானந்த யோகசமாஜம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதன் முதல் செயல் திட்டமே சுத்தானந்த பாரதி தேசிய வித்தியாலயம் பள்ளி.

கவியோகி கவிதைகள், கீர்த்தனைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் என நூற்றுக்கணக்கான நூல்கள் படைத்திருந்தாலும், பெரியபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததே அவர் சைவத்திற்குத் தந்த ஒப்பற்ற பங்களிப்பு ஆகும்.

ஆலயங்களில் தமிழ் மந்திரங்கள் முழங்க "மந்திரமாலை", "வேதசாதனம்" எனும் நூல்களை யோகியார் வழங்கியுள்ளார்.

பிரெஞ்சு, வடமொழி, ஆங்கிலம், தெலுங்கு, வங்காளம், கன்னடம் போன்ற பல மொழிகளில் புலமை பெற்ற யோகியார் தமது 93-வது வயதில் உயிர் நீத்தார்.

(1897 – ; பிறந்த ஊர் – சோழபுரம், சிவகங்கை)

44

தமிழ்க் கடலா? சைவக் கடலா? (1898)

தமிழ்ப் பாடல் ஒரு சிலவற்றையாவது நினைவில் வைத்துக் கொள்ளும் பழக்கம் இன்றைய நாளில் அற்றுப் போய்விட்டது.

திருவாசகப் பாடல்கள் முழுமையும், தேவாரப் பாடல்கள் பெரும்பான்மையும், பெரிய புராணத்தில் சரிபாதிக்கு மேலும், திருமந்திரம், திருவிசைப்பா, பதினோராந் திருமுறை ஆகியவற்றில் ஏராளமான பாடல்களும் ஒருவர் நினைவில் வைத்து இருந்தால் அவரை என்னவென்று சொல்வது? அவர்தான் ராய. சொ. என்று அழைக்கப்பட்ட ராய. சொக்கலிங்கனார் அவர்கள்.

ராய. சொ. அவர்கள் திருவாசகம் பேசினால் கல்லும் கரையும்; கண்ணீர் பெருகும். இப்பெருமகனார் எழுதிய நூல்களும் பலவாகும். இவர் வெளியிட்ட நூல்கள்; திருவாசகத் தேன், தேவாரமணி, பாவைப் பாட்டு, திருமுறைத் தீங்கனி, அண்ணாமலை மாலை, தில்லைத் திருநடம், நால்வர் வணக்க மாலை, பெரிய புராணப்



பேரமுதம், பூஜைப்பாமாலை, திருக்கானப் பேர்ப் பாமாலை, சிவபுராணம் முதலான 25 இறைவணக்கப் பாடல்களின் தொகுப்புகள்; ஐந்து உரைநடை நூல்கள்; எட்டு கவிதை நூல்கள்; சைவ எல்லப்ப நாவலரின் அருணாசல புராண உரை உள்ளிட்ட ஐந்து பதிப்பு நூல்கள்; கம்பனும் சிவனும், வில்லியும் சிவனும் என்ற ஆராய்ச்சி நூல்கள்; திருத்தலப் பயணம்; பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல், மதுரைக்காண்டம் குறிப்புரை.

வாழ்நாள் முழுதும் தமிழ்ப்பணி செய்த ராய. சொ. தமது 76-ஆவது வயதில் 30.9.1974-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனடி அடைந்தார்.

(1898 – 1974; பிறந்த ஊர் – காரைக்குடி)

45

ஆட்சி மொழிக் காவலரா? சைவ நெறிக் காவலரா? (1899)

1960..........திருக்கேதீச்சுரம் .... சைவசித்தாந்தப் பெருமன்ற மாநாடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடைபெறுகிறது. ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் மேடைக்கு வருகிறார். ''திருவெம்பாவை'' பற்றிப் பேசுகின்றார். அங்கே ஒரு நாடகமே அரங்கேறுகிறது. அப்படி ஓர் உணர்ச்சி பூர்வமான உரை!

இராமலிங்கனார் இதே போல பலசொற் பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவர் எழுதியுள்ள சைவ நூல்கள் குறைவே. ஐந்தே நூல்கள். தமிழில் ஆட்சிச் சொற்கள் புழங்கவும், தமிழில் திருமணம் முதலான சடங்குகள் நடக்கவும் அவர் ஆற்றிய பணி பெரியது.

இராமலிங்கனார் முழுவாழ்வு வாழ்ந்து 1985-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

(1899 – 1985; கிழைச்சேரி, செங்கல்பட்டு மாவட்டம்)

46

ஆயிரக்கணக்கான சைவர்களுக்குச் சிவதீக்கை வழங்கிய சூரியனார் கோயில் சுவாமிகள் (1899)

சூரியனார் கோயில் ஆதீனம் பொருள் வளத்தால் சிறிதாகக் காணப்பட்டாலும் அருள் வளம் நிரம்பியது. கந்தபரம் பரையைச் சேர்ந்த அவ்வாதீனத் தலைவ ராய் 1918 வரை இருந்த முத்துக்குமார தேசிகர் அவர்கள் சைவநெறி முறைகளை நன்கு அறிந்து பல சீடர்களைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் தமக்குப்பிறகு மீனாட்சிசுந்தர தேசிகருக்கு ஆதீனத் தலைமை கிடைக்க ஏற்பாடு செய்தார்கள்.

ஆதீன முதல்வரான சிவாக்கிரக யோகி களின் கிரியா தீபிகை, சிவாக்கிர பத்ததி ஆகிய வடமொழி நூல்களைச் சுவாமிகள் தேர்ந்தமையினால் சிவதீக்கை, சிவபூசை செய்வதில் தன்னிகரற்று இருந்தார்கள்.

ஆதீனத்தில் பணிபுரிந்த அலுவலாளன் வஞ்சனையால் ஆதீனத்தைக் கைப்பற்றிச் சுவாமிகளை வெளியேற்றிவிட்டான். இதனை எதிர்த்து வழக்காடுமாறு சுவாமி களைப் பலரும் வற்புறுத்தியும் சுவாமிகள் வழக்காடாமல் மடத்தை விட்டு நீங்கி தமிழ்நாடெங்கும் பயணம் செய்தார்கள். ஆயிரக்கணக்கான சீடர்களுக்குச் சுவாமிகள் சிவதீக்கை தந்தார்.

சுவாமிகள் சிவபூசைக்குப் பயன்பட ஆன்மலாபதீபிகை, ஆன்மார்த்தபூசை என்ற நூல்களும், சிவஞான போதத்திற்கு விளக்க மாக இறைஞானபோதம் என்ற நூலும் எழுதியுள்ளார்.

1973-ஆம் ஆண்டில் சுவாமிகள் அன்னப்பன் பேட்டையில் இறைவன் திருவடியை அடைந்தார்கள்.

(1899 – 1973; சேற்றூர், பாண்டிநாடு)

47

திருவாசகத் தேன் வழங்கிய இராமநாதனார் (1899)

சித்பவானந்தரின் ''தர்ம சக்கரம்'' இதழில் ''திருவாசகத் தேன்'' என்ற கட்டுரைகள் தொடர்ந்து வந்து படிப் போர்க்கு இன்பம் தந்தது. அத்தேனை அள்ளித் தந்தவர் திரு.கோ. இராமநாதன் செட்டியார் ஆவார். அக்கட்டுரைகள் பின்னால் நூல் வடிவம் பெற்றன.

செட்டியார் அவர்கள் மலேயாவில் இருந்தபொழுது பல்கலைக்கழக மாணவர் களுக்கு திருவாசகம், சிவஞானபோதம் போன்ற நூல்களைக் கற்பித்தார். மேலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலேயாவில் பெரியவர்களுக்கான சைவ சித்தாந்த வகுப்புகள், பன்னிரு திருமுறை மாநாடுகள், சொற்பொழிவுகள், பிரார்த்தனைக் கூட்டங்கள், அந்தர் யோகங்கள் நடத்தினார். 1955-ஆம் ஆண்டில் மலேயா அருள்நெறித் திரு கூட்டம் நிறுவி அதன் தலைவராகப் பத்தாண்டுகள் பணி புரிந்தார்.

1965-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுதே உயிர் நீத்தார்.

(1899 – 1965; பிறந்த ஊர் – பள்ளத்தூர், செட்டிநாடு)

48

நூற்றுநாற்பத்தைந்து சைவ நூல்கள் எழுதிய தசமீ (1900)

''தசமீ'' என்று அன்போடு அழைக்கப்பட்ட த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 1949-ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீன வித்வானாக அமர்ந்த பிறகு ஆதீனத்திலிருந்து வெளிவந்த நூல்கள் அனைத்திற்கும் ஆராய்ச்சி முன்னுரை, குறிப்புரை உரையுடன் வெளியிட்டார். இவ்வாறாக 136 நூல்கள் ஆதீன வெளியீடாகவும் ஒன்பது நூல்கள் கோயில் வெளியீடாகவும் வெளியிட்டார்.

(1) பூப்பிள்ளை அட்டவணை (2) சதமணி கோவை பொழிப்புரையுடன் (3) சமயம் (4) திருச்சிற்றம்பல தேசிகர் தலம், பதம் குறிப்புரையுடன் (5) அத்துவித வாக்கியர் தெளிவுரை (6) சிவஞானபோத சூத்திரம் பதவுரை (7) திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ் (8) முத்தி பஞ்சாக்கர மாலை, நமச்சிவாய மூர்த்தி திரட்டு (9) தேசிக புராணம் (10) மாதவச் சிவஞான யோகிகள் சிறு பிரபந்தங்கள் (11) திருவாவடுதுறை ஆதீன வரலாறு (12) பாரததாற்பரிய சங்கிரகம் (13) உலகுடை நாயனார் கழிநெடில் முதலியன (14) கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி குறிப்புரையுடன் (15) அம்பலவாணர் தேசிகர் நினைவுமலர் (16) சந்தானாசாரியார் புராண சங்கிரகம் குறிப்புரையுடன் (17) சந்தான குரவர் நான்மணி மாலை குறிப்புரையுடன் (18) விநாயகரகவல் (19) திருவுந்தியார் பழைய உரை (20) திருக்களிற்றுப்படியார் பழைய உரை (21) கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி உரை (22) சைவப் பேரரசு (23) திருவஞ்சைக்களம் தேவாரம் உரையுடன் (24) திருமந்திர சிந்தனை (25) வடதிரு முல்லை வாயில் அந்தாதி பதவுரையுடன் (26) வடக்கன் வேங்கடம் தெற்கட்குமரி என்னும் தொடர்க்கு எழுந்த வாதம் (27) சோமேசர் முதுமொழி வெண்பா மூலம் (28) சிவஞானபோதம் பழைய உரையுடன் (29) திருக்கோகர்ணம் திருப்பதிகம் உரையுடன் (30) திருஞான சாகரம் மூலம் (31) இருபா இருபஃது பழையவுரை (32) துகளறு போதப் பொழிப்புரையுடன் (33) கந்த புராண தத்துவம் உரைநடை (34) சகலகலா வல்லி மாலை உரையுடன் (35) திருவெம் பாவைக் கருத்து (36) திருப்பருப்பதம் தேவாரம் உரையுடன் (37) திருவெம் பாவைக் கருத்து (38) சிவபூசைத் திரட்டு (39) சிவப்பிரகாசம் சிதம்பரநாத முனிவர் உரை (40) இரட்டையர் பிரபந்தம் தில்லைக் கலம்பகம் (41) திருவாமாத்தூர்க் கலம்பகம் (42) ஏகாம்பரநாதர் உலா (43) அமுதாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிகை பிரபந்தங்கள் (44) தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள் (45) கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள் (46) காசிகாண்டம் மூலம் (47) அரிகரதார தம்மியம் (48) பரப்பிரம்ம விளக்கம் (49) சங்கற்ப நிராகரணம் பழைய உரை (50) திருவருட்பயன் வினாவெண்பா பழைய உரை (51) திருமந்திரம் கயிலாய சித்தர் உரை (52) சிவஞானபோதச் சிற்றுரை (53) மறைஞான சம்பந்தர் சைவச் சிறு நூல்கள் (54) கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள் (55) கருத்த அநுட்டானவிதி (56) போற்றிப் பஃறொடை (57) கொடிக்கவி (58) நெஞ்சுவிடு தூது (59) சதாசிவ ரூபம் பழையவுரை (60) சிற்றம்பல நாடிகள் கலித்துறை முதலியன (61) உண்மை விளக்கம் பழையவுரை கட்டளைகளுடன் (62) சிவஞானசித்தியார் (63) திருமந்திரம் சிவயோகப்பகுதி (64) சிவஞானசித்தியார் பரபக்கம் தத்துவப் பிரகாசர் உரையுடன் (65) சுப்பிரமணியர் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ் குறிப்புரையுடன் (66) சிவஞானபோதம் பாண்டிப்பெருமாள் விருத்தியுரை (67) சிவயோக சிந்தனை (68) இரத்தின சபாபதி மாலை (69) சிவஞான சித்தியார் சுபக்கம் முதல் பாகம் (70) சித்தியார் மறைஞானசம்பந்தர் நிரம்ப வழகிய தேசிகர் உரை (71) சுப்பிரமணிய தேசிகர் மும்மணிக் கோவை (72) திருத் தொண்டர் மாலை (73) சிவஞானபோதம் பதவுரை (74) மூத்த நாயனார் இரட்டை மணி மாலை (75) சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் குறிப்புரையுடன் (76) அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் குறிப்புரையுடன் (77) சிவஞானசுவாமிகள் இரட்டைமணிமாலை உரையுடன் (78) திருச்செந்திற் கலம்பகம் குறிப்புரையுடன் (79) முப்பொருள் விளக்கம் (80) தணிகைப்புராணம் குறிப்பு ரையுடன் (81) சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது குறிப்புரையுடன் (82) செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் குறிப்புரையுடன் (83) சிவப்பிரகாசம் உரைநடை (84) நேபாளமும் கேதாரமும் (85) சுப்பிரமணிய தேசிகர் மாலை குறிப்புரையுடன் (86) அம்பலவாணர் தேசிகர் பிள்ளைத்தமிழ் குறிப்புரையுடன் (87) சிவதத்துவ விவேகம் குறிப்புரையுடன் (88) திரிபதார்த்த சிந்தனை. (தோற்றம் – 1900; மறைவு – 1972)

49

ஞானாசிரியராய் விளங்கிய சைவ சித்தாந்த சரபம் (1900)



சிந்தை, மொழி, செயல் ஆகிய மூன்றிலும் சைவநெறி பிறழாது இருந்தவர் ஈசான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள். சுவாமிகள் ஆன்மார்த்த பூசை, அக்கினி காரியம் ஆகியன எந்தநாளும் விடாது செய்து வந்தார்கள். சுவாமிகளிடம் தீட்சை பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆவர். வாழ்க்கையில் சிவாகம விதிகளைக் கடைப்பிடித்தே எல்லா சடங்குகளையும் செய்து வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். சுவாமிகள் இதனைத் தம்மறைவிற்குப் பின்னும் செயற்படுத்த அகோர சிவாச்சாரியார் எழுதிய அபரக் கிரியை பத்ததியை முன்னதாகவே தமது மனைவியாரிடமும் மகனிடமும் கொடுத்து வைத்து அவ்வாறே செய்யச் சொல்லி இருந்தார்கள்.

சிவாகமச் சுவடிகள் நேபாளம், காஷ்மீர் முதலிய இடங்களில் இருப்பது அறிந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாரணாசிக்குச் சென்று பதினைந்து ஆண்டுகள் தங்கிப் பலசுவடிகளைப் பிரதி செய்து கொண்டு வந்தார்கள்.

இவர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் இவர்கள் கலந்து கொள்ளாத சமய விழாக்களே இல்லை எனலாம். 1941-ஆம் ஆண்டில் தருமை ஆதீனத்தில் இவர்கள் ஆலோசனை கேட்டு இவர்கள் தலைமை யில் ''மெய்கண்டார் சித்தாந்த மாநாடு'' நடைபெற்றது. அவ்வமயம் இவர்களுக்குச் ''சைவச் சித்தாந்த சரபம்'' என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

1963-ஆம் ஆண்டு சுவாமிகள் சிவசாயுச்சியப் பேறு பெற்றார்கள்.

(தோற்றம் – 16.6.1900; மறைவு – 1963)

பெற்றோர் – திருக்கடவூர் – சிவசுப்பிர மணியக் குருக்கள்;

பிறந்த ஊர் – சென்னிமலை

துணை நூல் : தத்புருஷதேசிகர் முத்து விழா மலர் – 1995.

50

வழிநடை – வாழ்க்கை வருத்தம் தெரியாதிருக்க, அழியாப்புகழ் தந்த – காவடிச் சிந்து பாடியவர்

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

வழிநடை வருத்தம் – வாழ்க்கைப் பயணச் சோர்வு – எதுவாயினும் அண்ணா மலை ரெட்டியாரின் காவடிச் சிந்தினைப் பாடினால் தீர்ந்து விடும். குறவஞ்சிக்குக் குற்றாலக் குறவஞ்சி போல – பள்ளுக்கு முக்கூடற் பள்ளு போல – காவடிச் சிந்திற்கு அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து சிறந்து விளங்குகிறது.

''தென்னுதமி ழுக்குதவு சீலன் தமிழ்
செப்புமண்ணா மலைக்கனு கூலன் மிகு
செழியபுகழ் விளைத்த கழுகுமலை வளத்தைத்
தேனே சொல்லுவேனே''

என்ற கழுகுமலைக் காவடிச் சிந்து பாடல்களைப் பாடும்பொழுது நம் சோர்வு நீங்குகிறது. கழுகுமலைக்குக் காவடி கட்டிக் கொண்டு ஊற்றுமலைப் பெருநிலக் கிழாராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவர் சென்ற பொழுது ரெட்டியார் வழிநடை வருத்தம் தீரப்பாடிக் கொண்டே வந்தாராம். இதனால் பெருநிலக் கிழாருக்கு வழிநடை வருத்தமே தெரியாமல் போயிற்று.

தமிழில் இவ்வளவு நல்ல பாடல்களைப் பாடிய அண்ணாமலை ரெட்டியார் தமிழ் மொழி கற்பதற்கே பொருள் ஏதும் இல்லா தவராக இருந்தார். தினமும் கூலி வேலை செய்து பிழைத்து உண்ண வேண்டிய நிலைமை. வேலையில்லாத நாட்களில் அவ்வூரில் இருந்த ஒரு மடத்திற்குப் போய் வருவது வழக்கம். அந்த மடத்திற்கு வந்து தங்கிய சுந்தர அடிகள் என்பவர் தாமே அவருக்குத் தமிழ் கற்றுத் தந்தார். ரெட்டியாரின் தமிழ்ப் புலமையை மேலும் வளர்க்க எண்ணிய அடிகளார் சேற்றூர் அரசரிடம் கொண்டு போய் விட்டு அங்கேயே தங்கச் செய்தார். பின்னர் ரெட்டியார் ஊற்றுமலைப் பெருநிலக் கிழாராகிய இருதயாலய மருதப்பத் தேவரின் அவைக்களப் புலவ ராக இருந்தார். புலமையில் மிகப் புகழ் பெற்று பாடல்கள் (சிற்றின்பப் பாடல்கள்) பல பாடினார். நோயினால் பீடிக்கப்பட்டுத் தமது முப்பதாவது வயதில் உயிர் நீத்தார்.

(தோற்றம் – 1781; பிறந்த ஊர் – கரிவலம் வந்தநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்; பெற்றோர் – சென்னவரெட்டியார், ஒவு அம்மாள்;)

51

சைவ நூல்கள் பதிப்பில் முன்னோடி

(19-ஆம் நூற்றாண்டு)

சைவ நூல்கள் வெளியீடு என்றால் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்றாகிவிட்டது. ஆனால் அவர்களுக்கு முன்பாகவே பத்தொன்பதாம் நூற்றாண் டில் சென்னையைச் சேர்ந்த B. இரத்தின நாயகர் என்பார் சைவ நூல்களையெல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறைந்த விலைக்குப் பலபதிப்புகளாக வெளிக்கொணர்ந்தார்.

பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு உரையும், தாயுமானவர் பாடற் றிரட்டு – உரையுடன், சிவவாக்கியர் பாடல், திருவாசகம் கா்.சு. பிள்ளை உரை, பன்னிரண்டு பன்னிருசதகத் திரட்டு, தேவி பராக்கிரமம் ஆகிய நூல்களின் வெளி யீடுகள் பற்றி மட்டுமே நமக்குத் தெரிய வந்துள்ளன.

52
சிவ பராக்கிரமம் எழுதிய இரத்ன வேலர்
(19-ஆம் நூற்றாண்டு)

ஈக்காடு இரத்தின வேலு முதலியார் சிவபராக்கிரமம், தேவி பராக்கிரமம் முதலான நூல்களும், திருவிளையாடற் புராணம், விநாயக புராணம், காசி காண்டம் ஆகியவற்றுக்கு உரைகளும் எழுதியவர். ஈக்காட்டில் பிறந்தவர். இவரது ''சிவபராக்கிரமம்'' 1895-ஆம் ஆண்டில் வெளிவந்தமையால் அதற்கு முன்பே பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

53
திருப்புகழ் பலவும் மெய்த்துணையாகக் கொடுதேடி யாவரும் பெறச் செய்தவர்
(19-ஆம் நூற்றாண்டு)

பல்லாயிரக் கணக்கான தேவாரப் பதிகங்கள் இருந்தும் கிடைக்காமல் போய் விட்டன. நம்பியாண்டார் நம்பி தேவாரத் திருப்பதிகங்களைத் தேடித் தொகுக்கா விட்டால் இப்பொழுது கிடைத்துள்ள பாடல்களும் கிடைக்காது போயிருக்கும்.

அதுபோல திருப்புகழ் 16000 பாடல்கள் இருந்தாலும் அவை முழுதும் கிடைக்க வில்லை. மாவட்ட ரிஜிஸ்டராக இருந்த வடக்குப்பட்டு த. சுப்பிரமணிய பிள்ளை என்பவர் 1870-ஆம் ஆண்டில் தூண்டப் பட்டு பல இடங்களில் தேடி, ஓலைச்சுவடி களை ஆராய்ந்து 1304 பாடல்களைத் தொகுத்து வழங்கினார். அவற்றை மூன்று பாகங்களாக அச்சிட்டார். இப்பெருமகனார் இல்லையேல் திருப்புகழ் கிடைத்தி ருக்காது.

54
அற்புதங்கள் நிகழ்த்திய நற்றவ முனிவர்
(19-ஆம் நூற்றாண்டு)

கோயிலூர் ஆண்டவர் ......சுரத்தால் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறார். ஒரு அந்தணச் சிறுமி அருகில் வந்து பருக நீர் தருகிறாள். ''இந்த நீரைப் பருகினால் காய்ச்சல் தீர்ந்து விடும்'' என்கிறாள். ஆண்டவர் திரும்பிப் பார்ப்ப தற்குள் அவள் மறைந்து விடுகிறாள். அவள் கொப்புடையம்மையே என மக்கள் போற்றினர்.

பிறிதொரு சமயம் ஆண்டவர் ''ஞானவாசிட்டம்'' நூல்படித்து முடிந்த மைக்கு விழா எடுக்கத் தந்தையிடம் பொருள் கேட்டார். தந்தையார் வாயே திறக்கவில்லை. ஆண்டவர் வெகுண்டு ''நும் காது செவிடாகிவிட்டதோ?'' என்றார். மறுகணம் தந்தையார் காதுகள் கேட்கவில்லை. தந்தையார் பதறிப்போய் ஆண்டவரின் குருநாதர் உகந்தலிங்க தேசிகரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி னார். உகந்தலிங்க தேசிகர் ஆண்டவரை நோக்கி ''இவருக்குத் திருநீறு வழங்கு'' எனக் கட்டளையிட்டார். ஆண்டவரும் தந்தையாருக்குத் திருநீறு வழங்க காது கேட்கத் தொடங்கியது.

கோவிலூரில் உள்ள கொட்டகையில் வீற்றிருந்தருளும் இறைவன் இறைவியைத் தரிசிப்பது ஆண்டவர் வழக்கம். கடும் மழையில் கொட்டகை வீழ்ந்து விட்டது. ''இதனைக் கருங்கற் பணியாகச் செய்து முடிப்போம்'' என உறுதி பூண்டு ஆண்டவர் வீடு திரும்பினார். காரைக்குடி திரும்பிய ஆண்டவர் கோயில் திருப் பணியை மறந்து விட்டார். இறைவி ஆண்டவரின் அன்னையாரின் கனவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோன்ற ''கோயில் பணியை முடிக்கச் சொல்'' என்று கட்டளையிட்டார். இதனைக் கேட்ட ஆண்டவர் கண்ணீர் சொரிந்து போற்றினார். ஆண்டவர் கல்லால் திருப்பணி செய்ததோடு, கருவறை, அரசகோபுரம், விமானம், தடாகங்கள், நந்தவனம், தென்னஞ்சோலைகளால் சூழப்பட்ட திருவீதிகள், தேர்கள், மடம் முதலியவைகளை தனவணிகர்களைக் கொண்டு செய்வித்துக் கோயிலூரை அழகு படுத்திவிட்டார்.

காரை நகரில் கண்மாய்க்கரையில் சிவலிங்கம் பூசை இன்றி இருந்தது. அச்சிவ லிங்கத்தையும் அம்மை கனவில் ஆணை யிட்ட வண்ணம் திருக்கோயிலில் இடம் பெறச் செய்தார்.

ஒரு நாள் நள்ளிரவில் கொற்றவாளீசுரர் உமாதேவியோடு ஆண்டவருக்குக் காட்சி யளித்தார்.

பிறிதொரு சமயம் கோயிலூருக்கு அருகில் ஐயனார் கோயில் சுவரில் புற்று வளர்ந்திருந்தது. இதனைக் கண்ணுற்ற ஆண்டவர் மக்கள் தந்த பணத்தைத் தச்சன் தவறாகப் பயன்படுத்தி இந்த விதமாக சுவர் எழுப்பியுள்ளான் என்பதனை அறிந்தார். ஆண்டவர் தச்சனிடம் கோயிலைக் கட்டி முடிக்கக் கட்டளையிட்டார். தச்சன் காலந் தாழ்த்தியே இருந்தான். தச்சன் மனைவி கருப்பம் தரித்தாள். ஆனால் உதிரம் பெருகி ஓடத் தொடங்கியது. தச்சன் பயந்து போய் ஆண்டவர் காலில் விழுந்து வணங்கினான். ஆண்டவர் தச்சனுக்குத் திருநீறு வழங்கி ''வீட்டுக் கூரை மேல் போடுவாயாக'' எனக் கட்டளையிட்டார். அவ்வாறே அவன் கூரையில் திருநீறைப் போட கூரை எரியலாயிற்று. தீயை அணைத்த தச்சன் மனைவியின் உதிரப்போக்கும் நின்றது. தச்சனும் ஐயனார் கோயிலைக் கட்டி முடித்தான்.

ஆண்டவர் தாம் வீடு பேறடையும் நாளை உணர்ந்தார். தம் சீடர்களை எல்லாம் வரவழைத்தார். ஆண்டவர் பிலவங்க வருடம் பங்குனி மாதம் வீடுபேறு அடைந்தார். அவர் திருவுடலைச் சமாதி யில் வைத்து வழிபடலாயினர்.

ஆண்டவரால் உருவாக்கப்பட்டதே கோயிலூர் மடாலயம்.

(காலம் – 19-ஆம் நூற்றாண்டு; காரைக்குடி; இயற்பெயர் – முத்துராமலிங்க தேசிகர்)

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

IV

ஆன்றோர்கள் - அறிஞர்கள் (19-ஆம் நூற்றாண்டு)

குறிப்புகள்

(1) ஆசிரியர் பெயர் (2) ஆண்டு (3) பிறந்த ஊர் (4) எழுதிய நூல்கள் (5) பிற சைவசமயப் பணிகள்.

(ஈழத்து அறிஞர்களுக்காகத் தனியாக ஒரு பிரிவு ஒதுக்கி இருந்தாலும், இப்பகுதியிலும் அவர்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன)

(1) குமாரசுவாமி முதலியார்; 1803; குன்றத்தூர், சென்னை; சுப்பிரமணிய பதிகம், பழநி மும்மணி மாலை, தண்டாயுதபாணி கலித்துறைப் பதிகம், தண்டாயுதபாணி ஒரு பா ஒரு பத்து, கந்தபுராணக் கீர்த்தனை.

(கந்தபுராணம் முழுமையும் இசைப் பாட்டாக பாடப்பட்டது)

(2) எல்லிஸ்; 1819; இங்கிலாந்து; ''நமச்சிவாயப் பாட்டு''.

(3) கருத்த முத்துப் பிள்ளை; 1816 – 1895; எட்டயபுரம்; திருபுவனப் புராணம் சிவத்துவ சிதாரிதி, சிவகிரி குமரக் கடவுள் பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர் முருகர் கலித்துறை அந்தாதி, திருச்செந்தூர் முருகர் பதிற்றுப் பத்தந்தாதி, திருச்செந்தூர் முருகர் வெண்பா அந்தாதி, வில்வவனப் புராணம்.

(4) வரகவி ஆறுமுக முதலியார்; 1827 ; கருவம்பாகை, தொண்டை நாடு; ''பூம் பாவையார் விலாசம்'' எனும் நாடகம்.

(5) தொழுவூர் வேலாயுத முதலியார்; 1832 – 1889; தொழுவூர், தொண்டை நாடு; சிவாட்டோத்தர சதநாம மஞ்சரி, சீபாதத் திருப்புகழ் மாலை, திருவடித் திருப்புகழ் மாலை, திருப்பதி அழகாயிரத் தந்தாதி, அடைக்கலமாலை, அபய மாலை, சிறு விண்ணப்ப மாலை, சரணாகதிமாலை, அம்பலக்குறம், கையடைமாலை, சந்நிதி முறையீட்டு மாலை, ஓலமாலை, தைரிய சூனியமாலை என சிவபெருமான் பற்றி 18 நூல்களும் ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய நம்பிகள் என 38 நூல்களும் இயற்றியுள்ளார். வள்ளலாரின் சீடர்.

(6) ந.சி. கந்தையாப்பிள்ளை; 1837–1967; கந்தரோடை, ஈழ நாடு; ''சிவன்'', ''தமிழர் சமயம் எது'', ''இந்து சமய வரலாறு'', ''ஆரியத்தால் விளைந்த கேடு'', ''சிந்து வெளித்தமிழர்'', ''திரா விடம் என்றால் என்ன'' ''ஆரியர் வேதங்கள்'' உள்ளிட்ட 40 நூல்கள்.

(7) திருஞானசம்பந்த முதலியார்; 1838; படிந்தமங்கலம், ''தொண்டை நாடு'', உருத்திரகோடிக் கோவை.

(8) கந்தசாமி முதலியார்; 1838 – 1890; கருவூர்; திருப்பேரூர் கடவுளர் மீது 5 நூல்கள், கோட்டைச் சண்முகநாதர் பதிகம் முதலான 8 நூல்கள்.

(9) நீலகண்டதாசர்; 1838 –; பத்மநாப புரம், கேரளா மாநிலம்; ''திருநீலகண்ட போதம்''.

(10) விருதை சிவஞான யோகிகள்; 1840 – 1895; அவிநாசி; செப்பறை வெண்பா,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெல்லை அந்தாதி மாலை, தமிழ் மொழியும், சிவநெறியும், சிவகான விளக்கம் முதலான 15 நூல்கள்.

(11) வைரக்கண் வேலாயுத புலவர்; 1841 – 1895; காசிமேடு – சென்னை; திருக் குறிப்புத் தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை, அதிபத்தர் கீர்த்தனை, கைலாய நாதர் பதிகம், அருணாசலேசுவரர் வருகைப் பதிகம், அருணாசலேசுவரர் பதிகம் போன்ற 26 நூல்கள்.

(12) அரங்கநாத முதலியார்; 1844 – 1893; காசிக் கலம்பகம்.

(13) வ.த. சுப்பிரமணியப்பிள்ளை; 1846 – 1909; செங்கற்பட்டு; திருத்துறைப்பூண்டி தலபுராணம் உரைநடை, மானாமதுரைத் தல புராணம் உரைநடை, திருநீடூர்த்தல புராணம் உரைநடை, சிவத்தல மஞ்சரி.

(14) ரா. சபாபதி பிள்ளை; 1848 – 1918; கும்பகோணம், திருப்பேரூர் வெண்பா அந்தாதி, மதுரை திருஞானசம்பந்த சுவாமி கள் தோத்திரப் பாமாலை, திருப்பேரூர் புராண உரை, நடராசர் தோத்திர மாலை, திருவாதவூரடிகள் சரித்திரம், சிவஞான முனிவர் சரித்திரம் முதலான 28 நூல்கள்.

(15) கந்தசாமி பிள்ளை ; 1850 – 1920; அத்தி; பிரமநகர் விநாயகர், முருகன், அம்பாள் சுவாமி மேல் 5 நூல்கள், காஞ்சி அத்திகிரி அந்தாதி.

(16) ஆலாலசுந்தரம் பிள்ளை; 1852 – 1922; காஞ்சிபுரம்; சிவஞானபோத நுட்பம், காஞ்சிப் புராணம், திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார் ஆகியவற்றுக்கு உரை, பெரியபுராணத்தில் ஒரு பகுதிக்கு உரை.

(17) மு.ரா. அருணாசலக் கவிராயர்; 1852 – 1939; முகவூர், பாண்டிநாடு; திருப்பரங் கிரிப் புராண வசனம், திருப் பரங்கிரிப் பிள்ளைத்தமிழ், திருக்குற்றாலப் புராணம், சிவகாசித் தலபுராணம், சிவகாசி பதிற்றுப் பத்தந்தாதி, சிவகாசி வெண்பா அந்தாதி, நெல்லை வருக்கக்கோவை, பரங்கிரி அநுபூதி, பரங்கிரிக் கோவை முதலான பரங்கிரிபற்றி 9 நூல்கள்.

(18) ஆலாலசுந்தரம் பிள்ளை; 1853 – 1923; காஞ்சிபுரம்; நூல்கள் : சிவஞான போத நுட்பம், சிவஞானபோதக் கருத் துரை; உரைகள் : பெரிய புராண விருத்தி யுரை, காஞ்சிபுராண உரை, திருப்போரூர்ச் சந்நிதிமுறை உரை, திருவுந்தியார் உரை; திருக்களிற்றுப் படியார் உரை; ''ஞான பானு'' என்ற இதழ் தொடங்கி அதில் சைவ சமயக் கட்டுரைகள் எழுதி வந்தார்.

(19) சித்தாந்த சரபம் பூவை கலியாண சுந்தர முதலியார்; 1854 – 1918; பறங்கி மலை, பின்னர் பூவிருந்தவல்லி; திருப் பாசூர் புராண வசனம்; திருவலிதாய புராண வசனம், திருவேற்காட்டுப் புராண வசனம், திருவொற்றியூர்ப் புராண வசனம், சீகாளத்திப் புராண வசனம், சித்தாந்த சாதனக் கட்டளை, சித்தாந்த தசகாரியக் கட்டளை, மாசிலாமணி ஈசர் பதிகம், சேக்கிழார் வரலாறு, திருவான்மியூர்ப் புராணம், பட்டினத்தார் பாடற்றிரட்டு உரை, ஏகாம்பரேசன் பதிகம், சைவ சித்தாந்த வசன பூஷணம், பூவாளூர்ப் புராணம், திருவலிதாய புராணம் ஆகிய நூல்கள் எழுதியுள்ளார். திருவேற்காட்டுப் புராணம், சிவப்பிரகாசம் சித்தாந்தக் கட்டளை ஆகிய நூல்களைப் பதிப்பித் துள்ளார். 1918 முதல் சித்தாந்த இதழின் ஆசிரியராக இருந்தார். சென்னை சிவனடி யார் சங்கத்திற்கும், சிவனடியார் தலயாத்தி ரைச் சங்கத்திற்கும் தலைவராக இருந்தார். மறைமலையடிகளாரோடு சேர்ந்து மெய் கண்ட சந்தான சபையை நிறுவினார். இருவரும் ஒரு நூல் நிலையம் அமைத்த னர். 1918-ஆம் ஆண்டில் மறைந்தார். வடலூர் இராமலிங்க சுவாமிகளால் ''வாரும் ஞானப் பிள்ளாய்'' என்று அழைக்கப் பெற்றவர்.

(20) வெண்பாப் புலி வேலுசாமிப் பிள்ளை; 1854 – 1926; தில்லை விடங்கன் சிதம்பரம்; கந்த புராண வெண்பா (566 செய்யுள்), தேவார சிவத்தல வெண்பா, திருக்கச்சூர் ஆலக்கோயிற் புராணம், தில்லைவிடங்கள் புராணம், திருவேட்டக் குடிப் புராணம், தேவார வைப்புத் தலக் கட்டளைக் கலித்துறை, தில்லைவிடங்க நீரோட்ட யமக அந்தாதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(21) பெ. சுந்தரம் பிள்ளை; 1855 – 1897; ஆலப்புழை, திருவிதாங்கூர்; ஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி (மனோன் மணீயம்); திருவனந்தபுரத்தில் சைவப் பிரகாச சபை எனும் சபையை நிறுவினார்.

(22) பூபாலப் பிள்ளை; 1856 – 1921

(23) உலகம்மை அம்மையார்; 1856; வன்னிக்கோன் ஏந்தல்; சிவஞானப் பாடல்கள் (12 நூல்கள்)

(24) மகாவித்துவான் திருமயிலை சண்முகம் பிள்ளை; 1858 – 1905; சென்னை; முல்லைவாயிற் புராணம், திருமயிலை உலா, கபாலீசர் நவரத்தினம் முதலிய நூல்களும், பொன் வண்ணத்து அந்தாதி, திருக்கயிலாய ஞான உலா, திருவாரூர் மும்மணிக்கோவை முதலிய நூல்களுக்கு உரையும் எழுதியவர்; சிவவாக்கியர் பாடல் களைப் பதிப்பித்துள்ளார்.

(25) சோணாசல பாரதியார்; 1858 – 1925; காஞ்சிபுரம்; காஞ்சிபுரம் இறைவன் மேலும், திருவண்ணாமலைக் கடவுளர் மீதும் 13 நூல்கள் இயற்றியுள்ளார்.

(26) பீமகவிப்புலவர்; 1858 – ; குன்றக் குடிக்கு அருகே உள்ள செந்நெற்குடி; வாலநைடதம்; சிவபுரமான்மியம், சிவ புரம் மீனாம்பிகை பிள்ளைத் தமிழ்; செந்நற்குடி சண்முகநாதன் பிள்ளைத் தமிழ், கோட்டி மாதவன் பிள்ளைத் தமிழ், காரிகை வெண்பா.

(27) முத்துசாமிக் கோனார்; 1858 – 1944; திருச்செங்கோடு; திருச்செங்கோடு மான் மியம்; திருப்பணிமாலை; மும்மணிக் கோவை, ஒருபா ஒருபஃது அர்த்த சிவாம் பிகை நவகம்; இசைப்பாட்டு; அமர்நீதியார் சண்டன் வரலாறுகள்

(28) அண்ணாமலை ரெட்டியார்; 1861 – 1891; கருவை மும்மணிக் கோவை, கருவை அந்தாதி, கோமதி அந்தாதி, சங்கரநயினார் கோயில் திரிபந்தாதி.

(29) கவி முத்துச்சாமிப் பிள்ளை; 1862 – ; நடுவில்பட்டி; எட்டயபுரம் அருகில்; திருக்கழுகுமாலை, சிவக்கொழுந்து மாலை, சிவபெருமான் இரட்டை மணி மாலை.

(30) நாராயணசாமி ஐயர்; 1862 – 1914; பின்னத்தூர், திருத்துறைப்பூண்டி அருகில்; நீலகண்டேச்சுரக் கோவை, இடும்பவன புராணம், இறையனார் ஆற்றுப்படை, சிவபுராணம், களப்பாள புராணம், சிவகீதை முதலிய நூல்கள் .

(31) வடிவேல் செட்டியார்; 1863 – 1936; சென்னை; புனிதவதி நாடகம்.

(32) கருப்பையாப் பாவலர்; 1864 – 1907; கொட்டாம்பட்டி, மதுரை மாவட்டம்; திருஞானசம்பந்த மாலை, வடமுல்லை வாயில் மாசிலாமணி மாலை, முறையூர் மீனாட்சி சுந்தரரேசுவரர் பிரபந்தத்திரட்டு முதலான கவிதை நூல்கள்

(33) பால் வண்ண முதலியார்; 1866 – 1908; பேட்டை, திருநெல்வேலி; சித்தாந்த ஞான ரத்தினாவளி, பண்டார மும்மணிக் கோவை, பசுபதி பாசத் தொகையுரை, மெய்ஞ்ஞான சாரம்

(34) பாண்டித்துரைத் தேவர்; 1867 – 1911; ராமநாதபுரம்; தேவாரத்தலமுறைப் பதிப்பினை ஞானசம்பந்தப் பிள்ளையைக் கொண்டு முதலாவதாக வெளியிட்டார். சிவஞானசுவாமிகள் பிரபந்தத் திரட்டு வெளியிட உதவினார்.

(35) சங்கரதாச சுவாமிகள்; 1867 – 1922; தூத்துக்குடி; பார்வதி கல்யாணம், பிரபு லிங்க லீலை, சிறுத்தொண்டர் முதலான நாடகங்கள்.

(36) பொ. முத்தையா பிள்ளை; 1867 – 1936; சிவஞானபோதம், சிவஞான சித்தி யார் உரைகள், தசகாரிய விளக்கம், சிவ ஞானோத்தரம் நூல்கள்

(37) கோடீசுர ஐயர்; 1867 – 1938; பெருங்கரை (இராமநாதபுரம் மாவட்டம்) சுந்தரேசுவரர் பதிகம் உள்ளிட்ட நான்கு நூல்கள்

(38) ஞானசித்தர்; 1867; ஆழ்வார் திருநகரி; இராமேசுவரப் பதிகம் முதலான பல தலங்களைப் பற்றிய 108 நூல்கள்.

(39) சு. அச்சுதாநந்த அடிகள்; 1868 – கோவிந்தபுரம், சென்னைக்கு அருகாமை; தியானானுபூதி (சிவநாம சங்கீர்த்தனம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநீற்றியல், பஞ்சாக்கர இயல் முதலான 183 பகுதிகளைக் கொண்டது.)

(40) அரசன் சண்முகனார்; 1868 – 1915; சோழவந்தான்; ஏகபாத நூற்றந்தாதி, சிதம்பர விநாயகர் மாலை, திருவடிப்பத்து, மதுரைச் சிலேடை வெண்பா, மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை, முருகக் கடவுள் கலம்பகம்.

(41) திருமலைவேற்கவிராயர்; 1868 – 1944; எட்டிச்சேரி (பாண்டி); கருவை இறைவன் பற்றி 4 நூல்கள் மற்றும் 4 நூல்கள்.

(42) சே. சிவஞானம் பிள்ளை; 1871 – 1933; மயிலாப்பூர், சென்னை; தேவார ஆசிரியர் வரலாறு, கந்தபுராணச் சுருக்கம், பெரிய புராணக் கதைகள்

(43) சபா. சிவப்பிரகாசம் பிள்ளை; 1872 – 1965; வீரசோழகன்; சிதம்பரம் அருகாமை; சிவஞான போதச் சிற்றுரைச் சுருக்கம், சிற்றுரை விளக்கம், சிவஞான சித்தியார் வினாவிடை.

(44) கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்; 1872 – 1929; சென்னை; நூல்கள் – ''திராவிட வேதத் திரட்டும், தலமான்யச் சுருக்கமும்'', அகத்தியரின் தேவாரத் திரட்டிற்கு விரிவுரை, மூவர் தேவாரத்திற்குக் குறிப்புகள், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருக்கைலாய ஞான உலா இரு நூல்களுக்கும் குறிப்புரை; பிறபணிகள் – தக்கோலம் எனும் திருவூறலுக்கு வாரந்தோறும் சென்று உழவாரப் பணி செய்தல், 1904-இல் சைவ சமய பக்த சனசபை ஏற்படுத்தி சிறுவர் சிறுமியர்க்குத் தேவாரம் கற்பித்தல், கந்தகோட்டத் திருக்கோயிலில் நால்வர், சேக்கிழார் உள்ளிட்ட 13 நாயன்மாருக்குத் திரு உருவச்சிலை எழுப்புதல் ஆகியன. கோவையில் மூன்று ஆண்டுகள் சிவக் கவிமணி அவர்கள் இவர் மூலம் பெரிய புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்து அதன் மூலம் கிடைத்த அரிய குறிப்புக்களைக் கொண்டே தமது பேருரையை எழுதினார்.

(45) அ. சண்முகஞ் செட்டியார்; 1873 – 1940; கண்டனூர் புதுவயல்; ''அளகைக் கலிவெண்பா'' ''அளகை வெண்பா மாலை'', ''அளகைச் சிலேடை வெண்பா மாலை'', ''அளகைப் பதிற்றுப் பத்தந்தாதி'', ''அளகை அலங்காரம்'', ''அளகை உமையந்தாதி'', ''அளகை உமையம்மை பிள்ளைத் தமிழ்.

(46) ந. சிவகுருநாத பிள்ளை; 1873 – 1953; எட்டயபுரம்; திருநெல்வேலிக்கு அருகாமை; சிவஞான சித்தியார் ஆராய்ச்சி; பிறபணிகள் – சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் பணியாற்றுதல்

(47) பம்மல் சம்பந்த முதலியார்; 1873 – ; சிறுத்தொண்டர் முதலான நாடக நூல்கள், சிவாலயச் சிற்பங்கள், சிவாலய உற்சவங்கள் சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலிலும்

(48) வா. மகாதேவ முதலியார்; 1874 – 1924; சென்னை; ''பெரியபுராண ஆராய்ச்சி'' (1924 – பெரிய புராணத்தைப் பற்றி வந்த முதல் ஆராய்ச்சி நூல்)

(49) கிருட்டிணமாச்சாரியார்; 1876 – 1922; பில்லாவி, திருக்கண்ணபுரம் அருகாமை; திருப்பாண்டிக் கொடுமுடிக் கோவை.

(50) ஆறுமுக அடிகள்; 1876; திருவெண்காடு; காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் விருத்தம், காஞ்சிபுரம் காமாட்சி யம்மன் விருத்தம்.

(51) குமாரசாமி ஐயர்; 1879 – 1947; கோட்டைக் கல்லாறு; உருத்திராக்க மான்மியம்.

(52) சண்முகம் பிள்ளை; 1880 – 1941; மஞ்சகுப்பம், தென்னாற்காடு திருவாடானைப்புராணம், திருக்குடவாயிற் புராணம், கண்டியூர்ப் புராணம், கோகர்ணதலப் புராணம்.

(53) நல்ல சிவன் பிள்ளை; 1882 – 1952; சம்புலிங்கபுரம், திருநெல்வேலிக்கு அருகாமை; மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை.

(54) ப. மாசிலாமணி முதலியார்; 1882 புதுப்பாளையம், வடஆற்காடு மாவட்டம்; சிவாநந்தலகரி தமிழ் மொழி பெயர்ப்பு,

Digitized by Hindu Heritage Foundation of America, HHFA (USA)

அகத்தீசுவரர் தோத்திரப் பாமாலை, திருத்தில்லைத் தோத்திர மஞ்சரி, திருக் கடம்பநாத புராணக் குறிப்புரை முதலான நூல்கள்; பிற பணிகள்; சொற்பொழிவுகள் செய்தல், கட்டுரைகள் எழுதுதல், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல்.

(55) தமிழவேள் த.வே. உமா மகேசுவரம் பிள்ளை; 1883 – 1941; கருந்தட்டாங்குடி, தஞ்சை; சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர்; தமிழ்ச் சங்கம் நிறுவியவர்

(56) அ. சோமசுந்தரம் செட்டியார்; 1883; சுந்தரர் தேவாரம் குறிப்புரை.

(57) ந.மு. வேங்கடசாமி நாட்டார்; 1884 – 1944; நடுக்காவேரி, தஞ்சைக்கு அருகாமை; திருவிளையாடற்புராண உரை, அகத்தியர் தேவாரத் திரட்டு உரைத் திருத்தம், 58) மணிவாசக சரணாலய அடிகள்; 1885 – 1944; பாண்டி நாட்டில் குன்னங்கோட்டப் பகுதியில் வேப்பங் குளம்; முருகனைப் பற்றி 26 பிரபந்தங்கள், 59) அழகிய சொக்கநாத பிள்ளை; 1885; தச்சநல்லூர் இராசமாநகர் கோமதியம்மை பேரில் கீர்த்தனை, கும்மி, கலித்துறை அந்தாதி, பதிகம், பிள்ளைத் தமிழ், இன்னிசை மாலை, 60) க.அரங்கசாமி முதலியார் 1886; சிவஞான போத எளிய உரை, 61) கந்தசாமி முதலியார்; 1887 – 1945; மோசூர்; கச்சிக்கலம்பகம் உரை, திருவாமாத்தூர்க் கலம்பகம் உரை, புள்ளிருக்கு வேளூர் கலம்பகம் உரை, திருவொற்றியூர்க் கலம்பகம் உரை, ஏகாம்பரநாதர் உலா உரை, சந்தான குரவர் நான்மணிமாலை உரை, 62) சு.நவநீத கிருஷ்ண பாரதியார்; 1889 – 1952; கிருஷ்ணாபுரம், தஞ்சை மாவட்டம்; திருவாசக விரிவுரை.

63) சித்தாந்த வித்தகர் வீ. குமாரவேலுப்பிள்ளை; 1890; குலசேகரன் பட்டினம்; வினாவெண்பா ஆராய்ச்சி, ஐந்தெழுத்துண்மை, திருவாதிரை விளக்கம் அடங்கிய தொகுப்பு, 64) புகழ் முத்துசாமி பிள்ளை; 1890 – உடன்குடி நெல்லை; தேவார உரை, திருச்சதக உரை. 65) பாரிபாக்கம் கண்ணப்ப முதலியார்; 1891 – 1933; பாரிப்பாக்கம்; சைவசமயச் சொற்பொழிவாளர், 66) நா.வை. தண்டபாணிப் பிள்ளை; 1891 – 1922; நாகப்பட்டினம்; திருக்கருணைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலான நூல்கள், 67) மு. நடேச முதலியார்; 1891 – 1942; திரிசிரபுரம்; திலகவதியார், புனிதவதியார், 68) கந்தசாமி அடிகள்; 1892; கணபதியூர், கோயம்புத்தூர் அருகாமை; பக்தமான்மியம், பேரூர்க் கலம்பகம், பேரூர்க் கோவை, காரமடைத் தலபுராணம், அன்னியூர் தலபுராணம், கௌசைத் தலபுராணம், பேரூர் சாந்த லிங்கர் பிள்ளைத் தமிழ், சிரவை முருகன் பிள்ளைத் தமிழ், குருந்தமலை முருகன் பிள்ளைத் தமிழ், திருவஞ்சைக்களம் பிரபந்தங்கள், அவிநாசி, பிரபந்தத்திரட்டு முதலியன இராமாநந்த அடிகளிடம் கல்லாடை பெற்று கௌமார மடால யத்தின் தலைவர் ஆவார். 69) தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்; 1892 – 1960; குடந்தைக்கு அருகே திருப்புறம்பயம்; சிவப்பதிகள் வரலாற்றை வரலாற்று அடிப்படையில் எழுதினார்; செம்பியன் மாதேவி சிவாலய வரலாற்று நூல். 70) எஸ்.எஸ். சூரிய நாராயண சாஸ்திரி; 1893 – 1942; மதுரை; "The Sivadvaita of Srikantha", translated "Sivadvaitanvinaya of Sri Appayya Dikshit" சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைத் தலைவர்; டி.எம்.பி. மகாதேவன் வ.ஆ. தேவசேனாதிபதி, வி.பரஞ்சோதி ஆகியோர் இவர் கீழ் டாக்டர் பட்டம் பெற்றனர்.

71) சுயம்பிரகாச அடிகள்; 1897; திருமழ பாடி; மதுரைச் சுந்தரேசர் நட்டராகப் பதிகம் உள்ளிட்ட மூன்று நூல்கள். 72) இளையான்குடி சிவாநந்த யோகிகள் இயற்பெயர் வள்ளிமுத்து; 1898 – 1973; சின்னுமாநகர், விளாத்திக்குளம் வட்டம், நெல்லை மாவட்டம்; மாறநாயனார் புராணம் முதலான 12 நூல்கள். 73) க.முனிசாமி முதலியார்; 1900 – மோசூர், தொண்டை நாடு; விநாயகர் தோத்திரம், திருக்கச்சி ஏகம்பம் இரட்டை மணிமாலை, திருக்கச்சி மேற்றளி விருத்தம், திருக்கச்சி ஓணகாந்தன் தளி ஒருபா ஒருபஃது, திருக் கச்சி அநேகதங்காவதம் நவமணி மாலை, திருக்கச்சி நெறிக் காரைக்காட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

நீரோட்டகம், திருக்குரங்கணி முட்டம் கொச்சகக் கலிப்பா, திருமாகறல் விருத்தம், திருவோத்தூர் சந்தக் கலிவிருத்தம், திருப்பனங்காட்டூர் யக்ஞ விருத்தம், திருவல்லம் ஆசிரிய விருத்தம், திருமாற்பேறு பதிற்றுப் பத்தந்தாதி, திருவூறல் விருத்தம், திருஇலம்பயங் கோட்டூர் விருத்தம், திருவிற்கோலம் சோடசப் பாமாலை, திருவாலங்காடு ஆசிரிய விருத்தம், திருப்பாசூர்க் கலிவிருத்தம், திருவெண்பாக்கம் மும்மணிமாலை, திருக்கள்ளில் ஆசிரிய விருத்தம், திருக்காளத்திப் பதிகங்கள், திருவொற்றியூர் மாலை, வடிவுடையம்மை தியான பஞ்சகம், திருவலிதாயம் கலித்துறையந்தாதி, வடதிருமுல்லைவாயில் பதிகம் கொடியிடை நாயகி பஞ்சரத்தினம், திருவேற்காடு நான்மணி மாலை, திருமயிலைப் பதிகம், திருவான்மியூர் வெண்பா அந்தாதி, திருக்கச்சூர் மாலை, திருவிடைச்சுரப் பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், திரு அச்சிறுபாக்கம் பதிகம், திருவக்கரைப் பதிகம், திரு அரைசிலிப் பதிகம், திரு இடும்பை மாகாளம் பஞ்சரத்தினம், திருப்போரூர்ப் பதிகம், திருப்போரூர் வெண்பா அந்தாதி மாலை, திருத்தணிகை வெண்பா அந்தாதி மாலை, திருத்தணிகைக் கொச்சகக் கலிப்பா, திருத்தணிகைப் பதிகம் நெஞ்சொடு கிளத்தல் ஆளுடைய பிள்ளையார் பதிகம், ஆளுடைய அரசு பதிகம், ஆளுடைய அரசு பஞ்சரத்தினம், ஆளுடைய நம்பி கொச்சகக் கலிப்பா, வேளாண் மரபு விளக்கம் ஆக 46 நூல்கள்.

74) தசாவதானி ஆறுமுகம் பிள்ளை; 1891; கோட்டாறு, நாகர்கோயில்; 'சிவஞான போத அதிகரண வெண்பா, தில்லைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு - முற்பகுதி

(காலம் சரியாகக் கணிக்கப்படவில்லை)

1) சிவஸ்ரீ அருணகிரி முதலியார்; சோளங்கிபுரம்; திருவாசகம், திருக்கோவையார் குறிப்புரை, பன்னிருத் திருமுறைத் திரட்டு, 2) இராசப்ப நாவலர்; திருவெண்ணெய் நல்லூர் ; திருநாவலூர்ப் புராணம்; திருவெண்ணெய்க் கலம்பகம் மனுநீதி தகவு முதலிய நூல்கள்; 3) இராமசாமிச் செட்டியார்; திருவெள்ளூர்; திருவிடை மருதூர்க் கலம்பகம், திருக்கழுக் குன்றக் கலம்பகம், சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை. சீகாளத்திக் கலம்பகம் முதலான நூல்கள். 4) சரவணப் பெருமாளையர்; திருத்தணிகை; குளத்தூர்ப் புராணம், பிரபுலிங்க லீலை உற்பத்திக் காண்டம் வரை உரை; திருவாசகம் பதிப்பித்தவர். 5) சிவக்கொழுந்து தேசிகர்; கொட்டையூர், கும்பகோணம் அரு காமை; திருவிடைமருதூர்ப் புராணம், ஆச்சாள்புரத் தலப்புராணம், கோட்டீசுவரக் கோவை, பெருவுடையாருலா, கோட்டீசுவர உலா; 1857-ஆம் ஆண்டில் திருத் தணிகை விசாகப் பெருமாளையரும் சிவக்கொழுந்து தேசிகரும் சேர்ந்து திருவாசகத்தை அச்சில் கொணர்ந்தனர். இதுவே அச்சில் வந்த முதல் 'திருவாசகமாக' இருக்கலாம். 6) சின்னய செட்டியார்; தேவகோட்டை; திருவொற்றியூர்ப் புராணம், அருணைச் சிலேடை வெண்பா, குன்றக்குடி பிள்ளைத் தமிழ், 7) சுப்பிரமணிய ஐயர்; தஞ்சாவூர்; காளையார் கோயில் புராணம், கோட்டூர் புராணம், 8) மழவை மகாலிங்கையர்; மழவராயனேந்தல், மதுரைக்கு அருகாமை; அருணாசல புராண உரை, 9) முத்துக்குமாரத் தம்பிரான்; (இயற்பெயர் - வீரபத்திர ஐயர்); திருப்போரூர் அந்தாதி. திருப்போரூர்த் திருக்கோயிலில் பல திருப்பணிகள், 10) வயித்தியலிங்காசாரி; சென்னை; குங்குலியக் கலய நாயனார், எறிபத்த நாயனார், அமர்நீதி நாயனார் வரலாற்றினைக் கீர்த்தனையாகப் பாடியவர், 11) சரவணப் பெருமாள் கவிராயர்; மறைவு 1888; தந்தையார் அருணாசலக் கவிராயர்; மதுரைச் சிலேடை வெண்பா, குன்றக்குடிச்சிலேடை வெண்பா, கந்த வருக்கச் சந்த வெண்பா, பனசைத் திரிபந்தாதி போன்ற 9 சிறுநூல்கள் 12) திருக்குருகூர் ஞானசித்த சுவாமிகள்; ''சாத்திரக் கோவை'', ''சேத்திரக் கோவை'' (ஒவ்வொன்றும் 1000 பாடல்கள்) 13)

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள்; நால்வர் நான்மணி மாலை உரை, குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு பதிப்பித்தல்; மறைவு *30.5.1906*

14) பொன்னையா முதலியார்; சிவோக பஞ்சகம், தட்சிணாமூர்த்தி அட்டகம், சிவானந்தலகரி முதலான 16 நூல்கள் 15) ஆண்டாள் – புரசை சி.சு. ஏகாம்பர முதலியார் தம்பதியர்; தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் சிவபெருமான் திருத்தொண்டுக்கு அர்ப்பணித்தவர்கள்; தமிழகம் எங்கும் சொற்பொழிவுகள் செய்தவர்கள்; அம்மையார் வடமொழிப் பயிற்சி மிக்கவர்கள். *(1911, 1913-ஆம் ஆண்டில் உரையாற்றிய தகவல் உள்ளது)* காசிவாசி செந்திநாதையரைக் கொண்டு ''சிவஞான போத வசனாலங்கார தீபம்'' நூல் வெளியிட்டனர். 16) வீரசைவக் கனகசபைக் கவிராயர், கங்கை கொண்ட சோளேச்சுரர் தலபுராணம், குழுமூர்த்தல புராணம், திருப்புன்கூர்த் தலபுராணம், பெரியபுராணம் சுருக்கக் கலி வெண்பா, குருநமசிவாயமாலை போன்ற 19 நூல்கள். 17) வே. அருணாசலப் பிள்ளை; *1854-ஆம்* ஆண்டில் தமது நூலை வெளியிட்டுள்ளார். வாலிகண்டபுரம், நெல்லை மாவட்டம்; நெல்லை நாயகர் பதிகம், நெல்லைக் காந்தியம்மன் சந்தவிருத்தம், நெல்லை வடிவம்மை பதிகம், ஞானானந்தக்கும்மி, 18) அ. சிவசுப்பிரமணிய தேசிகர்; மதுரை; கழநிவாசல் திருவருணாசல தேசிகரத்னப் பிள்ளைத் தமிழ், சிவசிதம்பர தேசிகர் சரணப் பதிகம் முதலான நூல்கள் 19) பொன்னுச் செல்லைய பாரதி; ஊமையம் பட்டி, திருச்செங்கோடுக்கு அருகாமை; செங்கோட்டுப் பள்ளு முதலிய நூல்கள் 20) பிச்சையா நாவலர், பாண்டி நாட்டில் பொதிய மலைக்கு அருகில் மலையடிக் குறிச்சி; தாருகாவனப் புராணம், நாதகிரிப் பதிகம் முதலான 7 நூல்கள். 21) அவிநாசி நாதர்; அந்தியூர், கொங்கு நாடு; நிட்டையிலேயே நெடுங்காலம் இருந்தார்; நிட்டை இல்லாத நேரங்களில் குருநாதர் மேல் பாடல்கள் பாடினார் 22) சுப்பிரமணியக் கவிராயர்; திருக்கடவூர்; திருக்கடவூருலா, திருக்கடவூர்ப் புராணம், மயிலைக் கோவை, மயிலை அந்தாதி, வழிமுறை ஓதுவாராகப் பணியாற்றினார். 23) பொ. கனகசபை நாயகர்; சென்னை; காஞ்சிப் புராண வசனம், திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருவான்மியூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி, அகரம் தட்சிணாமூர்த்தி சுவாமி நான்மணிமாலை, கச்சிப் பதிற்றுப் பத்தந்தாதி, கச்சபேசுரர் பதிற்றுப்பத் தந்தாதி, திருக்கழுக்குன்றப் பதிற்றுப் பத்தந்தாதி, திருவாலங்காட்டுப் பதிற்றுப் பத்தந்தாதி முதலான நூல்கள். 24) கு. மீனாட்சி சுந்தர முதலியார்; – *1886*; குருவிக்குளம், பாண்டிநாடு; காலங்களுக் குரிய தோத்திரமாலை, சிவசயிலேசர் துதிக்கலிவெண்பா, மீனாட்சி சுந்தரேசர் சதகவித்துறை, நித்தியகவி பலசந்த வந்தாதி, அக்கரவர்க்கப் பலசந்தமாலை, நித்தியகவி அந்தாதி, மாமனாக வந்து வழக்குரைத்த லீலைப்பசனை மெட்டு, விருத்த குமார பாலரான லீலைப் பசனை மெட்டு, திருநாட்கண்ணி, தத்துவக்கலி வெண்பா, பிரபோத சந்திரோதய உரை நடை, வேதாந்த சூடாமணி உரைநடை, குரு வணக்கம், மனக்கண்ணி, சிறுத் தொண்டர் பசனை மெட்டு, திருமாங்கத நாடகம், கழுகசல மாலை, சங்கரசித்தி விநாயகர் மாலை, திருவுடையான் மாலை, மாசாந்த கவி, அசுவபாதபந்தம். கொம்பில்லா வெண்பா, அட்டநாக பந்தம், உபயநாகபந்தம், ஏகநாக பந்தம், கமல பந்தம், கோமுத்திரிகாபந்தம், புட்ப மாலிகா பந்தம், மாலைமாற்று, கதைகாவிகள், மும்மண்டல வெண்பா, கட்கபந்தம், இராமாயண நட்சத்திரம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு – பிற்பகுதி

1) இரத்தினவேலு முதலியார், ஈக்காடு, கச்சியப்ப முனிவரின் விநாயக புராணம், அதிவீரராம பாண்டியனின் காசிக் காண்டம், பரஞ்சோதி முனிவரின் திரு விளையாடற் புராணம் முதலியவற்றை உரையுடன் பதிப்பித்தவர்; சிவமகா புராணத்தை வசனமாக மொழிபெயர்த்துத் தந்தவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2) சி.பா.ய. சுரேந்திரநாத் ஒகலிஆரியா; வடநாடு; 1908-ஆம் ஆண்டில் சிறையில் இருந்திருக்கிறார். நூல் ஸ்ரீ நடராச தரிசனம்.

3) சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார்; பாலக்கரை. திருச்சி; இயற்றிய நூல்கள் : விரிஞ்சேசர் சதகம், ஆதிபுர தலபுராணம்; பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம், சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணம் ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாயூரப் புராணம், திருநாகைக் காரோணப் புராணம் ஆகியவற்றை அச்சிட்டார். பதினோராந் திருமுறை முழுவதையும் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து திருத்தமான முறையில் முதலில் வெளி யிட்டவர் இவரே. மறைவு – 1894;

4) க.வ. திருவேங்கட நாயுடு; சென்னை; சேந்த நாயனார் புராணம், நால்வர் நான்மணிமாலை விரிவுரை; 1909-ஆம் ஆண்டில் மறைவு

5) அசலாம்பிகை அம்மையார்; இரட்டணை; திருவிடையூர்ப் புராணம் முதலான ஏழு நூல்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு

(காலம் தெரியவில்லை)

1) கச்சபாலய ஐயர்; காஞ்சிபுரம்; திருவேட்டீசர் மீது பதிற்றுப்பத்தந்தாதி 2) சு.தி. கந்தசாமிக் கவிராயர்; கொரைஞ்சூர், தொண்டை நாடு; திருவொற்றியூர் வெண்பா, திருவொற்றியூர் வெண்பா மாலை 3) கந்தசாமி தேசிகர்; கூறைநாடு, மயிலாடுதுறைக்கு அருகாமை; பெற்றான் சாம்பான் சரித்திரக் கீர்த்தனம் 4) கந்தசாமிப் புலவர்; சோமசுந்தரப் பெருமான் மீது அந்தாதி 5) கந்தப்ப ஞான தேசிகர்; மறைவு 1829; வேலூர்; அண்ணாமலையார் தோத்திரப் பாமாலை, அண்ணாமலை அந்தாதி, அண்ணாமலைக் கண்ணி, 6) கிருட்டின மாச்சாரியார், கொடுமுடி வெண்பா அந்தாதி 7) குப்புசாமிக் கிராமணியர்; சென்னை; மாணிக்க வாசக சுவாமி விலாசம் – நாடகம் (கீர்த்தனை, விருத்தப்பா, உரைநடை) 8) குமார கவிராய தேசிகர் தென்காசிப் புராணம் 9) குமாரசாமி தேசிகர்; கல்பாக்கம்; செங்கற்பட்டு மாவட்டம்; ஏகாம்பரநாதர் யமகக் கலித்துறை அந்தாதி 10) குழந்தை வேலுக் கவிராயர்; புதுச்சேரி; மார்க்கண்டேய புராணம் 11) கைலாயப் பரதேசி; குத்தாலம், கும்பகோணம் அருகாமை; சிவஞானசாரம் 12) கா. சடாட்சர ஆசிரியர்; புதுச்சேரி; அதிபத்தநாயனார் வரலாறு (இசைப் பாடல்) 13) அ. சண்முகசுந்தர முதலியார்; கொன்றை மாநகரம்; சிவஞான சித்தியார் தத்துவப் பிரகாசர் உரை, திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் உரை. சிவஞானபோதம் பாண்டிப் பெருமாள் விருத்தி, சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு மறைஞான தேசிகர், சிவாக்கிரக யோகியர், ஞானப்பிரகாசர், சிவஞான யோகியர், நிரம்பவழகியார், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் எழுதிய உரை பதிப்பித்து வெளியிட்டார். 14) சதாசிவம் பிள்ளை; பூண்டி, சோழநாடு; ''நீலலோசனி'' தமிழ் வார இதழ் ஆசிரியர். 15) சிவானந்த யதீந்திரர்; ஆயக்காரன் புலம், திருமறைக்காடு அருகாமை; கோயிலூர் நான்மணிமாலை, சைவத் தெளிவு, சிவஞான போத சாரம், திருவொற்றியூர் மான்மியம். 16) சீனிவாச பாரதி சுவாமிகள்; திருத்தலையூர், மயிலாடு துறைக்கு அருகாமை; திருத்தலையூர்ப் புராணம் 17) சுந்தர ஆச்சாரி; அப்பூதி அடிகள் நாயனார் சரித்திரக் கீர்த்தனை (1895); 18) சுந்தர தேசிகர்; திருக்கோவை யார் உண்மை 19) கா. சுந்தரமூர்த்தி முதலியார்; காஞ்சிபுரம்; திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், இருபா இருபது, உண்மை விளக்கம், திருவருட்பயன், போற்றிப் பஃறொடை முதலிய நூல்களை ஆராய்ந்து பதிப்பித்துள்ளார். 20) தொ. சுப்பராய முதலியார்; திருப்பணிப் பேட்டை; திருவாரூர் தியாகேசர் மாலை, திருப்பணிப்பேட்டைச் சுந்தரேசர் திருத் தொண்டர் மாலை 21) சுப்பிரமணிய ஐயர்; தஞ்சாவூர்; காளையார் கோயில் புராணம், கோட்டூர்ப்புராணம், இலுப்பை குடிப் புராணம், மாற்றூர்ப் புராணம், திருமருகல் புராணம், திருவேடகப் புராணம், மாணிக்க வாசகர் நான்மணிமாலை, தோத்திர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நமசிவாயப் பஞ்சகம், நடராச தயாநிதி மாலை, நடராச குஞ்சிதபாதம் பதிகம். 22) சோமசுந்தரஞ் செட்டியார்; சிவநாமாத்து வித கீர்த்தனை (1886) 23) கும்பநாதச் செட்டியார்; கும்பகோணம்; ஆதிகும்பே சுரர் தோத்திரப் பதிகங்கள், திருக் குடந்தைப் பதிற்றுப்பத்தந்தாதி 24) சபாபதி முதலியார்; 1870; காஞ்சிபுரம்; சைவ சமய விளக்க வினாவிடை, பிரேமோத்திர காண்டம் பொழிப்புரை; பெரியபுராண உரை, திருவிளையாடற் புராண உரை, அருணாசல சதகம், திருக் கழுக்குன்றச் சிலேடை வெண்பா, திருப்போரூர் அந்தாதி; திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வடலூர் வள்ளலார் இவரிடம் பாடம் கேட்டவர்கள் 25) இரு. சபாபதி முதலியார் ; 1886; புரசைப்பாக்கம், சென்னை; திருப்போரூர்ப் புராணம் முதலான 32 நூல்கள்; முருகனடி யார் 26) சொ.சுப்பிரமணிய பாரதியார்; மழவராயனேந்தல், மதுரைக்கு அருகாமை; திருவிளையாடற் கீர்த்தனை, கூடல் திருவிளையாடல் யமக அந்தாதி, திரு விளையாடல் சுந்தரமாலைச் சந்தவிருத்தம், திருமெய்யம் ஈசுவரன் கோயில் தலபுராணம் கீர்த்தனை முதலிய நூல்கள் 27) இரா. தியாகேச முதலியார்; மாமண்டூர் தொண்டை நாடு; சிதம்பர வெண்பா அந்தாதி, சிதம்பரக் கலித்துறை அந்தாதி, கோயில் மும்மணிக் கோவை, சிதம்பர நான்மணிமாலை, திருக்கழுக் குன்றத்து இரட்டை மணிமாலை, தல வெண்பா 28) கு.திருஞானசம்பந்தசாமிப்பிள்ளை; திரிசிரபுரம்; சித்தாந்த சைவ வினா விடை; திரிசிரபுரத்தில் சைவ சித்தாந்த சபை ஒன்றினை நிறுவினார் 29) திருமலைக் கொழுந்து பிள்ளை; மாணிக்கவாசகர் காலம் 30) கோ. திருவேங்கடப் பிள்ளை; திரிசிரபுரம்;திருக்கோவையார் உரை, சேது புராணம் 31) வீ. தேவராசப் பிள்ளை; வல்லூர். செங்கற்பட்டு மாவட்டம், பஞ்சாக்கர தேசிகர் பதிகம், பஞ்சரத்தினம் முதலிய நூல்கள்; ''சூதசங்கிதை'' என்ற நூலை வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. இந்நூல் விபூதி உருத்திராக்கம், பஞ்சாக்கரம், சிவபூசை பற்றிப் பேசுகிறது. 32) எஸ்.எம். தையல் பாகம்பிள்ளை; ஸ்ரீவில்லிபுத்தூர்; நெல்லை அந்தாதி முதலான 11 நூல்கள். 33) நஞ்சப்ப பிள்ளை சிவத்தியான கீர்த்தனை (1886) 34) பு.நயனப்ப முதலியார்; சென்னை; ''சித்தாந்த சைவர்களின் உண்மை நிலை'' 35) பெ.நாராயணசாமி நாயுடு; மணப்பட்டு, புதுச்சேரி; ''மனுச்சோழச் சக்கரவர்த்தி வாசகப்பா'', (1884) ''சிறுத்தொண்ட நாயனார் சரித்திரப்பா'' முதலான நாடக நூல்கள் 36) நாராயண பிள்ளை; சிவதூடண பரிகாரம் (1889) 37) சி. பச்சையப்ப நாயகர்; சிந்தாதிரிப் பேட்டை, சென்னை; ''வல்லாள மகராசன் சரித்திரக் கீர்த்தனை''. ''சிவநாம கீர்த்தனை'' 38) பூ. பத்மநாபாசாரி; கொல்லம், கேரளா; சிறுத்தொண்டர் கதாப் பிரசங்கம்(1889) கீர்த்தனம் உரைநடை கலந்தது 39) பரங்கிரிவேல்; சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக்கும்மி (1890) (144 பாடல்கள்) 40) பரமசிவ சுவாமிகள்; திருப்பனந்தாள்; ''சிவானுபவ சாரம்'', ''திருப்பனந்தாள் விசுவநாதர் தோத்திரப் பாமாலை'', பரம முனிவர், ''சித்தாந்த சாரம்'' (31 செய்யுட்கள்) 42) ம.தி. பாநுகவி; ''சிவபராக்கிரமம்'' (1899) 43) பாலகிருட்டின ஐயர்; அம்பாசமுத்திரம்; பாபவிநாசம் பதிகம், சிவசைலப் பதிகம், திருக்குற்றாலப் பதிகம், தேவதானப் பதிகம், கல்லிடைக் குறிச்சிப் பதிகம், அம்மைப் பதிகம் 44) தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர்; காட்டுமன்னார் கோயில்; திருவாவடுதுறைக் கோவை. அம்பலவாண தேசிகர் ஆனந்தக் களிப்பு. அம்பல வாணதேசிகர் வண்ணம், ஆயலூர் முருகன் பிள்ளைத்தமிழ், ஆவினன்குடி கைலாசநாதர் பதிற்றுப் பத்தந்தாதி, சிவஞான முனிவர் கீர்த்தனை, சிவஞான முனிவர் துதி விருத்தங்கள், சுப்பிரமணியர் திருவிருத்தம், திருக்கலைசைக் கோவை, திருக்கலைசை சிதம்பரேசர் கட்டியம், திருக்கலைசைச் சிதம்பரேசர் சந்நிதிமுறை, திருக்கலைசை சிதம்பரேசர் பரணி, திருக்கலைசைச் சிதம்பரேசர் வண்ணம், திருக்கலைசை சிதம்பரேசர் பஞ்சரத்தினம், திருக்கலைசை சிலேடை வெண்பா, திருக்குற்றாலச் சித்திரசபை திருவிருத்தம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருச்சிற்றம்பலதேசிகர் சந்தவிருத்தம், திருச்சிற்றம்பல தேசிகர் சிந்து, திருச்செந்தில் சந்தவிருத்தம், திருத்தணிகைத் திருவிருத்தம், திருமாளிகைத் தேவர் திருவிருத்தங்கள், பழநிக் குழந்தை வேலர் பஞ்சரத்தின மாலை, வடதிருமுல்லை வாயில் கொடியுடையம்மை பிள்ளைத் தமிழ். 45) சதாசிவம் பிள்ளை; பூண்டி; 1868-ஆம் ஆண்டில் நாகையில் ''நாகை நீலலோசனி'' என்ற பத்திரிக்கையைத் தொடங்கினார். 46) வி.வி. இரமண சாஸ்திரி; ''சித்தாந்த தீபிகை'' ஆங்கில இதழின் ஆசிரியராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். 1912-ஆம் ஆண்டில் திருமந்திரப் பதிப்புக்கு 30 பக்க அளவில் அழகிய முன்னுரை கொடுத்துள்ளார். 47) ஈ.மகாதேவ சாஸ்திரி; 1896 முதல் 1906 வரை ''சித்தாந்த தீபிகை''யில் ஸ்ரீகண்டரின் பாஷியத்தை மொழிபெயர்த்து வெளியிட்டார். 48) H.W. ஷொமெருஸ் திருவாசகம் முழுமையும், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஒரு பகுதி மட்டும் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். 49) அங்கப்ப நாவலர் – திருநெல்வேலி – ''பரசமய கோளரியார் ஆசிரியப் பாமாலை, பரசமய கோளரியார் திருவம்மானை, பரசமய கோளரியார் திருவூசல், பரசமய கோளரியார் பிள்ளைத் தமிழ், 50) அண்ணாச்சாமி ஐயர் சி. கோட்டையூர் – ஆனந்த நடராசர் பேரில் அழகிய கீர்த்தனம், சிதம்பர மகாத்மியம், 51) ச.அண்ணாமலைச் செட்டியார், திருக்காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மீது தோத்திரப் பதிகம் 52) அண்ணாமலை முதலியார் – ஆரணி மதுரை வெண்பா மாலை 53) அப்பாச் சாமிகள்; சுப்பிரமணியக் கடவுளின் அவிநாசிப் பத்து பரமசிவன் தோத்திரம் 54) அப்பாச்சாமி முதலியார்; கபாலீசர் குறுங்கழி நெடில் 55) அப்பாப் பிள்ளை; பட்டீச்சிர யமக அந்தாதி; 56) அப்பாவையர்; திருநயம்; திருவிளையாடற் கீர்த்தனம் 57) அப்பாவையர்; பண்ணுருட்டி; தாண்டவமாலை, திருநாவுக்கரசு சுவாமிகள் இரட்டை மணிமாலை, திருநாவுக்கரசு சுவாமிகள் பிள்ளைத் தமிழ், திருவதிகைப் புராணம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ், புட்பாசல புராணம் 58) அம்பலவாண தேசிகரின் சீடர்; பதிபசு பாச அட்டவணை 59) அம்பலவாணர்; திருக்கருப்பறியலூர் புராணம் 60) அய்யாத்துரை பிள்ளை; தில்லை நடராச சதகம் 61) அருணாசலக் கவிராயர்; இராமலிங்கநாத சுவாமிகள் தோத்திரப் பதிகம் (1885) 62) அருணாசலத் தேவர்; கழுகு மலை; கழுகாசலத்தந்தாதி 64) மு. அருணாசலம்; தசக்கிரமக் கட்டளை (1904), மெய்கண்ட சாஸ்திரக் கட்டளை, 65) அருணாசலம் பிள்ளை; திருச்செந்தூர்க் கலித்துறை யமக அந்தாதி 66) அருணாசல முதலியார்; தாச்சி; கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்கார வேலர் மாலை, சிதம்பரம் சிவகாமி அம்மை பதிகம், திருத்தொண்டர் சரித்திரம் (1877), திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈசர் பதிகம், பிரமராம்பிகை பதிகம் 67) வே.அருணாசல முதலியார், கலிய நாயனார் சரித்திர கீர்த்தனை (1869), சிறுத்தொண்ட நாயனார் சரித்திர திவ்ய கீர்த்தனை (1868) 68) அருணாத்திரி ஐயர்; கயிலாயநாதர் பதிகம் நித்திய கலியாணியம்மை பதிகம் 69) அருளானந்த மூர்த்திகள்; திருவெண்ணெய்நல்லூர்; இருவினை விளக்கக் கீர்த்தனை (1878), தில்லை நடராஜர் பதிகம் (1878) பாலகணபதி ஆசிரிய விருத்தம் (1878) 70) அழகிய கூத்த தேசிகர்; கனகசபை நாதன் உலா, செப்பறை உலா 71) அழகிய சொக்கநாத வரோதயன்; சிவபூசை அந்தாதி (1880); 72) அழகு முத்துப் புலவர்; மெய்கண்ட திருப்புகழ், மெய்கண்ட வேலாயுத சதகம் 73) ஆறுமுக சுவாமிகள்; திருவொற்றியூர்த் தலபுராணச் சுருக்கம் 74) ஆறுமுக நாவலர்; கருவம்பாகையூர் (தொண்டை நாடு); ''பூம்பாவையார் விலாசம் (1827/1825) 75) ப. ஆறுமுகம் பிள்ளை; முதுகுளத்தூர்; தாயுமான சுவாமிகள் புராணம் (1899), திருத்தொண்டர் வர்த்தனைக் கோவை (1899), திருவுத்திரகோசமங்கைப் பதிகம், தில்லை நடராஜன் பதிகம் (1899), மதுரையமக அந்தாதி மற்றும் விநாயகர், முருகன், அம்பாளின் மேல் (1899) 10 நூல்கள் 76) இரத்தின வேலு நாயகர்; திருவண்ணாமலை அருணாசலீஸ்வரர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அலங்கார ஜாவளி (1888) 77) இ.இராகவ முதலியார்; சிவகங்கை; காரைக்காலம்மை யார் திவ்ய சரித்திரக் கீர்த்தனை (1869) 78) இராமசாமி சிவன்; வையைச்சேரி (தஞ்சை); கீர்த்தனைகள், பெரியபுராணம் கீர்த்தனை ஆகியவை. 79) இராமசாமி செட்டியார்; சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை (1882) திருப்போரூர் நாயனார் முருகக் கடவுள் பஞ்சரத்தனம், பிள்ளைத் தாலாட்டு (1897), முருகக் கடவுள் பதிகம் 80) க. இராமசாமி தீட்சிதர்; அகிலாண்ட புரம்; ''சிவகீதை வசனம் (1898) 81) இராமசாமிப் பிள்ளை; இராமநாதபுரம், சிவாலயதரிசன விதி 82) இராமநாதன்; சிவநாம தசபஞ்சகம், பதிநாமாமுதம் 83) இராமலிங்க சாமிகள்; சீகாளத்தி மான்மியம் (1888) 84) ந. இராமலிங்கம் பிள்ளை; பொந்தம்புளி; புாண்டி; கந்தப் புராணம்'' 85) கு. இராமலிங்க முதலியார்; திருமயிலை; திருவொற்றியூர் தியாகேசர் பதிற்றுப் பத்தந்தாதி; (1897) 86) இராமானுசம் பிள்ளை; காஞ்சிபுரம்; திருக்கச்சி அந்தாதி, அத்திகிரி இறைவன், திருத்தணிகைக் கடவுளர் பற்றி ஒன்பது நூல்கள் 87) இராமையர்; மாயூரம், திருமயிலை திரிபந்தாதி 89) இராஜ கோபால பிள்ளை; திருநீலகண்ட நாயனார் விலாசம் 90) உலகசுந்தர முலியார்; மாணிக்கவாசகர் வெண்பா 91) ஏகாம்பர முதலியார்; கருங்குழி; திருக்கழுக்குன்றம் வேதகிரீசர் பதிகம், மலைச் சொக்க நாயகி அம்மை பதிகம் 92) ஐயாத்துரை ஞானியார். நாகை; தில்லைச் சிவகாமசுந்தரி சதகம் (1866), தில்லை நடராய சதகம் (1866) 93) கந்த சாமிப் புலவர்; திருப்பூவணம்; திருவாப் பாலூர்ப் புராணம் 94) கருணை ஐயர்; திருச்சிற்றம்பல நாதர் பதிகம் 95) வீ. கனகசபாபதி முதலியார்; திருநாவுக்கரசர் 96) கிருஷ்ணசாமி உபாத்தியாயர்; நாகப் பட்டினம் நீலாயதாட்சியம்மை பிள்ளைத் தமிழ். 97) கிருஷ்ண பாகவதர்; திருவிளை யாடல் நாடகம் (1891) 98) கிருஷ்ண பாரதி; திருவிளையாடல் நாடகம் (1897) 99) கிருஷ்ணையர்; அவயாம்பிகை சதகம்; 100) கிருஷ்ணையர்; மாயூரம்; சிவகாமியம்மை சதகம் 101) கேசவ முதலியார்; பெரிய புராணக் கீர்த்தனை 102) ப.சபாபதி முதலியார்; சிவபஜனை 103) சபாபதி முதலியார்; நால்வர் ஆனந்தக் களிப்பு 104) சிதம்பரபிள்ளை; கைலாச நாதர் சதகம் 105) சிதம்பரம் முனிவர்; காஞ்சி; க்ஷேத்திரக் கோவை பிள்ளைத் தமிழ் 106) க.நா. சிவசிதம்பர முதலியார்; கரையேறவிட்ட நகர்ப்புராணம் 107) சின்னப்பாவு முதலியார்; திருவொற்றியூர்த் தலபுராணம் (1891) 108) சுந்தர முதலியார் சிவநாம சங்கீர்த்தனம் 109) சுப்பிரமணிய கவிராயர்; செப்பறை பிள்ளைத் தமிழ்; 110) சம். சுப்பிரமணியப் பிள்ளை; சைவ நெறித் தெளிவு 111) சொக்கலிங்க தேசிகர்; மதுரைவெண்பா 112) ஞானசுந்தர ஐயர்; திருச்சிற்றம்பல மாலை 113) திருச்சிற்றம் பல நாவலர்; அண்ணாமலையார் சதகம் 114) திருச்சிற்றம்பலம் பிள்ளை; கோவை; மாணிக்கவாசகர் புராணம், 115) நமசிவாய நாவலர், பண்ணுருட்டி; திருத்தினைநகர்ப் பதிகம், மயிலாசல சதகம் 116) நாராயண சாமி பிள்ளை; சிறுத்தொண்ட நாயனார் விலாசம் 117) பரசுராமக் கவிராயர்; சிறுத்தொண்ட நாயனார் விலாசம் 118) பழனியப்ப செட்டியார்; மதுரை; மதுரைச் சொக்கேசன் வந்திபிட்டுக்கு மண் சுமந்த காதற் கண்ணிகள் 119) மாசிலாமணி தேசிகர்; திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ் 120) மார்க்கண்ட நாவலர்; தொழுவூர் கண்ணப்பர் குறவஞ்சி (1880) 121) மார்க்கண்ட முனுசாமி நாவலர்; நடேசர் கீர்த்தனம் 122) கு. மீனாட்சி சுந்தர முதலி யார்; சிவசயிலேசர் துதிக் கலிவெண்பா, மீனாட்சி சுந்தரேசர் சதகலித்துறை, மாமனாக வந்து வழக்குரைத்த லீலைப் பசனை மெட்டு,விருத்தகுமார பாலரான லீலைப் பசனைமெட்டு உள்ளிட்ட 19 நூல்கள் 123) முத்துச் செட்டியார்; மதுரை; அருணேசர் மாலை 124) லட்சுமண பாரதி; சிவமலைக் குறவஞ்சி 125) வாசுதேவ முதலியார் ஓராட்டிக் குப்பை செட்டி பாளையம்; நஞ்சுண்ட கூடற்புராணம் பவானிப்புராணம் உள்ளிட்ட 6 நூல்கள் 126) வீரகவிராஜ பண்டிதர்; திருச்செங் கோட்டுப் புராணம் 127) வீரலிங்க பாரதி; சிறுத்தொண்டர் நாடகம் (1886) 128) வீராசாமி உபாத்தியாயர்; சிவசங்கர சதகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

129) வெங்கட்ரமணதாசர்; திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம் 130) வென்றிமலைக் கவிராயர்; பிரான் மலை; திருவிடை மருதூர்ப் பள்ளு 131) வேங்கடராமணதாசர்; சாமக்குளம், கொங்கு நாடு; கொடுமுடிப் புராணம் (1900) 132) வெங்கடராமசாஸ்திரி; தஞ்சை மாநகரத்தல புராணம் 133) வெங்கடாசல முதலியார்; கபாலீசுரர் வழிநடைப் பதம் 134) வேலாயுதக் கவி; இராமநாதபுரம் சிவராத்திரி நாடகம் 135) சி. வேலைய தேசிகர்; திருவைகாவூர்ப் புராணம் 136) கோ. வைத்தியலிங்கனார்; உரத்தூர்; 1870; ஆட்கொண்ட மாலை, சுந்தர மூர்த்தி நாயனார் வரலாறு, திருவிளை யாடல் மாலை 137) வைரக்கண் வேலாயுதப் புலவர் (1895); சென்னை; அதிபத்த நாயனார் கீர்த்தனை அந்தாதிப் பஞ்சரத்தினம், அருணாசலேசுரர் பதிகம், அருணாசலேசுரர் வருகைப் பதிகம், உண்ணாமலையம்மன் பதிகம், உண்ணா முலையம்மை வருகைப் பதிகம், உயிர்வருக்கத் தேவார மாலை, கைலாய நாதர் பதிகம், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை முதலான நூல்கள்.

ஆன்றோர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டு

1. நூற் பட்டியல்

1) ''சைவ சித்தாந்தம்'' ஆங்கிலம் (மூன்று அத்தியாயம்) தருமபுர ஆதீனம் டி.என். ராமச்சந்திரன் ..... (1984, 1988, 1994)

2) ''மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்'' உ.வே. சாமிநாதையர் .... தமிழ்ப்பல்கலைக்கழகம்

3) ''தமிழ்ப்புலவர் வரிசை'' (புத்தகம் 1 முதல் புத்தகம் 31 வரை) க.அ. இராமசாமிப்புலவர் .....சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

4) ''தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம்'' (அத்தியாயம் 1, 2, 3,) வெ. பழநியப்பன், உ.பழனி .... அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

5) ''தமிழ்வளர்த்த நல்லறிஞர்கள்'' குன்றக்குடி பெரியபெருமாள்.

6) ''இந்து கலைக் களஞ்சியம்'' .....கொழும்பு.

7) ஜே.எம். நல்லசாமி பிள்ளையின் வாழ்க்கை வரலாறு ... ஆங்கிலம் கே.எம். பாலசுப்பிரமணியன்.

8) ''சித்தாந்தா தீபிகா – ஆங்கிலம்'' ''கலைமகள்'' ''சித்தாந்தம்'' ''செந்தமிழ்ச் செல்வி'' பழைய இதழ்கள்.

9) ''மறைமலையடிகள் நூற்றாண்டு விழாமலர்'' – 1977.

10) ''மறைமலையடிகள்'' – இரா. இளங்குமரன் – 1995.

11) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் – முனைவர் ச. சிவகாமி – உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் 1994

12) திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

V

இருபதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள்

1
பெரியபுராணம் பற்றி அரிய நூல்கள் தந்த பல்கலைச் செல்வர் (1901)

ஆண்டு 1975... இடம் மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றம்... பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார் ''சைவ சமய சமுதாய வரலாறு'' எனும் தலைப்பில் மூன்று நாள்கள் தொடர்ந்து பேசுகிறார். பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சந்தரனார் தலைமை. தெ.பொ.மீ. அவர்கள் பேச எழுந்திருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற சமயம். ''நான் ஒரு கிழவன். எல்லாவற்றிலும் எக்ஸ். பல்கலைக் கழகம் – பல் போன நிலை – பொதுவாழ்வு எல்லாமே எக்ஸ்'' என்று சிரித்தவாறே தொடங்கினார். அவரால் தான் அப்படி ஒரு பற்றற்ற நிலையில் இருக்க முடியும்.

பல்கலைச் செல்வர் தனது இறுதிக் காலத்தில் தான் பலகாலும் செய்து வந்த நவாவர்ண பூசையெல்லாம் விட்டுவிட்டு மணிக்கணக்கில் தியானத்தில் சென்று விடுவார்கள். ''தம்பெருமை தாமறியா ஒரு தவயோகி; புறத்துறவு இல்லாமல் அகத்துறவை மேற்கொண்டு ஒரே பிறப்பில் உச்சநிலையை அடைந்த ஆன்மீக வாதி'' என்று அவர்களோடு ஐம்பது ஆண்டு களுக்கு மேலாகப் பழகியும் ''குருதேவர்'' என்று போற்றியும் வந்த அ.ச.ஞா. அவர்கள் கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல. தமது இறுதிக் காலத்தில் புற்று நோயின் வலியால் துன்பப்பட்டவர் கடைசி ஒருமாதம் மருந்து ஏதும் எடுத்துக் கொள்ளாது வலி ஏதும் இல்லாமல் தியான நிலையிலேயே உயிர் நீத்தார்.

தெ.பொ.மீ. அவர்கள் வடமொழி, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளை அறிந்தவர். இயற்பியலும், கணிதவியலும் இவருக்கு தண்ணீர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பட்டபாடு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தெ.பொ.மீ. அவர்கள் Theory of relativity பற்றி இரண்டு மணிநேரம் பேசியபொழுது, அறிவியல் துறை பேராசிரியர்கள் அனைவரும் அயர்ந்து போய்விட்டனர். அப்படி ஒரு தெளிவு!

ஐந்நூறு பக்கமுடைய ஆங்கில நூலாயினும் சரி – மூன்று மணி நேரத்தில் படித்து அதன் சாரத்தைச் சொல்லக் கூடியவர்கள் தெ.பொ.மீ. ''ஏகசந்த கிராகி'' என்பார் அ.ச.ஞா.

தெ.பொ.மீ. 35 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார்கள். ஞானசம்பந்தர் மதுரையில் சமணத்தை வென்று சைவத்தை நிலைநாட்டிய வரலாற்றை விளக்குவது சிரமமான ஒன்று. நாத்திகவாதம் தலை தூக்கியிருந்த சமயம். 1950களிலேயே அவ்வரலாற்றினை எடுத்துக் கொண்டு சம்பந்தர் வென்றது திகம்பர சமணர்களையே. அவர்களது நெறிமுறை பிழையானது என்றெல்லாம் விரிவாகத் தெளிவு படுத்தியுள்ளார்கள். (''சம்பந்தரும் சமணரும்'').

பெரிய புராணத்தில் யாரும் அதிகம் தொடாத வரலாறு எறிபத்தர் வரலாறு ஆகும். அந்த வரலாற்றினை எடுத்துக் கொண்டு ''அன்புமுடி'' என்ற தனியொரு நூலே இயற்றினார் தெ.பொ.மீ.

அவரது நூல்களிலெல்லாவற்றிலும் தலையாயது ''சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்'' என்ற நூல் என்பார் அ.ச.ஞா. கண்ணப்பர் வரலாறுகள் என்னென்ன மொழிகளில் வந்துள்ளனவோ அத்துணையும் ஒருசேர தொகுத்து 400 பக்கங்களில் 1926லியே தந்திருக்கின்றார். முழுவளர்ச்சி பெற்ற தெ.பொ.மீ. தான் அதனை எழுதியிருக்க வேண்டும் என்பார் அ.ச.ஞா.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் பணியாற்றிய தெ.பொ.மீ. அவர்கள் 1901-ஆம் ஆண்டில் பொன்னுசாமி பிள்ளையவர்களின் மகவாகப் பிறந்தார். 1980-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

(துணை நூல்கள் : ''தெ.பொ.மீ. – ஒரு அஞ்சலி'' – அ.ச. ஞானசம்பந்தன் இலக்கியச் சிந்தனை வெளியீடு...)

2

திருவாசகம், பெரியபுராணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.வி. பிள்ளை. (1901)



ஜி. வன்மீகநாதம் பிள்ளைக்கு வரும் கடிதங்கள் எல்லாம் எங்கள் வீட்டுக்கு வந்துவிடும். எங்கள் தந்தையார் திருக்குறள்வேள் ஜி. வரதராஜம் பிள்ளைக்கு வரும் கடிதங்கள் எல்லாம் வன்மீகநாதம் பிள்ளை வீட்டிற்குப் போய்விடும். இருவரும் ஜி.வி. பிள்ளை. ஒரே தெருவில் வசித்தார்கள். சைவத்தில் ஊறி நின்றவர்கள்.

வன்மீகநாதம் பிள்ளை அகத்தியர் போல, குள்ளமாக இருப்பார்கள். சட்டை போடமாட்டார்கள். வெறும் மேல்துண்டு தான். குண்டு குண்டென்று எங்கள் வீட்டிற்கு வந்துவிடுவார்கள். தந்தையாருக்கு இனிய நண்பர்.

தோற்றத்தில்தான் எளிமையே தவிர டில்லியிலும், பம்பாயிலும் பெரும் பதவி வகித்தவர்கள். திருவாசகம், பெரிய புராணம் இரண்டினையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள். மாணிக்கவாசகர், அப்பர் என சாகித்திய அகாடமிக்காக இருநூல்களையும் வழங்கியுள்ளார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6.1.1901 திருச்சி தென்னூரில் பிறந்தவர்கள், ஜி.வி. பிள்ளையவர்கள்.

(துணை நூல்கள் : "Pathway to God Through Thiruvachakam" - G. Vanmikanathan)

3

சைவசித்தாந்த விளக்கம் பாடம் சொல்லி வந்த தொண்டைமண்டல ஆதீனத் தலைவர் (1901)

எழுபது எண்பதுகளில் (1970, 1980) சைவசித்தாந்தம் என்றால் முதலியார் மும்மணிகள் என வேடிக்கையாகக் கூறுவர். அருணை வடிவேல் முதலியார், வச்சிரவேல் முதலியார், முத்து சு. மாணிக்க வாசக முதலியார் என்ற மும் மூர்த்திகளைத் தான் அப்படி கூறுவார்கள். இன்னொரு புறம் ச. தண்டபாணி தேசிகர், மு. அருணா சலம், மு. பழ. இரத்தினம், செட்டியார், வ.ஆ. தேவசேனாபதி, வெள்ளைவாரண னார் ஆகியோர். சற்றே வயது குறைந்த நிலையில் ந.ரா. முருகவேள், கு. சுந்தர மூர்த்தி, வை. இரத்தினசபாபதி ஆகியோர். தமிழ்நாட்டில் சைவசித்தாந்தக் களஞ்சியம் நிரம்பி வழிந்த காலம் அது. இவர்களுள் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் என்ற பூர்வாசிரமப் பெயரைக் கொண்ட பெருந்தகை தொண்டை மண்டல ஆதீனம் 292 ஆவது குருமகா சந்நிதானமாகப் பீடம் ஏறினார்கள்.

சந்நிதானம் அவர்களுக்கு தொல் காப்பியம், இலக்கண நூல்கள், சங்க இலக்கியம், காவியங்கள், வேதாந்த நூல்கள், தருக்க நூல்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் எல்லாம் அத்துபடி. சுவையாக விளக்கு வார்கள். சிவஞானபோதம் பாடம் சொல்லும்பொழுது சித்தாந்த மேருவான சிவஞான முனிவர் இன்ன இடத்தில் தவறு செய்துவிட்டார் என்று எடுத்துக்காட்டு களுடன் விளக்குவார். மாபாடியம் தந்த மாமலை சிவஞான முனிவர். அவர்கள் கருத்தில் பிழை காணுதல் என்றால் அந்த அளவு ஆழமான படிப்பும், அசாத்தியமான துணிச்சலும் வேண்டும். தமிழகம் முழு வதும் சைவசித்தாந்த வகுப்புகளை அலுக்காமல் சலிக்காமல் நடத்துவார்கள்.

சந்நிதானமவர்கள் தருமையில் இருந்தபொழுது இரண்டாம் திருமுறை, நான்காம் திருமுறைகட்கு உரை எழுதினார் கள். சிதம்பரச் செய்யுட் கோவை விளக்க வுரை, சிவப்பிரகாசம் மூலமும் உரையும், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை மூலமும் விளக்கவுரையும், கந்தர் கலிவெண்பா விளக்கவுரை, பண்டார மும்மணிக்கோவை விளக்கவுரை, நீதிநெறிவிளக்கம் விளக்கவுரை, ஸ்ரீசொக்க நாதர் திருவருட்பா விளக்கவுரை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்கள். சந்நிதான மவர்களின் ''சிவநெறிக் கட்டுரைகள்'', ''சித்தாந்தக் கட்டுரைகள்'' அவர்கள் புகழைக் காலமெல்லாம் பறைசாற்றும்.

எனது தந்தையாருக்குச் சாத்திரப் பாடம் சொல்ல எங்கள் திருச்சி இல்லம் வருவார்கள். ஒருமுறை அவர்களுக்கு அறுவை சிகிச்சை நடந்தது. தையல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரிக்கவில்லை. எனது தந்தையாருக்குச் சுவாமிகள் கடிதம் எழுதினார்கள். ''தையலாள் பிரிந்தாளில்லை. குறிப்பிட்ட நாளில் அதிகாலை வருகிறேன். வீரப்பனைக் கதவைத் திறந்து வைக்கச் சொல்லுங்கள். வீரப்பன் தூக்கம் தீராத் துன்ப ஆக்கம்'' என்று எழுதினார்கள். (வீரப்பன் எங்கள் இல்லப் பணியாள்) சுவாமிகள் பேச்சிலும், எழுத்திலும் சிலேடை நிரம்பி இருக்கும்; கவிதைச் சுவை மிக்கு இருக்கும். பலநாள் நினைத்து நினைத்து சிரித்துக் கொண்டிருந்தோம்.

22.10.1901-ஆம் ஆண்டில் ஆரணியை அடுத்துள்ள காமக்கூரில் திரு. சுந்தர முதலியார் திருமதி. கல்யாணியம்மையார் ஆகியோர்க்கு மகவாய்ப் பிறந்தார். 28.7.1977-ஆம் ஆண்டில் பரிபூரணம் அடைந்தார்கள்.

(துணை நூல்கள் : ''சிவநெறிக் கட்டுரைகள்'', ''சித்தாந்தக் கட்டுரைகள்'' சிலத்திரு ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள்)

4

தருக்கரீதியாகத் தமிழ்த் தத்துவத்தைத் தரணிக்குத் தந்த தகவாளர் (1903)



வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், வணிகர்கள், கடவுள் மறுப்பாளர்கள் எனப் பலதரப்பட்டோர் சுமார் 150 பேர் கூடியிருந்த பேரவை. அவைக்கு முன்னே ஒரு கரும்பலகை. அருகில் வெளுத்த காவி வண்ணத்தில் ஜிப்பா; பொடி உறிஞ்சிய நாசி. இக்கோலத்துடன் இருந்தவர் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமி பிள்ளையவர்கள் ஆவார். ''உடம்பு, உயிர், இரண்டினையும் ஏற்றுக் கொள்கின்றோம். சரி, இரண்டும் தனித் தனிப்பொருள்கள். அதுவும் சரி. ஆனால் உடம்பில் எப்படி உயிர் பொருந்தியது? உடம்பு தானாக உயிரிடம் போய் இருக்க முடியாது. அது அஃறிணைப் பொருள். அறிவற்றது. உயிர்க்கு அறிவு உண்டு. ஆனால் இந்த உடம்பைத் தேர்ந்தெடுக்கும் சக்தி அதற்குக் கிடையாது. அந்தச் சக்தி அதற்கு இருந்தால் இந்த என்னுடைய உடம்பை விட அழகான ஆரோக்கியமான செல்வச் செழிப்பான உடலையே தேர்ந்தெடுத்து இருக்கும். அந்த சாய்ஸ் அதற்கு இல்லை. Therefore there must be a third unknown force that unites body and soul. கணிதத்தில் unknown ஐ X என்று ஆரம்பிப்போம். இறுதியில் "X" க்கான விடை கிடைக்கும். அதுபோல இந்த unknown force யும் "X" என்று அழைப்போம். அந்த "X" தான் இந்த உயிரை என்னுடைய இந்த உடம்பில் சேர்த்தது. அந்த "X" ஐ சிலர் அல்லா என்கின்றனர். சிலர் இயேசு கிறிஸ்து என்கின்றனர். நாம் சிவம் என்கின்றோம்'' என்று கணக்கு, logic, எல்லாம் கலந்து அற்புதமாக முடித்தார்கள். நிகழ்ச்சிக்கு வந்து இருந்த கணித ஆசிரியர்கள் மலைத்துப் போனார்கள். ''வித்துவான் என்ன பேசப் போகிறார்?'' என்று நினைத்திருந்தார்கள். தமிழ்ப் பாடல்கள் ஏன் சிவஞானபோதச் சூத்திரம் கூட சொல்லாமல் இப்படி mathematical ஆக logical ஆக சைவசித்தாந்தத்தைப் பிட்டு வைத்ததில் அப்படி ஒரு திகைப்பு.

அப்பொழுது ஒரு கடவுள் மறுப்பாளர் எழுந்து நின்று "X" எல்லாம் சரி. ஒத்துக் கொள்கிறேன். அந்த "X" யை ஏன் 'சிவம்' என்று கூறவேண்டும்?'' என்று ஆவேசமாகக் கேட்டார். கரும் பலகையில் சாக்கட்டியால் எழுதி விளக்க இருந்த உரைவேந்தர் அதே வேகத்தில் திரும்பி சாக்கட்டியுடன் உயர்ந்து இருந்த கையை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர் பக்கம் நீட்டி ''செருப்பு என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளேன்'' என்று கூறியபடி அதே வேகத்தில் கையைக் கீழே போட்டார். அவை ஒரு கணம் அயர்ந்து போய்விட்டது. பேரமைதி. stilled silence எனலாம். அவையினருக்கு நிதானம் திரும்பிய பொழுது பெரும் கரவொலி. கேள்வி எழுப்பியவரும் சேர்ந்து கொண்டார்.

விஷயம் இதோடு நிற்கவில்லை. நிகழ்ச்சி நடந்த இடம் மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றம். மிக அண்மையில் தருமையாதீனம் உள்ளது. இச்செய்தி வேறு விதமாகத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானம் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. பிறிதொரு வேலையாக ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்களைத் தரிசிக்கச் சென்றிருந் தேன். நந்தவனத்தில் நாற்காலியில் அமர்ந் திருந்தார்கள். ஆறுநாள் மயிலாடுதுறை தெய்வத்தமிழ் மன்றத்தில் உரைவேந்தர் சிவஞானபோதம் அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுமாறு நடத்திய பாங்கினை உற்சாகமாகக் கூறிக் கொண்டிருந்தேன். ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதாமவர்கள் அமைதியாக, ''ஏம்பா உங்க ஔவை துரைசாமி பிள்ளை சிவபெருமானை... என்று சொல்லி விட்டாராமே'' என்றார்கள். எனக்கு திக்கென்றாகிவிட்டது. பிறகு அவர்களிடம் நடந்த நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, ''அதுபோல உரைவேந்தர் அவர்கள் spontaneous ஆகக் கூறவில்லையென்றால், அந்தக் கடவுள் மறுப்பாளர் ஏற்றுக் கொண்டு இருந்திருக்க மாட்டார். அவரையும் ஏற்க வைத்தது உரைவேந்தர் அவர்களின் மாண்பு'' என்றேன். உடனே குருமகாசந்நிதானமவர்கள் ஒரு குழந்தை யின் குதூகலத்துடன் ''அப்படியா சொன்னார்! அப்படியா சொன்னார்'' என்று குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

மயிலாடுதுறை மட்டுமல்ல, இதற்குச் சில ஆண்டுகள் முன்பு திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் எனது தந்தையார் திருக்குறள்வேள் ஜி. வரதராஜம் பிள்ளை அவர்கள் திங்கள்தோறும் உரைவேந்தர் அவர்களின் சிவஞானபோத வகுப்பினை நடத்தி வந்தார்கள். திருச்சியில் 600, 700 பேர் என்று பலதரப்பட்ட அன்பர்களும் கையில் நோட்டும் பேனாவுமாக வந்து கலந்து கொண்டு குறிப்புகள் எடுத்தார்கள். இப்படி நோட்டும் பேனாவுமாகக் கலந்து கொண்டவர்களில் எனது தந்தையாரும், முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் இருந்தனர் என்றால் உரைவேந்தர் அவர்களின் சிறப்பைச் சொல்ல வேண்டுமா?

கடினமான சிவஞான போதத்தை எப்படி ஒரு தமிழ்ப் புலவர் Cross section of Society என்போமே அதுபோல பலதரப் பட்டவர்களும் ஏற்குமாறு செய்தார்? முன்பே குறிப்பிட்டது போல, அவர் சித்தாந்தச் சொற்களை (technical words) அதிகம் கையாளுவது இல்லை. காரண காரியத்தோடு logical ஆகச் சொல்லும் பொழுது நாத்திகர்களின் குறுக்குக் கேள்விகள் அடிபட்டுப் போகின்றது. "Unknown" ஐ கணிதத்தில் "X" என்று சொல்லுகிறோம். Derive செய்த பிறகு "X"ன் விடை இறுதியில் கிடைக்கும். அதனால் யாரும் "X"ஐ question பண்ணுவது இல்லை, என்றவுடன் அறிவு ஜீவிகள் வாயடைத்துப் போகிறார்கள். உரைவேந்தர் அதோடு நிறுத்துவது இல்லை. Decarte என்பார், Aldous Huxley என்பார். எல்லாம் சரமாரியாக அவர் பேச்சில் வந்துவிழும். ஆங்கிலம் படித்தவர்கள் மரியாதையுடன் பார்ப்பார்கள். போதும் போதாதற்கு Jurisprudence (சட்டத்தில் ஒரு பிரிவு)ஐ வேறு எடுத்துக் கொள்வார். வழக்கறிஞர்களுக்கு மயக்கமே வந்துவிடும். அப்படி ஒரு ஆளுமை!

பேச்சு என்று மட்டுமல்ல; எழுத்திலும் சிறந்து நின்றார்கள் உரை வேந்தர். சங்க இலக்கியங்கள், மணிமேகலை போன்ற காப்பியங்களுக்கு உரைகண்டது போக ''ஞானாமிர்தம்'' என்ற அரிய சைவ சித்தாந்த நூலுக்கு விளக்கம் தந்தார்கள். சிவஞானபோதத்தை உரையுடன் பதிப் பித்து அதன் சாரத்தை அந்நூலின் முன்னுரையாக வழங்கியுள்ளார்கள். இவர்கள் எழுதிய சைவ சமய இலக்கிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரலாறு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகும்.

இத்துணை பெருமைகள் பெற்ற உரைவேந்தர் கல்லூரியில் முறையாகப் படித்தவரில்லை. திண்டிவனத்தில் பள்ளி இறுதிவரை பயின்று வருமானம் ஈட்ட அத்துடன் படிப்பை நிறுத்தி நலத்துறைக் கண்காணிப்பாளராகச் (Sanitary Inspector) சேர்ந்தார். தமிழார்வம் மீதூரப் பெற்ற பிள்ளையவர்கள் வேலையிலிருந்து விலகிக் கரந்தையில் நாவலர் ந.மு. வெங்கடசாமி நாட்டாரிடமும், கரந்தை இரா. வேங்கடாசலம் பிள்ளையவர் களிடமும் தமிழ் பயின்றுவித்துவான் பட்டம் பெற்றார்.

காவேரிப்பாக்கம்,செய்யாறு,போளூர் ஆகிய ஊர்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். பிள்ளையவர்களின் புலமைத் திறன் கண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரை ஆய்வுத்துறைப் புலவராக அமர்த்திற்று. இறுதியாக மதுரை தியாகராயர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இப்பெருமகனார் தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனத்துக்கு அண்மையில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் ஊரில், கருணீகர் மரபில், சுந்தரம்பிள்ளை என்பாருக்கும், சந்திரமதி அம்மையாருக்கும் நன்மகனாராக 5.9.1903–ஆம் ஆண்டில் தோன்றினார். இவருக்குத் தமிழுலகம் நன்கறிந்த ஔவை நடராஜனார் உட்பட ஐந்து ஆண்மக்களும், நான்கு பெண் மக்களும் பிறந்தார்கள். 3.4.1981 அன்று மதுரையில் பொன்னுடல் நீத்துப் புகழுடல் பெற்றார்கள்.

(1903 - 1981 : பிறந்த ஊர் – ஔவையார் குப்பம்; பெற்றோர் – சுந்தரம்பிள்ளை, சந்திரமதி அம்மையார்).

5
பத்மஸ்ரீ விருது பெற்ற திருமுறை விளக்கப் பேரொளி (1903)



''ஓதுவித்தல் ஒரு தவம்'' என்று வாழ்பவர் அவர். போதி மரத்தடியில் அமராமல், கல்விக் கூடங்கள் என்னும் அறிவாலயங்களில் அமர்ந்து பெரும்புலவர் தண்டபாணி தேசிகர் போதித்த போதனை இன்று புத்தனுடைய மாணாக்கர்களையும் வெற்றி கொண்ட சிறப்பு எய்தியிருக்கிறது. ஏனெனில், புத்தனின் மாணாக்கர்கள் தோற்ற இடத்தில் (இலங்கை) பெரும் புலவர் தேசிகர் அவர்களின் மாணாக்கர்கள் அன்பு முறையை – அறவழியை – அகிம்சையை பொறுமையோடு பாதுகாத்து வருகிறார்கள்.'' இவ்வாறு கூறியவர் அந்த மாணாக்கர்களின் ஒருவரான முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி ஆவார். பிற மாணாக்கர்கள் குமரி ஆனந்தன், ப. நெடுமாறன், கி. வீரமணி ஆவர்.

புகழ்மிக்க அந்த மாணாக்கரின் குருதட்சணைதான் பத்மஸ்ரீ என்ற தேசிய விருது. எத்தகைய தமிழ் அறிஞரும் பெறாத அரிய விருது ஆகும். ஆனால் அந்த விருது தேசிகர் அவர்கள் செவிக்கு எட்டாத நிலையில் நினைவிழந்த நிலையில் இருந்ததுதான் ஒரு சோகம்.

தேசிகர் அவர்களின் மகத்தான படைப்பு திருக்குறள் உரைவளம் ஆகும். சைவத் திற்கு அவர்கள் தந்த அணிகலன்கள்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

திருமந்திர உரை (8–ஆம் தந்திரம் முதற் பகுதி வரை – 18 பகுதிகள்); திருவாசக உரை, திருக்கோவையார் உரை, முதல் திருமுறை உரை ஆகியன. இவையல்லாமல் நடராஜ சதகம் உள்ளிட்ட 5 கவிதை நூல்களும், மூன்று புராணங்களின் உரைகளும், பண்டார சாத்திரங்கள் உரை, 7 உரைநடை நூல்கள், திருக்குறள் பற்றி 4 நூல்கள் ஆகியனவும் எழுதியுள்ளார்கள்.

24 படங்களுடன் ஆடல்வல்லான், 30 படங்களுடன் முருகன், 22 படங்களுடன் கணபதி ஆகியன இவர்களது பிற படைப்புகள் ஆகும். (தோற்றம் – 1903; மறைவு – 1990 பிறப்பிடம் – சிதம்பரம்; பெற்றோர் – சட்டையப்ப தேசிகர் – பாலாம்பாள்)

(துணைநூல்கள் : மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் பவளவிழா மலர்.)

6
சாத்திர, தோத்திர வகுப்புகள் நடத்திய திருக்குறள் பீடாதிபதி (1904)

1925–26 சித்தாந்த சாத்திர வகுப்பு; 1935–36–ஆம் ஆண்டில் வாலாசாபாத்தில் ஆசிரியர்களுக்குச் சாத்திர வகுப்பு; 1942–43–ஆம் ஆண்டில் சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தில் சிவஞானபோத விரிவுரை; 1944–49 திருமந்திர விரிவுரை; 1950–62 சென்னை இறைபணி மன்ற சார்பில் தொடர்ந்து பெரியபுராண விரிவுரை; 1950–59 சிவனடியார் திருக்கூட்டத்தில் சிவஞான சித்தியார் விரிவுரை; 1961–62– இல் சிவகாசியில் சிவஞானபோத விரிவுரை, 1962–63 திருக்கோவையார் விரிவுரை; இவற்றையெல்லாம் நிகழ்த்தியவர் அழகரடிகள் ஆவார்.

இவர் 1945 முதல் திருக்கூட்டம் சார்பில் திருக்கழுக்குன்றத்தில் 30 ஆண்டுகள் ''திருமுறைப் பெருவிழா'' தொடர்ந்து நடத்தினார்.

இவர் 1949–ஆம் ஆண்டில் மாம்பாக்கத்தில் குருகுலம் ஒன்றைத் தொடங்கினார். அங்கே துவக்கப் பள்ளியில் தொடங்கி உயர்நிலைப் பள்ளி வரை வளர்ந்தது.

2.5.60–ஆம் ஆண்டில் சிவதீக்கை பெற்று அழகரடிகள் எனும் தீட்சாநாமம் பெற்று திருக்குறள் பீடாதிபதிகள் ஆனார்.

18.2.1981–ஆம் ஆண்டில் உலகவாழ் வினை நீத்தார்.

(இயற்பெயர் : பாலசுந்தரம்; ஊர் – மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கம்)

7
கோயில்கள் - சிற்பங்கள் பற்றிக் கலையழகுடன் எழுதிய ஆட்சியாளர் (1904)

பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பாவை விளக்கு என்று தமிழக மக்கள் மனதை ஆக்ரமித்திருந்த காலம். அந்தக் காலகட்டத்தில் ஆலயங்கள் – சிற்பங்கள் பற்றிச் சுவையாக எழுதி – அதுவும் ஒரு வாரம் இருவாரங்கள் அல்ல – பல 'வாரங்கள் தொடராக – தமிழக மக்களைத் தம் எழுத்தால் கட்டிப் போட்டார் ஒரு தமிழறிஞர். அவர்தான் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான். தொடர் ''வேங்கடம் முதல் குமரி வரை'' இதழ் ''கல்கி''. அவையே பின்னர் 4, 5 தொகுதிகளாக நூல்வடிவம் பெற்றும் வெளிவந்தன. இந்த தொடர் வந்த பின்பு – கோயிலுக்குப் போனோம் – கடவுளைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தரிசித்தோம் - கன்னத்தில் போட்டுக் கொண்டோம் என்று வழிபட்டவர்கள் எல்லாம் ஒவ்வொரு சிற்பத்தின் முன்னும் நின்று ரசித்துப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

இந்நூல்கள் அல்லாமல் இவர் எழுதிய வேறு நூல்கள் ''கல்லும் சொல்லாதோ கவி'', ''அமர காதலர்'' ஆகியன.

பாஸ்கரத் தொண்டைமான் ரசிகமணி டி.கே.சி. அவர்களின் தலைமைச் சீடர்களுள் ஒருவர் ஆவார். தலைசிறந்த கம்பராமாயணப் பேச்சாளர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி வரை உயர்ந்து நிர்வாகத்தில் கண்டிப்பும், அதேசமயம் கருணையும் கொண்ட நேர்மையாளர் தொண்டைமான்.

31.3.1965 அன்று இவர் இவ்வுலக வாழ்வை நீத்தார். (1904 – 1965; பிறந்த ஊர் – வீரவநல்லூர்; திருநெல்வேலி மாவட்டம்)

8

ஆங்கிலத்தில் சாத்திர நூல்கள் எழுதிய அரசு அதிகாரி (1905)

அவர் அரசின் துணைச் செயலர். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் அவரைத் தனக்குத் தனி ஆலோசகராக நியமித்துக் கொண்டார். அவர்தான் நல்முருகேச முதலியார் அவர்கள்.

முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் நல்ல புலமை உடையவர்கள். அவர்கள் தன் ஆங்கில அறிவினால், "Pathway of pure consciousness" "Sankarpa Niraharanam", "Relevance of Saiva Siddhanta Philosophy" என்ற நூல்களை வெளியிட்டார். சைவசித்தாந்தப் பெருமன்றத்தார் ''சைவசித்தாந்தா'' எனும் ஆங்கில முத்திங்கள் இதழ் வெளியிட முனைந்த பொழுது இவர் முதலாசிரியராகப் பணியாற்றினார்.

முதலியார் அவர்கள் 28.8.87 அன்று சிவனடி சேர்ந்தார். (1905 – 1987; நல்லூர், செங்கற்பட்டு மாவட்டம்)

9

நாளும் இன்னிசை உரையால் சைவம் வளர்த்த ஞானவள்ளல் 1906



பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே:

தான் மேடை ஏறிய பத்தொன்பதாவது வயதிலிருந்து உயிர் பிரியும் வரை – அறுபத்தெட்டு ஆண்டுக் காலம் – ஒரு நாள் கூட விடாது 3 மணிநேரம் அல்லது 4 மணிநேரம் சொற்பெருக்காற்றுவது என்பது அசுரசாதனையாகும். சில சமயங்களில் ஒரே நாளில் இரண்டு கூட்டங்கள் கூட நடக்கும். யாரும் செய்யாத – இனி செய்ய முடியாத இப்பெரும் செயலைச் செய்தவர்கள் வாரியார் சுவாமிகள் என்று அனைவராலும் பக்தியோடு அழைக்கப் பட்ட திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களே. உடற்பிணி என்று கூட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பெருந்தகை ஓய்வெடுத்தது இல்லை. ஆரம்ப காலங்களில் 5 மணி நேரம் கூடத் தொடர்ந்து பேசியிருக்கின்றார்கள். சுவாமிகளின் தம்பி அமரரான அன்று கூட இறுதிக் கிரியைகளை முடித்துவிட்டுச் சொற்பெருக்காற்ற சுவாமிகள் வந்துவிட்டார்கள். ''இப்படி வந்து விட்டீர்களே'' என்று கேட்டதற்கு சுவாமிகள், ''வாழ்க்கை என்பது ஒரு பயணம். ரயிலில் ஏறுபவர்களெல்லாம் ஒரே இடத்தில் இறங்குவது இல்லை. சிலர் விழுப்புரத்தில் இறங்குவார்கள். சிலர் சென்னை வரை செல்வார்கள். தம்பிக்கு இறைவன் அளித்த அனுமதிச் சீட்டு இவ்வளவு நாட்களுக்குத் தான். தம்பிக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டேன். இன்று கூட்டத்திற்குப் பத்தாயிரம் பேர் வரக்கூடும். அதில் பத்துப் பேர் இறை அருளைப் போற்றி ஏற்றுக் கொண்டு தம் வழியைத் திருத்திக் கொண்டால் அது இறைவனுக்கு ஆற்றும் தொண்டல்லவா?'' என்று அமைதியாகக் கூறிவிட்டு மேடை ஏறினார்களாம். சுவாமிகளின் இறுதிக் காலத்தில் அவர்களால் நடக்க முடியவில்லை. அமெரிக்காவிலிருந்து வந்த நடப்பான் மூலம் விரிவுரைக்குச் சென்றார்கள். அதுவும் முடியாமல் போய் கழிப்பறைக்கு நடந்து செல்லவே சிரமப்பட்டார்கள். அப்பொழுதும் விடாது உருளை நாற்காலி மூலம் கூட்டங்களுக்குச் சென்றார்கள். தன் உடல் உபாதை கூடப் பொருட்படுத்தாமல் உலக மக்கள் கடைத் தேறப் பாடுபட்ட பெருந்தகை அவர்கள். இலண்டனில் பேசச் சென்ற சுவாமிகள் அவர்களுக்கு நிமோனியா வந்து நினைவு தப்புகிற நிலைமை வந்துவிட்டது. மூக்கில் செருகியிருந்த பிராண வாயுக் குழாயைப் பிடுங்கிவிட்டு'' பேசவிடு! பேசவிடு! பேசத்தானே வந்திருக்கோம்'' என்று பேச ஆரம்பித்துவிட்டார்களாம்.

''ஓ... ராஜேந்திரனா...? நீ ஆண் பிள்ளையா? பெண் பிள்ளையா?''

''ஆண்பிள்ளை சாமி''

''அதுதான் இல்லை. நீ பெண் பிள்ளை. முருகன் ஒருவன் தான் ஆண்பிள்ளை. அவன் சிவன் பிள்ளை. அவன் நெற்றியில் தோன்றிய பிள்ளை. சிவன் ஆண். எனவே, முருகன் மட்டுமே ஆண்பிள்ளை. மற்றவர் எல்லாம் பெண் பிள்ளை'' என்று மேடையில் முழங்குவது போலவே பேசினார்களாம். சுவாமிகளின் இறுதி மூச்சுவரை பேச்சுதான். சுவாமிகள் வாழ்க்கையில் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே!

பட்டிதொட்டி முதல் பட்டணம் வரை:

சுவாமிகள் தமிழ் கூறு நல்லுவதில் பேசாத இடம் இல்லை எனலாம். நகரங்களிலும் பேசியிருக்கின்றார்கள். கிராமங்களிலும் உரையாற்றியிருக்கின்றார்கள். பட்டிதொட்டி என்று ஒரு இடம் பாக்கி இல்லை. தமிழ்நாட்டில் அவர்கள் திருப்பாதம் பதியாத ஒரு சிறு ஊர் கூட இல்லை. வெளிநாடுகளையும் விட்டு வைக்கவில்லை. மலேயாவுக்கும், இலங்கைக்கும் பலமுறை சென்றிருக்கிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தோனேசியா, ஸ்விட்சர்லாந்து என்று பறந்திருக்கிறார்கள். நல்ல மண்டபம், விழாமேடை என்றெல்லாம் சுவாமிகள் பார்ப்பதில்லை. தேசூரில் மக்கள் வேண்டிக் கொண்டதன் பேரில் நடுவீதியில் நின்று பேசினார்கள். இதுவாவது பரவாயில்லை. பம்பாயில் தாராவிப் பகுதி. அழுக்குக் கிடங்கு. கண்ட இடத்தில் மலஜலம். சாக்கடை நீர் தேக்கம். துர்நாற்றம் மண்டிய பகுதி. அங்கு போய் மக்கள் கேட்டார்களே என்று சென்று கதை சொல்லியிருக்கிறார்கள். பரம ஏழைகளுக்கும் பக்தியைப் பரப்ப அப்படி ஒரு ஆர்வம்!

பலதரப்பட்ட மக்களும் கேட்டல்

வாரியார் சுவாமிகள் பேசுகிறார்கள் என்றால் கூட்டம் 3,000, 4000 என்று அலை மோதும். சில ஊர்களில் பத்தாயிரத்தையும் தாண்டும். முப்பது நாள் நிகழ்ச்சியானாலும் இதே நிலை நீடிக்கும். நாளும் வளரும். கிராமங்களில் கூட ஆயிரக்கணக்கான மக்கள் திரள்வர். அறிஞர்கள், படித்தவர்கள், அரசியல் வாதிகள், பெண்கள், குழந்தைகள் எனப் பலதிறத்தாரும் இவர்களது பேச்சைக் கேட்க வருவர். ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயம் பர்தா அணிந்த முஸ்லீம் பெண்கள் கதை கேட்க வந்தார்கள் என்றால் வேறென்ன விளக்கம் சொல்ல வேண்டும்? தொடர்ந்து கேட்டாலும் சலிப்பே வராது.

அவைக்கேற்ற உரை

இது எப்படி ஒரு தனி மனிதரால் முடிந்தது? அவையில் இருப்போரின் மனநிலை அறிந்து பேசி கட்டி இழுக்கும் நுணுக்கம் சுவாமிகளுக்கு இருந்தது. வேலூரில் பெண்கள் கூட்டம் 80 சதவிகிதம் இருக்கும். ஒரு கருத்தை விளக்க ஆரம்பித்தால் கத்தரிக்காய் கூட்டிலிருந்து அன்னாசி ரசம் வரை வரும். ஆழ்வார் பேட்டை ஆஸ்திக சமாஜத்திலே தத்துவங் களாக வந்து விழும். கல்லூரி மாணவர் களுக்கும் பிடிக்கும். மாணவர்களின் கூட்டத்திற்கும் போவார். கூச்சல், வாயொலி, சீட்டி எல்லாம் இருக்கும். ஒரு பார்வை பார்த்து ''இது எல்லாம் காலேஜ் (College) வயசு; காலி ஏஜ்'' என்று குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார். அவையே மகுடிக்குக் கட்டுப் பட்டது போல தன்வசமிழந்து நிற்கும். அதோடு விடமாட்டார்கள். அடுத்த கணையை வீசுவார்கள். ''இந்த வயது காமன் வில் எய்தும் வயது. அவன் உங்களுக்கு மட்டும் காமன் அல்ல. கிறித்துவர்களுக்கும் அவன்தான்; முஸ்லீம் களுக்கும் அவன்தான்; அனைவர்க்கும் அவன் Common (காமன்)'' என்று வார்த்தை ஜாலம் செய்வார்கள். மாணவர்கள் வெடித்துச் சிரிப்பார்கள்.

குழந்தைக்கும் புரியும்

குழந்தைகளும் சுவாமிகள் பேச்சு கேட்க வருவர். திருநீற்றின் பெருமையை அவர்கள் சொல்ல இருக்கிறார்கள். குழந்தைகளைப் பார்த்துக் கேட்கிறார்.

''உங்கள் வீட்டில் வெள்ளையடித் திருக்கிறதா?'' குழந்தைகள் ''ஆம்'' என்று தலையாட்டுவர். ''காலி வீட்டில் வெள்ளை யடிப்பார்களா'' என்பார் வாரியார். குழந்தைகள் ''ஊஹூம்'' என்று தலை யாட்டுவர். ''உன் உடம்பு இறைவன் உறைவிடமா? காலி இடமா?'' என்பார். சுவாமியே ''குழந்தைகள் இறைவன் உறையும் இடம்'' என்பார்.

''ஞானம் – அறிவு – நிரம்பிய, இறைவன் குடி இருக்கின்ற நெற்றியில்...'' என்று நிறுத்தி உள்ளங்கையில் குழைத்து மூன்று விரல்களால் நெற்றியில் பூசுவது போல பாவனை செய்து, இது என்ன? என்பார்கள். நான்கைந்து குழந்தைகள் எழுந்து ''விபூதி'' என்று கூறும். உடனே தலைக்கு ஒரு புத்தகம் வீசி எறிவார்கள். எவ்வளவு அரிய கருத்தை எவ்வளவு எளிமையாகச் சொல்லி விட்டார்கள்!

பாமரனும் ரசிப்பான்

கிராமத்து மக்கள் குழுமி இருப்பார்கள். ''நந்தவனத்தில் ஓர் ஆண்டி'' என்று பாட ஆரம்பிப்பார்கள். பாமரர்களுக்குத் தெரிந்த பாடல் ''அட! சாமி நம்ம பாட்டு பாடுது'' என்று நிமிர்ந்து உட்காருவார்கள். ''நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்தாண்டி'' என்று நிலையாமைத் தத்துவத்தைப் பிட்டு வைப்பார்கள். அடுத்த நாள் கிராமத்தில் ''நந்தவனத்தில் ஓராண்டி'' பாட்டுதான் எல்லோரும் பாடிக் கொண்டிருப்பார்கள்.

அறிஞரும் விரும்புவர்

நல்ல அறிஞர் கூட்டம்

ஆத்ம ஜோதி – வட்டமாகிய கல்

அருட்ஜோதி – சூழ்ந்திருக்கிற ஆவுடையார்

சிவஜோதி – மேல் நோக்கிய லிங்கம்.

இதுதான் சிவலிங்கத்தின் உண்மை என்பார்கள். உடனே வள்ளலார் பாட்டு.

''ஜோதியுள் ஜோதியுள் ஜோதி''

400 வரிகளில் சொல்ல வேண்டியதை 4 வரிகளில் எளிமையாகக் கொடுத்து விடுவார்கள், நான்கு வரிகளில் அமைந்த கடினமான தத்துவத்தை நானூறு வரிகளில் எளிமையாக்கித் தருவார்கள். அதுதான் அவர்கள் திறமை!

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

சௌந்தரா கைலாசம் அம்மையாரின் பாராட்டு

வாரியார் சுவாமிகளின் பேச்சழகை திருமதி. சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள் தன் கவிதைத் தமிழில் எடுத்துரைக்கிறார்கள்.

''அவருடைய பேச்சிலே கதையிருக்கும். அந்தக் கதையிலே ஒரு கருத்திருக்கும். அந்தக் கருத்திலே ஒரு தெளிவிருக்கும். அந்தத் தெளிவிலே ஒரு பயனிருக்கும்!

அவருடைய உரையிலே ஒரு செறிவிருக்கும். அந்தத் செறிவிலே ஒரு பொருளிருக்கும். அந்தப் பொருளிலே ஒரு அழகிருக்கும். அந்த அழகிலே ஒரு ஒளியிருக்கும்.

அவருடைய மொழியிலே ஒரு கனிவிருக்கும். அந்தக் கனிவிலே ஒரு நலம் இருக்கும். அந்த நலத்திலே ஒரு துடிப்பிருக்கும். அந்தத் துடிப்பிலே ஒரு துணையிருக்கும்!

அவருடைய சொல்லிலே ஒரு இசை இருக்கும். அந்த இசையிலே ஒரு இனிப்பிருக்கும்! அந்த இனிப்பிலே ஓர் அமைப்பிருக்கும்; அந்த அமைப்பிலே தனி அன்பிருக்கும்.

அவருடைய வார்த்தையிலே நகை உதிரும்; அந்த நகையிலே மனம் சதிர் புரியும். அந்தச் சதிரிலே உளம் தெளிவு பெறும். அந்த தெளிவிலே இறைநெறி தெரியும்.

அவருடைய விரிவுரையைச் செவிமடுப்பவர்களுக்கு அறநெறி தெரியும்; ஆன்மீகம் புரியும். அருள் வளம் பெருகும்; அருந்தமிழ் கிடைக்கும்.''

வாரியார் சுவாமிகள், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், தேவார திருவாசகம் பலபிரபந்தங்கள், கம்பராமாயணம், வில்லிபாரதம், திருக்குறள் முதலான இலக்கியங்களி லிருந்து எல்லாம் தொட்ட தொட்ட இடத்தி லிருந்து எல்லாப் பாடல்களையும் கடகடவென்று சொல்வார்கள். இந்தப் பழக்கம் இவர்களுக்கு இளமையிலேயே வந்துவிட்டது. தனது பத்தாவது வயதிலேயே பதினாயிரம் பாடல்கள் மனனம் செய்து விட்டார்கள். எனவே, கேட்பவர்களுக்கு ஒரு ஈர்ப்பு வந்து விடுகிறது. அதுவும் இசையோடு பாடுவார்கள். தெலுங்குக் கீர்த்தனைகளில் கூடப் பாண்டித்தியம் பெற்றவராம் சுவாமிகள். எழுபத்தி இரண்டு மேளகர்த்தா ராகங்களும் அவருக்குக் கரதலப்பாடமாம். வீணையை நிற்க வைத்துத் தான் வாசிப்பார்களாம். இதுபோல வாசிப்பவர்கள் இந்தியாவிலேயே மூன்று பேர்கள்தான் இருக் கின்றனராம். இவ்வாறு கூறுகிறார் தேவார ஓதுவார் இலால்குடி எம். சுவாமிநாதன். வாரியார் சுவாமிகளின் இசைப் புலமையைப் பாராட்டித் தமிழிசைச் சங்கத்திலே ''இசைப் பேரறிஞர்'' என்ற பட்டமே வழங்கி உள்ளார்கள். இசையும் கூடிவிட்டதால் பேச்சில் ஒரு கூடுதல் கவர்ச்சி வந்து விடுகிறது அல்லவா!

நகைச்சுவை

இடை இடையே நகைச்சுவை, அதுவும் அரசியல் பற்றிச் சிலேடையாகக் கூறி சிரிக்க வைத்து விடுவார்கள். அவர்களுடைய பேச்சு ஒரு சுவானுபவம்தான்.

நாத்திக அலையைத் தடுத்தார்

வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவுகளில் விளைந்த பயன் தான் என்ன? அவர்களது ஆரம்ப காலம் தமிழகமெங்கும் நாத்திக அலை அடித்த காலம். பெரியார் அவர்கள் பிள்ளையார் உடைப்புப் போராட்டம், கம்பராமாயண எரிப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலம். அறிஞர் அண்ணா அவர்கள் ''எரியுதே தீ'', ''கம்பரசம்'' போன்ற நூல்களை எல்லாம் வெளியிட்ட காலம். வாரியார் சுவாமிகளை நாத்திகர்கள் ''வீடணன்'' என்றும் ''அக்கிரகாரத்து ஏவலாள்'' என்றும் ஏசினார்கள். எங்கும் நாத்திக அலை வீசிற்று. அந்த நாத்திக அலையைத் தனி ஒரு மனிதராக நின்று வாரியார் சுவாமிகள் தடுத்து ஊர் ஊராகச் சென்று பக்தி மழை பொழிந்து மக்களைத் திசை திருப்பினார்கள். இப்பணி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழகத்தில் சமண அலை வீசியபோது ஞானசம்பந்தப் பெருந்தகை செய்த செயலை அடியொற்றியது எனலாம். இப்படி கூறுவது மரபுப் பிழையாகக் கூடஇருக்கலாம். உண்மை நிலை அதுதான். இப்பொழுது நாத்திகம் பேசிய இயக்கத்தார்களே தீ மிதிக்கின்றார்கள். தங்கள் தலைவர் சமாதிக்குச் சூடம் காட்டுகின்றார்கள். பிறிதொரு தலைவர் உயிர்பிழைக்க நாடு தழுவிய பிரார்த்தனை செய்கின்றார்கள். அங்கப் பிரதட்சணம் செய்கின்றார்கள். இப்படி இன்று எங்குமே பக்தி வெள்ளம். ஆனால் வாரியார் சுவாமிகள் தான் இல்லை.

பலர் ஒழுக்கநெறியைப் பின்பற்றுதல்

இது பொதுநிலை. தனிப்பட்ட நிலையில் பல நாத்திகர்கள், ஆத்திகர்கள் ஆனார்கள். அவர்களுள் ஒருவர் பாண்டிச்சேரி கோவிந்தசாமி முதலியார். அசைவம் உண்டவர்கள் சைவ உணவு ஏற்றார்கள். மலேயாவில் வசித்த செட்டிநாடு முறையூரைச் சேர்ந்த சின்னையா அவர்கள், சென்னை அரசு தலைமைச் செயலகத்தில் உதவிச் செயலாளராகப் பணியாற்றிய திரு. சி.டி.முதலியாரும், அவர்களது துணைவி யாரும். இப்படி பட்டியல் நீளும். ''அவர் பேச்சைக் கேட்டுப் புலாலுணவை விட்டவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர். அதற்காகவே அவருக்கு ஒரு கோயில் கட்டி வைக்கலாம்'' என்பார் திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள். மேலும் தொடர்கிறார். ''தாய் தந்தையரை வழிபடத் தொடங்கியவர்கள் பலர். பிணக்குடைய மனைவியர் பலர் உள்ளம் திருந்திக் கணவன்மாருக்கு ஏற்ப நடக்கத் தொடங்குவார்கள். அப்படி மாறிய மதுரை நகராட்சி துணைத் தலைவர் திரு. ஷண்முகம் பிள்ளையவர்களின் மனைவி யார் தன் கணவருக்குப் பாதபூஜை செய்யலானார்கள். வாரியார் சுவாமிகள் பேச்சுக் கேட்டுத் திருந்த நெசவு வேலை செய்யும் தேவாங்க குல செட்டியார் குலத்தார் தம் மனைவிமாரை எட்டணா பணம் கொடுத்துச் சொற்பொழிவு கேட்க அனுப்புவார்களாம்.

சொற்பொழிவுகளுக்குக்காகக் கிடைத்த பணத்தைச் சுவாமிகள் என்ன செய்தார்கள் என்பது பலர் நெஞ்சை அரித்த கேள்வி. சொற்பொழிவுக்காக வரும் பணத்தை இறைப்பணிக்கும், ஏழைகளுக்கும் கொடுப்பது சுவாமிகளின் வழக்கம். ஏழை மாணவர்களுக்கு மாதந்தோறும் நூறு ரூபாய் அல்லது சற்றுக் கூடுலாகப் படிப்பு முடியும் வரைக்கும் சுவாமிகள் அனுப்பி வந்தார்கள். வலதுகை கொடுப்பது இடது கைக்குத் தெரியாது. அப்படி பலன் அடைந்தவர்களுள் ஒரு சிலர்: ஞானசேகரன் என்ற வாரியார் தாசனின் தம்பி, சிவகாசியில் பொறியியல் கல்லூரி மாணவன், காரைக்குடி தமிழ்க் கல்லூரி மாணவன், அரசினர் விடுதியில் படித்த மாணவன், கவிஞர் தேவராசா பரிந்துரைத்த அந்தணச் சிறுவன், வெளிநாட்டுப் படிப்புக்குச் சென்ற மாணவன், ஈரோடு முத்து லக்ஷ்மணக் கவுண்டரின் மகன், பள்ளி ஆசிரியர் கமலக் கண்ணன் என்பாரின் மகன், அ. சுப்பிரமணியன் என்ற தனி ஒரு நபர் பரிந்துரைப்படி 20 மாணவர்கள், இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகும். ராஜபாளையம் டாக்டர் ஆண்டாள் அம்மையார் அவர்கள் வாரியார் சுவாமிகளிடம் கல்வித் தொகை பெற்று டாக்டர் பட்டம் பெற்று தன் மருத்துவ மனைக்கும் ''கிருபானந்தா கிளினிக்'' என்று சுவாமிகளின் பெயரையே வைத்துவிட்டார்.

திருமண நன்கொடை

ஏழைப் பெண்கள் திருமணத்திற்குப் புடவை, வேட்டி, திருமாங்கல்யம் எடுத்துக் கொடுப்பதும் உண்டு. ஒருமுறை முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வழங்கிய 10 பவுன் மதிப்புள்ள தங்கப் பதக்கத்தையே ஒரு பெண்ணின் திருமணத் திற்காக வழங்கிவிட்டார். பிறிதொரு சமயம் தான் வழிபட்ட தங்கப் பிள்ளை யாரைத் தந்துவிட்டார்கள். அதுமட்டு மல்ல. அரசியல் தலைவர்களிடையேயும், பெரிய மனிதர்களிடையேயும் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வேலையும் வாங்கிக் கொடுத்துள்ளார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்கொடை போதும் என நிறுத்திய ஸ்ரீ ராமகிருஷ்ணா குடில்

தனிமனிதர்களுக்குச் சுவாமிகள் தந்த கொடை அளப்பரியது. அதே சமயம் பொது அறங்களும் சுவாமிகள் நிரம்ப புரிந்திருக்கிறார்கள். ஆதரவற்ற குழந்தைகளுக்காக நடத்தப்படும் திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலை உருவாக்குவதைத் தன் வாழ்நாள் கடமையாகவே வைத்திருந்தார்கள். ஒரு மாணவனுக்கு ஆண்டொன்றிற்கு ஆகும் செலவை ஏற்றார்கள். ஒரு குழந்தைக்கு 5000 ரூபாய் வீதம் 300 குழந்தைகளுக்கு 50 லட்சம் நிதி சேர்க்கும் திட்டம் ஒன்றினை ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களும், சுவாமிகளும் தயாரித்து நிறைவேற்றியும் விட்டனர். நிதி முழுதும் கிடைத்த நிலையில் ''இனி நன்கொடை வேண்டாம்'' என நிறுத்தியும் விட்டனர். தமிழ்நாட்டிலேயே நன்கொடை போதும் என்று முற்றுப்புள்ளி வைத்த அறநிலை குடிலாகத்தான் இருக்க முடியும். இதற்கெல்லாம் சுவாமிகளே காரணம் ஆவார்கள்.

பலி நிறுத்தம்

ஒரு காலத்தில் கோயில்களில் பலி இடும் வழக்கம் இருந்து வந்தது. சுவாமிகள் அவர்கள் முயற்சியால் பல இடங்களில் இக் கொடிய பழக்கம் நிறுத்தப் பட்டது. திருநெல்வேலி பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோயிலில் சுவாமிகள் முயற்சியால் பலி நிறுத்தப்பட்டது.

திருக்கோயில் திருப்பணிகள்

வாரியார் சுவாமிகள் செய்த திருக்கோயில் திருப்பணிகள் கணக்கி லடங்கா. 1970-ஆம் ஆண்டில் சுவாமிகள் தம் நினைவுக்கு வந்ததைக் கொண்டு தந்த பட்டியல் வருமாறு: 1. காங்கேய நல்லூர் முருகன் திருப்பணி, 2. சென்னை குயப்பேட்டை இராஜகோபுரம் திருப்பணி, 3. மோகனூர் அருணகிரிநாதர் அறச் சாலை, 4. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருமதில் திருப்பணி, 5. வடலூர் சத்திய ஞானசபைத் திருப்பணி, 6. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் திருப்பணி, 7. சமயபுரம் திருப்பணி, 8. கோவை தடாகம் ரோடு பாலதண்டாயுதபாணி கோயில் திருப்பணி, 9. கோவை வெங்கடேஸ்வரர் கோயில் திருப்பணி, 10. கோவை சேஷாத்திரி சுவாமிகள் அதிஷ்டானம், 11. கோவை ஐயப்ப சுவாமி திருப்பணி, 12. கோவை காமகோடி வித்யாமந்திர், 13. திருவானைக்கா திருப்பணி, 14. மதுரை ஐயப்பசுவாமி திருப்பணி, 15. மதுரை கூடலழகர் திருப்பணி, 16. திருமோகூர் காளமேகஸ்வாமி திருப்பணி, 17. சென்னை தேனாம்பேட்டை முருகன் கோயில் திருப்பணி, 18. சென்னை மாதவப் பெருமாள் கோயில் திருப்பணி, 19. வள்ளிமலை திருப்பணி (இராஜகோபுரம்), 20. வள்ளிமலை சரவணப் பொய்கை திருப்பணி, 21. ஸ்ரீரங்கம் திருப்பணி, 22. திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண குடில், 23. நெல்லிக்குப்பம் வீரபத்திர சுப்ரமணிய சுவாமி கோயில், 24. வயலூர் திருப்பணி (2முறை), 25. கும்பகோணம் கொட்டையூர் கோடீச்சுவரநாதர் கோயில் திருப்பணி, 26. காங்கேயநல்லூர் பெருமாள் கோயில் இராஜகோபுத் திருப்பணி, 27. சென்னை சைதை குளத் திருப்பணி.

எப்படி முடிந்தது?

இந்தப் பட்டியல் இன்னும் நீளும். சுவாமிகள் எப்படி இந்தத் திருப்பணிகளுக்கு எல்லாம் நிதி திரட்டினார்கள்? 20 நாள் 30 நாள் என்று திருப்பணி நடக்கும் ஊரில் அல்லது அருகில் உள்ள பெரிய ஊரில் தங்கி மாலையில் விரிவுரை நிகழ்த்தியும் காலையில் முக்கிய பிரமுகர்கள் இல்லத்திற்கு நேரில் சென்றும் நன்கொடை கேட்டுப் பெறுவார்கள். வயலூர் என்ற தலமே சென்னை பெருமக்கள் பலருக்குத் தெரியாமல் இருந்தது. சுவாமிகள் முயற்சியால் வயலூர் முருகன் புகழ் உலகெங்கும் பரவிவிட்டது. காங்கேயநல்லூர் திருப்பணிக்காக மட்டும் மலாயாவில் 1957-இல் 125 விரிவுரைகள் நடத்தி அத்தனை வருவாய்களையும் திருப்பணிக்கு அனுப்பிவிட்டார்கள். மலேயா வருமான வரி அலுவலகத்திலிருந்து வருமானம் கேட்டுக் கடிதம் வந்துவிட்டது. ரசீதுகள், கணக்குகளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று ''விரிவுரை வருமானம் முழுமையும் திருப்பணிக்கு அனுப்பிவிட்டேன். புத்தக விற்பனைதான் என் செலவுக்கு'' என்று அதிகாரி முன் எடுத்துக் காட்டினார். அதிகாரி அயர்ந்து போனார். ''உனக்கு வரும் வருவாயில் ஓரணா கூட எடுத்துக் கொள்ளாமல் திருப்பணி செய்கிறாயே. இது தெய்வானுக்கிரகம் அல்லவா?'' என்று காஞ்சி மகாசுவாமிகளே ஆசி வழங்கி உள்ளார். இத்திருப்பணியில் முட்டுப்பாடு வராமல் இல்லை. வடலூர் திருப்பணியில் சுவாமிகள் பட்ட துன்பம் பலப்பல. வடலூர் அறங்காவலர்கள் கும்பாபிஷேகம் நடத்தக் கூடாது என்று ஏதேதோ காரணங்கள் கூறி நீதிமன்றம் வரை சென்று விட்டார்கள். அதனையும் மீறி சுவாமிகள் திருப்பணி செய்து முடித்திருக்கின்றார்கள்.

குடும்பச் செலவுக்கு புத்தக விற்பனையே!

வரும் வருமானம் எல்லாம் திருப்பணிகளுக்கு வாரிக் கொடுத்த பின்னர் தன் அன்றாடச் செலவுக்குக் – குடும்பச் செலவுக்குச் – சுவாமிகள் என்னதான் செய்தார்கள்? சுவாமிகள் செலவும் குறைவே. உடுப்பது வேட்டி, துண்டு மட்டுமே. உண்பதோ நிகழ்ச்சிகள் நடக்கும் இடங்களிலே. எஞ்சிய செலவுக்குப் புத்தக விற்பனை மூலம் கிடைத்த தொகையே. கடைசியாக இலண்டனுக்குப் புறப்பட்ட போது தம்மிடம் வைத்திருந்த ஐம்பதே ரூபாயையும் ஓர் அன்பர் பணம் கேட்டபோது கொடுத்துவிட்டார்களாம். என்ன ஒரு இலட்சிய வாழ்க்கை!

அரிய நூல்கள்

புத்தகங்கள் விற்று தமிழ்நாட்டில் என்ன சம்பாதித்துவிட முடியும்? ஆனால் சுவாமிகள் புத்தகங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. சுவாமிகள் 47 புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். அவற்றுள் திருப்புகழ் விரிவுரை மிகப் பெரியதும் மகத்தானதும் ஆகும். இது ஒன்பது பகுதி களாக வெளிவந்துள்ளது. சுந்தரனுபூதி, கந்தலங்காரம் என்ற இரு நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்கள். கந்தவேள் கருணை, சிவனருட்செல்வர், விநாயகர், முருகர், பிள்ளையார் பெருமை, திருநீற்றின் தெய்வநலம், கந்தன் கருணை, சிவபுராண உரை, திருவாசகத்தேன் முதலான நூல்கள் சைவ சமயச் சார்புடையன.

திருப்புகழ் அமிர்தம் இதழ்

திருப்புகழ் உரை எழுதுவதற்காகவே ''திருப்புகழமிர்தம்'' என்ற மாத இதழை 1937-இல் தொடங்கி 37 ஆண்டுகள் நடத்தி வந்தார்கள்.

நெஞ்சமே கோயிலாக நித்தமும் வழிபாடு!

இத்தனை சாதனைகளையும் தனி ஒரு மனிதரால் தம் இறுதி மூச்சுவரை தொடர்ந்து எப்படி செய்ய முடிந்தது? இளவயது முதலே முருகப் பெருமான் மேல் சுவாமிகள் கொண்ட பக்தியும், அவர்கள் நாளும் செய்த முருக வழிபாடுமே காரணம் ஆகும். நண்பகல் 12 அல்லது 1 மணி ஆனாலும் வழிபாடு செய்யாமல் உணவு அருந்தமாட்டார்கள். அவர்கள் வழிபாடு செய்யும் பொழுதும் நெஞ்சுருகிச் செய்வார்கள். மலரிட்டு அர்ச்சனை செய்யும் பொழுது நெஞ்சி லிருந்து அன்பு கனிய மலர் தூவுவார்கள். இறைவன் நெற்றியில் குங்குமம் இடும் பொழுது கூட மிகுந்த பயபக்தியுடன் செய்வார்கள். அடுத்து நிகழ்ச்சியிருந்தாலும் எந்தவிதப் பரபரப்பும் இல்லாமல் நிதானமாகச் செய்வார்கள். சுவாமிகள் தங்கள் இல்லங்களில் வழிபாடு நடத்த வேண்டும் என்று மக்கள் தவம் கிடப்பார்கள்.

வைதாரையும் வாழவைத்தவர்

சுவாமிகள் ஒழுக்கத்திலும் பண்பிலும் மேருமலையெனத் திகழ்ந்தார்கள். வைதாரையும் வாழவைப்பவன் சுவாமிகள் வழிபட்ட முருகப் பெருமான். முருக பக்தராகிய வாரியார் சுவாமிகளும் அதனையே செய்தார். சௌந்தரபாண்டியன் என்ற அன்பர் மன வேறுபாட்டால் சுவாமிகளை விட்டுப் பிரிந்து, அதன்பிறகு சுவாமிகளைக் கண்ட கண்ட இடங்களில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எல்லாம் தூற்ற ஆரம்பித்தார். சுவாமிகள் இதனையெல்லாம் பொருட்படுத்த வில்லை. ஒருசமயம் சௌந்தர பாண்டியனுக்கு பணநெருக்கடி. 5500 ரூபாய் போல கடன் தரவேண்டும். பத்தாண்டுகள் கழித்து சுவாமிகளிடமே வந்து தன் நிலைமையைச் சொல்லி அழுதார். சுவாமிகள் அவர் திட்டியதை எல்லாம் மறந்துவிட்டு தனது நண்பர் துறையூர் மாரிமுத்து முதலியார் அவர்களை வரவழைத்து அந்தக் கடனைத் தீர்க்கச் சொன்னார்கள்.

நெய்வேலி நிகழ்ச்சி

இதைவிட, உச்சகட்டமாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. 1972-ஆம் ஆண்டில் சுவாமிகள் நெய்வேலியில் உரையாற்றினார்கள். அப்பொழுது அன்றைய முதல்வர் மாண்புமிகு அண்ணா அவர்கள் உடல்நலம் குன்றி அமெரிக்காவில் இருந்தார்கள். சுவாமிகள் பேசும்பொழுது ''விதி வலிமை உடையது, அமெரிக்காவிலிருந்து மருத்துவர் வந்தாலும் விதியை வெல்ல முடியாது'' என்று பேசினார்கள். சில குண்டர்கள் தங்கள் தலைவரை இகழ்ந்து பேசியதாகக் கருதி 200, 300 பேர்களை அழைத்துக் கொண்டு இரவு 12 மணிக்கு சுவாமிகள் தங்கியிருந்த இடத்தில் புகுந்து பூஜாமூர்த்திகளைத் தள்ளி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அப்பொழுது சுவாமிகளுக்கு கடும் சுரம்; மயக்க நிலை. காவல்துறை அதிகாரி வேண்டுகோளின் பேரில் சுவாமிகள் உடனே திருச்சிக்கு கிளம்பி விட்டார்கள். நீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது சாட்சி சொல்லுகையில் சுவாமிகளிடம் தாக்கியவர்களைக் காட்டி ''இவர்களில் யார் தங்களுக்கு இடர் செய்தவர்கள்'' என்று கேட்டபொழுது சுவாமிகள் ''எனக்கு யார் என்று தெரியாது'' என்றார்கள். இடர் செய்தவர்கள் எல்லாம் பின்னால் துன்பப்பட்டார்கள் என்பது வேறு கதை. அதில் ஒருவர் மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது மனம் வருந்தி மன்னிப்பு கோரித் தமக்கு விபூதி பிரசாதம் அனுப்புங்கள் என்று எழுதியிருந்தார். சுவாமிகளும் பிரசாதம் அனுப்பி வைத்தார்கள். பகைவனுக்கு அருளும் பரம கருணையல்லவா இது!

தோற்றம்

சுவாமிகளை வாய்த்த மணி வயிறு கனகவல்லி அம்மையார். தந்தையார் மல்லையா அவர்கள். சுவாமிகளைச் சேர்த்து இத்தம்பதியினர்க்கு பதினோரு பிள்ளைகள் பிறந்தனர். சுவாமிகள் பராபவ ஆண்டு ஆவணித் திங்கள் 9-ஆம் நாள் (1906) காங்கேய நல்லூரில் பிறந்தார்கள். இறைவன் திருவடி அடைந்த நாள் 7.11.1993.

திருவுருவம்

இத்தகைய பெரியவர்களுடைய திருவுருவம் நம் நெஞ்சில் பதிய வேண்டாமா? அதையே வாகீசகலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கூறினால் எப்படி இருக்கும்?

''ஆஜானுபாகுவான வடிவம்; செக்கச் செவேல் என்ற திருமேனி; மார்பில் ருத்திராட்ச கண்டி; நெற்றி நிறைய திருநீறு; எப்போதும் சண்முகனை எண்ணும் உள்ளம்; தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் சென்று இறைவன் திருவருட் சிறப்பை எடுத்துரைக்கும் வாய். ஒருநாளும் தவறாமல் செய்யும் பூஜை; ஆயிரக்கணக்கான மக்கள் திரளும் கூட்டத்தில் சிங்கம் போல முழங்கும் குரல் – இவ்வளவும் சேர்ந்த திருவுருவம் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள். ''வாரியாரின் புனிதத் திருப்பணியை நினைவு கூர்ந்து தமிழக மக்கள் சுவாமிகளை அறுபத்து நான்காவது நாயனார் என அழைக்க விரும்பினார்கள் சிலர் அழைக்கவும் செய்தனர். அவ்வாறு சுவாமிகளை அழைக்காமல் அவர்களைத் தடுத்தது மரபு ஒன்றே. மரபையும் மீறிய மாமனிதர் அவர்கள்!

(1906 – 1993; பிறந்த ஊர் – காங்கேய நல்லூர். பெற்றோர் – கனகவல்லி அம்மையார், மல்லையா)

(துணை நூல்கள் : ''வாரியார் வாழ்க்கை வரலாறு'', ''வாரியாரைச் சந்தித்த கண்கள்'' – குமரி அனந்தன்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10
மாபாடியம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மாமேதை (1906)

சிவஞானபோதமே இரும்புக் கடலை என்பார்கள். அதற்குச் சிவஞான முனிவர் எழுதியுள்ள மாபாடியம் என்ற பேருரை யானது பல்கலையறிவும், வடமொழி யறிவும், தத்துவ அறிவும் இருந்தால்தான் ஓரளவு புரிந்துகொள்ள முடியும். அதுமட்டுமன்று. ஒரு காலகட்டத்தில் சிவஞான மாபாடியம் கிடைப்பதே அரிதாக இருந்தது. கிடைத்தாலும் முழுமை யாக இல்லை. அப்படிப்பட்ட சிவஞான மாபாடியத்திற்கு ஆங்கிலத்தில் ஒரு அருமையான மொழிபெயர்ப்பினை வழங் கினார் ஒரு சைவசித்தாந்தப் பேரறிஞர். அவரே க. வச்சிரவேலு முதலியார்.

"He is the first to translate into English the entire Maa-padiyam. This indeed is a very commendable work. The signal service of Vajravel Mudaliyar is this. All the available edition of Maa-padiyam are incomplete. It is his English translation that contain a complete version of the Maa-padiyam" என்கிறார் டி. என். இராமச்சந்திரன்.

1976-ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக்கழகத்தில் சிவஞான மாபாடியம் பற்றி வச்சிரவேல் முதலியார் அவர்கள் தொடர் சொற்பொழிவுகள் நிகழத்தினார்கள். அவை தொகுக்கப்பட்டு ''சிவஞான பாடியத் திறவு'' என்ற நூலாக வெளிவந்துள்ளது. மாபாடியம் படிக்க இதுவே சிறந்த கையேடு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

வச்சிரவேல் முதலியார் அவர்கள் எழுதிய பிறநூல்கள்; திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தம், சைவம், திருக்குற்றாலத் தலபுராணம் பொழிப்புரை, திருவருட்பயன் உரை, சைவசித்தாந்தத் திறவு.

சைவசித்தாந்தக் கருத்தை பண்டைய ஆசிரியர்கள் கருத்துக்குச் சிறிதும் முரண் இல்லாமல் பிற சமயங்களான வேதாந்தம் முதலியவற்றினின்றும் வேறுபிரித்து அவற்றோடு எவ்விதக் காழ்ப்பும் தோற்றாமல், சமய உணர்வுக்குப் புறம்பான, தரத்தில் தாழ்வான கதைகள் கருத்துக்களைப் புகுத்தாமல், இது தனித்த ஒரு தத்துவ சாஸ்திரம் என்று ஏனைய சமயத்தாரும் தெளிவாக உணருமாறு முதலியார் உணர்த்த வல்லவர்.

ஆங்கில அறிவு இவருடைய தத்துவ சாஸ்திர ஆராய்ச்சிக்குத் துணையாக அமைந்து இருந்தது. இவ்வறிவினால் இவருக்குச் சமய அறிவில் தெளிவும், திட்பமான ஒற்றுமை, வேற்றுமை அறிவும் பொருந்தின. ஆங்கிலத் தத்துவ சாஸ்திரம் படித்தவர்களோடு சமமாக நின்று அவர்கள் வாதத்தால் மயங்காது, தம்முடைய சுத்த சைவசித்தாந்த நெறியில் பிறழாது, தம் கருத்தை நிலைநாட்டும் வன்மை இவரிடம் பொருந்தியிருந்தது.

இவருடைய சொற்பொழிவுகள் தனி அழகு வாய்ந்தவை. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தர்க்க ரீதியாக ஒரு சமய நூல் போல இவர் பேச்சு அமைந்து இருக்கும். மேடையில் இவர் பேசுவது மிகவும் தெளிவாகவும், திருத்தமான வாக்கியங் களாகவும் அமைந்திருக்கும். அப்படியே எழுத்தில் எழுதி வைத்தால் பிறகு மாற்றவோ, திருத்தவோ அவசியமிராது.

24.4.1906-இல் காஞ்சியில் கச்சபாலய முதலியார் – அம்மாள் கண்ணம்மையார் மகனாகப் பிறந்த வச்சிரவேல் முதலியார் 10.3.89 அன்று உயிர் துறந்தார். (துணை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல்கள் : "Sivagnana Mapadiyam" - K. Vajravelu Mudaliar, "Sivagnana Munivar" - T.N. Ramachandran; ''சித்தாந்தம்'' இதழ்கள் 1966, 1989.)

11

பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பேசியும், எழுதியும் வந்த வாகீச கலாநிதி (1906)



கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எங்கள் வீட்டுக்கு வரும்பொழுதெல்லாம் ஒரே சிரிப்பும் கும்மாளமுமாகத்தான் இருக்கும்.. நகைச்சுவைத் துணுக்குகளாக அள்ளி வீசுவார்கள். சில சமயம் எல்லை தாண்டி கூடப் போய்விடும். வயது வேறுபாடே (Generation Gap) அவரிடம் பழகும் பொழுது தெரியாது.

முதன் முறையாக எனது இல்லம் வந்தபொழுது என் மனைவி சிற்றுண்டி படைத்தாள். சேமியாக் கிச்சடி சற்று குழைந்துவிட்டது. கி.வா.ஜ. அவர்கள் என் மனைவியைப் பார்த்து, ''உங்கள் உள்ளம் போல குழைந்து இருக்கிறது'' என்றார்கள். இதைவிடப் பக்குவமாக எப்படி சொல்ல முடியும்? என் மனைவிக்கு ஒரே சிரிப்பு. அப்படியே வைத்துவிட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

அன்று மாலை தெய்வத் தமிழ் மன்றத்தில் கி. வா. ஜ. அவர்கள் ''ஞான சம்பந்தர் தேவாரம்'' பற்றிப் பேசுகிறார்கள். ''தோடுடைய செவியன்'' என்ற ஒரு பாடலை எடுத்துக் கொண்டு மூன்று மணி நேரத்திற்கு மேலாகக் கல்லும் கரைந்து போகும் வண்ணம் பேசினார்கள். மூன்று மணி நேரமும் தேவாரத்தைத் தாண்டி வெளியில் செல்லவேயில்லை.

தெய்வத் தமிழ் மன்றம் என்று மட்டுமல்ல. அந்தக்கால கட்டத்தில் மன்றங்களோ, கோயில்களோ – கி.வா.ஜ. அவர்கள் பேச்சு இல்லாமல் சிறக்காது.

பெரியபுராணம் பற்றி விளக்கக் கட்டுரைகளாகப் பத்து தொகுதிகள் கொண்டு வந்தார். கந்தரனபூதி, கந்தர லங்காரம், அபிராமியந்தாதி, என விளக்கங் களாக வெளிவந்தன. பன்னிரு திருமுறை களையும் விளக்கக் கட்டுரைகளாகக் கொணர்ந்தார்கள். கட்டுரைகளனைத்தும் கதை போலவே சுவையுடையனவாக இருக்கும்.. நால்வர் பெருமக்களோடு தொடர்புடைய தலங்களை அவர்கள் வரலாறுகளுடன் இணைத்துப் புகைப் படங்களுடன் ''கலைமகள்'' இதழில் தொடர்ந்து வெளியிட்டார். இத்தொடர் மட்டுமல்ல; கலைமகளில் தான் ஆசிரிய ராகப் பணியாற்றிய 50 ஆண்டுகளும் சைவ சமயக் கட்டுரைகளைச் சுவையுடனும், புகைப்படங்களுடனும் வெளியிட்டு வந்தார். அவர் காலத்தில் ''கலைமகள்'' தரம் மிகுந்த இலக்கிய இதழாக இருந்து வந்தது.

உ.வே. சாமிநாதையர் அவர்களின் தலைமைச் சீடரான கி.வா.ஜ. 1906-ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் கிருஷ்ணராஜ புரத்தில் பிறந்தார். ஐயரவர்களின் பதிப்புப் பணிகளில் கி.வா.ஜ. பெரிதும் துணை நின்றார். 4.11.1988-ஆம் ஆண்டில் சென்னையில் உயிர் நீத்தார்.

துணை நூல்கள் : "Ki.Va.Jagannathan, Tamil scholar, Poet and Editor" - N. Ramakrishna - "Bhavans Journal"... 15.2.1989_ கி.வா.ஜ. மணிவிழா மலர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

12

சைவ சமய வரலாறு தந்த சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர் (1907)

சைவசமய வரலாற்றினை ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இராசமாணிக்கனாரின் ''சைவ சமய வளர்ச்சி'' தவிர வேறு கதியில்லை. அப்படி ஒரு முறையான – முழுமையான – ஆராய்ச்சி – பல்லவ, சோழர் (கி.பி. 300 – 1300) கால சைவ சமய வளர்ச்சி பற்றிய கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், இலக்கியங்கள் வழிநின்று ஆய்ந்து இருக்கின்றார். ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வரியும் – வரலாற்றுக் குறிப்பு உடையது ஆகும். இந்நூல் இராச மாணிக்கரின் டாக்டர் (பி.ஹெச்.டி.) பட்ட ஆய்வாகும்.

இதே போல பெரிய புராணத்தையும் கல்வெட்டு, இலக்கியங்கள் கொண்டு நாயன்மார் காலத்தையும், அவர்கள் காலத்திய அரசர் காலத்தையும் நிர்ணயிக்கிறார். பெரிய புராண நாயன்மார் தொடர்பான செய்திகள், அவர்கள் பெயர்கள் காலந்தோறும் மக்களுக்கும், இடங்களுக்கும் வழங்கப்படுதல், ஓவியங்கள், பெரியபுராணம் சுதைச் சிற்பங்கள் உட்பட அனைத்தும் ஒருசேர ''பெரியபுராண ஆராய்ச்சி'' எனும் நூலில் தொகுத்துத் தந்துள்ளார். இந்நூல் வெளிவரும் வரையில் பெரிய புராணத்தைச் சமய அடிப்படையில் பார்த்தவர்கள், இந்நூலுக்கும் பிறகு வரலாற்று நோக்கோடு பார்ப்பார்கள்'' எனத் திரு. வி.க.. எழுதி மகிழ்வார். ''பெரியபுராணம் மீண்டும் சரித்திர புராணமாய் உயிர்த்தெழுந்தது'' என்பார் திரு.வி.க.

இவ்விரு நூல்களும் சைவ சமயத்திற்கு இரு கண்கள் ஆகும்.

இந்நூல்களை வழங்கிய மா. இராச மாணிக்கனார் 12.3.1907-ஆம் ஆண்டில் கர்நூலில் மாணிக்கம் பிள்ளை – தாயாரம்மாளுக்குப் பிறந்தார். 25.5.67-ஆம் ஆண்டில் சென்னையில் இறையடி சேர்ந்தார்.

(துணை நூல்கள் : ''சைவ சமய வளர்ச்சி'' – மா.இராசமாணிக்கனார். ''பெரிய புராண ஆராய்ச்சி'' – மா. இராச மாணிக்கனார்'' : தமிழ்ப் புலவர் வரிசை – 28-ஆம் புத்தகம்'' – க.அ. இராமசாமிப் புலவர்)

13

சைவசித்தாந்த ஐயங்களின் மேல் முறையீட்டுக்கு இறுதித் தீர்ப்பாளர் (1907)

என்னுடைய இந்தச் சைவ சமய வரலாற்று நூலை எழுதத் தோற்றுவாயாக இருந்தவர்கள் 'அருணை ஐயா' என்று அன்போடு அழைக்கப்பட்ட சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள். அவர்கள் சக்தியோடு பேசும் பொழுதே அவர்களை நேர்காணல் செய்ய வேண்டும் என்று 5.3.96-ஆம் ஆண்டில் அவர்களது குமாரர் பாலறாவாயன் இல்லம் சென்று இரண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



மணிநேரம் அவர்களிடம் நேர்காணல் செய்தேன். பழமைவாதியாக இருந்தாலும், புரட்சிக் கருத்துக்களும் நிரம்பியவராகவே இருந்தார்கள். ''நான்மறை'' என்பது ''இருக்கு, யஜுர், சாம, அதர்வண வேதமன்று; அறம், பொருள், இன்பம், வீடு என்பதே'' என்று கா.சு. பிள்ளையின் கருத்தை வலியுறுத்தினார்கள்.

எனது தந்தையார் லால்குடியில் 1960 முதல் 1973 வரை நடத்தி வந்த 21 நாள் சைவ சித்தாந்த கோடை வகுப்புகளில் இவர்களே முதன்மை ஆசிரியர் ஆவார். என் தந்தையாருக்கு சாத்திரம் கற்பித்த வர்களும் இவர்களே.

இவர்கள் வாழ்ந்த காலத்தில் சைவ சித்தாந்த அறிஞர்களிடையே ஐயங்கள் ஏற்பட்டால் இறுதித் தீர்ப்புக்கு இவர்களிடமே முறையிட்டு ஐயம் தெளிவார்கள்.

தருமையாதீன திருமுறை வெளியீடு களில் ஆறாம் திருமுறை முதல் 11-ஆம் திருமுறை வரை இவர்களே உரை எழுதினார்கள். அவை கிடைத்தற்கரிய அரிய உரைகள் ஆகும். திருமுறைகளுக்கு (திருவாசகம், பெரிய புராணம் நீங்கலாக) முதல் முதலாக உரை கண்டவர்களுள் இவரே தலையானவர்.

காஞ்சிப் புராணம் குறிப்புரை, உரை நடை, கந்தபுராணத் திரட்டு, சிவபோக சார உரை, திருவருட்பயன் உரை, சித்தாந்த நூல் திரட்டு உரை, சித்தாந்தத் தெளிவியல், சித்தாந்த வினா விடை, சிவஞான போத சிற்றுரை விளக்கம், முப்பொருள் இயல்பு; சிவஞான போதத் திருநெறி உரை, சைவ சித்தாந்தக் கலைச் சொல் அகராதி, திருமுறைகளில் திருக்குறள், திருமுறைத் திருநெறி என ஒரு நீண்ட புத்தகப் பட்டியல் இவரது கைவண்ணத்தில் விளைந்துள்ளது.

மாபாடியத்திற்கு பெரு விளக்கமாக ''சிவஞான போதப் பேருரை விளக்கம்'' வழங்கியிருப்பது இவரது, "Magnum Opus" ஆகும். இந்நூல் அரிய பதிப்பாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளி வந்துள்ளது.

1.8.1907-ஆம் ஆண்டில் உத்திரமேரூர் வட்டம் புலிவாய்க் கிராமத்தில் சிங்கார வேல் முதலியார் – சரவணம்மாளுக்குப் பிறந்த இவர் 2000-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

(துணை நூல்கள் : அருணை ஐயா அவர்களே நேரில் வழங்கிய வாழ்க்கைக் குறிப்புகள்.)

14
சென்றெட்டு திக்கும் சிவமுழக்கம் செய்த திருவாசகமணி
1908

தெய்வத் தமிழ் மன்றக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த திருவாசகமணி அவர்கள் சற்று ஓய்வாக இருந்தார்கள். நாங்கள் நான்கைந்து வழக்கறிஞர்கள் அவரை முற்றுகையிட்டோம். ஔவை துரைசாமி பிள்ளையவர்களிடம் சிவஞான போதம் பாடம் கேட்ட சமயம். சிவஞான போதத்தை முழுமையாக உணர முடியாத வயது. ''உயிர் இறைவனைப் போலவே நித்யமானது. இன்ன உயிர் இன்ன உடலைச் சேர வேண்டும் என்பது தான் இறைவன் செயல்'' என்பது சைவ சித்தாந்தம் தரும் மனிதப் படைப்பிற்கான விளக்கம். இளவயது என்பதால் எங்களால் முழுமையாக ஒத்துக் கொள்ள முடியவில்லை. எங்கள் இடர்ப்பாட்டைத் திருவாசக மணியவர்களிடமே கேட்டோம். அவரும் வழக்கறிஞர் அல்லவா? எங்கள் வாதத்தை ஏற்றுக் கொண்டு "Saiva siddhantha philosophy is less illogical of all

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

philosophies" என்றார்கள். நாங்கள் பேசாமல் வாயடைத்து நின்றோம். அப்படி ஒரு திறமை அவர்களுக்கு!

திருவாசகமணியவர்கள் தமிழிலும் கணீரென்று பேசுவார்; ஆங்கிலத்திலும் சிம்மம் போல கர்ச்சிப்பார். இதனால் வெளிநாடுகளில் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு அவர்தம் ஆங்கில மற்றும் தமிழ்ப் பேச்சுகளுக்கு ஏற்பாடு செய்தனர்.

தென்னாப்பிரிக்காவில் பத்து மாதங்கள் (21.8.1963 முதல் 21.6.64 வரை) தங்கியிருந்து ஆங்கிலமும், தமிழுமாக 150 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். மார்வாடிகள் கேட்டார்கள்; மஹாராஷ் டிரர்கள் கேட்டார்கள்; முஸ்லீம்கள் கேட்டார்கள்; வெள்ளைக்காரர்கள் கேட்டார்கள்; முஸ்லீம்கள் திருக்குரான் மொழி பெயர்ப்பினை வழங்கியதோடு இவருக்குச் சைவ விருந்தே வைத்து விட்டனர். தென்னாப்பிரிக்கத் தமிழ் மக்களுக்கு அவர் வாய் பேசும் தெய்வமேயாகிவிட்டார். அங்கேயே ஒரு மடம் கட்டி, அதில் அவரைமடாதிபதியாக வைத்துவிட வழி இருந்தால் அதையும் செய்திருப்பார்கள். தென்னாப்பிரிக்கா அரசு தான் இடம் கொடுக்காது. திருவாசக மணி தென்னாப்பிரிக்கா மணியாகிவிட்டார் என்று ''கலை மகள்'' இதழ் பாராட்டி எழுதியது. ஆயிரக்கணக்கான முஸ்லீம் களிடையே குரான் பற்றிப் பேசியபொழுது தேவார திருவாசகமும் சேர்த்துப் பேசினார். 21.8.63-ஆம் ஆண்டு டர்பனில் நடைபெற்ற தமிழ் வைதீக சபையில் திருவாசகமணி பேசி முடித்தபின் 3000 பேர் எழுந்து நின்று பாராட்டி ஆரவாரித்தனர்.

1966-ஆம் ஆண்டில் மலேயாவில் எட்டு மாதங்கள் தங்கியிருந்து 130 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

1970-ஆம் ஆண்டில் இந்தோனேசியா சென்ற திருவாசகமணி 55 நாள்கள் தங்கி உரையாற்றினார். மேடான் நகரில் மட்டும் 45 நாள்கள் இருந்து இருபது பேச்சுக்கள் நிகழ்த்தினார். இதனால் மேடானில் இருந்த 10,000 இந்துத் தமிழர்களிடையே ஒரு புரட்சியே நிகழ்த்திவிட்டார். இந்து சமயம், கிறிஸ்துவ சமயம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களின் ஒற்றுமை பற்றி பேசினார். பௌத்தர்களிடையே பௌத்த சமயம் பற்றிப் பேசினார். ஜாகர்தாவில் குருநானக் பற்றிப் பேசினார். இதனைப் பாராட்டிச் ''சமரசச்சைவமணி'' என்ற பட்டமே கொடுத்தனர்.

1972-ஆம் ஆண்டில் இலங்கையில் 14 நாள்கள் சுற்றுப் பயணம் செய்து 13 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். முதல் நாள் 2000 பேர்கள்; இரண்டாம் நாள் 3000 பேர்கள். மூன்றாம் நாள் 5000 பேர்கள். கூட்டம் பெருகிக் கொண்டே இருந்தது. கொழும்புவில் ஆங்கிலப் பேச்சுகளும் நிகழ்த்தினார்.

திருவாசகமணி இன்னும் சிலகாலம் கூடுதலாக வாழ்ந்திருந்தால் விவேகானந்தர் வேதாந்தத்தைப் பரப்பியது போல உலகெங்கிலும் சைவ சித்தாந்தம் பரப்பியிருப்பார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளிநாடுகளில் முழக்கமிட்டவர் தமிழ்நாட்டில் சும்மாவா இருந்திருப்பார். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் திருவாசகமணி ஆரம்ப காலத்தில் பெரியார் அவர்களின் நாத்திகக் கொள்கையில் ஈடுபட்டிருந்தார். 1947-ஆம் ஆண்டில் மனம் மாறி முழுமூச்சாகச் சமயவுலகிற்குத் திரும்பிவிட்டார்.

திருவாசகமணியவர்களின் எழுத்துப் பணி குறைவே. திருவாசகம், திருக்குறள் இரண்டையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பெரிய புராணத்தை மொழி பெயர்க்கத் திட்டமிட்டிருந்தார். அதற்குள் காலன் அவர்களைப் பறித்துக் கொண்டான்.

(பிறப்பு : 6.12.1908 மறைவு : 3.10.1974)

பெற்றோர் : கோவை முத்துச்சாமி பிள்ளை, சொர்ணத்தம்மையார்.)

(துணை நூல்கள் : செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், கலைமகள் பழைய இதழ்கள்.)

15

தமிழ் இலக்கிய வரலாறு வழங்கிய சைவப் பல்கலைக் கழகம் (1909)



கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டு வரை எட்டு நூற்றாண்டுகளின் வரலாற்றை பதின்மூன்று புத்தகங்களாக ஒரு பெரியவர் தம் வாழ்நாள் பணியாக வெளியிட்டிருக்கின்றார்கள்.

ஏழு, எட்டாம் நூற்றாண்டிற்கும் ஒரு திட்டம் வைத்திருந்தார்கள். ஆனால் நூல்கள் வெளியான விவரம் தெரியவில்லை. என் பார்வைக்கு கிடைத்த ஒன்பது புத்தகங்களின் பக்கங்களே 4613 வருகின்றது. இன்னும் 4 புத்தகங்கள் குறைந்தபட்சம் 2000 பக்கங்கள் என்றாலே 6600க்கு மேல் போய் விடுகின்றது. 1969 தொடங்கி 1975 வரைக்குள் எழுதி முடித்திருக்கிறார்கள்.

இந்த ஆறாயிரம் பக்கங்களும் அந்தந்தக் கால இலக்கியங்கள் கூறும் செய்திகள், கதைகள், இலக்கிய நயங்கள் என்று அமைந்திருக்கவில்லை. அதுவே சிரமமான ஒன்றுதான். இருந்தாலும் இலக்கியங் களைப் படித்து விட்டு எழுதிவிடலாம்.

ஆனால் இந்தப் பெரியவர் ஒவ்வொரு நூலினையும் தீவிரமாக ஆராய்ந்து காலத்தை நிர்ணயிக்கிறார். தமிழர்களுக்கு வரலாற்றறிவு – கால ஆராய்ச்சியறிவு இல்லை என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒன்று. இதில் ஒரே பெயரைக் கொண்ட புலவர்கள் பலர் உள்ளனர். பல நூல்கள் மறைந்தே போய்விட்டன. ஒரு குறிப்பிட்ட துறையோடு ஆசிரியர் நிறுத்திக் கொள்ளவில்லை. சங்க இலக்கியம், சமய இலக்கியம், இலக்கணம் – சமய இலக்கியத்திலும், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்று அத்துணை நூல்களையும் ஒருசேர ஆய்ந்துள்ளார். சங்க இலக்கியம் படிப்பவர் சமய இலக்கியங்களைப் புறக்கணிப்பதும், சமய இலக்கியங்களிலும் அவரவர் தத்தம் சமய இலக்கியங்களை மட்டுமே படிப் பதும் அனைவரும் அறிந்த ஒன்று. இலக் கணம் பக்கம் யாரும் போக மாட்டார்கள். அப்படியிருக்கையில் விருப்பு வெறுப் பின்றி நடுநிலையோடு அவ்வக்கால கட்டத்து எழுந்துள்ள அனைத்து இலக் கியங்களையும் படித்துக் கால நிர்ணயம் செய்வது மகத்தான சாதனையாகும். இச்சாதனையை நிகழ்த்திய வர்கள் திருச் சிற்றம்பலம் மு. அருணாசலம் அவர்கள்.

முந்தைய வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்கள் அனைத்தையும் ஆய்ந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிலவற்றை ஏற்றுப் பலவற்றைத் தக்க ஆதாரங்களுடன் மறுத்திருக்கிறார். இலக்கிய ஆதாரங்களையும், வழக்காறு களையும், சாசனக் குறிப்புகளையும் கொண்டு ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.

மு.அ. அவர்கள் ஆய்வில் எல்லா வரலாறுகளும் புது விளக்கம் பெறு கின்றன. வரலாற்றில் பலவாறு சிதறுண்ட செய்திகள் ஒருங்கே தொகுக்கப்பட்டு முதன் முதலாக முறைப்படுத்தப்படு கின்றன.

தம்முடைய ஆய்வில் மு.அ. அவர்கள் இலக்கியப் பாகுபாடு, இலக்கிய வளர்ச்சி, புலவர் வரலாறு, கதைகள், கல்வெட்டுச் சான்றுகள், இவற்றின் ஆராய்ச்சி, காலவரையறை, நூல்களின் திறனாய்வு என்று வகைப்படுத்தியுள்ளார். இதற்கு முன்னர் யாரும் இவ்வாறு வகைப்படுத்த வில்லை.

சைவ சாத்திர உரைகள், சித்தர் பாடல்கள், மூவர் அம்மானை, வள்ளல் பரம்பரை இவற்றையெல்லாம் இதற்கு முன் இலக்கிய வரலாற்றில் சிந்தித்துப் பார்க்கப்படவில்லை.

கடவுள் மாமுனிவர், சிவஞான வள்ளல், நமச்சிவாயத் தம்பிரான், கச்சியப்ப சிவாச்சாரியார் ஆகியோர் காலத்தினை ஆதாரங்களோடு மாற்றிப் புதிதாக மு.அ. நிர்ணயம் செய்கிறார்.

கி.பி. 13 முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை இலக்கிய வளர்ச்சி ஏதுமில்லை என்று இவருக்குமுன் உள்ள ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். பதினாறாம் நூற்றாண்டு அவ்வளவாக வளம்மிக்கது இல்லை என்றும் கூறியுள்ளனர். 13, 14, 15-ஆம் நூற்றாண்டுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி நூல் எழுதி, பதினாறாம் நூற்றாண்டிற்கு மட்டும் மூன்று தொகுதிகள் எழுதி ''பதினாறாம் நூற்றாண்டு சைவ சமயத்தின் பொற்காலம்'' என்று மு.அ. அவர்கள் குறிக்கின்றார்கள். இதிலிருந்தே மு. அ. அவர்களின் உழைப்பைத் தெரிந்து கொள்ளலாம்.

மு.அ. வரலாற்று நூல்களில் பிற் சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டிருக்கும் அட்டவணைகள் தனிச் சிறப்பு வாய்ந் தவை. ஆசிரியர் காலம், உடன் காலத்தவர், சிறப்புக்குறிப்பு, குரு சீடபரம்பரை (genea-logical tree வெகு சிறப்பாக உள்ளது) என அமைத்துள்ளார். பக்கம் பக்கமாகப் படிப்பதைக் காட்டிலும் இந்த அட்ட வணைகள் எளிதில் ஒரு செய்தியை விளக்கி விடுகின்றன.

இவ்வாறு பல்கலைக் கழகத்தில், பல ஆய்வாளர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய பணியை மு. அருணாசலம் அவர்கள் எந்த வசதியும் இல்லாத கிராமத்தில் இருந்து கொண்டு தனியொரு மனிதராகச் செய்து முடித்திருக்கிறார்கள்.

மு.அ. அவர்கள் எழுதிய பிறநூல்கள்; சைவ சமயம், தத்துவப் பிரகாசம் (மூலமும் உரையும்) திருக்களிற்றுப்படியார் (அனு பூதி உரை), திருவாசகக் கட்டுரைகள், "Women saints of Tamilnadu", saivagamas, Outlines of Saivism.

மு. அருணாசலம் அவர்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி மும்மொழிப் புலமையும் கொண்டவர்கள். ஆங்கிலத்தில் பலநூல்கள் எழுதியுள்ளார்கள். ஆங்கிலம் "Saiva Siddhanta" முத்திங்கள் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். தம் கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிடு வார்கள். சங்கராச்சாரியார் பீடத்தை விட்டு வெளிப்பட்ட செய்தியை வெளிப்படை யாகக் கண்டித்தவர் தமிழ் நாட்டில் இவர் ஒருவர் மட்டுமே.

28.10.1909-ஆம் ஆண்டில் மயிலாடுதுறை அருகில் திருச்சிற்றம்பலம் கிராமத்தில் முத்தையா – கௌரி தம்பதியினருக்கு மூத்த மகவாகப் பிறந்தவர். 23.11.92-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

(துணை நூல்கள் : 'தமிழ் இலக்கிய வரலாறு'' – 9-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டு முடிய – மு. அருணாசலம்; ''சித்தாந்தம்'' இதழ்கள்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

16
திருமந்திர உரை வழங்கிய திருக்குறள்வேள்
1911



நவம்பர் 12, 1986... அனைத்துலகச் சைவ சித்தாந்த இரண்டாவது கருத்தரங்கில் கலந்து கொள்ள கோலாலம்பூர் விமான நிலையத்தில் இறங்குகிறோம். எங்களை வரவேற்க சைவ மூதறிஞர் ஆர்.வி. கந்தையா, பேரம்பலம், இரா. தண்டாயுதம் மற்றும் பலர் வந்திருந்தனர். அறிமுகப் படலம் நடக்கும் பொழுது நான் மென்மையான குரலில் ''திருமந்திர உரையாசிரியர் வரதராஜம் பிள்ளை மகன்'' என்றேன். வேறென்ன தகுதி எனக்கு? இதனைக் கேட்ட எண்பது வயது தாண்டிய கந்தையா அவர்கள் "Great son of a Great Father என்று என் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். அவர்கள் சொன்ன வார்த்தைகளில் முன்பாதி பின்பாதியினால் பெருமையுற்றது. திருக்குறள்வேளுக்கு மகனாகப் பிறந்த ஒரு காரணம் பற்றியே greatness வந்து விட்டது. அதுவும் அயல் நாட்டில். மெய்சிலிர்த்துப் போனேன்.

தந்தையார் அவர்களின் ''திருமந்திர உரை'' கற்றோராலும், மற்றோராலும் ஏத்தப்படுகின்றது. மாண்பமை ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் அவர்கள் ''இவ்வாசிரியர் எழுதிய உரையைப் படிக்கும்போது, இருட்டுக்குள்ளிலிருந்து வெளிச்சத்துக்கு வந்தது போன்ற தெளிவும், நன்றியுணர்வும் நமக்கு ஏற்படுகின்றது'' என்கிறார். பொருளாதார நிபுணர் பா. நடராஜன் அவர்கள் (திருமந்திரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்) என்னிடம் ''உங்கள் தந்தையார் உரை எனது படுக்கைக்கு அருகில் உள்ளது. ஐயம் வரும் போதெல்லாம் எடுத்துப் படிப்பேன்'' என்றார்.

திருமந்திர உரை 4, 5 பதிப்புகள் வந்துவிட்டன. நூலை வெளியிட்ட பழனியப்பா சகோதரர்கள் கம்பெனியின் நிர்வாகி பழனியப்பா செட்டியார் ''புதிய பார்வை'' இதழ் பேட்டியில் எங்கள் வருமானத்திற்கு முக்கிய காரணம் வரதராஜம் பிள்ளை திருமந்திர உரை விற்பனையே என்றார்.

பிற உரைகளுக்கு இல்லாத பெருமை இவ்வுரைக்கு எப்படி வந்தது? பிற உரைகள் எல்லாம் சைவசித்தாந்த சாத்திர அறிவினால் எழுந்தவை. திருமந்திரம் இறையனுபவத்தைக் கூறுவது. வெறும் சாத்திர அறிவு போதாது. அனுபவமும் வேண்டும். திருக்குறள்வேள் அனுபவத்தை எவ்வாறு பெற்றார்கள்? ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களே அதனையும் விளக்குகிறார். ''அனுபூதிமான்களுக்கே திருமந்திரத்தின் பொருளை உணரமுடியும் என்று தெளிந்த இந்நூலாசிரியர் ஜி. வரதராஜ பிள்ளையவர்கள் ஒரு புது முறையைக் கையாண்டிருக்கிறார்கள்; தம்முடைய ஆர்வத்தாலும், நிகரற்ற அடக்கத்தாலும் சிவயோகி மா. இரத்தினசபாபதிபிள்ளை அவர்களின் பரிவையும், அருளையும் பெற்றுச் சிவயோகி கொடுத்த விளக்கத்தைத் துணையாகக் கொண்டு, தம்முடைய உரையை எழுதி முடித்திருக்கிறார்கள். ஆகவேதான் இவ்வாசிரியர் எழுதியுள்ள திருமந்திர உரை தனிச் சிறப்புடன் மிளிர்கிறது'' என்கிறார் மகராஜன்.

சிவயோகி அவர்களிடம் உரை கேட்கத் தந்தையார் அவர்கள் பலநாள்கள் திருவாரூரில் சிவயோகி அவர்கள் வீட்டில் தங்கிப்பாடம் கேட்பார்கள். சிவயோகியை அடைவதற்கு முன் தக்க குருநாதரை அடையப் பல ஊர்களுக்குச் சென்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அலைந்து தேடியிருக்கிறார்கள். இறுதியில் சிவயோகியாரின் அருள் கிடைத்தது.

தந்தையார் அவர்கள் திருமந்திர உரை எழுதியதும் தனி வரலாறு. அன்னையார் இதய நோயால் தாக்குண்டார். மருத்துவ மனையில் இருந்து கொண்டே தமது துணைவியாருக்கும் உதவியாக இருந்து, அதே சமயம் ஓய்வில் திருமந்திர உரையும் எழுதி வந்தார்கள். எனது சகோதரியார் மரணப் படுக்கையில் இருந்தார்கள். தாயாரும் இதய நோயால் உடனிருக்க முடியவில்லை. அப்பொழுதும் மனம் தளராது தனது மகளின் அருகே அமர்ந்து கொண்டு பணிவிடை செய்து அவர்களிடம் தான் அன்றன்று எழுதும் உரை விளக்கமும் சொல்லி ஆறுதலும் தந்து வந்தார்கள். துயரமான சூழ்நிலையிலும் திருமந்திரப் பணி தொடர்ந்தது. அதனால் தான் இன்றும் அவர்கள் புகழ் நிலைத்து நிற்கிறது.

திருவாசகம், திருக்குறள், சிவஞான போதம், திருவானைக்கா புராணம் ஆகியவற்றிற்கும் உரை எழுதியுள்ளார்கள். தந்தையார் அவர்களின் ''திருமந்திர நெறி'' என்ற நூலைத் தெய்வத்தமிழ் மன்றத்தில் வெளியிடும் பேறு எங்களுக்குக் கிடைத்தது.

தந்தையார் அவர்களின் திருக்குறள் உரை பற்றி மாண்பமை ஐஸ்டிஸ் பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் கூறிய செய்தியினை இங்கே குறிக்க வேண்டும். ஐஸ்டிஸ் அவர்கள் இளவயதினராக இருந்தபொழுது திருக்குறள் படிக்க ஆர்வம் கொண்டார். அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் தமது ஆர்வத்தைப் புலப் படுத்த அண்ணா அவர்கள் ''பரிமேலழகர் முதலான உரைகள் அறிஞர்க்கே உரியன. உன்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஒரு நல்ல எளிய உரை ஒன்று வந்துள்ளது. எழுதியவர் மாற்றுக் கட்சியான காங்கிரசு காரர். ஜி. வரதராஜம் பிள்ளையவர்களின் உரையைப்படி'' என்று அந்த உரையை அண்ணா அவர்கள் எடுத்துக் கொடுத்தார் களாம். கேட்ட எனக்குக் கண்களில் நீர்பெருகிற்று.

திருக்குறளுக்கு உரை எழுதிய தோடல்லாது திருக்குறளுக்கென்றே ''திருவள்ளுவர்'' என்ற திங்கள் இதழைத் தந்தையார் மூன்று ஆண்டுகள் நடத்தினார்கள். இவற்றையெல்லாம் போற்றித் தருமையாதீனம் கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் அவர்கள் தந்தையாருக்கு ''திருக்குறள்வேள்'' என்ற பட்டம் வழங்கினார்கள்.

சைவ சித்தாந்த வகுப்பினை ஆண்டு தோறும் 21 நாள்கள் லால்குடியில் நடத்தினார்கள். 16 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வகுப்புகள் நடந்தன. வருவோர்க்கு இலவச உணவும், தங்கும் வசதியும் செய்து தரப்பட்டது. நடத்திய வர்கள் அருணை வடிவேல் முதலியார், வச்சிரவேல் முதலியார், ஔவை துரைசாமி பிள்ளை,ந.ரா. முருகவேள் என்று சைவசித்தாந்தத்தில் ஊறித்திளைத்தவர்கள். அன்று பாடம் கேட்டவர்கள் எல்லாம் இன்று சைவ சித்தாந்தத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள்.

திருக்குறள்வேளின் சைவப் பணி இதோடு நிற்கவில்லை. திருச்சி தேசியக் கல்லூரியில் எம்.ஏ. வகுப்புக்குச் சைவ சித்தாந்தம் ஏற்படுத்த பத்தாயிரம் ரூபாயும், தனது அனைத்துச் சைவ நூல்களையும் வழங்கினார்கள்.

இத்தனைக்கும் திருக்குறள்வேள் அவர்கள் முறையாகக் கல்லூரியில் தமிழ்ப் படித்தவர்கள் அல்லர். கூட்டுறவு வங்கி யின் செயலராக இருந்தவர்கள். காங்கிரஸ் இயக்கத்தில் தலைவராக இருந்து எம்.எல்.ஏ. தேர்தலில் தோற்றவர்கள். இவ்வாறு முன்பின் தொடர்பில்லாத துறை களில் பணியாற்றிய திருக்குறள்வேள் சைவ சமயத் தூணாகத் திகழ்ந்தது பெருவியப்பே!

19.1.1911-ஆம் ஆண்டில் லால்குடியில் குருநமசிவாயம் பிள்ளை – ருக்குமணி அம்மாளுக்கு முதல் மகவாய்ப் பிறந்த திருக்குறள்வேள் 19.4.1976 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

(துணைநூல்கள் : ''திருமந்திர நெறி'' – ஜி. வரதராஜன்; ''புதிய பார்வை'' இதழ்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17
நாத்திகத் தொண்டர்களை உருவாக்கிய ஈரோட்டில் ஆத்திகத் தொண்டர்களை உருவாக்கியவர் ...1912

ஈரோடு – ''கடவுள் இல்லை; இல்லவே இல்லை'' என்று பறைசாற்றிய ஈ.வே.ரா. பெரியார் அவர்கள் பிறந்த ஊர். அங்கு திருமுறைவிழா, அறுபத்து மூவர் உற்சவம், பெண்கள் திருவாசகம் முற்றோதல் – திருமுறை. சைவ சித்தாந்த வகுப்பு, 50க்கு மேலானவர்கள் கயிலை சென்று இருத்தல் இப்படி ஈரோடு சிவலோகமாகவே மாறியது எவ்வாறு?

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இவற்றுள் மிக முக்கிய காரணம் தொண்டர் சீர் பரவுவார் என்று அழைக்கப்பட்ட ரா.ப. தங்க வேலனாரின் சமயப் பணியும் ஆகும். அவர் ஆற்றிய பல சிவப்பணிகளில் தலை யாயது தொண்டர்களை உருவாக்கி யது. இன்றும் பல தொண்டர்கள் தங்க வேலனாரை நெஞ்சார நினைத்து வழி பட்டுப் போற்றுகின்றனர். உழவாரப் பணி, திருக்கோயிற்பணி, திருமுறைப்பணி என்று பலநிலைகளிலிருந்து தொண்டாற்றி வருகின்றனர்.

சமய மன்றங்கள் தோற்றுவித்தல், சமயநூல்கள் எழுதுதல், மகிமாலீசர் திருக் கோவில் பணிகள், ஐம்பது ஆண்டு களாக வாரம் தோறும் திருமுறை, சைவப் புராணங்கள், திருக்குறள் வகுப்புகள் தொடர்ந்து நடத்தி வருதல் – எனப் பணிகள் பல ஆற்றித் தனது பவளவிழாவைக் கொண்டாடினார்கள்.

தொண்டர் சீர் பரவுவார் என்ற பெயர் பொருத்தம் தானே!

(பிறப்பு : 25.7.1912, ஊர் ஈரோடு.

பெற்றோர் – பச்சையப்ப முதலியார், பழநியம்மாள்)

18
திருமந்திர ரஸஞ்ஞானி (1913)

அவரோ உயர்நீதிமன்ற நீதிபதி! நீதிபதிகளுக்கே உரியகெடுபிடி. முன்னாலே ஒரு கார்; பின்னாலே ஒரு கார். டவாலி பியூன் முன்னே வர, உள்ளூர் நீதிபதிகள் புடைசூழ ஒரு இறுக்கமான சூழல்.

தலைப்போ ''தமிழ் செய்த திருமூலன்'' கேட்பவர்களுக்கும் விளங்காது; சொல்பவர்களுக்கும் புரியாது.

இப்படித்தான் மலர்ந்தது 1971-ஆம் ஆண்டில் பிப்ரவரி ஆறாந்தேதி காலைப் பொழுது. காலைப் பத்து மணிக்கு ஏ.வி.சி பழைய திருமண மண்டபத்திலே ''கூட்டம் நல்லபடியாக நடத்த வேண்டும்'' என்ற சிந்தனைக் குழப்பத்தோடு காத்திருந்தோம். காலை நேரமானாலும் மண்டபம் நிரம்பி வழியும் கூட்டம்.

காலை பத்துமணி. நீதிபதியின் கார் வந்து நின்றது. மஞ்சள் வண்ணபட்டுச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சட்டை; கழுத்தில் இருபுறமும் தொங்கிய வாறு சரிகையிட்ட சலவை மடிப்போடு கூடிய மேல் துண்டு - வாய் நிறைய தாம்பூலம். உல்லாசமாக இறங்கி வந்தார்கள் மாண்பமை எஸ். மகராஜன் அவர்கள். தோள் மேல் கைபோட்டவாறு, ''என்ன ராஜசேகரன்! அப்பா வந்து விட்டார்களா?'' என்று கேட்டவாறு மேடைக்கு வந்தார்கள். திருமந்திர உரையாசிரியர் என்பதினால் தந்தையார் அவர்கள் மேல் தனி ஈடுபாடு. அவர்கள் தலைமை வேறு. சூழ்நிலையின் பாதி இறுக்கம் தளர்ந்தது.

மகராஜன் அவர்கள் பேச ஆரம்பிக் கிறார்கள். அவர்கள் பேச்சு பாணியே அலாதி. திருமந்திரப் பாடல்களை அனுபவித்து ரசித்து அவற்றிலேயே ஆழ்ந்து போய்விடுவார்கள். நிலையாமை யைப் பற்றிய பாடல். மகராஜன் நீட்டி முழக்கி இசைக்க ஆரம்பிக்கிறார். ஓதுவாமூர்த்திகளைப் போல பண்கலந்த இசையல்ல. ஒரு ரசிகமாமணியின் ரசானுபவகீதம்! வலது கையை தோள் மட்டத்திற்கு உயர்த்தி வலப்புறத்திலிருந்து இடப்புறமாக வளைத்துக் கொண்டு வந்து ''ஊரெல்லாம் கூடி'' என்று கூறிச்சற்று நிறுத்துவார். இங்கு ''டிங்க்'' அடிக்க வேண்டும். என்பார். ''ஒலிக்க அழுதிட்டு'' மீண்டும் ஒரு ''டிங்க்'' அடித்து நிறுத்துவார். (''டிங்க்'' என்றால் என்ன என்று கேட்க விட்டு விட்டேன்).

''பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு சூரையங்காட்டிடைச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே'' என்று இதுவரை வலப்புறமும் இடப்புறமுமாக கையை அசைத்து வந்த நீதிபதி ''நினைப்பொழிந்தார்களே'' என்ற பொழுது அப்படியே வேகமாக அந்தக் கையைக் கீழே போட்டார்கள். அவர்கள் போட்ட வேகத்தில் கூடியிருந்தோரின் நினைப்பு எல்லாம் ஒன்றரை மணி நேரத்துக்கு ஒழிந்தே போய்விட்டது. சூரையங்காட்டுக்கும் செல்லத் தயாராகி விட்டார்கள். திருமந்திரம் கேட்கவும் தான்.

நீதிபதி பதவியைவிட்டு ஓய்வு பெற்ற சமயம். மீண்டும் ஒருமுறை மயிலாடுதுறை வந்தார்கள். பொது இடத்தில் சந்தித்த என்னைப் பார்த்து நீதிபதியவர்கள் ''இராஜசேகரன்! இன்று இரவு ஒரு இரண்டு மணி நேரம் என்னோடு இருக்க முடியுமா?'' என்று கேட்டார்கள். நான் திடுக்கிட்டு போய்விட்டேன். எப்பேர்ப் பட்ட அறிஞர்! அவர்கள் நம்மை இப்படி கேட்பதா என்ற பதைப்பு ''இதனைவிட வேறு என்ன வேலை?'' நீதிபதி தொடர்ந்தார்கள். ''உங்களைப் போன்ற இரசிகரிடம் குற்றாலக் குறவஞ்சியும், முத்தொள்ளாயிரமும் படித்துக் காட்ட ஆசை. இதுவரை நீதிபதியாக இருந்தேன். நீங்களோ வழக்கறிஞர். நீதிபதி வழக் கறிஞர் வீட்டுக்கு வரக் கூடாதல்லவா? எப்பொழுதடா ஓய்வு பெறுவோம். உங்கள் வீட்டுக்கு வந்து குற்றாலக் குறவஞ்சி படித்துக் காட்டுவோம் என்று காத்துக் கொண்டிருந்தேன்'' என்றார்கள். இதற் காகவே சென்னையிலிருந்து ''குற்றலாக் குறவஞ்சி'' அவர்களது வானொலி உரை - எடுத்து வந்திருந்தார்கள். அவர்கள் எங்கே? நான் எங்கே? நினைத்தால் இன்றும் கண்ணீர் பெருகுகிறது. இரவு வந்தார்கள். ''வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும்!'' என்று நிறுத்தினார்கள். அல்ல அல்ல. ''டிங்க்'' அடித்தார்கள். ஆம், வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சின. மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சின. எல்லாமே எனது மாயூரம் வீட்டில் அன்று இரவு நடந்தேறின. அவையெல்லாம் ஒரு பொற்காலம்!

நீதிபதியவர்களின் பேச்சினைப் போலவே எழுத்திலும் ஒரு ரசனை இருக்கும். ஒரு நூலுக்குப் பெயரே ''ஆடத் தெரியாத கடவுள்''. உலகெல்லாம் ஆட்டிப் படைத்துத்தானும் நித்தமும் ஆடிக் கொண்டிருக்கும் நடராஜப் பெருமானைப் பற்றித்தான். பிறநூல்கள் ''தெய்வமாக் கவி'', ''சொல்லின்பம்'' ஆகியன. இவை சமயம் மட்டுமன்று; இலக்கியமும் கலந்த நூல்கள் ஆகும்.

திருமந்திரமே சிந்தனையாக வாழ்ந்த நீதிபதி 9.9.1982 இறைவனடி சேர்ந்தார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(பிறப்பு : 1913; மறைவு : 9.9.1982. ஊர் – பாளையங்கோட்டை; பெற்றோர் – டி.என். சுப்பிரமணியப் பிள்ளை, கண்ணம்மா).

19

சைவ சித்தாந்தத்தில் டாக்டர் பட்டம் பெற்று - பிறரும் பெற உதவிய தத்துவப் பேராசிரியர் (1914)

''சைவ சித்தாந்தத்தில் டாக்டர் பட்டமா?'' என்று கல்வியாளர்கள் கேலி செய்த காலம். அந்த கால கட்டத்தில் ''சிவஞான சித்தியார் – அறுவகை உரைகள் காட்டும் சைவ சித்தாந்தம்'' என்ற தலைப்பில் ஆய்வுகள் நடத்தி டாக்டர் பட்டம் பெற்றார் ஒரு இளைஞர். அவர் தான் வ.ஆ. தேவசேனாபதி. ஆண்டு 1948.

''சைவசித்தாந்தம்'', ''மனிதக் கட்டும் இறையருளும்'' (of human bondage and divine grace)''சைவசித்தாந்தத்தின் அடிப் படைகள்'' எனப் பல தலைப்புகளில் நூல்கள் எழுதியுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தி லும், கனடாவில் மெக்மாஸ்டர் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராக இருந்து இந்திய, வெளிநாட்டு ஆய்வாளர்களை நெறிப்படுத்தியுள்ளார். அது மட்டுமல்லாது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று உரையாற்றியிருக்கின்றார். இவரைச் சிறப்பிக்கும் வகையில் அமெரிக்க தத்துவப் பேராசிரியர்களைக் கொண்டு இவரது நண்பர்கள் ஒரு கட்டுரைத் தொகுப்பினை வெளியிட்டு இந்தியா வந்து இவரிடம் நேரில் கொடுத்தனர்.

25.12.94 அன்று இவரது தமக்கையார் ''பாதாளம் ஏழினும் கீழ்'' என்ற திரு வெம்பாவைப் பாடலைப் பாட இவர் உயிர் பிரிந்தது.

(25.7.1914 – 25.12.1994);

20

தமிழிசையால் திருமுறை பரப்பிய பண்ணாராய்ச்சி வித்தகர் (1914)

''காலநெடும் பாதையில் இசையரசி ஊர்வலமாமே! எங்கே தம்பி?'' என்று கிண்டலாகக் கேட்டுக் கொண்டே ஒரு பெரியவர் – வேட்டி நுனியை ஒரு கையால் பிடித்துக் கொண்டும் மற்றொரு கையில் ஒரு பையை வைத்துக் கொண்டும், காதில் கடுக்கன் கூடிய திருக்கோலத்தினோடு – வந்தார். ''சிலம்பிசை எழுப்பிய சேரநாட்டி லிருந்து சம்பந்தர், முத்துதாண்டவர், மாரிமுத்தா பிள்ளை ஆகியோர் இசை பரப்பிய சீர்காழி வரை என்று வைத்துக் கொள்ளுங்களேன்'' என்றேன். இடம் – தெய்வத் தமிழ் மன்றம். கேட்டவர் பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனார்.

பூம்புகார்க் கடற்கரையிலும் பத்தினிக் கோட்டத்திலும் அவர்கள் பாடிய கானல் வரிப்பாடல்களும், சிலப்பதிகாரப் பாடல் களும் இன்றும் நிழலாடுகின்றன. மாதவி ஆடிய பதினோராடல்களையும் அவர்கள் ஆடிக்காட்டியது இன்றும் நினைவுக்கு வருகிறது.

பத்தினிக் கோட்டத்தில் கானல் வரிக் கருத்தரங்கம். அ.ச. ஞானசம்பந்தனார், வ.சுப. மாணிக்கனார், கொண்டல் சு. மகாதேவன் என்று ஜாம்பவான்கள் காலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யிலிருந்து கானல்வரியை அலசிக் கொண்டிருந்தனர். கானல் வரி பிடிபடவில்லை. சுந்தரேசனார் மேடைக்கு வந்தார். காலையில் பாட வேண்டிய ராகத்தை மாலையில் மாதவி பாடினாள். சுருதிபேதம் வந்து விட்டது. யாழிசை மேல் வந்தது என்கிறார் இளங்கோ. உடனே கோவலன் ஊடலில் வெளியேறிவிட்டான்.'' என்று அப்படியே பாடிக்காட்டினார்கள். அ.ச.ஞா. அவர்கள் ஓடிச்சென்று சுந்தரேசனாரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ''சுந்தரேசா! காலையிலிருந்து மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தோம். கானல்வரியைக் காப்பாற்றி விட்டாய்'' என்றார்கள்.

சிலம்பு மட்டுமல்ல. தேவாரப் பாடல்கள், பிள்ளைத் தமிழ் போன்ற பிரபந்தங்களைப் பண்ணோடு பாடுவார்கள். பூவாளூரில் நாடுகாண்குழு என்று அமைத்துத் திங்கள் தோறும் தலங்கள் செல்வதும் தேவாரப் பண்ணிசைப்பதுமாக இருந்தார்கள். ராக ஆலாபனை, சுரம்பாடுதல் முதலிய அம்சங்களோடு தேவாரத்தை அரங்கிசையாக்கியவர் பண்ணாராய்ச்சி வித்தகர். இத்தனைக்கும் அவர்கள் ஊதியமாக பெறுவது ரூ. 5ம் இருக்கும். ரூ. 30ம் இருக்கும். ரூபாய் 100-ஐக்கூட எட்டியதில்லை. இவரது பெருமை கருதி இவருக்காகவே ஆரம்பிப்பது போல அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் சென்னையில் தேவார இசைக்கலை விழா தொடங்கினார்கள். அவரது பணி முழுமை அடையுமுன் உயிர்நீத்தார்.

அவரது இசைப் பாடல்கள் எல்லாம் ஒலி நாடாக்கள் மூலம் வந்திருக்க வேண்டும். தமிழ் நாடு செய்த தவக்குறை. காற்றோடு கலந்து விட்டன.

22.4.1914-ஆம் ஆண்டில் சீர்காழியில் பஞ்நதம் பிள்ளை – குப்பம்மாளுக்குப் பிறந்தார். 9.6.1981 அன்று இறைவனடி சேர்ந்தார்.

துணை நூல்கள் :''சத்ய கங்கை'', ''செந்தமிழ்ச் செல்வி''

21

பேச்சால் - எழுத்தால் - கழகத்தால் சிவபூஜைச் செல்வர்களை உருவாக்கிய சைவ சித்தாந்த வித்தகர் (1915)



தேவகோட்டை .....ஞானசம்பந்தர் தெரு ......பாலறாவாயர் இல்லம் ......எப்பொழுதும் நிரந்தரமாக வேதிகையும், ஓமகுண்டமும் காட்சியளிக்கும். சாதாரண நாட்களிலேயே இந்த இல்லம் திருமடமாகவோ, ஆலயமாகவோ காட்சியளிக்கும். தீக்கை நாட்களில் பாலறாவாயர் நிலையம் திருக்கைலாயமே.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் என்ற தீட்சா நாமம் பெற்ற பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் 1960-லியே ஈசான சிவாசாரியார் அவர்களிடம் தீக்கை பெற்றார். தீக்கை தந்த நாளிலேயே தேசிகரின் ஞானகுரு ''மேடையில் பேசவேண்டியது எல்லாம் பேசி விட்டாய். இனி எத்தனை பேருக்கு தீக்கை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்தோம் என்று திட்டமிடு. அதில் பெருமிதம் கொள்'' என்று உபதேசம் செய்தார்கள். அவர்கள் ஆணையைச் சிரமேற் கொண்டு தேசிகர் அவர்கள் 1995 வரை இருவர்க்கு ஆசாரிய அபிஷேகமும், 24 பேருக்கு சாதகாபிஷேகமும், 114 பேருக்கு நிருவாண தீட்சையும், 474 பேருக்கு விசேட தீட்சையும், 2838 பேருக்குச் சமய தீட்சையும் செய்துள் ளார்கள்.

தீட்சை கொடுப்பதோடு தேசிகர் அவர்கள் நின்றுவிடவில்லை. ஞான சம்பந்தர் உலா, சேக்கிழார் வரலாற்றுச் சிந்து முதலான 38 கவிதை நூல்களும், சிவபூஜாவிதி போன்ற பூஜை நெறிமுறை களையும் திருமுறைப் பெருமைகளையும் விளக்கும் 21 உரைநடை நூல்களும், சிவஞானபோதத் தெளிவுரை போன்ற 6 உரை நூல்களும் எழுதி வெளியிட்டார்கள்.

திருமுறைச் சொற்பொழிவுகளும், சைவ சித்தாந்த வகுப்புகளும் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும், மலேசியா, பர்மா போன்ற வெளிநாடுகளிலும் நிகழ்த்தினார்கள்.

தேவகோட்டையில் 1947 தொடங்கிச் சேக்கிழார் விழா நடத்தக் காரணமாக இருந்தார்கள். 1979-ஆம் ஆண்டில் தேசி கரின் சீடர்கள், தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவநெறிக் கழகம் தொடங்கி ஆண்டு தோறும் சிவபூஜை மாநாடுகள் நிகழ்த்தி னார்கள்.

18.2.1999-ஆம் ஆண்டில் தேசிகர் அவர்கள் சிவத்துடன் கலந்தார்கள்.

(தோற்றம் – 9.1.1915; மறைவு – 18.2.1999; பிறந்த ஊர் – கோனாபட்டு, செட்டிநாடு; பெற்றோர் – முருகப்ப செட்டியார், சீதை ஆச்சி)

(துணை நூல்கள் : சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் மணிவிழா மலர் (1975) பவளவிழா மலர் (1989), முத்துவிழா மலர் (1995))

22

பேச்சால் – எழுத்தால் – கழகத்தால் சேக்கிழார் செந்தமிழ் பரப்பிய சேமக்காப்பு (1916)



1970 ....மயிலாடுதுறை புகைவண்டி நிலையம் .....நானும் நண்பர்களும் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களை எதிர் கொள்ளக் காத்திருந் தோம். பேராசிரியர் அவர்கள் ரயிலை விட்டு இறங்கினார்கள். பெட்டியை நாங்கள் வாங்கிக் கொண்டவுடனேயே பேராசிரியர் அவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். ''இறையனுபவம் அறிவு நிலை, உணர்வு நிலை என இரு வகையில் நிகழும். மணிவாசகர், தேவார மூவர் அனைவரும் உணர்வு நிலையில் நின்று பாடியவர்கள். சேக்கிழார் பெரிய புராணத்தை பக்திக் கண்கொண்டு மட்டும் பார்க்கக் கூடாது. சிறந்த தேசிய இலக்கியம்'' என்றெல்லாம் வீடு வரும் வரை கூறிக் கொண்டே வந்தார்கள். இரயில் நிலையம் எங்களுக்குப் போதி மரமாயிற்று. அ.ச.ஞா அவர்கள் குருநாதர் ஆனார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''அன்று முதல் இன்று வரை பெரிய புரணம் சைவர்கள் மத்தியில் மட்டுமே உலவுகிறது. அதனை உடைக்க வேண்டும், தமிழர்களில் தனிப்பெரும் சொத்தாக ஆக்க வேண்டும்'' என அ.ச.ஞா அரும்பாடு பட்டார்கள்.

பெரியபுராணம் பற்றி அவர்கள் எழுதிய முதல் நூலே ''தேசிய இலக்கியம்'' ஆகும். அடுத்து வந்த நூல் ''பெரியபுராணம் – ஓர் ஆய்வு''. இப்பெருநூல் அ.ச.ஞா. அவர்களின் "Magnum opus".

இந்நூல் பல பழங்கருத்துக்களை உடைத்துச் செல்கிறது. ''சிந்து சமவெளி சிவன் வேறு – வேத ருத்திரன் வேறு'', ஞானசம்பந்தப் பெருமான் சமண பௌத்தர்களை மட்டுமன்று. தாம் பிறந்து வந்த வைதிக பிராமண குலத்தையும் எதிர் கொள்ள வேண்டி வந்தது. நேரிடையாக எதிர்த்தால் சம்பந்தப் பெருமானையே பௌத்த சமயத்தார் என்று வைதீகர்கள் ஓரங்கட்டி விடுவார்கள். எனவே வைதிகர் கள் வழிபடும் வேள்வியின் விழுப்பொருள் திருவைந்தெழுத்து என்று அதுகாறும் இந்திரன், வருணன், அக்னி என்று பலபட வழிபட்ட வைதிகர்களை மடை மாற்றம் செய்தார் ஞான சம்பந்தப் பெருந்தகை'' என்று பல புதுமைக் கருத்துக்களைத் தக்க ஆய்வுகளுடன் நிறுவுகிறார் அ.ச.ஞா. இதற்காக வடமொழி அறிஞர் ஒருவரிடம் வேதம் முழுமையாகக் கற்றார். தேவார மூவர், சேக்கிழார் கால சமுதாய வரலாற்றினை இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகிறார். காப்பிய உலகில் பெரிய புராணம் இடம் பெறுவதை விரிவாகச் சொல்கிறார். சமயச் சிறையில் அகப்பட்டி ருந்த பெரிய புராணத்தைத் தமிழ் இலக்கிய வானில் பறக்க விட்டார்.

பெரிய புராணம் ஒரு சமுதாய நூல் என்பதனை நிறுவுவதற்காகவே சென்னை வானொலி நிலையத்தில் எட்டு நாள்கள் தொடர்ந்து ஒரு மணிநேரம் பேசினார்கள். அவற்றை அப்படியே நூல் வடிவமாக்கி ''சேக்கிழார் தந்த செல்வம்'' என்று வெளியிட்டார்கள்.

தமிழகத்தில் பேராசிரியர் பேசாத மன்றம் இல்லை; ஏறாத மேடை இல்லை. பெரிய புராணம் இலக்கியக் கண்ணோட் டம், சமுதாயப் பார்வை – இதுவே அவர்கள் மூச்சும் பேச்சுமாகயிருந்தது. எங்களைப் போன்ற இளைஞர்களின் (1970ல்) வாழ்வில் ஒரு திருப்பு முனை யாகவே அவர்கள் பேச்சும், எழுத்தும் அமைந்து இருந்தன. திருமுறைப் பேச்சு களும் குறிப்பாக திருவாசகப் பேச்சுகளும் பேராசிரியர் நிகழ்த்தி வந்தார்கள்.

பேச்சோடும், எழுத்தோடும் அ.ச.ஞா. வின் பெரியபுராணப் பணி முடிந்துவிட வில்லை. சென்னையில் சேக்கிழார் பெருமை நிலைநாட்ட நிலையான அமைப்பு வேண்டும் என்று கருதிய பேராசிரியர் 1992-ஆம் ஆண்டில் சேக்கிழார் கழகம் நிறுவி ஆண்டு தோறும் ஜூலை மாதம் சேக்கிழார் விழா நடத்தி வருகின் றார்கள். சாதாரணமாகவே பெரிய புராணத்தை இலக்கிய நோக்கு, சமுதாயப் பார்வை என்று ஆய்ந்து வந்த பேராசிரியர் தாம் நடத்தும் அமைப்பில் சும்மா இருப்பார்களா? பட்டிமண்டபம், கருத்த ரங்கம், வழக்காடு மன்றம், சுழலும் சொற்போர், செந்தமிழ் நாடாளு மன்றம், வினாவிடை அரங்கம் என்று பல்வித சுவைகளுடன் நிகழ்ச்சியை அமைத்தார்கள். தமிழ் நாட்டு அறிஞர்கள்; இலங்கை பேச்சாளர்கள்; கிறிஸ்துவர்கள்; இஸ்லாமி யர்கள்; அரசியல்வாதிகள்; தொழிலதி பர்கள்; நீதிபதிகள்; ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று பலதுறையினரையும் பேசவைத்தார் கள். சேக்கிழார் கழகம் – தமிழ்ச் சமுதாயச் சங்கமமாகவே திகழ்ந்து வருகிறது. திரு முறை தொடர்பான நூல்கள் சேக்கிழார் விழாவில் வெளியிடப்பட்டன; திருமுறை தொடர்பான நூல்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. சைவப்பணி செய் வோருக்கு ''சேக்கிழார் விருது'' வழங்கப் பட்டு வருகிறது. திரு.வி.க. அவர்களின் ''பெரிய புராணப் பதிப்பினைக்'' கழகம் வெளியிட்டது. இன்றும் பணி தொடர்கிறது, இத்தனை மகத்தான செயல் களைப் பேராசிரியர் தமது இருபதாவது வயதில் தொடங்கவில்லை. நாற்பதிலும் அல்ல; அறுபதிலும் அல்ல; ஏன் எண்பதில் கூட இல்லை; எண்பதைத் தாண்டிய நிலையில் – இரண்டு கண்களும் பார்வை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யிழந்த நிலையில் – பேராசிரியர் அவர்கள் செய்து வருகிறார்கள். பேராசிரியரா செய்கின்றார்கள்? சேக்கிழார் பெருமான் உள்ளிருந்து செய்து கொண்டிருக்கிறார்.

பேராசிரியர் அவர்கள் இத்துடன் நிற்கவில்லை. 1952-ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் அஞ்சி அஞ்சி – செய்யத் தொடங்கிய பணியை – 1999-ஆம் ஆண்டில் செய்யத் தொடங்கி 2001-ஆம் ஆண்டில் முடித்துள்ளார்கள். 1950-ஆம் ஆண்டில் பேராசிரியர் அவர்களின் குருநாதர் திரு.வி.க. அவர்களே கட்டளை யிட்டார்கள் ''திருவாசகத்தை விஞ்ஞானக் கண்கொண்டு எழுது'' என்பது கட்டளை. ''திருவாசகம் அனுபவப் பிழிவு'' என்பதால் அந்த அனுபவம் இல்லாமல் பதவுரை, கருத்துரை கூறுவது தவறு என்பதே அவர்கள் அச்சம். அப்படியிருந்த நிலையில் 1999 சேக்கிழார் விழா அரங்கில் ''திருவாசகம் சில சிந்தனைகள் (1) – அ.ச.ஞா.'' என்று பார்த்தவுடன் துள்ளிக் குதித்தேன். மூதறிஞர்க்கு அனுபவம் கிடைத்து விட்டதா? யானறியேன். நமக்கு என்னவோ திருவாசகம் கிடைத்து விட்டது. ஐந்து தொகுதிகளாகத் ''திருவாசகம் சில சிந்தனைகள்'' என பெயர் தாங்கி வெளிவந்தன. ஒவ்வொரு தொகுதியும் 300, 400 பக்க அளவில் வெளிவந்து விட்டன. பேராசிரியர் அவர்களின் வாழ்க்கைச் சாதனை பெரிய புராணமா? திருவாசகமா? என்பதனைச் சேக்கிழார் விழாவிலே பட்டிமண்டபமாக நடத்த வேண்டியது தான்.

இவையல்லாமல் ''மணிவாசகர்'' ''தத்துவமும் பக்தியும்'' ''மந்திரங்கள் என்றால் என்ன?'' ''புராணங்கள் இரண்டு தொகுதிகள்'' நூல்களும் வெளியிட்டுள் ளார்கள். கம்பனுக்காவும், சங்க இலக்கியங் களுக்காகவும், சிலம்பிற்காகவும் அவர்கள் எழுதிய நூல்களை நான் சேர்க்கவில்லை. அது தனிப்பட்டியல்.

10.11.1916-ஆம் ஆண்டில் திருச்சியை அடுத்துள்ள அரசங்குடியில் அ.மு. சரவண முதலியார் – சிவகாமி அம்மையாருக்கு மகவாய்ப் பிறந்த அ.ச.ஞானசம்பந்தனார் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். இன்றும் சேக்கிழார் பணி புரிந்து வருகின்றார்.

அண்மையில் 27.8.2002-இல் அ.ச.ஞா. அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார்கள்.

(துணை நூல்கள் : ''ஞானசம்பந்தக் களஞ்சியம்'' ....1997)

23

பன்னிரு திருமுறைகள் ஆய்வுகளுக்கெல்லாம் துணை நிற்கும் முதல் ஆய்வுநூல் தந்தவர் (1917)

பன்னிரு திருமுறை வரலாறு – முதல் தொகுதி – 744 பக்கங்கள்; இரண்டாம் தொகுதி – 1340 பக்கங்கள். திருமுறை ஆசிரியர்களின் கால ஆராய்ச்சி, திருமுறை களின் உள்ளடக்கம், ஒப்புமைப் பகுதி என்று இந்நூல் பேசாத செய்திகளே இல்லை எனலாம். மணிவாசகர் காலத்தை நிறுவும் பொழுது, நூலாசிரியர் மறைமலை யடிகளின் கருத்தினைத் தக்க சான்று களுடன் மறுக்கிறார். ஒன்பதாம் திருமுறை, பதினோராம் திருமுறை ஆகிய நூல்களை அறிஞர்களே படித்ததுமில்லை; எழுதியது மில்லை. அவற்றைப் பற்றி எல்லாம் முழுமையாக எழுதியுள்ளார் ஆசிரியர். ஆசிரியர் வேறு யாருமல்ல. திருமுறைச் செல்வர் க.வெள்ளை வாரணனார் அவர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமுறைச் செல்வர் எழுதிய வேறு நூல்கள்; ''சைவச் சித்தாந்தத் தத்துவத்தின் வேர்கள்'', '''தில்லைப் பெருங்கோயில்'', திருவருட்பயன், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஆகியவற்றிற்கு உரை நூல்கள், சைவசித்தாந்த சாத்திர வரலாறு.

வெள்ளை வாரணனார் 14.1.1917 அன்று குடந்தை வட்டம் திருநாகேஸ்வரத்தில் கந்தசாமி முதலியார் – அமிர்தம் அம்மையாருக்குப் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். 13.6.1988-இல் இறைவனடி சேர்ந்தார்கள்.

(துணை நூல்கள் : ''சிதம்பரம் பெருமக்கள்'' – பகுதி 1 – மயில்வாகனன்)

24
சித்தாந்தச் சிக்கல்களை விடுவித்த சீலர்
(1921)

''இளைஞன் ஒருவன் கடைத்தெரு வழியாகச் செல்கிறான். வழியில் புடவைக் கடை. புடவையைப் பார்க்கிறான். அவன் மனதில் படுகிறது. புடவை வாங்கலாமா என்று சிந்திக்கிறான். இது சித்தம். இந்தநிறம் மனைவிக்கு பிடிக்குமா? பிடிக்காதா? என்று நிச்சயிக்கிறான். இது புத்தி. இந்தப் புடவை தன் மனைவிக்கு வேண்டும் என்று முடிவு கட்டுகிறான். இது அகங்காரம் என்று மிக எளிதாக முப்பத்தாறு தத்துவங்களை அந்தப் பேரறிஞர் விளக்கினார். நடந்த இடம் மயிலாடுதுறை சைவசித்தாந்த மாலை நேர வகுப்பு. அப்பேரறிஞர் முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் ஆவார். அதுவரை முப்பத்தாறு தத்துவங்கள் என்றால் எங்களுக்கு மலைப்பாக இருந்தது. செட்டியார் அவர்கள் நடைமுறை உதாரணத்துடன் விளக்கியவுடன் எளிதில் புரிந்து விட்டது. குரலும் கணீரென்று மணி ஓசை போல் இருந்தது. 1½ மணி நேரம் போனதே தெரியவில்லை.

இது மட்டுமல்ல. சைவ சித்தாந்தத்தில் எந்தச் சிக்கலான பகுதியையும் செட்டியார் அவர்கள் மிக எளிதாக விளக்கி விடுவார்கள். முத்தி நிலையில் ஆணவம் உண்டா? என்பது சிக்கலான கேள்வி. அக்கேள்வி அடக்கிய உண்மை விளக்கப் பாடலுக்குச் (''முத்திகளில்'') செட்டியார் அவர்கள் ''முத்தியில் ஆணவம் தன் முழுவலியோடுதான் இருக்கின்றது. ஆனால் திருவருளின் சக்தியில் அடங்கி விடுகிறது. ஆகையால் ஆணவம் உயிரைப் பாதிக்க முடியவில்லை. சூரிய ஒளியில் விளக்கின் ஒளி அடங்கிவிடுவது போல'' என்பார். இதுதான் ''சித்தாந்தம்'' இதழில் இவர் எழுதிய முதல் கட்டுரை. முதல் கட்டுரையே அறிஞர்கள் மத்தியில் சலசலப்பை உண்டுபண்ணிவிட்டது.

''மூல கன்மம் யாது?'' என்பது சைவசித்தாந்தத்தில் அடிப்படையான சிக்கலான கேள்வி. இதுபற்றி இரண்டரை ஆண்டுகள் ''சித்தாந்தம்'' இதழில் செட்டியார் அவர்கள் தொடர்ந்து எழுதினார்கள்.

''தடைகளும் விடைகளும்'' என்பதே இவர் எழுதிய ஒரு நூலின் பெயர். நாத்திக வாதியினர் எழுப்பிய பல தடைகளுக்கு விடைகள் தந்துள்ளார். மலேசியாவிலிருந்து வெளிவந்த ''தமிழ்நேசன்'' இதழில் ''சைவ விளக்கம்'' எனும் பகுதியில் பல தடைகட்கு விடைகள் எழுதி வந்தார்.

சிவஞான மாபாடியத்தை எழுத்தெண்ணிப் படித்தவர்கள் செட்டியார் அவர்கள். சிவஞான மாபாடியத்தைத் தமிழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாட்டில் கற்றவர்கள் என்று பத்துவிரல் களில் அடக்கிவிடலாம். அவர்களுள் முதன்மையானவர் செட்டியார் அவர்கள்.

இதற்காகச் செட்டியார் அவர்கள் சைவசித்தாந்தத்தை ஆசிரியர்பால் சென்று கற்றவர் இல்லை. தானாகப் படித்தவர்தாம். இவர் எழுதிய நூல்கள் : ''கடவுளால் முடியாத செயல்கள்'', ''தடைகளும் விடைகளும்''.

இளவயதிலேயே தொழில் நிமித்தம் செட்டியார் அவர்கள் மலேசியா சென்று விட்டார்கள். மலேயாவின் மூலைமுடுக்கு எல்லாம் உரை ஆற்றினார். சிவஞான போதம், திருவருட்பயன், பெரியபுராணம் வகுப்புகள் நடத்தி வந்தார்கள். 29.10.93 அன்று உயிர் நீத்தார்கள்.

(1921 – 1993; பிறந்த ஊர் – விராய்ச்சிலை, புதுக்கோட்டை மாவட்டம்)

25
திருக்கோயில் இதழைச் சொற்கோயில் ஆக்கியவர் (1924)

''திருக்கோயில்'' இதழ் வேறு; ந.ரா. முருகவேள் வேறு என்று பிரிக்க முடியாத அளவு திருக்கோயில் இதழோடு முருகவேள் அவர்கள் பின்னிப் பிணைந்து தான் இருந்தார். ஓராண்டு .....ஈராண்டா? 1962 செப்டம்பர் முதல் 1985 மார்ச் வரை 22 ½ ஆண்டுகள் திருக்கோயில் ஆசிரியராக இருந்து பணியாற்றினார்கள். ஒவ்வொரு இதழிலும் அவருடைய கட்டுரைகளே 4,5 வெளிவரும். 1962-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரையிலும், 1971-ஆம் ஆண்டு முதல் 1973-ஆம் ஆண்டு வரை யிலும் ஒன்பது ஆண்டுகளில் 108 இதழ் களில் 498 கட்டுரைகள் வெளிவந்தன என்றால் எஞ்சியுள்ள ஆண்டுகளுக்குக் கூட்டிப் பார்த்துக் கொள்ளலாம் அல்லவா? 1966–67-ஆம் ஆண்டில் மட்டும் 87 கட்டுரைகள் எழுதியுள்ளார். இந்த 22½ ஆண்டுகளும் ''திருக்கோயில்'' இதழின் பொற்காலம் எனலாம். அவரது கட்டுரை கள் சைவ சமய வரலாற்றில் ''திருக்கோயி லுக்கு'' ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

திருமுறைகள், சைவசித்தாந்தம், கோயில்கள், விழாக்கள் என்று முருகவேள் தொடாத பொருளே இல்லை எனலாம். ஞானசம்பந்தப் பெருமானின் மாலை மாற்றுப் பதிகம் போன்ற கடுமையான பாடல்களுக்கும் விரிவான விளக்கம் தருவார். காந்தி அடிகளையும், அப்பர் அடிகளையும் ஒப்பிடுவார். சங்க இலக்கியம், காவியங்களையும் விட்டுவிட மாட்டார். சேக்கிழாரையும், இளங்கோவடி களையும் இணைத்துப் பேசுவார். தற்கால அறிவியலும் இவருக்கு எளிதில் கைவந்தது. ''திருவாசகத்தில் அறிவியல்'' என்று புதுப்புது விளக்கம் தருவார். ''அப்பர்'' என்ற சொல்லுக்கே ஏழு பொருள்கள் தருவார். ஆங்கிலப் புலமை இருந்ததனால் கீட்சு, ப்ரௌனிங், ஷெல்லி என்று மேற்கோள்கள் காட்டுவார். அந்த ஆங்கில மேற்கோள்களுக்கு அழகிய தமிழ்க் கவிதையாக்கமும் தருவார். சமயவேறுபாடு இல்லாமல் வைணவக் கட்டுரைகளும் எழுதுவார். இவையெல் லாம் தொகுக்கப்பட்டு நூலாக வந்திருந் தால் பெரும் பயன் விளைந்திருக்கும்.

''திருக்கோயில்'' இதழ் மட்டுமல்ல; ''சித்தாந்தம்'' இதழுக்கும் 12 ஆண்டுகள் ஆசிரியராக இருந்து பணியாற்றினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குமரகுருபரன், ஞானசம்பந்தம், செந்தமிழ்ச் செல்வி போன்ற இதழ்களுக்கும் கட்டுரைகளாகக் குவித்துத் தள்ளினார்.

''சிவஞானபோதம் – எளிய உரை'', ''சைவசித்தாந்தம்'', ''காமம் சான்ற ஞானப் பனுவல்'', ''மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்'' ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

சென்னை தருமையாதீன பிரச்சார நிலையத்தில் பல ஆண்டுகளாக திருமுறைகள், சாத்திர வகுப்புகள் நடத்தி வந்தார். சென்னையில் அவர் பேசாத மன்றங்களே இல்லை எனலாம். தமிழகச் சைவத்திரு மடங்கள், திருக்கோயில்கள், சைவமன்றங்கள் இவரை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டன.

சைவ அருளாளர்களைப் பற்றிப் பேசியும், எழுதியும் வந்த முருகவேள் சமகாலத்தில் வாழ்ந்த சைவப் பெரியார்களைப் பற்றியும் பேசிக் கொண்டே இருப்பார். அவரது உரையாடல் முழுமையும் அவர்களைப் பற்றியே இருக்கும். ''தவத்திரு ஞானியார் அடிகள், மறைமலையடிகள், திரு.வி.க. ந.மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்; சச்சிதானந்தம் பிள்ளை, இராமநாதப்பிள்ளை, அழகரடிகள், செங்கல்வராயப் பிள்ளை, திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம், கா.சு. பிள்ளை முதலிய மறைந்த பெரியார்களைப் பற்றி இடையறாது பேசிக் கொண்டிருப்பவர். வேறு பேச்சே இருக்காது.

13.11.76 அன்று மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றக் கூட்டத்திற்கு முருகவேள் அவர்கள் வந்திருந்தார்கள். வழக்கம்போல் அவரது பேச்சு சைவப் பெரியார்களை நோக்கித் திரும்பிவிட்டது. ''இராஜசேகரன்! நால்வர் பெருமக்கள் – நாயன்மார் பற்றிப் பேசுவதோடு நாம் நின்றுவிடக் கூடாது. நம் கண் முன்னால் வாழ்ந்த – வாழ்ந்து கொண்டிருக்கிற சைவப் பெரியார்களைப் பற்றியும் மக்களிடம் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் சைவம் இன்றும் உயிர்ப்புள்ளதாக இருக்கிறது என மக்கள் உணர்வர். நாவலர் ஐயா அவர்கள் தஞ்சை இரயில் நிலையத்தில் இறங்கி கரந்தைத் தமிழ்ச் சங்கம் செல்லும் வரை ''சிவாயாநம'' என்று உச்சரித்துக் கொண்டே செல்வார்கள். என்னுடைய குருநாதர் அவர்கள் (மறைமலையடிகள்) ஆடல் வல்லானை வழிபடவே தனது இல்லத்தில் தனியாக நீண்ட மரத்தாலான மேடை அமைத்து திருநீறு சண்ணித்த மேனியராக கையில் உள்ள மணியை ஒலித்துக் கொண்டே படி ஏறி சிவபூசை செய்யும் காட்சியே காட்சி'' என்று கண்ணீர் மல்கச் சொன்னார்கள்.

''இவையெல்லாம் பதிவு செய்ய வேண்டாமா?'' புதிய தொண்டர் புராணம் படைக்க வேண்டாமா?'' என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார்கள். மெய் சிலிர்த்துப் போன நாங்கள் ''நீங்களே அந்த சைவப் பெரியார்களைப் பற்றி எழுதுங்கள். நாங்கள் வெளியிடுகின்றோம்'' என்று கேட்டுக் கொண்டோம். அவர்களும் இசைந்தார்கள். நம்முடைய தவக்குறை அந்நூல் வெளிவரவில்லை. ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள் போன்ற சைவப் பெரியார்களுடன் பேசிப் பழகிக் கலந்த முருகவேள் அவர்கள் இந்நூலை எழுதியிருந்தால் எப்படி இருந்திருக்கும்? அது முடியாமையினால் 25 ஆண்டுகள் கழித்து ''நாமாவது சற்று முயன்ற பார்க்கலாமே'' என்று பிள்ளை முயற்சியாக இந்நூலைக் கொண்டு வரலானேன். அன்றைக்கு விதைக்கப்பட்ட வித்துதான் இந்த நூல்.

அவரே தொகுத்து இருந்தால் அந்நூலில் அவர் இடம் பெற்றிருக்க மாட்டார். எனவே இப்பெருமகனாரும் அந்த சைவப் பெரியார்கள் பேரவையில் இடம் பெற வேண்டும் என இறைவன் தடுத்தாட் கொண்டானோ என்னவோ?

(பிறப்பு – 17.11.1924; மறைவு – 7.4.1985; பெற்றோர் – இராமசாமி முதலியார் – சிவகாமி அம்மாள்; பிறந்த ஊர் – நந்திபுரம் கிராமம், தாம்பரம் அருகில்)

(துணை நூல்கள் : (1) ந.ரா. முருகவேள் நினைவுமலர், (2) ''திருக்கோயில் இதழ்கள்'' – 1962 முதல் 1973 வரை.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

26
வீரவுணர்ச்சி மிக்க கொங்கு நாட்டில் சமயவுணர்ச்சி ஊட்டிய கயிலை முனிவர் (1924)

கொங்கு நாட்டு ஆலயங்களின் திருப்பணி, திருக்குடமுழுக்கு விழா அனைத்தையும் முன்னின்று நடத்திய வர்கள் – நடத்தி வருபவர்கள் கௌமார மடம் சுந்தர சுவாமிகளும் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளும் ஆவார்கள். இவர்கள் இருவரும் இணைந்து 2000 கோயில்களில் குடமுழுக்கு நிகழ்த்தி யுள்ளார்கள். இவ்விரு மாமுனிவர்களும் கொங்கு நாட்டின் இரு கண்களாய்த் திகழ்பவர்கள். கொங்கு வேளாளர்கள் வீரவுணர்ச்சி மிக்கவர்கள். அவர்களையே உட்கார வைத்து திருக்கோயில்களுக்குத் தொடர்ந்து வருமாறு இவ்விரு முனிவர் களும் செய்துள்ளனர்.

''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்று போற்றும் வண்ணம் நாள் வழிபாடு, அர்ச்சனை, விழாக்கள், திருமணங்கள், திருக்குடமுழுக்கு அனைத்தையும் செந் தமிழில் செய்ய தமிழ்நாடு முழுவதும் பரப்பிய புண்ணிய மும்மூர்த்திகள் தவத்திரு குன்றக்குடி அடிகளார், கௌமார மடம் தவத்திரு சுந்தரசுவாமிகள், பேரூர்மடம் தவத்திரு சாந்தலிங்க சுவாமி கள் ஆகியோர். மும்மூர்த்திகள் சேர்ந்து வரும் காட்சியே காணக் கிடைக்காத ஒன்று.

அவிநாசியில் அடியவர்களே பூவும் நீருமிட்டு வழிபாடு செய்யச் சுந்தர சுவாமிகள் ஏற்பாடு செய்யப் பேரூர் சுவாமிகளும் உடன் இருந்தனர்.

1967-ஆம் ஆண்டில் பேரூராதீனத்தில் அருளாட்சி ஏற்றார்.

பேரூரில் இவர்கள் நடத்திவரும் தமிழ்க் கல்லூரியில் எம்.பில்., ஆய்வேடுகளைப் பார்த்தாலே வியப்பாக இருக்கும். அத்தனையும் சைவ சமயச்சார்புடையவை. ஆண்டுதோறும் ஒரு மாதகாலம் பேரூரில் சைவ சமய வகுப்பு நடத்தி வருகிறார்கள். வெளிநாடுகளுக்கும் சென்று சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்து கிறார்கள். கயிலை யாத்திரை மேற் கொண்ட புண்ணியப் புனிதர் இவர்கள்.

1924-ஆம் ஆண்டில் முதலிபாளையம் சிவமலைக் கவுண்டர் அவர்களுக்கு நான்காவது மகவாய்ப் பிறந்தார்.

அடிகளார் முதலிபாளையத்தில் பிறந்து, கௌமார மடாலயத்தில் கிடந்து, மயிலத் தில் இருந்து, பேரூரில் தவழ்ந்து இன்று உலக மக்களிடையே வளருகிறார்.

(துணை நூல்கள் : ''பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அருளாட்சி வெள்ளி விழா மலர்''; அடிகளார் நேர்காணல்.)

27
சைவத் திருமடத்தில் ஒரு சமத்துவபுரம் (1925)

ஆத்திகர்; அதே சமயம் நாத்திகருக்கு உற்ற நண்பர். சைவசமயத் துறவி – அதே சமயம் பிறசமய எரிவைத் தணித்த அமைதியாளர். திருமடத்துத் தலைவர்; ஆதீனக் குடிமக்களுக்குத் திருமடத்துக் கதவுகளைத் திறந்துவிட்ட எளியவர். பக்தி நெறி பின்பற்றியவர்; அதே சமயம் சக்தி தரும் தொழில் வளம் கண்டவர். அருளியல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெறியாளர்; அதே சமயம் அறிவியல் பரப்புனர். காவி ஆடையினர்; மேலவை உறுப்பினர். மாணிக்க வாசகர் ஞானகுரு; மார்க்ஸ் உலகியல் ஆசிரியர். சமய சீர்திருத்தம் காண வந்தவர்; சமுதாய மாற்றம் கண்டவர்.

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு அற்புதம் தவத்திரு குன்றக்குடி அடிகளார். இது எப்படி அவரால் இயன்றது? அடிகளாரின் ஒவ்வொரு செயலையுமே காவியப் பொருளாகக் கொள்ளலாம். அப்படி ஒரு பணி! இந்த நூற்றாண்டின் சிக்கல்களுக்குச் சைவம் அளித்த பதில் அடிகளார். திருவள்ளுவர், திருமூலர், அப்பர் பெருமான், சேக்கிழார் பெருமான், தாயுமானவர், வள்ளலார், திரு.வி.க. என்று சைவ மரபு புதிய புதிய சிந்தனைகளோடு பழைய மரபுகளை விடாமல் தழைத்து வந்துள்ளது. அந்த மரத்தின் கனியே அடிகளார்.

குன்றக்குடி – இல்லாரும் இல்லை : அவர் என்ன செய்தார்? குன்றக்குடி ....ஒரு வறண்ட பூமி, எங்கும் கட்டாந் தரையான பாலை நிலம். தோண்டினால் கூடத் தண்ணீர் கிடைக்காது. அப்படி ஒரு வறட்சி; அங்கே சிறு சிறு தொழில்களாகப் பல தொழிலகங்கள் தோன்றியுள்ளன. குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை கிடைத்துள்ளது. சாராயக் கடை இல்லை. சினிமா அரங்கு இல்லை. லாட்டரி சீட்டுகள் இல்லை. பள்ளிக்கூடம், மருத்துவமனை, கோயில், பூங்கா, மகளிர் சங்கம் இவையெல்லாம் இருக்கின்றன. தமிழ் நாட்டில் ஏன் இந்தியாவில் ஒரு மாதிரி கிராமமாகவே குன்றக்குடி உள்ளது. 9.9.84 "The Hindu" வில் இச்செய்தியைப் படித்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி "This is what shall I like for all Villages" என்று மகிழ்ந்து கூறியதோடு இதனையே பிற கிராமங்களும் பின்பற்றச் சொல்லி மேல் நடவடிக்கை எடுக்கத் திட்டக் குழுவுக்கு அனுப்பி வைத்தார். திட்டக்குழு குன்றக் குடி வந்து ஆய்வுகள்நடத்தி "குன்றக்குடித் திட்டம்" என்று ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்தது.

கிராம வளர்ச்சித் திட்டம் – ஒரு பொன்னேடு : அது என்ன குன்றக்குடித் திட்டம்? குன்றக்குடி கிராம முன்னேற்றத் திற்காக 2.10.1977-ஆம் ஆண்டில் காரைக் குடி மைய மின்வேதியியல் அறிவியலா ளர்கள் (CECRI) உதவியுடன் "குன்றக்குடி திட்டக் குழுவினை" அடிகளார் தோற்று வித்தார்.

1977 – 82 திட்ட காலத்தில் நெல் உற்பத்தி ஏக்கருக்கு ஒரு டன்னிலிருந்து இரண்டு டன்னாக உயர்த்தப்பட்டது. 325 ஏக்கர் தரிசு நிலம் திருத்தப்பட்டு பழப்பண்ணை உருவாக்கப்பட்டது. இதில் 87 ஏக்கர் நிலம், மா, பலா, கொய்யா மரங்கள் வளர்க்கப் பட்டன. இவற்றிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கிறது. 55 ஏக்கர் நிலத்தில் 8400 புளிய மரங்கள் உள்ளன. இன்னும் 30 ஏக்கர் நிலத்தில் 13000 மரங்களாக இருக்கின்றன. காய்ப்புக்கு வந்து விட்டால் ஆண்டு ஒன்றுக்கு இருபத்தாறு லட்ச ரூபாய் கிடைக்கும். 15 சமூகக் கிணறுகள் தோண்டப்பட்டன. 1976-ஆம் ஆண்டில் தீப்பெட்டி தொழிற்சாலை தொடங்கப் பட்டது.

1982 –87 இரண்டாவது திட்ட காலத்தில் ஒரு மாதிரிப்பட்டுப் பண்ணை உருவாக்கப் பட்டு, நிலமற்ற 100 ஆதி திராவிடக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு தரும் ஒரு கிராமமே (கம்பனூர்) உருவாக்கப் பட்டது. தொடக்கக் காலத்தில் ஆதி திராவிடப் பெருமக்கள் கூலிக்கே வேலை செய்தாலும், உற்பத்தி நிலையில் அவர்களுக்கே ஒரு ஏக்கர் வீதம் குத்தகைக்குக் கொடுத்து மாதம் ஐந்நூறு ரூபாய் வீதம் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டது. முந்திரிப்பருப்பு எடுக்கும் தொழிற்சாலையும், முந்திரி ஓட்டிலிருந்து பெயிண்டு தயாரிக்கும் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளன. தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை, பனைப் பொருள்களைக் கொண்டு கூடை, பெட்டி போன்ற பொருள்கள் செய்யும் ஒரு கைத்தொழிற்கூடம், நேருவின் பெயரில் ஒரு பாலிதீன் பை தொழிற்சாலை ஆகியன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டன. இவையாவும் உள்ளூர் மூலப்பொருள் களைக் கொண்டு செயல்படுவன.

குன்றக்குடியில் இன்று பத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், ஐந்து தொழிற் பயிற்சிக் கூடங்கள், தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன.

மண்ணில் தெரியுது வானம்! : இந்தத் திட்டக்குழுவில் ஆதிதிராவிடர்களும், பெண்களும் இடம் பெற்றுள்ளனர் என்பது தனிச்சிறப்பு. திட்டக்குழு பொருளாதார வளர்ச்சி மட்டுமல்லாது ஊர் நலத் திட்டங்களையும் கண்காணித்து வரு கின்றது. ஒரு கந்து வட்டிக்காரனை ஊரை விட்டே வெளியேற்றிவிட்டனர். அரசு, வங்கிக் கடன்கள் திருப்பித்தரக்கூடாது என்ற மனநிலையை மாற்றிக் கடன் தொகைகள் திரும்பச் செலுத்தப்பட்டன. ஊராட்சி மன்றத் தலைவர் திட்டக் குழுவின் ஒருமித்த கருத்துப்படியே தேர்ந்தெடுக்கப்படுகிறார். தலைவர் தவறு செய்தால் திருத்தப்படுகிறார். சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரம் யாரும் செய்யக்கூடாது. திட்டக்குழுவே மேடை அமைத்து கூட்டச் செலவையும் ஏற்கிறது. 1989-ஆம் ஆண்டில் தமிழக அரசு குன்றக் குடியில் மலிவு மதுக்கடை தொடங்கிய போது அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் தடையாணை பெற்று ஊருக்குள் நுழையா மல் துரத்தியடித்தார்.

அட மண்ணில் தெரியுது வானம்!

குன்றக்குடியின் வளர்ச்சியைக் கண்டு வியந்த "Aside" இதழ் "Miracle at Kundrakudi" என்று cover story (1-15 Dec 1990) வெளியிட்டது, "Something wonderful has happened in Kundrakudi, something so wonderful that one is tempted to call it a miracle except that, that might be rather unfair to the villages who made it all happen and the leader who have them a dream and the means to achieve it. In 1977, something happened that has proved that in this country, where religion has of late increasingly helped only to divide and destroy, it is possible for religion and religious leader to bring people together and motivate them to work for their own prosperity".

தீண்டாமை எதிர்ப்பு : அடிகளாரின் சமுதாய அக்கறை கிராம வளர்ச்சித் திட்டத்தில் மட்டுமல்ல. தீண்டாமையை எதிர்த்துப் போராடியதில் அடிகளாரின் பங்களிப்பு கணிசமானது. அடிகளார் வள்ளலார் போல – விவேகானந்தர் போல – சுதந்திரமான சமயத் தலைவர் அல்ல. ஒரு சைவத் திருமடத்தின் தலைவர். சாத்திர, சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டவர். இருந்தும் 44 ஆண்டுகளுக்கு முன்பே - தாம் ஆதீனத் தலைவரான அன்றே - தாழ்த்தப் பட்ட வகுப்பினர் வாழும் குடியிருப்புக்குச் சென்று அருளாசி வழங்கினார்கள். அடிகளார் பீடமேறியதைப் போற்றி மயிலாடுதுறையில் நடந்த விருந்தில் இரண்டு வகையான இனத்தாருக்குத் தனித்தனி பந்தி அமைத்திருந்தமையால், விருந்தினையே புறக்கணித்தார். திருமடத் தில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பங்கேற்க வைத்தது மட்டுமல்லாமல் அவர்களையே சமைக்கவும் வைத்து அனைவரையும் உண்ணச் செய்தார். யாழ்ப்பாணச் சைவக் கோயில்களில் தாழ்த்தப்பட்டோர் அனு மதிக்கப்படாததினால் கோயிலின் முன்னே உண்ணாவிரதம் இருந்தார். பெரியாரின் சாதி ஒழிப்பு மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார். கருவறைப் போராட்டத்தி லும் கலந்து கொண்டார். பெரியாரின் போராட்டம், எந்த வேறுபாடுமின்றிக் கருவறையில் யாரும் நுழைந்து விடலாம் என்பதாகும். அடிகளாரின் கருவறைப் போராட்டம் சாதி வேறுபாடுகள் அற்றது. ஆனால் கருவறையுள் நுழைபவர்கள் யாவராயினும் – எச்சாதியராயினும் தீட்சை பெற்று, பயிற்சி பெற்று, பக்குவப்பட்டு உள்ளே நுழைய வேண்டும்.

நாத்திக மறுப்பு பிரச்சாரம் : அடிகளார் நாத்திகரோடும் பழகுவார்; பொதுவுடைமை யாளரோடும் குலவுவார்; ஆனால் தம் கருத்திலிருந்து சிறிதும் விலக மாட்டார். இது பலருக்கு விளங்காததினால் புரிந்து கொள்ளாமல் தவறாகப் பேசிவந்தார்கள். பெரியார் – அடிகளார் சந்திப்பும் இப்படித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தான் தவறாகப் பேசப்பட்டது. 1952-ஆம் ஆண்டில் ''பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கை'' உச்சத்தில் இருந்த நேரம். விநாயகர் உடைப்புக் கொள்கையை பெரியார் நிறைவேற்றிக் கொண்டிருந்தார். இதன் வேகத்தைத் தணிக்க எதிர்த்துப் போராட ஆன்றோர்கள் ஒன்று சேர்ந்து அடிகளார் தலைமையில் அருள்நெறித் திருக்கூட்டம் என்ற பேரியக்கம் தொடங்கி னார்கள். இது நாடு தழுவிய இயக்கமாக மாறியது. மேடைகளில் கனல் பறந்தது. ஒருவகையாக வேகம் குறைந்தது.

பெரியார் – அடிகளார் நட்பு : பெரியாரும் அடிகளாரும் சந்தித்துப் பேசினால் நல்லது என்று சில பெரியவர்கள் கருதினார்கள். 1956-ஆம் ஆண்டில் ஈரோட்டில் சந்திப்பு நிகழ்ந்தது. வரலாற்றில் இடம் பெற்ற சந்திப்பு; பெரியார் அவர்கள் எப்பொழுதும் கண்ணியம் காப்பவர்கள். யார் யாரைச் சந்திக்க வருவது? ''மகா சந்நிதானத்தை நானே சந்திக்க வருகிறேன். அதுதான் மரபு'' என்று பெரியார் வந்து விட்டார். ''மகாசந்நிதானத்துடன் ஒரே இருக்கையில் அமருவது மரபன்று'' எனக் கூறித் தனி இருக்கையில் அமர்ந்தார். பேச்சின் இறுதியில் பெரியார் ''எனக்கும் கடவுளுக்கும் என்ன விரோதம்? அவரை நான் பார்த்தது கூட இல்லை. எனக்கு தேவை மனிதனின் மீதுள்ள இழிவு அகற்றப்பட வேண்டும் என்பதே; இந்த இழிவை மாற்ற சமயத் தலைவர்கள் சிலர் முயற்சி செய்தனர். வெற்றி அடையவில்லையே. நீங்கள் வென்றால் சரிதான்'' என்றார். அதன் பிறகு பல கூட்டங்களில் இருவரும் கலந்து கொண்டனர். பெரியார் திருமடத்துக்கு வந்த பொழுது சின்னப் பட்டம் அவருக்குத் திருநீறு பூசினார். பெரியார் ''மகாசந்நிதானத்துக்குத் திருப்தி என்றால் சரி'' என்று ஏற்றுக் கொண்டார். பெரியார் சிலை திறப்பு விழாவில் அடிகளார் கலந்து கொண்டார். சிலைக்கு கீழே ''கடவுள் இல்லை; கடவுளைப் படைத்தவன் முட்டாள்'' என்று இருந்தது. ''அது நீக்கப்பட்டால் தான் கலந்து கொள்வேன்'' என்றார் அடிகளார். ''மகா சந்நிதானம் விரும்பவில்லையென்றால் பொறிக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டார் பெரியார்.

டி.கே.எஸ்.. சகோதரர்களின் ராஜராஜ சோழன் நாடகத்தை பெரியாரும் அடிகளாரும் சேர்ந்து பார்த்து ரசித்தனர். பெரியார் பேசுகையில் ''இவ்வளவு அற்புதமான கலைத்திறன் வௌவால்கள் அடையும் கோயிலைப் பற்றியதாக அமைந்து விட்டதே'' என்று வருந்தினார். அடுத்துப் பேசிய அடிகளார் ''பெரியாரும் பெரியாரைச் சார்ந்தவர்களும் கோயிலுக்குள் வராததால்தான் வௌவால்கள் குடி புகுந்துவிட்டன. பெரியார் திருக்கோயிலுக்குள் வந்து விட்டால் வௌவால்கள் வெளியேறிவிடும்'' என்றார். மக்களிடையே ஒரே மகிழ்ச்சி வெள்ளம்! பெரியாரைப் பற்றி அடிகளார் இவ்வாறு கூறுகிறார். ''நமது சமயத்தில் காலங்கள் தோறும் தோன்றிய மதத்தலைவர்கள், சிந்தனையாளர்கள் கருத்துக்கள் குறிப்பாக எம்பெருமானார், ராமானுஜர், அப்பரடிகள், வள்ளலார் கொள்கைகள் பின்பற்றப் பட்டிருந்தால் பெரியாரின் வரவைத் தவிர்த்திருக்கலாம்'' என்கிறார். ஒரு பேட்டியில் இவ்வாறு கூறுகிறார்.

"Aside" : How did you, the head of a religious order, work so closely with an altheist like periyar?

Adigalar : We did not work together. He did things his way, I mine. Our goal was the same - the removal of social ills. I might have said that untouchability must be learned in the name of god, and he might have said that untouchability came in with god. But both of us wanted untouchability to go.

Aside : What was your opinion of Periyar's atheism?

Adigalar : Periyar was not the kind of altheist that, say a true communist is. He became an altheist in rejecting Hinduism. He himself had an interesting explanation for the word naathigam (atheism). In ancient Tamil literature nathigam (atheism) refers to one who questions the Aryan religion, its scriptures and

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

rules. Periyar used to say that he too was a naathigan in that sense.

My religion (Saiva Siddhantham) does not preach the ills that periyar fought against

பெரியார் – அடிகளார் நட்பு காவியத் தன்மை உடையது. ஒவ்வொரு சந்திப்பும் அனுபவித்து மகிழ வேண்டியது.

மார்க்சிய சிந்தனை : அடிகளார் மார்க்சிய சிந்தனையிலும் நாட்டம் உடையவர். இதில் அவருக்கு வழிகாட்டி திரு.வி.க. ஆவார். சைவசித்தாந்தத்தையும், மார்க்சியத்தையும் ஆய்ந்து ஒத்திசைவு காணவேண்டும் என விரும்பினார் திரு.வி.க. காண முயன்றார் அடிகளார். இறைவன் பிட்டுக்கு மண் சுமந்தது உழைப்பின் உயர்வைக் காட்டவே என்றார். நந்தி உழைப்பின் சின்னமான எருது ஆகும் என்றார். எத்தொழில் செய்தாலும், எச்சாதியில் பிறந்தாலும் இறைவன் முன் சமம் என்பதே பெரிய புராணக் கோட்பாடு என்றார். ''சைவ சித்தாந்தம் கடவுளை நம்புகிறது. மார்க்சியம் கடவுளை நம்ப வில்லை. இஃது ஒரு முக்கியமான வேறுபாடு. மற்றபடி உலகத்தின் தோற்றம், உயிர்களின் நிலை, இந்த உலக வாழ்க்கை, உழைப்பின் சிறப்பு, உழைப்பாளர் தகுதி ஆகியவற்றில் மார்க்சியமும் சைவ சித்தாந்தமும் ஒன்றுபடுகின்றன'' என்கிறார்.

1954-ஆம் ஆண்டிலேயே கே.எம். சுப்பையா மூலம் மார்க்சிய நூல்களைப் படித்தார். 1971-ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் சென்று ''ஏழாம் நூற்றாண்டி லேயே சோசலித்தை ஒத்துக் கொண்டது சைவம்'' என்றார். ஜீவானந்தம், நா. வானமாமலை, சிதம்பரரகுநாதன் ஆகியோ ருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தார். தோழர்கள் எஸ். எ. டாங்கே, ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாட், பி. ராமமூர்த்தி, பி.டி. ரணதிவே திருமடத்துக்கு வந்திருக்கி றார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கியப் பிரிவான கலை இலக்கியப் பெருமன்றத் திற்குத்தான் மறையும் வரை தலைவராக இருந்தார். இதனால் தான் முற்போக்காள ரான பொன்னீலன் ''தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி'' என்று ஒரு நூலே எழுதி யுள்ளார்.

அறிவியல் பணிகள் : அடிகளார் அறி வியலையும் விட்டுவிடவில்லை. அவரது நெருங்கிய நண்பர்களே cecri விஞ்ஞானி கள்தானே! 1986-ஆம் ஆண்டிலிருந்து குன்றக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளின் அறிவியல் கண்காட்சி கள் நடத்த ஏற்பாடு செய்தார். 1995-ஆம் ஆண்டு வரை பதினோரு கண்காட்சிகள் நடத்தியுள்ளார். மாவட்ட அறிவியல் மன்றம் தொடங்கினார். ஒவ்வொரு ஆண்டும் அறிவியல் விழா நடைபெற்றது. பேராசிரியர் வாசுவுடன் இணைந்து சுதேசி அறிவியல் இயக்கம் தொடங்கினார். இதன் சார்பில் ''அறிக அறிவியல்'' என்ற மாத இதழைக் கொண்டு வந்தார். 1987-ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அவரது மறைவு வரை பதினாறு அறிவியல் கருத்தரங்குகள் நடத்தியுள்ளார். 1992-ஆம் ஆண்டில் பல்கலைக் கழகங்கள் ஆய்வு நிறுவனங்களை இணைத்துத் ''தமிழக அறிவியல் பேரவை'' ஒன்று தொடங்கினார். 1995-ஆம் ஆண்டில் அடிகளார் உடல்நிலை மோசமாகியது. இருந்தும் மூன்று நாட்கள் விடாது 12 கண்காட்சிகளையும் சுற்றிப் பார்த்தார். இறுதி மூச்சுவரை உழைப்பு.

தமிழ்த்தொண்டு : அடிகளாரின் தமிழ்த் தொண்டு பற்றி ஒரு நூலே எழுதலாம். 1967-ஆம் ஆண்டில் 63 சமய, தமிழ் அறிஞர்களைக் கொண்டு திருப்புத்தூர் தமிழ்ச் சங்கம் நிறுவி பல ஆய்வுகள் நடத்தி னார். 1954-ஆம் ஆண்டில் பறம்புமலையில் பாரி விழாவைத் தொடங்கினார். 1960-ஆம் ஆண்டு முதல் திருப்பத்தூரில் திருமுறை விழா நடைபெறுகிறது. 1972-ஆம் ஆண்டில் திருக்குறட்பேரவை தொடங்கினார்.

மேடைப் பேச்சு : மேடைப் பேச்சிலே அடிகளாருக்கு ஈடும் இணையும் இல்லை. அப்படி ஒரு வெண்கலக் குரல்! வளமான சிந்தனை! புறம் போகாத பேச்சு! பட்டி மன்றத்தில் இவர் பாணி தனிப்பாணி ஆகும். பட்டிமன்றங்களை நெறி பிறழாமல் காத்து வந்தார். ''பட்டிமன்ற நாயகர்'' என்றே மக்கள் அழைத்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1969-ஆம் ஆண்டு முதல் 1975-ஆம் ஆண்டு வரை தெய்வீகப் பேரவை உச்சக் கட்டத்தில் இருந்த சமயம் ஒரு நாளுக்கு 10 கூட்டங்களில் சொற்பொழிவு ஆற்றினார்.

எழுத்துப்பணி : அடிகளார் ஐம்பதுக்கும் மேலான நூல்கள் எழுதியுள்ளார். 1946-ஆம் ஆண்டில் தருமபுரத்தில் இருக்கும் பொழுதே எழுதத் தொடங்கிவிட்டார். டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் ''பெரிய புராண ஆராய்ச்சி'' என்ற நூலை பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்மறை யாக விமரிசித்து ''திராவிட நாடு'' இதழில் ''அன்பரது ஆராய்ச்சியும் அறை கூவல் களும்'' என்று எழுதியிருந்தார். அன்றைய கந்தசாமித் தம்பிரான் (தருமையா தீனத்துறவுப் பணி நிலையில் பெயர்) மறுப்புரையாக ''தார்மீக இந்து'' என்ற இதழில் தொடர்ந்து எழுதி வந்தார். ''மணி மொழி'' ''தமிழகம்'' என்றெல்லாம் இதழ்கள் நடத்தி வந்தார். ''மக்கள் சிந்தனை'' என்ற தன் இதழில் எழுதிக் கொண்டு வந்தார்.

திருக்குறள் – புதுவிளக்கம் : திருக் குறளுக்குப் புதிய விளக்கம் கொடுத்தார்.

''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகியாங்கு''

(247)

என்ற குறளுக்கு புதுப்பொருள் காண்கி றார். ''இவ்வுலகம் என்பது அண்மைக் கூட்டுக் குடும்பத்தைக் குறிக்கும். பொருள் இருந்தால்தான் குடும்ப வாழ்வு இனிக்கும். அவ்வுலகம் என்பது சேய்மைச் சுட்டு. விலகி சற்று தூரத்தில் இருப்பது – மக்கட் சமுதாயம். பொருள் உடையான் அருள் உணர்ச்சி உடையவனாக – மக்கட் சமுதாயத்திற்குப் பயன்படுபவனாக – இல்லாது போனால் அவ்வுலகம் அவனை நினைத்துப் பார்க்காது'' என விளக்கம் காண்கிறார்.

''அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை''

(37)

மிகவும் சிக்கலான குறள் இது. அடிகளார் விளக்கம் வருமாறு :

''ஒரோவழி அறத்தின் காரணமாகவும் சிவிகை ஊர்தலும் உண்டு. சிவிகை தாங்குதலும் உண்டு. அப்பொழுது சிவிகை ஊர்கிறவர்களும் சிவிகை தாங்குகிறவர் களும் ஒத்த உணர்வினராய் – ஒத்த தகுதி உடையராய் இருப்பர். அங்கு ஒருவருக் கொருவர் பெருமைப்படுத்திக் கொள்ளும் பண்பாட்டின் வழியிலேயே சிவிகை தாங்குதல் நிகழ்கின்றது. அங்குச் சிவிகை தாங்குதலும் அறமேயாகும். இக்காட்சி யைத் திருநாவுக்கரசர் தாங்கியதிலிருந்து உணரலாம்'' என்கிறார்.

புராணக் கதைகள் – உலகியல் விளக்கம் : புராணக் கதைகளுக்குப் புதிய விளக்கங்கள் தருகின்றார். கங்கையைத் தலையில் அணிந்திருத்தல்: ''நீரின் சின்ன மாகிய கங்கையைக் கடவுள் தன் தலை மீது தாங்கினான். அஃதொரு புராணமல்ல; வரலாறல்ல; வாழ்வியல் முறை. தண்ணீ ரின் அருமை தெரிந்து தலைமேற் கொள்க என்பதே தத்துவம்''.

தேவ – அசுரயுத்தங்கள் நன்மைக்கும் தீமைக்கும் ஏற்பட்ட போராட்டங்களே ஆகும் என்கிறார்.

திருவிளையாடற் புராணத்தில் பகலில் பரிகளாய்க் காட்சியளித்த நரிகள் இரவில் நரிகளாயின. பகல் இம்மையையும் இரவு மறுமையையும் குறிக்கும். இம்மையில் இன்பம் போலத் தோன்றுவன மறுமையில் துன்பம் விளைக்கும்'' என்கிறார்.

பொன்னுக்கு மண் சுமக்காமல் பிட்டுக்கு மண் சுமந்தது பொன்பொருள் ஆசைப்படாமல் தொண்டு செய்ய வேண்டும் என்று உணர்த்தவே என்கிறார்.

தமிழ் அர்ச்சனை : திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று 1950-ஆம் ஆண்டில் அடிகளார் இயக்க மாகத் தொடங்கினார். முதலில் மறுத்த முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் பின்னால் அதனை ஏற்று 1962-ஆம் ஆண்டில் மதுரை மீனாட்சி கோயிலில் தொடங்கி வைத்தார். ஆனால் அடிகளார் வடமொழி அர்ச்சனையை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறுக்கவில்லை. ''வடமொழியும் தென்தமிழும் ஆனான் என்று அப்பரடிகளே ஏற்றுள்ளார். மேலும் கடவுள் ஒருவரே. அவரை ஒரு மொழி வட்டத்துக்குள் அடக்கலாகாது'' என்பார் அடிகளார். இதற்கே நாவலர் நெடுஞ் செழியன் ''அகோபில மடத்துக்கு உள்ள துணிவு அடிகளாருக்கு இல்லையே'' என்று அங்கலாய்த்தார். அடிகளாரின் கொள்கைகள் அனைத்திலும் ஒரு தெளிவு உண்டு.

சமயப் பணி : அடிகளாரின் சமயப்பணி பற்றிக் கேட்க வேண்டாம். அதற்காகவே ஆதீனத் தலைவர் ஆனார்கள். அதே சிந்தனையில் மூழ்கியவர்கள்

இப்படி உள்ளவர் எப்படி இருப்பார்?

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் ஆட்சியில் உள்ள ஐந்து திருக்கோயில்களையும் – பிரான்மலை, திருப்பத்தூர், திருக்கோணக்குடி, தேனாட்சியம்மன் திருக்கோயில், குன்றக்குடி முருகன் கோயில் – செம்மையாக நிர்வாகம் செய்ததோடு திருப்பணிகளையும் செய்து முடித்துள்ளார்கள்.

குன்றக்குடியில் ஆண்டுதோறும் திருவாசக விழாவும், திருப்பத்தூரில் ஆண்டுதோறும் திருமுறை விழாவும், குன்றக்குடியில் ஆடிக் கிருத்திகையில் திருப்படி விழாவும், பிரான் மலையில் திருஞானசம்பந்தர் விழாவும் கொண்டாடி வந்தனர்.

மேடைப் பேச்சாலும், தன் நூல்களாலும் சைவ சிந்தனையைப் பரப்பினார்கள்.

மாற்றுக் கருத்துகளுக்கு மறுப்பு : சைவ சமயத்திற்கு எதிரான கருத்துக்களை அவ்வப்பொழுது அடிகளார் மறுத்தும் வந்திருக்கிறார். 1946-ஆம் ஆண்டில் அடிகளார் கந்தசாமித் தம்பிரானாக இருந்த பொழுது அறிஞர் அண்ணா மா.இராச மாணிக்கனாரின் ''பெரியபுராண ஆராய்ச்சி'' என்ற நூலைக் கடுமையாக விமர்சனம் செய்து எழுதியிருந்தார். இந்தக் கட்டுரைக்கு மறுப்பாக ''தார்மீக இந்து'' என்ற இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். அண்ணாவின் அடிப்படைக் கொள்கையாகிய சாதி வேற்றுமை ஒழிப்பு அடிகளாருக்கும் ஏற்புடையதே. அதனை அவர்கள் மறுக்கவில்லை. ஆனால் பெரியபுராணம் சாதிகளைக் காப்பாற்றும் நூல் என்பதை மறுத்தார். ''சேக்கிழார் சாதி வேற்றுமையிலிருந்து சாதிகள் இல்லாத சமுதாயத்தை நோக்கி நகர்த்துகிறார் என்பதைப் பெரிய புராணத்தால் உய்த்துணர முடிகிறது. திருநாளைப் போவார் ஆதிதிராவிடர்; திருக்கோயில் வழிபாட்டுரிமை பெறாத சாதியைச் சேர்ந்தவர். ஆனால் அவர் திருக்கோயில் வழிபாட்டுரிமை கேட்டுப் போராடுகிறார். தொடர்ந்து வளர்க்க வேண்டிய கருத்து. இந்தக் கடமையை சேக்கிழார் செய்துள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கலப்புத் திருமணங்கள் செய்து வைக்கிறார் சிவ பெருமான். வேடர் கண்ணப்பருக்கும் வைதீகச் சிவகோசரியாருக்கும் பூஜையில் ஏற்பட்ட மோதலை விவரித்து, கண்ணப்பர் பூஜையே உயர்ந்தது என்று தீர்ப்பு எழுதுகிறார். சேக்கிழார் காலத்தில் இவ்வளவு தான் செய்ய இயலும்; அன்றைய நிலையில் அதுவே ஒரு பெரிய சமுதாய மாற்றம். அவர் வாழ்ந்த காலம் தலைவர் பெரியார் வாழ்ந்த காலமன்று '' என்று மறுக்கிறார்.

கடவுள் மறுப்புப் போராட்டத்தை எதிர்த்து ஓர் இயக்கம் : *1952-ஆம் ஆண்டில்* பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கை உச்சக்கட்டத்தில் இருந்தது. விநாயகர் சிலை உடைக்கப் போவதாக அறிவித்தும் விட்டார். இதனை எதிர்த்துப் போராட அடிகளார் தலைமையில் அருள்நெறித் திருக்கூட்டம் தொடங்கப் பெற்றது. மாநிலம் தழுவிய இயக்கமாக வளர்ந்தது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சமயம் பரப்புவதற்கு என இயக்க அமைப்பில் தோன்றியது அருள்நெறித் திருக்கூட்டம் என்று அவர்களே கூறியுள்ளார்கள். சா. கணேசன், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், அ.ச. ஞானசம்பந்தன் ஆகியோர் எல்லாம் அடிகளார் தலைமையில் ஊர்கள் தோறும் மேடைகள் அமைத்துப் பிரசாரம் செய்தார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் தி. க. வினர் அடிகளார் மீது கல்லெறிந்து தாக்கினர். தெருமுனைப் பிரச்சாரங்களும், ஊர்வலங்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களுமாக வளர்ந்தன. குடந்தை மகாமகம், மயிலாடு துறை கடைமுழுக்கு என விழாக் காலங்களையும் விட்டுவைக்கவில்லை ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' ''எல்லா உலகமும் ஆனாய் நீயே'', ''எந்நாட்டவர்க்கும் இறைவன்'' என்று மேடைகள் தோறும் அடிகளார் முழங்கி னார். கடவுள் மறுப்புப் போராட்டம் சற்று ஓய்ந்தது.

திருமடத்துத் தலைவர்களை இணைத்தல் : தனித்தனியாக இயங்கி வந்த திருமடத்துத் தலைவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து ஆக்கபூர்வமான சமயப் பணிகளைச் செய்ய அடிகளார் விரும்பினார். பதினைந்து திருமடங்களின் தலைவர்களை இணைத்து அவர்கள் இடம் பெற்ற அமைப்பாக 1966-ஆம் ஆண்டில் ''தமிழ்நாடு தெய்வீகப் பேரவை'' உருவாயிற்று. தமிழகச் சமய வரலாற்றில் இந்த நூற்றாண்டில் நடந்த மாபெரும் சம்பவம் என்கிறார் பொன்னீலன். 21.12.1969-இல் அடிகளார் தலைமை யேற்றபின் பேரவை சமயம் சார்ந்த சமூகப் பேரியக்கமாகப் பரிணமித்தது. அடிகளார் மும்முறை அதன் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அடிகளார் பதவி ஏற்றபோது 16 கிளைகளில் 684 உறுப்பினர் களைக் கொண்ட பேரவை 1976-ஆம் ஆண்டில் அவர் பதவி விடும்போது 2606 கிளைகளில் 92,869 உறுப்பினர்களைக் கொண்ட மாபெரும் சமயப் பேரவையாக வளர்ந்திருந்தது. 115 கோயில்களில் உழவாரப் பணிகள் செய்யப்பட்டன. பேரவையின் சமயப் பரப்புனர்களாக 33 பேர் பணியாற்றினர். சுமார் 10000 பிரதிகள் வீதத்தில் கிட்டத்தட்ட 50 வெளியீடுகள் கொண்டுவரப்பட்டன. ''அருளோசை'' என்ற மாத இதழையும், ''செய்திக் கதிர்'' என்று மாதமிருமுறை இதழையும் பேரவை நடத்திற்று.

உழவாரப் பணி : திருக்கோயில்களில் கல்லும் முள்ளுமாய்ப் புதர்கள் மண்டி வழிபாட்டிற்கு மக்கள் வரமுடியாத நிலையில் இருப்பதைக் கண்ட அடிகளார் மனம் வருந்தினார். ''கோயில்கள் தோறும் உழவாரம்'' என்று ஒரு இயக்கமே தொடங்கிவிட்டார். 1948-ஆம் ஆண்டிலே யே தருமபுரத்தில் கந்தசாமித் தம்பிரானாக இருந்தபொழுதே சீர்காழி திருஞான சம்பந்தர் ஆலயத்தில் உழவாரப் பணி செய்து பொலிவு தந்தார். 1987–ஆம் ஆண்டு முதல் தஞ்சை மாவட்டத்தில் அனைத்துக் கோயில்களிலும் உழவாரப் பணி நடைபெறலாயிற்று. முதலாம் ஆண்டில் 170 கோயில்களில் இப்பணி நிறை வேறியது. பசும்பொன் மாவட்டத்தில் பாடல் பெற்ற தலத்தில் ஒவ்வொரு மாதமும் உழவாரப் பணி செய்து வந்தார்.

நாயன்மார் அடிச்சுவட்டில் : உழவாரப் பணி மட்டுமல்லாது திருவாரூர் கமலா லயத் திருக்குளத் திருப்பணி செய்து முடித்தார்.

பெரியபுராண நாயன்மாரின் தொண்டு களுக்கு அடிகளார் ''நாயன்மார் அடிச் சுவட்டில்'' என்ற நூலில் புதுவிளக்கம் கொடுத்துள்ளார். மதுரை அரவிந்தர் கண் மருத்துவமனையில் புதியக் கட்டிடத்திற்கு அடிகளார் வேண்டுகோளால் ''கண்ணப்பர் கண் மருத்துவப் பகுதி'' என்று பெயரிடப் பட்டது. தண்டியடிகள் வாழ்ந்த திருவாரூரில் திருக்குளம் தூர்வாரும் பணி மேற்கொண்டார். திருஞானசம்பந்தர் அடிச்சுவட்டில் குழந்தைகளுக்குப் பால் வழங்கல், அப்பரடிகள் அடிச்சுவட்டில் உழவாரப் பணி செய்தல் என்று அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருநாளையும் கொண்டாட வேண்டிய புதுமுறைத் திட்டம் தந்துள்ளார்.

உயிரைப் பணயம் வைத்து மதக் கலவரம் அடக்கல் : அடிகளாரின் சமயப் பொறை இன்றைய மதக் கலவரங்களுக்கு நல்ல தீர்வாகும். 1982-ஆம் ஆண்டில் மார்ச் மாதம் குமரி மாவட்டம் மண்டைக்காடு என்ற ஊரில் கிறித்தவர்களுக்கும் இந்துக் களுக்குமிடையே கலவரம் மூண்டது. இருதரப்பிலும் பலர் இறந்தனர். பல இடங்களில் தீ வைப்பு, திருக்கோயில்கள் இடிப்பு, சர்ச்சுகள் இடிப்பு எனப் பரவியது கலவரம். 15.3.82 அன்று அடிகளார் நாகர் கோயில் கிளம்பிவிட்டார். ''போகக் கூடாது. உயிருக்கே ஆபத்து'' எனத் தடுத் தனர். ஏழு நாள்கள் சுற்றிச் சுழன்றார்கள்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

மதத்தைவிட மனிதமே பெரிது என்று இரு தரப்பினரையும் சமாதானம் செய்தார்கள். இந்து தீவிரவாதிகள் எதிர்த்தனர். அடிகளார் உண்ணாவிரதம் இருந்தார்கள். எதிர்ப்பு குறைந்தது. அமைதி திரும்பியது. இதன் விளைவாக அனைத்துச் சமயத் தலைவர் களும் கொண்ட ''திருவருள் பேரவை'' தொடங்கியது. ''அமைதியைக் கொண்டு வர ஆண்டவன் அனுப்பிய தூதர் நம் அடிகளார்'' என்கிறார் பேராயர் ம. ஆரோக்கியசாமி அவர்கள்.

சைவ சமயத்தில் களை எடுத்தார்கள்; பயிர் வளர்த்தார்கள்; அடுத்த வயலில் உள்ள பயிர் அழியாமல் காத்தும் தன் பயிரைக் காத்தார்கள். (அடுத்தவன் பயிர் அழிந்தால் ஆடுமாடு புகுந்து நம் பயிரையும் அழித்துவிடும்)

இவ்வளவு பணிகளுக்கிடையே அவர்கள் ஆட்சியில் இருந்த திருமடத்து நிர்வாகம் என்ன ஆயிற்று என்ற கேள்வி எழலாம். இவர்கள் காலத்தில் தான் நிர்வாகம் வலுப்பெற்றது எனலாம். பல குத்தகை நிலங்கள் நேரடி நிர்வாகத்திற்கு வந்தன. குறிப்பிட்ட சேவைக்கு மட்டும் பணிபுரிந்த பணியாளர்களை உயர் பதவிகளில் அமர்த்தினார். திருமடத்தின் கதவுகள் திறந்துவிடப்பட்டன. அனைத்து இன மக்களும் எளிதாக மகா சந்நிதானத் தைத் தரிசிக்க முடிந்தது.

அடிகளார் மனிதமாக வாழ்ந்தார்; மனிதமே சைவம் என்று கண்டார். இதனால்தான் அவர்கள் இறைவனடி சேர்ந்தாரென்று ஊரே அழுதது; நாடே அழுதது. தமிழகத்தில் உள்ள அனைத்து நாளேடுகளும், இதழ்களும் முதன் முதலாக சைவசமயத் தலைவர் ஒருவருக்கு பக்கம் பக்கமாக அஞ்சலி செலுத்தியது.

அவர்கள் வாழ்ந்த நாளிலும் ஏடுகளும், இதழ்களும் கட்டுரைகளும், பேட்டிகளும் வெளியிட்டன. "Aside" இதழ் 16 பக்கத்தில் (Cover story) வெளியிட்டது. ஆனந்த விகடன் அடிகளார் வாழ்க்கை வரலாற்றை தொடராகக் கொணர்ந்தது. தினமணி மூன்று நாள்கள் தொடர்ந்து பேட்டி வெளியிட்டது. தமிழக அரசு மேலவை உறுப்பினராக்கியது. தமிழக அரசின் உதவியுடன் ஒரு மணிமண்டபமே இன்று எழும்பியுள்ளது.

''அடிகளார் – திரும்பி வந்த திருவள்ளு வர்; இருபதாம் நூற்றாண்டின் திருநாவுக் கரசர்; காவி கட்டிய கார்ல் மார்க்ஸ்; ராமநாதபுரத்துப் போப்பாண்டவர்'' சுகி. சிவம்.

(தோற்றம் – 11.7.1925; தோன்றிய ஊர் மயிலாடுதுறை வட்டம் நடுத்திட்டு; பெற்றோர் – சீனிவாசப்பிள்ளை, சொர்ணத் தாச்சி; பிள்ளைத் திருநாமம் – அரங்கநாதன் 26.7.1945 – தருமையில் காவி பெற்றது; 16.6.1952 குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் 45-ஆவது குருமூர்த்தியாக ஞானபீடம் ஏறுதல்; 15.4.1995 – பரிபூரணம்)

துணை நூல்கள்

1) ''மண்ணும் மனிதர்களும்'' – அடிகளார்;

2) ''அடிகளார் ஓர் உறவுப் பாலம்'' – டாக்டர் மி. நோயல்;

3) ''தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி'' – பொன்னீலன்;

4) ''அருள்நெறித் தந்தை அடிகளார்'' – பா. சுந்தர்.

5) அடிகளார் முதலாம் ஆண்டு குருபூசைமலர்.

6) Aside 1.15 டிசம்பர் 1990

7) தினமணி 1994 செப்டம்பர் 7, 8, 9;

8) 17.4.95 தினமணி The Hindu, Indian Express வார, மாத, இதழ்கள்.

28

சொக்க நாதனை நாளும் பிரியாத தருமை நாயகி ...1926

1971... தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ 26-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் தருமையாதீன அருட் பீடத்தில் அமர்ந் தருளிய ஆண்டு. எங்கும் உற்சாகம் பரவியிருந்தது. ''மகாசந்நிதானம் அவர்கள் சென்னைக்கு எழுந்தருள வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சென்னையில் அருள்மழை பொழிய வேண்டும்'' என்று திருமதி சௌந்தரா கைலாசம், அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் உள்ளிட்ட பல அன்பர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். சந்நிதானமவர்களின் திருவுளச் சம்மதம் கிடைக்கவில்லை.

1986... மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் தருமையாதீனம் சார்பில் நடைபெற உள்ள இரண்டாவது அனைத்துலகச் சைவசித்தாந்தக் கருத்தரங்கு... அமைச்சர் டத்தோ சாமிவேலு, சிவபூஷணம் கந்தையா, பேரம்பலம், இரா. தண்டாயுதம் போன்றோர் ''மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அருளாசி வழங்கியருள வேண்டும். விமானச் செலவு உட்பட அனைத்துச் செலவுகளையும் நாங்களே ஏற்று அரச மரியாதை செய்கிறோம்.'' என்றெல்லாம் மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். திருவுளம் பற்றவில்லை.

1991-ஆம் ஆண்டில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின் மணிவிழா. அம்மணி விழாவின் போது திருப்பனந்தாளுக்கு எழுந்தருளி அருளாசி வழங்கத் திருவுள்ளம் கொண்டார்கள். எனினும் அவர்கள் எங்கும் தான் இரவு தங்குவதில்லையே! என் செய்வது? அவர்களே ஒரு திட்டம் வகுத்தார்கள். தாம் நித்தம் வழிபடும் சொக்கநாதரைத் தலை மேற்கொண்டு பாதயாத்திரையாகவே திருப்பனந்தாளுக்கு எழுந்தருளலாம் என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். தருமையிலிருந்து மாயூரம் வரை மணிவிழா நாயகரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களே தமது திருமுடியில் சொக்கநாதரை எழுந்தருளுவித்துக் கொண்டு வந்தார்கள். சொக்கநாதருக்குச் செய்துவரும் நாள் வழிபாடு தடைப்பட்டு விடுமே என்று தான் இந்த தயக்கம் – பட்டணத்துச் சுவாமிகள் என்று தம்பிரானாக இருந்த காலத்தில் சுமார் இருபது ஆண்டுகள் சென்னையில் இருந்து தம் அன்பாலும், சொல்வன்மையாலும் திருமுறைப் பற்றாலும் சென்னையையே ஈர்த்து ஆட்கொண்டிருந்தார்கள். இருந்தும் சென்னைக்கு எழுந்தருளத் திருவுள்ளம் பற்றவில்லை.

அடுத்து அவர்கள் விருப்பப்பட்டுத் தொடங்கிய அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் இரண்டாவது (கோலாலம்பூர்) கருத்தரங்கத்தில் குருமூர்த்திகள் அருளாசி வழங்கியிருப்பின் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்! அவர்களது நாட்டமெல்லாம் சொக்கநாதர் வழிபாட்டில்தான். ஒருநாள் கூட வழிபாட்டை விட்டதில்லை. ஒருமுறை சுவாமிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை. மருத்துவமனையையே வழிபாட்டு அறையாக்கி சொக்கநாதரை எழுந்தருளப் பண்ணி பூஜையை நிறுத்தாது சுவாமிகள் நிகழ்த்தினார்கள். சொக்கநாதர் மேல் அப்படி ஒரு பக்தி! ''கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' எனக் குறிப்பார் சேக்கிழார். ஆம். கூடும் அன்பினில் கும்பிடல் தான் எங்கள் குருநாதரின் ஆன்மதாகம். அந்தத் தாகம் அடங்கவே அடங்காது. நாளும் கூடுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1991-ஆம் ஆண்டில் பாதயாத்திரையில் சொக்கநாதரை எழுந்தருளுவித்துக் கொண்டு திருப்பனந்தாள் சென்றபொழுது, வழிநெடுக பக்தி பரவசம்தான்; மக்கள் எழுச்சிதான். பக்தி வெள்ளம் பிரவாகம் எடுத்து ஓடியது. படித்தவர், பாமரர் என்ற பேதமில்லாது மக்கள் இந்த அருட் காட்சியைத் தரிசித்துப் பயன் பெற்றனர். இப்பாதயாத்திரை ஒவ்வொரு குடநீராட்டு விழாவிலும் தொடர்ந்தது. சீர்காழி, திருக்கடவூர், திருக்குவளை என்று திருக் கோயில்கள் குடநீராட்டுவிழா நிகழ்ந்த பொழுது குருமூர்த்திகள் சொக்கநாதரைத் தம்பிரான் சுவாமிகள் வழி எழுந்தருளப் பண்ணி பாதயாத்திரை மூலம் அந்தந்த திருக்கோயில்களுக்கும் எழுந்தருளு வார்கள். ஒவ்வொரு கோயிலுக்கும் செல்ல 20 நாள்கள், 30 நாள்கள் என நீளும். ஆங்காங்கு கிராமம், சிற்றூர் என்று குருமூர்த்திகள் பக்தர்களுக்குத் தரிசனம், அருளுரை என்று மயிலாடுதுறை, சீர்காழி, திருவாரூர் பகுதிகளில் ஒரு பெரும் சைவ எழுச்சியே நிகழ்ந்தது.

தருமையாதீனத் திருக்கோயில்களின் குடநீராட்டுவிழாக்கள் எல்லாம் ஒவ்வொன்றும் ஒரு வரலாற்று நிகழ்வு தான்! ஒவ்வொன்றும் பெரும் பெரும் நிகழ்வுகள் தான். சீர்காழி வைத்தீசுவரன் கோயில், திருக்கடவூர் ஆதீனக் கோயில்கள் – இவற்றின் திருப்பணி, குடநீராட்டு விழா என்றாலே கோடிக்கணக்கில் செலவாகும். அதோடு நிற்காது அந்தந்த கோயில் களுக்குத் தேவையான முன் மண்டபங்கள், சுற்றுச் சுவர்கள், நந்தவனங்கள் என்று புதிதாக எடுப்பித்து இன்னும் நூறு ஆண்டு களுக்கு எந்தவிதப் பாதிப்பும் தேவையும் இல்லாமல் செய்திருக்கிறார்கள்.

ஆதீனக் கோயில்களோடு சுவாமிகளின் திருப்பார்வை நின்று விடவில்லை. பாடல் பெற்ற தலங்கள், மயிலாடு துறையைச் சுற்றியுள்ள சிறுதெய்வக் கோயில்கள் என்று தக்கவர்கள் வந்து கேட்டால் ராஜ கோபுரமா, சுவாமி சன்னதியா, அம்மன் சன்னதியா, யாகசாலை பூஜையா - சுவாமி கள் வாரி வழங்குவதோடு ஆகம நெறிப் படி செய்யவும் அறிவுறுத்துவார்கள்.

குருமூர்த்திகள் அருளாணையின் வண்ணம் நடக்கும் எந்தப் பணியாயினும் அது முழுமையாக – பெருநிகழ்ச்சியாக இருக்கும். பன்னிரு திருமுறை (மூலமும் உரையும்) வெளியீடும் அப்படித்தான் நிகழ்ந்தது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே வெளியிட பலரும் விரும்பினர். நன்கொடை வழங்கியவர்கள் நூல் குறித்த காலத்தில் வரவில்லையே என்று வருந்தினார்கள். குருமூர்த்திகள் இவற்றையெல்லாம் பொருட்படுத்த வேயில்லை. வெளியீடு முழுமையானதாக இருக்கவேண்டும். உரையே வராத திரு முறைகளுக்குப் புத்துரைகள்; குறிப்புரை மட்டுமே உள்ள திருமுறை களுக்கு விளக்க உரை, பொழிப்புரைகள் என திருமுறை களில் துறை போயவர் களைக் கொண்டு எழுதச் செய்தார்கள். குருமூர்த்திகளின் ஆய்வு முன்னுரைகள் ஒவ்வொன்றும் ஒரு Ph.d ஆய்வாகும். இந்த ஆய்வுகளும் முழுமையாக இருக்க வேண்டுமே என்று திருமுறைகளை முற்றும் உணர்ந்தவர்களாக இருந்தாலும் மீண்டும் பலமுறை படித்துப் பன்னிரு திருமுறைகளுக்கும் ஆய்வுரைகள் வழங்கி உள்ளார்கள். இதனாலும் நூல் வெளியீடு கால தாமதமாயிற்று. நூல் முழுமையாக இருக்கவேண்டும். 12 திருமுறைகள்; 16 பகுதிகள்; 17000க்கும் கூடுதலான பக்கங்கள். இதுதான் பன்னிரு திருமுறை வெளியீடு; இருபதாம் நூற் றாண்டில் சைவசமய சாதனையின் குறியீடு.

சைவ சித்தாந்த மாலைநேரப் பயிற்சி வகுப்பின் செயல்பாட்டிலும் இதே முழுமைதான். இந்தக் காலத்தில் சைவ சித்தாந்தம் கேட்க வருபவர்களே அரிது. அதிலும் வாரத்தில் 4 மணி நேரம் உட்கார்ந்து படிப்பது என்றால் இன்னும் சிரமம். இதுபோல 4 ஆண்டுகள் தொடர்ந்து பாடம் கேட்டு ஒவ்வோ ராண்டும் தேர்வு எழுத வேண்டும். 40, 50 வயதைத் தாண்டியவர்கள் – பள்ளிப் படிப்பையே மறந்து 20 ஆண்டுக் காலம் ஆன நிலையில் – உட்கார்ந்து தேர்வுக்குத் தயார் செய்வது, எழுதுவது என்றால் அவ்வளவு எளிதா என்ன?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரி. பாடத்திட்டமாவது பதினான்கு சாத்திரங்கள், திருமுறைகள் என்று இருந்தாலும் ஓரளவு சமாளித்து விடலாம். 14 சாத்திரங்கள், திருமுறைகள், சைவ சமய வரலாறு, அறுவகைச் சமயம். இதற்கு அப்புறம்தான் சிக்கலே. மூன்றாம் ஆண்டில் சிவஞானமுனிவரின் சிவஞான போத சிற்றுரை. நான்காமாண்டில் முனிவரின் மாபாடியம் என்ற பேருரை. மாபாடியம் படிப்பது என்றால் அதற்கு ஒரு வாழ்நாள் போதாது. ஓராண்டில் படிப்பது என்றால் எங்ஙனம் இயலும்? அன்றைய காலகட்டத்தில் நூலும் அச்சில் இல்லை. ''சித்தாந்த கலாநிதி பட்டம் என்றால் சும்மாவா?'' படித்தோம். பட்டமும் வாங்கினோம் என்பது வேறு கதை. குருமூர்த்திகளின் முழுமை நாட்டம் தான் இங்கு கருதத்தக்கது. இம்மாலை நேரக் கல்லூரி மயிலாடுதுறை, திருச்சி, சிதம் பரம், மதுரை, சென்னை, காரைக்கால், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றது.

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் என்பது குருமூர்த்திகளின் மற்றுமொரு முழுமையின் வெளிப்பாடு. ''தமிழ்நாட்டுச் சாத்திரங்கள் வெளிநாட்டில் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்றான் பாரதி. இருபதுலட்ச ரூபாயை மூலதனமாக வைத்துத் தொடங்கப் பெற்றது. 1984-இல் முதல் மாநாடு தருமையில் நடைபெற்றது. வெளிநாடுக ளிருந்தெல்லாம் வந்து சுமார் 100 பேராளர்கள் கலந்து கொண்டனர். ஐந்து நட்சத்திர ஹோட்டல் வசதியே இல்லாத அன்றைய மாயூரத்தில் அப்படி ஒரு கருத்தரங்கு நடத்தி, மூன்று நாள்களும் அறுசுவை விருந்து படைத்தது பெரும் சாதனையாகும். அடுத்த மாநாடுகள் 1986-ஆம் ஆண்டில் கோலாலம்பூரிலும் தொடர்ந்து காசியிலும் நடைபெற்றன. இந்நிறுவனத்தின் சார்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நல்லநூல்கள் வெளியிடப் பட்டன. தருமையிலும் பல கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இல்லங்கள் தோறும் திருமுறைகள் பரவவேண்டும் என்று முற்றோதல் நிகழ்ச்சிகளைக் குருமூர்த்திகள் அறிமுகப் படுத்தினார்கள்.

குருமூர்த்திகள் பீடம் ஏறிய பிறகுதான் இவ்வாறு சமயப் பணிகள் செய்தார்கள் என்றில்லை. சென்னையில் தம்பிரான் சுவாமிகளாக இருந்தபோதும் சமயப் பிரசாரம் செய்து வந்தார்கள். சுவாமிகள் சென்னையில் இருந்தபொழுது திருநாவுக் கரசர் அவதரித்த திருவாமூரில் திருநாவுக் கரசர் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டியது மாபெரும் புண்ணியச் செய லாகும். 1963-ஆம் ஆண்டில் திருப்பணி முடிந்து குடநீராட்டு விழா நடத்தியதோடு ஆண்டுதோறும் திருவாமூரில் திருநாவுக் கரசு நாயனார்க்குக் குருபூஜைப் பெரு விழாவும், திருமுறை மாநாடும், ஓதுவார் களுக்குப் பொற்கிழி வழங்குதலுமாக இன்றுவரை நடைபெற்று வருகின்றது.

அப்பர் பால் சுவாமிகள் கொண்ட பக்தி இத்தோடு நிற்கவில்லை. 1968-ஆம் ஆண்டில் குருபூஜை விழாவிற்காகச் சென்னையிலிருந்து 81 கார்களில் 81 அன்பர்கள் திருவாமூர் சென்று கலந்து கொண்டார்கள். 1969-ஆம் ஆண்டில் சென்னை - திருவாமூர் பாதயாத்திரை செய்தார்கள்.

புதியபணிகளே முழுமையும் செம்மையு மாக இருக்கும்பொழுது ஆதீனத்தின் நிரந்தரப் பணிகளான 27 கோயில்களை நிர்வகித்தல், வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை, ஞானசம்பந்தம் திங்களிதழ், ஆதீன வெளியீடுகள், உயர்நிலைப்பள்ளி, பல்கலைக்கல்லூரி, மெட்ரிகுலேஷன் பள்ளி ஆகியவற்றின் முழுமைக்கும் செம்மைக்கும் கேட்கவா வேண்டும்?

இந்த அளவுக்குக் குருமூர்த்திகளுக்குத் திருமுறைகளிலும், சாத்திரங்களிலும், சைவத்திலும், ஊற்றம் விளைந்ததற்குக் காரணம்; அவர்கள் இளவயதிலேயே விருத்தாசலம் தேவாரப் பாடசாலையில் முறையாகப் பண்ணோடு பாடக் கற்றுக் கொண்டவர்கள். தருமபுரம் கலைக் கல்லூரியில் பயின்று, தமிழ்வித்வான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பட்டம் பெற்றவர்கள். திருமடத்தில் நிகழ்ந்த சைவசித்தாந்த பயிற்சி வகுப்புகளில் பங்கு பெற்றவர்கள்.

குருமூர்த்திகள் ஒழுக்கசீலர்; சிவபூஜா துரந்தரர்; திருமுறைக் களஞ்சியம், சித்தாந்தக் கருவூலம்; நடமாடும் தெய்வம்!

தோற்றம் – 21.4.1926

பெற்றோர் – கந்தசாமி பிள்ளை, கலியாணி அம்மாள்.

தலம் – சிறுகாட்டூர், தென்னார்க்காடு மாவட்டம் (கடம்பூர் கோயிலுக்கு அருகில்)

(துணைநூல் : ''சைவ ஆதீனங்கள்'' – தவத்திரு ஊரன் அடிகள்.)

29

அமெரிக்காவில் சிவம் பரப்பிய அற்புத முனிவர் (1927)

1927-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் கலிபோர்னியாவில் குருசுப்பிரமணியர் பிறந்தார். 1947-ஆம் ஆண்டில் இலங்கையில் யோகசுவாமிகளின் அருளால் சைவ சித்தாந்தம் பரப்ப முன் வந்தார்.

இன்று ஹவாய்த் தீவுகளில் ஒன்றான கௌவை என்ற தீவில் 45 ஏக்கர் பரப்புள்ள நிலம் வாங்கி சைவசித்தாந்தத் திருமடத்தை நிறுவியிருக்கிறார். அங்கேயே சைவ சித்தாந்தத்தை முறையாகப் பயிற்றுவிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றும் நிறுவியுள்ளார். வழிபடுவதற்காக சிவன்கோயில் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இத்திருமடத்தின் கிளைகள் சான்பிரான்சிகோ, நெவாடா, நியூயார்க், இலங்கை ஆகிய இடங்களில் உள்ளன.

சைவ சித்தாந்த சாத்திரங்களையும் குறிப்பாகத் திருமந்திரத்தையும் பரப்பி வருகிறார். பல அமெரிக்கர்களுக்குச் சைவப் பெயர் சூட்டியுள்ளார்.

"The New Saivite World" "Siva Neri" என இரண்டு ஆங்கில இதழ்கள் திருமடத்திலிருந்து வெளி வருகின்றன.

அமெரிக்காவில் சிவம் பரப்பும் அற்புத முனிவர் இவர்.

தோற்றம் – 1927; மறைவு – 2001)

30

தமிழ்த்துறையில் பட்டம் பெற்ற தத்துவத் துறைக் காவலர் (1929)



மார்கழித் திங்கள் ......சென்னையில் இசை வெள்ளம் கரை புரண்டு ஓடும் மாதம் ....மியூசிக் அகாடமி மினி ஹால் ....காலை 7.00 மணி. கூட்டம் அலை மோதுகிறது. நிரம்பி வழிகிறது. காலையிலேயே என்ன கச்சேரியா? என்ற திகைப்பு. வை. இரத்தினசபாபதியவர்களின் திருவாசகச் சொற்பொழிவு. நடத்துபவர்கள் இராமலிங்கர் பணிமன்றத்தார். இது ஆண்டு தோறும் நடக்கும் நிகழ்ச்சி. மியூசிக் அகாடமி மட்டுமல்ல. டிசம்பர் முதல் வாரத்தில் நாரத கானசபா, மார்ச் மாதத்தில் ராணி சீதை மன்றம், அக்டோபரில் ஏ.வி.எம். ராஜேசுவரி திருமண மண்டபம்.

இராமலிங்கர் பணி மன்றம் மட்டுமன்று, சென்னையில் சைவசித்தாந்தப் பெருமன்றத்திலும் வாரம் ஏதேனும் ஒரு சாத்திரப் பொழிவு. சென்னையின் நட்சத்திரப் பேச்சாளர் (Star Speaker) வை. இரத்தினசபாபதி அவர்களே. சென்னை தருமபுரம் மடாலய பிரச்சார நிலையத்தில் ஏழு ஆண்டுகள் சிவஞான போதம்; மூன்று

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

ஆண்டுகள் திருமந்திரம்; சைதாப்பேட்டை காரணீஸ்வரர் திருக்கோயிலில் ''திருவருட் பயன்'' ''ஒழிவில் ஒடுக்கம்''; தண்டையார் பேட்டையில் பெரிய புராணம்; வண்ணையம் பதியில் திருமந்திரம்; கோட்டூர்புரம் கார்டன்ஸில் திருமந்திரம்; இப்படி தொடர்கிறது பேராசிரியர் பணி. பேராசிரியர் அவர்கள் திருச்சியில் தோற்றுவித்த 'வாகீச பக்த ஜன சபையில், 1956-ஆம் ஆண்டு முதல் 1981-ஆம் ஆண்டு வரை மார்கழி மாதம் முழுமையும் திருவெம்பாவை, திருமுறைகள், சாத்திரங் கள் பற்றி உரையாற்றினார்கள். சென்னை முருக நிலையம் அடியார் திருக்கூட்டத்தில் 1986-ஆம் ஆண்டு முதல் 1993-ஆம் ஆண்டு வரை மார்கழித் திங்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

வை. இரத்தினசபாபதியவர்கள் எழுதிய நூல்கள்;

1) ''வீரசைவம்'' பக்கங்கள் 410; ஆண்டு (1977)
2) ''திருமுறைத் தெளிவே சைவ சித்தாந்தம்'' (1979)
3) ''திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு'' (முதற் பகுதி –பக்கங்கள் 248 – 1981)
4) ''திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு'' (இரண்டாம் பகுதி – பக்கங்கள் 247 – 1982)
5) "Perspectives in Veera Saivism from Tamil Sources" (பக்கங்கள் 45 – 1982);
6) ''திருநாவுக்கரசர் – ஓர் ஆய்வு'' (முதற் பகுதி – பக்கங்கள் 170 – 1984);
7) ''திருநாவுக்கரசர் – ஓர் ஆய்வு'' (இரண்டாம் பகுதி – பக்கங்கள் 256 – 1985)
8) ''சுந்தரர் – ஓர் ஆய்வு'' (பக்கங்கள் – 149 – 1986)
9) ''சிவஞான முனிவர் நோக்கில் சைவ சித்தாந்தம்'' (பக்கங்கள் – 84 – 1986)
10) ''திருமுறைப் பெருமை'' (1991)
11) ''பக்தி நெறி''
12) ''சேக்கிழார் செந்நெறி'' (100 பக்கங்கள்)
13) கந்தர் கலிவெண்பா உரை
14) கந்தரனுபூதி உரை
15) நால்வர் நான்மணி மாலை உரை
16) தமிழக வாழ்வியல் சிந்தனை
17) ''மெய்கண்ட சாத்திரங்கள்'' – பல்கலைக் கழகப் பதிப்பு.

9.6.1929-ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர்க்குத் தெற்கே புதுவண்டிப் பாளையம் என்ற ஊரில் ச. வைத்திய லிங்கம் – அமுதாம்பாள் அம்மையாருக்குப் பிறந்தார். தமிழ்த் துறையில் முனைவர் பட்டம் பெற்ற வை. இரத்தினசபாபதி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறையில் செம்மையாகப் பணியாற்றினார்கள்.

துணை நூல் : ''வை. இரத்தினசபாபதி வாழ்க்கை வரலாறு''

31

திருமந்திர செம்பதிப்பு தந்த அண்ணாமலையார் (1929)

திருமுறைகளில் திருமந்திரம் சற்றுக் கடினமான நூல். எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஒன்று. அத்தகைய பெருநூலுக்குச் செம்பதிப்பு கொண்டு வந்திருக்கிறார் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள்.

பதினாறு பதிப்புகள், 15 சுவடிகள் ஆகியவற்றை ஆய்ந்து, பாடவேறுபாடு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கண்டறிந்து, சரியான பாடம் என்று கருதத்தக்கதை மூல பாடமாகத் தந்திருக்கிறார். இதில் 152 பாடல்களை இடைச் செருகல் என்று விட்டு விடுகின்றார். இடைச் செருகலுக்கான காரணங்கள் இருபத்தொன்றினை வகைப்படுத்துகிறார்.

''தமிழ்ப்பெரு நூலொன்று, இத்தகைய அறிவியல் சார்ந்த மூலபாட ஆய்வியல் முறைப்படியும், மீட்டுருவாக்க நெறிப் படியும் முதன் முதலாகச் செவ்விய திருந்திய – தெளிவான வடிவம் பெற்றுள் ளது'' என்று பாராட்டுகிறார் தமிழண்ணல். மேலும் அவர் ''தமிழ்ப் பதிப்பு வரலாற் றில் சாமிநாதய்யர் பரம்பரை இன்றும் இருக்கிறது'' என்று போற்றுகிறார்.

டாக்டர் அண்ணாமலை எழுதிய பிற நூல்கள்: உருவும், உணர்வும், பண்சுமந்த பாடல், கல்லும் கனியாகும், மக்களை எட்டிய மறைத் தமிழ், பன்னிரண்டாம் திருமுறை – ஓர் ஆய்வு.

1929-ஆம் ஆண்டில் தேவகோட்டையில் மு.ஆ. சுப்பிரமணியம் செட்டியார் – சீதையம்மாளுக்கு மகவாய்ப் பிறந்தார். மதுரை தியாகராயா கல்லூரி முதல்வராகப் பணியேற்றார்.

(துணை நூல்கள் : ''திருமந்திரம் – மூன்று பகுதிகள்''; டாக்டர். சுப. அண்ணா மலை; ''நனிபுகழ் நகரத்தார்'')

32
கொங்கு நாட்டில் அருளாட்சி புரிந்த துறவரசர் (1929)

1964-ஆம் ஆண்டு முதல் 1994-ஆம் ஆண்டு வரை உள்ளிட்ட முப்பது ஆண்டுக் காலம் கொங்கு நாட்டையே ஈர்த்துத் தம் அருளாட்சியில் ஆண்டு வந்தார்கள் தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்கள். அரசியல்வாதிகள், பெரும் செல்வர்கள். வறியவர்கள் எனப் பல திறத்தாரும் இவரது சொல்லுக்குக் கட்டுப்பட்டு நின்றனர். தன் மந்திரச் சொல்லால் – அருளாணையால் – கொங்கு நாட்டில் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள்



செய்து திருக்குட நீராட்டு விழாக்களையும் சுவாமிகள் நிகழ்த்தியிருக்கின்றார்கள். கௌமார மடாலயத்தில் உள்ள திருக் கோயில்கள் 3, 4 முறை திருக்குடநீராட்டு விழாக்கள் கண்டிருக்கின்றன. இவை யல்லாமல் சுவாமிகள் முயற்சியால் அவிநாசி, திருப்பெருந்துறை, திருஉத்தர கோசமங்கை, திருச்செங்கோடு, திரு வெஞ்சமாகூடல், திருவாமாத்தூர், பேரூர் திருக்கோயில்களும் அரசு அறநிலையத் துறை உதவியுடன் குடநீராட்டு விழாக்கள் செய்யப் பெற்றன.

சுவாமிகள் பெரிய புராண விரிவுரை நடத்தும் பொழுது கேட்டு மகிழாத செவியென்ன செவியோ? அப்படி சுவை பட உரையாற்றுவார்கள்!

திருமடத்தின் சார்பில் ''அமுதம்'' என்ற திங்கள் இதழை வெளியிட்டு வந்தார்கள்.

26.11.1929-அன்று கோவை சின்ன வேடம்பட்டி சிரவணபுரத்தில் தோன்றிய சுவாமிகள், 9.2.1964 அன்று சிரவை ஆதீனம் கௌமார மடத்தின் (சிரவணபுரத்தில் உள்ளது) மூன்றாவது ஆதீனமாகப் பட்டம் ஏற்றார்கள்.

14.6.1994; அன்று பேரடக்கம் ஆனார்கள்.

(1929 – 1994; சிரவணபுரம், கோவை மாவட்டம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

33

இனிய பேச்சால், எளிய உரையால் சைவசித்தாந்தம் பரப்பி வருபவர் (1930)

சைவசித்தாந்த மாலை நேரக் கல்லூரி – இறுதியாண்டு – சிவஞான மாபாடியம் ஓராண்டு படிக்க வேண்டும் – நூலும் அப்பொழுது கிடைக்காத நிலை. வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தோம். பேராசிரியர் சுந்தரமூர்த்தி அவர்கள் பாடம் எடுக்க வந்தார்கள். நகைச் சுவையும், திரைச் சுவையும் குமிழியிட்டு வந்தது. ''நாம் செய்த வினைதான் நம்மைப் பற்றும்'' என்று கூறிவிட்டு ''இது யாரு வச்ச மை? நீ வைச்ச மை'' என்ற திரைப் படப் பாடலைப் பாடிக் காட்டினார். அனைவரும் சிரித்து விட்டோம். இப்படி ஓர் ஆண்டுக் காலம் போனதே தெரிய வில்லை. ''சித்தாந்தக் கலாநிதி'' பட்டத்தோடு வெளிவந்தோம்.

சிவஞான பாடியத்தையே ஊதித்தள்ளிய பேராசிரியர் சாத்திரங்கள் நடத்துவதில் கேட்கவா வேண்டும்? அதே எளிமை! அதே இனிமை! திருமுறைகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அப்படியே உருக்கி விடுவார்கள். சென்னை, ஈரோடு, திருச்செங்கோடு, சிவகாசி, இரத்தினகிரி, லால்குடி, ஆகிய ஊர்களில் விடாது பேராசிரியர் சென்று பேசுவார்கள். வயதாகி விட்ட தளர்ச்சியேயில்லை.

பேச்சு மட்டுமன்று; பதினான்கு சாத்திரங்களுக்கும் எளிய விளக்கம் அளித்துள்ளார்கள். பெரிய புராண உரை எழுதி முடித்துவிட்டார்கள். வெளிவர வேண்டும். ஞானாமிர்த உரை, அறுவகைச் சமயங்கள், சித்தாந்த நிச்சயம், சமய ஒழுக்கம், சங்க இலக்கியங்களில் சமய நோக்கு ஆகிய நூல்களையும் வழங்கி யுள்ளார்கள்.

14.4.1930-இல் திருச்சி மாவட்டம் தோழூர்பாட்டியில் குப்புசாமி முதலியார் – நாகரத்தினத்தம்மாள் ஆகியோருக்குப் பிறந்தார். திருப்பனந்தாள் காசிமடம் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி னார். இன்றும் தளராது சைவப்பணி ஆற்றி வருகிறார்.

(துணைச் செய்தி : பேராசிரியர் அவர்கள் கொடுத்த குறிப்புகள்)

34

ஐயாயிரம் சித்தாந்திகளை எட்டு ஆண்டுகளில் உருவாக்கிய சைவசித்தாந்த எழில் ஞானப் பண்ணை (1931)

ஒரு கால கட்டத்தில் தமிழ் நாட்டில் சைவசித்தாந்தம் படித்தவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டால், கைவிரலுக்குள் எண்ணி விடலாம். ஆனால் டிசம்பர் 2000 அன்று கணக்கெடுத்தால் தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தம் படித்தவர்கள் குறைந்த பட்சம் என் மாணவர்களே 5000 பேர்கள் என்று அடித்துச் சொல்வார் ஒரு பெரியவர். அவர்கள் வேறு யாருமல்ல.

நமது திரு. கு. வைத்யநாதன் அவர்களே அப்பெருந்தகை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழக வரலாற்றில் என்றும் நிகழாத இச்சாதனை எப்படி நிகழ்ந்தது? வழி பாட்டிற்குரிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம், சீர்வளர்சீர், குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணை வண்ணம் திரு. கு. வைத்யநாதன் அவர்களை இயக்குநராகக் கொண்டு 1992-ஆம் ஆண்டில் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் தொடங்கப் பெற்றது.

மூன்றாண்டு படிப்பு – பாடத்திட்டம் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு முழுமையும் – 2600 பக்கங்கள் கொண்ட 25 சிறந்த நூல்கள். மாதம் ஒரு ஞாயிறன்று நேர்முகப் பயிற்சி சென்னை மற்றும் முக்கியமான 27 ஊர்களில் இம்மையம் இயங்குகிறது. திரு. கு. வைத்யநாதன் உட்பட பல சைவசித்தாந்த அறிஞர்கள் பாடம் நடத்துகிறார்கள். 1992-ஆம் ஆண்டு முதல் அணி; 1995-ஆம் ஆண்டில் இரண்டாம் அணி; 1998-ஆம் ஆண்டில் மூன்றாவது அணி.

ஆயிரக்கணக்கில் தமிழ் அன்பர்கள் இப்பயிற்சி மையத்தில் சேர்ந்து பயன் பெற்றனர். மூன்றாவது அணி நிறைவுறும் பொழுது 5000 பேர்கள் சித்தாந்தம் கற்ற நிலையில் உள்ளார்கள் என்று இயக்குநர் அவர்களே தனது நேர் காணலில் கூறினார்கள். இந்த சைவ அணி விரிந்து 10000, 20000 என்றுகூடச் செல்லலாம். இவர்கள் பல திறத்தவர்கள்; அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள்; 19 வயது முதல் 96 வயது வரை முதிர்ந்தவர்கள்; பார்வையற்றோர் உடல் ஊனமுற்றோர், வெவ்வேறு சமயத்தார், வெவ்வேறு இனத்தார்.

இம்மையத்திற்கு இயக்குனராக இருந்து பணியாற்றி வரும் திரு. வைத்யநாதன் அவர்களை அவர்களது மாணவர்கள் தங்கள் குருநாதராகவே – வழிபடு தெய்வமாகவே – வழிபடுகின்றார்கள். சிவபெருமானைத் தவிர பிற தெய்வங்களை வணங்கா உறுதிப்பாடு கொண்டுள்ளார்கள். தொலைபேசியை எடுத்தால் ''ஹலோ'' என்று சொல்லமாட்டார்கள். ''சிவாயநம'' என்பார்கள். இது ஒரு அற்புத நிகழ்வு அல்லவா?

அட! மண்ணில் தெரியுது சிவலோகம்!

இத்தனைக்கும் திருவைத்யநாதன் அவர்கள் கல்லூரியில் தமிழ் பயின்றவர் அல்லர். வணிகவரித்துறை அலுவலராகப் பணியாற்றியவர். மு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களிடம் தனது 35-ஆவது வயதில் சைவசித்தாந்தம் கற்க ஆரம்பித்தார். அன்று இரத்தினம் செட்டியார் அவர்கள் விதைத்த விதை இன்று பெரு மரமாகி – ஆலமரமாகி – ஒரு சைவ சித்தாந்த தோப்பையே உருவாக்கியுள்ளது.

17.12.1931-அன்று தூத்துக்குடியில் குளத்தூரான் – ஈசர் வடிவிற்கு மகவாய்ப் பிறந்த வைத்யநாதன் அவர்கள் இன்றளவும் சைவப்பணி புரிந்து வருகின்றார்கள்.

(துணைச் செய்தி : நேர்காணல்)

35
சிவஞான மாபாடியத்திற்கு எளிய உரை எழுதிய அஞ்சல் அதிகாரி (1932)



அஞ்சல் துறை அதிகாரி; இளவயதில் நாத்திகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர். அத்தகையவர் சிவஞான மாபாடியத்திற்கு, அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் உரை எழுதியுள்ளார் என்றால் நம்ப முடியுமா? இந்த உரை இல்லையென்றால் மாபாடியத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அதுமட்டுமல்ல. பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களுக்கும் இப்பெரியவர் உரை எழுதியுள்ளார்கள். இதில் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால், இப்பெரியவர் எந்த ஒரு நூலையும் ஆசிரியரின் உதவியுடன் கற்கவில்லை. எல்லாம் தானே படித்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிந்ததுதான். அப்பெரியவர் தான் நெல்லையில் வாழும் சி.சு. மணியவர்கள்.

பதினான்கு சாத்திர உரைகளோடு சி.சு. மணி அவர்கள் "Mathava Sivagnana Munivar - Life and works" ''சைவ சித்தாந்த தேனமுது'', ''அற்புதத் தேவாரத் திருப் பதிகங்கள் உரை'' ஆகிய நூல்களும் வெளியிட்டுள்ளார்.

28.11.1932-அன்று பிறந்த சி.சு. மணி அவர்கள் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அண்மையில் மறைந்து விட்டார்.

(சி.சு. மணி – சிதம்பர சுப்பிரமணியன்; பிறந்த ஆண்டு– *1932*; மறைவு - *2003*; ஊர் – பாளையங்கோட்டை)

36
சைவப் பெருநூலகம் பேணிக்காக்கும் சன்மார்க்கத் துறவி



சற்றேறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒருநாள்... திருவாரூர் அப்பர் கோயில் திருமுன்னர் திருமுறை மாநாட்டு மேடையில் வெள்ளாடை போர்த்திய துறவி அழகுடன் பேசிக் கொண்டிருக்கிறார். ''கிறித்துவர்கள் என்ன புதிதாகச் சொல்லிவிட்டார்கள்? Work - தொண்டு; Worship - வழிபாடு இவைதானே கிறித்துவம். நம்முடைய அப்பர் பெருமான் பனிரெண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னேயே சொல்லி விட்டாரே! உழவாரம் Work; தேவாரம் Worship என நறுக்கென்று பேசிமுடித்தார். அவை கலகலத்தது. இச்செய்தி என் மனதில் ஆழப்பதிந்தது. அன்று என் மனதில் உருவானது ''உழவாரம்' என்ற அமைப்பு. பின்னர் சில ஆண்டுகள் கழித்து மயிலாடுதுறையில் ''உழவாரம்'' என்றே ஒரு அமைப்பு தோற்றுவித்தோம். வெள்ளாடை துறவியே தொடங்கி வைத்தார்கள். அவர்கள் தான் ஊரன் அடிகள்.

ஊரன் அடிகள் வள்ளலார் மேல் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தாலும் சைவத்தையும் விட்டுவிடவில்லை. சைவ சமய நூல்களை ஆழ்ந்து படித்துச் சொற் பொழிவுகளும் நிகழ்த்தி வருகின்றார்கள்.

வடலூரில் இருக்கும் அடிகள் அவர் களின் நூலகம் ஒரு சைவக் கருவூலம். அரிய சைவ நூல்கள் – சித்தாந்தம், செந்தமிழ்ச் செல்வி பழைய இதழ்கள் ஆய்வாளர் களுக்குப் பெருவிருந்து. கருத்துக்கும் மட்டும் விருந்து அல்ல. உடலுக்கும்தான். வருகின்ற ஆய்வாளர்களை அங்கேயே தங்கச் சொல்வார்கள். நல்ல விருந்தும் படைப்பார்கள். இரவு, பகல் என்று நமக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களைப் படிக்கலாம். உட்கார்ந்து கொண்டும் படிக்கலாம்; இரவு படுத்துக் கொண்டும் படிக்கலாம். நூலகங்களுக்குச் சென்று சிரமப்பட்டு குறித்த காலத்திற்குள் படித்துமுடிக்க வேண்டுமே என்று சிரமப் பட்டவர்களுக்குத்தான் இந்த அருமை புரியும். தாய் போல உபசரிப்பார்கள். படித்துச் சோர்ந்தால் தந்தைபோல கருத்து சொல்வார்கள். முக்கியப் பகுதிகளை நகல் எடுக்க அங்கிருக்கும் பணியாளை அனுப்பு வார்கள். மாவட்டத்துக்கு ஒரு நூலகம் இதுபோல இருந்துவிட்டால் தமிழ் ஆய்வாளர்கள் எங்கேயோ போய் விடுவார்கள்?

அடிகளின் பூர்வாசிரமப் பெயர் குப்புசாமி; பிறந்த ஊர் – சமயபுரம் அருகே உள்ள நரசிம்மமங்கலம்; பிறந்த ஆண்டு – *1933*; பெற்றோர் – இராமசாமிபிள்ளை, நாகரத்தினம் அம்மையார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

37

மேனாட்டுத் தத்துவ அறிஞர்கள் விடைநாடி சுற்றிச் சுழலும் தமிழ் நாட்டுத் தத்துவ மையம் (1934)



''திறமான புலமை எனில் வெளி நாட்டில் பரவும் வகை செய்ய வேண்டும்'' சைவ சித்தாந்த சாத்திரங்களையும், திருமுறைகளையும் வெளிநாட்டில் பரவ, திரு. டி.என். இராமச்சந்திரன் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட் டிருக்கின்றார்கள். திருக்கோவையார், பெரியபுராணம், காரைக்கால் அம்மையார் பதிகங்கள், அப்பர் பெருமானின் தாண்டகப் பதிகங்கள், ஞான சம்பந்தப் பெருந்தகையின் முதல் திருமுறை, மெய்கண்ட சாத்திரத்தில் ஏழு சாத்திரங்கள் – இவையனைத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்கள்.

ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள சைவ நூல்கள் அனைத்தையும் தொகுத்து "An annotated Bibliography of Saiva Siddhanta Works'' – என்ற நூலை எழுதியுள்ளார். அவற்றில் சில நல்ல பகுதிகளைத் தேர்ந் தெடுத்து "Saiva Siddhantham" என மூன்று பகுதிகளாக வெளியிட்டுள்ளார்கள். இந் நான்கு நூல்களும் ஆய்வாளர்களுக்கு நல்ல வரப்பிரசாதம். இவர் எழுதிய பிறநூல்கள் : பதிபசுபாசம், Saint Sekkizhar, Sivagnana Munivar. பின்னிரெண்டும் சாகித்திய அகாடமியால் வெளியிடப்பட்டன.

இவரது தஞ்சாவூர் இல்லத்திலே, ஆங்கிலமும், தமிழுமாக 25,000 புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலும் சைவ சமயச் சார்புடையனவே. விலை ஆயிரம் இரண்டாயிரம் என்றெல்லாம் இருந்தாலும் பொருட்படுத்தமாட்டார். நூல் வெளியான அன்றே இவர் நூலகத்தை அலங்கரிக்கும். சைவ சமய ஆய்வு நிகழ்த்துபவர்கள் இவர் நூலகம் வராமல் இருக்க மாட்டார்கள்.

வெளிநாடுகளில் பல அறிஞர்கள் சைவ சமய ஆய்வுகள் நடத்தி வருகின்றார்கள். அத்துணை பேரும் டி.என்.ஆர். அவர்களி டம் தொடர்பு கொண்டுள்ளனர். தமிழகம் வந்தால் நேராகத் தஞ்சைக்குத்தான் வருவார்கள். டி.என்.ஆர். இடம் பல ஐயங்கட்குத் தெளிவு காண்பார்கள். எஞ்சிய நேரத்தில் நூலகத்தில் இருந்து ஆய்வு செய்வார்கள். மேனாட்டுச் சைவ ஆய்வாளர்களுக்கு டி.என்.ஆர். அவர்கள் ஒரு சைவ மையம்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானமவர்கள் நிறுவியுள்ள "International Institute of Saiva Sidhantha"-வின் இயக்கு னராகப் பணியாற்றுகின்றார்.

டி.என்.ஆர். அவர்கள் பேச்சுக்கு வழங்கும் தலைப்புகளே புதுமையானவை; ''ஷேக்ஸ்பியரும் சைவசித்தாந்தமும்'', ''தூயமில்ட்டனாரின் துகளறு போதம்'' ''சேசுவும் சைவசித்தாந்தமும்'' தஞ்சையில் 1978-ஆம் ஆண்டு முதல் புதன்கிழமை தோறும் சைவசித்தாந்த சொற்பொழிவு களும் 1993-ஆம் ஆண்டு முதல் பெரிய புராணச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வருகிறார்கள்.

டி.என்.ஆர். பணி இத்துடன் நிற்க வில்லை. ''கலாசம்ரக்ஷண சங்கம்'' என்ற அமைப்பில் சென்ற நூற்றண்டில் (19-ஆம் நூற்றாண்டு) வெளியான – இப்பொழுது மறைந்து போன – நூல்களை மீட்டுரு வாக்கம் செய்து வருகிறார்கள். இத் திட்டத்தில் சைவ சமயத்தில் வெளிவந்த அரிய நூல் செந்திநாதையர் எழுதிய ''தேவாரம் வேதசாரம்'' ஆகும்.

18.8.1934-அன்று திருநல்லம் கிராமத்தில் டி.ஆர். நடராஜன் – காமாட்சி அம்மா ளுக்குப் பிறந்த டி.என். இராமச்சந்திரன் அவர்கள் தஞ்சையில் வழக்கறிஞராக

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

பணியாற்றி வருகின்றார். இப்பொழுது இலண்டன் போன்ற வெளிநாடுகளுக்கு எல்லாம் ஆண்டுதோறும் சென்று சொற் பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார்கள். இவர்கள் சைவப்பணி வெளிநாடுகளிலும் தொடர்கிறது.

(துணை நூல்கள் : "Our Guide Sekkizhar Adi-P-Podi T.N.R." P Arul namachivayam)

38
அமெரிக்காவில் கோவை மொழிந்த தேமொழியார் (1938)

சென்னை ஜார்ஜ் டவுன் ......முல்லா சாயபு தெரு ......சென்னை சிவனடியார் திருக்கூட்டம்......தேமொழியார் திருமந்திர உரை ஆற்றுகிறார். வந்திருந்த கூட்டம் ஆழ்ந்து கேட்கிறது. அதில் ஒருவர் அமெரிக்கர். தன்னை மறந்து கேட்கிறார். பேச்சில் ஈர்க்கப்பட்டுத் தொடர்ந்து வருகிறார். மனதிலே எண்ண அலைகள். இப்பெரியவரை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். திருக் கோவையார் பற்றி பேசச் சொல்ல வேண்டும் என்று எண்ணுகிறார் –எண்ணிய தை நிறைவேற்றுகிறார்.

சிகாகோ பல்கலைக் கழகத்தில் தேமொழியார் திருக்கோவையார் பற்றி உரையாற்றுகிறார். அங்கேயே தங்கி இருந்து திருக்கோவையாரை உரையுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடு கிறார். ''அமெரிக்காவில் திருக்கோவை யாரா?'' என்பது வியப்பாகத்தான் இருக்கிறது. கற்றவருக்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு.

திருமந்திரம் மட்டுமன்று. சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தில் பத்தாண்டு களுக்கு மேலாக பெரியபுராணம், திரு வாசகம், திருக்கோவையார், சித்தாந்த சாத்திரங்கள் என வாரம் இருமுறை தொடர்ந்து தேமொழியார் உரையாற்றி இருக்கின்றார்.

பேச்சுப் பணியோடு எழுத்துப் பணியாக தேமொழியார் ''உய்யும்மொழி'', ''தேனருவி'', ''திருமந்திரம்'', ''வாசகர் கண்ட வடிவழகி'' முதலான நூல்களையும் எழுதியுள்ளார்.

இப்பெருந்தகை ந.ரா. முருகவேள் மாணாக்கர் என்றால் இவர் அறிவுப் புலமைக்குக் கேட்கவும் வேண்டுமா?

(பிறப்பு – 1938; மறைவு – ?; பிறந்த ஊர் – சொக்கப் பெருவளூர், செஞ்சி வட்டம்; பெற்றோர் – அரங்கசாமி – நல்லம்மாள்.)

39
சைவசமயக் கருத்துக்கள் அயல் நாடுகளில் பரவும் வகை செய்பவர் (1945)



மலேசியா, சிங்கப்பூர், இந்தோ னேசியா, ஹாங்காங், ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, தென் ஆப்ரிக்கா, சுவிட்சர் லாந்து, ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து – இந்திய வெளிநாட்டுத் துறையமைச்சர் சுற்றுப் பயணத்திட்டம் அல்ல இது. ச.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கங்காதரன் அவர்களின் பயணத் திட்டமே இது. அதுவும் மகிழ்வுலா அன்று. சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவே. இவர் பணி இதோடு நிற்கவில்லை. செப்டம்பர் 1985-ஆம் ஆண்டு முதல் 1986-ஆம் ஆண்டு வரை அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் பல்சமயப் படிப்பு மையத்தில் (Center for the study of world Religion, Harvard, U.S.A.) சிறப்பு அறிஞராகப் (visiting professor) பணியாற்றியுள்ளார்.

தமிழ் நாட்டிலும் 1974 முதல் மதுரைப் பல்கலைக் கழக சைவ சித்தாந்த தத்துவத் துறையில் விரிவுரையாளர் – பேராசிரியர் – துறைத் தலைவர் என்று படிநிலை வளர்ச்சி பெற்று உயர்ந்திருக்கிறார்.

கங்காதரன் அவர்கள் எழுத்துப் பணியையும் விடவில்லை. அவர் எழுதிய நூல்கள் "Studies in Gnanamirtham", "Saiva Siddhanta with special reference to Sivaprakasam'', சைவ சித்தாந்த அடிப் படைக் கொள்கைகள், சிவஞான போதமும் வார்த்திகமும், (edited along with K. Vajravel Mudaliar) சைவ நோக்கில் புறச் சமயங்கள், சுருதி இலக்கியம், இந்து சமயம் – ஓர் அறிமுகம், கந்தர் அலங்காரக் கனியமுது.

15.1.1945-அன்று காஞ்சிபுரத்தை அடுத்த திம்மராஜம் பேட்டையில் பிறந்தவர். இவரது தந்தையார் ஓதுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

(துணைச் செய்தி : திலகவதி கங்காதரன் எழுதிய கடிதத்தில் கண்ட வாழ்க்கைக் குறிப்பு)

40

சைவசித்தாந்த ஆலமரம்

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்னவோ? இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்லே!

சைவ சமயத்தில் ஊறித் திளைத்த கிருஷ்ண ஐயர் (1866 – 1977) என்ன தவம் செய்தாரோ? கே. சிவராமன் பிறந்தார். காசி பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தத்துறைத் தலைவர் ஆனார். 1949-ஆம் ஆண்டில் சிவஞான சித்தியாரை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1962-ஆம் ஆண்டில் "Saivism in philosophical perspectives'' என்ற தனது முனைவர்பட்ட ஆய்வேட்டினை வழங்கினார். கனடாவில் ஒன்டாரியோவில் மக்மாஸ்டர் பல்கலைக் கழகத்தில் சமயக் கல்வித் துறைப் பேராசிரியராக இருந்து பல ஆய்வு மாணவர்களை உருவாக்கி வருகிறார்.

ஆன்றோர்கள் - இருபதாம் நூற்றாண்டு

துணை நூல்கள் :

(1) ''தமிழ்ப் புலவர் வரிசை'' (தொகுதி 1 முதல் 31 வரை);

க.அ. இராமசாமி புலவர் ; சை.சி.நூ.ப. கழகம்.

(2) "Saiva Siddhantham" (Part - I to III)

T.N. Ramachandran; International Institute of Saiva Siddhanta Research, Dharamapuram.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VI

ஆன்றோர், அறிஞர்கள் இருபதாம் நூற்றாண்டு

குறிப்புகள்

(1) கவியரசு கு. நடேசக் கவுண்டர் 2.4.1901 – 26.5.1975; கோயம்புத்தூர்; மங்கையர்க்கரசி பிள்ளைத் தமிழ், திருப்பேரூர்க் கலம்பகம், திருவெம்பாவை உரை, திருவாமாத்தூர்க்கலம்பகம் உரை, அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், சிவானந்தலகரி, சிவபாதாதி கேசாந்த வர்ணனஸ்தோத்ரம், சிவமாகிம்ஸ் தோத்ரம், தட்சணாமூர்த்தி அட்டகம், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை, சிவதயைநூறு, திருவாசகம் உரை மற்றும் பல முருகன் துதி நூல்கள்.

(2) கூ. கனகசபை பிள்ளை, 1901; கூடலூர், தென்னார்க்காடு மாவட்டம்; ''கோத்திரம்'' கோத்திரம் இல்லாதவன் சிவபெருமான் என 400 பக்கங்களில் எழுதப்பட்ட நூல்.

(3) சி. உருத்திரபதி; 1904 – 1958; செம்மங்குடி; பாபநாசம் வட்டம்; திருவாசகம் – கன்னட மொழி பெயர்ப்பு.

(4) நெ. சுப்பையா பிள்ளை; 1904 – 1963; திருநெல்வேலி; ''அப்பரும் அருள் வள்ளலாரும்''.

(5) வி. சுந்தர முதலியார்; 1904 – ?; மயிலாப்பூர்; சிவநாமசங்கீர்த்தனம் எனும் இசைப்பாமாலை,மற்றும் பல கவிதைகள்.

(6) Jan Gonda; 1905 – ; "The dual deities in the religion of the Vedas", "Triads in the Vedas", "Vishnuism and Saivaism", நெதர்லாந்து உட்ரெக்ட் பல்கலைக் கழக சமஸ்கிருத பேராசிரியர்.

(7) ஆ.மா. சிவஞானம்; 1905 – 1963; திருவோத்தூர்; விநாயகர் அகவல், இரத்தினவேல் இருபா ஒருபஃது, திரிமூர்த்திகள் பஞ்சரத்தினப் பாமாலை, திருவருணை வெண்பா அந்தாதி முதலான செய்யுள் நூல்கள்.

(8) அப்பாச்சாமி முதலியார்; 1906 – ; சென்னையைச் சேர்ந்த பொன்னேரி அருகில் கன்னிப்புத்தூர்; சுத்தாத்துவித சைவ சித்தாந்த பரபோதம்.

(9) தி.கி. நாராயணசாமி நாயுடு; (1906 –); கிழக்கு மருதூர், தென்னார்க்காடு மாவட்டம். இவர் உதவியால் பண்டித மணியின் திருவாசக உரை வெளிவந்தது. ஒவ்வொரு திருமுறைக்கும் 10 பாடல் கொண்ட திரட்டாக 12 திருமுறைத் திரட்டு வெளியிட்டார்; தென்னார்காடு தல யாத்திரை; 80 வயது தாண்டி வாழ்ந்தார்.

(10) ஜி. சுப்பிரமணியப் பிள்ளை; 1906 – ; சிந்துபூந்துறை, திருநெல்வேலி மாவட்டம்; ''வாசகரும், வாசீகரும்'', ''அப்பர்விருந்து'', ''மாணிக்கவிருந்து'', ''திருவாசக நெறி''.

(11) பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்; (1907 –); ''தமிழ் மந்திரம்'', சைவ சமயப் பேச்சாளர்.

Digitization by Hindu Heritage Foundation of America (USA)

(12) பாலூர் கண்ணப்ப முதலியார்; (1908 – 1971); பாலூர், செங்கற்பட்டு மாவட்டம்; நூல்கள் – ''பொய்யடிமை இல்லாத புலவர் யார்?'', ''சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பேருரை'', ''திருமந்திர உரை – 365 பாடல்கள்''.

(13) கொ. நீ. சிங்காரவேலு; (1909 – 1998); சிக்கல், தஞ்சை மாவட்டம்; நூல் – ''உண்மை விளக்கம்'' ஆங்கில மொழி பெயர்ப்பு, ''சைவ சித்தாந்தா'' ஆங்கில இதழ் ஆசிரியர்; சைவ சித்தாந்தப் பெரு மன்றத்தில் 60 ஆண்டுகள் பலநிலைகளில் பணியாற்றியமை

(14) சோ. திருப்பதி வேங்கடாசலபதி யாச்சாரி; 1911; துளசியூர், பள்ளிமடம் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்; ''ஆயிரத்தெட்டு சிவக்ஷேத்ர மாலை'' முதலான 30 நூல்கள்.

(15) மா. சிவகுருநாதபிள்ளை; 1916 – ; சுந்தரப் பெருமாள் கோயில், தஞ்சை மாவட்டம், நூல்கள் – தேவார மூவர் தலயாத்திரை – ஓர் ஆய்வு, சிவவடிவங்கள், நாயன்மார் வரலாற்று பல்வகைச் செய்தி கள், இந்து சமய நெறிகள், இறைவழி பாட்டு நெறிகள், நடராசரின் ஆறுகால அபிஷேக விளக்கம், ஆறுக்கும் மேற்பட்ட தல வரலாறுகள்.

(16) ப.சு. மணியம்; 1916 – ; பகுவாய் (சூலூர்), பல்லடம் வட்டம்; அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் ''திருக் கோவையார்'' ஆய்வு செய்து பட்டம் பெற்றார். திருவாசகம், பெரியபுராணம் வகுப்புகள் நடத்தி வந்தார்'' 1965 முதல் இந்நாள் வரை மணிவாசகர் விழா நடத்தி வருகிறார்.

(17) பண்டித நடேசனார்; 1911 – ; (75 வயது தாண்டி வாழ்ந்தவர்); மயிலாப்பூர்; வாரந்தோறும் சென்னையில் பல இடங் களில் சிவப்பிரகாசம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம், தணிகைப் புராணம் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

(18) ஆதி. முருகவேள்; 1911 – ; புளியங் குடி, நெல்லை மாவட்டம், நூல்கள் – ''உண்மை என்ன?'' (சிவஞானபோத விளக்கம்), ''தொண்டர் தம் பெருமை'', ''சித்தாந்த மரபுச் சொற்பொருள் விளக்கம்'', ''சிவஞான முனிவரின் சைவ சித்தாந்தம்'', ''மேனாட்டுச் சமய தத்துவங் களும் சைவசித்தாந்தமும்'' 1985-ஆம் ஆண்டு முதல் ''நமச்சிவாய'' சைவ சித்தாந்த அஞ்சல் வழிக்கல்வி நடத்தி வருகிறார்; 1986-ஆம் ஆண்டு முதல் ''சிவநெறி'' இதழ் வெளியிட்டு வருகிறார்.

(19) மும்மொழிக் கொண்டல் பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை; 1914 – 1989; குணமங்கலம், தென்னார்க்காடு மாவட்டம்; நூல் – சதரத்தின சங்கிரகம் என்ற ஆகமத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு; ''சைவசித்தாந்தா'' ஆங்கில இதழின் ஆசிரியர்.

(20) ஆ.தி.அ. ஈசுவரனார்; 1918 – ; நுங்கம்பாக்கம், சென்னை; சைவ சமயச் சொற்பொழிவாளர்.

(21) அம்பை இரா. சங்கரனார்; 1920 – ; அம்பாசமுத்திரம், நெல்லை மாவட்டம்; உரைநடை – மாணிக்கவாசகரும் வள்ள லாரும் மற்றும் பிற நூல்கள்; உரை எழுதிய நூல்கள் – ஞானாமிர்தம், மூத்த பிள்ளை யார் திருமும்மணிக் கோவை, சிவபெரு மான் திருமும்மணிக் கோவை, திருவலஞ் சுழி மும்மணிக்கோவை.

(22) மீ.ப. சோமசுந்தரம்; 1921 – 1999; ''திருமூலர் தவமொழி'' இராஜாஜியுடன் இணைந்து எழுதினார்; திருமந்திரச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார்.

(23) ப. அருணாசலம்; 1.11.1922; ''பக்தி இலக்கியம்'', ''திருமந்திரக்கோட்பாடு'', சுந்தரர் தரிசனம்.

(24) தி.வே. கோபாலய்யர்; 1925; திருவையாறு; ஞானசம்பந்தர் தேவாரம் பதம் பிரித்துச் செம்பதிப்பாக வெளி யிட்டார். ''தேவாரத்துணை'' என்று தேவார பாடபேதங்களை எடுத்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். தருமை யாதீன வெளியீடுகளான நான்கு, ஆறு, ஒன்பதாம் திருமுறைகளுக்கு பொழிப்புரை வழங்கியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(25) வி.சா. குருசாமி தேசிகர்; *1930 – ;* விசலூர், திருவிடைக்கழி அருகில்; திருமுறைப் பேச்சாளர்; திருமுறைத் திருமணங்கள் நடத்தி வருபவர்; எழுத்துப் பணி – ஐந்தாம் திருமுறை குறிப்புரை, தல வரலாறுகள்.

(26) சொ. சிங்காரவேலன்; *1933 – 1995;* திருச்சிற்றம்பலம்; தஞ்சை மாவட்டம்; "A Linguistic and critical study of Appar Devaram" என்ற தலைப்பில் டாக்டர் பட்டம் பெற்றவர்; எழுதிய நூல்கள் – அப்பர் அருட் செய்தி, அப்பர் தேவாரத் திறன், திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும், திருமந்திரமாலை (தொகுப்பு), திருநாவுக்கரசர் தேவாரம் – ஐந்தாம் திருமுறை உரை, மூவர் தேவாரம் – இரண்டு பார்வைகள்.

(27) ந. இராமகிருஷ்ணன்; *1934 – ;* சிதம்பரநாதன் பேட்டை, சிதம்பரம்; ''திருமூலரும் சிவயோகமும்'', ''திருமூலரின் சிவானந்த சிந்தனைகள்'' ஆகிய நூல்களை எழுதியவர்; திருமந்திரச் சொற்பொழிவுகளும், வகுப்புகளும் நடத்தி வருபவர்; திருமந்திரம் காட்டும் யோகப் பயிற்சியினை அனுபவத்தில் பின்பற்றுபவர்.

(28) ஆ. ஆனந்தராசன்; *1939 – ;* புதூர்; விளாத்திகுளம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்; ''சிவஞானபோதம் – வழித்துணை விளக்கம்'' ''உண்மை விளக்கம் – உரை'', ''திருவருட்பயன் வழித்துணை விளக்கம்'', ''தசகாரியம்'', ''திருவாசகம் – பதிப்பு'' (பதிகங்களின் விளக்கத்துடன்); விக்கிரமசிங்கபுரத்தில் 14 ஆண்டுகளாகச் சைவசித்தாந்தக் கோடைக்காலப் பயிற்சி நடத்தி வருதல்.

(29) கோமதி சூரியமூர்த்தி; *1940 – ;* மதுரையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்; எழுதிய நூல்கள் – சந்தானாசாரியார் வரலாறு, சைவ சமய சாத்திரக் கட்டுரைகள் (தொகுதி 1), திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவசித்தாந்தக் கருத்துக்களும், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, இந்து சமயம் – பாடத்திட்டத்திற்குப் பத்து பாடங்கள் (5 ஆங்கிலம், 5 தமிழ்) சைவ சமயம் சாத்திரக் கட்டுரைகள் (தொகுதி 2), திருஞானசம்பந்தர் தேவாரம் – 3ஆம் திருமுறை – பொழிப்புரை, உமாபதி சிவாசாரியாரின் திருவருட்பயன்.

(30) சிவ. திருச்சிற்றம்பலம்; *1946 – ;* சுந்தரப்பெருமாள் கோயில்; தந்தையார் – மா. சிவகுருநாதப் பிள்ளை; நூல்கள் – திருமுறைச் சான்றோர் வாழ்வும் வாக்கும், சிவபெருமான் – கலைக்களஞ்சியம், இறையருள் வடிவங்கள், தேவாரமூவர் காட்டும் விநாயகர் வடிவங்கள், தேவார மூவர் காட்டும் முருகன் வடிவங்கள், பன்னிரு திருமுறைச் சான்றோர் வாழ்வியல், அப்பர்பெருமான் வாழ்வும் வாக்கும், பிரதோஷ வழிபாட்டின் பயனும் சிறப்பும், சைவ சமய நெறிகள், வில்லியார் காட்டும் சிவ வடிவங்கள், கம்பர் காட்டும் சிவ வடிவங்கள், தேவாரமூவர் காட்டும் சிவவடிவங்கள்.

(31) மு.பெ. சத்தியவேல் முருகனார்; *1948 – ;* வேலூர்; 1089 தமிழ் மறை குடமுழுக்குகள் நிகழ்த்தியுள்ளவர்; 310 சிவாச்சாரியார்கள், ஓதுவார்களுக்குத் தமிழில் குடமுழுக்கு ஆற்ற பயிற்சி அளித்துள்ளார். 850-க்கும் மேல் தமிழாகமத் திருமணங்கள் நிகழ்த்தியுள்ளார். தமிழகமெங்கும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார். இவர் எழுதிய நூல்கள் – சைவ அனுட்டான விளக்கம், செந்தமிழாகம குடநீராட்டு நன்னூல், தமிழ் வேள்வி, சைவசித்தாந்தப் பரிணாம வளர்ச்சி, சிவவேள்விப் பாடற்றிரட்டு,

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

திருமந்திரச் சிந்தனை, பன்னிரு திருமுறை போற்றி வழிபாடு, சந்தான குரவர் போற்றி, அம்பிகை போற்றி ஐங்குறுநூறு.

(32) சு. நாராயணசாமி; *1954 –* ; திரு. இன்னம்பர், கும்பகோணம் வட்டம்; பெற்றோர் – சுப்பிரமணியன், ருக்குமணி; நூல்கள்;

இருபதாம் நூற்றாண்டு
(காலம் தெரியவில்லை)

(இப்பட்டியலில் உள்ள சில ஆன்றோர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து இருக்கலாம்.)

(1) ஆ. சத்திவேற்பிள்ளை; பட்டுக்கோட்டை; திருக்கருவைச் சந்தப்பா; திருக்கருவைப் பால் வண்ண நாதர் வண்ணம்; கருவை மும்மணிமாலை.

(2) வெ. குப்புசாமிராசு (பிரமானந்த அடிகள்); தஞ்சாவூர்; சிவஞானபோத உரைநடை;

3) டி.வி. வெங்கட்ராமன்; சென்னை; தமிழக அரசின் தலைமைச் செயலராக இருந்தவர்; திருமந்திரம் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், நூல்கள் எழுதியும் வருகின்றார்.

(4) ரா. சபாபதி பிள்ளை; கும்பகோணம்; பத்திரகிரியார் புராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் தோத்திரப் பாமாலை, நடராசர் தோத்திரப் பாமாலை, மார்க்கண்டேயர் சரித்திரம். திருவாதவூரடிகள் சரித்திரம், சிவஞான முனிவர் சரித்திரம் மற்றும் பல நூல்கள்.

(5) சிவஞான யோகிகள்; அவிநாசி, கோயம்புத்தூர் மாவட்டம்; நூல்கள் – ''தமிழ் மொழியும் சிவநெறியும்'', ''சிவஞான விளக்கம்'', ''சுவேதாசுவதர உபநிடதம் – மொழிபெயர்ப்பு'', ''விபூதி உருத்திராக்க தாரண நிரூபணம்'', ''சிவகலைப் புராணம்''.

(6) கங்காதர நாவலர் (சிவஞானப் பரதேசியார்); சிவஞானத் தானம், சிவாமிர்த பூஷணம், சிவஞானப் பூரணம் (மூன்றும் செய்யுள் நூல்கள்), சிவசாதன நவபோதினி (உரை நடை).

(7) கந்தசாமி முதலியார்; கோயம்புத்தூர்; நூல்கள் – திருநாவுக்கரசு நாயனார் வெண்பா மாலை, நந்தியெம்பெருமான் தோத்திரம், பழமலை நாதர் உயிர் வருக்க மாலை, பேரூர் மும்மணிக் கோவை.

(8) கே. கந்தசாமி முதலியார்; கைவண்டூர் தொண்டைநாடு; நூல் – திருப்பாச்சூர்ப் புரர்ணம்.

(9) ரா. கந்தசாமியார்; *? – 1943;* பூமாபட்டி, வத்திராயிருப்புக்கு அண்மை, இராமநாதபுரம் மாவட்டம்; ''தணிகைப் புராண உரை''.

(10) கவிராச நாயகம் பிள்ளை; ''சாயாவன புராணம்''

(11) குமாரசாமிப் பண்டிதர்; திருப்பத்தூர், வட ஆர்க்காடு மாவட்டம்; ''குடியேற்ற நல்லூர்ப் புராணம்''.

(12) கோவிந்தசாமி ஐயர்; மதுரை; திருவிளையாடல் அகவற்பா'', ''திருவிளையாடல் வண்ணம்'', ''மாணிக்கவாசகர் வரலாற்று வெண்பா''.

(13) வ.சு. சண்முகம் பிள்ளை; மஞ்சக்குப்பம், தென்னார்க்காடு மாவட்டம்; ''திருவாடானைப் புராணம் – உரைநடை'', ''திருக்குடவாயிற் புராணம் – உரைநடை'', ''கண்டியூர்ப் புராணம் உரைநடை'', ''திருக்கழுக்குன்ற உலா''.

(14) கா. சரவணப் பிள்ளை; ''கண்ணப்ப சுவாமிகள் கீர்த்தனம்'' *(1891)*

(15) சாம்பசிவம் பிள்ளை; திருச்சிராப்பள்ளி; ''திருநான்மறை விளக்க ஆராய்ச்சி'', சிவஞானபோத முதல்நூல் ஆராய்ச்சி'', ''சைவசித்தாந்த வரலாற்று ஆராய்ச்சி'', ''கோகழிப் பெயருண்மை'', ''மெய்கண்ட சாத்திர முன்னுரை ஆராய்ச்சி'', ''வேதமும் சைவத் திருமுறைகளும்'', ''திருவாசக விரிவுரையில் காணப்படும் பிற ஆசங்கைகளும் ஆராய்ச்சியும்''.

(16) சி. சுந்தரம் ஐயர்; மழவரானேந்தல், இராமநாதபுரம் மாவட்டம், ''பெரிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணம் இசைப் பாடல்கள்'' (தந்தையார், சகோதரருடன் சேர்ந்து பாடியது)

(17) ஈ. சுந்தரமாணிக்க யோகீசுவரர்; சென்னை; ''உண்மை ஞான விளக்கம்'' (1928) (திருவாசக உரை – யோகப் பொருள்)

(18) நமச்சிவாய தேசிகர்; தருமை யாதினப் புலவர்; ''தியாகராசர் அருள் விளையாடற் சிந்து''.

(19) சி. சுப்பையாசாமி; திருவண்ணா மலை; ''சிவமகிமை விரிவுரை'', ''சிவபுரி புராணம்''.

(20) சுயம்பிரகாச அடிகள் (கிருட்டிண சாமி); ? – 1897; திருமழபாடி; ''மதுரை சுந்தரேசன் நடராஜப் பதிகம்''.

(21) செல்லம்மாள்; பாட்டப்பத்து, திருநெல்வேலி மாவட்டம்; ''வேதாந்த சித்தாந்த சமரசக்கிர்த்தனை'', ''அமர்நீதி, சோமாசிமாறர், திருநீலகண்டர் வரலாறு கள் – இசைப் பாடல்கள்''.

(22) ஞானசிவதேசிகர்; கொடுமுடி; ''மும்மணிக் கோவை'', ''இரட்டை மணிமாலை''.

(23) தணிகாசல முதலியார்; மயிலாப்பூர்; பதினெண் புராணங்களையும் பற்றி உரை யாற்றியவர்; திரு.வி.க. வின் ஆசிரியர்.

(24) தியாகராசதேசிகர்; கூறைநாடு, மயிலாடுதுறை; பெற்றான் சாம்பான் சரித்திரக் கீர்த்தனம், மாயூரம் காவடிச் சிந்து, காரைக்காலம்மையார் சரித்திரக் கீர்த்தனம்.

(25) மு. திருஞானசம்பந்தன்; மயி லாப்பூர்; ''ஏழின் தத்துவார்த்த விளக்கம்''.

(26) சோ. திருப்பதி வேங்கடாசலபதி ஆச்சாரி; குல்லம்பட்டி என்னும் துளசியூர், இராமநாதபுரம் மாவட்டம்; ஆயிரத்தெட்டு சிவக்ஷேத்திர மாலை, சிவக்ஷேத்திரக் காதல் திரட்டு.

(27) திருவேங்கட நாயுடு; சிவபுராண தோத்திர மஞ்சரி.

(28) ப.வல்லி, தெய்வநாயக முதலியார்; சென்னை; ''திருவிளையாடற் புராண சாரவெண்பா''.

(29) நடேச தேசிகர்; திருநீற்றுப் பெருமை (1909)

(30) நடேசப் பத்தர்; நடராச தெரிசன உற்சவ வழிநடைப் பதம் (1894)

(31) மா. நமசிவாயம் பிள்ளை; சென்னை; எழுதிய நூல் – திருவொற்றியூர்த் தியாகேசர் பஞ்சரத்தினம்; பதிப்பு நூல்கள் – சிவராத்திரி புராணம், நம்பியாண்டார் நம்பி புராண வசனம், சேக்கிழார் சுவாமி கள் பிள்ளைத் தமிழ், செவ்வந்திப் புராணம், சந்தான குரவர் நான்மணிமாலை.

(32) நல்லதம்பிப் பிள்ளை; பாலைக் காட்டினை அடுத்த தத்தை மங்கலம்; சைவசித்தாந்த ரகசியம்.

(33) நாதமுனி முதலியார்; மயிலாப்பூர், சென்னை; ''திருமயிலைத் தலபுராணம்''.

(34) அ. நாராயணசாமி முதலியார்; பனைப்பாக்கம், தொண்டை நாடு; பனைப் பாக்கம் புராணம்.

(35) ச. நெல்லையப்ப பிள்ளை; திரு நெல்வேலி; ''திருநெல்வேலிப் புராணம்'' (6892 செய்யுட்களைக் கொண்டது)

(36) தா. நெல்லையப்பப் பிள்ளை திருநெல்வேலித் தலபுராணம்.

(37) பானுகவி சுவாமிகள்; திருமலை, கேரளா திருவோத்தூர் இரட்டை மணி மாலை, திருமாற்பேறு புராணம், திருவோத்தூர் நான் மணிமாலை, திருவோத்தூர் மும்மணிக்கோவை, சிவபராக்கிரமம், திருவிளையாடல் அரும்பதக் குறிப்புரை முதலான நூல்கள்.

(38) பூரணானந்த அடிகள்; வட்டாப் புத்தூர், திருவண்ணாமலைக்கு அருகாமை; ''சிவயோகசாரம்''.

(39) தே. பெரியசாமிப் பிள்ளை; உறையூர்; பசுபதீசுரர் பாமாலை; திருவானி லை நாதர் போற்றிப் பதிகம்.

(40) பொன்னம்மாள்; ''சிவானந்த சாரம்''.

(41) சு. பொன்னோதுவார்; திருவாவடு துறை ஆதீனத்தில் இருந்தவர்; ''திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராண வசனம்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(42) நாதமுனி முதலியார்; மயிலாப்பூர்; திருமயிலைத் தலபுராணம்.

(43) வேலாயுத பண்டிதர்; தாராபுரம், கொங்குநாடு; சைவபுராணம் என்கிற சிவமகா புராணத்தை 3000 பாடல்களில் பாடியுள்ளார்.

(44) Gordon Mathews; 1948-ஆம் ஆண்டில் ''சிவஞான போதம்'' – சூத்திரங்கள், ஏது, மேற்கோள், உதாரண வெண்பா, சிவஞான முனிவர் உரையி லிருந்து குறிப்புகள் ஆகியவை அடங்கிய மொழிபெயர்ப்பினை "Siva Nana Bodham - A manual of Saiva Religious Doctrine" என வெளியிட்டார்.

(45) John H. Piet; 1952-ஆம் ஆண்டில் "A logical presentation of the Saiva Siddhanta" என்ற நூலை வெளியிட்டார்.

(46) Glenn E-Yocum; கலிபோர்னியா Whilthier கல்லூரி சமயத்துறை பேராசிரியர்; 1982-ஆம் ஆண்டில் திருவாசகத்தினை மொழி பெயர்த்து "Hymns to the Dancing Siva'' என்ற நூலை வெளியிட்டார். இப்பொழுது பெரியபுராணம் பற்றி ஆய்வு செய்து வருகின்றார்.

(47) மரிய சூசை தவமணி; 1971-ஆம் ஆண்டில் தனது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக ஆய்வினை "Love of God according to Saiva Siddhanta" என்று வெளியிட்டார்.

(48) Jean Filliozat; பிரான்ஸ்; பாண்டிச்சேரியில் இந்திய இயல் பிரெஞ்சு நிறுவனத்தைத் தொடங்கியவர்; ஆகமப் படிப்புக்கு உயிர் தந்தவர்.

(49) Francis Kingsbury; 138 திருமுறைப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து G.E. பிலிப் என்பவருடன் இணைந்து "Hymns of the Tamil Saints" என்ற நூலை வெளியிட்டார்.

(50) அ. நடேச முதலியார்; பிறப்பு – மறைவு 24.2.1995; என் தந்தையார் ஜி. வரதராஜன் அவர்களின் ஆசிரியரும், சமவயதுக்காரரும் ஆனவர். ஆதலினால் பிறந்த ஆண்டு 1911-ஐ ஒட்டி இருக்கலாம். மடைதிறந்தாற்போலப் பேசுவார்கள். தலைப்பினைத் தாண்டிப் பேசமாட்டார் கள். திருமுறை சொற்பொழிவாளர், எழுதிய நூல்; ''அருளியல் அறிவியல்''.

(51) தே.ஆ. ஸ்ரீநிவாசாரியார்; 1954 – 1966-ஆம் ஆண்டுக்குள் அவரது நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. கடலூரில் வாழ்ந்தவர். திருவாவடுதுறை ஆதீன வித்வான்; சைவசித்தாந்த சாத்திரங்க ளுக்குச் சார்புக் கட்டுரை, விரிவுக் கட்டுரை என மிக விரிவான விளக்கங்கள் எழுதிய வர். இவர் எழுதிய நூல்கள்; ''சிவப் பிரகாசம் – சீர்மைக் கட்டுரை (மங்கல வாழ்த்துப்பகுதி) சிவப்பிரகாசம் (பொது – பிற்பகுதி) சிவப்பிரகாசம் (பொது), சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை – (மூன்றாம் சூத்திரம்), வினா வெண்பா – விடை விளக்கக் கட்டுரை, சிவஞான போதமும், பன்னிரு திருமுறையும், இருபா இருபஃது விரிவுக் கட்டுரை, உண்மை விளக்கம் – உதவிக் கட்டுரை, சங்கற்ப நிராகரணம் – சார்புக் கட்டுரை.

(52) மறை. திருநாவுக்கரசு; மறைவு – 1.9.1983; திருமுறைப் பேச்சாளர்; எழுதிய நூல்கள் – சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம் – ஆய்வு நூல்கள்.

(53) கி. குப்புசாமி முதலியார்; மறைவு – 15.6.1935; வயது 66; சென்னை; தேவார திருவாசகம் பாடம்சொல்லி வந்தார்; பதினான்கு சாத்திரங்களும் (மூலம்) வெளியிட்டார்.

(54) வ.உ. சிதம்பரனார்; செக்கிழுத்த செம்மல்; தூத்துக்குடி; ''சிவஞான சித்தியார் – சுபக்கம்'' உரை எழுதியுள்ளார்.

(55) ''சிவஞான பாலைய சுவாமிகள்; மயிலம் ஆதீனம்; மறைவு 21.9.65; சைவ சமயக் கூட்டங்கள் தலைமை தாங்கியமை; தமிழ்க் கல்லூரி நிறுவியமை.

(56) குடவாயில் எம். பாலசுப்பர மணியன்; வயது 50-க்குள் இருக்கலாம்; வாழ்ந்து கொண்டு இருக்கிறார்; குட வாயில்; குடவாயிற் கோட்டம், திருவாரூர் திருக்கோயில் ஆரூர் ஆழித்தேர், தஞ்சைப் பெரிய கோயில், கோயிற்கலை மரபு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாரூர் தியாராஜ சுவாமிகள் திருக் கோயில் வரலாறு மற்றும் 200-க்கு மேலான ஆய்வுக் கட்டுரைகள்.

(57) பி.டி.ஆர். கமலத் தியாகராஜன்; 70வயது இருக்கலாம்; வாழ்ந்து கொண்டு இருக்கிறார்; மதுரை தொழிலதிபர்; இசைவல்லுநர்; இயற்றிய நூல் – இசைத் தமிழின் உண்மை வரலாறு.

(58) திருமதி. ராதா தியாகராஜன்; 70 வயது இருக்கலாம்; வாழ்கிறார்; மதுரை; தொழிலதிபர்; நூல்கள் – "Mysticism in Tiruvacakam" ''திருவாசகத்தில் அருளியல்''.

(59) டாக்டர் சாமி. தியாகராசன்; 60 வயது இருக்கலாம்; வாழ்கிறார்; கும்ப கோணம் ஆடவர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; நூல் : – ''பெரிய புராணச் சிந்தனை''

(60) டி.பி. சித்தலிங்கையா; வயது 60க்குள் இருக்கலாம்; வாழ்கிறார்; சைவசித்தாந்த அறிஞர்; ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் நூல்கள் எழுதி யுள்ளார்; எழுதிய நூல் – "Origin and development of Saiva Siddhanta" ; சென்னை ஆசியவியல் நிறுவனத்தில் பணியாற்று கிறார்.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VII

காலப் பெருவெளியில் சைவம் - ஈழம்

இலங்கைத் தமிழர் : இலங்கையில் தமிழர்கள் மூன்று வகையினராக இருக்கின் றார்கள். (1) தொன்று தொட்டுப் பாரம் பரியமாக இருந்து வரும் தமிழர்கள். இவர்கள் இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ளனர். இவர்கள் 11.2% உள்ளனர். (2) இலங்கையில் பாரம்பரிய மாக வாழ்ந்துவரும் இஸ்லாமிய சமயத்தி னர். இவர்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்தியப் பகுதிகளில் உள்ளனர். இவர்கள் 6.5% இனராவர். (3) பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் தேயிலை, ரப்பர் தோட்டத்தில் பணிபுரிய பிரிட்டி ஷாரால் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழர்கள். இவர்கள் 9.3% இனத்தவர்.

இலங்கையில் இஸ்லாமியர்கள் தவிர இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் அனை வரும் சைவர்களே ஆவர். வைணவ சமயம் இலங்கையில் இடம் பெறவில்லை.

இராவணன் – சிவபக்தன் : ஈழச் சைவ சமயம் தொன்மையானது. இலங்கையை ஆண்ட இராவணன் சிறந்த சிவபக்தன். திருஞானசம்பந்தர் தனது ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இலங்கையில் உள்ள திருக்கேதீச்சரம், திரிகோணமலை இறைவனை சம்பந்தர் பாடுகின்றார். இயக்கர்கள் என்ற இராட்ச சர்கள் தென் கிழக்கு இலங்கையில் முதலில் குடியேறினவர்கள் ஆவர். அரக்கர்கள் தலைவனான இராவணன் திரிகோணமலை இறைவனை வழிபட்டான் என்பது வழிவழிச் செய்தி.

வேடர்கள் : இலங்கைக்குத் தென் கிழக்கில் உள்ள பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களான வேடர்களிடையே "வள்ளி" என்ற பெயர் பரவலாக இருந்துள்ளது. இம்மரபின் பெண் வழி வந்தோர் இன்றும் முருகனின் தலமாகிய கதிர்காமத்தில் தினசரி வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர்.

நாகர்கள் : இந்தியாவிலிருந்து இயக்கர் களுக்குப் பிறகு வட இலங்கையில் குடியேறியவர்கள் நாகர்கள் ஆவர். நாகர்கள் சிவபெருமானை வழிபட்டார் கள். யாழ்ப்பாணத்தின் கிழக்கே உள்ள நாகர் கோயிலில் உள்ள நாகத்தம்பிரான் கோயில், நைனாதீவில் உள்ள நாகம்மாள் கோயில் – இரண்டுமே நாகவழிபாட்டைச் சேர்ந்தவை ஆகும். திருக்கேதீச்சரம் என்ற பெயரே "கேது" வைக் (நாகத்தைக் குறிப்பது) குறிக்கும்.

நான்கு ஈஸ்வரங்கள் : இலங்கையில் நான்கு ஈஸ்வரங்கள் புகழ்வாய்ந்தவை ஆகும். அவை : (1) திருத்தோணீஸ்வரம் (கிழக்கு கடற்கரை) (2) திருக்கேதீச்சுரம் (வடகிழக்குக் கடற்கரை) (3) முன்னீசுவரம் (மேற்கு கடற்கரை) (4) நகுலீசுவரம் (வடக்கு கடற்கரை) இவையனைத்தும் சிவபெருமான் கோயில்கள் ஆகும்.

தொன்மையான சிவன் கோயில்கள் : தெற்கு கடற்கரையோரப் பகுதியில் தேவி நூவராவில் இளவரசனான விஜயன் கட்டிய சாந்திரசேகரம் சிவன் கோயிலும் பழமையானது ஆகும். இவை தவிர இன்னும் இருபது தொன்மையான சிவன் கோயில்கள் இலங்கையில் இருந்தனவாக அறியப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈழத் தமிழ் இலக்கிய வரலாறு : ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றினை எப்.எக்ஸ்.சி. நடராசா ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கிறார். கா. சிவத்தம்பி கூற்றுப்படி முதற் பிரிவினைத் தவிர ஏனைய நான்கு பிரிவுகளும் ஒத்து இருக்கின்றன.

1) மகாவம்ச அரசர் காலம் (– கி.பி. 300)

2) ஆரியச்சக்ரவர்த்திகள் காலம் (கி.பி. 1240 – 1620)

3) போர்த்துகிசியர் – ஒல்லாந்தர் காலம் (1620 – 1800)

4) ஆங்கிலேயர் காலம் (1800 – 1950)

5) தற்காலம் (1950 –)

[1] மகாவம்ச அரசர் காலம் : வரலாற்று ரீதியாக ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதந்தேவனார் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

[2] ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் : (1240 – 1620) கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண நாட்டின் மத்திய பகுதியினை ஆரியச் சக்கரவர்த்தி கள் ஆளத் தொடங்கினர். கி.பி. 1310-ஆம் ஆண்டில் போசராஜர் இயற்றிய ''சரசோதிடமாலை'' என்ற சோதிடநூலே காலத்தால் முந்திய இலங்கைத் தமிழ் நூலாகும்.

தட்சிண கைலாச புராணம் : ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒன்பதாவது அரசனாக வந்த (கி.பி. 1450-ஆம் ஆண்டுக்கு முன்) ஐந்தாம் செகராசசேகரன் என்பான் தட்சிண கைலாச புராணமும், கண்ணகி வழக்குரை யும் இயற்றினான். தமிழகத்தில் தல புராணங்கள் தோன்றுவதற்கு முன்பே தட்சிண கைலாச புராணம் தோன்றி விட்டது. இந்நூல் திருகோணமலை தலத்தினைப் பற்றி வடமொழியில் வந்த நூலை அடியொற்றி வந்தது. இந்நூலின் திருநகரச்சருக்கத்தில் அக்கால சைவ சமய நிலையைக் காணமுடியும்.

கி.பி. 17-ம் நூற்றாண்டில் பிறந்த ஞானப் பிரகாசர் இலங்கையைச் சேர்ந்தவர். அவர் தமிழ் நாட்டுக்கு வந்து இங்கேயே தங்கி விட்டார். இவர் சிவஞான சித்தி யார்க்கு ஒரு உரை எழுதியுள்ளார். இவ் வுரை சிவசமவாதத்தைக் கூறுவதால் சைவ சித்தாந்திகள், இதனை ஏற்றுக் கொள்ள வில்லை. சிவஞான சுவாமிகள் ஞானப் பிரகாசரின் சமவாதக் கொள்கையை மறுத்து ''சிவசமவாத கண்டனம்'' என்ற நூலை இயற்றியுள்ளார். ஞானப்பிரகாசர் எழுதிய பிறநூல்கள் வடமொழியில் உள்ளன. அவை வருமாறு: (1) பௌஷ்கர ஆகம விருத்தி, (2) சிவஞான போத விருத்தி, (3) சித்தாந்த சிகாமணி, (4) பிரமாண தீபிகா, (5) பிரசாத தீபிகா, (6) அஞ்ஞான விவேகாரம், (7) சிவயோக சாரம், (8) சிவயோகரத்னம்.

[3] போர்த்துகீசியர் – ஒல்லாந்தர் காலம் : (1620 – 1800) ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு பின் ஈழம் முதலில் போர்த்துக்கீசியர் வசமும் பின்னர் ஒல்லாந்தர் வசமும் சிக்கியது. இசுலாமியப் படையெடுப்பு களால் தமிழகத்தில் தலங்கள் முக்கியத் துவம் பெற்றமை போன்று ஈழத்திலும் தல சம்பந்தமான நூல்கள் பெருகத் தொடங்கின.

போர்த்துக்கீசியர் காலத்தில் அவர்களது ஆட்சியின் கொடுமை தாங்காது ஞானப் பிரகாச முனிவர், தில்லை நாதத் தம்பிரான், வைத்தியநாத முனிவர் ஆகியோர் தமிழகம் சென்று தங்கள் சமயப் பணியை மேற் கொண்டனர்.

ஒல்லாந்தர் காலத்திலேயே சைவத் தமிழ்ப் புலவர்கள் ஈழத்திலேயே இருந்து இலக்கியங்கள் இயற்றினர். இவ்வாறு எழுந்தவை : நல்லூர்ச் சின்னத் தம்பி புலவர் பாடிய கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு; வரத பண்டிதர் பாடிய சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், குருநாத சுவாமி கிள்ளை விடுதூது; சின்னத்தம்பிப் புலவர் பாடிய இனுவை சிவகாமியம்மை பதிகம் மற்றும் கதிரை மலைப் பள்ளு, திருக்கரசைப் புராணம், புலியூர்யமக அந்தாதி. இக்கால கட்டத்தில் ஈழத்துத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ் நூல்களில் வடமொழிச் செல்வாக்கு தமிழ் நாட்டைக் காட்டிலும் மிக்கு இருந்தது.

புராணங்கள்

[1] தட்சிண கைலாச புராணம் : இந்நூலின் ஆசிரியர் செகராசசேகரன் V ஆவார். திரிகோணமலையில் எழுந்தருளி யுள்ள கோணேசப் பெருமானையும் மாதுமையம்மையையும் பற்றிக் கூறும் தலபுராணம் ஆகும். 501 செய்யுள்கள் கொண்டது.

[2] சிவராத்திரி புராணம் : ஆசிரியர் அ. வரத பண்டிதர்; கி.பி. 17 அல்லது 18-ஆம் நூற்றாண்டு; 691 பாடல்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு

[1] திரிகோணமலை புராணம் : ஆசிரியர் – மாசிலாமணி முத்துக்குமாரப் புலவர்; பிறந்த ஊர் திரிகோணமலை; காலம் – 1879; 1490 பாடல்கள்.

[2] இளசைப் புராணம் : ஆசிரியர் – கணேச பண்டிதர்; ஊர் – யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணை; பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி; 1090 பாடல்கள்.

[3] சிதம்பர சபாநாத புராணம் : ஆசிரியர் – சபாபதி நாவலர் (1845 – 1903); ஊர் – கோப்பாய், யாழ்ப்பாணம்; 893 செய்யுள்கள்.

[4] திருக்கழிப்பாலைப் புராணம் : ஆசிரியர் – ச. சிவப்பிரகாச பண்டிதர்; (1829 – 1870) ஊர் – நீர்வேலி, யாழ்ப்பாணம்; 276 பாடல்கள்.

[5] புலியூர்ப் புராணம் : ஆசிரியர் – சிவானந்தையர்; 1873 – 1916; தெல்லிப் பழையைச் சேர்ந்த பன்னாலை, யாழ்ப் பாணம், 850 செய்யுள்கள். இந்நூல் சிதம்பரத்தின் மான்மியத்தைப் புராண முறைமையில் அமைத்துத் தந்துள்ளது.

[6] கந்தசட்டிப் புராணம் : ஆசிரியர் – நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியார்; 1849 – 1929; வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்; 998 செய்யுள்கள்; கந்த சட்டி விரத மாண்பு பற்றிக் கூறுகிறது.

[7] கதிர்காமப் புராணம் : ஆசிரியர் – நாகலிங்கம் பிள்ளை; 1882 – 1952; வதிரி யாழ்ப்பாணம்; 720 செய்யுள்கள்; கதிர்காம முருகனின் மாண்பைக் கூறுவது.

[8] திருநெல்வாயிற் புராணம் : கதிர் காமப் புராணம் இயற்றிய ஆசிரியர்; திருநெல்வாயில் எனும் சிவபுரி பற்றியது; 540 செய்யுள்கள்.

[9] திருக்கரைசைப் புராணம் : ஆசிரியர் பற்றித் தெரியவில்லை. திரிகோண மலைக்கு அருகில் உள்ள திருக்கரைசையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பற்றியது; 170 செய்யுள்கள்.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VIII

ஆன்றோர்கள், அறிஞர்கள் - ஈழம்

1801 –2000 – இருநூறு ஆண்டுக்கால ஈழ நாட்டுச் சைவ வரலாற்றிலேயே தாம் வாழ்ந்த போதும் – மறைந்த பின்னும் இன்றுவரை வியாபித்திருப்பவர் நாவலர் பெருமான் ஆவார்கள். அவர்கள் பரப்பிய சைவ மணம் இன்றும் – இன்றைய போர்க்காலச் சூழலிலும் கூட – யாழ்ப் பாண மண்ணில் கமழ்ந்து கொண்டிருக் கின்றது. வெடிமுழக்கத்தினிடையே – இரவு பத்து மணிக்கு - ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தும் வரை – வழத் தமிழர்கள் தமிழ்நாட்டுச் சைவ அறிஞர்களின் உரை களைக் கேட்பதும், திருவைந் தெழுத்து மந்திரம் ஓதுவதும்,. பள்ளிப் பிள்ளைகள் தேவாரம் ஓதுவதுமாகச் சைவநெறி பின்பற்றி வருகின்றனர்.

நாவலர்க்குப் பின் நாவலர் பரம்பரை தோன்றியது. காசி வாசி செந்திநாதையர், நா. கதிரைவேற்பிள்ளை எனச் சைவ அறிஞர்கள் சைவ சமயப் பணியாற்றி செய்த கல்வித் தொண்டும், பிறசமய மறுப்பும் யாழ்ப்பாணத்தின் சூழலுக்குத் தேவையாக இருந்தன.

ஆனந்த குமாரசாமி அவர்கள் '' Dance of Siva'' என்ற ஒரே நூலின் மூலம் உலகப் புகழ் பெற்றார். நடராஜ தத்துவம் மேனாட்டவரையும் சென்றடைந்தது. இலங்கை அறிஞர்கள் தமிழ்நாட்டு அறிஞர்களைவிட மிகுதியான ஆங்கில நூல்களைப் படைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. பொன்னம்பலம் இராமநாதன், இரத்ன நவரத்னம் அம்மையார் ஆகியோர் இந்த வரிசையில் முன் நிற்கின்றார்கள்.

ஈழநாட்டிலேயே ஏற்பட்டுள்ள உள் நாட்டுக் குழப்பத்தால் ஈழத்தமிழர்கள் அமெரிக்க, ஐரோப்பிய, கனடா நாடு களுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் தங்கள் சைவப் பணியையும், தமிழ்ப் பணியையும் மறந்து விடவில்லை. இந்தச் சூழ்நிலையை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தவத்திரு சிவநந்தி அடிகளார் உலகச் சைவ பேரவை நிறுவி உலகத் தலைநகரங்களில் சைவமாநாடு நடத்தி அனைவரையும் ஒருங்கிணைத்து வருகின்றார். மறுபுறம் ஹவாயில் சுப்பரமணிய சிவாய சுவாமிகள் சைவப் பெருநகரமே உருவாக்கிப் பணியாற்றியும் வந்திருக்கின்றார். ஆனால் இவரது கொள்கை முழுதும் சைவ சித்தாந்தம் என்று சொல்வதற்கில்லை. இருபெரும் துறவியரும் இலங்கையைச் சேர்ந்த யோக சுவாமிகளின் சீடர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1

சைவப்பயிர் தழைக்க மதமாற்றக்களை எடுக்க எழுந்த சைவ ஞாயிறு (1822)

ஊரெல்லாம் சிவமணம் : *1930 ...* யாழ்ப்பாணம் சிவன்கோயில் திருவிழா, அடியார்கள் திரிபுண்டரமாய்த் திருநீறு அணிந்திருந்தனர். கோயிலுக்குச் செல்லும் ஆடவர் எவருமே சட்டை அணியாது, உத்தரியத்தை அழகாக இடுப்பில் கட்டி யிருந்தனர். அங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் சமயதீக்ஷை பெற்ற வர்கள். சிலர் விசேட தீக்ஷை பெற்றிருந் தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



கோயிலை நெருங்க நெருங்க ''அரோஹரா, அரோஹரா'' என்ற ஒலி ஓங்கி எழுந்தது. கோயிலுக்குள் சில அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டிருந்தனர்.

சில நாழிகை கழித்து சுவாமி வீதியுலா வரும் சமயம். சுவாமி இடபவாகனத்தை ஆரோகணித்ததும் செல்வர், வறியர், கற்றார், கல்லாதார், முதலாளி, பணியாள் என்ற வேறுபாடு இல்லாமல் ''நான், நீ'' என்று போட்டி போட்டுக் கொண்டு சுவாமியைத் தாங்கிச் செல்ல விரைந்தனர். மற்றும் சிலர் குடை, கொடி, ஆலவட்டம், தீவட்டி என்னுமிவற்றுள் ஒவ்வொன்றைத் தாங்கினவராய் முன் சென்றனர். வேறு சிலர் பண்ணிசையோடு அருட்பாக்களைப் பாடிய வண்ணம் சுவாமியைப் பின் தொடர்ந்து நடந்தனர்.

பெண்கள் தமது பக்திப் பெருக்கினால் சுவாமியைப் பின் தொடர்ந்தவாறு பஞ்சாங்கமாக விழுந்து வணங்கினர். பின்னர் கையினால் நிலத்தைத் துடைத்தனர். பின்னர் பஞ்சாங்க வணக்கம், எழுந்து சில அடிசென்று நிலத்தைத் துடைத்தனர். இப்படியே சுவாமி நிலைக்கு வரும் வரை மாறி மாறிச் செய்தனர். சுவாமியின் திருச்சுவடு நிலத்தில் பதிந்ததாகப் பாவித்து பிறரால் அச்சுவடு மிதிக்கப்படக்கூடாது என்று செய்யும் இவ்வழிபாட்டுக்கு ''அடியழித்தல்'' என்று பெயர்.

திருவிழா தொடங்கி முடியும் வரை ஒவ்வொரு நாளும் ஒரு வேளை தான் உணவு ஏற்பர். மதிய உணவிற்கு யாரேனும் ஒரு அடியாரை அழைத்து வந்தால்தான் உண்ணுவார்கள்.

(பொன் முத்துக்குமாரன் – ஆறுமுக நாவலர் சிறப்பு மலர் 1963.)

ஏதோ பெரிய புராணக் காலத்திற்கே போய்விட்டது போலத் தெரிகின்றது.

'' Look at this picture and that'' என்பான் ஆங்கிலக் கவி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எப்படி இருந்தது என்று பார்ப்போம்.

சைவம் அருகிப் போன நிலை : கி.பி. 1800-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆங்கிலேயே ஆட்சியின் கையில் அகப்பட்டுச் சைவ சமயத்தை பழைய நிலைக்குக் கொண்டு வருபவர் மிக அரிய ராயினர். வித்துவான்களாயுள்ளவர்கள் கடினமான பாட்டுப் பாடுவதிலேயே தங்கள் காலத்தைக் கழித்தார்கள். சமயாபிமானம் அவர்களிடத்தில் மிகக் குறைவாக இருந்தது. கிறிஸ்துவ குருமார் இதுவே சமயமென்று நினைந்து அநேகரைக் கிறிஸ்துவராக்கத் தொடங்கினார்கள். பள்ளிக் கூடங்களை வைத்துப் பிழைப்புக் கேற்ற இங்கிலீசுப் பாஷையை உத்தியோகம் வாங்கித் தருவோம் என்று சொல்லிப் படிப்பித்துப் பலரை கிறிஸ்துவராக்கினார்கள்; சிலரை சோறு, சீலை கொடுத்துக் கிறிஸ்துவராக்கினார்கள்; சிலரைக் கலியாணச் செலவு கொடுத்துக் கிறிஸ்துவராக்கினார்கள். கீழ்ச் சாதியாய் உள்ளவர்கள் சிலரை மேற்சாதியாரோடு சமமாயிருக்கச் செய்வோமென்று சொல்லிக் கிறிஸ்துவராக்கினார்கள்; சைவ சமயத்தை மிக இகழ்ந்து பிரசங்கங்களுஞ் செய்தார்கள்; பத்திரிகைகளிலும் எழுதிப் பரப்பினார்கள்; யாழ்ப்பாணத்தை முழுதும் பிடித்து விட்டோம் என்று ஊதுவதற்கு வெற்றிச் சங்கைக் கையில் எடுத்தார்கள். (ஆறுமுக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாவலர் சரித்திரம் – த. கைலாசப் பிள்ளை)

இது பிற சமயத்தவரின் நிலை. சைவ சமயத்தினரின் நிலையோ வருத்தம் தருவதாக இருந்தது.

சைவக் கோயில்களிலே வழிபாட்டு முறைகள் செவ்வனே நடைபெறவில்லை. சைவாகம விதிகளுக்கும் குமாரதந்திரம் போன்ற பிரமாண நூல்களுக்கும் புறம்பாகத் திருவிழாக்கள், பூசை, விக்கிரக தாபித்தல் முதலியன நடைபெற்று வந்தன. சைவக் குருமார்களிற் பலர் சைவாகமத்திற் சுலோகம் ஒன்றாயினும் தேவார திருவாசகங்களிற் பாடல் ஒன்றாயினும் அறியாது இருந்தார்கள்.

பொதுமக்களுக்குக் காலத்துக்குக் காலம் சைவ சமய உண்மைகளை எடுத்துரைக்கும் சைவப் பிரசாரகர் இக்காலத்தில் இல்லை. சைவ சமய உண்மைகளை நிலைநாட்டிப் போலிப் பிற மதவாதங்களின் தூஷணத் தினை எதிர்த்து வெளியிடச் சைவர்களுக்குச் செய்தித் தாள்களில்லை. ''உதய தாரகை'' ''கத்தோலிக்க பாதுகாவலன்'' முதலியன யாவும் கிறிஸ்துவ கத்தோலிக்கரால் நடத்தப்பட்டவை. பாடசாலை, செய்தித் தாள், அச்சு இயந்திரம், பிரசங்கம் முதலிய சாதனங்கள் எவையும் இல்லாத நிலையில் சைவம் வளர இடமேது? சைவக் கோயில் களில் பல ஏற்கனவே போர்த்துகேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சியின் பயனாகக் கிலமடைந்தன. அக்கிலமடைந்த கோயில்களைப் புனருத்தாரணம் பண்ணு விக்கப் போதிய ஊக்கம் கொண்ட சைவர் இல்லை. எம்மதமும் சம்மதம் என வாளா தாம் ஆற்றுப்படுத்தப்படும் வழியே செல்லும் பரதந்திரரே இக்காலத்தில் பெரும்பாலும் வாழ்ந்தனர்.

சைவக் கோயில்களில் தேவாரம் முதலி யன பண்ணுடன் ஓதப்படுதல், புராணங் களுக்குப் பயன் சொல்லப்படுதல் முதலிய சில புண்ணியச் செயல்களுக்குப் பதிலாக வாணவேடிக்கைகளும், தாசிகள் நடனமும், சிற்றின்பப் பாடல்களும், பிற களியாட்டுக்களும் இடம் பெற்றன. இறைவனின் பேரில் உயிர்ப்பலி நிகழ்த்தப் பட்டது. கோவிலின் வருமானத்தைத் தனிப்பட்டவர் உள்ளம் போகும் போக்கில் செலவிட்டனர். (ஆறுமுக நாவலர் சிறப்பு மலர்)

1800-ஆம் ஆண்டில் சைவ சமயமே அற்றுப்போன நிலை. ஞானசம்பந்தர் வருகைக்கு முன் கி.பி. 6, 7-ஆம் நூற்றாண்டில் மதுரை இருந்த நிலை; 1936-ஆம் ஆண்டில் இல்லங்கள் தோறும் சிவ முழக்கம். எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது? இந்த மாற்றத்தைச் செய்தது யார்?

நாவலர் தோற்றம் : இந்தச் சூழ்நிலை யில்தான் ஆறுமுக நாவலர் தோன்றினார். நாவலர் தோன்றியிராவிடில் ஈழத்தில் சைவ சமயமே இல்லாது போயிருக்கும். ''It is no exaggeration to state that, if not for Navalar, Saivism and Tamil would hardly have survived in Ceylon'' என்கிறார் ஜி.ஜி. பொன்னம் பலம்.

நாவலர் கல்வியறிவு : 1822-ஆம் ஆண்டில் நல்லூரிலே தோன்றிய ஆறுமுக நாவலர் இளவயதிலேயே தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை ஒருவாறு கற்றுக் கொண்டார். ஆங்கிலப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து ஆங்கிலமும் கற்றுக் கொண்டார். ஆங்கிலத்தைத் தமிழ்ப்படுத்துவதிலும், தமிழை ஆங்கிலப்படுத்துவதிலும் வல்லவ ரானார். சைவ சித்தாந்த சாத்திரங்களையும், தேவார திருவாசகங்களையும் தாமே கற்றுணர்ந்தார். சமஸ்கிருத நூல்களை வாசிக்கவும், அவற்றின் பொருளை ஐயந்திரிபற விளங்கவும் கற்றுக் கொண்டார்.

பைபிள் மொழி பெயர்ப்பு : பார்சிவல் என்னும் பாதிரியார் பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்கும் பொழுது நாவலர் அவர்களைத் தனக்கு ஆசிரியராக வைத்துக் கொண்டார். பைபிளின் பல மொழி பெயர்ப்புகளை ஒத்துப்பார்த்த மகாலிங்கை யரைத் தேர்வாளராகக் கொண்ட சென்னை அறிஞர்குழு பார்சிவல் பாதிரியாருடைய மொழி பெயர்ப்பே சிறந்தது என்று பாராட்டினர்.

பாதிரிமார்கள் பாணியிலேயே சைவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயம் பரப்புதல் : ''நாவலர் பெருமான் பார்சிவலிடம் ஆசிரியராக இருந்து தமிழ் திருத்திக் கொண்டிருக்கும்போதே கிறிஸ்துவ சமயம் பரவுவதையும், சைவ சமயம் வளர்ச்சி குன்றுதலையும் கண்டார். பைபிளை மொழி பெயர்க்கும் காலத்திலேயே, அதனையும் அதன் பல்வேறு உரைகளையும் நன்றாகக் கற்றுக் கொண்டார். அதிலுள்ள குற்றங்கள் இவருக்கு அப்படியே அத்துப்படி. அதில் இவருக்கிருந்த அறிவு பாதிரிமார்க்குக் கூட இல்லை. பாதிரிமார் செய்யும் உபாயங்களையும் நன்கு அறிந்து கொண்டார். பாதிரிமார்கள் என்னென்ன வகையால் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பினரோ அவ்வகையைப் பயன்படுத்தி நாவலர் அவர்கள் சைவ சமயத்தைப் பரப்ப முனைந்தார். ''நாமும் ஏன் அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பி நமது சைவ சமயத்தைப் பரப்பலாகாது? இந்தக் கேள்வி சென்ற நூற்றாண்டில் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) ஒரே ஒருவருக்குத்தான் உதித்தது. அவரே நம் ஆறுமுகனார்'' என்கிறார் சுத்தானந்த பாரதியார்.

கல்விப் பணி : கிறிஸ்துவ சமயம் பரப்புவதில் பாதிரிமார்களுக்கு முதல் கணையாக இருந்தது கல்வி. அதே கணையை நாவலர் எடுத்துக் கொண்டார். 1846-ஆம் ஆண்டு முதல் இரவும் பகலும் ஊதியம் பெறாது கற்பிக்கத் தொடங்கினார். அப்பொழுது ஏழு பேர் முதல் மாணாக்கர்களாகச் சேர்ந்தனர். இவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் பெரிய புராண உரை எழுதிய ஆறுமுகத் தம்பிரான், காசி வாசி செந்திநாதையர், சைவசித்தாந்த ஆசிரியர் நடராசர், சபாபதி நாவலர், ம.க. வேற்பிள்ளை முதலிய பேரறிஞர்கள் ஆவர். கிறிஸ்துவ சமயத்திற்கு மாறிய பலரிடம் சைவத்தின் பெருமைகளை எடுத்துரைத்து மீளவும் சைவம் வரச் செய்தார். சிவ தூஷணங்கள் பேசியும் எழுதியும் வந்த சூறல் விசுவநாத பிள்ளை என்பவர் இவர் அறிவுரையால் மனம் மாறி – மதம் மாறி – தான் செய்த சிவ தூஷணங்களுக்குப் பரிகாரமாகப் பொன் னூசி காய்ச்சித் தமது நாவை சுடுவித்துக் கொண்டு சைவரானார்.

1848-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலே வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் கல்விச் சாலையைத் தொடங்கினார். இக்கல்வி நிலையத்தில் கற்பிப்பதற்காக நிகண்டு முதலிய கருவிகளையும், தாம் எழுதிய பாலபாடங்களையும், சைவ சமயசாரம், சிவாலய தரிசன விதி முதலிய நூல்களையும் அச்சிடுவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வி நிலையம் போலவே சிதம்பரத்திலும் 1864-ஆம் ஆண்டில் ஒரு கல்வி நிலையத்தைத் தொடங்கினார்.

இவர் கல்விப் பணிக்கு முன்கூட்டியே திட்டமிட்டு தீர்க்கதரிசனமாகச் செய்தனவற்றை இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரி கி. லஷ்மணன் அவர்கள் ''கல்வித்துறையில் தீர்க்க தரிசனம்'' என்ற கட்டுரையில் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

1) இலவசக் கல்வி – அண்மையில் 1945; நாவலர் ஆரம்பித்தது 1846.

2) தாய்மொழி மூலம் கல்வி – அண்மையில் 1946; நாவலர் ஆரம்பித்தது 1848.

3) சமயப்பாடம் கட்டாயமானது – அண்மையில் 1955; நாவலர் செய்தது 1846.

4) பிரதிபேதமின்றிப் பதிப்பித்தல் – அண்மையில் 1959; நாவலர் செய்தது 1861.

5) பாட நூல்கள் எழுதுவதில் முன்னோடி :

நாவலரே பாலபாடங்களை எழுதினார். சென்னையிலுள்ள கல்விச் சங்கம் வெளியிடும் பாடநூல்களைவிட நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்றானும் சிறந்தவை என ''Native Public Opinion'' என்னும் ஆங்கிலச் செய்தித்தாள் எழுதியது.

பிரச்சாரம் : நாவலர் காலத்தில் கிறிஸ்துவப் பிரச்சாரம் சிவ தூஷணையாகக் கடுமையாக இருந்தது. பிரச்சாரத்தினைப் பிரச்சாரம் மூலம் நாவலர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. சைவ சமயத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தின் உண்மைகளை மக்களுக்குப் புரிய வைத்தல்; சைவ சமயத்துள்ளே புகுந்து விட்ட மாசுகளை நீக்குதல்; புறச் சமயங் களின் தீவிரமான பிரசாரத்தினை முறியடித் தல் என மும்முனைத் தாக்குதல் செய்ய வேண்டியிருந்தது.

சைவப் பிரசாரத்தை இருவழிகளில் நாவலர் அவர்கள் சிறப்பாகச் செய்தார்கள். அவை புராண படனமும், சொற்பொழிவு மாம். சைவ உண்மைகளை விளக்கப் புராண படனத்தினை அவர் சிறப்பாகப் பயன்படுத்தினார். சொற்பொழிவை சைவ நெறி விளக்கத்திற்கும் சுத்திகரணத்திற்கும் பயன்படுத்தியவாறு அவர் புறச்சமய கண்டனத்திற்குப் பயன்படுத்தவில்லை. அவருடைய புறச்சமயக் கண்டனங்கள் பெரும்பாலும் பிரசுரக் கணைகளாகவே புறப்பட்டன.

1847-ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் நாவலர் அவர்கள் தனது முதற் சொற்பொழிவைத் தொடங்கினார். அதன் பிறகு ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் நியமமாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். 1879-ஆம் ஆண்டு வரை 32 ஆண்டுகள் தொடர்ந்து பேசி வந்தார்.

சொற்பொழிவுகளில் இவர் தொடாத தலைப்புகளே இல்லை. சைவ சமயத்தின் இலக்கணம், சிவசின்னங்கள், வேதா கமங்கள், செய்நன்றியறிதல் போன்ற ஒழுக்கநெறி முறைகள் என பலநிலை களில் பேசி மகிழ்வித்தார்.

நாவலர் சமயப் பிரசங்கம் செய்யும் போது இவர் தரித்திருக்கும் பட்டாடையும், திரிபுண்டரமும், கௌரி சங்கமும், கொத்தும், தாழ்வடமும் எவரையும் வசிகரிக்கும். இவருடைய குரலோசையோ வெகுதூரத்திலிருப்பவர்க்கும் கேட்கத் தக்க தொனியும் மதுரமும் உடையது. எல்லா வகையான இராகங்களும் இவருக்கு வரும். சிலகாலங்களிற் பத்து நாழிகை நேரம் வரையும் காலெடுத்து மாறி வையாமலும், கை, தலை முதலிய உறுப்புக்களை அசைக்காமலும் ஒரே மாதிரியாய் இருப்பார்.

அறிஞர்களும், துறவிகளும் இவரது சித்தாந்தப் புலமையறிந்து வியந்தனர். திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்கள் ''நாவலர்'' என்ற பட்டம் வழங்கினார்கள். திருவண்ணாமலை யாதீனம் குன்றக்குடி சந்நிதானம் இவர் களைச் சிவிகையில் ஏற்றிப் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள்.

நாவலர் பேச்சைக் கேட்டவர்கள் புலால் உண்பதையும், மது அருந்துவதையும் கைவிட்டார்கள். பலர் தீக்கை பெற்று சந்தியாவந்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். உருத்திராக்கம் அணிந்து கோயிலுக்குச் செல்லலானார்கள். திருமுறைகள் ஓதலா னார்கள். அறச்செயல்கள் புரியலானார்கள். பசுக்களை அடித்து வந்தவர்கள் ஆவுரிஞ்சு கல் நாட்டுவித்தார்கள்.

கிறிஸ்து மத கண்டனம் : யாழ்ப் பாணத்திலே பாதிரிமார்கள் எல்லாம் சைவ சமயத்தை இகழ்ந்து பேசுவதிலேயே இருந்தனர். ''குருட்டு வழி'' ''மும்மூர்த்தி லக்ஷணம்'' என எண்ணற்ற துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்டனர். இவற்றை யெல்லாம் கண்டு நாவலரவர்கள் மனம் பொறாது துடித்தார். சைவத்தின்மேல் கூறப்பட்ட தூஷணைகளுக்குப் பதிலாக ''சிவதூஷண பரிகாரம்'' (1854) என்ற நூலை வெளியிட்டார். முருகக் கடவுளைப் பற்றிப் பாதிரிமார் எழுதியதற்கு மறுப்பாக ''சுப்பிரபோதம்'' எனும் பிரசுரத்தினை எழுதி வெளியிட்டார்.

''வச்சிர தண்டம்'' என்றொரு பிரசுரமும் வெளியிட்டார். ''புறச்சமய கண்டனம் இவருக்குச் சீவபரியந்த வேலை'' என்கிறார் கைலாசபிள்ளை. நாவலர் இந்த அளவுக்குக் கடும்பணி ஆற்றியிரா விட்டால் யாழ்ப் பாணம் கிறிஸ்துவ நாடாக மாறியிருக்கும்.

அச்சியந்திரம் வாங்குதல் : பாதிரிமார் அச்சியந்திரம் வைத்து உதயதாரகை என்னும் கிறிஸ்துமத பத்திரிகையையும், கிறிஸ்துவ மதத்துக்கு அனுகூலமான பிற துண்டுப் பிரசுரங்களையும், சைவத்தைத் தூற்றும் துண்டுப் பிரசுரங்களையும், புத்தகங்களையும் அதில் அச்சிட்டு வெளிக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொணர்ந்தார்கள். இப்பத்திரிகைகளுக்கும் புத்தகங்களுக்கும் மறுப்பு எழுதி வெளிப்படுத்த வேண்டி இருந்தமையானும், சைவர்களுக்கு உபயோகமாகப் பலநூல்களை அச்சிட வேண்டியிருந்தமையானும் இவர் 1849-ஆம் ஆண்டில் சென்னையில் ஓர் அச்சியந்திரம் வாங்கி ''வித்தியாநுபாவன யந்திரம்'' என்று பெயர் கொடுத்து வண்ணார் பண்ணையில் நிறுவினார். அதில் தாமியற்றிய நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு வெளியிட்டார்.

புத்தகங்கள் வெளியிடுதல் : நாவலர் அச்சிட்ட புத்தகங்களில் எழுத்துப் பிழைகள் சிறிதும் இல்லாமலும் அதிகக் கல்வியில்லாதவரும் எளிதாக வாசித்தற்கும் விளங்குதற்கும் ஏதுவாகச் சொற்கள் பிரிக்கப்பட்டுச் சந்தி விகாரமின்றி குறியீடுகள் செவ்வையாக இடப்பட்டும் இருக்கும். செவ்வையான பதிப்பு என்றால் அது நாவலர் பதிப்பே என்றாகிவிட்டது. அவர் பதிப்பின் சிறப்பு அம்சங்கள் வருமாறு :

1) பிரதிகளின் ஆதாரம் இல்லாமல் ஒன்றையேனும் தாமாகத் திருத்தாமை.

2) பாடபேதங்கள் ஒன்றும் அச்சிடாமை.

3) நாவலர் தமக்கு முன்னிருந்த ஆசிரியர்களது துணையில்லாமல் சித்தாந்தத்திலாவது, இலக்கணத்திலாவது, வேறு எவற்றிலாவது தமது யுத்தியினாலே ஒன்றையும் சொன்னதேயில்லை.

சிவாகமமும், சிவதீக்கையும் : ''சிவ தீக்கையே முத்திக்குச் சாதனம்; வேதத்தினும் ஆகமம் சிறந்தது; சிவாகமத்தில் சொல்லியவாறே கோயில்கள் நடத்தப்பட வேண்டும்'' என்பதில் நாவலர் குறியாய் இருந்தார். ''சிவ தீக்கை வாங்காத பிராமணர்களிடம் திருநீறு வாங்கலாகாது, அன்னாரை வணங்குதலும் கூடாது, அவர்களைக் கொண்டு கோயில் பூசனை, திருவிழாக்கள் நடத்துதல் கூடாது'' என்று நாவலர் அவர்கள் பிரச்சாரம் செய்து வந்தார். இதனால் வெகுண்ட வைதிக பிராமணர்கள் இவரைத் தூற்றலாயினர். சைவ ஆகமங்களையும் நிந்தித்தனர். சில செல்வர்களும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்தனர். 1863-ஆம் ஆண்டில் தனது கல்விச் சாலையில் ஆகமத்தின் சிறப்பு பற்றி விரிவாகப் பேசினார். அவர் உரைக்குப் பதிலளிக்க முடியாமல் பிராமணர்கள் திகைத்தனர்.

வைதிக பிராமணர் சொல்வது சாத்திர விரோதம் என மக்களும் தெளிந்தனர். சிரார்த்தம், திருமணம் முதலிய கருமங்களாலே அவர்களுக்கு தானம் செய்தலையும் நிறுத்திக் கொண்டனர். கோயில் அதிகாரிகளும் கோயில்களிலும் சிவதீக்கை பெற்ற பிராமணரைக் கொண்டே பூசை செய்விக்கலானார்கள். மக்களும் சிவதீக்கை பெறாதவரிடம் திருநீறு பெறுவதையும் நிறுத்திக் கொண்டனர். சிவதீக்கை பெற்றோர்க்குக் கிடைக்கும் மரியாதையைத் தெரிந்து கொண்டும், தாங்கள் சிவதீக்கை பெற்றோருக்குத் திருநீறு கொடுப்பது தகுதியன்று என்று அறிந்த பிராமணர்கள் அநேகர் சிவதீக்கைப் பெற்று சிவாகம நெறியிலே ஒழுகத் தொடங்கினார்கள். சிவாகம ஆராய்ச்சியும்,சிவபூசையும், தேவார திருவாசகப் பாராயணமும், யாழ்ப்பாணமெங்கும் பரவத் தொடங்கியது. வைதிக மார்க்கத்திலும் அதிகமாகச் சைவமார்க்கம் தழைத்தோங்கியது.

அருட்பா வழக்கு : நாவலர் பெருமான் அவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வு அருட்பா – மருட்பா போராகும். இதனைப் பற்றி எழுதுவது கத்திமுனையில் நடப்பதாகும். நாவலர் பெருமானவர்கள் வாழ்க்கையை எழுதிய கைலாச பிள்ளையின் கூற்றினைக் கொண்டே சொல்வது இக்கட்டுரைக்குப் பொருத்தமாகும்.

திருவருட்பா வழங்கிய வள்ளல் பெருமானுக்கும், நாவலர் பெருமானுக்கும் முன்விரோதம் ஏதும் இல்லை. நாவலர் பெருமான் புலவர்களைக் கண்டு அழுக்காறு கொள்பவருமல்லர். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், மகாலிங்கையர், விசாகப் பெருமாளையர் போன்ற புலவர் பெருமக்களை மனமாரப் பாராட்டியிருக்கிறார் நாவலர் பெருமான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்தன்மையராய் இருந்தும் வள்ளல் பெருமானும், அவர் மாணாக்கரும் செய்தனவற்றை மாத்திரம் பொறுத்துக் கொள்ளவில்லை. உலகத்தில் எத்தனையோ பேர் எத்தனையோ பிழைகள் நிறைந்த நூல்களை இயற்றினார்கள். அவைகளை யெல்லாம் இவர் பொருட்படுத்திக் கண்டிக்கவில்லை. வள்ளல் பெருமான் இவருக்கு ஒரு அபராதமும் செய்யாதவ ராயிருந்தும், அவரையும் அவருடைய பாடல்களையும் கண்டித்தும் ''போலி யருட்பா மறுப்பு'' என ஒரு நூல் எழுதி அதனை மாவண்டூர்த் தியாகேச முதலி யாரைக் கொண்டு வெளியிட்டார். இது ஏன்?

''சமயாசாரியர்களோடு இவ்விராமலிங்க பிள்ளையைச் சமத்துவப்படுத்துவது தகாது என்பதே இவர்கருத்து. இராமலிங்க பிள்ளை அவர்களோடு சமத்துவப்படுத்தப் படின், அவர்களும் இவ்விராமலிங்க பிள்ளை போன்ற ஒழுக்கமுடையவர் களாயே இருந்திருப்பார்கள் என்றும், அவர்கள் அருள் பெற்றோர்கள் என்பதும் இவ்விராமலிங்க பிள்ளை அருள் பெற்றது போலத்தானே பொய்யாயிருக்கும் என்றும் பரசமயிகளும் நம்மவரும் பலரும் எண்ணு தற்கு இடமாகுமன்றோ! இது பற்றியே கருங்குழி இராமலிங்க பிள்ளையையும் அவருடைய நூலையும் இவர் கண்டித்தார்'' – கைலாச பிள்ளை.

''பாதிரிமார்கள் ஒரு துண்டுப் பத்திரிகை யில் நால்வர் குரவர்கள் செய்த அற்புதங் களும் இராமலிங்கரின் செத்தோரை எழுப்புதல்'' போன்ற அற்புதங்களே செய் திருந்தார்கள். அதனைத் தியாகேச முதலி யாரும் குருவும் நாவலருக்குக் காட்டி மேலும் வேண்டுதல் செய்தார்கள்'' – சி. கணபதிப் பிள்ளை.

''இராமலிங்க பிள்ளை தாம் தண்ணீரால் விளக்கெரித்தாரென்று தாமே தமது பாட்டினால் வெளிப்படுத்துகின்றார்'' – நாவலர் பெருமான்.

''இராமலிங்க பிள்ளைக்குச் சிவபெரு மானாலே இரசவாதம் உபதேசிக்கப்பட்ட தென்றும், அவர் இரசவாதத்தினாலே ஆறுபாரந்தங்கம் செய்து வைத்திருக்கிறார் என்றும், அது கொண்டு அவர் பார்வதீபுரம் எனப்பெயர் பெற்ற ஒரு பட்டணமும் அதனுள்ளே ஒரு கனக சபையும் கட்டு வித்துச் சிதம்பர சபாநாயகரை உலகறிய நடந்து அங்கே வந்து நிருத்தம் பண்ணும் படி செய்யப் போகின்றாரென்றும், பசித்தவர்கள் எல்லாருக்கும் அன்னம் கொடுக்கவும், வியாதியாளர் எல்லாருக்கும் வியாதி நீக்கவும், கல்வி விருப்பமுடைய வர்கள் எல்லாருக்கும் கல்வி கற்பிக்கவும் போகின்றாரென்றும், அவருடைய மாணாக்கர் கடைதோறும், ஆலயம் தோறும், வீடுதோறும், தெருத்தோறும் வாய்ப்பறை அறையப் புகுந்து பல வருஷங்களாயினவே. அவர் பட்டணங் கட்ட அஸ்திவாரம் போட்டு இரண்டு வருஷத்திற்கு மேலாயிற்றே. இவைகள் இன்னும் நடத்தப் படாதது என்னையோ?'' நாவலர் பெருமான்.

''இராமலிங்க பிள்ளை ஆகாய கமன குளிகை செய்து சென்ன பட்டணத்தினின்று தம்மைத் தரிசிக்க வந்த மாணாக்கர்கள் இருவருக்கு ஒவ்வொரு குளிகை கொடுக்க, அவர்கள் அக்குளிகையை உட்கொண்டு கூடலூரினின்றும் இரண்டு தென்ன மர உயரத்தின் மேற்படப் பறந்து இரண்டு நாழிகைப் பொழுதினுள்ளே சென்ன பட்டணம் அடைந்தார்கள் என்று அவர் மாணாக்கர்கள் வாய்ப்பறை அறைகின் றார்களே'' – ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு.

இவையெல்லாம் வள்ளல் பெருந்தகை நிகழ்த்திய அற்புதங்களும், அவற்றைப் பாதிரிமார் திரித்துக் கூறி நால்வர் பெருமக்களை அவமதித்ததும், அவற்றால் நாவலர் பெருமான் கொதித்துக் கண்ட னங்கள் எழுப்பியதுமாகும். ஒரு கால கட்டத்தில் வள்ளல் பெருமானைப் பின்பற்றியவர்கள் திருக்கோயில்களில் தேவார திருமுறைகளை நீக்கிவிட்டு வள்ளல் பெருமான் பாடல்களைப் பாடச் செய்துவிட்டனர். இதுபற்றி நாவலர் பெருமான் இவ்வாறு கூறுகிறார். ''சிலபோது சென்னப் பட்டணத்திலுள்ள சிவாலயங்களில் உற்சவத்திலே தேவார

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலிய அருட்பாக்களை நிறுத்திவிட்டு இராமலிங்க பிள்ளை பாடலையே ஓதுவிக்கின்றார்கள்''.

''சிலர் பொருட்டுச் சில தேவாலயங் களிலே தேவாரஞ் சொல்லப்புகுந்த பரம் பரை ஓதுவார்களை சிவசந்நிதியிலே துர்ப்பாஷைகளினால் வைது அடித்து ஓட்டுதற்குத் துணை செய்தார்கள். ஓகோ, அதுமட்டோ, அவ்வருச்சகர்கள் கல்வியறி வில்லாத ஒருவன் பேரால் எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய ''சிவாலய குருமான்மியம்'' என்னும் புத்தகத்திலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உண்மை முத்தி கிடைக்கவில்லை என்றெழுதிய குழறுபடையைக் கேட்டும் சிவசிவ! அவ்வதிபாதகனைப் பாராட்டிப் பல ரெதிரே அவனுக்குச் சம்மானஞ் செய்தார் களே?'' – ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு.

இவற்றையெல்லாம் பொறுக்காத பெருமான் ''போலியருட்பா மறுப்பு'' எழுதினார். வாதிட்டார். வழக்கு மன்றமும் சென்றார்.

பொதுப் பணிகள் : இவையெல்லாம் தவிர நாவலர் செய்த பொதுப் பணிகள் எண்ணற்றவை. தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களைச் சீர்செய்ய ''பதிபுண்ணிய பரிபாலன சபை'' நிறுவினார். இலங்கையில் திருக்கேதீச்சரம் கோயில் அழிந்துபோன நிலையில் கீழ்நிலம் அரசு வசப்பட, அதனை மீட்டும் கோயிலுக்குப் பெற்றுத்தர பாடுபட்டார். கீரிமலையிலே உள்ள சிவன் கோயில் அழிந்துவிட அங்கே வேறொரு கோயில் கட்ட முனைந்தார். யாழ்ப்பாணத்தில் பஞ்சமும், பேதியும் உண்டான பொழுது இவரே நேரில் சென்று உணவு, மருந்து விநியோகத்தில் இருந்த சீர்கேடுகளை நீக்கப் பணி புரிந்தார். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் சிவாகமங்களுக்கு முரணாகச் சில செயல்கள் நடைபெற, நாவலர் பெருமான் நல்லூர்க் கந்தசுவாமி தனக்கு ஆன்மார்த்த மூர்த்தமாக இருந்தும் அக்கோயிலுக்குச் செல்வதை நிறுத்தி விட்டார்.

சைவ வளர்ச்சிக்காக நாவலர் பெருமான் தம்மை வருத்திக் கொண்டது மிகவும் உருக்கம் தருவதாகும். இவர் அனுபவித்த இம்மைச்சுகம் புகழ் ஒன்றேயல்லாமல் வேறொன்றுமில்லை. அதனையும் இவர் மனத்தால் அனுபவிக்கவில்லை. சென்னை யில் புத்தகங்களை அச்சிடுங் காலத்தில் பூசை நைவேத்தியத்தை மாத்திரம் உண்டிருந்த காலங்களும் உள. ''பிதிரார்ச் சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருக்கவும் அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் 1848-ஆம் ஆண்டில் பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன். தாங்கள் என்னைவிடலாகாது என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலீஷ் கற்றவர் களுள் அநேகர் தங்கள் சக்திக்கேற்ற உத்தி யோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக் கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றிருந்தும், அஃதில்லாமை யால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணைமாத்திரங் கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும், அதையும் நான் விரும்ப வில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளை நிலம், தோட்டம், ஆபரணம் முதலிய வற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேச மாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசை யாகும்''.

அந்தப் பேராசையே இன்றும் இலங்கை யில் சைவம் தழைத்து உலகெங்கும் பரவ வழிவகை செய்திருக்கிறது. அது தான் நாவலர் பெருமானின் சாதனை; ஐந்தாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குரவர் என்றழைக்கப்பட்ட நாவலர் பெருமான் 1879-ஆம் ஆண்டில் பரிபூரணம் அடைந்தார். (தோற்றம் – 18.12.1822; மறைவு – 1879; பெற்றோர் – கந்தர், சிவகாமி; பிறந்த ஊர் – யாழ்ப்பாணத்தில் நல்லூர்.)

(துணை நூல்கள் : ''ஆறுமுக நாவலர் சிறப்பு மலர்'' – 1963; ''ஆறுமுக நாவலர் சரித்திரம்'' – த. கைலாசப்பிள்ளை; ''நாவலர் பண்பாடு'' – பொ. பூலோக சிங்கம்; ''ஈழம் தந்த நாவலர்'' – பொ. பூலோக சிங்கம்; ''ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு''.)

நாவலர் நூல்கள்

1. நாவலரவர்கள் வெளியிட்ட நூல்கள்

அ

1) கோயிற்புராணம்

2) கந்தபுராணம் (1866)

3) சேது புர்ராணம் (1866)

4) பெரியபுராணம்

5) பாரதம்

6) கந்தரலங்காரம்

7) கந்தரனுபூதி

8) அருணகிரிநாதர் திருவகுப்பு (1857)

9) திருச்செந்தூரகவல்

10) சிதம்பரமும்மணிக்கோவை

11) நால்வர் நான்மணி மாலை

12) குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்

13) பட்டணத்துப் பிள்ளையார் பாடல்

14) மறைசையந்தாதி

15) திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

16) விநாயக கவசம்

17) சிவகவசம்

18) சக்திகவசம்

19) பதினோராம் திருமுறை (1869)

20) ஏரெழுபது

21) திருக்கை வழக்கம்

ஆ

22) கோயிற் புராணவுரை (1868)

23) சைவசமயநெறியுரை (1868)

24) திருமுருகாற்றுப்படையுரை

25) திருச்செந்தினிரோட்டக யமக வந்தாதியுரை (1861)

26) சிவதருமோத்தரவுரை

27) மருதூரந்தாதியுரை

28) உபநிடதவுரை

29) திருக்கோவையார் மூலமும் நச்சினார்க்கினியருரையும் (1860)

30) கொலைமறுத்தல் மூலமும் சிதம்பர சுவாமிகளுரையும் (1851)

31) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் (1851)

32) சௌந்தரியலகரியுரை (1849)

இ

33) பெரியபுராண வசனம் (1852)

34) சிதம்பர மான்மியம்

ஈ

35) சைவ வினாவிடை, முதற் புத்தகம்

36) சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம்

37) சிவாலய தரிசன விதி

38) புட்ப விதி

39) அனுட்டான விதி, முதற் புத்தகம்

40) அனுட்டான விதி, இரண்டாம் புத்தகமும் குருவாக்கியமும்

உ

41) சுப்பிரபோதம்

42) சைவதூஷண பரிகாரம் (1854)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

43) யாழ்ப்பாணச் சமய நிலை (1872)

ஊ

44) முதற் பாலபாடம்

45) இரண்டாம் பாலபாடம்

46) மூன்றாம் பாலபாடம் (நான்காம் பாலபாடம்)

47) இலங்கைப் பூமிசாத்திரம்

எ

48) இலக்கண வினாவிடை, இரண்டாம் பதிகம்

49) இலக்கணச் சுருக்கம்

50) நன்னூற் கண்டிகையுரை

51) நன்னூல் விருத்தியுரை (1851)

52) இலக்கணத் கொத்து (1866)

53) இலக்கண விளக்கச் சூறாவளி (1866)

54) தொல்காப்பிய சூத்திர விருத்தி (1866)

55) பிரயோக விவேகவுரை

56) உபமான சங்கிரகம்

57) இரத்தினச் சுருக்கம்

58) சூடாமணி நிகண்டுரை (1849)

59) தருக்க சங்கிரகம் (1861)

60) தொல்காப்பியம் சேனாவரையம் (பரிசோதித்தது)

2. நாவலரவர்கள் பதிப்பிக்கத் தொடங்கி முடிவுறாதவை

61) பெரியபுராண சூசனம்

62) கந்தபுராண வசனம்

63) திருவிளையாடற்புராண வசனம்

3. நாவலரவர்கள் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவைகள்

64) சிவராத்திரி புராணம்

65) திருவிளையாடற் புராணம்

66) நைடதவுரை

67) சிவஞானபோதச் சிற்றுரை

68) நன்னூல் விருத்தியுரை, இரண்டாம் பதிப்பு

69) அனுட்டான விதி, மூன்றாம் பதிப்பு

70) சிவபூசா விதி

71) சிராத்த விதி

72) போசன விதி

73) குரு சிஷ்யர் கிரமம்

74) பூசைக்கிடம்பண்ணும் விதி

75) தருப்பண விதி

4. நாவலரவர்கள் பதிப்பிக்கும் பொருட்டு எழுதத் தொடங்கியவைகள்

76) தேவாரம்

77) இரகுவம்மிசம்

78) உபதேச காண்டம்

79) இலக்கண வினாவிடை, முதற்புத்தகம்

80) அகராதி (தமிழ்)

81) அகராதி (சமஸ்கிருதம், தமிழ்)

82) அகராதி (இங்கிலிஷ், தமிழ்)

83) தருக்க பரிபாஷை

84) சமஸ்கிருத வியாகரண சாரம்

நாவலருக்கு பின் : இருநூறு ஆண்டுக் காலச் சைவ வரலாற்றிலே (கி.பி. 1801-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரை) தாம் வாழ்ந்த போதும், மறைந்த பிறகும் தாங்கள் வாழ்ந்த பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தியவர்கள் வெகு சிலரே. அவருள் நாவலர் பெருமான் முதன்மை வகிக்கிறார்.

1879-ஆம் ஆண்டில் நாவலர் பெருமான் மறைந்த பிறகு 38 ஆண்டுகள் கழித்த பிறகு பண்டிதமணிபிள்ளையவர்கள் 1917-ஆம் ஆண்டில் நாவலரவர்கள் பரம்பரைச் சூழலிலே தலைப்படத் தொடங்கினார். அதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகளை பொ. பூலோக சிங்கம் தனது ''நாவலர் பண்பாடு'' என்ற நூலிலே விரிவாக விளக்குகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation-of America. HHFA(USA)

''இம்முப்பத்தெட்டு வருட இடைவெளி நாவலரவர்களின் பணிகளுடைய காத்திர மான தன்மையை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. அவரைப் போல ஒருவர் வாராத போதும், அவர் பண்படுத்திய நிலம், களர் பாயாது, பலன் அளிப்பதாகத் தொடர்ந்து விளங்கியது. கதலிகம் (கத்தோலிக்க சமயம்) மூர்க்காவேசத்தோடு சைவத்தை நிலைதளரச் செய்ய முயன்ற இக்கட்டத்திலே, சைவம் பாறாமல் இருந்ததை நாம் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளின் நாவலரவர்கள் வழியிலே தொடர்ந்த பணிகளும் சைவ உலகத்தினைக் காத்து நின்றன''.

''இலங்கை நேசன் (1875), உதயபானு (1880), சைவாபிமானி (1884), இந்து சாதனம் (1889) என்னும் பத்திரிகைகளும், சைவ (சமய) பரிபாலன சபையும் (1888) இக்கால கட்டத்திலே நாவலரவர்கள் விட்ட இடத்திலே தொடர்ந்து செயற்பட முற்பட்டன. நல்லூர் க. சதாசிவப் பிள்ளை கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளை, நல்லூர் த. கைலாச பிள்ளை போன்றோர் நாவலர் தருமச் சொத்துக்களை பரி பாலனஞ் செய்து வந்தனர். நல்லூர் வித்துவ சிரோமணி ச. பொன்னம்பல பிள்ளை பாடஞ் சொல்வதிலும் பிரசங்கஞ் செய்வதிலும் தனிவழியே சென்றனர். சைவ சூக்குமார்த்த போதினிப் பத்திராதிபர் வேலணை வி. கந்தப் பிள்ளை சைவப் பிரசாரகராக விளங்கியதோடு தீவுப் பற்றிலே சைவம் தழைத்து வளர வழி செய்தனர். இணுவில் நடராசையர் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் சைவசித்தாந்த சாத்திரங்களைப் பாடஞ் சொல்வதிலே தமது பெயரை நாட்டினார். சித்தாந்த சிகாமணியாக கிறிஸ்து மத கானன குடாரி யாகக் காசி வாசி செந்திநாதையர் விளங்கி னார். சித்தன் கேணி ஆ. அம்பலவாணர் ஏகலைவனாக நாவலரவர்களைப் பின் பற்றி அவர் வழியே செல்ல முற்பட்டனர். புலோலி சதாவதானம் நா. கதிரைவேற் பிள்ளை மாயாவாத தும்ச கோளரி, அத்துவித சித்தாந்த மகோத்தரணர், சைவ சித்தாந்த மகாசரபம், போலியருட்பா பிரபந்த நிர்கந்த கிஞ்சுக கண்டன சண்டமாருதம் எனும் சிறப்புக்களைச் சூட்டிக் கொண்டனர். வண்ணை சி. சுவாமிநாத பண்டிதர் திருமுறைப் பெரு மையைப் பரப்புவதிலே முன்னின்றார். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் நாவலர் பரம்பரையின் முக்கியஸ்தராக உருவாகிக் கொண்டிருந்தார். அவர் 1902-ஆம் ஆண்டின் கடைசியிலே வண்ணைச் சைவப் பிரகாச வித்தியா சாலைத் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார்.

''சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1923-ஆம் ஆண்டிலேயே நிறுவப் பெற்றது. இது சைவக் கல்வி வளர்ச்சிக்கான பாட சாலைகளைக் குக்கிராமங்களில் தாபித்தும் பிறர் தாபித்த பாடசாலைகளைப் பொறுப் பேற்றும் சைவக் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியது''.

''கோப்பாயிலே 1916-ஆம் ஆண்டிலே நிறுவப் பெற்ற ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையும், 1928-ஆம் ஆண்டிலே சைவ வித்தியா விருத்திச் சங்கம்நிறுவிய சைவா சிரிய பயிற்சி நிறுவனமும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கப் பேருதவி புரிந்தன. சைவாசிரியர் பயிற்சி நிறுவனம் சைவ சமய மரபு, கோட்பாடு என்பன வற்றிற்குச் சிறப்பிடம் கொடுத்துப் பேணியமை விதந்தோதத்தக்கது.

இவ்வாறு நாவலர் விட்டுச் சென்ற பணி அவர் மறைவுக்குப் பின்னும் இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

2
கிறிஸ்துவத்திலிருந்து சைவ சமயம் மாறிய பதிப்புத்துறை முன்னோடி (1833)

கிறிஸ்துவராகப் பிறந்தார். கிறிஸ்து வராக வளர்ந்தார். கிறிஸ்துவராக மணமும் செய்து கொண்டார். தனது 28-ஆவது வயதிற்குப் பின்பு சைவத்தைத் தழுவினார். அவர் தான் தமிழ் கூறு நல்லுலகம் போற்றும் பதிப்புத்துறை முன்னோடி சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''உண்மையை அறிந்து கடைப்பிடித்து உய்தல் வேண்டுமென்ற பேராவலால் ஏறக்குறைய இருபது வருஷமாக ஒரு பட்சத்துணிவு சிறிதுமில்லாது சைவ வேதாந்த சித்தாந்த ஸ்மார்த்த பௌத்த அருகாதி இந்து சமயங்களையும் கிரேக்க லுத்தேரிய ரோமானிய புரோத்தெஸ் தானாதி கிறிஸ்துவ சமயங்களையும் ஆராய்ந்து அடியேன் சைவமே இவற்று ளெலாஞ் சிறந்ததெனக் கொண்டனன்'' என்று பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

சமயம் மாறிய பிள்ளையவர்கள் ''சைவ மகத்துவம்'', ''விவிலிய விரோதம்'' ஆகிய நூல்களும் எழுதியுள்ளார். அவரது நூல்களுக்கு எழுந்த கண்டனங்களைப் பிள்ளையவர்கள் பொருட்படுத்தவில்லை. பதில் கண்டன உரைகள் ஏதும் அவர் எழுதவில்லை.

1898-ஆம் ஆண்டில் தாமோதரம் பிள்ளையவர்கள் ஏழாலையிலே சைவப் பிரகாச வித்தியாசாலை ஒன்றினை ஆரம்பித்து தம் சொந்த செலவிலே நடத்தி வந்தார்.

1901-ஆம் ஆண்டில் பிள்ளையவர்கள் புகழுடம்பு எய்தினார்.

(பிறப்பு – 1833; மறைவு – 1901; பெற்றோர் – வைரவநாதர்;)

(துணைநூல் – ''நாவலர் பண்பாடு'' – பொ. பூலோக சிங்கம்.)

3
சைவத்திற்கென இதழ் நடத்தியவர்
(1840)

கந்தப்பிள்ளை; சித்தாந்த நூலாகிய தத்துவப் பிரகாசத்தை உரையோடு அச்சிட்டவர்; சைவ சித்தாந்த உண்மைகளைச் சொற்பொழிவுகள் மூலமும் பத்திரிகைகளில் கட்டுரைகள் மூலமாகவும் பரப்பியவர். ''சைவ சூக்குமார்த்த போதினி'' என்ற பெயரில் மாதந்தோறும் சைவ இதழ் வெளியிட்டு வந்தவர்.

யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் உள்ளவர்களைத் தீக்கை பெறவும், புலால் உணவைக் கைவிடவும், சிவபூஜை செய்யவும் செய்தவர்.

ஆறுமுக நாவலர் கட்டளைப்படி தமது ஊரில் தமிழ்ப் பள்ளிக்கூடம் நிறுவி நடத்தி வந்தார்.

(1840 – 1913; வேலணை, யாழ்ப்பாணம்)

4
கிறிஸ்துவ சமயக் கொள்கைகளுக்கு எதிராக எழுதியும், பேசியும் பிரச்சாரம் செய்தவர்
(1844)

சபாபதி நாவலர் ....தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர். இவருடைய புலமையையும் ஒழுக்கத்தையும் அறிந்த ஆறுமுக நாவலர் சிதம்பரத்தில் தாம் நிறுவிய சைவப் பிரகாச வித்தியா சாலையில் இவரைத் தலைமையாசிரியராக நியமித்தார். அங்குச் சிலகாலம் பணிபுரிந்து பின்னர் திருவாவடுதுறை ஆதீனம் வந்தடைந்து சைவசித்தாந்த சாத்திரங்களைக் கற்றுப் புலமை எய்தினார். யாருக்குமே தரப்படாத சிவஞான மாபாடியத்தைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இவருக்குத் தந்து படிக்கச் செய்தார்கள். இவருக்கு ''நாவலர்'' என்ற பட்டத்தையும் வழங்கினார்கள்.

சபாபதி நாவலர் அவர்கள் கிறிஸ்து சமயக் கொள்கைகளைக் கண்டித்து இந்தியாவிலும், இலங்கையிலும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். பத்திரிகைகளில் கட்டுரைகளும் எழுதினார்.

சென்னையில் சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலை எனும் ஒரு அச்சகத்தை நிறுவி ''ஞானாமிர்தம்'' எனும் பெயருடன் ஒரு பத்திரிகையும் நடத்தினார்.

இவர் எழுதிய நூல்கள் (1) இயேசு மத சங்கற்ப நிராகரணம், (2) சிதம்பர சபாநாத புராணம், (3) சிவகர்ணாமிர்தம், (4) பாரத தாத்பரிய சங்கிரகம் (5) இராமாயண

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாத்பரிய சங்கிரகம், (6) சதுர்வேத தாத்பரிய சங்கிரகம், (7) திருச்சிற்றம்பலம் யமக அந்தாதி, (8) திருவிடைமருதூர் பதிற்றுப்பத்தந்தாதி, (9) மாவையந்தாதி, (10) நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், (11) திராவிடப் பிரகாசிகை, (12) இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, (13) வைதிக காவிய தூஷண மறுப்பு, (14) சித்தாந்த மரபு கண்டன கண்டனம்.

1903-ஆம் ஆண்டில் நாவலர் சிதம்பரத்தில் உயிர் துறந்தார். (தோற்றம் – 1844; மறைவு – 1903; பெற்றோர் – சுயம்பு நாதப் பிள்ளை; ஊர் – கோப்பாய்)

துணைநூல் : ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்.

5
காலமெல்லாம் சைவத்திற்குப் பாடுபட்ட காசிவாசியார் (1848)

வாழ்ந்த காலமெல்லாம் சைவத்திற்காக உழைத்த தூய ஆன்மா. அதனால்தானோ இறைவனும் அந்த ஆன்மா முழுகவனமும் சைவத்தின்பால் இருக்க வேண்டும் என்று இளவயதிலேயே மனைவியாரை அழைத்துக் கொண்டான். அவர் காசி வாசி செந்தி நாதையர் அவர்கள்.

ஐயர் அவர்கள் 1848-ஆம் ஆண்டில் பிறந்தார். இளம் வயதிலேயே தனக்கு மாமனாராக வர இருந்த கதிர்காமையரிடம் தமிழும், சம்ஸ்கிருதமும் கற்றுக் கொண்டார். பத்தாம் வயதில் ஆங்கிலம் கற்றுக் கொண்டார். இருபதாம் வயதில் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று வல்லவரானார்.

1872-இல் வண்ணார் பண்ணையில் ஆறுமுக நாவலர் நிறுவிய சைவவித்தியா சாலையில் ஏழு ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். அக்கால கட்டத்தில் நாவலர் அவர்களின் உரையை விடாது கேட்டு வந்தார்.

1878-ஆம் ஆண்டில் இந்தியா வந்து திருவனந்தபுரம் சென்று அனந்தகிருஷ்ண சாஸ்திரியாரிடம் காவியம், தர்க்கம், வியாகரணம் முதலிய வடமொழிக் கருவி நூல்களைக் கற்று வந்தார்.

1883-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ''சுஜன மநோரஞ்சனி'' என்ற இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். 1884-ஆம் ஆண்டில் நிர்வாண தீக்ஷையும், ஆசாரிய தீக்ஷையும் பெற்றார். பின்னர் தன் சொந்த ஊர் திரும்பினார். 1887-ஆம் ஆண்டில் இணுவில் நடராசையரிடம் சிவஞானசித்தியார் பாடம் கேட்டார்.

மீண்டும் சென்னை வந்தார். அங்கிருந்த போது ''சிவனடியே சிந்திக்கும்'' என்று தொடங்கும் பெரிய புராணச் செய்யுளுக்கு பேச்சாளர் ஒருவர் தவறாக விளக்கம் கூறினார். அப்பொருளினைக் கண்டித்து ''உண்மைப் பொருள் இதுவாம்'' என விளக்கி ''ஞானபோத விளக்கச் சூறாவளி'' என்ற நூலினை வெளியிட்டார்.

பின்னர் சேலம் மாவட்டம் திருப்பத்தூர் சென்று அங்கிருந்து தங்கி ''அமிர்த போதினி'' எனும் வார இதழை 1888-ஆம் ஆண்டில் தொடங்கிச் சில காலம் நடத்தி வந்தார். அக்காலத்தில் சென்னையைச் சேர்ந்த கிறிஸ்துவர்கள் சிலர் ''சிவனும் தேவனா?'' என்ற துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர். இதனைக் கண்டித்து ஐயரவர்கள் ''சிவனும் தேவனா என்னும் தீயநாவுக்கு ஆப்பு'' என்று ஒரு மறுப்பு நூல் எழுதி வெளியிட்டார்.

அக்காலத்தில் துறவி ஒருவர் அறுபத்து மூன்று நாயன்மாருட் சிலரை இழித்துப் பேசினார். இதனையறிந்த ஐயரவர்கள் ''வீரபத்திராஸ்திரம்'' என்ற நூலை வெளியிட்டு அத்துறவியின் வாதங்களைத் தகர்த்தார்.

ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய விவிலிய குற்சிதத்துக்குக் கிறிஸ்துவர்கள் மறுப்பு எழுதினர். அந்த மறுப்புக்கு மறுப்பாக ''விவிலிய குற்சித கண்டன திக்காரம்'' என்ற நூலை ஐயரவர்கள் வெளியிட்டார்கள்.

1888-ஆம் ஆண்டில் ஐயரவர்கள் காசி சென்று பத்தாண்டுகள் தங்கியிருந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதம், ஆகமங்கள் கற்றுத் தெளிந்தார். ஐயரவர்கள் காசியில் இருந்தபொழுது "பிரஹ்மவித்யா" போன்ற பத்திரிகைகளில் வைதிக சைவ சித்தாந்தத்துக்கு மாறாக வெளிவந்த பல விஷயங்களைக் கண்டித்து "இந்து சாதனம்", "விவேக திவாகரன்" "நாகை நீலலோசனி", "விஜயத்துவஜம்", "வெற்றிக் கொடியோன்', ஆகிய பத்திரிகை களில் எழுதி வெளியிட்டார். "இந்து சாதன"த்தில் வெளிவந்த கட்டுரைகள் தொகுக்கப் பெற்று "வைதிக சுத்தாத்து வித சைவ சித்தாந்த சமயம்" என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டன.

1902-ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றத் தில் "வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த வித்தியாசாலை" என்ற கல்வி நிலையம் தொடங்கி தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் கற்பித்து வந்தார்.

வள்ளலார் பாடல்கள் தொடர்பாகச் சென்னையன்பர்களுக்கும், கதிரைவேற் பிள்ளையவர்களுக்குமிடையே நடந்த வழக்கில் ஐயரவர்கள் சென்று பிள்ளைய வர்களுக்கு ஆதரவாகச் சாட்சியம் அளித்தார். வழக்கும் வென்றது.

1906-ஆம் ஆண்டில் ஒரு அச்சகம் தொடங்கிப் பல நூல்களை வெளியிட்டார். எழுபத்தாறு ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்த செந்திநாதையரவர்கள் 15.5.1924-அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

செந்திநாதையர் இயற்றிய நூல்கள் : ஞானரத்தினாவளி, தத்துவ விளக்கம், வஜ்ரடங்கம், வஜ்ர தண்டம், சாளஷத்திரிய பிரசண்ட மாருதம், ஞானபோத விளக்கச் சூறாவளி, வீரபத்திராஸ்திரம், விவிலிய குஞ்சித கண்டன திக்காரம், விவிலிய குஞ்சித குறிப்பு, தாந்திரிய துண்ட கண்டன கண்டம், மகா விக்கிர வீரபத்திர சாஸ்திரம், ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் சீவகாருண்ய மாட்சி, நீலகண்ட பாஷியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு, சிவஞானபோத வசனா லங்கார தீபம், தேவாரம் வேத சாரம், சைவ வேதாந்தம், கந்த புராணம் நவநீதம், வைதீக சுத்தாத்துவித சைவ சித்தாந்த விளக்கப்படம், படத்திற்கான விளக்க நூல் முதலான 45 நூல்கள்.

(பிறப்பு – *1848*; மறைவு – *1924*. பெற்றோர் – சிந்நய ஐயர், கௌரியம்மாள், பிறந்த ஊர் – யாழ்ப்பாணம் அருகே குப்பிழான்)

துணை நூல் : "ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்".

6

அரசியல், சட்டம், பொதுவாழ்வு, கல்வி, சமயம் அனைத்திலும் சிகரமாய் நின்றவர் (1851)

பொன்னம்பலம் இராமநாதன் ...பார் – அட்-லா; சொலிஸிடர் ஜெனரல்; வழக்கறிஞர்; அரசியல்வாதி; அரசு அலுவலர்; சீர்திருத்தவாதி; இலக்கிய அன்பர்; தத்துவதரிசி; கல்வியாளர்.

புகழ்மிக்க குடும்பம். இராமநாதன் அவர்களின் தாத்தாவின் தாத்தா யாழ்ப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாணத்தில் இன்றும் ''பொன்னம்பலம் தர்மவான்'' என்று போற்றப்படுகிறார். தலைமுறை தலைமுறையாக இலங்கை பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதியாக இக்குடும்பத்தவரே 1897-ஆம் ஆண்டு வரை இருந்து வந்தனர்.

இப்புகழ்மிக்க குடும்பத்தின் நான்கு பெருந்தூண்களாய்த் திகழ்ந்தவர்கள் பொன்னம்பலம் குமார சுவாமி, பொன்னம் பலம் ராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம், சகோதரர்கள் ஆவர்.

இராமநாதன் அவர்கள் இலங்கை ஆளவை உறுப்பினராக மக்களுக்குச் (Legislative Council) செய்த பணிகள் மகத்தானவை. குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் நலனில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

வழக்கறிஞராகப் பணியாற்றிய பொழுதும் அவரது பேனா வாளா இருக்க வில்லை. இலங்கை ''சட்ட செய்திக் கதிரின்'' (Law reports) தந்தை ஆவார்.

ஆளவை உறுப்பினராக இருந்தபொழுது பல சட்டங்களைச் சீரிய முறையில் உருவாக்கத் துணை நின்றார்.

தன் முதிர்ந்த பிராயத்தில் தத்துவத் துறையில், ராமநாதன் நாட்டம் செலுத்தி னார். அமெரிக்காவில் 1905 – 1906 கீழைத்தேய மெய்யியல் தூதராக ஓராண்டு காலம் தங்கி கீழைநாட்டுத் தத்துவங் களைப் பற்றிய விரிவுரைகள் ஆற்றினார். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் உரையாற்றி அமெரிக்காவில் சைவ சமயம் தொடர்பாக இருந்த தவறான கருத்துக்களை நீக்கிச் சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டினார். சைவ சித்தாந்த சமாஜத்தின் முதல் மாநாட்டின் தலைவர் பொன்னம்பலம் ராமநாதன் அவர்களே ஆவார்கள். சைவ சித்தாந்தம், தாயு மானவர், பைபிள் பற்றி நூல்கள் எழுதியுள்ளார்.

இலங்கை பொன்னம்பல வாணேசுவரர் கோயிலின் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் பாடுபட்டார். புதிய கோயில்கள் எடுத்துக் கருங்கல் திருப்பணி செய்து 1912-இல் கும்பாபிடேகம் செய்தார். மாணவர் களுக்குக் கல்விச் சாலைகளில் சைவ சமயம் ஊட்டும் வண்ணம் செய்தவர் இவரே. சைவச் சிறுமியர்க்கு ஆங்கிலத் தமிழ்க் கல்வியை முதன் முதல் ஊட்ட முன் வந்தவர் இவரே ஆவார். சுன்னாகம் இராமநாத வித்தியாலயம், இதனுள் இணைந்த தமிழ் ஆசிரியைகள் கல்லூரி, திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரி ஆகியன இராமநாதன் அவர்கள் புகழைப் பறைசாற்றும்.

இவர் எழுதிய நூல்கள்:

An Eastern exposition of the gospel of Jesus according to St. Mathew, An eastern exposition of the gospel of Jesus according to St. John, The Culture of the soul among Western Nations, The Spirit of the East constrasted with the spirit of the West, On faith or love of God.

வாழாது வாழ்ந்த - இலங்கையிலே தமிழரின் தனிப் பெருந்தலைவராய் – சைவத்தின் புகழ் பரப்புபவராய் – இலங்கை மக்கள் அனைவர்க்கும் உதவுபவராய் – வாழ்ந்த இராமநாதன் அவர்கள் 1930-இல் உயிர் நீத்தார்.

(பிறப்பு – 1851; மறைவு – 1930; பெற்றோர் – பொன்னம்பலம்; பிறந்த ஊர் – கொழும்பு)

துணை நூல்கள் : 'சித்தாந்த தீபிகா'' மார்ச் 1907

7
பொன்னம்பலம் தர்மவான் குடும்பத்தில் மற்றுமோர் புகழ் ஏடு (1853)

புகழ்பெற்ற பொன்னம்பலம் இராம நாதன் அவர்களின் புகழ்மிக்க சகோதரர் பொன்னம்பலம் அருணாசலம்.

படிப்போ கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலே; தனித்திறமையினால் போற் றப் பெற்று உதவித் தொகையும் பெற்றார். Foundation Scholarship ம் பெற்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செவ்விலக்கியத்திலும், கணிதத்திலும் முதன்மை பெற்றார். 1875-இல் B.A. (Hons) பட்டம் பெற்றார். கிறிஸ்து கல்லூரியில் படிக்கும்பொழுது யார்க் ஆர்க்பிஷப்புடன் உரையாடும் பொழுது இந்து சமயம் பற்றி அவர் கொண்டிருந்த தவறான கருத்துக்களை மாற்றினார்.

இலங்கையில் ரிஜிஸ்ட்ரார் ஜெனரலாகவும் மக்கள் கணக்கெடுப்பு மேலதிகாரியாகவும் இருந்து மகத்தான பணியாற்றினார். ஊழல் நிறைந்த பதிவுத் துறையையே மாற்றியமைத்தார். இலங்கையில் பல இடங்களிலும குற்றயியல் நீதிபதியாகவும், மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றினார்.

1901-இல் ஒரே வாரத்தில் கணக்கெடுப்பு முடிவுகளை வெளியிட்டது இவரது சாதனையாகும்.

இலங்கை ஆளவை உறுப்பினராக இருந்து பல சட்டங்கள் இயற்றினார். இலங்கையில் பல்கலைக் கழகம் உருவாகப் பெரிதும் பாடுபட்டார்.

பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் வேதாந்த தத்துவத்தையும், உபநிடதங்கள் சிலவற்றையும் மொழி பெயர்த்தார். West Minister Review இல் "Luminous Sleep" என்றொரு அரிய கட்டுரையும் எழுதினார். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் புகழ் ஏடு:

The Honourable Minister P. Arunachalam, M.A., Cantab, Barrister-at-law, Lincoln's Inn, C.G.S. M.L.C. J.P., U.P.M., President Ceylon University Association; Vice President Ceylon Branch of the Royal Asiatic Society; Vice President, Ceylon Agricultural Society; Vice President College Union; Corenanted Civilian 1st Class I Grade; Director General of the Ceylon Census 1901; Registrar General.

பிறப்பு – *1853*; மறைவு : பெற்றோர் ; பொன்னம்பலம். பிறந்த ஊர்; கொழும்பு.

(துணை நூல்கள் : "Siddhanta Deepika" Jan. 1989.)

8

திருஞானசம்பந்தர் மடம் நிறுவிய சைவத் துறவி

மும்மொழியறிவு... சமய, விசேட, நிருவாண தீக்ஷை பெறுதல்... மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களிடம் மந்திர காஷாயம் பெற்று சந்நியாசி ஆதல்.

அவரே அம்பலவாண நாவலர். நாவலர் தம் இளவயதிலேயே வட்டுக் கோட்டையில் சைவத் தமிழ் வித்யா சாலையை நிறுவினார்.தாமும் ஆசிரியராக இருந்து கற்பித்தார்.

ஆறுமுக நாவலர் சொற்பொழிவுகளைக் கேட்டு அவரைத் தமது குருவாகக் கொண்டார். திருநெல்வேலியில் ஓராண்டுக் காலம் திருவாதவூரர் புராணத்தையும் தேவகோட்டையில் ஈராண்டுக் காலம் பெரிய புராணத்தையும் பாடம் சொன்னார்.

திருநெல்வேலியில் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடம் நிறுவினார். சுவாமிகளுக்கு நித்திய, விசேட பூசைகள் செய்யும் பொருட்டு ஐந்து வீடுகளும், நிலமும் வாங்கி வைத்தார். சிதம்பரத்திலும் ஒரு மடம் நிறுவி ஆறுமுக நாவல சந்தான ஞானசம்பந்த சுவாமி ஆதீனம் எனப் பெயரிட்டு நடத்தி வந்தார்.

இவர் பரிசோதித்தும் இயற்றியும் அச்சிட்ட நூல்கள் வருமாறு:

(1) பௌஷ்கர சங்கிதா பாஷ்யம், 2) அகோர சிவாசாரியார் பத்ததி, 3) பிரமதருக்கஸ்தவம், 4) திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரபாவம், 5) சற்குருமணிமாலை, 6) வேணுவனலிங்கோற்பவர், 7) அருணாசல மான்மியம், 8) சிவத்துரோக கண்டனம்.

அச்சேறாத நூல்கள் (1) பெரியபுராண பாடியம், 2) சித்தாந்தப் பிரபோதம், 3) தக்ஷாதர்சம், 4) சைவசந்நியாசப் பத்ததி, 5) ஆரிய திராவிடப் பிரகாசிகை.

இப்பெருமை வாய்ந்த நாவலர் சிதம்பரத்திலே ஆங்கிரச ஆண்டு சித்திரை 23-ஆம் நாள் இறையடி சேர்ந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(தோற்றம் – *1856;* ஊர் – வட்டுக்கோட்டை; பெற்றோர் – ஆறுமுகப் பிள்ளை; சுந்தரவல்லியம்மை)

9
பரசமயகோளரி
(1860)

மாயாவாதம் தலைவிரித்தாடிய நேரம். சிந்தாதிரிப்பேட்டையில் ''சிவன் யாம்'' என்று மாயாவதிகள் தருக்கி நின்றனர். அரி எனப் புகுந்தார் கதிரைவேற்பிள்ளை. அவர்களிடம் வினாக்களைத் தொடுத்தார். மாயாவாதிகள் பதில் இறுக்க முடியாமல் வாயடைத்துப் போயினர்.

மற்றொரு நாள்... காசிவாசி செந்தி நாதையர் தலைமை... அங்கு குழுமியிருந்த வேதாந்திகளிடம் கதிரை வேற்பிள்ளை தருக்கநெறி பிறழாது வினாக்கள் வினவினார். வேதாந்திகள் விழித்தனர். அவையினர் மகிழ்ந்து இவரை ''மாயாவாத துவம்ச கோளரி'' எனப் பாராட்டினர்.

ஆரணி சமத்தானத்தில் ஒரு சாஸ்திரியார் மாயாவாதம் போதித்து வந்தார். அவரோடு வாதிட்டு அவருக்கு அத்துவித இலக்கணம் அறிவுறுத்தினார் பிள்ளையவர்கள். அஃதை நேரில் கண்ட ஆரணி அரசர் ''அத்துவித சித்தாந்த மதோத்தாரணர்'' என்ற பட்டம் அளித்தார். இந்த நிகழ்ச்சியை திரு. வி.க. அவர்கள் கவிதை புனைந்து பாடுகிறார்.

''சந்ததமும்
நாங்களே தெய்வம் எனும் ஞாலக்
கரிகளெலாம்
ஏங்கி அழிந்தோட எதிரேறி – ஈங்குப்
பிரசங்கக் கர்ச்சனைசெய் பேரியேறு
என்றே
அரசங்கத்தார் புகழ்ந்த அண்ணல்''

கதிரைவேற்பிள்ளை தாம் இயற்றிய ''சைவ பூடண சந்திரிகை'' எனும் நூலில் ''திருமால் அணிந்திருப்பது திருநீறு'' என்று ஆழ்வார்கள் பாடல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டி எழுதி இருந்தார். இதனை எதிர்த்து எழுந்தது வைணவ சமுதாயம். அழகிய மணவாள இராமாநுஜ ஏகாங்கியார் இவ்வெதிர்ப்புக்குத் தலைமை ஏற்றார். மேடைகள்தோறும் – பத்திரிகைகள் வாயிலாகவும் – வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. இவ்விவாதம் மூன்று மாத காலம் நீடித்தது. சென்னை வேணுகோபால சுவாமி மண்டபத்தில் அத்தியாச்சிரம பால சரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் தலைமையில் ஆயிரக்கணக்கான அறிஞர்கள் முன்னர் கதிரைவேற்பிள்ளை யவர்கள் ''கண்ணன் கண்ணுதல் அடியார்'' என்று நிறுவினார். இதனையே ''சைவ பூடண சந்திரிகை யிலும்'' எழுதி செங்ககான் கடைப் பந்தரில் அரங்கேற்றினார்.

இத்துடன் வைணவ விவாதம் முற்றுப் பெற்றது.

''நன்னீறும்
கண்மணியாம் கண்டிகையும் கண்ணன்
தரித்தொழுகும்
உண்மை விளக்கும் உயர் ஆழ்வார் –
வண்மை மிகு
வாய்மை மொழிக்கு மாறாக வாதம்
தொடங்கிய பல்
வாய்மையிலா வைணவர்தம்
வாயடக்கித் – தூய் நீற்றின்
உண்மை அவர் அறிந்தே உய்ய
மறைவிதிகள்
திண்மையாய்க் காட்டும் திறலோனே!''

என்று பாடுகிறார் திரு.வி.க.

''புத்தமதகண்டனம்'' என்று ஒரு நூல் எழுதி கதிரைவேற் பிள்ளையவர்கள் மயிலாப்பூரில் வெளியிட்டார்கள். சென்னை இராயப்பேட்டை பெரிய பாளையத்தம்மன் பெரிய மண்டபத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புத்தமதத்தில் தத்துவம் இன்மை, பற்றிச் சொற்பெருக்காற்றினார்.

''புத்தமதப் பித்தர் விடுத்த பிழைமலிந்த நூல்களை எம்
அத்தன் அடியார் களிக்கக் கண்டித்தோய்!''
[திரு.வி.க.]

சென்னை முல்லா வீதியில் பல அன்பர்கள் ஒரு சபையினை உருவாக்கி வள்ளலார் பாடல்களை உயர்த்தியும், கதிரைவேற் பிள்ளையவர்களையும், அவர் குருநாதரையும் தாழ்த்தியும் வந்தார்கள். மகாவித்துவான் ஆலாலசுந்தரம் பிள்ளையவர்களைத் தூண்டி ''வள்ளலார் பாடல்களே அருட்பாக்கள்'' என்று பேச அழைத்தனர். அவரோ ''திருமுறைப் பாடல்களே அருட்பாக்கள்'' எனப் பேசினார். திருமுறைப் பாடல்களின் நிந்தை பொறுக்காத சிந்தாதிரிப் பேட்டை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையார் கதிரைவேற் பிள்ளை அவர்களை அணுகி திருமுறைகளே திருவருட்பாக்கள் என்று உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அன்று தொடங்கி கதிரை வேற் பிள்ளையவர்கள் சிந்தாதிரிப் பேட்டையிலும், பிற இடங்களிலும் ''திருமுறைகளே அருட்பாக்கள்; சிற்றம் பலத்து ஆடும் பெற்றம் ஊர்தியே அருட் பிரகாச வள்ளல்'' என்றும் ''இராமலிங்க பிள்ளை அருட்பிரகாச வள்ளல் ஆகார். அவர் பாக்கள் அருட்பா ஆகாது என்று ஆரண ஆகம அருள் நூல்களையும், மற்றைய தெய்வீக சாத்திரங்களையும் காட்டிச் சாதித்தார். கதிரைவேற்பிள்ளை அவர்கள் தன் சொற்பொழிவுகளைக் கட்டுரைகளாக்கி நூல்வடிவம் தந்து ''இராமலிங்க பிள்ளை ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு'' என்று பெயரிட்டு மயிலாப்பூரில் வெளியிட்டார்.

கதிரைவேற் பிள்ளையவர்களின் பகைவர்கள் அத்தோடு நிற்கவில்லை. மருட்பா மறுப்பில் இருபத்தேழு விடயங்கள் பொய்யாக வரையப் பட்டுள்ளன என்று 1904-ஆம் ஆண்டு ஜுன் மாதம் சென்னை டவுன் போலீஸ் கோர்ட்டில் இராமலிங்கம் பிள்ளை தமயன் தனயராய வடிவேற்பிள்ளை மூலம் வழக்கு தொடுத்தனர். கதிரைவேற் பிள்ளையவர் களின் வழக்கறிஞர்கள் இருபத்தேழு விடயங்களையும் நிரூபித்தனர். 21.11.1904 அன்று நீதிபதியவர்கள் வழக்கினைத் தள்ளிவிட்டனர்.

இத்தீர்ப்பினால் சென்னை சைவ அடியார்கள் மகிழ்வெய்தினர். 27.11.1904 அன்று முத்துக்குமார சாமியார் திருக் கோயிலில் ஸ்ரீமத் ஆனந்த முத்துக்குமார சுவாமி பக்த ஜனசபையாரும், சைவ சித்தாந்த சங்கத்தாரும், சைவ சமய பக்த ஜன சபையாரும் ஒருங்கு சேர்ந்து விழா எடுத்து பிள்ளையவர்களை திருமுறை களைப் பற்றிப் பேசச் செய்தார்கள். அதனையடுத்து பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையிலும் 18.12.1904 அன்று புரசை பரசிவ தமிழ் வேத பாராயண பக்த ஜனசபையாரும் பிள்ளையவர்களைக் கொண்டு விழாக்கள் எடுப்பித்தனர்.

21.12.1904 அன்று சிதம்பரத்தில் எடுப்பிக்கப்பட்ட விழாவில் 8000 அன்பர்கள் கூடியிருந்து பிள்ளையவர்கள் உரையினைக் கேட்டார்கள். இதனை யடுத்து செட்டிநாடு, காஞ்சிபுரம் (22.1.1905), உறையூர், திருவண்ணாமலை, சீர்காழி தலங்களில் அரச மரியாதைகளோடு விழா எடுப்பிக்கப்பட்டது.தமிழ்நாட்டின் பல ஊர்களிலும் சுற்றுப்பயணம் செய்து தான் பிறந்த பூமியாகிய யாழ்ப்பாணம் சென்று பல இடங்களில் உரையாற்றினார். யாழ்ப்பாணத்தில் ''போலி அருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டன பிரசண்ட மாருதம்'', ''சைவ சித்தாந்த மகாசரபம்'' என்று பட்டங்கள் சூட்டினர்.

கதிரைவேற் பிள்ளையவர்கள் சிவக்ஷேத் திராலய மகோற்சவ விளக்கம், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித வசனச் சுருக்கம், ஏகாதசிப்புராணத்திற்கு அரும் பதவுரை,சிவநிசிப்புராணத்திற்கு விருத்தி யுரை, பழநித்தல புராணத்திற்கு விருத்தி யுரை, சிவஞான பாடியத்திற்குக் குறிப் புரை, சுப்பிரமணிய பராக்கிரமம், சைவ பூஷண சந்திரிகை ஆகிய நூல்களை எழுதியுள்ளார்கள்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சென்னை கந்தசுவாமி ஆலயத்தில் ஒவ்வொரு ஆதிவாரமும் தணிகைப் புராணமும், சிந்தாதிரிப் பேட்டையில் ஒவ்வொரு புதவாரமும் திருவிளையாடற் புராணமும், ஒவ்வொரு சனி வாரமும் கந்தபுராணமும் பிள்ளையவர்கள் உரை நிகழ்த்தி வந்தார்கள்.

கதிரைவேற் பிள்ளையவர்கள் சிறந்த சதாவதானியாகவும் திகழ்ந்தார்கள். 24.2.1907-ஆம் ஆண்டில் சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் பிள்ளையவர்கள் சதாவதானம் நிகழ்த்திய காட்சியை திரு.வி.க. அவர்கள் விரிவாக விளக்குகிறார்கள். கதிரைவேற் பிள்ளை திரு. வி. க. அவர்களின் ஆரம்பகால குருநாதர் ஆவார்.

வாழும் நாளெல்லாம் சைவத் திருமுறைகளை உயர்த்தியும், சைவ சமயத்திற்கு எதிரான கருத்துக்களை மறுத்தும் அரும்பணி ஆற்றிய கதிரைவேற் பிள்ளையவர்கள் 1907-ஆம் ஆண்டு நீலகிரியில் இறைவன் திருநிழல் அடைந்தார்கள். (பிறப்பு – 1860; மறைவு – 1907. பெற்றோர் – நாகப்பிள்ளை. பிறந்த ஊர் : மேலைப்புலோலி, ஈழநாடு)

துணை நூல்கள் : ''ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை சரித்திரம்'' – திரு. வி.க. (தன் குருநாதர் என்ற முறையில் திரு.வி.க. அவர்கள் இந்நூலை எழுதினாலும் பிள்ளையவர்களின் கருத்துக்களை முழுதும் ஏற்காது, பிற்றை நாளில் வைணவம் பௌத்தம், அருட்பா, ஆகியவற்றினைப் போற்றி வந்தார்கள்.)

10
சமயக் கல்வி மூலம் சைவத்தை நிலைநாட்டியவர் (1864)

நாடெங்கும் கிறிஸ்துவ மிஷினரி மார்களின் பலாத்காரமான மதமாற்ற நடவடிக்கைகள் – சைவசமயம் பற்றிய பொய்ப்பிரச்சாரங்கள். அந்தச் சைவப் பெரியாருக்குப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தான் பயிலச் சென்ற ஆசிரியப் பயிற்சி கலாசாலையை விட்டு இரவோடு இரவாக வெளியேறினார். ஆறுமுக நாவலர் காட்டிய வழிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அவர்தான் அருணாசல உபாத்தியாயர் அவர்கள்.

நாவலரைப் போலவே உபாத்தியாயர் அவர்களும் 1885-ஆம் ஆண்டு காரைத் தீவில் ஒரு திண்ணைப் பள்ளியை ஆரம்பித்தார். இப்பாடசாலையைத் தொடர்ந்து வியாவிலில் சைவ பரிபாலன வித்தியாசாலை எனும் பெயருடன் சைவப் பாடசாலையை அமைத்தார். பல சைவப் பெரியார்களை அணுகி இதேபோல சைவப் பாடசாலைகள் அமைக்க வற்புறுத்தி வந்தார். அவர் பிரச்சாரத்தால் கரம்பன், மட்டுவில், கரணவாய், அல்வாய், துன்னாலை உடுப்பிட்டி, வல்வை, அனலை தீவு முதலான இடங்களில் சைவப் பாடசாலைகள் தோன்றின.

'சைவப் பாடசாலைகள் ஆரம்பித்த தினால் அங்குக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப்பட்டனர். சைவாசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காகக் காரைத் தீவில் முதன்முதலில் சைவாசிரியர் கலாசாலை யினை உபாத்தியாயர் உருவாக்கினார். இதற்கு அரசு அனுமதி மறுக்கப்பட்டது. பெரிதும் போராடி அனுமதி பெற்றார். இதன் பயனாக 1916-இல் கோப்பாய் ஆசிரிய போதனா பாடசாலையில் சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க அனுமதி கிடைத்தது.

சைவாசிரியர்கள் தங்கிப் படிக்க விடுதி தேவைப்பட்டது. உபாத்தியாயர் அவர்கள் நாகநாத முதலியார் என்பாரிடம் விளக்கி நிலமும், கட்டிடமும் நன்கொடையாகப் பெற்றார். இதுவே சைவர்களுக்கு எழுந்த முதலாவது ஆசிரியர் விடுதி ஆகும்.

அடுத்து காரைத் தீவு மக்கள் ஆங்கிலக் கல்வி பெற 1889-இல் ''திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆங்கிலப் பாடசாலை'' எனும் பெயருடன் ஓர் ஆங்கிலப் பாட சாலையை ஆரம்பித்தார். உபாத்தியாயர் காரைத் தீவு மக்களுக்குக் கொடுத்த நன்கொடைகளில் தலையாயது இது வாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாவலரைப் போலவே அருணாசல உபாத்யாயர் ஒரு மாணவ பரம்பரையையே உருவாக்கினார்.

உபாத்யாயர் தன்னுடைய ஆரம்பப் பள்ளிகளையும், கலாசாலையையும் ஒரு பொது நிர்வாகத்தில் கொண்டு வர முயன்று ''இந்து வித்யா சங்கம்'' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். இதுவே பின்னர் ''சைவ வித்யா விருத்திச் சங்கமாக'' மாறி சைவமும் தமிழும் வேரூன்றி தழைத்தோங்க வழி அமைத்தது.

சமயக் கல்வி மூலம் சைவ சமயத்தை இலங்கை நகரில் நிலைநாட்டி கிறிஸ்துவ மதாமாற்றத்தைத் தடுத்துப் புகழ்கொண்ட அருணாசல உபாத்யாயர் 1920-ஆம் ஆண்டில் புகழுடம்பு எய்தினார்.

(தோற்றம் – 1864; மறைவு – 1920; பெற்றோர் – சங்கரப்பிள்ளை பத்தினி அம்மையார்; பிறந்த இடம் – காரைத் தீவு, யாழ்ப்பாணம்)

துணை நூல்கள் : இந்து தருமம்'' மலர் 1990/91.

11
விச்சது இன்றியே விளைவு செய்த அருட்சித்தர் (1872)

மருத்துவமனைகளில் மருத்துவர்களால் கைவிடப்பட்ட தீராத நோய்களுக்குட் பட்டவர்கள், உலக வாழ்க்கையில் துன்பங் களுக்கும் இன்னல்களுக்கும் உட்பட்டவர் கள் – இவர்களின் வாழ்க்கைச் சூட்டைத் தணித்த குளிர்தரு யாழ்ப்பாணம் யோக சுவாமிகள்.

1955... மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்த னார் யாழ்ப்பாணத்தில் சொற்பொழிவுகள் நடத்தச் சென்றிருக்கிறார்கள். அங்கு தங்கியிருந்த வீட்டில் காலையில் மூதறிஞர் எழுந்திருக்கிறார். மூதறிஞர் தங்கியிருந்த வீட்டு உரிமையாளர், ''நன்கு தூங்கினீர் களா?'' என்று கேட்கிறார். பேராசிரி யர்க்குக் குரலே எழும்பவில்லை. எவ்வள வோ முயன்றும் ஒரு எழுத்தைக் கூட உச்சரிக்க முடியவில்லை. மருத்துவரிடம் சென்றார். கொழும்பில் சில சோதனைகள் நடத்திய பிறகே மருத்துவம் செய்ய முடியும் என்று கூறிவிட்டார். மருத்துவர் அதோடு விடவில்லை. ''கோடியில் ஒருவருக்கு வரும் நோய் இது. இது வந்தால் பிழைக்க முடியாது'' என்று உணர்ந்த மருத்துவர் பேராசிரியர் இந்தியா செல்வதற்கு அவருக்கும், வழியில் ஏதாவது இடையூறு வந்தால் உதவ பணியாள் ஒருவர்க்கும் சேர்த்து இரண்டு விமான பயணச் சீட்டுகளும் வாங்கி வைத்து விட்டார். மூதறிஞர் வீடு திரும்பாமல் யோக சுவாமிகளைப் பார்த்துவிட்டு வரலாம் என்று சென்றிருக்கிறார். சுவாமி களை மூதறிஞர் வணங்கிவிட்டு அமர்ந்தார் கள். சுவாமிகள் ''ஏண்டா பொடியா, அந்த மருத்துவர் என்ன முருகன் என்ற நினைப்பா? எதற்காக அவரிடம் போனாய்?'' என்று திட்டினார். ''பொடியா! வழக்கம் போல் மாலையில் பிரசங்கம் செய்துவிட்டு வா'' என்றார்கள். மூதறிஞர் எழுந்து விழுந்துவணங்கி, ''உத்தரவுப் படியே செய்கிறேன்'' என்றார்கள். திடீரென்று சுவாமிகள், ''பொடியா, சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள்தானே வெட்டிப் புதைக்கணும், கவலையில்லாமல் போய்வா'' என்றார்கள்.

அன்று மாலையே பேராசிரியர் அவர்கள் பேசினார்கள். அவர்கள் மறையும் வரை அவர்கள் குரல் (எண்பதைத் தாண்டியும்) கணீரென்று இருந்தது. அது மட்டுமல்ல. அதன்பிறகு அவர்கள் எழுதிய முப்பது நூல்களில் முக்கால் பங்கிற்கு மேல் கம்பனையும் சேக்கிழாரையும் பற்றிய நூல்களே ஆகும். தொல்காப்பியம், திரு வாசகத்திற்கு எல்லாம் உரை எழுத வேண்டும் என்றெல்லாம் பேராசிரியர் அவர்கள் எவ்வளவோ விரும்பினார்கள். முடியவேயில்லை. திருவாசக விரிவுரை மட்டும் அவர்கள் மறைவதற்கு 2, 3 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி வெளி யிட்டார்கள். அதுவும் சுவாமிகளின் திருவுளமே!

பிறிதொரு சமயம் பேராசிரியர் அவர்கள் சென்றபொழுது கதிர்காமத்தில் ஆடிவேல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உற்சவம். ஆடிவேல் உற்சவத்திற்குச் சுவாமிகள் சென்று விடுவார்கள். சுவாமிகள் இருக்கும் ஆசிரமத்தையாவது தரிசித்து விட்டு வரலாம் என்று சென்றார்கள். சுவாமிகள் ஆசிரமத்தில் இருந்தார்கள். உடன்வந்த நண்பர் சிறீகாந்தா ஆண்டு தோறும் ஆடிவேலுக்குப் போய் வருபவர். அந்த ஆண்டு போகமுடியவில்லையே என்ற வருத்தத்தில் இருந்தார். சுவாமிகள் சிறீகாந்தாவைப் பார்த்து, ''ஏன் மகனே! நீ ஆடிவேலுக்குப் போகவில்லையா?'' என்று கேட்டார்கள். சிறீகாந்தா கண்ணீர் பெருக போக முடியாமைக்குச் சொன்னார். சுவாமிகள் ''கவலை வேண்டாம் மகனே! நமக்கென்ன வாகனமா இருக்கிறது? அந்த மடையனுக்குத் தான் மயில் வாகனம் இருக்கிறது. வேண்டுமானால் அவன்தான் நம்மிடம் வரவேண்டும். நாம் எங்கே போவது?'' என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே பாட ஆரம்பித்து விட்டார்கள்.

இரண்டு நாள் கழித்து பேராசிரியர் கொழும்புவில் ஒரு நண்பர் வீட்டில் இருந்து கொண்டு ஆடிவேல் நிகழ்ச்சியை 14mm Projector-இல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பேராசிரியரும் சிறீகாந்தாவும் யாழ்ப்பாணத்தில் சுவாமி களைப் பார்த்த அதே நேரத்தில் சுவாமிகள் கதிர் காமத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பேராசிரியர் அவர்களுக்கு மூச்சே நின்று விட்டது.

பேராசிரியர் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றார்கள். சுவாமிகள், ''பொடியா! நீ ஏன் பட்டணம் போகாமல் இங்கே வந்தாய்?'' என்று கேட்டார்கள். பேராசிரியர் நடந்ததைக் கூறினார்கள். சுவாமிகள் கடகடவென்று சிரித்துவிட்டு ''அந்த மடையனுக்குத்தான் மயில் இருக்கிறது. நாங்கள் எப்படி அங்கே போகமுடியும்? மயிலா இருக்கிறது நமக்கு'' என்றார்கள். பேராசிரியர் அவர்கள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''சுவாமிகள் அங்கே இருந்ததும் உண்மை. இது அட்ட....'' என்று தொடங்கினார்கள். அந்த வார்த்தையை முழுவதும் கூறவிடாமல் சுவாமிகள் உரத்த குரலில், ''பொடியா! செருப்படி வேண்டுமோ மகனே உனக்கு? வாயை மூடடா'' என்றார்கள். பிறகு அன்பொழுகப் பேசி வழியனுப்பினார்கள்.

இப்படி பல செய்திகள். ஒரு முறை T.M.P. மகாதேவன் அவர்கள் சென்னைக்கு விமானத்தில் செல்லு முன் சுவாமிகளிடம் விடை பெற வந்தார்கள். ''அட பொடியா, இவர்கள் இருவரும் பறவை மாதிரி இறக்கையாகப் பரப்பிக் கொண்டு பறக்கப் போகிறார்கள். தெரியுமா?'' என்றார்கள். பயணத்தை நிறுத்தி விடலாமா என்றுகூட சிந்தித்தார்களாம். எந்திரக் கோளாறினால் விமானம் ரத்து ஆகிவிட்டது.

பிறிதொரு முறை பேராசிரியர் அவர்களின் நண்பர் சுவாமிகளுடன் சேர்ந்து சிவனொளிபாதம் தரிசனம் செய்யச் சென்றார். வழியில் உண்பதற்காக உணவு எடுத்து வந்தார். சுவாமிகள் ''அவற்றை வைத்துவிடு. போகும் வழியில் டீக்கடை இருக்கிறது. சாப்பிடலாம்'' என்றார். சரியான காட்டுப் பகுதி. ஒரு டீக்கடைக்குக் கூட வழியில்லை. ஆனால் ஓர் அதிசயம்! அனைத்து பலகாரத்துடன் ஒரு டீக்கடை இருந்தது. பலகாரம் சாப்பிட்டு விட்டுச் சென்றார்கள். இரண்டு நாள்கள் கழித்து அதே நண்பர் இன்னொருவருடன் மீண்டும் ஒரு முறை அந்த வழியே தரிசனம் செய்ய வந்தார். முன்பு டீக்கடை இருந்த சுவடே தெரியவில்லை. உடன் வந்தவர் சிரித்து விட்டு ''மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் எந்தப் பைத்தியக்காரன் டீக்கடை வைப்பான்? வா போகலாம்'' என்று அழைத்துப் போனார். நண்பருக்கு ஒரே மலைப்பு.

''விச்சது இன்றியே விளைவு செய்குவான்''.

இவ்வளவு நடக்கின்றதே! வருபவர் யாரும் வாய்விட்டுக் குறைகளைக் கூறுவதும் இல்லை. சுவாமிகளும் என்ன முறையென்று கேட்பதுமில்லை. ஆனாலும் வருபவர்க்கு அமைதி கிடைத்துவிடும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பலவகைப்பட்டோர் - பட்டம் பதவியில் உள்ளவர்களும், பாமரரும், பலசாதி சமயத்தினரும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட - சுவாமிகளைத் தரிசித்து ஆறுதல் தேடினர். சுவாமிகள் மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம் பக்தர்களுடன் சேர்ந்து பாராயணம் செய்வார்கள். பாரா யணம் இறுதியில் பக்தர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தம்தம் மனதில் விடை கண்டு சுவாமிகளை வணங்கிச் செல்வர். ஓர் பிரபல இஸ்லாமிய நீதிபதிதான் நீதிமன்றம் செல்லுமுன் தனது தீர்ப்புகள் சரியாக இருப்பதற்குப் பிரார்த்தனையாக சுவாமிகளை வணங்கி அவரது ஆசிகளைப் பெற்றுச் செல்வது அந்தக் காலத்தில் பலரும் அறிந்த செய்தி.

''காவி அணியாது உருத்திராக்கமும் தரியாது வெள்ளைத் தாடி முடியுடன் முழங்காலுடன் மடித்துக் கட்டிய வேட்டியுடன் இம்முனிவர் மெல்ல மெல்லவாக நல்ல சூடான தார் ரோட்டில் நடந்து செல்வது ஓர் அற்புதக் காட்சி'' என்கிறார் இலண்டன் ஆறுமுகம்.

சுவாமிகளின் முக்கிய சீடர் சிவாய சுப்பிரமுனியர் ஆவார். இவர் ஹவாயில் சிவன் கோயில் அமைத்து உலகெங்கும் சைவ சமயத்தைப் பரப்பினார்.

சுவாமிகள் தியானத்தில் இருந்தபடியே பாடிய பாடல்கள் தெய்வீகப் பாடல்கள் ஆகும். அவை தொகுக்கப் பெற்று ''நற்சிந்தனை'' என்று வெளியாகியிருக்கின்றது. ''ஒருவன் எப்படி பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான்'' நானே அவன் என்று ஆன்மாவே சிவன் என்று ஆன்மா தியானம் செய்தால் கடவுள் தன்மை வந்து விடுகிறது. ஓம் சிவாய நமவென்று உறுதியுடன் செபித்தால் நாம் சிவமே ஆவோம்''.

''வாடாமல் வழிபடென்றான் எங்கள் குருநாதன் வையகத்தில் வாழ் என்றான் எங்கள் குருநாதன் இகலோக மதபர லோகம் இங்கேதான் கண்டு கொள்வாய் தம்பி''.

1964-ஆம் ஆண்டு சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்கள்.

(தோற்றம் – 1872; இறையுடன் கலத்தல் – 1964; பிறந்த ஊர் – மாவிட்டபுரம், இலங்கை; பெற்றோர் – அம்பலவாணர், சின்னாச்சி அம்மையார்; பூர்வாசிரமப் பெயர் – யோகநாதன்.)

துணைநூல்கள் : ''அருளாளர்கள்'' – அ.ச. ஞானசம்பந்தன்; ''சைவ உலகம்'' – உலகச் சைவப் பேரவை, இலண்டன்; இதழ் 10; 1995.

12

திருக்கூத்தை உலகறியச் செய்த கலாயோகி (1877)

''Dance of Shiva'' என்ற ஒரே கட்டுரையினால் உலகெங்கும் பேசப் பட்டவர் ஆனந்தகுமாரசுவாமி ஆவார்.

ஆனந்த குமாரசுவாமி கலாயோகி ஆவார். தனது முப்பதாவது வயதிலேயே கலா முயற்சிகளில் ஈடுபட்டவர். 1911-ஆம் ஆண்டில் அலகாபாதில் நடந்த பொருட் காட்சியில் கலைப்பகுதிக்குப் பொறுப்பு வகித்தவர். 1917-ஆம் ஆண்டு முதல் மறையும் வரை அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் அமைந்திருந்த நுண்கலை நூதன சாலையில் கிழைத்தேயப் பிரிவின் பணிப் பாளராகவும் பின்பு ஆராய்ச்சியாளராகவும் பணிபுரிந்தவர்.

இந்தியக் கலைகளின் தெய்வாம் சத்தினை உலகத்துக்கு எடுத்துக்காட்டிய சிறந்த தூதுவராகக் கருதப்படுபவர்; இறைவனின் பஞ்ச கிருத்தியத்தைப் பிரதி பலிக்கும் சிவநடனத்தை விளக்கி 1912-ஆம் ஆண்டிலே ''சித்தாந்த தீபிகை'' யில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை மூலம் இந்தியக் கலைகளின் சிறப்பினை உலகுக்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாகக் கொள்ளப்படுபவர்.

Medieval Sinhalese Art (1908), Arts and crafts of India and Ceylon (1913), Bronzes from Ceylon (1914), Rajput paintings (1916), The History of Indian and Indonesian Art (1927). என்னும் முக்கியமான ஆக்கங் களிலே கலைகளின் தெய்வீகத் தன்மை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யினைத் துல்லியமாக எடுத்துக் காட்டியவர் 'கலாயோகி'.

The Dance of Shiva (1917), Hinduism and Buddhism (1943), Buddha and the Gospel of Buddha, A New Approach to the Vedas (1932), Spiritual Authority and temporal power முதலியனவற்றிலே சமய தத்துவ ஆய்வாள ராகப் பேரெடுத்தவர். ஏராளமான கட்டுரை களையும் எழுதியவர். சகோதரி நிவேதிதையுடன் சேர்ந்து பௌத்த புராணக் கதைகளையும் தொகுத்துத் தந்தவர். ''பிரபுத்த பாரதா'' எனும் ஆங்கில சஞ்சிகையில் 1913, 1914, 1915-ஆம் ஆண்டுகளில் தாயுமானவர் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் சிலவற்றை வழங்கியவர்.

கீழைத்தேயக் கலைகளுக்கும் அவற்றின் ஊடுபொருளாக அமைந்த இந்து மதங் களுக்கும் சிறந்த தூதுவராக விளங்கிய கலாயோகி தமது எழுபதாவது வயதில் பாஸ்டன் நகரில் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

(தோற்றம் – 22.8.1877; மறைவு – 9.9.1947; பெற்றோர் – முத்துக்குமார சுவாமி – எலிசபெத் பீபி; ஊர் – கொழும்பு.)

துணைநூல் : இந்து சமயக் கலைக் களஞ்சியம்.

13

கற்கோயில், சொற்கோயில், கல்விக் கோயில் எழுப்பிய சிவபாதசுந்தரனார் (1878)

அக்டோபர் 1948.... திருக்கேதீச்சரப் புனருத்தாரணத் திருப்பணிக் குழுவின் செயற்குழுத் தலைவராக சிவபாத சுந்தரனார் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பொறுப்பேற்றவுடன் திருப்பணி திட்ட வேலைகளை நெறிப்படுத்தினார். நகரந் தோறும் சென்று திருப்பணியின் அவசி யத்தை வலியுறுத்தினார். தமது செலவிலே நடராஜப் பெருமானுக்கும், சிவகாமி அம்மைக்கும் திருமேனி எழுந்தருளு வித்தார். இவர் பதவிக் காலத்திலேயே திருஞானசம்பந்தர் திருமடமும் கட்டி முடிக்கப்பட்டது. சிவபாத சுந்தரனாரின் இறுதிக் காலம் கேதீச்சரப் பணியாகவே அமைந்தது.

சிவபாத சுந்தரனார் ஆரம்ப காலங்களில் மாணாக்கருக்குச் சித்தாந்த சாத்திரங்களைக் கற்பித்தார். தமிழிலே சைவபோதம் முதற் புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம் (1916), சைவ சமய சாரம் (1947), சைவ சித்தாந்தம் (1932), கந்தபுராண விளக்கம், சைவக்கிரியை விளக்கம், திருவருட்பயன் விளக்கவுரை (1918), திருப் பெருவடிவம் (1939), திருவாசக மணிகள் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

மேனாட்டவரும் சைவ சித்தாந்தம் தெரிந்து கொள்ளும் வண்ணம் Saiva School of Hinduism, The Glories of Saivism (1954), An outline of Sivagnana Botham with a rejoinder to a Christian Critic (1951) என ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார்.

சொற்கோயிலும், கற்கோயிலும் எழுப்பிய சிவபாதசுந்தரனார் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து கிராமந்தோறும் சைவப் பள்ளிகள் நிறுவி கல்விக் கோயில்களும் எழுப் பித்தார்.

14.8.1953 அன்று சிவபாதசுந்தரனார் சிவனடிக் கீழ்சார்ந்தார்.

(பிறப்பு – 1878; மறைவு – 1953; பெற்றோர் – வ. சுப்பிரமணியப்பிள்ளை, வள்ளியம்மை; பிறந்த ஊர் – புலோலி)

துணை நூல் : ''நாவலர் பண்பாடு'' – பொ. பூலோக சிங்கம்.

14

இதழ்கள், நூல்கள், கிரியைகள், கல்விச்சாலைகள்–சைவப்பணிகள் பலசெய்த சிவாகம ஞானபாநு (1886)

தமது வீட்டில் பிராமணக் குழந்தை களுக்கும், சைவப் பிள்ளைகளுக்கும் சமய,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீதி கருவி நூல்களைக் கற்பித்தல் (1911-1915); சரசுவதி வித்தியாசாலை தொடங்கி நடத்துதல் (1918); 1928-ஆம் ஆண்டு வரை காப்பாளராகவும் ஆசிரிய ராகவும், பணியாற்றுதல்; சைவபரிபாலன சபையினரின் குருகுல வகுப்புக்குச் சிவா கமங்களையும், பத்ததிகளையும் போதித்தல்; நல்லூரில் நடத்தப்பட்ட வேதாகம பாடசாலையில் தொண்டராகப் பணியாற்றுதல்; மருதன் கேணியிலும், சோறம் பற்றிலும் சைவப் பள்ளிக்கூடங்கள் நிறுவமுயற்சி எடுத்தல்; ''சைவ சாபத்திர பரிபாலனம்'' (1939-1941), ''ஆறுமுக நாவலர்'', சைவாபிமானிகள் சங்க மாத வெளியீடு ஆகியவற்றைத் தாமே வெளி யிட்டும், ஆசிரியராகவும், மேற்பார்வை யாளராகவும் இருத்தல்; இவ்வாறாக பல நிலைகளில் இருந்து சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் நாவலர் அவர்கள் பாதையில் அடியொற்றி பணியாற்றினார்.

சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் கிரியைகள் செய்வதிலும் ஒப்பற்று விளங்கினார். ''மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்றும் வழுவாது பிரதிட்டை உற்சவாதி கிரியைகள் செய்வதிற் பிரசித்தி பெற்ற வர்கள் குருக்களாவார்கள். ஆலய அமைப்பு, விக்கிரக அமைப்பு என்பன வற்றிலும் துறைபோனவர்'' என்கிறார் பூலோக் சிங்கம். சிவஸ்ரீ குருக்களவர்கள் நடத்தி வைத்த கும்பாபிடேகங்கள், திருவிழாக்கள் கணக்கற்றவை.

கிரியைகள் செய்வதற்கான வழிமுறை களை விளக்கும் நூல்களும் சிவஸ்ரீ குருக்களவர்கள் எழுதியுள்ளார்கள். அவை வருமாறு :

சிவபூசை விளக்கம் (1928); மகோற்சவ சந்திரிகை (1938); சிவ பூசா விதி (1937); மகோற்சவ விளக்கம் (1958); பிராசாத தீபவுரை (1933); சிராத்த தீபிகை (1933); அநுட்டான அகவலுரை (1937).

குருக்களவர்கள் துண்டுப் பிரசுரங்களும் எழுதினார். இந்து சாதனம், சிவநேசன் போன்ற இதழ்களிலும் கட்டுரைகள் எழுதினார்.

திருமுறைகளைச் சிறுவர்களும் பயிலும் வண்ணம் கதைகள் வாயிலாக விளக்கி ''சைவப் பிரகாசிகை'' (1933) என்ற பெயரில் ஐந்து நூல்கள் வெளியிட்டார். ''முப்பொருள் விளக்கம்'' (1960) சிவஞான சித்தியாரின் சாரம் ஆகும். ஆலய அமைப்பு, ஆலய சேவை (1949), சைவ சாஸ்திரப் பிரமாணம் (1924), திருவருட்பாத் திரட்டுக் குறிப்புரை ஆகியன மாணாக் கர்க்குப் பயன்படுவன. விநாயக பரத்துவம் (1934), புவனேஸ்வரி மகத்துவம் (1939) ஆகியன இவர் எழுதிய பிற நூல்களாகும். வேதாகம நிரூபணம் முதற்பாகமும் (1950), இரண்டாம் பாகமும் (1951) வேதங்களின் பெருமையை நிலைநாட்டின. இவருடைய சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திர விளக்கம் எனும் கட்டுரை பரிசு பெற்றது.

இவ்வாறு ஆறுமுக நாவலரவர்களுக்குப் பிறகு இருபதாம் நூற்றாண்டில் இணை யற்ற சைவப்பணி புரிந்த சிவஸ்ரீ குருக்களவர்கள் 1971-ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

(பிறப்பு – 16.11.1886; மறைவு – 1971; பெற்றோர் – ந. சபாபதிக் குருக்கள், தங்கம்மா; பிறப்பிடம் – அச்சு வேலி)

துணைநூல் : ''நாவலர் பண்பாடு'' பொ. பூலோக சிங்கம்.

15

உபநிடதங்களுக்குச் சைவ சித்தாந்த விளக்கம் தந்தவர் (19-ஆம் நூற்றாண்டு)

உபநிடதங்களுக்குச் சங்கரர், இராமானு ஜர், மத்துவர் ஆகியோர் தத்துவ விளக்கம் தந்திருக்கின்றனர். ஆனால் உபநிடதங் களுக்குச் சைவ சித்தாந்த விளக்கம் தந்தவர் ஏ. விசுவநாதன் ஆவார். ''வேதாந்த மூலசாரம்'' என்று கட்டுரை களாக எழுதி வெளியிட்டார். திருமந்திரத் தில் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து விளக்கமாக எழுதி ''An analysis of Thirumanthiram'' என்ற நூலையும் வெளியிட்டார். இவர் எழுதிய மற்றொரு நூல் 'The Element of Saiva Siddhantam'' ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1940-ஆம் ஆண்டில் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். 1880-ஆம் ஆண்டில் பிறந்திருக்க வேண்டும்.

16
ஆங்கிலத்தில் சைவ நூல்கள் எழுதிய கல்வியாளர் (1910)

1972 அல்லது 73 இருக்கலாம். திருவிடைமருதூரில் திருவாசகக் கருத்தரங்கம், பாரதப் பிரதமர், தமிழக முதல்வர் என்று தலைவர்கள் ஒருபுறம்; தெ.பொ.மீ., அ.ச.ஞா. கி.வா.ஜ. என்று திருவாசக அறிஞர்கள் ஒருபுறம். மூன்று நாள்கள் திருவிடைமருதூர் திருவாசகச் சோலையாகத் திகழ்ந்து.

அச்சோலையில் ஒரு குயில் மிழற்றியது. ஆங்கிலமும், தமிழும் கலந்த மொழி. இடிமுழக்கங்களுக்குப் பின் எழுந்த மெல்லிய தென்றல். மென்மையான குரலில், இசையைப் பழிக்கும் தொனியில், நெஞ்சைக் கசிவிக்கும் மொழியில் ''பால் நினைந்தூட்டும் தாயினும்'' என்ற பாடலை இசைக்கின்றது. அவையே அசைவற்று அமர்ந்துள்ளது.

''குழந்தைக்குப் பசி என்று நினைத்து பாலூட்டும் தாய் அவள். குழந்தை உண்ண மறுத்து விளையாட்டு நினைவாக ஒருபுறம் ஓடுகிறது. தாய் பால் சோற்றைக் கையில் வைத்துக் கொண்டு பின்புறமாக ஓடுகிறாள். குழந்தை தடம் மாறி எதிர்ப் புறம் ஓடுகிறது. தாய் விடவில்லை. முன்புறமாகப் போய் நிற்கிறாள். குழந்தை போகும் இடமெல்லாம் முன்னும் பின்னுமாய்ச் சூழச்சென்று பாற்சோறு ஊட்டுகிறாள்''.

''புறம் புறந் திரிந்த''

''மனிதனும் செல்வம், தொழில் என்று அலைகிறான். மறுபுறம் மனைவி, மக்கள், சொந்த பந்தம் என்று பாசவலை. இறைவன் விடுவதாக இல்லை. மனிதனைக் கடைத்தேற்ற வேண்டியது அவன் கவலை. பால் நினைந்தூட்டும் தாய் போல ''புறம் புறந்திரிந்து'' காத்திருக்கிறான். உலக மாயையிலிருந்து மீட்கிறான்'' என்று முடிக்கின்றார் அக்குரலுக்குச் சொந்தக்காரர். கரவொலி எழுப்பும் உணர்வு கூட இல்லாது அவை பிரமித்து கேட்டுக் கொண்டிருந்தது.

இலங்கைக்கே உரிய கொஞ்சு மொழியில் பேசியவர் இரத்தின நவரத்தினம் அம்மையார் ஆவார். அவர் சொன்ன கருத்து பலரும் கூறியதும் தான். ஆனால் சொன்ன முறை – அப்படி ஒரு அழகு; ''புறம்புறந் திரிந்த'' என்ற பொழுது ஒரு தாய் அங்கும் இங்கும் ஓடி அல்லாடுவது கண்முன் வந்தது.

அம்மையார் தமிழோடு நிற்கவில்லை. ஆங்கிலமேற்கோள்களும் பொழிந்து தள்ளினார். ''Divine Comedy'' -இல் இறைவனைத் தேடி அலையும் ஆன்மாவைப் பற்றிக் கூறி ஒப்பிட்டுக் காட்டினார். ''மேலை இலக்கியங்களில் ஆன்மா இறைவனைத் தேடி அலைகின்றது. திருவாசகத்தில் இறைவன் ஆன்மாவைக் கடைத்தேற்ற அலைகிறான்'' என்றார். ஆங்கிலச் சொற்களும், தமிழ்ச் சொற்களுமாக ஈழ இரதத்தில் பவனி வந்தன.

அம்மையாருக்கு ஆங்கிலத்தில் அப்படி ஒரு புலமை; அவர் எழுதிய நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் உள்ளன.

'Thiruvachakam - the Hindu Testament of Love'', 'The vision of Siva in Periye puranam'', 'Siddhanta Saivam in essence

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

and Manifestation'', ''Kartikeya - the Hindu Testament of Love''.

இரத்தின நவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். சென்னை, அண்ணாமலை, இலண்டன் பல்கலைக் கழகங்களில் பயின்றார். இலங்கையில் கல்வித் துறையில் பணியாற்றினார். உலகளாவிய கருத்தரங்குகளில் பங்கு பெற்றார். தவத்திரு யோக சுவாமிகளிடம் உபதேசம் பெற்றார். முழுவாழ்வு வாழ்ந்த அம்மையார் இலங்கையில் உயிர் நீத்தார்.

(தோற்றம் – *24.10.1911*; மறைவு – *1993*; ஊர் – யாழ்ப்பாணம்; பெற்றோர் – செல்லையா தம்பதியினர்.)

17

இலண்டனில் சைவத்திருமடம் நிறுவிய இலங்கை விஞ்ஞானி (1929)

சிங்கப்பூர் – *1992*; பாரிசு – *1993*; கொழும்பு – *1994* டர்பன் – *1995*; தஞ்சாவூர் – *1997*; டொரன்டோ, கனடா – *1999*; மொரீசியசு – *2001*.

கடந்த காலத்தில் உலகச் சைவப் பேரவையின் மாநாடுகள் நடந்த இடங்கள் இவை ஆகும். இந்தப் பட்டியலைப் பார்த்தவுடனே ஒருபெருமிதமும், பூரிப்பும் நமக்குத் தோன்றுகிறது. ''எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று பாடிப்பரவத் தூண்டுகிறது.

இச்சாதனைகளை நிகழ்த்தியவர்கள் கி. ஞானசூரியன் என்ற பூர்வாசிரமப் பெயரினைக் கொண்ட சுவாமி சிவநந்தி அடிகள் ஆவார்கள்.

இலங்கையில் பிறந்த ஞானசூரியன் அவர்கள் இலண்டனில் எம்.எஸ்ஸி பட்டம் பெற்று விஞ்ஞானியாகப் பணியாற்றினார்கள்.

இலண்டனில் இருந்த பொழுது ''இலண்டன் முரசு'' இதழில் சைவசமயம் பற்றிக் கட்டுரைகள் எழுதிவந்தார்கள். *1979*-ஆம் ஆண்டில் இலண்டனில் ''London Saiva Siddhanta Centre'' என்ற ஒரு மையம் தொடங்கி சைவ சமயச் சொற்பொழிவுகள் நடக்க ஏற்பாடு செய்தார்.

23.11.1985-ஆம் ஆண்டில் ''இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்'' தோற்றுவித்து அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். *1985*-ஆம் ஆண்டில் மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களைக் கொண்டு கருத்தரங்கங்கள் நடத்தினார்.

29.12.1992-ஆம் ஆண்டில் சென்னையில் உலகச் சைவப் பேரவையை நிறுவி அதன் தலைவராகப் பணியேற்றார். உலகச் சைவப் பேரவையின் உறுப்பினர்களாக அனைத்து நாடுகளிலும் உள்ள சைவ அறிஞர்கள் பணிபுரிகின்றனர். உலகச் சைவப் பேரவையின் சார்பில் உலகெங்கும் கிளைகள் நிறுவி உலகச் சைவ மாநாடுகள் நடத்தி வருகிறார்கள்.

1993-ஆம் ஆண்டில் ''Saiva Ulagam'' என ஆங்கில முத்திங்களிதழ் துவங்கி உலகெங்கும் சைவம் பரவ வகை செய்தார்.

இவர்கள் எழுதியுள்ள நூல்கள் :

(1) Introduction of Tamil Culture (2) A date with destiny (3) Saivite Hinduism (premier for children) (4) விடுதலையும் வீடுபேறும் (5) What is Saiva Siddhanta? (6) Sarvam Siva Mayam (7) The Meaning of Life in Saiva Siddhanta (8) பெரியபுராணம் புஷ்பாஞ்சலி (9) Prasada Yoga (10) Saivite Hinduism (11) Saiva Prayer Manual (12) Saivism - Questions and Answers (13) World Saiva Crusade (14) Challenges facing Saivism (15) Saivam - Vision, Focus, Action.

ஆண்டு முழுவதும் ஓயாது உலகெங்கும் சுற்றுப் பயணம் செய்து சைவம் தழைக்கப் பாடுபட்டு வருகிறார்.

(பிறப்பு – *11.7.1929*; மறைவு – *2003*; பிறந்த ஊர் – காரை நகர், யாழ்ப்பாணம்)

ஆன்றோர் – அறிஞர் பத்தொன்பதாம் நூற்றாண்டு (காலம் கணிக்கப்பட்டது)

1) சரவண முத்துப் புலவர்; *1802 – 1845*; நல்லூர் (ஈழம்) திருக்கோணேசர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலைக் குறவஞ்சி, நெல்லை வேலவர் உலா.

2) மு. கார்த்திகேயப் புலவர்; 1819 – 1891; காரைத் தீவு, யாழ்ப்பாணம்; கிறிஸ்துமத குடாரம், திக்கைத் திரிபந்தாதி, திருத்தில்லைப் பல்சந்த மாலை, திருப்போசை வெண்பா, நகுலேசர் யமக அந்தாதி, வண்ணைத் திரிபந்தாதி, திண்ணபுரத் திரிபந்தாதி; பதிப்பித்து வெளியிட்டது – தட்சிண கைலாச புராணம்.

3) சங்கர பண்டிதர்; 1821 – 1891; சுன்னாகம்; யாழ்ப்பாணம்; கிறிஸ்துவ மதக் கண்டனம், சைவப் பிரகாசனம், சிவதூஷண கண்டனம், சிவபூசை அந்தாதி உரை, சமஸ்கிருத சிவஞான போதத் தமிழுரை.

4) சிவசம்புப் புலவர்; 1830 – 1910; உடுப்பிட்டி; கந்தவன நாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம், செந்தில் யமக அந்தாதி; திருவேரக அந்தாதி, புலோலி நான் மணிமாலை, திருச் செந்தில் திருவந்தாதி முதலிய செய்யுள் நூல்கள்; மறைசை அந்தாதி உரை, கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலம் உரை.

5) ந.ச. பொன்னம்பலம் பிள்ளை; 1836 – 1902; பெரிய புராணம், கந்தபுராணத் திற்கு நுட்பமாகப் பொருள் சொல்லும் இயல்பு படைத்தவர்; மயூரகிரிப் புராணத்துக்கு விரிவான உரை எழுதியுள்ளார்.

6) கந்தப்பிள்ளை; 1840; வேலனை, ஈழம்; தத்துவப் பிரகாசம் – உரை; ''சைவக்சூக்குமார்த்த போதினி'' இதழ் வெளியிட்டார்.

7) ச. வைத்தியலிங்கம் பிள்ளை; 1843 – 1900; வல்வெட்டித்துறை, யாழ்ப் பாணம்; வல்வை வைத்தியேசர் பதிகம், வல்வை வைத்தியேசர் ஊஞ்சல், கந்தபுராண உரை, சைவ மகத்துவ பாநு; சைவ மகத்துவ திக்காரநிக்கிரகம்; ''சைவாபிமானி'' எனும் பத்திரிகை நடத்தினார்.

8) நடராசையர்; 1844; இணுவில்; ''சிவஞான சித்தியார் உரை''.

9) வேற்பிள்ளை; 1844; மட்டுவில்; ''வாதவூரர் புராண உரை'', புலோலி வயிரவக் கடவுள் தோத்திரம், ஈழமண்டல சதகம்; அச்சிட்ட நூல்கள் – வேதாரண்ய புராணம், சிதம்பரச் சிவகாமியம்மை சதகம்.

10) கணபதி பிள்ளை; 1845 – 1895; புலோலியூர், இலங்கை; மாணிக்க வாசகர் புராணம், மார்க்கண்டேயர் புராணம், வாதபுரேசர் கதை, வேதாரணியேசுவரர் ஊஞ்சல், பதிகம்.

11) வேற்பிள்ளை; 1846 – 1943; மட்டுவில், இலங்கை; திருவாதவூரர் புராண உரை, ஈழ மண்டல சதகம்.

12) சு. ஏரம்பையர்; 1847 – 1914; மாதகல், ஈழம்; ''கண்ணப்பர் சரித்திரம்'' குவலாலம்பூர் சிவபெருமானூஞ்சல், சேதுபுராணம், மனுநீதி கண்ட சோழன் புராணம்.

13) சரவண முத்துப்பிள்ளை; 1848 – 1916; ஊரெழு ஈழம்; சிவமாலை, சிவராத் திரி புராணம், நல்லூர் கைலாசநாதர் புராணம் உள்ளிட்ட 13 நூல்கள்.

14) நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியார்; 1849 – 1926; ஈழம்; சிவமாலை, சிவராத்திரி புராணம், நல்லூர் கைலாசநாத புராணம் உள்ளிட்ட 13 நூல்கள் .

15) த. கைலாசப்பிள்ளை; 1852 – ; நல்லூர்; கண்டனநூல்கள்.

16) வே. அகிலேச பிள்ளை; 1853 – 1910; திருகோணமலை; திருகோணமலை விசுவநாத சுவாமி ஊஞ்சல், திருக் கோண நாயகர் பதிகம், திருக்கோணா சல வைபவம் முதலிய 21 நூல்கள்.

17) அம்பிகைபாகப் புலவர் 1854 – 1904; இணுவில், யாழ்ப்பாணம்; இணுவை யந்தாதி, தணிகைப் புராணத்துக்கு நகரப்படலம் வரை உரை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18) குமாரசுவாமிப் புலவர்; 1854 – 1922; சுன்னாகம், யாழ்ப்பாணம்; திருவாத வூரர் புராண உரை.

19) தில்லைநாத நாவலர்; 1854 – 1938; தென் புலோலியூர் சுன்னாகம்; திருவிளையாடற்புராணம் – ஒரு பகுதிக்கு அகல உரை.

20) பூபாலப்பிள்ளை; 1856 – 1921; மட்டக்களப்பு; சிவதோத்திரம், சிவமாலை உள்ளிட்ட 12 நூல்கள்.

21) சிற் – கைலாசபிள்ளை; 1856 – 1916; நல்லூர் (ஈழம்); வடதிருமுல்லை வாயில் சிவபெருமான் மும்மணிக் கோவை.

22) சபாரத்தின முதலியார்; 1858 – 1922; கொக்குவில், யாழ்ப்பாணம், சீவான்ம பேதம், ஈச்சுரநிச்சயம், இந்து மதத்தின் முக்யாம்சங்கள், பிரபஞ்ச விசாரம், திருஞான சம்பந்தர் வரலாறு (ஆங்கிலம்), பண்டைத் தமிழர்கள் சைவக் கொள்கை, சைவதோத்தரம் முதலிய நூல்கள்; சார்ல்ஸ் பிராட்லாப் கிறிஸ்துவக் கொள்கையைப் பரப்ப எழுதிய கட்டுரைகளை மறுத்து இவர் ''உதயபானு'' எனும் இதழில் கடிதங்களும், கட்டுரைகளும் எழுதி சைவ சமயத்தை நிலை நாட்டியவர்.

23) திருவிளங்க தேசிகர்; 1859 – 1922; மானியம்பதி, யாழ்ப்பாணம்; சிவ ஞான சித்தியார் உரை, சிவப் பிரகாசர் உரை.

24) ஞானசேகரம்; 1861 – ; ஈழம்; யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கீரிமலை சிவன்கோயில் ஆகிய திருப்பணிகளுக்குப் பெரும்பொருள் கொடுத்தவர்; நகுலேஸ்வர சுவாமி யின் நித்திய பூஜைக்கு முதற்கட்டளை தாரர்.

25) தி.த. கனகசுந்தரம் பிள்ளை; 1863 – 1922; திருகோணமலை தமிழ் நாவலர் சரிதம், ஈழமண்டல தேவாரம் – குறிப்புரை.

26) வே.க. இராமலிங்கம் பிள்ளை; 1868 – 1918; வேலனை; ''சிதம்பரப் பதிகம்''.

27) சிவானந்தையர்; 1873 – 1916; தெல்லிப்பழை பன்னாலை (ஈழம்); ''புலியூரந்தாதி'', ''புலியூர்ப் புராணம்''.

28) ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள்; 1875 – 1950; புலோலியைச் சேர்ந்த தும் பளை; சபாபதி ஐயர்; கந்த புராணம், கந்தரனுபூதி உரை.

29) க. இராமலிங்கம்; 1880 – 1953; யாழ்ப்பாணம் சரசாலை கந்தையாப் பிள்ளை புதல்வர்; ''நமசிவாயம் அல்லது நான் யார்''

30) கந்தையா பிள்ளை, ச; 1880 – 1958; தென் கோவை, ஈழம்; திருவாசக உண்மை, முத்திநிலை ஆராய்ச்சி; ''வித்தகம்'' எனும் வாரப் பத்திரிகை நடத்தி வந்தார்.

31) சி. நாகலிங்கம் பிள்ளை; 1882 – 1952; வதிரி, யாழ்ப்பாணம்; கதிர்காம புராணம், திருநெல்வாயிற் புராணம், திருத்திலதைப்பதி புராணம் பாடி யுள்ளார்; தட்சிண கைலாச புராணம் எனும் வசன நூல்.

32) சி. தாமோதரம் பிள்ளை; 1883 – 1921; வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம், சைவசிரார்த்த ரகசியம், சைவ சித் தாந்த சாரமான மரபு, கடம்ப வனம் இரத்தினாசலம் மரகதாசலம் தலமான் மியங்கள்; பிற பணிகள் –''விசயத் துவம்'' ''ஞானசக்தி'' ஆகிய இதழ் களைத் தொடங்கினார். ''ஞானா மிர்தம்'' இதழின் ஆசிரியராக இருந் தார். சமயச் சொற்பொழிவுகள் நடத் தினார்.

33) இலக்கணசாமி, முத்துக்குமார சுவாமித் தம்பிரான்; 1885 – 1949; வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்; சிவஞான மாபாடியத்தை ஆராய்ந்து முதன் முதலில் வெளியிட்டவர்; சிவாக்கிரக யோகிகள் அருளிய சிவாக்கிரக பாடியம், கிரியாதீபிகை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எனும் வடமொழி நூல்கள் வெளியிடல், முத்தி நிச்சயம் பேருரைக்கு ஆராய்ச்சி குறிப்புகள் எழுதுதல், சைவசந்நியாச பத்ததி, திருநாரையூர்ப் புராணம், திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார் உரை ஆகியன வெளியிடுதல்.

34) இராமலிங்கம் பிள்ளை; 1885 கதுமலை, யாழ்ப்பாணம்; மாணிக்க வாசகர் விலாசம்.

35) கா. அருணாசல உபாத்தியாயர்; 1888 – 1969; மட்டக்களப்பு; நூல்கள் – சைவசமய ஆரம்ப போதினி; சைவ சமய இளைஞர் போதினி, இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணி மாலை, இந்து சமய மாத மகத்துவ மான்மியம், சைவ இலக்கிய கதா மஞ்சரி, சைவ சமய சிந்தாமணி, சித்தாந்த சிரோமணி, மெய்ஞ்ஞான தீபம் முதலிய நூல்கள்; சைவபாட சாலைகள் நிறுவியவர்; வாரம் தோறும் சைவ சொற்பொழிவு செய்தவர்.

36) ந.சி. கந்தையாபிள்ளை ... 1893 – 1967; கந்தரோடை, ஈழநாடு... ''தமிழர் சமயம் எது?'', ''சிவன்'', ''இந்து சமய வரலாறு'', ''ஆரியத்தால் விளைந்த கேடு'', ''சிந்துவெளித் தமிழர்'', ''திராவிடம் என்றால் என்ன?'' ''ஆரியர் வேதங்கள்'' உள்ளிட்ட 40 நூல்கள்.

37) கணபதிப் பிள்ளை ... 1899 – 1986; மட்டுவில், யாழ்ப்பாணம் மாவட்டம்; சைவநற்சிந்தனைகள், கந்தபுராணக் கலாசாரம், கந்தபுராண போதனை, கந்தபுராண தக்ககாண்ட உரை, சிவராத்திரியில் சிந்திக்கத்தக் கவைகள் போன்ற நூல்கள்.

38) சோ. இளமுருகனார்; (1908 – 1975); ஈழத்துச் சிதம்பர புராணம்.

39) சு. அருளம்பலம்; (1910 – 1966) காரை நகர், யாழ்ப்பாணம்; திருவாசக ஆராய்ச்சியுரை – இருபாகங்கள் (1967, 1973).

40) ஆ.வேலுப்பிள்ளை; பிறப்பு – 21.11.1936 இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனை வளாக இணைப் பேராசிரியர்; எழுதிய நூல்கள் – ''தமிழர் சமய வரலாறு'', ''தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்''.

41) நா. சுப்பிரமணியன்; 1943; முன்னியவளை, முல்லை மாவட்டம்; யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்; எழுதிய நூல்கள் – இந்தியச் சிந்தனை மரபு, நால்வர் வாழ்வும் வாக்கும்.

ஆன்றோர், அறிஞர் – ஈழம்
19-ஆம் நூற்றாண்டு
(காலம் கணிக்கப்படவில்லை)

1) சுப்பையர்; வண்ணார்ப் பண்ணை (ஈழம்); ''சிவநாம விளக்கம் (1889).

2) செகராச சேகரன்; ஈழம்; தட்சிண கைலாச புராணம் (1887).

3) மாசிலாமணி முத்துக்குமாரு புலவர்; திரிகோணமலை; திரிகோணாசல புராணம்.

4) முத்துக்குமாரசாமிக் குருக்கள்; புலோலியூர் (ஈழம்); சிவபெருமான் அலங்காரம்; பசுபதீசரன் அந்தாதி.

5) வரத பண்டிதர்; ஈழம்; சிவராத்திரி புராணம்.

6) வேலுப்பிள்ளை; ஈழம்; திருத் தில்லை நீரோட்டக யமக அந்தாதி.

7) ஆ. அம்பலவாணர்; (– 1932); சித்தன்கேணி, ஈழம்; அருணாசல மான்மியம், திருநாவலூர் மான்மியம், வேணுவன லிங்கோற்பவம், திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரபாவம், சிவத்துரோக கண்டனம்.

8) ஆறுமுகத் தம்பிரான்; அற்புதத் திருவந்தாதி, மூத்த நாயனார் இரட்டை மணிமாலை; சேக்கிழார் நாயனார் புராணம், திருமுறை கண்ட புராணம் உரை எழுதியவர்; ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணம் 234-ஆம் செய்யுள் வரை உரை எழுதியவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9) மு. ஆறுமுகம் பிள்ளை; வட்டுக் கோட்டை, யாழ்ப்பாணம், சிறுத் தொண்ட நாயனார் புராணம் செய்யுளும் வசனமுமாக இயற்றியவர் (1894).

10) வ. இராமலிங்கம்; (– 16.2.1885); யாழ்ப்பாணம் கதுமலை; ''மாணிக்க விலாசம்'' நாடகம்.

11) கணபதிப் புலவர்; யாழ்ப்பாணம் புலோலி; ''வாதபுரேசர் மாணிக்க வாசகர் பற்றியது''.

12) குமாரசுவாமிக் குருக்கள்; ''சிவபூசை விளக்கம்'', பிரசாத தீபம், மகோற்சவ சந்திரிகை, சைவப் பிரகாசிகை.

13) திக்கம் சி. செல்லையாப் பிள்ளை; அச்சுவேலி; கந்த புராணம், பெரிய புராணம் விளக்கம் சொல்லி வந்தவர்.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

IX

19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஈழம்

குறிப்புகள்

1. இரத்தினேசுவர ஐயர் வ.மு.இ உடுவில், யாழ்ப்பாணம்; ''சிவநேசன்'' பத்திரிகையில் பணியாற்றியவர்; புராணங்களுக்குப் பயன் சொல்லி வந்தவர்.

2. ஆறுமுகத் தம்பிரான்; அற்புதத் திருவந்தாதி, மூத்த நாயனார் இரட்டை மணிமாலை, சேக்கிழார் நாயனார் புராணம், திருமுறை கண்ட புராணம் என்பனவற்றிற்கு உரை கண்டவர்; பெரிய புராணம் – ஏயர்கோன் கலிக்காம நாயனார் 235-ஆம் செய்யுள் வரை உரை கண்டவர் (எஞ்சிய செய்யுள்களுக்கு பொம்மபுரம் சிவஞான பாலைய தேசிகர் ஆதீனம் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் உரையெழுதி முற்றுவித்தார். இவ்வுரை 1885, 1898-ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது)

3. சி. ஆறுமுகதாசன்; இணுவில், யாழ்ப்பாணம்; சுந்தரமூர்த்தி தடுத்தாட் கொண்ட பகுதி, திருநீலகண்ட நாயனார், பட்டினத்தார், மாமனாக வந்து வழக்குரைத்த படலம் ஆகிய நாடகங்களை எழுதியவர்.

4. சி. அகிலேஸ்வர சர்மா; மண்டைத் தீவு, யாழ்ப்பாணம்; திருவெண்காட்டு அந்தாதி, திருவெண்காட்டு சித்தி விநாயகர் ஊஞ்சல், திருவெண்காட்டீசர் கும்மி கொண்ட (திருவெண்காடு – மண்டைத் தீவில் உள்ளது) ஒரே தொகுதி, முருகன் கீர்த்தனை பதிகம், நடராஜ பஞ்சரத்தினம் கொண்ட ஒரே தொகுப்பு, மதுரை மீனாட்சியம்மன் பேரின்பக் கீர்த்தனை.

5. அம்பலவாண நாவலர் ஆ; சித்தன் கேணி – மறைவு 1932; நூல்கள் – அருணாசல மான்மியம், திருநாவலூர் மான்மியம், வேணுவன லிங்கோற்பவம், திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரபாவம், சிவத் துரோகர் கண்டனம் முதலான நூல்கள்; திருச்சுழியற் புராணம், சண்முக சடாட்சரப் பதிகம், அகோர சிவாச்சாரியார் பத்ததி, உமாபதி சிவாசாரியாரின் பௌஷ்கர சங்கிதாபாஷியம் ஆகிய நூல்களை பதிப்பித்தவர்; வட்டுக் கோட்டையில் சைவத் தமிழ் வித்தியா சாலை நடத்தியவர்; தமிழ் நாட்டிலே திருநெல்வேலியிலே திருஞானசம்பந்த சுவாமி மடாலயமும், சிதம்பரத்தில் ஞானசம்பந்த சுவாமி ஆதீனம் என்னும் மடாலயமும் நிறுவியவர். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர்.

6. முத்துக்குமாரத் தம்பிரான் இலக்கணச் சாமிகள்; யாழ்ப்பாணம்; வெளிவராது இருந்த சிவஞான மாபாடியம், சிவாக்கிரக பாடியம் தேடி வெளியிட்டார்.

7. அம்பலவாண நாவலர்; வட்டுக் கோட்டை, ஈழம்; பதிப்பித்த நூல்கள் : அகோர சிவாச்சாரியார் பத்ததி, திருவாதிரைத் திருநாள் மகிமை, வேணுவன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லிங்கோற்பவம், அருணாசல மான்மியம், சிவத்துரோக கண்டனம் முதலான 8 நூல்கள்.

அச்சேறாதன : பெரிய புராண பாடியம், சித்தாந்தப் பிரபோதம், சைவ சந்நியாச பத்ததி; பிற பணிகள்: நெல்லையில் ''திருவாதவூர் புராணம்'' ஓராண்டு தொடருரையும், தேவகோட்டையில் ஈராண்டுகள் தொடருரையும் நிகழ்த்தினார். நெல்லையில் திருஞானசம்பந்தர் திருமடம் நிறுவினார்.

8. சபாரத்தின முதலியார் : ''பிரபஞ்ச விசாரம்'', ஈச்சுர நிச்சயம், சீவான்ம போதம்.

9. சு. சிவபாத சுந்தரம் : ''சைவ சித்தாந்தம்'', சைவபோதம், கந்த புராண விளக்கம், சைவக்கிரியை விளக்கம், திருவாசக மணிகள்.

துணை நூல்கள் : 1. ''தமிழ்ப் புலவர் வரிசை'' (தொகு 1 முதல் 31 வரை) க.அ. இராமசாமி புலவர்; சை.சி.நூ. கழகம்.

2. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்; ச. சிவகாமி; உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

20-ஆம் நூற்றாண்டு அறிஞர்கள் – ஈழம் (காலம் தெரியவில்லை)

1) வ. கார்த்திகேய பிள்ளை; மேலைப்புலோலி, யாழ்ப்பாணம்; நூல் – சைவசித்தாந்த சங்கிரகம்.

2) சுப்பிரமணிய சிவாச்சாரியார்; வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்; சிவராத்திரிப் புராணம்.

3) சுவாமிநாத பண்டிதர்; மறைவு – 1934; யாழ்ப்பாணம் வண்ணை நகர்; முதன் முதலாக சிவஞான பாடியத்தையும், தேவார அடங்கள் முறையையும் திருந்திய பதிப்பாக வெளியிட்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள் (ஈழம்)

துணை நூல்கள்

1) ''ஈழத்தில் தமிழ் இலக்கியம்'' – கா. சிவத்தம்பி; தமிழ் புத்தகாலயம்; 1978.

2) ''ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு'' – எப்.எக்ஸ்.சி. நடராசர் – அரசு வெளியீடு; 1970.

3) ''அகில உலக இந்து மாநாட்டு மலர்'' – 1982.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூன்றாம் பகுதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செயல்முறை ஆவணம்

ஆய்வாளனின் கடமை : இதுகாறும் சென்ற இருநூறு ஆண்டுகளில் சைவத்திற்கு ஆக்கம் விளைவித்த ஆன்றோர்கள் பற்றி ஒருவாறு அறிந்தோம். சாதனைகளைச் சொல்வது மட்டும் ஆய்வாளனின் பணியா காது. தான் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிபுகளின்படி மேற்கொண்டு செய்ய வேண்டுவன வற்றைத் தெளிவுபடுத்த வேண்டியதும் ஆய்வாளனின் கடமை யாகும். செய்ய வேண்டுவன யாவை என்று தெளிவு படுத்தும்பொழுது குறைகளை எடுத்து உரைக்க வேண்டி வரும். இது குறை காணும் குற்றமன்று. குறையறிந்து நிறை வாக்கவே. நோயறிந்தால் தானே தீர்க்க முடியும்.

சைவசமயம் – வளர்ச்சிநிலை : சைவ சமயத்திற்கு இது பொற்காலமா? அல்லவா? இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவத்தின் நிலை என்ன? நாட்டில் உள்ள சிவன் கோயில்கள் – இதுவரை திருப்பணி செய்யப்படாத வையும் சேர்த்து – புதுப்பிக்கப்பட்டு, திருப்பணி செய்யப்பட்டு குடநீராட்டு விழாக்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த பத்தாண்டு காலத்தில் குடநீராட்டு விழாக்களின் எண்ணிக்கை கூடியிருக் கின்றது. பாடல் பெற்ற தலங்களில் உள்ள திருக்கோயில்கள் அனைத்தையும் திருப் பணி செய்ய வேண்டும் என்றே ஒரு வள்ளல் கங்கணம் கட்டிக் கொண்டு முழு மூச்சாக இறங்கி உள்ளார். கோயில்களிலும் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதி கரித்து வருகிறது. பிரதோஷத்தன்று கூட்டம் கோயிலில் நெரிகின்றது. இளைஞர்களும் தென்படுகின்றனர். திருமடங்களின் பணிகளும் – குடநீராட்டு விழா, நூல் வெளியீடு, பிரச்சாரம் – தொடர்கின்றன. வாரவழிபாட்டு மன்றங் கள், சைவமன்றங்கள் தலயாத்திரை, சமயச் சொற்பொழிவுகள், உழவாரப்பணி, நூல் வெளியீடு என்றெல்லாம் பணியாற்று கின்றன. சைவநூல்கள் அழகுடன் உலகத் தரத்திற்கு இணையாக அச்சாகி வெளிவரு கின்றன. சைவ இதழ்களும் தங்கள் பணி களைத் தொடர்கின்றன. பக்தி இதழ்கள் பரபரப்பாக விற்பனையாகின்றன. திருமுறை ஒலிநாடாக்கள் அதிக அளவில் வெளியாகின்றன. இவை யெல்லாம் உற்சாகம் தரும் நிகழ்வுகளே.

தளர்ச்சி நிலை : ஆனால் இவைதான் உண்மையான நிலையா? கோயிலுக்குச் செல்பவர்களில் எத்தனை பேருக்கு திருமுறைகள் தெரியும்? விரல்விட்டு எண்ணி விடலாம். சைவசித்தாந்தம் பற்றி கேட்கவே வேண்டாம். தெரிந்தவர்கள் ஊருக்கு ஒன்றிரண்டு பேர் இருப்பர். கோயில் களையாவது தூய்மையாக வைத் திருக்கின்றார்களா? எனில் அதுவும் இல்லை. வழிபாட்டு முறையாவது அறிந் திருக்கின்றார்களா? நவக்கிரக தோஷம் வந்தால் நேராக சனி பகவானையோ, அங்கார கனையோ வழிபட்டு பிரார்த்தனை நிறைவேற்றுகிறார்களே ஒழிய அந்த சனிபகவானின் – அங்காரகனின் தோஷம் நீக்கிய மூலவரை – சிவபெருமானை – தரிசிப்பதே இல்லை. பள்ளி மாணவர் களுக்குத் திருமுறை ஆசிரியர்களின் பெயர் கள் கூடத் தெரியவில்லை. திருமுறைகளை ஒப்பித்தல் எங்ஙனம்? பள்ளிபாடத் திட்டங்களில் சைவ இலக்கியங்கள் இடம் பெறுவது அருகியே வருகின்றது. கல்லூரி மாணவர்கள் நாகரிக மோகத்தில், மூழ்கி இருக்கின்றார்கள். செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள் திருமுறை, சைவ சிந்தனை என்றெல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளிப்படுத்துவதே இல்லை. வெகுஜன இழ்கள் பற்றிக் கேட்கவே வேண்டாம். நாவல்களில் பாத்திரங்களாக உலவ விட ஒரு கல்கியோ, ஜெகசிற்பியனோ இன்று இல்லை. எல்லாவற்றிலும் உச்சமாக திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை, தமிழ்ஆகமவழிப்படி குடநீராட்டு விழாக்கள் ஆகியனவற்றில் தெளிவான ஒருமித்த சிந்தனை இல்லை. தமிழகத்தின் தலை நகரத்தில் தமிழ்ச்சமயமான சைவத்திற்கு நிழல்தர ஒரு இடம் இல்லை என்பது பேரவலம். சைவத்தில் இணைந்து செயல் பட்டுப் பொதுவான பணிகளை செய்து முடிக்கும் எண்ணமே இல்லை. துண்டு துண்டாகச் செயல்படுகின்றார்கள். சைவத் திற்காகத் தங்கள் வாழ்வை முழுமை யாக அர்ப்பணிக்கும் தொண்டர்கள் இல்லை. ஒருமித்த கருத்தை உருவாக்கும், அப்படி உருவாக்கினால் ஏற்கும் சமயத்தலைமை – சீடர் குழாம் உறவு இல்லை. இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். சைவ சமயத்தின் இன்றைய நிலையைப் பார்க்கும்பொழுது, பிற சமயங்கள், பிற இயக்கங்கள், பிற நாடுகள் – இவற்றின் நிலை என்ன என்று ஆராய்வது பலன் தரும்.

கிறித்துவ சமயத்தின் நிலை : கிறித்துவ சமயம், இஸ்லாமிய சமயம் பற்றிக் கேட்க வேண்டாம். கிறித்துவ மதகுருவான போப் பாண்டவர் கிறித்து பிறந்த முதலாயிரத்தில் ஐரோப்பா – இரண்டாம் ஆயிரத்தில் ஆப்ரிக்கா – மூன்றாம் ஆயிரத்தில் ஆசியா – நாடுகளில் கிறித்துவம் பரப்பவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார். அதற்காக முழுமூச்சாகப் பணியாற்று கின்றார்கள். இந்தியாவின் ஒரு மூலையில் சிறு கிராமத்தில் வாரம் தோறும் நடக்கும் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆயிரம் பேர் கலந்து கொள்கின்றனர் என்றால் இந்த வேகத்தை என்னவென்று சொல்வது? இப்படி எத்தனை கிராமங்கள்? தொலைக் காட்சி நிலையங்கள் ஒன்று விடாமல் கிறித்துவ சமயப் பிரச்சாரம் செய்து வருகின்றன. மதமாற்றமும் ஓசைப் படாமல் நடக்கிறது. கிறித்துவர்களின் இயல்பான சமயப் பற்று, அனைவரும் ஞாயிறன்று கட்டாயமாக மாதா கோயிலுக்குச் சென்று பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளல், சிறுவர்கள் கூட பைபிள் படித்தல் – ஆகியன தொடர்கின்றன.

இஸ்லாமிய சமயம் : இஸ்லாமிய சமூகத்தினரும் ஒட்டுமொத்தமாக மசூதிக் குச் செல்வது, தொழுகை செய்வது, சிறு வயது முதலே குரான் படிப்பது, சமயச் சடங்குகளை விடாது செய்வது, பொதுப் பிரச்சினைகளில் ஒன்று சேர்ந்து எதிர்ப்பது என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள்.

வைணவம் : தமிழ்நாட்டின் இரு கண்களில் மற்றொன்றான வைணவ சமயத் தில் தெளிவான சிந்தனையும், உறுதியான முடிவுகளும், தனிப்பெரும் சாதனைகளும், கூட்டு முயற்சியும், அர்ப்பணிப்பும் காணப் படுகின்றன. வழிபாட்டு முறையில் பெரு மாளுக்கு முன்னே நாலாயிர திவ்யப் பிரபந்தமும் பின்னே வேதமும் தொடர் கிறது என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்கள். வைணவ திருக்கோயில் களில் குடநீராட்டு விழாவை தமிழில் நடத்துவதா, வடமொழியில் நடத்துவதா என்ற பிரச்சினையே இல்லை. எங்கும் எதிலும் நாலாயிர திவ்யப்பிரபந்தத்திற்கு முதன்மை என்கிறார்கள். நாலாயிர திவ்யப்பிரபந்த வாசிப்பு வைணவப் பெருமக்களிடையே சிறுவர், பெரியவர் என்று பரவலாகக் காணப்படுகிறது. ஒரு பள்ளி மாணவன் நான்காம் வகுப்பிலேயே நாலாயிரம் மனப்பாடம் செய்ய ஆரம்பித்து ஆறாம் வகுப்பிற்குள் முழுமையும் ஒப்பிக்க ஆரம்பித்து விட்டான். திருமங்கை யாழ்வார் கருத்தரங்கில் இளம்பிள்ளைகள் கலந்து கொண்டு குறிப்புகள் எடுக் கின்றனர். வைணவக் கோயில்கள் (108 திவ்ய தேசங்களே) செம்மையாகப் பரா மரிக்கப்படுகின்றன. வைணவக் கோயில் கள் வழிபாட்டு முறைகளில் வைணவ சமயத் தலைவர்களே முடிவெடுக் கின்றனர். திருப்பதி கோயில் வழிபாட்டு முறைகளில் காஞ்சி சங்கராச்சாரியார் சுவாமிகள் தலையிடுவதை அனுமதிக்கவே யில்லை. திருமலை – திருப்பதி தேவ ஸ்தானத்தில் சமயநூல்கள் – குறிப்பாக வைணவ நூல்கள் வெளியிட முழுத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொகையும் கொடுக்கின்றனர். சென்னையில் நகரின் மையப் பகுதியில் கோயில், மண்டபம் எழுப்பி சொற்பொழிவுகள், கதாகாலேக்ஷேபங்கள் என்று நடத்துகின்றனர். பத்மாசேஷாத்திரி பள்ளியில் மார்கழி மாதம் நடக்கும் திருப்பாவைச் சொற்பொழிவுகளைக் கேட்க ஒரு திருவிழாக் கூட்டமே வருகின்றது. இவ்வாறு சென்னையில் மட்டுமே பல இடங்களில் நடக்கின்றன. வைணவ அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒரு நிறுவனமாக இயங்குகிறார்கள்.

(1) குமாரவாடி சுவாமிகள் ''திருமால்' இதழ் நடத்துதல், ஆண்டு தோறும் திருவாய்மொழி பயிற்சி வகுப்புகள் நடத்துதல், ஊர்தோறும் சென்று பிரச்சாரம் செய்தல்.

(2) சிதம்பரம் ஏ.வி. ரெங்காச்சாரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வைணவ சமயம் தொடர்பான எந்த ஒரு சிறு காரியத்திலும் (குடநீராட்டு விழா, கருத்தரங்கு, மாநாடுகள், இதழ்கள், நூல்கள்) பங்கு பெறாமல் இருப்பதில்லை.

(3) ஸ்ரீரங்கத்தில் வாழும் ஸ்ரீ வைஷ்ண வஸ்ரீ கிருஷ்ணமாசாரிய சுவாமிகள் ''பாஞ்சஜன்யம்'' இதழ் வெளியிடுதல், அண்ணங்காசாரியாரின் ''ஸ்ரீராமானுஜர்'' இதழ் மீட்டுருவாக்கம் செய்தல், நூல்கள் தொடர்ந்து வெளியிடுதல், ஆண்டுதோறும் சென்னை பல்கலைக் கழக வைணவத் துறையுடன் இணைந்து கருத்தரங்கு நடத்துதல்.

(4) புத்தூர் சுதர்சனம் ஸ்ரீ கிருஷ்ண சுவாமி ஐயங்கார் ''சுதர்சனம்'' இதழ் வெளியிடுதல், வைணவ நூல்கள் ஈட்டுப் படியுடன் – உரையுடன் – வெளியிடுல்.

இவர்கள் அத்துணைபேரும் பேரறிஞர்கள். இவர்களது சமயப்பணிக்குச் சொற்பொழிவு ஒன்றே போதும். இவையெல்லாம் எனக்குத்தெரிந்த சிறு வட்டத்திலே உள்ள எடுத்துக்காட்டுகள் ஆகும். இவர்களைத் தாண்டி ஒரு பெரும் அறிஞர் திருக்கூட்டமே உள்ளது. வைணவத்தைப் பற்றியே தனி ஆய்வு செய்யலாம்.

பிறசமய இயக்கங்கள் : ராமகிருஷ்ணா மிஷனில் தன்னார்வத் தொண்டர்களும்; துறவிகளும் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்கிறார்கள். கல்விப்பணி, வெள்ளம், புயல் கால நிவாரணப் பணிகள் என்று பொது சேவையில் ஈடுபடுகின்றார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் அவ்வாறே. ஆர்.எஸ்.எஸில் ஒரு ராணுவக் கட்டுப்பாடு உள்ளது. சித்பவானந்தர் தனிமனிதராக இருந்து ஆன்மீக நிலையில் உயர்ந்து, சொற்பொழிவுகள், நூல் வெளியிடுதல், இதழ் வெளியிடுதல், அந்தர்யோகம் நடத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்குப் பள்ளி நடத்துதல் என்று அரிய சாதனைகள் நிகழ்த்தினார். மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி அருள்பீடம் தமிழ்நாட்டுக் கிராமங்களில் வழிபாட்டு மன்றங்கள் உருவாக்கி வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தி அவ்வழிபாட்டு மன்றங்களே சுற்று முறையில் மேல் மருவத்தூர் வழிபாட்டினை ஏற்று நடத்தவும் செய்து, அதிலும் பெண்கள் வீட்டு விலக்கான நாளில்கூட நேரிடையாக வழிபாடு நடத்தலாம் என்றெல்லாம் புரட்சிகரமாக அமைத்திருக்கிறார்கள். பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, தனி ரயில்நிலையம் என மேல்மருவத்தூர் ஒரு பெரு நகரத்திற்கான சௌகரியங்களைப் பெற்றுத் திகழ்கின்றது. புட்டபருத்தி சாயிபாபா அற்புதங்கள் நிகழ்த்துதல், அருளாசி வழங்குதல் என்பவற்றை எல்லாம் தாண்டி ஆசியாவில் உயர்ந்த மருத்துவமனை (ஏழைகளுக்கு இலவசம்), பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலத்திலே நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குக் குடிநீர் வசதி என புட்டபருத்தியில் ஒரு ராமராஜ்யமே நடத்துகின்றார். தமிழ் நாட்டில் வேரூன்றி வரும் பிற இயக்கங்களாக வேதாத்திரி மகரிஷிகள், பிரும குமாரிகள், துறையூர் அகத்தியர் பகவான், கல்கி பகவான் இயக்கங்கள் ஆர்வமுள்ள பக்தர்களைக் கொண்டுள்ளன. இலட்சக் கணக்கான பக்தர்களை ஈர்க்கும் சபரிமலை ஐயப்பன் மகர ஜோதி வழிபாடு ஜாதி வேறுபாடு, ஏழைபணக்காரர் வேறு பாட்டை நீக்கும் சமநிலை உணர்வு, ஒரு மண்டலம் ஆசாரத்துடன் நியமங்களுடன்

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

உடம்பை ஒரு கட்டில் வைத்திருப்பது, கூட்டிசைப் பாடல்கள் என விரிகிறது.

இலங்கை, மலேசியாவில் சைவம் : இலங்கை, மலேசியாவில் சைவநிலை உன்னதநிலையில் உள்ளது. ஈழத்தமிழர் பிரச்சனைக்கு முன்னால் இலங்கையில் இந்து சமயம் என்றால் சைவம் ஒன்று மட்டுமே இருந்தது. பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து கல்லூரிப் படிப்புவரை சைவசமய பாடபோதனை கட்டாய அமுலில் உள்ளது. இல்லங்கள் தோறும் திருமுறைகள் ஒலிக்கின்றன. யாரேனும் சைவ அறிஞர் சென்றால் அவர்களுக்கு அரச மரியாதை. மலேசியா இஸ்லாமிய நாடாயினும் சைவம் தழைத்தே உள்ளது. கிராமங்கள் – நகரங்கள் – மாநில அளவில் படிநிலையாக திருமுறைப் போட்டிகளை ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்குகின்றனர்.

செய்ய வேண்டுவன : இனி நாம் செய்ய வேண்டுவன பற்றிச் சிந்திப்போம். மேன்மை கொள் சைவநீதி உலகெங்கும் விளங்க வேண்டும் என்ற நாற்பதாண்டு தாகத்தின் விளைவே இப்பகுதியை எழுதத் தூண்டுகிறது. மேலும் இந்நூலின் மூன்றாம் தொகுதி வெளிவந்தவுடன்தான் இப்பகுதியை எழுத விரும்பினேன். அதற்குள் முழுத்தமிழ்நாடும் ஒரு வலம் வந்து கள ஆய்வு செய்து முடித்திருப்பேன். இன்னும் கூடுதல் செய்திகள் தந்திருக்க லாம். அந்தநூல் வர இன்னும் ஐந்து ஆண்டுகள் ஆகுமோ, ஆறு ஆண்டுகள் ஆகுமோ அறியேன். முழுமையாகா விட்டாலும் பரவாயில்லை என இப்பொழுதே எழுதி விடுகிறேன்.

1
கொள்கைத் தெளிவு

வேதம் பற்றிய கொள்கை : முதலில் நமது கொள்கை விளக்கம் தெளிவாக இருக்க வேண்டும்.

வேதநெறி வேறு; சைவநெறி வேறு. வேதநெறி நிகாமம்; சைவநெறி ஆகமம். வேதநெறி வேள்விநெறி; சைவநெறி பூசை (பூ+செய் = பூவினால் செய்தல்) நெறி. வேதம் அக்னி, இந்திரன், சூரியன் முதலான தெய்வங்களைப் புகழ்வது. அங்கு சிவபெருமானுக்கு இடமே இல்லை. வேதத்தில் கூறப்படும் உருத்திரன் வேறு; இமயமலைக்குத் தெற்கே வழிபடப் பட்டுவந்த சிவபெருமான் வேறு. வேதத் தில் உருத்திரன் கள்வன் என்றும், விலக்கப் பட வேண்டியவன் என்றும் தாழ்வாகக் கூறப்பட்டுள்ளது. ''ருத்ரம்'' என்ற பகுதியில் மட்டுமே விரிவாகப் பேசப்படு கின்றது. (விரிவினை முன்னர் காண்க) எச்சமயத்திலும் யாதொரு தொடர்பும் இல்லாத வெவ்வேறு மூலங்களிலிருந்து உருவானவை வேதமும், சைவமும்.

இவைபற்றி விரிவாக கா.சு. பிள்ளை, மறைமலையடிகள், அருணைவடிவேல் முதலியார், அ.ச.ஞானசம்பந்தனார் ஆகி யோர் ஆராய்ந்திருக்கின்றனர். திருமுறை கள் கூறும் நான்மறைகள் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் அன்று. தமிழ்நாட்டில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு மறைகள் இருந்தன. அவைகள் அழிந்துபட்டன என்று வலியுறுத்தியிருக் கின்றனர்.

தமிழில் வழிபாடு : புவியில் மனிதகுலம் சிந்திப்பது, பேசுவது, எழுதுவது எல்லாமே தாய்மொழியில்தான். இது இயல்பாக நடக்கின்ற ஒன்று. கடவுள் வழிபாடும் அவ்வாறே. தமிழ்நாட்டில் மட்டும் இயல்புக்கு மாறாக இது மாற்றப்பட்டது ஏன்? எப்பொழுது?

கோயில்களில் தமிழில் வழிபாடு நிகழ்த்தப்படாமையால் கடவுள் அந்நியப் பட்டுப்போகிறார். ''வாவென்று அழைத் தால் வாராதிருக்க வழக்குண்டோ?'' என்று அழுது புலம்பும் பொழுது நெஞ்சு கனிவதும், கசிவதும் காண்கிறோம்'' ''அருச்சனை பாட்டே ஆகும்'' என்றும் கூறுகிறோம். ''தமிழிலும் அருச்சனை செய்யலாம்'' என்று ''உம்மை'' போட்டுச் சட்டமும் இயற்றி உள்ளோம். ஆனால் அப்படியும் நடக்கவில்லை. கோயிலுக்குச் செல்லும் சைவர்கள் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் எனக் கேட்பதேயில்லை. இதனால் இறைவழிபாட்டோடு முரண் படுபவர்கள் சைவத்தில் புகுந்து வார்த்தையாட இடம் தந்து விடுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்வழி குடநீராட்டு விழா : உண்மையிலேயே சிக்கலான சூழ்நிலை என்பது குடநீராட்டு விழாக்கள் தமிழில் நடத்தப்பட வேண்டும் என்ற அண்மைக் கால எழுச்சியே. உணர்ச்சி வசப்பட்டு முடிவெடுக்கக்கூடிய ஒன்று அல்ல இது. திருக்கோயில் அமைத்தல், வழிபாட்டு முறைகள் - அனைத்தும் ஆகமங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. ஆகமங்கள் அனைத்தும் தமிழர்களால் வடமொழியில் எழுதப்பட்டன. தொன்மையும் வளமையுமான மொழியானத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் ஆகமங்களை வடமொழியில் எழுத வேண்டிய சூழ்நிலை என்ன? அன்றை சூழ்நிலையில் தமிழக அரசர்கள் சிலர் (எடுத்துக்காட்டாக பல்லவ அரசர்கள், ராஜராஜ சோழன்) வடமொழியைப் பரப்புதல், வடநாட்டுப் பிராமணர்களைத் தமிழ்நாட்டுக் கோயில்களில் நியமித்தல் ஆகியவற்றில் ஆர்வம் காட்டியிருந்தனர். அரசர்கள் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் கோயில்கள் இருந்தன. கோயில்களைக் கட்டியவர்களே அவர்கள். எனவே ஆகமங்கள் வடமொழியில் எழுதப்பட்டன. மேலும் வடமொழியில் எழுதப்பட்டால் வடநாட்டுக் கோயில்களுக்கும் பரவும் என்ற ஆர்வம் மீதூரப்பட்டு இந்த வலையில் சிக்கி ஆதியையும் இழந்து அந்தத்தையும் இழந்தவர்கள் ஆனார்கள்.

அண்மைக்காலம் வரை (ஏன் இன்றும் கூட) ஆங்கிலத்தில் எழுதினால்தான் எடுபடும் என்ற நிலை இருந்தது. ஒரு நாகரிகத்திற்காகக் கூட இன்றும் நாம் ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாக வைத்திருக்கின்றோம். இத்தனைக்கும் ஆங்கிலம் நம்மை அடிமைப்படுத்திய அந்நியமொழி. வருமானம் வருகிற தென்றால் மொழியையா பார்க்கின்றோம்?

மேலும் வடமொழி இந்திய மொழிகளுள் ஒன்று. கோயில் பூசை செய்யும் சிவாசாரியார்கள் வேதபிராமணர்கள் அல்லர்; ஆகமம் அறிந்த தமிழ்நாட்டு சிவாசாரியார்கள் ஆதி சைவர்களே.

அப்படியிருக்கும்பொழுது வடமொழி மீது எந்தவித காழ்ப்பும் காட்ட வேண்டியதில்லை.

ஆகமங்கள் மட்டுமல்லாது, இறைவனுக்கான மந்திரங்களையும் வடமொழியில் எழுதினார்கள். எனவே அனைத்து மந்திரங்களும் காலகாலமாக பல நூறாண்டுகளாகக் கோயில்களில் சிவாசாரியார்களால் உச்சாடனம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த மந்திரங்களுக்கு ஒரு சக்தி இருக்கின்றது என்கிறார்கள் பெரியவர்கள். முழு விவரங்கள் தெரியாமல் நாம் பேசுவதும் தவறு. ஆகமங்கள் கூறும் சடங்குகளுக்கு ஏற்ற திருமுறைப் பாடல்கள் இருக்கின்றனவா என்பதும் தெரியவில்லை. உதாரணமாக இறைவனைக் குடநீரில் எழுந்தருளப் பண்ணுதல். மேலும் குடநீராட்டு விழாக்கள் இன்ன மொழியில் தான் நடத்தப்பட வேண்டும் என்று ஆகமங்கள் நிர்ணயித்துள்ளனவா என்பதும் தெரியவில்லை. மேலும் இன்றுள்ள இலட்சக்கணக்கான சிவாலயங்களில் பணியாற்றும் இலட்சக்கணக்கான சிவாசாரியார்கள் வருவாய் இருக்கிறதோ இல்லையா கோயில்பணி நிறுத்தாது பூசை செய்து வருகின்றனர். ஒரே நாளில் இதற்கு மாற்று ஏற்பாடு செய்வது என்பது இயலாத ஒன்று.

எனவே, சைவசித்தாந்தம் கற்றுத் தேர்ந்த - சைவ உணர்வுடைய - தமிழ் அறிஞர்கள் வடமொழி கற்று ஆகமங்களை ஆராய்ந்து அவற்றில் உள்ளதை உள்ளவாறு எடுத்து விளக்கம் சொன்னபிறகே எந்த ஒரு முடிவும் எடுக்க வேண்டும். அதுவரை பொறுத்திருப்பதே நன்று. எது எவ்வாறாயினும் சமய உணர்வு இல்லாதவர்கள் உள்ளே புகுந்து குட்டையைக் குழப்ப இடம் தரல் ஆகாது.

வள்ளலார் - திரு.வி.க - அடிகளார் : அடுத்து காலத்துக்கேற்ற கொள்கைகளைச் சைவ உலகம் ஏற்கத் தவறி விட்டது எனலாம். சமண சமயம் தமிழ்நாட்டில் பரவியிருந்தபொழுது அதற்கு மறுதலையாக நாவுக்கரசர் பெருமானும், ஞான சம்பந்தப் பெருந்தகையும் ஊர் ஊராகச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடி பக்தி மணம் பரவச் செய்தார்கள். சங்கரரின் அத்வைதக் கருத்துகள் பரவியபொழுது மெய்கண்டார் தோன்றி காரண காரியங்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களோடு தருக்க ரீதியாக சைவ சித்தாந்தக் கருத்துகளை முன் வைத்தார். இஸ்லாமியர் படையெடுப்பினால் கோயில்கள் நாச மாக்கப்பட்டபொழுது, அவரவர் கோயில் களின் மேல் பற்று ஏற்படுத்த தலபுராணங் கள் எழுந்தன. பல்வேறு சமயங்களும் இந்தியாவில் பரவியபொழுது அனைத்து சமயங்களையும் இணைக்கும் ''அருட் பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை'' என்ற தாரக மந்திரத்தை வள்ளல் பெருந்தகை முன்வைத்து அனைத்துயிர் களின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை போதித்தார் – பின்பற்றினார். வள்ளலார் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டினைக் காந்தியத்தோடும், மார்க்சியத்தோடும் திரு.வி.க. இணைத்து சாதாரண மனிதனை யும் ஈர்க்கும் வழிகண்டார். வழிகண்டால் மட்டும் போதாது; ஒருமைப்பாட்டின் பலன்கள் சாதாரண மனிதனையும் சென்றடைய வேண்டும் என்றுணர்ந்த குன்றக்குடி அடிகளார் குன்றக்குடி கிராமத்தையே தொழில் நகரமாக்கினார். இந்த மரபினைச் சைவ உலகம் முழுமை யாக வரவேற்றுப் பின்பற்றியிருக்க வேண்டும். தாயுமானவர் வரை இருந்த நிலை மாறி வள்ளலார் வந்தபிறகு மாறுபட்ட நிலைப்பாட்டையே சைவ வுலகம் எடுத்தது. இந்நூலின் முன்பகுதி யில் முழுமையாக ஆயப்பட்ட வண்ணம் வள்ளல் பெருந்தகை. சைவ மறுமலர்ச்சி யின் உச்சம் ஆவார். வள்ளலார் கருத்தில் பெரிதும் வேறுபாடு காண முடியாது. அதுவும் வள்ளலார் வலியுறுத்தும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுச் சிந்தனைக்கு மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. சைவத் திருமுறைகளும் அதனை வலி யுறுத்துகின்றன. எந்தத் தொடர்பும் இல்லாத – உருத்திரனைப் புறக்கணிக்கிற – வேதத்தை முதலில் வைக்க விரும்பு கிறோம். ஆனால் முதல் பாடலிலிருந்து நிறைவுப் பாடல் வரை சிவநாமமே கூறும் வள்ளலாரை ஏற்க மறுக்கின்றோம். வள்ளலார் கருத்துக்குத் திரு.வி.க. அழுத்தம் கொடுக்கிறார். அவரையும் சைவவுலகம் ஓரளவுக்குதான் ஏற்றுக் கொண்டது. தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியிருக்க வேண்டும். இவ்விரண்டு பெருமக்களின் கருத்துக் களுக்கும் செயல்வடிவம் கொடுத்தார் அடிகளார். அடிகளார் சைவத் திருமடத்துத் தலைவரும் கூட. தமிழுலகம் ஏற்றுக் கொண்ட அளவு சைவவுலகம் முழுமையாகப் போற்றி கொண்டாடி, பின்பற்றி அவரது செயல் முறைகளைச் செயல்படுத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறி விட்டது. பசித்தவனுக்குச் சோறு, உழைப் பவனுக்கு வேலை, உணர் வாளனுக்குத் தமிழ், பக்தனுக்குச் சைவம், பிற சமயத் தாருக்கு – மாற்றுக் கொள்கை யாருக்குச் - சமரசம் – என்று அனைத்துப் பிரச்சினை களுக்கும் அடிகளார் விடை வைத் திருந்தார். அவரது செயல்முறைகளை சைவ உலகம் அப்படியே ஒட்டு மொத்த மாகப் பின்பற்றியிருந்தால் சைவம் எங்கோ உயர்ந்திருக்கும். இனியாவது வள்ளலார் – திரு.வி.க. – அடிகளார் வழிமுறைகளை – ஆன்ம நேய ஒருமைப்பாட்டைச் சைவர்கள் செயல்படுத்த வேண்டும். இது ஒவ்வொரு சைவனின் கடமையாகும்.

அனைத்துச் சாதியினரையும் இணைக் கும் அன்புச் சைவம் : தீண்டாமை, வருணப்பாகுபாடு என்பன வெல்லாம் தமிழர் பண்பாட்டுக்கு முரணானவை. ஆரியக் கலப்பினால் விளைந்த கேடுகள் ஆகும். திருமூலர் ''ஒன்றே குலம்'' என்றே கூறினார். சுந்தரரோ ''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்று உலகளாவிய கண்ணோட்டத்தைத் தமிழுலகுக்குத் தந்தார். அந்த அடிப் படையில் அனைத்து இனப் பெருமக்களை யும் – நாயன்மார் பெரு மக்களையும் – ஒரு சேர வைத்து வழிபடும் சாதி வேறுபாடற்ற பெரிய புராணச் சமுதாயத்தைச் சேக்கிழார் படைக்கிறார். இன்றையச் சைவப் பெருமக்கள் சாதிவேறு பாடற்ற பெரிய புராணச் சமுதாயத்தை உருவாக்குவதை முதற்கொள்கையாக வைக்க வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு சைவனும் உறுதி பூணவேண்டும். சைவ வேளாளர்கள், நகரத்தார்கள், தேசிகர்கள், தொண்டை மண்டல முதலியார் ஆகிய இனத்தார் இயல்பாகவே சிவவழிபாட்டில் ஈடுபாடு உள்ளவர்கள் ஆவர். இவர்களில்லாமல் சிவவழிபாடு அனைத்து இனப் பெரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மக்களிடமும் இருந்து வருகிறது. மீனவப் பெருமக்கள் சிவபெருமானை மாப்பிள்ளை யாகவே (திருவிளையாடற் புராணம்) கருதுகின்றனர். செம்படவர் என்றால் சிவன் படையாளர் என்று பொருள். தமிழகம் எங்கணும் கிராமப் பகுதிகளில் வன்னியப் பெருமக்கள், முக்குலத்தோர், குறிப்பாக குயவர்கள் உத்திராபதியார் அமுதுபடையல் என்று சிறுத்தொண்டர் விழாவைக் கொண்டாடு கின்றனர். அதற்கெனத் தனியாகப் பாடல்கள் பாடுகின்றனர். இவை இப்பொழுது அருகி வருகின்றன. தமிழகமெங்கணும் கள ஆய்வு நடத்தி இவர்களை ஒருங்கு சேர இணைத்துச் சிறுத்தொண்டர் விழாவைச் சிறப்பாக நடத்த வேண்டும்.

அடுத்துக் கிராமங்களில் பரவலாகக் காணப்படுவது மன்மதன் தகனம் நிகழ்ச்சி ஆகும். எரிந்த கட்சி - எரியாத கட்சி என்றெல்லாம் இருந்தது. இதுவும் இப்பொழுது குறைந்து வருகிறது. கிராமங் களில் வள்ளுவர் என்ற இனத்தார் மார்கழி மாதங்களில் அதிகாலையில் எழுந்து சங்கு ஊதியவாறு திருவெம்பாவைப் பாடல் களைத் தெருதோறும் பாடி வருவார்கள். சிவன் பாடல்கள் தவிர வேறு பாடல்கள் பாடமாட்டார்கள். இதுவும் இப்பொழுது குறைந்து விட்டது. இந்தக் கலைகளுக்கு ஊக்கம் கொடுத்து நசியாமல் காப்பதோடு இவர்களையும் மற்றும் அனைத்து இனத்த வரையும் இணைத்துப் பெரியபுராணச் சமுதாயம் உருவாக்குவது சைவர்களின் கடமையாகும். ஒவ்வொரு சைவனும் ஒரு ஆதிதிராவிடக் குடும்பத்தையாவது மேல் நிலைக்குக் கொண்டுவரப் பாடுபட வேண்டும். ஒவ்வொரு ஆதிதிராவிடக் குடியிருப்பும் ஏதேனும் ஒரு மன்றத் தாலோ, புரவலராலோ, குழுவாலோ தத்து எடுக்கப்பட்டுப் பராமரிக்கப்பட வேண்டும். ''ஒன்றே குலம்'' ''அன்பே சிவம்'' வெறும் வார்த்தைகள் அல்ல; மந்திரங்கள்; ஆம் திருமந்திரங்கள்.

2

தனி மனிதன் செயல்பாடு

தற்கால நவீன நாகரிக மோகம், பிறசமயங்கள், இயக்கங்களின் வீறு கொண்ட எழுச்சி - இவற்றை எதிர் கொள்ளச் சைவ அன்பர்கள் அப்பர், ஞான சம்பந்தர் காலத்தைப்போல இயக்கமாகச் செயல்பட வேண்டும். இயக்கமாகச் செயல் பட ஒவ்வொரு சைவனிடமும் தாகம் - இளைஞர்களிடம் சைவ சமய உணர்வு இல்லையே? ஊடகங்களில் திருமுறைகள் இடம் பெறவில்லையே? போன்ற பதைப்பு - இருக்க வேண்டும். ஊருக்கு ஒருவர்க்கு அந்தத் தாகம் இருந்தால் போதும். அப்புறம் தீம்தரிகட, தீம்தரிகட தான். அக்னி குஞ்சு தான். காட்டுத் தீபோல பரவிடும். தாகம் இருந்தால்தான் வேகம் இருக்கும். அந்த வேகம் தான் மற்றவர் களையும் தொத்திக் கொள்ளும். இற்றை நாளில் அவரவர் ஆன்மார்த்தமாக - முறையாக - வெகு விருப்பத்தோடு - பக்தி பரவசத்தோடு வழிபடுகிறார்கள். அதில் ஒன்றும் குறையில்லை. ஆனால் அது அவர்கள் கடைத்தேறப் பயன்படும். இன்றைக்கு நாவுக்கரசர்கள், ஞான சம்பந்தர்கள், இராமானுஜர்கள் தேவை. தான்கடைத்தேறாவிட்டாலும் பரவா இல்லை என்று கோபுரத் தியாகம் செய்ய வேண்டும்.

அந்தத்தாகம் உள்ளவர்கள் தனியாக இருந்து செயல்பட்டால் அவர்கள் இருக்கும் பகுதியில் மட்டுமே பணியாற்ற முடியும். தாக நெஞ்சினர் அனைவரும் ஒருங்கிணைந்து மாநில அளவில் - ஏன் உலக அளவில் - செயல்பட்டால் அது இயக்கமாக மாறும். தொடர்ந்தும் நடக்கும்.

தன்னார்வத் தொண்டர்கள் : சைவசமயத்திலே இராமகிருஷ்ணா மிஷன் போல, ஆர்.எஸ்.எஸ். இயக்கம் போல முழுநேரத் தொண்டர்கள் - பிரமசாரித் தொண்டர்கள் - அறவே இல்லை. ஒரு முழுநேரத் தொண்டரின்பணி நூறு இல்லறத்தார் செய்யும் பணிக்கு நிகர் ஆகும். முழுநேரத் தொண்டர்கள் சிலரை யாவது உருவாக்க வேண்டும். அங்ஙனம் உருவாக்க இயலவில்லை என்றால் தினம் ஒருமணி - அல்லது வாரம் ஒரு நாள் - மாதம் ஒரு நாள் - ஆண்டுக்கு ஒரு வாரம் - என சமயப்பணிக்கு ஒதுக்கக் கூடியவர்கள் தாமாக முன்வரவேண்டும். சீக்கிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமயத்தில் முதலமைச்சராக இருந்தாலும் ஆண்டுக்கு ஒரு முறையாவது பொற் கோயிலில் கரசேவை செய்தாக வேண்டும். அப்படி முன் வருபவர்களின் பட்டியலை அங்கங்குள்ள திருக்கோயில் களிலோ, சைவமன்றங்களிலோ பராமரிக்க வேண்டும். சமயப்பணிக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

திருமுறை ஓதுதல் : அடுத்து தன்னார்வத் தொண்டர்கள் அல்லாத தனியார்கள் என்ன செய்ய வேண்டும்? தினமும் இறை வழிபாடு செய்யும் பொழுது திருமுறைகளை ஓத வேண்டும். சிலர் ஓராண்டு கணக்கு வைத்துக் கொண்டு தமிழ்ப்புத்தாண்டு அன்று முதல் திரு முறையில் தொடங்கி அந்த ஆண்டு நிறைவுக்குள் பனிரெண்டு திருமுறைகளும் முடித்து விடுவார்கள். இதனை மீண்டும் அடுத்த ஆண்டுகளில் தொடர்வர். இதனைப் பின்பற்றலாம்.

தனியார் பணிகள் : தனியார் தினமும் கோயிலுக்குச் செல்லுதல் நல்லது. அப்படி இயலவில்லையானால் வாரம்தோறும் வெள்ளிக் கிழமையாவது செல்ல வேண்டும். செல்கின்ற பொழுது உழவாரம், கோயிலைத் தூய்மை செய்தல் முதலான கோயில் பணிகளுக்கு உதவ வேண்டும். கோயில் வழிபாட்டு முறை களைத் தெரிந்திருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, நவக்கிரக தோஷம் உள்ளவர்கள் அத்தோஷம் நீங்கச் செல்லும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபட்ட பின்னர்தான் அங்குள்ள கிரக தெய்வத்தை வழிபடவேண்டும். புதிய கோயில்களை எழுப்புவதை விட முன்பே உள்ள கோயில்களை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டும். ஆயிரம் ரூபாய் செலவு செய்து வெளியூர் கோயில்களுக்குப் போகிறவர்கள் உள்ளூர் கோயில்களுக்கு நூறு ரூபாயாவது வழங்க வேண்டும். Charity Starts at Home. உங்களூர்க் கோயிலுக்கு நீங்கள்தான் தானம் கொடுக்கமுடியும். பழனிக்கும், திருச்செந்தூர்க்கும் பணத்தை வாரி வழங்க வள்ளல்கள் பலர் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் காலை வழிபாடு செய்யும் பொழுது ஒரு ரூபாயாவது சமயப்பணிக்கு என உண்டியலில் போட வேண்டும். இஸ்லாமியப் பெருமக்கள் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கினைச் சமயத்துக்கு ஒதுக்குகிறார்கள்.

மாதம் ஒரு சைவநூலாவது (திருமுறைகள் அல்லாத – உரைநடை, திறனாய்வு நூல்கள்) வாங்க வேண்டும். இரவு படுக்குமுன் பத்து நிமிடமாவது அந்நூலைப் படிக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் கோயிலுக்குச் செல்லுதல், திருமுறை படித்தல், பெரிய புராணக் கதை சொல்லுதல் – என்று பழக்க வேண்டும். இல்லத்தில் நடக்கும் திருமணம் முதலான சடங்குகளைத் திருமுறை அடிப்படையில் செய்ய வேண்டும். நம் வாழ்வே சைவமாக மாற வேண்டும்.

3
சமுதாயம்

சமுதாயம் என்பது தனிமனிதன், தொண்டர்கள், புரவலர்கள், அறிஞர்கள், மன்றங்கள், திருமடங்கள் அனைத்தும் அடங்கும். அத்துணை பேரும் இணைந்து செயல்படுதலே இயக்கம் ஆகும். அந்த இயக்க உணர்வு இன்றைய அவசரத் தேவை.

தமிழகத்தில் பெருநகரங்களிலும் சரி, சிறுநகரங்களிலும் சரி – அங்கேயுள்ள சைவ மன்றங்கள் அவ்வப்பகுதியில் முழுமையாகவும் முறையாகவும் சைவப் பணி செய்கிறார்கள். பல இளைஞர்களை உருவாக்கியும் உள்ளனர். (இவை பற்றி முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்). குடியாத்தம் பக்தவத்சலம் அவர்கள் ஆண்டுதோறும் வெவ்வேறு ஊர்களில் நடத்தும் திருமுறை விழாக்களுக்கு ஆயிரக் கணக்கான சைவ அன்பர்கள் கலந்து கொள்கின்றனர். மயிலாடுதுறை ''உழவாரம்'' அமைப்பு அறுபத்து மூன்று நாயன்மார் அவதரித்த தலங்களில் குருபூஜைப் பெருவிழா நடத்த ஆயுள் தொண்டர்களை ஏற்பாடு செய்து ஓர் இயக்கமாகப் பணியாற்றி வருகின்றது. மயிலாடுதுறைப் பகுதி அறிஞர் பெரு மக்கள் குருபூஜை விழாக்களில் கலந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள்ள சன்மானம் ஏதும் பெறாமல் ஒரு தொண்டாகக் கருதி விரிவுரையாற்றி வருகின்றார்கள். இம்முயற்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து பேரியக்கமாக மாற வேண்டும்.

வாரந்தோறும் கோயில்களில் அனைவரும் எளிமையான திருமுறைப் பாடல்களைச் சேர்ந்திசைப் பாடல்களாக அவர்களுக்குத் தெரிந்த இசையில் பாட வேண்டும். பாடல்கள்தான் மனிதர்களை இணைக்கும்.

சைவசமயத்தில் கல்வி, மருத்துவம் என்று மக்கள் பணி செய்வது இல்லை என ஒரு தவறான கருத்து நிலவி வருகின்றது. சைவத்திரு மடங்கள் கல்விப்பணி செய்து வருகின்றன. சைவசமயப் புரவலர்கள் பள்ளி நிறுவனங்கள், மருத்துவமனைகள் முதலான தனிப்பட்ட முறையில் நடத்துகின்றனர். சைவசமயத்தோடு பிணைத்து நடத்துவதில்லை. அதனால் சைவத்தில் மக்கள் தொண்டே இல்லை என ஒரு பிரமை. சமுதாயப் பணியில் ஈடுபாடு உள்ளவர்கள் இனிமேலாவது ஒன்று சேர்ந்து சைவசமயப் பின்னணியில் சுழற்சங்கங்கள், அரிமா சங்கங்கள் போல கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் தொடங்க வேண்டும்.

சைவர்கள் ஒருங்கிணைத்து பணியாற்ற – முன்னர் குறிப்பிட்ட தன்னார்வத் தொண்டர்கள் – எந்த ஒரு அமைப்பும் இல்லை. அதுபோல ஒரு அமைப்பு சென்னையிலோ, சிதம்பரத்திலோ அல்லது வாய்ப்பு வசதிகள் உள்ள பிற ஊர்களிலோ ஏற்படுத்தி, நூறு ஏக்கர் நிலம் வாங்கி (அரவிந்தர் ஆசிரமம் போல) வழிபாட்டுக் கூடம், நூலகம், தங்கும் வசதிகளோடு அமைக்க வேண்டும். தன்னார்வத் தொண்டர்கள் உருவாகும் பட்சத்தில் பணியாற்ற அவர்கள் எங்கு செல்வார்கள்? அவர்களையெல்லாம் ஒரு சேரத் தங்கச் செய்யவேண்டும். அதிலேயே கூட பெரிய புராண வரலாற்றுக் கலைக்கூடம் ஒன்று உருவாக்கலாம். அது ஒரு சுற்றுலாத் தலமாக – அறிவூட்டும் நிலையமாக – அமையவேண்டும். வடநாட்டிலே இதுபோல கலைக்கூடங்கள் – துளசி ராமாயணக் கலைக்கூடம், புராணக் கலைக்கூடம் – என்று இருக்கின்றன.

சைவசமயத்திற்கென்று ஒரு நூலகம் தனியாகவோ அல்லது மேலே சொன்ன அமைப்பிலோ - ஏற்பாடு செய்ய வேண்டும். சைவத்தில் வெளியான – வெளியாகும் அனைத்துத் தமிழ், ஆங்கில நூல்களும், இதழ்களும் ஒருசேர வைத்து ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் அனைத்து வசதிகளையும்(தங்கும் வசதி, உணவு வசதி, xerox வசதி) கொண்டு உருவாக்க வேண்டும்.

அறுபத்துமூவர் அவதாரத் தலங்கள் சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கும் அடித்தளங்களாக மாற வேண்டும். மயிலாடுதுறை ''உழவாரம்'' நடத்தும் நாயன்மார் அவதாரத் தல குருபூஜை விழாக்களை – அந்த ஊரே கூடி செய்யும், அந்த அவதாரத்தலம் இருக்கும் தாலுகாவில் உள்ள சமய மன்றங்கள், சைவ அன்பர்களைக் கலந்து கொள்ள வைத்தும் – சேக்கிழார் தேசியத் திருவிழாவாக மாற்ற வேண்டும். அதனை ஒட்டிச் சமய நிகழ்ச்சிகள், சமுதாயப் பணிகள் என்று இரண்டாம் கட்டச் சைவ மறுமலர்ச்சியின் விளை நிலங்களாக மாற்றப்பாடுபட வேண்டும்.

ஆண்டுதோறும் சென்னையில் இலட்சக் கணக்கான மக்கள் கூடும் வகையில் உலகளாவிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் சாதி வேறுபாடற்ற சமுதாய விழாவாக அறுபத்துமூவர் விழா நடத்தப்பட வேண்டும்.

இந்த நூலின் போக்கினை ஒட்டி, (அதனால் நால்வர் விழா, சேக்கிழார் விழா சேர்க்கவில்லை. இயல்பாக பல இடங்களில் கொண்டாடப்படுவது மற்றொரு காரணம்) திருச்சியில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை விழாவும், சென்னையில் ஜெ.எம். நல்லசாமி பிள்ளை விழாவும், கோயமுத்தூரில் சி.கே. சுப்பிரமணிய முதலியார் விழாவும் மயிலாடுதுறையில் மு. அருணாசலம் விழாவும் திருவாரூரில் திரு.வி.க. விழாவும், நாகப்பட்டினத்தில் மறைமலையடிகள் விழாவும் கொண்டாடப்பட வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இசையரங்குகளில் திருமுறைப் பாடல்களோடு நீலகண்டசிவன் தமிழிசைப் பாடல்கள், ராமசாமி ஐயரின் பெரிய புராணக் கீர்த்தனைகள், கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் கீர்த்தனைகள் இடம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்கலைக் கழகங்களில் திருமுறை, சாத்திரக் கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் என்ற தனிமனிதர் சென்னை பல்கலைக்கழக வைணவத் துறையுடன் இணைந்து ஆண்டுதோறும் பெரியவாச்சான் பிள்ளை கருத்தரங்கம் என்றெல்லாம் சிறப்பாக நடத்துவதனை உளங் கொள்ள வேண்டும்.

ஐம்பதுலட்சரூபாய் அளவில் வங்கியில் முதலீடு செய்து அதிலிருந்து வரும் வட்டியினைக் கொண்டு சைவ நூல்கள் வெளியிட விரும்பும் அறிஞர்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து சைவநூல்கள் பெருவாரியாக வெளிவர உதவ வேண்டும். திருப்பதி தேவஸ்தான பதிப்புத்துறை சமயநூல்கள் – குறிப்பாக வைணவ நூல்கள் – பலமொழிகளில் வெளிவர உதவுவது குறிப்பிடத்தக்கது.

மருத்துவர்கள், பொறியியலார்கள், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள், திரைப் படத் துறையைச் சேர்ந்தவர்கள், அரசியல் வாதிகள் என அனைத்துத் தரப்பினரையும் பின்னிப் பிணைக்கும் சைவச் சங்கிலி உருவாக வேண்டும். இச்சங்கிலி வெளி நாட்டில் உள்ள தமிழர்களையும் இணைத்து அவர்களுக்குச் சைவ அறிவு உணர்த்த வேண்டும். இதனால் பெரும் பலன் விளையும். இவர்கள் எல்லாம் தனித்து உதவினாலே வான் சிறுத்துப் போகும். இந்த உலகச் சங்கிலி ஏற்பட்டு விட்டால் மேலே குறிப்பிட்டுள்ள பணிகள் மயிலிற காகி விடும்.

இந்த உலகச் சங்கிலி ஏற்படும்வரை தாகநெஞ்சினர் ஓயக்கூடாது; உறங்கக் கூடாது.

4
அரசு

இந்து சமய வாரியம் : இஸ்லாமிய வாரியம் போல (Waqf board) இந்து சமய வாரியம் அமைக்க வேண்டும். சைவம், வைணவம் என இரண்டாகப் பிரித்துச் சைவப் பிரிவில் சைவத் திருமடத் தலைவர்கள், சைவப் புரவலர்கள் இடம் பெற்றுச் சைவக் கோயில்கள், நிறுவனங் களை நிர்வாகம் செய்யவேண்டும்.

நாட்டுடைமையாக்கல் : ஜெ.எம். நல்லசாமி பிள்ளையின் ஆங்கிலநூல்கள், நீலகண்ட சிவனின் இசைநூல்கள் (28) சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரிய புராணப் பேருரை, தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளையின் திருமுறை ஒளிநெறிக் கட்டுரைகள், மு. அருணா சலத்தின் தமிழ் இலக்கிய வரலாறு ஆகியன சைவக் கருவூலங்கள் ஆகும். இவற்றை மீண்டும் அச்சிடுவது என்றால் பல இலட்சங்கள் செலவாகும். தனி நபரோ, பதிப்பகமோ இனி அச்சிட முடியாது. எனவே இந்த ஆறு தொகுதி களும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்.

ஆகமங்கள், தலபுராணங்கள் வெளி யிடுதல் : இந்து சமய அறநிலையத்துறை ஆகமங்களைத் தமிழில் மொழி பெயர்க் கவும், அந்தந்தக் கோயிலின் தலபுராணங் களை அச்சிடவும் ஏற்பாடு செய்து வெளியிடவேண்டும்.

சென்னையில் மறைமலையடிகள் நூலகம், உ.வே.சா. நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆய்வாளர் களுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. கன்னிமரா நூலகத்தையும், சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தையும் இதில் சேர்க்கவில்லை. முன்னர் குறிப்பிட்ட நூலகங்களில் தங்கி நூல்களை ஆய்வு செய்யத் தங்கும் அறைகள் வசதியும், நூல்களைப் பிரதி எடுக்க xerox வசதியும், கழிப்பறை வசதியும் நவீனமான முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். மேற்படி நூலகங்களுக்கு ஆண்டுதோறும் கணிசமாக நன்கொடை வழங்கி அனைத்துத் தமிழ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல்களும் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

5
அறிஞர்கள்

ஆன்றோர்கள் பகுதி முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது போல, இற்றை நாளில் சைவ அறிஞர்கள் அருகிவிட்டனர். மீண்டும் வைணவ உதாரணம் எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது. அண்மைக் காலத்தில் எனக்குத் தெரிந்த குறுகிய வட்டாரத்திலேயே குமாரவாடி சுவாமிகள், ஏ.வி. ரங்காசாரியார், வேளுக்குடி கிருஷ்ணன், எம்.ஏ. வெங்கட கிருஷ்ணன், ரகுவீர பட்டாச்சாரியார், ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார், ஆ.இராமபத்ரன் புத்தூர் சுதர்சனம் ஐயங்கார், தி.வே. கோபாலையர், ஜெகத்ரட்சகன் என ஒரு வைணவர் குழாமே உள்ளது. இவர்களில் லாமல் இன்னும் நிரம்ப அறிஞர்கள் இருக்கலாம். இவர்கள் எல்லாம் ஆழ்வார் பாசுரங்களில் கரைகண்டவர்கள். இவர் களல்லாது இராமாயணம், பாரதம் விரிவுரைகள் நடத்துபவர் களைக் சேர்த்தால் எழுதி மாளாது. முன்பே குறிப்பிட்டது போல இவர்கள் பணி பேச்சு, எழுத்தோடு நின்று விடவில்லை. ஒவ்வொரு வைணவ அறிஞரும் ஒரு நிறுவனமாக – தொண்டராக, புரவலராக, விழா நடத்துனராக, இதழ் ஆசிரியராக, புத்தக வெளியீட்டாளராக – இருக் கின்றனர். இவர்களுக்கு உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை – எல்லாமே வைணவப் பிரச்சாரம்தான்.

முதலில் சைவ அறிஞர் குழாம் உருவாக வேண்டும். திருமுறைகளையும் சாத்திரங் களையும் ஆழ்ந்து கற்றுத் துறைபோகிய அறிஞர்கள் வேண்டும். சைவ அறிஞர்கள், திருமுறைகள், சாத்திரங்கள் மற்றும் கற்றால் போதாது. ஒரு சிலராவது தமிழ், ஆங்கிலம், வடமொழி கற்றிருக்க வேண்டும். இற்றை நாளில் மும்மொழி தெரிந்த சைவ அறிஞர் ஒருவரும் இல்லை. ஆங்கிலம் தெரிந்தால் தான் சைவ நூல்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்ல முடியும். இந்தியத் தத்துவம் என்றாலே வேதம், உபநிடதம் மட்டுமே என்று ஆனதின் காரணமே ஆங்கில மொழிபெயர்ப்புகள் தான். சைவநூல்களை ஆங்கிலத்தில் வெளியிடுவதோடு மேனாடு களில் சென்று ஆங்கிலத்தில் பேச வேண்டும்.

இவையெல்லாவற்றையும் விட வேதனை தரும் செய்தி வடமொழியறிவு யாருக்கும் ஒரு சிறிதும் இல்லாமல் வேதம் பற்றியும், ஆகமம் பற்றியும் பேசியும் ஆகம நெறிப்படிதான் சைவம் அமைந்துள்ளது என்று கூறிக் கொண்டும், வாதிட்டுக் கொண்டும் இருக்கின்றோம். சென்ற நூற்றாண்டில் நல்லசாமிபிள்ளை, கே.எம். பாலசுப்பிரமணியம், மறைமலையடிகள், மு. அருணாசலம், பெ. திருஞான சம்பந்தம், தண்டபாணி தேசிகர், க.வச்சிர வேல் முதலியார் முதலானோர் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியறிந்திருந்தனர். இற்றை நாளில் சைவ அறிஞர்களில் யாராவது வேதமோ, ஆகமங்களோ படித்தவர்கள் இருக்கின்றார்களா? சில சைவ அறிஞர்களுக்காவது ஊக்கத்தொகை கொடுத்து வடமொழி கற்கச் சொல்லி, வேதங்களையும், ஆகமங்களையும் ஆழ்ந்து கற்கச் சொல்லித் தெளிவு பெற வேண்டும்.

இவையிரண்டும் (ஆங்கில அறிவின் மூலம் வெளிநாடுகளில்பிரச்சாரம், வட மொழியறிவின் மூலம் கருத்துத் தெளிவு பெறல்) உடனடி தேவை ஆகும்.

சைவ அறிஞர்கள் நிறுவனமாகச் செயல் பட்டதே இல்லை. ஒருவேளை பல நிறுவனங்கள் இருப்பதினால் அந்த அவசியம் இல்லாது போய்விட்டதோ? ஒரு காலகட்டத்தில் ஜெ.எம். நல்லசாமி பிள்ளை பேச்சு, எழுத்து, இதழ் வெளியிடுதல், நூல் வெளியிடுதல், சைவ சித்தாந்த சமாஜம் உருவாக்கி நடத்தத் துணைபுரிதல், மாநாடு நடத்த உதவுதல் என்றெல்லாம் பல நிலைகளில் நின்று பணியாற்றினார். சமாஜம் உருவாகவும், மாநாடுகள் நடக்கவும் ஞானியார் சுவாமிகளும், மறைமலையடிகளும், திரு.வி.கவும் பெரிதும் துணை நின்றமை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று. அ.ச. ஞானசம்பந்தனார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தம் இறுதிக்காலத்தில் சொற்பொழிவு, எழுத்துப்பணி அல்லாது சேக்கிழார் கழகம் நிறுவி விழா எடுத்து வந்தார்கள். அவர்கள் கூட இதழ் வெளியிடுதல், நூல் வெளி யிடுதல் என்று பல முனைகளில் செயல் படவில்லை. ஒரு கு. வைத்யநாதன் நிறுவனமாகச் செயல்பட்டதால் தான் – திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்கள் அந்த அளவு முழு உரிமையும் கொடுத்து முழுச்செல வையும் ஏற்றதால் – இன்றைக்கு ஐயாயிரம் சைவ அன்பர்களைச் சைவ சித்தாந்தம் அறிந்த வர்களாக உருவாக்க முடிந்திருக்கிறது.

இனியாவது சைவ அறிஞர்களில் ஒரு சிலராவது நிறுவனமாகச் செயல்பட வேண்டும்.

6

இயக்கம்

சைவ சமயத்திலே செய்யவேண்டிய பணிகள் நிரம்ப உள. மன்றங்களும், தொண்டர்களும், புரவலர்களும் தனித் தனியாகச் செயல்படுகின்றனர். அவரவர் களின் பணிகளும் அவரவர்கள் வட்டத் திலேயே நின்று விடுகின்றன.

தமிழகத்தில் உள்ள சைவத் திருமடங் களின் தலைவர்கள், புரவலர்கள், தொண்டர்கள், அறிஞர்கள், மன்றங்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டால் சைவ சமயப் பேரியக்கம் உருவாகும். இது ஒரு பெரும்பணி ஆகும். இதற்கு அடிப் படை அலகாக மன்றங்களை வைத்துக் கொள்ளலாம். அந்தந்தப் பகுதியில் உள்ள சைவ, திருமுறை மன்றங்கள் அப்பகுதி புரவலர்கள், தொண்டர்கள், அறிஞர்கள் பங்குபெற களம் அமைத்துத் தருகின்றன. சைவத் திருமடத்துத் தலைவர்களிடமும் தொடர்பு வைத்துள்ளன. முதலில் தமிழகத்தில் உள்ள அனைத்துச் சைவ சமய, திருமுறை மன்றங்களையும் இணைக்க வேண்டும். அப்படி ஒரு முயற்சி இந் நூலாசிரியரின் தூண்டுதலால் மேற் கொள்ளப்பட்டு 1984-இல் மயிலாடுதுறை யில் சைவ சமய மன்றங்களின் இணைப்புப் பேரவையாக ''உழவாரம்'' என்ற அமைப்பு தோன்றியது. மயிலாடுதுறை, மதுரை, திருச்சி, ஈரோடு, நெய்வேலி, சிதம்பரம் ஆகிய இடங்களில் மாநாடுகளும் தொடர்ந்து ஆண்டுதோறும் நடைபெற்றன. ''உழவாரம்'' என்ற இதழும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இம்முயற்சி முழுமை அடையவில்லை.

மன்றங்களை இணைப்பதில் ஒரு சிறுசிக்கல் உள்ளது. முன்பே குறிப்பிட்டது போல ஒவ்வொரு மன்றமும் தங்கள் பகுதியில் சிறப்பாகச் செயல்படுகின்றது. தங்கள் பகுதிகளில் செயல்படவே ஒவ்வொரு மன்றத்தாரும் கடும் முயற்சி யும், பெரும் செலவும் செய்யவேண்டி யுள்ளது. அதுமட்டுமல்லாது அந்தந்த மன்றங்கள் தங்கள் தனித்தன்மை போய்விடுமோ என்றும் கருதுகின்றனர். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு ''உழவாரம்'' அமைப்பின் முந்தைய முயற்சியை உயிர்ப்பிக்க வேண்டும்.

எந்த ஒரு மன்றமும் தன் தனித் தன்மையை இழக்க வேண்டியதில்லை. மன்றங்கள் தங்கள் தனித்தன்மையை இழக்காமல் தங்கள் பணிகளைத் தொடர லாம். பொதுவான பணிகளில் – கருத்து வெளிப்பாட்டில் – இணைந்து செயல்பட லாம். குறைந்தப்ட்ச செயல்முறைத் திட்டம் தயாரித்து அதனைச் செயல்படுத்த லாம். மாநில அளவில் செயல் முறை களைக் கவனிக்க ஒரு தலைமைச் செயலகம் உருவாக்கலாம். ஆண்டுதோறும் மாநில, மாவட்டத் தலைநகர்களில் கூடி அந்தந்த ஆண்டு செயல்முறைத் திட்டத்தை வகுக்கலாம். மன்றங்கள் தங்கள் பகுதி களில் உள்ள புரவலர்கள், தொண்டர்கள், அறிஞர்களை இயக்கத்தில் ஈடுபடுத்தலாம்.

தொண்டர்களின் பணிகளால்தான் மன்றங்கள் நடைபெறுகின்றன. சைவ சமயச் சார்புடைய செல்வர்கள் ஒரு சிலர்தான் இப்பணிகளுக்கு உதவுகின் றார்கள். எந்தவிதத் தொடர்பும் இல்லாம லேயே மருத்துவர்கள், வணிகர்கள், வழக் கறிஞர்கள், பொறியியல் வல்லுனர்கள் என ஒரு பெரும்பிரிவினர் உள்ளனர். இவர்கள் அனைவரையும் அந்தந்தப் பகுதியில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவர்களையெல்லாம் இணைத்தாலே மிகப் பெரும்நிதியம் சேர்ந்துவிடும்.

சைவ அறிஞர்கள், சொற்பொழிவாளர்களுக்கு நிரம்ப கூட்டம் கூடுகின்றது. இப்பெருமக்கள் தங்களோடு தொடர்புடைய மன்றங்கள், புரவலர்களை நெறிப்படுத்துவது எளிதான செயல். தாங்கள் பேசுகின்ற கூட்டங்களில் சைவ இயக்கம் பற்றி எழுச்சியுடன் கூறினாலே பலருக்கு உற்சாகம் தொற்றிக் கொள்ளும். இதற்காக இவர்கள் தனியாகப் பொருட்செலவோ, உடல் உழைப்போ மேற்கொள்ள வேண்டியதில்லை. இந்த எழுச்சி உரைகள் மூலம் தாங்கள் செல்கின்ற ஊர்களில் உள்ள செல்வர்கள், வணிகர்கள், பல துறைகளில் பணியாற்றுவோரை நெறிப்படுத்தலாம்.

இவையெல்லாம் கூட ஐந்து சதவீத சைவர்களைத்தான் சென்று சேரும். மேலும் அந்த 5% சைவர்களும் இயல்பாகவே சைவத்தில் ஈடுபாடு உடையவர்கள்; மன்றங்களில் தொடர்பு உடையவர்கள். இவையல்லாமல் 95% சைவர்கள் அணுகப் படாமலேயே (Untapped) இருக்கின்றார்கள். இவர்களை அணுகியும், சைவ சமயச் சிந்தனையில் ஈடுபடுத்தவும் செய்து விட்டால் பெரும் பயன் விளையும். இப்பணி சற்றுச் சிரமமானது.

எடுத்துக்காட்டாக அண்மையில் நான் பூம்புகார், மயிலாடுதுறை பகுதிகளில் எடுத்துக் கொண்ட முயற்சிகளை எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும். ''ஊரெல்லாம் சிவ முழக்கம் வீடெல்லாம் சிவமணம்'' என்ற கோட்பாட்டை முன் வைத்து இப்பகுதிகளில் ஒவ்வொரு தெருவாக, ஒவ்வொரு நகராகச் சென்று கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு வரச் சொல்லி அழைத்தோம். அப்பொழுது அவர்களது தேவை, நாட்டம் எவ்வாறு அமைந்துள்ளது என மதிப்பீடு செய்ய முடிந்தது. எதிர்பார்த்ததைவிட அதிகமாகச் சிறுபிள்ளைகள் கடினமான கேள்விகளை எழுப்பினார்கள். ''கடவுள் இருக்கிறாரா?'' ''கடவுள் அனைவர்க்கும் நன்மை செய்பவரானால் நல்லவர்கள் துன்பப்படுவதும் தீயவர்கள் களிப்பில் இருப்பதும் ஏன்?'' என்றெல்லாம் கேட்டார்கள். இதில் பல பிள்ளைகள் நான் செயலராக இருக்கும் பள்ளியின் மாணவர்கள். முதலில் ''செயலரிடம் கேள்வி கேட்கலாமா?'' என்ற அச்சத்தை நீக்க வேண்டி இருந்தது.

ஒரு கிராமத்தில் உள்ள நான்கு தெருக்களை முடித்தபிறகு அவர்களை அருகில் உள்ள சிவன் கோயில் வழிபாட்டுக்குக் (குறிப்பாக பிரதோஷ வழிபாடு) செல்ல நெறிப்படுத்த வேண்டும். பிரதோஷ வழிபாடு முடிந்தவுடன் 15 நிமிடம் திருமுறைகளைச் சேர்ந்திசை பாடுவது, மாணவர்களுக்குச் சைவ சமயத் தொடர்புடைய வினாக்களுக்குப் பதில் எழுதச் சொல்வது, சைவ சிந்தனை என்று நிகழ்ச்சி அமைக்க வேண்டும். இம்முயற்சியிலும் உடனடி வெற்றி கிடைத்துவிடாது. மனம் தளராது தொடர்ந்து செய்யவேண்டும். முதலில் 10 பேர் வந்தாலும் அவர்களைக் கொண்டு நடத்த வேண்டும். இதுபோல சுற்றுப்புறக் கிராமங்களிலும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். பூம்புகார் பகுதியில் இம்முயற்சியால் வெகு குறுகிய காலத்தில் நான்கு கிராமங்களில் பிரதோஷ வழிபாட்டு மன்றங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

நகரைப் பொருத்தவரை அதன் நாற்புறங்களிலும் இருபதுக்கு மேற்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து கலந்துரையாடல் கூட்டங்களை நடத்தலாம். நம்முயற்சி ஒரு சில இடங்களில் வெற்றி பெற்றாலே போதும். அது பல்கிப் பெருக வாய்ப்பு ஏற்படும். நம்முடைய மன்றக் கூட்டங்களுக்கு இதுவரை வராத சைவ அன்பர்கள் – ஏன் இளைஞர்கள் கூட – கண்ணுக்குப் புலப்படுவர். அவர்களுள் ஒரு சிலர் முன் குறிப்பிட்டுள்ள தாக உணர்வினராய் இருந்தாலே போதும். மயிலாடுதுறையில் மிகக் குறுகிய இக்கலந்துரையாடல் நிகழ்ச்சிகளின் விளைவாக (2 மாத உழைப்பில் – அதுவும் சனி ஞாயிறு மட்டும் – 16 நாள் உழைப்பு என்று கூடச் சொல்லலாம்) நான்கு இடங்களில் மாதக் கூட்டம், வழிபாடு, மாணவர்கள் பங்கேற்பு என நடத்த ஆரம்பித்துவிட்டனர். ஒரு நகரில் வாரக் கூட்டமே நடைபெறுகிறது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

16 நாள் உழைப்பில் நான்கு அமைப்புகள் போதாதா? இவை தொடர்ந்து நடந்தால் பிறரும் ஆர்வம் கொண்டு பின்பற்ற மாட்டார்களா? இதில் திட்டமிடுதலும் ஒருங்கிணைத்தலும்தான் முக்கியம்.

இளைஞர்கள், மாணவர்களைச் சைவ சிந்தனையில் ஈடுபடுத்துவது மிக முக்கியம். கிராமங்களில் – நகரங்களில் கலந்துரையாடல்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளில் இளைஞர்களையும் ஈடுபடச் செய்து அவர்களுக்குப் போட்டிகள் (சிறு சிறு கேள்விகள், எளிமையான திருமுறைப் பாடல்கள்), பெரியபுராண வரலாறு சொல்லுதல், சிறு நூலகம் ஏற்படுத்துதல் என்று அமைக்கலாம். பூம்புகார் – மயிலாடுதுறை பரிசோதனைகள் இதைத்தான் சுட்டுகின்றன.

பள்ளி மாணவர்களுக்கு Value Education எனப்படும் நீதிபோதனை வகுப்பில் ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, திருக்குறள், திருமுறைகள் என்று பாடத் திட்டம் வகுத்துத் தரலாம். வகுப்புகள் அல்லாத தனி சந்திப்புகளில் காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர் வரலாறுகளையும், பாடல்களையும் நான் விளக்கி வரும் பொழுது ஒரு சில மாணக்கராவது கூர்ந்து கேட்டனர். மற்றவர்கள் காதுகளில் நாவுக்கரசர், ஞானசம்பந்தர் என்ற பெயர் களாவது விழுகின்றன. மூன்று மாதங்களுக்கு முன்பு ''திருவாசகத்தை எழுதியவர் யார்?'' என்று கேட்டபொழுது பதில் தெரியாமல் இருந்த மாணவர்களிடையே இப்படி ஒரு மாற்றம் விளைந்தது வியப்பு அல்லவா? சில ஆசிரியர்கள் - தலைமையாசிரியர்கள் கூட – நீதிபோதனை வகுப்புகளில் நாம் எதிர்பார்ப்பதைவிட அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களுக்கு நேரமின்மை, தேர்வை நோக்கிய வேகம் ஆகியன இடர் விளைக்கின்றன. நீதிபோதனைக்கான பாடத்திட்டம் வகுக்கக் கூட முடியவில்லை. தூண்டுதலும், வழிகாட்டுதலும் இருந்தால் நன்றாகவே செயல்படுவார்கள்.

கல்லூரி மாணவர்களைப் பற்றிய நம் கணிப்பும் தவறாகவே அமைந்துள்ள நான்கு கல்லூரிகளை அணுகினேன். நான்கு கல்லூரிகளிலும் நல்லவரவேற்பு. ஒரு குறிப்பிட்ட நாளில் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். ஒரு கல்லூரியில் காலையில் சென்று முதல்வரிடம் கேட்டபொழுது ''இரண்டு மணி நேரம் அவகாசம் கொடுத்தால் இன்றே ஏற்பாடு செய்கிறேன்'' என்றார். நானும் இசைந்தேன். ''என்ன ஒரு இருபது பேராவது தேறினால் சரி'' என்று நினைத்தவாறு பிற்பகல் சென்றேன். ''நூறு மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து பெயர் கொடுத்தனர். கேள்விகள் அதிகம் வந்துவிட்டால் நிர்வாகம் செய்ய முடியாது என்று 50 மாணவர்களை மட்டும் தேர்ந்தெடுத்தோம்'' என்றார் கல்லூரி முதல்வர்.

மாணவர்கள் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்களா என்பது போய் Screen செய்யக் கூடிய அளவிற்கு நிறையபேர் முன்வந்தார்கள் என்றால் இதனை என்னவென்று சொல்வது? 15 நிமிடத்தில் என் உரையை முடித்துவிட்டுக் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு மாணவர்களை அழைத்தேன். ''15 நிமிடம் எங்களுக்குப் போதாது. முழுமையாகப் பேசி முடித்து விடுங்கள்'' என்றார்கள் மாணவர்கள். மீண்டும் பேசும்பொழுது ''அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்ற பாடலை விளக்க ஆரம்பித்தபொழுது, அதுவரை நிமிர்ந்து உட்கார்ந்து இருந்த மாணவர்கள் உடனே குனிந்து அப்பாடலைக் குறித்துக் கொண்டார்கள். ''மாதம் ஒருமுறை வந்து வரலாற்று ரீதியாக ஒவ்வொரு பகுதியாக ஆர அமரச் சொல்லுங்கள். அதன்பின் அப்பகுதியின் மேல் கேள்விகள் கேட்கிறோம்'' என்றார்கள். இதைவிட வேறென்ன வேண்டும்? குறை அவர்கள் பால் இல்லை; நம்மிடமே உள்ளது. இது ஒரு தொடக்கம்தான். முழுமூச்சாக - இதே சிந்தனையாக – ஒவ்வொருவரும் தத்தம் பகுதிகளில் முயன்றால் பூம்புகார் – மயிலாடுதுறை பரிசோதனை (Poompuhar – Mayiladurai Experiment) சைவ மறுமலர்ச்சிக்கு அடிகோலிடும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிறைவுப்பணியாக சைவசமயப் பேரியக்கம் முழுமை அடைய அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் - குறிப்பாக குழந்தைகள் - சைவச் சிந்தனை அறவே இல்லாது இருக்கின்றனர்.

இலங்கை, மலேசியா, தென்னாப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள் சைவ உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா முதலான நாடுகளில் வாழும் தமிழர்கள் சைவத் தொடர்பு அற்று இருக்கின்றர். இந்த இடத்தில் சைவத் தொடர்பு என்பதனைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. அமெரிக்காவில் அனைத்து முக்கிய நகரங்களிலும் கோடிக் கணக்கான டாலர் செலவில் சிவன் கோயில்கள் எழுப்பப்பட்டு விழாக்களும், வழிபாடும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. இந்த நிலையே மற்ற நாடுகளிலும் உள்ளது.

கோயிலுக்குப் போவதோடு அமெரிக்கத் தமிழர்களின் பங்கு முடிந்துவிடுகிறது. சைவத்தில் ஆழங்கால் பட்டு தேவார திருவாசகங்களை ஓதுதலும், பெரியபுராண வரலாறுகளைப் பேசுதலும் இல்லாமல் போகின்றது. அங்குவாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழே தெரியாமல் போகின்றது.

தமிழ்நாட்டிலிருந்து ஆண்டுதோறும் அமெரிக்கா போன்ற வெளிநாடுகள் செல்லக் கூடியவர்கள் நிறைய பேர் இருக்கின்றனர். அவர்களில் சைவச் சிந்தனையுள்ளவர்களாகத் தொடர்பு கொண்டு ஒரு பட்டியல் எடுக்க வேண்டும். அவர்கள் எந்த பகுதிக்குச் செல்கின்றார்களோ அந்தப் பகுதிகளில் வாழும் தமிழர்களின் முகவரிகளைச் சேகரிக்கவேண்டும். தமிழகத்தில் வாழும் சைவ அன்பர்கள் வெளிநாடுகளில் வாழும் தங்கள் உறவினர்களுக்குத் தொலைபேசி மூலமோ, ஈ. மெயில் மூலமோ இன்னார் வருகின்றார் (சைவ ஆர்வலர்) என்பதனைத் தெரிவித்து அவர்கள் வசிக்கும் பகுதிகளில் அவர்களது நண்பர்கள் 20 அல்லது 30 பேரைத் தங்கள் இல்லத்திற்கோ, அங்கு கோயில் இருந்தால் கோயிலுக்கோ வரச்செய்து கலந்துரையாடல் நிகழ்த்தலாம். அவ்வாறு செல்லும் சைவ ஆர்வலர்கள் தாங்கள் வெளிநாடு செல்லுமுன் சைவநூல்கள் சிலவற்றைக் கற்றுக் கொண்டும், குழந்தைகளுக்கான பெரியபுராணக் கதைகள், சி.டிக்கள், காசெட்டுகள், முதலியனவற்றை எடுத்துக் கொண்டும் செல்ல வேண்டும். வாரக் கடைசி நாள்களில் (சனி, ஞாயிறு) குறைந்தபட்சம் இரண்டு முதல் நான்கு கலந்துரையாடல் (காலை, மாலை) நிகழ்ச்சிகள் நடத்தலாம். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஆர்வலரை அழைத்து வருவதும், இருநாள்கள் தங்கச் செய்து உணவு படைப்பது மட்டுமே செய்தால் போதுமானது. ஆர்வலர்களுக்கும் செலவில்லை. அவர்கள் தங்கள் மகன், மகளைப் பார்க்கச் செல்கின்றனர். செல்கின்ற இடத்தில் சைவ சமயக் கலந்துரையாடல் நடத்துகின்றனர். Sponsors கிடைத்தால் நன்றாகப் பேசக்கூடிய பேச்சாளர்களையே அனுப்பலாம். இது வளர்ச்சி பெற்றபிறகு இரண்டாம் கட்டமாகச் செய்ய வேண்டியது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தமிழகத்தில் வாழும் சைவ அன்பர்கள் வெளிநாடுகளில் வாழும் தங்கள் உறவினர்களிடம் வெளிநாட்டிற்குச் செல்லவிருக்கும் ஆர்வலரைப் பற்றியும் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் பயன்பற்றியும் தொலைபேசி மூலமோ, ஈமெயில் மூலமோ விளக்கமாகத் தெரிவிப்பதே ஆகும். ஆர்வலர்கள் தங்களைப் பற்றிக் கூறிக்கொள்வது இயலாத ஒன்று; சிறப்பும் இருக்காது. வெளிநாடுகளில் உள்ள தமிழர்களைச் சிவசிந்தனையில் ஈடுபடுத்தினால் விளையும் பயன்கள் பலவாகும். முதலாவதாக தமிழ்நாட்டில் பண்பாடு, சைவ மரபு தொடர்ச்சியறாது காப்பாற்றப்படுகின்றது. இரண்டாவது சைவ சமயப் பணிகளுக்கு நிதியம் பெருகி வர ஆரம்பிக்கும்.

சைவத்திருமடத்துத் தலைவர்கள் - சைவ மன்றங்கள் - புரவலர்கள் - அறிஞர்கள் - தொண்டர்கள்;

கிராமம் - நகரம் - தமிழகத் தலைநகரம் - அயல்நாட்டு நகரங்கள்;

இத்துணையும் இணைந்தால் அப்புறம்

ஊரெல்லாம் சிவ முழக்கம்!
வீடெல்லாம் சிவ மணம் தான்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7

நூல்கள், இதழ்கள், வெளியீடுகள்

1) ரிக், யஜுர், சாம, அதர்வணம் – நான்கு வேதங்களும் மொழி பெயர்த்தல்.

2) சைவ ஆகமங்கள் அனைத்தும் மொழிபெயர்த்தல்.

3) திருமுறைகள் செம்பதிப்பாக அடக்க விலையில் கொண்டு வருதல்.

4) திருவாசகம், பெரியபுராணம் – மேனாட்டில் பைபிள் பதிப்புகள் வருவது போல – உயரிய தாளில் கொண்டுவருதல். பெரியபுராணம் செம்பதிப்பாக உயரிய தாளில் அண்மையில் வெளிவந்ததாக அறிகிறேன்.

5) சைவசித்தாந்த சாத்திரங்களை – எளிய விலையில் – அடக்க விலையில் – வெளியிடுதல்.

6) அனைத்துத் தலபுராணங்களையும் அச்சிடுதல்.

7) மு. அருணாசலம் அவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு வரிசையைப் படித்தால் பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு சாத்திரங்களும், புராணங்களுமாகப் பல்கிப் பரவினமை தெரியவரும். பதினாறாம் நூற்றாண்டினைச் சைவசமயத்தின் பொற்காலம் என்று கூறும் மு.அ. அவர்கள் அந்நூற்றாண்டினைப் பற்றி மட்டும் மூன்று தொகுதிகளில் எழுதியுள்ளார். சாத்திரங்கள் என்றால் மெய்கண்ட சாத்திரங்கள் மட்டுமன்று. சிற்றம்பல நாடிகள், தத்துவப் பிரகாசர், ஞானப்பிரகாசர் என்று பல மரபுகள் எழுந்தன. ஒவ்வொரு மரபிலும் பல நூல்கள் எழுந்தன. அது போல புராணங்களும் வெளிவந்தன. அதிவீரராம பாண்டியன் போன்ற அரசர்களும் புராணங்கள் எழுதினர். அதிவீரரின் "கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி" குட்டித் திருவாசகம் எனப்படுகிறது. இவை யெல்லாவற்றையும் நூற்றாண்டு வாரியாகத் தொகுத்து வெளியிட வேண்டும்.

8) திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய தல புராணங்கள், பிரபந்தங்கள் அனைத்தும் ஒரு சேர அச்சிடுதல்.

9) நீலகண்ட சிவனின் பாடல் தொகுதி (26 நூல்கள்) அனைத்தும் அச்சிடப் படுதல்.

10) இராமசாமி ஐயரின் பெரியபுராணக் கீர்த்தனைகள்.

11) சிந்நயச் செட்டியாரின் "பஞ்சகம்".

12) சொக்கலிங்க ஐயாவின் 108 நூல்கள்.

13) சொக்கலிங்க ஐயாவின் வாழ்க்கை வரலாறு.

14) ஜெ.எம். நல்லசாமிபிள்ளையின் ஆங்கில மொழிபெயர்ப்புகள்.

15) ஜெ.எம். நல்லசாமி பிள்ளையின் "Siddhanta Deepika" ஆங்கில இதழினை மீட்டுருவாக்கம் செய்தல்.

16) ஜெ.எம். நல்லசாமி பிள்ளையின் வாழ்க்கை வரலாறு – திருவாசக மணியின் ஆங்கில நூலினை மொழி பெயர்த்தல்.

17) சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராணப் பேருரை – அடக்க விலையில் வெளியிடுதல்.

18) கிருஷ்ண பாரதியின் திருவிளையாடல் புராணக் கீர்த்தனைகள்.

19) வ.சு. செங்கல்வராயபிள்ளையின் திருமுறை ஒளிநெறிக் கட்டுரைகள்.

20) தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் அன்புமுடி, சம்பந்தரும் சமணரும், சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்.

21) மா. இராசமாணிக்கனாரின் பெரிய புராண ஆராய்ச்சி, சைவசமய வளர்ச்சி.

22) திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியத்தின் திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

23) மு. அருணாசலத்தின் ''தமிழ் இலக்கிய வரலாறு'' (ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை), சைவசித்தாந்த சிறுநூல்கள், சாத்திரப் பதிப்பின் வரலாறு (குமரகுருபரனில் வந்த தொடர்)

24) ந.சீ. கந்தையாவின் ''சிவன்''.

25) எஸ். மகராஜனின் ''ஆடத்தெரியாத கடவுள்''.

26) ந.ரா. முருகவேளின் ''திருக்கோயில்'' கட்டுரைகள்.

27) க. வெள்ளை வாரணனாரின் ''பன்னிரு திருமுறை வரலாறு'' அடக்க விலைப்பதிப்பு.

28) திருவாவடுதுறை ஆதீன திருமந்திர மாநாட்டு மலர்கள்; திருவாவடுதுறை ஆதீனம் திருவிடைமருதூரில் நடத்திய திருமுறைக் கருத்தரங்குச் சொற்பொழிவுகள் (முதல் கருத்தரங்கச் சொற்பொழிவுகள் மட்டும் நூல் வடிவில் வெளிவந்தது).

இவையெல்லாம் மீண்டும் அச்சு வடிவம் பெற வேண்டும். (7 முதல் 28 வரை).

29) அச்சிலே உள்ள புழக்கத்தில் உள்ள அண்மையில் வெளியான மறைமலையடிகளின் நூல்கள், திரு.வி.கவின் நூல்கள், குன்றக்குடி அடிகளாரின் நூல்கள், உ.வே. சாமிநாதையரின் ''மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்'', ப. அருணாசலத்தின் ''பக்தி இலக்கியம்'', ஆ. வேலுப்பிள்ளையின் ''தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்'', ''தமிழர் சமய வரலாறு'', நா. சுப்பிரமணியத்தின் ''இந்தியச் சிந்தனை மரபு'', அ.ச. ஞான சம்பந்தனார் பெரிய புராணம் பற்றி எழுதிய மூன்று நூல்கள், திருவாசகம் சில சிந்தனைகள் – ஐந்து தொகுதிகள் ஆகிய நூல்கள் பெருவாரியான சைவ மக்களிடம் சென்று சேர ஏற்பாடு செய்ய வேண்டும்.

30) சைவசமய – சைவ சித்தாந்தக் கலைக்களஞ்சியம் உருவாக்குதல்.

31) சைவசித்தாந்தச் சாத்திரப்பதிப்பு வரலாறு வெளியிடுதல்.

32) அதிகம் ஆராயப்படாத ஒன்பதாம் திருமுறை, பதினோராம் திருமுறை பற்றிய திறனாய்வு நூல்கள் வெளியிடுதல்.

33) அரிய ஆங்கில நூல்கள் அண்மைக் காலத்தில் வெளிவருகின்றன. அவைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

8
ஆய்வாளர்கள்

ஆய்வாளர்கள் கீழ்க்காணும் கருத்துக்கள் குறித்து ஆய்வுகள் செய்தால் சைவ உலகம் பெரிதும் பயன்பெறும்.

1) வேதம், சைவம்; கருத்துத் தெளிவு.

2) காஷ்மீர ஆகமங்கள் – தென்னாட்டு ஆகமங்கள்; ஒத்துப்போதலும், வேறுபடுதலும்.

3) சிந்துச் சமவெளி சிவனின் யோக நிலை – ஆகமங்கள் முன் வைக்கும் யோக பாதம், பாசுபத சைவம் வலியுறுத்தும் யோகம் – அறுவகை தரிசனங்களுள் ஒன்றான யோகம் – திருமூலர் காட்டும் யோகம் – இந்தத் தொடர்ச்சியினை – அல்லது தொடர்ச்சியற்ற நிலையினை ஆராய்தல்.

4) காரணாகமம் கூறும் பசு, பதி, பாசம் அத்துவாக்கள்; கிரண ஆகமம் முன் வைக்கும் மாயை, கர்மா, சத்தி நிபாதம், தீக்கை, சிவதத்துவம்; சிவ பெருமானுக்கு அருகிலே ஆன்மா பிரியாது இருக்கும் என்ற கௌண்டின்யரின் பாசுபத சூத்திர உரை; தருக்கசீதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாகக் கடவுள் இருப்பை விளக்கும் நையாயிகம்; ஆன்மாக்கள் தங்கள் கருமவினைப் படி, சம்சார பந்தத்தில் ஆட்படுகின்றன என்று கூறும் வைசேடிகம்; மகத்து முதலான இருபத்துநான்கு தத்துவங்கள், சற்காரிய வாதம், பரிணாமவாதம், பற்றி விளக்கும் சாங்கியம்; இலிங்க தத்துவம் பற்றிக் கூறும் இலிங்க புராணம், பிரகிருதியே முதற் காரணம்; சிவ பெருமான் நிமித்த காரணம், சிவனும் சக்தியும் இணைந்தே உள்ளன'' என்ற செய்திகள்; சாரூபம் முதலான வீடுபேற்றின் நான்கு நிலைகள், குருஉபதேசம், பசு, பதி, பாசம் என்ற முப்பொருள் உண்மை, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியன கூறும் சிவபுராணத்தில் ஒரு பகுதியான வாயவீய சம்கிதை; ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்கள், பரைபஸ்யந்தி மத்யமை வைகரி ஆகிய நால்வகை வாக்குகள், ஆனந்தம் இச்சை ஞானம் கிரியை ஆகிய ஐவகைச் சக்திகள், ஈசான தத்புருஷ சத்யோஜாத அகோர வாம என்ற இறைவனின் ஐந்து முகங்கள், இறைவனின் ஐந்தொழில்கள், மூவகை ஆன்மாக்கள், முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய கருத்துக்களை உள்ளடக்கிய காஷ்மீர சைவம்; பசுபதி பாசம், முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிக் கூறும் போஜரின் தத்துவப் பிரகாசம் – கால வரிசைப் படி சங்கிலித் தொடர்ச்சியாக வந்துள்ள இக்கருத்துக்கள் எவ்வாறு சைவ சித்தாந்தத்தில் இடம் பெற்றன என்று ஆய்தல்.

5) மெய்கண்டார் சிவஞானபோதம் பனிரெண்டு நூற்பாக்களில் காணப் படாத வடசொற்கள் சிவஞான போதத்தில் உள்ள எடுத்துக்காட்டு பாடல்களில் இருத்தலும் பின் வரும் சித்தாந்த நூல்களில் மிகுதியாக ஆளப்படுதலும்.

6) ந.சி. கந்தையா அவர்கள்தான் எழுதிய ''சிவன்'' என்ற நூலில் சிவவழிபாடு உலக அளவில் பரவியிருந்தது என நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகள் கூறுகின்றார். அவற்றையெல்லாம் விரிவாகக் கள ஆய்வு செய்தல். இதற்கு ஏராள பொருட்செலவு ஆகும். அந்தந்தப் பகுதியில் உள்ள சைவம் பற்றிய ஆய்வாளர்களிடம் இப் பொறுப்பினை விடலாம்.

இவையெல்லாம் இந்த நூலோடு தொடர்புடைய முடிபுகள். பல்கலைக் கழகங்களில் செய்யப்பட்டுள்ள ஆய்வேடுகளையெல்லாம் கண்டறிந்து மேற்கொண்ட முடிபுகள் அல்ல. அப்படி ஒரு முறையான ஆய்வும் வந்தால் – ஆண்டுதோறும் – சிறப்பாக இருக்கும்.

பல்கலைக்கழகங்களின் ஆய்வுகளை முழுமையாகத் தொகுத்து முன்பே ஆய்ந்து செய்யப்பட்ட ஆய்வுகளைத் தவிர்த்து காலத்துக்கேற்ற புதிய சிந்தனைகளுடன் - புதிய ஊற்றுக் கண்களைத் திறந்து சைவ சமய ஆய்விலும், சைவ உலகிலும் புதிய எழுச்சி காணவேண்டும். அதுவே இருபத்தோராம் நூற்றாண்டின் சிவ தரிசனமாகும்.

■■■

சைவப்பெருவெளி அப்பாலுக்கு அப்பாலானது; எல்லாமுமானது; காலத்துள் அடங்காதது. காலத்தில் ஒரு பகுதியையே தரிசிக்க முடிந்தது. அத்தரிசனமே பிரமாண்டமாயுள்ளது; பிரமிக்க வைக்கிறது. அத்தரிசனம் அனைத்துலகத் தரிசனம்; அன்பின் தரிசனம்.

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதற் பொருளகராதி

[முதற்பொருளகராதி முதற்பகுதிக்கு மட்டுமே உரியது. பிற பகுதிகள் குறிப்பிட்ட ஆன்றோர்கள் என்பதினால் பொருளடக்கத்தில் காணலாம்]

அ

1. அகத்தியர் 109
2. அகஸ்ற்றஸ் 16
3. அகோர சிவாச்சாரியார் 50
4. அத்வைதம் 39
5. அதிவீரராமபாண்டியர் 105, 150
6. அந்தகக் கவி வீரராகவ முதலியார் 114
7. அண்ணாமலை ரெட்டியார் 160
8. அப்பய தீட்சதர் 51, 65, 66
9. அபிதம்மாவதாரம் 136
10. அபிநவ குப்தர் 47
11. அபினஸ் சந்திரதாஸ் 17
12. அரவிந்தபாசு 48
13. அரிக்கமேடு 16
14. அருணாசலம். மு 28, 84
15. அருணாசலக் கவிராயர் 123, 160
16. அருணாசலக் கவுண்டர் கு. 46
17. அருணகிரிநாதர் 102, 159, 160
18. அருள் நமச்சிவாயர் 97
19. அல்லமப் பிரபு 60
20. அவ்வையார் 101
21. அஜந்தா 152, 155

ஆ

22. ஆகம வகைகள் 30, 31
23. ஆதி உலா 116
24. ஆதிச்சநல்லூர் 9
25. ஆப்தே வி.பி. 27
26. ஆஸ்திரலாய்டு 7
27. ஆர்க்கேயன் பேரூழி 7, 8
28. ஆரியர் வருகை 22
29. ஆறு தரிசனங்கள் 36-39
30. ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் 148
31. ஆனந்த கிரி 45
32. ஆனந்த மங்களம் 66

இ

33. இடைப் பேரூழி 8
34. இந்திய மக்களின் ஆறு முதன்மை இனங்கள் 10
35. இரட்டைப் புலவன் 97
36. இராச சிம்மன் 140
37. இராஜசிம்ம பல்லவன் 157
38. இராசமாணிக்கனார். ந. 148
39. இராசமாணிக்கனார். மா. 86, 134
40. இராமானந்தர் 63
41. இராமானுஜர் 49
42. இராஜநாக இரத்னாகரர் 45
43. இராமேஸ்வரர் பட்டாசார்யார் 66
44. இருக்குவேத இந்தியா 17
45. இலிங்க புராணம் 104

ஈ

46. ஈசான சிவபண்டிதர் 148
47. ஈசான தேசிகர் 119

உ

48. உதயாகரர் 47
49. உபநிடதம் - உருத்திரன் 27
50. உமாபதி சிவம் 97, 98
51. உய்யவந்த தேவநாயனார் 149
52. உயிர்ப்பொருள் தோற்றம் 6
53. உலோகப்பயன்பாடு 7

எ

54. எல்லப்ப நாவலர் 109
55. எல்லோரா 152, 153, 154, 157
56. எலிபண்டா 155

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐ

57. ஐந்திணைப்பாகுபாடு 84
58. ஐந்தொழில்கள் 50
59. ஐயடிகள் காடவர்கோன் 136

ஔ

60. ஔரங்கசீப் 82

க

61. கண்டங்களின் தோற்றம் 6
62. கண்டராதித்த சோழன் 142
63. கண்டேசுரர் 77
64. கணபதி வழிபாடு 68
65. கந்தப்பையர் 124
66. கந்தையா பிள்ளை. ந.சீ. 17
67. கபாலிகர்கள் 46
68. கபிலதேவ நாயனார் 137
69. கபீர் 63
70. கமலை ஞானப்பிரகாசர் 106, 108
71. கயவாகு 134
72. கயிலாச நாதர் கோயில் 140
73. கல்லாடர் 47
74. கல்லாடானார் 137
75. கலச்சுரி பரம்பரை 76
76. கழற்சிங்கன் 140
77. களப்பிரர் 90, 135
78. கனிஷ்கர் 73
79. கஜினி முகமது 78
80. காஜுரஹோ 156
81. காகஸாய்டு 7
82. காஞ்சிப் புராணம் 120
83. கார்கோடக பரம்பரை 75
84. காரைக்கால் அம்மையார் 87, 91
85. காளமேகப் புலவர் 102
86. காளிதாசன் 44
87. காஷ்மீர சைவம் 46-48
88. கிராதார் ஜூனியம் 44
89. கிரியா பாதம் 29
90. கிருஷ்ண பாரதி 123
91. கில்ஜி 81
92. குகா. பி.எஸ். 10
93. குகை நமசிவாயாயர் 109
94. குத்புதின் 78
95. குப்தர்கள் 74
96. குமரகுருபரர் 110, 111
97. குமாரசம்பவம் 44
98. குமரிக் கண்டம் 8
99. குருஞான சம்பந்தர் 108
100. குரு நமசிவாயர் 109
101. குரு நானக் 84
102. குலசேகர பாண்டியன் 146
103. குஷானர் 73
104. கேன உபநிடதம் 28
105. கைக் கோடரிப்பண்பு 9
106. கோச்செங்கணான் 133
107. கோபாலகிருஷ்ண பாரதியார் 160
108. கோடீசுர ஐயர் 124
109. கோரக்கர் 61
110. கோளக மடம் 148

ச

111. சங்கரர் 45
112. சங்கற்ப நிராகரணம் 107
113. சம்கிதைகளில் கணபதி 68
114. சம்பந்த சரணாலயர் 110, 114
115. சம்பா (Champa) கவிதையும் உரைநடையும் கலந்தது 45
116. சர்வக்ஞர் 64
117. சர்வ ஞானோத்தர ஆகமம் 101
118. சரியா பாதம் 30
119. சாதவாகனர் 74
120. சாந்தலிங்க சுவாமிகள் 123
121. சாலமன் 16
122. சாளுக்கியர் 77, 80
123. சாளுக்கிய பாணி 157, 158
124. சித்தர் சிவப்பிரகாசர் 118
125. சித்தாந்த பிரகாசிகை 121
126. சிதம்பர பாரதிகள் 122
127. சிந்து சமவெளி நாகரிகம் 14
128. சிவன் - உருத்திரன் 22
129. சிவன் - உருத்திர இணைப்பு 26
130. சிவன் என்னும் பெயர் 20
131. சிவபாத சேகரன் (இராஜராஜன்) 143
132. சிவஞான சித்தியார் (சுபக்கம்) 121
133. சிவஞான மாபாடியம் 120
134. சிவஞான முனிவர் 119, 120
135. சிவத்தம்பி. கா. 133
136. சிவதருமோத்தரம் 107
137. சிவப்பிரகாசர் 112, 113
138. சிவநெறிப்பிரகாசம் 108
139. சிவத்தலங்கள் 89
140. சிவலீலார்னவம் 65
141. சிவ வழிபாடு - மகாபாரதம், இராமாயனம் 32

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

142. சிவவாக்கியர் 97, 101
143. சிவலிங்க வணக்கம் 21
144. சிவாக்கிரக யோகிகள் 108
145. சிவாஜி 82
146. சிவானுபவ மண்டபம் 54
147. சிற்றம்பல நாடி 98
148. சீகாளத்திப் புராணம் 113
149. சீனிவாச ஐயங்கார். பி.டி. 85
150. சீனிவாச தீட்சதர் 65
151. சுந்தரமூர்த்தி. கு. 86
152. சூபிக்கள் 63
153. செங்குட்டுவன் 133
154. செப்பறை மடம் 100
155. செந்நெறிக் காலம் 133
156. செவ்விலக்கிய காலம் 41
157. செம்பியன் மாதேவி 143
158. சேக்கிழார் 94
159. சோம தேவர் 46
160. சோமா நந்தர் 47
161. சோமசுந்தரம். ஜே.எம். 146
162. சோழமண்டல சதகம் 116
163. சைவ ஆகமங்கள் 28
164. சைவ எல்லப்ப நாவலர் 106
165. சைவ புராணங்கள் 41-44
166. சைதன்யர் 49, 64
167. சைவ சாத்திர உரைகள் 108, 109
168. சைவ சிற்றிலக்கியங்கள் 116, 117, 118
169. டெரா. டி. 11

ஞ

170. ஞானசம்பந்தன். அ.ச. 28, 86
171. ஞானபாதம் 29

த

172. தண்டலையார் சதகம் 116
173. தத்துவப் பிரகாசம் 50
174. தமிழ் இலக்கிய வரலாறு - ஐந்து பெருங்காலம் 84
175. தமிழகம் - மக்களின் மூவகை இனம் 10
176. தருமபுர ஆதீனம் 98
177. தாந்திரீகம் 49, 65
178. தான்டேகர். ஆர்.என். 27
179. தாயுமானவர் 111, 112
180. த்ரிகா 46
181. தாலமி 16
182. திராவிடம் (சிற்ப கலை) 153
183. திராவிடம் 155, 156
184. திராவிடர் 10
185. திரிகூடராசப்ப கவிராயர் 121
186. திருஞானசம்பந்தர் 92, 93
187. திருநாவுக்கரசர் 87, 93, 94
188. திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் 119
189. திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் 123
190. திருமூலர் 88
191. திருவாவடுதுறை ஆதினம் 98
192. துவைதம் 40
193. தேவார தாசிமையா 58
194. தேவிகாலோத்தர ஆகமம் 101
195. தேவியின் எட்டு வடிவம் 67
196. தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் 124
197. தொண்டைமண்டல ஆதினம் 98
198. தொல் பழங்காலம் 9
199. தொல் பேரூழி 8
200. தைமூர் 81

ந

201. நக்கீர தேவநாயனார் 136
202. நம்பியாண்டார் நம்பி 142
203. நமச்சிவாய தேசிகர் 100
204. நரசிம்மன் வர்மன் 139
205. நவரத்ன அம்மையார். இரத்ன 70
206. நாகர் 10
207. நாகரம் 153, 155, 156
208. நாயன்மார்கள் 89
209. நால்வர் நான்மணிமாலை 113
210. நாலாங்காற் பேரூழி 8
211. நாலந்தா 154
212. நிம்பார்கர் 49
213. நிகாமம் 41
214. நியோலிதிக் காலம் 7
215. நீக்ரோய்டு 7
216. நீலகண்ட தீட்சதர் 65

ப

217. பசவர் 53, 57
218. பட்டடக்கல் 154
219. பட்டினத்தார் 101
220. படிக்காசுப் புலவர் 119
221. பண்டார்கர் ஆர்.ஜி. 27, 87
222. பத்திரகிரியார் 102
223. பத்தொன்பது நாகரிகங்கள் 12
224. பர்ரோ 18
225. பரணதேவ நாயனார் 137

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

226. பரமேசுவரவர்மன் 139
227. பரஞ்சோதி முனிவர் 122
228. பரத் சந்திரர் 66
229. பராக்கிரம பாண்டியன் 150
230. பராந்தக சோழன் 142
231. பல கடவுளர் வழிபாடு 19
232. பலபட்டடைச் சொக்கநாதர் 124
233. பவ பூதி 45
234. பஃறுளி ஆறு 8
235. பாங்கீயா 6
236. பாசுபத சைவம் 33-36
237. பாண்டிப் பெருமாள் 119
238. பாடுவார் முத்தப்பச் செட்டியார் 123
239. பாரசிவர்கள் 74
240. பாரவி 44
241. பார்வதி ருக்மணீயம் 50
242. பாஸ்கரவர்மன் 74
243. பிரபுலிங்கலீலை 112
244. பிரத்திய பிஞ்ஞானம் 46
245. பிராமணங்கள் 26
246. பிரமோத்தர காண்டம் 105
247. பிரும்ம சூத்திர உரைகள் 45
248. பிள்ளை. கே.கே. 16
249. பிளினி 16
250. புசால்கர். ஏ.டி. 22
251. புத்த தத்தர் 136
252. புதிய கற்காலம் 7, 9
253. புரியட்டகம் 50
254. பூமித் தோற்றம் 6
255. பெருங் கற்காலம் 9
256. போஜ அரசர் 50

ம

257. மகாதேவ் சக்ரவர்த்தி 27
258. மகாதேவியக்கா 59
259. மகாவிரதர் 46
260. மகா வைத்யநாத அய்யர் (சகோதரர்கள்) 160
261. மகேந்திர வர்மன் 138, 139
262. மங்கள காவியம் 66
263. மங்காகா 49
264. மங்கோலாய்டு 7
265. மத்வர் 49
266. மதுராபாணி 154
267. மஜூம்தார் 11
268. மஜூம்தார். ஆர்.சி. 22, 41
269. மறைஞான சம்பந்தர் 98, 106
270. மனுஸ்மிருதி 41
271. மாணிக்கவாசகர் 94
272. மாமல்லபுரம் 155
273. மாரிமுத்தாப் பிள்ளை 160
274. மிருகங்களின் தோற்றம் 6
275. முகமது பின் துக்ளக் 84
276. முத்து தாண்டவர் 160
277. முதல் மனித அடையாளம் - இந்தியா 7
278. முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 146
279. முப்பத்தாறு தத்துவங்கள் 50, 51
280. முருகன் வேதங்கள் - பாரதம், புராணங்கள், இலக்கியங்கள் 69, 70
281. முன்ஷி. கே.எம். 4
282. மூவகை ஆன்மாக்கள் 50
283. மெய்கண்டார் 95, 149
284. மெய்கண்ட சாத்திரங்கள் 95
285. மெய்கண்ட பரம்பரை 98

ய

286. யோகபாதம் 30

ர

287. ரேணுகாசாரியன் 54

ல

288. லல்லேசுவரி 64
289. லால். பி.பி. 10

வ

290. வசுகுப்தர் 47
291. வரகுண தேவர் 137
292. வரகுண ராம பாண்டியன் 104
293. வரதுங்கராம பாண்டியர் 105, 109, 150
294. வள்ளல் பரம்பரை (சாத்திர மரபு) 103
295. வாகாடர் 76
296. வாசஸ்பதி மிஸ்ரா 45
297. வாயவீயசம்கிதை 44
298. வாயு சங்கிதை 105
299. வாஸ்கோடகாமா 81
300. விசயாலயன் 142
301. விசிஷ்டாத்வைதம் 39
302. வித்யமாதவன் 50
303. விராத்தியர்கள் 26, 45
304. வில்லி புத்தூரார் 97
305. வீரசைவம் 53-63
306. வெட்டாய்டு 7
307. வெல்ஸ். ஹெச்.ஜி. 18

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

308. வெள்ளியம்பலவாணத்தம்பிரான் 118
309. வெள்ளைவாரணர். க. 88, 142
310. வேசரபாணி 155, 156, 158
311. வேதத்தில் உருத்திரன் 23
312. வேலுப்பிள்ளை. ஆ. 135
313. வைத்யநாத தேசிகர் 114

ஸ்ரீ, ஸ, ஷ, ஹ, ஜ

314. ஸ்ரீகண்டர் 51, 65
315. ஸ்ரீகுமாரர் 50
316. ஹங்ஸ்லி 17
317. ஹர்ஷர் 74
318. ஹரதத்தர் 97
319. ஹரவிஜயம் 45
320. ஹரிஹரர் 60
321. ஹரிஹரர்புக்கர் 64
322. ஹரிசரித சிந்தாமணி 49
323. ஹளபீடு 158, 159
324. ஹிப்பாலஸ் 16
325. ஹீப்ரு மொழி 16
326. ஹிராஸ் 17
327. ஹைதர் அலி 83
328. ஹெரடட்டஸ் 17
329. ஹொய்சலபாணி 158
330. ஹோமோ சேப்பியன்ஸ் 6
331. ஸ்பந்த சாஸ்திரம் 47
332. ஸ்வேதாஸ்வதர உபநிடதம் 28
333. ஜான் மார்ஷல் 14, 15

■■■

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்புகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)